*Page* 281.—In the said special rules—

In sub-rule (*b*) of rule 34, after clause (x), the following clause shall be added, namely:—

"(xi) A person appointed to the post of lower division clerk in the Forest Department on or after the 14th September 1960, fails to pass any one of the three tests, viz., (i) Account Test for Subordinate Officers, Part I, (ii) Forest Code and Accounts and (iii) Board's Standing Orders, within a period of five years from the date of appointment, his increment in the time-scale of pay applicable to him after the fifth year shall be stopped and if he fails to pass the other two tests within a period of eight years from the date of appointment, his increment in the time scale of pay applicable to him after the eighth year shall be stopped. But such ineligibility to draw increments shall not have the effect of postponing his future increments after he has passed the said tests."

(The amendment hereby made shall be deemed to have come into force on the 14th September 1960.)

[G.O. Ms. No. 728, Public (Services-D), dated 20th April 1961.]

*Issued*—8-7-1960]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

LIBRARY ... GOVERNMENT OF MADRAS

## FRIDAY, 18TH MARCH 1960

VOLUME XXIX—No. 1

*CONTENTS*


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 1-25, 89-98 |
| II Privilege Motions— | |
| (1) Minister's replies to certain supplementary questions .. | 25-26 |
| (2) Publication of a garbled version of the Finance Minister's speech on 17th March 1960 in the 'Nava India' .. .. | 28 |
| III Calling attention to the closure of beedi factories .. .. | 26-28 |
| IV Government Motions— | |
| (1) Election of Members to the Committee of Privileges .. | 28-29 |
| (2) Election of Members to the House Committee .. .. | 29 |
| V Presentation of the Final (Third) Supplementary Statement of Expenditure for the year 1959-60 .. .. .. .. .. | 29-31 |
| VI Voting on Demands for Grants for the year 1960-61— | |
| (1) Demand XIX—Agriculture and Fisheries .. .. .. | 31-88 |
| (2) Demand XX—Animal Husbandry .. .. .. | 31-88 |
| (3) Demand XXXIX—Capital Outlay on Agriculture .. | 31-88 |
| VII Papers laid on the table of the House .. .. .. .. | 88 |


©
GOVERNMENT OF MADRAS
1960

*Legislative Assembly Department*
*Madras*

PRICE, 50 *naye Paise*]

D
V211,31 N60
N61.29

61319

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, the 18th March 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

DEPUTY SPEAKER: As the Hon. Finance Minister is not here, Question Nos. 155, 457, 167, 483 and 484 relating to him will be taken up on the next day when he attends the Assembly. Question Nos. 169 and 480 relating to the Hon. Minister for Electricity will be taken up next week as he is not in town.

*Accident while unloading logs in the Arni Road Railway Station*

*456 *Q*—SRI S. M. ANNAMALAI: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959 மே மாதத்தில் ஆரணி ரோடு ரயில்வே ஸ்டேஷனில் மரம் இறக்கி இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் குடும்பத்தினருக்கு நஷ்ட ஈடு தரப்பட்டதா?

(இ) [illegible] ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Our information is that three labourers who were engaged by a consignee had lost their lives owing to an accident in May 1959 while unloading logs from a wagon in the Arni Road Railway Station.

(*b*) No, Sir

(*c*) Does not arise.

SRI S. M. ANNAMALAI: ஸார், தொழிலாளியாக இருக்கிற காரணத்தினால் வொர்க்மென்ஸ் காம்பென்சேஷன் ஆக்டின் கீழ் ஏன் நஷ்ட ஈடு கிடையாது என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நஷ்ட ஈடு சட்டப்படி அவர்கள் "க்ளெயிம்" போடவேண்டும். அப்படிப் போட்டால்—இது நஷ்ட ஈடு கொடுக்கக்கூடிய கேஸ் என்று கமிஷனர் அவர்கள் அபிப்பிராயப்படுவார்களானால்—அப்போது வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI A. GOVINDASAMY: ஸார், இந்த நஷ்டஈட்டை அந்த மரத்திற்கு சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப்படுமா அல்லது அரசாங்கமே கொடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: யார் பொறுப்போ அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். என்னிடம் கிடைத்த தகவலின்படி "அன்லோட்" பண்ணுவதில் சொந்த ஆளை வைத்து "அன்லோட்" பண்ணியதால் இந்த "ஆக்ஸிடென்ட்" வந்தது என்பது. இதிலே சொந்தக்காரர் பொறுப்பேற்க வேண்டியதாக நினைக்கிறேன். இதைப்பற்றிக் கமிஷனர் அவர்கள் வொர்க்மென்ஸ் காம்பென்சேஷன் ஆக்ட்படி முடிவு செய்ய வேண்டும். அவர்களுடைய முடிவு எப்படி இருக்குமென்று நான் சொல்லமுடியவில்லை.

[18th March 1960

SRI M. KALYANASUNDARAM : சம்பந்தப்பட்டவர்கள் "க்ளெயிம்ஸ்" போடுவது ஒரு பக்கம் இருக்கட்டும். உடனே கமிஷனரிடம் இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை டெபாஸிட் செய்யவேண்டுமென்று ஏன் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது ரயில்வேயில் வேலை செய்கிறவர்களைப் பற்றியது. இதில் என்ன விதிகள் அனுசரிக்கப் பட்டு வருகிறது என்று தெரியவில்லை.

### *East Coast Ports*

* 464 Q.—SRI S. LAZAR (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the Government have any proposals to improve East Coast Ports of Madras so as to make it possible for steamers to call at them and facilitate the export and import of commercial goods through these ports;

(b) if so, the names of the ports;

(c) the nature of the improvements proposed for them; and

(d) the period during which the improvements will be effected?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) So far as the Tuticorin Port is concerned there are adequate facilities for steamers to call at the port in large numbers. Regarding other East Coast ports schemes to facilitate the export and import of commercial goods at Cuddalore and Nagapattinam and other ports are on hand.

(c) The attention of the hon. Member is invited to the paper * placed on the table of the House.

(d) The improvements will be effected during the remaining period of the Second Five-Year Plan and if necessary during the Third Five-Year Plan also.

SRI A. A. RASHEED : Is it a fact that Sethusamudram Project has been given up by the Planning Commission even in the Third Five-Year Plan? If so, what are the reasons?

THE HON. SRI P. KAKKAN : We did not get such information.

SRI K. VINAYAKAM : ஸார், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இந்த தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்திப்படுத்துவதாக மத்திய சர்க்கார் அமைச்சர் அவர்கள் தூத்துக்குடிக்கு வந்தபோது சொன்னார்கள். இதைப் பற்றி ஏதாவது மேல்நடவடிக்கை மத்திய அரசாங்கத்தோடு தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறதா? அதன் விளைவு என்ன? அதோடு மங்களூர் துறைமுகத்தை விரிவுபடுத்தவேண்டுமென்று ஒரு கிளர்ச்சி இருக்கிறதே, இந்தப் போட்டியில் தூத்துக்குடி வெற்றி பெறுமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தூத்துக்குடி துறைமுக அபிவிருத்திபற்றி இந்த அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே அதற்காக வற்புறுத்தி வருகிறது, பாடுபட்டு வருகிறது. 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் கட்டத்திலேயே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம். அவர்கள் இன்னும் முடிவு செய்யவில்லை. முடிவு செய்த பிறகுதான் தெரியும்.

* Printed as Appendix I on pages 89–91 infra.



18th March 1960]

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த தூத்துக்குடி துறைமுகத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசியிலேயே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த சர்க்கார் சிபார்சு செய்தும் எடுத்துக்கொள்ளவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது மத்திய சர்க்கார் கட்டாயமாக எடுத்துக்கொள்வார்கள் என்று உறுதி கூற முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : உறுதி கூற முடியுமா என்று கேட்பது அவ்வளவு நல்லதல்ல. நாம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறியிருக்கிறோம். எதிலும் நம்பிக்கைதான் இருக்க வேண்டும். நமக்கு நம்பிக்கை இருக்கிறது.

SRI A. VEDARATHNAM : ஸார், நாகப்பட்டிணம் துறைமுகத்தில் ஒரு "பியர்" கட்டவேண்டுமென்று வெகு நாளாக கோரிக்கை இருக்கிறதே, அதைப் பற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது? அது எப்போது நடைபெறும்?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனி கேள்வி வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : தூத்துக்குடி துறைமுகத்தை மிக விரைவாக எடுத்து நிறைவேற்றப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி தேர்தலின்போது தூத்துக்குடி மக்களுக்கு வாக்களித்தார்கள். இந்த வாக்குறுதியை நிறைவேற்ற அரசாங்கம் ஏதாவது திட்டமிட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : வாக்குறுதிகளை காங்கிரஸ் அரசாங்கம் நிறைவேற்றுகிற மாதிரி வேறு எந்த அரசாங்கமும் நிறைவேற்றமுடியாது. வேறு எந்த அரசியல் கட்சியும் நிறைவேற்ருது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். நம்பிக்கையோடு இருக்கிறோம். வெற்றி பெறுவோம் என்று நினைக்கிறேன்.

SRI R. KRISHNASAMI NAIDU : கீழ்க்கரை துறைமுகங்கள் வரிசையில் கீழக்கரை, தொண்டி என்பவைகளும் பரிசீலனைக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கிழக்குக் கரையில் இருக்கக் கூடிய துறைமுகங்கள் எல்லாம் சேரும்.

SRI S. LAZAR : தூத்துக்குடி துறைமுகத்தை சிவில் போர்ட்டாக அபிவிருத்தி செய்யவேண்டுமென்று ஒரு திட்டம் இப்போது அரசாங்கத்திடம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் சமீபத்தில் அதைப் பரிசீலனை செய்த நிபுணர்களால் கொச்சியை நேவல் போர்ட்டாக அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக தூத்துக்குடியையே அபிவிருத்தி செய்யலாம் என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதைப் பற்றி இந்த அரசாங்கம் வற்புறுத்துகிறதா? நேவல் போர்ட்டாகவும் இந்த தூத்துக்குடி அபிவிருத்தி செய்யப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. அதைப்பற்றித் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

### *Police tattoo*

* 465 Q.—SRI M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை போலீஸ் நூற்றாண்டு விழாவில் செய்துகாட்டிய "டாட்டு" காட்சிகளை ராஜ்யத்திற்கு வெளியே உள்ள பெரிய நகரங்களிலும் செய்து காட்ட ஆலோசிக்கப்பட்டதா?

(ஆ) வேலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி முதலிய நகரங்களிலும் இந்தக் காட்சியைக் காட்ட உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) No, Sir.

SRI M. P. SARATHI: ஸார், இந்த நிகழ்ச்சியை மாவட்டம் தோறும் நடத்தினால் நன்றாக இருக்கும். ஏன் இல்லை என்று சொல்லுகிறார்கள். இனிமேலாவது நடத்த ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த டாட்டூ (Tattoo) காட்சி இப்போது படம் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் படத்தை நாடெங்கிலும் காட்டலாம்.

SRI K. VINAYAKAM : While admitting the grand success achieved by the State Police Tatoo held recently in Madras, is the Hon. Minister aware of the fact that seating arrangements for the very important persons was not done carefully and properly with the result that even M.L.As. were ousted out at the Stadium?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am afraid that it has been done so in accordance with our own ideas of democracy.

## *Inter-State Roads.*

* 468 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, போடியிலிருந்து போடிமெட்டு கேரளாவுடன் இணைக்கும் ரோடு போட எத்தனை வருடங்களாகிறது ?

(ஆ) காலதாமதத்தை சுட்டிக்காட்டி சர்க்காருக்கு புகார் வந்ததா ?

(இ) அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) Road formation was commenced in February 1956 and completed in August 1959.

(b) A copy of Memorandum submitted to Sri A. S. Subbaraj, M.L.A., by one Sri P. S. Dharmaraj was received.

(c) The work is in ghat section and there was some delay in execution due to dearth of labour, heavy wind and rain and elephant trouble. The Government instructed the Officers of the Highways Department to speed up the execution of the work.

SRI N. R. THIAGARAJAN : தற்போது வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. அது எப்போது திறந்து விடப்படும் ? எப்போது நமது ராஜ்யமும் கேரள ராஜ்யமும் இணைக்கப்பட்டு போக்குவரத்து வசதி ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : போடிமெட்டு ரோடு மெட்டல் பண்ணிய பிறகு உடனே பிளாக் டாப் செய்வது நல்லது என்று, அதற்காக வேண்டிய பணம் ஒதுக்கி வேலை நடந்து வருகிறது. வேலை முடிந்தவுடனே திறந்து விடப்படும்.



## *Supply of Electricity to the houses of Plantation labourers*

* 458 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தேயிலை, காப்பி தோட்டங்களிலே வேலை செய்யும் தொழிலாளர்களுடைய வீடுகளுக்கு மின்சார விளக்குகள் போட வேண்டுமென்று தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் சர்க்காருக்கு தெரிவித்திருக்கிறார்களா ?

(ஆ) அவ்வாறு தெரிவித்திருப்பின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) & (ஆ) தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு மின்சார விளக்குகள் போட வேண்டுமென்ற கோரிக்கை தோட்டத் தொழிலாளர் சங்கங்களிலிருந்து சர்க்காருக்கு வரவில்லை.

SRI P. G. MANICKAM : [illegible] நடந்தபோது இது பற்றிய தீர்மானங்கள் சர்க்காருக்கு அனுப்பப்பட்டன. அந்த நடந்த மகாநாட்டில் இது சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. [illegible] தொழிலாளர்கள் இரவு நேரங்களிலேயே [illegible] வேலை செய்வதால் அங்கே இருக்கக்கூடிய அவர்களுக்கு வசதி [illegible] காண வகையில் சட்டத்தைத் திருத்தி அவர்களுக்கு விளக்குகள் போட்டுத் தர சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த நடவடிக்கை எந்த ஸ்தாபனமோ இந்த மாதிரியாக விஷயங்களை சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டுமானால், தயவு செய்து அவர்கள் அது சம்பந்தமாக மறுபடியும் சர்க்காருக்கு எழுதி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தீர்மானங்களைப் போட்டு அனுப்பினால் சர்க்கார் அவைகளை உடனடியாகப் பரிசிலனை செய்ய முடியாத நிலைமை இருக்கிறது.

## *Agricultural Improvement Co-operative Societies*

* 459 *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் உள்ள விவசாய அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அதன் மொத்த அங்கத்தினர் தொகை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) In Madras State there are no Co-operative Societies which go by the name of "Better Farming Societies". But our Agricultural Improvement Co-operative Societies and Agricultural Demonstration Co-operative Societies have objects similar to those of Better Farming Societies. There are thirty-three Agricultural Improvement Societies and four Agricultural Demonstration Societies in this State with a total membership of 1,268 and 1,206, respectively.

SRI K. R. NALLASIVAM : விவசாய அபிவிருத்தியில் மிகவும் முன்னேற வேண்டிய நாம், இந்தச் சங்கங்களிலுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான கவர்ச்சிகரமான முறைகளைக் கடைபிடித்து அவர்களுடைய எண்ணிக்கையை ஏன் அதிகப்படுத்தக்கூடாது ?

[18th March 1960

**The Hon. Sri R. VENKATARAMAN** : இந்த ஸெர்வீஸ் ஸொஸைட்டிகள் எல்லாம், இந்த அபிவிருத்திக்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸொஸைட்டிகள் எல்லாம் அந்த நோக்கங்களைக் கொண்டவையாக இருக்கின்றன. ஆகவே ஆரம்பிக்கும் எல்லா ஸொஸைட்டிகளையும் ஸெர்வீஸ் ஸொஸைட்டிகளாகவே ஆரம்பிக்க வேண்டும் என்பது சர்க்காரின் நோக்கம்.

### *Respiratory diseases among factory workers*

* 460 Q.—Sri K. R. NALLASIVAM (on behalf of Sri S. PAKKIRISAMI PILLAI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any enquiries have been conducted in the matter of incidence of industrial diseases like 'BYSSINOSIS' or other respiratory diseases among workers employed in the factories situated in the State particularly among the Madura Textile Workers; and

(b) if so, whether copies of the reports of such enquiries will be placed on the Table of the House?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (a) Yes, Sir. An enquiry into the prevalence of the respiratory disease called 'BYSSINOSIS' in Cotton Textile Industry in South India was conducted in 1949.

(b) A copy of the report* is placed on the table of the House.

### *Health Co-operatives*

* 461 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of Health Co-operatives functioning in the State; and

(b) the details of the functioning of these societies?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (a) Five.

(b) As on 31st December 1959, the five societies had a membership of 1,308. Up to 31st December 1959 the societies collected an amount of Rs. 37,155 by way of subscription from their members, donations from philanthropists, co-operative institutions, local bodies, etc., and subsidies from Government. During the period from 1st July to 31st December 1959 the societies treated 9,620 patients and collected medical fees to the tune of Rs. 4,209.

Three of the societies are functioning fairly satisfactorily and the remaining two societies are dormant.

**Sri N. K. PALANISAMI** : How far is this system advantageous over the system of treating the patients in the hospitals?

* Printed as Appendix II on pages 92–98 infra.



18th March 1960]

**The Hon. Sri R. VENKATARAMAN** : It is not advantageous over the system of State Medical Service. Only in places where there is no facility people come together and organise their own medical services.

**Sri M. K. SOMASUNDARAM** : ஹெல்த் கோவாபரேடிவ் ஸொஸைடீஸ் எந்தெந்த ஜில்லாக்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ? இவைகளை இனிமேலும் அதிகமாக ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இவை நீலகிரி, ராமநாதபுரம், சேலம், திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் திருச்சியிலும் தஞ்சாவூரிலும் உள்ள ஸொஸைடிகள் நன்றாக வேலை செய்யவில்லை. இனி இந்த விதமான ஸொஸைடிகள் தேவைப்படாது என்று நினைக்கிறோம். ஏனென்றால், பிரைமரி ஹெல்த் ஸெண்டர்ஸ் எல்லா இடங்களிலும் வந்து விடும்.

**Sri S. LAZAR** : May I know the special features of the health co-operatives?

**The Hon. Sri R. VENKATARAMAN**. An interpellation is intended to elucidate information as to what the Government has done and not in respect of the institutions themselves.

**Sri R. KRISHNASAMI NAIDU** : ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் தளவாய்புரத்தில் ஒரு சுகாதாரக் கூட்டுறவுச் சங்கம் இரண்டு வருஷங்களாக இயங்கி வருகிறது. அது இந்த மாநிலத்திலேயே சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது என்று சொல்லப்படுவதை எல்லோரும் கேட்டிருக்கின்றனர். அந்தச் சங்கம் அரசாங்கத்தின் உதவித் தொகை கோரி உரிய முறையில் விண்ணப்பங்களை அரசாங்கத்திற்கு பல தடவை அனுப்பியிருக்கிறது. ஆனால் அதற்கு இன்னும் உதவித் தொகை கொடுக்கப்படவில்லை. காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. எனவே உடனடியாக அச்சங்கத்தின் விண்ணப்பங்களை கவனித்து அதற்கு உதவித்தொகை கொடுக்கும்படி இலாகாவை துரிதப்படுத்த கனம் அமைச்சர் முயற்சிப்பாரா?

**The Hon. Sri R. VENKATARAMAN** : ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள தளவாய்புரத்தில் இருக்கும் ஸொஸைட்டி நன்றாக இயங்கி வருகிறது என்று அத்தாட்சியைக் கொடுக்க நான் இப்போது தயாராயிருக்கிறேன். அந்த ஸொஸைடிக்கு இன்னும் நிதி வேண்டுமென்றால், அதற்கான நடவடிக்கை எடுக்கும்படி என் சக அமைச்சரான சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**Sri A. VEDARATHNAM** : தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஸொஸைடி நன்றாக இயங்காததற்குக் காரணம் என்ன ? அது சரிவர இயங்கும்படி செய்வதற்கு அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொள்ளும் ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : அங்கத்தினர்களுக்கு ஊக்கம் இல்லாதது தான் காரணம்.

**Sri A. A. RASHEED** : சுகாதாரக் கூட்டுறவுச் சங்கங்களில் வியாதிகளும் பங்கு போட்டுக் கொள்ளப்படுகின்றனவா ? (சிரிப்பு).

**The Hon. Sri R. VENKATARAMAN** : அதற்கென ஒரு தனிச் சங்கத்தை கனம் அங்கத்தினர் ஆரம்பித்தால், அங்கு அவர் அதற்கான வகையில் ஏற்பாடு செய்வார் என்று நினைக்கிறேன். (சிரிப்பு).

[18th March 1960

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : சுகாதாரக் கூட்டுறவுச் சங்கங்களில் என்னென்ன வேலைகள் செய்யப்படுகின்றன? சுகாதாரத்தை எந்த எந்த வகைகளில் அபிவிருத்தி செய்வதற்கு அவைகள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றன?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றிய விவரங்களை கூட்டுறவு டெபுடி ரெஜிஸ்டிராரிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

*Chromepet Transport Workshop*

* 462 Q.—SRI K. VINAYAKAM (on behalf of SRI T. S. RAMASWAMY) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the quantum of work turned out in the Chromepet Transport Workshop has fallen down considerably during the last few months;

(b) if so, the reasons therefor; and

(c) the steps taken by the Government to improve this state of affairs?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The fall in the output of the Chromepet Transport Workshop was due to the stay-in-strike and "go-slow" tactics adopted by the workers during October and December 1959; and

(c) The workers resumed work on 9th December 1959 and subsequently the out-turn has shown steady improvement.

SRI K. VINAYAKAM : May I know the reasons why the workers adopted the dilatory tactics like go-slow and laying down tools and how was this kind of fall in work compensated? Was not the system of bonus adopted to induce them to turn out more work in the stipulated period?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the workers said they had some grievances and they were all enquired into and some sort of a settlement arrived at. But they revised some of the things which had been settled and said they must get more minimum wages between the period 1952 and 1954 in the year 1959 and 1960. Therefore it was not possible to settle that and as a result these people went on go-slow in production.

SRI N. K. PALANISAMI : Since the Chromepet factory is working fairly well, why not the Government allow the private parties also to get bodies built in Chromepet?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the Chromepet factory is not able to produce our own requirements. That being so where is the question of capacity to build bodies for others.



18th March 1960]

SRI R. SRINIVASA IYER : Sir, is it not a fact that since December 1959 they have resumed work and in February 1960 they built nine bus bodies instead of five which is their target and this is because they are now working satisfactorily?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I am very happy to say that in January 1960 they built eight bus bodies and in February 1960 they built nine bus bodies. I am quite sure that they will continue to improve. It is my hope that they will be able to build ten bodies per month in this factory. As far as the target of five is concerned, it was fixed low for the purpose of enabling the workers to earn more bonus.

SRI T. S. RAMASWAMY : May I know whether in the intervening period when the workers in the Chromepet factory were going slow, orders were placed with the private factories to supply these things?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir, we cannot fail in our duty to the public.

SRI V. K. KOTHANDARAMAN : அந்த ஒர்க்ஷாப்பில் வேலையின் (சாதனையின்) அளவு குறைவதற்குக் காரணம், அங்குள்ள நிர்வாக அதிகாரிகளின் திறமைக் குறைவுதான் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா? எனவே அங்கே தகுந்த மாறுதலைச் செய்ய கனம் அமைச்சர் முயற்சிப்பாரா?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் தவறு. இதே நிர்வாகஸ்தர்கள் செப்டெம்பர் மாதத்திற்கு முன்பு இருந்தபோது எட்டு வண்டிகள் கட்டினார்கள். இதே நிர்வாகஸ்தர்கள் டிசம்பர் மாதத்திற்குப்பிறகு இருந்திருக்கும் போது ஒன்பது வண்டிகள் கட்டியிருக்கிறார்கள். எனவே அந்த இடைக்காலத்தில் நிர்வாகஸ்தர்களின் திறமை குறைந்து போய்விட்டது என்று சொல்வது சரியல்ல.

SRI T. S. RAMASWAMY : May I know the cost of production for building a body in the Chromepet workshop and in the private workshop?

THE HON. SRI R. VENKATARAMAN : Approximately Rupees 14,000 both in the Chromepet workshop and outside. Probably outside it is about Rs. 13,500 and in the Chromepet workshop also it will be about Rs. 13,500 and there will be no difference.

SRI M. KALYANASUNDARAM : இந்த ஒர்க்ஷாப் சம்பந்தப்பட்ட மட்டில் இப்போது என்ன நிலைமை? மாதம் ஒன்றுக்கு எவ்வளவு வண்டிகள் கட்டப்படுகின்றன?

THE HON. SRI R. VENKATARAMAN : ஏற்கனவே கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னேன். ஜனவரியில் எட்டு, பிப்ரவரியில் ஒன்பது வண்டிகள் கட்டப்பட்டன.

*Chit funds*

* 463 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether a bill to control and regulate chit funds has been finalized; and

(b) if so, when it will be introduced in the Legislature?

[18th March 1960

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Madras Chit Funds Bill is being finalised.

(*b*) The Bill will be introduced as soon as possible.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the Government have any information regarding the number of chit funds now running in our State. Also, is the Hon. Minister aware that in spite of the pending legislation, there are still bogus chit funds being run and if so, what steps do the Government propose to take to prosecute them?

THE HON. SRI R. VENKATARAMAN : The question of prosecution will arise only after the law has been enacted. So far as the number is concerned, until we have registration for this purpose, it will be difficult to find it and I do not have information regarding the number of chit funds.

SRI K. RAMACHANDRAN : What is the nature of control that the Government propose to introduce in this legislation?

THE HON. SRI R. VENKATARAMAN : It will be more or less on the lines of control over companies.

SRI T. S. RAMASWAMY : Is the Hon. Minister aware that a law in respect of the chit funds is in operation in a part of this State, in the Kanyakumari district and if so, may I know how it operates there?

THE HON. SRI R. VENKATARAMAN : In the Kanyakumari district the original law adopted in the Kerala State is being continued. We have not made any assessment of the manner in which that is working in that area.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஸார், கிராமங்களிலே லாபத்தை அனுசரிக்காமல் பொதுக் காரியங்களைச் செய்ய ஊர் ஜனங்களாலேயே சிறு சிறு சிட் பண்ட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளுக்கு சர்க்கார் விதி விலக்கு அளிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த மாதிரிச் சொல்லிக்கொண்டு சில பேர் பணத்தைச் சாப்பிட்டு விட்டுப் போய் விடுகிறார்கள். அதனால் விதி விலக்கு அளிக்க முடியாது.

SRI P. G. MANICKAM : முக்கியமாக கிராமங்களில் அநேகம் சிட் பண்ட்கள் நடைபெற்று வருகின்றன. அமைச்சர் அவர்கள் சொன்னது போல் அதில் எவ்வளவோ ஏமாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, அந்தந்த கிராமங்களில் உள்ள சிட் பண்ட்களின் புள்ளி விவரத்தை அரசாங்கம் தயாரிக்க முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ரிஜிஸ்ட்ரேஷன் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இருந்தால் புள்ளி விவரம் தயாரிக்க முடியும். சட்டமே ரிஜிஸ்ட்ரேஷன் செய்ய வேண்டுமென்று கொண்டு வரத்தான். அப்போதுதான் இந்த மாதிரிப் புள்ளி விவரம் தயாரிக்க முடியும்.



18th March 1960]

*Minimum wages for the workers in the Match Industry*

* 466 *Q*.—SRI T. S. RAMASWAMY (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to enforce minimum wages for workers in the Match Industry; and

(*b*) if so, the rates and the manner in which this is to be enforced in the Match Industry?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Minimum wages have not been fixed for the employment in match manufactory. With a view to fixing minimum wages for this employment, the Government have included it in the schedule to the Minimum Wages Act, 1948. The Government have also decided to constitute a Committee consisting of the representatives of employers and employees and independent persons to advice them on the minimum rate of wages to be fixed for employment in the above industry.

*Coastal Highways*

* 470 *Q*.—SRI M. P. SARATHI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் கடற்கரை ஓரமாக நாகப்பட்டிணம், இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி முதலிய இடங்களை இணைத்து ஒரு நெடுஞ்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அதற்கான சர்வே முடிந்து விட்டதா ?

(இ) எப்போது நிறைவேற்றி வைக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) The proposal to develop the East Coast Road passing through Chingleput, South Arcot, Thanjavur, Ramanathapuram, Tirunelveli and Kanyakumari as a National Highway during the Third Five-Year Plan is at present under the consideration of the Government.

SRI M. P. SARATHI : இந்த ஆண்டு பட்ஜெட்டில்கூட இந்த இனத்தில் 300 லட்சத்துக்கு மேல் ஒதுக்கப்பட்ட நிதியில் செலவு செய்யப்படாமல் மிச்சமிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டும், மத்திய சர்க்காரிடத்தில் கடன் வாங்கியும் பெரிய அளவில் அந்த ரோடைப் போட சர்க்கார் முற்படுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கெனவே இருக்கும் பணத்தைக் கொண்டு போட வேண்டுமென்ற அவசியமில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் " **Full grant** " கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்பதாக இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : May I know whether the Central Government have accepted our proposal?

THE HON. SRI P. KAKKAN : We will wait and see.

SRI K. B. S. MANI : இந்த கடற்கரை ஓர நெடுஞ்சாலை சென்னையில் இருந்து துவங்கி எது வரையில் முடியப் போகிறது ? எந்தெந்த ஊர்கள் வழியாக அது போகப்போகிறது என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

[18th March 1960

*Flood waters of Cauvery*

*471 *Q.*— **Sri A. VEDARATHNAM**: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

15-12-1959-ல் 194-வது கேள்விக்களித்த பதிலையொட்டி அதிக வெள்ளம் காவிரியாற்றில் வந்து கொள்ளிடத்திற்குத் திருப்பி விடப்பட்ட போதும் கடைமடையில் உள்ளவர்களுக்குத் தண்ணீர் எட்டவில்லை என்று எஞ்ஜினீயர்களுக்குத் தந்திகள் கொடுக்கப்பட்டனவா ? காரணம் என்ன ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**The Hon. Sri P. KAKKAN**: It is true that there were complaints from the ryots at the tail end of the Cauvery about scarcity of water in Mayuram and Sirkali taluks at the commencement of the irrigation season. The reasons for the dearth of supplies at the tail end areas were (1) Meagre rainfall in the delta during the summer months, (2) Non-realization of sufficient drainage in the tail end channels due to absence of summer rains, (3) cultivation of kuruvai crop on a large extent at the tail end in haphazard manner resulting in wastage of water and (4) late opening of the Mettur reservoir for delta irrigation.

The Superintending Engineer inspected the affected areas personally and arranged to send down special supply to the tail end by throttling the upper sluices and regulating them suitably. A lump sum provision of Re. 1 crore is proposed to be included in the Third Five-Year Plan for modernising the existing channels in Thanjavur district with a view to economise supplies, increase the carrying capacity of the channels and assure water to the tail ends.

**Sri A. VEDARATHNAM**: காவிரி உபரி தண்ணீரைக் கொள்ளிடத்திற்குத் திருப்பி விடும்படியான நிலைமை இருந்தும் கூட "டெயில் எண்ட்" ஏரியாக்களில் பாசனத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆண்டு தோறும் இவ்வாறு நிகழ்ந்து வருகிறது. விவசாயிகள் என்ஜினியர்களுக்குத் தந்தி கொடுத்துக் கொண்டே இருக்கும் நிலைமை இருக்கிறது. மீண்டும் இம்மாதிரி நிகழாமல் இருக்க முன் எச்சரிக்கையாக அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்யப் போகிறது ?

**The Hon. Sri P. KAKKAN**: விவசாயம் செய்யவேண்டிய காலத்தில் மழை பெய்யாத காரணத்தால் எவ்வளவுதான் தண்ணீர் விட்டாலும் வந்து சேருவதில்லை. அதற்காகத் தான் வாய்க்காலை "lining" பண்ண அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

**Sri R. SRINIVASA IYER**: இதே விதமாக கிராண்ட் அணைக்கட் கடமடைப் பாசனத்தில் தண்ணீர் வரவில்லை என்று 3 மாத காலத்திற்கு முன்பு புகார்கள் வந்தனவா ? சுமார் 6 மைல் தூரத்திற்கு மண் தூர்ந்து விட்டதால் தண்ணீர் வரவில்லை என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? அந்த மண்ணை எடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

**The Hon. Sri P. KAKKAN**: சர்க்காருக்குத் தெரிந்ததால்தான் சூப்பரிண்டெண்டிங் என்ஜினியரை "ஸ்பாட்டுக்கு" அனுப்பி ஆவன செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது போல் இடையிலே இந்த மாதிரி மண் மூடிவிடுவதால் அதையும் நீக்க அரசாங்கம் முயற்சித்துக்கொண்டிருக்கிறது.



18th March 1960]

**Sri C. MUTHIAH**: சீர்காழி தாலுகா "டெயில் எண்ட்" ஏரியாவாக இருக்கும் காரணத்தால் அங்கு ஒரு ஸ்பெஷல் சப் டிவிஷன் ஏற்படுத்தினால்தான் கவனிக்க முடியும் என்று என்ஜினியர், மந்திரி அவர்களுக்கு எழுதித் தெரிவித்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அது எந்த நிலையில் இருக்கிறது? இப்போது கோடைக்காலமாக இருக்கும் காரணத்தால் இந்தச் சமயத்திலேயே வேலையை ஆரம்பித்தால் நான் அடுத்த ஆண்டாவது இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க முடியும். 9 a.m.
அதற்காக இந்த ஆண்டு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN**: இனிமேல்தான் முயற்சி எடுக்க வேண்டும். நீர்ப்பாசன நிபுணர்களைக் கலந்து பேசி இயன்ற மட்டும் என்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்து வருகிறோம்.

**Sri A. GOVINDASAMY**: காவேரியின் உபரித் தண்ணீரைக் கொள்ளிடத்திற்கு அவசரக் காலங்களில் திருப்பிவிடுவது போல, மற்றக் காலங்களிலும் திருப்பி, வறண்ட பகுதியான சிதம்பரம் தாலூகாவுக்கும் இன்னும் சில பகுதிகளுக்கும் உபயோகப்படுத்த வசதி செய்யப்படுமா ? நமது முதல் அமைச்சர் அவர்களே கூறினார்கள் சில பகுதிகள் வறண்டிருக்கின்றன என்று. சமீபத்தில் உப தேர்தல் சமயத்தில் அவர்கள் ஸ்ரீமுஷ்ணம் பகுதிக்கு வந்திருந்தார்கள். அந்தப் பகுதி வறண்ட பகுதி என்று நான் சொல்லாமலேயே தெரியும். அந்தப் பகுதி பயனடைவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**The Hon. Sri P. KAKKAN**: முன்பே நான் பதில் சொன்னேன். கடை கோடிக்குத் தண்ணீர் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து, லைனிங் கொடுத்து, அங்கே தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்று. அப்படிக் கொடுத்தது போக தண்ணீர் மீதி இருந்தால், கனம் அங்கத்தினர் சொல்லும் யோசனையையும் பார்க்கலாம்.

**Sri K. B. S. MANI**: ஒவ்வொரு ஆண்டும் இந்த காவிரியிலே வெள்ளம் வந்து கொள்ளிடத்திலே திருப்பிவிடப்பட்டு தண்ணீர் கடலுக்குப் போய்ச் சேருகிறது. ஆகவே காவிரியிலே வெள்ளம் வராத அளவுக்குத் தடுப்பதற்காக இருக்கும் அணைக்கட்டினுடைய உயரத்தை அதிகப்படுத்தி அந்தத் தண்ணீரை அங்கே தேக்கி வைக்க அரசாங்கம் முன் வருமா ?

**The Hon. Sri P. KAKKAN**: கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் அதைப்பற்றிபதில் சொல்லலாம்.

**Sri T. R. RAMAMIRTHA THONDAMAN**: ஸார், வெள்ள காலத்தில் ஆற்றில் தண்ணீர் நிறைய வரும்போது, கொள்ளிடத்தில் தண்ணீரைத் திருப்பிவிடுவது காரணமாக மண்ணியாற்றை அடைத்து விடுவதால் சீர்காழி, மாயூரம், கும்பகோணம் போன்ற தாலூகாக்களில் குறுவை மகசூல்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டம் ஏற்படுகிறது. கொள்ளிட கரைகளும், காவிரியிலிருந்து வடிகிற தண்ணீரைக் கொண்ட மண்ணியாற்றுக் கரைகளும் சேர்ந்திருப்பதால், வெள்ளத்தின் காரணமாக தண்ணீர் விட்டால் "ப்ரீச்" ஆகும் என்பதற்காக ஒரு வார காலம் தண்ணீர் இல்லாமல் குறுவை மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது. வருஷா வருஷம் தண்ணீர் விடாமல் தடுக்கப்படுகிறது என்று இன்ஜினீரிங் டிபார்ட்மெண்டிலிருந்து எங்களுக்குப் பதில் வந்தது. அதன் காரணமாக மூன்று தாலூகாக்களுக்குப் பாயக்கூடிய மண்ணியாற்றுக்கு புதிய முறையில் தூரமான தலைப்புக்களை ஏற்படுத்தி, விபத்து ஏற்படாமல் பாதுகாப்பதற்கு மண்ணியாற்றைச் சீர்படுத்த முன் வருவார்களா ?

**Thn Hon. Sri P. KAKKAN**: இதைப்பற்றித்தான் முதலில் கனம் அங்கத்தினர் திரு. வேதரத்னம் பிள்ளை அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன்.

[18th March 1960

*Firewood Commission Agents' Association*

* 472 *Q.*—Sri K. ANBAZHAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state —

(*a*) whether any memorandum was submitted to the Government by Salt Cotaurs and Rayapuram Firewood Commission Agents' Association;

(*b*) if so, what are their grievances and requests; and

(*c*) the action taken to retrieve their grievances?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*c*) A memorandum was received from Sri D. Jagannatha Reddy and others (firewood commission agents) of Park Town, Madras, in February 1959 alleging that boatmen were demanding payment over and above the usual charges for conveying firewood to the depots on the banks of the Canal and that the boatmen were threatening to sell away the firewood in the boats. The dispute between the Firewood Commission Agents' Association and the Boatmen Union was settled by the Labour Officer by the third week of February 1959.

***Auctioning of unclaimed trees.***

*473 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நட்சத்திரக் குறியிட்ட 338-ம் கேள்விக்கு 12-9-1959-ல் அளித்த பதிலையொட்டி மரங்களின் சொந்தக்காரர் தெரியாத காரணத்தினால் அந்த மரங்களை ஏலம்போட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) அவைகள் போக்குவரத்திற்கு இடையூராக இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No timber logs are now stored on the roadside thereby causing obstruction. The question of auctioning the timber logs does not therefore arise.

Sri S. M. ANNAMALAI : "ரோட் ஸைடில் இல்லை" என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். 'இரண்டு நாட்களுக்கு முன்பு கூட, சென்னையிலிருந்து அமைச்சர் அவர்கள் அந்த வழியில்தான் சென்றிருக்க வேண்டும். அதை நன்றாகப் பார்த்திருக்கலாம். மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவருடைய மரமாக இருப்பதால் அமைச்சர் அவர்கள் இவ்வளவு காலதாமதம் செய்கிறாரா என்று கேட்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : யாராயிருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை. யார் தவறு செய்தாலும் இந்த அரசாங்கம் அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற அந்த நபரைப்பற்றிக்கூட கோர்ட்டிலே வழக்குத் தொடரப் பட்டது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். என்னிடம் இருக்கும் தகவல் படி அங்கு ஒன்றும் இல்லை. அந்த ரோடிலே தடையாக ஒன்றும் மரங் கள் இல்லை என்ற தகவலைச் சொன்னேன். ஆனால், நான் போனபோது கனம் அங்கத்தினரும் கூட வந்து, ஏதாவது மரத்தைக் காட்டியிருந்தால் அதற்குமேலே வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கலாம்.

Sri A. GOVINDASAMY : மரம் ரோடில் இருந்த காரணத் தால் போலீஸ் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்ததா?



18th March 1960]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் இப்பொழுது தான் சொன்னேன். மரம் ரோட்டிலே இருந்ததால் போலீஸ் அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்தார்கள் ; ஆனால், அந்த வழக்கு அரசாங்கத்திற்கு விரோதமாகப் போய்விட்டது ; வழக்கைத் தள்ளுபடி செய்தார்கள் கோர்ட்டார் என்று சொன்னேன்.

*Scholarships for M.Sc. (Agriculture) Course*

* 474 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is a proposal by the Government to award full scholarships (educational and residential) to the students doing M.Sc. (Agriculture) in the Government College at Coimbatore; and

(*b*) if so, whether there is a proposal to extend the same facilities to the students doing M.Sc. (Agriculture) in the Annamalai University?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The following concessions have been granted :

(1) Merit scholarships of Rs. 150 per mensem each to ten students.

(2) Grant of study leave on half pay for five students.

(3) Exemption from payment of tuition fees of Rs. 200 per annum for all students from the Madras State.

(*b*) No Sir.

Sri S. LAZAR : கல்விச் சம்பளத்தைத் தள்ளிக்கொடுத்ததுபோல, அண்ணாமலை யூனிவர்ஸிட்டியில் இருக்கும் எம். எஸ்ஸி. வகுப்பு மாணவர்களுக்கும் இதுபோன்ற சலுகையை அரசாங்கம் கொடுக்குமா ? அண்ணாமலை யூனிவர்ஸிட்டியில் ஏற்படுத்தியிருக்கும் இந்தப் படிப்பு ஆசியா கண்டத்தில் வேறு எங்குமே இல்லை என்று சொல்வது உண்மையா ? இதை ஊக்குவிக்க அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அண்ணாமலை சர்வகலாசாலையில் அளிக்கப்படுகிற படிப்பின் தரத்தைப்பற்றி தனியாகக் கேட்டால் பதில் அளிக்கிறேன். அரசாங்கத்திலே ஊழியம் செய்கிற சில பேர்கள் மாணவர்களாக போஸ்ட்-கிராஜுவேட் படிப்புக்காக கோவையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த சலுகை காட்டப்படுகிறது. அண்ணாமலை சர்வகலாசாலையிலே வாசிக்கும் மாணவர்களுக்குச் சலுகை காட்டும் உத்தேசம் இப்பொழுது இந்த அரசாங்கத்திடம் இல்லை.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether there is any proposal to strengthen the M.Sc. course?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The question of further strengthening the M.Sc. course is now and then being considered and decisions are being taken.

Sri K. RAMACHANDRAN : எம்.எஸ்ஸி. கோர்ஸ் என்றால் அதில் வெகுசில மாணவர்கள்தான் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதிலே எல்லோரையும் மாணவர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் முறையிலே ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் ஒருசில அளவுக்காவது கொடுக்க அரசாங் கம் முன்வருமா ?

[18th March 1960

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** இப்பொழுது என்ன என்ன ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு நான் இப் பொழுது விவரம் தெரிவித்தேன். அதற்குமேலே என்ன சலுகை வேண்டு மென்று அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**SRI T. S. RAMASWAMY** : அயல் நாட்டில் விவசாயத்தில் உயர்தரக் கல்வி பெறும் மாணவர்களுக்கும் இதே சலுகை கொடுக்கப் படுகிறதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : அரசாங்கம் அவ்வாறு குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப்பற்றி குறிப்பிட்ட ஒரு நாட்டிலே உயர்தரக் கல்வி பெறவேண்டுமென்று கருதினால், அப்பொழுது அரசாங்கம் அந்தச் செலவை ஏற்றுக்கொள்ளும். அரசாங்கத்தில் உத்தியோகத்தில் இருப்பவர் கள் தாங்களாகவே போய் படிக்கவேண்டுமென்று சொன்னால், அவர் களுக்கு "லீவ்" போன்ற சில வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**SRI A. VEDARATHNAM** : அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் விவசாயத்தை இசை மூலம், சங்கீதத்தின் மூலம் வளர்க்கக்கூடிய ஆராய்ச்சி இருக்கிறதே, அது மிகச் சிறந்த ஒரு முறை ஆனதினாலே, இந்தத் துறையில் ஈடுபடும் மாணவர்களுக்காவது சலுகை காட்டும் வகை யில் நிதி உதவி அளிக்க நமது அரசாங்கம் முன்வருமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : நானே சில மாதங் களுக்கு முன்பு அண்ணாமலை சர்வகலாசாலையில் நடைபெறுகிற விவசாய ஆராய்ச்சியைப் பார்த்தேன். ஆனால், இசை மூலம் செய்யப்படுவது பற்றி இன்னும் எனக்குத் தகவல் தெரியாது.

**SRI A. GOVINDASAMY** : அண்ணாமலை பல்கலைக் கழகத் திலே எம்.எஸ்ஸி. படிக்கும் மாணவர்களுக்கு தற்சமயம் சலுகை கொடுக்க உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். எதிர்காலத்திலாவது அவர் களுடைய பொருளாதார நிலையைக் கவனித்து, கோயமுத்தூரில் படித் தாலும், சென்னையில் படித்தாலும், அண்ணாமலை சர்வகலாசாலையில் படித் தாலும், பாகுபாடு செய்யாமல், எல்லா இடங்களிலும் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இதிலே பாகுபாடு ஒன்றும் இல்லை. எதிர்காலத்தைப்பற்றி இப்பொழுது சொல்வதற்கில்லை. ஆகையால்தான், "தற்சமயம்" என்று சொன்னேன்.

**SRI S. LAZAR** : எப்படி வேலையிலிருந்து "லீவ்" எடுத்துக் கொண்டு கோயமுத்தூரில் படிக்கிறார்களோ, அதேபோல அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயும் சேர்ந்துள்ளார்களே, அவர்களுக்காவது அரசாங்கம் இந்தச் சம்பளச் சலுகையைக் கொடுக்க முடியுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் பார்த்து பதில் சொல்லலாம்.

*Loan facilities to the landless agricultural labourers*

* 475 *Q.*—**SRI P. G. MANICKAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு கிராமக் கடன் சங்கங்கள் மூலமாகக் கடன் வழங்க வசதி செய்வதற்கான திட்டம் ஒன்றை வெளியிடுவது பற்றிய பரிசீலனை அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) அவ்வாறு நடத்தப்பட்டவரின் விவரங்கள் யாவை ?



18th March 1960]

**THE HON. SRI R. VENKATARAMAN** : *(a)* & *(b)* With a view to enable the co-operative financing institutions to extend credit facilities to all sections of the agricultural community including tenant cultivators and agricultural labourers, Government have recently approved a scheme for extending guarantee for the reimbursement of losses up to 10 per cent of the total short and medium-term loans issued by these co-operatives. Subject to this over all limit, Government would reimburse in any individual case up to two-thirds of the loss, the remaining one-thirds of the loss, being borne by the State Co-operative Bank, the Central Co-operative Banks and the primary Co-operative institutions concerned. The scheme will, for the present, be worked in the 13 Community Development Blocks and 2 Firkas covered by the Full Finance Scheme and will be extended to the other Community Development Blocks in the State progressively side by side with the Full Finance Scheme. In view of the Government guarantee against losses due to defaults and other contingencies, it is expected that the co-operative credit institutions will provide the marginal and sub-marginal cultivators with adequate loan facilities.

**SRI P. G. MANICKAM** : மேற்கண்ட நிலம் இல்லாத விவசாயி களுக்கு கடன் வழங்கும்பொழுது சில நிபந்தனைகளை பார்க்கவேண்டி யிருக்கிறது. அவர்களுக்கு சொத்து இருக்கிறதா, சொத்தின் மதிப்பு என்ன என்று விவரங்களை கூட்டுறவு சங்கங்கள் சட்டப் பிரகாரம் பார்க்க வேண்டி இருக்கிறது. ஆனால் சொத்து இல்லாதவர்களுக்கு அவர்கள் உழுகின்ற நிலத்தில் இருக்கிற வெள்ளாமையை சொத்து மதிப்பாக வைத்துக்கொண்டு அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய் வதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா? இதற்காக இந்த ஆக்ட் திருத்தப் படுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினர் கேட்டது தான் இப்பொழுது நான் புதியதாக கொண்டுவருகிற திட்டம். இப்பொழுது இருக்கிற கூட்டுறவு சங்கங்களின் விதிகளின் பிரகாரம் கடன் கொடுப்பதற்கு "ஷூரிடி" வேண்டும், அல்லது சொத்து இருக்க வேண்டும் என்று இருக்கிறது. இப்பொழுது நாம் கடனுக்கு காரண்டி கொடுக்கிறோம் என்று சொல்லுவது, அந்த விதமாக சொத்து ஜாமீன் கொடுக்க முடியாத வர்களுக்கு, "ஷூரிடி" கொடுக்க முடியாதவர்களுக்கு கூட அவர்களுடைய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு கடன் கொடுக்கவேண்டுமென்பது தான்.

**SRI K. RAMACHANDRAN** : இனும் நிலங்களை வைத்து உழக்கூடிய விவசாயிகளுக்கு இம்மாதிரி கடன் கொடுக்கும் நிலைமை இதுவரையில் இல்லை. அதுகுறித்து அரசாங்கத்திற்கு வெகுவாக எழுதப் பட்டிருக்கிறது. இம்மாதிரி கடன் கொடுக்க வேண்டுமென்றால் அரசாங்கம் இதுபற்றி விதிகள் ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதுவிஷயமாக "லாஸ்" ஏற்பட்டால் அது ஈடு செய்யப்படும் என்று காரண்டி கொடுத்தால் மட்டும் போதாது. அதற்கு தகுந்த விதிகளை அரசாங்கம் ஏற்படுத்தி எல்லா சொஸைடிகளுக்கும் அனுப்பவேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்வார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : விதிகளை கூட்டுறவு சங்கங்களே மாற்றிக்கொள்ள முடியும். ஆனால், இன்றைக்கு அவர்கள் அவ்வாறு செய்யாமல் இருப்பதற்கு காரணம், இதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை யார் ஏற்றுக்கொள்ளுவது என்பது தான். சர்க்காரைப் பொறுத்த அள விலே அந்த நஷ்டத்தில் மூன்றில் இரண்டு பகுதி சர்க்கார் ஏற்றுக்கொள்ள ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விதிகளை திருத்தி அமைத்துக்கொள் ளுவது சொஸைடிகளே செய்துகொள்ளமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[18th March 1960

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, when the parties approached the societies, they were given to understand that Government alone should come to the rescue and amend the rules. Therefore, will the Government consider the desirability of giving specific directions to the societies? May I also know, Sir, the maximum of loan that is available to the labourers?

THE HON. SRI R. VENKATARAMAN : These are all details which have got to be worked out by the societies particularly in relation to the credit-worthiness of the person. Therefore, we do not propose to make any hard and fast rule as to the amount which should be given under the scheme. So far as the rules are concerned, this has been accepted. In these thirteen places where this new scheme of guarantee is introduced, that is, in the various Community Development Blocks where full finance scheme is in force, the rules are being amended.

SRI K. B. S. MANI : தொழிலாளர்களுக்கு வீடு கட்டி கொடுப் பதைப்பற்றி தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த மட்டில் . . . .

DEPUTY SPEAKER : How is this question relevant? I disallow this question.

*Abolition of Moniam tax in Kanyakumari district*

* 476 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state when the Government propose to bring in legislation to abolish the Moniam tax in the Kanyakumari district?

THE HON. SRI M. A. MANICKAVELU : The matter is under the consideration of the Government.

SRI T. S. RAMASWAMY : Sir, this matter has been hanging fire for the last ten years—even before the date of the States Reorganisation. Now for the last four years this Government are considering the matter. May I know what exactly is the reason for the delay? It is such a simple matter. May I know whether the Government are aware of the fact that every year of delay means additional tax burdeen to thousand of poor ryots in the Kanyakumari district?

THE HON. SRI M. A. MANICKAEVLU : If this matter has been under consideration for ten years, a good part of it was with the other Government. Now the difficulty is this. We have to find out the nature of the tenures. Therefore we have addressed the Collector to enquire and report. The Collector sent a report. Then the Board examined it. They have sent up some proposals. Now we have referred it back to the Kerala Government and also to Sri Padmanabhaswami Temple authorities saying, "These are the lines on which we are going to amend; what is your reaction?" We are awaiting the report. As soon as we recei... it, we will take action.



18th March 1960]

SRI T. S. RAMASWAMY ; Sir, are the Government aware of the fact that a draft Bill was already there in the erstwhile Travancore-Cochin State and also in the present Kerala State? May I know whether, if a private Bill is brought forward in this Assembly, the Government will be prepared to support it?

THE HON. SRI M. A. MANICKAVELU : The hon. Member knows all this because he was there. He came from there. But we can get information only through correspondence. We have already addressed them, an dtheir reply awaited.

SRI R. SRINIVASA IYER : Sir, are the Government aware that land revenue in the Kanyakumari district was fixed about 80 or 90 years ago? People are not able to say when it was fixed—they do not remember. May I know whether there was any survey at all, and whether a pattadar could understand the extent of land or assessment? May I also know whether the Government propose to have a survey of the lands in that district and review the revenue settlement of that district?

THE HON. SRI M. A. MANICKAVELU : What the hon. Member has raised is a bigger issue. What we are concerned with are the Sripandaravagai lands and the Thiruppuvaram lands of Sri Padmanabhaswami Temple at Trivandrum. Only with these lands we are concerned. If the hon. Member gives notice of a separate question in respect of other lands, it will be examined.

*Textile Institute, Madras*

* 477 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) when the Textile Institute, Madras, was started;

(b) the purpose it served; and

(c) whether there is any proposal to close it down and if so, why?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Government Textile Institute, Madras, was started in July 1922.

(b) The objects and functions of the Institute may be briefly classified under the following heads :—

(i) To provide practical and theoretical training for weavers engaged in Handloom Weaving and for teachers of weaving employed in weaving schools. Also for training Supervisors to go as Spinning and Weaving Masters and Dyeing and Printing Masters for Factories and Textile Mills.

(ii) To produce and supply machine-made warps and to demonstrate to handloom weavers the economy of such warps.

(iii) to demonstrate the weaving of various fabrics with the aid of improved looms and appliances;

[18th March 1960

(iv) To devise, manufacture, and demonstrate improved types of Handlooms and new appliances for the requirement of the several classes of weavers;

(v) To serve as a permanent museum for the display of all types of hand-woven fabrics, improved looms and accessories;

(vi) to evolve new designs and weavers for introduction in the weaving centres according to the changing tastes of the public, to render technical assistance required by Handloom Weavers.

(c) There is no proposal to close down the Government Textile Institute. But the Government of India have agreed to take over thee Institute to set up a Research and Training Institute for the Handloom Industry at Salem, to be run on an All-India basis.

SRI N. K. PALANISAMI : Sir, since it is vulnerable to the deevelopmnt of handloom industry, will the Government consider the setting up of a few more institutes similar to this in Kancheepuram, Tiruchirappalli and Coimbatore?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, this institute is advantageous. It is not vulnerable. (Laughter). The one institute which we propose to put up here on an all-India basis will have all the improved facilities for research as well as training.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : சென்னையைத் தவிர வேறு எங்கேயாவது இந்த பயிற்சி நிலையம் ஏற்பட்டிருக்கிறதா ? இந்த பயிற்சி நிலையத்தில் சேருவதற்கு மாணவர்களுக்கு என்ன தகுதி இருக்க வேண்டும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது சென்னையில் நடந்து கொண்டிருந்தது. இந்த இன்ஸ்டிட்யூட் இப்பொழுது சேலத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது, சேலம் பெரிய கைத்தறி நெசவாளர்கள் இருக்கக் கூடிய பகுதி என்ற காரணத்திற்காக. இதில் சாதாரணமாக நெசவுத் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாம் preference கொடுக்கிறோம். அங்கு இருப்பவர்களுக்கு ரூ. 40 அலவன்ஸ் கொடுக் கிறோம். Tuition fees ஒன்றும் சார்ஜ் செய்வதில்லை. இதுபற்றி தனியாக அவர்களுக்கு qualifications வேண்டுமென்று ஒன்றும் விதிகளில் இல்லை.

SRI A. A. RASHEED : Sir, may I know the amount saved by the institute being taken over by the Government of India?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no question of saving. On the contrary, we are having an institute of an all India character in our State.

SRI K. R. NALLASIVAM : இப்பொழுது இருக்கக் கூடிய நெசவாளர் [illegible] வேறு தொழில்களுக்குப் போகும்படி நமது தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லும் பொழுது, புதியதாக அந்த நெசவுத் தொழிலுக்கு இம்மாதிரி ஒரு பயிற்சி நிலையம் ஏற்படுவதன் மூலம் என்ன லாபம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் இந்தக் கேள்வி போட்டதற்கு நான் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்ளு கிறேன். ராஜா மகன் ராஜா என்பதை ஏற்றுக்கொள்ளாததால், நெச



18th March 1960]

வாளியின் மகன் நெசவாளிதான் என்று நாம் எடுத்துக்கொள்வதற் கில்லை என்று சொன்னேன். இரண்டாவதாக, இந்தத் தொழில் நன்ருக நீடித்து நடக்கவேண்டுமென்று சொன்னுல், நல்ல உயர்ந்த ரகத் துணிகளை உற்பத்தி செய்யவேண்டும். சாதாரணமாக இப் பொழுது போட்டியில் நடந்துகொண்டிருக்கக் கூடிய ரகத்தையே உற்பத்தி செய்துகொண்டிருந்தால் அதில் ஊதியம் அதிகமாக இருக்காது. 5 லட்சம் தறிகள் இருக்கும் இடத்தில் 1 லட்சம், 1½ லட்சம் தறிகளாக குறைந்து விட்டால், அதில் வேலை செய்பவர்களுக்கு 100, 120 ரூபாய் அளவுக்கு கிடைக்கக் கூடிய துணிகளை உற்பத்தி செய்யக் கூடும். எல்லோரும் வேஷ் டியே நெய்துகொண்டிராமல், நல்ல ரகமான பெட்ஷீட்கள், வேலைப்பாடு உள்ள மற்ற ரகங்களை நல்ல முறையில் "இம்ப்ரூவ்டு பெஸிலிடீஸ்" மூலம் உற்பத்தி செய்தால் அவர்களுக்கு ஊதியம் உயர்வதற்கு நல்ல திட்டமாக இருக்கும் என்று நான் சொன்னேன். அங்கத்தினர்கள் இந்த விவாதம் வரும்போது அதுபற்றி அவர்களது கருத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRIMATHI A. S. PONNAMMAL : தலைவர் அவர்களே, மதுரை யில் நெசவாளிகள் அதிகமாக இருப்பதால், அங்கே ஒரு பயிற்சி நிலையம் நிறுவ அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ? அந்த பயிற்சி எத்தனை மாத காலம் நடைபெறுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN: சேலத்திலிருந்து அங்கத்தினர் யாரும் இங்கே இல்லை போல் இருக்கிறது. (சிரிப்பு) தமிழ் நாட்டில் பயிற்சி நிலையம் எங்கு இருந்தாலும் ஒன்றுதான். எல்லா இடத்திலும் இருப்பவர்களும் அங்கு பயிற்சி பெறலாம். ஒவ்வொரு இடத்திலும் இருக்க வேண்டுமென்பதில்லை.

SRI A. GOVINDASAMY : நெசவாளி மகன் நெசவாளியாக இருக்கவேண்டும் என்பதை அமைச்சரவர்கள் ஒத்துக்கொள்ளவில்லையென்று சொன்னுர்கள். நெசவாளர்களை வேறு தொழில்களில் ஈடுபடுத்த அர சாங்கத்திற்கு உத்தேசம் உண்டா, திட்டம் இருக்கிறதா ? இல்லை, இந்த அரசாங்கம் வடநாட்டு முதலாளிகளுக்கு உதவியாக நெசவாளிகளை நசுக்க உத்தேசித்திருக்கிருர்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதைப் பற்றி கனம் கோவிந்தசாமியவர்கள், ஒரு சிறந்தபிரசங்கம் கைத்தறி மானியக் கோரிக்கை வரும்போது, செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்ருல், சட்ட சபையைக் கலந்துகொண்டு புதிதாக அவர்களுக்கு நல்ல முறை யிலே ஒரு திட்டம் தீட்ட வேண்டும் என்று யோசனை வைத்திருக்கிறோம். அப்பொழுது விளக்குகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Chemical Testing and Analytical Laboratory*

* 478 *Q*.—SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்திலுள்ள "Chemical Testing and Analytical Laboratory"-யில் 1958–59-ம் ஆண்டுகளில் எத்தனை சோதனைகள் நடத்தப்பட்டன ?

(ஆ) தனியாருக்காக எத்தனை ? அரசாங்க இலாக்காக்களுக்காக எத்தனை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a)—

| Year. | Number of Cases examined | Number of Articles examined |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1958 | 3,107 | 15,924 |
| 1959 | 2,938 | 14,512 |

(b)—

| Year. | Number of cases examined for | | Number of articles examined for | |
|---|---|---|---|---|
| | Private parties including Corporation of Madras. | Government Departments. | Private parties including Corporation of Madras. | Government Departments. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1958 | 2 | 3,105 | 14 | 15,910 |
| 1959 | 6 | 2,932 | 32 | 14,480 |

## *Atomic Energy*

* 479 Q.—SRI A. VEDARTHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அணுசக்தியை விவசாய அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் யோசனை அரசாங்கத்திற்கு உண்டா ?

(ஆ) அது சம்பந்தமாய் என்ன முயற்சி நடைபெறுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) A scheme for making a start in this direction by undertaking work on limited and specific problems and training the required personnel at the Indian Agricultural Research Institute, New Delhi and at the Atomic Energy Commission, Trombay, is being drawn up.

SRI A. VEDARATHNAM : என்னென்ன துறையில் அவர்களுக்கு இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது ? அந்தமாதிரிப் பயிற்சியை நமது மாநிலத்திலேயே நடத்துவதற்கு முயற்சி ஏதாவது உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மாநிலத்தில் கோவையில் ஆராய்ச்சி நிலையம் வைப்பது என்பதில் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. முக்கியமாக ரேடியோ ஆக்டிவ் ஐஸோடோப்பிலிருந்து,

(i) Radiation genetics and plant mutation research.

(ii) Use of Radio tracers in plant physiological research, and

(iii) Use of radio tracers especially P. 32 ins oil and fertiliser research.

ஆராய்ச்சிகள் செய்யவேண்டும்.

SRI K. ANBAZHAGAN : விவசாயத்திற்கு அணுக் கதிரை பயன்படுத்துவதற்கு மின்சார நிலையம் அதைத் தொடர்ந்து அமைக்கப் படவேண்டும் என்பதால், அப்படி அமைக்க முயற்சிகள் எடுக்கப் படுகின்றனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது வேறு விஷயம். அதைப் பற்றியும் கவனம் செலுத்தப் பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : அண்மையில் உலக விவசாய பொருட்காட்சியில் அமெரிக்கன் பெவிலியனில் அடாமிக் எனர்ஜியை விவசாயத்திற்குப் பயன்படுத்துவது பற்றி விளக்கிக்காட்டினார்களே, அதை நம் அதிகாரிகள் பார்த்து அதைப் பயன்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் ஏதாவது எடுக்கப் படுகிறதா ?



## *Mineral survey*

* 481 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the nature and extent of minerals found in Thanjavur, Tiruchirappalli and Salem districts by way of the geological and other surveys so far conducted;

(b) the minerals which are put to use on date; and

(c) whether there is any proposal to conduct an intensive survey in those districts?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) to (c) A copy of the answer is placed in the Library of the Legislature.

I may mention in this connection, Mr. Deputy Speaker, that this information relates to the mineral wealth of five or six districts and it is an elaborate document. Therefore, it has been placed in the Library.

SRI K. ANBAZHAGAN : அந்தமாதிரி மினரல்களைக் கண்டு பிடிக்கும் அலுவலை சென்னை சர்க்காரே மேற்கொண்டு தனித்துறையாகச் செய்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆம், அம்மாதிரி மூன்று வருஷமாக இயங்கி வருகிறது. Geological Survey of India தவிர சென்னையில் State geological Survey Department இயங்கி வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : Sir, the report may be elaborate. But, is it not a fact that it is an important one and so the Members would like to have a copy each?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I suppose the Library is intended for the Members to go and read there. They can make the best use of the report placed in the Library. It will be enormous waste of money to print this document and circulate it.

SRI S. LAZAR : I want to make a request to Mr. Deputy Speaker. Now that the report is placed in the Library, may I request you, Sir, to have this question taken up the next day so as to enable the Members to go through the answer in the Library and put supplementary questions on the floor of the House?

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question. For that purpose, there is no need to postpone the question.

THE HON. SRI R. VENKATARAMAN : May I explain the procedure in respect of these matters? Usually, when copies of long answers are placed on the table of the House or in the Library, it is expected that Members would read them and put separate questions in respect of each item. The hon. Member may do so.

[18th March 1960

SRI K. VINAYAKAM : Is this copy under reference placed in response to the question under discussion or is it only outmoded literature which contains information relating to the Roman Age?

THE HON. SRI R. VENKATARAMAN : I wish there was a Geological Survey of Madras in the Roman Age. In fact, our knowledge would have improved by this time very much. We are very low in thee filed. However, I may tell the hon. Member we have placed in the Library, the latest report in response to this question.

SRI A. VEDARATHNAM : நம் மாநிலத்தில் கனிப் பொருள் ஆராய்ச்சி இலாகா இதுவரையில் ஆராய்ந்ததில், வெற்றிகரமான முடிவு கண்டிருக்கிறார்களா ? அதன் விவரங்களைக் கொடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதுதான் லைப்ரெரியில் வைத்திருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : சார், அந்த அறிக்கையிலிருந்து திருச்சி பொன்மலையில் பொன், ஜிப்ஸம் முதலியவைகள் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறதா ? அந்த ஜிப்ஸத்தை ஆராய்ச்சி செய்து மத்திய சர்க்காருக்கு அனுப்பி முடிவு கண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஜிப்ஸம் இருக்கிறது என்று கண்டு பிடித்து இருக்கிறார்கள். பொன் இருக்கிறதா என்பது என்னிடம் இருக்கும் தகவலில் இல்லை. பெயர் பொன்மலை என்பதால் தங்கம் இருக்கலாம் ; ஆனால் இப்பொழுது இருக்கும் அறிவை வைத்துக்கொண்டு இல்லை என்று சொல்கிறேன். வருங்காலத்தில், பொன் இருக்கிறதா என்பதை அறிந்து ஆராய்ச்சி கொள்ள வேண்டும். ஆனால், பொன் கிடைக்காது என்று சொல்ல நான் தயார் இல்லை.

### *Radio isotopes*

* 482 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to manufacture radio-isotopes in this State; and

(b) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI N. K. PALANISAMI : May I know whether the experiment is being conducted only on cereals and grains with isotopes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that according to my answer, there is no proposal to manufacture radio isotopes. As I have already stated, there is a proposal to start a Research Centre at Coimbatore relating to the use of this radio isotopes.



18th March 1960]

SRI N. K. PALANISAMI : May I know whether the experiments would be conducted only on cereals and grains and not on other crops? Will the Government consider the desirability of conducting the experiments on chillies, plantains and ground-nuts as we do not have suitable medicines for treating these diseases?

THE HON SRI M. BHAKTAVATSALAM : The scheme is yet to be finalised. So, I am sorry I am not in a position to give any specific answer to the hon. Member.

DEPUTY SPEAKER : Questions are over.

**Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—PRIVILEGE MOTIONS.

(1) MINISTER'S REPLIES TO CERTAIN SUPPLEMENTARY QUESTIONS.

SRI M. KALAYANASUNDARAM : Mr. Deputy Speaker, I wrote to you on a matter of privilege regarding certain remarks 9-30 a.m.
made by the Hon. Leader of the House with reference to the High Court and you have not given your consent to me to raise the matter here.

DEPUTY SPEAKER : I have not given my consent. Therefore, he need not raise the matter now.

SRI M. KALAYANASUNDRAM : I am grateful to you for the light you have thrown on the issue. But . . . . .

DEPUTY SPEAKER : If the hon. Member wants, he may read my letter.

SRI M. KALYANASUNDARAM : I will read it, Sir. It is stated :

" With reference to the notice of matter of privilege relating to certain observations made by the Leader of the House when question No. 421 relating to the observations of the High Court on the District Superintendent of Police of Chingleput, I am to state that under Article 194 of the Constitution a member has freedom of speech in the House subject to the provisions of the Constitution the Rules of Procedure. Accordingly the observations made by the Leader of the House are privileged and they cannot be questioned even in a court of law. Violation of any rule cannot form the basis for referring any matter to Privileges Committee. Any violation of the rules of procedure is dealt with by the Speaker. I, therefore, do not give my consent for raising the matter."

This is your reply and I am grateful to you for that. You were good enough to say that any violation of rules is dealt with by the Speaker.

[18th March 1960

DEPUTY SPEAKER : Yes, that is all. If the hon. Member has any doubts, he may come to my Chamber. Under Rule 184 of the Rules, a member wishing to raise a matter of privilege shall, before the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised. So, only with the permission of the Speaker, he can raise the matter. I have not given my consent and he cannot, therefore, raise any further discussion on the matter of privilege.

SRI M. KALYANASUNDARAM : I am not raising any discussion on the subject-matter of privilege.

DEPUTY SPEAKER : Upon my letter also.

SRI M. KALYANASUNDARAM : You were good enough to permit me to read your letter.

DEPUTY SPEAKER : The hon. Member cannot discuss the points mentioned in the letter. The letter is not for discussion here. If the hon. Member has any doubts, he can come to my Chamber. Once I have declined to give consent it cannot be discussed here.

## III. CALLING ATTENTION TO THE CLOSURE OF BEEDI FACTORIES.

DEPUTY SPEAKER : The hon. Member, Sri V. K. Kothandaraman will now call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, viz., the closure and threatened closure of beedi factories to evade the enforcement of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ரூல் 41-கீழ் பீடித் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்தைப்பற்றி ஒரு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். பீடித்தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச கொடுக்கவேண்டும் என்று வேண்டி இப்போது சட்டத்தை இயற்றி இருந்தபோதிலும்கூட அந்தச் சட்டம் தொழிலாளர்களுக்கு உதவிபுரியக் கூடிய அளவுக்கு இல்லை என்பதுதான். இது எதைக் காட்டுகிறது என்றால் சட்டம் வந்தும் பிரயோஜனம் இல்லை வராமல் இருந்தும் பிரயோஜனம் இல்லை. உதாரணமாக கல்யாணம் ஆகாமலும் பிரும்மச்சாரி, கல்யாணம் ஆகியும் பிரும்மச்சாரி என்பது போல இருக்கிறது. கல்யாணம் ஆகாமல் இருக்கும்போதாவது ஒண்டிக் கட்டை. கல்யாணம் ஆனதினால் இரண்டுப்பேருக்கு பல தொல்லை. பல சங்கடம் ஆகியவற்றை அநுபவிக்கக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டம் வந்த பிறகு தொழிற்சாலைகளில் கதவடைப்பதும், பக்கத்து ராஜ்யங்களுக்கு கொண்டு செல்வதும் ஒரு பக்கம் இருக்க, அந்தச் சட்டப்படி பிரதான முதலாளி யார், தொழிலாளி யார் என்ற அம்சத்தை தீர்மானிக்க ஹைகோர்ட்டில் கேஸ் ஒரு பக்கம் போடப்பட்டும் இருக்கிறது. ஆகவே உடனடியாக அந்தச் சட்டத்தை மாற்றி, திருத்தி அமைத்து முதலாளி என்று சொன்னால் இன்றைக்கு நம் ராஜ்ய சர்க்காரிடத்தில் லைசென்சு வாங்கி ஒரு தொழிற்சாலையை நடத்துவதற்கு வேண்டிய புகையிலை லைசென்சு பெற்றவர்தான் என்கிற அடிப்படையில் டிரேட் மார்க் உடையவரை முதலாளி என்று கொண்டுவரவேண்டும். அந்தமாதிரி இல்லை என்றால் இன்றைக்கு கூட்டுறவு முறையிலும் பீடித் தொழிலாளிகள்



18th March 1960] [Sri V. K. Kothandaraman]

இன்வெஸ்ட்பண்ணி இந்தத் தொழிலை நடத்திக்கொண்டு போவார்கள். கதவடைப்பு மூலமும், பக்கத்து ராஜ்யங்களுக்குக் கொண்டு செல்வது மூலமாக தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதோடுகூட சர்க்கார் வருமானமும் குறைந்து இருக்கிறது. அதனால் ஆயிரம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக கோயம்புத்தூர் ஜில்லாவிலும், வடாற்காடு மாவட்டத்திலும் அதிக அளவுக்கு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அமைச்சருக்கு தெரிந்த விஷயம். ஆகவே உடனடியாக இதற்கான பரிகாரம் தேடவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : The Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958, was enacted on 10th December 1958. The provisions were brought into force in stages after rules were framed. 1st July 1959 was notified as the date for coming into force of the provisions of the Act except sections 10, 12, 13, 14, 15 and 16 relating to overcrowding in premises, provision of latrines, urinals, washing facilities, creches, first aid and canteen. 1st January 1960 was notified as the date for the enforcement of sections 10, 12, 13, 14, 15 and 16. Under section 3 of the Act, the Government notified 1st September 1959 as the date on and after which no places or premises shall be used as beedi industrial premises without a licence under the Act. In view of the fact that the employers were experiencing difficulties in securing premises, the date of enforcement of the licensing provision was postponed to 1st January 1960. In the meantime, a large number of writ petitions were filed in the High Court questioning the validity of the Act and the High Court stayed the enforcement of the provisions of the Act till a fortnight after the judgment was delivered. Meanwhile, reports were received by the Government that some beedi factories had been shifted to neighbouring States, some had been closed and that some factories had served notices of closure on the workers consequent on the enforcement of the Act. The number of workers who have been affected by the shifting and closures are reported to be 2,168. In view of these developments and in view of the fact that the Governments of Mysore, Kerala and Andhra have not yet introduced similar legislation to regulate the working conditions of the beedi industry, this Government have postponed the enforcement of the licensing provision to 1st July 1960. As a result of the postponement of the date of enforcement of the licensing provision, the owners who threatened to close their business have not actually closed down.

As regards Coimbatore district, while the Erode and Satyamangalam beedi merchants have come to a compromise, the beedi merchants of Coimbatore and Palladam are adamant and they are not willing to allow the workers to sit and work in their original premises. The Labour Officer has reported that he is pursuing with the managements and Union the question of payment of compensation to the workers.

Judgment on the writs filed in the High Court by certain employers has since been delivered declaring the provisions of the Act as valid except section 2 (g) (i) which has been held as *ultra vires* the Constitution. Further action will be taken on

[Sri R. Venkataraman] [18th March 1960

receipt of a copy of the judgment. The Governments of Andhra, Kerala and Mysore have expressed their intention to undertake similar legislation in those States and if it is done the movements of beedi factories from one State to another will be averted. This Government have suggested to the Governments of Andhra, Mysore and Kerala that a conference of all the Labour Ministers of the our Southern States may be held to consider this question.

### II.—PRIVILEGE MOTIONS—cont.

#### (2) PUBLICATION OF A GARBED VERSION OF THE FINANCE MINISTER'S SPEECH ON 17TH MARCH 1960 IN THE "NAVA INDIA".

DEPUTY SPEAKER : The hon. Member has given notice of a Motion of Privilege. His letter reads as follows :

"Under Rule 184 of the Madras Assembly Rules, I give notice of a Privilege Motion regarding a twisted publication of the speech of the Minister for Finance in the Assembly on 17th March 1960 in the Tamil Daily 'NAVA INDIA' under the caption "பணம் கொடுத்து மந்திரி பதவி" in its issue of the same day. Referring to Thiru. C. N. Annadurai, the paper has published as follows :—

"ப்ணம் கொடுத்துக்கூட மந்திரி பதவி ஏற்கத் தயாராக இருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் பரம்பரையே அப்பேர்ப்பட்டது."

The Finance Minister in his speech did not mention the same words as published. This involves a question of privilege *prima facie*. May I therefore request the Hon. Speaker to refer this matter to the Committee of Privileges?

I enclose herewith a copy of "NAVA INDIA," dated 17th March 1960."

This will be taken up next week.

### IV.—GOVERNMENT MOTIONS

#### (1) ELECTION OF MEMBERS TO THE COMMITTEE OF PRIVILEGES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move :

"that, with reference to rule 183(1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. Speaker, to elect fifteen members to be members of the Committee of Privileges for the financial year 1960–61."

The motion was put and carried.



18th March 1960] [Deputy Speaker]

the 22nd March 1960 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely fifteen, a poll will be taken on Friday, the 25th March 1960, between the hours of 9 a.m. and 1 p.m.

#### (2) ELECTION OF MEMBERS TO THE HOUSE COMMITTEE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move.—

"That, with reference to rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. Speaker, to elect eleven members to be members of the House Committee for the financial year 1960–61."

The motion was put and carried.

DEPUTY SPEAKER : In accordance with the regulations framed for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 11 a.m. on Monday, the 21st March 1960, the time within which nomination papers of candidates for election to the House Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 4 p.m. on Monday, the 21st March 1960. I also fix 9 a.m. on Tuesday, the 22nd March 1960, as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, eleven, a poll will be taken on Wednesday, the 23rd March 1960, between the hours of 9 a.m. and 1 p.m.

### V.—PRESENTATION OF THE FINAL (THIRD) SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR THE YEAR 1959-60.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I rise to present the Third Supplementary Estimates for the year 1959–60. The supplementary demand before the House is for Rs. 39·85 crores broken up as Rs. 9·84 crores on Revenue Account; Rs. 17·74 crores on Capital Account and the balance of Rs. 12·27 crores on Loans and Advances.

The magnitude of this is, no doubt, large but this only reflects the increasing tempo of plan activities and the large number of new schemes sanctioned during the year.

Hon. Members of this House will remember that when we presented the Budget Estimates for 1959–60, the Budget Estimates included estimates for a Plan of the size of only Rs. 34 crores and that now our expenditure during the current year on the Plan is expected to be Rs. 48 crores including Rs. 9.34 crores, the value of equipment received from Canada for the Kundah Project. Thus, there is a step up in Plan expenditure alone of the order of Rs. 14 to 15 crores nearly, which mainly accounts for the large supplementary demand.

[Sri M. Bhaktavatsalam] [18th March 1960

Before I go into the details of the supplementary demand, I may point out one main item viz., Power Development which accounts for Rs. 20 crores roundly out of the total sum of Rs. 39 crores. The equipment received from Canada for the Kundah Project up to the end of this year estimated at Rs. 934 lakhs is given by Government of India as a loan to this Government who in turn have to pass it on to the State Electricity Board. In this process, the value of equipment has first to be brought on the books of this Government and then the Government has to make a loan to the State Electricity Board. Thus, for the purpose of accounting, we have to first show it as expenditure by Government and then as a loan to the State Electricity Board. As a result of this budgetary requirement, in this supplementary estimate we have to take an appropriation twice, one for Rs. 934 lakhs under the grant '85. Capital Outlay on State Trading Schemes' and secondly under Loans and Advances by this State Government although the net outgo from Government will be *nil* on account of the receipt of corresponding loans from Government of India.

The question whether the value of this equipment should be adjusted in the current year within or outside the Plan has been under correspondence with Government of India for some years. Government of India have now agreed to adjust this amount *over and above* the current year's plan outlay; so as not to cut into the size of our plan. We are therefore proceeding to make the adjustments in the current year. Besides this, the outlay on schemes of the State Electricity Board which was originally programmed at Rs. 11 crores has since been stepped up to Rs. 14 crores. Provision has also been made for a reserve cash balance by the Electricity Board of the order of Rs. 63 lakhs.

As a result of these factors, Power alone accounts for a Supplementary Demand of Rs. 9.34 crores under '85. Capital Outlay on State Trading Schemes' and Rs. 10·34 crores under Loans and Advances, making in all a total of Rs. 19·68 crores.

We may now turn to certain other significant items in the supplementary demand. Hon'ble Members will see that we have asked for an appropriation of Rs. 114 lakhs on Education, mainly for the net-cost grant to the District Boards which has been found to be higher than was originally anticipated. Larger provisions have been made for medical schemes reflecting a large increase in the bed strength sanctioned during the year. We have also provided for the substantial sum of Rs. 114 lakhs for the Malaria Eradication Programme. It will be seen that although our net requirement under this head is Rs. 28 lakhs only, we have taken a demand of over Rs. 1 crore. This is because we have to take an appropriation from this House for the total expenditure although part of it comes in as receipts from Government of India.

Larger appropriations have also been taken under heads 'Irrigation and Civil Works.' Under Irrigation, the main factor explaining the large appropriation is the tempo of expenditure on



18th March 1960] [Sri M. Bhaktavatsalam]

Parambikulam-Aliyar Project. Under the present accounting system, the increase of outlay on a Project also leads to an increase in certain accounting transactions under what are known as 'Suspense Heads'. Although these are purely accounting adjustments and debits under this head are washed off by credits under the same, under the gross-budgeting procedure, we have to take an appropriation for the gross debits, ignoring the receipts or credits. As a result of this, under Suspense Heads, we are taking an appropriation of Rs. 3.79 crores under Irrigation and under Civil Works. They represent only book adjustments which will be wiped off completely by additional credits.

Members may be interested to know that we are taking an additional appropriation of Rs. 31 lakhs for repairs and maintenance of roads.

I may mention here that this Supplementary Estimate includes provision for nearly 64 new schemes sanctioned during the year. We are following the practice of sanctioning new schemes as and when they are ready. This continuing process of review and sanction of schemes and expanding needs of course results in our coming to the Legislature with a large supplementary demand. The Departments are thus placed in a position to fully review their requirements and to start new schemes throughout the year. The credit for the successful fulfilment of the Plan Schemes is thus in no small measure due to the readiness with which this House has been prepared to vote for these Supplementary Demands for the new services and expansion of existing schemes as and when they arise.

With these few words, I commend the Third Supplementary Estimates for acceptance by this House.

## VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61.

### (1) DEMAND XIX—AGRICULTURE AND FISHERIES.

### (2) DEMAND XX—ANIMAL HUSBANDRY.

### (3) DEMAND XXXIX—CAPITAL OUTLAY ON AGRICULTURE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, Sir, on the recommendation of the Governor, I move :

'That the Government be granted a sum not exceeding Rs. 3,65,27,400 under Demand No. XIX—Agriculture and Fisheries'.

'That the Government be granted a sum not exceeding Rs. 1,13,64,700 under Demand No. XX—Animal Husbandry'.

'That the Government be granted a sum not exceeding Rs. 3,00,000 under Demand XXXIX—Capital Outlay on Agriculture'.

DEPUTY SPEAKER : The hon. Members Sri Anbazhagan, Sri M. Muni Reddi and Sri A. R. Marimuthu may move the cut motions given notice of by them to the respective Demands.

[18th March 1960

SRI K. ANBAZHAGAN : Mr. Deputy Speaker, Sir, I move :
' That the allotment of Rs. 3,65,27,400 under Demand XIX —Agriculture and Fisheries—be reduced by Rs. 100 '.

SRI M. MUNI REDDI : Mr. Deputy Speaker, Sir, I move :
' That the allotment of Rs. 1,13,64,700 under Demand XX—Animal Husbandry—be reduced by Rs. 100 '.

SRI A. R. MARIMUTHU : Mr. Deputy Speaker, Sir, I move :
' That the allotment of Rs. 3,00,000 under Demand XXXIX —Capital Outlay on Agriculture— be reduced by Rs. 100 '.

DEPUTY SPEAKER : The other Members who have given notice of cut motions may speak on the Demands if they want. They need not move their cut motions. The Hon. Minister will now speak. I fix a time limit of ten minutes for the Hon. Members. The Demands and the cut motions are before the House for discussion.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது மூன்று மான்யங்கள் கோரப்பட்டிருக்கிறது. இவைகளைப் பற்றி நான் விரிவாக முதலில் விளக்கவேண்டிய அவசியமில்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். ஆகவே, நான் அதிகமாக காலத்தை எடுத்துக்கொள்ளப் போவதில்லை. சுருக்கமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். மூன்று மான்யங்களில் ஒன்று, விவசாயம். விவசாயத்தை சேர்ந்த மீன் வளர்ப்பு, அதையொட்டி காப்பிட்டல் எக்ஸ்பென்டிச்சர் அதிகப்படியாக இல்லாமல் மூன்று லட்சம் ரூபாய்தான் கோரப்பட்டிருக்கிறது. அது, பெரும்பாலும் கட்டிடச் செலவிற்காக. கால்நடை வளர்ப்புக்காக ஒரு மான்யம். ஆக, எல்லாவற்றையும் சேர்த்து விவாதம் நடப்பதுதான் பொருத்தம் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். தாங்களும் அதை உணர்ந்து, அனுமதித்திருக்கிறீர்கள். விவசாயம் அபிவிருத்தியடைய கால்நடைகள் மிகவும் அவசியம் என்பதை அங்கத்தினர்கள் உணருவார்கள். அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள், மானியங்கள் அளிக்கிற விஷயத்தில் பல துறைகளிலும், விவசாய அபிவிருத்திக்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவைகள் நிறைவேற்றப் பட்டும் வருகின்றன என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். உணவு தான்ய உற்பத்தி மட்டுமல்ல. பல துறைகளிலும் விவசாய அபிவிருத்தி காய்கறிகள், பழங்கள் மற்றும் ரொக்கமாக பணம் அளிக்கக் கூடிய கமெர்ஷியல் க்ராப்ஸ் அல்லது காஷ் கிராப்ஸ் என்று சொல்வார்களே, இவைகள்தான் அதிகமாக உடனடியாக பலன் அளிக்கக் கூடியது, அன்னிய நாட்டு மார்க்கெட்டைக்கூட அபிவிருத்தி செய்யக் கூடியதும், நம் பொருளாதாரத்தை உயர்த்தக் கூடிய பல பயிர்களைப் பற்றியும் போதிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதோடு இந்த விவசாயத்தின்கீழ் சாகுபடிக்கு கொண்டுவர லாயக்கில்லாத நிலங்களைத் திருத்தி சாகுபடிக்கு கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியமாகும். அதைப் பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். வற்புறுத்தியுமிருக்கிறார்கள். நம் மாநிலத்தில் அதிகமாக சுலபமாக சாகுபடி செய்யக்கூடியது இல்லை என்றே சொல்லலாம். இருந்தாலும் எவ்வளவுதூரம் சாத்தியமாகிறதோ அந்த நிலங்களை எல்லாம் சாகுபடிக்கு கொண்டு வருவது முக்கியமான தொன்றாகும். அதிலும் அரசாங்கம் கவனம்செலுத்திவருகிறது இந்த ஆண்டில் தீவிரமாக கவனம் செலுத்துவார்கள். ஒரு இடத்தில் பத்து ஏக்கராவை ஒன்றாகச் சேர்த்து திருத்தி, விவசாயிகள் அதை சாகுபடிக்குக் கொண்டுவர வில்லை என்றால் அரசாங்கம் ஒரு பெரிய பண்ணை வைத்து



18th March 1960] [Sri M. Bhaktavatsalam]

நடத்தவேண்டும் என்ற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இயந்திரங்கள் விஷயமாக, ட்ராக்டர்கள் பழமையாய் போய்விட்டது என்று விவசாயிகளால் கூறப்பட்டு வந்தது. ட்ராக்டர்களை அடியோடு புறக்கணிப்பதற்கில்லை. மண் அறிப்புத்திட்டத்தை நிறைவேற்ற ட்ராக்டர்கள் அவசியமாகிறது. ஆகவே அரசாங்கம் சிறிய ட்ராக்டர்களை வாங்கி வைத்துக் கொண்டு விவசாயிகளுக்கு கொடுப்பது என்ற யோசனை இருக்கிறது. அக்ரிகல்ச்சரல் இன்பர்மேஷன் யூனிட்ஸ் மூலம் விவசாயிகளுக்கு நல்ல முறையில் விவசாயம் பற்றி தெரிவிக்கக் கூடிய வகையில் சொன்னார்கள், அதாவது அரங்குகள் நடக்கிறது. துண்டுப் பிரசுரங்கள் தயாரித்து அவைகளை வெளியிடுகிறார்கள். அப்போதைக்கப்போது விவசாய ஆராய்ச்சி சம்பந்தமாக ஏற்படும் விவசாய அபிவிருத்தி விஷயங்கள் பற்றி விவசாயிகளுக்கு தெரிவிப்பதில் இப்பொழுது விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதேமாதிரி சாயில் டெஸ்டிங் முக்கியமானதாகும். மண்ணின் சத்தை உணர்ந்து அதற்குரிய உரம்போட்டால் நல்ல பலன் கிடைக்கிறது. அதை பல அங்கத்தினர்கள், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய அங்கத்தினர்கள் பலர் வற்புறுத்தி கூறியிருக்கிறார்கள். இப்பொழுது கோவையில் ஒரு சாயில் டெஸ்டிங் யூனிட் இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் இப்படிப்பட்ட யூனிட்ஸ் வைப்பது அவசியம். அவைகளை, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வைக்கலாம் என்ற யோசனை இருக்கிறது. தஞ்சையில், ஆடுதுறையில் ஒரு யூனிட் வைப்பது என்று அரசாங்கத்தின் எண்ணம். சமீபத்தில் நான் ஒரு மாவட்டத்திற்கு போயிருந்தபோது இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர் ஒருவர் மண்ணை நன்கு பரிசோதனை செய்து நிபுணர்கள் சொல்லியது போல் செய்து ஏக்கர் ஒன்றுக்கு அதன் பலனாக பத்து மூட்டை கூடுதல் விளைகிறது என்று சொல்லக் கேள்விப் பட்டேன். அது, இந்த மன்றம் பெருமைப்படக்கூடியதாகும். அவர், இந்த மன்றத்திலுள்ள ஒரு உறுப்பினராவர் ; அம்மாதிரி நல்ல முறையில் உற்பத்தி செய்வதற்கு சுலபமாக சாதனங்கள் இருக்கின்றன. அவற்றை எப்படி அமைப்பது என்பதுபற்றி இப்பொழுது அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. ஆராய்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருவதும் அங்கத்தினர்களுக்கு தெரிந்த விஷயமே. அதோடு விவசாயப் படிப்பு மிகவும் அவசியம். விவசாயத்தில் செய்யப்படும், ஆராய்ச்சிகள் விவசாயிகளுக்கு போய் சேர வேண்டும். அதையும் கவனியாமல் இல்லை. விவசாயப் படிப்பு மிகவும் முக்கியமானது. அதோடு கூட கிராமங்களில் விவசாயம் செய்கிறவர்களையும் அழைத்துக் கொண்டு போய் அவர்களுக்கு ஒரு ஆறு மாத காலம் பயிற்சி கொடுப்பது என்ற திட்டம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகிறது. கோவை கல்லூரி பிரசித்திபெற்ற கல்லூரியாகும். சமீபத்தில் அங்கு "போஸ்ட் க்ராஜுவேட்" கோர்ஸ் அங்கு வைப்பது என்று முடிவு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டும் வருகிறது. போஸ்ட் க்ராஜுவேட் கோர்ஸ்க்கு நாம் அந்நிய நாட்டையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பது சரியல்ல. "சைட்டோஜெனடிக்ஸ்", "ப்ளாண்ட் ப்ரீடிங்", "சாயில் சைன்ஸ்" ; அக்ரிக்கல்ச்சரல் கெமிஸ்ட்ரி", "ஹார்டிக்கல்ச்சரல்" "ப்ளாண்ட் பத்தாலஜி", இவைகள் எல்லாம் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் இரண்டு சப்ஜெக்ட்ஸ் இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறது. "அக்ரானமி அன்ட் என்டமாலஜி" இவைகள் எல்லாம் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. அக்ரிகல்ச்சரல் எக்கனமிக்ஸ் பற்றி நமக்கு தெரியும். அக்ரிகல்ச்சரல் எக்கனமிக்ஸும், ரூரல் சோஷியாலஜியும் அவசியம். கிராமப் பொருளாதாரத்தை உயர்த்துவது என்பது மிகவும் அவசியமாகும். ஆகவே, இவைகளை நன்கு தெரிந்து கொண்டால்தான் விவசாயத் துறையிலுள்ள குறைகளை தீர்ப்பதற்கு வழி காண முடியும். "Full fledged Agricultural Economics" கோவை அக்ரிகல்ச்சரல் காலேஜில் இப்படி ஒரு பிரிவு, அதற்கு வேண்டிய நிபுணர்களையும். உத்தியோகஸ்தர்களையும் போட்டு, அதைத் தொடங்குவது என்ற யோசனையும் இப்பொழுது இருக்கிறது. அதேமாதிரி கால்நடைகளின் எண்ணிக்கை, ஆடு, மாடு, கோழி எல்லாவற்றையும் சேர்த்து, கால்நடைகளின் வளர்ப்பு விஷயத்தில் இந்திய தேசத்தின் மற்ற பகுதிகளோடு நமது பகுதியை ஒப்பிட்டுப்பார்த்தால், தமிழ் நாட்டில் அதன்

எண்ணிக்கைக்கு குறைவு இல்லை. எண்ணிக்கை இருக்கிறது. விகிதாசாரம் ஒரு மாதிரியாக இருக்கிறது. இருந்தாலும் தேசியச் செல்வம் என்னவென்று கணக்கிட்டுப் பார்த்தால் நம்முடைய செல்வம் தமிழ் நாட்டில் இப்பொழுது இருக்கிற மாடுகள் மூலம் கிடைக்கக்கூடிய தேசியச் செல்வம் குறைவு அதை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நமது கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்கு, அதற்கு பல சாதனைகள் சாதிக்கப்பட்டு இருக்கிறது. பல திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. திட்டமிட்டதை விட அதிகமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அடுத்தபடியாக வெட்டரினரி காலேஜ். இப்பொழுது அதில் போஸ்ட் க்ராஜுவேட் கோர்ஸ் நடந்து வருகிறது. 32 கீ வில்லேஜ் சென்டர்ஸ், 13 ஆர்டிபிஷியல் இன்செமினேஷன் சென்டர்ஸ், 12 சப்ளிமென்டல் எக்ஸ்டெஷன் சென்டர்ஸ் இருக்கின்றன. இந்த ஆண்டில் ஐந்து கீ வில்லேஜ் சென்டர்ஸ்-ம் 4 ஆர்டிபிஷியல் இன்செமினேஷன் சென்டர்ஸ்-ம், 25 சப்ளிமென்டல் சென்டர்ஸ்-ம் இவைகளை எல்லாம் அமைப்பது என்ற யோசனை இருக்கிறது. அதேமாதிரி கால்நடை பண்ணைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. ராணிப்பேட்டையில் "இன்ஸ்டிட்யூட் ஆப் வெட்டரினரி ப்ரேவெண்ட் மெடிசன்ஸ்" இருக்கிறது. இது மற்ற ராஜ்யங்களுக்கும் பயன்படக்கூடியதாகும். அதுவும் விருத்தி செய்யப் பட்டு வருகிறது. கோழி, ஆடு இவைகளை எல்லாம் நல்ல தரமாக விருத்தி செய்யப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது. ஆட்டுப் பண்ணைகள் இருக்கின்றன. நமது நாட்டில் இருப்பது போதாது என்று ஆஸ்ட்ரேலியாவிலிருந்து ஏரோப்ளேனில் ஆடுகள் வரவழைத்து ஆடுகளை விருத்தி செய்கிறோம். ரஷியாவிலிருந்து கூட ஆடுகளை வரவழைத்து அதைக் கொண்டு ஆடுகளை விருத்தி செய்யப் பார்க்கிறோம்.

அதோடு நமக்கு எருமை மாடுகளும் வேண்டியிருக்கிறது. இதைப் பொறுத்த வரையில் நாம் வடநாட்டிலுள்ள பூரா என்னும் எருமை மாடுகளைத்தான் தருவிக்க வேண்டியிருக்கிறது. இதற்காக நாம் 1,000 எருமை மாடுகளை வாங்கி நம்முடைய எருமை மாடுகளை விருத்தி செய்திருக்கிறோம். மேலும் சிந்தி மாடுகளைப் பொறுத்தவரையில் அந்த மாடுகள் முதலில் சிந்தியில் இருந்துதான் தோன்றியது என்றாலும்கூட இப்போது நம் ராஜ்யத்திலுள்ள சிந்தி இனத்திற்குத்தான் மிகவும் முக்கியத்துவம் கிடைக்கிறது. காஷ்மீரில் கூட நம்முடைய இனத்தைத்தான் அதிகமாக கேட்கிறார்கள்.





கூடிய முறையில் இவைகளை ஏற்படுத்தவேண்டும். இதை பரிசீலனை செய்வதற்காக ஆராய்ச்சி செய்யப்பட்டு அதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. அதே போன்றுதான் மீன் பிடிக்கின்ற தொழில் மிகவும் ஆபத்தான தொழில். அவர்கள் எல்லாம் நல்ல வாழ்க்கை வாழ வசதி செய்ய வேண்டும். அவர்களுடைய நல்வாழ்வுக்கான பல திட்டங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. ஆகவே இதில் "மரைன் பிஷரீஸ்" "இன்லண்ட் பிஷரீஸ்" என்ற இரண்டு வகைகளிலும் மீன் பிடிக்கிறவர்கள் உபயோகப்படுத்துகின்ற வலைகள், கருவிகள், நாட்டுப் படகுகள் இவைகள் எல்லாம் கொடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. அதோடு முக்கியமாக—யுத்த காலத்தில்—அக்யோரியம் சரியாக நடத்தப்படவில்லை. இப்போது அதை இன்னும் விருத்தியாக்கவேண்டும். இவ்வாறான பல்வேறு திட்டங்கள் இந்த மான்யங்களில் அடங்கியிருக்கின்றன. இதன் பேரில் கனம் அங்கத்தினர்கள் தங்களது அரிய யோசனைகளை சொல்லி, இதை ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **SRI K. ANBAZHAGAN**: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 10-00 a.m.
இன்று கொண்டு வரப்பட்டிருக்கும் மானியத்தின் மீது நான் தந்துள்ள வெட்டுத் தீர்மானத்தை யொட்டி, சில கருத்துக்களை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். விவசாய இலாகா, மீன் வள இலாகா இவைகளைச் சேர்த்து, அவைகளுக்குச் செலவு செய்ய வேண்டிய தொகையைச் சட்டமன்றத்தில் கேட்கப்படுகிறது. மீன் வளத் துறையைப் பற்றி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அறுநூறு மைல் நீளக் கடற்கரை நமக்கிருக்கின்றது என்பதை எடுத்துச் சொன்னார்கள். இதில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் பங்கு பெறும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மீன் வளத் துறைக்குச் செலவிட வேண்டிய மான்யத்தைக் கேட்கிறபொழுது, இதற்கு என்று தனியாகவே ஒரு மானியம் கொண்டுவர வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மீன் வளத்துறை இனத்தையும், விவசாயத் துறை இனத்தையும் தனித் தனியாகப் பிரித்து அதற்கான மானியங்களைக் கேட்பார்களேயானால் இரண்டு இனங்களைப் பற்றியும் விரிவாகப் புரிந்து கொள்வதற்கும், அதைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீன் வளத் துறையில் இந்த மானியத்தின் கீழ்ச் செலவு செய்யப்படுவதற்காக தொகை கேட்கப்படும் இந்த நேரத்தில், இதில் வருகின்ற வருவாய் என்னவென்று பார்க்கும்போது, 29 அல்லது 30 லட்சம் என்று இருக்கிறது. செலவு 35 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ இதில் வருவாய் நல்ல முறையில் இருக்கின்ற காரணத்தினால் இந்தத் துறை சரியான முறையில் இயங்கி வருகின்றதா என்பதைப் பார்க்க வேண்டியது மிகவும் முக்கியமான கடமையாகும். ஏற்கனவே இதே சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் மீன் வளத் துறையைப் பெருக்குவதற்காக ஒரு கோடி ரூபாய் அளவில் திட்டமிட்டு நிதி ஒதுக்கி, ஆழ்கடல் மீன் பிடிப்பு, மற்றும் இது போன்ற காரியங்களுக்குச் செலவு செய்ய வேண்டும், இதன் மூலம் நமது வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கூறியபடி மூன்றாவது திட்டத்திற்கு ஆயிரம் கோடியை எட்டிப் பிடிக்க எண்ணாவிட்டாலும் அதற்கான திறமையில்லாவிட்டாலும் கூட ஒரு கோடி ரூபாயாவது இதற்கு நிதி ஒதுக்க வேண்டும் என்பதை நன்றாகப் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்தில் சேர்த்துக் கேட்கப்பட்டிருக்கும் விவசாயத் துறையில் பலவிதமான ஊழல்கள் நடைபெறுவது வெளிப்படுகின்றன. குறிப்பாக விதைப் பண்ணைகளைப் பொறுத்த வரையில், இதை நடத்தும் நிர்வாகம் திறமையாக இருக்குமானால் இந்தக் குறைகள் ஏற்பட்டிருக்க

முடியாது. உர வினியோகத்தைப் பொறுத்த அளவில் தமிழ் நாட்டில்
பல இடங்களிருந்தும்—அரியலூரில் வழக்கு—செங்கல்பட்டில் குற்றச் சாட்டு
—சென்னையில் அமைச்சர் அவர்களின் அறிக்கை—இது போன்ற செய்திகள்
எல்லாம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் சேர்த்
துப் பார்த்தால், அங்கங்கே நடக்கின்ற தவறுகள் காரணமாகத்தான்
இந்நிலைமை ஏற்படுகிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.
ஆகவே குறைந்த அளவில் நல்ல முறையில், நாட்டு மக்களுக்கு உரம்
நல்லபடி வினியோகம் செய்யப்படாததின் காரணமாக இந்தக் குறைகள்
எல்லாம் ஏற்படுகின்றன. ஆகவே முழு அளவில் இவைகளை விசாரிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சியிலுள்ள அங்கத்தினர்
களையே நியமித்தாவது இதை விசாரிப்பார்கள் என்று கருதுகிறேன்.
அமைச்சர் அவர்களுக்கு மனதில் என்ன தோன்றுகிறதோ, அதற்கேற்ற
முறையில்—இவைகளை விசாரித்துச் சீர் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அதே போன்று, விவசாயத் துறைக்கு ஏராளமான பணம், வகை
தொகை இல்லாமல், முறையில்லாமல் செலவு செய்யப்படுகிறது, பணம்
சில இடங்களில் பாழாகிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்பு
கிறேன். சேலம் மாவட்டத்தில் பாண்டமங்கலம் என்ற ஊரில் வெற்றிலைக்
கொடியைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள
நிலையத்தில், ஏறத்தாழ மூன்று ஆண்டுகளுக்குள் எட்டு, பத்து
ஆராய்ச்சியாளர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். வெற்றிலைக் கொடியில்
ஏற்படும் நோயை ஆராய்ச்சி செய்ய இரண்டு மூன்று ஆண்டுகள்
தொடர்ந்து இருந்தால்தான் இதில் ஒரு நல்ல கண்டுபிடிப்பை, நல்ல
மருந்துகளை இவர்களால் கண்டுபிடிக்க முடியும். அதன் மூலம் வெற்றிலைக்
கொடிக்கால்களையும் பாதுகாக்கத் துணை செய்ய முடியும். அவ்விதமின்றி
அவர்களை அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்தால், அவர்கள் இதில்
ஆராய்ச்சி செய்வதை விட்டு, அடுத்த ஊரில் எங்கே போய்க் குடியிருப்பது
என்கிற ஆராய்ச்சியில்தான் ஈடுபட்டுக்கொண்டிருப்பார்கள். சேலம்
மாவட்டத்தில், பாண்டமங்கலம், வேலூர் பகுதியில் வெற்றிலைக் கொடிகள்
காய்ந்து வேர்களில் எல்லாம் நோய் கண்டு, இதன் காரணமாக வேர்கள்
எல்லாம் அழுகிக்கொண்டிருக்கின்றன. இது பற்றி ஆராய்ச்சி செய்து
அவைகளைப் பாதுகாப்பதற்கு உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்
தால்தான் தமிழ் நாட்டில் பெருகி வளர வேண்டிய வெற்றிலைக் கொடிக்
கால்களை எல்லாம் கெடாமல் பார்த்துக்கொள்ள முடியும் என்பதை
அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





வினியோகிப்பதிலும் கூட, பல நூல் கட்டுகள் அந்தந்த குப்பங்களுக்குப்
போய்ச் சேருவதில்லை. ஆனால், நூல் கட்டு வந்ததாக அங்குள்ளவர்
களிடமிருந்து கையொப்பம் வாங்கிவிட்டு அவர்களுக்கு 10, 20 ரூபாய்
என்று கொடுத்துவிட்டு, வேறு இடத்தில் கொண்டு போய் வணிகர்
களிடம் விற்று விடுகிறார்கள். அதே போன்றுதான் கட்டு மரங்கள்
வினியோகிப்பதிலும், உரியவர்களுக்குப் போய்ச் சேராமல் பல விதச்
சூழ்ச்சிகள் செய்து அவற்றை வெளியே வணிகர்களிடம்—தனிப்பட்டவர்
களிடம்—கட்டு மரங்களை விற்று விடுகின்றனர். இந்த இலாகாவுக்கென்று
வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்படுகிற இந்தக் கட்டுமரங்கள் எல்லாம்
இவ்விதம் வெளியே போய்விடுகின்றன.

ஷார்க்-லிவர் எண்ணெய் எடுக்கும் விஷயத்திலும், எண்ணெய்
எடுத்தவுடன் ஷார்க் மீனில் உள்ள உறுப்புக்களை—அதாவது ஷார்க்-பென்
என்று கூறப்படும் உறுப்புகளை ஏலத்தில் விலைக்கு விடாமல், தனிப்பட்டவர்
களிடம் கொடுத்துவிடுகின்றனர். தமிழ் நாட்டில் கிடைக்கின்ற இந்தப்
பொருளுக்கு சீனாவில் அதிக விலை கிடைக்கிறது என்பது நான் கேட்டறிந்த
உண்மை. இங்கு ஒரு பத்து பவுண்டுக்கு எட்டு அணா கொடுத்து வாங்கி
அதை ஐந்து, ஆறு ரூபாய் விலைக்கு ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறார்
கள் என்று கூறப்படுகின்றது. நான் கூறும் புள்ளி விவரங்களில், அல்லது
கணக்கில் சில தவறுகள் இருக்கலாம், ஆனால் அரசாங்கத்தின் பொருள்
தவறான முறையில் வெளியே போய்க்கொண்டிருக்கிறது. இது அரசாங்கத்
திற்கு இழப்பு என்பது என்னுடைய கருத்தாகும். இதை முறையாக ஏலமிட
அனுமதித்திருந்தால், நமக்கு இது இத்துறை வருமானத்தைப் பெருக்கிக்
கொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதே போன்றுதான், மீன் வலை வினியோகிப்பதிலும், கட்டுமரங்கள்
கட்டுவதற்குப் பயன்படும் மரங்களை வெளியே கொடுத்து விடுவதுபோல்
மீன் வலைக்காகக் கொடுக்கப்படும் ஸில்க் நூல், அதற்குரிய மீனவர்களிடம்
போகாமல் வெளியே போய்விடுகின்றன என்றும் சொல்லப்படுகிறது.
இவற்றை எல்லாம் விசாரித்தால் இதிலுள்ள குறைகளை நீங்கள் நிச்சய
மாகக் கண்டுகொள்ளலாம். இவை எல்லாவற்றையும் விட இந்த
இலாகாவிலே பணம் பல வழிகளில் பாழ்பட்டிருக்கிறது. நான் இங்கே
சில குறிப்புகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்த மீன் துறை கூட்டுறவு சீனியர்
இன்ஸ்பெக்டர் ஒருவர் 3,500 ரூபாயைக் கையில் வைத்துக்கொண்டிருந்த
போது இழந்து விட்டதாகத் தெரிவிக்கிறார். இழந்துபோன பணத்தைத்
திரும்பப் பெறுவதற்கு முயற்சியும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.
—ஈடு செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை. இதைப் பற்றி ஒரு அதிகாரி
சென்று விசாரித்திருக்கிறார், பிறகு இந்த 3,500 ரூபாய் இழந்த பண
மாகக் கருதப்படும் என்று இந்த இலாகா தெரிவித்திருக்கிறது. ஒரு
சீனியர் இன்ஸ்பெக்டர் 3,000 அளவுக்கு தொலைத்துவிட்டார் என்று
சொன்னால், அவரிடமிருந்து எந்த ஒரு தொகையையும் வசூலிக்காமல்
இந்த இலாகா 3,000 ரூபாயை இழப்பது என்று சொன்னால், அது
மீனவர்கள் தலையில் கை வைக்கப்படுவதைத் தவிர வேறு என்ன ?

தஞ்சை மாவட்டத்திலேயே இருந்த வேறொரு அதிகாரி—மீன் விற்
பனைப் பொறுப்புள்ள அதிகாரி—மீன்கள் அழுகிவிட்டதாகக் கூறி, 4,000
ரூபாய் அளவுக்கு அழுகிப் போய்விட்டது என்று கூறி, பணம் கையாடல்
செய்திருக்கிறார் என்று ஒரு குற்றச் சாட்டு வந்தது. அதை அந்த இலாகா
வைச் சேர்ந்தவர்கள் விசாரித்திருக்கிறார்கள். விசாரித்து கடைசியாக மீன்கள்
அழுகிப் போயிருக்கக்கூடும் என்பதாலேயே இழப்பு என்ற முடிவுக்கு
வந்திருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு என்று நான் நினைக்கிறேன், தூத்துக்குடி ஆழ் கட
லில் மூழ்கி எடுத்த முத்துச் சிப்பிகளில்—முத்துக்களுக்கு மூலப் பொருளாக
உள்ள சிப்பிகளில்—ஏறத்தாழ 35,000 சிப்பிகள் இருக்க வேண்டியது—

காணுமல் போயிருக்கிறது. இந்தச் சிப்பிகளை வாங்கியதற்கு, அவை முதலில் இருந்ததற்கு ரசீதுகள் இருக்கின்றன. ஏறத்தாழ ஒன்று 6 அணு விலைக்கு வாங்கப்பட்டதும் ஏறத்தாழ 2 ரூபாய் விலைக்கு விற்கக் கூடியதும், 55,000 ரூபாய் அளவுக்கு மதிப்பு உள்ளதுமான சிப்பிகள் அங்கு காணவில்லை. யார் மூலமாகவோ யாரோ ஒரு தனியாரிடம் அவ்வளவும் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். இதை அரசாங்க ஆடிட்டர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிருர், பின்னர் அரசாங்கத்துக்கும் தெரிவித்திருக்கிருர். அதன் பின்னுல் " டிபார்ட்மென்டல் என்க்வொயரி " என்ற பெயரால் இந்த ஊழலை மூடி, மறைத்து, மெழுகி வைத்துவிட்டிருக்கிருர்கள். அதிகாரிகள் அமைச்சருக்காகவோ அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்காகவோ 55,000 ரூபாய் அளவுக்கு சூது செய்வதற்கு சூழ்ச்சிக்கு இடம் தந்துவிட்டார்கள். இது நமது முதலமைச்சருக்கும் தெரிந்திருக்கிறது. இதனை விரைவில் போலீஸ் இலாக்காவிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூறியிருக்கிருர். இதன் மீது போலீஸ் அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர் என்று நான் அறிய மாட்டேன். போலீஸ் அமைச்சருக்கு இதைப் பற்றித் தெரியுமோ, தெரியாதோ? இது அப்படியே மறைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் சட்டமன்றத்தின் முன்னுல் வந்து மீன் பிடிக்கிறோம், முயல் பிடிக்கிறோம், ஆடு வளர்க்கிறோம், மாடு வளர்க்கிறோம் என்று சொல்லிக்கொண்டாலும் பழக்கத்தில் சூழ்ச்சி செய்ய குற்றம் மறைக்க அதிகாரிகளுக்கு இடமிருந்தால் எப்படிப் பொறுத்துக்கொள்வது ?

அது மட்டுமல்லாமல் தஞ்சாவூர் மாவட்டத்தில் 4,000 ரூபாய் அளவுக்கு மீன் அழுகிப் போய்விட்டது என்று தெரிவித்த அதே அதிகாரிதான் 55,000 ரூபாய் மதிப்புள்ள முத்துச் சிப்பிகள் தூத்துக்குடியில் காணுமற்போனபோது இருந்த அதிகாரி என்று தெரியவருகிறது.

அதே போல் உதகமண்டலத்தில் ஒரு " ஸ்விண்ட்லிங் " கேஸ் கையாடல் நடந்திருக்கிறது. உதகமண்டலத்தில் மீன் பிடித்து விற்பனை செய்வதில் 40,000 ரூபாய் அளவுக்கு—40,000 ரூபாய் இல்லையென்ருல், 4,000 ரூபாயாக இருந்தாலும்—கையாடல் செய்யப்பட்டிருக்கிறது என்று இலாகாவிற்கு அனுப்பப்பட்ட முறையீட்டிற்கு இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. சட்டமன்றத்தின் முன்னுல் அவ்வப்போது பணம் கேட்கிறபோது அமைச்சர்கள் இத்தகைய குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்லவும், அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இவை இந்த மன்றத்திற்கு தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிருர்கள். வீணுக, முறையில்லாமல், ஆயிரக் கணக்கில் பணம் பாழாணுல், இந்த இலாகாவில் ஆங்காங்கு இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இருந்தால், அத்தகைய குற்றச் சாட்டுகளைச் சொன்னபோதிலும் இந்தத் துறையை நிர்வகிக்க கூடிய அமைச்சருக்கு இவைகளைக் கண்டுபிடித்து, தடுத்து நிறுத்த ஆற்றல் இல்லை என்ருல், இந்த இலாகாவை, உத்தம புத்திரராக இருக்கக்கூடிய முதலமைச்சர் காமராசரிடமோ, அல்லது அரிச்சந்திரராக இருக்கக் கூடிய உள்நாட்டு அமைச்சராக இருக்கும் பக்தவச்சலம் அவர்களிடமோ கொடுத்துவிட்டு, அவர்கள் வேண்டுமாணுல், வேறு வேலை பார்க்க வேண்டும். அப்படி நடக்கவில்லை என்ருல் இந்தச் சட்டமன்றம் இருந்தும் பலனில்லை, நாங்கள் உறுப்பினராக இருந்தும் பலனில்லை, இங்கு பேசியும் பலனில்லை என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் இன்னும் பல குறைபாடுகள் இருக்கின்றன. இந்த இலாகாவின் தலைவராக இப்போது இருக்கக் கூடியவர் மீது பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இந்த இலாக்கா தலைவர் " ப்ரண்ட் அண்டு கம்பெனி "யிடமிருந்து—இது—அரசாங்கத்தோடு ஒரு வகையில் தொடர்பு கொண்டிருக்கக்கூடிய ஒரு கம்பெனி—அந்த கம்பெனியிலிருந்து கடன் வாங்கியிருப்பதாக ஒரு வதந்தி இருக்கிறது. அப்படி இருக்குமாணுல், அரசாங்கத்தின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அரசாங்கத்தின் அனுமதி....



THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த இலாகா தலைவர்
என்று அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிருர்கள். இலாகா தலைவர் அரசாங்
கத்தில் பணி புரியக்கூடியவர்கள். அவர்கள் இங்கே வந்து பதில் சொல்ல
முடியாது. ஆனுலும் அதற்கு பதில் நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிருேம். குறிப்பாக இன்ன விஷயம் நான் கேள்விப்பட்டேன், இம்மாதிரி
யாகத் தவறு நடந்திருக்கிறது என்று சொன்னுல் பரிசீலனை செய்ய
லாமே தவிர, ஏதோ கேள்விப்பட்டேன், உண்மையோ, பொய்யோ தெரி
யாது என்று சொல்லுவது சரியல்ல—நல்லதல்ல.

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்
ஞர்கள். நான் கேள்விப்பட்டதைத்தான் சொல்ல முடியும். இந்தக்
கம்பெனியில் இருந்துகொண்டு நான் கொடுத்தவனுமல்ல, அல்லது
அந்த அதிகாரி கடன் வாங்கும்போது சான்று கையெழுத்துப்
போட்டவனுமல்ல, நான் இந்த மாதிரி காரியத்துக்குப் போகிறவனு
மல்ல, ஆனுல் நான் கேள்விப்பட்டேன். இப்போது குற்றம் சாட்டு
கிறேன், அதற்குப் பதில் தர வேண்டும். ஆகையால்....

SRI R. CHIDAMBARA BHARATHI : On a point of order, சட்ட
சபையில் பூரணமாகத் தெரியாமல், தாமாக அனுமானித்து அங்கத்தினர்
கள் பேசலாமா என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : தாராளமாகப் பேசலாம்.

SRI K. ANBAZHAGAN : அவைத் தலைவர் அவர்களே, இந்த
இலாகாவில் உத்தியோக உயர்வு தருவதைப் பொறுத்த வரையில்,
இந்த இலாகாவில் இருக்கக்கூடிய பலர் குறைப்பட்டுக்கொள்கிருர்கள்.
இந்த இலாகாவில் இருக்கக்கூடிய ஒருவருக்கு உத்தியோக உயர்வு
மறுக்கப்பட்டிருக்கிறது என்று மற்றெருரு குற்றச்சாட்டு இருக்கிறது. உத்தி
யோக உயர்வு விஷயத்தில் " பார்ஷியாலிடி " இருக்கிறது, உறவு முறை
யில் உள்ளவர்களுக்கு செல்வாக்கு இருக்கிறது. இந்தக் குற்றத்தைப்
பற்றி விரிவாகச் சொல்ல என்னிடம் ரிக்கார்டுகள் இல்லை. இதைப்பற்றி
விசாரணை செய்ய வேண்டிய பொறுப்பு அமைச்சருக்கு இருக்கிறது. அந்த்
இலாகாவில் இருக்கக்கூடிய ஒரு அதிகாரியை வேலையை விட்டு நீக்க
விரும்பி அவருக்குத் தரவேண்டிய பிரமோஷனை நிறுத்த ப்ரொபேஷ
னைத் தடை செய்தால் என்ன என்று அவரைக் கேட்டிருக்கிருர்கள்.
இதற்குப் பதில் தெரிவிக்க அரசாங்கத்துக்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பப்
பட்டிருக்கிறது என்று அந்த இலாகாவினர் தெரிவித்திருக்கிருர்கள். அது
உண்ம்யோ, பொய்யோ? அதிகாரிகளுடைய வார்த்தையை நான் தனிப்
பட்ட முறையில் எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை. அரசாங்கத்திற்கு
இலாகா ஊழல் பற்றி ஏறத்தாழ 300 பக்கங்கள் கொண்ட ரிப்போர்ட்
அனுப்பப்பட்டிருக்கிறது. முன்நூறு பக்கமோ, 30 பக்கமோ, எப்படி இருந்த
போதிலும், அனுப்பப்பட்டிருக்கிற அறிக்கை சட்டமன்றத்தின் முன்னுல்
எங்கள் மேசையில் வைக்கப்படுமாணுல், அதை நாங்கள் நன்ருக
ஆராய்ந்து பார்த்துப் பேச வசதி ஏற்படும். இந்த அறிக்கை அமைச்ச
ருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை சர்க்காருக்கு அனுப்பப்
பட்டிருக்கிறது, கவர்னருக்கு அனுப்பப்பட்டிருக்கலாம். இந்த இலாகா
செயலாளருக்கும் வந்திருக்கும். அதைப் பரிசீலனை செய்ய அமைச்சர்
சட்டமன்றத்தின் முன்னுல் வைக்க முன்வர வேண்டும்.

DEPUTY SPEAKER : கனம் அங்கத்தினருடைய நேரம் ஆகி
விட்டது.

SRI K. ANBAZHAGAN : இன்னும் ஒரே ஒரு கருத்தைச்
சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். குற்றம் கூறி யாரையா
வது வருத்த வேண்டுமென்பது எனது நோக்கமல்ல. தனிப்பட்ட அதி
காரிகள் எவரிடமும் விரோதம் இல்லை. பெரும்பாலும் அதிகாரிகளிடம்
பழக விரும்பாதவன் நான்.

[Sri K. Anbazhagan] [18th March 1960

இப்படிப்பட்ட முறையில் இதே துறைத் தலைவர் தன்னுடைய மகளின் திருமணத்தின்போது—1959-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 21-ம் தேதியன்று நடந்தது என்று கருதுகிறேன்—இந்த இலாகாவிற்குச் சொந்தமான கார்களைப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறது. ஏற்கனவே ஒரு காலத்தில் அரசாங்கத் துப்பாக்கியை இலாகாவில் உள்ள வேறு ஒருவர் பயன்படுத்திக்கொள்வதற்கு என்று அனுமதி பெற்று—அவர் பயன்படுத்திக்கொண்டிருப்பதாக—பெட்டிஷன் சென்று அதற்குப் பின்னர் அரசாங்கத்தின் ஆணை மூலமாகத் துப்பாக்கி திரும்பப் பெறப்பட்டது என்று கேள்விப்படுகிறேன். இப்படிக் குறைபாடுகள் இருந்தால் மீன் எங்கே வளரும், விவசாயம் எங்கே பெருகும், நாட்டை எப்படி வாழ வைக்கப்போகிறார்கள்? இந்தக் குற்றச்சாட்டுகளை சட்டமன்றத்தின் முன்பு கூறியிருக்கிறேன். இவைகளின்பேரில் அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அல்லது குற்றம் சரியானபடி இல்லை, குற்றங்களுக்கு ஆதாரமில்லை என்று அன்பழகன்மீது குற்றம் சாட்டி, அன்பழகன்தான் குற்றவாளி என்று எல்லாக் குற்றத்தையும் என்பேரில் சாட்டினால் நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ' அப்படி அன்பழகன்மீது குற்றஞ் சாட்டி, குற்றக் கூண்டிலேற்றி, தர்மம் என்ற பெயரால் ஒரு கோப்பை நஞ்சைத் தந்தாலும் குடிக்கத் தயாராக இருக்கிறான் அன்பழகன் என்று கூறி விடை பெற்றுக்கொள்கிறேன்.

* SRI M. MUNI REDDI: Mr. Deputy Speaker, Sir, I wish to make one or two suggestions with regard to the improvement of the cattle wealth of our State. Before that I would like to say a word or two in regard to the development of agriculture and improvement of fisheries. I think, hon. Members might know, we had 360 tractors and about 365 bull-dozers in the composite State, and they were being utilized and the maintenance cost itself worked out to nearly Rs. 65 lakhs in the year 1954. Today, I do not think, we are seeing any of them. Where have they gone?

In regard to drawing up of schemes, we have many schemes and perhaps many of them are under execution. We have schemes such as the soil conservation schemes, land improvement schemes, well subsidy schemes and tank improvement schemes. They are all worth having and we are grateful to the Hon. Minister for having taken the members of the Sub-Committee under Land Improvement Act to Ootacamund and other places to show and explain the contour bunding and soil conservation methods. These will go a long way in improving agriculture. But when compared to other countries the yield in our country is low. For instance, in America the yield of potato per acre is 15 tons. In India it is only 3½ to 6 tons. When a maund of seed potato is sown we get only an yield between 10 to 15 maunds of potatoes. Our yield is low. Perhaps the Government are trying their very best through the many schemes they have taken up to see that the yield is



18th March 1960] [Sri M. Muni Reddi]

in the higher reaches of tanks and fish are reared there, perhaps we will be able to develop fisheries in the entire area. I had already suggested this to the Government long, long ago.

Coming to the Animal Husbandry, as rightly stated by the Hon. Minister, our cattle wealth though in very large numbers, are not yielding much. Perhaps the Government have also done well in implementing certain scheme and we are having about 90 key village centres. The Director of Animal Husbandry visited different villages in my taluk four or five times. With regard to cattle wealth, I would like to point out that the milk production in Germany is equal to our country's entire milk production. So, something is wrong somewhere. So far as the milk production is concerned, I would like to point out that it increases the prosperity of the peasant and the country. The country depends upon the prosperity of our peasants. Improvement in animal husbandry will go a long way in developing the agriculture industry.

Sir, I would like to deal with lactation period of a cow. Though it is a technical subject, I would like to give my suggestion. I would illustrate it by an example so that the House may understand me. I have a cow which has got a nine-months old calf. I sent the cow for servicing just a month ago, when it stopped milking. Generally a cow gives milk for 280 to 300 days and that cow has already given milk for nine months. It will again give milk after nine months when a new calf is born. So a cow stops giving milk only for a period of nine months and what an amount of loss is incurred thereby. We shall assure that every day in the morning and evening it gives one Madras measure of milk at least. In my place a Madras measure of milk is sold at 8 annas and so for nearly six to seven months it is a loss nearly to the tune of Rs. 200 and in addition to that I have got to feed the animal. In the Hosur taluk there are 40,000 houses and that means there are 40,000 cows. If 40, 000 cows are to go dry and there is a loss of nearly eight annas per cow every day, then we can very easily see how much loss is incurred by a peasant. Unless the purchasing power of the peasant is improved, even his capacity to pay taxes is also limited. So, I draw the attention of the House to the fact that for a cow the dry period is nine months and we must realize how much loss the country incurs on that account. But I understand that in America, Russia and other countries, the dry period is only between six and eight weeks. Even in our Research Stations in the Madras State the dry period of a cow there is 16 weeks. If the Hon. Minister or for that matter if any hon. Member doubts it, he may read what the Russian Delegation stated when they visited the Hosur Cattle Farm. They stated that in their country the dry period was only between four and eight weeks. Sir, we have got a very limited number of veterinarians to make good propoganda in the villages to solve this problem. Even during the dry period the cow has to be fed and a new cow has to be bought, with the

[Sri M. Muni Reddi] [18th March 1960

result so much fodder is wasted and much loss is incurred. Hence suitable arrangements must be made to educate our peasants about this important factor.

Sir, the Hon. Minister is aware of the development of cattle wealth in America. The Americans have taken the Ongole cow from this country and developed a cross-breed called 'Santha Grata' which is double in weight and height. It gives much mutton and big bones. Perhaps the country needs no mutton, bones and blood for agriculture industry, for consumption and for export. Of course ,our Goveernment ar having artificial insemination centres. In this connection, I may say that the semon of a bull collected in one year could be used for one year for 2,500 cows. In foreign countries the semon is converted into tablets and they are sent by air even to places thousands of miles away to improve the cattle there. When the Director of Animal Husbandry visited the Hosur Taluk in connexion with a Cattle Show held there, I informed him that we could develop English breeds like Jersey Cross, South Devon, Ayrshire and Guernsey in our country. They are all valuable cows. Their semon could be taken from England and used here for the development of cross-breed among the Sindhi cows and gir which will go a long way in improving the cattle wealth of the country. Of course, in villages the Sindhis in other parts than that of Hosur will not thrive very well and so the Government should open new centres where they could have such a breed just as they have done in the case of Kangayam and other breeds. Unless we develop the cross-breed, we cannot improve the cattle wealth or the production of good milk.

**SRI A. R. MARIMUTHU:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் நீர்ப்பாசன வசதியை அதிகரிப்பதற்கு சர்க்கார் எடுத்துவரும் முயற்சி அதிகமாக இருந்தாலும்கூட, இத் துறையில் இன்னும் தீவிரமான கவனம் செலுத்த வேண்டும் என்பது என் அபிப்பிராயம். சிறு பாசனத் திட்டங்களின்மூலம் ராஜ்யத்தில் அதிகமான நிலங்களுக்கு பாசன வசதி செய்துகொடுக்க முடியும் என்ற நோக்கத்துடன்
10-30 a.m. சர்க்கார் எல்லாப் பகுதிகளிலும் பல ஏரிகளைச் செப்பனிட்டிருந்தாலும், ராஜ்யத்தில் செப்பனிடப்படவேண்டிய ஏரிகள் தற்போதும் மிக அதிகமாக இருக்கின்றன. அந்த ஏரிகளையெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செப்பனிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். மேலும் அந்த ஏரிகள் எல்லாம் செப்பனிடப் படும்போது அந்த ஏரிகளுக்குத் தண்ணீர் வந்து பாயும் வசதியும் ஏற்படுத்தவேண்டும். அந்தத் திட்டம் அதோடு சேர்க்கப்பட்டிருக்கவேண்டு மென்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

டெல்டா பிரதேசமான காவிரி-மேட்டூர் பிரதேசங்களில் அநேக ஏரிகள் செப்பனிடப்பட்டிருக்கின்றன. சில செப்பனிடப்படாமலும் இருக்கின்றன. அதிலே அரசாங்கம் ஒரு முயற்சி எடுத்துக்கொண்டால் அந்த ஏரிகளி லிருந்து கிடைக்கும் தண்ணீரைக்கொண்டு கோடைப் பாசனத்தை அதி கரிக்க முடியும். கோடைக்காலங்களில் சாகுபடி முயற்சி எடுக்கப்பட்டி ருக்கிறதா என்றால் ஒரு சில இடங்களில்தான் செய்யப்படுகிறதே தவிர



18th March 1960] [Sri A. R. Marimuthu]

அநேக இடங்களில் அந்தத் தண்ணீர் வீணாக்கப்படுகிறது. அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டால் 4,000 ஏக்கராவுக்குமேல் அந்த சி.எம்.பி. ஏரியாவில் கோடை சாகுபடி செய்யமுடியும்.

நான் பல முறை இந்தச் சபையிலே கூறியிருக்கிறேன். நிலங்கள் எல்லாம் துண்டு துண்டாக இருப்பதால் விளைச்சல் அதிகரிக்க முடியாமல் இருக்கிறது. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட சட்டம் கொண்டுவரப்பட இருக்கிறது. அதோடு சேர்த்து, நிலங்களை ஒன்றாகச் சேர்த்து மொத்தமாக விவசாயிகள் சாகுபடி செய்வதற்கான சட்டத்தையும் கொண்டு வரவேண்டும் அப்படிச் செய்தால் நாட்டிலே விவசாய அபிவிருத்தி கணிசமாக இருக்கும். அதோடுகூட கூட்டுறவு இயக்கத்திற்கும் ஆக்கம் அளித்ததாக இருக்கும்.

விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற கடன் வசதி போதவில்லை என்ற பேச்சு எங்கும் இருந்துவருகிறது. ஆனால் கொடுக்கப்படுகின்ற கடனாவது காலத்தோடு கொடுக்கப்படுகிறதா என்றால் அதுவும் கொடுப்பதில்லை. பட்டுக்கோட்டையில் கடன் மனுக்கள் கொடுக்கப்பட்டு துரிதமாகப் பைசல் செய்யப்படவில்லை என்று என்னிடம் வந்து கூறியதன்பேரில் நான் டெபுடி தாசில்தாரைச் சென்று கேட்டேன். அந்த ஊர் கர்ணம் கணக்கு எழுதிக் கொடுத்த பிறகுதான் இதைக் கவனிக்க முடியும் என்று அவர் சொன்னார். அவர் கணக்கு எழுதிக் கொடுப்பதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ? என்று கேட்டேன். அதற்கு அவர் இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்தி கணக்கு வாங்காவிட்டால் பிறகு கொடுக்க மாட்டார் என்று கூறினார். பிறகு அவர் கணக்கு எழுதிக் கொடுத்த பிறகு கடன் கொடுக்கப்பட்டது. இந்த மாதிரி தவறான நடவடிக்கைகளில் சில அதிகாரிகள் ஈடுபடுகிறார்கள். இந்த நிலைமை ஏற்படாதவாறு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிணறுகள் வெட்ட கடன் கொடுக்கப்படுகிறது. , அந்தக் கிணறு எவ்வளவு அடி ஆழம் வெட்ட வேண்டும், இதற்குத் தகுந்தபடிதான் உதவி ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஒரு பக்கத்தில் மிக அதிகமாகச் செலவு செய்து கிணறு வெட்ட வேண்டியிருக்கிறது. சில பகுதிகளில் கிணறுகள் அவசியம் இல்லாத பகுதிகளில்கூட சர்க்காரில் இருந்து கடன் வாங்கவேண்டுமென்ற நிர்பந்தத்திற்காகச் செலவு செய்யும் நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆகவே, இந்தக் கிணறு வெட்டுகிறவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதில் மாறுதல் செய்ய வேண்டும். எவ்வளவு தொகையில் கிணறு வெட்டுகிறார்களோ அதில் ஒரு பகுதியைக் கடனாகக் கொடுக்க வேண்டும்.

தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய ஏரி குளங்கள் எல்லாம் கூட்டுறவு மீன்பிடி தொழிற்சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று இந்த வருஷத்திலே உத்தரவு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். அப் பகுதிப் பஞ்சாயத்துகளுக்கெல்லாம் இந்தக் குளங்கள், ஏரிகளில் உள்ள மீன் குத்தகைதான் பெரும் வருவாயாக இருக்கிறது. இது இல்லையென்றால் கிராமப் பஞ்சாயத்துகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. முன்பு இந்த ஏரி குளங்கள் எல்லாம் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கவேண்டு மென்று உத்தரவு இடப்பட்டிருந்தது. என்ன காரணத்தாலோ கூட்டுறவு மீன்பிடி சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று இப்போது உத்தர விடப்பட்டிருக்கிறது. இது எந்த வகையிலும் நியாயமல்ல. கிராமத்திற்கு வரக்கூடிய பொது வருவாயைப் பாதிக்கிறது. மீன்பிடித் தொழிலைக் கொண்டவர்கள் கிராமங்களில் கிடையாது. கடற்கரை ஓரங்களில்தான் மீன் பிடி தொழிலாளர்கள் இருக்கிறார்கள். கடற்கரை அல்லாத உள்ளூர் கிராமங்களில் அந்த மாதிரித் தனியாகத் தொழிலாளர்கள் கிடையாது. யாரோ ஒருவர் சேர்ந்து இந்தத் தொழிலை வைத்து லாபம் சம்பாதிக்கப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அந்தந்தப் பஞ்சாயத்துக்களுக்கே இந்தக் குத்தகையைக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri A. R. Marimuthu] [18th March 1960

மண் பரிசோதனை நிலையம் ஒன்றை தஞ்சை ஜில்லாவில் ஏற்படுத்தப் போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்ததை வரவேற்கிறேன். இதனால் பெரும் அளவில் அபிவிருத்தி ஏற்படுமென்பது என் நம்பிக்கை.

ட்ராக்டர்கள், புல்டோசர்கள் தஞ்சையில் தேவையான அளவுக்கு இல்லை. எந்தச் சமயத்தில் போய்க் கேட்டாலும் ப்ரையாரிடிபடி கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அதற்காக எழுதி வைத்து இரண்டு வருஷங்கள் ஆகியும் இன்னும் கிடைக்கவில்லை. காலத்தோடு கிடைக்கும் வசதியைச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

கால்நடை வைத்தியத்தைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. கால்நடை வைத்தியசாலைகள் எங்கும் கிடையாது. பட்டுக்கோட்டையில் ஒரு டிஸ்பென்சரி இருக்கிறதே தவிர ஆஸ்பத்திரி கிடையாது. ஒவ்வொரு கிராம தலைமை இடங்களிலும் ஒரு டிஸ்பென்சரி அவசியம் ஏற்படுத்தப்பட வேண்டும். கால்நடை ஆஸ்பத்திரிகள் பரவலாக இல்லாத காரணத்தினால் கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற நோய்களுக்கெல்லாம் அனுபவம் இல்லாத நாட்டு வைத்தியர்களைக்கொண்டு வைத்தியம் செய்யவேண்டியிருக்கிறது. நவீன முறையில் வைத்தியம் செய்ய ஏது இல்லாமல் இருக்கிறது. இதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் சென்னையில் இருக்கும் கால்நடை வைத்தியக் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அங்கு தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி போதவில்லை. பழைய ஹாஸ்டலைப் பார்த்தால் மாணவர்கள் தங்கிப் படிக்க லாயக்கில்லாத முறையில் இருக்கிறது. இதிலே கவனம் செலுத்தி புதிய கட்டிடம் கட்டித் தரவேண்டும். அப்போதுதான் மாணவர்கள் நல்ல மன நிலையுடன் இருந்து படிக்க ஏதுவாக இருக்கும்.

கால்நடை டாக்டர்களுக்குப் போதிய சம்பளம் கொடுப்பதில்லை. மற்ற டாக்டர்கள் எப்படிப் படிக்கிறார்களோ அதே முறையில்தான் இவர்களும் படித்துப் பட்டம் பெறவேண்டியிருக்கிறது. அவர்களுக்கும் போதிய சம்பள வசதி செய்து கொடுத்தால்தான் அவர்களுக்கு ஊக்கம் ஏற்படும். அதிலே அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI A. V. THOMAS : Mr. Deputy Speaker, Sir, I am very happy that agriculture has now been given the pride of place. It has just come to this end and a start appears to have beeen made in various directions. It has been acknowledged in the Budget Speech of the Hon. Finance Minister that agriculture is the necessary foundation for the growth of our economy. I wish this has come very much earlier in which case we need not have the food shortage that is previling all over the country today nor would we be troubled with very high prices that have to be paid at present for foodgrains. However, now, the realization had come even though at a later stage. I hope the various schemes that have been enumerated in the Budget Speech as well as any other useful schemes which could be taken up later, would be given prompt attention and will be carried out as expeditiously as possible, in order to increase our production.

I have stressed more than once in this House that the production of rice in our own State could be increased, by at least 50 per cent. More than once I have also pointed out that in another organized industry, agricultural industry, the increase has been large. I refer to "tea" cultivation all over India. This is



18th March 1960] [Sri A. V. Thomas]

being done on a very organized scale and the plantation people themselves have their own scientific experimental stations, etc. They take the trouble of evolving the right type and right kind of seed for cultivation. It is they who evolve the various other methods of cultivation and also scientific cultivation. The result is that the yield of tea during the past few years has increased by more than 70 per cent. But if the pre-war figures can be taken, the increase is about 150 to 160 lb. per acra which works out to about 75 per cent. If such result could be achieved in another product, purely an agricultural product, there is no reason why the yield from food crops also cannot be increased. The Hon. Minister himself pointed out in his opening speech that somewhere in Chidambaram, one agriculturist had obtained 10 bags of rice for acre more than the normal yield. It is known to all of us. It is known that the yield from our food crops can be increased? What are the efforts that are being made in that direction? I do not want to blame anyone. Let the past be forgotten and buried. But I would like the Hon. Minister to give his special attention to this aspect of the problem. It is proved that more could be got out of the land. A comparison has been made in the Budget Speech that in our State the yield is about 1,300 lb. while the All-India average is 816 lb. We can only take a limited pride in that. It is good as far as it goes. But our yield can be increased very much more. Why are we not producing more? If you ask the reason, one of the reasons that is given to us is want of fertilisers. We are not able to get sufficient quantities of fertilisers that are needed by us. But I would like to ask, what has been done about it? It has been stressed by another member and the Hon. Minister has also said that the soil had to be analysed and only the manure suitable for the land should be applied. That is quite true. It has happened in the past that if onee applies Sulphate of Ammonia indiscriminitely there is no proportionate increase in yield. The general feeling is that if everybody applied Sulphate of Ammonia, the yield could be increased. But I know from experience that in some cases people have suffered from using Sulphate of Ammonia. Instead of putting the right manure in right quantity if the wrong manure is applied, it really spoils cultivation and brings down the yield. Remedies have been suggested? What are we to do? Intensive cultivation has to be done. That is a thing that should be attempted. But that also should be attempted only in areas where all facilities exist such as water, normal rainfall and good soil. Even if there is some defect in the soil, if water is available improvement could be made. That is intensive cultivation.

Then of course extensive cultivation has also been talked about. There also various facilities are needed. It is all realised, everybody knows it and most of our Ministers are aware of it. During the last few years it has been stated that a large area of land had come under cultivation. But I do not see any appreciable results in the yield. Increase in yield is given compared to previous year (1958-59). The increase is about 5 lakhs and odd tons which

[Sri A. V. Thomas] [18th March 1960

works out to about 3 to 4 per cent. That does not seem to be enough at all. Talking about extensive cultivation, let me say that every effort should be made to bring more lands under cultivation. But the most important thing that is needed is water. There is considerable area in our State where rainfall is very poor, very low. So the real need is to find ways and means to supply the necessary quantity of water required for cultivation. A few bore wells, (test bore wells,) were sunk here and there. That work was not continued in the right manner. Few wells were sunk here and there and the report was that there was not sufficient quantity of water avilable and I suppose on that score they had given up this test bore wells work altogether. Such a thing is not correct. Perhaps our Government may not be able to do all the work. I think the Central Government have some units to sink bore wells. Their help should be called for and more bore wells sunk. I would suggest that in each taluk, at least a dozen or two experimental bore wells should be dug.

If there is not much of rainfall, we have to find out whether water could be got from underground. Water is available from various other sources also. I have said over and over again on the floor of the House that a large quantity of water is wasted into the sea near Cape Comorin, i.e., Kanyakumari. Ministers have seen it. Ryots have seen it. Many have seen it. But water still goes on into the sea. That quantity of water which now goes waste into the sea if properly harnessed and utilised could be used to irrigate mode lands in number of villages in my area, where hunger and misery exists today. There has been no rain in any area for a number of years. Due to want of good rains for the last ten years, people there have suffered very much and many people have left the villages. Some of the villages are particularly deserted. I am not exaggerating. Previously most of the people went to foreign countries like Burma, Singapore and Ceylon. That is blocked now. They have to go back to the villages and live on their lands. But on what? How will they fill their stomachs? If water is provided, I think we can expect our people to make something for their livelihood. As it is now, it is very difficult for many of the people in the villages to find at least one meal a day.

The schemes, at least some of them, are very good indeed. But what are the Government doing to carry them out satisfactorily? The Government have various departments. The underlying reasons for which these schemes are started, are very good. But are the schemes of the Government being carried out properly? I am not satisfied. Have the Government a loyal staff for carrying out the schemes? At the block development and community centres the poor ryot, who has to be helped to a great extent, is harassed and not helped. He has to go and wait at the door of the man concerned. Of course, the influential man gets his way. Further, he gets what he wants. But the poor ryot has to stand,



18th March 1960] [Sri A. V. Thomas]

with a paper in his hand, perhaps on the verandah or a furlong away. I think it would be very much better if some co-ordinating officers are appointed from the people themselves in these areas to the departments, which have to deal with the poor villagers.

Sir, animal husbandry has been talked about. There are one or two places like Hosur, which I have seen. They are doing excellent work there. But what about the villages? When I complain about the department, I should also say that perhaps the department does not get sufficient co-operation from the villagers. If we taluk about artificial insemination or something like that, the villager does not believe in it. Somehow the impression has been going round that it has been a failure, and that once it is done, the cow goes barren. It may be a mere canard. But it is very difficult to remove this impression from the minds of the people. So efforts should be taken to remove this impression. How? Not by experimenting this artificial insemination on the poor man's cow but the Government should experiment it on the cow bought by themselves and put in the breeding farm. If people are once satisfied, then naturally they will find their way to accept it.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : All that stage we have passed. Certainly people are quite convinced about the efficacy of artificial insemination.

SRI A. V. THOMAS : I am glad to hear that. But I have not heard this in my area and round about those places. I am mainly talking about my own area. Perhaps in the City of Madras there is some improvement. I am not personally satisfied about it even in the City of Madras. This artificial insemination business has put three or four of my cows dry. This is my own experience. The Hon. Minister's experience may be different. Or perhaps he is talking from his papers. I am only stating facts as I see them.

The main thing is, we are short of food. We realise that we should raise more crop. This is all agreed, and we have got schemes to achieve this. They are good enough. But are these carried out properly, and do we get results? Have we the proper staff to carry them out? Has the gentleman at the top, who controls and who initiates all these things, the time to look into it? There are certain occasions when we have to make a self-examination. While a certain department or business is given to us, owing to age or overwork, we sometimes find that we cannot do justice to it or that we cannot face the responsibilities that are given to us in a proper manner. Then it is time for such gentlemen to sit back and think whether younger and more energetic people with drive cannot be given such responsibilities in the various departments. Food is a very important question. Let not the Government neglect it, and let them not take it easily. It might start a revolution if there is no food.

பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் நல்லது. இப்பொழுது, ஒரு தாலூக்காவுக்கு அல்லது ஒரு பிர்க்காவுக்கு, இல்லை ஒரு தாலூக்காவுக்கு ஒரு டாக்டர்தான் இருக்கிறார். டெவலப்மெண்ட் ஸ்கீம் இருக்கும் இடத்தில், ஒரு டாக்டர் இரண்டு பிர்க்காவுக்கு இருக்கிறார்கள். அவர்கள் போதுமான முறையில் பயன் படுவதில்லை. சமீபத்தில் திருவள்ளூர் தாலூக்காவில் கேள்விப்பட்டேன், அங்கு வெடரினரி டாக்டர் சரியில்லையென்று ஒரு செண்டரிலே மீட்டிங் நடக்கும்போது கூச்சலும், கூப்பாடும் இருந்ததாக. இதையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாய இலாகாவை எடுத்துக்கொண்டால், சர்க்காரின் நோக்கம் உணவுப் பொருள்களை அதிகப்படியான அளவுக்கு உற்பத்தி செய்து, போதுமான அளவில் அடைந்து, மக்களுக்கு குறைந்த விலையில் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படை நோக்கம் இருக்க வேண்டும். ஆனால், விவசாய இலாகாவின் மூலமாக பல சாதனைகளைச் செய்திருக்கிறோம், வேண்டிய பணத்தை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறோமே தவிர, போட்ட திட்டத்தின்படி உற்பத்தியாகியிருந்தாலும், அதே நோத்திலே விலைவாசிகளும் உயர்ந்துகொண்டே இருக்கிற நிலை இருக்கிறதே ஒழிய, விலைவாசிகள் குறையவில்லை. கனம் நிதி அமைச்சரவர்கள் காரணமும் காட்டினார்கள். விலைவாசிகளை கட்டுப்படுத்த முடியாத பலஹீனத்தையும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி ஏற்றுக்கொள்ளும் நேரத்திலே, காரணங்களைச் சொல்லும்போது, என்ன சொல்கிறார்கள், யார் பேரில் பழியைப் போடுகிறார்கள் என்று பார்க்கும் நேரத்திலே, நிர்வாகம் நடத்தும் இலாகாவிலும், அதே போன்று மக்கள் பயப்பட்டு ரேஷன் வந்துவிட்டதோ என்கும்படி மக்கள் பேரிலும் பழியைப் போட்டுத் தப்பித்துக்கொள்ளும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. அதே போன்று, போட்ட திட்டத்தின்படி உணவு உற்பத்தி இருக்கவில்லை என்று கூறும் நேரத்திலே, உரம் கிடைக்கவில்லை என்றும்; ஒதுக்கிய பணத்தைச் சரியான முறையில் ஏன் செலவு செய்யவில்லை என்று கூறும் நேரத்திலே, ஆஸ்பத்திரிகள் கட்டுவதிலும், கட்டடங்கள் கட்டுவதிலும் ஏன் உபயோகிக்கவில்லை என்கும் நேரத்திலே, ஸ்டீல் கிடைக்கவில்லை என்று சொல்லும் நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு உணவுப் பொருள்கள் பிரதானமான, ஜீவநாடி போன்ற பிரச்சினை. அதில், விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று பலஹீனம் காட்டவும், பழியைப் பிறர் மேலே போடுவதுமாக இருக்கும் நேரத்திலே, அந்த பலஹீனம் தனிப்பட்ட மந்திரிகளின் பலஹீனமா, அல்லது கொள்கையின் பலஹீனமா என்று பார்த்தாகவேண்டும்.

அதிகப்படியாக உற்பத்தி பெருக வேண்டுமானால், பிரதானமாகச் சில மாறுதல்களைக் கையாளவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். இப்பொழுது லட்சக் கணக்கான ஏக்கராக்கள் தரிசு நிலமாக இருக்கிறது. தரிசு நிலங்களிலே, 20, 30 வருஷங்கள் விவசாயம் செய்திருந்தாலும், ஹரிஜன மக்களுக்குப் பட்டா செய்துகொடுப்பதற்குப் பதிலாக, அவர்களை வெளியேற்றும் நிலைதான் இருக்கிறது. ஆகவே, உடனடியாக, தரிசு நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவர முயற்சிகள் செய்ய வேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எப்பொழுதோ கொண்டு வந்திருக்க வேண்டும். வரப் போகிறது என்று சொல்லும் நிலை இருந்தாலும்கூட, எந்த ரூபத்திலே, எந்த நிலையிலே வரப்போகிறது என்று பொறுத்துப் பார்க்கிறோம். குறிப்பாகச் சொல்கிறேன். பல சட்டங்களைப் போட்டிருக்கிறோம். அவைகள் விவசாயிகளின் குறைகளைப் போக்கக்கூடிய அளவுக்கு உதவி செய்திருக்கிறதா என்று பார்க்கும் நேரத்திலே, இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். நடைமுறையிலே என்ன தவறு என்று கேட்கும் நேரத்திலே, அதைப்பற்றி ஒன்றும் சொல்வதில்லை



ஆகவே அதே போன்றுதான் இன்றைக்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குப் போதுமான அளவு சாயில் கன்சர்வேஷன் டிபார்ட்மெண்டுகளை மேலும் அதிமாக்க வேண்டும். பூச்சி மருந்துகளை அதிகமாக்க வேண்டும். விதைப் பண்ணைகள் என்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் அதிகமான பணம் விரயமாக்கப்பட்டிருக்கிறது, ஊதாரித்தனமாக என்பதை ஞாபகமூட்டுகிறேன். குறிப்பாக என் தொகுதியில் ஆலத்தூர் என்று சொல்லக்கூடிய ஒரு கிராமத்தில் ஒரு விதைப் பண்ணையை ஆரம்பித்து, அங்கே போதுமான சிப்பந்திகளை நியமித்து சுமார் ஒரு வருஷ காலம் அங்கே இருந்து அந்த நிலத்திற்குப் பணத்தையும் கொட்டிக்கொடுத்த பிற்பாடு, சாயில் சரியாக இல்லை என்று மேலே இருந்து உத்தரவு வந்துவிட்டது என்று அந்த விதைப் பண்ணையை அங்கே இருந்து எடுக்கக்கூடிய நிலைமை வந்துவிட்டது என்றால் விதைப் பண்ணை ஆரம்பிப்பதற்கு, முன்னால் அந்த இடத்திலுள்ள சாயில் பரிசோதனை செய்யப்படவில்லையா, அதிகாரிகள் முதலில் அந்த சாயிலை பரிசோதனை செய்யாமலா அங்கே விதைப் பண்ணையை ஆரம்பிக்கச் சொன்னார்கள், இதை அதிகாரிகளிடத்தில் அமைச்சர் அவர்கள் கேட்டார்களா என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன். அதனால் நமக்கு எத்தனை நஷ்டம் வந்தது, இதை முதலிலேயே யோசித்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(Sri K. Sattanatha Karayalar in the Chair.)

குடியாத்தம் தாலுக்காவுக்கு ஒரு விதைப் பண்ணைகூட கிடையாது. அங்கே வைப்பதற்கு வழி கிடையாது. அமைச்சர் அவர்கள் சொல்லலாம், அதிகாரிகள் சொல்வதைக் கேட்டு, "மண் வளம் கிடையாது, பூமி நன்றாக இல்லை. தண்ணீர் அங்கே கிடையாது" என்று. அப்படிச் சொல்வார்கள் என்றே நினைக்கிறேன். ஆகையால்தான் இதுபோன்ற குறைபாடுகளைப் போக்க நாம் முயற்சி செய்தாக வேண்டும்.

அதேபோன்றுதான் இன்றைக்கு நூதன கருவிகளை உபயோகிக்க வேண்டும். வடாற்காடு ஜில்லாவை எடுத்துக்கொண்டு பார்த்தால் போதுமான டிராக்டர்கள், புல்டோசர்கள் மிகமிகக் குறைவு. தஞ்சாவூர் ஜில்லாவுக்கு அடுத்தாற்போல வடாற்காடு ஜில்லாவில்தான், உற்பத்தி அதிகம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் தஞ்சை ஜில்லாவில் எந்த அளவுக்கு நூதன கருவிகள் எல்லாம் இருக்கிறதோ அதில் பாதி அளவுக்குக்கூட வடாற்காடு ஜில்லாவில் இல்லை. மூன்றில் ஒரு பங்கு இருக்கிறது. அதிலும் பாதி நொண்டி, முடமாக இருக்கும், வேலை செய்ய முடியாத அளவுக்கு. அதுமாத்திரம் அன்று, நினைத்த அளவுக்கு வேறிடத்திற்குச் செல்லக் கூடியதாக இருக்கும், அது மாத்திரம் அன்று, ஒன்றிரண்டு இருப்பதுகூட பண வசதி உள்ளவர்களுக்கே கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

ஆகவே அந்த ஜில்லாவில் நூதன கருவிகளை அதிகமாக்க வேண்டுமென்பது மட்டும் அல்ல. சர்க்காரே சிறு சிறு டிராக்டர்களை நம் நாட்டில் அதிகமாக உற்பத்தி பண்ணினாலும் சரி, வெளி நாடுகளிலிருந்து தருவித்துக் கொடுத்தாலும் சரி, சிறு சிறு விவசாயிகளுக்குக்கூட கிடைக்கக்கூடிய வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் அதிகப்படியாக உணவு உற்பத்தி செய்ய முடியும். "அகல உழுவதை விட ஆழ உழு" என்று நம் பெரியவர்கள் சொல்லுகிறார்கள். இவனால் பட்டிமாட்டைக் கொண்டு மேலெழுந்தவாரியாக உழுது போட்டு விவசாயம் செய்கின்ற நிலைமை இருந்தால் எப்படி உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆகவேதான் பத்தாயிரம் ரூபாய்க்கு வாங்கக்கூடிய நிலைமையில் சாதாரண விவசாயிகளுக்கும்கூடச் சிறிய சிறிய டிராக்டர்களை எல்லாம் கிடைக்கும்படியாக வாங்கிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri V. K. Kothandaraman] [18th March 1960

அதேபோன்று போர் வெல்கள், ரிவர் பெட் ஸ்கீம் போன்ற பலவிதமான திட்டங்கள் இருந்தபோதிலும்கூட வடாற்காடு ஜில்லாவில் போர் வெல்கள் போட வேண்டும் என்று கேட்டால் அங்கே பாறை மயமாக இருக்கிறது என்று போன வருஷத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லா இடத்திலும்கூட அவ்வாறு போட முடியுமா என்று டெஸ்ட் பண்ணி பார்த்தார்களா என்றால் கிடையாது. எங்கேயோ ஓரிண்டு இடத்தில், பார்த்தார்களோ என்னமோ ? ஆகவே அந்த ஜில்லாவில் போர் வெல்களை அதிகப்படுத்த வேண்டும். ரிவர் பெட் ஸ்கீம் வர வேண்டுமானால் பாலாறு சூல்களை ஒழித்துக் கட்டவேண்டும். அது இருப்பதனால்தான் இந்தமாதிரி திட்டங்களுக்கே அங்கே வழி இல்லாமல் இருக்கிறது.

மின்சார கட்டணம், மின்சார உற்பத்தி அதிகமாக ஆக ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே அதையும் குறைக்க வேண்டும். அதேபோன்றுதான் சமுத்திரக்கரை ஓரங்களில் காற்றாடியைக் கொண்டே இயங்கக்கூடிய பம்பு செட்டுகளை வைக்கலாம். டெல்லியில் நடந்த கண்காட்சியில் அதைப் பார்த்தோம். நம்முடைய ராஜ்யத்திலும் சமுத்திரக் கரையை ஒட்டிய கிராமங்கள் அநேகம் இருக்கின்றன. குறிப்பாக ராமநாதபுரம் ஜில்லா, இன்னும் தஞ்சை போன்ற பிரதேசத்தில் விண்ட்மில் பம்பு செட்டுகளை அதிகமாக உபயோகப்படுத்த வழி செய்துகொடுக்க வேண்டும். இதனால் குறைந்த செலவிலே விவசாயிகளுக்கு, தண்ணீர் பாய்ச்ச வசதி ஏற்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோன்றுதான் உரம் பிரதானமானது. கனம் அமைச்சர் அவர்களே சொல்லுகிறார்கள், உர மோசடி வடாற்காடு மாவட்டத்தில்தான் அதிகம் என்று. அங்கே உர விநியோக ஊழல் அதிகமாக இருக்கிறது. ரொம்ப நாளாக எல்லோருக்கும் தெரியும். வடாற்காடு உர விநியோகத்தை நடத்துகிறது ஒரு குடும்பம். மாமன், மச்சான் பேரில் லைசென்சு, அண்ணன் தம்பி பேரில் லைசென்சு என்று வைத்துக்கொண்டு, உரம் ரயிலில் வந்து இறங்கவேண்டியதுதான். உடனே லாரியில் இரண்டு மூட்டை ஆந்திராவுக்கு, பாக்கி மைசூருக்கு என்று போய்விடுகிறது. கண்ட்ரோல் ரேட்டில் விவசாயிகளுக்குக் கிடையாது. எத்தனை மூட்டை வெளியே போயிற்றோ அதற்குப் படிக் கணக்கில் அவர்கள் மாற்று செய்கிற மோசடி சொல்லி முடியாது. இப்படி இருப்பதனால் கூட்டுறவு இயக்கத்தின் பேரிலேயே மக்களுக்கு அவநம்பிக்கை வளர்ந்து வருகிறது. 24 மூட்டைகள் மூன்று மாதத்திற்கு முன்பு கண்டு பிடித்துக்கொடுக்கப் பட்டபோதிலும் இதுவரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப் படவில்லை. அந்தச் சங்கத்தினுடைய தலைவர்கள்கூட பல ரூபமாக வேலை செய்து வருவதாக நான் கேள்விப்படுகிறேன். ஆகவே உடனடியாக அதன் பேரில் சரியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கால்நடை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதை வரவேற்கிற நேரத்தில் அதற்கு பிரதானமாக இருக்கக்கூடிய கால்நடை ஆஸ்பத்திரிகள் அதிமாகத் தேவை. வடாற்காடு ஜில்லாவில் டிஸ்பென்சரி என்ற அளவுக் குத்தான் இருக்கிறதே தவிர நான்கு லட்சம் ஜனத்தொகை கொண்ட அவ்விடத்திற்கு உடனடியாக எல்லா வசதிகளையும் செய்துகொடுத்து, டாக்டர்களைப் போட்டு, ஒரு கால்நடை ஆஸ்பத்திரியை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். காட்பாடியில் சொந்தத்திலேயே கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்து உதவி செய்ய முன்வந்திருந்த போதிலும் அங்கே ஒரு கால்நடை ஆஸ்பத்திரியை ஏற்படுத்துவதற்குச் சர்க்கார் இன்னும் முன்வரவில்லை. ஆகவே இங்கெல்லாம் கால்நடை ஆஸ்பத்திரியை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். இலவச உதவியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சர்க்கார் செலவிலேயே, சர்க்கார் சார்பிலேயே பம்பு செட்டுகளுக்கு வேண்டிய ஸ்குரூ, ஸ்டார்ட்டர் முதலியவைகளைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்து கொடுக்க வேண்டும். வெளிநாடுகளில் சின்னச் சின்ன தொழிற்



18th March 1960] [Sri V. K. Kothandaraman]

சாலைகளில் இவை குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்படுவது போலவே இங்கும் செய்ய வேண்டும். இப்படி சர்க்கார் அதிகமான காரியங்களைச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri A. SENAPATHI GOUNDER** : கனம் தலைவர் அவர்களே, சென்ற பல ஆண்டுகளை விட இந்த ஆண்டில் விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, விவசாய அபிவிருத்தியில் கவனம் செலுத்தி, அதிக அக்கறை கொண்டு, ஒரு வரவு செலவு திட்டத்தைத் தயாரித்து அளித்திருப்பதை முழு மனதோடு ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயம் மிகவும் முக்கியமானது. கால்நடை அபிவிருத்தியிலும் நம் அரசாங்கம் தக்க முறையில் சென்ற ஆண்டுகளைப் போலவே அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். இவை கால்நடை வளர்ப்புக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே நண்பர்கள் பேசும்பொழுது கால்நடை அபிவிருத்தியில் செயற்கை முறையில் கருதரிக்கும் நிலையங்களைப் பற்றி மக்களுக்கு இன்னும் சந்தேகம் தெளியவில்லை என்றும், அவர்களுக்கு இன்னும் அதைப் பூர்ணமாகப் பயன்படுத்திக்கொள்ளும் எண்ணம் வரவில்லை என்றும் சொன்னார்கள். அப்படிச் சந்தேகம் உள்ள அங்கத்தினர்கள் யாராக இருந்தாலும் என்னுடைய வட்டாரத்திற்கு வந்தால் இந்தச் சபை மூலமாக அழைக்கிறேன், எங்கள் வட்டாரத்திலுள்ள விவசாயப் பெரும் குடிமக்கள் இந்தச் திட்டத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள், அது எவ்வளவு வெற்றிகரமாக நடக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன். நல்ல காளைகளை உபயோகப் படுத்தி செயற்கை முறையில் பசுக்களைக் கருதரிக்கச் செய்த உதாரணங்கள் ஒன்று இரண்டல்ல, பல பேர்கள் அதன் நன்மையை உணர்ந்து இருக்கிறார் கள். இன்று என் தாலுகாவில் மட்டும் எட்டு ஒன்பது நிலையங்கள் நல்ல பணியாற்றி வருகின்றன. ஒவ்வொரு நிலையங்களிலும் குறைந்தது 5,000 கால்நடைகளுக்குப் பயன்படக்கூடிய நிலையில் இந்த நிலையங்களை ஸ்தாபித் திருக்கிறார்கள். நேரடியான முறையில் நல்ல பொலி காளைகளை விடும் போது 5,000 கால்நடைகளுக்கு குறைந்தது 100, 150 பொலி காளைகள் தேவையானதாக இருக்கின்றன. ஆனால் இன்று இருக்கும் அமைப்பிலே 12 காளைகளைக் கொண்டு 5,000 கால்நடைகளுக்கு பயன்படுத்தி நல்ல ரகமான கன்றுகளை உண்டாக்கியிருக்கிறார்கள். என்பதை என் வட்டாரங் களில் வந்து பார்த்தால்தான் நிச்சயமாகத் தெரியும்.

விவசாயிகளினுடைய பொருளாதார நிலைகூட தக்க முறையிலே உயர்ந்து இருக்கிறது என்பதற்காக நான் ஒரு சில உதாரணம் கொடுக்க விரும்பு கிறேன். முன்பு எல்லாம் 5,000 கால்நடைகளிலே குறைந்தது ஆயிரம் தான் நல்ல கால்நடைகளாக இருக்கும். 4,000 தரக் குறைவான கால் நடையாக இருக்கும். செயற்கை முறையிலே ஏற்பட்டிருக்கும் கன்றுகள் நல்ல விலை போகக்கூடியதாய் இருக்கின்றன. முன்பு 100 அல்லது 150 ரூபாய்க்கு ஒரு கன்றை சந்தையிலே போய் விற்றார்கள். செயற்கை முறை யில் பிறந்த கன்று ரூ 250-க்கு விற்கிறார்கள். 50 ரூபாய்க்கும் 150 ரூபாய்க் கும் வித்தியாசம் ரூ. 100. 5,000 கால்நடைகளுக்கு கன்றுகள் பிறந்தால் ஒரு கன்றுக்கு 100 ரூபாய் அதிகம் கிடைக்கிறது. இப்படி ஐந்து லட்சம் ரூபாய் அளவிற்கு இந்த வட்டாரத்திலே பொருளா தார நிலைமை அதிகம் உண்டாக்கி இருப்பதற்கு காரணம் செயற்கை முறையிலே கருதரிப்பதற்காக ஏற்பட்ட கேந்திர நிலையங்கள்தான் என்பதை இந்த இடத்தில் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்காக கிராமக் கேந்திர நிலையங்களில் வைத்திய வசதியும் ஏற்படுத் திருக்கிறார்கள். அதை நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா கிராமக் கேந்திர நிலையங்

[Sri A. Senapathi Gounder] [18th March 1960

களிலும் கால்நடைக்கு வேண்டிய சகல விதமான வைத்திய வசதிக்கும் இடம் ஒதுக்கப்பட்டு அதற்கு வேண்டிய மருந்துகளை உடனடியாகக் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என்பதை இந்த சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதற்காக கிராம கேந்திர நிலையம் என்ற பெயரில் இல்லாமல் கிராம கால்நடை வைத்திய நிலையம் என்ற பெயரோடு இயங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கால்நடை அபிவிருத்தியிலே கவனம் செலுத்தக்கூடிய சர்க்காரை மற்றொன்று கேட்க விரும்புகிறேன். கிராமத்திலே கால்நடைக்கு மேய்ச்சல் தரை மிகவும் அவசியம். முக்கியமாக டெல்டா பிரதேசங்களில் அந்த வாய்ப்பு கிடைப்பது அரிது. வ்ரண்ட பிரதேசமாகிய எங்கள் ஜில்லா, திருச்சி ஜில்லாவிலே ஒரு பகுதி, மதுரை ஜில்லாவில் ஒரு பகுதி இப்படிப்பட்ட இடங்களில் கால்நடை வளர்ப்பதற்காக நல்ல மேய்ச்சல் தரைகளை விட்டு வைப்பது மிகவும் அவசியம். இப்பொழுது இருக்கும் நிலையிலே 10 எக்கர் 30 எக்கர் கிடைத்தால் அதை மனிதனுடைய உணவு உற்பத்திக்கு வைத்துக்கொள்ள எண்ணுவார்களே தவிர கால்நடைக்காக விட்டுவைத்துக் கொள்ளும் பொறுப்பு இருப்பதில்லை. ஆகையால் வரப்போகிற நிலச் சீர் திருத்தச் சட்டத்திலேயும்கூட பிரத்தியேகமாக கால்நடைக்கு என்று மேய்ச்சல் தரைகளை ஒதுக்கி வைத்தால் நன்றாக இருக்கும். கால்நடைகள் அபிவிருத்திக்காக பாடுபடும் நமது முயற்சிக்கு அது ஒரு நல்ல பலன் அளிக்கும் என்று நினைக்கிறேன். ஒரு மாட்டிற்குக் குறைந்தது 4 எக்கர் வீதம் மேய்ச்சல் தரை ஒதுக்கி வைத்து பிரயோஜனம் இல்லாமல் செய்வதை விட கால்நடை வளர்ப்பிற்கு ஆக்கம் அளிக்கும் வகையிலே தரிசுகளை மேய்ச்சல் தரிசுகளாக உண்டாக்குவதற்கு மான்யம் கூட கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சர்க்கார் மேய்ச்சல் தரிசுகளுக்காக ஒதுக்கி வைத்திருக்கும் மான்யத்தை நல்ல மேய்ச்சல் தரிசு வைத்திருப்பவர்களுக்குக் கொடுத்து மேய்ச்சல் தரிசுகளை அதிகமாக உண்டாக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கால்நடை கேந்திர நிலையங்களிலே நல்ல காளைக்கன்று ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் சர்க்கார் மான்யமாக 30 மாதங்களுக்கு கொடுப்பதாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதிலே நான் இப்பொழுது சொல்லிக் கொள்ள விரும்புவது எருமைக் கன்றுகளுக்குக்கூட அம்மாதிரி செய்ய வேண்டும். இப்பொழுது பசுங் கன்றுகளுக்குக் கொடுக்கிறார்கள். பால் அதிகம் கொடுக்கக்கூடிய நல்ல ஜாதி எருமைக் கிடாரிக் கன்றுகளுக்கும் அந்த மான்யத்தைக் கொடுக்க முன்வரும்படி இந்த சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை இலாகா அதிகாரிகளைப் பொருத்த வரையில் அவர்களுக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. அவர்கள் படிப்பும் கடினமாக இருக்கிறது. மனிதனுக்கு வைத்தியம் செய்யக்கூடிய டாக்டர் ஐந்து வருஷம் படிக்க வேண்டியிருக்கிறது. அதே போல் கால்நடை வைத்தியம் செய்யக் கூடிய டாக்டர்களும் ஐந்து வருடம் படிக்க வேண்டியிருக்கிறது. மனிதனுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர்களை விட இவர்களுடைய படிப்பு அதிகமாக இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். மனித உடம்பிலே ஆண் பெண் இரு சாரார்கள் பற்றிய வைத்தியங்களை அவர்கள் கற்றுக் கொள்வது எளிதாக இருக்கலாம். ஆனால் கால்நடைகளை எடுத்துக்கொண்டால் ஆடு, மாடு, கோழி மற்றும் பல மிருகங்களினுடைய உடம்பிற்கு ஏற்றவாறு வைத்திய வசதி பண்ணவேண்டிய நிலைமை இருப்பதால் அவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் விவசாய இலாகாவில் உள்ள டெமான்ஸ்ட்ரேட்டர்களுக்கும் அதிகமான சம்பளம் கொடுத்தால் நல்லது. நிறைய உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லும் இந்த நேரத்திலே அவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையிலே அதிகச் சம்பளம் கொடுத்து அவர்களிடத்திலே நிறைய வேலை வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



18th March 1960] [Sri A. Senapathi Gounder]

உரம் உற்பத்தியைப் பற்றியும் இந்தச் சமயத்திலே சொல்ல விரும்புகிறேன். ரசாயன உரம் கொடுத்து சப்ளை செய்ய முடிவதில்லை என்றால் அதிருப்தி ஏற்படுகிறது. அதற்காக மாற்று உரங்கள் தயாரிக்கக்கூடிய வழி செய்ய வேண்டும். லோயர் பவானி, அமராவதி நீர்ப்பாசனப் பிரதேசங்களிலே விவசாயத்திற்கு உரிய காலங்கள் அல்லாத மற்ற காலங்களிலே பசும்தாள் உரம் உற்பத்தி செய்வதற்கு ரிசர்வாயரிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டும். பசுந்தாள் உரத்திற்கு வேண்டிய விதை கொடுத்து குறிப்பிட்ட காலத்தில் விதை விதைக்க தகுந்த சமயத்திலே தண்ணீர் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட சில காலத்தில் கொடுத்தால் போதும். எல்லோரும் பசுந்தாள் உரம் உண்டாக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். அந்த முறையிலே பசுந்தாள் உரம் உற்பத்தி செய்வதோடு நகரங்களிலே இருக்கும் கழிவுப் பொருள்கள் வீணாகக் கூடிய இடத்திலே நகரத்தில் சுற்றுப்பக்கத்திலே ஒவ்வொரு புல் உற்பத்தி செய்யும் பண்ணையை எல்லா நகரங்களிலும் உண்டாக்கி நகரங்களிலுள்ள மாடுகளுக்கு பசும்புல் கிடைக்கும் வாய்ப்பு தந்தால் தீனி கஷ்டத்தை தவிர்க்க முடியும். நல்ல உரமும் தயார் செய்து பக்கத்திலுள்ள விவசாயிகளுக்குக் கொடுக்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

டிராக்டர் விஷயமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். டிராக்டர் எல்லோருக்கும் சர்க்கார் மூலமாக சப்ளை செய்தார்கள். ஆனால் இப்பொழுது டிராக்டர் சாமான்கள் இறக்குமதி இல்லை என்ற காரணத்தினால் டிராக்டர்களுக்கு வேண்டிய உருப்புகள் கிடைப்பதில்லை. அதனால் வாங்கிய டிராக்டர்கள் சும்மா இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இறக்குமதி லைசென்ஸை நீங்களே வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த முறையிலே பார்க்கும்போது சர்க்கார் கொடுத்த பணமும் வீணாகிறது. ஆகவே சப்ளை செய்யப்பட்ட டிராக்டர்களுக்கு வேண்டிய உருப்புகளையாவது சில கம்பெனிகள் மூலமாக தருவித்து உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடு வளர்ச்சியிலும் அதே கவனம் செலுத்த வேண்டும். அது விவசாயத்திற்கு உறுதுணையாக இருப்பவை. விவசாயத்திற்கு வரும்படி தரக் கூடியவை. நல்ல ரகமான ஆடுகளை உற்பத்தி செய்ய முயற்சி செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு மான்யம் கொடுத்து ஆடு வளர்ப்பிலே அவர்களுக்கு ஊக்கத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்துவதைவிட விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்கக்கூடிய கூட்டுறவு ஸ்தாபனங்களை எல்லா இடங்களிலும் நிறுவி அவர்களுக்கு வேண்டிய விதைகள், இயந்திரங்கள் முதலியவை கொடுக்கக்கூடிய ஒரு அமைப்பை உண்டாக்குவது நல்லது. விவசாயப் பண்ணை நடக்கும் என்பது பற்றி இனிமேல் ஆராய்ச்சிக்குரிய விஷயமாதலால் இப்பொழுது கூட்டுறவு ஸ்தாபனங்களை நிறுவி ஆங்காங்கு உரம், விதை, இயந்திர சாதனங்கள் போன்று பொதுப்படையாக உபயோகப் படக் கூடிய சாமான்களை மலிவான விலைக்கு அந்த ஸ்தாபனங்கள் மூலமாக கொடுத்து திட்டத்தை நடத்தலாம். பிறகு வேண்டுமானால் ஆங்காங்கு நடத்தும் கூட்டுறவு பண்ணைகளினுடைய நிலைமையைக் கண்டு மற்றவர்களும் ஏற்றுக்கொண்டு நடத்துக்கூடிய அளவிற்கு வந்தால் அதை நடத்தலாம். என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI S. T. SUBBAYYA GOUNDER** : தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த மான்யத்தின் மீது நான் சில யோசனைகள் கூற முன் வந்திருக்கிறேன். இந்தச் சபையின் முன்பு பேசிய எல்லோரும், உணவு உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டுமென்பதற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நமது மாகாணத்தில், அநேக நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு, வரண்ட பிரதேசங்களுக்கு, தாலூகா வாரியாக சில கிராமங்களுக்கு நல்ல நீர்ப்பாசன

வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அதை யாரும் மறுப்பதற்கில்லை. இருந்தாலும் விவசாயிகளுக்கு, உற்பத்தியைப் பெருக்குவதில் சில இடைஞ்சல்கள் இருக்கின்றன. அந்த இடைஞ்சல்கள் எந்த விதத்தில் இருக்கின்றன என்பதை நான் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது புதிய நீர்ப்பசானத் திட்டத்தின் கீழ் வந்திருப்பது, பவானிசாகர், என் தாலூகாவாகிய உடுமலைப்பேட்டை, அடுத்த தாலூகா தாராபுரம், இவைகளாகும். அமராவதி ஆயக்கட்டில் 20,000 ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த 20,000 ஏக்கர் பாயக் கூடிய நிலங்களில் சாதாரணமாக ஆறு மாதங்களுக்குத்தான் ஆயக் கட்டிலிருந்து தண்ணீர் விடுகிறார்கள். முன்பெல்லாம் 20,000 ஏக்கரில் குறைந்தது 2,000 கிணறுகள் இருந்து கொண்டிருந்தது. இப்பொழுது மூன்று வருட காலமாக இந்த கிணறுகளின் துளைகள், குளங்களின் துளைகள் எல்லாம் சுற்றிலும் ஊற்று அதிகமாவதால், துளைகள் எல்லாம் விழுந்து விட்டதால் இப்பொழுது ஆறு மாதம் ஒரு போகம் எடுத்து விட்டால் மேலும் ஒரு போகம் விளைவிக்க விவசாயிகள் வழியில்லாமல் இருக்கிறார்கள். துளைகள் இருந்தால் கவலை போட்டு இறைத்து விளைபொருள்களை அதிகம் விளைவிப்பார்கள். அப்படியிருக்கும்போது இப்பொழுது வாய்க்கால் பிரதேசங்களில் முக்கியமாக விவசாயிகளுக்கு கோட்டார் பம்ப் செட்ஸ் அதிகம் தேவைப்படுகிறது. அப்படி பம்ப் செட்ஸ் வைத்தால் ஒரு போகம் வாய்க்கால் தண்ணீரினால் விளைவித்த பிறகு, பின்னர் சோளம், ராகி போன்றவைகளை உற்பத்தி செய்யமுடியும். பம்ப் செட்ஸ் வேண்டுமென்று கேட்டால் வாய்க்காலிலிருந்து ஒரு தூரத்தின் அளவிற்குத்தான் கிணற்றுக்கு கொடுக்க முடியும். அது கூட உடனடியாக கொடுக்கப்படாமல் விவசாயிகள் பல இடஞ்சல்களுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், எலெக்ட்ரிக் டிபார்ட்மெண்ட், என்ஜீனியரிங் டிபார்ட்மெண்ட், விவசாய டிபார்ட்மெண்ட் மூன்றும் சேர்ந்து எந்தப் பிரதேசத்தில் விவசாயிகளுக்கு பம்ப் செட்ஸ் தேவைப்படுகிறதோ அங்கு பம்ப் செட்ஸ் கொடுப்பதற்கு இருக்கும் தடைகளை நீக்கி அவர்களுக்கு பம்ப் செட்ஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதின் காரணமாக கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்க வசதியேற்படுவதோடு அதைக் கொண்டு மேலும் ஒரு போகம் விளைவிக்க முடியும் என்பதை நான் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என் தாலூகாவைப் பொறுத்தமட்டில் இனாம் கிராமம் என்று எழெட்டு கிராமங்கள் சேர்ந்து இருக்கிறது. மயிலாபுரம், குளத்தூர், ஆத்தூர், குப்பம்பாளையம், மடத்தூர் இப்படியாக ஏழு கிராமங்கள் சேர்ந்து சக்கரராம நல்லூர் என்ற இனாம் கிராமம் இருக்கிறது. அங்கு நான்கு குளங்கள் இருக்கின்றன. அவைகள் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு குமண ராஜா காலத்தில் கட்டியதாகச் சொல்லுகிறார்கள். அவைகள் எல்லாம் தூர்ந்து போய் தண்ணீர் தங்குவதற்குள்ள நிலையில் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அதன் பாய்ச்சல் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் எல்லோரும் புஞ்சை வெள்ளாமை செய்துகொண்டு வருகிறார்கள். அது ஒரு இனாம் கிராமம் ஆதலால் சர்க்காரிலிருந்து விவசாயிகளுக்கு கொடுக்கக்கூடிய மான்யங்கள் போன்றவைகளை அங்குள்ள விவசாய மக்கள் வாங்குவதற்கு மிகவும் தொந்தரவாயிருக்கிறது. அந்தத் தடை நீக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவை, இன்னும் சர்வேயாகவில்லை. அதற்கு இன்னும் கொஞ்ச நாட்கள் ஆகும். அதற்குப் பின்னால்தான் கவனிக்கப்படுமென்று சொல்லுகிறார்கள். ஆகவே அவர்களுக்குள்ள தடைகளை, சர்க்கார் கொடுக்கும் மான்யங்கள், லோன்கள் முதலியவைகள் அவர்களுக்கு கிடைப்பதில் இருக்கும் தடைகளை நீக்கி அவர்களுக்கும் மற்ற விவசாயிகளுக்கு கிடைப்பதைப் போன்று கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாய்க்கால் பாசனத்தில் இருக்கக்கூடிய கிணறுகளுக்கு அவசரமாக பம்ப் செட்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இன்று அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை என்று ஒன்று கட்ட முடிவாகிவிட்டது. அது அநேகமாக ஜூன், ஜூலையில் ஆரம்பமாகும் போல் இருக்கிறது. அதற்கு சர்க்கார் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து; இன்று அது ஆரம்பிக்கும் ,தருணத்தில் இருக்கிறது. ஒரு நாளைக்கு 1,000 டன் கரும்பு வேண்டுமென்று சொல்லுகிறார்கள், அந்த ஆலைக்கு. ஆறு மாதத் தண்ணீரில் அவ்வளவு கரும்பு விளைவிக்க முடியாது. பம்ப் செட்ஸ் மூலம் தண்ணீர் ஓட்டுவது போல் வேறு விதத்தில் ஓட்டமுடியாது. ஆகவே உடனடியாக தாராபுரம், உடுமலைப்பேட்டை அமராவதிப் பாசனத்திலுள்ள கிணறுகள் எல்லாவற்றிற்கும் உடனடியாக இருக்கும் தடைகளை நீக்கி பம்ப் செட்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியில்லை என்று சொன்னால் இவ்வளவு பணம் போட்டு ஆலை திறப்பினும், நாலைந்து வருடங்களாவது ஆகும், அதற்கு வேண்டிய கரும்பு சப்ளை செய்வதற்கு. அது வரை மில்லை ஓட்டாமல் இருந்தால் சர்க்காருக்கும் பணம் நஷ்டமாகும். அதோடு அதனால் அங்குள்ள குடியானவர்களுக்கும் பிரயோஜனம் இல்லாமல் போகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அதை உடனடியாகப் பார்த்து வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இப்பொழுது சொன்ன இனாம் கிராமத்திலுள்ள குளங்களும், உடுமலைப் பேட்டை பக்கத்தில் ஏழு குளங்களும் எனது தாலூகாவில் இன்னும் வேறு சில குளங்களும் தூர்ந்து போயிருக்கின்றன. அவைகளை எல்லாம் சிறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கொண்டுவந்து சரிப்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்தால் இப்பொழுது அங்கு சாகுபடிச் செய்வதைப் போன்று இருமடங்கு சாகுபடி செய்ய முடியும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடைகளைப் பொறுத்தமட்டில், என்னை விட ரொம்பவும் அனுபவமும், கால்நடை வளர்க்கிறவர்களும் அதைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துவிட்டார்கள். இந்த கீ வில்லேஜ் சென்டேர்ஸ் ஏற்படுத்துவதில் தொடர்ச்சியாக, ஒரு கிராமம் விட்டு ஒரு கிராமம் என்று இல்லாமல் ஒரு பகுதியில் ஏற்படுத்தினால் அது வரிசையாக ஏற்படுத்தப்பட்டால்தான் கால்நடைகளை அபிவிருத்தி செய்வது சுலபமாக இருக்கும். தாராபுரம் தாலூகாவில் கொஞ்சமும், உடுமலைப்பேட்டையில் கொஞ்சமும், இடையில் இரண்டு கிராமங்களை சும்மா விடுவது என்றிருந்தால் அதனால் பல இடைஞ்சல்கள் விளைகின்றன. பொள்ளாச்சி தாலூகாவில் கோட்டூரில் இருக்கிறது, வாளவாடி பிர்க்காவில் இருக்கிறது. தாராபுரத்தில் இருக்கிறது. மடத்திக் குளம், குடிமங்கலம் பிர்க்காவில் இருந்தால், தொடர்ச்சியாக இவைகள் இருந்தால்தான் மக்களுக்கு சௌகர்யமாக இருக்க முடியும். எனக்கு முன் பேசிய தாராபுரம் மெம்பர் பேசியதுபோல் அவைகள் ஒவ்வொரு இடத்திற்கும் இருந்தால்தான் நல்ல கன்றுகளை உற்பத்தி செய்து கால்நடைச் செல்வத்தைப் பெருக்க முடியும்.

அடுத்தபடியாக உரம் வினியோகம்பற்றி ஒரு வார்த்தை. உரம் வினியோகிப்பதற்கு தனிப்பட்டவர்களுக்கு கொடுப்பதால்தான் ப்ளாக் மார்க்கெட் போன்றவை நடக்கிறது. அதனால்தான் விவசாயிகளுக்கு உரம் சரியானபடி கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. எந்தெந்தப் பகுதியில், எந்தச் சமயத்தில் எந்த வெள்ளாமைக்கு உரம் அவசியப்படுகிறதோ அந்தச் சமயத்தில் கொடுப்பதற்கு சர்க்காரே உரத்தை பந்தோபஸ்து செய்து வைத்து சர்க்காரே கொடுத்தால் நன்றாக இருக்கும். அப்படியில்லாது கோட்டா வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் போட வேண்டிய டையமாயிருக்கிறது. அந்தச் சமயத்தில் குடியானவர்களுக்கு அது கிடைக்காமல் இருந்தால் என்ன பிரயோஜனம் ? எங்கு இந்த உரம் அந்த சமயத்தில் தேவையில்லையோ அங்கிருந்து அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே இதையெல்லாம் நன்கு பரிசீலனை செய்து பார்த்து, உரத்தை ஸ்டாக் செய்து வைத்து குடியானவர்களுக்கு

எப்போது தேவைப்படுகிறதோ அப்பொழுது கொடுத்து வந்தால் உணவு உற்பத்தி நல்ல முறையில் விருத்தியடைவதோடு இப்பொழுதுள்ளதை விட இரண்டு பங்கு அதிகமாக உற்பத்தியை பெருக்க முடியுமென்று கூறிக் கொண்டு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **SRIMATHI T. N. ANANDANAYAKI** : கனம் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் விவசாய மான்யத்தின் மீது வெட்டுப்பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த வெட்டுப் பிரேரணைகள் எல்லாம் அர்த்தமற்றவை என்பதை சொல்வதற்காக ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். விவசாயத் துறையில் நம்முடைய மாகாணம் மிகவும் சிறந்த அளவில் முன்னேறியிருக்கிறது என்பதற்கு பல சான்றுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. போன வருடம் வரை நம் சாதனை 814 ராத்தல்தான் விளைவிக்க முடியும் என்று இருந்தது. ஆனால் இப்போதுள்ள கணக்கின்படி நம் மாகாணத்தில் 1,344 ராத்தல் உற்பத்தி செய்ய முடியும் என்பதை நிரூபித்திருக்கிறோம். இதற்காக நாம் நம் பாராட்டுதலை தெரிவிப்பதுதான் அழகான எதிர்க் கட்சிகளின் பொறுப்பு. அது மட்டுமல்ல, இவ்விதம் உற்பத்தி செய்திருக்கின்றவர்களைத் தட்டிக்கொடுத்து இன்னும் ஜப்பானைப்போல் கூடுதல் விளைச்சலை ஏற்படுத்தவேண்டும் என்று அவர்களை ஊக்குவிக்க வேண்டுமே ஒழிய இருப்பதையும் குறைக்கின்ற அளவில் வெட்டுப்பிரேரணை கொடுப்பது திருப்தி அளிக்கக்கூடியதாய் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். வரவு செலவுத் திட்டத்திற்கு வெட்டுப்பிரேரணை கொடுப்பது என்பது வேறு விஷயம். அதன் பேரில் பல குறைகளையும் பேச வேண்டியது தான். ஆனால் இம்மாதிரிப்பட்ட மான்யங்களுக்கு வெட்டுப் பிரேரணை கொடுத்து விட்டு இதில் தப்பு இருக்கிறது, நிர்வாகத்தில் ஊழல் இருக்கிறது, என்றெல்லாம் பேசுவது சரியல்ல, முறையல்ல, நியாயமற்றது என்று சொல்வது தான் ஆளும் கட்சியில் இருக்கின்ற எங்களைப் போன்ற அங்கத்தினர்களின் கடமையாகும்.

விவசாயத் துறையில் எந்தெந்த முறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் மிகவும் கவனத்தோடு இதில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் சமீபத்தில் டெல்லியில் நடந்த பொருட்காட்சியில் சென்னை மாகாணத்திற்கு பரிசு கிடைத்திருக்க முடியாது. அகில உலகிலுள்ள நாடுகள் எல்லாம் இதில் கலந்திருந்தும் நம்முடைய ஸ்டால்களைப் பார்த்து பரிசு கொடுத்திருக்கிறார்கள். இதன் மூலம் நம்முடைய நுண்பொருள் திட்டங்களை எல்லாம் வேறு நாட்டிலுள்ளவர்கள் எல்லாம் நம்மைப்பற்றி பாராட்டும்பொழுது, நாமே இவர்களுக்கு பாராட்டு தெரிவிக்காவிட்டால் அது நியாயமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த முறையில் மற்றவர்களுடைய பாராட்டுதலை நம் விவசாயத்துறை பெற்றிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. விவசாயத் துறையிலுள்ள திட்டங்கள்தான் இன்றைக்கு மக்களுக்கு உயிர்நாடியாக இருக்கின்றன. எங்களைப் போன்ற நகரவாசிகள் இதைப் பற்றி ஏன் இவ்வளவு அக்கறை கொள்ளவேண்டும் என்று சிலர் நினைக்கலாம். நகரத்தில் விவசாயம் இல்லையென்றாலும் விவசாயத்தின் முன்னேற்றத்தினால் ஏற்படுகின்றவைகளை நகரவாசிகள்தான் அனுபவிக்க வேண்டும். விளைச்சல் அதிகமாக இருந்தால் எங்களுக்கு அதிகமான அளவில் பொருள்கள் கிடைக்கும். குறைந்த விலையில் அரிசி கிடைக்கும். இப்போது கிடைத்துக்கொண்டிருப்பதைவிட கூடுதலான அளவில் கிடைக்கும். ஆகவே நகரத்திலுள்ள பிரதிநிதிகள் மற்ற மாவட்டத்திலுள்ள பிரதிநிதிகளைவிட மிகவும் அக்கறையுள்ளவர்கள் என்பதை சொல்லிக்கொள்கிறேன். ஆகவே விவசாயத்தை வளர்ப்பதற்கு, அதை முன்னேற்றுவதற்கு நகரவாசிகளைப் பொறுத்த அளவில் இவர்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



காரணங்கள் இருந்த போதிலும் கூட, இப்போது நமக்கு இருக்கின்ற உர வசதிகளைக் கொண்டு, மேலும் உற்பத்தியை பெருக்குவதற்காக என்னென்ன வழிகளை கடைப்பிடிக்கலாம் என்பதைப் பற்றி அவசரத்தோடு கவனித்தால் இந்த உணவுப் பிரச்னையை மக்களுடைய திருப்திக்கேற்ற அளவில் சமாளிக்க முடியும் என்று நம்புகிறேன். அமோனியம் சல்பேட் கிடைப்பதில் ஏற்பட்ட கஷ்டத்தினால்தான் உற்பத்தி குறைந்துவிட்டது என்று சொல்லப்பட்டது. அதோடு இவ்விதம் வெளிநாட்டிலிருந்து உரம் கிடைக்காதது தான் காரணம் என்று சொல்வதை மட்டும் நாம் எண்ணிக் கொண்டு இருந்து விடக்கூடாது. வேறு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்பொழுதுகூட டெல்டா பிரதேசத்தில் இருக்கும் அதாவது "ஸலைன்" என்னும் மண்ணை அரித்துக்கொண்டு போய் விடுகிறது. இதை தடுப்பதற்கு "ஆண்டி ஸலைன்" என்பதைப் போடலாம் என்று சொன்னார்கள். இவ்விதம் "இன்டிஜினீஸ் பெர்ட்டிலைஸர்ஸ்ஸை" எவ்விதம் உபயோகிப்பது என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டும். இவ்விதம் பல வித ஆராய்ச்சித் துறையில் இறங்கி நம் நாட்டிலுள்ள உரங்களை எவ்விதமெல்லாம் உபயோகிப்பது, என்றைக்குமே வெளிநாட்டை எதிர் பார்த்துக் கொண்டு இருக்காமல் நம் தேவையை நாமே பூர்த்தி செய்யக்கூடிய அளவில் நாம் ஆராய்ச்சியை நடத்த வேண்டும். இவ்விதம் ஆராய்ச்சி செய்யக்கூடியவர்களின் ஊக்கத்தை—அறிவை—நாம் தட்டி கொடுக்கத் தயாராய் இருக்க வேண்டும். இதற்காக அமைச்சர் அவர்கள் கொஞ்சம் பணம் செலவு செய்தாலும் பரவாயில்லை. விஞ்ஞான முறையில் எவ்விதம் நாம் முன்னேறுவது, எவ்விதம் நமது உற்பத்தியை பெருக்குவது என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு முன் வரவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன், இந்த சபையின் மூலமாக. அதோடு, பசுந்தழைகளை உபயோகிப்பதாலும் அதிகமான அளவில் விவசாயத்தைப் பெருக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். அதற்கான ஆதரவுகளை எல்லாம் அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும். இப்போது திருவிதாங்கூர்—கொச்சியில், அதாவது கேரளாவில், புறம்போக்கு நிலங்களை எல்லாம் நீண்டகாலத்திற்கு விவசாயிகளுக்கு கொடுத்து அதில் மரங்களை உற்பத்தி செய்யச் சொல்லி, அதிலுள்ள தழைகளை அவர்களே உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் சலுகை காட்டுவதாகத் தெரிகிறது. அத்தகைய சலுகைகளை நம்முடைய மாகாணத்திலும் கொடுக்கின்ற முறையில் அரசாங்க புறம்போக்குகளை கொடுத்து அதன் மூலமாக மரங்களை அதிகமாக உற்பத்தி செய்து, அதிலிருந்து பசுந்தழைகளை அதிகமாக உபயோகித்துக்கொள்வதற்கு வேண்டிய வசதி செய்து கொடுத்தால் மிகவும் உதவியாய் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கழிவு உரம், மல உரம் போன்றவைகளைப் பற்றியும் இங்கு பேசப்பட்டது. இதற்கு வசதியாக சீக்கிரமாகவே எல்லா இடங்களிலும் பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்பட இருக்கிறது. அதற்குள்ள பொறுப்பும் அதிகமாக கொடுக்கப்படுகின்றன. பணமும் அதிகமாகக் கொடுக்கப்படுகின்றன. ஆகவே குறுகிய காலத்திற்குள்ளாகவே— ஓராண்டு, இரண்டாண்டு காலத்திற்குள்ளாகவே—இந்த முறையில் உரத்தை தயார் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும், அதுவும் தக்க முறையில் தயார் செய்ய வேண்டும். முதலாவது எருக்களை போட வேண்டும், அதன் மீது தண்ணீர் விட்டு, பின்னால் அழுத்தம் கொடுத்து பின்னால் எருக்கள் போடவேண்டும். இவ்விதமெல்லாம் தக்க முறையில் தயாரித்தால் நல்ல உரமாக விளங்கும் என்று ஆராய்ச்சி செய்த நிபுணர்கள் எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். இந்த விதத்தில் ஸயன்டிபிக் மெதட்டில் விளைச்சலை அதிகரிக்கலாம். நம்மால் இனிமேல் அகல உழ முடியாவிட்டாலும், ஆழமாக உழுவதற்கு நமக்கு வசதியிருக்கிறது. அந்த முறைகளை எல்லாம் நாம் பின்பற்ற வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில் கூட, மண் பரிசோதனை செய்வதற்காக ஸாயில் ரிசர்ச் இன்ஸ்டியூட் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உடனடி

[Srimathi T. N. Anandanayaki] [18th March 1960

யாக் ஏற்படுத்திக் கொடுத்தால், நம் நாட்டிலுள்ள மண்கள் எல்லாம் எவ்விதம் இருக்கின்றன என்று ஆராய்ந்து பார்ப்பதற்கும், இவற்றிற்கு என்னென்ன உரங்கள் போடவேண்டும் என்பதை அறிந்துகொள்வதற்கும் அதன் மூலமாக விளைச்சலை அதிகமாக சாதித்துக்கொள்வதற்கும் மிகச் சிறந்ததாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக கொஞ்சம் பணம் ஒதுக்க வேண்டும் என்று சொன்னாலும் அதை இந்த சபை ஏற்றுக்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தஞ்சாவூரில் அமெரிக்காவிலுள்ள "போர்ட் பௌண்டேஷன்" மூலம் "பாக்கேஜ் டீல்" முறையை அனுஷ்டிக்கப்போகிறார்கள். இதன் மூலமாக தஞ்சையிலுள்ள நஞ்சை எல்லாம் செழிப்பதற்கு வழி ஏற்படும். இதைப் பார்த்து, மற்ற மாவட்டங்கள் எல்லாம் நம் மாவட்டத்திற்கும் அவர்கள் வந்து நடத்தட்டும் என்று இருந்து விடாமல், அவர்களாகவே இவர்களது முறைகளை பின்பற்றி வழி வகுத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் நமது உற்பத்தியைப் பெருக்கிக்கொள்வதற்கு வழியேற்படும். அதோடு ஜப்பானில்தான் இன்றைக்கு அதிகமான அளவில் விவசாயம் செய்து நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். அவர்கள் 2,650 ராத்தல் வரை பலன் எடுத்திருக்கிறார்கள். அங்கு கூட்டுறவு பண்ணை மூலம், அங்குள்ள விவசாயிகளுக்கு எல்லாம் வேண்டிய வசதிகளை செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லாமே கூட்டுறவுப் பண்ணை மூலம் தான் நடத்தப்பட்டு வருகிறது என்று சொல்ல முடியாது. விவசாயத்திற்காக கடன் வசதி செய்து கொடுக்கிறார்கள். நாற்று நடுவது, பூச்சி மருந்துகள் கொடுப்பது, விளைந்தவுடன் அவர்களது தானியத்தை சேகரித்து வைத்து நல்ல சமயத்தில் அவர்களுடைய தானியங்களை விற்றுக் கொள்வதற்கு வேண்டிய கிடங்கு வசதி, இவைகளை எல்லாம் ஜப்பான் அரசாங்கம் செய்துகொடுத்துக்கொண்டிருக்கிறது. அதனால்தான் ஜப்பான் இன்று சிறப்பான அளவில் உலகத்தில் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது. நம்முடைய மாகாணமும் அந்த முறைகளை எல்லாம் பின்பற்ற வேண்டும். இப்போது விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும் விஷயத்தில் ஏதாவது நஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதை ஈடு செய்ய தயார் என்று தைரியமாக நமது சர்க்கார் அறிவித்து இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது....... (மணியடிக்கப்பட்டது) (குறுக்கீடு). இப்போதுள்ள முறையில் பெரிய நிலச்சுவான்தார்கள் தான் இன்றைக்கு பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். இனிமேல் சிறிய நிலச்சுவான்தார்களும் பயனடைகிற முறையில் பல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்ததாக, நகரத்தைப் பொறுத்த அளவில் இப்போது கொடுப்பதை விட அரிசிக்குப் பதிலாக கோதுமையை இன்னும் கொஞ்சம் அளவுக்கு அதிகமாக வரவழைத்துக் கொடுக்கலாம். இப்போது 60 நயா பைசா என்று விற்கப்படுகிறது. இந்த நகரத்திற்கு 600 டன் வருகின்றன, அதுவும் உடனே செலவாகிவிடுகிறது. பின்னால் கள்ள மார்க்கெட்டில் போய்தான் வாங்கவேண்டும். ஆகவே இன்னும் அதிகமாக 1,500 டன்னோ அல்லது 2,000 டன்னோ வரவழைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதோடு "ஈட் மோர் வீட்" (Eat more wheat Campaign) என்பதை சரியாக கடைப்பிடிக்க முடியும்.

இறுதியாக ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்து விடுகிறேன். மீன் துறை இலாகாவைப் பற்றி குற்றங்கள் கூறப்பட்டன. நிர்வாகத் துறையில் குறைகள் இருந்தால் அதைப் பற்றிக் கூறுவதற்கு கடமை உண்டு. கூற வேண்டியதுதான். ஒரு தனிப்பட்ட ஆபீசரைப் பற்றிச் சொல்லும் போது இந்த மன்றத்தில் பதிலளிக்க நேரடியாக வாய்ப்பு இல்லாத போது அதைப் பற்றிச் சொல்வது சரியல்ல. அதுவும் கனம் அங்கத்தினர்....

**Sri K. ANBAZHAGAN : On a poind of order, Sir,** சட்டமன்றத்திலே பேசும்போது சில கருத்துக்களைத் தெரிவிக்கின்ற நேரத்தில், பேசியதைப் பற்றி அல்லது பேசுகிற முறையைப் பற்றி தவறு என்று சொன்னால்,



18th March 1960] [Sri K. Anbazhagan]

அது சட்டசபைத் தலைவர் கவனக் குறைவாக இருந்தார் என்று குறிப்பிடுவதாகும். அதாவது தவறாகக் குறிப்பிட்டதை சபைத் தலைவர் அனுமதித்தார் என்று சபைத் தலைவரைக் குறிப்பிடுவதாகும். ஆகையால் இப்படிக் குறிப்பிடுவது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தவறு என்ற வார்த்தைக்கும், முறையற்றது என்ற வார்த்தைக்கும் வித்தியாசம் உண்டு.

TEMPORARY CHAIRMAN (SRI K. SATTANATHA KARAYALAR ): சபைத் தலைவர் அனுமதித்திருக்கிறார். அந்த முறையில் அது "ஆர்டர்" தான், **It was in order.**

SRIMATHI T. N. ANANDANAYAKI : "ஆர்டர்" இல்லை என்று சொல்லவில்லை. இப்படி "பர்ஸனல்" ஆகப் பேசுவது சட்டசபைக்கு உகந்ததாகாது என்று தான் நான் சொன்னேன். இதே அங்கத்தினர் இதே மாதிரி இந்த மன்றத்திலே முன்பு போலீஸ் ஐ. ஜி. யைப்பற்றி பேசிய போது சர்க்கார் அதைப் பற்றி விசாரிக்க ஒரு நீதிபதியை நியமித்தார்கள். அப்போது அந்த விசாரணையிலே அங்கத்தினர் நேரிலே சாட்சி சொல்வார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது நேரிலே சாட்சி எதும் சொல்லாமல் வீட்டுக்குள் புகுந்துகொண்டு, ஒளிந்து கொண்டு ஒன்றும் தெரியாது என்று . . .

**SRI K. ANBAZHAGAN : On a point of personal explanation, Sir, the remark is about me.**

TEMPORARY CHAIRMAN (SRI K. SATTANATHA KARAYALAR) : அங்கத்தினர் கடைசியில் பேசலாம். நான் அதற்கு பிறகு அவகாசம் கொடுக்கிறேன், **He can give it at the end.**

SRI M. P. SUBRAMANIAM : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் இந்த சட்டமன்றத்தில் சில குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்லும்போது அவரை வெளியே வந்து சாட்சி சொல்ல வேண்டும் என்று அழைப்பதும், அவர் வரவில்லை என்றால், வீட்டுக்குள் புகுந்துகொண்டார் என்று அந்த அங்கத்தினருடைய உரிமையை பாதிக்கக்கூடிய முறையில் சொல்லலாமா ?

TEMPORARY CHAIRMAN (SRI K. SATTANATHA KARAYALAR): பேசியதில் தவறு இல்லை. பர்ஸனல் எக்ஸ்பிளனேஷன் மூலமாக பதில் சொல்ல அவருக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : மத்திய அரசாங்கத்தில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் சம்பந்தமாக பிரோஸ் காந்தி அவர்கள் சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளை விசாரித்த சாக்ளா கமிஷன் முன்பு அவர் சாட்சி சொல்ல முன் வந்து சொல்லியிருக்கிறார். அப்படிக்கில்லாமல் ஏதாவது சொல்லிவிட்டு, வதந்திகளைக் கிளப்பிவிட்டு, அதன் மூலம் மக்கள் மத்தியில் சந்தேகத்தைக் கிளப்புவது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

*SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, முன்னால் நடந்த ஒரு பிரச்னையை இப்போது கிளப்பி, அதன் மூலமாக எனக்கு அதைப் பற்றி விளக்கம் தருவதற்கு ஒரு வாய்ப்பு அளித்த அங்கத்தினருக்கு என் நன்றி. (குறுக்கீடு.) இதற்குநான் விளக்கம் சொல்லியாக வேண்டும். என்னைப் பற்றிக் கூறியிருப்பதால் நான் இதற்கு விளக்கம் தந்தாக வேண்டும். நான் கூறிய குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட திரு. பி. என். ராமசாமி அவர்கள் எனக்கு கடிதம் எழுதி நேரில் அழைத்துப் பேசினார்கள். நான் அவர்களிடம் பேசினேன்.

நான் பேசும்போது " எனது சட்டமன்றப் பேச்சு முழுவதும் குற்றச்சாட்டுகள் நிறைந்திருக்கிற காரணத்தினால், அந்தக் குற்றச்சாட்டுகள் முழுதும் தங்களால் விசாரிக்கப்படுகிறதா " என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அளித்த பதில் " முழுவதும் இல்லை, நான்கு குற்றச்சாட்டுகளைப் பற்றிய குறிப்புகள் தான் என்னிடம் தரப்பட்டிருக்கின்றன " என்றார். " நான் ஆறு, ஏழு குற்றச்சாட்டுகளைச் சாட்டியிருக்கும்போது நான்கை மட்டும் எப்படி விசாரிக்கலாம்." என்று கேட்டேன். " அந்த ஏழு குற்றச்சாட்டுகள் என்ன என்று எனக்குத் தெரியாது, என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள இந்த நான்கைப் பற்றித் தான் நான் விசாரிக்க முடியும் " என்று சொன்னார். " ஜுடிஷியல் என்க்வொயரி நீதிபதி விசாரணை என்ற முறையில் நீதிபதியாக இருந்து விசாரணை செய்யப்போகிறீர்களா அல்லது அரசாங்க அலுவலர் என்ற முறையில் விசாரணை செய்யப்போகிறீர்களா " என்று கேட்டேன். " அரசாங்க அலுவலராகத்தான் விசாரணை செய்யப்போகிறேன், நீதிபதி முறையில் அல்ல " என்று சொன்னார். " பப்ளிக் என்க்வொயரிக்கு உள்ள சில உரிமைகளும் பாதுகாப்பும் இந்த விசாரணையில் தருவீர்களா " என்று கேட்டேன். " இது பப்ளிக் என்க்வொயரி இல்லை " என்று சொன்னார்கள். என் குற்றச்சாட்டுகள் சான்றுக்கு " அரசாங்க ரிக்கார்டுகளை நான் பார்வையிட்டு எடுத்துக் கூற அனுமதிப்பீர்களா " என்று கேட்டேன். " ரெக்கார்டுகளை என் வரையில் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் உங்களிடம் காண்பிக்க முடியாது " என்று சொன்னார்கள். அதன் பிறகு உங்கள் விசாரணை முறையில் எனக்கு நம்பிக்கை இல்லை, இதை ஏற்படுத்திய ஆட்சி மீதும் நம்பிக்கை இல்லை என்று நான் அவருக்கு ஒரு மறுப்புக் கடிதம் எழுதியிருக்கிறேன். அதை அவரும் பெற்றிருக்கிறார். இதிலிருந்து நான் ஒளிந்துகொண்டேனா அல்லது அமைச்சரவை இந்த விசாரணை மூலம் ஒளிந்துகொண்டதா என்பதை இந்தச் சபையே தீர்மானித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*SRI T. S. RAMASWAMI : கனம் தலைவர் அவர்களே, விவசாயத் துறையும் கால்நடைத் துறையும் மிகவும் இன்றியமையாத துறைகளாகும். இந்த இரண்டு இலாகாவிலும் இந்த பட்ஜெட்டிலே ஒரு முக்கிய விஷயத்தைப் பார்க்கிறோம். நம் அரசாங்கமும் சரி, பொது மக்களும் சரி, விவசாயத்தையும் அதோடு ஒட்டிய கால்நடை வளத்தையும் அதிகரிக்க எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இன்றைய தினம் இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறவேண்டுமென்றால் அடிப்படையாக இருக்கக் கூடிய நம்முடைய விவசாயம் ஓங்கி வளர்ந்தாக வேண்டும். அதற்காக நாம் முழு கவனம் செலுத்தி வருகிறோம். இருந்தாலும் உணவுப் பற்றாக்குறை ஒரு பெரிய பிரச்னையாக இருந்துகொண்டிருக்கிறது. அன்றைய தினம் யுத்த காலத்தில் இருந்த பிரச்னை அளவுக்கு இல்லை என்றாலும்கூட இப்போதும் ஒரு பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது. நிச்சயமாக ஐந்தாண்டுத் திட்டத்தில் மிகவும் உன்னிப்பாக இந்தச் சபையும், அரசாங்கமும், பொது மக்களும், எல்லோரும் கவனிக்க வேண்டிய பிரச்னையாகும். இந்த ஆண்டு பட்ஜெட்டில் கொஞ்சம் நம்பிக்கையூட்டக்கூடிய அளவுக்கு இருக்கலாம் என்று எதிர்பார்த்தேன். அப்படி எதிர்பார்க்கும்போது, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, நமது இலக்கு 9 லட்சம் டன் என்று இருக்கும்போது, நாம் அடைந்திருப்பது 6 லட்சம் டன் கூட இல்லை என்று சொல்லும்படி இருக்கிறது. இதில் தவறு எங்கே இருக்கிறது ? இதில் எங்கே கோளாறு இருக்கிறது என்று பார்த்தாகவேண்டும். சென்ற ஆண்டில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள் "இலக்கை எட்ட முடியாததற்கு முக்கிய காரணம் உரம் இல்லாதது" என்று. உரம் விஷயத்தில் சென்ற ஆண்டில் உறுதி கூறினார்கள். ஏறக்குறைய $2\frac{1}{2}$ லட்சம் டன் கொடுக்கப்போவதாகக் கூறினார்கள். ஆனால் 1 லட்சத்துச் சொச்சம் டன் தான் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டும் $2\frac{1}{2}$ லட்சம் டன் கிடைக்கலாம் என்று நம்பிக்கையூட்டியிருக்கிறார்கள். அதிலே எவ்வளவு வருமோ தெரியாது. விநியோகம் துர்விநியோகமானாலும், திருட்டுத் தனமாக



விற்றாலும், உரத்தை வேறு ஒன்றும் செய்ய முடியாது, நிலத்தில் தான் போடவேண்டும். இருந்தாலும்கூட இனிமேல் நல்ல முறையில், கூட்டுறவு முறையில் விநியோகம் செய்வார்கள் என்பது ஒரு நல்ல செய்தி. அதற்காக நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நம் விளைச்சலை அதிகரிக்க வேண்டுமானால் நாம் எல்லோரும் அதிக கவனம் செலுத்தவேண்டும். இப்போது தஞ்சையில் " பாக்கேஜ் டீல் " வந்து கொண்டிருக்கிறது. அதைக் கொண்டு தஞ்சை ஜில்லாவிலே விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அதே நேரத்தில் விவசாய இலாகாவைப் பொறுத்த வரையில் சட்ட சபை எஸ்டிமேட்ஸ் கமிட்டி பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது. ஸீட் பார்ம்ஸைப் பொறுத்த வரையில் சரியான பலன் தரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணம்? சாதாரண ஒரு விவசாயி ஒரு ஏக்கருக்கு 5,000 பவுண்டு நெல் விளைவிக்கிறான். 2,000 பவுண்டு விளையக்கூடிய இடத்தில் 5,000 பவுண்டு விளைவிப்பது சுலபம். எரு முதலியவற்றை உபயோகப்படுத்தி நல்ல முறையில் செய்தால் சுலபமாகச் செய்து விடலாம். அப்படி இருக்கும்போது விதைப் பண்ணைகளில் ஏன் செய்ய முடியவில்லை. உதாரணமாக கன்னியாகுமரியில் ஒரு விதைப் பண்ணையில் குறைந்த அளவு விளைவித்திருக்கிறார்கள். விதைப் பண்ணைகளில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் 7,000 அல்லது 8,000 பவுண்டு விளைவிக்க முடியும். அதை ஏன் செய்யவில்லை என்றால், அவ்வளவு தூரம் கவனம் செலுத்தவில்லை என்பதுதான் பொருள். இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் நம்முடைய ராஜ்யத்தில் அதிக அளவு விளைவித்ததற்காக ரத்தினசாமி நாடார் என்பவருக்குப் பரிசு கொடுத்தார்கள். அமைச்சரே கொடுத்தார். அப்போது மிகவும் பெருமைப்பட்டார்கள். ஒரு தனி நபர், சாதாரண விவசாயி, 8,000 பவுண்டு விளைவிக்கக்கூடுமானால், ஏன் அரசாங்கம், படித்தவர்கள் எல்லாம் இருந்தும், தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் எல்லாம் இருந்தும், எல்லா வசதிகளையும் பெற்றவர்களெல்லாம் இருந்தும், செய்ய முடியவில்லை என்று அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். சராசரியாக விதைப் பண்ணைகளில் ஏக்கர் ஒன்றுக்கு என்ன விளைச்சல் இருக்கிறது என்று சொல்லட்டும். இவ்வளவு வசதி இருந்தும் செய்ய முடியவில்லையென்றால் தலை குனிய வேண்டியிருக்கிறது. நவீன முறைகளைக் கையாளுவதாகச் சொல்லுகிறார்கள், ஜப்பானிய முறை, பிறகு சைனு முறை என்று சொல்லுகிறார்கள். அப்படியெல்லாம் செய்தும் உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை. சராசரி அளவு கூட இல்லையென்றால் அது வருந்தக்கூடிய விஷயம். சாதாரண ஒரு விவசாயி ஒரு ஏக்கருக்கு 10 மூட்டை அதிகரிக்கிறான். அவன் பி. எஸ்ஸி., எம். எஸ்ஸி. படித்தவனும் அல்ல. சாதாரணமாகவே 10-ல் இருந்து 15 மூட்டைகள் வரையில் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம். விதைப் பண்ணைகள் அரசாங்க பண்ணைகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட அரசாங்க விதைப் பண்ணைகளை அந்த வட்டார விவசாயிகள் அங்கு சென்று பார்க்கும்போது அவர்கள் எள்ளி நகையாடத்தக்கவாறு இயங்கக்கூடாது. நாங்கள் விதைப் பண்ணைகளைப் பார்த்தோம். அங்கிருந்தவர்கள், இதற்கு முன்பு 1,200 ராத்தல் விளைந்தது, இப்போது அது 2,100 ராத்தலாக உயர்ந்திருக்கிறது என்று கூறினார்கள். அப்படி இருக்கக் கூடாது. அங்குள்ள மக்கள் அந்தப் பண்ணைகளுக்குச் செல்லும்போது, 8,000 டன் 10,000 டன் விளைந்திருக்கிறது என்று அங்குள்ளவர்கள் சொல்லக்கூடியவாறு அந்தப் பண்ணைகள் இயங்க வேண்டும். அந்தப் பண்ணைகள் சரியான மாதிரிப் பண்ணைகளாக இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் பயனில்லை. இந்தப் பண்ணைகள் விஷயத்தில் கண்காணிப்புச் சரியாக இல்லை. இந்தப் பண்ணைகளின் மூலம் விளைச்சல் பெருகினால்தான் இவைகளில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு ப்ரொமோஷன் கொடுக்கப்படும் என்ற நிலை இருந்தால் அந்த உத்தியோகஸ்தர்கள் அக்கறையுடன் நன்றாகப் பணியாற்றுவார்கள், நல்ல கண்காணிப்பு இருக்கும். நாங்கள் தென்னாற்காட்டுக்குச் சென்று பார்த்தபோது அங்கே இப்பண்ணையில் ஒரு பி. எஸ்ஸி. படித்தவர், ஒரு ராக்ராஜுவேட், அதிகாரியாக இருந்தார். அவருக்கு தகுந்த சிப்பந்திகள் இல்லை. அவரிடம் மாடுகள் இல்லை. பண்ணைகள் இந்த நிலைமையில்

[Sri T. S. Ramaswami] [18th March 1960

இருந்தால் எவ்வாறு உற்பத்தியைப் பெருக்க முடியும் ? அந்தப் பண்ணையில் உள்ளவர்கள் எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்கிறார்களோ அதற்குத் தகுந்தபடிதான் ப்ரோமோஷன் என்று இருந்தால் அவர்கள் நிச்சயம் நன்றாக வேலை செய்வார்கள் என்று தாழ்மையாகக் கூற ஆசைப்படுகிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். நமது ராஜ்ய அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்குவதற்குத் திட்டம் போடுகிறோம். கன்னியாகுமரியில் அழகான ரப்பர் தோட்டங்களை 30,000 எக்கருக்கு மேல் அமைக்கலாம். காட்டு இலாகாவினர் 100 எக்கருக்கோ 300 எக்கருக்கோ ரப்பர் தோட்டங்களை அமைத்தால் என்ன பலன் ஏற்படும் ? கன்னியாகுமரியில் 30,000 எக்கரில் விவசாய இலாகாவே ரப்பர் பயிரிடலாம். மேலும், மத்திய சர்க்கார் இதற்கு எக்கர் ஒன்றுக்கு 600, 700 ரூபாய் வீதம் மானியம் கொடுக்கிறார்கள். அரசாங்கத்தார் அந்த மானியத்தையும் பெற்று அங்கே 30,000 எக்கருக்கு ரப்பர் பயிரிட்டால் நல்ல பலன் ஏற்படும். எக்கர் ஒன்றுக்கு நான்கு வருஷங்களில் 800 ரூபாய் வருமானம் வரும். எனவே 30,000 எக்கருக்கு சுமார் 2½ கோடி ரூபாய் வருமானம் வரும். முத்துக்குளியில் இதற்கு 10,000 எக்கர்கள் இருக்கின்றன. அவைகளில் தேயிலைத் தோட்டங்கள் போட்டு அபிவிருத்தி செய்யலாம்.

உரத்தைப். பொறுத்தவரையில், நமக்கு 2½ லட்சம் டன் ரசாயன உரம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். கம்போஸ்ட் மான்யூரைப் பொறுத்தவரையில், அம்மோனியம் சல்பேட் உரத்தைவிடப் பயன் தரக்கூடியதாக இது இருக்கிறது. கம்போஸ்ட் மான்யூர் இயக்கம் வளர்ந்து வருவதுபற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். “ கம்யூனி கம்போஸ்ட் மான்யூர் பிட்ஸ் ” அமைத்திருக்கிறோம். இந்த இயக்கம் கிராமம் கிராமமாக வளர்ந்துவருகிறது. இந்த இயக்கத்திற்கு எல்லா ஜில்லாக்களிலும் ஊக்கம் தர வேண்டும் என்று கூறிக்கொண்டு என் சிற்றுரையை முடிக்கிறேன்.

**SRI K. R. NALLASIVAM :** கனம் தலைவர் அவர்களே, விவசாய அபிவிருத்திக்கான பல யோசனைகள் சபையில் கூறப்பட்டிருக்கின்றன. உரம், விதை இவைகளின் விலை குறைய வேண்டியது மிகவும் அவசியம். இன்று பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக டீஸல் எஞ்சின்களை உபயோகிப்பவர்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். கடந்த ஆண்டிற்கு முந்திய ஆண்டில் இந்த ராஜ்ய சர்க்கார் டீஸல் எண்ணெயின் மீதுள்ள வரியை உயர்த்தினார்கள். அப்போது, விவசாயிகளின் எஞ்சின்களுக்காக வாங்கப்படும் டீஸல் எண்ணெய்க்கு விதி விலக்கு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையைப்பற்றி யோசனை செய்கிறோம் என்று சர்க்கார் சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு விவசாயத் துறையில் எத்தனை எஞ்சின்கள் இயங்குகின்றன என்று சர்க்கார் கணக்கு எடுக்கவில்லை. அது மட்டுமன்றி, மத்திய சர்க்கார் டீஸல் எண்ணெய் மீதுள்ள வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இந்தக் காரணங்களால், எஞ்சின்களுக்கு டீஸல் எண்ணெய் உபயோகிக்கும் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.



18th March 1960] [Sri K. R. Nallasivam]

பிரேமையை கொடுப்பதால் என்ன பயன் ? விவசாயத் துறையில் டீஸ எண்ணெயின் மீதுள்ள வரியினின்றும் விலக்கு அளிப்பதற்கு சர்க்கா உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விதைப் பண்ணைகளைப்பற்றி இரண்டு ஆண்டு காலமாகப் பேசப்பட் வருகிறது. விதைப் பண்ணைகள் சரியான முறையில் வேலை செய் வில்லை என்பதை அரசாங்கமே ஒத்துக்கொண்டிருக்கிறது. அதிகமான விதைகளை இந்த விதைப் பண்ணைகளிலிருந்து தனி நபர்களுக்குக் கொடுத் அவர்களுக்கு அதிகமாக ஊக்கம் கொடுத்தால், உற்பத்தி பெருகி வி சாயப் பொருள்களின் விலைவாசி குறையும். ஒவ்வொரு அபிவிருத் வட்டாரத்திலும் விதைப் பண்ணைகளையும் விவசாய அபிவிருத்திப் பண்ணைகளையும் ஆரம்பித்தால் இந்தியாவின் உற்பத்தி அளவை விட அதிகமா இந்த ராஜ்யத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்வார்கள். பண்ணைகளை அவ்வாறு அமைப்பது நடைமுறையில் கஷ்டம் என்று சொல்லக்கூடும். இருந்தாலும். முயற்சி செய்யவேண்டும். விதைப் பண்ணைகளோ, மாதிரிப் பண்ணைகளோ கோயம்புத்தூர் ஜில்லாவில் நான்கு இடங்களில் மட்டும் இருந்தால் போதாது. அவை ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்க வேண்டும். வேண்டுமானால், ஆராய்ச்சிப் பண்ணைகள் குறைவாக இருக்கலாம். சர்க்காரோ, அல்லது சர்க்காரும் பொதுமக்களுமாகவோ ஒவ்வொரு ஜில்லாவிலும் பல மாதிரிப் பண்ணைகளை அமைக்க வேண்டும். அப்படி அமைத்தால்தான் விவசாயிகளை, புது விவசாய முறைகளைக் கையாளும்படி செய்ய முடியும்.

அம்மோனியம் சல்பேட் விவகாரம் ஒரு பெரிய விவகாரமாக ஆகிவிட்டது. மாநிலத்திற்கு அது குறைவாகக் கிடைத்தது என்பது ஒரு புறம் இருக்கட்டும். கூட்டுறவுச் சங்கங்கள் அந்த உரத்தைத் தவறான முறையில் விநியோகம் செய்துவிட்டன என்ற புகார் சர்க்காருக்கு வந்திருக்கிறது என்றால், சர்க்கார் இதைப்பற்றி விசாரித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவு முறையில் நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி நாட்டை முன்னுக்கு கொண்டுவரலாம் என்ற தத்துவத்தைப் பேசிக்கொண்டிருக்கும் இந்த சர்க்கார், கூட்டுறவுச் சங்கங்கள் தவறு செய்திருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியம். இன்று உப்பை எடுத்துக்கொண்டால் கண்ட்ரோல் விலைக்கு உப்பு வாங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஈரோட்டில் உப்பு கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுகிறது. அது கண்ட்ரோல் விலைக்கு வருவதில்லை. அது கண்ட்ரோல் விலைக்கு வந்தாலும், 50, 60 மூட்டைகள்தான் வருகின்றன என்று சொல்லிவிடுகிறார்கள். இத்தகைய ஊழல்களைக் கட்டுப்படுத்துவதற்கு கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, சல்பேட் உரத்தைப் போட்டு எந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முடியுமோ அந்த அளவுக்குமேல் மல உரத்தைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைப் பற்றியும் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். இங்கேயும் அதிகமான வார்த்தைகள் மல உரத்தைப் பற்றி அடிப்பட்டன. இந்த நாட்டிலே நாம் மனித உரத்தைப் பயன்படுத்தத் தவறியிருக்கிறோம் என்று நினைக்கிறேன். பொதுவாக நம் ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் எடுத்துக் கொண்டால் சுமார் 10 லட்சம் டன்னாவது மல உரத்தைப் பயன்படுத்த முடியும். இப்போது முனிசிபல் ஏரியாக்களிலும், மேஜர் பஞ்சாயத்துகளிலும் ஓரளவு—பூராவும் பயன்படுகிறது என்று சொல்ல முடியாது—மல உரத்தைப் பயன்படுத்துகிறார்கள். அபிவிருத்தித் திட்டங்கள் இருக்கக் கூடிய பகுதிகளில் கக்கூஸ்கள் கட்டி வைத்திருக்கிறார்கள். ஜனங்கள் அந்தக் கக்கூசுக்குள்ள போவதே கிடையாது. 100-க்கு 2 கக்கூஸ்கள் கூட உபயோகப்படுத்தப்படுவதில்லை. கிராம ஜனங்களிடம் பிரசாரம் செய்வதன் பயனாக கிராமங்களில் பூராவாக மல உரத்தைப் பயன்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த அம்மோனிய சல்பேட் உரத்தைவிட இந்த மனித உரத்தைப்

பயன்படுத்துவதால் அதிகமான அளவுக்குச் சாகுபடி செய்ய வசதி இருக்கிறது. ஆகவே, இதில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மண்வளச் சோதனை பற்றி அதிகமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய பழைய நஞ்சை நிலங்களை உடனடியாகச் சோதனை செய்தாக வேண்டும். பழைய நஞ்சைகளில் இன்றைக்கு உற்பத்தி வேகமானது, வளமானது குறைந்து கொண்டிருக்கிறது. பழைய முறையிலே குப்பை போட முடியவில்லை. பழைய முறையிலே உரம் போட முடியவில்லை. வேறு வகையான உரங்களைப் போட்டு விவசாயம் செய்கிறார்கள். நீண்ட காலம் ஆனதன் காரணமாகவோ, உரத்தில் கோளாறு இருப்பதன் காரணமாகவோ அந்த நிலங்களுடைய அதிகப்படி உற்பத்தித் தரம் குறைந்திருக்கிறது. இந்தப் பழைய நஞ்சை நிலங்களெல்லாம் உடனடியாக மண்வளப் பரிசோதனை செய்யப் படவேண்டும். 100, 200, 300 ஆண்டு நிலங்களில் எல்லாம் பயிர் நன்றாக வளருவதில்லை. சில சமயங்களில் நோய் வந்து விளைச்சல் தடைப்படுகிறது. உதாரணமாக, ஈரோட்டில் களிங்கரயான் பகுதியில் எக்கருக்கு 3,000 பவுண்டு விளையும். இந்த சம்பா சாகுபடியில் ஆறுயிரம் எக்கராவில்—என்ன காரணமோ தெரியவில்லை—ஆயிரம் பவுண்டு கூட விளையவில்லை. ஒன்று நிலத்தின் சத்து குறைந்து போய் இருக்க வேண்டும். அல்லது கீழ் பவானியிலிருந்து கசிவுத் தண்ணீர் வந்து விழுவதன் காரணமாகப் பயிர் கெட்டிருக்கலாம். இந்த களிங்கரயான் பகுதி நிலங்களை உடனடியாகச் சோதனை செய்யவேண்டும். இல்லாவிட்டால் விளைவு மேலும் மேலும் குறைந்து நிலம் பயனற்ற முறைக்குப் போய்விடும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றன. எருமைப் பண்ணைகள் போதுமான அளவுக்கு இல்லை. பசு மாடுகள் மூலமாக நாம் பால் சேகரிப்பதை விட அதிகமான அளவில் எருமை மூலமாகப் பால் சேகரிக்க முடியும். மந்திரியவர்கள்கூட மூர்ரா வகையராக்களை வெளியிலிருந்து கொண்டு வர ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். சென்னி மலையில் 5 எக்கர் மேய்ச்சல் காடு இருக்கிறது. அங்கு ஒரு எருமை பண்ணை வைக்கவேண்டுகென்ற விண்ணப்பம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். நம்முடைய ராஜ்யத்தில், கோவை ஜில்லாவில். ஒரு பண்ணையை ஏற்படுத்துவது பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சியை எதிர்த்து நிற்கக்கூடிய நெல் சாகுபடியைப் பரிசோதனை செய்ய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 17 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இதற்கு அதிகமான அளவு ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏராளமான தண்ணீர் பெற்று அதன் மூலமாகச் சாகுபடி செய்யப்படும் நெல்லைப்பற்றித்தான் பலருக்குத் தெரியுமே தவிர, கொஞ்சம் தண்ணிரை வைத்துக் கொண்டு சாகுபடி செய்யும் நெல்லைப் பற்றித் தெரியாது. ஆகவே, இந்தப் புஞ்சைப் பகுதியில் சாகுபடி செய்கிற முறையைச் சீக்கிரமாகப் பரிசீலித்து ஜனங்களுக்கு விரைவில் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

• **SRI K. RAMACHANDRAN**: கனம் தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியம் ரொம்பவும் முக்கியமான இலாகாவைப் பெருத்தது. பொதுவாக நம்முடைய அபிவிருத்தியே இந்த இலாகாவைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆனால், நாம் எதிர்பார்த்த அளவுக்கு இதுவரையிலும் நமக்குக் கிடைக்கவேண்டிய அபிவிருத்தி இந்த இலாகாவினால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் உண்மையில் வருத்தப்படவேண்டிய நிலையில் தான் இருக்கிறோம். இன்றைக்குத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி: திட்டத்தைப் பொறுத்து விவசாயத் துறையில் செலவழிக்கக்கூடிய பணத்தைப்பற்றிய விவரங்களைப்





பார்த்தாலும சரி பொதுவாக எவ்வளவு பணம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கி இருக்கிறார்களோ அதைவிட அதிகமாகச் செலவழிக்கப்போவதாகச் சொன்னார்கள். இப்போது அந்தத் தொகை 12·95 என்று போட்டிருப்பது கூட நம்முடைய திட்ட அளவை எட்டி விடுவதற்குப் போதுமானது என்று சொல்ல முடியாது. குறிப்பிட்ட புள்ளிக்கு மேல் அதிகமாகச் செலவழிக்கப்பட்டும் கூட குறிக்கோளை அடைய முடியவில்லை. இதற்கு முக்கியமான காரணம் பட்ஜட் உரையிலே சொல்லப் பட்டது போல் உரப் பற்றாக்குறைதான். இன்றைக்கு, இருக்கக் கூடிய உரம்கூட சரியானபடி விநியோகிக்கப்படவில்லை. கூட்டுறவு ஸ்தாபனங்களாவது சரியானபடி விநியோகிக்கிறார்களா என்றால் அதையும் நம்பக் கூடிய நிலைமை இல்லை. அந்த உரம் வெளியிலே கொண்டு வரப்பட்டு விற்றாலும் கூடக் கவலையில்லை; பல கலப்படங்கள் செய்யாமல் விற்றால் நன்றாக இருக்கும். கலப்படம் செய்வதால் நிலம் கெட்டுப் போகிறது. இத்தகைய துர்ப்பாக்கியமான நிலைமை இந்த உர விநியோகத்தால் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இருக்கக்கூடிய உரத்தையாவது சரியானபடி விநியோகிக்கவும், கலப்படம் இல்லாமல் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கும் நிலைமையிலே துர் விநியோகம் செய்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க விதிகள் இல்லையென்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அதைத் தடுக்க சரியான விதி முறைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விதைப் பண்ணைகளைப் பற்றிச் சொன்னார்கள். திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. பொறுக்கு விதைகள் ப்ளாக் ஏரியாக்களிலேயே கிடைக்காமல் இருக்கும்போது நான்—ப்ளாக் இடங்களில் எப்படிக் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியும். ஆகவே, அந்த விதைப் பண்ணைகள் மூலமாகக் கிடைப்பது போக தனியாக ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் நிலங்களை ஒதுக்கி நல்ல விதைகள் வழங்கும் திட்டத்தை விரிவு படுத்தி விதைப் பற்றாக்குறையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயிர்களுக்குப் பூச்சிகளினால் ஏற்படும் வியாதிகளைத் தடுப்பதற்குச் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது தான் என்னுடைய புகார். பயிர்களுக்கு நோய்கள் ஏற்படும் காலத்திலே உடனுக்குடன் அவைகளைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு ப்ளாக்கிலும் சரியான ஏற்பாடுகளைச் செய்யலாம். இன்றிருக்கும் நிலைமையிலே, பயிர்களுக்கு நோய்கள் ஏற்பட்டு, நாம் ரிபோர்ட் செய்தாலுங்கூட, பெரிய அதிகாரிகளிடம் போய் "நோயால் பாதிக்கப்பட்ட ஏரியா" என்று "டிக்ளேர்" செய்யவேண்டுமென்று, சொன்னாலும் சாதாரண "பார்மாவிடிகளை" வைத்துக் கொண்டு இம்மாதிரி வியாதி வந்தாலும் தடுக்கமுடியாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவில் நல்ல மிளகாய்ப் பயிர் இருந்துகொண்டிருக்கிறது. இருந்தாலும், பூச்சி விழுந்துகொண்டிருக்கிறது மிளகாய்ப் பயிர்களுக்கு. எவ்வளவு பணம் தரக்கூடியது மிளகாய்ப் பயிர் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. அந்தப் பயிர்களுக்குப் பூச்சி விழும்போது அதை நிவர்த்தி செய்வதற்கு வழி செய்யாமல், பூச்சியினால் பயிர்கள் அழிந்த பிறகு நிவாரணம் செய்வதிலே எந்தவிதமான பயனும் இல்லை. அமைச்சர் அவர்கள் இதை ஆராய்ந்து, பூச்சி மருந்துகள் காலா காலத்தில் கொடுப்பதிலே கூட உடனடியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்னை என்னவென்றால், தரிசு நிலங்களை மீட்சி செய்யவேண்டிய வேலையாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களைப் பார்த்தால், அதிலே சரியான விவரங்கள் காணப்படவில்லை. தரிசு நிலங்களை மீட்கும் பணியிலே இந்த இலாகா குறிப்பிடத்தக்க அளவிலே வேலை செய்யவில்லை என்று நான் சொல்ல வேண்டியிருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவிலே நான் உதாரணமாகச் சொல்ல முடியும். அங்கே நிறைய இடம் இருக்கிறது. அதை "ரிக்ளமேஷன்" செய்து, சரியான முறையிலே விவசாயத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக இரண்டு மடங்குககு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். ரொம்ப காலத்திற்கு முன்னால் வந்த ரிபோர்ட்டில் பார்த்தால்

[Sri K. Ramachandran] [18th March 1960

இராமநாதபுரம் ஜில்லாவில் எவ்வளவு "வேஸ்ட் லாண்டு" இருக்கிறது என்பதற்குத் தகவல் இருக்கிறது. இளையாத்தகுடி, நேமம், இலுப்பக்குடி-மாத்தூர், கல்லல்-வெட்டியூர், பலவங்குடி-அதங்குடி, மட்டியூர்-பிரான்மலை தேவகோட்டை-காரைக்குடி, சிவகெங்கை-மானாமதுரை, காரைக்குடி- கானாடு காத்தான், இராமநாதபுரம்-தேவிபட்டணம் இது போன்ற பிராந்தியங்களில் மைல் கணக்கில், தரிசு நிலங்கள் இருக்கின்றன. பத்தாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் ஒரேயிடத்தில் இல்லையே என்ற கவலை வேண்டியதில்லை. இராமநாதபுரம் ஜில்லாவில் அந்த அளவுக்கு நிலங்கள் இருக்கின்றன. அதுபோன்று இன்னும் பல பிராந்தியங்களும் இருக்கின்றன. இதுபோன்ற ஒவ்வொரு ஜில்லாவைப் பொறுத்தும் புள்ளி விவரங்கள் இருக்கமுடியும், இருந்துகொண்டிருக்கின்றன. இதெல்லாம் "பாரஸ்ட் ஏரியா" என்று சொல்ல முடியாது ; நல்ல விவசாயம் செய்யத் தகுதியுள்ளதாக இருக்கும் நிலங்கள் என்று ரிபோர்ட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் சரியான முறையிலே பயன்படுத்தவேண்டும். தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கவில்லையென்றாலும், அரசாங்கம் பண்ணைகள் வைப்பதாகச் சொல்லும் இந்த நேரத்திலே, இதையெல்லாம் சரியான முறையிலே அவர்களே எடுத்துப் பயிர் செய்வார்களானால், இதனால் உணவு உற்பத்தி பெருக ஒரு நல்ல சாதகம் இருக்க முடியும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முந்திரி பயிரிடுவதைப்பற்றிச் சொல்கிறார்கள். அதை "டாலர் க்ராப்" என்றும் சொல்லுகிறார்கள். நான் சொல்வதென்னவென்றால், இராமநாதபுரம் ஜில்லாவில் பல இடங்கள் முந்திரி பயிரிடுவதற்குத் தகுதியாக இருக்கின்றன. அதைப் பல முறை நாங்கள் டெவலப்மெண்ட் கவுன்ஸில் கூட்டங்களிலே சொல்லிவந்தபோதிலும், தகுந்த கவனம் செலுத்தவில்லை. அதற்குத் தகுந்த கவனம் செலுத்துவதற்கு விவசாயிகளிடத்திலே சரியான வாய்ப்பு இல்லை என்ற காரணம் இருப்பதால் அரசாங்கம் தான் இதை முக்கியமாக எடுத்துச் செய்யவேண்டும். ரொம்ப நல்ல வேலையாக அதை அங்கே செய்ய முடியும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்று நல்ல விவசாய முறைகள் இருந்தாலுங்கூட, விவசாயிகள் அவைகளைப் புரிந்துகொள்ளும் வகையில் தகுந்த சாதனங்கள், வசதிகள் இல்லாது கஷ்டமான நிலைமை இருக்கிறது. ஸ்விட்ஸர்லந்து நாட்டிலே, சென்னை மாநிலம் போன்ற அளவுள்ள அந்த நாட்டிலே, 45 கல்லூரிகள் விவசாயக் கல்வியைப் பரப்புவதற்காக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் ஒரு கல்லூரிதான் இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இது போதாத நிலைமை என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இதை விரிவுபடுத்தி, ஒரு ஜில்லாவுக்கு ஒரு கல்லூரியோ அல்லது, குறைந்த க்வாலிபிகேஷனுள்ள படிப்பு சொல்லிக்கொடுப்பதற்கு வேண்டிய வசதியோ செய்து கொடுத்தால்தான் நாம் விவசாயத் துறையில் முன்னேற முடியுமே தவிர, எவ்வளவு சீர்திருத்தத்தைச் சொன்னாலும், அவைகளைப் பயன்படுத்தக் கூடிய முறையில் ஜனங்களைக் கொண்டுவராத நிலை இன்று இருப்பதால்தான் இந்தக் கஷ்டம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"பாக்கேஜ் ப்ளானு"டைய அம்சங்கள், ப்ளாக் டெவலப்மெண்டிலே சொல்லக்கூடிய பல அம்சங்களாகத்தான் இருக்கின்றன. வட்டார அபிவிருத்தியிலே பாக்கேஜ் ப்ளானை ஓரளவுக்காவது நிறைவேற்ற வழி வகுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகின்றேன்.

கால்நடையைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு அவைகளுக்குள்ள மருத்துவ வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஒவ்வொரு தாலூகாவுக்கும் ஒவ்வொரு நல்ல மருத்துவ நிலையம் இருந்தால்தான், அந்தப் பகுதியிலுள்ள கிராம மக்கள் பயனடைவதற்கான சௌகரியம் ஏற்பட முடியும். பரமக்குடி தாலூகா பகுதியிலே எங்குமே இல்லை. அந்தத் தாலூகாவுக்கு ஒருசிறிய டிஸ்பென்ஸரி இருந்து அது முன்னே முடியிருந்தது



18th March 1960] [Sri K. Ramachandran]

இப்பொழுது திறந்து வேலை பார்க்கும் நிலைமையில் இருக்கிறது. இது தான் விவரம் தெரிந்த நாளிலிருந்து அந்த டிஸ்பென்ஸரியிலுள்ள மாற்றம். அம்மாதிரி இருந்தால், எந்த விதமான பயனும் ஏற்பட முடியாது. கால்நடைச் செல்வத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும், "ப்ரீட்"ஐ விருத்தி செய்யவேண்டும், அதன் மூலமாக விவசாயத்தைப் பெருக்கவேண்டும் என்றெல்லாம் நாம் சொல்லிக்கொண்டிருக்கும் நேரத்தில், இந்தத் துறையிலே அதிகமாகப் பணத்தை ஒதுக்கி, கால்நடைச் செல்வத்தைப் பாதுகாத்து, அபிவிருத்தி செய்வதற்கு ஒரு நல்ல விஸ்தாரமான திட்டத்தைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **Sri S. RAMASAMI NAIDU** : கனம் தலைவர் அவர்களே, விவசாய இலாகாவின் மூலமாக விவசாயிகள் அடைந்திருக்கும் நன்மை இன்னதென்று விவசாயிகளுக்குத்தான் தெரியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமிட்டதன் மூலமாக, நான்கு ஆண்டுகளிலே அவர்கள் செய்த காரியங்களின் பயனாக, நீர்ப்பாசன வசதிகளும், நல்ல பொறுக்கு விதைகளும், நல்ல கற்பனைகளும் கொடுத்ததன் மூலமாக, விவசாயிகள் நம்முடைய நாட்டில் எத்துணை அதிக உணவு உற்பத்திசெய்திருக்கிறார்கள் என்பதும், எத்துணைப் பணப் பயிர்களை நல்ல முறையிலே உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்பதும் விவசாயம் செய்கிறவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதற்காக விவசாய மந்திரி அவர்களுக்கும், விவசாய இலாக்கா டைரக்டர் அவர்களுக்கும்,அவர்களுடைய உதவியாளர்களுக்கும் விவசாயிகள் கடமைப்பட்டவர்கள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாசனத் துறையானாலும் சரி, உர விநியோகமானாலும் சரி, நல்ல கற்பனையைக் கொடுப்பதானாலும் சரி, நல்ல பொறுக்கு விதைகள் கொடுப்பதன் மூலமாகவும் சரி, விவசாயம் மிக மிகப் பயனடைந்திருக்கிறது. சாதாரணமாக ஏக்கரா நூறு ரூபாய்க்குச் செல்லாத நிலங்களையெல்லாம் இன்றைக்கு ஐந்நூறு ரூபாய்க்குக்கூட கேட்பார் அனேகம் பேர் இருக்கிறார்கள், கொடுப்பார் இல்லை என்றால், விவசாயத்தின் மகிமை எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பது நன்றாக விளங்கும். ஆனால், எதிர்பார்த்த அளவு விவசாயிகள் இன்னும் முன்னேறவில்லையென்றால், அது விவசாயிகளுடைய குறை என்றுதான் நான் சொல்வேன்.

(Deputy Speaker in the Chair.)

நல்ல உரம் செய்யவேண்டும், "கம்போஸ்ட்" செய்யவேண்டும் என்று கற்பனை கொடுக்கப்படுகிறது. தொழு உரத்தை எப்படித் தயாரிக்கவேண்டும் என்று கற்பனை கொடுக்கப்படுகிறது. ஆனால், கிராமங்களிலே சென்று பார்த்தால், ஓரிருவர் தவிர, மற்றெல்லோரும் தொழு உரத்தை வெயில் காயத்தான் போட்டு வைத்திருக்கிறார்கள். "கம்போஸ்ட்" குழி வெட்டிக் கொடுத்துவிட்டாலுங்கூட, மண்ணைப் போட்டு வைத்து மூடுவதில்லை. உயர்ந்த கருவிகள் கொடுத்தாலும், விவசாயம் செய்வதற்கு அவைகளை உபயோகப்படுத்தவில்லை. ஒருச்சாண் கலப்பையை வைத்துக்கொண்டுதான் உழுவேன் என்று சொல்கிறார்கள். கிராமத்திலே விவசாயிகள் பழங்கால வாழ்க்கையிலே ஈடுபட்டு, நவீன காரியங்களில் அவ்வளவாக அவலம்பிக்காத காரணத்தால்தான் விவசாயிகள் எதிர்பார்த்த அளவு முன்னேறவில்லையே தவிர, மற்றப்படி விவசாயம் இன்று உயர்ந்திருப்பது போல் இரண்டு பங்கு உயர்ந்திருக்குமென்று நான் நிச்சயமாகச் சொல்கிறேன்.

உரங்கள் கொடுப்பதிலே பல தகராறுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். கள்ளச் சந்தையிலே உரம் கிடைக்கிறது, நியாயமாகக் கிடைக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். எங்கள் பிரதேசத்திலே உரத்தைக் கட்டுப்பாடு செய்து விநியோகம் செய்தார்கள். விவசாயிகளாகிய நாம் பர்மிட் வாங்கித்தான் உரம் வாங்கினோம். ஆனால், நம்மிடத்தி[illegible] அந்த உரமெல்லாம் எப்படிக் கள்ளச் சந்தைக்குப் போயிற்[illegible]

[Sri S. Ramasami Naidu] [18th March 1960

யோசித்துப் பார்க்கவேண்டும். விவசாயிகளாகிய நாம் செய்யும் தப்பிதத்தை சர்க்கார் மேல் ஏற்றிச் சொல்வது அவ்வளவு பொருத்தமாகாது என்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

"விதைப் பண்ணை வைத்து நடத்துகிறார்கள்; நஷ்டம் வருகிறது" என்று சொல்கிறார்கள். ஒரு விவசாயி நான்கு ஏக்கராக்கள் பண்ணை வைத்து நடத்தினால் அவனுக்குப் பிரத்தியேகமாக ஆள் தேவையில்லை. ஒரு ஆளே எல்லா வேலையையும் செய்து கொள்ளுவான். ஆனால், மாதிரிப் பண்ணை அல்லாமல் நல்ல விதைகளை உற்பத்தி செய்வதற்கென்று பண்ணை வைத்து நடத்துகிறார்கள். ஏதாவது ஒரு கலப்பு இருந்தாலும் அதைத் தேடிப்பிடித்து எடுக்கவேண்டும். விவசாய விதைப் பண்ணை வைத்திருப்பவர்கள் அதற்கென்று ஒரு மோட்டார் டிரைவர் நியமிக்கவேண்டியிருக்கிறது; காவலுக்கு ஆள் வேண்டியிருக்கிறது; எல்லாவற்றுக்கும் சம்பளம், டியர்னஸ் அலவன்ஸ் இன்னும் மற்ற காரியங்களெல்லாம் கொடுக்கும்போது செலவு அதிகமாகிவிடுகிறது. நஷ்டம் ஏற்படுகிறது. ஆனால், நல்ல விதைகள் கொடுக்கப்படுகின்றன. அந்த விதை எவ்வளவு விலை பெறும் என்பதை விவசாயிகள் அறிவார்கள். எவ்வளவோ லட்ச ரூபாய் செலவு செய்து ஆராய்ச்சி செய்ததன் பயனாக நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, கரும்பு இவையெல்லாவற்றிலுமே நல்ல உயர்ந்த விதைகளை நாம் பெற்றிருக்கிறோம். லட்சக்கணக்காக ரூபாய் செலவழித்து விதைகளைப் பெறவேண்டுமா, சிலருக்கு மட்டும் உபயோகப்படும்படியான இந்த விதைகள் இவ்வளவு லட்சம் ரூபாய் செலவு செய்து உற்பத்தி செய்யப்படவேண்டுமா என்றால், அதை நன்றாக யோசித்துப் பார்த்தால், இன்னும் எத்தனை லட்ச ரூபாய் செலவு செய்தாலுங்கூட, நல்ல விதை உற்பத்தி செய்வது விரயமானது என்று எண்ணுவதற்கில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளெல்லாம் பழுதிலா உழு தொழில் செய்கிறார்களே, அவர்
2-30 p.m. களுக்கு என்ன குறை என்று எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால், விவசாயிகளுடைய கஷ்டம் எவ்வளவு என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாயம் செய்பவர்களெல்லாம் சாப்பாட்டிற்கு வைத்திருக்கிறார்களே, அவர்கள் ஏன் விலைவாசிகள் கட்டுபடியாகவில்லை என்று பேசுகிறார்கள், என்று சொல்லப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் நெல் உற்பத்தி செய்கிறார்கள். நெல் ஒன்றைத் தவிர மற்ற எல்லா பொருள்களையும் விலை கொடுத்துதான் விவசாயிகள் வாங்கவேண்டியிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. நெல் பயிர் செய்யவேண்டுமென்றால் உழவுக்கு வேண்டிய சகல பொருள்களும் அவன் வெளியில் தானே வாங்க வேண்டியிருக்கிறது? உழு தொழிலுக்கு வேண்டிய கருவிகளையும், உரம் போன்ற பண்டங்களையும் விவசாயிகள் விலை கொடுத்துத்தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொருள்களின் விலை எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதை நன்றாக அறிவோம். எந்தப் பயிரை உற்பத்தி செய்தாலும், விளையும் பயிரைத் தவிர மற்ற எல்லா சாமான்களையும் அவன் விலை கொடுத்துத் தான் வாங்கவேண்டியிருக்கிறது. மற்ற பொருள்களின் விலைவாசி ஏறிக் கொண்டே போகும்பொழுது விவசாயிகள் உற்பத்தி செய்யும் பண்டங்களின் விலைவாசியும் விவசாயிக்கு கட்டுபடியாகும்படியாக இருக்கவேண்டும். சாதாரணமாக சில பகுதிகளிலே மிளகாய் உற்பத்தி செய்கிறார்கள். மிளகாய் ஒரு வருஷத்திய பண மகசூல். மிளகாய் போட்ட நிலத்தில் வேறு பண மகசூல் போட முடியாது. மிளகாய் விலை ரூ. 410 ஆக இருந்தது இன்றைக்கு ரூ. 180 ஆகிவிட்டது. விவசாயி எதிர்பார்த்த அளவு பணம் கிடைக்கவில்லை. செலவு செய்த முதல் எங்கே போகும்? அவன் எவ்வளவு நஷ்டப்படுவான் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவன் உத்தியோகத்திற்கு வந்துவிட்டால், தான் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதை மறந்துவிடுகிறான். ரூ. 150 முதல் ரூ. 200 வரையில் நிழலில் உட்கார்ந்து சம்பாதிக்கிறான். அவன் மனைவி, மக்கள் நன்றாக சௌகரியமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆனால் ஒரு விவசாயிக்கு ரூ. 200 நிகர வருமானம் வரவேண்டுமானால்,



[18th March 1960 [Sri S. Ramaswami Naidu]

அந்த விவசாயியின் குடும்பத்திலுள்ள அத்தனை பேர்களும், அந்த விவசாயி, மனைவி, பிள்ளைகள், கடைசி 5 வயது பிள்ளையைத் தவிர மற்ற எல்லோரும் காட்டில் வேலை செய்தால் தான் 100 ரூபாய் கிடைக்கின்ற அளவிற்காவது விவசாய உற்பத்தி செய்ய முடியும். அப்படியிருக்கும் பொழுது விவசாயி உற்பத்தி செய்யும் பண்டங்களின் விலையைக் கட்டுப்பாடு செய்து அவனை நஷ்டமடையச் செய்யவேண்டுமென்று நினைப்பது நியாயமா என்பதை நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும், தீவிரமாக யோசித்துப் பார்க்கவேண்டும். வெளியில் வந்து உத்தியோகம் செய்து கொஞ்சம் வசதியாக வாழ்ந்தவுடன், தான் பிறந்த விவசாய குடும்பத்தையே, தன் அண்ணன், தம்பியையே மறந்துவிடுகிறான். உத்தியோகம் செய்பவர்களில் 100-க்கு 80 பேர்கள் கிராமத்திலிருந்து வந்தவர்கள்தான். அவர்கள் உத்தியோகத்திற்கு வந்ததும் அத்தனையும் மறந்து தான் வேறு ஜாதி, விவசாய ஜாதியைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று நினைத்து விடுகிறார்கள். விவசாயம் செய்பவர்களுக்குக் கட்டுபடியாகும்படியான நிலைமையிலே விவசாயப் பொருள்களின் விலையை நிர்ணயிக்கவேண்டும். ஏதோ கூச்சல் போடுகிறார்கள் என்று சொல்லி, தங்களுடைய வசதிகளில் சிறிது குறைந்து விடுகிறது என்று சொல்லி, விலைவாசியை கட்டுப்படுத்த வேண்டுமென்று நினைப்பது முறை அல்ல, சரி அல்ல. அது விவசாயிகளை மிகவும் பாதிக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சர்க்காரிலிருந்து கிடைக்கும் சகல வசதிகளையும் விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயன்படும்படி செய்தால், விவசாயம் நல்ல முறையில் செழித்து ஓங்கும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு எத்தனை பாசன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். சர்க்கார் கொடுக்கும் சலுகைகள் விவசாயத் துறையில் ஓரளவுக்கு விவசாயிகளுக்கு கிடைத்தாலும் கூட, மற்ற துறைகளில் செய்யப்படும் வசதிகளும் விவசாயிகளுக்கே போய்ச் சேருகின்றன. பொது மராமத்துத் துறையின் மூலம் பல வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றன. எத்தனையோ கிணறுகள், குளங்கள் வெட்டப்படுகின்றன. செப்பனிடப்படுகின்றன. எத்தனையோ அணைக்கட்டுகள் கட்டப்படுகின்றன. அவை அத்தனையும் விவசாயிகளுக்குத் தான் போகின்றன. சாதாரணமாக ரெவின்யூ டிபார்ட்மெண்டினால் தோண்டப்படும் கிணறுகள், கொடுக்கும் உரங்கள், கடன் வசதிகள் ஆகியவைகள் விவசாயிகளுக்கே போய்ச் சேருகின்றன. தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் பல ஆயிரக் கணக்கான கிணறுகள் வெட்டப்படுகின்றன. அவைகளெல்லாம் விவசாயிகளின் நன்மைக்காகத்தான் வந்து சேருகின்றன. ஆகவே, சர்க்கார் பல துறைகளின் மூலம் விவசாயிகளுக்கு பல வசதிகளை அளித்துவருகிறது. அவ்வாறு சர்க்கார் அளிக்கும் சலுகைகளெல்லாம் விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்காரிலும் சரி அல்லது சட்டசபையிலும் சரி, விலைவாசிகளை கட்டுப்படுத்துவதாயிருந்தால் விசாயிகளுக்கு கட்டுப்படியாகக் கூடிய முறையிலே விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பேச வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: **The hon Member's time is up.**

SRI S. RAMASWAMI NAIDU: மீன் வளர்ப்புத் துறையில் மிகவும் நல்ல முறையில் செயலாற்றி வருகிறார்கள். மீன் வளர்ப்புத் துறையைப் பற்றி சில குறைகளைக் கூறி வருகிறார்கள். அந்தக் குறைகளெல்லாம் ஆதாரமற்றவை என்று நான் சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: Sri M. P. Subramaniam will speak. I would request him to finish his speech in five minutes.

* SRI M. P. SUBRAMANIAM: This is an important demand and I would like to take the minimum time allowed, namely, at least 10 minutes. கனம் துணை சட்டமன்ற தலைவர் அவர்

களை, இந்தப் பக்கத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகளைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டாலும், உண்மையாக செய்யப்படும் வேலைகளை பார்க்கின்ற காலத்தில் அதற்கு வேண்டிய அளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றுதான் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நவீன விஞ்ஞான முறையில் நல்ல ஆராய்ச்சி பண்ணைகளை ஏற்படுத்தி விவசாயிகள் எதிர்ப்பார்த்தப்படி அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமுதாய நலத் திட்டத்தின் கீழ் வேலை செய்கின்ற கிராம சேவக்குகள் சகல துறைகளிலும் பயிற்சி பெற்றவர்களாக இருந்தாலும் கூட, விவசாயத் துறையிலே இருக்கிற மேஸ்திரிகளாக இருந்தால் தான் உண்மையாக அவர்கள் விவசாயிகளுக்கு வேண்டிய பயிற்சி முறைகளை சொல்லித்தரமுடியும். கிராமச் சேவக்குகள் இந்த வேலையை திறம்பட நிறைவேற்ற முடியவில்லை என்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். ஆகவே, சமுதாய நலத் திட்டத்தின் கீழ் இந்த வேலைகளைச் செய்யக் கூடுதலான விவசாய மேஸ்திரிகளாக இருப்பது மிகவும் அவசியம். அது மாத்திரமல்ல. விவசாய பட்டதாரிகள் மற்ற பட்டதாரிகளைப் போன்று அந்த அளவுக்கு கவனிக்கப்படுவதில்லை என்ற குறை இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். டாக்டர் பட்டம், என்ஜினியர் பட்டம் பெற்றவர்கள் எந்த அளவுக்கு படிக்கிறார்களோ, ஏறக்குறைய அந்த அளவுக்கு விவசாயப் பட்டதாரிகளும் படிக்கிறார்கள். இன்று நாம் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும்பொழுது, விவசாயத்துறையிலே வேலை செய்கின்ற பட்டதாரிகளுக்கு போதிய அளவு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உற்சாகத்தோடு வேலை செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் இங்கே நான் கூற விரும்புகிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவது மிகவும் முக்கியம். நம்முடைய தமிழ் நாட்டிலே ஏராளமான தரிசு நிலங்கள் இருக்கின்றன. அவைகளை சாகுபடிக்குக் கொண்டுவரலாம் என்று பல சட்ட சபை உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இது வரையிலே 4 ஆண்டுகளுக்குள் 73,000 ஏக்கர் நிலங்கள் இயந்திரக் கலப்பையைக் கொண்டு சாகுபடிக்குப் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தஇடங்கள் எந்த வட்டாரங்களில் சாகுசாகுபடிக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லிலை. ராமநாதபுரத்தில் ஏராளமான தரிசு நிலங்கள் மைல் கணக்கில் இருக்கின்றன. அவைகளை இயந்திரக் கலப்பையைக் கொண்டு சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். அவைகளை சாகுபடிக்கு கொண்டுவரவில்லை என இங்கு எடுத்துக் கூறப்பட்டது. என் தொகுதியாகிய சேலம் ஜில்லா ஆத்தூரில் 70,000 80,000 ஏக்கர் நல்ல நிலங்கள், தண்ணீர் மேல் மட்டத்திலுள்ள நிலங்கள் உள்ளன. அங்கே 30,000 ஏக்கர் நிலங்கள் ஏழை விவசாயிகளுக்கு, நிலம் இல்லாதவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே இதுவரையிலும் 10,000 ஏக்கர் நிலங்கள் கூட சாகுபடிக்குக் கொண்டுவரப்படவில்லை. அரசாங்கத்திற்கு இந்தத் தகவல் எட்டியிருக்குமென்று நினைக்கிறேன். அதிலே 74 கலப்பைகளுக்கு மண் திருத்தும் யந்திரம் பிணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கொண்டு ஏராளமான நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வரமுடியும். ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்பது தெரியவில்லை. கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுக்கு வட இந்தியாவில் [illegible]காருண்யம் என்ற இடத்தில் கோடிக்கணக்கான ரூபாய் செலவு [illegible] 30,000 ஏகர் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். [illegible] பத்துகோடி ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள். [illegible] சிக்கனமான செலவில் இங்கே ஏராளமான நிலங்களை [illegible] கொண்டு வரமுடியும். நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு நிலத்தை பங்கிட்டுக் கொடுத்துவிட்டால், உடனே ஒரு ஏக்கருக்கு



½ டன் விளையும் என்று நினைப்பது வெறும் புள்ளிவிவரங்களைக் கொடுப்பதற்கு வேண்டுமானால் பயன்படும். ஆனால், உண்மையாகப் டார்க்கப் போனால், ஏறக்குறைய 8 ஆண்டுகளுக்கு முன் ஆத்தூரில் ஏழைகளுக்கு நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டும், அதை அவர்களால் இன்னும் சாகுபடிக்குக் கொண்டு வரமுடியவில்லை. அவர்கள் நிலம் இல்லாத ஏழை மக்கள். விவசாய அனுபவம் இல்லாதவர்கள். பல ஆண்டுகளாக மழை பெய்து பூமிக்குள் இருக்கும் சத்தெல்லாம் அடித்துக் கொண்டு போகப் பட்டிருக்கிறது. அந்த நிலத்தை பயன் படுத்தி சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு அவர்களிடத்தில் வேண்டிய வசதி இல்லை. இந்த நிலங்களை நல்ல முறையில் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு ஏறத்தாழ 10 ஆண்டுகளாக அதிகாரிகள் சேலம் மாவட்டத்திலிருந்து பல திட்டங்களை போட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டங்களில் ஒன்று கூட இன்று வரையில் உருப்படியாக அமுலாக்கப்படவில்லை. கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு இது தெரியும். சமீபத்தில் டெவலப்மெண்டு கமிஷனர் கூட ஆத்தூருக்கு வந்திருந்தார். ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு போர்டு மெம்பர் ஒருவர் அங்கே வந்திருந்தார். அவர் ஒரு திட்டத்தை எடுத்துச் சென்றார். டெவலப்மெண்டு கமிஷனர் ஒரு திட்டத்தை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார். 25,000 ஏக்கர் நிலங்களுக்கு 2½ கோடி ரூபாய் செலவில், அதாவது ஏக்கருக்கு 1,000 ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். அந்தத் திட்டம் எந்தக் காலத்தில் எப்பொழுது அமுலாக்கப்படும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, இது போன்ற இடங்களில் அரசாங்கம் அக்கரை செலுத்த வேண்டும். 1960-61-ம் ஆண்டில் இது போன்று 10,000 ஏக்கரா தரிசு நிலங்கள் இயந்திர கலப்பைகளைக் கொண்டு சாகுபடிக்குக் கொண்டுவரப்படும் என்று சொல்லப்படுகிறது. 10,000 ஏக்கரா மிகவும் குறைவு. வருஷத்திற்கு 50,000 ஏக்கரா என்ற லட்சிய அளவை வைத்துக் கொண்டு அதிகப்படியான தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டும். ஏற்கெனவே உள்ள இயந்திரக் கலப்பைகள் போதிய அளவுக்கு வேலை செய்யவில்லை என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் கூறியது போல சிறிய கலப்பைகளை ஏராளமாக வாங்கி இந்த தரிசு நிலங்களை உடனடியாக சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும். நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு அடமானம் கொடுத்து ஆகும் செலவை 10, 20 ஆண்டு தவணைகளில் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

விதைப் பண்ணைகளைப் பற்றி பரவலாகப் பேசப் பட்டது. அதை நடத்தும் போது லாபகரமாக நடத்த முடியாது, அப்படி நடத்தக் கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விதை பண்ணைகளைப் பொருத்த வரையில், நல்ல வித்துகளைக் கொண்டு விவசாயம் செய்ய வேண்டுமே தவிர, அதைக் கமர்ஷியல் நோக்கத்துடன், லாப நஷ்ட நோக்கத்துடன், பார்த்தால் அது உருப்படாது. விதைப் பண்ணைகளுக்கு நிலம் வாங்கும் போது பல முறைகளைக் கையாளுகிறார்கள். திருச்சி மாவட்டத்திலே, புதுக்-கோட்டை பிராந்தியத்திலே, ஒரு விதைப் பண்ணையை பார்வையிட்டோம் அங்கே நிலத்தை வாங்கும் போது, அதிகப்படியான, தகுதியில்லாத பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதில் பல அதிகாரிகளை விசாரிக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதன் முடிவு என்ன என்பது தெரியவில்லை.

கிணறுகள் வெட்ட மானியம், கடன் வழங்கப்படுகிறது. சேலம், கோவை வட ஆற்காடு மாவட்டங்களிலே, 100, 120 அடி ஆழம் வரை போக வேண்டியிருக்கிறது. இயந்திர டிரில்களை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. போதிய அளவில் கிடைக்க வில்லை என்று புகார் வருகின்றது. கோவை மாவட்டத்தில்தான் 5, 6, டிரில்கள் இருக்கின்றன. பல காரணங்களால் விவசாயி கஷ்டப்படுகிறான். கிணறு வெட்டப் போகும்போது, கீழே பாறையாகப் போய்விடுகிறது. டிரிலைப் பயன்படுத்திதான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒரு மாவட்டத்தில், 10 பவர்

[Sri M. P. Subramaniam] [18th March 1960

டரில்களாவது அரசாங்கம் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்கள் மூலம் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிச் செய்தால் நஷ்டம் ஏற்படும் என்று அவர்கள் பயப்படுகிறார்கள். நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று அரசாங்கம் முன் வந்தால், அவைகள் தயாராக இருக்கும்.

கிணறு வெட்ட ரூ. 1,000 என்று வைத்திருக்கிறார்கள். சேலம், கோவை மாவட்டங்களிலே அந்தத் தொகையில் செய்ய முடியாது. ஆத்தூர், ராசிபுரம், திருச்செங்கோடு, நாமக்கல் முதலிய பிராந்தியங்களிலே, 3,000, 4,000 ரூபாய் வேண்டும். இப்பொழுது வைத்திருக்கும் ரூ. 250 மானியம் விவசாயிகளுக்குப் பயன்தராது.

இறுதியாக கால்நடைச் செல்வத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கால்நடைச் செல்வத்தை வளர்க்க போதிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று ஒப்புக்கொள்ளுகிறேன். இப்பொழுது திருச்செங்கோடு தாலூகாவில் சப்ளிமெண்டரி எக்ஸ்டென்ஷன் செண்டர் இருக்கிறது ; வட சேலத்திலும் நடைபெறுகிறது. அதே போல், ஆத்தூரிலும் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்குள்ள மாடுகளெல்லாம் சிறிய மாடுகள். பெரிய ஜாதி காங்கேயம் காளைகளில்லாவிட்டாலும், சிறிய உம்பளாச்சேரி மாடுகளை வைத்துச் சப்ளிமெண்ட்டரி எக்ஸ்டென்ஷன் செண்டரில் இண்டென்ஸிவ் டெவலப்மெண்ட் ஏற்படுத்த வேண்டும். இதில் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் ; காளை வளர்ப்புக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதே போல் கோழி வளர்ப்பிலும் அதிக கவனம் செலுத்தப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். கோழி வளர்ப்பினால் ஹரிஜனங்களும், பின் தங்கிய வகுப்பு மக்களும், அதிக லாபம் அடைவார்கள். கோழிகள் தினமும் முட்டையிடுமாதலால், நாளைக்கு சில அணுக்கள் அவர்களுக்குக் கிடைக்கும்.

மீன் இலாகா சம்பந்தப்பட்ட வரையில், பல குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள். இப்பொழுது சம்பந்தப்பட்ட மந்திரி இல்லாமல் இருப்பது பெரும் குறை. சட்ட சபையிலே, குறைகளைக் கூறுவதனால், சொல்லுபவர்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்பதில்லை. அப்படி நினைப்பது தவறான அபிப்பிராயம். அப்படி நினைப்பது அவர்களைத் தவறான பாதையில் கொண்டு விடும். சட்ட மன்ற அங்கத்தினர்கள், அவர்களிடம் வரும் குறைகளை விசாரித்து உண்மையாக இருக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்ட பிறகே சொல்கிறார்கள். அதைப் பொறுப்பற்ற தன்மை என்று சொல்வது நிச்சயமாகத் தவறு. அது சட்ட சபையின் முக்கியத்துவத்தைப் பாதிக்கும். சட்ட மன்ற உருப்பினர்கள் சொல்லும் புகார்களை குறைகளை, அமைச்சரவர்கள் நல்ல முறையிலே, ஆராய்ந்து, குறைகள் உண்மையில் இருக்கிறதா, இல்லையா என்று கண்டு சொல்ல வேண்டுமே தவிர, அதைச் சொல்லும் காலத்திலேயே பொறுப்பற்ற தன்மையில் சொல்லுகிறீர்கள் என்பது சட்ட சபையின் கௌரவத்திற்கு சரியல்ல என்பதைச் சொல்லிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**Sri P. G. KARUTHIRUMAN** : உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்துப் பேசும்போது, மிகவும் நல்ல முறையிலே கனம் எஸ். ராமசாமி நாயுடு, அற்புதமாக பேசினார்கள் என்று சொல்ல வேண்டும். அந்த நிலையிலே விவசாய இலாகா சாதித்திருக்கும் சாதனைகள் பல. பட்டணத்தில் இருப்பவர்கள், வாங்கிச் சாப்பிடும் ஒவ்வொரு அரிசியும், விவசாய இலாகாவின் ஆராய்ச்சியால் விளைந்தது என்பதை மறக்கக் கூடாது. 20 வருட காலமாக என் பண்ணையில் விவசாய இலாகாவின் பொறுக்கு விதைகளை உபயோகிக்கிறோம். 1940-ல் C.O. 16 என்ற ஒரு விதையைக் கண்டு பிடித்தார்கள். அது சாதாரணமாக உதிராது



18th March 1960] [Sri P. G. Karuthiruman]

ஒரு கதிரில் 400 மணிகள் இருக்கும். அதன் பிறகு சில வருஷங்களில் கோ. 19 என்னும், செங்கல்பட்டு சிறுமணியைக் கண்டுபிடித்தார்கள். அது ஏக்கராவுக்கு 2,000 பவுண்ட் விளையும். ஆனால், என் பண்ணையில் 5000 பவுண்ட், விளைகிறது. அதே கோ. 19 என்பது இன்று C.O. 25 என்று இப்பொழுது சிறந்த விதையாக இருக்கிறது. இந்த ஆராய்ச்சியெல்லாம் கோயம்புத்தூர் பண்ணையிலே செய்த ஆராய்ச்சிகள் பயன் என்பதை நாம் மறக்கக் கூடாது. என்னிடத்தில்,ஒரு ஏக்கராவுக்குக் கொடுத்த விதை 100 ஏக்ராவுக்கு உதவக்கூடிய விதையாக பெருகி, அடுத்த அடுத்த வருஷங்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கராக்களுக்கு உதவக்கூடிய விதை நெல்லாக அமைந்திருக்கிறது. அவர்கள் கொடுத்த நெல் எத்தனை, அது எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்பது எனக்குத் தெரிந்த வரையில், என் சிற்றறிவுக்கு எட்டிய மட்டில் பாராட்டத்தகுந்தது. மேலும் மேலும் செய்து வந்துள்ள ஆராய்ச்சியில், இப்பொழுது சிரூர் குப்பத்தில் 120 நாட்களில், ஏக்கராவுக்கு 5,000 பவுண்ட் விளையக்கூடிய விதையை வளர்த்திருக்கிறார்கள். அதே போல் அம்பாசமுத்திரம் நெ. 6, நெ. 7 விதைகள் இருக்கின்றன. இவைகளெல்லாம், கனம் ராமசாமி நாயுடு சொன்ன பிரகாரம், பல லட்சம் ரூபாய்கள் அல்ல, பல கோடிக் கணக்கான ரூபாய்களை அபிவிருத்தி செய்ய உதவியிருக்கிறது.

இப்பொழுது இருக்கும் நிலையில், பூச்சிகளுக்கு மருந்து இல்லை, அம்மோனியம் சல்பேட் இல்லை, பூச்சிகள் தொல்லையோடு அம்மோனிய சல்பேட் தொல்லையிலும் அவதிப்படுகிறோம். அவைகளையெல்லாம் நீக்க அடிப்படைக்காரணத்தைக் காண வேண்டும். விவசாய முறையிலே கவனத்தைச் செலுத்தினால் அல்லாது, அதை அதிகாரிகளால் நீக்க முடியாது. முன்பு ஒரு போகம் வெள்ளாமை செய்து வந்தோம். ஏக காலத்தில் எல்லா பயிர்களும் வளரும் நிலை இருந்தது. இப்பொழுதோ, இரு போகம், மூன்று போகம் என்று விவசாயம் செய்கிறார்கள். அப்படிச் செய்யும் போது, ஒன்று அறுவடையாகும் போது, இன்னொன்று கதிரும் பூவுமாக இருக்கிறது. பூச்சிகள் ஒன்றிலிருந்து ஒன்றுக்குப் பரவி, ஒன்றில் மருந்து அடித்தாலும், பக்கத்தில் இருக்கும் பயிரில் போய் பூச்சிகள் வளர்ச்சியடைகிறது. யாராவது ஒருவர் அலட்சியமாக இருந்தாலும், எல்லோருக்கும் தொல்லை. ஆகவே, எல்லோரும் ஏககாலத்தில் ஒரே பயிரை—நடவு நடுவதில் ஒரு மாதம் 15 நாட்கள் வித்தியாசம் இருந்தாலும் பரவாயில்லை—செய்யும்படிச் செய்தால், பிரச்னைகள் தீர்ந்துவிடும்.

விவசாயம் சீராகவும், சிறப்பாகவும் செய்யப்பட வேண்டும். அப்படி செய்யாவிட்டாலும் பூச்சிகள் வரலாம். வரப்புகளில் புற்பூண்டுகள் இருக்கின்றன. வரப்புகள் சுத்தமாக இல்லாவிட்டால் கூட பூச்சிகள் பரவ ஏதுவாகும்.

கோவையில் விவசாய ஆராய்ச்சிக் கல்லூரி இருக்கிறது. இப்பொழுது அதை விரிவு படுத்தியிருக்கிறார்கள். அதிக மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். ஆனால், படித்தவர்கள் உத்தியோகத்திற்காகவே அங்கு வந்து படிப்பவர்களாக இருக்கிறார்கள். உண்மையான விவசாயிகள் வருவதில்லை. உத்தியோகத்திற்குப் போகக் கூடியவர்களே அங்கு வரும் நிலை இருப்பதால், அந்தக் கல்வி அதிகமாக விவசாயிகளுக்குப் பயன் படவில்லையென்று நினைக்கிறேன்.

சமுதாய நல திட்டங்கள் நிறுவியிருக்கும் பிராந்தியங்களில், விவசாய மேஸ்திரிகள் இருக்கிறார்கள். ஆனால், சமுதாய நல வட்டாரங்களில், கிராம சேவக்குகள்தான் எல்லாவற்றையும் செய்கிறது. மேஸ்திரிகளை நீக்குவதாக கூட சில அறிகுறிகள் தென்படுகின்றன. அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து ஏற்கனவே இருக்கக் கூடிய விவசாய மேஸ்திரிகளை நீக்காமல், சீக்கிரமாக இரண்டொரு மாதங்களில், வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

விவசாயத்திற்கு கால் நடைச் செல்வம் சீறும் சிறப்புமாக இருக்க வேண்டும். இந்த விவசாய மானியத்தோடு கால்நடை இனத்தையும்சேர்த்துக் கொண்டு வந்திருப்பது மிகமிக நல்ல காரியம் என்று நினைக்கிறேன். நம் கால் நடைகள், கால் நடை இனங்கள் உலகத்தில் இருக்கும் எந்த இனத்திற்கும் குறைந்தது இல்லையென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். எல்லாம் சிறந்ததுதான். ஆனால் நமது இந்தியாவிலேயே 30 சதவீதம் கால் நடைகள் இருக்கின்றன. ஒரு சில பால் கொடுக்கும் படியான தன்மை உடையவை. சில வண்டிகள் இழுக்கக்கூடிய, வேலை செய்யக்கூடிய தனி இயல்பு உடையவை. ஹாலிகார், அம்ருதமகா, காங்கேயம் போன்றவை இந்த இரண்டாவது இனத்தைச் சார்ந்தது. பால் கொடுக்கும்படியான—பால்பார், சிந்து முதலியன இங்கே மிகச் சிறந்ததாக இருக்கிறது. பஞ்சாப் பகுதியிலே அரியானு என்ற சாதி பசுக்கள் இரண்டுக்கும் பிரயோசனப் படக்கூடியதாய் இருக்கின்றன. காங்கேயம் மாதிரியாக வேலை செய்யக்கூடிய இயல்பும் சிந்து, பாம்பார் போல பால் கொடுக்கக் கூடிய இயல்பும் பெற்று இருக்கின்றன. பத்தாயிரம் பவுண்டு பால் கொடுக்கக்கூடிய இங்கிலீஷ் மாடுகள் இருக்கின்றன. அதுபோலவே அரியானு சாதிப் பசுக்கள் பத்தாயிரம் பவுண்டு, ஆயிரங் காலன் பால் கொடுக்கக்கூடியது. இவை நம் தேசத்திலேயே இருக்கின்றன. அவற்றை அதிகமாக உற்பத்தி செய்தால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தால் பால் உணவை அதிகப்படுத்த முடியும். அதுவும் சமுதாய நல திட்டங்கள் உள்ள இடங்களில் செயற்கை முறையில் கரு தரிக்கச் செய்வதன் மூலம் இந்த இனம் அதிகமாக வளர்க்கப்பட வேண்டும். பட்டணத்தில் இருப்பவர்களுக்கு இதனுடைய அருமை பெருமைகள் தெரிவதில்லை. நண்பர் சேனுபதி கவுண்டர் கூட செயற்கை முறையில் கரு தரிக்கச் செய்யும் திட்டம் எவ்வளவு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்று சொன்னூர். என் பகுதியில் ஒரு கிராமத்தில் எட்டாயிரம் மாடுகள் அவ்வாறு செயற்கை முறையில் கரு தரிக்கும் படியாகச் செய்யப்பட்டு இன்று அவை 5 ஆயிரம் கன்றுகள் ஈன்று இருக்கின்றன. இதனுல் தேசீய வருமானம், தனிப்பட்ட விவசாயிகளுடைய வருமானம் எவ்வளவு அதிகரித்து இருக்கிறது என்று பார்க்க வேண்டும். சாதாரண கன்றுகளுக்கே இன்று 50 ரூபாய், 100 ரூபாய் என்று விலை இருக்கும் போது இந்தச் சாதி கன்றுகளுக்கு 200 ரூபாய், 250 ரூபாய் என்று விலை இருக்கிறது. ஐந்தாயிரம் கன்றுகள் அந்தப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றுல் அந்தப் பகுதியில் உள்ளவர்களின் தேசீய வருமானம் எத்தனை அதிகரித்து இருக்கிறது என்று கவனிக்க வேண்டும். ஆகவே இப்படி பல வகையிலும் தேசீய வருமானத்தை பெருக்குவதற்காக நமது விவசாய மந்திரிகள் அதிக அக்கறையோடு வகுத்திருக்கிற பற்பல திட்டங்களிலும் இன்னும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். அப்படி அவர்கள் இருக்கின்ற காரணத்தினுல்தான் டெல்லியில் மிகச் சிறப்பாக நடந்த அகில உலக விவசாயக் கண்காட்சியில் நமக்குச் சிறப்பு பதக்கம் கிடைத்திருக்கிறது. ஆகவே கிராமத்தில் இருக்கும் படியான விவசாயிகளுக்குத் தான் இதன் பயன் நன்ருகத் தெரியும்.

இன்னென்று. இப்போது ஆங்காங்கே கரும்பு போட்டு நன்ருகச் சாகுபடி செய்து வருகிருர்கள். கரும்புகளுக்குத் தண்ணீர் வைப்பதற்குச் சில சிக்கல்கள் இருக்கிறது. கரும்பு சாகுபடிக்குத் தண்ணீர் இறைக்க மோட்டார், அப்புறம் ஆலை வைக்கிற போது உபயோகப்படுத்துகிற மோட்டார் என்று தனித்தனியாகப்பிரித்து சார்ஜ் பண்ணுவதானது ஏழை விவசாயிகளை அதிகமாகப் பாதிக்கும். தண்ணீர் இறைக்கும் மோட்டாரில் இருந்தே ஆலை வைக்கும் போதும் உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடிய சலுகை அவர்களுக்குக் கிடைப்பது இல்லை. ஆகவே இதைக் கவனித்து தண்ணீர் இறைக்கிற மோட்டாருக்கு சார்ஜ் கட்டிவிட்டால் ஆலை வைக்கும் போது தனியாக சார்ஜ் கட்ட வேண்டியது இல்லை என்ற சலுகை கொடுப்பது மிகவும் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். கனம் விவசாய அமைச்சர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். எங்கள் கோயம்புத்தூர்



ஜில்லாவில் உற்பத்தி செய்யப்படுகிற கரும்புதான் உலகத்திலேயே உற்பத்தி செய்யப்படுகிற கரும்புகளை விட மிகவும் சிறந்தது என்று. ஏக்கருக்கு 60 டன் சராசரி விளைகிறது. எங்கெல்லாம் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் ஆலை ஆவதற்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். நமக்குச் சோலைகள் வேண்டும், கனிகள் வேண்டும், ஆலைகள் வேண்டும். இது எல்லாம் இருந்தால் தான் கம்பன் கண்ட ராம ராஜ்யம், மகாத்மா காந்தி கண்ட ராம ராஜ்யம் ஏற்படும்.

ஆலைவாய்க் கரும்பின் றேனு மரிதலைப் பாளைத் தேனும்
சோலைவாய் கனியின்றேனுந் தொடை யிழிபிருவிலின்றேனும்
மாலைவா யுகுத்த தேனும் வரம் பிகந் தோடி வங்க
வேலைவாய் மடுப் பவுண்டு மீனெலாம் களிக்கு மாதோ

என்று இந்த விவசாயம், மீன் எல்லாம் சேர்ந்து இருக்கும்படியான ஒப்பற்ற சமுதாயம் அமைந்து நிலவுவதற்கு இந்த மானியம் உறுதுணையாக இருக்கிறது என்று கூறிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் பேரில் கொண்டு வந்திருக்கும்படியான வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக நம்முடைய பிராந்தியத்திலே விவசாய இலாகாவும் சரி, கால்நடை இலாகாவும் சரி நல்லபடியான பணிகளைச் செய்து வருகின்றது என்பதைப்பற்றி ஒருவராலும் மறுக்கமுடியாது.

ஆனால் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நம்முடைய சர்க்கார், மத்திய சர்க்கார் இன்னும் எந்த எந்த வகையில் விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும், என்ன என்ன உதவிகளைச் செய்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைப்பற்றி நாம் சற்று பரிசீலனை செய்யவேண்டும்.

முக்கியமாக நம்முடைய விவசாய இலாகாவிலே போதுமான நிபுணர்கள் இல்லை என்ற குறை எங்கு பார்த்தாலும் இருக்சிறது. அவர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுக்காத காரணத்தினுல் அந்தக் கல்லூரிகளில சேர்ந்து படிக்கக்கூட அதிகமா்ன மாணவர்கள் வருவது இல்லை. ஆனல சமீப காலத்தில் அந்தக் கல்லூரிகளிலும் மாணவர்கள் சேருகிருர்கள் என்றபோதிலும் அந்தக் கல்லூரிகளின் எண்ணிக்கைகளை அதிகரித்து இன்னும் அதில டெமான்ஸ்ட்ரேடர்களுக்கு இரண்டு வருஷத்தில், ஒரு வருஷத்தில் பயிற்சி கொடுக்கும்படியான சில ஏற்பாடுகளையும் செய்து அதிகமான நிபுணர்களைத் தயாரிக்கவேண்டும். ஒவ்வொரு பிர்க்காவிலும் இரண்டு மூன்று நிபுணர்களுக்கு மேல் இருக்கும்படியாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த இலாகா நாளுக்கு நாள் விருத்தியாகும். விவசாயிகளுக்கும் அதிக அனுகூலம் ஏற்படும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஒரு டெமான்ஸ்ட்ரேடர் என்று எடுத்துக்கொண்டால் அந்த அந்த பிராந்தியங்களில் அவர்களுக்கு மேலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு ஸ்டாடிஸ்டிக்ஸ் (statistics) புள்ளி விவரங்கள் எடுத்துக்கொடுக்கத்தான் ஒரு மாதத்தில் சுமார் 25 நாட்களுக்கு மேலாகிறது. அப்படி அவர்கள் இவ்வளவு புள்ளி விவரங்கள் சேர்த்துக்கொண்டிருக்கவேண்டுமா என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். மேலதிகாரிகளுக்கு இவர்கள் புள்ளிவிவரங்கள் எடுத்துக்கொண்டிருப்பதும், அவர்கள் அதைப் பரிசீலனை செய்து கேள்விகள் கேட்பதுமாகப் போய்க்கொண்டிருப்பதால் கிராமங்களுக்கு இவர்கள் போவதற்கே அவகாசம் இருப்பது இல்லை. இவைகளை எல்லாம் பார்த்து இன்னும் அதிக நிபுனர்களை நியமித்தாவது விவசாயிகளுக்கு அதிக உதவி செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக சமீப காலத்தில் பூச்சிகளினுல் பயிர்கட்கு அதிக நாசம் ஏற்பட்டுவிட்டது. விவசாயிகளுக்கு அதனுல் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம். பூச்சி மருந்து வழங்குவதில் இப்போது சலுகை கொடுத்து

அதை விநியோகித்துவந்த போதிலும் சில பிராந்தியங்களில் அந்தக் காலத்தில் அவர்களுக்கு கிடைப்பது இல்லை. இப்போது சாங்ஷன் செய்திருப்பத்தைவிட இன்னும் அதிகமாக சாங்ஷன் செய்து விவசாயிகளுக்கு காலாகாலத்தில் உதவி செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தவிர மொபைல் வான் வைத்து அதிலும் நிபுணர்களை அனுப்பி வைத்து எந்த எந்த இடங்களில் அதிகமாக பூச்சி விழுந்திருக்கிறதோ அங்கெல்லாம் அதைப் போக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஆகும் செலவை அந்த அந்த கிராமத்தார்களிடமே வசூல் செய்துகொண்டாலும் உடனடியாக நிபுணர்களை அனுப்பி வைக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பூச்சி மருந்துகளின் விலை அபாரமாக இருக்கிறது. விவசாயிகள் அவ்வளவு அதிகமான விலை கொடுத்து வாங்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே எப்படி அதைக் குறைந்த விலைக்குக் கொடுக்கலாம் என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காண்டூர் பண்டிங் (**Contour Bunding**) வரப்புபோடுதல், சாயில் கன்சர்வேஷன் (**Soil Conservation**) மண் அரிப்பு தடுத்தல் சில பிராந்தியங்களில் நடந்து வருகிறது. சென்ற வருஷம் நீலகிரிக்குப் போய் இருந்தபோதும்கூட ஆங்காங்கு வேலை செய்துவரும் 1-00 p.m. முறைகளைப் பார்த்தோம். நன்றாக வேலை நடந்துகொண்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் சுமார் ஒரு லட்சம் ஏக்கரா வரையில் சாயில் கன்சர்வேஷன் செய்வதற்கு ஏற்பாடு நடந்துகொண்டு வருகிறது. இருந்த போதிலும் இந்த வேலைகளை சமமாகப் பிரித்துக் கொடுத்து விவசாயிகளின் உதவியைக் கொண்டு எல்லாப் பிராந்தியங்களுக்கும் உடனடியாக செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சாயில் டெஸ்டிங் மண்வளம் பரிசோதனை யூனிட்டைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அவர்களது ஆரம்ப உரையில். கோயம்புத்தூரில் மட்டும் தான் இந்த யூனிட் இருக்கிறது என்றும் சொன்னார்கள். மற்ற பிராந்தியங்களுக்கும் செய்யவேண்டும். ஆனால் பொறுத்துத்தான் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். நமது தமிழ் நாட்டில் நாலைந்து இடங்களிலாவது ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஏற்படுத்தி, இரண்டு, மூன்று ஜில்லாக்களுக்கு ஒன்றாவது ஆரம்பிக்கவேண்டும். முக்கியமாக சென்னையில் அப்படி ஒரு யூனிட் இருக்கவேண்டும். அதற்கு உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி விவசாய இன்பர்மேஷன் சென்டர்ஸ், ஜில்லா விவசாய ஆபீஸ்களில் இம்மாதிரி பிரத்தியேகமாக ஒரு க்ளார்க் போட்டு, விவசாயிகளுக்கு சர்க்கார் என்னென்ன செய்கிறார்கள் என்பதை விவசாயிகள் தெரிந்து கொள்வதோடு, இன்னும் என்னென்ன செய்யப் போகிறார்கள் என்பதையெல்லாம் விவசாயிகள் தெரிந்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது, அநேக விவசாயிகட்கு இந்த இலாகா என்ன செய்கிறது என்பதே தெரியாது. அடுத்தபடியாக, க்ரீன் மன்யூர் சப்ஸிடி—பசுந்தாள் உரம் மானியம். ப்ளாக் ஏரியாக்களில்தான் இது அதிகமாக கொடுக்கப்பட்டு வருகிறது. இது முக்கியமானது. காடுகள் அநேக இடங்களில் போய்விட்டதாலும், பசுந்தாள் உரம் அதிகமாக கிடைக்காததாலும் எல்லாப் பிராந்தியத்திற்கும் இந்த சப்ஸிடியை இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே கொடுக்கவேண்டும். ப்ளாக் ஏரியாவில் மட்டும் கொடுத்தால் போதாது. ப்ளாக் ஏரியாவுக்கு ஒரு ஸ்பெஷல் வித்தியாசம் இருந்தாலும், பசுந்தாள் உரம் மான்யம் கொடுப்பதில் எல்லாப் பிராந்தியங்களுக்கும் ஒரேமாதிரியான சலுகை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சிறிய டிராக்டர்கள். சமீபத்தில் டெல்லியில் நடந்த எக்ஸ்பிஷனைப் பார்த்தேன். அந்நியச் செலாவணியை எப்படியாவது பெற்று நம் மாகாணத்திற்கு நவீன இயந்திரங்களை, புல்டோஸர்கள் போன்றவற்றை அதிகமாக வர



வழைக்க. இந்த புல்டோஸர்கள் குறைந்தது இரண்டல்லது மூன்றுக்கு குறையாமல் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் கொடுக்கப்படவேண்டும். அது விவசாய முன்னேற்றத்திற்கு மிகவும் ஏதுவாகயிருக்கும் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவே, சிறிய ட்ராக்டர்களை வரவழைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்தபடியாக **well subsidy scheme** (கிணறு மான்யம்). முன்பு யுத்தம் நடந்த காலத்திலும் அதற்குப் பிறகும் குறைந்தது ஒரு கிணறு எடுப்பதற்கு 500 ரூபாய்க்குக் குறையாமல் வெல் ஸப்ஸிடி கொடுத்ததால் 10,000 கிணறுகள் தோண்டப்பட்டு, கிணறு ஒன்றுக்கு ஒரு ஏக்கர் என்று வைத்துக் கொண்டாலும் 10,000 ஏக்கர்களுக்கு குறையாமல் அவைகளில் உணவுப் பொருள் உற்பத்தி செய்தது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். இந்த வருடத்திலிருந்து வரண்ட பிரதேசங்களில் இதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 500 ரூபாய்க்கு குறையாமலும், சில பிராந்தியங்களில் ஆயிரம் ரூபாய் என்றும் வெல் ஸப்ஸிடி கொடுத்து உணவு உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக டீஸல் ஆயில். அதில் முக்கியமாக க்ரூட் ஆயில். முன்பு சர்க்கார் இதன் மீதுள்ள வரியை அதிகப்படுத்தும்போது, பின்னால் வரி குறைப்பதுபற்றி யோசிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அதுபற்றி நாளது வரையில் ஒன்றுமே செய்யவில்லை. சமீபத்தில் மத்தியசர்க்கார் மறுபடியும் திடீரென்று அந்த வரியை ஏற்றி விட்டார்கள். அதுபற்றி நான் ஒரு கணக்கு போட்டுப் பார்த்தேன். ஒரு ஹார்ஸ் பவர் (குதிரை ஓட்டம்) என்ஜினுக்கு சுமார் 40 ரூபாய்க்கு குறையாமல் எண்ணெய் ஆகிறது. ஆகவே, ஐந்து ஹார்ஸ் பவர் உள்ள டீஸல் கருவியை எடுத்து உபயோகிக்க வேண்டுமென்றால் குறைந்தது மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு மேல் எண்ணெய்க்கு செலவாகிறது. அதனால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மின்சாரம் ஒவ்வொரு கிராமத்திற்கும் அதிகமாகிக் கொண்டு வருகிறது. இப்பொழுது, டீஸல் ஆயில், க்ரூட் ஆயில் என்ஜின்கள் குறைந்து விட்டன. ஆகவே, இதை உபயோகிப்பவர்களுக்கு பெர்மிட் ஸிஸ்டம் மாதிரி ஏதாவது ஒன்றை ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அடுத்தபடியாக, விவசாயத்திற்கு இன்றியமையாதது, கால்நடை. இந்த இலாகா நல்ல முறையில் வேலை செய்து வருகிறது. ஆனால் நம் தேசத்தில் கால்நடைகளுக்கு போதுமான மேய்கால்கள் இல்லை. ஆகவே கால்நடைகளுக்காக எவ்வளவு அதிக ஏக்கர்கள் மேய்கால்களுக்காக கொடுக்க முடியுமோ அவ்வளவு ஒவ்வொரு பிராந்தியத்திலும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காட்டிலாகாவும், அவர்கள் பரிவாரங்களும் இதை உடனடியாக கவனிக்க வேண்டும். சரியானபடி மேய்கால்கள் இல்லாவிடில் கால்நடை விருத்தி அடைய முடியாது. ஆஸ்ரேலியாவிலிருந்தும் ரஷ்யாவிலிருந்தும் ஆடுகளை வரவழைக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முன்பே வரவழைத்திருப்பதாகவும் சொன்னார்கள். அதைக் கேட்டு சந்தோஷப்படுகிறேன். ஆஸ்திரேலியாவில் மேய்கால்கள் அதிகமாக இருப்பதினால்தான் ஆடுகளின் விருத்தி ஏற்பட்டு ஒவ்வொரு விவசாயியும் முன்னேறி வருகிறான். காட்டு இலகா மரங்களை வைத்து அவைகளை உற்பத்தி செய்தாலும்கூட, சிலவிடங்களை மேய்காலிற்காக காட்டு இலாகா ஒதுக்கி வைப்பதற்கு உத்தரவு உடனடியாகப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு கால்நடைப் பண்ணை இருக்க வேண்டியது அவசியம். அதற்கு தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இரண்டொரு பிராந்தியங்களில்தான் இந்தப் பண்ணைகள் ஆரம்பித்து அவைகள் நல்ல முறையில் நடந்து வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு சிறிய பண்ணையை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கீ வில்லேஜ் சென்டர்ஸ் கேந்திர கிராமங்கள், ஆர்டிபிஷியல் இன்செமினேஷன் சென்டர்ஸ் செயற்கை முறை கருதரிக்கும் சென்டர், ஸப்ளிமென்டல் எக்ஸ்டென்ஷன் சென்டர்ஸ் உப கிராம கேந்திர அபிவிருத்தி நிலையம்—சென்டர்ஸ்—இவைகள் எதிர்

[Sri V. K. Ramaswamy Mudaliar] [18th March 1960

பார்த்ததற்கு மேலாக விருத்தி அடைந்து வருகிறது. ஆனால் இதற்கு ஒதுக்கப் பட்டிருக்கும் பணம் போதாது. ஆகவே எல்லாப் பிராந்தியங்களிலும் இவைகளை விருத்தி செய்ய, அதற்காக எவ்வளவு அதிகப்படி தொகை கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்து அவைகளை மேலும் நல்ல முறையில் விருத்தி அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக, ராணிப்பேட்டையில் ஒரு ரிசெர்ச் ஸ்டேஷன் வைத்திருக்கிறோம். அதனால் நமக்கு, ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஐந்து லட்சம் ரூபாய் லாபம் வருகிறது. அந்த ரிசர்ச் ஸ்டேஷனை சென்னைக்கு அருகாமையில் கொண்டு வர வேண்டும். அதனால் அநேக லாபங்கள் சர்க்காருக்கு இருக்கிறது. அதனால் விவசாயிகளுக்கும் அதிக நன்மை இருக்கிறது. அடுத்தபடியாக, மில்க் காலனி (பால் காலனி), ரெட்ஹில்ஸ் அருகில் வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் தெற்கே இருப்பவருக்கு பால் போக்குவரத்திற்கு கஷ்டமாகயிருக்கும். அதனால் விலையும் ஏறும். தேனாம்பேட்டை போன்ற ஒரு நடு இடத்தில் வைத்தால் அநேக விதத்தில் அது ஆதாயமாகயிருக்கும். அதற்கு கார்ப்பரேஷன் தண்ணீர் கொடுக்குமா என்ற நம்பிக்கைக் குறைவு இருக்கிறதாக கேள்விப் பட்டேன். கார்ப்பரேஷன் அதிகாரிகளிடம் இதுபற்றி கேட்டு, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பால் பேரில் விதித்திருக்கக்கூடிய வரியை எடுக்க வேண்டுமென்று நேற்று நான் சொன்னேன். இன்றும் அதைச் சொல்ல விரும்புகிறேன். அதை எடுப்பதற்கோ அல்லது குறைப்பதற்கோ வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரெட்ஹில்ஸ்ஸில் ஏற்படுத்தப் பட்டிருக்கிற காலனி போதாது. தெற்கேயும், மீனம்பாக்கம் போன்றதொரு இடத்தில் ஒரு காலனி ஏற்படுத்த வேண்டும். மேற்கே பூந்தமல்லிக்கு அருகாமையில் ஒரு காலனியும் ஏற்படுத்த வேண்டும். அப்படியானால்தான் நமக்குள்ள கஷ்டம் தீரும். இப்பொழுதுள்ள ஒரு காலனி போதாது. இதையும் அமைச்சர் அவர்கள் ஆலோசித்து, நான் சொன்ன யோசனைகளைக் கவனித்து விவசாயிகளுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக நன்மை செய்ய முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்ட அங்கத்தினர்கள் குறைகளை தெரிவித்தார்கள், யோசனைகளை தெரிவித்தார்கள், பாராட்டுதல்களையும் தெரிவித்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் என்னுடைய நன்றியை முதலாவது தெரிவித்துக் கொள்கிறேன். விவசாய அபிவிருத்தியில் நாம் எவ்வளவு சாதித்து இருக்கிறோம், அல்லது நாம் எவ்வளவுதான் சாதித்து இருந்த போதிலும் நாம் திருப்தி அடைவது கூடாது என்பதை முதன்மையாக வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். விவசாயத்தில் நாம் எவ்வளவோ முன்னேற்றம் அடைய வேண்டியிருக்கிறது. அமெரிக்காவைப்பற்றி சொல்லுகின்றார்கள். நமது நாட்டைப் பொறுத்த வரையில் முக்கால் பங்கு பேரும்—100-க்கு 72 பேரும் விவசாயத்தைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவை எடுத்து கொண்டால், 199-க்கு 12 பங்குதான் விவசாயத்தை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட அமெரிக்காவிலுள்ளவர்கள் தங்களுடைய தேவையை விட இரட்டிப்பாகத்தான் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதிகமாக உற்பத்தி செய்வதை எப்படி விற்கிறது என்கிற கவலையே அவர்களுக்கு கிடையாது. தங்களுடைய தேவைக்கு போதுமான அளவு கிடைக்கிறது. ஆகவே மேலும் உற்பத்தியை பெருக்க வேண்டாம் என்று அவர்கள் நினைக்கவில்லை. மேலும் மேலும் அவர்கள் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். டெல்லியில் நடைபெற்ற அமெரிக்கன் ஸ்டால்-லில் போய் பார்த்தவர்கள் இதை நன்கு உணர்ந்து கொள்ள முடியும். அதே போல் எல்லா நாடுகளிலும், போலந்து, கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகளிலும் செய்து வருகிறார்கள் என்பதை இந்த ஸ்டால்களை பார்த்தவர்கள் உணருவார்கள். இவர்கள் எல்லாம் புதிய விழிப்புடன்



18th March 1960] [Sri M. Bhaktavatsalam]

விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்த வரையில் நாம் பல வேலைகளைச் செய்து வருகிறோம். சர்க்கார் அதிகாரிகளும் அபிவிருத்தி செய்வதற்காக எவ்வளவோ பணி புரிந்து வருகிறார்கள். தனிப்பட்டவர்களுக்கும் நல்ல பணிகள் செய்து வருகிறார்கள். இவர்கள் செய்யும் வேலைகளை எல்லாம் ஒன்று திரட்டி இன்னும் அதிகமாக விவசாய அபிவிருத்தியில் எப்படி ஈடுபடுவது என்பதில்தான் நம் கருத்து இருக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய அபிப்பிராயம். அதற்குரிய வகையில்தான் இந்த விவாதம் நடைபெற்றது.

முதலில் வெட்டுப் பிரேரணையை கொண்டு வந்து திரு. அன்பழகன் அவர்கள் ஒன்று குறிப்பிட்டார்கள். இப்போது விவசாயம் என்ற துறையும் மீன் துறை என்ற இனமும் ஒன்றாக இருக்கிறது. இவற்றை தனியாக பிரித்து மீன் இலாகாவுக்கு என்று தனியாக ஒரு டிமான்ட் தனித் வந்திருந்தால் நல்லதாக இருக்கும் என்று சொன்னார்கள். இப்போதுள்ள நிலைமைப்படி மீன் இலாகா விவசாய இலாகாவின் கீழ்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. இதில் என்னுடைய சொந்த அபிப்பிராயம் என்னவென்றால், மீன் இலாகா பல வேலைகளை நிறைவேற்றி வருகின்றது. மேலும் மேலும் இதில் கவனம் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது, ஆகவே இது தனியான இலாகாவாக இயங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய சொந்த அபிப்பிராயமும் கூட. இந்த யோசனையை மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களிடமும் தெரிவிக்கிறேன். அவர்கள் சம்மதித்தால் இதற்கு தனியாக பிரிக்கப்பட்டு இனிமேல் வரும் ஆண்டில் தனித் தனியாக விவாதிக்கலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதை அங்கத்தினர்கள் கூடிய மட்டும் எதிர்பார்க்கலாம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஏதோ ஒரு பெரிய ரகசியத்தை தெரிவித்து விட்டேன் என்று யாரும் பின்னால் சொல்லக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : இதில் என்ன ரகசியம் இருக்கிறது? பின்னால் இதுவும் ஏதோ ஒரு பட்ஜெட் ரகசியம் என்று சொல்லக்கூடாது என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன் . . . . . . . .

SRI M. KALYANASUNDARAM : • சபையில் சொல்லலாம், ஆனால் வெளியில்தான் பட்ஜெட் விஷயத்தை முன்கூட்டியே தெரிவிக்கக் கூடாது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தெரிவிக்கக்கூடிய விஷயத்தை எங்கு வேண்டுமானாலும் சொல்லலாம், அதில் எந்த விதமான தவறும் இல்லை . . . .

கனம் அங்கத்தினர் அவர்கள் சில குறைகளைப்பற்றி சொன்னார்கள். இதில் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், நம்முடைய காரியங்களை எல்லாம் நல்ல முறையில் நடத்துவதற்கு போதிய திறமை, போதிய அனுபவம், அதற்கு வேண்டிய வசதிகள் இவைகள் வேண்டும். நம்முடைய பல திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையாகத்தான் இருக்கின்றன. இம்மாதிரி நாம் தேர்ந்து எடுக்கப்படுகிற ஆட்களுக்கு நல்ல திறமை இருக்க வேண்டும், அதே போன்று வசதியிருக்கவேண்டும். அதே போன்று நல்ல அனுபவமும் இருக்கவேண்டும். இவைகள் எல்லாம் சிற்சில சமயங்களில் குறைந்துதான் விடுகிறது. புதிய திட்டங்களைப் போடுகிறோம், அவைகளை அமல் நடத்தும்போது சில விஷயங்களில் அனுபவம் இல்லாமல் போய் விடுகிறது, திறமை யில்லாமல் போய்விடுகிறது. நமக்கு ஏராளமான பயிற்சி பெற்றவர்கள் தேவை. அது மட்டுமல்ல, இவ்விதமான ஏராளமான பயிற்சி பெற்றவர்கள் நமக்கு கிடைக்காததன் காரணமாக உடனடியாக வந்தவர்களைக் கூட—நேற்று பாஸ் செய்துவிட்டு வந்தவர்களைக் கூட—நாம் வேலை செய்வதற்கு போடுகிறோம். இதன் காரணமாக சில குறைகள்

ஏற்படத்தான் செய்கின்றன. இவைகள் எல்லாம் இருந்தாலும்கூட விவசாயத்தைப் பொறுத்தவரை நாம் இதில் ஸப்ளிமெண்ட் செய்து கொண்டுதான் இருக்கிறோம். என்றாலும் இதில் நாம் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. இதோடு நான் முன்னால் குறிப்பிட்ட மூன்று அம்சங்களோடு நாணயமும் வேண்டியிருக்கிறது. இது சில இடங்களில் குறைவாகத்தான் காணப்படுகிறது. இருப்பது எல்லாம் சரி என்று நான் சொல்லவில்லை. இம்மாதிரிப்பட்ட குறைகள் எல்லாம் அவ்வப்போது அரசாங்கத்தின் கவனத்திற்கு வரும்போது அதன்மீது தக்க கவனம் செலுத்தப்பட்டுதான் வருகிறது, அதை தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன. இது பப்ளிக் செக்டாராயிருந்தாலும் சரி, பிரைவேட்செக்டாராயிருந்தாலும் சரி, தவறுகள் நடப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படும்போது அவைகளை எல்லாம் கவனிக்காமல் இருக்கிறோம் என்று சொல்வதற்கில்லை. கவனித்து உடனடியாக அவைகளை தவிர்ப்பதற்கும் கவனம் செலுத்தாமல் இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதில் வேண்டிய கவனம் செலுத்த நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ஏதாவது தவறு செய்யுமானால் அவைகளை எங்கள் பக்கத்திலுள்ளவர்கள் சொன்னாலும் சரி, எதிர் கட்சியில் இருக்கின்றவர்கள் சொன்னாலும் சரி, அவ்விதம் குறைகளை எடுத்துச் சொல்லுகிறவர்களின் பேரில் நான் எப்போதும் வருத்தப்படுவதில்லை. அவ்விதம் சொல்லுவதை வரவேற்கிறேன். குறைகளை நன்றாகச் சொல்ல வேண்டியதுதான். சொல்லுவதுதான் நல்லது. ஆனால், அரசாங்கத்தை நடத்துகின்றவர்கள் நிர்வாக இயந்திரத்திலுள்ள சில அதிகாரிகள், எல்லோரும் ஒன்று சேர்ந்துதான் ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்க நிர்வாக இயந்திரத்தை சில அதிகாரிகள் நடத்துகிறார்கள். ஆகவே மந்திரிகள் இதற்கு பொறுப்பு அல்ல என்று நான் சொல்ல வரவில்லை. அதிகாரிகள் ஏதாவது குறைகள் செய்திருந்தால் அதற்கு நாங்கள்தான் பொறுப்பு, அதை இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நான் முன்பு குறுக்கிட்டு சொன்னது, பொதுவாக ஒரு குறிப்பிட்ட அதிகாரியைப்பற்றி குறைகளை சொல்லும்போது, "நான் இவ்விதம் கேள்விப்பட்டேன்" என்றெல்லாம் சொல்லுவது சரியல்ல என்றுதான் குறுக்கிட்டு சொன்னேன். கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ தங்கள் வழக்கம்போல் சிற்சில விஷயங்களைப்பற்றி சொன்னார்கள். அதற்கு கனம் அம்மையார் அவர்களும் வழக்கம்போல் ஏதோ சொன்னார்கள். இவ்விதம் வாக்குவாதம் நடந்தது. அதில் பதில் கூறிய அங்கத்தினர் அவர்கள் ஏதோ அரசாங்கம் இதில் ஒளித்துக் கொண்டது என்று அரசாங்கத்தின்மீது பாய்ந்தார்கள். இவை எல்லாம் பழைய கதை, அதை நான் இப்போது கிளற விரும்பவில்லை, என்றாலும் இதைப்பற்றி ஒரு கேள்வி வந்திருந்தது. அப்போது இதைப்பற்றி யாரும் உபகேள்விகள் கேட்கவில்லை. அப்போது யாராவது இதைப்பற்றி கேட்டிருந்தால் இதில் யார் ஒளிந்துகொண்டார்கள் என்பதைப்பற்றி சொல்லியிருப்பேன், ஆனால் இப்போது நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

**SRI K. ANBAZHAGAN**: On a point of personal explanation, Sir. அப்போதும் இதைப்பற்றி விசாரித்த நீதிபதியின் அறிக்கை ஒன்று மேஜைமீது வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் முழு விவரங்களும் அடங்கியிருக்கின்றன. ஆகவே இந்த அறிக்கையே போதுமானது என்றும் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் தீர்மானித்தார்கள். அதில் அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்ட பின்னால் இப்போது நான் அதைப்பற்றி கிளற விரும்பவில்லை என்று அமைச்சர் அவர்கள் பேசுவது பொருத்தமாகுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: இதைப்பற்றி ஒரு கேள்வி பின்னால் வந்தது, அப்போது உபகேள்விகள் கேட்கக்கூடாது என்று யாரும் தீர்மானிக்கவில்லை.



**SRI K. ANBAZHAGAN**: அன்றைய தினம் நான் லேட்டாய் வந்தேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: லேட்டாய் வந்திருக்கக் கூடாது. சரியான நேரத்தில் வந்து கேள்விகள் கேட்டிருக்கலாம். அதல்லாமல் எதையாவது சொல்ல வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தால் அதையும் சமாளிக்க நான் தயாராய் இருக்கிறேன்.

(ஸ்ரீ க. அன்பழகன் அவர்கள் பேசுவதற்கு எழுந்தார்.)

**DEPUTY SPEAKER**: The Hon. Minister is not yielding,

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன சில குறைகளைப்பற்றியுள்ள சில விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். சில தவறுகளை சொன்னார்கள். இவைகளை எல்லாம் விஸ்தாரமாக சொல்லுவதற்கு அவகாசம் இல்லை. இதைப்பற்றி கேள்விகள் போட்டால் அப்போது விவரங்களை தெரிவிக்கிறேன். அவர்கள் 35 ஆயிரம் சங்குகள் காணாமல் போய்விட்டன என்று சொன்னார்கள். இதைப்பற்றி மீண்டும் கணக்கெடுத்ததில் 35 ஆயிரம் அல்ல, 3,500-தான் குறைந்திருந்ததாகச் சொன்னார்கள். அப்படியானால் இது அனுமதிக்கக்கூடியதுதான்—அலௌவ் பண்ணக்கூடியதுதான்—என்று கருதப்பட்டது. இருந்தாலும் இதுபற்றி விசாரணை செய்யப்பட்டுவருகிறது. இதைத் தவிர இதுபற்றி மற்ற விவரங்கள் இப்பொழுது கூறுவதற்கு இல்லை.

நைலான் நெட், சிந்தட்டிக் யார்ன்—பிஷர்மென்-க்கு கொடுக்கும் விஷயத்தில் சரியாக இவைகள் அவர்களுக்குப் போய் சேருவதில்லை என்பதைப்பற்றி சொன்னார்கள். இவைகள் எல்லாம் தனிப்பட்டவர்கள் மூலம் நடப்பதில்லை, கோவாப்ரட்டீவ் ஸொஸைட்டி மூலமாகத்தான் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதில் ஏதாவது தவறுகள் நடைபெறுகின்றன என்று கவனத்திற்கு வந்தால் அதிலும் தக்க கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுதான் வருகிறது. அதே மாதிரி "பாப்லோ" படகுகள் கொடுக்கும் விஷயத்திலும் சரியாக கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அதோடு இரண்டு வீணாகப்போய்விட்டன என்றும் சொன்னார்கள். வாஸ்தவம்தான், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 100 படகுகள் கட்டப்பட வேண்டும் என்று சொல்லி, இதற்கு ஒன்பது லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் 100 (நூறு) படகுகள் செய்வதற்கு க்ரூப்ஸ் ஆப் பிஷர்மென் அன்ட் பிஷர்மென் ஸொஸைட்டி மூலமாக 65 மெக்கனைஸ்ட் பாப்லோ பிஷிங் போட்கள் செய்யப்பட்டன. இவற்றில் நான்கு கேரளாவுக்கும் மைசூருக்கும் கொடுக்கப்பட்டன. இது தவிர இரண்டு படகுகள், 1958-ம் ௵ அக்டோபர் ௴ 6௳-யில் ராயபுரத்தில் ஏற்பட்ட புயற்காற்றின் காரணமாக கெட்டுப்போய் விட்டது. பின்னால் இதை ரிப்பேர் செய்வதற்கு என்ன ஆகும் என்று கணக்கிட்டுப் பார்த்ததில் 13 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று சொல்லப்பட்டது. இது மிகவும் நஷ்டம் என்று நினைத்து அது உடனடியாக ரிப்பேர் செய்யாமல் விடப்பட்டது. இதுதான் என்னிடம் இருக்கக்கூடிய விவரங்கள்.

அதேமாதிரி கிள்ளை ஃபிஷர்மென் கோவாபரேடிவ் சொஸைடி. அங்கே தவறுதல் நடந்ததாகத் தகவல் வந்தது. கார்கோ-கம்-பாஸஞ்சர். போட்டோடு கொலீஷன் ஆயிற்று. இப்போது டிரெயின் கொலீஷன் ஏற்படுகிறது. குட்ஸ் ட்ரெயினும் பாஸெஞ்சர் ட்ரெயினுமே கொலீஷன் ஆகிவிடுகிறது. இதிலே பாப்லோ போட்டும், கார்கோ-கம்-பாஸஞ்சர் போட்டும் கொலீஷன் ஆயிற்று. சும்மா இருக்கவில்லை. அதைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

[Sri M. Bhaktavatsalam] [18th March 1960

இது உப்புத்தான். தனியார் துறையில் ஆரம்பிப்பதற்கு முன்வர வேண்டும். இந்த கூட்டுறவு பண்ணை மூலமாக, கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக, கூட்டுறவு சாதனம் மூலமாக விவசாய வசதிகளைப் பெருக்க இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுப் பண்ணை என்றால் கலெக்டிவ் பார்மிங் என்பது அல்ல. அல்லது ஜாயிண்ட் பார்மிங் என்று எல்லோரையும் நிர்ப்பந்தம் பண்ண வேண்டுமென்பதும் அல்ல. நான் இதைப்பற்றி அன்றைக்கு சொன்னேன். ஒரு பத்திரிகை அதைப் புரிந்து கொள்ளாமல் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது. பத்திரிகை எழுதுகின்றவர்களிடம், ஆங்கில வார்த்தை கூறுகிறேன். அதற்குச் சரியான தமிழ் பதம் தெரியவில்லை, தமிழ் அறிஞர்கள் இருந்தால் சொல்லலாம். "ஆப்ஷெஷன்" இருக்கிறது, என்ன சொன்னாலும் புரியாது. விளக்கம் சொல்லுகிறோம். அதையும் புரிந்து கொள்ளாமல் உடனே ஒரு தலையங்கம் எழுதி விடுகிறார்கள்.

**DEPUTY SPEAKER**: I think the House has no objection to sit till the Hon. Minister finishes his speech.

1-30 p.m. **THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கூட்டுறவு வளர்ச்சியில் அதிக வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதா என்று ஒரு பத்திரிகை கேட்டிருக்கிறது. அந்தப் பத்திரிகை அவ்வாறு கேட்டிருப்பதால் நான் பதில் சொல்ல விரும்புகிறேன். நான் தம்பட்டம் அடித்துக்கொள்ளத் தயாராயில்லை. தஞ்சாவூரில் 57 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவை குடியானவர் கூட்டுறவுச் சங்கங்கள், குத்தகைதாரர் கூட்டுறவுச் சங்கங்கள்—முக்கியமாக கோவில் நிலங்களில் பயிரிடுபவர்கள்—இவ்வாறு பல கூட்டுறவுச் சங்கங்களாக இருக்கின்றன. சட்ட மன்றத்திலுள்ள சில அங்கத்தினர்களுக்குக்கூட அவைகளில் சிலவற்றுடன் நேரிடையான தொடர்பு உண்டு. ஒரு கனம் அங்கத்தினர், அங்குள்ள ஒரு கோவிலுக்கு முன்பு 87,000 ரூபாய் நஷ்டம் இருந்தது என்றும், கூட்டுறவு முறை வந்த பிறகு அக்கோவிலுக்கு 1,27,000 ரூபாய் லாபம் ஏற்பட்டிருப்பதாகவும் சொன்னார். எனவே அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பலனளித்து வருகின்றன. அவைகள் உற்பத்தியாளர்களுக்கும் பயன் அளிக்கின்றன. கோவாபரேடிவ் ஸெர்விஸ் வேண்டும். அது ஜாயிண்ட் பார்மிங்கில் தானாக 'எவால்வ்' ஆகும். இதில் எந்த விதமான கஷ்டமும் இல்லை. இதில யாருடைய உரிமையும் பறிக்கப்படுவதில்லை. பத்திரிகையில் நான் முன்பு கூறியபடி கேட்டிருந்ததால் நான் இதை யெல்லாம் சொன்னேன்.

விதைப் பண்ணைகளைப் பொறுத்தவரையில், விவசாய இலாகாவிற்கு இது ஒரு புதிய அனுபவம். பல கஷ்டங்களையும் உத்தேசித்து இதில மத்திய சர்க்காரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். திட்டம் அகில இந்திய அடிப்படையில் இருக்கிறது. விதைப் பண்ணைகள் லாபத்தைக் கருதிச் செயல்படக் கூடாது என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் சொன்னார். எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் சில யோசனைகள் சொல்லப்பட்டன. குறைகளை எடுத்துக்காட்டினால், அவைகளை கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன். நெல் பயிரைப் பொறுத்த வரையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் நமக்கு விதைப் பண்ணைகளிலிருந்து பரிபூரணமாக சுத்தமான விதைகள் கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மற்றப்படி, புஞ்சை தானியங்களைப் பொறுத்த வரையில், பாதிதான் 'கவர்' ஆகியிருக்கிறது. மீதி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் 'கவர்' ஆகும். நல்ல விதைகள் உற்பத்தியானாலும், அப்போதைக்கப்போது மாற்ற வேண்டியிருக்கிறது. இன்று உற்பத்தியாவது சுத்தமான விதைகள் என்றாலும் ஐந்து வருடங்களுக்குப் பிறகு மாற்ற வேண்டியிருக்கிறது. விவசாயம் தெரிந்தவர்கள் இதை உணருவார்கள். மேலும், இவை நியூக்ளியர் ஸீட்ஸ்தான். கிராமங்களில் இனிமேல் பஞ்சாயத்துக்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நல்ல விதைகள் வினியோகம் செய்வதற்கான முறையில் இதில கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



18th March 1960] [Sri M. Khatktavatsalam]

சிறு பாசனத் திட்டங்கள்பற்றியும் மின்சாரம்பற்றியும் பேசப்பட்டது. கடன் கொடுப்பதிலுள்ள கஷ்டங்கள்பற்றியும் பேசப்பட்டது. பாசனத் திட்டங்கள் நலல பலனை அளிக்கச்செய்வதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மின்சாரத்தைப் பொறுத்தவரையில நமது தமிழ் நாட்டில்தான் அதிகமான கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம். ஜாஸ்தி கொடுக்கப்பட்டிருக்கும் இடங்களில் குறைபாடுகளும் அதிகமாக இருக்கும். மின்சாரக் கட்டணம், மினிமம் காரண்டி, ஸ்டாகரிங் முதலியவைகள்பற்றிப் பேசினார்கள். இவைகள் எல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன. கொஞ்சமே அதிகப்படுத்தியிருக்கும் ரேட் பற்றிப் பேசப்பட்டது. இவை சம்பந்தமாக நான் சொல்லக்கூடியதைச் சொல்கிறேன். மின்சார பட்ஜெட் ரகசியத்தை நான் தெரிவித்துவிட்டதாக யாரும் என்பேரில் குறைசொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். மின்சார போர்டாரும் மதிப்பிற்குரிய எனது சகாவான மின்சார அமைச்சரும் இந்தக் குறைகளை நன்றாக கவனித்து விவசாயிகளுக்குச் சலுகை காட்டுவார்கள். கனம் மின்சார அமைச்சர் என்ன செய்யப் போகிறார் என்பதை, அவரிடமிருந்து தெரிந்துகொள்ளாமல் நான் சொல்கிறேன். (சிரிப்பு.)

ஒவ்வொரு கிராமத்திற்கும் விவசாய நிபுணர்கள் வேண்டும் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். அதை நான் முற்றிலும் ஒத்துக் கொள்கிறேன். உத்தியோகம் பார்ப்பது மட்டுமின்றி கிராமத்தில் வாழக் கூடிய நிபுணர்கள் வேண்டும். கோயம்புத்தூரில் மட்டுமே விவசாயக் கல்லூரி வைத்திருப்பது போதாது, ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாயக் கல்லூரி இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இப்போது சில ஹைஸ்கூல்களில் விவசாயத்தை எஞ்சினியரிங், டைப்ரைட்டிங் இவைகளைப் போன்று, 'டைபர்கேட் கோர்ஸ்' பாடமாக வைத்திருக்கிறார்கள். நான் செல்லும் இடங்களிலெல்லாம், இவ்வாறு செய்யலாம் என்று நானும் சொல்லி வருகிறேன். அவ்வாறு செய்தால் விவசாயத்திற்கு நிலம் வேண்டும். நிலம் கிடைக்கும். அதற்கான ஆசிரியர்களும் வேண்டும். விவசாயத்தை ஹைஸ்கூல்களில் டைபர்கேட் கோர்ஸ் பாடமாக வைக்கச் செய்வதில் கவனம் செலுத்திவருகிறேன்.

கால்நடை வளர்ச்சிபற்றிப் பேசப்பட்டது. கால்நடைகளுக்கு நிறைய மேய்க்கால் வசதி வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. இதில் ஒன்று, இன்று இருக்கும் வசதி குறையக்கூடாது; இரண்டாவது, வசதியைப் பெருக்க வேண்டும். காட்டிலாகாவின் மூலமும் மேய்க்கால் வசதிகளைப் பெருக்குவதற்கு முயற்சிக்கிறோம். மேலும், பசுந்தாள் உரத்திற்கான விதைகளையும் காட்டிலாகாவின் மூலம் உற்பத்தி செய்ய முயற்சிக்கிறோம். பல பொருள்களை காட்டிலாகாவின் மூலம் உற்பத்தி செய்ய முயற்சிக்கிறோம். இப்போது சாப்பிடுவதற்கு போதுமான அளவு புளி இல்லை. புளிய மரங்களை வைத்து வளர்க்கும்படியும் காட்டிலாகாவினரிடம் சொல்லியிருக்கிறோம்.

நான் மேலும் நேரம் எடுத்துக்கொண்டு பேச விரும்பவில்லை. கனம் அங்கத்தினர்கள் சொன்ன வேறு பல விஷயங்கள் சம்பந்தமாக என் பதிலில் பேசவில்லை என்றால், அதற்குக் காரணம் நேரம் இல்லாததுதான்; அவைகளை நான் கவனிக்கவில்லை என்று அர்த்தம் இல்லை. இன்று ஒரு புதிய விழிப்புடன் உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு மேலும் மேலும் ஆதரவு தரும் வகையில் மேலும் ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**DEPUTY SPEAKER**: The question is:—

"That the allotment of Rs. 3,65,27,400 under Demand No. XIX—Agriculture and Fisheries—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

[Sri M. Bhaktavatsalam] [18th March 1960

இது உப்புத்தான். தனியார் துறையில் ஆரம்பிப்பதற்கு முன்வர வேண்டும். இந்த கூட்டுறவு பண்ணை மூலமாக, கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக, கூட்டுறவு சாதனம் மூலமாக விவசாய வசதிகளைப் பெருக்க இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுப் பண்ணை என்றால் கலெக்டிவ் பார்மிங் என்பது அல்ல. அல்லது ஜாயிண்ட் பார்மிங் என்று எல்லோரையும் நிர்ப்பந்தம் பண்ண வேண்டுமென்பதும் அல்ல. நான் இதைப்பற்றி அன்றைக்கு சொன்னேன். ஒரு பத்திரிகை அதைப் புரிந்து கொள்ளாமல் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது. பத்திரிகை எழுதுகின்றவர்களிடம், ஆங்கில வார்த்தை கூறுகிறேன். அதற்குச் சரியான தமிழ் பதம் தெரியவில்லை, தமிழ் அறிஞர்கள் இருந்தால் சொல்லலாம். "ஆப்ஸெஷன்" இருக்கிறது, என்ன சொன்னாலும் புரியாது. விளக்கம் சொல்லுகிறோம். அதையும் புரிந்து கொள்ளாமல் உடனே ஒரு தலையங்கம் எழுதி விடுகிறார்கள்.

DEPUTY SPEAKER : I think the House has no objection to sit till the Hon. Minister finishes his speech.

1-30 p.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூட்டுறவு வளர்ச்சியில் அதிக வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதா என்று ஒரு பத்திரிகை கேட்டிருக்கிறது. அந்தப் பத்திரிகை அவ்வாறு கேட்டிருப்பதால் நான் பதில் சொல்ல விரும்புகிறேன். நான் தம்பட்டம் அடித்துக்கொள்ளத் தயாராயில்லை. தஞ்சாவூரில் 57 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவை குடியானவர் கூட்டுறவுச் சங்கங்கள், குத்தகைதாரர் கூட்டுறவுச் சங்கங்கள்—முக்கியமாக கோவில் நிலங்களில் பயிரிடுபவர்கள்—இவ்வாறு பல கூட்டுறவுச் சங்கங்களாக இருக்கின்றன. சட்ட மன்றத்திலுள்ள சில அங்கத்தினர்களுக்குக்கூட அவைகளில் சிலவற்றுடன் நேரிடையான தொடர்பு உண்டு. ஒரு கனம் அங்கத்தினர், அங்குள்ள ஒரு கோவிலுக்கு முன்பு 87,000 ரூபாய் நஷ்டம் இருந்தது என்றும், கூட்டுறவு முறை வந்த பிறகு அக்கோவிலுக்கு 1,27,000 ரூபாய் லாபம் ஏற்பட்டிருப்பதாகவும் சொன்னார். எனவே அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பலனளித்து வருகின்றன. அவைகள் உற்பத்தியாளர்களுக்கும் பயன் அளிக்கின்றன. கோவாபரேடிவ் ஸெர்விஸ் வேண்டும். அது ஜாயிண்ட் பார்மிங்கில் தானாக 'எவால்வ்' ஆகும். இதில் எந்த விதமான கஷ்டமும் இல்லை. இதில் யாருடைய உரிமையும் பறிக்கப்படுவதில்லை. பத்திரிகையில் நான் முன்பு கூறியபடி கேட்டிருந்ததால் நான் இதை யெல்லாம் சொன்னேன்.

விதைப் பண்ணைகளைப் பொறுத்தவரையில், விவசாய இலாகாவிற்கு இது ஒரு புதிய அனுபவம். பல கஷ்டங்களையும் உத்தேசித்து இதில் மத்திய சர்க்காரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். திட்டம் அகில இந்திய அடிப்படையில் இருக்கிறது. விதைப் பண்ணைகள் லாபத்தைக் கருதிச் செயல்படக் கூடாது என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் சொன்னார். எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் சில யோசனைகள் சொல்லப்பட்டன. குறைகளை எடுத்துக்காட்டினால், அவைகளை கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன். நெல் பயிரைப் பொறுத்த வரையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் நமக்கு விதைப் பண்ணைகளிலிருந்து பரிபூரணமாக சுத்தமான விதைகள் கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மற்றப்படி, புஞ்சை தானியங்களைப் பொறுத்த வரையில், பாதிதான் 'கவர்' ஆகியிருக்கிறது. மீதி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் 'கவர்' ஆகும். நல்ல விதைகள் உற்பத்தியானாலும், அப்போதைக்கப்போது மாற்ற வேண்டியிருக்கிறது. இன்று உற்பத்தியாவது சுத்தமான விதைகள் என்றாலும் ஐந்து வருடங்களுக்குப் பிறகு மாற்ற வேண்டியிருக்கிறது. விவசாயம் தெரிந்தவர்கள் இதை உணருவார்கள். மேலும், இவை நியூக்ளியர் ஸீட்ஸ்தான். கிராமங்களில் இனிமேல் பஞ்சாயத்துக்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நல்ல விதைகள் விநியோகம் செய்வதற்கான முறையில் இதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.



18th March 1960] [Sri M. Khatktavatsalam]

சிறு பாசனத் திட்டங்கள்பற்றியும் மின்சாரம்பற்றியும் பேசப்பட்டது. கடன் கொடுப்பதிலுள்ள கஷ்டங்கள்பற்றியும் பேசப்பட்டது. பாசனத் திட்டங்கள் நலல பலனை அளிக்கச்செய்வதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மின்சாரத்தைப் பொறுத்தவரையில நமது தமிழ் நாட்டில்தான் அதிகமான கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம். ஜாஸ்தி கொடுக்கப்பட்டிருக்கும் இடங்களில் குறைபாடுகளும் அதிகமாக இருக்கும். மின்சாரக் கட்டணம், மினிமம் காரண்டி, ஸ்டாகரிங் முதலியவைகள்பற்றிப் பேசினார்கள். இவைகள் எல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன. கொஞ்சமே அதிகப்படுத்தியிருக்கும் ரேட் பற்றிப் பேசப்பட்டது. இவை சம்பந்தமாக நான் சொல்லக்கூடியதைச் சொல்கிறேன். மின்சார பட்ஜெட் ரகசியத்தை நான் தெரிவித்துவிட்டதாக யாரும் என்பேரில் குறைசொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். மின்சார போர்டாரும் மதிப்பிற்குரிய எனது சகாவான மின்சார அமைச்சரும் இந்தக் குறைகளை நன்றாக கவனித்து விவசாயிகளுக்குச் சலுகை காட்டுவார்கள். கனம் மின்சார அமைச்சர் என்ன செய்யப் போகிறார் என்பதை, அவரிடமிருந்து தெரிந்துகொள்ளாமல் நான் சொல்கிறேன். (சிரிப்பு.)

ஒவ்வொரு கிராமத்திற்கும் விவசாய நிபுணர்கள் வேண்டும் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். அதை நான் முற்றிலும் ஒத்துக் கொள்கிறேன். உத்தியோகம் பார்ப்பது மட்டுமின்றி கிராமத்தில் வாழக் கூடிய நிபுணர்கள் வேண்டும். கோயம்புத்தூரில் மட்டுமே விவசாயக் கல்லூரி வைத்திருப்பது போதாது, ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாயக் கல்லூரி இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இப்போது சில ஹைஸ்கூல்களில் விவசாயத்தை எஞ்சினியரிங், டைப்ரைட்டிங் இவைகளைப் போன்று, 'பைபர்கேட் கோர்ஸ்' பாடமாக வைத்திருக்கிறார்கள். நான் செல்லும் இடங்களிலெல்லாம், இவ்வாறு செய்யலாம் என்று நானும் சொல்லி வருகிறேன். அவ்வாறு செய்தால் விவசாயத்திற்கு நிலம் வேண்டும். நிலம் கிடைக்கும். அதற்கான ஆசிரியர்களும் வேண்டும். விவசாயத்தை ஹைஸ்கூல்களில் பைபர்கேட் கோர்ஸ் பாடமாக வைக்கச் செய்வதில் கவனம் செலுத்திவருகிறேன்.

கால்நடை வளர்ச்சிபற்றிப் பேசப்பட்டது. கால்நடைகளுக்கு நிறைய மேய்க்கால் வசதி வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. இதில் ஒன்று, இன்று இருக்கும் வசதி குறையக்கூடாது; இரண்டாவது, வசதியைப் பெருக்க வேண்டும். காட்டிலாகாவின் மூலமும் மேய்க்கால் வசதிகளைப் பெருக்குவதற்கு முயற்சிக்கிறோம். மேலும், பசுந்தாள் உரத்திற்கான விதைகளையும் காட்டிலாகாவின் மூலம் உற்பத்தி செய்ய முயற்சிக்கிறோம். பல பொருள்களை காட்டிலாகாவின் மூலம் உற்பத்தி செய்ய முயற்சிக்கிறோம். இப்போது சாப்பிடுவதற்கு போதுமான அளவு புளி இல்லை. புளிய மரங்களை வைத்து வளர்க்கும்படியும் காட்டிலாகாவினரிடம் சொல்லியிருக்கிறோம்.

நான் மேலும் நேரம் எடுத்துக்கொண்டு பேச விரும்பவில்லை. கனம் அங்கத்தினர்கள் சொன்ன வேறு பல விஷயங்கள் சம்பந்தமாக என் பதிலில் பேசவில்லை என்றால், அதற்குக் காரணம் நேரம் இல்லாததுதான்; அவைகளை நான் கவனிக்கவில்லை என்று அர்த்தம் இல்லை. இன்று ஒரு புதிய விழிப்புடன் உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு மேலும் மேலும் ஆதரவு தரும் வகையில் மேலும் ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is :—

"That the allotment of Rs. 3,65,27,400 under Demand No. XIX—Agriculture and Fisheries—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is :—

" That the Government be granted a sum not exceeding Rs. 8,65,27,400 under Demand No. XIX—Agriculture and Fisheries."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The question is :—

" That the allotment of Rs. 1,18,64,700 under Demand No. XX—Animal Husbandry—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is :—

" That the Government be granted a sum not exceeding Rs. 1, 18,64, 700 under Demand No. XX—Animal Husbandry."

The Demand was put and carried and the Grant was made.

SRI A. R. MARIMUTHU : I am not pressing my cut motion, Sir.

The cut motion of Sri A. R. Marimuthu was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is :—

" That the Government be granted a sum not exceeding Rs. 3,00,000 under Demand No. XXXIX—Capital Outlay on Agriculture."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 10-30 a.m. on Monday, the 21st March 1960.

The House then adjourned.

## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—*Statutory Rules and orders.*

Nil.

### B.—*Reports, notifications and other papers.*

37. *The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 9 of 1960).*





## APPENDIX I.

[Vide answer to starred question No. 464 asked by Sri S. Lazar (on behalf of Sri V. Sankaran at the meeting of the Legislative Assembly held on 18th March 1960, page 2 supra.]

*Nature of the Developments proposed to the East Coast ports.*—There are already schemes for the Ports' Improvements included in the Second Five-Year Plan and proposed to be completed during the Second Five-Year Plan period and some are to be carried over to Third Five-Year Plan. New items of works are also proposed for the Third Five-Year Plan. The details of the works are given below :—

I. *Improvements included in the Second Five-Year Plan*—

(i) *Cuddalore.*

| | RS. |
|---|---|
| (1) Construction of R.C.C. wharf and jetties .. | 1,06,000 |
| (2) Provision of a small workshop with equipment .. | 98,000 |
| (3) Construction of a slipway for hauling up of pontoons. | 43,000 |
| (4) Provision of groynes and pier with mobile sand pump. | 5,00,000 |
| (5) Provision of jetties between coal creek and slipway. | 29,000 |
| (6) Lighting the wharf jetties in coal creek area .. | 10,000 |
| (7) Improvements and extensions to wharves .. .. | 50,000 |

(ii) *Nagapattinam.*

| | |
|---|---|
| (1) Provision of a seaface wall and diversion groyne .. | 4,05,400 |
| (2) Realignment of south groyne .. .. .. | 37,000 |
| (3) Construction of a shed for visitors .. .. | 6,600 |
| (4) Providing pier with mobile sand pump for entrance channel. | 3,00,000 |

(5) Improvements and extensions to wharves :

| | | |
|---|---|---|
| (i) Reconstruction of wharf wall .. | 90,000 | 2,00,000 |
| (ii) Open cargo shed 100′ × 54′ .. | 50,000 | |
| (iii) Extension of passenger shed .. | 40,000 | |
| (iv) Hard standing on quay .. .. | 20,000 | |

(iii) *Tuticorin.*—The proposal to develop the port into Deep-sea Harbour with berthing facilities to the steamers has been engaging the attention of the Port Trust Board and Government and preliminary investigations in this regard are being carried out. The Government of India who were requested to take up this work at last in the last year of Second Five-Year Plan have stated that this would be considered for Third Five-Year Plan.

(iv) *Pamban.*—The first phase of dredging the sand bank channel at Pamban was carried out by the Dredger 'Tuticorin' from 12th February to 16th April 1958 and from 18th January to 23rd March 1959 at an approximate cost of Rs. 2,20,000. A tug of about 150 h.p. is proposed to be acquired for this Port at an estimated cost of about Rs. 1,00,000.

(v) *Kulasekarapattinam.*—The works sanctioned for the port of Kulasekarapattinam for 1959–60 are as follows :—

| | RS. |
|---|---|
| Construction of a masonry structure similar to boundary pillar .. .. .. .. .. .. | 2,800 |
| Providing two tripod beacons on the reef .. .. | 2,000 |
| Construction of quarters for the Port Conservator and peon, Development Schemes under Second Five-Year Plan .. .. .. .. .. .. | 14,000 |

II. *List of works suggested for inclusion in the Third Five-Year Plan :—*

*Cuddalore Port.*

(a) *Continuation Scheme.*

| | RUPEES IN LAKHS. |
|---|---|
| (1) Provision of groynes, piers, breakwaters, cutter suction dredger for entrance channel. | 38·00 |
| (b) *New Schemes.* | |
| (1) Provision of a tug .. .. .. .. .. | 3·00 |
| (2) Construction of a R.C.C. wharf wall east of spoil island 700′ long. | 7·00 |
| (3) Electrification of spoil island .. .. .. | 0·10 |
| (4) Provision of 50-ton steel water barge with equipment. | 0·80 |
| (5) Concreting the stacking area on north, central and south wharves. | 0·50 |
| (6) Providing navigational aids such as light beacons on breakwaters and light buoys for night works. | 0·10 |
| (7) Provision of a 2-ton mobile crane .. .. | 1·00 |
| (8) Provision of an Inspection-cum-survey launch .. | 1·00 |
| (9) Providing R.C.C. wharf wall connecting the existing wharf wall at coal creek to jetty near slipway. | 2·00 |
| (10) Reconstruction of entire wharf .. .. .. | 10·00 |
| (11) Purchase of a Grab dredger with necessary punts. | 3·10 |



*Nagapattinam Port.*

(a) *Continuation Scheme.*

| | RUPEES IN LAKHS. |
|---|---|
| 1. Provision of a pier with mobile sand pump for entrance channel. | 7·00 |
| (b) *New Schemes.* | |
| (1) Provision of a tug .. — — — — | 1·20 |
| (2) Reconstruction of passenger shed .. — .. | 2·50 |
| (3) Provision of a small suction dredger — .. | 6·00 |
| (4) Construction of a transit shed in timber wharf area. | 0·50 |
| (5) Reconstruction of wharf wall (southern end) 350′ long. | 1·80 |
| (6) Improvements to timber wharf including revetments. | 2·00 |
| (7) Joining up the two ramps in central and south wharves. | 0·70 |
| (8) Improving the intensity of the lighthouse .. | 1·00 |
| (9) Slipway for dredger and tug .. .. .. | 1·50 |
| (10) Provision of quarters for Port staff at Cuddalore and Nagapattinam— | |
| Cuddalore .. .. — .. .. | 1·33 |
| Nagapattinam .. .. — .. .. | 1·67 |
| *Tuticorin Port—New Schemes.* | |
| (1) Purchase of one 300 h.p. diesel tug .. .. | 5·00 |
| (2) Recondition of Dredger 'Tuticorin' and Extension ladder. | 5·00 |
| (3) Two 2-ton mobile cranes (20′ radius) diesel .. | 2·40 |
| (4) Three-fourth cubic yards dump Grab dredger .. | 2.00 |
| (5) Three mud punts with wooden hull (100 tons capacity) | 2·50 |
| (6) Three numbers dumb hopper barges (500 cubic yards) | 9·00 |
| (7) One dump barge with reclamation and building pump with pipe lines. | 3·00 |
| (8) Purchase of one 500 h.p. diesel tug .. .. | 8·00 |
| (9) Workshop, equipment, etc. .. — .. - | 2·00 |
| (10) Construction of slipway for small crafts .. | 2·00 |
| (11) Removal of 'Galatia' wreck .. .. .. | 1·00 |
| (12) Acquisition of land for future development .. | 2·00 |
| (13) Construction of staff quarters 50 per cent — | 4·50 |

The Government of India have provisionally included the development of Tuticorin into a major port as one of the projects to be considered for the Third Five-Year Plan. It is however proposed to recommend the inclusion of the above schemes relating to Tuticorin Port in the Third Five-Year Plan.

[18th March 1960

APPENDIX II.

[Vide answer to starred question No. 460 asked by Sri K. R. Nallasivam (on behalf of Sri S. Pakkirisami Pillai) at the meeting of the Legislative Assembly held on 18th March 1960, page 6 supra.]

ENQUIRY INTO THE PREVALENCE OF BYSSINOSIS IN COTTON TEXTILE INDUSTRY IN SOUTH INDIA.

(Under Dr. T. S. Adisubramaniam, Municipal Health Officer, Madurai.)

*Recommendations by the Committee.*

*Object.*—To ascertain the extent of Byssinosis in the Cotton Textile Industry in South India.

**TEMPORARY CHAIRMAN** (ஸ்ரீ எம். ஜகன்ஞதன்) : ஆர்டர், ஆர்டர்.

**Sri A. GOVINDASAMY** : தி அணைக்கும் படையை பொறுத்த வரையில் கள்ளக்குறிச்சி, திண்டிவனம் போன்ற இடத்தில் தீ அணைக்கும் படையை நிறுவ ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு இதில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியங்களைப் பார்த்தால், முன்ஞல் எ.எப்.எஸ்.-ஸாக இருந்தபோது 25-ம் 35-ம் சேர்த்து 60 என்ற முறையில் இருந்து வந்தது. பின்ஞல் எம்.எப்.எஸ்.-ஸாக ஏற்பட்டபோது 16 ரூபாய் உயர்வு கொடுக்கப்பட்டது. 1948-ல் 25, 30, 70 ரூபாய் என்ற முறையில் சம்பளத்தை மாற்றிஞர்கள். பின்ஞல் 1949-ல் போலீஸாருக்கு 10 ரூபாய் ஊதியத்தில் உயர்த்தியபோது பயர் சர்வீஸ்ஸில் இருக்கின்றவர்களுக்கு இந்த உயர்வு கொடுக்கப்படவில்லை என்பதை தலைவர் அவர்களின் மூலமாக இந்தச் சபையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். போலீஸ்காரர்களுக்குச் சலுகைகள் தரப்பட்டால், பையர்மென்களைப் போலீஸார் மாதிரியே கருதுவதால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் பையர்மென்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேன். கனம் அமைச்சர் பேசும்போது சொன்ஞர்கள், ஜெயில் என்பது குற்றவாளிகளைத் திருத்துவதற்காகத் தான் இருக்கிறது என்று சொன்ஞர்கள். அதை ஒப்புக்கொள்கிறேன். ஆஞல் ஜெயில்கள் சுகாதார வசதிகளற்ற முறையில் மூட்டைப் பூச்சிகள் நிறைந்த நிலையில் இருந்து வருகின்றன. அமைச்சர் அவர்களுக்கு அனுபவம் இருப்பதால் இதைப் பற்றித் தெரிந்திருக்கும். காங்கிரஸ்காரர்கள் பிரிட்டிஷார் காலத்தில் அவர்களுக்கு ஜெயிலில் மோர் கூடக் கொடுக்கவில்லை என்று புகார் செய்துகொண்டிருந்தார்கள். ஜெயிலில் படிப்பதற்கு பத்திரிகை தரவில்லை என்று சொன்ஞர்கள். ஆஞல் இன்றைய தினம் படிப்பதற்கு பத்திரிகைகளோ, அல்லது மற்ற வசதிகளோ செய்யத் தயங்குகிருர்கள். ஜெயிலில் விஸிட்டர்ஸ் கமிட்டியில் எதிர் கட்சிக்காரர்களைப் போடுவது கிடையாது. ஆளும் கட்சிக்காரர்களைத் தான் போடுகிருர்கள் என்று இந்த குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

சில போலீஸ் ஸ்டேஷன்களில் ஸப்-இன்ஸ்பெக்டர்களும் போலீஸ்காரர்களும் தங்குவதற்கு விடுதிகள் இல்லை. குறிப்பாக என் தொகுதியில் கண்டமங்கலத்தில் ஸப்-இன்ஸ்பெக்டருக்கும் மற்றவர்களுக்கும் தங்குவதற்கு விடுதி இல்லாததால், அவர்கள் இரவுக்கு விழுப்புரத்தில் தங்கி விட்டு காலையில் கண்டமங்கலத்திற்கு வரவேண்டியிருக்கிறது. போலீஸ்

[Sri A. Govindasamy] [21st March 1960

ஸ்டேஷனில் ஸப்-இன்ஸ்பெக்டர் இல்லாத காரணத்தினால் உடனடியாக உதவி கிடைக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர்களுக்கு உடனடியாக விடுதிகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு போலீஸ் காரர்களுக்கு சம்பள உயர்வு கணிசமான அளவு இருக்கவேண்டும். அப்படியில்லாது இருப்பதால்தான் அவர்கள் தவறான முறையில் 8 அணா, 1 ரூபாய் என்று லஞ்சக் குற்றங்கள் ஏற்பட வசதி செய்து கொடுத்தாற் போல இருக்கின்றது. அதைத் தவிர்க்க கணிசமான அளவுக்கு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தித்தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

நீதி நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிடவில்லை என்று கூறிவிட்டு சட்டசபையில் செய்யக்கூடிய சட்டங்கள் ஹைக்கோர்ட்டில் செல்லுபடியாகாது என்று தீர்ப்பளிக்கப்படுகிறது. இங்கே ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது "ஹைக்கோர்ட் வெண்ட் அவுட் ஆப் தி வே" என்று ஏற்கனவே நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நீதியைக் காப்பாற்றக்கூடிய அரசாங்கத்தில் இருக்கக் கூடிய நிதி அமைச்சர் அவர்கள் ஹைக் கோர்ட் தலையீட்டைக் கிண்டல் செய்து கண்டித்திருக்கிறார்கள். இது சம்பிரதாயத்திற்குச் சரியா ? சட்டத்திற்கு முரணாக இல்லாமல் சபையிலுள்ளவர்கள் வழி காட்டுவதற்குப் பதிலாக நிதி மந்திரி பேசியது சரியல்ல.

**Sri S. NAGARAJA MONIGAR** : கனம் அமைச்சர் அவர்கள் தீர்ப்பைக் கிண்டல் செய்யவில்லை. ஹைக் கோர்ட்டின் அப்ஸர்வேஷனைப் பற்றித்தான் சொன்னார்.

TEMPORARY CHAIRMAN (Sri M. Jagannathan): **I do not hear the hon. Member.**

**Sri A. GOVINDASAMY**: "ஹைக்கோர்ட் வெண்ட் அவுட் ஆப் தி வே" என்று இங்கே குறிப்பிட்டார்கள், அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஹைக் கோர்ட்டைப்பற்றிச் சொல்லப்படுவதால் இப்போதே சுருக்கிட்டு நிலைமையை விளக்க விரும்புகிறேன். வழக்கறிஞர்களுக்குத் தெரியும். கட்சிக்காரர்களுக்குத் தெரியவில்லையென்றாலும், ஹைக் கோர்ட்டில் ஜட்ஜ்மெண்ட் என்பது ஒன்று ஒபிடர் டிக்டா என்பது மற்றொன்று. ஒபிடர் டிக்டா என்பது அபிப்பிராயங்கள் தெரிவிப்பது. அது கட்டுப்படுத்தாது. அதை எதிர்க்கலாம். ஒரு ஸபார்ட்டினேட் கூட எதிர்க்கலாம். தீர்ப்பு என்பதுதான் முக்கியம். தீர்ப்பைக் பற்றிக் குறை சொல்லது தவறு. அபிப்பிராயத்தைப்பற்றி தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்வது அரசாங்கம் சொல்வதாயிருந்தாலும் வேறு யார் சொன்னாலும் சொல்லுகிற முறையில் சொல்லவேண்டும். முறை தவறி யாரும்—நிதி அமைச்சர் கூட—பேசவில்லை.

**Sri A. GOVINDASAMY** : "ஹைக் கோர்ட் வெண்ட் அவுட் ஆப் தி வே" என்று குறிப்பிட்டதைத்தான் குறிப்பிடுகிறேன். அதையே வலியுறுத்திச் சொல்லுகிறேன். இதைக்கூட நிதி அமைச்சர் சொல்லலாமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மரமேறும் தொழிலாளர்கள் மது விலக்கு வந்த பிறகு மிகவும் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். பதனீர் குடிப்பதால் நல்லது என்று அரசாங்கம் ஒத்துக் கொள்கிறது. முன்பு சட்டசபை காரியாலயத்திற்கு முன் சட்டசபை உறுப்பினர்களும் பதனீர் அருந்த வசதி செய்திருந்தார்கள். ஏழை எளிய மரமேறும் தொழிலாளர்கள் பதனீர் கொண்டு வந்து விற்கும் நேரத்தில் லைசென்ஸ் பெறவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லி தண்டிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. லைசென்ஸ் இல்லாமலே பதனீர் விற்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் விற்பது கள்ளாய் இருந்தால் தண்டிப்பதில் ஆட்சேபணையில்லை. ஆகையால் உண்மையில் பதனீராக இருந்தால் விற்பதற்கு லைசென்ஸ்



21st March 1960] [Sri A. Govindasamy]

இல்லாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடைசியாக உடனடியாக கள்ளக்குறிச்சியிலும், திண்டிவனத்திலும் பையர் ஸர்விஸெஸ் ஸ்டேஷன் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு—ஏனென்றால் வெய்யில் காலத்தில் அங்கே அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுவதால் பையர் ஸர்விஸெஸ் ஸ்டேஷன் மிகவும் முக்கியம்—அதையும் உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. R. KANDASWAMI MUDALIAR** : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், ஏற்கனவே கேட்டதற்கு அங்கத்தினர் அவர்கள் பதில் சொல்லவில்லை. ஒன்று அவர்கள் சொல்லியதை வாபஸ் பெற வேண்டும், இல்லையென்றால் "புரூப்" பண்ணவேண்டும்.

TEMPORARY CHAIRMAN (Sri M. Jagannathan): There has been allegation on either side, and as such, no point of order arises on this question.

**Sri M. R. KANDASWAMI MUDALIAR**: ஒரு கட்சியின் பேரில் ஒரு கட்சியைப் பாதிக்கக் கூடிய முறையில் இருப்பதால் இதை கண்டிப்பாக "புரூப்" செய்யவேண்டும். இல்லையென்றால் வாபஸ் பெறவேண்டும். நாங்களும் இம்மாதிரி குற்றம் சொல்வதானால், கார்ப்பொரேஷனில் ஒரு மெம்பர் சாராயம் குடித்து விட்டதாக அரஸ்ட் செய்யப்பட்டு ஜாமீனில்கூட விடப்பட்டார் என்று. . . . .

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஒவ்வொரு கட்சியும் தங்கள் கட்சி பெரிய சமுத்திரம் என்று ஏற்றுக் கொள்வார்கள். அதற்காக பாராட்டுவார்கள். பெருமைப்படுவார்கள். ஒரு சமுத்திரத்தில் எவ்வளவோ இருக்கும். பேசாமல் இருந்தால் அதை ஏற்றுக் கொள்கிறோம் என்பதல்ல. இதைப் பற்றி பொதுவாக அவ்வளவு பரபரப்பு வேண்டியதில்லை.

Some hon. Members rose.

TEMPORARY CHAIRMAN (Sri M. Jagannathan): Order. I hear a lot of noise in the House. Sri S. Lazar will now speak.

**Sri S. LAZAR** : தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் கொண்டு வந்திருக்கிற மானியங்களை ஆதரித்து ஒரு பல கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வெட்டுப் பிரேரணைகளை பார்க்கும்போது, நிர்வாகத் துறையில் அதிகப்படியான குறைகள் இருப்பதாகவும், அவைகளை நீக்க வேண்டுமென்ற முறையிலும் பல வெட்டுத் திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக "எக்ஸைஸ்" டிமாண்டைப் பொறுத்த வரையில் உள்ளபடியே இந்தச் சட்டத்தைத் திருத்திய பிறகு, அந்தக் குற்றங்களுக்கு தண்டனையை அதிகரித்த பிறகு, குற்றங்கள் அதிக அளவு குறைந்திருக்கிறது என்பது உண்மை. நான் ஒன்று மட்டிலும் சொல்ல விரும்புகிறேன். இப்போது பொதுவாக வேறொரு முறை பயன்படுத்தப்படுகிறது கோர்ட்டுகளில். குடிக்கக் கூடியவர்களுக்கு பொதுவாக சில மருந்துகளைச் சாப்பிடுவதால் போதை ஏற்படுவதாகச் சொல்லி அதற்கான ஒரு சில மருந்துகள் தயாரிக்கப்படுகிறது. அந்த மருந்துகள் மார்க்கெட்டில் ஏராளமாகக் கிடைக்கிறது. அத்தகைய மருந்து பாட்டில்களை கோர்ட்டில் காண்பித்து இவைகளைக் குடித்தால்தான் மயக்கம் ஏற்படுகிறது என்று சாட்சியம் கொடுக்க பல தாவாக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. நாம் இப்போது "க்ளோரல் ஹைட்ரேட்" என்ற ஒரு பொருளுக்குத்தான் விதிகள் ஏற்படுத்தியிருக்கிறோம். மற்ற பொருளைகளைப்பற்றி நாம் விதிகள் ஏற்படுத்தவில்லை. இந்த முறையில் சட்டத்தை அமுல் படுத்துவதில் இடைஞ்சல் இருப்பதால் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri S. Lazar] [21st March 1960

அடுத்தபடியாக, போலீஸ் துறையைப்பற்றி வெட்டுத் திருத்தங்களில் பல முறையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. போலீஸ் துறையைப் பொறுத்த மட்டில் ஒன்று மட்டும் சொல்லவேண்டும். அது மட்டும் தனியாக இயங்க முடியாது என்று சொல்லவேண்டும். போலீஸ் துறை நல்ல முறையில் இயங்க வேண்டுமானால், பொது மக்களுடைய ஒத்துழைப்பு எந்த அளவு இருக்கிறதோ அந்த அளவுக்கு நல்ல முறையில் இயங்கும். இது நாம் கண்ட உண்மையல்ல—உலகம் கண்ட உண்மை. இன்றும் கூட நம்முடைய மாகாணத்தில் எங்கெங்கு பொது மக்களுடைய ஒத்துழைப்பு அதிகமாக இருக்கிறதோ அந்த இடங்களிலெல்லாம் போலீஸ் திறமையாக வேலை செய்து வருவதைப் பார்க்கிறோம். எந்த இடத்தில் மக்களுடைய ஒத்துழைப்பு சரியாக இல்லையோ அங்கெல்லாம் போலீஸ் அதிகத் திறமையுடன் இயங்க முடியவில்லை. போலீஸ் ஸ்டேஷனில் ஒரு புகார் கொடுத்தோமானால், அதற்கான நடவடிக்கை எடுப்பதிலே போதிய சாட்சியங்கள் சொல்ல மக்கள் முன் வரவேண்டும். நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தில் நாம் இப்படி ஒரு கொள்கையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரு வழக்கு என்றால், அதை நிரூபிப்பதற்கு பொது மக்களிடமிருந்து சாட்சியங்கள் வரவேண்டும். இப்படி சில குறைபாடுகள் இருந்தாலும் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் போலீஸ் துறையானது சிறந்த முறையில் நடக்கிறது என்று எதிர் கட்சிகளெல்லாம் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் இது சிறந்த முறையில் நடக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதைப பற்றிக் "கட் மோஷன்" கொடுத்திருந்த போதிலும் அவர்களுடைய தலைவர்கள் நல்ல முறையில் நடக்கிறது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இதற்கான ஒத்துழைப்பை மேலும் மேலும் கொடுக்கவேண்டும். இது உலகமெங்கும் இருக்கக்கூடிய முறை. எந்த நாட்டிலும் ஆசிரியர்
12 noon. களுக்கும், போலீஸ் துறையில் சேவை செய்யக் கூடியவர்களுக்கும் எந்த அளவுக்கு ஊதியம் கொடுக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் திறமையை எதிர்பார்க்கமுடியும். இன்றைய தினம் இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் கொண்டால் அங்கே அதிகப்படியான ஊதியம் கொடுக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, பெரிய குடும்பத்தில் இருப்பவர்கள் எல்லாம் போலீஸ் துறையில் சேவை செய்ய முன் வருகிறார்கள். அந்த நிலைமைக்கு இந்த நாட்டுப் போலீஸ் துறையையும் மாற்றியமைக்க வேண்டும்.

இந்தத் துறையின் நிர்வாகத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் பேசும்போது இந்தத் துறையிலே பெரும் அளவுக்கு வருமானம் வருகிறது என்று தவறுதலாகக் கூறுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் சொல்லப் போகிற கருத்து தவறுதலாக இருக்கலாம். வரவு செலவுத் திட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு சில குறிப்புகளைக் கூற விரும்புகிறேன். அதன்படி அதிகப்படியாகத் தான் இந்தத் துறையின் மூலம் வருமானம் வந்திருக்கிறது. ஸ்டாம்ப் ட்யூட்டியில் ஜுடிஷியல் ஸ்டாம்ப் ட்யூட்டி விற்கப்படுவதன் மொத்த அளவு ஏறக்குறைய 116·53 லட்சம் என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். அபராதம் போன்ற வகையில் கிடைத்தது 52·94 லட்சம். ஆகவே மொத்த வரவு 169·47 லட்சம். அதே சமயத்தில் நிர்வாகத் துறையில் செலவு 136·83 லட்சம் என்று கொடுப்பதன் காரணமாக அதிக வருவாய் 32·64 லட்சம். இன்றைய தினம் இருக்கக்கூடிய அமைப்புப்படி அதிகப்படியான கோர்ட் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு ஆதாரமாகப் பல குறிப்புகளைக் காட்ட முடியும். முதல் முதலாக இதைப் பற்றிச் சில விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியாவைப் பொறுத்த வரை குறிப்பாகச் சொல்ல முடியும். வேறு எந்த நாட்டிலும் இல்லாத முறையை இங்கு பார்க்கிறோம். "கோர்ட் பீ" கட்டணம் என்பது இங்கிலாந்து தேசத்திலே வேறு முறையில் வசூலிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவில் வேறு முறை. அங்கெல்லாம் குறித்த அளவு, தாவாவைக் கோர்ட்டிலே சேர்த்துக் கொள்ளும்போது அமெரிக்காவில் 15 டாலர் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதற்கு மேல் ஏற்பட இருக்கும் செலவு "பராசஸ் பீ" என்ற முறையில் வாங்குகிறார்களே தவிர, நம் நாட்டில் இருக்கும் முறையில்



21st March 1960] [Sri S. Lazar]

100-க்கு 7½ ரூபாய் என்ற முறையில் வசூலிக்கப்படுவதில்லை என்று சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய முறையைப் போல் உலகத்திலே வேறு எந்த நாட்டிலும் கிடையாது. நம் நாட்டிலே கூட ஆரம்பத்தில் இந்த விதி முறை இல்லை. முதல் முதலாக "ரெகுலேஷன் 38 ஆப் 1795" சட்டத்தின்கீழ் ஆங்கில அரசாங்கம் இங்கே கொண்டு வந்தது. அதுவரை இந்தக் கட்டணம் கிடையாது. இந்த விதியை அப்போது கொண்டு வந்ததற்கு காரணம் அதிகப்படியான, ஆதாரமற்ற தாவாக்கள் கோர்ட்டுக்கு வந்ததுதான். அதன் பிறகு 1870-ம் ஆண்டில் "கோர்ட் பீஸ்" சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டம் வந்த பிறகு அந்தந்த மாகாணத்திற்குத் தகுந்தவாறு கட்டண விகிதத்தை மாற்றிக் கொள்ளலாம் என்று ஆயிற்று. அந்தந்த மாகாண முறைகளுக்குத் தகுந்தவாறு மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரை இரண்டு பெரிய அறிஞர்கள் ஜே. எஸ். மில்லும், பெந்தோமும் சொல்லியிருக்கிறார்கள். இந்த நீதி நிர்வாகத்திற்கு ஒரு வரியை விதிப்பது மிகவும் கண்டிக்கத் தக்கது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வேறு இரண்டு பெரிய தலைவர்கள் ஹென்றி மெயினும் ஆடம் ஸ்மித்தும் "இது ஜனங்களுக்கு ஓரளவு சேவை செய்யக்கூடிய வகையில் இருக்கவேண்டும். அதற்காக ஒரு கட்டணம் விதிக்கவேண்டிய அவசியம் இல்லை" என்று குறிப்பிட்டார்கள். இதற்குப் பிறகு நன்றாகப் பரிசீலனை செய்து 1924-ம் ஆண்டிலே சமர்ப்பித்த "டாக்சேஷன் என்க்வைரி கமிட்டி" அறிக்கையில் "இந்த நிலைமையைப் பொறுத்த வரையில் சுத்தமாகக் கோர்ட் கட்டணம் வேண்டாமென்று சொல்வது சரியல்ல" என்று 'The aggressors must be made to pay the cost of the proceedings' என்று குறிப்பிட்டார்கள். அதற்கு பிறகு பல அறிஞர்களின் அபிப்பிராயங்கள் வெளிவந்திருக்கின்றன. பெரிய அறிஞர்களான மேதா அகர்வால் இதைப் பற்றிப் பேசும்போது சொன்ன கருத்துக்களை வாசிக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

TEMPORARY CHAIRMAN (Sri M. Jagannathan) : The hon. Member's time is up.

SRI S. LAZAR : Just five minutes more, Sir. I will finish within that time.

". . . So, while the Government should charge something in the form of court-fees for the administration of justice, it must not try to impose the levy on cost of service principle and make it prohibitive . . ." ('Public Finance' by J. K. Mehta and S. N. Agarwala—third edition—pages 479–480.)

என்று சொல்லுவதோடு கூட இதை எந்த அளவுக்குக் குறைக்க வேண்டுமோ அந்த அளவுக்கு குறைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைவிட முக்கியமாக 19 3-54ல் 'டாக்சேஷன் என்க்வைரி கமிட்டி" சிபார்சில் குறிப்பிட்டார்கள்.

". . . At the same time it has to be added that we find ourselves in entire agreement with a view which has been expressed by the Chief Justice of India and the Chief Justices of certain High Courts—in replies which they kindly sent to us, at our specific request, on one or two points—to the effect that court-fees (assuming they are charged at all) should only be on the basis of covering the expenses of the administration of justice. It has further been urged, in some of the replies we have referred to, that the eventual aim should be to abolish court-fees altogether and that meanwhile there should be brought about both a substantial reduction in these

[Sri S. Lazar] [21st March 19

அடுத்தபடியாக, போலீஸ் துறையைப்பற்றி வெட்டுத் திருத்தங்க
பல முறையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. போலீஸ் துறையைப் பொறு
மட்டில் ஒன்று மட்டும் சொல்லவேண்டும். அது மட்டும் தனி
இயங்க முடியாது என்று சொல்லவேண்டும். போலீஸ் துறை ந
முறையில் இயங்க வேண்டுமானால், பொது மக்களுடைய ஒத்துழை
எந்த அளவு இருக்கிறதோ அந்த அளவுக்கு நல்ல முறையில் இயங்கு
இது நாம் கண்ட உண்மையல்ல—உலகம் கண்ட உண்மை. இன்று
கூட நம்முடைய மாகாணத்தில் எங்கெங்கு பொது மக்களுடைய ஒ
ழைப்பு அதிகமாக இருக்கிறதோ அந்த இடங்களிலெல்லாம் போலீ
திறமையாக வேலை செய்து வருவதைப் பார்க்கிறோம். எந்த இடத்
மக்களுடைய ஒத்துழைப்பு சரியாக இல்லையோ அங்கெல்லாம் போலீ
அதிகத் திறமையுடன் இயங்க முடியவில்லை. போலீஸ் ஸ்டேஷனில்
புகார் கொடுத்தோமானால், அதற்கான நடவடிக்கை எடுப்பதிலே போ
சாட்சியங்கள் சொல்ல மக்கள் முன் வரவேண்டும். நமது அரசி
நிர்ணயச் சட்டத்தில் நாம் இப்படி ஒரு கொள்கையை ஏற்படுத்
கொண்டிருக்கிறோம். ஒரு வழக்கு என்றால், அதை நிரூபிப்பதற்கு பொ
மக்களிடமிருந்து சாட்சியங்கள் வரவேண்டும். இப்படி சில குறைபாடு
இருந்தாலும் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் போலீ
துறையானது சிறந்த முறையில் நடக்கிறது என்று எதிர் கட்சிகளெல்ல
ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் இது சிறந்த மு
யல் நடக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதைப பற்றிக் "கட்
ஷன்" கொடுத்திருந்த போதிலும் அவர்களுடைய தலைவர்கள்
முறையில் நடக்கிறது என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.
களும் இதற்கான ஒத்துழைப்பை மேலும் மேலும் கொடுக்கவேண்
12 noon. இது உலகமெங்கும் இருக்கக்கூடிய முறை. எந்த நாட்டிலும் அ
களுக்கும், போலீஸ் துறையில் சேவை செய்யக் கூடியவர்களுக்கும் எ
அளவுக்கு ஊதியம் கொடுக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் திறமை
எதிர்பார்க்கமுடியும். இன்றைய தினம் இங்கிலாந்து தேசத்தை எடு
கொண்டால் அங்கே அதிகப்படியான ஊதியம் கொடுக்கிறார்கள் என்
மட்டுமல்ல, பெரிய குடும்பத்தில் இருப்பவர்கள் எல்லாம் போ
துறையில் சேவை செய்ய முன் வருகிறார்கள். அந்த நிலைமை
இந்த நாட்டுப் போலீஸ் துறையையும் மாற்றியமைக்க வேண்டும்.

இந்தத் துறையின் நிர்வாகத்தைப் பற்றிச் சில வார்த்தை
கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் பேசும்போது இந்தத் து
யிலே பெரும் அளவுக்கு வருமானம் வருகிறது என்று தவறுதல
கருதுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் சொல்லப் போகிற கரு
தவறுதலாக இருக்கலாம். வரவு செலவுத் திட்டத்தில் இருக்கக்
ஒரு சில குறிப்புகளைக் கூற விரும்புகிறேன். அதன்படி அதிகப்படிய
தான் இந்தத் துறையின் மூலம் வருமானம் வந்திருக்கிறது.
ட்யூட்டியல் ஜுடிஷியல் ஸ்டாம் ட்யூட்டி விற்கப்படுவதன் மொத்த அ
ஏறக்குறைய 116·53 லட்சம் என்று கணக்குக் கொடுத்திருக்கிறா
அபராதம் போன்ற வகையில் கிடைத்தது 52·94 லட்சம். ஆ
மொத்த வரவு 169·47 லட்சம். அதே சமயத்தில் நிர்வாகத் துறை
செலவு 136·83 லட்சம் என்று கொடுப்பதன் காரணமாக அதிக வரு
32·64 லட்சம். இன்றைய தினம் இருக்கக்கூடிய அமைப்புப்படி அ
படியான கோர்ட் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை வலியுறு
சொல்ல விரும்புகிறேன். இதற்கு ஆதாரமாகப் பல குறிப்புகளைக்
முடியும். முதல் முதலாக இதைப் பற்றிச் சில விவரங்களைச் செ
வேண்டுமென்று சொன்னால், இந்தியாவைப் பொறுத்த வரை குறிப்
சொல்ல முடியும். வேறு எந்த நாட்டிலும் இல்லாத முறையை
பார்க்கிறோம். "கோர்ட் பீ" கட்டணம் என்பது இங்கிலாந்து தேச
வேறு முறையில் வசூலிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்காவில்
முறை. அங்கெல்லாம் குறித்த அளவு, தாவாவைக் கோர்ட்டிலே
துக் கொள்ளும்போது அமெரிக்காவில் 15 டாலர் என்று கணக்கி
கிறார்கள். அதற்கு மேல் ஏற்பட இருக்கும் செலவு "பராசஸ் பீ"
முறையில் வாங்குகிறார்களே தவிர, நம் நாட்டில் இருக்கும் மு



21st March 1960] [Sri S. Lazar]

100-க்கு $7\frac{1}{2}$ ரூபாய் என்ற முறையில் வசூலிக்கப்படுவதில்லை என்று
சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய முறையைப்
போல் உலகத்திலே வேறு எந்த நாட்டிலும் கிடையாது. நம் நாட்டிலே
கூட ஆரம்பத்தில் இந்த விதி முறை இல்லை. முதல் முதலாக "ரெகு
லேஷன் 38 ஆப் 1795" சட்டத்தின்கீழ் ஆங்கில அரசாங்கம் இங்கே
கொண்டு வந்தது. அதுவரை இந்தக் கட்டணம் கிடையாது. இந்த
விதியை அப்போது கொண்டு வந்ததற்கு காரணம் அதிகப்படியான,
ஆதாரமற்ற தாவாக்கள் கோர்ட்டுக்கு வந்ததுதான். அதன் பிறகு
1870-ம் ஆண்டில் "கோர்ட் பீஸ்" சட்டம் கொண்டு வந்தார்கள்.
அந்தச் சட்டம் வந்த பிறகு அந்தந்த மாகாணத்திற்குத் தகுந்தவாறு
கட்டண விகிதத்தை மாற்றிக் கொள்ளலாம் என்று ஆயிற்று. அந்தந்த
மாகாண முறைகளுக்குத் தகுந்தவாறு மாற்றி அமைத்துக் கொண்
டிருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரை இரண்டு பெரிய அறிஞர்கள்
ஜே. எஸ். மில்லும், பெந்தோமும் சொல்லியிருக்கிறார்கள். இந்த நீதி
நிர்வாகத்திற்கு ஒரு வரியை விதிப்பது மிகவும் கண்டிக்கத் தக்கது
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வேறு இரண்டு பெரிய தலைவர்கள்
ஹென்றி மெயினும் ஆடம் ஸ்மித்தும் "இது ஜனங்களுக்கு ஓரளவு
சேவை செய்யக்கூடிய வகையில் இருக்கவேண்டும். அதற்காக ஒரு
கட்டணம் விதிக்கவேண்டிய அவசியம் இல்லை" என்று குறிப்பிட்டார்கள்.
இதற்குப் பிறகு நன்றாகப் பரிசீலனை செய்து 1924-ம் ஆண்டிலே சமர்ப்
பித்த "டாக்சேஷன் என்க்வைரி கமிட்டி" அறிக்கையில் "இந்த
நிலைமையைப் பொறுத்த வரையில் சுத்தமாகக் கோர்ட் கட்டணம் வேண்
டாமென்று சொல்வது சரியல்ல" என்று 'The aggressors must be made
to pay the cost of the proceedings' என்று குறிப்பிட்டார்கள்.
அதற்கு பிறகு பல அறிஞர்களின் அபிப்பிராயங்கள் வெளிவந்திருக்
கின்றன. பெரிய அறிஞர்களான மேதா அகர்வால் இதைப் பற்றிப்
பேசும்போது சொன்ன கருத்துக்களை வாசிக்க அனுமதி கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

TEMPORARY CHAIRMAN (Sri M. Jagannathan): The hon. Member's time is up.

Sri S. LAZAR: Just five minutes more, Sir. I will finish within that time.

". . . So, while the Government should charge something in the form of court-fees for the administration of justice, it must not try to impose the levy on cost of service principle and make it prohibitive . . ." ('Public Finance' by J. K. Mehta and S. N. Agarwala—third edition—pages 479–480.)

என்று சொல்லுவதோடு கூட இதை எந்த அளவுக்குக் குறைக்க வேண்டு
மோ அந்த அளவுக்கு குறைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்
கள். அதைவிட முக்கியமாக 1953-54ல் 'டாக்சேஷன் என்க்வைரி
கமிட்டி" சிபார்சில் குறிப்பிட்டார்கள்.

". . . At the same time it has to be added that we find ourselves in entire agreement with a view which has been expressed by the Chief Justice of India and the Chief Justices of certain High Courts—in replies which they kindly sent to us, at our specific request, on one or two points—to the effect that court-fees (assuming they are charged at all) should only be on the basis of covering the expenses of the administration of justice. It has further been urged, in some of the replies we have referred to, that the eventual aim should be to abolish court-fees altogether and that meanwhile there should be brought about both a substantial reduction in these

[Sri S. Lazar] [21st March 1960

fees and a substantial uniformity between different States . . ." (Report of the Taxation Enquiry Commission, 1953–54—Volume III—page 108).

மேலே அவர் சொல்லுகின்றபோது—

". . . On the more restricted question of reduction of court-fees, however, we recommend an urgent review of these fees by those few State Governments which now derive from them a revenue which substantially exceeds the cost of administration of justice in order that the fees may be suitably reduced and readjusted as soon as possible . . ." (Report of the Taxation Enquiry Commission, 1953–54—Volume III—page 108).

அதை விட மிகவும் முக்கியமான ஒன்று சமீபத்திலே வெளியாகி இருக்கிறது. "லா கமிஷன் ஆப் இந்தியா" இதைப் பற்றிச் சில சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறார்கள். உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் இருக்கும் முறைகளை எல்லாம் ஆராய்ந்து கடைசியாகச் செய்துள்ள சிபாரிசில்

"(1) It is one of the primary duties of the State to provide the machinery for the administration of justice and on principle it is not proper for the State to charge fees from suitors in courts.

(2) Even if court-fees are charged, the revenue derived from them should not exceed the cost of the administration of civil justice.

(3) The making of a profit by the State from the administration of justice is not justified." (Page 509, Fourteenth Report of the Law Commission.)

என்று சொல்லிவிட்டு, இந்த அளவுக்குச் சீக்கிரமே எல்லா மாகாணங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஒரு கருத்தை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சுத்தமாகக் "கோர்ட் பீ" கட்டணங்களை எடுத்துவிட வேண்டுமென்று குறிப்பிடவில்லை. நீதி நிர்வாகத்தை நடத்திக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. எப்படி "லா அண்டு ஆர்டர்" அடிப்படையான கடமையோ அதேபோல் நீதி நிர்வாகமும் அரசாங்கத்தின் அடிப்படையான கடமை. இதில் தேவையான மாற்றங்களைச் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **Sri R. SRINIVASA IYER**: தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு "சப்ஜக்ட்"களில் மட்டும் அவகாசம் இல்லாத காரணத்தினால் பேச விரும்புகிறேன். முதலில் போலீஸ் டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால் போலீஸ் அதிகரித்துக் கொண்டே போகிறது என்ற ஒருவிதமான குற்றச்சாட்டு இருக்குமோ என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது, 1957–58-ல் 583 லட்சமும், 1958–59-ல் 595 லட்சமும், 1959–60-ல் 607 லட்சமும் மானியக் கோரிக்கை கோரப்பட்டது. ஆனால் 1960–61-ல் 605 லட்சந்தான் கோரப்பட்டிருக்கிறது. நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். போலீஸ் அதிகாரிகள் இன்னும் அதிகமாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. சமீபத்தில நடைபெற்ற நூற்றாண்டு விழாவிலே ஒரு சிறிய [illegible] பிரசுரம் ஐ. ஜி. அவர்களால் வெளியிடப்பட்டது. அதில் 50 [illegible]களுக்கு முன்னால் போலீஸ் துறை எந்த அளவுக்குப் பணி [illegible] வந்தது என்பதையும், இப்போது அதைப் போல் பல மடங்கு



21st March 1960] [Sri R. Srinivasa Iyer]

அதிகமான அளவுக்குப் பணியாற்ற வேண்டியிருக்கிறது என்பதையும் படங்கள் மூலமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்திலே திருடன் கால் நடையிலே ஓடினான் என்றால் இந்தக் காலத்தில் திருடன் பஸ்ஸில், ரயிலில், ஏரோப்ளேனில் ஓடுகிறான். அதைக் கண்டு பிடிப்பதற்கு வேண்டிய சாதனங்கள் எல்லாம் இப்போது இருந்தாலும் அதிலே அதிகச் சிரமங்கள் இருக்கின்றன. "பாப்புலேஷன்" இப்போது அதிகமாகிவிட்டது. குற்றங்கள் செய்யும் முறைகள் நூதனமாக இருக்கின்றன. இவைகளையெல்லாம் கண்டுபிடிக்கும் அளவுக்குச் சரியான ஆசாமிகள் இல்லையென்று சொல்ல முடியாது. ஏற்கெனவே, போலீஸ் ஸ்டேஷனில் ஆறு பேர் கான்ஸ்டபிள்கள் இருந்தார்கள் என்றால் இன்றையதினமும் அதே ஆறு கான்ஸ்டபிள்கள் தான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் ஜனங்கள் கூறுகிற குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கொலைகள் செய்யப்பட்டால் செய்தவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கண்டுபிடித்தாலும் கொலை செய்தவனைத் தண்டிக்கத் தக்க அளவுக்குச் சாட்சியங்கள் கிடைப்பதில்லை.

பட்டுக்கோட்டை டிவிஷனில் பேராவூரணியில் மாலையிலே ஒன்றும் பட்டுக்கோட்டையிலேயும் அந்திவேளையில் ஒன்றும் கொலைக் குற்றங்கள் நடந்தன. அவை இன்வெஸ்டிகேஷன் நடந்ததிலே சில பிசகுகளினால் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒரு குற்றம் கண்டுபிடிக்கப்படவில்லை. துப்பறியும் நாய்கள் வந்து, முக்கியமான ஆட்களைக் கண்டுபிடித்தாலுங்கூட, பின்னால் ஏற்பட்ட இன்வெஸ்டிகேஷனில் அவைகள் சரியாகக் கண்டுபிடிக்கப்படாமல் கேஸ் நடத்தப்படவில்லை என்று பொதுவாக ஒரு அபிப்பிராயம் உலவுகிறது. அதற்கு ஆதாரமும் இருக்கிறது. முக்கியமாக நிபுணர்களாக இருக்கக்கூடிய இன்வெஸ்டிகேடிங் அதிகாரிகள், போலீஸ் டிபார்ட்மெண்டிலே அனுபவம் உள்ளவர்கள், மற்றும் அமைச்சர் அவர்கள் இவைகளையெல்லாம் கவனித்து, இன்வெஸ்டிகேஷனிலே எந்த விதத்திலே இதைச் சீர்திருத்தினால், இம்மாதிரி பெரிய குற்றங்கள் கண்டுபிடிக்கப்படும், கண்டுபிடிக்கக்கூடும், வெற்றிகரமாக குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும் என்பதை ஆலோசித்து, இதைச் சீர்திருத்தியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனெனில், அடிப்படையாக உள்ள இடத்திலே கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. மேலே எவ்வளவு இன்வெஸ்டிகேஷன் நடந்தாலும், முதலிலே இருக்கும் கேஸ் டைரியை வைத்துக்கொண்டு டெவலப் செய்யப்பட்டது என்று கூறி, பின்னாலே "எவிடென்ஸ்" வந்தாலுங்கூட விடுதலை செய்துவிடுகிறார்கள். இதற்கு அடிப்படையான காரணத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். அந்தந்த ஸ்தலத்திலுள்ள அதிகாரிகள் நடந்துகொள்ளும் முறையை, அவர்கள் இன்வெஸ்டிகேஷன் செய்யும் முறையைக் கொஞ்சம் சீர்படுத்தி அமைத்து உடனடியாக இதிலே இன்வெஸ்டிகேஷன் எடுத்துக்கொண்டு வெற்றிகரமாக நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாஸர் சொன்னதுபோல, ப்ரொகிபிஷன் இலாகாவிலே ஒரு குற்றச்சாட்டு, இதற்கு முன்னால் கள்ளுக்கடையிலே மட்டும் குடித்துக்கொண்டு வந்தார்கள்; இப்பொழுது வீடு வீடாக இண்டஸ்ட்ரியாக மாறுகிறது என்று சொல்கிறார்கள். இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் முறையில் என் பிராந்தியத்தைப் பொறுத்தவரையில், கள் குடிப்பது கூட அனேகமாக குறைந்துவிட்டது என்றே சொல்லலாம். தீவிரமாக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ சிற்சில ஊர்களில் சரியான முறையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமலிருந்திருக்கலாம். ப்ரொகிபிஷன் ஆக்ட் சரிவர நிறைவேற்றப்பட்டு வருகிறது; தஞ்சை ஜில்லாவில் குற்றங்கள் குறைந்திருக்கின்றன; குடிப்பதும், வீடு வீடாகக் காய்ச்சுவதும் குறைந்திருக்கிறது என்று நான் சொல்வேன். அது மாதிரி யாராவது போலீஸ்காரர்கள் கண்டுபிடித்தால், பக்கத்திலே உள்ளவர்கள் "எவிடென்ஸ்" கொடுப்பதில்லை; எவிடென்ஸ் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள். பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் எந்தவிதத்திலும் இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவது கடினமான காரியம்.

[Sri R. Srinivasa Iyer] [21st March 1960

அடுத்தபடியாக, "அட்மினிஸ்ட்ரேஷன் ஆப் ஜஸ்டிஸ்" என்னும் விஷயத்திற்குப் போகிறேன். கோர்ட் கட்டணத்தைப்பற்றி கனம் ஸ்ரீ லாஸர் அவர்கள் பொதுப்படையாக நல்ல முறையிலே சொன்னார்கள். ஏற்கனவே இருந்த கோர்ட் கட்டணச் சட்டத்தைச் சீர்திருத்தி, பொது ஜனங்களுக்கு நன்மை ஏற்படும் முறையில் 1955-ம் வருஷத்திய 9-வது சட்டமாக புதுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. **From the Frying Pan to the Fire** என்று சொல்வதைப்போல, இப்பொழுது எழுதப்பட்டிருக்கும் விவரங்கள் சரியானபடி அர்த்தம் செய்ய முடியாமல் எப்பொழுதும் கோர்ட்டார், கோர்ட் கட்டணம் செலுத்துகிறவனுக்குச் சாதகமாகச் செய்யவேண்டியது என்ற முறையில் சட்டம் இருந்தபோதிலுங்கூட, கோர்ட் கட்டணம் செலுத்தியதைவிட அதிகமாகக் கட்டச் சொல்வதற்கு என்ன வழி இருக்கிறது என்று கண்டுபிடிக்கவேண்டுமென்று கோர்ட் பீஸ் இன்ஸ்பெக்டர்கள் செயல்படுகிறார்கள். அவர்களுக்கு கோர்ட் கட்டணத்தை எந்த வகையில் ஜாஸ்தியாகக் கேட்கலாம் என்று அர்த்தம் கண்டுபிடிக்க மட்டும் தெரிகிறதே தவிர, ஒருவர் ஜாஸ்தியாகக் கட்டணம் செலுத்திவிட்டால், அதைக் குறைக்கவேண்டிய அவசியம் இருந்தும், குறைக்க முற்படுவதில்லை. ஆயிரக்கணக்கான சந்தர்ப்பங்களிலே ஒரு சந்தர்ப்பத்திலும் கூட, "கட்டணம் அதிகமாகக் கட்டிவிட்டார்கள்; குறைக்க வேண்டும்" என்று சொன்னது இல்லை. சர்க்கார் அதிகாரியாக இருந்தால் சர்க்காருக்கு அதிக வருவாய் கண்டுபிடிக்க வேண்டியதுதான் என்று நினைக்கிறார்கள். ஆனால், நியாயமாக இருக்கவேண்டும். சில வியாஜ்யங்களுக்கு ரூ. 300 தான் "மினிமம் வால்யூவேஷன்" ஆக இருக்க வேண்டும் என்று இருக்கிறது. 5 ரூபாய் சந்து வியாஜ்யமாக இருந்தாலும், 300 ரூபாய் பெறுமானம் போட்டு, 22½ ரூபாய் செலவு செய்து தான் அதன் பேரில் வியாஜ்யம் நடத்தலாம் என்று ஒரு இடத்திலே சட்டம் இருக்கிறது. அதே வியாஜ்யத்திற்கு "மியர் டிக்ளரேஷன்" ஆக இருந்தால் 400 ரூபாய் பெறுமானம் என்று போடப்படுகிறது. கை தவறுதலாக ஏற்பட்டது என்று "காமெண்டரி" யில் சொல்லியிருக்கிறது. இன்னும் ஒருவரும் பார்த்து சீர்திருத்தவில்லை. கோர்ட் பீஸ் இன்ஸ்பெக்டர் "ஜாஸ்தி செலுத்தவேண்டும்" என்று சொல்லிவிட்டால், எந்த ஜட்ஜும், தைரியமாகச் சொல்லி, அதைக் குறைக்க முன் வருவதில்லை. சொல்ல மனமும் இல்லை; சொல்ல முடிவதும் இல்லை. ஹைகோர்ட்டுக்கு "ரிவிஷன்"க்குப் போனால், அதிலே தாமதம் ஏற்படுகிறது. அவசரமான உத்தரவு, "இன்டெரிம் இன்ஜங்ஷன்" முதலியன வாங்க முடியவில்லை. இப்படி ஹைகோர்டிலே போய் வருவதற்குள் வியாஜ்யமே அவசியம் இல்லாத தோரணை ஏற்பட்டுவிடுகிறது. கோர்ட் கட்டணச் சட்டத்திலே இருக்கும் "அனாமலி" களைத் திருத்தி, கோர்ட் கட்டணத்தினால் சர்க்காருக்கு ஜாஸ்தி வருவாய் வரவேண்டுமென்ற அபிப்பிராயத்தைக் கைவிட்டு சீர்திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பார் அஸோஸியேஷன்களைப் பற்றி சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். வக்கீல்கள் சங்கங்கள் என்ற வகையிலே இயங்குகின்றன. அவர்கள் சர்க்காரிலே சம்பளம் வாங்காவிட்டாலுங்கூட, நீதி நிர்வாகத்திலே (அட்மினிஸ்ட்ரேஷன் ஆப் ஜஸ்டிஸ்) அவர்களுடைய உதவியும் மிகவும் அவசியம் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்குமென்று நம்புகிறேன். பார் அஸோஸியேஷன் காரியாலயத்திற்கு வாடகை, தனியாகச் செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். மின்சாரக் கட்டணம் ஒரு விசிறியிருந்தாலும், 6 ரூபாயும், விளக்குக்கு 3 ரூபாயும், கட்டச் சொல்கிறார்கள். மீட்டர் வைத்தால் மினிமம் 1½ ரூபாய் கூட வராது. தனி மீட்டர் கூட இல்லை. அவர்களுக்கு டிபன் ரூம் என்று இருக்கிறது. ஓட்டலிலிருந்து டிபன் வரவழைத்து வைத்துக்கொண்டு அங்கே சாப்பிடுவதற்கு உபயோகப்பட்டாலும், அதற்கும் வாடகை கேட்கிறார்கள். பார் மெம்பர்களுக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப்போல் ஒரு பாதி அளவாவது அவர்களுக்குச் சாதனம் கொடுத்து, அமெனிடிஸ்களுக்கு சார்ஜ் பண்ணாமல் இருக்க வேண்டும். செங்கற்பட்டு ஜில்லா பார் அஸோஸியேஷனுக்கு என்று தனியாக காண்டீனுக்கு வாடகையில்லாமல் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களாம். அதைக் கூட சர்க்கார் புறக்கணித்து இருக்கிறார்



21st March 1960] [Sri R. Srinivasa Iyer]

களாம். நீதி செலுத்துவதிலே வக்கீல்களுக்கும் ஒரு கடமை உண்டு என்ற முறையில் அவர்களுடைய உதவியும் சர்க்காருக்குத் தேவை என்ற முறையில் அவர்களுக்கு எந்தவிதமான சௌகரியங்கள் செய்யவேண்டுமோ அதற்கு சர்க்கார் பணம் இல்லாமல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். பார் ரூமிலே மின்சார விசிறிக்கு மின்சார கரண்ட், டிபன் ரூம் வாடகை, இவைகளினால் சர்க்காருக்கு என்ன குறை வந்து விடப் போகிறது? இதிலிருந்து எத்தனை லட்ச ரூபாய் சர்க்காருக்கு வந்துவிடப் போகிறதோ தெரியவில்லை. இதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து, பார் ரூமுக்குச் சரியானபடி அமெனிடிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஜெயில்களிலே ஏற்கனவே உற்பத்தி செய்ததைப் பார்க்கிலும் நல்ல நிறைய பொருள்கள் உற்பத்தி செய்கிறார்கள். அதன் மூலம் சர்க்காருக்கு ஏராளமான பணம் வருகிறது. எஸ்டிமேட் கமிட்டி மெம்பர் என்ற முறையில் சில ஜெயில்களைப் பார்க்க நேரிட்டது. அங்கே உற்பத்தி செய்யும் பொருள்களினுடைய தரத்தை இன்னும் உயர்த்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தரத்தை உயர்த்துவதன் மூலம் 12 ரூபாய்க்கு விற்கக்கூடிய பொருளை 18 ரூபாய்க்கு விற்கலாம். இப்பொழுது சர்க்காருக்குத் தேவையான பொருள்களை மட்டும் அங்கே உற்பத்தி செய்து கொள்கிறார்கள். க்ரூட் மெதட்டிலே ஜெயில்களிலே போலீஸ்காரர்களுக்கு வேண்டிய பாத அணிகள் போன்றவைகளைப் பண்ணுகிறார்கள். அவைகளை இன்னும் நல்ல முறையில் சிக்கனமாக தோலை உபயோகப்படுத்தி மேலும் உபயோகப்படக் கூடியதாகச் செய்யலாம். விலையையும் ஜாஸ்தி பண்ணலாம். இதைச் செய்கிறவர்களுக்கும் வேலையிலே ஒரு அக்கறையும் உற்சாகமும் ஏற்படும்படி ஊதியம் ஓரளவு கொடுக்கலாம். அந்த வகையில் இப்பொழுது இரண்டு மாதம், மூன்று மாதம் கன்விக்ஷன் காலத்தைக் குறைப்பதைப் பார்க்கிறோம். பத்து ரூபாய் பெறுமான ஒரு பொருளைச் செய்பவனுக்கு எட்டணா, ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் போனஸ் கொடுக்கும்படியான ஒரு ஏற்பாட்டைச் செய்தால், குற்றவாளிகளுடைய க்ரிமினல் மைண்டு போய், நல்ல வேலை செய்ய வேண்டும். போனஸ் நிறையச் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டு, நல்ல முறையில் வேலை செய்யவேண்டும் என்று நினைக்கக்கூடிய எண்ணம் உண்டாகும்.

மதுவிலக்குக் குற்றங்களினால் யார் அதிகமாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், பெரும்பாலானவர்கள் பெண் பிள்ளைகளாக இருக்கிறார்கள். உண்மையிலேயே பெண் பிள்ளைகள் குற்றவாளிகளாக இருக்கமாட்டார்கள். இல்லாவிட்டாலும், ஆண் பிள்ளைகள் குற்றம் செய்திருந்தாலும், போலீஸ்காரர்கள் "ரெய்ட்" பண்ணும்போது அவர்கள் தப்பித்துக்கொண்டு ஓடிவிடுவதால், வீட்டிலே இருக்கும் பெண் பிள்ளைகள் அகப்பட்டுக்கொள்கிறார்கள். மேலும், அவர்கள் தங்களுடைய கணவன்மார்களைக் காட்டிக்கொடுக்க இஷ்டப்படாமல், அவர்களுடைய குற்றங்களைத் தாங்கள் செய்ததாக ஒப்புக்கொண்டு, தண்டனையை அனுபவிக்கிறார்கள். இரண்டாவது குற்றம், மூன்றாவது குற்றம் செய்தவர்களும் சிறையிலே இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஜெயிலில் படிப்புச் சொல்லிக் கொடுப்பதோடு மதுவிலக்குச் சட்டத்தை மீறாமல் இருக்கும் வகையிலேயும் போதிக்கப்படவேண்டும். தற்போது அவர்களுக்குக் கைத்தொழில் முதலியவைகளை நல்ல முறையிலே சொல்லிக் கொடுக்கிறார்கள். இருந்தாலும், இன்னும் அதிகமாக அவர்களைக் கைத்தொழில்களிலே ஈடுபடுத்தவேண்டும். இனிமேல் புருஷர்கள் குற்றம் செய்தாலும், அதைத் தைரியமாகத் தடுக்கக் கூடிய முறையிலே அவர்களுக்குக் கல்வி புகட்டப்பட வேண்டும. மாதத்திற்கு ஒரு தடவை, பத்து நாட்களுக்கு ஒரு தடவை, அவர்களுக்கு லெக்சர் செய்யப்படவேண்டும். படித்த பெண்பிள்ளைகளைவிட்டு, அவர்களுக்குப் பிரசங்கங்கள் செய்யச் சொன்னால், அதன் மூலம் அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். இம்மாதிரியான அமிலியரேடிவ் மெஷர்ஸ்களைக் கையாளுவார்களானால், வர வர மதுவிலக்குக் குற்றங்கள் குறையும் என்று நான் நினைக்கிறேன்.

[Sri R. Srinivasa Iyer] [21st March 1960

ஜெயில்களிலே "கன்வீனியன்ஸ்" செய்து கொடுக்கப்படவேண்டியது மிக மிக அவசியம். "கன்வீனியன்ஸ்" என்னும்போது நான் அதை விவரிக்கத் தேவையில்லை என்று நினைக்கிறேன். ஜெயில் கக்கூஸுக்கு மனுஷன் உள்ளே போய் வெளியே வர முடியாத நாற்றம். அசுத்தம். ஜெயில்களுக்கு ஆனரரி விஸிடர்ஸ் நியமிக்கிறோம். ஜெயில் விஸிட்டராக நியமிக்கப்படுகிற ஒருவர் ஜெயிலுக்கு எத்தனை முறை போய்ப் பார்த்துவிட்டு வருகிறார், அங்கே என்ன குறைகள் இருக்கின்றன, ஜெயில் எந்த நிலையில் உள்ளது, என்று எந்த ஜெயில் விஸிட்டராவது இதுவரை போய் பார்த்து ரிபோர்ட் செய்திருக்கிறாரா? அப்படி ஜெயிலுக்குப் போய் பார்வையிடாத, போய் பார்க்க அக்கறை இல்லாத, அபிப்பிராயம் கூற முடியாதவர்களை ஜெயில் விஸிட்டராக நியமித்துதான் நமக்கு என்ன பிரயோஜனம்? சர்க்காருக்கும் உதவி இல்லை; ஜெயிலிலே இருப்பவர்களுக்கும் உதவி இல்லை. நான் இரண்டு மூன்று ஜெயில்களுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். குறிப்பாக, பட்டுக்கோட்டை ஜெயிலிலே லெட்ரின் கன்வீனியன்ஸ் போதாது. கன்வீனியன்ஸ் ரொம்ப அவசியம். அரை பர்லாங்கு தூரம் நாற்றம் அடிக்கிறது, மிகவும் சுகாதாரமற்றதாக இருக்கிறது. மேலும், திறந்த கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து திறந்த வெளியில் நின்று குளிக்கவேண்டியிருக்கிறது அந்த ஜெயிலில் உள்ளவர்கள். என்னதான் அண்டர் ட்ரையல் ப்ரிஸனர்களாக இருந்தாலும், திறந்த வெளியில் அவர்கள் குளிக்கவேண்டுமா? அதை 100 பேர்கள் பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமா? இதையெல்லாம் பார்த்து, "அட்மினிஸ்ட்ரேஷன் ஆப் ஜஸ்டிஸ்" என்ற இனத்திலேயே ஜெயில்களையும் சேர்த்து, அதிக சௌகரியங்களும், பப்ளிக் கன்வீனியன்ஸ்களும், ஜெயிலில் வசிப்பவர்களுக்கு "கன்வீனியன்ஸ்" வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும். குளிக்கும் அரையிலும், கக்கூசுகளிலும் "டிஸ்-இன் பெக்டண்ட்"கள் போடப்படுவதாகத் தெரியவில்லை. இப்படியெல்லாம் செய்யவேண்டியது மிகவும் அவசியம். அப்படியில்லாத நிலையில், மிகவும் மோசமாக இருக்கிறது. ஜெயில் டிபார்ட்மெண்டார் இதையெல்லாம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**TEMPORARY CHAIRMAN (Sri M. Jagannathan)**: நேரம் ஆய்விட்டது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ முத்தையா செட்டியார் அவர்கள் பேசலாம்.

***SRI M. A. MUTHIA CHETTIAR**: தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம் பேசுவதற்காகத்தான் தங்கள் அனுமதியைக் கேட்டிருக்கிறேன். நம் நாட்டில் பொதுவாக நிம்மதி இருப்பது குறித்து போலீஸ் இலாகா மற்ற விஷயங்களையும் கவனித்து வருகிறது. நமது உள் நாட்டு மந்திரி அவர்களையும், நமது போலீஸ் இலாகாவில் உள்ள எல்லோரையும் பாராட்ட வேண்டும். பொதுவாக போலீஸ் இலாகாவைப் பற்றி நல்ல வார்த்தை சொல்லுவதற்கு சிலர் சங்கோசப்படுவார்கள். எந்த வகையில் அவர்கள் சரியாக நடக்கவில்லையோ அதை சரியில்லை என்று சொல்ல வேண்டும் மற்றபடி அவர்கள் நல்லமுறையில் நடந்துகொண்டால் அவர்கள் பற்றி சங்கோசம் இல்லாமல் நல்ல வார்த்தைகள் சொல்லவேண்டுமென்பது என்னுடைய கருத்து. நாட்டில் நிம்மதி இல்லாவிட்டால் எல்லோருமே நிம்மதியாக இருக்க முடியாது என்பது பிரத்தியட்சம். மற்ற தேசங்களைப் பார்க்கும்பொழுது நம்முடைய நாட்டிலே இப்பொழுது நிம்மதி நிலவுகிறது. அதை நாம் பாராட்டவேண்டும். குறிப்பாக சென்னை ராஜ்யத்தில் போலீஸ் இலாகா ஜாக்கிரதையாக நடந்துகொண்டு வருவதால் இங்கே நிம்மதியாக இருக்க முடிகிறது. அதுபற்றி இந்த போலீஸ் இலாகாவிலுள்ள எல்லோரையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒரே ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரத்தில் 1910-ம் வருஷத்தில் 3 லட்சம் ஜனத்தொகை இருந்தது. இப்பொழுது 14, 15 லட்சம் ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. அரசாங்கம் போக்குவரத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருவது எல்லோருக்கும் தெரிந்ததே. இதுவரையில் செய்திருக்கிற ஏற்பாடுகளை நாம் பாராட்ட



21st March 1960] [Sri M. A. Muthia Chettiar]

வேண்டும். அதோடுகூட செய்யாமல் விட்டுப்போனதை நான் சொல்ல விரும்புகிறேன். நகர அபிவிருத்தி டிரஸ்டு போர்டில் நான் ஒரு அங்கத்தினராக இருந்தாலும் அதுபற்றி ஒரு குறைபாட்டை சொல்ல விரும்புகிறேன். நகர அபிவிருத்தி டிரஸ்டு வீடுகள் கட்டிக்கொடுக்கும் விஷயத்தில் நல்ல வேலை செய்திருந்தாலும் பல இடங்களில் மூலை முடுக்குகளை அகலப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவில்லை. நகர அபிவிருத்தி டிரஸ்டு பயந்துகொண்டு செய்யவில்லை என்று நினைக்கிறேன். போலீஸாரும், நகர அபிவிருத்தி டிரஸ்டும் சேர்ந்து மூலை முடுக்குகளை அகலப்படுத்த வேண்டும். உதாரணமாக நுங்கம்பாக்கம் ஹைரோடிலிருந்து ஜெமினி குட்ஷெப்பர்டு கான்வெண்டு வரையில் செய்யலாம். ஆனால் 2 லட்ச ரூபாய்க்கு குறைந்து செய்ய முடியாது. ஏனென்றால், கால்வாயை மூடவேண்டும். மின்சார கம்பங்களை மாற்றவேண்டும். அதனால் தான் இது 'டிலே' ஆகிக்கொண்டிருக்கிறது என்று நான் உத்தேசமாக நினைக்கிறேன்.

இரண்டாவதாக, ஒரு முக்கியமான விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது. இப்பொழுது சென்னையில் ஜனப்பெருக்கம் அதிகமாக இருக்கிறது. நவதான்யம் வியாபாரம் லாரிகளின் மூலம் தான் அதிகமாக நடக்கிறது லாரி டிராபிக் அதிகமாக இருக்கிறது. சில இடங்களில் வண்டி போக முடியாது. போனால் திரும்ப முடியாது. லாரி டிராபிக்கைக் குறைக்க வேண்டும் என்று பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன். பட்ஜெட் பொது விவாதத்தின் பொழுதும் சொல்லியிருக்கிறேன். 'கிரேடர் மெட்ரூஸ் ஸ்கீம்' என்பது கோடம்பாக்கம், மாம்பலம், தாம்பரம் இப்படி பக்கத்திலே இருப்பது போதாது. அங்கே வேண்டுமானால் 1,000, 2,000 வீடுகள் கட்டலாம். 'கிரேடர் மெட்ரூஸ் ஸ்கீம்' கொஞ்சம் தள்ளி தூரமாகப் போடவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். ரேணிகுண்டா-விழுப்புரம் லைனுக்கு மீடர் கேஜ், பிராட் கேஜ் இரண்டும் இருக்கவேண்டும். அதேமாதிரி அரக்கோணம்-காஞ்சீவரம் லைனுக்கும் பிராட் கேஜ், மீடர் கேஜ் இரண்டும் இருக்கவேண்டும். அதேமாதிரி தான் ஆவடி-தாம்பரத்திற்கும். இப்படி 6 பாயிண்டுகள் வைத்தால் 2 லட்சம் ஜனம் வெளியே போய்விடுவார்கள். 'கோடவுன்' இருக்கிறது. மந்திரி அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். செகண்டராபாத்தில், 'கோடவுன்' இருக்கிறது. நவதான்யம் ஹைதராபாத் பக்கத்திலிருந்து தெலுங்கு பிரதேசங்களிலிருந்துதான் சென்னை வந்து திரும்பிப் போகிறது. இப்படிச் செய்து விட்டால் லாரிகள் சென்னை வரவேண்டிய தேவையே இல்லை. லாரிகள் நேராகப் போய்விடும். கமிஷன் மண்டிக்காரர்களும், தொழிலாளர்களும் கூட போய்விடுவார்கள். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். போலீஸ் இலாகா மட்டும் இதை கவனித்தால் போதாது. ரயில்வேயும் கவனிக்க வேண்டும். மந்திரி அவர்களும் இதற்காக டெல்லியில் சொல்லி ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு ஹைவேஸ் டிபார்ட்மெண்டும் ரோடுகள் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

'ஸாடிலைட் டவுன்' என்று சொல்லி தாம்பரத்தை விருத்தி செய்யாமல் தாம்பரத்திற்கும் சென்னைக்கும் நடுவே அதிகமாக வீடுகள் கட்டப்படுகின்றன. வடபழனி ஆர்காட் ரோட்டில் 10 மைலில் வீடுகள் கட்டிவிட்டால் போதாது. அல்லது ஷெனாய் நகரில் 8 மைல் 10 மைலுக்கு வீடுகள் கட்டிவிட்டால் போதாது. விழுப்புரம்-செங்கல்பட்டு லைனையும் எலக்டிரிபிகேஷன் செய்யவேண்டும். அது இன்னும் செய்யப்படவில்லை. பம்பாயில் இருப்பது போல் ஸாடிலைட் டவுனை 15, 20 மைல் தள்ளிப்போட்டால்தான் 'கிரௌடு' இருக்காது. ஆகையால் 15, 20 மைல் தூரத்தில் தள்ளி ஸாடிலைட் டவுன் ஏற்படுத்துவதுதான் சௌகரியமாக இருக்கும். இதையெல்லாம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**SRI P. S. CHINNADURAI**: கனம் தலைவர் அவர்களே, சர்க்காருக்கு சட்ட சம்பந்தமாக ஏற்படுகின்ற பல்வேறு சிக்கலான சந்தர்ப்பங்களில் தக்க ஆலோசனைகள் கூறி சரியானபடி உதவி செய்வதற்காகதான் அட்வகேட் ஜெனரல் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்று நான் கருது

[Sri P. S. Chinnadurai] [21st March 1960

கிறேன். சர்க்கார் சார்பாக ஆஜராகி, சர்க்காருடைய உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கவேண்டியவர் அட்வகேட் ஜெனரல் அவர்கள். நம்முடைய ராஜ்யத்தைப் பொருத்தவரையிலேயும் அப்படித்தான் என்று கருதுகிறேன். ஆனால் நம்முடைய ராஜ்யத்திலே பல சந்தர்ப்பங்களில் சர்க்காரினால் நியமிக்கப்பட்ட லேபர் கோர்ட்டு, இண்டஸ்டிரியல் டிரிபியூனல் பிரதிவாதிகளாக இருக்கிற வழக்குகளில் முதலாளிகளின் சார்பாக அட்வகேட் ஜெனரல் ஆஜராகியிருக்கின்ற ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தை சர்க்கார் உண்டாக்கியிருப்பார்கள் என்று நான் கருதவில்லை. ஏதோ ஒரு காரணத்தினால் அட்வகேட் ஜெனரலே இந்த நிர்ப்பந்தத்தை வரவழைத்துக் கொண்டிருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். இது மிகவும் வேடிக்கையான ஒரு நிலைமையை சிருஷ்டி செய்கிறது. முதலாளிகளும், தொழிலாளிகளும் மட்டும் வாதிப் பிரதிவாதியாக இருந்தால் அப்பொழுது நிலைமை வேறு. ஆனால், முதலாளிகள் வாதியாகவும், பிரதிவாதிகள் என்ற முறையில் தொழில் கோர்ட்டு அல்லது தொழில் டிரிபியூனல் என்று சொல்லப்படுபவைகள் சேர்க்கப்பட்டிருக்கிற வழக்குகளில், யார் லேபர் கோர்ட்டு, இண்டஸ்ட்ரியல் டிரிபியூனல்களுடைய உரிமைகளை ஹைகோர்ட்டு முன்பு பாதுகாக்கவேண்டும், அப்படிப்பட்ட கடமை யாருக்கு இருக்கிறது, அட்வகேட் ஜெனரலுக்கு இருக்கிறதா இல்லையா என்பது மிகவும் முக்கியமாக தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் என்று நான் கருதுகிறேன். சில சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக லேபர் கோர்ட்டுகள் சார்பாகவும், இண்டஸ்ட்ரியல் டிரிபியூனல் சார்பாகவும் ஆஜராகி மிகத் திறமையாக அட்வகேட் ஜெனரல் வழக்கை நடத்தியிருக்கிறார்கள். அதற்காக நன்றி. ஆனால், அதே நேரத்தில் முதலாளிகளுக்காக ஆஜராகி, தொழில் கோர்ட்டு அல்லது தொழில் டிரிபியூனலுக்கு எதிராக அந்த கேஸ்கள் தொலைந்து போகக் கூடிய அளவுக்கு தன்னுடைய திறமையை அட்வகேட் ஜெனரல் பயன்படுத்துகிறார்கள் என்றால், அது சரியானதா, நியாயமானதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏதாவது சட்ட சம்பந்தமான சிக்கல் ஏற்படுமானால் அட்வகேட் ஜெனரல் இடத்தில் போய்தான் அடிஷனல் கவர்ன்மெண்டு பிளீடர் ஆலோசனை கேட்கவேண்டி நிலைமை இருக்கிறது. அடிஷனல் கவர்ன்மெண்டு பிளீடர் இண்டஸ்ட்ரியல் டிரிபியூனலுக்காக ஹைகோர்ட்டில் ஆஜராகும்பொழுது, இண்டஸ்டிரியல் டிரிபியூனலுக்கு எதிராக முதலாளிகளின் தரப்பில் அட்வகேட் ஜெனரல் ஆஜராகிறார். இது எவ்வளவு விநோதமான நிலைமை ? இந்த விநோதமான நிலைமையை ஏன் அட்வகேட் ஜெனரல் தாமாக வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. அவர் அம்மாதிரி நிலைமையை வரவழைத்துக்கொள்ளுவதற்கு நமது சர்க்கார் எப்படி அனுமதிக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இம்மாதிரி விசித்திரமான நிலைமை தொலையவேண்டும். அம்மாதிரி முறை இனி வருகிற ஆண்டிலே இருக்கக்கூடாது. அதற்கு ஒரு போதும் இடம் அளிக்கக்கூடாது என்று வற்புறுத்துவதற்காகத்தான் நான் இந்த வெட்டுப் பிரேரேணையை இந்தச் சபையின் முன்னால் பிரேரேபித்திருக்கிறேன்.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. தொழிலாளர்கள் தரப்பில் ஆஜராகின்ற வக்கீல்கள் பெரும்பாலும் சாதாரண வக்கீல்கள். அப்படியிருக்கும்பொழுது திறமை வாய்ந்த அட்வகேட் ஜெனரல் முதலாளிக்காக ஆஜராகிறார் என்றால், அவருடைய திறமை அனைத்தும் முதலாளிகளுக்கே பயன்படுகிறது. யாருக்கு எதிராக ? தொழிலாளர்களுக்கு எதிராக, இண்டஸ்ட்ரியல் டிரிபியூனலுக்கு எதிராக பயன்படுகிறது. அதற்கு ஈடு கொடுக்கக் கூடிய அளவுக்கு நல்ல அனுபவம் வாய்ந்த திறமையான வக்கீல்களை கண்டுபிடிப்பது தொழிலாளர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது என்பதை நான் இந்த இடத்தில் மிகவும் வன்மையாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

ஆகவே, அட்வகேட் ஜெனரல் இப்படிப்பட்ட வழக்குகளில் முதலாளிகளுக்கு ஆஜராகக்கூடாது. அவர் அப்படி ஆஜராகக்கூடாத நிலைமையில் சர்க்கார் நிபந்தனை விதிக்கவேண்டும். அட்வகேட் ஜெனரல் கூட



21st March 1960] [Sri P. S. Chinnadurai]

தாமாகவே தம்முடைய அந்தஸ்தை காப்பாற்றிக்கொள்ளத் தக்கநிலையில் அப்படிப்பட்ட வழக்குகளில் முதலாளிகளுக்காக ஆஜராக மறுக்கவேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். சர்க்காருக்கும், அட்வகேட் ஜெனரலுக்கும் மத்தியில் ஏற்பட்டிருக்குகக்கூடிய நிபந்தனைகள், உடன்படிக்கை பிரகாரம் அவருக்கு சுதந்திரம் இருக்கலாம். ஆனால் தன்னுடைய நிலையை உத்தேசித்து, தன்னுடைய அந்தஸ்தை உத்தேசித்து, இப்படிப்பட்ட வழக்குகளில் தன்னுடைய பலத்தையும் திறமையையும் முழுவதையும் முதலாளிகள் தரப்பில் கொண்டு போய் சேர்ப்பதற்கு 12-30 p.m.
அட்வகேட் ஜெனரல் அவர்கள் இணங்கக்கூடாது என்று வலியுறுத்திச் சொல்லுவதுதான் என்னுடைய வெட்டுப் பிரேரணையின் நோக்கம். வெறுமனே சொல்லிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. இதற்கு தக்க ஏற்பாடுகளை இந்த ஆண்டிலேயே அரசாங்கம் செய்ய முன்வரவேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அடுத்த ஆண்டிலும், மற்ற ஆண்டுகளிலும் இது சம்பந்தமாக எந்த அங்கத்தினரிடமிருந்தும் இப்படிப்பட்ட புகார் வருவதற்கு இடம் ஏற்படாத நிலைமையில் சர்க்கார் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் உயர்நீதி மன்றங்களிலே, அவர்களுக்குப் போதுமான சட்ட உதவிகள் அளிக்கவேண்டுமென்று கருத்தைத் தெரிவித்தும், அரசாங்கம் இன்னும் சரியான முடிவுக்கு வரவில்லை என்பது வருந்தத் தக்க விஷயம். ஹைகோர்ட்டுகளிலோ, சுப்ரீம் கோர்ட்டுகளிலோ முதலாளிகள் ரிட் மனுக்கள் பதிவு செய்தால், அப்பொழுது, நல்ல வக்கீல்களை வைத்துவாதாட சக்தியுள்ள தொழிற்சங்கங்கள் வெகுசிலவே இருக்கின்றன. அந்தக் காரணத்தினால், ஹைகோட்டிலும், சுப்ரீம் கோர்ட்டிலும், தக்க ஆலோசனை கொடுக்க அட்வகேட் ஜெனரலையோ அல்லது வேறு தக்க திறன் படைத்த வக்கீல்களையோ வைத்து உதவி செய்வதை சர்க்காரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மேலும் போலீஸ் இலாகா சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அடிக்கடி இந்த சட்ட சபையிலே கூறுகிறேன் நம் நாட்டுக்கு அன்னிய அரசாங்கம் விட்டுப்போன பல நல்ல காரியங்களில், போலீஸ் இலாகா ஒன்று என்று. அதை இப்பொழுதும் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். ஆங்காங்கே இருக்கும் சிறுசிறு குற்றங்குறைகள் நிவர்த்திக்கப்படவேண்டும். அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டால், அவைகளை தக்க முறையிலே கவனம் செலுத்தி, நல்ல முறையிலே பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். போலீஸ் இலாகாவைப்பற்றி, அதன் நிர்வாகங்களைப் பற்றித் தனித்தனிக் குறைகளை எடுத்துச் சொல்ல இப்பொழுது அவகாசமும் இல்லை, நேரமும் இல்லை, அவசியமும் இல்லை என்று கூட நினைக்கிறேன். அவைகளை எடுத்துச் சொல்லி, அமைச்சரவர்களிடம் பரிகாரமும் காணமுடியும் என்று நம்புகிறேன். இருந்தாலும், சென்னை நகரம் சம்பந்தப்பட்ட மட்டில் முக்கியமாக ஒரு விஷயத்தை சட்ட சபையிலே சொல்ல வேண்டுவது அவசியம் என்ற கருத்து எனக்கு இருக்கிறது.

சென்னை நகரில் டாக்சி டிரைவர்களுக்கும், போலீஸ் இலாகாவினருக்கும் உறவு சரியில்லை அதற்குக் காரணம் எதுவானாலும் சரி, உறவு நிலைமையைச் சரிசெய்தாக வேண்டும். போலீசார் டாக்சி டிரைவர்கள் மீது குறை காண்பதும், டாக்சி டிரைவர்கள் போலீசார் மீது குறை காண்பதும் வெகு சகஜமாக இருக்கிறது. ஆனால், அதனால் பாதிக்கப்படுபவர்கள், முக்கியமாக நகரத்திற்கு வரும் வெளிநாடுகளிலிருந்து வரும் பொது மக்கள். ஆகவே, இதற்குத் தக்க பரிகாரம் காண அமைச்சர்வர்கள் ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். உயர்தர அதிகாரிகளையும், நிர்வாகிகளையும் வைத்துப் பேசி இதற்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதில் பழைய மனக்குறைகளை வைத்துக்கொண்டு, நல்ல உறவைக் கெடுத்துக் கொள்ளாமல், ஒரு நல்ல முறையிலே தீர்வு கண்டு நல்ல நிலைமையைச் சிருஷ்டிக்க வேண்டும் என்று அமைச்சரவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri P. S. Chinnadurai] [21st March 1960

போலீசார் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று அதிகமாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். போலீசார்களுக்கு வீடுகள் வழங்கும் வேலை தீவிரமாகச் செய்யப்படவேண்டும். அவர்கள் மிகக் கேவலமான வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது தெரிந்ததே. வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டாலும், போலீஸ் லைன்களுக்கு சரியானபடி எலக்டிரிபிகேஷன் திட்டம் உருவாக்கி, ஒரு ஆண்டுக்குள்ளாவது இதைச் செய்யக்கூடாதா ? அரசாங்கம் ரொம்ப காலம் எடுத்துக் கொள்ள வேண்டுமா ? சீக்கிரமாகவே, அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவதோடு, இந்த எலக்டிரிபிகேஷன் விஷயத்தையும், இதர வசதிகளையும் அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காவல் இலாகா சம்பந்தப்பட்டவரையில், முக்கியமாக பிரச்சினை ஒன்று தீர்க்கப்படவேண்டும். வெளியில் சுதந்திராக்கட்சி மது விலக்கு சம்பந்தமாக ஒரு விசித்திரமான கொள்கையைப் பரப்பி வருகிறது. அரசாங்கம் கள் விற்பதைத்தான் தடை செய்திருக்கிறதே தவிர தனிப்பட்டவர்கள் சாதாரணமாக காய்ச்சிச் சாப்பிடலாம் என்று சொல்லுகிறார்கள். அதனைப் பற்றி நமது அரசாங்கம் என்ன சொல்லுகிறார்கள். இந்தப் பிரசாரம் யாரால் செய்யப்படுகிறது யார் மதுவிலக்கு கொண்டுவர ஏற்பாடு செய்தார்களோ, துரதிஷ்டவசமாக அல்லது அதிர்ஷ்ட வசமாக, நாம் நினைக்கிறேன் துரதிஷ்டவசமாக என்று—அவர்கள் சமுதாயத்தால் உயர்வான ஸ்தானங்களில் இருந்தவர்கள். அப்படிப் பட்டவர்கள், அந்த நபர்கள் வாயிலாக இப்படி வரும்போது, சாதாரண மக்கள் சாராயம் காய்ச்சினால் என்ன என்று நினைக்கக்கூடுமாதலால், இதற்கு எவ்வளவு நல்ல வலுவான கொள்கை வேண்டுமென்பதை நாம் பார்க்கிறோம் ஆகவே இதனைக் குறித்தும் அமைச்சரவர்கள் தெளிவாகச் சொல்லுவார்கள் என்று நம்பிக் கொண்டு என்பேச்சை முடிக்கிறேன்.

* SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : தலைவரவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் இலாகா என்று எடுத்துக்கொண்டால், இந்த நாட்டில் பஞ்சமா பாதகங்களை ஒரு பொருட்டுக் கட்டுப் படுத்த, இந்த இலாகாவினர் பாடுபடுகிறார்கள், பகல் என்றும் இரவென்றும் பாராமல், மக்களென்றும் மனைவியென்றும் பாராமல், நாட்டின் பொதுநலத்திற்காக இன்று பணியாற்றிவருகிறார்கள், அதிலும், சென்னையிலே உள்ள போலீஸ் அதிகாரிகள் மிகவும் நல்ல முறையிலே பணியாற்றி, மற்ற மாகாணங்களிலே முதன்மையாக இருக்கிற பெருமை வாங்கித் தந்ததோடு, நமக்குப் பரிசு கொடுத்தாற்போல, நமது ஐ. ஜி. அவர்களை மதிப்பிற்குரிய ஜனாதிபதி இராசேந்திர பிரஸாத் அவர்களுக்கு எய்ட்-டி-காம்ப் ஆக நியமிக்கப்பட்டிருப்பது ஒரு பெருமை தரும் விஷயம். போலீஸ் இலாகா ஒரு காலத்தில், தடியெடுத்தவர்கள் தண்டல்காரர்கள் என்ற நிலையில், திருட்டுக் குற்றம், கொள்ளைக் குற்றம் இவைகளைக் கண்டு பிடிப்பதற்கு என்று இருந்தார்கள். இன்று பார்க்கிறோம், நாட்டிலே லஞ்சத்தையும், கள்ளச் சாராயம் காய்ச்சுதலையும், விபசாரத்தையும், ஒழிக்கும் சமூகச் சேவைகளில் ஈடுபடுகிறார்கள், ரோட்டிலே ஆளோடு ஆள் மோதிக் கொள்ளாமலும், மோட்டாரோடு மோட்டார் மோதிக்கொள்ளாமலும், அதோடு மட்டுமல்ல, விவசாயத்திலும், விளைந்த நெல்லை, தானியங்களை சில இடங்களில் போலீஸ் உதவி கொண்டு சேகரிக்க வேண்டும் என்கிற போதும் அவர்கள் நல்ல முறையிலே பணியாற்றி வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பலவிதமான சமூகச் சேவைகளில் போலீசார்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்—பள்ளிக்கூடங்கள் கட்டுவது, பாலங்கள் அமைப்பது போன்ற கிராமச் சேவைகளில் நெல்லை மாவட்டத்தில் அதேபோன்று பல ரோட்டுகள் அமைக்கப்பட்டன. ஆனால் இந்த வருஷத்திலும், அம்மாதிரிச் சேவைகளை மற்ற மாவட்டங்களிலும் நெல்லையைப் போன்று அவ்விதமான சமூகச் சேவைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவதால், நெல்லை மாவட்டத்தில் சரியாக வேலைகள் அவ்வளவாக நடை பெறவில்லையென்பது எங்களுக்கு எல்லாம் ஒரு குறைதான் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



st March 1960] [Srimathi Rajathi Kunchithapatham]

போலீசார் மனைவியர்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்தாடு, குடிசைத் தொழில்களில் அவர்களை ஈடுபடச் செய்ய அமைச்சரவர்கள் வண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தார்கள் ... கல்லாம், அம்பர் ராட்டை, ராட்டை முதலிய கருவிகளும், அச்சுக் கோத்தல், க்குதல் முதலான காரியங்களில் அவர்களை ஈடு படுத்துவதற்காக பாளையங்காட்டையில் அமைச்சர்ரவர்களே ஆரம்பித்து வைத்தார்கள். அதிலும் ட குறையிருக்கிறது என்பதைச் சால்ல வேண்டியிருக்கிறது. போலீசார் னைவிகளுக்கா என்று ஏற்பாடு செய்த இந்தக் குடிசைத் தொழில்கள், ன்று போலீசார் மனைவியார் அல்லாதவர்களுக்கு பயன்படுகிறது. ஒரு பிற்சி மட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு, டெண் ள் நல இலாகாவினர் அதைச் சுவீகரித்துக் கொண்டு விட்டார்கள். அவர் ளுக்காக ஏற்படுத்தப்பட்ட பயிற்சிகள், தொழில்களெல்லாம் ... ன் ற பெண்களுக்கு பயன் படுகிறதே ஒழிய, போலீசார் மனைவியார் ளுக்குப் பயன் படுவதில்லை. போலீசார் மனைவிகளுக்கு அதிக வருவாய் ரும் என்ற நோக்கத்துடன் ஆரம்பித்த திட்டம் அவர்களுக்கு இன்று யன் படவில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் காள்ளுகிறேன்.

அதோடுகூட போலீஸ் நிர்வாகத்தில் லஞ்ச ஊழல் தீர்ப்பதில் டுமையாக இருக்கிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்கள் கண்டு டிக்கப்படாமல் இருப்பதற்கும் போலீசார் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்குக் காரணமாக கான்ஸ்டபில்கள், ஹெட் கான்ஸ்டபில்கள், சப் ன்ஸ்பெக்டர்கள் மீதெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு காலத்திலே, கிராமங்களுக்கு ரோடுகளே வேண்டாம் என்று ராம வாசிகள் சொல்லும் நிலைமை இருந்தது. அவர்கள் அதை விரும்பவில்லை என்றால், ரோடு இருந்தால் போலீசார்கள் அங்கு வரச் சௌகரியமாகி விடும் என்றே. ஆனால், இன்று நிலைமை வேறு. ஒவ்வொரு ஊருக்கும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்குக் காரணம். இந்த போலீசார்கள் மக்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்து வருகிறார்கள் என்பதே. ஆகவே, கிராம மக்கள் இன்று போலீஸ் ஸ்டேஷனை நாடுகிறார்கள். ஆகவே, போலீஸ்சார் அத்தகைய ரீதியில் பணிபுரிந்து வருகிறார்கள் என்பதை நாம் உணரவேண்டும். ஆகவே, இந்தத் துறைக்கு ரூபாய் 6 கோடி மானியமாகக் கேட்டிருப்பது மிகையாகாது, அதிகமில்லை.

இராச்சியத்தில் நெருக்கடியாக நகரங்களில் காலையிலும், சாயங்காலங்களிலும், டிராபிக் அதிகமாக இருக்கும் நேரங்களில், சார்ஜண்டுகள் அந்தந்த இடங்களுக்கு ஜீப் மூலம் போய், பாதசாரிகளையும் நடபாதையில் போகும்படியும் செய்தால் ரொம்ப நலமாக இருக்கும். ஆனால், ஜீப்புகள் போதாது என்று சொல்லி சில இடங்களில் பணியாற்ற முடியவில்லை, என்கிறார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பார்ஸ்டல் ஸ்கூலைப்பற்றி ஒரு வார்த்தை. சென்னை ராஜ்யத்திலேயே பாளையங்கோட்டையில் மட்டும்தான் ஒரு பார்ஸ்டல்ஸ்கூல் இருக்கிறது. அது, என் தொகுதியில் இருப்பதால் அதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அந்த பார்ஸ்டல் ஸ்கூலில் சுமார் 600 பேர்களுக்கு இடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிலிருந்து வருஷத்திற்கு சுமார் 102–104 பேர்கள் வெளியே வருவதாகச் சொல்லப்படுகிறது. அங்குள்ளவர்கள் மைனர் கைதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் பின்னடைந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் வெளியே வந்தவுடன் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொள்வதற்கு வேண்டியவழிவகைச் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏதோ சந்தர்ப்பக் கோளாறுகளினால் அவர்கள் திருட்டுத்தொழிலில் ஈடுபட்டு அங்கு சென்றிருக்கிறார்கள். அங்கிருந்து வெளியே வருகிறவர்கள் எவ்வளவோ பேர்கள் சீர்திருத்தம் அடைந்து நல்ல முறையில் வாழ்க்கையை நடத்தக்

கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களுககு வெளியே வந்தவுடன் வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்கள் வெளியே வந்தவுடன் அவர்களுக்கு என்று ப்ரோபேஷன் ஆபீசர்களையும் நியமித்து அவர்களுக்கு தொழில் வாங்கிக்கொடுக்க அவர்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செல்லும்போது அவர்கள் இவ்வளவு காலம் ஜெயிலில் இருந்தார்கள் என்றும் சொல்லி வருகிறார்கள். அப்படி இரண்டு மூன்று வருஷங்களுக்கு அவர்களுடன் இந்தப்ரோபேஷன் ஆபீசர்கள் செல்லுகிறார்கள். அதனால் அவர்கள் எந்தவிதமான குற்றத்தையும் செய்ய மாட்டார்கள் என்று முடிவு செய்துகொள்ளலாம். இப்படி ப்ரோபேஷன் ஆபீசர்கள் அவர்களை கண்காணித்து வருவதால் அவர்களால் எந்த விதமான பயமும் ஏற்படுவதற்கு இடம் இல்லை. இந்த நிலைமையில் அவர்களுக்கு தொழில் கிடைக்கும்படிக்கும், தொழில் செய்வதற்கும் ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது ? இப்படிப்பட்ட கைதிகள் ஜெயிலில் இருக்கும்போது அவர்களுக்கு தையல் வேலை, தச்சு வேலை, கொல்லு வேலை, நெசவு முதலிய தொழில்களில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வேலைகளுக்கு அவர்கள் வெளியே வரும்போது அவர்கள் பல தொழில்களுக்கு லாயக்குள்ளவர்களாக இருக்கிறார்கள். நூல் நூற்றல், நெசவு தொழில் செய்தல் முதலிய பல விதமான தொழில்களை நடத்த கூடியவர்களாக அவர்கள் வெளியே வருகிறார்கள். அப்படி பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் செய்வதற்கு வேண்டிய உபகரணங்களை சர்க்கார் ஏன் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். சாதாரணமாக யானை கொடுக்கும்போது அவர்களுக்கு ஏன் தொரட் கொடுக்கக்கூடாதா என்று சொல்வதுண்டு. அதைப்போலவே அப்படிப்பட்ட மைனர் கைதிகளுக்கு தொழில் பயிற்சிகளை கற்றுக்கொடுக்கும்போது அவர்கள் ஏன் அந்தந்தத் தொழில்களை நடத்தக் கூடிய உபகரணங்களைக் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். நாம் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு எவ்வளவோ செலவு செய்கிறோம். அப்படிச் செலவு செய்யும் போது அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களையும் அவர்களுக்குக் கொடுக்கலாம். பின்னடைந்த சமூகத்தினருக்கும் ஹரிஜனசமூகத்திற்கும் நாம் எவ்வளவோ செலவு செய்கிறோம். அதைப் போலவே இவர்களுக்கு ஏன் செலவு செய்யக்கூடாது என்று கேட்கிறேன். தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு தையல் மிஷின் வாங்கி கொடுக்கலாம், தச்சு வேலையோ மற்ற வேலைகளையோ கற்றுக்கொண்டவர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களை சர்க்கார் வாங்கிக் கொடுக்கலாம். இப்படி அவர்களுக்குறிய சாதனங்களை ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

இது சம்பந்தமான ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். இதற்கு என்று சர்க்கார் ஒன்றும் அதிகப்படியான செலவு செய்ய அவசியம் இல்லை. டிஸ்சார்ஜ்ட் பிரிசனர்ஸ் எய்ட் சொஸைட்டி என்று இருக்கிறது. அதில் எண்பது ஆயிரம் ரூபாய் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அவர்களுக்கு எடுத்துக் கொடுக்கலாம். அவர்கள் ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்று கருதினால் அவர்களுக்கு வேண்டிய பணம் கொடுத்து உதவி செய்யலாம். வேறு எங்கேயாவது போய் வேலை செய்யவேண்டும் என்று சொன்னால் அங்கு அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கு சிபாரிசு செய்யலாம். இப்பொழுது அவர்கள் பல ஆலைகளுக்குச் சென்று வேலை வேண்டும் என்று கேட்டால் அவர்களுடன் ப்ரோபேஷன் ஆபீசர்கள் தொடர்ந்து வருவதாலும் இவர்கள் ஜெயிலிலிருந்து விடுதலை அடைந்து வந்திருப்பதாலும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லிவிடுகிறார்கள். மற்றும் அவர்களுடன் வரக்கூடிய ஆபீசர்களும் அவர்கள் ஜெயிலிலிங்ந்து வந்தவர்கள் என்று சொல்வதால் அவர்களுக்கு வேலை கிடைப்பது அறிதாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி அவர்களுக்கு ஆலைகளில் வேலை கொடுக்கும்படியான வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு தடவை திருடியவன் மறுபடியும் திருடுவான் என்பதில்லை, இது என்னுடைய சொந்த அபிப்பிராயம். ஜெயிலிலிருந்து வரக்கூடியவர்



களில் எவ்வளவோ பேர்கள் நல்ல முறையில் சீர்திருத்தம் அடைந்திருக்கக்கூடும். அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டிய நம்முடைய கடமையாக இருக்கிறது.

இப்படி திருநெல்வேலி ஜில்லாவில் வெளியே வரக்கூடியவர்களில் எத்தனையோ பேர்கள் ஆறாவது பாரம் வரையிலும், பி.யு.சி. வரையிலும் படித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பை அளிக்க வேண்டும். பல தொழிற்சாலை, பஞ்சாலைகளில் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படியாக இந்தச் சர்க்கார் அந்த முதலாளிகளுக்கு இண்டிமேஷன் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். பல நெசவு தொழிற்சாலைகள் இருக்கின்றன, ஆத்தூரில் கெமிகல் தொழிற்சாலை இருக்கிறது. இவைகளில் எல்லாம் அவர்களை எடுத்துக்கொள்ளும்படியாக சிபாரிசு செய்யலாம். தனியாகச் சென்று தொழிற்சாலைகளில் வேலை பெற்றுக்கொள்ளும்படியான நிலையில் அவர்கள் இல்லை. சாதாரணமாக ஜெயிலிலிருந்து வந்தவன் என்றால் யாரும் வேலைக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அத்துடன் ப்ரோபேஷன் ஆபீசர்கள் வேறு அவர்களுடன் தொடர்ந்து செல்லுகிறார்கள். அதனால் சர்க்கார் தான் முன் வந்து அவர்களுக்கு வேலை கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும்.

அத்துடன் அங்குள்ள கைதிகளுக்கு மத போதனை கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். முஸ்லீம்களாக இருந்தால் முஸ்லீம் மதத்தையும் கிருஸ்துவர்களாக இருந்தால் கிருஸ்துவ மதத்தையும், ஹிந்துவாக இருந்தால் ஹிந்து மதக்கொள்கைகளையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மத அடிப்படையில் தினம் காலையிலோ அல்லது மாலையிலோ அரை மணி அல்லது ஒரு மணி நேர மத போதனை அளிக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு கூட அவர்களுக்கு இசை கூட அளிக்கப்பட வேண்டும். காட்டில் வாழக்கூடிய யானைக்கும், மணல் காட்டில் செல்லக்கூடிய ஒட்டகத்திற்கும் இசை வேண்டியதாக இருக்கிறது. என்பதை நாம் அறிகிறோம். இந்த நிலைமையில் திருடனாக இருந்தாலும் அவனுக்கு இசை கேட்கக் கூடிய மனம் இருக்கிறது. திருடக்கூடியவனாக இருந்தாலும் அவனுக்கு இசை வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில் அவர்களுக்கு வாரம் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ பஜனை செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். ரேடியோ செட்டுகளை அவர்களுக்கு அமைத்துக்கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

மற்றும் குறிப்பிடத்தக்க இரண்டு விஷயங்கள் இந்த இலாகாவினால் செய்யப்பட்டு வருகிறது. அனாதை இல்லங்களிலுள்ள பிள்ளைகளை எடுத்து பிள்ளைகள் இல்லாதவர்கள் எடுத்து வளர்க்கலாம் என்று இருக்கிறது. இது ரொம்பவும் வரவேற்கத்தக்க அம்சமாகும். இது ரொம்பவும் வெற்றிகரமாக இருந்து வருகிறது என்றும் சொல்லப்படுகிறது. ஒன்றிரண்டு இடங்களில் இது நல்ல முறையில் நடந்து வருகிறது. மேல் நாடுகளில் தான் இப்படிப்பட்ட பழக்கம் இருந்து வந்தது. அந்தப் பழக்கம் இப்பொழுது நம் நாட்டிலேயே நடந்து வருவதைப் பார்த்தால் அது வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால் முன் காலத்தில் நம் நாட்டில் என்ன பழக்கம் இருந்து வந்தது என்றால் பிள்ளைகள் இல்லையென்றால் மறு விவாகம் செய்து கொள்வது என்ற பழக்கம் இருந்து வந்தது. அம்மாதிரி இல்லாமல் அனாதை பிள்ளைகளை எடுத்து வளர்ப்பது என்ற திட்டம் ரொம்பவும் வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தக்கொள்கை ரொம்பவும் வரவேற்கத்தக்கது. இது ஒரு நல்ல அம்சம்.

[Srimathi Rajathi Kunchithapatham] [21st March 1960

கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வெளியே வந்தவுடன் வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்கள் வெளியே வந்தவுடன் அவர்களுக்கு என்று ப்ரோபேஷன் ஆபீசர்களையும் நியமித்து அவர்களுக்கு தொழில் வாங்கிக்கொடுக்க அவர்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செல்லும்போது அவர்கள் இவ்வளவு காலம் ெ யிலில் இருந்தார்கள் என்றும் சொல்லி வருகிறாகள். அப்படி இ ண்டு மூன்று வருஷங்களுக்கு அவர்களு ன் இந்தப்ரோபேஷன் ஆபீசர்கள் செல்லுகிறார்கள். அதனால் அவர்கள் எந்தவிதமான குற்றத்தையும் செய்ய மாட்டார்கள் என்று முடிவு செய்துகொள்ளலாம். இப் டி ப்ரோபேஷன் ஆபீசர்கள் அவர்களை கண்காணித்து வருவத ல் அவர்களால் எந்த விதமான பயமும் ஏற்படுவதற்கு இடம் இல்லை. இந்த நிலைமையில் அவர்களுக்கு தொழில் கிடைக்கும்படிக்கும், தொழில் செய்வதற்கும் ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது ? இப்படிப்பட்ட கைதிகள் ஜெயிலில் இருக்கும்போது அவர்களுக்கு தையல் வேலை, தச்சு வேலை, கொல்லு வேலை, நெசவு முதலிய தொழில்களில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வேலைகளுக்கு அவர்கள் வெளியே வரும்போது அவர்கள் பல தொழில்களுக்கு லாயக்குள்ளவர்களாக இருக்கிறார்கள். நூல் நூற்றல், நெசவு தொழில் செய்தல் முதலிய பல விதமான தொழில்களை நடத்த கூடியவர்களாக அவர்கள் வெளியே வருகிறார்கள். அப்படி பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் செய்வதற்கு வேண்டிய உபகரணங்களை சர்க்கார் ஏன் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். சாதாரணமாக யானை கொடுக்கும்போது அவர்களுக்கு ஏன் தொரட் கொடுக்கக்கூடாதா என்று சொல்வதுண்டு. அதைப்போலவே அப்படிப்பட்ட மைனர் கைதிகளுக்கு தொழில் பயிற்சிகளை கற்றுக்கொடுக்கும்போது அவர்கள் ஏன் அந்தந்தத் தொழில்களை நடத்தக் கூடிய உபகரணங்களைக் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். நாம் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு எவ்வளவோ செலவு செய்கிறோம். அப்படிச் செலவு செய்யும் போது அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களையும் அவர்களுக்குக் கொடுக்கலாம். பின்னடைந்த சமூகத்தினருக்கும் ஹரிஜனசமூகத்திற்கும் நாம் எவ்வளவோ செலவு செய்கிறோம். அதைப் போலவே இவர்களுக்கு ஏன் செலவு செய்யக்கூடாது என்று கேட்கிறேன். தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு தையல் மிஷின் வாங்கி கொடுக்கலாம், தச்சு வேலையோ மற்ற வேலைகளையோ கற்றுக்கொண்டவர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களை சர்க்கார் வாங்கிக் கொடுக்கலாம். இப்படி அவர்களுக்குறிய சாதனங்களை ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

இது சம்பந்தமான ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். இதற்கு என்று சர்க்கார் ஒன்றும் அதிகப்படியான செலவு செய்ய அவசியம் இல்லை. டிஸ்சார்ஜ்ட் பிரிசனர்ஸ் எய்ட் சொஸைட்டி என்று இருக்கிறது. அதில் எண்பது ஆயிரம் ரூபாய் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அவர்களுக்கு எடுத்துக் கொடுக்கலாம். அவர்கள் ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்று கருதினால் அவர்களுக்கு வேண்டிய பணம் கொடுத்து உதவி செய்யலாம். வேறு எங்கேயாவது போய் வேலை செய்யவேண்டும் என்று சொன்னால் அங்கு அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கு சிபாரிசு செய்யலாம். இப்பொழுது அவர்கள் பல ஆலைகளுக்குச் சென்று வேலை வேண்டும் என்று கேட்டால் அவர்களுடன் ப்ரோபேஷன் ஆபீசர்கள் தொடர்ந்து வருவதாலும் இவர்கள் ஜெயிலிலிருந்து விடுதலை அடைந்து வந்திருப்பதாலும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லிவிடுகிறார்கள். மற்றும் அவர்களுடன் வரக்கூடிய ஆபீசர்களும் அவர்கள் ஜெயிலிலிருந்து வந்தவர்கள் என்று சொல்வதால் அவர்களுக்கு வேலை கிடைப்பது அறிதாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி அவர்களுக்கு ஆலைகளில் வேலை கொடுக்கும்படியான வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு தடவை திருடியவன் மறுபடியும் திருடுவான் என்பதில்லை, இது என்னுடைய சொந்த அபிப்பிராயம். ஜெயிலிலிருந்து வரக்கூடியவர்



21st March 1960] [Srimathi Rajathi Kunchithapatham]

களில் எவ்வளவோ பேர்கள் நல்ல முறையில் சீர்திருத்தம் அடைந்திருக்கக்கூடும். அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டிய நம்முடைய கடமையாக இருக்கிறது.

இப்படி திருநெல்வேலி ஜில்லாவில் வெளியே வரக்கூடியவர்களில் எத்தனையோ பேர்கள் ஆறாவது பாரம் வரையிலும், பி.யு.சி. வரையிலும் படித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பை அளிக்க வேண்டும். பல தொழிற்சாலை, பஞ்சாலைகளில் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படியாக இந்தச் சர்க்கார் அந்த முதலாளிகளுக்கு இண்டிமேஷன் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். பல நெசவு தொழிற்சாலைகள் இருக்கின்றன, ஆத்தூரில் கெமிகல் தொழிற்சாலை இருக்கிறது. இவைகளில் எல்லாம் அவர்களை எடுத்துக்கொள்ளும்படியாக சிபாரிசு செய்யலாம். தனியாகச் சென்று தொழிற்சாலைகளில் வேலை பெற்றுக்கொள்ளும்படியான நிலையில் அவர்கள் இல்லை. சாதாரணமாக ஜெயிலிலிருந்து வந்தவன் என்றால் யாரும் வேலைக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அத்துடன் ப்ரோபேஷன் ஆபீசர்கள் வேறு அவர்களுடன் தொடர்ந்து செல்லுகிறார்கள். அதனால் சர்க்கார் தான் முன் வந்து அவர்களுக்கு வேலை கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும்.

அத்துடன் அங்குள்ள கைதிகளுக்கு மத போதனை கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். முஸ்லீம்களாக இருந்தால் முஸ்லீம் மதத்தையும் கிருஸ்துவர்களாக இருந்தால் கிருஸ்துவ மதத்தையும், ஹிந்துவாக இருந்தால் ஹிந்து மதக்கொள்கைகளையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மத அடிப்படையில் தினம் காலையிலோ அல்லது மாலையிலோ அரை மணி அல்லது ஒரு மணி நேர மத போதனை அளிக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு கூட அவர்களுக்கு இசை கூட அளிக்கப்பட வேண்டும். காட்டில் வாழக்கூடிய யானைக்கும், மணல் காட்டில் செல்லக்கூடிய ஒட்டகத்திற்கும் இசை வேண்டியதாக இருக்கிறது. என்பதை நாம் அறிகிறோம். இந்த நிலைமையில் திருடனாக இருந்தாலும் அவனுக்கு இசை கேட்கக் கூடிய மனம் இருக்கிறது. திருடக்கூடியவனாக இருந்தாலும் அவனுக்கு இசை வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில் அவர்களுக்கு வாரம் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ பஜனை செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன் ரேடியோ செட்டுகளை அவர்களுக்கு அமைத்துக்கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

மற்றும் குறிப்பிடத்தக்க இரண்டு விஷயங்கள் இந்த இலாகாவினால் செய்யப்பட்டு வருகிறது. அனாதை இல்லங்களிலுள்ள பிள்ளைகளை எடுத்து பிள்ளைகள் இல்லாதவர்கள் எடுத்து வளர்க்கலாம் என்று இருக்கிறது. இது ரொம்பவும் வரவேற்கத்தக்க அம்சமாகும். இது ரொம்பவும் வெற்றிகரமாக இருந்து வருகிறது என்றும் சொல்லப்படுகிறது. ஒன்றிரண்டு இடங்களில் இது நல்ல முறையில் நடந்து வருகிறது. மேல் நாடுகளில் தான் இப்படிப்பட்ட பழக்கம் இருந்து வந்தது. அந்தப் பழக்கம் இப்பொழுது நம் நாட்டிலேயே நடந்து வருவதைப் பார்த்தால் அது வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால் முன் காலத்தில் நம் நாட்டில் என்ன பழக்கம் இருந்து வந்தது என்றால் பிள்ளைகள் இல்லையென்றால் மறு விவாகம் செய்து கொள்வது என்ற பழக்கம் இருந்து வந்தது. அம்மாதிரி இல்லாமல் அனாதை பிள்ளைகளை எடுத்து வளர்ப்பது என்ற திட்டம் ரொம்பவும் வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தக்கொள்கை ரொம்பவும் வரவேற்கத்தக்கது. இது ஒரு நல்ல அம்சம்.

[Srimathi Rajathi Kunchithapatham] [21st March 1960

கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்களுககு வெளியே வந்தவுடன் வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்கள் வெளியே வந்தவுடன் அவர்களுக்கு என்று ப்ரோபேஷன் ஆபீசர்களையும் நியமித்து அவர்களுக்கு தொழில் வாங்கிக்கொடுக்க அவர்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செல்லும்போது அவர்கள் இவ்வளவு காலம் ஜெயிலில் இருந்தார்கள் என்றும் சொல்லி வருகிறாகள். அப்படி இரண்டு மூன்று வருஷங்களுக்கு அவர்களுடன் இந்தப்ரோபேஷன் ஆபீசர்கள் செல்லுகிறார்கள். அதனால் அவர்கள் எந்தவிதமான குற்றத்தையும் செய்ய மாட்டார்கள் என்று முடிவு செய்துகொள்ளலாம். இப்படி ப்ரோபேஷன் ஆபீசர்கள் அவர்களை கண்காணித்து வருவதால் அவர்களால் எந்த விதமான பயமும் ஏற்படுவதற்கு இடம் இல்லை. இந்த நிலைமையில் அவர்களுக்கு தொழில் கிடைக்கும்படிக்கும், தொழில் செய்வதற்கும் ஏன் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது ? இப்படிப்பட்ட கைதிகள் ஜெயிலில் இருக்கும்போது அவர்களுக்கு தையல் வேலை, தச்சு வேலை, கொல்லு வேலை, நெசவு முதலிய தொழில்களில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வேலைகளுக்கு அவர்கள் வெளியே வரும்போது அவர்கள் பல தொழில்களுக்கு லாயக்குள்ளவர்களாக இருக்கிறார்கள். நூல் நூற்றல், நெசவு தொழில் செய்தல் முதலிய பல விதமான தொழில்களை நடத்த கூடியவர்களாக அவர்கள் வெளியே வருகிறார்கள். அப்படி பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் செய்வதற்கு வேண்டிய உபகரணங்களை சர்க்கார் ஏன் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். சாதாரணமாக யானை கொடுக்கும்போது அவர்களுக்கு ஏன் தொரட் கொடுக்கக்கூடாதா என்று சொல்வதுண்டு. அதைப்போலவே அப்படிப்பட்ட மைனர் கைதிகளுக்கு தொழில் பயிற்சிகளை கற்றுக்கொடுக்கும்போது அவர்கள் ஏன் அந்தந்தத் தொழில்களை நடத்தக் கூடிய உபகரணங்களைக் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். நாம் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு எவ்வளவோ செலவு செய்கிறோம். அப்படிச் செலவு செய்யும் போது அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களையும் அவர்களுக்குக் கொடுக்கலாம். பின்னடைந்த சமூகத்தினருக்கும் ஹரிஜனசமூகத்திற்கும் நாம் எவ்வளவோ செலவு செய்கிறோம். அதைப் போலவே இவர்களுக்கு ஏன் செலவு செய்யக்கூடாது என்று கேட்கிறேன். தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு தையல் மிஷின் வாங்கி கொடுக்கலாம், தச்சு வேலையோ மற்ற வேலைகளையோ கற்றுக்கொண்டவர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களை சர்க்கார் வாங்கிக் கொடுக்கலாம். இப்படி அவர்களுக்குறிய சாதனங்களை ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

இது சம்பந்தமான ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். இதற்கு என்று சர்க்கார் ஒன்றும் அதிகப்படியான செலவு செய்ய அவசியம் இல்லை. டிஸ்சார்ஜ்ட் பிரிசனர்ஸ் எய்ட் சொஸைட்டி என்று இருக்கிறது. அதில் எண்பது ஆயிரம் ரூபாய் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அவர்களுக்கு எடுத்துக் கொடுக்கலாம். அவர்கள் ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்று கருதினால் அவர்களுக்கு வேண்டிய பணம் கொடுத்து உதவி செய்யலாம். வேறு எங்கேயாவது போய் வேலை செய்யவேண்டும் என்று சொன்னால் அங்கு அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கு சிபாரிசு செய்யலாம். இப்பொழுது அவர்கள் பல ஆலைகளுக்குச் சென்று வேலை வேண்டும் என்று கேட்டால் அவர்களுடன் ப்ரோபேஷன் ஆபீசர்கள் தொடர்ந்து வருவதாலும் இவர்கள் ஜெயிலிலிருந்து விடுதலை அடைந்து வந்திருப்பதாலும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லிவிடுகிறார்கள். மற்றும் அவர்களுடன் வரக்கூடிய ஆபீசர்களும் அவர்கள் ஜெயிலிலிருந்து வந்தவர்கள் என்று சொல்வதால் அவர்களுக்கு வேலை கிடைப்பது அறிதாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி அவர்களுக்கு ஆலைகளில் வேலை கொடுக்கும்படியான வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு தடவை திருடியவன் மறுபடியும் திருடுவான் என்பதில்லை, இது என்னுடைய சொந்த அபிப்பிராயம். ஜெயிலிலிருந்து வரக்கூடியவர்களில் எவ்வளவோ பேர்கள் நல்ல முறையில் சீர்திருத்தம் அடைந்திருக்கக்கூடும். அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டிய நம்முடைய கடமையாக இருக்கிறது.



21st March 1960] [Srimathi Rajathi Kunchithapatham]

இப்படி திருநெல்வேலி ஜில்லாவில் வெளியே வரக்கூடியவர்களில் எத்தனையோ பேர்கள் ஆறாவது பாரம் வரையிலும், பி.யு.சி. வரையிலும் படித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பை அளிக்க வேண்டும். பல தொழிற்சாலை, பஞ்சாலைகளில் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படியாக இந்தச் சர்க்கார் அந்த முதலாளிகளுக்கு இன்டிமேஷன் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். பல நெசவு தொழிற்சாலைகள் இருக்கின்றன, ஆத்தூரில் கெமிகல் தொழிற்சாலை இருக்கிறது. இவைகளில் எல்லாம் அவர்களை எடுத்துக்கொள்ளும்படியாக சிபாரிசு செய்யலாம். தனியாகச் சென்று தொழிற்சாலைகளில் வேலை பெற்றுக்கொள்ளும்படியான நிலையில் அவர்கள் இல்லை. சாதாரணமாக ஜெயிலிலிருந்து வந்தவன் என்றால் யாரும் வேலைக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அத்துடன் ப்ரோபேஷன் ஆபீசர்கள் வேறு அவர்களுடன் தொடர்ந்து செல்லுகிறார்கள். அதனால் சர்க்கார் தான் முன் வந்து அவர்களுக்கு வேலை கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும்.

அத்துடன் அங்குள்ள கைதிகளுக்கு மத போதனை கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். முஸ்லீம்களாக இருந்தால் முஸ்லீம் மதத்தையும் கிருஸ்துவர்களாக இருந்தால் கிருஸ்துவ மதத்தையும், ஹிந்துவாக இருந்தால் ஹிந்து மதக்கொள்கைகளையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மத அடிப்படையில் தினம் காலையிலோ அல்லது மாலையிலோ அரை மணி அல்லது ஒரு மணி நேர மத போதனை அளிக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு கூட அவர்களுக்கு இசை கூட அளிக்கப்பட வேண்டும். காட்டில் வாழக்கூடிய யானைக்கும், மணல் காட்டில் செல்லக்கூடிய ஒட்டகத்திற்கும் இசை வேண்டியதாக இருக்கிறது. என்பதை நாம் அறிகிறோம். இந்த நிலைமையில் திருடனாக இருந்தாலும் அவனுக்கு இசை கேட்கக் கூடிய மனம் இருக்கிறது. திருடக்கூடியவனாக இருந்தாலும் அவனுக்கு இசை வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில், அவர்களுக்கு வாரம் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ பஜனை செய்யக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன் ரேடியோ செட்டுகளை அவர்களுக்கு அமைத்துக்கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

மற்றும் குறிப்பிடத்தக்க இரண்டு விஷயங்கள் இந்த இலாகாவினால் செய்யப்பட்டு வருகிறது. அனாதை இல்லங்களிலுள்ள பிள்ளைகளை எடுத்து பிள்ளைகள் இல்லாதவர்கள் எடுத்து வளர்க்கலாம் என்று இருக்கிறது. இது ரொம்பவும் வரவேற்கத்தக்க அம்சமாகும். இது ரொம்பவும் வெற்றிகரமாக இருந்து வருகிறது என்றும் சொல்லப்படுகிறது. ஒன்றிரண்டு இடங்களில் இது நல்ல முறையில் நடந்து வருகிறது. மேல் நாடுகளில் தான் இப்படிப்பட்ட பழக்கம் இருந்து வந்தது. அந்தப் பழக்கம் இப்பொழுது நம் நாட்டிலேயே நடந்து வருவதைப் பார்த்தால் அது வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால் முன் காலத்தில் நம் நாட்டில் என்ன பழக்கம் இருந்து வந்தது என்றால் பிள்ளைகள் இல்லையென்றால் மறு விவாகம் செய்து கொள்வது என்ற பழக்கம் இருந்து வந்தது. அம்மாதிரி இல்லாமல் அனாதை பிள்ளைகளை எடுத்து வளர்ப்பது என்ற திட்டம் ரொம்பவும் வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தக்கொள்கை ரொம்பவும் வரவேற்கத்தக்கது. இது ஒரு நல்ல அம்சம்.

[Srimathi Rajathi Kunchithapatham] [21st March 1960

ஆகவே போலீஸ் நிர்வாகமானது எதிர் கட்சிக்காரர்கள் கூட பாராட்டக் கூடிய அளவில் நடந்து வருகிறது. இதை நான் பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த நிலைமையில் இந்த போலீஸ் இலாகா மானிய கோரிக்கையை நான் வரவேற்கிறேனென்று சொல்லி இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. K. SOMASUNDARAM :** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச முன் வருகிறேன். நமது ராஜ்யத்தில் போலீஸ்காரர்கள் நல்ல சேவை செய்து வருகிறார்கள். அவர்கள் செய்யும் பணியைப்பற்றியெல்லாம் பலர் புகழ்ந்து பேசி இருக்கிறார்கள். அவர்களை பாராட்டியும் இரு கிறார்கள். நமது ராஜ்யத்திலுள்ள போலீஸ்காரர்கள் நல்ல திறமையுடன் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு நாம் நிறைய சௌகரியம் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் இரவு பகல் என்று பாராமல் நல்ல வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு நாம் வசதி செய்து கொடுக்கவேண்டும். குறிப்பாக ட்ராப்பிக்கில் இருக்கிற போலீஸ்காரர்கள் வெயிலில் நின்றுகொண்டிருப்பதால் அவர்களுக்கு குடை அமைத்துக்கொடுத்து வசதி செய்து கொடுக்கவேண்டும்.

இன்னும் அவர்கள் பலவித கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். அதைப் பற்றி பலரும் பேசியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் அவர்களுடைய வருவாய் குறைவாக இருக்கிறது. பல குற்றங்களைக் கண்டுபிடிக்க அவர்கள் போக வேண்டியதாக இருப்பதால் அவர்களுக்கு அதிகப்படியான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதனால் அவர்களுக்கு அதிகப்படியான வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இருந்தாலும் அவர்களிடத்திலும் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் கவனித்து அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் விவசாயப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு போலீஸ்காரர்கள் நல்லபடியாக நடந்து கோள்ள வேண்டியதாக இருக்கிறது. சில இடங்களில் அவர்களுடைய வேலை வேலைகளைப்பற்றி பாராட்டினாலும் சில இடங்களில் அவர்கள் நடந்து கொள்ளும் முறையை கொஞ்சம் சீர்திருத்தும்படியாக இருக்கிறது. சில இடங்களில் போலீஸ் அதிகாரிகளிடத்தில் சிலவற்றை எடுத்துச் சென்றால் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகவே இல்லை. சில இடங்களில் இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகளிடத்தில் சிலவற்றை எடுத்துக் கூறினால் அதன் மீது அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். கட்டாயமாக அதை அவர்கள் கவனிக்க வேண்டும். குறிப்பாக ஒன்றைச் சொல்லப்போனால் முறப்பநாட்டில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. அதன் பக்கத்தில் இருக்கிற பக்கவெட்டி கிராமத்தில் போலீஸ் அதிகாரிகள் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லை. நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லியும் அவர்கள் நடந்து கொள்ளவில்லை. அங்குள்ள சப் இன்ஸ்பெக்டரின் கவனக் குறைவால் இரண்டு கொலைகள் நடந்திருக்கின்றன. எங்களுடைய தகவலுக்குப் பின் நல்ல நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருந்தால் இந்த இரண்டு கொலைகளையும் தடுத்திருக்கலாம். இங்குள்ள சப்-இன்ஸ்பெக்டர் தான் அதற்கு காரணம். தக்க சந்தர்ப்பத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. உடனடியாக கவனிக்காததால் தான் அது நடந்திருக்கிறது. அதே இடத்தில் இன்னும் பல அக்கிரமங்கள் அதை முன்னிட்டு நடந்திருக்கிறது. ஆகவே அந்த சப்-இன்ஸ்பெக்டர் அந்த இடத்தில் இருக்கக்கூடாது. அவரை மாற்ற வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி மாற்றினால் தான் ஓரளவுக்கு அங்கே நிலைமை சீர்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

போக இன்னும் விவசாயப் பிரச்சனைகளில் சில விடங்களில் போலீஸ் அதிகாரிகள் நன்றாக நடந்து கொண்டு வருகிறார்கள். எங்களிடத்தில் பல தந்திகள் வந்திருக்கின்றன. பல விடங்களில் நிலச்சுவாந்தார்கள் அக்கிரமமாக விவசாயிகளுக்கு எதிராகச் செய்து வருகிறார்கள். அதற்கு போலீஸ் பந்தோபஸ்து வேண்டும் என்று கோருகிறார்கள். ஸ்தலத்தில் இருக்கிற போலீஸ் அதிகாரிகள் உடனடியாக விசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க



21st March 1960] [Sri M. K. Somasundaram]

வேண்டும். அவ்வாறு பாதுகாப்பு அளித்திருந்தால், சில விடங்களில் இப்போது நடந்திருக்கிற சம்பவங்கள் கூட நடைபெற்றிருக்காது. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற மக்கள் பெரும்பாலும் ஹரிஜனங்கள். அவர்களுக்கு அவசியம் சர்க்கார் உதவி செய்ய வேண்டும். பாடுபடுகிற மக்களுக்கு, உழைக்கின்ற மக்களுக்கு சர்க்கார் உதவியளிக்க முன் வரவேண்டும். அதுவும் இப்போது இருக்கிற ஐ.ஜி. அவர்கள் மிகவும் திறமையானவர்கள், நல்ல பல வேலைகளைச் செய்து வருகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். ஆகவே இந்த மாதிரிப் பிரச்சனைகளைக் கவனித்து உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஸ்தல அதிகாரிகளுக்கு அவர் உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜெயில் சம்பந்தமாகக் குறிப்பாகச் சொல்ல முடியும். பாளையங்கோட்டையைப்பற்றி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். பாளையங்கோட்டையில் சிறு குற்றவாளிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற சிறைக்கூடத்தில அவர்களுக்குப் போதுமான பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தத் தொழில் பயிற்சியைக் கொண்டு வெளியில் வரும்போது அவர்களுக்குப் பிழைப்புத் தேடித்தர தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தட்டாபாறையில் சிறு குற்றவாளிகளுக்காக, இளம் குற்றவாளிகளுக்காக ஒரு சிறைக்கூடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே நான் இரண்டு முறை நேரில் போய்ப்பார்த்து வந்திருக்கிறேன். ஏறக்குறைய 350 மாணவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குப்போதுமான வசதிகள் அங்கே கிடையாது. முக்கியமாக குடி தண்ணீர் வசதி கிடையாது. அதனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஒரே உப்பு தண்ணீர் தான். நான் அங்கே சென்றிருந்தபோது ஜெயில் சூப்பிரண்டு அநேக குறைகளைச் சொன்னார்கள். நான் அதைக் கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறேன். தனிப்பட்ட ஸ்கீம் இருந்தால்தான் அந்த இடத்தில் அந்தக் குறைகளை நிவர்த்திக்க முடியும். தூத்துக்குடியில் இருந்து டிரெயின் மூலமாக இன்றைய தினம் இந்த இடத்திற்குத் தண்ணீர் கொண்டுவர வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்தத் தண்ணீர் கஷ்டத்தை நிவர்த்திக்க உடனே பி. டபிள்யு.டி. அமைச்சர் அவர்களும் தக்க ஏற்பாடுகளைச் செய்ய முன் வருவார்கள் என்று நம்புகிறேன். அதற்குத் தனிப்பட்ட முறையில் பணம் ஒதுக்கினால்தான் நன்றாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். காரணம் மூன்று நான்கு மைல்களுக்கு அப்பால் இருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டிய தனி ஸ்கீமாக இது இருக்கிறது. ஆகவே போலீஸ் அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுடைய முன்னேற்றத்திற்காக என்ன என்ன தொழில்களைக் கற்றுக்கொடுக்க வேண்டுமோ அத்தனை தொழில்களையும் இப்போது கற்றுக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். கட்டிடங்கள் திருத்தி அமைக்கப்பட்டு அவர்களுக்கு நல்ல் முறையில் வாழ்வதற்கும் பின்னால் வாழ்க்கையை நடத்துவதற்கும் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள்.

நான் ஜெயில் சூப்பிரண்டு இடத்தில் பேசியபோது மத போதனைபற்றி அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அம்மையார் அவர்களும் இதைக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மதத்தில் இருந்தும் ஆசிரியர்களை எடுத்துக் கொள்கிறார்கள். இப்படி போதிக்கப்படுவதனால் வெளியே வந்தவுடன் மதத்தைப் பின்பற்றுவதற்கு அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கோர்ட் சம்பந்தமாக வில்லேஜ் கோர்ட்டில் இருந்து தீர்ப்புக் கொடுப்பதை நாங்கள் ரிவிஷன் செய்தோமானால் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. அதை எவிடெண்ட்ஸாகக்கூட எடுத்துக்கொள்ளமுடியாத நிலைமை இப்போது இருக்கிறது. ஆகவே இதைத் திருத்தி—எவிடெண்ஸாக எடுத்துக்கொள்ளும்படி முனிசீப்கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[21st March 1960

* **SRI V. SUBBIAH :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தின் பேரில் வெட்டுப் பிரேரணை கொடுத்ததன் முக்கியமான நோக்கம் இன்றைக்குப் போலீஸ் இலாகாவானது ஓரளவுக்கு நல்ல முறையில் செயல்பட்டாலும் அவர்களுடைய சேவை, பாதுகாப்பு எல்லாம் நகரப் பகுதியில் உள்ளவர்களுக்கு அதிகமாகக் கிடைக்கிறதே தவிர கிராமங்களில் உள்ள பெரும் பகுதி மக்களுக்குக் கிடைப்பது இல்லை. இன்றைக்கு ஐ.ஜி., டி.ஐ.ஜி., கமிஷனர் போன்ற பெரிய அதிகாரிகளை எல்லாம் எடுத்துக்கொண்டால் நகரங்களிலேயே இருக்கிறார்கள். இன்றைக்கு போலீஸ் இலாகாவே நகரங்களில் உள்ளவர்கள் பாதுகாப்புக்காகத்தான் இயங்கிக்கொண்டிருப்பது போல செயல்படுகிறது. இன்றைக்கு நம் ராஜ்யத்தில் பதினெட்டாயிரம் கிராமங்கள் இருக்கின்றன. எத்தனை கிராமங்களில் கிராம போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். கிராமத்திற்கு பாதுகாப்பு அளிப்பது மிகமிகக் குறைவாக இருக்கிறது.

உதாரணமாக நான் பல சொல்லுவேன். குறிப்பாக திருநெல்வேலி ஜில்லாவில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் இதைச் சிந்திக்க வேண்டும். பல மாதங்களுக்கு முன்னுல் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கொலை நடந்துவிட்டது. ஆனால் இரண்டு தினங்கள் வரையில் அந்தப் பிரேதத்தைக் கூட எடுக்க முடியாத நிலை இருந்தது. காரணம் என்ன ? போலீஸ்காரர்கள் யாரும் அங்கே வரமுடியாது போய் விட்டது. கேட்டால் அவர்கள் மந்திரிகள் பந்தோபஸ்து டியூட்டிக்குப் போய்விட்டார்கள் என்கிறார்கள். இப்படிப்பட்ட அனாதரவான நிலை, பாதுகாப்பு அற்ற நிலை ஏற்படக்கூடாது என்பது பொது மக்களுடைய ஆசை.

இன்னும் மதுவிலக்குக் குற்றங்களை எடுத்துக்கொண்டால் வேண்டுமென்றே பல நிரபராதிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை மிக வருத்தத்தோடு சொல்கிறேன். பல மாதங்களுக்கு முன்னுல் கோயில் பட்டியில் இருந்த சமயம் வெளி கிராமங்களில் இருந்து குணம் மிக்க, நல்ல விளையாட்டு குடும்பத்தைச் சேர்ந்த பல சிறுவர்களை, அதுவும் அங்கே ஒரு சத்திரத்தில் தங்கி இருந்தவர்களை டீ கொடுப்பதாக அழைத்து வந்து அவர்களுக்கு மதுவைக் கொடுத்து மது குடித்தார்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. இது நேரில் நான் அறிந்த சம்பவம். இந்த நிலை போலீஸ்காரர்களிடத்தில் இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் போதுமான பண வசதி இல்லாததுதான். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மேலும் நல்ல ஒழுக்கம் உள்ளவர்களை, சிறந்த பண்பாடு உடைய குடும்பத்தில் இருந்து வந்தவர்களை இந்த இலாகாவில் நியமிக்க வேண்டும். அப்படிச் செய்யாத குறை ஒரு பக்கம், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்திற்குப் போதுமான சம்பளம் கொடுக்காத நிலை ஒரு பக்கம். இவற்றோடு கிராமங்களைப்பற்றிச் சிந்திப்பதே இல்லை. கிராமங்கள் என்றால் விவசாயிகளுடைய வீடு ஒரு பக்கம், நிலம் ஒரு பக்கம், வைக்கோல் போர், மாட்டுக் கொட்டம் முதலியன ஒரு பக்கம். இவையெல்லாம் சிதறுண்டு கிடக்கின்றன. அதற்கு போலீஸ்காரர்கள் பாதுகாப்பு அளிப்பது இல்லை.

பயர் சர்வீஸ் என்று எடுத்துக்கொண்டால் எங்கே இந்தத் தீ அணைக்கும் படைகள் இருக்கின்றன ? யாருக்கு லாபம் ? எல்லாம் நகரங்களில் தான் இருக்கின்றன. நகரவாசிகளுக்குத்தான் இதனால் பயன் ஏற்படுகிறது. முழுக்க முழுக்க இவை நகரங்களிலேயே அமைந்துவிடுவதன் காரணமாகத் தான் இன்றைக்கு விவசாயிகளுடைய மாட்டு தீவனங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன.



21st March 1960]

**SRI V. SUBBIAH :** நகரங்களைப் பாதுகாக்கக்கூடாது என்பது அல்ல. பெரும் பகுதி மக்கள் 80 சதவிகித மக்கள் கிராமங்களிலே வாழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அதிகமான தொகை இந்த வகையில் ஒதுக்கப் வேண்டும். இன்று மான்யமாக வந்திருக்கும் தொகை எவ்வளவு கிராமங்களுக்கு செலவழிக்கப்படுகிறது. கிராமங்களில் வாழ்கிறவர்களுக்கு எவ்வளவு பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறது என்பதுதான் இவ்வெட்டுப் பிரேரேபணை கொடுத்திருப்பதன் முழு நோக்கம் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் மனதிலே வைத்துக்கொள்ளவேண்டும்.

இன்றைக்கு போலீஸ் இலாக்கா நாட்டிலே நல்ல முறையில் செயல்படவேண்டுமென்றால் அவர்கள் கிராமப்பகுதிகளுக்கு முழு நேரத்தை செலவழித்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமங்களுக்கு இன்று போலீசாரால் எந்தவிதமான உபயோகமும் இல்லை. பையர் சர்விஸ் எல்லா நகரங்களுக்கும் இருப்பதுபோன்று 10 கிராமங்கள், 20 கிராமங்களுக்கு மத்திய பிரதேசமாக அமைத்து அங்கே பையர் யூனிட் வைத்திருந்தால் எவ்வளவு உபயோகரமாக இருக்கும். விவசாயிகளினுடைய வாழ்க்கைக்கு இது எவ்வளவு உபயோகமாக இருக்கும். அவர்களுடைய பொருளாதாரம் எவ்வளவு நன்றாக இருக்கும். கால்நடைகள் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பதை கவனித்து அரசாங்கம் திட்டங்கள் வகுத்திருந்தால் இந்த மான்யத்தை நான் வரவேற்றிருக்க முடியும். கிராமப் பகுதிகளுக்கு பாதுகாப்பு இல்லையே என்ற நிலையில்தான் அதற்காக வெட்டுப் பிரேரேபணை கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை. 1960–61ல் இல்லாவிட்டாலும் 1962–63-ம் ஆண்டு மான்யத்திலாவது பொதுவாக கிராமப்பகுதிகளுக்கு சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

• **SRI V. SANKARAN :** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்ய கோரிக்கையை ஆதரிக்கும் வகையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தற்போது போலீஸ் இலாக்காவை எடுத்துக்கொண்டால் ஜில்லா தலைமை அதிகாரிகளும், சென்னை நகர கமிஷனர் போன்ற அதிகாரிகளும் நல்ல முறையில் செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள். பற்பல முக்கியமான பிரச்சினைகள் ஏற்படும்போது, முக்கியமான கட்டங்களிலே மக்களினுடைய பல்வேறு தரப்பு பிரதிநிதிகளைக் கூப்பிட்டு அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு நல்ல முறையிலே வழி வகைகள் எடுத்துச் செய்யப்படுகின்றன. சென்னையில் டிராபிக் கண்ட்ரோல் விஷயமாக நல்ல முறையில் கமிஷனர் செயலாற்றிக் கொண்டு வருவது எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய விஷயம்.

போலீசார் எண்ணிக்கையை குறைப்பது முடியாத காரியம். சொசைடி அதிகரிக்கும்போது கண்டிப்பாக குற்றங்களும் ஓரளவு அதிகரிக்கும். ஆதலால் போலீசார் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே போலீசாரினுடைய எண்ணிக்கையை குறைக்கவேண்டுமென்று சொல்லுவது நியாயம் அற்ற கோரிக்கையாகும்.

ஜூடிஷியல் அட்மினிஸ்ட்ரேஷன் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். வழக்குகள் முடிப்பதில் தாமதம் அதிகமாக இருக்கிறதென்று ஒரு சிலர் கூறுவதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இது சம்பந்தமாக லா கமிஷன் ரிப்போர்ட்டைப் பார்த்தால் நம்முடைய ராஜ்யத்திலேதான் அதிக துரிதமாக கேஸ்கள் தீர்க்கப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்லக்கூடியது குறை என்னவென்றால் இது சம்பந்தமாக இருக்கின்ற முக்கியமான அபிப்பிராயம் என்னவென்றால் கோர்டுகளில் டிஸ்போஸல் மேனியா அதிகமாக இருக்கிறது என்பது, சீக்கிரத்தில் ஓரளவு டிஸ்போஸல் ஆகவேண்டும் என்பதற்காக காம்ரமைஸ் செய்துக்கொள்ள வேண்டுமென்று, கோர்ட்டுகளில் Suggestions எடுத்துச் சொல்லப்படுகிறது. அதனால் வக்கீல்களாகவும், அட்வகேட்டுகளாகவும் இருப்பவர்களுக்கு சிக்கலான நிலைமை ஏற்படுகிறது.

[Sri V. Sankaran] [21st March 1960

கட்சிக்காரர்களினுடைய விருப்பத்திற்கு இணங்க வழக்குகளை நடத்த முடியவில்லை. காம்ப்ரமைஸ் பண்ண வேண்டிய ஓரளவு நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இது சம்பந்தமாக லா கமிஷன் கூட ஒரு சிபார்சு செய்திருக்கிறது. அதையும் இந்த இடத்தில் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

The laying down of quantitative tests as to the amount of work to be done by a Judicial officer tends to result in older and difficult cases being neglected and lighter suits being disposed of.

அவர்கள் இது சம்பந்தமாக இந்த முடிவை சொல்லியிருக்கிறார்கள். க்வான்டிடேடிவ் டெஸ்ட் மாத்திரம் வைத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் இதிலே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. புதிதாக எடுக்கப்படும் வழக்குகள் கூட சில வக்கீல்கள் ஆஜர் இல்லை என்று எக்ஸ் பார்ட்டி ஆகவும் Default க்காகவும் தள்ளி விடுகிறார்கள். ரெண்ட் கண்ட்ரோல் சம்பந்தமாக ரூல்களில் உள்ள ஒரு விதியைப் பார்த்தால் டிபால்டுக்காக டிஸ்மிசல் செய்யப்பட்டது, ரெஸ்டோர் பண்ணுவதற்கு ப்ரொவிஷன் இல்லை. இந்த ரூல்களில் இடம் இல்லை. ஆதலால் மறுபடி மனுப்போட்டு ரெஸ்டோர் பண்ண முடியாது. ஆகவே டிபால்ட் என்று தள்ளி விட்டால் பெடிஷனை ரெஸ்டோர் செய்ய முடியாத சங்கடமான நிலை இருக்கிறது. இன்னொரு சங்கடமும் இருக்கிறது. கட்சிக்காரர்களிடமிருந்து வக்கீல் கட்டணத்தை வசூல் செய்ய முடிவதில்லை. சீக்கிரத்தில் டிஸ்போஸல் செய்யப்படும்போது 75 சத விகிதம் வக்கீல் கட்டணம் வராமல் போகிறது. ஆகவே டிஸ்போசல் மேனியா மனப்பான்மையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்ட கமிஷன் ரிபோர்ட்டில் 49-வது சிபார்சில் கூறியிருப்பதாவது :

Judges should be enabled to dictate evidence of witnesses to typist in Court instead of recording it in their own hand. A provision similar to section 356 of the Criminal Procedure Code as amended should be made in the Civil Procedure Code.

இது சம்பந்தமாக ராஜ்ய பார் பெடரேஷனும் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது. கோர்ட்டிலே வாக்குமூலம் அவரவர்களாக ரிகார்ட் பண்ணும்போது சமயத்தில் கைதவறுதலாக மிஸ்டிரான்ஸ்லேஷன் ஆகிவிடலாம். டிபெக்டிவ் டிரான்ஸ்லேஷன் ஏற்படலாம். இதன் விளைவாக கெடுதல் ஏற்படுகிறது. நடைமுறையிலே வாக்குமூலம் கொடுப்பவர்கள் முழுவதும் டிரான்ஸ்லேட் பண்ணி கேட்டோ அல்லது முழுவதையும் திருப்பிப் படித்தோ [illegible] கரக்ட் என்று கையெழுத்து போடமுடிகிறது என்று சொல்லுவது நடைமுறையிலே நடக்காத காரியமாக இருக்கிறது. No, Not என்னும் பதங்கள் இடம் மாறி வந்துவிட்டால் அதன் அர்த்தமும் விளைவு நேர்மாறாகப் போகிறது. ஆகவே டைபிஸ்ட்க்கு இரண்டு தரப்பு வக்கீல்கள் முன்னிலையிலும் டிக்டேட் செய்தால் உடனடியாக திருத்தம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். உடனடியாக காப்பிகள் வாங்கிக் கொள்ளவும் சௌகரியமாக இருக்கும். டிபோசிஷன் பின்னால் டைப் செய்து வரும்போது காபி ஆர்க்யூமெண்ட்டுக்குமுன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இதுமாதிரி செய்தால் டெபோசிஷனில் தப்பு வந்தால் திருத்துவதற்கு சௌகரியமாக இருக்கும். இந்த பெரிய சீர்திருத்தத்தை அடிக்கடி வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. கண்டிப்பாக அதை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சட்ட கமிஷன் ரிபோர்ட்டில் ஒன்றுவது சிபாரிசில் :



21st March 1960] [Sri V. Sankaran]

சட்டக் கல்லூரியிலே லாவில் ரிசர்ச் செய்ய மாணவர்களுக்கு பூர்ணமாக ஆக்கம் அளிக்கவேண்டும். அதற்கு வேண்டிய பைனான்ஷியல் அசிஸ்டன்ஸ் சர்க்கார் கொடுப்பது நல்லது. லீகல் எடுகேஷன் பற்றிய 20, 22-வது சிபார்சில் சட்ட கமிஷன் இதை சொல்லி இருக்கிறது. அதையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டக் கல்லூரியில் இருக்கும் ஆசிரியர்கள் முழு நேர ஆசிரியர்களாக இருக்கவேண்டும். இந்த சட்டக் கல்லூரி, முழு நேர கல்லூரியாக இருக்கவேண்டும். இரண்டு சிபார்சுகள் மீதும் முடிவு எடுத்திருந்தால் நலம்.

கவர்ன்மெண்ட் ஆர் பப்ளிக் ஆபீஸர் மீது ஏதாவது கேஸ் போட்டால் இரண்டு மாத நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. டிலே யில் ஆப் சிவில் சூட்ஸ் பற்றிய 65-வது சிபார்சு என்று நினைக்கிறேன். இரண்டு மாத நோட்டீஸ் கொடுக்கவேண்டியது அவசியம் இல்லை என்று லா கமிஷன் சொல்லியிருக்கிறது. பதில் கொடுக்கவேண்டுமென்ற காரணத்திற்காக இரண்டு மாத அவகாசம் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆனால் 99 சத கேஸ்களில் இம்மாதிரி பதிலே கொடுப்பதில்லை. கவர்ன்மெண்டிலிருந்தும் பதில் வருவது இல்லை எதிர்மாறாக, "to defeat the claims of the citizens" என்ற விளைவுதான் ஏற்படுகிறது. சில டெக்னிகல் Defects களினால், நியாயமான வழக்குகள்கூட தள்ளப்படுகின்றன. ஆதலால் அது அவசியமில்லை என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. ரீஸனபிள் நோட்டீஸ் இல்லாமல் ஸூட் போட்டால் பின்னால் செட்டில்மெண்ட் ஆக நேரிட்டால் காஸ்ட் கொடுக்க வேண்டாம் என்று Provision போட்டுவிட்டால் சரியாகிவிடும். அடுத்தபடியாக, கோர்ட் பீஸ் சம்பந்தமாக லாஸர் அவர்கள் சொன்னது போல்லா கமிஷன் சிபார்சில் சொல்லப்பட்டிருக்கிறது.

" revenue from the court-fee should not exceed the cost of civil administration."

என்று அதோடு அதை, ஸ்டேட் இந்த source லிருந்து லாபம் சம்பாதிப்பது என்ற குறிக்கோள் இருக்கக்கூடாது. லாபம் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு, லாபம் என்பதுதான் குறிக்கோள் என்பது இருக்கக்கூடாது.

" salaries of judicial officers should come from the general revenue of the tax payers and not from the Court-fee,"

என்று Law Commission Report-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அது Public டாக்ஸ்லிருந்து வர வேண்டுமே தவிர இதிலிருந்து வரக் கூடாது. மேலும் அந்த பீஸுக்கு ஒரு டெபினிட் மாக்ஸிமம் இருக்க வேண்டும். அடுத்தபடியாக, அப்பீல் சம்பந்தமாக ட்ரையல் சூட்ஸ் கோர்டு பீஸ் துரையில் பாதி இருந்தால் போதும் என்று லா கமிஷன் சிபாசு செய்திருக்கிறது. அதையும் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். அடுத்தபடியாக, "ஆல் இந்தியா பார்" என்று அமைப்பதற்கு சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹைகோர்ட்டிலிருந்து சுப்ரீம் கோர்ட்டுக்கு போக வேண்டுமென்றால் இவ்வளவு வருட ப்ராக்டீஸ் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிபந்தனை இருக்கவேண்டியது அவசியமில்லை என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதேபோல் ஹைகோர்ட்டுக்கு என்று தனியாக என்ரோல்மெண்ட் செய்துகொள்ள வேண்டும் என்று இருக்கக்கூடாது.

'Advocates of the common roll should have the right to practi ce in all courts of India from the highest to the lowest."

என்ற Law Commission சிபாரிசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு என்று தனி என்ரோல்மெண்ட் என்று இருக்கக்கூடாது. எல்லா அட்வகேட்களும் எங்கு செல்லவும் உரிமை இருக்கவேண்டும்.

[Sri V. Sankaran] [21st March 1960

அடுத்தப்படியாக, நகரங்களில் உள்ள ரெவின்யூ கோர்ட்கள், ஜுடிஷியல் கோர்ட்டிலிருந்து மிகவும் தள்ளி அமைக்கப்பட்டிருப்பதால் வக்கீல்களுக்கும், பொது மக்களுக்கும் அதற்கு தனியாக போய் விட்டுவர பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஜுடிஷியல் கோர்ட்ஸ் இருக்குமிடத்திலேயே ரெவின்யூ கோர்ட்ஸையும் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆர். டி. ஓக்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இங்கு வந்து கோர்ட்டை நடத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் பொது மக்களுக்கும், வக்கீல்களுக்கும் சௌகரியமாயிருக்கும். அடுத்தப்படியாக கனம் அங்கத்தினர் ஸ்ரீனிவாச ஐயர் அவர்கள் சொன்னது பார் பப்ளிக் அம்னிட்டிஸ் பற்றி ஒரு வார்த்தை. கோர்ட்டுகள் இருக்கும் இடங்களில் லெட்ரீன் போன்ற வசதிகள் இல்லை. ஆகவே அது குறித்து கவனம் செலுத்தி கோர்ட்டுகள் உள்ள இடங்களில் வக்கீல்களுக்குத் தனியாகவும், கட்சிக்காரர்களுக்குத் தனியாகவும், யூரினல், சிற்றுண்டி அறை, ஓய்வு அறை, லெட்ரீன் போன்ற பப்ளிக் அம்னிட்டீஸ் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, பர்ஸ்ட் ஆண்ட் ஸெகண்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட்களுக்கு சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்தவேண்டும். அதோடு அவர்களது பவர்ஸையும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரே ஒரு காரியத்தை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது "ப்ரொவின்ஷியல் ஸ்மால்காஸ் ஆக்ட்" என்றும் "ப்ரசிடென்ஸி ஸ்மால்காஸ் ஆக்ட்" என்றும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. "ப்ரொவின்ஷியல் ஸ்மால்காஸ் ஆக்ட்" என்பது மதராஸ் ஸிட்டியைத் தவிர வேறு இடங்களுக்குத்தான் பொருந்தும். ஆனால் "ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் ஆக்ட்" என்பது **Madras** ஸிட்டிக்கு மட்டும்தான் பொருந்தும். அதே போல் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன, "இன்ஸால்வென்ஸி ஆக்ட்"-டிலும். ஆகவே நான் சொல்வது என்னவென்றால் இப்படி இரண்டு பிரிவுகள் வேண்டாம், சென்னைக்கு என்று மட்டும் தனியாக இருக்கவேண்டியது அவசியமில்லை. ஆகவே, இரண்டையும் இணைத்து ஒன்றாக செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, almost all the Members, who preceded me spoke in Tamil and I, as a relief, want to speak in English for a change. Therefore, I shall speak in English.

Sir, I rise to support the Demands moved by the Hon. Minister especially those relating to Police Administration and Excise.

Sir, in the whole world, London City Police is supposed to be best organised for their discipline and for their good utili tarian outlook and service, which they render to the public. Sir, it is my ambition that our State Police should emulate them and rise up to that standard, if not, reach better standards than they have achieved. Sir, I am really proud of the City Police administration.



21st March 1960] [Sri K. Vinayakam]

Similarly illicit distillation or procuring illicit liquor in the City of Madras has also become a thing of the past. Of course, the methods which in the earlier stages our Policemen used to put down were sometimes questionable. I myself thought that our men were indulging in excessive tactics and ways to put down the illicit manufacture of liquor. But now we are more concerned with the results it has produced. Now we do not see anywhere this kind of illicit manufacture which was popularly known as a cottage industry of buying illicit liquor. This is no longer found in the City anywhere. I come from a place, a locality which is notorious for the manufacture of this kind of liquor. I am now proud that this has been completely rooted out and my hon. Friends who are now chuckling within their jackets will realise that the Policemen have done their best job in spite of the nefarious activities to encourage them.

SRI P. U. SHANMUGAM : The hon. Member while speaking said, ' notorious '. Did he address the Chair like that or somebody else.

SRI K. VINAYAKAM : Anybody who is conversant with the parliamentary procedure will naturally come to the conclusion that there was no insinuation against the Chair.

DEPUTY SPEAKER : Not against anybody.

SRI K. VINAYAKAM : Except those who are encouraging it outside. (Laughter.)

DEPUTY SPEAKER : The hon. Member is very fond of the ' notorious ' always.

SRI K. VINAYAKAM : Apart from joking, it is a great achievement and a great service that the Police Department has rendered in the City.

Sir, the Police have been equally vigilant in the detection of Crimes in the City of Madras. However, a few instances have been brought to my notice about the failure or inordinate delay in the detection of crimes in the Chingleput district. For instance, I myself brought to the notice of the authorities concerned some crimes committed in Ponneri area but the Police took a long time to tell that it is after all a civil matter. Whichever is a civil matter they have the tactics to convert into a criminal matter and implicate innocent people. Such kind of lapses should be rectified as early as possible.

Another innovation introduced recently by the Police is the ' May I help you Squad '. This is really doing wonderful service. I would request the Government not to turn down the proposal to have a Women's wing in the Police force on the unfair criticisms sometimes made by the Yellow journals about the formation of this wing. People have got a tendency to cut jokes and thus derive cheap pleasure by talking about the Women Police. I would

[Sri K. Vinayakam] [21st March 1960

urge upon the Government to go through the programme of forming the Women's wing in the Police force which I hope will do yeoman service and turn out good and wonderful service after gaining some experience.

Sir, I hold the strong view that our Police personnel should be housed in Government quarters and if they are not properly housed in Government quarters and if they are left to themselves to find their own accommodation, they will have to live in private houses in different places with the result that—I hope Government will understand what I mean—that they will not be above board. They will not be in a position to discharge their duties because they may happen to be tenants of some influential persons in the locality.

Sir, I have been urging upon Government the desirability of opening a fire station in Kodambakkam and Saidapet. Now supposing a fire breaks out in Kodambakkam the help needed from the nearest station can come only from Mambalam which is about four or five miles. They have to rush the aid from such places. And if unfortunately the railway level-crossing remains closed at the time, the fire service station personnel with all their enthusiasm and zeal to do good to the people cannot arrive in time, they will be prevented from rushing to the spot, they will be stranded on the other side of the level-crossing and much havoc would have been caused by the fire before they reach the spot. When they arrive at the spot to their utter dismay they will only find burnt and destroyed houses. Therefore, Sir, I have been urging upon the Government to open a fire station at Kodambakkam. I hope and believe that at least in this Budget they will provide for the opening of a fire station at Kodambakkam.

Sir, I have read with some care and some enthusiasm the Master Plan produced by the Commissioner of Police for the City of Madras for solving the traffic congestion in the evenings and during peak hours. I would urge upon the Government to see that the plan is implemented as early as possible. I am sure, Sir, some among the public are not 'traffic minded' even in an advanced and civilised city like the City of Madras. I have myself seen cyclists, four or five of them going abreast in places like Mount Road at great risk to themselves, the motorists and the pedestrians. Sometime back we used to see Police vans with necessary personnel trying to regulate the traffic in busy places like Mount Road instructing pedestrians not to indulge in jay walking and instructing them how they should conduct themselves while they were on the move in the roads. But, Sir, some of them, some enthusiastic Police officers were evidently indulging in cheap jokes like calling names, for instance—I will put in in Tamil :

" குடை பிடித்துப் போரவரே கொஞ்சம் ஓரமாகப் போ, ஊதா சொக்காக் காரரே மேலேநட,

This kind of joke cut at the expense of the well meaning pedestrians. is, of course, regrettable. These things should be avoided.



21st March 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Persons are walking in the roads. The policeman standing on traffic duty wants to spot out the particular person and instruct him. How else can he be described?

SRI K. VINAYAKAM : It does not involve a very complex problem. If I were in that place, I would use some other description instead of simply attempting to caricature the person " சந்தனப் பொட்டுக்காரரே மேலே போ ". That is certainly very insinuating, very discouraging, very irritating. This kind of thing must be avoided. But my point in this connection is, I do not know why that kind of service that was rendered by the Police had been withdrawn some time back. Evidently the department thinks that the public have become well-versed with traffic regulations and, therefore, it is not necessary any more to continue that service. But I feel that this kind of help should be rendered to the people at places where there is heavy traffic and people should be properly instructed in crossing the road and in observing the traffic regulations. I would request Government to continue this and perfect the system as best as we can.

Sir, some two or three incidents that occurred such as that between the Police and the Law College students, the Police and the taxi-drivers, where Police lapsed from adopting the proper tactics leads me to the conclusion that the personnel have to be toned up. When the taxi-drivers go on strike the Police give some explanation. I think these things could have been avoided.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

SRI K. VINAYAKAM : I think I have five more minutes.

DEPUTY SPEAKER : No, he has already taken 12 minutes. He should resume his seat.

SRI K. VINAYAKAM : I will finish, Sir. Then again, Sir, a mob had collected at the Mambalam Police station, some months back. It was a distressing news to me. Some constable or somebody from the station rang me up and asked me to go to the station to mediate and this call came at dead of night. Probably they thought because I was an elected representative of that locality I could mediate. These things should have been avoided.

With these few remarks I have great pleasure in supporting the Demands brought forward by the Hon. Minister for Home.

SRI A. A. RASHEED : Sir, the hon. Member was speaking about illicit distillation. I would like to know . . .

DEPUTY SPEAKER : This is not question hour. The hon. Member should resume his seat. The hon. Member Sri Anbazhagan will now speak.

**SRI K. ANBAZHAGAN:** சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் மான்யம், ஜெயில் மான்யம் மீது தரப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து அதன் மீது சில கருத்துக்களைக் கூறுவதற்காக நான் நிற்கிறேன். வழக்கமாகப் போலீஸ் இலாகாவைப்பற்றி எண்ணுகிறபொழுது, தலைமைப்பொறுப்பிலே உள்ளவர்கள் மீது குறைபடவேண்டிய நிலை இருந்தது மாறி தலைமைப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் பொறுப்பாக செயலாற்றுகிறார்கள் என்று எண்ணுகிற சூழ் நிலை இன்று இருந்தாலும்கூட தலைமைப் பொறுப்புக்கு அடுத்த கட்டத்தில் கீழ் நிலையில் இருப்பவர்கள் ஆதிக்க மனப்பான்மை கொண்டு இருப்பதால் பல்வேறு வகையான தவறுகள் அடிக்கடி நடைபெறுகின்றன என்பதையும், அவர்களிலே பலர் தவறான வழிகளில் போகிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்களுக்குப் பணிவன்போடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

சில நாட்களுக்கு முன்னர் கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள் சட்டசபை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமை, கடமை என்ன என்பதைப்பற்றியும், அவர்கள் போலீசின் அலுவல்களில் நியாயத்திற்காக தலையிடலாம் என்றும் அதைக் கேட்டு முறைப்படி செயலாற்றுவது போலீசு அதிகாரிகள் கடமை என்றும் தெளிவாக விளக்கினார்கள். ஆனால் முக்கியமான சில பிரச்னைகளில் மாற்றுக்கட்சி எம்.எல்.ஏ. க்கள், எம்.எல்.ஸி.-க்கள் அதிகாரிகளிடம், இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தாலும்கூட, அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தாலும் பின்னர் அதன் மேல் நடவடிக்கை எடுக்க முடியாதவர்களாக ஆகியிருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் அதிகாரிகளிடம் தெரிவிக்கின்ற நேரத்தில் ஒரு வழக்கு கீழ்க்கோர்ட்டில் முடிவடைந்திருந்தாலும்கூட, பின்னாலும் அதைத் தொடர்ந்து அப்பீல் செய்வதற்கு முடிகிறது. போலீஸார் வேண்டுமென்றே யாரையும் துன்பப்படுத்துவதில்லை என்றிருந்தாலும்கூட, அமைச்சர் அவர்களோடு தொடர்புள்ள சிலர், அமைச்சரோடு நெருங்கிய நட்பு கொண்டுள்ள சிலர், அமைச்சர் அவர்களோடு பற்றுள்ளவர்கள், பாசமுள்ளவர்கள் தலையிடுவதினால் இவ்வித செயலில் ஈடுபடுகிறார்கள். இவ்விதம் இவர்கள் போலீசாரது நடவடிக்கைகளில் தலையிடுவதினால் அவர்களுடைய பெயர் கெட்டுப் போவதுபற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள்; ஆனால் இந்த இலாக்கா அமைச்சர் அவர்களுடைய நல்ல பெயர் பாதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்களுடைய பெயரை சிலர் சில காரியங்களுக்காக உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்தாவது அமைச்சர் அவர்கள் அதைத் தடுக்க முற்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் அரசாங்க அலுவலகத்திலேகூட, பல அதிகாரிகளை அமைச்சர் அவர்களின் பெயரை உபயோகப்படுத்திக்கொண்டு சிலர் சந்தித்து தம் எண்ணத்தை நிறைவேற்றி வருவதை நான் வன்மையாகக் கண்டிக்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுடைய உறவினர்கள் என்றோ அல்லது அமைச்சரோடு நட்புடையவர்கள் என்றோ அமைச்சர் இல்லத்தில் விருந்துண்ணுபவர்கள் என்றோ கூறிக்கொண்டு தொடர்பு கொள்கிறார்கள். இந்தத் தொடர்பு ஜனநாயகத்தைப் பாதிக்கிறது, நீதியை பாதிக்கிறது, நேர்மையைப் பாதிக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நீதி மன்றத்தில் கூறப்பட்ட கருத்துறையில் சுட்டப்படுபவை அல்லது கருத்துக்கள் எங்களைக் கட்டுப்படுத்தாது என்று சொல்லுவது நல்லது அல்ல என்பதையும் இதே நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சட்டப்படி கூறும் தீர்ப்பு கட்டுப்படுத்துவது குற்றவாளிகளைத்தான் என்றாலும் கூட, அதன் மீது கூறப்படும் கருத்துக்களையும் பரிசீலிப்பதுதான் நல்ல பண்புள்ள அரசாங்கத்தின் கடமையாகும். உயர்நீதிமன்றத்தின் நீதிபதி சொல்லுகின்ற கருத்துக்கள் எங்களைக கட்டுப்படுத்தாது அவற்றைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்று சொல்லிவிடும் அமைச்சர்கள், ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியை வெறும் அரசாங்க அதிகாரி என்ற முறையில் நியமித்து ஒரு தனி விசாரணையை நடத்தச் செய்துவிட்டு, உண்மை தெரிந்துவிட்டது, இது தான் தகுந்த முடிவு என்று ஊரெல்லாம் பேசு





கிறார்கள். அப்படியானால் இந்த இரண்டுக்கும் உள்ள வேற்றுமை என்ன என்பதையாவது இவர்கள் எண்ணிப்பார்த்தார்களா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, சில பகுதிகளில் ஆளும் கட்சியிலுள்ளவர்கள் மாற்றுக் கட்சியிலுள்ளவர்களையே அடக்குவதற்கு, கட்சியை அழிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். செய்யூர் என்ற கிராமத்தில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களுடைய கிராமம் தான் அது. மாற்றுக்கட்சித் தோழர்கள் தங்கள் கட்சி அமைப்பு ஒன்றைத் தொடங்கிய நேரத்தில் ஆளும் கட்சியிலுள்ளவர்கள் மாற்றுக் கட்சித் தோழர்களை சமூக விலக்குச் செய்திருக்கிறார்கள். அவ்விதம் அவர்கள் புதியதொரு தீண்டாமையை உண்டுபண்ணுகிறார்கள் என்றால் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை சகித்துக்கொள்கிறேன். அவர்கள் குடும்பங்களையெல்லாம் வாரம்தார் உரிமையைப் பறித்துக்கொண்டு விரட்டியிருக்கிறார்கள். சட்டம் இல்லை தடுக்க. போகட்டும். ஆனால் எதிர்க்கட்சியினர் 36 பேர் தொடங்கிய எம்.ஜி.ஆர். படிப்பகம் என்ற மன்றத்தையே பிரித்து நெருப்பு வைத்துப் படங்களை உடைத்துச் சென்றுள்ளனர். போலீஸ் இதில் தலையிடவில்லை. நடவடிக்கை இல்லை புகார் செய்திருந்தும்கூட.

DEPUTY SPEAKER: I think the House has no objection to sit for five more minutes so that the hon. Member can finish his speech.

1-30 p.m.

**SRI K. ANBAZHAGAN:** அங்குள்ள ஸப்-இன்ஸ்பெக்டர் ஆளும் கட்சியினர் தயவை எதிர்பார்த்திருக்கிறார். அவரிடம் பல புகார்களைக் கொடுத்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அவருக்கு மேலேயுள்ள ஸர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குப் புகார் கொடுக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கவில்லை. இரண்டு பேர்கள் சென்னை யிலிருந்து சென்ற மன்ற உறுப்பினர்களை வளைத்து, அடித்து விரட்டியுள்ளனர். ஒருவருடைய கை கிழிந்து போயிருக்கிறது. இதைப்பற்றி போலீஸில் புகார் செய்தும் புகாரைக்கூட பதிவு செய்துகொள்ளவில்லை. மருத்துவ மனையிலும் அவர்கட்கு வைத்தியம் செய்ய மறுத்துவிட்டனர். அதன் பிறகு வட்டார அஸிஸ்டெண்ட் கமிஷனரிடம், அதாவது டி.ஒய்.எஸ்.பி.-யிடம் புகார்கள் தரப்பட்டன. அந்தப் புகார்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியினரின் விருப்பத்தின்படி நடந்துகொண்டு, அந்தக் கட்சியிடம் பற்றும் பாசமும் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு வரலாறாகிவிட்டது. போலீஸ் இலாகாவிலே இந்த நிலைமை இருக்கிறது என்றால் ஜனநாயகம் எப்படி வாழும்? போலீஸ் இலாகாவிலே இருக்கக் கூடியவர்கள், போலீஸ் இலாகாவை இயக்கக் கூடியவர்கள் நல்லவர்களாக இருக்கலாம். ஆனால் ஆளும் கட்சியினரின் தலையீட்டினால் அவர்களுடைய வேண்டுகோளின்படி பலர் நடந்துகொள்ளுகிறார்கள். இதைவிட இந்த இலாக்காவே இல்லாமல் இருப்பது நல்லது. ஜனநாயகத்தைக் காப்பாற்றாத, நீதி நெறியைக் காப்பாற்றாத இந்த இலாகா இருப்பதைவிட இல்லாமலேயே இருப்பது நல்லது. சில நாட்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளிக்கக்கூடிய நேரத்தில் தெரிவித்தார்கள், போலீஸ் இலாகாவில் கான்ஸ்டபிள்கள் 98 பேர்களும், ஹெட் கான்ஸ்டபிள்கள் 8 பேர்களும், ஸார்ஜெண்டுகள் 2 பேர்களும், ஸப்-இன்ஸ்பெக்டர்கள் 3 பேர்களும், குற்றவாளிகளெனத் தெரிந்து வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் என்று. ஏன், டி. எஸ். பீ-க்கள் தவறே செய்ய வில்லையா? அவர்களிலே கூட சிலர் தவறு செய்ததற்காக இடம் மாற்றப்படவில்லையா? திருச்சியிலிருந்த ஒரு டி.எஸ்.பீ யைப் பற்றிய செய்தி முன்னர் வரவில்லையா? ஆனால் பெரிய அதிகாரிகளை ஏன் அப்படியே விட்டு வைக்கவேண்டும்? அதே நேரத்தில் கீழே இருக்கக்கூடியவர்கள் எளியவர்கள் ஏதோ 8 அணா, 1 ரூபாய் வாங்கிவிட்டால் அவர்களுடைய வேலை போய், அவர்களிலும் சிலர் தூக்கில் தொங்கவேண்டுமா?

[21st March 1960

**Sri K. ANBAZHAGAN**: சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே,
போலீஸ் மான்யம், ஜெயில் மான்யம் மீது தரப்பட்டிருக்கின்ற வெட்டுப்
பிரேரணைகளை ஆதரித்து அதன் மீது சில கருத்துக்களைக் கூறுவதற்காக
நான் நிற்கிறேன். வழக்கமாகப் போலீஸ் இலாகாவைப்பற்றி எண்ணு
கிறபொழுது, தலைமைப்பொறுப்பிலே உள்ளவர்கள் மீது குறைபடவேண்டிய
நிலை இருந்தது மாறி தலைமைப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் பொறுப்
பாக செயலாற்றுகிறார்கள் என்று எண்ணுகிற சூழ் நிலை இன்று இருந்
தாலும்கூட தலைமைப் பொறுப்புக்கு அடுத்த கட்டத்தில் கீழ் நிலையில்
இருப்பவர்கள் ஆதிக்க மனப்பான்மை கொண்டு இருப்பதால் பல்வேறு
வகையான தவறுகள் அடிக்கடி நடைபெறுகின்றன என்பதையும், அவர்
களிலே பலர் தவறான வழிகளில் போகிறார்கள் என்பதையும் அமைச்சர்
அவர்களுக்குப் பணிவன்போடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

சில நாட்களுக்கு முன்னர் கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள்
சட்டசபை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமை, கடமை
என்ன என்பதைப்பற்றியும், அவர்கள் போலீசின் அலுவல்களில் நியாயத்
திற்காக தலையிடலாம் என்றும் அதைக் கேட்டு முறைப்படி செயலாற்றுவது
போலீசு அதிகாரிகள் கடமை என்றும் தெளிவாக விளக்கினார்கள்.
ஆனால் முக்கியமான சில பிரச்னைகளில் மாற்றுக்கட்சி எம்.எல்.ஏ. க்கள்,
எம்.எல்.ஸி.-க்கள் அதிகாரிகளிடம், இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று தெரிவித்தாலும்கூட, அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்
பதாக தெரிவித்தாலும் பின்னர் அதன் மேல் நடவடிக்கை எடுக்க
முடியாதவர்களாக ஆகியிருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியில் இருக்கிற
வர்கள் அதிகாரிகளிடம் தெரிவிக்கின்ற நேரத்தில் ஒரு வழக்கு கீழ்க்கோர்ட்
டில் முடிவடைந்திருந்தாலும்கூட, பின்னும் அதைத் தொடர்ந்து அப்
பீல் செய்வதற்கு முடிகிறது. போலீஸார் வேண்டுமென்றே யாரையும்
துன்பப்படுத்துவதில்லை என்றிருந்தாலும்கூட, அமைச்சர் அவர்களோடு
தொடர்புள்ள சிலர், அமைச்சரோடு நெருங்கிய நட்பு கொண்டுள்ள சிலர்,
அமைச்சர் அவர்களோடு பற்றுள்ளவர்கள், பாசமுள்ளவர்கள் தலையிடுவதி
னால் இவ்வித செயலில் ஈடுபடுகிறார்கள். இவ்விதம் இவர்கள் போலீசாரது
நடவடிக்கைகளில் தலையிடுவதினால் அவர்களுடைய பெயர் கெட்டுப்
போவதுபற்றி யாரும் கவலைப்படமாட்டார்கள்; ஆனால் இந்த இலாக்கா
அமைச்சர் அவர்களுடைய நல்ல பெயர் பாதிக்கப்படுகிறது என்பதைத்
தெரிவித்துக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்களுடைய பெயரை சிலர்
சில காரியங்களுக்காக உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத்
தெரிந்தாவது அமைச்சர் அவர்கள் அதைத் தடுக்க முற்படவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் அரசாங்க அலுவலகத்திலேகூட, பல அதிகாரிகளை அமைச்சர்
அவர்களின் பெயரை உபயோகப்படுத்திக்கொண்டு சிலர் சந்தித்து
தம் எண்ணத்தை நிறைவேற்றி வருவதை நான் வன்மையாகக் கண்டிக்க
விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுடைய உறவினர்கள் என்றோ
அல்லது அமைச்சரோடு நட்புடையவர்கள் என்றோ அமைச்சர் இல்லத்தில்
விருந்துண்ணுபவர்கள் என்றோ கூறிக்கொண்டு தொடர்பு கொள்கிறார்கள்.
இந்தத் தொடர்பு ஜனநாயகத்தைப் பாதிக்கிறது, நீதியை பாதிக்கிறது,
நேர்மையைப் பாதிக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
நீதி மன்றத்தில் கூறப்பட்ட கருத்துறையில் சுட்டப்படுபவை அல்லது கருத்
துக்கள் எங்களைக் கட்டுப்படுத்தாது என்று சொல்லுவது நல்லது அல்ல
என்பதையும் இதே நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சட்டப்படி
கூறும் தீர்ப்பு கட்டுப்படுத்துவது குற்றவாளிகளைத்தான் என்றாலும் கூட,
அதன் மீது கூறப்படும் கருத்துக்களையும் பரிசீலிப்பதுதான் நல்ல பண்
புள்ள அரசாங்கத்தின் கடமையாகும். உயர்நீதிமன்றத்தின் நீதிபதி
சொல்லுகின்ற கருத்துக்கள் எங்களைக கட்டுப்படுத்தாது அவற்றைப்
பொருட்படுத்தத் தேவையில்லை என்று சொல்லிவிடும் அமைச்சர்கள்,
ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியை வெறும் அரசாங்க அதிகாரி என்ற முறை
யில் நியமித்து ஒரு தனி விசாரணையை நடத்தச் செய்துவிட்டு, உண்மை
தெரிந்துவிட்டது, இது தான் தகுந்த முடிவு என்று ஊரெல்லாம் பேச



21st March 1960] [Sri K. Anbazhagan]

கிறார்கள். அப்படியானால் இந்த இரண்டுக்கும் உள்ள வேற்றுமை என்ன
என்பதையாவது இவர்கள் எண்ணிப்பார்த்தார்களா என்பதைத்தான்
நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, சில பகுதிகளில் ஆளும் கட்சியிலுள்ளவர்கள் மாற்றுக்
கட்சியிலுள்ளவர்களையே அடக்குவதற்கு, கட்சியை அழிப்பதற்கு முயற்சி
செய்து கொண்டிருக்கிறார்கள். செய்யூர் என்ற கிராமத்தில் எதிர்க் கட்சித்
தலைவர் திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களுடைய கிராமம்
தான் அது. மாற்றுக்கட்சித் தோழர்கள் தங்கள் கட்சி அமைப்பு ஒன்
றைத் தொடங்கிய நேரத்தில் ஆளும் கட்சியிலுள்ளவர்கள் மாற்றுக் கட்சித்
தோழர்களை சமூக விலக்குச் செய்திருக்கிறார்கள். அவ்விதம் அவர்கள்
புதியதொரு தீண்டாமையை உண்டுபண்ணுகிறார்கள் என்றால் அதை நான்
ஏற்றுக்கொள்கிறேன். அதை சகித்துக்கொள்கிறேன். அவர்கள் குடும்பங்
களையெல்லாம் வாரம்தார் உரிமையைப் பறித்துக்கொண்டு விரட்டியிருக்
கிறார்கள். சட்டம் இல்லை தடுக்க. போகட்டும். ஆனால் எதிர்க்கட்சியினர்
36 பேர் தொடங்கிய எம்.ஜி.ஆர். படிப்பகம் என்ற மன்றத்தையே
பிரித்து நெருப்பு வைத்துப் படங்களை உடைத்துச் சென்றுள்ளனர்.
போலீஸ் இதில் தலையிடவில்லை. நடவடிக்கை இல்லை புகார் செய்திருந்
தும்கூட.

**DEPUTY SPEAKER**: I think the House has no objection to sit for five more minutes so that the hon. Member can finish his speech.

**Sri K. ANBAZHAGAN**: அங்குள்ள ஸப்-இன்ஸ்பெக்டர் ஆளும் 1-30
கட்சியினர் தயவை எதிர்பார்த்திருக்கிறார். அவரிடம் பல புகார் p.m.
களைக் கொடுத்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அவருக்கு
மேலேயுள்ள ஸர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குப் புகார் கொடுக்கப்பட்டும் நட
வடிக்கை எடுக்கவில்லை. இரண்டு பேர்கள் சென்னை யிலிருந்து சென்ற
மன்ற உறுப்பினர்களை வளைத்து, அடித்து விரட்டியுள்ளனர். ஒருவரு
டைய கை கிழிந்து போயிருக்கிறது. இதைப்பற்றி போலீஸில் புகார்
செய்தும் புகாரைக்கூட பதிவு செய்துகொள்ளவில்லை. மருத்துவ மனை
யிலும் அவர்கட்கு வைத்தியம் செய்ய மறுத்துவிட்டனர். அதன் பிறகு
வட்டார அஸிஸ்டெண்ட் கமிஷனரிடம், அதாவது டி.ஒய்.எஸ்.பி.-யிடம்
புகார்கள் தரப்பட்டன. அந்தப் புகார்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப்
பட்டதாகத் தெரியவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சி
யினரின் விருப்பத்தின்படி நடந்துகொண்டு, அந்தக் கட்சியிடம் பற்றும்
பாசமும் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு வரலாறாகிவிட்டது. போலீஸ்
இலாகாவிலே இந்த நிலைமை இருக்கிறது என்றால் ஜனநாயகம் எப்படி
வாழும்? போலீஸ் இலாகாவிலே இருக்கக் கூடியவர்கள், போலீஸ்
இலாகாவை இயக்கக் கூடியவர்கள் நல்லவர்களாக இருக்கலாம். ஆனால்
ஆளும் கட்சியினரின் தலையீட்டினால் அவர்களுடைய வேண்டுகோளின்படி
பலர் நடந்துகொள்ளுகிறார்கள். இதைவிட இந்த இலாக்காவே இல்லாமல்
இருப்பது நல்லது. ஜனநாயகத்தைக் காப்பாற்றாத, நீதி நெறியைக்
காப்பாற்றாத இந்த இலாகா இருப்பதைவிட இல்லாமலேயே இருப்பது
நல்லது. சில நாட்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு
பதிலளிக்கக்கூடிய நேரத்தில் தெரிவித்தார்கள், போலீஸ் இலாகாவில்
கான்ஸ்டபிள்கள் 98 பேர்களும், ஹெட் கான்ஸ்டபிள்கள் 8 பேர்களும்,
ஸப்-இன்ஸ்பெக்டர்கள் 3 பேர்களும், ஸார்ஜெண்டுகள் 2 பேர்களும்,
குற்றவாளிகளெனத் தெரிந்து வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் என்று.
ஏன், டி. எஸ். பீ-க்கள் தவறே செய்ய வில்லையா? அவர்களிலே கூட சிலர்
தவறு செய்ததற்காக இடம் மாற்றப்படவில்லையா? திருச்சியிலிருந்த
ஒரு டி.எஸ்.பீ யைப் பற்றிய செய்தி முன்னர் வரவில்லையா? ஆனால்
பெரிய அதிகாரிகளை ஏன் அப்படியே விட்டு வைக்கவேண்டும்? அதே
நேரத்தில் கீழே இருக்கக்கூடியவர்கள் எளியவர்கள் ஏதோ 8 அணா
1 ரூபாய் வாங்கிவிட்டால் அவர்களுடைய வேலை போய், அவர்களிலும்
சிலர் தூக்கில் தொங்கவேண்டுமா?

[Sri K. Anbazhagan] [21st March 1960

ஏற்கனவே மதராஸ் ஸ்பெஷல் போலீஸில் இருக்கிறவர்களுக்கு ஊதியமும் பிற உதவித் தொகைகளும் ஆக 73½ ரூபாய் தந்துகொண்டிருந்தார்கள். 1956-வது ஆண்டு வரையிலே. அவர்களுக்குத் தரப்பட்ட நகர அலவன்ஸில் 20 ரூபாயில் உணவுக்காக 10 ரூபாயைப் பிடித்துக்கொண்டு பிற அலவன்ஸுகளையும் சேர்த்து 71½ ரூபாயாக அளித்து வந்தனர். இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்படுவது 47½ ரூபாய் மட்டுந்தான். 4 வருஷங்களுக்கு முன் வரை 71½ ரூபாயாக இருந்தது பின்னர் 47½ ரூபாய் ஆகிவிட்டது. அவர்கட்கு அளிக்கப்படும் உணவுக்காக 17 ரூபாயை வழக்கமான அலவன்ஸில் கழித்து விடுகின்றனர். அவர்கள் குடும்பம் உணவுக்கே திண்டாடுகிறது. இதன் காரணமாக ஏறத்தாழ நூற்றுக்கும் மேலானவர்கள் ராஜிநாமாச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இல்லையா? அவர்கள் கையில் குண்டாந்தடியைக் கொடுத்து வேண்டாதவர்களை அடிக்கப் பயன்படுத்துவதற்குத்தான் அவர்கள் இருக்கிறார்களா? அவர்கள் வயிற்றில் சோறு விழுந்ததா இல்லையா என்று அரசாங்கம் கவனிக்க வேண்டாமா? அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த சம்பளம் 71½ ரூபாயிலிருந்து 47½ ரூபாயாகக் குறைத்ததற்கு என்ன பதில் சொல்லியிருக்கிறீர்கள். நான்கு ஆண்டுகளாக விண்ணப்பித்துக்கொண்டிருந்தும் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வழியில்லை என்று சொன்னால் நீங்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்துதான் என்ன பயன்? அவர்கள் குடும்பத்தாருக்குச் சோற்றுக்கே வழியில்லை என்று சொன்னால் ஆட்சியால் என்ன பயன்?

ஒரு நாடகம் எழுதியிருக்கிறார் நண்பர் கருணாநிதி. உதயசூரியன் என்பது அதன் பெயர். உதயசூரியன் என்று சொல்லும்போது பெயர் பிடிக்காதவர்கள் குடையேந்தி மறைத்துக்கொள்ளலாம். போலீஸாரின் வாழ்க்கைத் தரத்தை எடுத்துக் காட்டுகிற கட்டம் ஒன்று அதிலே வருகிறது. போலீசாரிடையே நிலவி வருகிற வறுமை, ஊர்காவலர் மனைவி வறுமைத் தொல்லையினால் படுகின்ற துன்பம், நாள் பூராவும் வேலை ஏதோ ஒரு அமைச்சர் சுற்றுப்பிரயாணம் வருகிறார் என்பதற்காக சாலையில் உள்ள புளிய மரத்தடியை காவல் காக்கும் பரிதாபம், கொடுக்கப்படுகின்ற சிறிய அலவன்ஸும் சரியாக காலத்தில் கொடுக்கப்படாத நிலை, இரண்டு மாதங்களாக வரவேண்டிய அலவன்ஸ் வராமல் மூன்றாவது மாதமும் தொடர்ந்து மளிகைக் கடையில் கடன் சொல்லவேண்டிய பரிதாபம், இப்படி ஒரு கட்டம் வருகிறது. இதனை நாடகச் சட்டத்திற்கு விரோதமானது, போலீஸாரைத் தூண்டக்கூடிய முறையில் எழுதப்பட்டிருக்கிறது என்று நினைத்து, இது ஜனநாயகத்திற்கே விரோதமென்று தற்காலிகமாக தடுத்து நிறுத்தி வைத்திருக்கிறார்கள். நாடகத்தை தடுத்துவிடுங்கள், கவலையில்லை. மனிதனுக்கு நாக்கு இருக்கிற வரையில் இவற்றைச் சொல்லிக்கொண்டுதான் இருப்பான். இந்த நாடகத்தை நடத்துவதைத் தடுத்துவிட்டாலும், நண்பர் கருணாநிதியும் மற்றவர்களுமாக தெருக்கூத்து ஆடியாவது இதனைச் சொல்லியே தீருவார்கள். போலீஸாருக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைப் போக்க அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? போலீஸாருடைய கஷ்டத்தைப் போக்கவில்லை என்பதை விளக்க நாங்கள் தெருக்கூத்து ஆடக்கூட நேரலாம். சிலர் தெருக்கூத்து என்பதற்காகவே சிரிக்கலாம். ஆனால், வேறு கூத்தில் அவர்களும் அக்கரை உள்ளவர்களே. போலீசாருடைய கஷ்டத்தைப் போக்கினால் இந்தக் கட்டம் நாடகத்தில் ஏன் வருகிறது? இருக்கக்கூடிய கஷ்டங்களைப் போக்கி அந்தக் கட்டம் வராமல் செய்வதல்லவோ கடமை? அவர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களைப் போக்காமல் நாடகத்தை தடை செய்வதுதான் நீதியா? இப்போது நடப்பது ஜனநாயகம். ராம ராஜ்யம் என்று சொல்லப்படுவதால் தலையில் முடியிருக்கிறது என்ற எண்ணம் அமைச்சருக்கு வேண்டாம். ஆகவே இந்த முறையில் நீதி வழங்கவேண்டும்.



21st March 1960] [Sri K. Anbazhagan]

மன்றத்திற்கு கேள்வி அனுப்பினேன். இந்த அநீதிக்கு போலீஸாரும் உடந்தை. 10 மாதங்களுக்கு முன்னால் அமைச்சருக்கு மனுக்கள் தந்தோம். என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. கேள்விகள் அனுப்பினோம் சட்ட மன்றத்தின் மூலமாக. கேள்வி சில காலம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் விசாரணையில் இருக்கிறது—ஸப் ஜுடிஸ்—என்பதால் பதில் இல்லை. நியாயம்—ஆனால் இதைப்பற்றிய உண்மை எப்படித் தெரியும்? அமைச்சரிடம் பத்து, பதினைந்து மாதங்களுக்கு முன்பு தெரிவித்ததற்கு பதில் இல்லை. அநீதி, அக்கிரமம் தொடர்கின்றதா? அல்லது ஏதாவது தடுக்கப்பட்டிருக்கிறதா என்பது தெரியாது.

மதுரை நத்தத்தில் போலீஸ் நிலையத்தில் ஒருவர் காவலில் இறந்துவிட்டார். எப்படி இறக்க நேரிட்டது என்று என்னைக் கேட்டால் தெரியாது. ஆனால் ஊர் மக்கள் கூடி அமைச்சருக்கு புகார் எழுதியிருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டால், இதுவும் விசாரணையில் இருக்கிறது—ஸப் ஜுடிஸ்—பதில் கிடையாது. 6 மாதங்களாக, 9 மாதங்களாக பதில் கிடைக்காவிட்டால் பொது மக்களுக்கு எப்படி பதில் சொல்லுவது? அதே போல சேலத்தில். . . . . . .

THE HON SRI M. BHAKTAVATSALAM: ஸப்ஜுடிஸ் என்று பதில் கொடுத்தார்கள் என்று சொல்வது அது அரசாங்கமல்ல, சபாநாயகர் அவர்கள். சபாநாயகருடைய தீர்ப்பைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN: சபாநாயகர் தீர்ப்புத்தான் என்று அறிவேன். உளமார ஏற்றுக்கொள்கிறேன். ஏன் என் வேண்டுகோளைத் தொடர்ந்து பதில் கிடைக்கவில்லை? அமைச்சரிடம் தெரிவித்த பின்னர் சில மாதங்கள் வரை வழக்கு இல்லை—பதில் தெரிவிக்கலாம். அமைச்சருக்கு இதில் பொறுப்பு இல்லையா? அமைச்சர் பதில் தெரிவிக்கலாம்—தெரிவிக்கவில்லை.

மேலும் சேலத்திலிருந்த போலீஸ் அதிகாரிகளைத் திடீரென்று மாற்றியிருக்கிறார்கள். 1959 ஜூன் மாதத்தில் ஒரு சூப்பரின்டென்டெண்ட், ஒரு துணை சூப்பரின்டென்டெண்ட், ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகியோர் திடீரென்று, ஒரே சமயத்தில், முறை கடந்து மாற்றப்பட்டிருக்கிறார்கள். சேலத்தில் ஒரு கவுன்சிலர் கட்சி மாறிய நிலையில் மாறுபாடு கொண்ட சிலர், துப்பாக்கி அனுமதி பெற்றவர்கள் அவரைக் கடத்திச் சென்றதாகவும், உயிருக்கு அஞ்சி அவர் அரசாங்கப் பாதுகாப்புக்கு விண்ணப்பித்ததாகவும், மாஜிஸ்டிரேட்டுக்கு மனு வந்ததாகவும், அந்த நிலையில் இந்த அதிகாரிகள் ஆளும் கட்சியினருடன் ஒத்துழைக்காததால், அவர்கள் மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதைப் பற்றி அமைச்சருக்கு எழுதப்பட்டிருக்கிறது. அமைச்சரிடமிருந்தோ, இலாகாவிலிருந்தோ பதில் வந்ததா? வரவில்லை. இதற்கு பதிலை இலாகா அனுப்பியிருக்கவேண்டும். பதில் தெரிந்தால் தான் என்ன குறை, இது சரியா, எது தவறு என்று கண்டுகொள்ள முடியும்? பதிலில்லை. இம்மாதிரியான புகார்கள் போலீஸ் அமைச்சருக்கு வருமானால், அல்லது கேள்விகள் வருமானாலும், ஒரு மாதத்திற்குள் பதில் கொடுக்க வேண்டும். அந்த முறை இல்லாத வரையில் எப்படி நீதியை நிலைபெறச் செய்ய முடியும்?

ஒரே ஒரு வேண்டுகோளைக் கூறி முடிக்கிறேன். பல இடங்களில் தவறுகள் நடைபெறுவதுமட்டுமல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகித்து மாற்றுக் கட்சி பொதுக்கூட்டங்களைக் கலைக்க திட்டமிட்டு வேலை செய்கிறார்கள். இதைப் பற்றிய புகார்கள் போலீஸாருக்குத் தரப்படுகின்றன, ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை.

சில நாட்களுக்கு முன் திருக்கழுக்குன்றத்தில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில், குறிப்பிடத்தக்க செல்வர்கள் இருவர்களே முன்வந்து குழப்பம் விளைவிக்க முன்வந்துள்ளனர். அங்கேயே போலீஸார் இருந்தும் பின்னர் ஏதும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று

[Sri K. Anbazhagan] [21st March 1960

கேள்விப்படுகிறேன். புகார், போலீஸ் அதிகாரிகளுக்கும் தரப்பட்டுள்ளது.
இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் விளாமல் தடுக்க, ஆளும் கட்சியினரின் தலையீடு
அடியோடு நிறுத்தப்படவேண்டும். இல்லாத வரையில் நியாயத்தையும்
நீதியையும் போலீஸ் இலாகாவால் கூட காப்பாற்ற முடியாது.

சென்னை நகரத்திலேயே சில பகுதிகளில் மாற்றுக் கட்சி மன்றத்தின்
சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டங்களைச் சில காலிகள், பொறுப்பற்ற
வர்கள், கலைக்க முன்வருகிறார்கள். அப்படிப்பட்ட கலவரம் வளரும்போது
போலீசாரே ஒதுங்கிவிடுகின்றனர். புகார் தெரிவித்தாலும், போலீஸ் இலா
காவினர் தக்க நடவடிக்கை எடுக்காதபடி ஆளும் கட்சியினர் தம் செல்
வாக்கை பயன்படுத்திக் குறுக்கிடுகின்றனர்.

இப்படி ஆளும் கட்சியினர் தூண்டுதலில் காலிகளும், கட்சியே தெரி
யாதவர்களும்கூட குழப்பம் செய்கின்ற நிலை, வெட்கக்கேடாகும். ஆனால்
இப்பொழுதோ, கொலைக் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டு
சுப்ரீம் கோர்ட் வரையில் சென்று விடுதலை பெற்றவர்கள்கூட ஆளும்
கட்சியில் சேர்ந்து வருகிறார்கள். அப்படிப்பட்ட வளர்ச்சியை பெறுகிறது
இந்த ஆளும் கட்சி, வாழ்க ஆளும் கட்சி என்று கூறி எனது உரையை
முடிக்கிறேன்.

1-37 p.m. DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then rose.

**(After lunch—3 p.m.)**

MR. SPEAKER : Now the hon. Member, Sri S. R. Munusami, will speak.

*SRI S. R. MUNUSAMI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம்
அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தின் மீது நமது
இந்திய குடியரசு கட்சியின் சார்பாக என் அபிப்பிராயத்தைச் சொல்ல
விரும்புகிறேன். போலீசின் கடமையைப்பற்றி பாராட்டுகிறேன். போலீசா
ருடைய திறமையை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனால் போலீசாரின்
நிலையைப்பற்றி பார்த்தால் ரொம்பவும் கவலைப்பட வேண்டியதாக இருக்
கிறது. ஒரு நாளில் இருபத்து நாலு மணி நேரமும் அவர்கள் தங்களுடைய
கடமையைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஆனால் அவர்களுடைய
வாழ்க்கைத் தரத்தை எடுத்துப் பார்த்தால் அவர்களுடைய நிலை மிகவும்
மோசகமாக இருக்கிறது. அவர்கள் வாங்கும் சம்பளம் மிகவும் குறைவாக
இருக்கிறது குறைவான சம்பளத்தில் பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்
டியதாக இருக்கிறது. போலீசாருடைய சேவை மிகவும் பாராட்டக்கூடியதாக
இருந்தாலும் சில இடங்களில் போலீசின் நிலைமை வரவர நிதானமாகப்
போய்க்கொண்டிருக்கிறது. கனம் அமைச்சர் சொல்லுகிறார், சில இடங்களில்
போலீஸ் ஸ்டேஷனை அபிவிருத்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது என்று.
அப்படி கூறவேண்டிய நிலை என் என்று பார்த்தால் இன்றைக்கு இந்
நாட்டில் வாழக்கூடிய குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்
களை மற்ற வகுப்பினர்கள் வாட்டி வதைக்கக்கூடிய நிலை இருப்பதால்தான்
போலீஸ் ஸ்டேஷன்களை அதிகமாகக் கோரப்படுகிறது. குறிப்பாக வட
ஆற்காடு ஜில்லாவில் ஒரு இடத்தில் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் படும்
கஷ்டத்தைப் பார்த்தால் ரொம்பவும் மோசமாக இருப்பது தெரிய வரும்.
வாலாஜா தாலூகாவிலுள்ள கலவை பிர்க்காவில் அடிக்கடி ஜாதிச் சண்டை
ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கு இப்படி சண்டை அதிகப்படியாக
ஏற்பட்டு வருவதால் அதை தடுக்க அங்குள்ள போலீஸ் அதிகாரிகள் தக்க
நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகவே இல்லை. இதையெல்லாம் சர்க்கார்
கொஞ்சம் கண்காணிக்க வேண்டியதாக இருக்கிறது. எந்த இடத்தில்
பார்த்தாலும் ஜாதிச் சண்டைதான் அதிகமாக இருக்கிறது. அது மிக



21st March 1960] [Sri S. R. Munusami]

மிக மோசமாகிக்கொண்டு தான் வருகிறது. வந்தவாசி தாலூகா, மணி
மங்கலம் பிர்க்காவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்ற ஜாதி இந்துக்
களுக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. நடப்பதற்கு
வழியன்றி உயர்ந்த வகுப்பினருடைய நிலத்தின் வழியாகச் சென்றால்
அதனால் ஏற்படக்கூடிய சண்டை அதிகமாக இருக்கிறது. ஆனால் எங்க
ளுக்கு என்று தனியாக பாதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று
சர்க்காரைக் கேட்டால் அதைச் செய்து கொடுப்பதற்கு இன்னும் முன்
வரவில்லை. அந்த நிலத்தின் சொந்தக்காரர் பல அட்டூழியங்களைச் செய்
கிறார். வைக்கோல் போரில் தீ வைக்கிறார். விவசாயம் செய்து வைக்கோல்
சேகரித்து வைத்திருந்தால் அதை சேதப்படுத்துகிறார். இதைப்பற்றி போலீசில்
சொன்னால் அதை கவனிப்பதாகவே இல்லை. இன்னும் பல வகைகளில்
அந்த நிலச் சொந்தக்காரர் பயமுறுத்தி வருகிறார். அங்கே போலீஸ்
ஸ்டேஷனில் இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள் கவலையற்ற நிலைமையில்
இருக்கிறார்கள். இந்த நிலையில் அங்குள்ள போலீஸ் அதிகாரிகள் நடந்து
கொள்ளுகிறார்கள்.

அதைப்போலவே சிறையில் வேலை பார்க்கக்கூடிய அதிகாரிகளுடைய
நிலையும் ரொம்பவும் மோசமாக இருக்கிறது. அவர்களுடைய வேலையையும்
நாங்கள் பாராட்டுகிறோம். அப்படியிருந்தும் அவர்களுக்கு, போலிஸ்
காரர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் எல்லாம், கொடுக்கப்படுவது
இல்லை. சிறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள மிகவும் கேவலமான
நிலையில்தான் இருக்கிறார்கள். இன்றைக்கு போலீசுக்கு பல லட்சக்கணக்
கான ரூபாய்களைச் செலவு செய்கிறோம். ஆனால் அதைப்போல சிறைச்
சாலைகளில் வேலை பார்க்கக்கூடியவர்களுக்கு செலவு செய்வதாகவே இல்லை.
போலீஸ்காரர்களுடைய குழந்தைகளுக்கு மானியம் கொடுத்து உதவுவது
போன்று சிறைச்சாலை சிப்பந்திகளுக்குச் கொடுத்து உதவுவதாகவே இல்லை.
போலீஸ்காரர்கள் குற்றங்களைக் கண்டு பிடிப்பது போன்று சிறைச்சாலை
சிப்பந்திகள் சிறைக்கைதிகளை சீர்திருத்தம் செய்கிறார்கள். ஆதலால் அவர்
களையும் போலீஸ்காரர்களைப்போல் பாவிக்கவேண்டும்.

இன்றைக்கு மது விலக்கு திட்டம் யாரை பாதிக்கிறது என்பதைப்
பார்க்க வேண்டும். நான் ஒரு கிராமத்திற்குப் போயிருந்தேன். அங்கு
ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். இந்த அரசாங்கத்தைப்பற்றி
நீங்கள் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறீர்களே, அது எப்படி என்று
அந்தப் பெரியவர் கேட்டார். உட்கார்ந்து கொண்டு பேசிக்கொண்
டிருந்தோம். இந்த அரசாங்கத்தைப்பற்றி உங்களுடைய எண்ணம் என்ன
என்று கேட்டேன். அதற்கு அவர் பதில் சொன்னார், இந்த அரசாங்கம்
அதாவது ஜனநாயக அரசாங்கம் வந்த பிறகு இதற்கு முன் இருந்ததை
விட மிகவும் மோசமாக இருக்கிறது என்று சொன்னார், அந்த அரசாங்கம்
மிகவும் மேலாக இருந்தது என்றும் சொன்னார். அன்றைக்கு 2½
அணவுக்கு ஒரு புட்டி கள் வாங்கிச் சாப்பிட்டு விட்டால் களைப்பு பசித்
தீர்ந்துவிடும். ஆனால் இன்றைக்கு 2½ அணவுக்கு ஒரு கப் காபி அதாவது
மூன்று அவுன்ஸ் காபி கூட கிடைக்கவில்லை என்று சொன்னார். அதற்கு
நான் கள்ளுக்கடை வேண்டும் என்று சொல்லுகிறீர்களா என்று கேட்
டேன். அதற்கு அவர் பதில் சொன்னார் உண்மையிலேயே பணக்காரர்
களுக்குத்தான் வியாதி என்றால் பர்மிட் வழங்குகிறார்கள் ஏழைகளுக்குக்
கிடைப்பதில்லை. அதனால் ஏழை குடும்பங்கள் உற்சாகமாக வாழ முடிவ
தில்லை. சந்தோஷமாக இருப்பதற்கு வசதி இல்லை என்றெல்லாம் சொன்
னார். அப்படிப் பார்த்தால் இன்றைய தினம் அவர்களுக்கு மதுவிலக்கு
அவசியமா என்று கேட்கத் தோன்றும். 58-பட்ஜட்டிலேயே அதைக் கூறி
னேன். ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை வற்புறுத்திக்
குடிக்கத்தான் வேண்டுமென்ற நிலையை உண்டாக்கினார்கள் மற்ற சமு
தாயத்தார். மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் இன்றைக்கு எத்தனை குற்றங்
கள் இழைக்கப்பட்டிருக்கின்றன, எத்தனை பேர் தண்டனை அநுபவிக்கிறார்
கள், அவர்கள் யார் யார் என்று பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்களும்,
ஏழை மக்களும் தான் அதிகமாக இருக்கிறார்கள். இன்றையதினம் அவர்
களுக்கு சரியான முறையில் உபதேசங்கள் செய்து, பாடங்கள் சொல்லிக்

[Sri S. R. Munusami] [21st March 1960

கொடுத்து அவர்களுக்கு அறிவு போதிக்காத காரணத்தினால் தான் இத்தகைய நிலை ஏற்பட்டு வருகிறது. அதோடு சிறைச்சாலைக்குச் சென்று பார்த்தால் இந்த மாதிரியான குற்றங்களுக்காக தாழ்த்தப்பட்டவர்கள்தான் அதிகமாகச் சிறையில் இருக்கிறார்கள். அங்கே வெல்பேர் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் சென்று உபதேசம் செய்தால் கூட நன்றாக இருக்கும். அதுவும் தன் புருஷனையே " நீ குடிக்காதே " என்று தடுக்கக் கூடிய பெண்கள், இன்றைய தினம் இந்தக் குற்றங்களுக்காக உள்ளே இருக்கிறார்கள் என்றால் பெண்கள் க்ஷேமாபிவிருத்தி இலாகா மூலமாக இவர்களுக்கு நல்ல அறிவு புகட்ட வேண்டும் என்ற கருத்தைக்கூட நான் சொல்வேன். அதுவும் இன்றையதினம் இந்த ஏழை, தாழ்த்தப்பட்ட மக்களை நீதிபதிகள் நியாஸ்தலங்களில் மிரட்டுகிறார்கள். " பறயா, வெளியே போடா, சட்டத்தால் உன்னைத் தண்டித்து விடுவேன் " என்பதாக எல்லாம் விசாரணைக்கு முன்னதாகவே நீதிபதிகள் மிரட்டுகிறார்கள். மேலும் எந்த கேவலமான வார்த்தையை உபயோகித்தால் கோர்ட்டால் தண்டிக்க சட்டமுண்டோ அதே சொல்லை நீதிபதி உபயோகிக்கிறார். நகரத்தில் இருக்கக்கூடிய மக்கள் அத்தனை பேருக்கும் கோர்ட்டுகளில் நடக்கின்றது என்னவென்று நன்றாகத் தெரியும். ஆகையால் இந்த மாதிரி எந்தவிதமான நிலையும் ஏற்படாதபடிக்கு நம் சர்க்கார் அதிகாரிகளின் மீது கண்காணிப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri S. RAMASAMI NAIDU** : கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் மானியத்தை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்று மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்திருப்பதன் காரணமாக நாட்டிலே எவ்வளவு சுபிட்சம் நிலவுகிறதென்ற விஷயம் நாம் எல்லோருமே அறிந்தது தான். என்றாலும் கொள்கை அளவில் அந்தச் சட்டம் நன்றாக நடக்கவில்லை என்று சொல்லவேண்டும் என்ற முயற்சியில் சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொருத்த மட்டில் மதுவிலக்கினால் இன்றைக்கு கிராமங்களில் உள்ள ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது, அவர்கள் எல்லோரும் எவ்வளவு சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எங்கள் ஊரில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு—பன்னிரண்டு மைல் அந்தக் காலத்தில் நடந்து செல்கிறபோது வழிநெடுகிலும் ஏழை மக்கள் குடித்துவிட்டு ஆடிக்கொண்டு வருவார்கள். அங்கங்கே நின்று சச்சரவு பண்ணிக்கொண்டு இருப்பார்கள். ஆனால் இன்றைக்கு அந்த நிலை கிடையாது. ஏதோ கள்ளத்தனமாக ஒருவர் இருவர் குடிப்பது தப்பு என்று தெரிந்து கொண்டு மறைவில் குடிப்பதும் இருக்கிறது என்றாலும் இது வெகுவாக சமுதாயத்தைக் கெடுக்கவில்லை. அதாவது மற்ற இதர கிராம மக்களுக்கு எவ்விதமான கேடும் உண்டாக்கவில்லை. ஆகவே மதுவிலக்கு இன்றைக்கு நல்ல முறையில் அமுலாக்கப்படுகிறது என்று சொல்லி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இந்தச் சட்டம் இருப்பதன் காரணமாகத்தான் இன்றையதினம் ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. அவர்கள் வாழ்வில் நல்ல வசதிகளைப் பெற்று வருகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக போலீஸ் மானியத்தின் மீது பேசுவதென்றால் எத்தனையோ விஷயங்களைக் குறிப்பிடலாம். ஆனால் எனக்கு இருக்கக்கூடிய நேரத்தில் எல்லாவற்றையும் சொல்வதற்கில்லை. ஜெயில் நிர்வாகத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

ஜெயில் மக்களை சீர்திருத்துவதற்காக ஏற்பட்டது, கொடியவர்களை மீண்டும் மக்களுக்குக் கொடுமை இழைக்காது தடுப்பதற்காக ஏற்பட்டது, இப்படி பல முறைகள் இருக்கின்றன. நான் ஒன்று மட்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இதை கவனிக்க வேண்டும். நல்ல மனிதர்கள் ஏதோ தாங்கமாட்டாத கோபத்தினாலோ, இல்லை திடீரென்று ஏற்பட்ட கோபத்தினாலோ ஒரு கொடிய காரியத்தைச் செய்து விடுகிறார்கள். தண்டனை விதிக்கப்படுகிறார்கள். [illegible]



21st March 1960] [Sri S. Ramasami Naidu]

மென்றே நினைத்துக் கொலை செய்யப்பட்டது அல்ல என்று கவனித்துத் தூக்குத் தீர்ப்பளிக்காது விட்டுவிடுகிறார்கள். இந்தமாதிரியான விஷயங்களில் சர்க்கார் கொஞ்சம் கவனித்து கருணையோடு நடந்து கொள்ளவேண்டும் என்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக காவலர்கள்—போலீஸ்காரர்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். போலீஸ்காரர்கள் இருப்பது காவலுக்காக என்று சொல்லப்படுகிறது. சென்னையில் அவர்களுடைய விடுதிகளுக்குக் காவலர் இல்லம் என்று பொறிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மக்களுடைய உற்ற தோழர்கள் என்று முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். சட்டத்தையும், நியாயத்தையும் காப்பாற்றி, உயிரையும் பொருளையும் காப்பாற்றிக் கொடுக்கிற உற்ற தோழர்கள் அவர்கள். அவர்களை நம்முடைய சகோதரர்களாகப் பாவிக்க வேண்டுமென்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நாட்டில் எல்லோரையும் மனிதனாகப் பாவித்து மதித்து நடக்க வேண்டும் என்று சொல்ல ஆரம்பித்ததில் இருந்து இன்று நாட்டில் எல்லோருமே உயர்ந்த மக்கள் ஆகிவிட்டார்கள். தகுதியில்லாதவர்களும் உயர்ந்த மக்களாகப் பாவிக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் வெகுவாகப் பரவிவிட்ட காரணத்தினால் குற்றங்களைக் கண்டுபிடிப்பது, விசாரிப்பது, நிரூபிப்பது ஆகிய எல்லாக் காரியங்களுமே போலீஸ்காரர்களுக்கு சிறிது சிரமமாகவே போய்விட்டது. அதுவும் பட்டப் பகலில் நாற்பது பேர்கள் பார்த்து இருக்கையில் ஒருவனை ஒருவன் கொலை செய்கிறான். ஆனால் இதைப் பார்த்து நின்ற நாற்பது பேர்களில் ஒருவர் கூட கோர்ட்டில் சாட்சி சொல்ல முன்வருவது இல்லையென்றால் எப்படி போலீஸ்காரர்களால் குற்றங்களை ருசுப்பிக்க முடியும் என்று கேட்கிறேன். எங்கோ ஒருவர் மது காய்ச்சுகிறார். அதைக் காட்டிக் கொடுக்க, சாட்சி சொல்ல மனம் இல்லாத மக்கள் இருக்கும் வரையில் போலீஸ்காரர்கள் எத்தனை கெட்டிக்காரர்களாக இருந்தாலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று அறிந்திருக்கிறோம். ஆகவே போலீஸ்காரர்களைக் குற்றம் சொல்வதற்கு முன்பாக நாட்டு மக்களுடைய தரம் உயர வேண்டும். மக்களுக்கு குற்றவாளிகளைக் காட்டிக் கொடுத்து தண்டனை பெறச் செய்ய வேண்டும் என்கிற மனோபாவம் வரவேண்டும். அந்த மாதிரி ஆர்வம் மக்களுக்கு உண்டானாலொழிய நாட்டில் நீதி என்பதையே நிலவச் செய்வது கஷ்டமாக இருக்கும். ஒவ்வொரு ஊரிலும் சாதாரணமாக ஒவ்வொரு ரௌடி இருப்பான். அவனைப் பிடித்துத் தண்டிக்க முடியாமல் அவனுக்கு அந்த அந்த ஊர்க்காரர்களே பாதுகாப்பாக இருப்பார்கள். காரணம் இவன் மேல் நாம் ஏதாவது சொன்னால் அவன் நமக்கே இன்னும் கெடுதல் செய்தால் என்ன செய்வது என்கிற பயம், அல்லது அவன் நம்முடைய காட்டிலே ஒன்றும் செய்யவில்லையே, அவனுக்கு விரோதமாக நாம் போய் எதற்காகச் சொல்வது என்கிற எண்ணம். ஆக எதுவோ அவனை அவ்வூர்க்காரர்களே காட்டிக்கொடுக்க மறுத்தால் போலீஸ்காரர்களால் எப்படிக் களவைக் கண்டு பிடிக்க முடியும் ? கொலையைக் கண்டு பிடிக்க முடியும் ? கொள்ளையை கண்டுபிடிக்க முடியும் ? ஆகவே போலீஸ்காரர்கள் சரியாக நடந்துகொள்ளவில்லை என்று புகார் சொல்வதைக் காட்டிலும் பொது மக்கள் சரியாக நடந்துகொள்வது இல்லை என்று சொல்வதே சாலப்பொருத்தமாகும். ஆனால் இந்த நேரத்தில் போலீசாருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக ஒரு குற்றம் நடக்கிறது. ஒருவன் அக் குற்றத்தை ரிப்போர்ட் செய்கிறான். அவனுக்கு விரோதமாக இருக்கக்கூடிய நபர்களை எல்லாம் குற்றத்தில் சாட்டிவிடுகிறான். அதை First Information Report முதல் தகவலாகக் கருதி விசாரணை தொடங்குகிறார்கள். அதுவும் இப்போது கொடுத்திருக்கும் படியான ஹைகோர்ட் தீர்ப்பின்படி அதையே ஆதாரமாகக் கொண்டு விசாரணை போக வேண்டும் என்றால் நிரபராதிகள் பலருக்குத் தொந்தரவாகப் போய்விடும். முதல் தாக்கலின் பேரிலேயே போகவேண்டும் என்றால் அதன் முடிவு என்ன ஆவது ? விசாரணை செய்து குற்றமற்றவர்களை முதலிலேயே நீக்குவதற்கு முடியாது போனால் பலர் கஷ்டப்பட நேரிடும். உண்மையைக் கண்டு பிடிப்பதே முடியாததாகப் போய்விடும்.

கீழ் இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு மேலே இருக்கும் உத்தியோகஸ் தர்கள் உண்மையைக் கண்டு பிடிப்பதில் நாங்கள் ஒத்தாசை செய்கிறோம், முதல் தகவலைக் கொண்டு கேஸ் சிருஷ்டிக்க வேண்டுமென்ற அவசர மில்லை, முதல் தகவலில் கிடைத்தது உண்மை அல்ல என்று தெரிந்தால் அதை விசிறிவிட்டு உண்மையைக் கண்டு பிடித்து கேஸ் போட இன்று சக்தி யில்லாத நிலையில், மனதில் தைரியம் இல்லாத நிலையில் போலீஸார் இருப்பதை மாற்றி மேலதிகாரி அவர்களுக்கு இந்த தைரியத்தை உண்டுபண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரிப்போர்ட் வந்து பொய் தகவல்கள் உள்ள கேஸாகயிருந்தால் அதை எடுத்தெறிய ஊக்கம் அளிக்க வேண்டும். இன்று போலீஸ் டிப்பார்ட்மெண்டில் நல்ல முறையில் வேலை நடந்து வருகிறது. எங்கு பார்த்தாலும் குற்றங்கள் குறைந்து கொண்டே வருகிறது என்பதிலிருந்தே மக்களின் ஒத்துழைப்பின் பேரில் போலீஸ் அதிகாரிகள் நாட்டில் நன்மை மிகச் செய்யக்கூடும் என்பது தெரிகிறது. இப்பொழுதெல்லாம் நகரங்களில் ஆங்காங்கு நகரப் போலீஸ் ஸ்டேஷன்ஸ் வைக்கிறார்கள். அப்பால் தாலூகா போலீஸ் ஸ்டே ஷன்களும் ஒரு பங்கு நகரத்திலே வைக்கிறார்கள். கிராமப் புறங்களிலும் போலீஸ் ஸ்டேஷன்ஸ் இருக்கின்றன. குற்றங்கள் குறைய வேண்டுமானால், ஊரில் அடித்துக்கொள்வது நிற்கவேண்டுமானால், ஊரில் என்னென்ன குற்றங்கள் நடக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் கிராமப் புறங்களிலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் ஒரு சப் இன்ஸ்பெக்டர், ஒரு ஹெட் கான்ஸ்டேபிள், இரண்டு கான்ஸ்டேபிள்ஸ் தவிர பத்து பனிரண்டு பேர்கள் இருந்தால் அந்த ஸ்டேஷன் பிரதேசத்திலுள்ள பல ஊர்களிலும் அவர்களை ஆங்காங்கு குடியேற்றி அவர்கள் மூலம் கிராமங்களின் பாது காப்பைச் செய்தால் குற்றங்கள் பெருமளவு குறையும். எங்கேயாவது குற்றங்கள் ஒன்றிரண்டு இருந்தாலும் அவைகளின் உண்மையைத் துலக்குவதற்கும் அது பிரயோஜனப்படும். அதோடு கலகம் ஏதாவது ஏற்பட்டாலும் அதைத் தடுக்கவும் இயலும். ஆகவே கிராமப் புறங்களிலுள்ள போலீஸ் ஸ்டேஷன் அதிகாரியின் தலைமையிலேயே போலீஸ் ஸ்டேஷனில் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையை தளர்த்தி அங்கு சிலரும் பெரும்பாலோரை ஒவ்வொரு கிராமத்திலும் குடியேற்றும்படி செய்தால் குற்றங்கள் குறையவும், குற்றங்கள் ஏற்படாமல் தடுக்கவும் பிரயோஜனப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். போலீஸார் இப் பொழுது முன்போல் அல்ல. முன்பு போலிஸில் படியாதவர்கள் அநேகம் பேர்கள் இருந்தார்கள். ஆனால் இப்பொழுது படித்தவர்கள் அங்கு நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு தகுந்தபடி வசதிகள் செய்து கொடுக்க வேண்டியது நியாயமே. ஆகவே, நமது அரசாங்கம் மற்ற அரசாங்க ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்துவது போல் போலீஸாருக்கும் உயர்த்திக் கொடுப்பார்கள் என்பதில் சந்தேக மில்லை. அப்படி உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். இன்று, தீ அணைப்புப் படையைப் பற்றி ஸ்ரீ சுப்பையா நாயுடு அவர்கள் பேசினார்கள். கிராமங்களுக்கு அவைகள் பயன்படவில்லை என்று. எனது ஊரில் எனது பக்கத்தில் ஒரு கிராமத்தில் ஒரு தீ விபத்து ஏற்பட்டபோது 45 மைல்களுக்கப்பாலிருந்து, மதுரையிலிருந்து தீ அணைக்கும் படை வந்து தீயை அணைத்து ஆயிரக்கணக்கான ரூபாயை மிச்சப் படுத்தினார்கள். கிராமங்களில் தீ அணைப்புப் படை பிரயோஜனப்படவேண்டு மென்றால் கிராமங்களில் படப்பு வைத்திருக்கும் இடங்களில் ஒரு பெரிய கிணறு இருக்க வேண்டும். அப்படி தீ விபத்து ஏற்பட்டாலும் அந்தக் கிணற்றில் உள்ள தண்ணீரைக் கொண்டு தீயை அணைக்கலாம். படப்பு கிராமத்தின் ஒதுக்குப் புறத்தில் இருக்கலாம். தண்ணீர் எட்டப்புறமாக இருக்கலாம். ஆகவே, ஊரில் படப்பு இருக்கும் இடத்தில் பொதுவில் ஒரு பெரிய கிணறு இருந்தால் அசந்தர்ப்பம் ஏற்படும்போது அதிலிருந்து தண்ணீரை இறைத்து தீயை அணைக்க உதவியாக இருக்கும். சில பட்டிக் காடுகளில் ரஸ்தாக்கள் சரியாகயில்லை. ஆகவே, தீ அணைக்கும் படை அதிகமாக உதவ முடியாவிட்டாலும், இப்பொழுது பல கிராமங்களிலும் தீ அணைப்பு படையினால் பலன் ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில் போலீஸ் நிர்வாகம் நன்றாக நடக்கிறது. இன்னும் அதிகமாக நன்றாக நடக்க பொது மக்காளாகிய நாம் தைரியமாக முன்வந்து குற்றங்களை களைவதற்கு





போலீஸாருக்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும். எங்கள் ஊர் பக்கத்தில் ஒரு பெரிய மனிதர் இறந்தவுடன் இறந்தவரை வெட்டியவன் கைப்பிடி யாக பிடிபட்ட போதிலும், இவ்வளவு பெரிய மனிதருக்கே இப்படி யென் றால் நாளைக்கு நமக்கு என்னவாகும் என்று நினைத்து கையாற பிடிபட்டும் அவனுக்கு எதிராக சாட்சி சொல்ல மறுத்து விட்டார்கள். நிலைமை அப் படியிருக்கும்போது, போலீஸார் குற்றப் பரிசீலனையில் நன்றாக நடந்து கொள்ளவில்லை என்று சொன்னால், அவர்களை குற்றம் சொல்வதில் பிரயோஜனம் இல்லை. மக்களாகிய நமக்கு இன்னும் பொறுப்பு வரவில்லை. ஊரான் ஒருவன் குற்றம் செய்வதை நிறுத்த மக்கள் நினைத்தால் முடியும். போலீஸார் இருக்கிறார்களே அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும் என்று மட்டும் இருந்துவிடக்கூடாது. நாம் செய்யத் தவறிய குற்றங்களுக்கு, போலீஸார் சரியாக நடந்து கொள்ளவில்லை என்று அவர்களை குற்றம் சொல்வது சரியல்ல. ஆகவே பொது மக்களாகிய நாம் போலீஸாருக்கு வேண்டிய அளவு ஒத்தாசை புரியவேண்டும். ஆகவே, பொது மக்களாகிய நாம் மனதில் உறுதியோடு, பரந்த மனப்பான்மை உள்ளவர் களாக, நியாயம் நிலைக்க ஒத்தாசை செய்யவேண்டுமென்று நினைத்து, குற்றங்களை களைய போலீஸாருக்கு ஒத்தாசை செய்து குற்றங்களை களைய வேண்டுமே தவிர, போலீஸ் டிப்பார்ட்மெண்ட்டாரால் மட்டும் எல்லாக் குற்றங்களையும் களைந்துவிட முடியாது. இன்று விவசாயிகளுக்கு அது மிக மிக அவசியம். வியாபாரம் என்றால் லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை ஒரேயிடத்தில் போட்டு வைக்கலாம். ஆனால் ஒரு விவசாயிக்கு பத்து ஏக்கர் நிலம் இருந்தால் அவன் பத்து இடங்களில் தனது மகசூலை வைத்திருப்பான். எல்லா இடங்களிலும் காவல் இருக்க முடியாது. ஆகவே கிராமங்களில் களவு செய்பவர்களை, அவர் எவராயிருந்தாலும், அவர்களை பொதுமக்கள் பிடித்துக் கொடுத்தால் போலீசாரும் வந்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முடியும். ஆகவே, பொது மக்கள் போலீஸா ருக்கு வேண்டிய ஒத்தாசை அளிக்க வேண்டியது மிக மிக அவசியம். ஆக, போலீஸ் இலாக்கா இன்று மிகவும் நல்ல முறையில் நடக்கிறது என்று சொல்லிக் கொண்டு, போலீஸ் அதிகாரிகள் எல்லா யிடங்களிலும் மக்களோடு நல்ல முறையில் பழகி நல்லபடி தண்டம் இருக்க ஏற்பாடு செய்தால் நன்றாகயிருக்குமென்று சொல்லிக்கொண்டு இந்த மான் யத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

**SRI K. PONNIAN** : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த போலீஸ் மான்யத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். வால்பாறை பிரதேசம், வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் அது அவர்களது காலனியாகவே இருந்து வந்தது. 150 சதுர மைல் கொண்ட பிரதேசத்தில் ஒரே ஒரு போலீஸ் ஸ்டேஷன்தான் இருந்தது. அங்கு வாழும் மக்கள் அத்தனை பேர் களும் தொழிலாளர்கள். தொழிலாளர் பகுதியில் ஒரு ஸ்டேஷன் போதாது என்று அமைச்சர் அவர்களிடம் முறையிட்டோம். இப்பொழுது வால் பாறையில் மேலும் ஒரு போலீஸ் ஸ்டேஷன், மூன்று அவுட் போஸ்ட் இவைகளைக் கொடுத்த அமைச்சர் அவர்களுக்கு அங்குள்ள மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, அது மலைப்பிர தேசம். அங்கு போலீஸ்காரர்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் குற்றங் களைக் கண்டுபிடிப்பதற்கு சிரமமாயிருக்கிறது. காரணம், சுற்றிலும் அடர்ந்த காடுகள். அதோடு, கேரள எல்லை. அங்கு மதுவிலக்குக் குற்றங் கள் நிறைய நடக்கிறது. அப்படி நடக்கிறது என்று போலீஸுக்கு தகவல் வந்தாலும்கூட குற்றம் புரிந்தவர்களைக் கண்டுபிடிப்பதற்குள் அவர்கள் காட்டுக்குள் ஓடி விடுகிறார்கள். இது விஷயமாக அதிகாரிகளிடமும் சொன் னேன், அமைச்சர் அவர்களிடமும் சொன்னேன், அங்கு ஸ்பெஷலாக "ஜீப்" கொடுக்க வேண்டுமென்று. வால்பாறைப் பிரதேசம் கேரள எல்லையைத் தொட்டு இருக்கிறது. கேரள எல்லையில் மதுவிலக்கு அமுலில் இல்லை. ஆனால் நம் பிரதேசத்தில் அது அமுலில் இருக்கிறது. எல்லை மிகவும் பக்கத்தில் இருப்பதால் மதுவகைகளை கேரளாவிலிருந்து கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள் கிறேன், கேரள சர்க்காரிடம் பேசி குறைந்தது, அந்த கடைகளை

[Sri K. Ponnian] [21st March 1960

ஐந்தாறு மைல்களுக்கு அப்புறமாவது நம் எல்லையை விட்டு வைக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். வால்பாறையில் வாழும் ஏறக்குறைய 50,000 தொழிலாளர்களும் ஹரிஜனங்கள். மதுவிலக்கு வந்த பிற்பாடு அவர்களது பொருளாதார நிலை மிகவும் நன்றாக யிருக்கிறது. முன்பெல்லாம் சாயங்காலம் ஏழு மணிக்குமேல் உள்ளே போகமுடியாது. ஆனால் இன்று அவர்கள் சுபிட்சமாக வாழ்வதற்குக் காரணம், மதுவிலக்குத் திட்டமே, தவிர வேறு ஒன்றுமில்லை. அடுத்தபடியாக, மலைப்பிரதேசங்களில் சிறிய சிறிய குற்றங்கள் அதிகமாக நிகழ்கிறது. அங்கு பெரிய திருடுகளோ, கொலைகளோ நடப்பதில்லை. ஆனால் தொழிலாளர்களிடையே மனக்கசப்பு, பல யூனியன்கள் அங்கிருந்துகொண்டு, போலீஸார் பல யூனியன் நபர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு அங்குள்ள அமைதியைச் சீர்குலைக்கிறார்கள். ஆளும் கட்சி, ஆளப்படாத கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் எங்களுக்கு நியாயம் கிடைத்தால் போதும், இது விஷயமாக நான் அமைச்சர் அவர்களிடம் ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். அநாவசியமாக போலீஸார் சில இடங்களில் தொந்தரவு கொடுக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். குற்றம் செய்தான் என்று கூறுமிடத்தில் குற்றம் ஒன்றுமில்லை என்று அறிய வருகிறது. இது விஷயத்தில் அமைச்சர் அவர்கள் சற்று கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3-30 p.m. அடுத்தபடியாக அந்த இடத்தில் இரண்டு மூன்று ஸ்டேஷன்கள் திறந்தும், மூன்று அவுட் போஸ்ட் திறந்தும், அங்கிருக்கின்றவர்களுக்கு வீட்டு வசதி கிடையாது. மானேஜ்மெண்டாரிடத்தில் இதைப்பற்றி கேட்டால் —நானும் இதைப்பற்றி மானேஜ்மெண்டாரிடத்தில் கேட்டேன்—அவர்கள் தொழிலாளர்கள் வாழக்கூடிய (கூலீஸ்) லைன்கள்தான் இருக்கின்றன, அந்த இடங்களை வேண்டுமென்றால் கான்ஸ்டபிள்களுக்கு கொடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அதோடு பெரும்பாலும் எஸ்டேட்டில் உள்ளவர்கள் இவர்களுக்கு இடம் கொடுக்க விரும்புவதில்லை. ஏனென்றால் இதைப்பற்றி அவர்கள் கம்பெனிகளுக்கு எழுத வேண்டும். அதற்கு பிறகுதான் இவர்களுக்கு கொடுக்க முடியும். ஆனால் தொழிலாளர்களுக்கு கொடுக்கக்கூடிய லைனில் இருந்தால் போலீஸ்காரர்களுடைய தரம் குறைந்துவிடக் கூடிய நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, இவர்களுக்கு அவசியமாக வீட்டு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியே வீட்டு வசதி செய்து கொடுப்பதாக இருந்தாலும் இன்னும் பல குறைகளை அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுகின்ற குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்ய முடியாது என்று இருந்தாலும் உடனடியாக அவர்களுக்கு வீட்டு வசதிக்கு ஒழுங்கு பண்ணி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அவர்களுடைய பிள்ளைகளை படிக்க வைப்பதற்கு பல சலுகைகள் செய்து கொடுக்கவேண்டி யிருக்கிறது. ஹைஸ்கூலில் போய் படிக்க வேண்டுமென்றால் 10 அல்லது 15 மைல் போக வேண்டும். இதற்கு போலீஸ்காரர்களுடைய பிள்ளைகளை அனுப்ப முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே எஸ்டேட்டிலிருந்து வேறு பிள்ளைகளை அனுப்புவதற்கு பல வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதே போன்ற வசதி இந்த பிள்ளைகளுக்கும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் வேலை செய்வது கேரள எல்லையில், ஆகையால் அவர்களுடைய பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப சலுகை செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்விதமுள்ள சலுகைகள் செய்துகொடுத்தால்தான் அவர்கள்—டிரான்ஸ்பர் பண்ணினாலும் கூட லீவு போட்டுக்கொண்டு விடுவார்கள்—அவ்விதம் செய்யாமல் வேலை செய்வதற்கு விரும்பக் கூடிய வகையில்—இந்த மாதிரியான சலுகைகளை செய்து கொடுத்தால் அவர்கள் திறமையாக வேலை செய்வார்கள் என்பதை தெரிவித்துக்கொண்டு, முக்கியமாக அவர்களுக்கு வீட்டு வசதி, ஜீப் வசதி முதலியவைகளை கொடுப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**DR. SRIMATHI SATHIYAVANIMUTHU** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட சிறை, போலீஸ் மானியங்களை எதிர்த்து எதிர் தரப்பிலுள்ளவர்கள் கொண்டுவந்திருக்கும்



21st March 1960] [Dr. Srimathi Sathiyavanimuthu]

வெட்டுப் பிரேரணையின் மூலம் நான் என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். பொதுவாக போலீஸ் இலாகா ஆளுகிற கட்சிக்கு பல சலுகைகளை காட்டுகிற பொழுது, அதைப் பற்றி எதிர் கட்சிகள் குற்றஞ்சாட்டும் பொழுது எதிர்கட்சிக்காரர்கள் இப்படி சொல்லுகிறார்களே, என்று நினைக்கலாம். உண்மையிலேயே பெரும் அதிகாரிகளாக இருப்பவர்கள் வேண்டுமானால் கண்ணியமாக நடந்துகொள்ளலாம், ஆனால் கீழ்த்தர அதிகாரிகளும் சிப்பந்திகளும் போலீஸாரும், மாற்றுக்கட்சிக்காரர்கள் என்றால் ஆளுகிற கட்சிக்கு எதிரானவர்கள், அவர்களுக்கு சலுகை காட்டினால் ஆட்சியாளர்களுக்கு விரோதமான காரியமாகும் என்ற தவறான எண்ணத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளில் பலர் கடமை உணர்ந்து செயலாற்றுகிறார்கள். எல்லோரும் என்று சொல்லாவிட்டாலும் குறிப்பிடத்தக்க சில அதிகாரிகள், நான் இன்னமும் பாராட்டக்கூடிய முறையில் சொல்லலாம், என் தொகுதியில்—குசப்பேட்டையிலும் கல்யாண மேஸ்திரி தோட்டத்திலும் சண்டைகளும் கொலைகளும் ஏற்பட்டபோது அது குறித்து நான் பல மனுக்களை அனுப்பியபோது, சில அதிகாரிகள் உடை மாறிக் கொண்டு வந்து திருடர்களை கண்டுபிடிப்பதிலும், கொலைகாரர்களை கண்டு பிடிப்பதிலும் பணியாற்றிருக்கிறார்கள். இம்மாதிரி செய்கிற சேவை கீழ்த்தர சிப்பந்திகளிடத்தில் வராததற்கு காரணம் என்ன? போலீசார் இம்மாதிரி சேவையில் ஈடுபடக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு கிடையாது. ஆனால் அவர்களுடைய பொருளாதார நிலைமையும், அந்த கீழ்த்தர சிப்பந்திகளுக்கு சர்க்கார் அளிக்கின்ற பொருளாதார வசதியும் தங்களை சில ஈன செயல்களில் ஈடுபட செய்கிறது. போலீஸ்காரர்களாக இருப்பவர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறது. ஏன் லஞ்சம் வாங்குகிறார்கள் என்பதை ஆளுகிற கட்சியிலுள்ளவர்கள் எடுத்துச் சொன்னார்கள்; ஆனால் இவற்றை ஏன் தடுக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இன்று காலை ஆளும் கட்சியிலிருந்து பேசிய ஒரு தோழர் இங்கிலாந்தில்—லண்டன் மாநகரத்திலுள்ள போலீஸார் செய்த கடமைகளைப் பற்றியும்—அந்தப் போலீஸைப்பற்றியும் மிக பெருமையாக எடுத்துப் பேசினார்கள். இவ்விதம் பேசிய அவர் ஒன்றை எண்ணியிருக்க வேண்டும். லண்டன் போலீஸ்காரர்களின் சம்பளம் என்ன? அதே போன்று இந்த நாட்டிலுள்ள போலீஸாரின் சம்பளம் என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும். அவர்களுக்கு 700 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இங்குள்ள போலீஸாருக்கு 30 ரூபாய் சம்பளம், எட்டு எட்டு அணாவாக ஒரு ஆண்டுக்கு உயர்வு கொடுத்து—10 ரூபாய் அவர்களுடைய சம்பளத்தில் சேரவேண்டுமென்றால் 20 ஆண்டு செல்ல வேண்டும். இருபது ஆண்டுக்கு பின்னால் 10 ரூபாய் உயர்வு கொடுக்கப்படுகிறது. இருபது ஆண்டுகளுக்குள் அந்த போலீசாருக்கு பரிதாபத்திற்குரிய வகையில்—ஆண்டவன் அவர்களுக்குத்தான் டஜன் கணக்கில் குழந்தைகளைத் தருகிறான், அதோடு இப்போது ஏறிக்கொண்டிருக்கிற விலைவாசி தொல்லைகளுக்கு இடையில் அவர்கள் பணி புரிகின்றார்கள். ஆனால் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய இந்த சம்பளத்தில் தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டியிருப்பதினால், அதற்கு ஈடு கட்டுவதற்காக அவர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள். இதற்காக நாம் அவர்களை கண்டித்தாலும் குற்றம் செய்ய அவர்கள் ஏன் முற்படுகிறார்கள், அதை நாம் சவனிக்கவேண்டும். இந்த ஆட்சியாளர்களைத்தான் நான் வன்மையாக கண்டிக்க விரும்புகிறேன். குறை கூற விரும்புகிறேன். கீழ்த்தர சிப்பந்திகள், போலீசார் சரியான முறையில் தங்கள் கடமை செய்கிறார்களா என்பதைப்பற்றி பார்க்கும்போது அவ்விதம் அவர்கள் செய்யவில்லை என்பதை நாம் பார்க்க முடியும், வேண்டுமென்றால் சர்க்கார் சிறிது விதிகளை திருத்திக் கொண்டாலும் நல்லது என்று நினைக்கிறேன். குறைந்தது எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்திருப்பவர்களைத் தான் இப்படிப்பட்ட வேலைக்கு ஆரம்பத்தில் எடுக்க வேண்டும் என்ற திட்டம் உருவாக்கி, அதன்படி சேர்க்க ஆரம்பித்திருந்தால் மேல் நாட்டில் இருப்பது போன்று சாதாரண போலீஸ் சிப்பந்தியும் பதவி உயர்ந்து, தலைமை பதவியை—இன்ஸ்பெக்டர் ஜெனரல்—பதவியை—அடைவதற்கும் வழி ஏற்படும். அதே நிலைமை நம் நாட்டில் இருந்தால் நம் நாட்டில் பணியாற்றுகின்ற போலீசாரும் பதவி உயர்வு பெறுவதற்கும் ஒரு வாய்ப்பாகவும் அமையும். இப்போது நேரிடையாக இன்று சர்க்காரில்

அதிகாரிகளை தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களுக்கு உண்மையில் நாட்டில் எங்கெங்கு ஊழல்கள் இருக்கின்றன, எப்படி எப்படி ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதை எல்லாம் அறிந்துகொள்ள முடியாது. போலீஸ்காரர்களிலிருந்து பதவி உயர்வு பெற்று வந்தால் தான்—படிப்படியாக—அவர்களுடைய அந்தஸ்து உயர்த்தப்பட்டு பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருந்தால்தான் அவர்கள் நாட்டிலுள்ள உண்மையான ஊழல்களை எல்லாம் போக்குவதற்கு வேலை செய்ய முடியும். ஆகவே, அவர்களுக்கு இவ்விதமான ஒரு பதவி உயர்வு தரப்படவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மேலும், பெண்கள் மீது குற்றஞ் சாட்டப்படுகிறது. குற்றஞ் சாட்டப்பட்டு போலீஸ் காவலில் வைக்கப்படுகிறார்கள். அங்கே இருக்கின்ற போலீசார் அதிகமாக படிக்காதவர்களாய் இருந்தால், இரவு காலங்களில் எவ்வளவுதான் பெண்கள் பாதுகாப்பாக—எஸ்கார்ட் என்று சொல்லுகிற முறையில் இருந்தாலும், அங்குள்ள ஆண் போலீஸ்காரர்கள் கீழ்த்தரமான முறையில், கேவலமான முறையில் பேசுகிறார்கள். நான் இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன், பெண்களை லாக்-அப்பில் வைக்க வேண்டுமென்றால், கமிஷனரிடமிருந்து ரிமாண்ட் வாங்கி அவர்களை வைத்திருக்கவேண்டும், அதற்கு நேரம் இல்லை என்றால், அல்லது காலம் இடம் தரவில்லையென்றால் போலீஸ் ஸ்டேஷனில் உள்ள சப்-இன்ஸ்பெக்டரோ அல்லது சர்க்கிள் இன்ஸ்பெக்டரோ இதற்கு முன் வந்து கூடிய மட்டும், சீக்கிரமாகவே குற்றஞ்சாட்டப்பட்ட பெண்களை விசாரித்து அனுப்ப முயல வேண்டும். அவ்விதம் முடியாவிட்டால் ரிமாண்ட் வாங்கி வைத்திருப்பதுதான் நலமாக இருக்கும்.

அதே போன்று மதுவிலக்குச் சட்டத்தின் அடிப்படையில் சில வேலைகளை போலீஸ்காரர்கள் செய்கிறார்கள். குற்றம் நடைபெறுகிறது என்று சொல்லுகிற இடத்தில் யார் மீது சந்தேகத்திற்கு இடமிருக்கிறதோ அவர்களை கண்டுபிடிக்க வேண்டும் என்று இருக்கிற பொழுது, வேண்டுமென்றே அங்கிருக்கின்ற அத்தனை பேரையும் அடித்து துன்புறுத்தி, அவர்கள் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி குழந்தையாக இருந்தாலும் சரி, வயோதிகராய் இருந்தாலும் சரி அவர்களை எல்லாம் வண்டியில் ஏறச் சொல்லுகிறார்கள். அவர்கள் வண்டியில் ஏறுவதற்கு மறுத்தால், பெண்களாக இருந்தால், அவர்கள் கணவன் முன் வைததே, வாடி, போடி என்று கேவலமாக பேசுகின்றார்கள் என்ற புகார்கள்—ஏழைமக்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய தொகுதி—என் தொகுதியிலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. போலீஸார் எவ்வளவுதான் மரியாதை வாரம் நடத்தினாலும் இதைத் தெரிந்துகொள்ளவேண்டும். மரியாதை மற்றவர்களுக்கு கொடுத்துதான் மரியாதை வாங்க வேண்டும்.

அதை போன்று, குசப்பேட்டையில் ஏற்பட்ட கலவரத்தை குறைப்பதற்கு, ஜி-4 காவல் நிலையம் ஒன்று போதாது, மேலும் ஒரு காவல் நிலையத்தை குசப்பேட்டையில் வைக்கவேண்டுமென்று அதிகாரிகளிடத்தில் போய் கண்டு பேசினேன். ஜி-4-ல் இருக்கும் ஸ்டேஷனை வேண்டுமென்றால் அங்கும் வேலை செய்வதற்கு மாற்றிக்கொள்ள முடியுமே தவிர அந்த இடத்தில் Out Post ஸ்டேஷனை ஏற்படுத்த முடியாது என்று அந்த அதிகாரி கூறிவிட்டார். அதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது அதற்கு போதுமான நிதி வசதி இல்லை, போதுமான அதிகாரிகள் இல்லை என்ற காரணத்தால் குசப்பேட்டையில் அவுட் போஸ்ட் கூட வைக்க முடியாது என்று அவர் எனக்கு சொன்னார்கள். அங்கே கொலைகள் விழுகின்றன. விழுகின்ற கொலைகளைக் கண்டுபிடிக்கவில்லை. மாதக் கணக்கில் ஆகின்றது. ஊருக்கு ஊர் சண்டை நடக்கிறது. [illegible] கிடையாது, கண்டு பிடிக்க முடியாது, வசதி கிடையாது என்று அதிகாரிகள் சொல்வார்களானால் அதிகாரிகள் மீது குற்றமாக இருக்க முடியாது. ஆளுகின்றவர்கள் மீது குற்றமாகத்தான் இருக்க முடியும். மக்களுடைய அவசரத்திற்கும் அவசியத்திற்கும் இல்லாது மற்ற நேரத்தில் மட்டும் இயங்கி வந்தால் அதற்கு 6 கோடி செலவென்றால் அது பணத்தை [illegible] பட்டம் என்றுதான் நாங்கள் சொல்ல முடியும்.





அதே போன்று தீயணைக்கும் படையினருக்கு அதிகச் சம்பளம் கிடையாது. போலீஸ்காரர்களுக்கு எவ்வளவு சம்பளம் தரப்படுகிறதோ அதே அளவு சம்பளம் தரப்படவில்லை. தீயணைக்கும் படையினருக்கு வெறும் 20 ரூபாய்தான் சம்பளம். பல ஆண்டு காலமாக இந்த சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். இவர்களோடு சேர்ந்து போராடிய போலீஸ்காரர்களுக்கு 10 ரூபாய் அதிகமாகத் தந்திருக்கிறார்கள். ஆனால் உயர்வைத் தேடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 20 ரூபாய். எப்போதோ ஒரு முறை தானே அவர்கள் தீயில் குதிக்க வேண்டியிருக்கிறது என்று எண்ணமோ என்னவோ. அவர்களும் விலைவாசி என்ற தீயில் தினம்தினம் குதித்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் தீயில் குதித்து மக்களுடைய உயிரைக் காப்பாற்றக்கூடிய இவர்கள் தீயில் அகப்பட்டு, வெந்து மடிந்துவிட்டால் அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுப்பது கிடையாது. நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று பலருக்காக எங்கள் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் கேட்டிருக்கிறார்கள். தீயில் விழுந்து செத்த பிறகு கூட நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை. உயிரோடு இருக்கிறபோது 20 ரூபாய் சம்பளம். தீயில் வெந்து மடிந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்தினருக்குக்கூட ஒன்றும் கிடையாது.

போலீஸ்காரர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. அப்படியிருந்தும் போலீஸ் மான்யத்திற்கு 6 கோடி ரூபாய் என்று சொல்லும்போது, எங்கே செல்லுகிறது 6 கோடி ரூபாய் என்று கேட்க வேண்டியிருக்கிறது. இப்பேற்பட்ட குறைகளை நீக்கவேண்டும்.

அதே போல விசேஷ ஆயுத போலீஸ். அவர்கள் பல கோரிக்கைகளை இந்த சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றி இந்த மன்றத்திலேயே பல முறை நாங்களும் பேசியிருக்கிறோம். 17 வருஷ காலமாக தங்கள் சொந்த ஜில்லாவில் அல்லாமல் மற்ற மற்ற மாவட்டங்களில் இருந்தாகவேண்டும் இவர்கள். திருமணமாகி, இள மனைவியோடு சேர்ந்து மூன்று மாதங்கள்கூட இருந்து வாழ்க்கை நடத்த முடியாமல், அங்கேயே விட்டு விட்டு 17 வருஷங்கள்—ஒரு வருஷம், இரண்டு வருஷமல்ல, 17 வருஷங்கள்—ஒரே இடத்தில் அல்ல, 3 மாதங்களுக்கு ஒரு இடமாக, இடம் விட்டு இடம் சென்று கொண்டு இருக்கவேண்டியிருக்கிறது நாடோடி மக்களைப் போல. முதலமைச்சர் வேண்டுமானால் திருமணம் ஆகாமலே இருக்கக்கூடியவர், இல்லற வாழ்வை அறியாதவர். ஆனால் போலீஸ் அமைச்சர் திருமணமானவர், மக்களைப் பெற்றவர், இல்லறத்தில் ஈடுபட்டவர், இதனை அறியவேண்டும். இப்படிப்பட்ட பரிதாப நிலையில், இளமையெல்லாம் பாழான பிறகு, 50 வருஷங்களுக்குப் பிறகு மனைவி இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன? இந்த நிலைமைக்கு......

(நேரமாகிவிட்டதைக் குறிக்கும் மணி அடிக்கப்பட்டது.)

**SRI T. L. SASIVARNA THEVAR** : கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் மான்யத்தின் மீது வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் அமைச்சர் அவர்கள் பேசக்கூடிய காலத்தில், போலீஸ் ஸ்டேஷன் வேண்டும், போலீஸ் ஸ்டேஷன் வேண்டும் என்று மக்கள் ஆவலாகக் கேட்கிறார்கள் என்று கூறினார்கள். அதே சமயத்தில் அவர்கள் குற்றங்கள் குறைவாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். குற்றங்கள் குறையும்போது மக்கள் போலீஸ் ஸ்டேஷன் வேண்டும் என்று கேட்பது விவாதத்திற்குப் பொருந்தக்கூடியதாக இல்லை. ஒரு நல்ல ஆட்சி நடக்கிறது என்று சொல்லவேண்டுமானால் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக மூடு விழா நடத்தவேண்டும். அதுதான் நல்ல ஆட்சிக்கு அறிகுறி. ஒவ்வொரு இடத்திலும் போலீஸ் ஸ்டேஷன் வேண்டுமென்று மக்கள் கேட்கும் தன்மையில் இருக்கிறது என்றால் நிர்வாகம் நல்ல முறையில் இருக்கிறதா என்று நீங்களே யோசித்துக்கொள்ளவேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே நமது நாட்டிலே போலீஸ் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இதைப்பற்றி ஒரு கருத்து எனக்கு இருக்கிறது. இதை இந்தச் சட்ட மன்றத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். 100 ஆண்டுகள் எப்படி

நிறம்பியது என்று ஒரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. நமக்கு சுதந்திரம் கிடைத்தது 1947-ம் ஆண்டில்தான். அதற்குப் பின்னால் இரண்டு ஆண்டுகள் கழித்து நாம் குடியரசானோம். அதிலிருந்து எப்படி நூற்றாண்டு விழா கொண்டாட முடியும். வெள்ளையர் காலத்தில் எப்போது ஏற்பட்டதோ அதை வைத்துக்கொண்டு கணக்கிட்டதாக அறிக்கைகள், புத்தகங்கள் மூலமாகத் தெரிந்துகொண்டேன். அது மிகவும் கௌரவமற்ற தன்மை என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். வெள்ளையர் ஆட்சி காலத்தை இப்போது நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறதா? விழா கொண்டாடவேண்டுமானால் சுதந்திரம் அடைந்த தேதியைக் கொண்டு கணக்கிட்டு வெள்ளி விழா கொண்டாடலாம், அல்லது தங்கவிழா கொண்டாடலாம். வெள்ளையன் ஏற்படுத்திய போலீஸை வைத்துக்கொண்டு அதற்காக விழா கொண்டாடுவதானால் அது வெள்ளையர் காலத்திற்குப் பெறுமை செய்யக்கூடியதாக இருப்பதால் அது ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருக்கிறதா என்று நினைக்கவேண்டும். அதோடு போலீஸ் சம்பந்தப்பட்டவர்களுக்கு நினைப்பு ஏற்படலாம், வெள்ளைக்காரன் போக்கிலேயே அதேமாதிரியே இருந்து வருகின்றது போல இருக்கிறது என்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டுவிடும். நாம் சுதந்திரமடைந்துவிட்டோம். இப்போது நடப்பது குடியாட்சி. அந்த உணர்ச்சியில் ஆட்சி செய்து வருகிறார்கள். ஆகையால் இந்த நேரத்தில் பழைய கால ஞாபகத்தை எழுப்பக்கூடிய சமாசாரம் இது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக போலீஸ் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் ஒரு கருத்து சொல்லப்பட்டது. அதே கருத்தை திரு. எஸ். ராமசுவாமி நாயுடு அவர்கள் தெரிவித்தார்கள். போலீஸ் நிர்வாகத்தில் எப்.ஐ.ஆர்.-ல் யார் பெயரை எழுதி வைத்து விடுகிறார்களோ அவர்கள் கடைசி வரையில் தப்பித்துக்கொள்ள முடியாது என்று தெரிந்துவிட்டது. முதுகுளத்தூர் சம்பந்தப்பட்ட வழக்கில் எனக்கு நேரடியாகத் தெரியும், இம்மாதிரி தண்டிக்கப்பட்டவர்கள் பலர். அந்த ஸ்டேஷன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விரோதமாக இருக்கக்கூடியவர்கள், அரசியல் ரீதியாக அவர்களுக்கு விரோதமாக இருக்கக்கூடியவர்கள், எந்த விதமான குற்றமும் செய்யாமல் இருந்த போதிலும் அவர்கள் பெயர்களைச் சேர்த்துவிடுகிறார்கள். இந்த எப்.ஐ.ஆர்.-ல் பிழை ஏற்பட முடியும். காலப் போக்கில் விசாரணை செய்து, தவறுதலாக ஏதாவது பெயர் சேர்க்கப்பட்டிருந்தால் அதைப் பற்றி பகிரங்கமாக கோர்ட் முன்னால் அல்லது பெரிய அதிகாரிகள் முன்னால் சொல்லி அவைகளை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக போலீஸ் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்று பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்த அளவில் ஏற்கனவே இருந்த உற்சாகம் இப்போது போலீஸ் இலாகாவில் இருக்கிறதா என்றால் இல்லை. காரணம் என்ன? அசிரத்தைதான். சமீபத்திலே மதுரையில் இரண்டு பெரிய திருட்டுகள் நடந்தன. ஒரு திருட்டு ஒரு வக்கீல் வீட்டில் சற்றேறக்குறைய 3,000 அல்லது 4,000 ரூபாய் அளவுக்கு சொத்து திருட்டுப் போயிற்று. அதற்கு உடனே சென்னையிலிருந்து போலீஸ் நாய்கள் வந்து சேர்ந்தது. துப்பு துலக்கினார்கள். பிறகு என்ன ஆயிற்று என்றால் ஒன்றுமே நடக்கவில்லை. அடுத்தபடியாக ஒரு திருட்டு மதுரை காலேஜ் பிரின்ஸிபால் வீட்டில் நடந்தது. 12,000 ரூபாய் பெறுமானம் உள்ள நகைகள் களவு போயிற்று. இதற்கும் போலீஸ் நாய்கள் கொண்டுவரப்பட்டதாகக் கேள்விப்படுகிறேன். சமீபத்தில் விசாரித்தபோது ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று தெரிகிறது. இன்றைக்கு போலீஸ் நாயைப் பற்றிப் பிரசாரம் செய்கிறோம். அது என்ன மோப்பம் பிடித்துப் பார்த்தும் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படி இருந்தால் பாமர மக்களுக்கு போலீஸ் இலாகாவின் மீதே அவநம்பிக்கைதான் ஏற்படும். எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. பெரிய "காங்" திருட்டு நடக்கிறது. "காங்" சம்பந்தப்பட்ட ஆட்களோடுகூட போலீஸ் அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதாகக்கூட புகார்கள் இருக்கின்றன. இன்ன ஆபீஸர் என்று நான் சொல்லவில்லை, இப்படி பொதுப்படையான அபிப்பிராயம் மக்களிடம் இருக்கிறது. இதிலே இன்னொரு அபிப்பிராயம்



கூட இருக்கிறது. குற்றம் சம்பந்தப்பட்ட மட்டில், குற்றத்தைப் புரிந்த பிறகு சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் போலீஸிடம் சென்று தன்னைக்கட்டிக் கொள்வது வழக்கமென்று சொல்வார்கள். இப்போது அதைவிட வேறு ஒரு சிறந்த வழியைக் கையாள்வதாகச் சொல்லப்படுகிறது. போலீஸாரிடம் முன்கூட்டியே சென்று, இந்த மாதிரியான தப்பு பண்ணவேண்டுமென்று சொல்லி அதற்காகப் பணம் கொடுத்து பிறகு அந்த மாதிரி குற்றத்தைச் செய்வதாகக்கூட எனக்கு நிச்சயமாக நம்பத் தகுந்த இடத்திலிருந்து உறுதியாகச் சொல்லக்கூடிய அளவுக்கு தகவல் வந்திருக்கிறது. எல்லா இடங்களிலும் இம்மாதிரி இருக்கிறதா என்று சொல்ல முடியாது. ஒரு சில இடத்தில் இருக்கலாம். ஒரு சில இடத்தில் இருந்தாலும் அதனால் நாட்டுக்கே பேராபத்து ஏற்படும். இவையெல்லாம் நிர்வாகம் நன்கு அறிந்து தக்க நடவடிக்கை எடுத்தால்தான் நாட்டில் அமைதியும் சுபிட்சமும் ஏற்படும். இலாகாவில் பரிபூர்ணமாக கண்காணிப்பு இருக்கவேண்டும். சென்ற முறை பேசும்போது, லஞ்ச ஒழிப்பு போலீஸைக் கண்காணிக்க ஒரு இரகசிய ஒற்றர் இலாகாவைப் போடவேண்டுமென்று நான் சொன்னேன். இதைப் போடுவது ஏற்கனவே இருக்கிற ஒற்றர் இலாகாவிற்குத் தெரியக் கூடாது. ஒற்றருக்கு ஒற்றர் இருக்கவேண்டுமென்று திருக்குறளில் திருவள்ளுவ நாயனார் சொல்லியிருக்கிறார். ஒற்றர் போட்டால் இன்னொரு ஒற்றர் கட்டாயம் வேண்டுமென்று சொல்லுகிறார். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: இப்போது இருக்கிறார்களே.)

ஆகவே ஒற்றர்களுக்கு ஒற்றர்கள் அவசியமாக இருக்கிறது. அப்படி ஒற்றர்களை ஒற்றுப் பார்க்கும்படிச் சொல்லும்போது அவர்கள் பரம ரகசியமாக அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். அப்பொழுது வேலை திறமையாக நடைபெறும். அவர்கள் போலீஸ் பிரதம அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் தங்களுடைய வேலைகளைச் செய்ய வேண்டும். அப்படி வேலை செய்தால் நிச்சயமாக நடக்கக்கூடியவைகளைத் தெரிந்து கொள்ள முடியும். பலவிதமான குற்றங்களை நிச்சயமாகக் கண்டுபிடித்துவிடலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இரண்டாவதாக போலீஸ் இலாகா சம்பந்தப்பட்ட மட்டில் ஒரே ஒரு குற்றத்தை மட்டும் சாட்ட வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் மரியாதை வாரம் என்று கொண்டாடுகிறார்கள். பெரிய உத்யோகஸ்தர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் நல்ல முறையில்தான் நடந்துகொண்டு வருகிறார்கள். ஆனால் கீழே இருக்கக்கூடியவர்கள் அப்படி நடந்துகொள்வதாகவே இல்லை. இதை இந்தச் சபையின்முன் தெரிவிக்க வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது அவர்கள் மரியாதை வாரம் கொண்டாடுகிறார்கள். ஒரு கம்ப்ளெயிண்ட் கொடுப்பதற்கு ஒரு நபர் ஒரு சட்ட மன்ற உருப்பினரையும் கூட்டிக்கொண்டு போனார். அப்படி சப் இன்ஸ்பெக்டரிடம் போனபோது "யாரையா நீர், கம்ப்ளெயிண்ட் பண்ண வந்துவிட்டீரோ," என்று அவமரியாதையாக அந்த சட்ட மன்ற உருப்பினரைப் பற்றி குறிப்பிட்டார். அதன் பிறகு அப்படி வந்தவர் சட்ட மன்ற உருப்பினர் என்று தெரிந்து கொண்ட பிறகு "வாருங்கள், உட்காருங்கள்" என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார். அதற்கு அந்த உருப்பினர், "மரியாதை வாரம் என்பது நேற்றுடன்தான் முடிந்து விட்டது, அதனால் இன்றைக்கு எப்படியாவது நடந்து கொள்ளலாம்" என்று பதில் சொல்லி விட்டு வந்தார். அந்த சட்ட மன்ற உருப்பினர் நான் இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதை எதற்கு நான் சொல்லுகிறேன் என்றால் இப்படி மரியாதை வாரம் என்பது வருஷத்தில் ஒரு வாரம் மட்டும் என்று இல்லாமல் வருஷம் பூராவுக்குமே மரியாதையாக போலீஸ்காரர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்ல வந்தேன். இன்றைக்கு நாட்டிலுள்ள 21 வயது வந்தவர்களுக்கு எல்லாம் வோட்டுரிமை கொடுத்து யாரும் ராஷ்டிரபதியாக வரவேண்டும் என்று எல்லோருக்கும் அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையில் யாராக இருந்தாலும் அவர்களை வருஷம் பூராவும் மரியாதையாக நடத்த வேண்டும் என்பதுதான் நல்லது. எல்லா பிரஜைகளும் ஒரே மாதிரியாகத்தான் நடத்தப்பட்ட வேண்டும். அந்த முறையில் போலீஸ்

அதிகாரிகள் நடந்துகொள்ள வேண்டும் என்று ஒரு உத்தரவு போட வேண்டும். குற்றம் புரிபவர்களாக இருந்தாலும் அவர்கள் குற்றவாளிகள் என்று கண்டு பிடிப்பதற்கு முன்னதாக அவர்களை மரியாதையாகத்தான் நடத்த வேண்டும். அவர்களையெல்லாம் கேவலமாக பேசக்கூடாது. அதற்காக அவர்களுக்கு வெற்றிலை பாக்கு சந்தனம் வைத்து உபசரிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. வாடா போடா என்று சொல்லக்கூடாது என்றுதான் சொல்லுகிறேன். இப்படி மரியாதையாக நடந்துகொள்ளவில்லையானால் அப்படிப்பட்ட அதிகாரிகளை உடனே டிஸ்மிஸ் பண்ண வேண்டும். அந்த முறையில் அவர்களுக்கு ஒரு உத்தரவு போட வேண்டும்.

இப்பொழுது குற்றங்கள் குறைந்து விட்டன என்று சொல்லப்படுகிறது. மதுவிலக்கு சம்பந்தமாக அதிகப்படியான தண்டனை விதிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்த பிறகு குற்றங்கள் குறைந்து போயிருக்கிறது என்று இருப்பது போன்று அதிகப்படியான குற்றங்களைச் செய்யும்போது அதிகப் படியான தண்டனை விதித்தால் ஜனங்களிடத்தில் பயம் ஏற்பட்டு குற்றம் செய்வது குறைந்து போகும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த முறையில் ஒரு உத்தரவு போட்டு அந்த முறையில் போலீஸ் அதிகாரிகள் கண்டிப்பாக நடக்க வேண்டும் என்று உத்தரவு போட்டு அதை மீறினால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அரசியல் சம்பந்தமாக பல எதிர் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வரக்கூடிய கடிதங்கள் எல்லாம் சென்சார் செய்யப்படுகிறது. வெள்ளைக்கார ராஜ்யம் நடந்தபோதும் சென்சார் செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் செய்ததற்கும் இவர்கள் செய்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் காலத்தில் சென்சார் செய்தால் லெட்டர்களை பார்த்துவிட்டு ஆட்சேபகரமான இடங்களில் கரி பூசி லெட்டர்களைக் கொடுத்து விடுவார்கள். ஆனால் இப்பொழுது லெட்டர்களையே கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். ஏன் அவர்கள் செய்ததுபோல் செய்யக்கூடாது. லெட்டர்கள் வந்ததா வரவில்லையா என்றுகூட தெரியவில்லை. இந்த தேதி இந்த லெட்டர் வந்ததா என்று கேட்டால் அதற்கு பதில் சொல்ல முடியவில்லை. லெட்டர் வரவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது லெட்டர்கள் எல்லாம் சென்சார் செய்யப்பட்டு ஒழுங்காக வந்து கொண்டிருந்தது, ஆனால் இப்பொழுது அப்படி வருவதாக இல்லை, தயவு செய்து வரும் லெட்டர்களையெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டு பேச்சு முடிந்தது).

**Sri T. P. ELUMALAI :** மதிப்பிற்குறிய சபா நாயகர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்லப் பிரியப்படுகிறேன். போலீஸ்காரர்கள், அதிலும் நேரம் இல்லாமல் அவர்களுக்கு ஓய்வு இல்லாமல் உழைக்கிற போலீஸ்காரர்களுக்கு சம்பளம் உயர்வைப்பற்றி அரசாங்கம் முக்கியமாக கவனிக்க வேண்டும் என்பதை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் அவர்களுடைய வாழ்க்கை யானது மிகவும் மோசமாக இருக்கிறது. இதை சுட்டிக் காட்டி அங்கங்கே இருக்கிறவர்களும், அல்லது தனக்கு சாதகம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்களும் இந்த விஷயங்களை யெல்லாம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சில விஷயங்களில் அவர்கள் சரியானபடி வேலை செய்ய முடியாதபடி அவர்கள் சரியான முறையில் வேலை செய்ய விடாமல் தடுக்கிறார்கள்.

(Deputy Speaker in the Chair)

போலீஸ்காரர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்ற முறையில்தான் சர்க்கார் முக்கியமாக கவனம் செலுத்தி வருகிறார்கள். இன்னும் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





எதிர் கட்சியில் உள்ளவர்கள் இதை ஆதரித்தும் எதிர்த்தும் பேசினார்கள். சம்பள உயர்வு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் பேசினார்கள். தங்களுடைய கட்சியை வளர விடாமல் தடுத்தும், வேலை செய்கிறார்கள் என்ற முறையிலும் பேசினார்கள். இப்படி சில அதிகாரிகளின் மீது குறைகள் கூறினார்கள். போலீஸ்காரர்களைப்பற்றி கூறும்போது தனிப்பட்ட முறையில் அவர்கள் மீது குறைகளையும் கூறினார்கள். இதையெல்லாம் செய்கிறது அதையெல்லாம் செய்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். இப்படிப் பேசி ஓரளவுக்கு இந்த மானியத்தை எதிர்க்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். எதிர் கட்சியிலுள்ளவர்களும் சரி, காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும் சரி இந்த சுதந்தர நாட்டில் போலீஸ்காரர்கள் அவமரியாதையாகவும் அவமானமாகவும் நடத்துகிறார்கள் என்றும் குறை கூறினார்கள். காங்கிரஸ்காரர்கள்கூட அப்படி நடத்துகிறார்கள். (பெரிய ஆரவாரம், சிரிப்பு). காங்கிரஸ்காரர்கள்கூட அப்படி நடத்தப்படுகிறார்கள். ஆகவே இந்த நிலைமையில் எல்லாவற்றையும் எடுத்துப்பார்க்கும்போது ஏதாவது சிறிய பிழைகள் ஏற்பட்டாலும்கூட கை தட்டி அதை தடுக்கிறார்கள். இப்படியேதான் அவர்கள் இந்த நாட்டில் செய்துகொண்டு வருகிறார்கள். உண்மையிலேயே நான் சொல்லுகிறேன் திராவிட முன்னேற்றக் கழகம் போடுகிற கூட்டங்களிலெல்லாம் அவர்களுக்கு நேரம் கிடையாது. இரவில் பத்து மணிக்கு முடிக்க வேண்டுமென்றாலும்கூட அவர்கள் பதினொரு மணி வரையில் பேசிக் கொண்டிருப்பார்கள். இதைப்பற்றி போலீஸ்காரர்கள் கேட்டால் அவர்கள் மீது குற்றம் சாட்டுகிறார்கள், கேள்வி கேட்கிறார்கள். அதைப்பற்றி சட்டசபையில் வந்து பேசுகிறார்கள். போலீஸ்காரர்கள் நல்ல முறையில் தான் சட்டத்தையும் நிர்வாகத்தையும் நடத்துகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களிடத்தில் காங்கிரஸ்காரர்கள்தான் அதிகப்படியாக கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்ல வேண்டும். அதற்கு ஒரு உதாரணம் கூட சொல்ல முடியும். சுதந்தரத்திற்கு பாடு பட்டவர் ஒருவர் தியாகி, அவர் இறந்து விட்டார். அதற்கு வேண்டிய காரியம் நடந்தது. அந்தக் காரியத்திற்கு சன்மார்க்க நிதி எடுக்க வேண்டும் என்று கச்சேரி நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குக்கூட பர்மிஷன் கொடுக்க முடியாது என்று போலீஸ்காரர்கள் சொல்லி விட்டார்கள். இப்படி ராயபுரத்தில் லைசென்சு கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். அவர் காங்கிரஸ் தியாகியாக இருந்தும்கூட போலீஸ்காரர்கள் லைசென்சு கொடுக்க மறுத்துவிட்டார். இப்படிப்பட்ட கச்சேரி அவசியம் இல்லை என்று சொல்லி விட்டார்கள். எங்கேயெல்லாம் அவசியம் ஏற்படுகிறதோ அங்குதான் லைசென்சு கொடுக்கிறார்கள். ஆகவே காங்கிரஸ்காரர்களுக்கு அவர்களால் அதிகப்படியாக நஷ்டம் ஏற்படுகிறது என்பதை சொல்லிக்கொள்ளுகிறேன். போலீஸ்காரர்கள்தான் எவ்வளவோ பந்தோபஸ்து வேலைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் கூடுமானவரையில் அந்த இலாகாவிற்கு மானிய தொகையை அதிகப்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் செங்கல்பட்டு ஜில்லாவில் போலீஸ்காரர்களுக்கு அதிகப்படியான வேலை இருக்கிறது. மற்ற வேலைகளையும் அவர்கள் செய்ய வேண்டிதாக இருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து வருகிறவர்களை அவர்கள் வரவேற்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய பந்தோபஸ்து செய்ய வேண்டியதாக இருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்களுக்கு வரவேற்பு கொடுக்கவேண்டியதாக இருப்பதால் அதற்கு என்று ஒரு தனிப்பட்ட இலாகாவை அமைக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஒரு தனி இலாகா போட்டு அந்த இலாகாவே அந்த வேலையைச் செய்யச் சொல்லும்படியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுவிலக்குச் சட்டம் வந்த பிறகுதான் உண்மையில் ஹரிஜன மக்களும் 4 p.m.
மீனவ மக்களும் உயர்ந்து இருக்கிறார்கள். உண்மையில் நம்முடைய காங்கிரஸ் ஆட்சியில்தான் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. மாற்றுக் கட்சியில் இருக்கிறவர்கள் இன்னும் இந்த மதுவிலக்கு

[Sri T. P. Elumalai] [21st March 1960

சட்டத்திற்கும், அரசாங்கம் செய்கிற காரியங்களுக்கும் சரியான முறையில்
ஒத்துழைப்புக் கொடுத்தால் அதிகமான லாபத்தை நம்முடைய தாழ்த்தப்
பட்ட மக்கள் அடைவார்கள்.

இப்படி எல்லாவற்றையும் விட்டுவிட்டு எதிர்க்கட்சியில் இருப்பவர்கள்
ஏதோ குறைகள் சொல்ல வேண்டும் என்பதற்காகக் குறைகளைச் சொல்லிக்
கொண்டே போவதனுல் பிரயோஜனம் இல்லை. இன்றையதினம் மாற்றுக்
கட்சியிலிருக்கிற அன்பர்கள்—அதுவும் குறிப்பாக திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்தவர்கள்— போலீஸ்காரர்களிடம் பரிவு காட்டுவது போல
பேசுவது எல்லாம் அவர்களைத் தங்கள் வலைக்குள் போட்டுக்கொள்ளத்
தான். இன்றைக்கே, போலீஸ்காரர்களில் எத்தனைபேர் திராவிட முன்
பேற்றக் கழகத்தை சேர்ந்தவர்களாக இருக்கிருர்கள் என்று தெரிந்து
கொள்ளவேண்டும். அவர்கள் தங்கள் உடைக்குள் திராவிட முன்னேற்றக்
கழக உடையையே அணிந்து இருக்கிருர்கள். அதாவது உள்ளே இரண்டு
கலர் துணி போட்டிருக்கிருர்கள். காரணம் அவர்களுடைய வாழ்க்கைத்
தரம் மோசமாக இருக்கிறது. " காங்கிரஸ்காரன் உங்களுடைய வாழ்க்கைத்
தரத்தை உயர்த்த என்ன செய்தான் ? " என்று இவர்கள் இளப்பி
விடுகிருர்கள். வாஸ்தவம்தான். திராவிட முன்னேற்றக் கழகம் அதிகா
ரத்திற்கு வந்தால் தங்களுக்கு ஏதோ சாதித்து விடப்போவதாக நினைக்
கிருர்கள். இவையெல்லாம் தவறு. நீதி நிர்வாகத்தில் அரசியல் கட்சி
கள் புகுவது என்பது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன். அவ்வி
டத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் புகக் கூடாது. அவர்களுடைய
பிரசாரம் அவ்விடத்தில் செய்யப்படக் கூடாது. இல்லாவிட்டால் பலவித
மான இடைஞ்சல் வருவதற்கு ஏதுவாகும் என்று சொல்லிக்கொண்டு
இந்த மானியத்தை ஆதரித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**SRI M. KALYANASUNDARAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
போலீஸ், ஜெயில், நீதி இந்த இலாகாக்களின் வேலைகளைப் பார்த்தே
நம்முடைய நாட்டில் மக்களுடைய ஜனநாயக உரிமைகள் எப்படி இருக்
கின்றன என்பதைப்பற்றி நாம் தெரிந்து கொள்ள முடியும்.

சட்டசபையினருக்கோ அல்லது அமைச்சர் அவர்களுக்கோ வெகு சுலபம்.
சட்டங்கள் இயற்றுவதோ, போலீசினுடைய கடமைகளைப் பற்றி பேசி
விடுவதோ. நாம் சுதந்திரம் அடைந்த பிறகு போலீஸ்காரர்களுடைய
தன்மை மாறிவிட்டது. அவர்கள் மக்களையே எசமானர்களாக நினைக்க
வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் பிரசங்கத்தில் பேசிவிட்டுப் போய்விட
லாம். ஆனால் அதை நடைமுறைக்குக் கொண்டுவருவது அந்தப் போலீஸ்
இலாகா. வெகு வேலை பாவம், அவர்களுக்கு. அவர்களைப் பார்த்துப்
பரிதாபப்படுவதா அல்லது கண்டிப்பதா என்று சில சமயத்தில் நான் சந்
தேகப்படுவது உண்டு. நம் ராஜ்யத்தில் போலீஸ் மான்யத்திற்காகக்
கோரப்படுகிற தொகை மற்ற ராஜ்யங்களைவிடக் குறைவு. அவர்களுடைய
எண்ணிக்கையையும் எடுத்துப் பார்த்தால் ஜனத்தொகை விகிதாசாரத்தில்
பார்த்தால் மற்ற ராஜ்யங்களைவிடக் குறைவு. காலையில் அமைச்சர் அவர்
கள் சொன்னது போல குற்றங்கள் அதிகம் பெருகுவது வளர்ச்சியை,
அபிவிருத்தியைத்தான் காட்டுகிறது, மேனாடுகளில் கூட அதிக வளர்ச்சி
அடைந்த நாடுகளில் எல்லாம் புதுப்புதுக் குற்றங்கள் வருகின்றன,
அதேபோல நம்முடைய நாடும் அதிக வளர்ச்சி அடைந்து வருகிறது என்ற
காரணத்தினாலோ என்னவோ குற்றங்களும் அதிகமாகப் பெருகிக் கொண்
டிருக்கின்றன என்பது சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையி
லிருந்து தென்படுகிறது.

இப்போது ஒவ்வொரு போலீசாரும் விசாரிக்கவேண்டிய குற்றங்கள்
அதிகமாக இருக்கின்றன. இதற்கு அடுத்தாற்போல் அதிகமாக குற்றங்கள்
இருக்கக்கூடிய ராஜ்யத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால் நம்முடைய ராஜ்யத்தில்
ஏற்பட்டிருக்கிற குற்றங்கள் அதைப்போல இரண்டு மடங்கு இருக்கிறது.
இவ்வளவு குறைவான போலீஸ் படையை வைத்துக்கொண்டு இவர்
களுக்கு இவ்வளவு அதிகமான குற்றங்களை விசாரிக்கவேண்டிய பொறுப்பு
இருக்கிறது என்றால் அவர்கள் நிலையைக் கொஞ்சம் கவனித்துப் பார்க்க



21st March 1960] [Sri M. Kalyanasundaram]

வேண்டும். அவர்கள் எத்தனை வேகமாக நடவடிக்கை எடுத்துக்கொள்
கிருர்கள் என்று பார்த்தால் அவர்களைப் பற்றிக் குறை சொல்ல வேண்டி
யிருக்கிறது. ஆனால் அதற்குப் பொறுப்பாளி யார் ? அவர்களா ?
அல்லது அரசியல் வாதிகள் பொறுப்பாளியா ? அரசியல் வாதிகள்தான்
பொறுப்பாளிகள் என்பது இந்தச் சபையில் பேசப்பட்ட பிரசங்கங்களில்
இருந்தே தெரிகிறது. எதிர்க்கட்சிக்காரர்களைப்பற்றி அந்தக் கட்சியி
லிருந்து சொன்னார்கள். நாங்கள் குற்றங்களை எடுத்துச் சொல்கிறோம்,
அதைக் கட்சி மனப்பான்மையோடு பார்ப்பார்களேயானால் எந்த நன்மையும்
ஏற்படாது. அதுவும் எனக்கு முன்பாகப் பேசிய அன்பர் ஒருவர் போலீஸ்
காரர்களிடையே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் போகக்கூடாது,
அவர்களிடத்தில் பிரசாரம் செய்யக்கூடாது என்றார்கள். காங்கிரஸ் கட்சி
மட்டும் போகலாம் போல இருக்கிறது. எந்த அரசியல் கட்சிக்கும் அப்பாற்
பட்டு போலீஸ் இலாகா இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம்.
அதற்கு உடன்படவேண்டுமானால் நான் என் கட்சியின் சார்பில் சொல்ல
முடியும். அதற்காக ஒரு மகாநாடு—சர்வகட்சி மகாநாடு கூட்டட்டும். உரு
வான யோசனைகளைப் பற்றி ஆலோசிப்போம். எந்த உடன்பாட்டுக்கும் வர
நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று என் கட்சியின் சார்பில் சொல்
லிக்கொள்கிறேன். மனப்பூர்வமாக அவர்கள் கேட்டார்கள் என்றால்
நாங்கள் என்றைக்குமே ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். எங்கள்
கட்சி எப்போதும் போல இருக்கவேண்டும் என்று அவர்கள்
சொல்வார்களானால் அதற்கு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இல்லை.

சில உதாரணங்களைக் கொண்டுவர விரும்புகிறேன். போலீஸ் எப்படி
அரசியல் காரர்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது, என்று சொல்வேன்.
அதற்காகத்தான் அந்த இலாகாவை நான் கண்டிக்கவேண்டிய அவசி
யம் ஏற்படுகிறது.

ஒரு கனம் அங்கத்தினர் அந்தக் கட்சியிலிருந்து போலீஸ் இலா
காவைப் பாராட்டிப் பேசினார்கள். அவர்கள் நாளைக்கு எதிர்க்கட்சியில்
வருவார்களேயானால் இன்றைக்கு அவர் பேசியது போல பேசமாட்டார்கள்.
என்பது எனக்குத் தெரியும். நாங்கள் அப்படி அல்ல. இந்த ஏழு
வருஷகாலங்களாக நாங்கள் எப்படி பேசி வருகிறோமோ அப்படியே
நாளைக்கு அதிகாரத்திற்கு வந்தாலும் நடத்திக் காட்டத் தயாராக இருக்
கிறோம். அன்றைக்கும் நாங்கள் இப்படியேதான் பேசுவோம். இன்
றைய தினம் சுலபமாக பொதுமக்களை அடக்குவதற்காக சில முறைகள்
106-வது செக்ஷன், 151-வது செக்ஷன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்
பட்டு வருகிறது. இப்போது புதிதாக இதுவரைக்கும் இல்லாத முறையில்
போலீஸ் ஆக்ட் 47-வது பிரிவுப்படி வேறு பிராசிக்யூட் செய்கிருர்கள்.
யாராவது போலீஸ் அதிகாரியைப்பற்றி புகார் எழுதிக்கொடுத்தால் உடனே
இடைக்கிற பலன் என்ன ? அந்தப் புகார் விசாரிக்கப்படுகிறதோ இல்லையோ
அப்படிப் புகார் செய்த நபர்கள் மீது 47-வது செக்ஷன்படி நடவடிக்கை
எடுக்கப்படுகிறது. இதற்கு உதாரணம் சொல்ல முடியும். திருநெல்
வேலியில் இப்படி நடக்கிற காரியங்கள் அளவுக்கு மீறியன. ஒரு கேஸ்
விவரம் கொஞ்சம் சொல்கிறேன்.

கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த முனிசிபல் கவுன்சிலர் ஒருவர், அந்தக்
கட்சியில் உள்ள முக்கியமான ஊழியர் ஒருவர் ஆகிய இரண்டுபேரும்
சேர்ந்து டி. எஸ். பி. யிடம் ஒரு புகார் செய்தார்கள். அந்தப் புகாரில்
கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய விஷயம் என்ன ? தூத்துக்குடியில் இருக்
கக்கூடிய ரௌடி இவர்களைத் தாக்கி இழிவான முறையில் பேசி பொது
விடத்தில் மானபங்கம் ஏற்படக்கூடிய முறையில் நடந்து கொண்டான்.
இதைப்பற்றி சப்-இன்ஸ்பெக்டரிடம் புகார் செய்தும் எவ்வித நடவடிக்
கையும் எடுக்கப்படவில்லை. இதைப்பற்றி விசாரிக்கவேண்டும் என்பதாக
திருநெல்வேலி டி. எஸ். பி. யிடம் புகார் செய்தார்கள். இதைப்பற்றி
அவர் விசாரிக்கவில்லை. அந்தப் பெட்டிஷனிலேயே அவர் எழுதுகிருர்:

" Please enquire and see whether these fellows can be prose-
cuted."

[Sri M. Kalyanasundaram] [21st March 1960

என்று. இதன்படி அவர்கள் போலீஸ் ஆக்ட் 47-வது செக்ஷன்படி அவர்களைப் பிராசிக்யூட் செய்து கீழ்க்கோர்ட்டிலே பொய்யான, தப்பான புகார் செய்தார்கள் என்பதற்காக 15 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார்கள். பொய்க் குற்றச்சாட்டு கொண்டுவந்ததாகத் தண்டித்துவிட்டார்கள். ஆனால் இது மேல் கோர்ட்டுக்கு வந்தபோது இதைப் பரிசீலனை செய்து நீதிபதி ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறார். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். நீதுபதி என்ன சொல்கிறார்.

"It is seen however, that in this case no attempt was made by the District Superintendent of Police, or by his deputies to examine the petitioners, who sent the petition in Exhibit P-1."

யார் புகார் சொன்னார்களோ, அந்தப் பேர்வழிகளை கூப்பிட்டு எந்த அதிகாரியும் விசாரிக்கவில்லை. ஆனால் அவர்கள் பிராசிக்யூட் செய்யப்பட்டு தண்டனையும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

SRI S. LAZAR: Can the hon. Member read the judgment of the court?

DEPUTY SPEAKER: He can read the substance of the judgment.

SRI S. LAZAR: If it is so, then the House should be given the privilege of hearing the entire judgment and not quoting here and there from the judgment to support his stand.

DEPUTY SPEAKER: He is reading only a part of the judgment.

He need not read the judgment but he can give the substance of it.

SRI M. KALYANASUNDARAM: I will read only the substance of it. The Judge says—

'It is essentially a petition for help and protection and not one which contains any malicious or false accusation as such against any Police officer and so the appeal is allowed.'

நீதிபதியே சொல்கிறார். பெடிஷன் கொடுத்து பாதுகாப்பு வேண்டுமென்பதற்காக, உதவிக்காக கொடுக்கப்பட்ட மனு எப்படி திரும்புகிறது என்றால் பொய்க் குற்றச்சாட்டு கொண்டு வந்தான் என்று கூறி கோர்ட்டில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு கௌன்சிலர், ஒரு ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள முக்கியமான உறுப்பினர், படித்த ஒருவர், எத்தகைய கொடுமைகளுக்கும் பயப்படாதவர், அப்படிப்பட்ட ஒருவருக்கே இந்த கதி என்றால், சாதாரண ஒரு விவசாயி, ஒரு கிராமத்திலுள்ள விவசாயி போலீஸ் மீது புகார் எப்படி கொண்டுபோக முடியும், அப்படி கொண்டுபோக முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நவீனமுறை ஏன் கையாளப்படுகிறது? இது எந்த நோக்கத்தோடு கையாளப்படுகிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். 107 செக்ஷன்படி பல கேஸ்கள் போட்டிருக்கிறார்கள். சட்டப்படி, யார் தவறு செய்திருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது போலீஸின் கடமை என்பதுதான் என் அபிப்பிராயம். வலுவான அபிப்பிராயமும்கூட. சொல்லில் மட்டும் சட்டம் அனைவருக்கும் சமம் என்று இருந்தால் போதாது. நடவடிக்கைகளும் அனைவருக்கும் சமம் என்றிருக்க வேண்டும். அதில் ஜாதி மத வித்தியாசம் இல்லாமல் இருக்க வேண்டும். அரசியல், ஜாதி வித்தியாசம் இல்லாதிருக்கவேண்டும். சில வழக்குகளின் விவரங்களைச் சொல்லுகிறேன், தீர்ப்பை படிக்கவில்லை. திருநெல்வேலி, இராமநாதபுரம்,



21st March 1960] [Sri M. Kalyanasundaram]

தெற்கேயிருந்து வடக்கு திருச்சி வரையில் வந்திருக்கிறது. 107 செக்ஷன் பிரகாரம் அநேக கேஸ்கள போடப் பட்டிருக்கின்றன. எதற்காக? அவர்கள் என்ன கொள்ளையடித்தார்களா? அல்லது பலாத்கார செயல்களில் இறங்கினார்களா? அப்படி ஏதாவது ஒரு சம்பவம் காட்ட முடியுமா? கிஸான்களை தூண்டி விட்டார்களாம், எதற்காக? இந்த சபை நிறைவேற்றிய கல்டிவேட்டிங் டெனெண்ட்ஸ் ப்ரோட்டக்ஷன் ஆக்ட், பெயர் ரெண்ட் ஆக்ட் இவைகளினால் உள்ள உரிமைகளைக் கொடுக்கவேண்டும் என்று கிஸான்களை தூண்டி விட்டார்கள். முக்கியமாக இன்னொன்று. இவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள், பின்னர், இவர்கள் விவசாய சங்க உறுப்பினர்கள் என்பதெல்லாம் குற்றமா? கேஸ்களின் நம்பர்கள் வேண்டுமானால் கொடுக்கிறேன். இந்த விவரங்களை அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். ஐ.ஜி.யிடமும் கொடுத்திருக்கிறேன் நேரில். வழக்குகள் போட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகி விட்டது. இன்னும் வழக்குகள் பல பெண்டிங்கில் இருக்கின்றன. ஒரு வழக்கில் 70 வயதிற்கு மேலான கிழவி மீது 107 செக்ஷன்படி கேஸ் போட்டிருக்கிறார்கள். 29 வயதா போட்டு 30, 40 மைல் தூரத்திலிருந்து வர வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு வழக்குகள் பற்றியும் புள்ளிவிவரங்கள் கொடுக்க முடியும். கோர்ட்டில் கேஸ்களை ஒத்திபோட்டுக் கொண்டே போகிறார்கள். 40 சாட்சிகள் கொடுக்கப் பட்டிருக்கிறது, ஆனால் அவர்கள் விசாரிக்கப்படவில்லை. இது அமைதியைப் பாதுகாக்க செய்யப் பட்டதா? எதிர்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இவ்வளவு துணிவா? ஆகவே இவர்களை அடக்குவது என்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் இது என்ற முடிவுக்கு வராமல் என்ன முடிவுக்கு வருவது? இதைச் சொன்னால் எதிர்கட்சிக்காரர்கள் இப்படித்தான் பேசுவார்கள் என்று சொல்வார்கள். சட்டத்தை அமுல் நடத்துவதற்கு ஏற்பட்டது போலீஸ். சட்டத்தை மீறாமல் அவர்கள் பாதுகாக்க வேண்டும். ஆனால் அவர்கள் நீதிபதிகளாக இருக்க முடியாது. நிலச்சுவான்தார் சட்டத்தை மீறுகிறார் என்றால் உடனே வழக்கு போடுவது யார் மேலே என்றால் நிலச்சுவான்தாரிடமிருந்து கம்ப்ளெயிண்ட் வாங்கி விவசாயி மீது கேஸ் போடுவது முறையா? சேலத்தில் ஒரு அடிஷனல் ஜில்லா ஸூபரின்டென்டன்ட் பரமனெனட் ஸூபரின்டெண்டனட் ட்ரான்ஸ்பராகி விட்டார். கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட்படி விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்கப்படுவதில் போலீஸ் நடந்து கொள்வது தவறு என்று சொல்லும்போது அவர் என்னைப் பார்த்துக் கேட்கிறார், "என் ஸார், கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட் இந்த ஜில்லாவிற்கு செல்லாது" என்று. இது, 1959-ம் வருடம் ஜூன் மாதத்தில் நடக்கிறது. சேலம் ஜில்லாவிற்கு இந்த ஆக்ட் இல்லை என்று என்னிடம் சொன்னார். அரை மணி நேரம் வாதித்தார்கள். பின், எனக்கு யோசனை சொன்னவர்கள் அப்படி சொல்லியிருக்கிறார் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட அதிகாரி போலீஸில் இருந்தால் அந்தச் சட்டத்தை இப்படிப்பட்ட போலீஸ் பாதுகாக்குமா? அதைத் தெரியாமல் சொன்னார்கள் என்று நான் நினைக்கவில்லை. என்னை சுலபமாக ஏமாற்றி விடலாம் என்று நினைத்தார். பின்னால்தான் சொன்னபடி நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படிப்பட்ட அதிகாரிகள் சேர்ந்துதான் போலீஸ் ரிப்போர்ட்டு தயார் செய்கிறார்கள்.

'Agrarian situation in the State was generally peaceful during the year.'

விவசாயிகள் சங்கம், குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியின் பொறுப்புள்ள தன்மை இது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

'Except for the Kisan agitation in Kulitalai taluk, Tiruchirappalli district . . . .'

ஆகவே, அஜிடேஷன். இது என்ன வார்த்தை? அவர்கள் என்ன திருடினார்களா? கிஸான்கள் ஒன்று சேர்ந்து சட்டபூர்வமான கிளர்ச்சி நடத்துவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அதுகுறித்து இவர்கள் சொல்லுகிறார்கள், கிஸான் அஜிடேஷன் என்று, இன்னொரு இடத்தில் சொல்லப்படுகிறது.

[Sri M. Kalyanasundaram] [21st March 1960

'However at the instigation of the Communists . . ."

கம்யூனிஸ்ட் தூண்டி விட்டார்களாம். அவர்கள் மனப்பான்மை எப்படியிருக்கிறது என்று பாருங்கள்.

'stray cases of trespass, removal of paddy, etc., were reported in Thanjavur and Madurai districts'.

கம்யூனிஸ்ட் என்ன சட்ட விரோதமான காரியத்தை செய்யச் சொன்னார்கள்? ஒன்றை நிரூபிக்கட்டும், நான் சவால் விடுகிறேன்.

'Labour troubles—Labour was generally restive during the year. The Communists continued to dominate the Labour front . . .

எல்லா வழக்குகளிலும் அவர்கள் விடுதலையாகி விட்டார்கள். அப்பொழுது, போலீசார் உண்மையாக நடந்தார்களா? இன்னொன்று, லேபர் ட்ரபிளாம் சோஷலிஸ்டிக் பாட்டேர்ன் ஆப் சொஸைடி அமைக்கப்போகிறோம் என்று சொல்கிறார்களே, கோர்ட் தீர்ப்பை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டால் அது "ட்ரபிளாம்". இப்படிச் சொல்கிறார்கள். முதலாளிகள் தேர்தல் நிதிக்கு பணம் கொடுக்கிறார்கள். ஆகவே, இது லேபர் ட்ரபிளா? இன்னொன்று பாருங்கள்.

'The Dravida Munnetra Kazhagam was successful in infiltrating into labour organizations like the Simpson Group Worker's Union . . . . .'

இன்னும் சொல்கிறார்கள்.

'Ordinary prudence should have suggested to the sub-Inspector the inadvisability of taking a step which would involve the risk however remote, of the group becoming violent, for the police force at his disposal was not sufficient to deal with such a contingency, by any means shot of opening fire. Nor can it be said that the offence committed by Abraham Lincoln . . .

திருட்டுத்தனமாக என்ன காரியம் செய்தார்கள், நீங்கள் என்ன வார்த்தையை உபயோகிக்கிறீர்கள்? தொழிலாளர்களுக்கு, சோஷலிஸ்ட் கட்சி அல்லது கம்யூனிஸ்ட் கட்சி அல்லது திராவிடமுன்னேற்றக் கழகம் கட்சி இவைகளில் சேருவதற்கு உரிமையில்லையா? விவசாயிகள் எதிர்கட்சி ஸ்தாபனங்களில் சேருவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லையா? இது தானா ஜனநாயகம்? இந்த மனப்பான்மை இருந்தால் எதிர்கட்சிகளுக்கு என்ன சுதந்திரம் கொடுக்கப்படுகிறது என்பதற்கு இது ஒரு அடையாளம். நீங்கள் ஜனங்களிடம் வோட் வாங்கப் பேசுவீர்கள். ஆனால் பெரிய நிலச்சுவான்தார்களின் கொடுமையை எதிர்த்து, முதலாளிகளின் ஆதிக்கத்தை எதிர்த்து, சட்டத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னிலையில் தொழிலாளர்கள் போராடுகிறார்கள் என்பதை நான் எங்களுக்கு கிடைத்திருக்கும் ஒரு சர்டிபிக்கேட்டாக எடுத்துக்கொள்கிறேன்.

ஆம், இதற்காக நான் பெருமை கொள்கிறேன். அரசாங்கம் வக்கீல் உதவி செய்ய முடியாது என்று சொன்னாலும்கூட, பல ஜில்லாக்களிலும் நல்ல வக்கீல்களை, சிறந்த ஊழியர்களை நாங்கள் தயார் செய்திருக்கிறோம். இவைகளுக்கு எல்லாம் மாற்றுக் கட்சியில் இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி பொறுப்பு எடுத்திருக்கிறது. ஆகவே இதை நான் அவதூறாக எடுத்துக் கொள்ள வில்லை. அதை பெருமையாகவே ஏற்றுக்கொள்கிறேன். அது போகட்டும், ஆனால் இன்னும் இம்மாதிரி எதிர்கட்சிகளை நடத்திக்கொண்டிருந்தால், நிச்சயமாக இன்னும் துன்பத்தை தேடிக்கொள்வார்கள்



21st March 1960] [Sri M. Kalyanasundaram]

பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நேரமில்லாத காரணத்தால் நான் பல விவரங்களை சொல்லப்போவதில்லை. ஒன்றிரண்டு முக்கியமான விவரங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் சட்டங்களைப் பொறுத்த வரை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும். இப்போதும் மட்ராஸ் ஸிட்டி போலீஸ் சட்டம் என்றும், டிஸ்ட்ரிக்ட் போலீஸ் சட்டம் என்றும் இருந்து கொண்டிருக்கிறது. இது என் இதுவரையிலும் மாற்றாமல் வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை....

(மணியடிக்கப்பட்டது.)

இன்னும் ஐந்து நிமிடங்கள் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் அமைச்சர் அவர்களும் ஐந்து மணிக்கு மேல் கூடுதலாக ஐந்தோ பத்தோ நிமிடங்கள் இருந்து பதில் சொன்னாலும் பரவாய் இல்லை என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். நான் சொல்லுகின்ற முக்கியமான ஒன்றிரண்டு விஷயங்களை அமைச்சர் அவர்கள் கேட்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இப்போதும் கூட டிஸ்டிரிக்ட் போலீஸ் ஆக்ட் என்னும் ஸிட்டி போலீஸ் ஆக்ட் என்னும் தனித்தனியாக இருந்துகொண்டிருக்கிறது. ஒரே இலாகாவுக்கு ஒரே மாதிரியான சட்டம் இருப்பது தான் நல்லது. இந்தச் சட்டங்களில் இருக்கின்ற பிரிவுகளை எல்லாம் பார்க்கும்போது, இவைகள் எல்லாம் பெரிய ஜமீன்தார்களுக்கும், பெரிய நிலச்சுவான்தார்களுக்கும் உதவக் கூடிய முறையில் பல பிரிவுகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் ஜமீன்தார்கள் காலத்தில் அவர்களுக்கு பாதுகாப்புக்கு வேண்டி இயற்றப் பட்ட சட்டங்கள். எவ்வளவு போலீஸ் பாதுகாப்பு வேண்டுமென்றாலும் பணம் செலவு செய்தால் போதும், அவர்களுக்கு போதிய பாதுகாப்பு கிடைக்கும். இப்போது அவர்களுக்கு பணம் செலவு செய்யாமலே பாதுகாப்பு கிடைக்கிறதா இல்லையா என்பது வேறொரு விஷயம். செலவு செய்யாமல்கூட அவர்களுக்கு போதிய போலீஸ் பாதுகாப்பு கிடைத்து வருகிறது. அவர்கள் முன்பு பணம் கொடுத்தாவது உதவியைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் எந்தவிதமான அக்கிரமங்கள் செய்தாலும் சரி, காலணாகூட செலவு இல்லாமல் போலீஸ் உதவி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்போதுள்ள சட்டத்தை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, மெட்ராஸ் ஸிட்டி போலீஸ் ஆக்ட் என்று இருக்கிறது, இதற்கு என்ன அவசியம்? நோட்டிபிகேஷன் செய்து இதை நீடித்துக்கொண்டே இருக்கிறார்கள். என் ஒரு புதுச் சட்டத்தை கொண்டுவருவதற்கு நேரமில்லையா இவர்களுக்கு, எவ்வளவோ சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றுகிறோமே, என் இதற்கு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது. நிதி அமைச்சர் அவர்கள் இப்போது இங்கு இல்லை, அவர்கள் இருக்கும் போது சொல்லுகிறேன், அவர்கள் இப்போது புது இடமான சோஷிலிசத்தை—நயா பைசா—சோஷலிஸத்தை கொண்டுவருவதற்காக டெல்லிக்குப் போய் வந்திருக்கிறார்கள். இதுதான் ஜனநாயக ஆட்சிக்கு இருக்க வேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம், நிதி அமைச்சர் ஆஜராகியிருக்கிற நாளன்று சொல்லுகிறேன். ஆகவே இந்த ஒரு விஷயத்தை மட்டும் அமைச்சர் அவர்கள் கவனித்து, இந்த சட்டத்தை திருத்தினால் போலீஸ் இலாகாவுக்கு நன்மை செய்ததாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில், அதனால் இறந்தவர்கள் யாராய் இருந்தாலும் சரி, அவர்கள் எல்லோரும் இந்நாட்டு பிரஜைகள். அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் சரி, நஷ்டஈடு கொடுப்பதில் நியாயமாய் நடந்துகொள்ள வேண்டும். சமீபத்தில் துறைமுகத் தொழிலாளர்கள் ஆறு பேர்கள் இறந்தார்கள் துப்பாக்கி பிரயோகத்தால். அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவில்லை. நாங்களும் எவ்வளவோ கேட்டுப் பார்த்தோம். நடக்கவில்லை, நாவு வரண்டு போய் விட்டது. விட்டு விட்டோம். அதே போன்று தான் வால்பாறையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு பேர்கள் கொல்லப்பட்டார்கள். அப்போது அங்கு நடந்த துப்பாக்கிப் பிரயோகம் நியாயமா இல்லையா என்கிற பிரச்னை

[Sri M. Kalyanasundaram] [21st March 1960

'However at the instigation of the Communists . . ."

கம்யூனிஸ்ட் தூண்டி விட்டார்களாம். அவர்கள் மனப்பான்மை எப்படி யிருக்கிறது என்று பாருங்கள்.

'stray cases of trespass, removal of paddy, etc., were reported in Thanjavur and Madurai districts'.

கம்யூனிஸ்ட் என்ன சட்ட விரோதமான காரியத்தை செய்யச் சொன்னார்கள்? ஒன்றை நிரூபிக்கட்டும், நான் சவால் விடுகிறேன்.

'Labour troubles—Labour was generally restive during the year. The Communists continued to dominate the Labour front . . .'

எல்லா வழக்குகளிலும் அவர்கள் விடுதலையாகி விட்டார்கள். அப்பொழுது, போலீசார் உண்மையாக நடந்தார்களா? இன்னொன்று, லேபர் ட்ரபிளாம் சோஷலிஸ்டிக் பாட்டேர்ன் ஆப் சொஸைடி அமைக்கப்போகிறோம் என்று சொல்கிறார்களே, கோர்ட் தீர்ப்பை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டால் அது "ட்ரபிளாம்". இப்படிச் சொல்கிறார்கள். முதலாளிகள் தேர்தல் நிதிக்கு பணம் கொடுக்கிறார்கள். ஆகவே, இது லேபர் ட்ரபிளா? இன்னொன்று பாருங்கள்.

'The Dravida Munnetra Kazhagam was successful in infiltrating into labour organizations like the Simpson Group Worker's Union . . . . .'

இன்னும் சொல்கிறார்கள்.

'Ordinary prudence should have suggested to the sub-Inspector the inadvisability of taking a step wh.ch would involve the risk however remote, of the group becoming violent, for the police force at his disposal was not sufficient to deal with such a contingency, by any means shot of opening fire. Nor can it be said that the offence committed by Abraham Lincoln . . .

திருட்டுத்தனமாக என்ன காரியம் செய்தார்கள், நீங்கள் என்ன வார்த்தையை உபயோகிக்கிறீர்கள்? தொழிலாளர்களுக்கு, சோஷலிஸ்ட் கட்சி அல்லது கம்யூனிஸ்ட் கட்சி அல்லது திராவிடமுன்னேற்றக் கழகம் கட்சி இவைகளில் சேருவதற்கு உரிமையில்லையா? விவசாயிகள் எதிர்கட்சி ஸ்தாபனங்களில் சேருவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லையா? இது தானா ஜனநாயகம்? இந்த மனப்பான்மை இருந்தால் எதிர்கட்சிகளுக்கு என்ன சுதந்திரம் கொடுக்கப்படுகிறது என்பதற்கு இது ஒரு அடையாளம். நீங்கள் ஜனங்களிடம் வோட் வாங்கப் பேசுவீர்கள். ஆனால் பெரிய நிலச்சுவான்தார்களின் கொடுமையை எதிர்த்து, முதலாளிகளின் ஆதிக்கத்தை எதிர்த்து, சட்டத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னிலையில் தொழிலாளர்கள் போராடுகிறார்கள் என்பதை நான் எங்களுக்கு கிடைத்திருக்கும் ஒரு சர்டிபிக்கேட்டாக எடுத்துக்கொள்கிறேன்.



21st March 1960] [Sri M. Kalyanasundaram]

பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நேரமில்லாத காரணத்தால் நான் பல விவரங்களை சொல்லப்போவதில்லை. ஒன்றிரண்டு முக்கியமான விவரங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் சட்டங்களைப் பொறுத்த வரை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும். இப்போதும் மட்ராஸ் ஸிட்டி போலீஸ் சட்டம் என்றும், டிஸ்ட்ரிக்ட் போலீஸ் சட்டம் என்றும் இருந்து கொண்டிருக்கிறது. இது ஏன் இதுவரையிலும் மாற்றாமல் வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை....

(மணியடிக்கப்பட்டது.)

இன்னும் ஐந்து நிமிடங்கள் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் அமைச்சர் அவர்களும் ஐந்து மணிக்கு மேல் கூடுதலாக ஐந்தோ பத்தோ நிமிடங்கள் இருந்து பதில் சொன்னாலும் பரவாய் இல்லை என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். நான் சொல்லுகின்ற முக்கியமான ஒன்றிரண்டு விஷயங்களை அமைச்சர் அவர்கள் கேட்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இப்போதும் கூட டிஸ்டிரிக்ட் போலீஸ் ஆக்ட் என்னும் ஸிட்டி போலீஸ் ஆக்ட் என்னும் தனித்தனியாக இருந்துகொண்டிருக்கிறது. ஒரே இலாகாவுக்கு ஒரே மாதிரியான சட்டம் இருப்பது தான் நல்லது. இந்தச் சட்டங்களில் இருக்கின்ற பிரிவுகளை எல்லாம் பார்க்கும்போது, இவைகள் எல்லாம் பெரிய ஜமீன்தார்களுக்கும், பெரிய நிலச்சுவான்தார்களுக்கும் உதவக் கூடிய முறையில் பல பிரிவுகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் ஜமீன்தார்கள் காலத்தில் அவர்களுக்கு பாதுகாப்புக்கு வேண்டி இயற்றப்பட்ட சட்டங்கள். எவ்வளவு போலீஸ் பாதுகாப்பு வேண்டுமென்றாலும் பணம் செலவு செய்தால் போதும், அவர்களுக்கு போதிய பாதுகாப்பு கிடைக்கும். இப்போது அவர்களுக்கு பணம் செலவு செய்யாமலே பாதுகாப்பு கிடைக்கிறதா இல்லையா என்பது வேறொரு விஷயம். செலவு செய்யாமல்கூட அவர்களுக்கு போதிய போலீஸ் பாதுகாப்பு கிடைத்து வருகிறது. அவர்கள் முன்பு பணம் கொடுத்தாவது உதவியைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் எந்தவிதமான அக்கிரமங்கள் செய்தாலும் சரி, காலணாகூட செலவு இல்லாமல் போலீஸ் உதவி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்போதுள்ள சட்டத்தை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, மெட்ராஸ் ஸிட்டி போலீஸ் ஆக்ட் என்று இருக்கிறது, இதற்கு என்ன அவசியம்? நோட்டிபிகேஷன் செய்து இதை நீடித்துக்கொண்டே இருக்கிறார்கள். ஏன் ஒரு புதுச் சட்டத்தை கொண்டுவருவதற்கு நேரமில்லையா இவர்களுக்கு, எவ்வளவோ சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றுகிறோமே, ஏன் இதற்கு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது. நிதி அமைச்சர் அவர்கள் இப்போது இங்கு இல்லை, அவர்கள் இருக்கும் போது சொல்லுகிறேன், அவர்கள் இப்போது புது இடமான சோஷலிசத்தை—நயா பைசா—சோஷலிஸத்தை கொண்டுவருவதற்காக டெல்லிக்குப் போய் வந்திருக்கிறார்கள். இதுதான் ஜனநாயக ஆட்சிக்கு இருக்க வேண்டுமா என்பதைப் பற்றியெல்லாம், நிதி அமைச்சர் ஆஜராகியிருக்கிற நாளன்று சொல்லுகிறேன். ஆகவே இந்த ஒரு விஷயத்தை மட்டும் அமைச்சர் அவர்கள் கவனித்து, இந்த சட்டத்தை திருத்தினால் போலீஸ் இலாகாவுக்கு நன்மை செய்ததாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதில், அதனால் இறந்தவர்கள் யாராய் இருந்தாலும் சரி, அவர்கள் எல்லோரும் இந்நாட்டு பிரஜைகள். அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் சரி, நஷ்டஈடு கொடுப்பதில் நியாயமாய் நடந்துகொள்ள வேண்டும். சமீபத்தில் துறைமுகத் தொழிலாளர்கள் ஆறு பேர்கள் இறந்தார்கள் துப்பாக்கி பிரயோகத்தால். அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவில்லை. நாங்களும் எவ்வளவோ கேட்டுப் பார்த்தோம். நடக்கவில்லை, நாவு வரண்டு போய் விட்டது. விட்டு விட்டோம். அதே போன்று தான் வால்பாறையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு பேர்கள் கொல்லப்பட்டார்கள். அப்போது அங்கு நடந்த துப்பாக்கிப் பிரயோகம் நியாயமா இல்லையா என்கிற பிரச்னை

பரிசீலனையில் இருக்கிறது. ஆனால் இதைப்பற்றி போலீஸ் ரிப்போர்ட்டில் கொடுக்கப்பட்டிருப்பதில் ஒரு பகுதியை மட்டும் நான் படித்துக்காட்டுகிறேன்......

"was so serious as to call for immediate arrest irrespective of the consequences . . . "

இதில் ஆப்ரகாம் லிங்கன் என்று குறிப்பிட்டிருக்கிற ஒரு தொழிலாளியின் பெயர்.—என் அமெரிக்காவிலுள்ள ஆப்ரஹாம் லிங்கன் இங்கு இருந்தாலும்கூட இந்த கதி தான் ஏற்படும் என்று நினைக்கிறேன். (ஆரவாரம்.) இதில் எவ்வளவு தெளிவாக சொல்லியிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். முதலாவதாக தொழிலாளியை அரஸ்டு பண்ணியது சரியல்ல என்பதையும் அது விவேகத்தோடு செய்யப்பட்ட காரியமல்ல என்பதையும் இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். துப்பாக்கிப் பிரயோகம் அக்கிரமாய் நடந்திருக்கிறது. . . . . . . . . .

(கனம் ஸ்ரீ எம். பக்வத்சலம் : பின்னால் சொல்லப்பட்டிருப்பதையும் படித்துப் பாருங்கள்) பின்னால் சொல்லப்பட்டிருப்பதையும் பார்த்தேன். அதில் துப்பாக்கிப்பிரயோகம் தான் செய்ய முடியும் என்று சொல்லி—அது ஜஸ்டிபைட் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் இதில் முன்னுக்குப்பின் முரணை இருக்கிறது. ஆனால் துவக்கத்தில் துப்பாக்கிப்பிரயோகம் ஏற்பட சூழ்நிலை, அதற்கேற்ற முறையில் விவேகத்தோடு நடந்து கொள்ளவில்லை என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். இதைத்தான் நான் முக்கியமாக கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் சுட்டது சரி என்று சொல்லுவதை முக்கியமாக கருதுகிறேன். (குறுக்கீடு) அதைப்பற்றி எப்படிக் கருதுவதாக இருந்தாலும் சரி இதில் செத்தது நான்கு தொழிலாளர்கள். ஆனால் அதில் முன்னாலிருந்து ஒரு தொழிலாளிக்கு அவர் ஐ. என். டி. யூ. ஸி. என்ற தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கபட்டது. அவர் கூடவே இறந்துபோன மற்ற தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படவில்லை இவ்விதம் ஒரு தொழிலாளிக்கு மட்டும் பாரபட்சம் காட்டி நஷ்டஈடு கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் இருந்துவிட்டு, இங்கு எதிர்க் கட்சிகளைப் பார்த்து நாம் எல்லோரும் ஒன்று, ஜனநாயகத்திற்கு முன்பு நாம் எல்லோரும் ஒன்று, ஆண்டவனின் முன்னால் சட்டத்தின் முன்னால் நாம் எல்லோரும் சமமாகக் கருதப்பட வேண்டும் என்று எல்லாம் சொல்வது யார் நம்புவதற்கு எனறு கேட்கிறேன். வெறும் ருத்ராட்சிர பூனையின் நிலைமைப் போன்றுதான் இதுவும் என்று எண்ணவேண்டியிருக்கிறது. இறந்தவர்களில் நான்கு பேர்களையும் ஒன்றாக நாம் கருத வேண்டும். துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு பேர்களும் ஒரே இடத்தில்தான் இருந்தனர். தாக்கப்படக்கூடிய இடத்தில் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து கொண்டுதான் நின்றனர், இதில் ஏன் பாரபட்சம் காண்பிக்கப்பட வேண்டும் என்றுதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்

(மணியடிக்கப்பட்டது.)

மணியடித்த பின்னும் ஒரு நிமிஷம் உண்டு என்று நம்புகிறே[illegible] ஆகவே போலீஸ் இலாகாவின் நன்மையைக் கருதியாவது, அவர்களுக்க்கு தொந்தரவு கொடுக்காத முறையில் ஆளும் கட்சியினர் நடந்து கொள்[illegible] வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய சம்பளப் பிரச்[illegible] மற்றும் பல பிரச்னைகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லா[illegible] பேசுவதற்கு நேரமில்லை. குறிப்பாக நான் அரசியல் வாதிகளைக் கேட்[illegible] கொள்வது, அதுவும் ஆளும்கட்சியில் இருப்பவர்களைக் கேட்டுக்கொள்வ[illegible] ஆளும் கட்சிக்கு இதில் பொறுப்பு அதிகமிருக்கிறது. ஏதாவது ஒரு கா[illegible] [illegible]தை தூண்டிவிட்டுக்கொண்டு பின்னால் அதற்கு சாதகமாய் இருக்[illegible] [illegible] என்று போலீஸ் இலாகாவை கேட்டுக்கொள்ளும் நடவடிக்கை[illegible] [illegible] அமைச்சர் அவர்கள் தக்க கவனம் செலுத்தவேண்டும் என[illegible] [illegible]—இந்த மான்யத்தை எதிர்ப்பதின் மூலம், இங்கு போலி[illegible] [illegible] அல்ல—ஆளும் கட்சியினருக்கு சாதகமாக நடக்கும் கா[illegible] [illegible]—இந்த வெட்டுப் பிரேரணையை நான் ஆதரி[illegible] [illegible]கொண்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி.





SRI C. N. ANNADURAI : Sir, with your permission I want a clarification from the Hon. Minister. In the administration Report, it is stated :—

'The Dravida Munnetra Kazhagam and the Communists organised their students' fronts and meetings were addressed by the party leaders at which they propagated the party ideals and principles.'

The Congress party also organised such meetings. Are any instructions issued to the police that they should be ignored or is the Police unaware of these meetings?

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு கட்சித் தலைவர்கள் எல்லோரும்கூட மாணவர்கள் விஷயத்தில்—அரசியலில் ஈடுபடுகிற விஷயத்தில்—ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன்படி நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் . . .

SRI M. KALYANASUNDARAM : அந்த மாதிரி செய்த ஒப்பந்தம் சரியாக நடைபெறவில்லை. அது முறிகின்ற தருணத்தில்தான் இருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது எனக்குத் தெரியும், கம்யூனிஸ்ட் கட்சி அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்பதும் எனக்குத் தெரியும். பொதுவாக மாணவர்களை அரசியலில் கலந்து கொள்ள செய்யக் கூடாது என்பதுதான் நோக்கம். அதற்கான அடிப்படையில்தான் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதற்கான முயற்சி எடுத்த மன்றத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த போலீஸ் ரிப்போர்ட்டில் தெரிவித்திருப்பது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைப்பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களைப் பற்றியும் அல்லது பொதுவாக எல்லா விவரங்களையும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் வேறு எதெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை நான் படித்துப்பார்த்தால்தான் சொல்ல முடியும். இதில் இலாகாவில் நடைபெறுகிற வேலைகளைப் பற்றித் தான் விவரங்களை எதிர்ப்பார்க்க முடியும். அவர்கள் சில இடங்களில் நடைபெறுகிற காரியங்களைப்பற்றி வருகிற ரிப்போர்ட்டுகளை வைத்துக்கொண்டு தான் இதை தயார் செய்கிறார்கள். சில அரசியல் கட்சிகள் லேபர்களிடத்திலும், மாணவர்களிடத்திலும் ஈடுபடுகின்றார்கள். அவற்றையெல்லாம் அவர்களுக்கு கிடைக்கிற ரிப்போர்ட்டுகளை வைத்துக்கொண்டு இதில் சேர்க்கிறார்கள். வேறுள்ள விவரங்களை எல்லாம் ஏன் விட்டு விட்டார்கள் என்பதற்கு நான் படித்துப் பார்த்த பிறகு தான் சொல்ல முடியும்.

SRI C. N. ANNADURAI : I want to know from the Hon. Minister whether they have issued any instructions to the Police to report only the activities of Opposition Parties?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதை நான் திட்டவட்டமாகச் சொல்லலாம். அந்த மாதிரி எந்த விதமான உத்திரவோ அல்லது மறைமுக வேண்டுகோளோ எதுவும் கிடையாது. போலீசார் அவர்களுக்குத் தோன்றியதை எடுத்து எழுதுவார்கள். சரியாக எழுத வேண்டும் முழுமையாகவும் எழுதவேண்டுமென்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறது. 4-30 p.m.

சபைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே நான்கு மானியங்கள் பற்றி விவாதம் நடந்தது. பொதுவாக இதிலே போலீஸைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள் கனம் அங்கத்தினர்கள், இந்த விவாதத்திலே கலந்து கொண்டு. இதிலே போலீஸ்தான் பெரிய மானியம்—6 கோடி [illegible] அளவுக்கானது. போலீஸ் இலாகா முக்கியமான இலாகா என்று

[Sri M. Bhaktavatsalam] [21st March 1960

கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். அதோடு போலீசாரின் சேவையைப் பாராட்டித்தான் பேசினார்கள். அது எனக்கு மிகவும் திருப்தியைத் தருவதாக இருக்கிறது. அரசாங்கத்தைக் குறை கூறிய போதிலும், இலாகா நல்ல முறையில் இயங்கி வருகிறது என்று பேசினார்கள். கடைசியாகக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரே போலீசுக்குச் செலவு செய்வது சரி, ஆனால் கொள்கை சரியல்ல என்று பேசினார்கள். நமக்கு போலீசார் சேவை வேண்டியிருக்கிறது. போலீசாருடைய வேலை கஷ்டமான வேலை. அதிலே அவர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன? பாதுகாப்பு வேலையில் ஈடுபட்டுருக்கிற காரணத்தினால் அதிலே எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி இப்போதுகூட ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அத்தகைய வேலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பாராட்டுகள் வேண்டுமென்று சொல்லவில்லை, அவர்களுக்கு சங்கங்களை விளைவிக்காமல் இருக்கவேண்டும். எந்தக் கட்சியாயிருந்தாலும் சங்கடங்கள் கூடாது. அது மாத்திரமல்ல. ஒரு இடத்தில் கொலை, கொள்ளை, திருட்டு நடந்து விட்டால், யாராயிருந்தாலும் ஒரு சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும், இதை விசாரிக்க வேண்டும், இதைச் சரியாகப் பரிசீலனை செய்யவில்லை என்று சொல்லக் கூடிய உரிமை உண்டு. அதுதான் ஒத்துழைப்பு என்று கூடச் சொல்வேன். யாராயிருந்தாலும் சொல்வேன். ஆனால் அவர்களோடு வேறு விதத்தில், அரசியலுக்காக தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ளப் பார்ப்பது நல்லதல்ல. அது நாட்டுக்கு நல்லதல்ல. அதனால் ஏதோ லாபம் வரும் என்று சிலர் நம்பலாம். ஆனால் நாங்கள் நம்பவில்லை. சுதந்திரப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு போலீஸ் விரோதமாக இருந்தது. அப்படி இருந்தும் நாங்கள் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றோம் என்றால் இப்போது போலீசாரின் உதவி காங்கிரஸ் கட்சிக்கு வேண்டியிருக்கிறதென்று யாராவது சொன்னால் அது சரியாகாது. யாராவது தவறுதலாகம்மாதிரி நினைத்து சுருக்கு வழி என்று பார்க்கலாம். ஆனால் நான் செல்லுகிறேன் காங்கிரஸ் கட்சிக்கு போலீசார் உதவி வேண்டியதில்லை. போலீசார் அவர்களுடைய கடமையைச் செய்ய வேண்டும். போலீசாரைப் பிடித்து தங்கள் காரியத்தைச் செய்து கொள்ளவேண்டும் என்பது காங்கிரஸ் கட்சிக்கு உதவியாக ஆகாது. காங்கிரஸ் கட்சி அம்மாதிரி ஈடுபடுவது சரியாகாது. தனிப்பட்டவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக்கூட சொல்லுகிறேன். இது காங்கிரஸ் கட்சிக்கு உகந்ததல்ல. அந்த மாதிரி செய்து கொண்டிருந்தால் அது நல்லதல்ல என்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன். போலீஸ் வேலை மிகவும் கஷ்டமானது என்று சொன்னார்கள். அவர்கள் வேலை கஷ்டமாக இருப்பதோடு அவர்களுக்கு சங்கடம் விளைவிக்காமல் இருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், வேறு எதிர்க் கட்சிகளாக இருந்தாலும், சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், இல்லையென்றாலும், அவர்கள் தங்களுடைய தாட்சண்யத்தைப் பயன்படுத்தி தாங்கள் நினைக்கின்றபடி போலீசார் செய்ய வேண்டும் என்று முயற்சி செய்வது தவறு என்று எல்லோருக்கும் சொல்லுகிறேன். எதிர் கட்சிகளுக்கு மட்டும் சொல்லவில்லை. எல்லோருக்கும் தான் சொல்லிக்கொள்கிறேன். இன்னொன்று இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்ஸ்பெக்டர்-ஜெனரல் மூலம் போலீஸ் அதிகாரிகளுக்கும் நகர போலீஸ் அதிகாரிகளுக்கும் இதெல்லாம் வற்புறுத்தப் பட்டு வருகிறது. மாதாந்திரமோ அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை என்று தான் நினைக்கிறேன். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை சர்க்குலர் அனுப்பப்படுகிறது. அதிலே என்னென்ன கவனிக்கவேண்டும் என்று சொல்லுகிறோமோ, எதிலே எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று சொல்லுகிறோமோ அதெல்லாம் சர்க்குலர்களில் போகிறது. சர்க்காரிடத்தில் இருக்கிற குறிப்புகளை எடுத்துச் சொல்லுகிறேன். இதெல்லாம் பத்திரிகையில் வராது. நாங்கள் கவனித்த குறைபாடுகளைச் சொல்லும் போது, அதை எக்ஸ்ட்ராக்ட் எடுத்து இன்ஸ்பெக்டர்-ஜெனரல் போலீஸ் அதி[illegible] நான் எப்படி அபிப்பிராயப்படுகிறேன், எது தவறு என்று [illegible] என்று அப்போதைக்கப்போது அனுப்புகிறார்கள். நான் [illegible] வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். எந்தக் கட்சியாக இருந்தாலும், சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும், அல்லது பதவியிலுள்ளவராக இருந்தாலும், அல்லது செல்வாக்கு உள்ளவராக இருந்தாலும், யார்



21st March 1960] [Sri M. Bhaktavatsalam]

சொன்னாலும், ஜில்லா அதிகாரியாக இருந்தாலும், எதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்றால் அது அவருடைய பொறுப்பு. ஒருவர் சொல்லுகிறார் என்றால், அதற்காக தவறுதலாகச் செய்யக் கூடாது. அப்படி ஏதாவது தவறுதலாகச் செய்தாலும், அது அவர்களுடைய பொறுப்பு. சட்டமன்ற உறுப்பினரே சொல்லுகிறாரே என்ன ஆகுமோ என்று அச்சம் ஏற்பட்டால், இம்மாதிரி சட்ட மன்ற உறுப்பினர் என்னை.............

**Sri M. KALYANASUNDARAM**: எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அத்தகைய அதிர்ஷ்டம் கிடைப்பதில்லை............

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: நான் அதை உணர்வேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் என்று சொன்னால், எதிர்க் கட்சி சட்ட மன்ற உறுப்பினரைப் பற்றியா இப்படிச் சொல்வேன். எதிர் கட்சி உறுப்பினர் தவறுதலாகச் செய்யச் சொன்னார் என்றால் செய்யாவிட்டால் என்ன ஆகுமோ என்று அச்சப்பட வேண்டியதில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏதாவது செய்யச் சொல்லி செய்யமால் போனால், அதைச் செய்யாமல் போனால் ஏதாவது தாட்சண்யம் ஏற்படலாம், இவர்களெல்லாம் காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்களாயிற்றே, செய்யாவிட்டால் ஏதாவது தீங்கு நேரிடுமோ என்று. அப்படி இருந்தாலும் போலீஸார் பயப்பட வேண்டியதில்லை. எது செய்தாலும் அந்த அதிகாரிகளுடைய பொறுப்பு. சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும், அல்லது அவர்களுக்கு மேலே இருப்பவர்கள் சொன்னாலும், அது அவர்களுடைய பொறுப்பு. சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும், யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், யாராவது சொல்லி அதைப் போலீஸ் அதிகாரி தவறு என்று நினைப்பாரானால், அதைப் பற்றி ஒரு ரிப்போர்ட் ஐ.ஜி.-க்கு அனுப்ப வேண்டும். ஏனென்றால் நாங்கள் சொன்னோம் செய்யவில்லை என்று இங்கே கேள்விகள் வருகின்றன. தவறு என்றால் சட்ட மன்ற உறுப்பினர் சொல்கிறாரே என்பதற்காகச் செய்யக் கூடாது. அவர்கள் சொல்வதை மரியாதையாகக் கேட்டுவிட்டு, அவர்கள் சொல்வது தவறு, செய்ய முடியாது என்றால் உடனே ஒரு ரிப்போர்ட்டை ஐ.ஜி.-க்கு அனுப்பவேண்டும். ஐ.ஜி. மூலமாக அரசாங்கத்திற்கு வரும். இதைப்பற்றி போலீசாருக்கு ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல பன்முறை வற்புறுத்தியிருக்கிறேன். ஐ.ஜி.-யும் இதே முறையில் கவனம் செலுத்தி வருகிறார்.

அடுத்தபடியாக ஒன்று இந்த சமயத்தில் சொல்ல விரும்புகிறேன். இப்போது பேசிய அங்கத்தினர்களெல்லாம் பொதுவாக போலீஸாரின் சேவையைப் பாராட்டினார்கள். சிலர் குறை கூறினார்கள்—அதுவும் அரசாங்கத்தைப் பற்றித்தான் குறை கூறினார்கள். அவர்கள் ஏதோ நல்லது செய்கிறார்கள். விரோதித்துக் கொள்ளவேண்டாம் என்று நினைக்கிறார்கள் போலிருக்கிறது. அவர்களிடம் பயம் என்று சொல்லவில்லை. அவர்களிடம் பயம் இருக்கத்தான் வேண்டும். இல்லையென்றால் 6 கோடி ரூபாய் அளவுக்கு செலவு செய்தும் பிரயோசனம் இல்லை. ஆனால் ஒன்று நான் ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன். இந்த போலீஸாருடைய புனிதத் தன்மையை பாதுகாக்க வேண்டும் எல்லாக் கட்சி அங்கத்தினர்களும். எங்கள் அனுபவத்தைச் சொன்னேன், அதே உணர்ச்சி, அதே நம்பிக்கை மற்ற கட்சிகளுக்கெல்லாம் வரவேண்டும். போலீசார் குற்றத்தைக் கண்டு பிடிப்பதில் அவர்களுடைய கையை பலப்படுத்த வேண்டும். போலீஸாருக்குப் பரிந்து பேசுவதாகச் சிலர் பேசினார்கள். போலீஸாருக்கு குறைந்த சம்பளம் இருக்கிறது. மேலதிகாரிகளுக்கு நிறைய இருக்கிறது. கீழேயுள்ளவர்கள் சம்பளம் போதாத காரணத்தினால்தான் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று இப்படி லஞ்சம் வாங்குவதற்கு ஆதாவு காட்டுகிற மாதிரி—சமாதானம் மாதரி—பேசுவது சரியல்ல என்று நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். போலீஸாரை அரசியலுக்காக எக்ஸ்பிளாயிட் செய்வது கூடாது. அதற்கெல்லாம் பயன்படுத்துவது கூடாது. அது நிர்வாகத்திற்கு நல்லதல்ல. ஒரு கட்சிக்குக்கூட நல்லதல்ல. எனது சிறிய அனுபவத்தைக்கொண்டு சொல்லுகிறேன், மற்ற கட்சிகளுக்குக்கூட நல்லதல்ல. அவர்களுக்கு சம்பளம் அதிகமாகக் கொடுக்க வேண்டும்,

மற்ற வசதிகள் கொடுக்க வேண்டும், வீடுகட்டிக் கொடுங்கள், மின்சார வசதி செய்து கொடுங்கள் என்று கேட்கலாம். இப்போது கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். சிற்சில குறைபாடுகளைப்பற்றிச் சொன்னார்கள். தவறுதல்களைப் பற்றிச் சொன்னார்கள். முதலில் பேசிய கனம் அங்கத்தினர் அன்பழகன் சிற்சில சம்பவங்களைப் பற்றிச் சொன்னார்கள். இதையெல்லாம் விசாரித்துப் பார்த்தேன். அதெல்லாம் விசாரணையில் இருக்கிறது.

ஒன்றும் கண்ணை மூடிக்கொண்டு அவர்கள் வேலை செய்யவில்லை. எந்த சம்பவங்கள் வந்தாலும் அதைப்பற்றி விசாரணை செய்யப்பட்டுத்தான் வருகிறது. சட்டப்படி என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. கனம் அன்பழகன் சொன்னார் என்பதற்காக மட்டும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாது. அவர் சொன்னவைகள் எல்லாம் கவனத்தில்தான் இருக்கிறது. அவர் சொன்ன ஒவ்வொரு விஷயமும் விசாரிக்கப்பட்டுத் தான் வருகிறது.

**Sri K. ANBAZHAGAN : On a point of information, Sir,** நான் சொன்னது எல்லாம் செய்யார் கிராமத்தில் சில அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன. அவைகளைப்பற்றிப் போலீசாரிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** அதுகூட விசாரணையில் இருக்கிறது. என்ன கேஸ் என்பதைப்பற்றி விசாரணை செய்து அந்தக் கேசுக்குப் பிறகு சப்-இன்ஸ்பெக்டர் மீது விசாரணை நடத்தப்பட்டும் வருகிறது. சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

சாதாரணமாக இந்த நாட்டில் சமூக விரோதிகள் இருக்கிறார்கள். அவர்களால் போலீஸ்காரர்களுக்கும் கஷ்டங்கள் ஏற்படுகிறது, பொது மக்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது. போலீஸ்காரர்களை பலஹீனப்படுத்த வேண்டும் என்று சிலர் நினைத்தார்கள். அதனால் அவர்கள்மீது தவறுகள் கண்டு பிடிக்கிறார்கள். எந்த விதத்திலாவது போலீஸ்காரர்களுக்கு பலஹீனம் விளைவிக்க வேண்டும் என்று அவர்கள் முற்படுகிறார்கள். இவ்வாறு பல காரியங்கள் நடைபெறுவது கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும், அதையும் அவர்கள் கவனித்திருப்பார்கள். இது பற்றிக் கொஞ்ச காலமாக பேபர்களைப் பார்த்தால் நன்றாகத் தெரியவரும். போலீஸ் ஸ்டான்டிங் ஆர்டர்கள் இருக்கின்றன. அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. இன்னும் ஆர்.டி.ஓ. இருக்கிறார், மாஜிஸ்ட்ரேட் இருக்கிறார், கோர்ட்டு இருக்கிறது. இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. அதன்மேல் கோர்ட்டில் விடுதலை செய்து விட்டால் அதன் மேல் அப்பீலும் செய்யப்படுகிறது. இந்த மாதிரி விசாரணை செய்யப்படும்போது அதை எவ்வளவு சீக்கிரமாக முடிக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக முடிப்பதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.





எதிர்க் கட்சியாக இருந்தாலும் குறிப்பாக நடவடிக்கை எடுக்கும்போது போலீஸ்காரர்களிடத்தில் அரசாங்கத்தினிடமும் அதிருப்தி இருந்தாலும் வெறுப்பு இருந்தாலும்கூட அதையெல்லாம் வைத்துக்கொண்டு மறைமுகமாக மேற்படி காரியங்களுக்கு ஆதரவு அளிப்பது குற்றமாகும். அது கட்சிக்கும் நல்லது அல்ல. நாட்டிற்கும் நல்லதல்ல.

**Sri K. ANBAZHAGAN : On a point of information Sir,** மறைமுகமாக ஆதரவு அளிக்கப்படுகிறது என்று சொல்லும் அளவில் ஆதரவு கொடுக்கிறார்கள் என்ற அர்த்தத்தில் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார். அது சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** காங்கிரஸ் கட்சிக்காரர்களை குடிக்கிறார்கள் என்று சொன்னபோதும் நான் அதை ஆட்சேபிக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில் இப்படியெல்லாம் பரிந்து பேசுவது என்றால் அதற்கு அர்த்தமே இல்லை.

மரியாதையைப்பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதை முற்றிலும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்களிடத்திலும் தவறுகள் ஏற்படலாம். மரியாதை செலுத்தும்போது அவர்கள் தவறுகள் செய்கிறார்கள். அவைகள் பழக்க வழக்கத்தினால் ஏற்பட்டது. சில சமயங்களில் சாவகாச தோஷத்தினாலும் அவைகள் ஏற்படுகின்றன. அதையெல்லாம் தவிர்க்க வேண்டியதுதான்.

படிப்பைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். படிப்பு இருந்தால் நல்லதுதான். படிப்பு இருந்தால் நல்ல பண்பாடு இருக்கும். அதனால்தான் சப்-இன்ஸ்பெடர்களை எடுக்கும்போது டைரெக்ட் ரிக்ரூட்மெண்ட் இருக்க வேண்டும் என்று இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து சம்பளத்தைப்பற்றிச் சொன்னார்கள். அப்படியே அவர்களுக்கு உள்ள குறைபாடுகள் பற்றியும் சொன்னார்கள். போலீஸ்காரர்களுக்கு சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அப்படிப்பட்ட அனுதாபம் அரசாங்கத்திற்கே இருக்கிறது. அதைப்பற்றி பே கமிஷன் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் அவர்கள் தங்களுடைய கடமை உணர்ச்சியுடன் தெரிவித்திருக்கிறார்கள். இதன் மூலம் அவர்களுடன் ஒரு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். அதுவெல்லாம் தெரியாதது அல்ல. போலீஸ்காரர்களுக்கு தனிப்பட்ட முறையில் அரசியல் பற்று இருக்கலாம். ஆனால் அதை தனிப்பட்ட முறையில் வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர—அதைப் பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை—தங்களுடைய கடமையைச் செய்யும்போது அப்படிப்பட்ட எண்ணம் இருக்கவே கூடாது. மனிதன் என்று இருந்தால் அவனுக்கு அரசியல் கொள்கை இருக்கத்தான் இருக்கும். ஆனால் கடமையைச் செய்யும்போது அதை கொண்டுவந்து புகுத்தக்கூடாது. ஜனநாயகத்தைப்பற்றி கனம் சசிரவர்ண தேவர் குறிப்பிட்டார். கட்சியில் அவர்களுக்கு அனுதாபம் இருக்கலாம். அதைத் தங்களுடைய உத்யோக முறையில் கொஞ்சம்கூட காட்டக்கூடாது. அப்படி இருந்தால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதை அனுமதிக்கவும் முடியாது. ஆகவே எதிர்க் கட்சிக்காரர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். காங்கிரஸ் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி அவர்கள் போலீஸ்காரர்களிடம் கட்சிக் கொள்கையைப் புகுத்தக்கூடாது, புகுத்தவும் வேண்டாம் அது யாருக்கும் நல்லது அல்ல என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இப்படி நான் சொல்லும்போது ஏதோ பயந்து கொண்டு சொல்லுகிறேன் என்று நினைக்க வேண்டாம். போலீசாருக்குள்ள கடமை, பொறுப்பு, நீதி, அந்தஸ்து இவைகள் எல்லாம் இருக்க வேண்டும் அப்படி இல்லாவிட்டால் அவர்கள் வேலையில் இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட தகுதி இல்லாதவர்களுக்கு போலீசில் இடம் கிடையாது. லஞ்சத்தைப் பற்றி கனம் அன்பழகன் சொன்னார். ஏதோ சிறிய உத்யோகஸ்தர்களாக இருந்தால் அவர்களை லஞ்சக் குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்படுகிறது என்றும் பெரிய உத்தியோகஸ்தர்களாக இருந்தால் அவர்களை

[Sri M. Bhaktavatsalam] [21st March 1960

விட்டுவிடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். லஞ்சம் வாங்குகிறார் என்று தெரிந்தால் அது யாராக இருந்தாலும் சரி அவர்களுக்கு தண்டனைதான் விதிக்கப்படுகிறது. சாதாரண போலீஸ் உத்தியோகஸ்தர் முதற்கொண்டு டி.எஸ்.பி. வரையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. I.P.S. யாக இருந்தால் அவர்கள் மத்திய அரசாகத்தைச் சேர்ந்தவராக இருப்பதால் மத்திய அரசாங்கத்திற்கு எழுதிக்கூட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. கோர்ட்டுக்கு அனுப்பிக்க வேண்டியதாக இருந்தாலும் அந்த கேஸ்களை கோர்ட்டுகளுக்கு அனுப்பப்படுகிறது. சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, விதிகளின்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகள் எல்லாம் எடுக்கப்பட்டுத்தான் வருகிறது. தகவல் வந்தவுடன் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. விசாரணை செய்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும் சொல்லப்படுகிறது. எவ்வளவு தூரம் சட்டப்படியோ அல்லது விதிகளின்படியோ நடவடிக்கை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டுதான் வருகிறது. ஆனால் இவைகளையெல்லாம் அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்கவே கூடாது. சாதாரணமாக புகார் வந்தால், "ஆன் தி மெரிட்ஸ்" என்ன செய்ய வேண்டுமோ, அவைகள் எல்லாம் செய்யப்பட்டு தான் வருகிறது. போலீஸ்காரர்கள் தப்பு செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. தகவல் வந்தவுடன் ஐ.ஜி.யிடம் அதைப்பற்றி தெரிவித்து விசாரணை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுதான் வருகிறது. நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் பிடிக்கவில்லை என்றால் போலிஸ்காரர்கள் மீது ஆத்திரம் தான் வருகிறது. எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. நில சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுவது இல்லை என்று சொல்லப்படுகிறது. மற்றும் காங்கிரஸ்காரர்களின் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளபடவில்லை என்றும் சொல்லப்படுகிறது: இதைப் பற்றி எவ்வளவோ புகார்கள் என்னிடம் வந்து கொண்டிருக்கின்றன. நிலச் சொந்தக் காரர்கள் மீதும் காங்கிரஸ்காரர்கள் மீதும் கூட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு தான் வருகிறது. வரக் கூடிய புகார்களைப் பார்த்தால் புகார் வராத நாட்களே கிடையாது என்று கூட சொல்லலாம். இரண்டு பக்கங்களிலிருந்தும் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றின் மீதும் வேண்டிய நடவடிக்கைகள் சட்டத்தையும் விதியையும் அனுசரித்து எடுத்துக்கொள்ளப்பட்டுதான் வருகிறது. போலீஸ்காரர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் சட்டப்படி அவர்கள் மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமோ அப்படி எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. அவர்கள் தங்களுடைய கடமையை சரிவர செய்யவில்லையென்றாலும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸ் இருக்கிறது. அவர்களுக்கு எதிர்கட்சிகளுடன் கொஞ்சம் தொடர்பு இருப்பதாக தெரிய வருகிறது. இதேப் பற்றிய ஆதாரம் இல்லை என்றாலும் இருக்கக்கூடிய நிலைமையைக் கண்டு தெரிந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

**Sri C. N. ANNADURAI** : போலீஸ்காரர்களுடன் தொடர்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லுவதால் அவர்களுடன் தொடர்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது என்று கனம் அமைச்சர் செல்லுகிறார். அவர்கள் ஏதாவது சங்கம் வைத்திருக்கிறார்களா ? அவர்கள் மாநாடு நடத்துகிறார்களா ? அவர்கள் எங்கள் கழகத்தின் விதி முறைகளைப் பற்றி அறிந்து அதில் ஈடுபடுகிறார்களா ? எதைக் கொண்டு தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



21st March 1960]

**Sri K. ANBAZHAGAN** : On a point of information, Sir, கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நான் இன்று காலையில். . .

**DEPUTY SPEAKER** : I hope the hon. Member will resume his seat.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினர் அன்பழகன் இன்று காலையில் பேசியபோது ஒரு கட்டுப்பாட்டைப் பற்றித் தெரிவித்தார்கள். அவருடைய கட்சியில் மற்றொரு சகாவினால் எழுதப்பட்ட நாடகத்தைப் பற்றி அதை ஏன் தடை செய்யப்போகிறார்கள். அதில் ஏதோ போலீஸ் பற்றி இருக்கிறது. இருந்தால்தான் என்ன ? 'அதைத் தடை செய்துவிட்டால் மேடை எங்கே போயிற்று? ' என்பதாக எல்லாம் பேசினார்கள்.

நாடகம் என்றால் ஒன்று. மேடையில் பேசலாம். அரசியல் விஷயத்தைப் பற்றி பேசுகின்றார்கள். போலீசைப்பற்றி பேசுகின்றார்கள். மந்திரிகளைப்பற்றிப் பேசுகின்றார்கள். அது ஒன்று. ஆனால் நாடகம் என்று பெயரை வைத்துக் கொண்டு கலையை துஷ்பிரயோகம் செய்வது என்றால் அது சரியாகாது. நான் அன்பழகன் கூறிய விஷயத்தைப் பற்றி சொல்லவில்லை. அது பரிசீலனையில் இருக்கிறது. பொதுவாக கலையின் பெயரை வைத்துக் கொண்டு நாடகம் என்ற பெயரால் துஷ்பிரயோகம் செய்ய முயன்றால் அது நடக்காது. நாடகம் என்றால் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நாமே இந்த மன்றத்தில் ஒரு சட்டம் இயற்றி இருக்கிறோம். டிரமாடிக் பர்பாமன்ஸ் ஆக்ட் என்கிற சட்டம் இந்த மன்றத்திலேயே நிறைவேற்றப்பட்டு அமுலில் இருக்கிறது. ஆகவே அந்தச் சட்டப்படி எந்த நாடகங்கள் தயாரிக்கப்படுகிறதோ அவை தடுக்கப்படமாட்டாது. சட்டத்திற்கு மாறாக இருந்தால் தடை செய்தால் செய்வார்கள். ஆகவே அவர் போலீசாரைப் பற்றி இருக்கிறது, அதற்காகத் தடை செய்தார்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. ஒழுங்கான முறையில் அதில் அவர்களைப் பற்றியும் இருக்கலாம். அப்பொழுது ஆட்சேபம் ஒன்றும் இராது. கனம் அங்கத்தினர் ஒரு பெரிய பேச்சு பேசினார்கள்.

திருக்கழுக்குன்றத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் யாரோ எதிர்த்தார்கள் என்று சொன்னார்கள். எனக்கும் தகவல் வந்தது. அந்தக் கூட்டத்தில் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்து நண்பர்கள் மிகத் தவறான முறையில் மக்களுக்கு ஆத்திரம் உண்டாகக் கூடிய வகையில் பேசியிருக்கிறார்கள். எங்களைப் பற்றிப் பேசட்டும். மந்திரிகளைப் பற்றிப் பேசட்டும். வீட்டு பெண்மணிகளைப் பற்றியும் பேசினார்களாம். எனக்கு வந்த தகவல், கூட்டத்தில் இருந்தவர்களே, அதை கேட்கப் பொறுக்காமல், " என்ன இப்படிப் பேசுகிறார்களே " என்று கேட்டதற்கு பேசினால் பேசட்டும், பொறுமையாக ஆத்திரம் அடையாமல் இருங்கள் என்று அங்குள்ள பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். யார் அத்துமீறி நடப்பினும் எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கையை போலீசார் எடுத்துக் கொள்வார்கள். அபபடி செயல் தவறியதாக போலீசார்மீது புகார் வந்தால் அது கவனிக்கப்படும். இன்னும் டாக்ஸி டிரைவர்களுக்கும் போலீஸார்களுக்கும் ஏற்பட்ட தகராறுபற்றி குறிப்பிடப்பட்டது. காலேஜ் மாணவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே நடந்த சம்பவம் பற்றியும் சொன்னார்கள். போலீசார்மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அது விசாரணையில் இருக்கிறது. மாணவர்கள் என்ன செய்தார்கள் என்பது அப்புறம்தான் தெரியும். இருந்தாலும் கமிஷனர் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும்.

டாக்ஸி டிரைவர்கள் என்றால் அவர்களும் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும். (ஸ்ரீ சின்னதுரை.—ஒரு மகாநாடு கூட்டலாம்.) மகா நாட்டினால் ஒன்றும் நடக்காது. நீங்கள் இப்படிச் சொல்வதுதான் இன்னும் தகராறை உண்டாக்கும். டாக்ஸியில் போகின்ற பொதுமக்களை நாம் கவனிக்க வேண்டும். அவர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்து இவர்களும் கொஞ்சம் ஒழுங்காக நடக்க வேண்டும்.

விட்டுவிடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார். லஞ்சம் வாங்குகிறார் என்று தெரிந்தால் அது யாராக இருந்தாலும் சரி அவர்களுக்கு தண்டனைதான் விதிக்கப்படுகிறது. சாதாரண போலீஸ் உத்தியோகஸ்தர் முதற்கொண்டு டி.எஸ்.பி. வரையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. I.P.S. யாக இருந்தால் அவர்கள் மத்திய அரசாகத்தைச் சேர்ந்தவராக இருப்பதால் மத்திய அரசாங்கத்திற்கு எழுதிக்கூட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. கோர்ட்டுக்கு அனுப்பிக்க வேண்டியதாக இருந்தாலும் அந்த கேஸ்களை கோர்ட்டுகளுக்கு அனுப்பப்படுகிறது. சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, விதிகளின்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகள் எல்லாம் எடுக்கப்பட்டுத்தான் வருகிறது. தகவல் வந்தவுடன் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. விசாரணை செய்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும் சொல்லப்படுகிறது. எவ்வளவு தூரம் சட்டப்படியோ அல்லது விதிகளின்படியோ நடவடிக்கை எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டுதான் வருகிறது. ஆனால் இவைகளையெல்லாம் அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்கவே கூடாது. சாதாரணமாக புகார் வந்தால், "ஆன் தி மெரிட்ஸ்" என்ன செய்ய வேண்டுமோ, அவைகள் எல்லாம் செய்யப்பட்டு தான் வருகிறது. போலீஸ்காரர்கள் தப்பு செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. தகவல் வந்தவுடன் ஐ.ஜி.யிடம் அதைப்பற்றி தெரிவித்து விசாரணை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுதான் வருகிறது. நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் பிடிக்கவில்லை என்றால் போலிஸ்காரர்கள் மீது ஆத்திரம் தான் வருகிறது. எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. நில சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுவது இல்லை என்று சொல்லப்படுகிறது. மற்றும் காங்கிரஸ்காரர்களின் மீதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளபடவில்லை என்றும் சொல்லப்படுகிறது: இதைப் பற்றி எவ்வளவோ புகார்கள் என்னிடம் வந்து கொண்டிருக்கின்றன. நிலச் சொந்தக் காரர்கள் மீதும் காங்கிரஸ்காரர்கள் மீதும் கூட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு தான் வருகிறது. வரக் கூடிய புகார்களைப் பார்த்தால் புகார் வராத நாட்களே கிடையாது என்று கூட சொல்லலாம். இரண்டு பக்கங்களிலிருந்தும் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றின் மீதும் வேண்டிய நடவடிக்கைகள் சட்டத்தையும் விதியையும் அனுசரித்து எடுத்துக்கொள்ளப்பட்டுதான் வருகிறது. போலீஸ்காரர்கள் தவறு செய்கிறார்கள் என்றால் சட்டப்படி அவர்கள் மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமோ அப்படி எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது. அவர்கள் தங்களுடைய கடமையை சரிவர செய்யவில்லையென்றாலும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஸ்பெஷல் ஆர்ம்ட் போலீஸ் இருக்கிறது. அவர்களுக்கு எதிர்கட்சிகளுடன் கொஞ்சம் தொடர்பு இருப்பதாக தெரிய வருகிறது. இதைப் பற்றிய ஆதாரம் இல்லை என்றாலும் இருக்கக்கூடிய நிலைமையைக் கண்டு தெரிந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

**Sri C. N. ANNADURAI** : போலீஸ்காரர்களுடன் தொடர்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லவதால் அவர்களுடன் தொடர்ப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது என்று கனம் அமைச்சர் செல்லுகிறார். அவர்கள் ஏதாவது சங்கம் வைத்திருக்கிறார்களா ? அவர்கள் மாநாடு நடத்துகிறார்களா ? அவர்கள் எங்கள் கழகத்தின் விதி முறைகளைப் பற்றி அறிந்து அதில் ஈடுபடுகிறார்களா ? எதைக் கொண்டு தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : பொதுவாக எஸ். ஏ. பி. களுக்கு உள்ள குறைகளைப் பற்றிச் சொல்வதை நான் வரவேற்கிறேன். அவர்கள் மீது அக்கறை எடுத்துக் கொள்வதை வரவேற்கிறேன். ஆனால் சட்டத்தை மீறி அந்த நபர்களோடு முறைக்கு மாறாக அங்கே உள்ளவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்வது தவறு என்று நான் சொல்கிறேன்.





**Sri K. ANBAZHAGAN** : On a point of information, Sir, கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நான் இன்று காலையில். . .

**DEPUTY SPEAKER** : I hope the hon. Member will resume his seat.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினர் அன்பழகன் இன்று காலையில் பேசியபோது ஒரு கட்டுப்பாட்டைப் பற்றித் தெரிவித்தார்கள். அவருடைய கட்சியில் மற்றொரு சகாவினால் எழுதப்பட்ட நாடகத்தைப் பற்றி அதை ஏன் தடை செய்யப்போகிறார்கள். அதில் ஏதோ போலீஸ் பற்றி இருக்கிறது. இருந்தால்தான் என்ன ? 'அதைத் தடை செய்துவிட்டால் மேடை எங்கே போயிற்று? ' என்பதாக எல்லாம் பேசினார்கள்.

நாடகம் என்றால் ஒன்று. மேடையில் பேசலாம். அரசியல் விஷயத்தைப் பற்றி பேசுகின்றார்கள். போலீசைப்பற்றி பேசுகின்றார்கள். மந்திரிகளைப்பற்றிப் பேசுகின்றார்கள். அது ஒன்று. ஆனால் நாடகம் என்று பெயரை வைத்துக் கொண்டு கலையை துஷ்பிரயோகம் செய்வது என்றால் அது சரியாகாது. நான் அன்பழகன் கூறிய விஷயத்தைப் பற்றி சொல்லவில்லை. அது பரிசீலனையில் இருக்கிறது. பொதுவாக கலையின் பெயரை வைத்துக் கொண்டு நாடகம் என்ற பெயரால் துஷ்பிரயோகம் செய்ய முயன்றால் அது நடக்காது. நாடகம் என்றால் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நாமே இந்த மன்றத்தில் ஒரு சட்டம் இயற்றி இருக்கிறோம். டிரமாடிக் பர்பாமன்ஸ் ஆக்ட் என்கிற சட்டம் இந்த மன்றத்திலேயே நிறைவேற்றப்பட்டு அமுலில் இருக்கிறது. ஆகவே அந்தச் சட்டப்படி எந்த நாடகங்கள் தயாரிக்கப்படுகிறதோ அவை தடுக்கப்படமாட்டாது. சட்டத்திற்கு மாறாக இருந்தால் தடை செய்தால் செய்வார்கள். ஆகவே அவர் போலீசாரைப் பற்றி இருக்கிறது, அதற்காகத் தடை செய்தார்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. ஒழுங்கான முறையில் அதில் அவர்களைப் பற்றியும் இருக்கலாம். அப்பொழுது ஆட்சேபம் ஒன்றும் இராது. கனம் அங்கத்தினர் ஒரு பெரிய பேச்சு பேசினார்கள்.

திருக்கழுக்குன்றத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் யாரோ எதிர்த்தார்கள் என்று சொன்னார்கள். எனக்கும் தகவல் வந்தது. அந்தக் கூட்டத்தில் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்து நண்பர்கள் மிகத் தவறான முறையில் மக்களுக்கு ஆத்திரம் உண்டாகக் கூடிய வகையில் பேசியிருக்கிறார்கள். - எங்களைப் பற்றிப் பேசட்டும். மந்திரிகளைப் பற்றிப் பேசட்டும். வீட்டு பெண்மணிகளைப் பற்றியும் பேசினார்களாம். எனக்கு வந்த தகவல், கூட்டத்தில் இருந்தவர்களே, அதை கேட்கப் பொறுக்காமல், " என்ன இப்படிப் பேசுகிறார்களே " என்று கேட்டதற்கு பேசினால் பேசட்டும், பொறுமையாக ஆத்திரம் அடையாமல் இருங்கள் என்று அங்குள்ள பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். யார் அத்துமீறி நடப்பினும் எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கையை போலீசார் எடுத்துக் கொள்வார்கள். அப்படி செயல் தவறியதாக போலீசார்மீது புகார் வந்தால் அது கவனிக்கப்படும். இன்னும் டாக்ஸி டிரைவர்களுக்கும் போலீஸார்களுக்கும் ஏற்பட்ட தகராறுபற்றி குறிப்பிடப்பட்டது. காலேஜ் மாணவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே நடந்த சம்பவம் பற்றியும் சொன்னார்கள். போலீசார்மேல் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அது விசாரணையில் இருக்கிறது. மாணவர்கள் என்ன செய்தார்கள் என்பது அப்புறம்தான் தெரியும். இருந்தாலும் கமிஷனர் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும்.

டாக்ஸி டிரைவர்கள் என்றால் அவர்களும் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும். (ஸ்ரீ சின்னதுரை.—ஒரு மகாநாடு கூட்டலாம்.) மகா நாட்டினால் ஒன்றும் நடக்காது. நீங்கள் இப்படிச் சொல்வதுதான் இன்னும் தகராறை உண்டாக்கும். டாக்ஸியில் போகின்ற பொதுமக்களை நாம் கவனிக்க வேண்டும். அவர்களுடைய சௌகரியத்தை உத்தேசித்து இவர்களும் கொஞ்சம் ஒழுங்காக நடக்க வேண்டும்.

[21st March 1960

**SRI M. KALYANASUNDARAM :** டாக்சி டிரைவர் சங்கத்தின் தலைவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான். அவரை அழைத்து மந்திரிகள் சொல்லக்கூடாதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** நான் இப்போது சொல்கிறேன். அந்த டாக்சி டிரைவர் சங்கத்தின் தலைவர் காங்கிரஸ்காரர்தான். அவரை அழைத்து நமது முதல் அமைச்சர் அவர்கள் ரொம்ப பலமாக கண்டித்தார்கள். ஆகவே தவறு என்றால் அதைத் தவறு என்று சொல்லத் தயங்குவதில்லை.

கிராமங்களுக்கு எல்லாம் போலீஸ் அதிகமாக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் போலீஸ் ஸ்டேஷன் வைப்பது என்றால் அது முடியாத காரியம். எந்த அளவுக்கு ஒவ்வொரு கிராமத்திற்கும் பாதுகாப்பு தேவையோ அது அளிக்கப்படுகிறது. அதில் கவனம் செலுத்தி வருகிறோம்.

கனம் அங்கத்தினர் சசிவர்ணதேவர் பொதுவாகச் சொன்னார்கள். பொதுவாக அவருக்கு போலீஸ் மேலே அவருக்கு வெறுப்பு, அனுபவம் இருக்கிறது. போலீஸ்காரர்களுடைய சேவையைப் பாராட்டுவார் ஆனால் வேறு சில சந்தர்ப்பங்கள் அவரை அப்படிச் செய்யவிடாது. "நாம் நூறு வருஷக் கொண்டாட்டம் எதற்காகக் கொண்டாடுவது ? 47-ஆகஸ்டுக்குப் பிறகுதானே நல்ல அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார். வெள்ளைக்கார காலத்தில் போலீஸ் ஏற்படுத்தப்பட்டது என்றால் அப்போது அது வேறு முறையில் இருந்திருக்கிறது. அதையும் சேர்த்து நூற்றாண்டு விழாக் கொண்டாடுவானேன்" என்றார். அவர்கள் ஆட்சியில்கூட நல்ல பண்பாடு இருந்திருந்தால் அதை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**SRI T. L. SASIVARNA THEVAR :** கனம் அமைச்சர் அவர்கள் வெள்ளைக்காரர்கள் காலத்தில் நல்ல பண்பாடு இருந்திருந்தால் அதை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்றார்கள். வெள்ளைக்காரர்கள் என்றால் அவர்கள் காலத்திற்கு முன்பாக ஆர்க்காடு நவாப் ஆட்சி இருந்திருக்கிறது. அசோகன் காலத்திலிருந்து தேச பாதுகாப்பு நடந்து வந்திருக்கிறது. அப்படியானால் ஆயிரம் வருடக் கொண்டாட்டம் கொண்டாடியிருக்கலாமே.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் அங்கத்தினர் அதிகாரத்திற்கு வருகிறபோது ஆயிரம் ஆண்டும் கொண்டாடலாம்.

ஒரு அங்கத்தினர் பயர் சர்வீசைப் பற்றியும் சொன்னார்கள். கள்ளக்குறிச்சி, திண்டிவனம் முதலிய இடங்களிலும் வைக்க வேண்டியதுதான். நகரங்களில் நாம் வைத்துக் கொண்டிருப்பதையும் பாராட்ட வேண்டும். கிராமங்களில் வைப்பது கிடையாது. நகரங்களுக்கே வசதி செய்து கொடுக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது. இங்கேதான் தொழிற்சாலைகள் அதிகம் இருக்கின்றன. அதிகமாக விபத்துகள் நடக்கின்றன. தீ விபத்து ஏற்பட்டுவிட்டால் அதிகச் சேதம் ஏற்படுகிறது. ஆகவே இங்கே பயர் சர்வீஸ் யூனிட்டுகள் ஏற்படுத்தப்படுவது மிகவும் அவசியம். ஆனால் கனம் அங்கத்தினர் ராமசாமி நாயுடு சொன்னது போல கிராமங்களிலும் தீ விபத்து என்றால் இந்த பயர் சர்வீஸ் யூனிட்டுகள் விரைந்து ஓடுகின்றன. எல்லாவற்றுக்கும் வைக்கவேண்டும் என்றால் பணம் வேண்டும். தீ விபத்து என்றால் கொடியதுதான். அதைத் தடுக்க எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறோம்.

கிராமங்களில்கூட பயர் சர்வீஸ் இல்லாத இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் அதை அணைப்பது எப்படி என்று பயிற்சி கொடுக்கப்படுகிறது. இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதனுடைய யோசனைகளையும் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம் என்று நான் சொல்லியிருக்கிறேன்.



21st March 1960] [Sri M. Bhaktavatsalam]

அப்புறம் சிறைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் மத்திய சிறையைப் பற்றிச் சொல்லவில்லை. அந்தச் சிறையில் இருந்தவர்கள்கூட அதை மறந்துவிட்டார்கள். அங்கே சுகாதார வசதி கிடையாது என்று சொல்லப்பட்டு வந்தது. அதற்காக இப்போது அந்தச் சிறையையே ரெட்ஹில்சுக்கு மாற்ற ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்கு வேண்டிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படும். அப்புறம் இந்தச் சிறை இருக்கும் இடத்தைக்கூட ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்குக் கொடுக்கப்படும்.

இன்னொன்று. செலவைப் பற்றி லாயர்களாக இருக்கிற அங்கத்தினர்கள் சொன்னார்கள். நீதி நிர்வாகத்திற்குச் செலவு குறைவாக இருக்கிறது. வருமானம் அதிமாக இருக்கிறது. ஆகவே ஸ்டாம் பீசை ஏன் குறைக்கக் கூடாது என்றார்கள். நாம் ஸ்டாம் பீசைக் குறைத்தாலும் அவர்கள் வக்கீலுக்குக் கொடுக்க வேண்டியதைக் குறைக்கப் போகிறார்களா ? என்ன ? அது இல்லை. கோர்ட் பீஸ் என்று இல்லாவிட்டால் வழக்குதான் ஜாஸ்தியாக ஆகும். எத்தனையோ வழக்குகள் தொடரப்படும். ஆகவேதான் ஒரு அத்து இருக்க வேண்டுமென்றால், வீணாகத் தொடரப்படுகிற வழக்குகளைக் குறைக்கவேண்டும் என்றால் கோர்ட் பீஸ் என்பது இருக்கத்தான் வேண்டும். இப்போது நாம் கோர்ட் பீசை எடுத்துவிட்டாலும் வக்கீல்களிடம் போய்தானே ஆக வேண்டும். கோர்ட் பீஸ் மூலம் கிடைத்தது, 1957–58-ல் ரெஸிப்ட்ஸ், 1,72,26,863 ரூபாய், செலவு 1,77,87,419 ரூபாய். முன்பெல்லாம் பணம் மிச்சப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது அப்படியல்ல. 1958–59-ல் வருவாய், 1,73,49,642, செலவு 1,89,30,632. அதிகச் செலவு, 15,80,990 ரூபாய். இப்பொழுதே 15 லட்சம் ரூபாய் கூடுதலாக செலவாகிறது. வழக்குகளில் மாட்டிக் கொள்கிறவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டியதுதான். இருந்தாலும் அனாவசியமாக வழக்குகள் தொடராமல் இருப்பதற்குத்தான் இது இருக்கிறது.

**SRI S. LAZAR :** On a point of information, Sir. The figures that I gave, have been taken from the Budget Estimate given to us relating to the year 1960–61. According to those figures, we get a surplus of Rs. 36 lakhs. So, when that is the figure, I don't think that I am in any way wrong. 5 p.m.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கனம் அங்கத்தினர் அவர்களின் புள்ளி விவரங்களை நான் கவனிக்கவில்லை. அது தப்பு என்று சொல்லவில்லை. 1958–59-ல் உள்ள புள்ளிவிவரங்களை கொடுத்தேன். நகரத்தில் இப்பொழுது 9,000 கார்கள் இருக்கிறது. அடுத்தபடியாக கோயம்புத்தூர் என்று சொல்கிறார்கள். அங்கு 3,000 கார்கள் இருக்கிறது. ஒரு பெரிய மாஸ்டர் ப்ளானை கமிஷனர் கொடுத்திருக்கிறார்கள். ஒரு குழு இருக்கிறது, அது பரிசீலனை செய்துவருகிறது. சென்னையில் உள்ள டிராபிக் ரெகுலேஷன் மிகவும் சிறந்தது என்று போற்றுகிறார்கள். போக்கு வரத்து நெருக்கடியை போலீஸார் சமாளித்து வருகிறார்கள். வெய்யிலில் நிற்பவர்களுக்கு வசதியாக புதிதாக குடை கூட போடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிக் கூட ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார். சின்னதுரை அவர்கள் சொன்னார்கள், லேபர் ட்ரிப்யூனலில் தீர்ப்பு வந்த பிறகு ஹைகோர்ட்டில் மானேஜ்மெண்ட்டார் ரிட் போடுகிறார்கள் என்று. அதற்கு, அட்வகேட் ஜெனரல் முதலாளிகளுக்காக ஆஜர் ஆவது பற்றி சொன்னார்கள். இதுபற்றி எனக்கு கிடைத்த கொஞ்ச நேரத்தில் கவனித்துப் பார்த்தேன். அரசாங்கம் நேரடிக் கட்சியாக இருந்து அட்வகேட் ஜெனரலின் அபிப்பிராயத்தைக் கேட்பதாகயிருந்தால் அப்பொழுது அவர் ஆஜராகக் கூடாது என்று சொல்லலாம். அவரும் ஆஜராக மாட்டார்கள். அப்படி சொல்ல வேண்டிய நிமித்தமும் இருக்காது. ட்ரிப்யூனல் தீர்ப்பு வருகிறது, அது மேல் கோர்ட்டுக்கு போகிறது. அதில் லேபர் கமிஷனரே அரசாங்க சார்பில் யாரும் நேரடிப் பார்ட்டியாக

[Sri M. Bhaktavatsalam] [21st March 1960

இருக்கிறார், அரசாங்கம் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறது, அரசாங்கமே அதில் டிபென்ஸ் செய்வதாகயிருந்தால் அப்பொழுது அவர் அப்பியர் ஆக மாட்டார்கள்.

**Sri P. S. CHINNADURAI** : அடிஷனல் கவர்ன்மெண்ட் ப்ளீடர் அப்பியர் ஆகிறார்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அரசாங்கம் அனுமதித்து வருவதில்லை. அட்வகேட் அபிப்பிராயம் கோரும் நிலைமை இருந்தால் அவர் அப்பொழுது ஆஜராக மாட்டார்கள். மேலும், இதைப் பரிசீலனை செய்து பார்க்கலாம். இப்பொழுது, அட்வகேட் ஜெனரல் அப்பியர் ஆவது தவறு என்று சொல்வதற்கில்லை. அடுத்தபடியாக, சம்பள விகிதத்தைப் பற்றி இந்த அரசாங்கத்திற்கு வேண்டிய அக்கறையிருக்கிறது. வேலையின் அருமை அரசாங்கத்திற்கு அதிகமாக தெரியும். இந்த இலாகாவில் வேலை பார்ப்பவர்களுக்கும் அநேக வித கஷ்டங்கள் இருக்கின்றன. இவர்கள், மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பது மட்டும் அல்ல, "ஆப்டர் கேர், பெக்கர் ஹோம், கிராமத் திருப்பணி" போன்ற பல வேலைகள் இருக்கின்றன, இவர்களுக்கு பலவித சங்கடங்கள் இருக்கின்றன. போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும், போலீஸ் க்வார்ட்டேர்ஸ்க்கு மின்சாரம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் இங்கு கூறப்பட்டன. மின்சாரம், போலீஸ் க்வார்ட்டேர்ஸ்க்கு கேட்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. தானாகவே கிடைக்கும் என்று வைத்துக் கொள்ளலாம், எல்லா போலீஸ் க்வார்ட்டேர்ஸ்க்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் கொஞ்ச நாட்களுக்கு முன்னர் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அவர்கள் சம்பளத்தைப் பற்றி அரசாங்கத்திற்கு அக்கறை இல்லாமல் இல்லை. பே கமிஷன், மார்ச் கடைசிக்குள் ரிப்போர்ட் கொடுக்கப் போகிறார்கள். அதுபற்றி இரண்டு மாதங்களுக்குள் அரசாங்கம் உத்தரவுகள் போடும் என்பதும் கனம் அங்கத்தினர்களுக்கு தெரியாமல் இல்லை. அவர்களின் சம்பள விகிதம் எப்படி எப்படி இருக்கவேண்டுமென்று போலீஸ் இலாகா தெரிவித்திருக்கிறார்கள். பே கமிஷனும் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சீக்கிரத்தில் அவர்கள் சிபார்சுகள் அரசாங்கத்திற்கு வந்து அரசாங்கம் அதன் மீது எடுத்துக் கொள்ளும் முடிவுகளை எதிர்பார்க்கலாம். கல்யாணசுந்தரம் அவர்கள் திருநெல்வேலி சம்பவத்தைப் பற்றி ஜட்ஜ்மென்டை வாசித்தார்கள். அதன் விவரம் தெரியவில்லை. ஆனால் ஒன்று சொல்கிறேன், தவறு இருந்தால் குறிப்பிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எப்பொழுதும் எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். டிஸ்ட்ரிக்ட் போலீஸ் ஆக்ட், ஸிட்டி போலீஸ் ஆக்ட் பற்றி சொன்னார்கள். அதில் ஆட்சேபகரமான விஷயங்கள் இருக்கிறது என்று அரசாங்கத்திற்கு பட்டால்தான் அதை மாற்றமுடியும். அதைப்பற்றி ஒன்றும் நாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்தபடியாக, வால்பாறையில் சுடப் பட்டு உயிரிழந்தவர்களைப் பற்றி சொன்னார்கள். இப்பொழுது சொன்னதால் விவரம் என்னிடம் இல்லை. ஒன்று கண்டிப்பாக மறுக்கிறேன். ஐ.என்.டி.யு.ஸி.-யைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் நஷ்டயீடு கொடுத்தார்கள், ஆனால் மற்றவர்களுக்கு கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதை நான் மறுக்கிறேன். அந்த விதமான போக்கு இந்த சர்க்காருக்கு கிடையாது. ஐ.என்.டி.யு.ஸி.-யைக் கேட்டால் அவர்களும் குறை சொல்வார்கள். ஐ.என்.டி.யு.ஸி. என்றால் எங்கள் அண்ணன் தம்பி இல்லை. யார் யாருக்கு கொடுக்கவேண்டுமோ அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, சட்ட பூர்வமாக. அக்கௌண்டன்ட் ஜெனரல் இருக்கிறார், அக்கவுண்ட்ஸ் கமிட்டி இருக்கிறது, இவைகளைப் பார்க்க. ஆகவே, அதில் பாரபட்சம் எதுவும் காட்டப்படவில்லை. பாண்டிச்சேரி எல்லையில் இருந்து திருட்டுத்தனமாக சாராயம் வருவது பற்றி கோவிந்தசுவாமி அவர்கள் சொன்னார்கள். அது சிக்கலான விஷயம். அதற்கு, நாம் உத்தரவு போட முடியாது. பாண்டிச்சேரியில் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள், காரைக்காலில் மதுவிலக்குச் சட்டத்தை கொண்டு வாருங்கள் என்று நாம் சொல்ல முடியாது. திருட்டுத்தனமாக வருவதை தவிர்த்துக் கொண்டிருக்



21st March 1960] [Sri M. Bhaktavatsalam]

கிறோம். இது, சிக்கலான விஷயம். அடுத்தபடியாக, ஜெயில் விஸிட்டர்ஸைப் பற்றி சொன்னார்கள், எல்லோருமே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று. எனக்கு அவர்கள் பெயர்கள் தெரியாது. கலெக்டர் பெயர்கள் அனுப்புகிறார்கள். எத்தனை முறை விஸிட் செய்திருக்கிறார்கள், அதைக் கவனித்தீர்களா என்று கேட்டார்கள். இதை வைத்து கட்சிக்கு ஒன்றும் பலம் இல்லை. எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். ஒரு கட்சியிலும் இல்லாதவர்களும் பெரும்பாலோர் இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி பேசியவர்கள் பொதுவாக அதை ஆதரித்துத்தான் பேசினார்கள். பழைய பேச்சு இல்லை. அதாவது, இது ஒரு குடிசைத் தொழிலாகப் போய் விட்டது என்று சொல்வது. கனம் அங்கத்தினர் விநாயகம் அவர்கள் சொன்னது போல் சூதாட்டம் அடியோடு மறைந்து போயிருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் பெருமையும், திருப்தியும் அளிக்கக் கூடியதாகும்.

ஆகவே மொத்தத்தில் பார்த்தால், ஏதோ எதிர்கட்சியினர் காரசாரமாக பேச வேண்டும் என்பதற்காகத்தான் பேசினார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று நம்புகிறேன். பொதுவாக எல்லோரும் போலீஸ் நிர்வாகத்தைப்பற்றி பாராட்டுதல் தெரிவித்தார்கள். ஆகவே அதற்காக நான் போலீஸ் அதிகாரிகளுக்கு என் பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு அவர்களும் உணர வேண்டும். இன்னும் சில இடங்களில் தவறுதல்கள் நடக்கின்றன. எதிர்கட்சிக்காரர்கள் இவைகளைப்பற்றி உணர்வதை விட அதிகமாகவே நான் உணருகிறேன். அவைகளை எல்லாம் தவிர்ப்பதில் போலீஸ் அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri A. Govindasamy, withdrawing his cut motion?

**Sri A. GOVINDASAMY** : அமைச்சர் அவர்கள், நான் கொடுத்திருக்கின்ற வெட்டுப்பிரேரணையின் மீது பேசும்போது இதில் காரியங்களை நிறைவேற்றுவதற்கு சில சிக்கல்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். இருந்தாலும் இதன் பேரில் வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறியதால், நான் மதுவிலக்கு மான்யத்தின் மீது கொடுத்திருக்கின்ற வெட்டுப்பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

The cut motion was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 4,16,800 under Demand II—Excise Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 1,19,97,500 under Demand XIII—Administration of Justice—be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,19,97,500 under Demand XIII—Administration of Justice.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The hon. Member Sri M. Jagannathan is not in his seat. So the cut motion moved by him is deemed to have been withdrawn. Now I will put the Demand to the vote of the House.

The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,18,10,600 under Demand XIV—Jails.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, T. S. Ramaswami, withdrawing his cut motion?

SRI T. S. RAMASWAMI : Yes, Sir.

The cut motion was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 6,05,40,900 under Demand XV—Police.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

### IX. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A.—*Statutory Rules and Orders.*

* 78. *Amendment to the Registration Certificate Rule 337 of the Madras Motor Vehicles Rules, 1940 issued in G.O. Ms. No. 3569, Home, dated 19th December 1958 [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].*

* 79. *Amendment to the Maintenance of Goods Vehicles Record Rule 215 of the Madras Motor Vehicles Rules, 1940 issued in G.O. Ms. No. 3287, Home, dated 19th November 1959. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

* *Notification issued under section 22 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 regarding the Ryotwari Settlement of Estates in Chingleput district other than Kachinad estates issued with Memorandum No. 115375-J3/59-2, Revenue, dated 17th February 1960. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

#### B.—*Reports, Notifications and other papers.*

* 38. *Demands for Grants for further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1959-60. (As presented to the Legislature on 18th March 1960.)*



* 39. *Speech of Hon. Minister for Finance presenting the Third Supplementary Estimates on the 18th March 1960.*

* 41. *Notice, dated 18th March 1960 of Demands for Grants for Further Expenditure for 1959-60.*

* 40. *The Madras Appropriation (Vote on Account) Bill, 1960 (L.A. Bill No. 8 of 1960).*

---

* Laid on the table on 18th March 1960.
Circulated on 10th March 1960.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

SECRETARIAT LIBRARY FORT ST. GEORGE MADRAS 0 FEB 1961

**Tuesday, 22nd March 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (The Hon. Dr. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS.

*English as medium of instruction in Colleges*

*S.N. Q. No. 6.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the attention of the Government has been drawn to a statement by Dr. C. D. Deshmukh, Chairman of the University Grants Commission, that English should be retained in Universities as medium of world thought?

The Hon. Sri C. SUBRAMANIAM : The Government are aware of the statement.

Sri A. A. RASHEED : Sir, May I know whether the Government *agree* with the view expressed by Dr. C. D. Deshmukh?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not know whether I should accept the suggestion of 'Expert Advice or Expert view'. The hon. Member, I hope, already knows the policy of the Government with regard to the introduction of the regional language.

Mr. SPEAKER : Further, the Question Hour is meant to elicit information from the Government on the question and not asking the Government to give their *opinion*. The Question Hour should not be made use of for the purpose of asking for the policy of the Government or what they *think about a particular matter*. The Hon. Members are entitled to ask questions on facts and not on the policy of the Government.

Sri N. K. PALANISAMI : தமிழ் மொழிதான் போதனு மொழியாக இருக்க வேண்டும் என்பதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. இப்போது நாம் இருக்கும் நிலையில், நாடு இன்னும் முன்னேற்றம் அடையாது இருக்கும்போது தமிழில் போதிப்பது உகந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

[22nd March 1960

SRI A. VEDARATHNAM : இப்பொழுது நிலவி வரும் அபிப்பிராயத்தைப் பார்த்தால் கல்லூரிகளிலே ஆங்கிலத்தை அடியோடு எடுத்து விடுவார்களோ என்ற சந்தேகம் இருக்கிறது. தமிழில் பாடங்கள் போதிக்கும்போது ஆங்கிலமும் நீடித்து இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI C. SUBRAMANIAM : குற்றம் குறை கூற வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆங்கிலம் ஒரு பாடமாக தனி மொழியாக தொடர்ந்து சொல்லிக்கொடுக்கப்படும். அப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற நேரத்தைவிட இன்னும் கொஞ்சம் அதிகமான நேரம் ஒதுக்கப்படும்.

SRI A. A. RASHEED : Sir, will the Government await the result of the experiment of introduction of Tamil in Coimbatore College before introducing the same as medium of instruction in other colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member is already aware that Tamil will be introduced in other Colleges only from 1963–64. Therefore, there are three more years available before which we can assess the result.

SRI V. K. KRISHNAMURTHY : தமிழ் பாடமொழி ஆவதுபற்றி பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் இதற்கு முன்னால் பல முயற்சிகள் எடுத்துக்கொண்டு அதன் மூலம் வெற்றி கண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதை விரைவில் கொண்டுவருவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தேஷ்முக்காக இருந்தாலும் சரி வேறு யாராவது இருந்தாலும் சரி தாய் மொழியில்தான் பாடம் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இடையாது. எல்லோரும் என்ன சொல்லுகிறார்கள் என்றால் போதுமான அளவு தயார் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மூன்று வருஷ காலத்தில் போதுமான அளவு தயார் செய்துகொண்டிருக்கிறதா என்பதுதான் பிரச்னை. தாய்மொழியில் பாடம் கற்றுக்கொடுப்பதில் கருத்து வேற்றுமை இடையாது.

SRI K. ANBAZHAGAN : பொது மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கக்கூடிய சட்ட மன்றத்தின் கட்சித் தலைவர்களின் பொறுப்பான கருத்துக்களை, படிப்பிக்கும் மொழியைப் பொறுத்தவரை, பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்வகலாசாலைக்கும் நமக்கும் கருத்து வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தமிழ் போதனா மொழியாக அமைய வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுவதெல்லாம் போதிய அளவு தயார் செய்துகொண்டுதான் இதில் இறங்க வேண்டும் என்பது. இதிலே தான் சர்க்கார் ஈடுபட்டிருக்கிறது.

SRI S. LAZAR : Sir, May I know the special advantages that will accrue to the students, who switch over from English to Tamil?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, it is late in the day to advert to that question. I would request the hon. Member to go through the various literature on the subject.

MR. SPEAKER : Not only that, it is a big question to be dealt with by way of an answer to an interpellation.



22nd March 1960]

SRI A. A. RASHEED : Do the Government think they have enough facilities to introduce Tamil at this juncture?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Members are completely under the misapprehension that I am taking steps without reference to the University. I would like to explain to the hon. Member that even now the University Rules provide for the teaching on any subject through the medium of Tamil or any other regional language and there is no bar. The only thing is sufficient books should be available and it is for the University to decide whether sufficient books are available or not. It is not as if I am taking any step which is contrary to the existing rules of the University. I am strictly adhering to the existing rules of the University. I have not come before the House to amend the University Act or the University Rules.

*Co-operative tannery at Polur*

* 499 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம் போளூரில் கூட்டுறவு தோல் பதனிடும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal to start a Tanners' Co-operative Society in Polur taluk, North Arcot district. The Government have, however, sanctioned the establishment of a Village Model Tannery in Chetpet Block, Polur taluk, in February 1960.

SRI S. M. ANNAMALAI : சமுதாய நல திட்டத்தில் இருக்கக் கூடிய அதிகாரிகள் சிபார்சு செய்தும்கூட சர்க்காரில் பணம் இல்லை என்று அந்த ஸ்கீமை நிறுத்தி விட்டார்கள். ஆகவே இதை இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்திலே சேர்த்து நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் விடை அளிக்கும்போது கனம் அங்கத்தினர் அவர்கள் கவனிக்கவில்லை. டிசெம்பர் 59-ல் ஒரு வில்லேஜ் மாடல் டானெரி அருந்ததி பாளையத்தில் ஆரம்பிக்க சாங்ஷன் செய்திருக்கிறது. அதற்காக 26 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பதினெட்டு ஆயிரம் அகில இந்திய கிராமக் கைத்தொழிலில் இருந்தும், எட்டு ஆயிரம் ராஜ்ய நிதியில் இருந்தும் சாங்ஷன் செய்து திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

*Playgrounds*

* 500 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Union Government have come forward to assist Primary and Secondary Educational Institutions in the State that are not provided with adequate playgrounds;

(b) the nature of assistance offered;

(c) whether the State Government have asked for its full quota ; and

(d) whether the State Government have submitted all particulars asked for by the Union Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir;

(b) to (d) The Government of India have sanctioned a sum of Rs. 72,500 towards provision of playgrounds for schools in the current year. Proposals to utilise the quota in full are under examination by the State Government.

*Works entrusted to the Co-operative Societies*

* 501 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) காண்ட்ராக்ட் முறைப்படி டெண்டர் கோராமல் என்னென்ன வேலைகள் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் பொது மக்களுக்கும் செய்வதற்கு விடப்படும் ?

(ஆ) எவ்வளவு ரூபாய் பெறுமான வேலைகளை கூட்டுறவு ஸ்தாபனங்களும், பொது மக்களும் செய்வதற்கு சர்க்கார் அங்கீகாரம் அளித்துள்ளனர் ?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) The attention of the Member is invited to the paper[a] placed on the table of the House.

SRI P. G. MANICKAM : தற்போது பஞ்சாயத்து ராஜ்யம் என்ற முறையில் நம் நாடு முன்னேறிக்கொண்டிருக்கும் நேரத்தில் பஞ்சாயத்துக்களுக்கு இந்த மாதிரி வேலைகள் கொடுப்பதற்கு சட்டத்தையாவது திருத்த ஆவன செய்வார்களா ?

THE HON. SRI. P. KAKKAN : கிராமங்களில் சமுதாய நல திட்டத்தின் கீழும், தேசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழும் வேலைகள் நடக்கின்ற இடங்களில் கிராமக்கமிட்டிகளை அமைத்து சிறிய நீர்ப்பாசனம் ஏற்படுத்த முன் வந்தால் அவர்களுக்கு ரூ. 7,500 வரைக்கும் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

*Improvement of scarcity areas*

* 502 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have received any grant from the Centre under the programme of permanent improvement of scarcity areas; and

(b) how the amount is distributed?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) This Government have not received any *grant* assistance from the Centre for this scheme. They receive only *loan* assistance.

(b) A statement[b] showing the details is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : May I know the reasons for the Government giving priority to delta areas which have already been developed and abandoning the non-delta areas where there is water scarcity?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member's question itself is whether there is a programme of permanent improvement of the scarcity areas of the State and I have given

[a] Printed as Appendix I on pages 266–267 infra.
[b] Printed as Appendix II on pages 267–268 infra.



figures to show that Rs. 590 lakhs have been spent for the purpose of developing the scarcity areas. I do not know wherefrom the hon. Member gets the idea of scarcity areas being abandoned.

*Tamil Development and Research Council*

* 503 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the nature of work done by the Tamil Development and Research Council for the development of Tamil since its inception;

(b) whether this Council is taking any steps to bring out text-books in regional languages for the use of college students; and

(c) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) to (c) A note[a] on the progress of work of the Tamil Development and Research Council is placed on the Table of the House.

The hon. Member Sri A. A. Rasheed may get an idea from this of the efforts made in the preparation of text-books.

SRI S. M. ANNAMALAI : மேஜை மீது வைக்கப்பட்டுள்ள அறிக்கை பெரிதாயிருக்கிறது. அதை வேண்டுமானால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் உப கேள்வி கேட்டால், தெரிந்து போய்விடும்.

SRI T. S. RAMASWAMI : The question may be taken up tomorrow, Sir.

MR. SPEAKER : I have no objection.

*Kundah Hydel Project*

*504 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state the present stage of the Kundah Hydel Project?

THE HON. SRI V. RAMAIAH : The first generating unit of 20,000 KW. in Power House No. I will be commissioned on the 25th March 1960. The second generating unit of 20,000 KW. in Power House No. I, and all the four generating units of 35,000 KW. each in Power House No. II are expected to be commissioned, as and when each generator is ready, during the course of the year 1960–61. The progress is according to schedule.

SRI A. A. RASHEED : Will the Hon. Minister assure the House that there will not be any power cut during this summer because of the commissioning of the first generator?

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member may put a separate question.

SRI S. NAGARAJA MONIGAR : தொழிலாளர்கள் குறைகள் என்று சொல்லிக்கொண்டு சில கட்சிகள் புகுந்து வேலை செய்து, வேலை நிறுத்தம் போன்றவை செய்ததன் காரணமாக அதை முடிக்க வேண்டிய தேதி சற்று தள்ளிப்போடப்பட்டதா ? அப்படியானால் எந்தெந்த கட்சிகள் அந்த கைங்கரியத்தில் ஈடுபட்டன?

MR. SPEAKER : The question is out of order.

[a] Printed as Appendix III on pages 268–280 infra.

[22nd March 1960

**Sri M. KALYANASUNDARAM** : 25-ம் தேதி அன்று பிரதம மந்திரி அவர்கள் வந்து இதை ஆரம்பித்து வைக்க இருப்பதாகச் சொன்னார்கள். இதை ஆரம்பித்த பின்பு எவ்வளவு நாட்கள் ஓடுவதற்குள்ள தண்ணீர் வசதி அந்த நீர்த்தேக்கத்தில் இருக்கிறது ? அதனால் எவ்வளவு மின்சார உற்பத்தி அதிகரிக்கும் ? அப்படியிருக்கையில் மின்சார வெட்டு ஏற்படுத்த நேருமென்று சீப் என்ஜினியர் சுற்றறிக்கை விட்டிருப்பது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததா ?

**The Hon. Sri V. RAMAIAH** : 25-ம் தேதி ஆரம்பமாகக்கூடிய அந்த விழா பற்றி அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். நீர்த்தேக்கத்தில் போதுமான தண்ணீர் இல்லை. ஆனால் நீலகிரிப் பகுதியைப் பொறுத்த வரையில் எந்த நிமிடத்திலும் நல்ல மழை பெய்யும் என்ற நம்பிக்கை நமக்கு இருப்பதால் ஒரு மழை பெய்துவிட்டால் உடனே நீர்த் தேக்கத்தில் தண்ணீர் வந்துவிடும் என்ற நம்பிக்கையால் நாம் போட்ட திட்டப்படி 25-ம் தேதி அன்று முதல் யூனிட்டை ஆரம்பித்து வைக்கவேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றுள்ள நிலையில் அந்த யூனிட் ஆரம்பமானவுடன் போதுமான அளவு மின்சார சக்தி உற்பத்தி செய்யும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் நீர்த்தேக்கத்தில் போதுமான தண்ணீர் வந்துவிட்டால் 20,000 கிலோ வாட்ஸ் சக்தி உற்பத்தி செய்யும்.

**Sri M. KALYANASUNDARAM** : திட்டம் போட்டபடி நிறைவேற்றுவதாகச் சொன்னார்கள். 25-ம் தேதி அதை ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காக மாமூலாக வர வேண்டிய டன்னல்பூர்த்தியாகாது இருக்கும்போது பக்கத்திலுள்ள ஓடைகளிலிருந்து தண்ணீர் பம்ப் செய்து விழாவை நடத்தப் போவது உண்மையா ?

**The Hon. Sri V. RAMAIAH** : டன்னல் வேலை பூர்த்தியாகவில்லை என்பதற்காக பக்கத்திலுள்ள ஓடையிலிருந்து தண்ணீர் பம்ப் செய்யவில்லை. போதுமான தண்ணீர் நீர்த்தேக்கத்தில் இல்லை என்பதால் குறிப்பிட்ட தேதியில் ஆரம்ப விழா வைக்க வேண்டுமென்பதற்காக தண்ணீர் பம்ப் செய்து அந்த மெஷினை ஓட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**Sri S. . ANNAMALAI** : அமைச்சர் அவர்கள் மதுரையில் வைத்து சொல்லியிருக்கிறார்கள், மின்சார வெட்டு வருமென்று. குந்தா மின்சார திட்டம் பர்ஸ்ட் ஜெனரேட்டர் சார்ஜ் செய்த பின்னரும் கட் வருமானால், எந்த அளவு வரும் ? எப்பொழுதிலிருந்து ?

**The Hon. Sri V. RAMAIAH** : அங்கத்தினர் சொல்வது சரியல்ல; மின்சார வெட்டு வரும் என்று நான் எந்த யிடத்திலும் சொல்லவில்லை.

**Sri M. KALYANASUNDARAM** : டன்னல் இன்னும் பூர்த்தியாகவில்லை. நீர்த்தேக்கத்தில் தண்ணீர் இல்லை. ஆகவே வேறு இடத்திலிருந்து பம்ப் செய்யப்படும்போது அதனால் அதிகப்படியாக ஆகும் செலவு கிட்டத்தட்ட இரண்டு லட்சமாகும் என்று கேள்விப்படுகிறேன். அப்படி அதிகப்படிச் செலவு செய்தாவது 25-ம் தேதி அன்றே ஆரம்பிக்க வேண்டிய அவசியம் என்ன ? அது, பத்து மணி நேரம் கூட ஓடாது என்று கேள்விப்படுகிறேன். அப்படியிருக்க அப்படி அவசரப்பட்டு அதை ஆரம்பிக்க வேண்டிய காரணமென்ன ?

**The Hon. Sri V. RAMAIAH** : எனக்கு இருக்கக்கூடிய தகவல், அதிகாரிகள் சொல்லியிருக்கக் கூடியது, நீர்த்தேக்கத்தில் போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தால்தான் நாம் ஓரளவுக்கு நீர்த்தேக்கத்திற்கு தண்ணீர் எடுத்து அந்த விழாவை நடத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எனது தகவல்படி, நீர்த்தேக்கத்தில் தண்ணீர் வந்தவுடனே முதல் யூனிட் திருப்திகரமான வேலை செய்யும் என்பதில் சந்தேகமில்லை. விழா நடத்த வேண்டும், அதோடு வேலை முடிந்து விட்டதென்ற நிலையே கிடையாது. ஓரளவுக்கு நல்லவிதமான வேலை நடந்திருக்கிறது. நாம் எதிர்பார்த்த அளவிற்கு வேலை நன்கு நடந்திருக்கிறது.



22nd March 1960]

ஆனால் இயற்கை நம் பக்கம் சரியாக ஒத்துழைக்காததால் போதுமான தண்ணீர் நீர்த்தேக்கங்களில் இல்லாமல் போய்விட்டது. அது யாருடைய குற்றமும் இல்லை.

**Mr. SPEAKER** : I have no objection to allow the Hon. Minister to make a statement if he wants to clarify the points raised by the hon. Member Sri Kalyanasundaram . . .

**The Hon. Sri V. RAMAIAH** : They will be clarified on the 25th.

Question No. 505—

**Mr. SPEAKER** : As the hon. Member Sri Sattanatha Karayalar is not in his seat, the qoestion and the answer will be printed in the official proceedings.

Question No. 506—

(Sri T. S. Ramaswami rose to put question No. 505 some time after the question was called.)

**Mr. SPEAKER** : No. I have passed on to the next question.

I am afraid hon. Members are still mistaking me. After calling a particular question I wait for a minute when no Member gets up to put the question on behalf of the member absent in the House. After I pass on to the next question, hon. Members say 'Sir, Sir.' It is more a disturbance than a help to the Chair. I would like hon. Members to be alert and immediately I call the next question, the Member or, in the case of an absentee Member, his nominee should get up and say immediately that he is putting the question. They should not do it after some time or after I have passed on to the next question and thus disturb the proceedings of the House. I would appeal to hon. Members not to disturb the proceedings in this manner. Either they put the question immediately after it is called or they do not.

### *Grama Sevikas*

* **506 Q.—Sri S. M. ANNAMALAI** ; கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கிராம சேவிகைகளை நியமிக்கும்போது திருமணமானவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று சர்க்கார் உத்திரவிட்டிருக்கிறார்களா ?

(ஆ) அப்படியானால் அதற்குக் காரணம் என்ன ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**Sri S. M. ANNAMALAI** : சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் வேலை செய்து வருகிற கிராம சேவிகைகள் சிலர் தவறான பாதையில் செல்வதால் ப்ளாக் டெவலப்மென்ட் ஆபீஸ் என்று சொல்வதற்குப் பதில் "பெல்லி டெவலப்மென்ட் ஆபீஸ்" என்று மக்கள் சொல்கிறார்கள். ஆகவே கிராம சேவிகைகள் கட்டாயமாக திருமணம் செய்து கொண்டாக வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு இடுவார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : I do not really understand the taste of the hon. Member. I wish he withdraws that statement.

**Mr. SPEAKER** : I did not quite catch what the hon. Member said.

THE HON. SRI C. SUBRAMANIAM : ப்ளாக் டெவலெப்மெண்ட் ஆபீஸ் என்பதற்கு பதிலாக் "பெல்லி டெவலப்மெண்ட் ஆபீஸ்" என்று சொல்லுவார்களாம்,

It is really a bad insinuation and the hon. Member should have a better taste.

MR. SPEAKER : It is bad. அதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்.

SRI S. M. ANNAMALAI : வாபஸ் வாங்குகிறேன்.

MR. SPEAKER : Before we pass on to the next question, I would like to say this. I find question No. 505 is an important question, relating to Canadian aid. If the House so desires, I will permit some hon. Member to put it and allow the question to be answered by the Hon. Minister. I am prepared to allow the question to be reopened now if the House so desires.

SRI K. ANBAZHAGAN : Because some papers are laid on the table in respect of this question also, it may be taken up tomorrow.

MR. SPEAKER : That I won't allow. As a special case I will allow it. If anybody wants to put the question it may be done.

*Colombo Plan and Canadian Aid*

* 505 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state—
மொத்தமாக நம்முடைய பஸ் நிர்வாகத்தில் சற்றேறக்குறைய பத்து லட்சம் ரூபாய் இண்ட்ரஸ்ட் கொடுத்த பிறகு 29 லட்சம் ரூபாய் மொத்தத்தில் வருமானம் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னும் பிரயாணிகளுக்கு இந்த பஸ்கள் மூலமாக எவ்வளவு சேவை செய்திருக்கிறோம் என்று பார்த்தால் 1959-ம் வருஷத்தில் 14 கோடி முப்பது லட்சம் சில்லரை பிரயாணிகள் சென்றிருக்கிறார்கள். அதற்கு முன் வருஷத்தில் 13 கோடி 74 லட்சம் பிரயாணிகள் இதன் மூலம் பிரயாணம் செய்திருக்கிறார்கள். இதைப் போலவே வருமானத்திலும் பார்த்தால் 1959-ம் வருஷத்தில் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையில், அதாவது 11 மாதங்களுக்கு ஒரு கோடி 72 லட்சம் சில்லரை ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. கடந்த வருஷத்தைப் பார்த்தால் ஒரு கோடி 63 லட்சம் சொச்சம் ரூபாய்தான் வருமானம் கிடைத்திருக்கிறது. இன்னும் ப்ரேக்டௌன்களை எடுத்துக்கொண்டாலும் 1958–59-ல் 2,987 ப்ரேக் டௌன்களும் 1959–60-ல் 2,435 ப்ரேக் டௌன்களும் ஏற்பட்டிருக்கிறது. அதாவது சற்றேறக்குறைய 20 சத விகிதம் ப்ரேக் டௌன் குறைந்திருக்கிறது. பஸ்களை புதுப்பிக்கும் விஷயத்தில் கனம் அங்கத்தினர்களுக்குச் சொன்னதாவது வருஷத்திற்கு இவ்வளவு என்ற வகையில் பஸ்களை புதுப்பிப்பது என்று திட்டமிட்டு அதன்மூலம் 1960-ம் வருஷம் மார்ச் மாதம் பழைய பஸ்கள் எலாவற்றையும் எடுத்துவிட வேண்டும் என்பது. அது திட்டப்படி நடந்துவிட்டது. பழைய பஸ்கள் தேங்கி இருந்ததன் காரணமாக வருஷா வருஷம் பஸ்கள் சிலவற்றை புதுப்பிப்பதன் மூலம் 1960-ல் எல்லா பஸ்களையும் புதுப்பித்து விடலாம் என்று சொன்னேன். அந்த முறையில் பார்க்கும்போது 1958 ஏப்ரலில் நல்ல பஸ்கள் 300 இருந்தன. காலம் கடந்த பஸ்கள் 164 இருந்தன ஆனால் 1960-ல் நல்ல பஸ்கள் 430. காலம் கடந்த பஸ்கள் 20 தான் இருக்கின்றன. ஆகவே திட்டமிட்டபடி நாம் இந்த 3, 4 வருஷங்களுக்குள் கிரமமாக வருஷத்திற்கு இவ்வளவு பஸ்களை புதுப்பிக்க வேண்டும் என்ற முறைப்படி புதுப்பித்துக்கொண்டு வந்திருக்கிறோம். அந்த முறையில் இப்பொழுது எல்லா பஸ்களையும் புதுப்பித்தாகிவிட்டது. ஆகவே 1960 மார்ச் மாதம் 31-ம் தேதியில் பழைய பஸ்கள் இல்லாதபடியும் எல்லாம் புது பஸ்களாகவே இருக்கும்படியாகவும் நடவடிக்கை எடுத்துக்கொண்டாகி விட்டது. அந்த நிலைமையை நாம் இப்பொழுது உண்டாக்கியிருக்கிறோம். அதற்கு வேண்டிய புள்ளி விவரங்களையும் கொடுக்க விரும்புகிறேன். 1959–60-ல் புதுப்பித்த பஸ்கள் 84, புதியதாக தருவித்தது 32 பஸ்கள், அதாவது 116 பஸ்கள். 1959–60-ல் மாத்திரம் இத்தனை பஸ்கள் புதுப்பித்திருக்கிறோம்.

நடப்பு வருஷத்தில் சில ரூட்டுகளை தேசீயமயமாக்கி இருக்கிறோம். இதற்கு முன்பே புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறேன். நடப்பு வருஷத்தில் பெங்களூருக்கு சிறப்பாக ஒரு பஸ்ஸை, அதாவது ஒரு ஸ்பெஷல் பஸ்ஸை துவக்கி வைத்தோம். அதனுடைய பலன் மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. இந்த ஆறு மாதங்களில் அறுபது ஆயிரத்து எண்ணுத்தி நாற்பது ரூபாய் மொத்த வருமானமும் நிகர லாபம் 26,700 ரூபாயும் பெற்றிருக்கிறோம். அதன்படி பார்த்தால் வருஷம் ஒன்றுக்கு 45 ஆயிரம் ரூபாய் அளவுக்கு இந்த பஸ் மூலம் லாபம் வரும் என்று தெரிய வருகிறது. ஆகவே வெகு தொலைவிலுள்ள ஊர்களுக்கு பஸ்களை விடலாம் என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. 1960–61-ல் சென்னையிலிருந்து சேலத்திற்கும், சென்னையிலிருந்து திருச்சிக்கும், திருச்சியிலிருந்து திருநெல்வேலிக்கும், மதுரையிலிருந்து நாகர்கோவிலுக்கும், திருச்சியிலிருந்து கோயம்புத்தூருக்கும் ஆக ஐந்து ரூட்டுகளில் லாங்கு டிஸ்டன்ஸ் பஸ்கள் இப்பொழுது பெங்களூருக்கு விடுகிற மாதிரி விடப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



இந்த பஸ்களை வைத்து நடத்தும்போது எல்லா பஸ்களையுமே பாடி கார்ட் லைனில் வைத்து நடத்துவது உசிதம் அல்ல. அப்படி நடத்துவது நல்லது அல்ல. நூறு அல்லது 150 பஸ்களை ஒரே இடத்தில் வைத்து நடத்துவது என்பது நல்ல முறை. அதனால் அதற்காக தண்டையார்பேட்டையில் நிலத்தை ஆர்ஜிதம் செய்து அங்கே இவைகளை வைப்பதற்கு நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கிறது. அங்கே உடனடியாக சில பஸ்களை வைத்து நடத்துவதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டி இப்பொழுது காம்பவுண்ட்வால் கட்டவேண்டும். அது சம்பந்தமான வேலையும் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக பிரயாணிகளுடைய அமெனட்டிஸ். தகுந்த அளவில் பிரயாணிகள் தங்குவதற்கு ஷெல்டர்கள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பதினாறு ரூட்டுகளுக்கு இப்பொழுது சீசன் டிக்கட்டுகள் கொடுத்திருக்கிறோம். 1960–61-ல் இன்னும் இரண்டு ரூட்டுகளுக்கு சீசன் டிக்கட்டுகள் கொடுக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். தொழிலாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களுக்கு வசதியாக 20-ம் நம்பர் ரூட்டிலும் 56-ம் நம்பர் ரூட்டிலும் சீசன் டிக்கட்டுகளைக்கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். இதைப்பற்றிய யோசனை இப்பொழுது சர்க்காரிடம் இருக்கிறது. பாசஞ்சர் அமெனட்டிஸ் சம்பந்தமாக வருகிற வருமானத்தில் ஐந்து சத விகிதத்தை தனியாக வைத்து அதாவது "பாசஞ்சர் அமெனட்டிஸ் பண்ட்" என்று வைத்து வசதி செய்து கொடுக்க தீர்மானம் செய்திருக்கிறது. இன்னும் கன்யாகுமரியை எடுத்துக்கொண்டால் அங்கே இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதங்களில் ஒரு வொர்க் ஷாப்பை ஆரம்பிக்கப்போகிறோம். அங்குள்ள சர்க்கார் பஸ்களை எடுத்துக் கொண்டால், கனம் டி. எ. ராமசாமிக்கு நன்றாகத் தெரியும், மூன்று நல்ல பஸ்கள்தான் ஓடிக்கொண்டிருந்தது. மற்றும் 57 தகர டப்பாக்கள் ஓடிக்கொண்டிருந்தன. அவைகள் எல்லாம் இப்பொழுது புதுப்பிக்கப்பட்டு இப்பொழுது 62 பஸ்கள் அங்கே ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தொழிலாளர்கள் சம்பந்தமாக அவர்களுக்கு போனஸ் கொடுக்கும் அளவில் 2,900 தொழிலாளர்களுக்கு 59,000 ரூபாய் போனஸாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ப்ராவிடெண்ட் பண்ட் வசதிகளையும் அதிகரித்திருக்கிறோம். குறிப்பாக வருஷத்திற்கு ஒரு மாதம் கிராச்சுயிட்டி கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நான் சென்ற வருஷத்திலேயே விளக்கியிருக்கிறேன். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலவை அலவன்ஸ் ரூபாய் 1½-யிலிருந்து 2 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மூன்று செட் உடை கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை பூட்ஸ் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சைதாபேட்டை ஹசன் புரம் என்ற இடத்தில் இருபது ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தண்டையார்பேட்டையில் பத்து ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக தொழிலாளர் ஸ்தாபன எக்ஸ்பர்ட் கொடுத்த ரிபோர்ட் இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது. அவருடைய சிபாரிசுபடி சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதன் மீதுள்ள முடிவுகள் இந்த சபையின் மேஜையின் மீது வைக்கப்படும். கனம் அங்கத்தினர்கள் இது சம்பந்தமாக ஆலோசனை கூறியபிறகு மற்றவைகளைச் சொல்லாம் என்று நினைக்கிறேன்.

SRI C. N. ANNADURAI : Sir, on a point of explanation . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய வெட்டு பிரேரணைகளை மூவ் பண்ணட்டும்; அதன் பிறகு சொல்லலாம்.

[Mr. Speaker] [22nd March 1960

Motion moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,10,00,700 under Demand XXXIV—Road Transport Schemes.'

I understand that the cut motion standing in the name of Sri N. K. Palanisami under Demand XXXIV—Road Transport Schemes will be moved.

SRI N. K. PALANISAMI: Sir, I move—

'That the allotment of Rs. 2,10,00,700 under Demand XXXIV—Road Transport Schemes be reduced by Rs. 100.'

MR. SPEAKER: Motion moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,14,60,500 under Demand XLII—Capital Outlay on Road Transport Schemes'.

I understand that the cut motion standing in the name of Sri A. Govindasamy under Demand XLII—Capital Outlay on Road Transport Schemes will be moved.

SRI A. GOVINDASAMY: Sir, I move—

'That the allotment of Rs. 2,14,60,500 under Demand XLII—Capital Outlay on Road Transport Schemes be reduced by Rs. 100.'

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

The hon. Member, Sri Annadurai, wants to say something. He can speak now.

SRI C. N. ANNADURAI: திரு. கோவிந்தசாமி அதைப்பற்றி சொல்வார். நான் பேசப்போவதில்லை.

MR. SPEAKER: May I know how much time does the Hon. Minister require for his reply?

THE HON. SRI R. VENKATARAMAN: Forty minutes.

MR. SPEAKER: The Hon. Minister will begin his reply at 12-45 p.m.



22nd March 1960] [Sri N. K. Palanisami]

இந்த 13 வருஷ காலங்களில் மேலும் நமக்கு ஏற்பட்டிருக்கிற அநுபவத்தை வைத்துக்கொண்டு நல்ல முறையில் இதைச் சீர்திருத்தி வைத்திருக்கலாம். சமீபத்தில் இந்த நிர்வாகத்தில் ஒரு மாறுதல் செய்ததன் காரணமாக சில அபிவிருத்தி ஏற்பட்ட போதிலும்கூட இன்னும் பஸ் போக்குவரத்து மோசமாகவே இருந்து வருகிறது. சர்க்கார் நடத்துகின்ற தொழில்கள் என்ருல் எல்லாம் இப்படித்தான் இருக்குமோ, அவர்கள் இப்படித்தான் நடத்துவார்களோ என்ற ஐயமும் ஜனங்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமன்: நாங்கள் எப்படிச் செய்தாலும் இப்படித்தான் சொல்லிக்கொண்டிருப்பார்களோ என்கிற ஐயமும் ஏற்பட்டிருக்கிறது.) இன்றையதினம் 453 பஸ்கள் இருக்கிறது. ரோடுகளில் ஓடவேண்டியது 320 பஸ்களில் இருந்து 340 பஸ்கள். இவை ஓடியாக வேண்டும். சாதாரணமாக ஒரு பஸ் மாதத்தில் எட்டு தரம் ப்ரேக் டவுன் ஆகிறது. அதைக் கணக்கிட்டால் 70 பஸ்களில் இருந்து 110 பஸ்கள் வரையில் ஷெட்டில் தங்கிவிடுகிறது. பஸ்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு 2 மணி தாமதித்து வருகிறது. இந்தவகையில் 30-ல் இருந்து 40 பஸ்கள் வரை நமக்குப் போய்விடுகின்றன. ஆகவே 260-ல் இருந்து 280 வரைக்கும்தான் பஸ்கள் ரூட்டில் ஓடிக்கொண்டிருக்கின்றன. மொத்தம் உள்ள பஸ்ஸில் மூன்றில் ஒரு பகுதி ஓடாமல் இருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் இது மாதிரியாகப் புள்ளி விவரம் சொன்னுல் எதில் இருந்து சொல்கிருர்கள் என்று தெரியவில்லை. வாய்க்கு வந்தபடி சொல்லிக் கொண்டுபோனுல் எனக்குப் பதில் சொல்ல முடியாது. ஆகவே எதில் இருந்து இந்தப் புள்ளி விவரங்களைச் சேகரித்துச் சொல்கிருர்கள் என்று கேட்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER: On a point of Order, Sir. The hon. Member is a member of the Estimates Committee, which is now going into the question of Nationalised "Transport". Reports and informations have been gathered by the Committee and the Committee has not yet finalised its report. Information gathered by the Committee are to be treated as confidential, according to the instructions given to us. When certain facts gathered by the Committee are given out in the House, it may be out of order. I would request, you, Mr. Speaker, to give your ruling on the same.

MR. SPEAKER: I am not aware of the fact that the Estimates Committee has got certain information with it. I am not also aware of the fact that the hon. Member Sri N. K. Palanisami is a member of that Committee and that he is speaking from some information placed before the Committee. But I support the Hon. Minister that whenever an hon. Member gives statistics, it is desirable in the interests of justice, that he says where his statistics are coming from, so that the Ministers can reply. If as the hon. Member Srinivasa Iyer says the hon. Member Sri N. K. Palanisami is giving out some information gathered by the Estimates Committee, it is better he avoids giving those statistics.

SRI N. K. PALANISAMI rose—

MR. SPEAKER: I want to make it clear. If the hon. Member is a member of the Estimates Committee and he wants to say what he has learnt from the Estimates Committee, he should wait till the Committee presents its report.

SRI T. L. SASIVARNA THEVAR : அவர் எஸ்டிமேட்ஸ் கமிட்டி மெம்பராக இருந்தாலும் அந்தத் தகவல்களை இங்கே இந்தச் சபை மெம்பர் என்ற முறையில் வெளியிடலாம் அல்லவா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : அதைத்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவர் புள்ளி விவரங்களைச் சொல்லலாம். எப்படிக் கிடைத்தது, எங்கே இருக்கிறது என்று சொன்னால் அமைச்சர் அவர்களுக்குப் பார்த்துக் கொள்ள உதவியாக இருக்கும்.

SRI N. K. PALANISAMI : நான் இங்கே பேசுவது சர்க்கார் நடத்துகிற தொழில் நன்றாக நடக்கவேண்டும் என்பதற்காகவே. இந்தச் சர்க்கார் அந்தத் தொழிலை விட்டுவிடவேண்டும் என்ற முறையில் பேச வரவில்லை.

இங்கே கிட்டத்தட்ட 107 பஸ் ரூட்டுகள் இருக்கின்றன. ஓடிக்கொண்டிருக்கக்கூடிய பஸ்களை எடுத்துக்கொண்டால் 250 தான். ஒரு ரூட்டுக்கு 2½ பஸ்கூட இல்லை. சாதாரணமாக தனிப்பட்ட முதலாளிகள் இரண்டு பஸ்களுக்கு ஒரு ஸ்பேர் பஸ் வைத்துக்கொண்டிருக்கிறபோது நாம் நமக்குத் தேவையான ஸ்பேர் பஸ்களை வைத்துக்கொள்ளாமல் இதை [illegible]மாக நடத்த முடியாது. ஆகவே மொத்த பஸ்களின் எண்ணிக்கையை இன்னும் ஒரு நூறாவது உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டும் அல்ல. இவ்வளவு ப்ரேக் டவுன்கள் ஆகிறதே, இதைக் குறைப்பதற்கு சில புதிய என்ஜின்களை வைத்து இருந்தால் ஏதாவது கோளாறு ஏற்பட்டால்கூட உடனே புதிய என்ஜின்களை வைத்து அந்த ப்ரேக் டவுன்களைத் தவிர்த்திருக்க முடியும். ஆகவே இந்தமாதிரியான குறைபாடுகளை நாம் நீக்காத காரணத்தினால் இன்றையதினம் நமக்கு 1 கோடியே 84 லட்சம் ரூபாய் அதில் இருந்து வந்தபோதிலும் 3-ல் ஒரு பங்கு 60 லட்சம் ரூபாய்க்கு அதன் மூலம் நஷ்டம் வருகிறது என்பதை இந்த ப்ரேக் டவுன் காட்டுகிறது.

அதுமட்டும் அல்ல. மந்திரி அவர்களே சொல்கிறார்கள், அதிகப்படியான செலவு ஆகிறது என்று. கிட்டத்தட்ட 23 லட்சத்திற்கு ஸ்பேர் பார்ட்ஸுகளுக்காக செலவாகிறது. எண்ணெய்ச் செலவு. இந்த எண்ணெய் வாங்கக்கூடிய முறையில் எவ்வளவு பஸ்கள் ஓடுகிறதோ அதற்கு வாங்கப்படுகிறதா, மொத்த பஸ்களுக்கு வாங்கப்படுகிறதா என்ற கணக்கு இல்லை. இன்றைய தினம் கிட்டத்தட்ட வருஷம் ஒன்றுக்கு 7-ல் ஒரு பகுதி புதிய பஸ் போடப்படுவதாகச் சொன்னார்கள். இந்த புதிய பஸ்கள் 8 வருஷம் ஓடுகின்றன. ஆனால் இந்த எட்டு வருஷம் கழித்து அவை என்ன செய்யப்படுகிறது என்றால் அப்படியே ஏலம் போட்டு விடுகிறார்கள். ஏலத்தில் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய், மூவாயிரம் ரூபாய்க்குத் கூடப்போவதில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்வது எல்லாம் தப்பாகவே இருப்பதனால் நான் என்ன பண்ணுவது ? எங்கிருந்து இந்தப் புள்ளிவிவரங்கள் கிடைத்தது என்றும் சொல்லவில்லை. எட்டு வருஷம் ஆனவுடன் எந்த பஸ்ஸும் ஏலம் போடப்படுவதில்லை. ஓடும் வரையில் அது ஓடிக்கொண்டே தான் இருக்கிறது.

SRI N. K. PALANISAMI : The Hon. Minister himself said that every year the buses will be replaced.



SRI N. K. PALANISAMI : ஆகவே இம்மாதிரி முறையில் ஏலம் போடுவது சரியில்லை. அதில் இருக்கக்கூடிய பொருள்களுக்குக் கணக்குக் கிடையாது. அப்படியே ஏதாவது ஒரு கம்பெனிக்கு விற்றுவிடலாம். அதன் மூலம் நமக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்காது.

இன்னும் மெயின்டினன்ஸை எடுத்துக்கொண்டால் அந்த பஸ்களுக்கு சிலரை பொறுப்பாளியாக வைக்கவேண்டும். க்வாலிபைட் என்ஜினியர்கள் கிடையாது. மூன்றும் பாரம் படித்தவர்களையே வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அது எப்படி இருக்கும் ? காரணம் கேட்டால் க்வாலிபைட் என்ஜினியர்கள் கிடைக்கவில்லை என்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த சம்பளம் கொடுத்தால் வருவார்கள். அந்த பஸ்களை இருபது முப்பது ஆகப் பிரித்து அதற்கு டிரைவர், கண்டக்டர் முதலியவர்களைப் பொறுப் 10-00 a.m.
பாளியாக்கவேண்டும். அப்படி இப்போது கிடையாது. எந்த டிரைவர் எந்த பஸ்ஸை வேண்டுமானாலும் எடுக்கலாம் என்று இருக்கிறது. ஆகவே யாரும் பொறுப்பாக இருப்பது இல்லை. ஒரே சமயத்தில் நான்கு பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் போகின்றன. இதற்குக் காரணம் சரியான டைம் டேபிள் கிடையாது. டைம்டேபிள் பிரகாரம் சரியாக இருக்கிறதா இல்லையா என்பதை செக் பண்ணுவதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா ? ஒரு டிரைவர் எவ்வளவு தூரம் போகவேண்டுமென்று பிரித்து கொடுத்திருக்கிறதே தவிர எந்தெந்த டிரிப் எந்த நிமிஷத்தில் போய்ச் சரியாக சேருகிறது என்று கவனித்தால் முறையாக அந்தந்த நேரத்திற்கு போய் சேருகின்ற நிலை ஏற்படும்.

தனிப்பட்டவர்கள் பஸ்ஸில் 50 பேர்களுக்கு மேல் ஏற்றுவது கிடையாது. ஆனால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸில் 75, 100 பேர்களை ஏற்றுகின்றார்கள். இதன் காரணமாக பேரிங் சீக்கிரம் தேய்ந்து விடுகிறது. இந்த நெருக்கடியை சீக்கிரம் தீர்க்கவேண்டுமென்றால் குறைந்தது 100 பஸ்களாவது அதிகப்படுத்தவேண்டும். பஸ்ஸை அதிகப்படுத்தாவிட்டால் நெருக்கடியைத் தீர்க்க முடியாது.

தொழிலாளர்களுக்கு இன்ஸெண்டிவ் கொடுக்கவேண்டும் என்பதைப் பல இடங்களில் பார்க்கிறோம். 120 ரூபாய்க்கு மேல் சம்பளம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய போனஸ் கொடுக்கிறார்கள். பம்பாயில் பி.ஈ.எஸ்.டி. ஸ்தாபனத்திலே வாழ்க்கை புள்ளி எந்த அளவு இருக்கிறதோ அந்த அளவு அவர்களுக்கு அலவன்ஸ் கொடுக்கிறார்கள். அங்கு இருக்கும் ஜனங்கள் வசதியாக இருக்கும் முறையில் மிகவும் குறைந்த கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இங்கே அதிகக் கட்டணம் வசூல் செய்து குறைந்த அளவு வசதி கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி குறைபாடுகளை சர்க்கார் நீக்கி சரியான முறையில் நடத்துவதற்கு திட்டம் போடுவார்கள் என்று நினைக்கிறேன்.

*SRI M. S. SELVARAJAN : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டுவந்திருக்கும் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். கடந்த 1947-ம் வருஷம் முதல் முதலாக சென்னைப் பட்டணத்தில் 30 பஸ்களுடன் இந்த டிரான்ஸ்போர்ட்டை ஆரம்பம் செய்தார்கள். இன்றைய தினம் சென்னை நகரத்தில் 450 பஸ்களும் கன்னியாகுமரியில் 90 அல்லது 100 பஸ்களும் விடக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். சென்னை நகரத்தில் டிராம் மூலமாக சொற்ப செலவில் போக்குவரத்து வசதி இருந்துகொண்டிருந்தது. டிராமினால் மிகவும் நன்மைகள் ஒருபுறம் இருந்தபோதிலும்கூட போக்குவரத்துக்கு இடைஞ்சலைக் குறைப்பதற்காக அதை மாற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த நேரத்தில் ராஜ்யத்தின் தலைநகரில் இருந்த குழப்ப நிலையிலே நமது சர்க்கார் டிரான்ஸ்போர்ட்டை ஏற்று மிக தைரியமாக நல்ல முறையிலே சமாளித்து டிராமை மறக்கக்கூடிய நிலைமை உண்டுபண்ணி இருக்கிறார்கள் என்பது போக்குவரத்து இலாகாவிற்கு ஒரு நல்ல அத்தாட்சியாக நாம் சொல்ல முடியும். இதுபோல் சமீப நாட்களில் டாக்ஸி டிரைவர்கள் [illegible] பல துறைகளில் போக்குவரத்து வசதி செய்துகொண்டு இரு[illegible] [illegible]வர்கள் எல்லாம் சரியோ தப்போ அவர்கள் [illegible] [illegible] செய்து போக்குவரத்தை நிறுத்தக்கூடிய அ[illegible]

களும் ஏற்படுகின்ற அந்த நேரத்தில் எல்லாம் சென்னை பஸ் டிரான்ஸ்போர்ட் தகுந்த அளவு, ஜனங்களினுடைய திருப்திக்கு உகந்த அளவு வசதி செய்து நல்ல பெயர் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த பல வருஷங்களில் உள்ள புள்ளி விவரங்களை எடுத்துப்பார்க்கும்போது ஒவ்வொரு வருஷமும் குறைந்தது 83 ஆயிரம் ரூபாய் லாபமாவது வரக்கூடிய நிலைமையும், அதிகபட்சம் 27 லட்சம் ரூபாய் லாபம் வரக்கூடிய நிலைமையிலே கடந்த 12 வருஷ காலத்தில் பஸ் டிரான்ஸ்போர்ட் நடந்து வந்திருக்கிறது. அதுமட்டும் அல்ல, லாப நோக்கத்தில் மாத்திரம் இந்த பஸ் டிரான்ஸ்போர்ட் ஆரம்பிக்கப்படவில்லை. இன்றைய தினம் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களில் இருந்து அதிக பேர் பிரயாணம் செய்கிறார்கள் என்று தெரிகிறது. அதிக இடங்களில் பஸ்கள் பழுது அடைந்து ஆங்காங்கே நிறுத்தப்படுகின்ற நிலைமை பெரும்பாலும் குறைந்து அதிக வருமானம் வந்திருக்கிறது. அதிக அளவு புதிய பஸ்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. புதிய பஸ் ரூட்டுகள் அங்காங்கே தருவதற்கு ஏதுக்கள் உண்டு பண்ணியிருக்கிறோம் என்பதெல்லாம் நமக்கு நல்ல பெயரை சம்பாதித்து கொடுத்திருக்கக்கூடிய அம்சங்கள் ஆகும். இந்த நிலையில் பஸ் டிரான்ஸ்போர்ட் 12 வருஷங்களாக வேகமாக சென்றுகொண்டிருக்கிறது என்பதைத் தாராளமாக சொல்லமுடியும்.

குறிப்பாக சென்னையிலிருந்து நீண்டதூரம் பெங்களூர் வரை செல்லும் பஸ்களை ஏற்படுத்தி லாபகரமாக நடத்திக்கொண்டிருப்பதும், மேலும் பல பஸ் ரூட்டுகளை ஏன் திறந்து புதிய நல்ல வசதிகளை செய்துக் கொடுக்க முடியாது என்ற நிலைமையை நோக்கி நம்மை அழைத்துச் செல்கிறார்கள். இதுபோலவே வேறு ஒரு நல்ல அம்சமும் பார்க்கிறோம். வரக்கூடிய லாபம் மாத்திரம் நம் நோக்கம் அல்ல. இதைக் கருத்தோடு வைத்துக் கொண்டு அரசாங்கம் கிடைக்கக்கூடிய லாபத்திலிருந்து ஒரு பகுதியை ஈயர் மார்க் செய்து ஜனங்களுடைய வசதிக்கு ஒதுக்கக்கூடிய நிலைமையை உண்டு பண்ணியிருக்கிறார்கள். இது நல்ல சிறந்த அம்சம். பல்வேறு வசதிகள் செய்துக்கொண்டிருந்த போதிலும், பஸ்களில் ஏற்படும் பழுதுகளை சீர்திருத்துவதற்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் தேவைப்படுகின்றன. இந்தியா முழுவதற்கும் ஏற்பட்டிருக்கும் கமிட்டியினுடைய ரிபோர்ட்டில் குறைந்தபட்சம் ஒரு பஸ்க்கு வருடம் ஒன்றுக்கு தொளாயிரம் ரூபாய் வரையிலும் ஸ்பேர் பார்ட்ஸ்க்கு செலவிட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இந்த அளவிற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு உரிய அனுமதி நமக்கு கிடைக்கவேண்டும். இன்றைக்கு இருக்கும் இறக்குமதிக் கொள்கையின்படி நமக்கு அதிகபட்சமாக பஸ் ஒன்றுக்கு கிடைத்து வந்தது 200 ரூபாய்தான். ஆனால் நம்முடைய முறையீட்டின் பிரகாரம் 300 ரூபாய் வரை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது போதுமானது அல்ல. இதை கவனித்து இறக்குமதிக் கொள்கையை தடையாக இல்லாத அளவிற்கு ஜனங்களினுடைய சௌகரியத்திற்கு வேண்டிய பஸ்கள் அவ்வப்போது செப்பனிடப்படும் முறையில் ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.



லிருந்து பல ரயில்கள் வருகின்றன. அந்த நேரத்தில் மாணவர்களுக்கு ஸ்பெஷல் பஸ் விடுவது போல் சில ஸ்பெஷல் பஸ்கள் விடுவதற்கு வசதி செய்வது நலமாக இருக்கும். அப்படிச் செய்தால் டாக்ஸி டிரைவர்களிடம் அனாவசியமாகச் சிரமத்திற்கு ஆளாகாமல் இருக்க முடியும்.

இரவு நேரங்களில் பஸ்கள் ஷெட்டுக்குப் போவதாக போர்டுகளைப் போட்டுக் கொண்டு எங்கும் நிற்காமல் திரும்பிக் கொண்டிருக்கின்றன. அவைகளில் எந்த விதமான பிரயாணிகளும் ஏற்றிக்கொள்ளப்படுவது கிடையாது. பெரும்பாலும் எல்லா பஸ்களும் ஷெட்டுகளுக்கு வரும்போது மவுண்ட் ரோடு வழியாகப் போகும்படி இருக்கிறது. அதுவரையாகிலும் பிரயாணிகளை ஏற்றிக்கொள்ளலாம். பஸ்ஸில் சேருகிற இடம், குறிக்கிற பெயர் பலகையையோ ரூட் நெம்பரையோ தெளிவாகப் போடுவது கிடையாது. இந்தக் குறையும் போக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட நேரங்களில் சில பஸ்கள் வராமல் தாமதமாக வரும்போது கண்டக்டர்கள் பொறுமையை இழந்து வழியில் இருக்கும் பிரயாணிகளை ஏற்றிக்கொள்ளாமல் நேராகச் சென்றுவிடுகிறார்கள். இடம் இருந்தாலும்கூட கையைக் காட்டி இடம் இல்லை என்று சொல்லிக் கொண்டு வேண்டுமென்றே விட்டுக் கொண்டு செல்கிறார்கள். இது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பாக இரவு நேரங்களில் அப்படி நடந்தால் அது மிகுந்த சிரமத்தைக் கொடுக்கிறது. இரவு நேரத்தில் பஸ்களைத் தவிர வேறு போக்குவரத்து வசதி இல்லாமல் இருப்பதால் இந்தக் குறை தவிர்க்கப்பட வேண்டியது அவசியம். டிரைவர் கண்டக்டர்களுக்கும் நன்மை செய்ய வேண்டிய எல்லா வசதிகளைக் கொடுப்பது அவசியம். ஆனால் அவர்களிடம் இலாகாவினர் எந்த அளவு கண்ட்ரோலும் கண்டிப்பும் காட்டவேண்டுமோ அந்த அளவு காட்டுவதில்லை என்பது பொதுஜனங்களுடைய அபிப்பிராயம். சர்க்கார் அப்படிச் செய்தால் பஸ் நிர்வாகத்தை நல்ல விதத்தில் நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும்.

திருநெல்வேலியில் இருந்து கன்னியாகுமரிக்கு உள்ள ரூட்டை சர்க்கார் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று திட்டம் இட்டிருக்கிறார்கள். இதற்கு மத்தியில் வள்ளியூர் என்னும் இடம் இருக்கிறது. திருச்செந்தூரில் இருந்து வள்ளியூருக்கு குறுக்கு வழியாகப் போகும் அந்த ரூட்டில் பஸ் விட வேண்டுமென்று விண்ணப்பித்தவர்களுக்குத் தரப்படவில்லை. சர்க்கார் எடுத்துக்கொள்ளப்போகும் ரூட்டிற்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. திருநெல்வேலி-கன்னியாகுமரி மார்க்கத்தில் வள்ளியூர் இருக்கிறது. திருச்செந்தூர்–வள்ளியூர் ரூட் கேட்டவர்களுக்கு பஸ் ரூட் கொடுக்கப்படவில்லை. அதற்கு எந்தவிதமான காரணமும் எடுத்துக் கூறவில்லை. இது போன்ற சிரமங்கள் வேறு இடங்களில் இருக்குமானாலும் இது தவிர்க்கப்பட வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

இந்த இலாகாவில் வேலை செய்யக்கூடியவர்கள் ஸ்டாப் செக்ஷன் அதிகமாக வேலை செய்யக்கூடியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கணிசமான அளவு குறைக்கப்பட வேண்டுமென்பது என்னுடைய பணிவான கோரிக்கை. எனக்குத் தெரிந்தவரை இந்த இனத்தில் செலவு அதிகமாக இருக்கிறது. இது தவிர்க்கப்படலாம். இது போன்று சென்னை நகரத்தில் ஜனங்களுக்கு பல்வேறு துறையில் இந்த பஸ் டிரான்ஸ்போர்ட் நல்ல வேலை செய்வதற்கு முயற்சிக்கிறது. நாம் எந்த அளவு நல்லவிதமாக செய்து கொடுக்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் இந்தத் துறையிலே சர்க்கார் தைரியமாக வேறு துறைகளையும் எடுத்துக்கொண்டு இது போன்று தொழில்களை நடத்துவதற்கு முடியும்.

இருக்கின்றன. இந்த டாக்ஸிகள் இருப்பதால் சர்க்காருக்கு கிடைக்கும் வருவாய் குறைகிறது. இந்த டாக்ஸிகாரர்கள் மக்களிடம் பேரம் பேசி அதிகப்படியான ரூபாய் வாங்கிக்கொண்டு போகிறார்கள்.

இன்றையதினம் மற்றும் பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இதில் நான் கடைசியாக முக்கியமாக கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த டிரான்ஸ்போர்ட் தொழிலில் மட்டும் சர்க்கார் தலையிடக்கூடாது என்பதுதான். தனிப்பட்டவர்கள் இதில் ஈடுபட்டால்தான் அதிகமான அளவில் அக்கறை செலுத்த முடியும். சர்க்கார் நடத்துவார்கள் என்றால் அமைச்சர்களோ அல்லது காரியதரிசியோதான் இதில் அக்கறை காண்பிக்கவேண்டும். அவர்கள் எல்லாம் இதை சரியாகப் பார்த்துக்கொள்ள முடியாது. ஆகவே, விவசாயம், கைத்தொழில்கள், இம்மாதிரிப்பட்டத் துறைகளில் சர்க்கார் தலையிட்டால் நல்ல திறமையாக நடைபெறாது. ஆகவே, தனிப்பட்டவர்கள் இதில் அக்கறை செலுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இப்போதுள்ள நிலையில் சென்னை நகரத்தில் நடந்து கொண்டிருக்கின்ற பஸ் சர்வீசையும் கன்னியாகுமரி பகுதியில் நடந்துகொண்டிருக்கின்ற பஸ் சர்வீசையும் தவிர வேறு ஒன்றையும் சர்க்கார் வைத்துக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை நான் ஆதரிக்கிறேன்.

* **Sri A. GOVINDASAMY**: கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சர்க்கார் பஸ்களை எல்லாம் தேசீயமயமாக்கும் விஷயத்தைப்பற்றி குறிப்பிடும் நேரத்தில் இந்தத் திட்டம் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்பதற்காகத் தான் இந்த வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபித்து இருக்கிறேன். மேலும் சர்க்கார் நடத்துகின்ற வொர்க்ஷாப்பிலேயே பாடி பில்டிங் தொழிலும் நடைபெற வேண்டும் என்பதும் என்னுடைய வெட்டுப் பிரேரணையின் நோக்கமாகும். சர்க்கார் தேசீயமயமாக்கியிருக்கின்ற இந்தத் தொழிலில் லாபம் அதிகம் கிடைக்கவேண்டும் என்பது மட்டும் அல்ல, திறமையாகவும், லாபகரமாகவும் வெற்றிகரமாகவும் நடக்கவேண்டும் என்று சொன்னால் இதில் நாம்தான் அதிக அக்கறையோடு—இந்த வொர்க்ஷாப்பையும், பாடி பில்டிங் செய்வதிலும் வேண்டிய ஏற்பாட்டையும்—செய்தாகவேண்டும். அதற்கு மாறாக பாடி பில்டிங் உரிமையை மட்டும் டி.வி.எஸ். கம்பெனிக்கோ அல்லது சிம்ஸன் கம்பெனிக்கோ கொடுக்கிறோம் என்று சொன்னால், சர்க்கார் வொர்க்ஷாப்பை வைத்துக்கொண்டு நடத்துவதினால் என்ன லாபம் என்று கேட்க விரும்புகிறேன். தனியார்களுக்கு ஏன் இந்தச் சலுகை கொடுக்கப்பட வேண்டும் என்பதை, அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார்களைவிட சர்க்கார்தான் திறமையாகக் கட்ட முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அமைச்சர் அவர்கள் வேண்டுமென்றால், தொழிலாளர்கள் போதுமான அளவுக்கு இதற்கு ஒத்துழைக்கவில்லை என்று சொல்லலாம் . . .

**The Hon. Sri R. VENKATARAMAN**: தப்பான காரணங்களைச் சொல்லக்கூடாது என்பதற்காக குறுக்கிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சென்னை க்ரோம்பேட்டை வொர்க்ஷாப்பைப் பொறுத்த அளவில் 84 பஸ்கள் கட்ட முடியும். இந்த வருஷத்திற்கு மட்டும் 116 பஸ்கள் கட்டப்பட வேண்டும். அடுத்த வருஷத்திற்கு 140 பஸ்கள் கட்டப்பட வேண்டும். அதனால்தான் வெளியில் கொடுக்கப்பட்டது. சர்க்காரே கட்டுகிற விஷயத்தைப் பற்றி ஆலோசனை இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி பின்னால் சொல்லலாம் என்று கருதுகிறேன்.





வில்லை. வொர்க்ஷாப்பை வைத்துக்கொண்டு நாமே பஸ்களை கட்டினால் தான் நன்றாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், அமைச்சர் அவர்களை நான் தெளிவாக கேட்க விரும்புவது, தனிப்பட்ட நபர்கள் நடத்துகின்ற பஸ் சர்வீஸில் கிடைக்கின்ற லாபத்திற்கும், சர்க்கார் நடத்துகின்ற சர்வீஸில் கிடைக்கின்ற லாபத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது, இதிலுள்ள விகிதாச்சாரம் என்ன, இதிலிருக்கின்ற அடிப்படை வித்தியாசம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது வேறு ராஜ்யங்களில் எல்லாம்—மைசூரில், பம்பாயில்—பஸ்களை எல்லாம் தேசீயமயமாக்கியிருக்கிறார்கள். அந்த ராஜ்யத்தில் கிடைக்கிற லாபத்திற்கும் நம்முடைய ராஜ்யத்தில் கிடைக்கிற லாபத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்கிற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்றால், அதில் நமக்கு லாபம் கிடைக்கவில்லை என்றால் ஏன் நமக்கு லாபம் கிடைக்கவில்லை என்பதை நாம் கவனிக்க முடியும். எதிர்பார்த்த லாபமும் கிடைக்கவில்லை, மக்களுடைய சௌகரியமும் அதிகரிக்கவில்லை, நிலைமை சீர்திருந்தவும் இல்லையென்றால், இதற்கு என்ன காரணம் என்பதை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். பஸ்களை எல்லாம் தேசீயமயமாக்கும் விஷயத்தில் ஆளும் கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்கள் தேசீயமயமாக்கக்கூடாது என்று சொல்வதின் காரணம், சர்க்கார் நடத்தும் நிர்வாகம் வெற்றிகரமாக ஆகிவிட்டால், தனியார்கள் நடத்தும் பஸ் சர்வீஸ்கள் போய்விடும் என்ற அச்சத்தினால்தான் இவ்விதம் சொல்லுகிறார்களோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. ஆகவே இம்மாதிரியான சந்தேகங்களைத் தவிர்க்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தவிர்த்துவிட்டால் நிச்சயமாக அரசாங்கம் நடத்துகின்ற பஸ் சர்வீஸ் இன்னும் கூடுதல் லாபம் பெற முடியும். தனிப்பட்டவர்கள் நடத்தும் பஸ் தொழில் லாபமாய் இருக்கிறது என்ற காரணத்தினால்தான் பலரும் பஸ் ரூட்டை நாடிப்போய்க்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் ஏன் குறைவான லாபம் பெற்றுக்கொண்டிருக்கிறது என்றால், அதற்குப் பல காரணங்கள் இருக்கிறன. பஸ்கள் எல்லாம் சரியாக போய்க்கொண்டிருப்பதில்லை. பல "கய்" (Guy) பஸ்களும் ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாமல் ஓடாமல் நிற்கின்றன. இம்மாதிரி ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாத காரணத்தின் பேரில் பல பஸ்கள் கண்டெம் செய்யப்பட்டு ஓடாமல் இருக்கின்றன. அப்படியே சர்வீசுக்கு லாயக்கில்லை என்று ஒதுக்கப்பட்ட பஸ்களை உடனடியாக ஏலத்தில் போட்டால் அரசாங்கத்திற்கு நல்ல வருவாய் கிடைக்கும். அதுவும் செய்வதில்லை என்று தெரிகிறது. ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்காக டைரக்டருக்கு—5,000 ரூபாய் வரையில் வாங்கிக் கொள்வதற்கு—அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஸ்பேர் பார்ட்ஸ்களை டெண்டர் மூலம் வாங்கிக்கொள்வதற்கு அதிகாரம் கொடுத்திருந்தும் சரியான சமயத்தில் ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாமல் வண்டிகள் ஓடாமல் நிற்கின்றன என்ற நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு நமக்கு என்னென்ன பஸ்கள் இருக்கின்றனவோ அவற்றுக்கு எல்லாம் வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ்களை எல்லாம் முன் கூட்டியே ஒட்டுமொத்தமாக வாங்கி வைத்துவிட்டால் இந்த நிலைமை ஏற்படாது என்று கருதுகிறேன். டைரக்டருக்கு இந்த உரிமை கொடுக்க வேண்டியது அவசியம்தானா என்பதையும் நாம் ஆலோசிக்கவேண்டும். அதோடு ரிப்பேர் ஆனவைகளை எல்லாம் ரீகண்டிஷன் செய்வதற்குத் தகுந்த வகையில் வொர்க்ஷாப்பை நல்ல முறையில் அமைத்து வைத்திருக்க வேண்டும். வொர்க்ஷாப்புக்கு நாம் வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற பல அதிகாரிகளை நியமிக்கவேண்டும். அவ்விதம் அனுபவம் பெற்றவர்களை அதிகமாகப் போடவேண்டும். அப்போது வொர்க்ஷாப் நல்ல முறையில் நடைபெற முடியும். அதோடு அரசாங்கத்தினுடைய வேலையும் அதிகரிக்கும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். அரசாங்கம் இங்கு வைத்திருக்கின்ற டிப்போவை எடுத்துக்கொண்டால், பஸ்களைக் கழுவுவதற்குக்கூட நல்ல தண்ணீர் கிடையாது, உப்புத் தண்ணீர்தான் இருக்கிறது. உப்புத் தண்ணீரில் [illegible] போது நல்ல பஸ்கள் எல்லாம்

[Sri A. Govindasamy] [22nd March 1960

வேலைசெய்கின்ற தொழிலாளர்களுக்கு குடிப்பதற்குக்கூட நல்ல தண்ணீர் கிடையாது. அங்கு நடக்கின்ற மெயின்டினன்ஸ் எல்லாம் வெறும் பக்கட் வாஷிங்தான் நடக்கிறது. அதுவும் எல்லா பஸ்களையும் வாஷ் செய்வதில்லை. மேலும் குறிப்பாக நான் சொல்ல விரும்புகிறேன், அங்கு வேலை செய்கிற அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நெருங்கிய உறவு உண்டாக வேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தின் இந்தத் தொழில் நல்ல முறையில் திறமையாகவும், மக்களுக்காக நடைபெறக் கூடிய ஒரு நிர்வாகமாகவும் நடத்த முடியும். அதற்கேற்ற ஒரு சூழ்நிலை அங்கு ஏற்படவேண்டும். இன்றைய தினம் அங்கு இருக்கின்ற நிலைமையை எடுத்துக்கொண்டால் அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நெருங்கிய பாச உணர்ச்சியில்லாமல், அதிகாரிகளைத் தொழிலாளர்கள் குறை சொல்லுகின்ற முறையும், தொழிலாளர்களை அதிகாரிகள் குறை சொல்லுகின்ற முறையும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். தொழில் ஸ்தாபனங்களில் தொழிலாளர்களுக்கும் பங்கு இருக்கவேண்டும் என்று அடிக்கடி அமைச்சர் அவர்கள் இங்கு சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் அதன் அடிப்படையில் இங்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். நான் அதிகாரிகளின் மீது குறை கூறவேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. நான் குறிப்பிட்ட அத்தகைய உறவு இருந்தால்தான் தேசீயமயமாக்கப்பட்ட தொழில் திறமையாகவும் வெற்றிகரமாகவும் லாபகரமாகவும் நடக்கும். இன்றைய தினம் பஸ்ஸில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு இடம் வாங்கியிருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். மகிழ்ச்சியும் அடைகிறேன். ஆனால் வீடுகட்டி கொடுப்பதற்காக தொழிலாளர்கள் பணம் கட்டியிருக்கிறார்கள். இவ்விதம் பணம் கட்டி இரண்டு ஆண்டுகள் ஆகியும் வீடு கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன் வரவில்லை.

மேலும் லக்ஸுரி பஸ் சர்வீஸ் நடத்தும் விஷயத்தில் ஒரு நபர் 10 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். இதன் மூலம் சுமார் 46 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. இதைக் குறைத்து ஐந்து ரூபாய் என்று நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்விதம் குறைத்தால்தான் அரசாங்கம் நடத்துகின்ற பஸ்ஸில் பொதுமக்கள் செல்லுவார்கள். மேலும் இங்கு 16 பஸ் ரூட்டுகளில் ஸீஸன் டிக்கட் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. என் எல்லா ரூட்களிலும்
10–30 a.m. கொடுக்கக் கூடாது என்று பொதுமக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட 16 ரூட்களில் மட்டும் ஸீஸன் டிக்கட் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் மற்ற ரூட்களில் ஸீஸன் டிக்கட் கொடுக்கப்படவில்லை என்று சொல்வது நியாயமாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிண்டி ரேஸுக்கு ஸ்பெஷல் பஸ் விடுகிறார்கள். அது அவசியம் தானா? ரயில் ஓடுகிற பாதையில் இருக்கக்கூடிய கிண்டிக்கு தனியாக பஸ் எதற்காக விடவேண்டும். இந்த நிலைமையில் அதில் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்பது எனது வேண்டுகோள்.



22nd March 1960] [Sri A. Govindasamy]

டிக்கட் கேட்க முடியாது. இன்ஸ்பெக்டர் செக்கிங்கிற்கு வரும்போது அந்தக் குழந்தையைப் பார்த்துவிட்டு, அந்தக் குழந்தைக்கு 3 வயது இருக்கும், ஏன் டிக்கட்டு கொடுக்கவில்லை என்று நடவடிக்கை எடுக்கக் கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். ஒரு இடத்தில் ஓவர்லோடு ஏற்றவில்லை என்ற காரணத்திற்காக கண்டக்டரை அந்த இடத்திலேயே இறக்கிவிட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, இப்போது அரசாங்கமே மறைமுகமாக எவ்வளவு வேண்டுமானாலும் ஓவர்லோடு ஏற்றலாம் என்று செய்திருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அரசாங்கம் நடத்தக் கூடிய பஸ்களில் அதிகமாக பிரேக்டவுன் வருகிறது. அதைத் தடுக்க என்ன முயற்சிகள் எடுத்தோம், என்ன நடவடிக்கைகள் எடுத்தோம் என்று பார்க்கவேண்டும். மற்ற ராஜ்யங்களில், தேசீயமயமாக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கிற இடங்களில், அப்போதே மெக்கானிக் சென்று ஸ்தலத்திலேயே ரிப்பேர் செய்து உடனே பஸ்கள் ரூட்டில் போகக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். இங்கேயும் அந்த நிலைமையை உண்டாக்க என்ன நடவடிக்கை எடுத்தோம்? இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும். ஓரளவுக்கு பிரேக் டவுனைக் குறைத்திருக்கிறோம் என்று பெருமைபட்டாலும் இன்னும் கணிசமான அளவு குறைத்தாகவேண்டும். இப்போது 4 மணி நேரம் வேலை செய்துவிட்டு, பிரேக் டவுன் என்று சொல்லி வேண்டுமென்றே பஸ்ஸை டெப்போவிற்குக் கொண்டுவருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 4 மணி நேரம் வேலை செய்து விட்டால் அன்றைய தினத்திற்கான பாட்டா கிடைத்துவிடும் என்று வேண்டுமென்றே கொண்டு வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதிலுள்ள உண்மையைப் பரிசீலிக்கவேண்டும். வேண்டுமென்றே வொர்க்ஷாப்பிற்குக் கொண்டுவருகிறார் என்றால் டெப்போவிற்குக் கொண்டுவருகிற நேரத்தில் மெகானிக் ஸ்தலத்தில் பார்த்து ஸர்ட்டிபிகேட் கொடுத்து இன்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன, இன்னென்ன ரிப்பேர்கள் இருக்கின்றன என்று பார்த்துதான் கொண்டு வரப்படுகிறது. வண்டியைக் கொண்டு வருகிற நேரத்தில் மெக்கானிக் பார்த்து குறைபாடு கிடையாது, வேண்டுமென்றே கொண்டு வந்தார்கள் என்று எத்தனை கேஸ்கள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். இம்மாதிரி வேண்டுமென்று தொழிலாளர்கள் மீது சொல்லப்படுகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் சர்க்கார் பஸ் ஊழியர்களை என். ஜி. ஓ. க்களோடு பிணைத்திருக்கிறார்கள். இதையும் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிற சம்பளக் கமிஷன் பரிசீலிப்பார்கள் என்று எண்ணுகிறேன். தொழிலாளிகள் 8 மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்று வாயளவில் சொல்லி விட்டு அவர்கள் 9 மணி நேரம், 10 மணி நேரம் வேலை செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது.

இன்றைய தினம் கண்டக்டர்களிடம் நயா பைஸா கொடுக்கிறார்கள். 5 ரூபாய் அளவுக்குக் கொடுக்கிறார்கள். சில சமயங்களில் நயா பைஸாவிற்கு பதில் 4 அணா, 8 அணா நாணயங்களாகக் கொடுக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய பணமானது ஒரு ட்ரிப்பிலேயே செலவழிந்து போய்விடுவதால், மக்களிடம் சில்லரை கொடுக்கும்படி கேட்கும்படியான நிலையில், சில்லரை இருந்தால்தான் டிக்கட் கொடுக்க முடியும் என்று சொல்லக் கூடிய நிலையில், பொது மக்கள் "சில்லரை இல்லாமல் என்ன ஐயா கண்டக்டர் [illegible]யிருக்கிறது" என்று சண்டையிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகையால் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய இம்ப்ரெஸ்ட் காஷை உயர்த்தித் தரவேண்டும். குறைந்த பட்சம் 10 ரூபாயாகவாவது அதை உயர்த்தித் தரவேண்டும். அத்தனையையும் நயா பைஸாவாகவே கொடுக்கவேண்டும், 4 அணா, 8 அணா நாணயங்களாகக் கொடுக்கக்கூடாது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் இந்தத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் நடத்துகிற பஸ் தொழிலில் உரிமை தருகின்ற முறையில் இதிலே வரக் கூடிய லாபத்தில் அவர்களுக்கும் பங்கு உண்டு, போனஸ் உண்டு என்று சொன்னால் அவர்கள் உற்சாகமாக வேலை செய்யக் கூடிய நிலைமை ஏற்படும். ஓடக் கூடிய பெரிய பஸ்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு கண்டக்டர்களைப் போட்டால், டிக்கட்டு வழங்குவதில் வசதியாக இருக்கும். இந்த

[Sri A. Govindasamy] [22nd March 1960

வேலைசெய்கின்ற தொழிலாளர்களுக்கு குடிப்பதற்குக்கூட நல்ல தண்ணீர் கிடையாது. அங்கு நடக்கின்ற மெயின்டினன்ஸ் எல்லாம் வெறும் பக்கட் வாஷிங்தான் நடக்கிறது. அதுவும் எல்லா பஸ்களையும் வாஷ் செய்வதில்லை. மேலும் குறிப்பாக நான் சொல்ல விரும்புகிறேன், அங்கு வேலை செய்கிற அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நெருங்கிய உறவு உண்டாக வேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தின் இந்தத் தொழில் நல்ல முறையில் திறமையாகவும், மக்களுக்காக நடைபெறக் கூடிய ஒரு நிர்வாகமாகவும் நடத்த முடியும். அதற்கேற்ற ஒரு சூழ்நிலை அங்கு ஏற்படவேண்டும். இன்றைய தினம் அங்கு இருக்கின்ற நிலைமையை எடுத்துக்கொண்டால் அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நெருங்கிய பாச உணர்ச்சியில்லாமல், அதிகாரிகளைத் தொழிலாளர்கள் குறை சொல்லுகின்ற முறையும், தொழிலாளர்களை அதிகாரிகள் குறை சொல்லுகின்ற முறையும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். தொழில் ஸ்தாபனங்களில் தொழிலாளர்களுக்கும் பங்கு இருக்கவேண்டும் என்று அடிக்கடி அமைச்சர் அவர்கள் இங்கு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதன் அடிப்படையில் இங்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். நான் அதிகாரிகளின் மீது குறை கூறவேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. நான் குறிப்பிட்ட அத்தகைய உறவு இருந்தால்தான் தேசியமயமாக்கப்பட்ட தொழில் திறமையாகவும் வெற்றிகரமாகவும் லாபகரமாகவும் நடக்கும். இன்றைய தினம் பஸ்ஸில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு இடம் வாங்கியிருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். மகிழ்ச்சியும் அடைகிறேன். ஆனால் வீடுகட்டி கொடுப்பதற்காக தொழிலாளர்கள் பணம் கட்டியிருக்கிறார்கள். இவ்விதம் பணம் கட்டி இரண்டு ஆண்டுகள் ஆகியும் வீடு கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன் வரவில்லை.

மேலும் லக்ஸுரி பஸ் சர்வீஸ் நடத்தும் விஷயத்தில் ஒரு நபர் 10 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். இதன் மூலம் சுமார் 46 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. இதைக் குறைத்து ஐந்து ரூபாய் என்று நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்விதம் குறைத்தால்தான் அரசாங்கம் நடத்துகின்ற பஸ்ஸில் பொதுமக்கள் செல்லுவார்கள். மேலும் இங்கு 16 பஸ் ரூட்டுகளில்
10-30 a.m. ஸீஸன் டிக்கட் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. ஏன் எல்லா ரூட்களிலும் கொடுக்கக் கூடாது என்று பொதுமக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட 16 ரூட்களில் மட்டும் ஸீஸன் டிக்கட் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் மற்ற ரூட்களில் ஸீஸன் டிக்கட் கொடுக்கப்படவில்லை என்று சொல்வது நியாயமாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிண்டி ரேஸுக்கு ஸ்பெஷல் பஸ் விடுகிறார்கள். அது அவசியம் தானா? ரயில் ஓடுகிற பாதையில் இருக்கக்கூடிய கிண்டிக்கு தனியாக பஸ் எதற்காக விடவேண்டும். இந்த நிலைமையில் அதில் அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்பது எனது வேண்டுகோள்.

மேலும் சர்க்கார் பஸ்களில் ஸ்டான்டிங் பாஸஞ்சர்கள், சின்ன பஸ்ஸாக இருந்தால் 10 பேர்கள் என்றும், பெரிய பஸ்ஸாக இருந்தால் 15 பேர்கள் என்றும் வைத்திருக்கிறார்கள். இம்மாதிரி பஸ்களில் எவ்வளவு ஸ்டான்டிங் பாஸஞ்சர் என்று போட்டிருக்கிறதோ அதற்குக் கூடுதலாக ஏற்றக் கூடாது. அம்மாதிரி அதிகப்படியாக ஏற்றக்கூடிய நேரத்தில் டிக்கட் கொடுக்கிற கண்டக்டர்களுக்கு சங்கடம் ஏற்படுகிறது. கூட்டம் காரணமாக சில பேருக்கு டிக்கட்டு கொடுக்காமல் விட்டு விடுகிறது. செக்கிங்கிற்கு வருகிற கண்டக்டர்கள் அதைப்பார்த்து நடவடிக்கை எடுத்து மெமோ கொடுத்து, வேலையிலிருந்து நீக்கப்படுகிற அளவுக்கு கடைசி கட்டத்திற்குப் போய்விடக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் முன்வரவேண்டும். இதனால் பொது மக்களுக்கு நன்மை செய்வதற்காகத் தான் ஓவர்லோடு ஏற்படுத்துகிறோம் என்று சர்க்கார் நடத்துகிறது என்ற காரணத்திற்காக ஏற்படுத்தக்கூடாது. பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது, 3 வயது குழந்தையோடு பிரயாணம் செய்யும்போது, அதனுடைய பெற்றோர் குழந்தைக்கு 2½ வயது என்று சொல்லிவிட்டால் அதற்கு மேல



22nd March 1960] [Sri A. Govindasamy]

டிக்கட் கேட்க முடியாது. இன்ஸ்பெக்டர் செக்கிங்கிற்கு வரும்போது
அந்தக் குழந்தையைப் பார்த்துவிட்டு, அந்தக் குழந்தைக்கு 3 வயது
இருக்கும், ஏன் டிக்கட் கொடுக்கவில்லை என்று நடவடிக்கை எடுக்கக்
கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். ஒரு இடத்தில் ஓவர்லோடு ஏற்றவில்லை
என்ற காரணத்திற்காக கண்டக்டரை அந்த இடத்திலேயே இறக்கிவிட்டிருக்
கிறார்கள். இந்த நிலைமையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு
வர விரும்புவது, இப்போது அரசாங்கமே மறைமுகமாக எவ்வளவு வேண்டு
மானாலும் ஓவர்லோடு ஏற்றலாம் என்று செய்திருக்கிறதோ என்று
நினைக்கத் தோன்றுகிறது. அரசாங்கம் நடத்தக் கூடிய பஸ்களில் அதிக
மாக பிரேக்டவுன் வருகிறது. அதைத் தடுக்க என்ன முயற்சிகள் எடுத்
தோம், என்ன நடவடிக்கைகள் எடுத்தோம் என்று பார்க்கவேண்டும்.
மற்ற ராஜ்யங்களில், தேசியமயமாக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கிற இடங்
ளில், அப்போதே மெக்கானிக் சென்று ஸ்தலத்திலேயே ரிப்பேர் செய்து
உடனே பஸ்கள் ஓட்டிப் போகக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். இங்கேயும்
அந்த நிலைமையை உண்டாக்க என்ன நடவடிக்கை எடுத்தோம்? இதை அர
சாங்கம் கவனிக்கவேண்டும். ஏனென்றால் பிரேக் டவுனைக் குறைத்திருக்கிறோம்
என்று பெருமைப்பட்டாலும் இன்னும் கணிசமான அளவு குறைத்தாகவேண்
டும். இப்போது 4 மணி நேரம் வேலை செய்துவிட்டு, பிரேக் டவுன் என்று
சொல்லி வேண்டுமென்றே பஸ்ஸை டெப்போவிற்குக் கொண்டுவருகிறார்
கள் என்று சொல்லப்படுகிறது. 4 மணி நேரம் வேலைசெய்து விட்டால்
அன்றைய தினத்திற்கான பட்டா கிடைத்துவிடும் என்று வேண்டுமென்றே
கொண்டு வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதிலுள்ள உண்மை
யைப் பரிசீலிக்கவேண்டும். வேண்டுமென்றே வொர்க்ஷாப்பிற்குக்
கொண்டுவருகிறார் என்றால் டெப்போவிற்குக் கொண்டுவருகிற நேரத்தில்
மெகானிக் ஸ்தலத்தில் பார்த்து ஸர்ட்டிபிகேட் கொடுத்து இன்னென்ன
குறைபாடுகள் இருக்கின்றன, இன்னென்ன ரிப்பேர்கள் இருக்கின்றன
என்று பார்த்துதான் கொண்டு வரப்படுகிறது. வண்டியைக் கொண்டு
வருகிற நேரத்தில் மெக்கானிக் பார்த்து குறைபாடு கிடையாது, வேண்டு
மென்றே கொண்டு வந்தார்கள் என்று எத்தனை கேஸ்கள் கண்டுபிடித்து
நடவடிக்கை எடுத்தார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். இம்
மாதிரி வேண்டுமென்று தொழிலாளர்கள் மீது சொல்லப்படுகிறது என்று
நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் சர்க்கார் பஸ் ஊழியர்களை
என். ஜி. ஓ. க்களோடு பிணைத்திருக்கிறார்கள். இதையும் இப்போது
நியமிக்கப்பட்டிருக்கிற சம்பளக் கமிஷன் பரிசீலிப்பார்கள் என்று எண்ணு
கிறேன். தொழிலாளிகள் 8 மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்று
வாயளவில் சொல்லி விட்டு அவர்கள் 9 மணி நேரம், 10 மணி நேரம்
வேலை செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது.

இன்றைய தினம் கண்டக்டர்களிடம் நயா பைஸா கொடுக்கிறார்கள். 5 ரூபாய் அளவுக்குக் கொடுக்கிறார்கள். சில சமயங்களில் நயா பைஸா விற்கு பதில் 4 அணு, 8 அணு நாணயங்களாகக் கொடுக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய பணமானது ஒரு டிரிப்பிலேயே செலவழிந்து போய்விடுவதால், மக்களிடம் சில்லரை கொடுக்கும்படி கேட்கும்படியான நிலையில், சில்லரை இருந்தால்தான் டிக்கட் கொடுக்க முடியும் என்று சொல்லக் கூடிய நிலையில், பொது மக்கள் "சில்லரை இல்லாமல் என்ன ஐயா கண்டக்டர் வேண்டியிருக்கிறது" என்று சண்டையிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகையால் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய இம்ப்ரெஸ்ட் காஷை உயர்த்தித் தரவேண்டும். குறைந்த பட்சம் 10 ரூபாயாகவாவது அதை உயர்த்தித் தரவேண்டும். அத்தனையையும் நயா பைஸாவாகவே கொடுக்கவேண்டும், 4 அணு, 8 அணு நாணயங்களாகக் கொடுக்கக்கூடாது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் இந்தத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் நடத்துகிற பஸ் தொழிலில் உரிமை தருகின்ற முறையில் இதிலே வரக் கூடிய லாபத்தில் அவர்களுக்கும் பங்கு உண்டு, போனஸ் உண்டு என்று சொன்னால் அவர்கள் உற்சாகமாக வேலை செய்யக் கூடிய நிலைமை ஏற்படும். ஓடக் கூடிய பெரிய பஸ்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு கண்டக்டர்களைப் போட்டால், டிக்கட்டு வழங்குவதில் வசதியாக இருக்கும். இந்த

[Sri A. Govindasamy] [22nd March 1960

வசதியையும் செய்து தரவேண்டும். இன்றைய தினம் யாராவது டிக்கட்டு இல்லாது இருந்தால் அது தொழிலாளியை பாதிக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க ஆவன செய்யவேண்டும்.

தொழிலாளர்களுக்கு மூன்று ஜதை உடுப்புகள் கொடுப்பதைப் பற்றி பெருமை பட்டார்கள். மற்ற ராஜ்யங்களில் என்னென்ன வசதிகள் கொடுக்கிறார்கள் என்று அதை கவனிக்கவேண்டும். இன்றைய தினம் பம்பாயில் 4 செட் டிரெஸ்கள் கொடுக்கப்படுகின்றன. இன்னும் அவர்களுக்கு அதிகப்படியான வசதிகள் செய்து தந்திருக்கிறார்கள். (கனம் ஸ்ரீ ஆர் வெங்கட்ராமன் : சென்னையில் யாரும் கொடுக்கவில்லை) தனிப்பட்டவர்களோடு ஒப்பிடக்கூடாது இது அரசாங்கம் நடத்தக் கூடிய தொழில். தனிப்பட்டவர்கள் நடத்தக் கூடிய தொழில் வேறு, அரசாங்கம் நடத்தக் கூடிய தொழில் வேறு. இன்னும் இதிலே தொழிலாளர்களுக்கு பங்கு உண்டு என்று சொல்லி, அவர்களுக்கு இன்னும் அக்கறை ஏற்படுத்தினால் உற்சாகத்தோடு வேலை செய்வார்கள். அமைச்சருக்கே தெரியும், அவரே தொழிலாளர்கள் தலைவராக இருந்திருக்கிறார், தொழிலாளர்களுக்குப் பங்கு வேண்டுமென்று அவரே கேட்டிருக்கிறார். ஆனால் இப்போது தொழில் அமைச்சராக இருக்கிற காரணத்தினால் இடைஞ்சலாக இருக்கிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அவர்களுக்கு எப்படியும் தொழிலாளர்களிடத்தில் நல்லெண்ணம் இருப்பதால் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லுகிறேன். இன்றைய தினம் தொழிலாளர்களுக்கு மன நிம்மதி இல்லை, சம்பள உயர்வு இல்லை, வேலைபளு அதிகமாக இருக்கிறது. ஆக இத்தகைய காரணங்களினாலும் இன்னும் அதிகாரிகளால் மோசமான நிலையில் நடத்தப்படுகிற காரணத்தினாலும் உற்சாகம் இழந்து, மனச்சஞ்சலத்தோடு வேலை செய்து வருகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். அதுதான் எனது வேண்டுகோள். அப்போதுதான் நல்ல முறையில் இயங்க முடியும். வேலை பார்க்கக் கூடிய தொழிலாளர்கள் அதிகாரிகளின் கண் ஜாடையிலேயே நல்ல முறையில் திறமையாக வேலை செய்யக்கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டுமே அல்லாது அதிகாரிகள் மறைமுகமாகத் தொழிலாளர்களைக் குறை கூறி, அதனால் அரசாங்கத்திற்கு வருகிற வருமானம் குறையக் கூடாது என்பதுதான் எனது வேண்டுகோள். சர்க்கார் பஸ் டெப்போக்களில் இட நெருக்கடி இருக்கிறது. வண்டியை வெளியே எடுத்துச் செல்லும்போது பார்த்துத்தான் எடுத்துச் செல்லவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அம்மாதிரி பார்த்து எடுத்துக் கொள்ள இடமில்லை. ஆகையால் வண்டியை எடுத்துக் கொண்டு போகிற வழியிலேயே பிரேக்டவுன் ஆகக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. தண்டையார்பேட்டையில் ஒரு டெப்போவை ஏற்படுத்தப் போகிறோம் என்று சொன்னார்கள். அதை உடனடியாக ஏற்படுத்தவேண்டும். இப்போது பஸ்களைக் கழுவுவதற்குக் குழி இருக்கிறது. அது பெயரளவில் இருக்கிறதே தவிர நல்ல முறையில் பயன்படக்கூடிய அளவில் இல்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதைப் பற்றி அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நமது சர்க்கார் பஸ் டெப்போவில் இரவு நேர மெயின்டினென்ஸ் வைத்திருக்கிறார்கள். பம்பாயில் பகல் நேரத்தில் மெயின்டினென்ஸ் வைத்திருக்கிறார்கள். இங்கேயும் அந்த நிலைமையை ஏன் உண்டாக்கக் கூடாது. பம்பாயில் ஆயிரம் பஸ்களை வைத்துக் கொண்டு பகல் நேரத்தில் மெயின்டினென்ஸ் செய்கிறார்கள் என்றால், 300 அல்லது 400 பஸ்களை மட்டும் வைத்துக்கொண்டிருக்கிற நாம் ஏன் இரவு மெயின்டினென்ஸ் வைத்துக் கொள்ளவேண்டும்? இரவு மெயின்டினென்ஸ் வைத்துக் கொள்வதால் போதுமான வெளிச்சம் இல்லாத காரணத்தினால் இருக்கக் கூடிய ரிப்பேர்களைச் சரியானபடி கவனிக்க முடியாத நிலைமையும், இரவு நேரத்தில் வேலை செய்யக் கூடியவர்களுக்கு "டீ" வழங்கப்படாததால் பஸ்களை சரியாக கவனிக்கப் படாத நிலைமையும் இருப்பதால் இதைப் பற்றி அரசாங்கம் கவனிக்கவேண்டும். இரவு நேரத்தில் வேலை செய்யக் கூடியவர்களுக்கு டீயாவது வழங்கலாம். தனிப்பட்ட முதலாளிகள் நடத்தக் கூடிய பஸ்களை எடுத்துக் கொண்டால், டீ.வி.எஸ். கம்பெனியை எடுத்துக் கொண்டால், அவர்கள் எந்த முறையில் பஸ்களை நடத்துகிறார்கள் என்று கவனிக்கவேண்டும். அவர்களுடைய பஸ்களுக்கு எவ்வளவு செலவாகிறது. அர-



22nd March 1960] [Sri A. Govindasamy]

சாங்கம் நடத்தக் கூடிய பஸ்களுக்கு எவ்வளவு செலவாகிறது என்று சிந்தித்துப் பார்த்து இருக்கக் கூடிய குறைபாடுகளை நீக்க வழி வகைகள் செய்ய வேண்டும். இந்த பஸ் நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டவர்களை மற்ற நாடுகளுக்கும் மற்ற ராஜ்யங்களுக்கும் அனுப்பி அங்கு எந்த முறையில் நிர்வாகம் நடக்கிறது, எந்த முறையில் வொர்க்ஷாப்பை நடத்துகிறார்கள், எந்த முறையில் ஸ்பேர் பார்ட்ஸ் வைத்திருக்கிறார்கள், எந்த முறையில் பாட்டரி ரீ-கண்டிஷன் செய்கிறார்கள். எந்த முறையில் டயர்களை ரீ-கண்டிஷன் செய்கிறார்கள் என்று கவனித்து செய்யப்படவேண்டுமேயல்லாது, நாம் தான் நல்ல முறையில் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்வது சரியாகாது. இன்றைய தினம் பார்த்தால் நீல பஸ்களெல்லாம் ஓடாமல் இருக்கின்றன ஒரு பஸ் பிரேக் ஸர்ட்டிபிக்கேட்டிற்குச் செல்வதற்கு முன்பு ரிப்பேருக்கு வந்தால் அந்த பஸ்ஸிலிருந்து சில பாகங்களைக் கழற்றி வேறு பஸ்களில் மாட்டி அனுப்பிவிடுகிறார்கள். அதனால் பி.ஸி.-க்கு வரக்கூடிய பஸ்கள் நீண்ட நாள் தங்கி விடக் கூடிய நிலை ஏற்படுகிறது. இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேண்டும். பி.ஸி. ரிப்பேருக்கு வரக் கூடிய பஸ்களிலிருந்து பாகங்களைக் கழற்றக்கூடாது.

ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த பழனிசாமி கௌண்டர் அவர்கள் பேசும்போது பஸ்களை தேசியமயமாக்கக் கூடாது என்று தெரிவித்தார். இப்போது சென்னையில் தேசியமயமாக்கப்பட்டிருப்பதைக் கூட மறந்து போய்ப் பேசியிருக்கிறார். அரசாங்கம் சில ரூட்டுகளை எடுத்துக்கொள்ளப் போவதாக இப்போது தகவல் கொடுத்தார்கள். அதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்னும் "லாங் ரூட்டுகளை" எடுத்துக் கொள்ளவேண்டும். இன்னும் கூடுதலான எக்ஸ்பிரஸ் பஸ்களைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் நிறைய ரூட்டுகள் ஏற்படுத்த வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே போக்குவரத்திலுள்ள நெருக்கடியைத் தவிர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடனும், அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் வர வேண்டும் என்ற நோக்கத்துடனும் தான் இவ்வாறு சொல்கிறேன் என்று தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**Srimathi T. N. ANANDANAYAKI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்துக்கான மானியத்திற்காகப் பிரேரேபிக்கப்பட்டுள்ள மானிய கோரிக்கைக்குக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். போக்குவரத்து சாதனங்களை இந்தியாவிலேயே சிறந்த முறையில் அபிவிருத்தி செய்திருக்கும் பெருமை சென்னைக்கு உரியது என்பதை யாரும் மறுக்க முடியாது. இருந்தாலும் இன்னும் அதிகமான வசதிகள் செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதால், இந்த மானிய கோரிக்கையின்போது அவைபற்றியெல்லாம் சிந்திக்கக் வேண்டிய கடமை அரசாங்கத்திற்கும் இந்த மாமன்றத்திற்கும் உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன். சென்னை நகரத்தில் மக்களின் தொகை வருடாவருடம் அதிகரித்துவரும்போது, அவர்களுடைய அன்றாடத் தேவையான பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்கியிருக்கும் அரசாங்கம் அத்துறையில் நன்றாகச் செயல்பட்டு பஸ் போக்குவரத்து வசதிகளை திருப்திகரமான முறையில் செய்தால் தான் அரசாங்கத்திற்கும் நல்ல பெயர் இருக்கும், பஸ் போக்குவரத்தை நடத்துபவர்களுக்கும் உற்சாகம் இருக்கும், மக்களும், அரசாங்கம் தங்களுக்கு நன்மை செய்கிறது என்பதை உணர முடியும். எனவே நாம் பஸ் போக்குவரத்தை இன்னும் சற்று நல்ல முறையில் கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். பஸ் ஸ்டாண்டுகளில் மக்கள் மணிக்கணக்கில் தவம் செய்யும் நிலை இன்றும் இருக்கிறது. ஆபீஸ்களிலிருந்து வருபவர்கள் வீடு போய்ச் சேருவதற்கு பஸ் ஸ்டாண்டுகளில் 5 மணியிலிருந்து 8 மணிவரையில் கூட நின்று தவம் செய்ய வேண்டியிருக்கிறது. வீடு போய்ச் சேருவதற்கு பஸ் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற சந்தேகத்துடன் அவர்கள் பஸ் ஸ்டாண்டுகளில் நிற்கவேண்டியிருக்கிறது. பஸ்கள் போகின்றன. இல்லை என்று

நான் சொல்லவில்லை. இன்னும் அதிகமான பஸ்களை விட வேண்டும். இப்போது போதுமான பஸ்கள் போகவில்லை. பஸ் ஸ்டாண்டுகளில் காத்திருப்பவர்கள் பொழியும் வசைமாரியைக் கேட்டால், நாம் என் பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்கினோம் என்று எண்ணத் தோன்றும். அவர்களை நாம் இதற்காகக் குற்றம் சொல்லமுடியாது. நாள் பூராவும் வேலை செய்துவிட்டு, "எப்போது வீட்டுக்குத் திரும்புவோம்" என்ற மனோநிலையில் இருக்கும்போது அவர்களைக் காக்கவைப்பதால் அவ்வாறு பேசுகிறார்கள். பஸ் ரூட்டுகளில் அதிகமான பஸ்களை விட்டு எந்த பஸ்ஸும் 10, 15 நிமிடங்களுக்குள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். இப்போது பெரிய லேலண்ட் பஸ்கள் விட்டிருக்கிறோம். இந்த பஸ்கள் அதிகமான பேர்களை ஏற்றிக்கொள்ள முடியும். பீக் அவர்ஸில் பஸ்கள் சீக்கிரம் போய்த் திரும்பச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். பீக் அவர்ஸில் அதிகமான பஸ்களை விட வேண்டியது மிகவும் அவசியம்.

எங்கள் பகுதியில்—திருவொற்றியூரில்—சர்க்கார் பஸ்கள் போகின்றன. அங்கே தொழிலாளர்கள் அதிகமாக வருகிறார்கள். எனவே அங்கே அதிக பஸ்கள் விட வேண்டும். மேலும் திருவொற்றியூரிலுள்ள தியாகராஜர் சன்னதிக்கு பக்தகோடிகள் போகிறார்கள். அவர்கள் பஸ் ஸ்டாண்டுகளில் மணிக்கணக்கில் நிற்கிறார்கள். அங்கு செய்யவேண்டிய பஸ் போக்குவரத்து வசதிகள் பற்றி டிரான்ஸ்போர்ட் இலாகா டைரக்டருக்கு மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அங்கே உள்ள கஷ்டங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் மக்கள் பஸ் ஸ்டாண்டுகளில் மணிக்கணக்காக நிற்க வேண்டியிருக்கிறது. காரணம், திருவொற்றியூரில் உள்ள ஒரு ரெயில்வே கேட்டுக்கருகில் பஸ்களை நிறுத்திவிடுகிறார்கள். அங்கே ஓவர்பிரிட்ஜ் இல்லாததால் பஸ்கள் நிறுத்தப்படுகின்றன. அங்கே ஓவர்பிரிட்ஜைக் கட்டவேண்டும் என்று நாங்கள் எத்தனையோ தடவை கூறியும் இன்னும் அங்கே ஓவர்பிரிட்ஜ் கட்டப்படவில்லை. இதற்காக கார்ப்பொரேஷனில் தெரிவித்தால் அங்கே பைல் ஒளிந்துகொள்கிறது. ஸெக்ரடேரியட்டுக்கு வந்தால் இங்கேயும் ஒளிந்துகொள்கிறது.

**The Hon. Sri R. VENKATARAMAN** : திருவொற்றியூரில் பஸ் ஸ்டாண்டுகளை ரெயில்வே கேட்டுக்கு அப்பால் போட்டிருக்கிறோம்.

**Srimathi T. N. ANANDANAYAKI** : அதற்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். அங்கே இன்னும் கொஞ்சம் கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்களுடன் நான் கனம் மந்திரி அவர்களைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேசி கஷ்டங்களை எடுத்துச் சொன்னேன். பாதி பஸ்களை ரெயில் கேட்டுக்கு அறுபக்கத்திற்கு கொண்டுபோயிருப்பது போற்றத்தக்கது. அதற்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்பொழுது அங்கே 35, 33-ம் நெம்பர் பஸ்கள் கஞ்சி தொட்டி ஆஸ்பத்திரி போயும் ரோடு முனையில் நிற்கின்றன. அவை முன்பு போலவே வைக்கோல் தொட்டியில் நின்றால், பாரிஸ் கார்னர் போன்ற இடங்களுக்குப் போகிறவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். இதையும் டைரக்டர் அவர்கள் கவனிக்கும்படி செய்ய வேண்டும். அந்த பஸ்களை பழைய இடத்திற்கே அதாவது 56-ம் நெம்பர் பஸ் இருக்கும் இடத்திற்கே கொண்டுபோவது வரவேற்கத்தக்கது.

அடுத்தபடியாக, பஸ் துறை "மானேஜ்மெண்ட்" இப்போது சுறுசுறுப்பாக இருக்கிறது. இப்போது பஸ்கள் சுத்தமாக வருகின்றன. அதற்குக்காரணம், இப்போது பவர் வாஷர்ஸ் வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. பஸ்களை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க வேண்டும். அவை அழகாக இருந்தால்தான், பஸ்ஸில் ஏறிச் செல்லலாம் என்ற ஆசை மக்களுக்கு வரும். எனவே அதிகமான பவர் வாஷர்களைக் கொண்டுவந்து, பஸ்களை கண்ணைக் கவரும் வண்ணம் வைத்திருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ் போக்குவரத்து நன்றாக இருக்க வேண்டுமானால், பஸ் தொழிலாளர்களுக்கும் தேசீய உணர்ச்சி இருக்க வேண்டும். இல்லாவிட்டால், கஷ்டம் தான். பஸ் தொழிலாளர்களுக்கு அனேக குறைகள் இருக்கின்றன. அவைகளை அரசாங்கம் தீர்க்க வேண்டும். அக்குறைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்று ஆராய்ந்து யோசனைகள் கூறுவதற்காகத் தொழிலாளர்களைச் சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்தால் நன்றாக இருக்கும். அவர்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டியது மிகவும் அவசியம். காரணம் க்ரோம்பேட்டையில் உள்ள பஸ்கள் கட்டும் தொழிற்சாலையில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் இரண்டு பஸ்கள் தான் கட்டியிருக்கிறார்கள். வேலை நிறுத்தமும் இல்லை, வேலை செய்யவும் முடியாது என்றால் இந்தச் சண்டித்தனத்திற்கு பரிகாரம் என்ன என்று தெரியவில்லை. பத்து பஸ்கள் கட்டக் கூடிய காலத்தில் இரண்டே பஸ்கள் தான் கட்டி இருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான், பஸ்களை அமைத்துத் தரும்படி ஸிம்ஸன் அண்ட் கம்பெனியிடம் சொல்கிறோம். தொழிலாளர்கள் இரண்டு பஸ்கள் தான் கட்டினார்கள் என்பது பொதுமக்களுக்குத் தெரியாது. தொழிலாளர்களோ சண்டித்தனம் செய்கிறார்கள். இந்த இரு பிரிவினருக்கும் மத்தியில் அரசாங்கம் விழிக்கிறது. எனவே இப்பிரச்னைக்கு ஏதாவது ஒரு பரிகாரம் காணவேண்டும். இப்போது ஏதோ ஐந்து பஸ்களுக்குமேல் கட்டினால் போனஸ் கொடுக்கலாம் என்ற திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்களாம். அதன் காரணமாகவே அத் தொழிற்சாலையில் இந்த மாதத்தில் 10 பஸ்களை எப்படி பிடிக்க முடியும் என்று தெரியவருகிறது. அவர்களுக்கு இம்மாதிரி போனஸ் கொடுத்து உற்சாகப்படுத்தினால், அதிகமான பஸ்கள் கட்டப்பட்டு, தேசீயமயமாக்கப்பட்ட நகர பஸ் போக்குவரத்தும் அபிவிருத்தியடையும்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு பஸ் ப்ரேக்டவுன் ஆகி ஷெட்டுக்குப் போனால், எத்தனையோ மாதங்கள் ஆனாலும் திரும்பிவருவதில்லை. ஹாப்டெக்கர் ஒன்று ஷெட்டுக்குப் போன பிறகு ரொம்ப நாட்களாக அதை எல்லோரும் தேடித் தேடிப் பார்த்தார்கள். "அது எங்கே போச்சு" என்று பத்திரிகைகளில் எல்லாம் எழுதினார்கள். இப்படித் தூங்குவதை ஒரு தனி முதலாளி பார்த்துக்கொண்டிருக்கமாட்டான். ஒரு நாள் இரவில் வண்டிக்குப் பழுது வந்துவிட்டால் மறுநாள் காலையில் எப்படியாவது வண்டியை ஓட்டினால் தான் அவனுக்குத் தூக்கம் வரும். அவ்வளவு கவலையுடனும் அக்கறையுடனும் அவன் வண்டியை கவனிப்பான். அந்த உணர்ச்சியில் பாதியாவது நமக்கு இருக்க வேண்டும், இல்லாவிட்டால் தேசீயமயமாக்குவதால் என்ன பயன் என்று அரசியல் வாதிகள் சிந்திக்க வேண்டும். ப்ரேக்டவுன் ஆன ஹாப்டெக்கர் ரொம்ப காலமாக ஷெட்டிலிருந்து திரும்பிவராததற்குக் காரணம் என்னவென்றால், ஸ்பேர் பார்ட்ஸ் போதிய அளவில் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாததற்குக் காரணம் என்ன? கொஞ்சம் பழுதான பஸ்ஸை நாளை ரூட்டில் விட வேண்டுமென்று இத்தொழிலாளிகள் நினைத்தால் உடனே ஷெட்டில் நிற்கும் பழுதான இன்னொரு பஸ்ஸின் ஸ்பேர் பார்ட்ஸை எடுத்து இதில் போட்டுவிடுகிறார்கள். இம்மாதிரியாக பழுதுபார்ப்பதற்காக ஷெட்டுக்குக் கொண்டுபோகப்படும் பஸ் அங்கேயே வெகு நாட்கள் இருக்கிறது. கடைசியில் ஸ்பேர் பார்ட்ஸ் போதவில்லை என்று சொல்கிறார்கள். தேவையான ஸ்பேர் பார்ட்ஸை வாங்க முயற்சி செய்ய வேண்டும். தனி முதலாளி ஸ்பேர் பார்ட்ஸை ப்ளாக் மார்க்கெட்டிலாவது வாங்கிவிடுவார். சர்க்கார் அதிகாரிகள் அவ்வாறு அவைகளை ப்ளாக் மார்க்கெட்டில் வாங்கமுடியாது. அப்படி அவர் வாங்கினால், எந்த அரசாங்க உத்தரவின் பேரில் அவர் அவைகளை ப்ளாக் மார்க்கெட்டில் வாங்கினார் என்று கேள்வி போடப்படும். பெரிய கம்பெனியான ஸிம்ஸன் அண்ட் கம்பெனிக்கு நமது பர்சேஸ் ஆபீசர் சென்று ஸ்பேர் பார்ட்ஸ் கேட்டால் "உங்களுக்கு நாங்கள் ஸ்பேர்பார்ட்ஸ் கொடுக்கவே மாட்டோம். ஏனென்றால் உங்களுடைய பில்ஸ் வருவதற்கு மாதக்கணக்கில் ஆகிறது" என்று கம்பெனிக்காரர்கள் சொல்கிறார்கள். ஸ்பேர் பார்ட்ஸில் அக்கறை செலுத்த வேண்டும். ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்காமல் இருப்பதற்கு மத்திய சர்க்காருடைய போக்கின் கோளாறாகக் கூட இருக்கலாம். இம்போர்ட் பண்ணுவது ஒரு பஸ்ஸுக்கு 200 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அகில இந்திய கமிட்டியில் ஒரு பஸ்ஸுக்கு 900 ரூபாய் வரை வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு கமிட்டி சொல்லியும் கூட 200 ரூபாய்க்குத்தான் அனுமதி அளிக்கப்படுகிறது. இது பற்றி நாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்க வேண்டும்

"நாங்கள் பஸ் தொழிலை தேசிய மயமாக்கியிருக்கிறோம். பொதுமக்கள் பிரச்னையைத் தீர்க்க வேண்டிய தொழிலாக இருப்பதால் முழு அளவுக்கு இம்போர்ட் செய்ய உரிமை கொடுக்கவேண்டும். அரை குறையாகச் சாப்பாடு போடுவது போல் ஏதோ ஒரு அளவுக்கு இம்போர்ட் செய்து கொள்ளுங்கள் என்று உரிமை கொடுத்தால் போதாது. ஆகவே, நேரடியாக நாங்கள் ஸ்பேர் பார்ட்ஸ் இம்போர்ட் செய்ய அனுமதி கொடுக்க வேண்டும்'' என்று நாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்கவேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் கூடியவர்கள். அவர்கள் இதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். பஸ்கள் ஷெட்டில் ரிப்பேருக்காக நாள் கணக்காகவும், மாதக் கணக்காகவும் நின்று கொண்டிராமல் உடனுக்குடன் ரிப்பேர் செய்யப்பட்டு வெளியே அனுப்பப்பட வேண்டும். ஒர்க்ஷாப்பில் போர்மன் மற்றும் டெக்னிகல் ஸ்டாபுகளுக்கெல்லாம் "இத்தனை நாட்களுக்குள், இவ்வளவு சீக்கிரமாக ரிப்பேர் செய்து அனுப்பி விடுகிறார்கள்'' என்று சொன்னால் அவர்களுக்குப் போனஸ் கொடுக்கப்படும் என்று அறிவிக்கவேண்டும்.. பணம் செய்யும் வேலை வேறு எதுவும் செய்யாது. இவ்வாறு செய்தால் அதிக வேலை வாங்க முடியும், பஸ்களும் உடனுக்குடன் ரிப்பேர் செய்யப்பட்டு விடும்.

இந்த பஸ் போக்குவரத்தை அரசாங்கம் நடத்துவதில் லாபம் வருகிறது என்று சொல்கிறார்கள். அந்தத் தொழிலில் கிடைக்கும் லாபத்தைத் திரும்பவும் அந்தத் தொழிலிலேயே ஈடுபடுத்தி தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதில் அக்கறை செலுத்தவேண்டும். அழகான காலனிகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறன. அகரத்தில் 10 ரூபாய் வாடகைக்கு அழகான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போது கட்டியிருக்கின்ற அளவு கடலிலே கரைத்த பெருங்காயத்தைப் போல் இருக்கிறது, இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல வசதி செய்து கொடுத்தால் அவர்கள் அதை வரவேற்பார்கள். பணமாகக் கொடுப்பதைக் காட்டிலும் இந்த மாதிரி வசதிகளை அரசாங்கம் செய்து கொடுப்பதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். இந்தத் தொழிலில் இருந்து கிடைக்கக் கூடிய வருமானத்தை இந்தத் தொழிலிலேயே செலவழிப்பதை விட்டுவிட்டு வட்டிக் கடைக்காரர்களைப் போல் நேற்று இரண்டு கோடி ரூபாய் மூலதனம் கொடுத்தோம், இன்று 25 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது என்று சொல்லிவிட்டு அதை மொத்த நிதியோடு சேர்த்து விடுகிறார்கள். அதையும் மூலதனத்தில் சேர்த்துக் கொள்ளவில்லையென்றால் தொழிலுக்கு ஊறு விளையும். இந்த லாபத்தையெல்லாம் மூலதனத்தில் போடவில்லையானால் 50,000 ரூபாய் அளவு கொடுத்து பெரிய புதிய பஸ்களையெல்லாம் வாங்க முடியாது. ஆகவே, மேலும் மேலும் மூலதனத்தை அதிகமாக்கினால்தான் இந்தத் தொழில் நல்ல பண வசதி படைத்த பெரும் தொழிலாக மாற முடியும். .இதில் அமைச்சரவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாம் இந்தத் தொழிலைச் சிறந்த முறையில் நடத்துகிறோம் என்று மக்கள் உணரக் கூடிய வகையில் நாம் இந்த பஸ் போக்குவரத்தை நடத்தவேண்டும். சர்க்காரால் தேசிய மயமாக்கப்பட்ட இந்தத் தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது என்பது மக்களால் உணரப்பட்டால்தான் தேசிய மயமாக்கும் கொள்கையில் மக்களுடைய நம்பிக்கை அதிகரிக்கும். இதில் தொல்லை இருந்தால் இந்தக் கொள்கையிலே மக்களுக்கு நம்பிக்கை இல்லாது போய்விடும். குறிப்பாக, இந்த அரசாங்கத்தின் தலைநகரான சென்னையில் இந்த பஸ் போக்குவரத்தைத் திருப்திகரமாக நடத்தினால் மக்கள் மிகவும் வரவேற்பார்கள். அதன் மூலம் மேலும் மேலும் இந்தக் கொள்கை பரவ சாத்தியமுண்டாகும். முதலில் நகரத்தில் நன்றாக நடத்தினால் பிறகு மீதி இடங்களில் விஸ்தரித்துக் கொள்ளலாம். ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்று ஏமாந்து விடக்கூடாது. நாம் கெட்ட பெயர் வாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்கள் கூறுகிறார்கள். நல்ல எண்ணம் அவர்களுக்கு கிடையாது. அவர்கள் தூண்டி விட்டு நாம் அவசரத்தில் இறங்கிவிட்டால் மக்களுடைய





ஆத்திரத்தைத்தான் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமே தவிர, வேறு ஒன்றும் பயன் ஏற்படாது. அவர்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இது நமது அடிப்படைக் கொள்கை. இப்போது இருக்கும் நிலைமையில் எந்த அளவுக்குத் தொழில்களைத் தேசிய மயமாக்குவது என்று யோசித்து கொஞ்சம் கொஞ்சமாகக் காரியமாற்றிக்கொண்டு வருகிறோம். ஆகவே, இப்போது எடுத்துக்கொண்டிருக்கிற தொழிலிலே இருக்கக்கூடிய சிறு சிறு குறைகள் என்னென்ன, தொழிலாளர்களுக்கு என்ன குறை, நடத்துகிறவர்களுக்கு என்ன குறை, மக்கள் இதை விரும்புகிறார்களா, என்பதையெல்லாம் தீர ஆலோசித்து பின்னர் பரிகாரத்தைத் தேடுவது மிக மிக முக்கியமாகும்.

இப்போது பஸ்களுக்காக மக்கள் அதிக நேரம் நின்று கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. புதிய ரூட்டுகளில் அதிக பஸ்களை விடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். டிரைவர்கள், பஸ்ஸில் ஒரு சிறு ப்ரேக் டவுன் இருந்தாலும் போதும், உடனே பஸ்ஸைக் கொண்டு போய் ஷெட்டில் விட்டுவிடுகிறார்கள். ஒரு நாளைக்கு விடக்கூடிய பஸ்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று லிஸ்டில் பார்த்தால் 300, 400 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் காலையிலேயே பஸ் எடுக்கப்பட்டு, இரண்டு மணி நேரம் ஓடிவிட்டு ஷெட்டுக்குப் போய்விடுகிற பஸ்களின் எண்ணிக்கையும் இதிலேதான் வருகிறது. மொத்தமான கணக்குத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர, நாள்பூராவும் ஒவ்வொரு ரூட்டிலும் எவ்வளவு பஸ்கள் ஓடுகின்றன என்ற கணக்கு கொடுக்கப்படுவதில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN: அதற்குக் கூட சர்க்காரிடத்தில் கணக்கு இருக்கிறது. "நம்பர் ஆப் ட்ரிப்ஸ் லாஸ்ட்" என்பதற்குக் கணக்கு வைத்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் கேள்வி போட்டால் அதையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: மிகவும் நன்றி. நாள் பூராவும் எந்த வித ரிப்பேருக்கும் இடம் இல்லாமல் ஓட்டுகின்ற டிரைவருக்குக்கூட போனஸ் கொடுக்கலாம். சிறு சிறு மழைத் தூற்றல் ஏற்பட்டால்கூட "ப்ரேக்டவுன்" என்று பஸ்ஸை நிறுத்தி விடுகிறார்கள் அவர்களுக்கு போனஸ் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தலாம். சென்னையில் பஸ் போக்குவரத்தை நல்ல முறையில் நடத்தினால் அதுவே அரசாங்கத்துக்குப் பலத்தைத் தரக் கூடியது. அன்றாட வாழ்க்கையில் மக்கள் அதை நம்பியிருக்கிறார்கள். அந்தத் துறையில் தொல்லைகளைக் குறைப்பது வரவேற்கத்தக்கது என்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI T. S. RAMASWAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் போக்குவரத்து இலாகாவைப் பொறுத்த அளவில், "ரீ ஆர் கேஷனுக்கு"ப் பிறகு—மொழி வழி மாகாண அமைப்பிற்குப் பிறகு—நமக்குக் கொடுக்கப்பட்ட பஸ்கள் (கன்னியாகுமரி மாவட்டத்தில்) மிகவும் மோசமாக இருந்தன என்று குறிப்பிட்டார்கள். இரண்டு, மூன்று பஸ்களே நல்ல பஸ்களாக வந்தன. மற்றவையெல்லாம் தகர டப்பாக்களாக வந்தன என்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மை. ஆனால் அதனுடைய பொறுப்பு இந்த அரசாங்கத்தைத்தான் சேரும். மொழி வழி மாகாணம் அமையும்போது நல்ல அழகான இடங்களாகிய தேவிகுளம், பீர்மேடு ஆகியவைகளை விட்டுவிட்டதுபோல், அங்கு நல்ல பஸ்கள் இருந்தபோதிலும்கூட, விலை குறைந்ததை இங்கிருந்து போனவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். இப்போது அங்கு நிச்சயமாக நிலைமை நன்றாக இருக்கிறது என்பதைப் பொறுத்த அளவில் ஒப்புக்கொள்கிறேன். இங்கு வந்த உடனே, அங்குள்ள நிலைமைக்கும், இங்குள்ள நிலைமைக்கும் வெகுவான வித்தியாசம் இருந்தது. சம்பளத்தைப் பொறுத்தவரையில் மெட்ராஸ் ஸிட்டியில் வழங்குகிற சம்பளம் அங்குள்ள சம்பளத்தை விடக் குறைவாக இருந்தது. அந்த குறைவு இங்கே நிவர்த்திக்கப்படவில்லை. அங்கேயும் புதிய தொழிலாளருக்கு இன்று இங்குள்ள ஸ்கேலில்தான் சம்பளம்

[Sri T. S. Ramaswami] [22nd March 1960

கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், மற்ற விஷயங்களைப் பொறுத்த அளவில் பொதுவாக நல்ல முறையில்தான் நடந்துவருகிறது. நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே உறவு அங்கு நல்ல முறையில் வளர்ந்து வருகிறது. கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது புரிந்துகொள்ள முடிகிறது.

11-00 a.m. ஆனால் அதே நேரத்தில் கன்யாகுமரியிலுள்ள ட்ரான்ஸ்போர்ட்டில் மோசமான பஸ்கள் இருந்தாலும்கூட, தகர டப்பாக்களாக இருந்தாலும் கூட, என்ன பார்க்கிறோம்? புள்ளி விவரங்களைப் பார்த்தாலே தெரியும். 1954-ம் ஆண்டில் ஐந்து லட்ச ரூபாய் வருமானம் வந்திருந்தது. 1956–57-ம் ஆண்டில் ஐந்து மாதங்களிலேயே இரண்டு லட்ச ரூபாய் வந்திருக்கிறது. அதே அளவு சென்னை டிரான்ஸ்போர்ட்டில் வந்திருக்கிறதா என்று பார்த்தால், அந்த அளவு வருமானம் வரவில்லை.

பிரேக்-டவுன் நிலைமைதான் என்ன? தகர டப்பாக்களை வைத்துக் கொண்டு இருக்கும் அந்த இடத்திலே ப்ரேக்-டவுன் குறைவு. அதே நேரத்தில், இங்கு மூன்று மடங்கு, நான்கு மடங்கு அதிகமாக இருக்கிறது. நல்ல பஸ்களை வைத்துக்கொண்டிருக்கும் நிலைமையிலேயே, தலைமைக் காரியாலயம் இருக்கும் இடத்திலேயே ஏன் இவ்வளவு அதிகமாக ப்ரேக் டவுன் ஆகிறது என்று பார்க்கவேண்டும். அங்கு மோசமான பஸ்களை வைத்துக் கொண்டிருக்கும்போதே, அங்கு ப்ரேக்-வுடன் ரொம்பக் குறைவு நடு வழியிலே பஸ்களை . . .

**The Hon. Sri R. VENKATARAMAN :** கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டாம் பக்கத்தைப் பார்த்தால், அவர்கள் சொல்லுகிற காலத்திலேயே இங்கே 164 "ஓவர்-எஜெட்" பஸ்கள் இருந்தன என்பது தெரியும்.

**Sri T. S. RAMASWAMI :** இப்போழுது புதிய பஸ்கள் வந்துள்ளன என்று நான் அறிவேன். அந்த அளவுக்கு ஏன் ப்ரேக்-டவுன் குறையவில்லை இன்ஸ்பெக்டர்களும் பொதுமக்களும் சபை அங்கத்தினர்களும் கவனிக்கவேண்டும். இங்கே ஒரு நாளைக்கு ஒன்பது பஸ்கள் ப்ரேக்-டவுன் ஆகின்றன. கன்யாகுமரியில் இரண்டு மூன்று பஸ்கள் ப்ரேக்டவுன் ஆகின்றன. என்னைப்பொறுத்தவரையில், நான் அந்த இலாகாவிலே சம்பந்தப்பட்ட அளவிலே, அதன் காரணம் எனக்குத் தெரியும். தொழிலாளர்களிடையே ஒற்றுமை இருக்கவேண்டும். ஒர்க்ஷாப் தொழிலாளிகளுக்கும் ட்ரைவர் கண்டக்டர்களுக்கும் இடையே ஒற்றுமை இருக்கவேண்டும், அங்கே ஒருவரோடு ஒருவர் சேர்ந்து நன்றாக வேலை செய்கிறார்கள். அங்குள்ள தொழிலாளிகள் இங்கு உள்ளவர்களைவிட கொஞ்சம் திருப்திகரமாக இருக்கிறார்கள். அங்கும் ஏதோ "பின்-ப்ரிக்குகள்" குறைப்பாடுகள் இருக்கலாம். இருந்தபோதிலும், அங்குள்ள தொழிலாளிகளுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலே ஓரளவு ஒற்றுமை இருக்கிறது. தொழிலாளிகளுடைய குறைகள் வரும்போது, அவைகளைப் போக்குவதற்கு அவர்கள் பார்க்கிற ரீதியிலே இருக்கிறார்கள். ஆனால், இங்கு வித்தியாசம் இருக்கிறது. அங்குள்ள தொழிலாளர்களுக்கும் இங்குள்ள தொழிலாளர்களுக்கும் கொடுக்கபடும் சம்பளத்திலே வித்தியாசம் இருக்கிறது. இங்குள்ளவர்கள் மிகவும் குறைந்த சம்பளம் வாங்குகிறார்கள். தொழிலாளர் இலாகாவும், ட்ரான்ஸ்போர்ட் இலாகாவும் இவ்விரண்டு இலாகாக்களையும் தலைமைதாங்கி நிர்வகிக்கக்கூடிய அமைச்சர் அவர்களும் நிச்சயமாக இதைக் கவனிப்பார்கள், அவர்களுடைய காலத்திலேயே நிச்சயமாக தொழிலாளர்களுடைய சம்பளத்தை அவர்கள் நிச்சயமாக உயர்த்துவார்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களை நான் குறிப்பிடவேண்டும். முக்கியமாக ட்ரான்ஸ்போர்ட்டிலே நாம் பார்க்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நிர்வாகத்தில் இருந்த ஊழல்கள் இன்று நிர்வாகத்தில் இல்லை. இரண்டு மூன்று வருஷங்களில் நிச்சயமாக "இம்ப்ரூவ்மெண்ட்" இருக்கிறது.



22nd March 1960] [Sri T. S. Ramaswami]

சென்னை ராஜ்யத்தில் சேர்ந்தவுடனே ஒரு வருஷமாகப் பார்த்ததில், முக்கியமாக ஸ்பேர் பார்ட்ஸ் களவு போய்விடும் என்ற நிலைமை இருந்தது. பெட்ரோலைப்பற்றிக் கூட இந்தச் சபையிலே விவாதித்தோம். அப்பேர்ப்பட்ட ஊழல்கள் இப்பொழுது எதுவும் இல்லாமல், நிச்சயமாக நல்ல முறையிலே நிர்வாகம் நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதே நேரத்தில், தொழிலாளிகளுக்கு மூன்று யூனிபாரம்கள் கொடுத்திருக்கிறார்கள். பிராயாணிகளுடைய ஓவர்லோடைக் குறைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அதே சமயத்தில் அனாவசியமான செலவுகளையும் குறைக்கவேண்டும். மேலும், சில்லரைக் கடைகளிலே, பத்தாயிரம் ரூபாய் கூட முதல் போட்டு நடத்தாத கடைகளிலே, நம்முடைய இலாகாவினர் போய் பஸ்களுக்கு வேண்டிய சாமான்கள் வாங்குவதென்றால் அது நம்முடைய இலாகாவினுடைய கௌரவத்தையே பாதிக்கக் கூடியதாகும். ஆகவே, ஸ்பேர் பார்ட்ஸ் எவ்வளவு அவசியமோ அவ்வளவும் அங்கு நாமே வாங்கி வைத்துக்கொள்ளவேண்டும். சில்லரைக் கடைகளிலே வாங்குவதென்றால், கௌரவத்திற்குக் குறைவான காரியம் 'Fist hand' சாமானா 'Second hand' சாமானா என்று தெரியாதபடி கொடுக்கிறார்கள். அதனால் ப்ரேக்டவுன்களும் அதிகமாகின்றன. அந்த முறையையும் தடுக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பாடி பில்டிங் சம்பந்தமாகச் சொல்லப் போனால், அதற்கு 13 முதல் 14 ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது என்று நினைக்கிறேன். அப்படிக் கட்டும் பாடி ஒன்பது முதல் பத்து வருஷங்களுக்குப் போகலாம். அதற்குப் பிறகு அதைக் "கண்டெம்" செய்ய வேண்டியதுதான். இரும்பு பற்றுக்குறை இருக்கும் இந்தச் சமயத்தில் எதற்காக 14 ஆயிரம் ரூபாய் வரையில் போட்டு இத்தகைய பாடிகளைக் கட்டவேண்டும்? 6,000, 7,000 ரூபாய் செலவிலே ஏன் பாடி கட்டக்கூடாது? அங்கு தேக்கு ஏராளமாகக் கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு பாடி கட்டலாம். தேக்கு மரத்தைக் கொண்டு பாடி கட்டினால், அது சற்று அலங்காரக் குறைவாக இருக்கலாம். இருந்தாலும் அதற்குத் தகுந்த "பாட்டர்ன்" கொடுத்தால் நல்ல முறையிலே செய்துவிடலாம். கேரள நாட்டில் அப்படித்தான் நடக்கிறது. அதுமாதிரி நாமும் செய்ய முடியும். இதன் மூலம் பஸ் ஒன்றுக்கு 7,000 ரூபாய் மிச்சம் வரும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதையும் அரசாங்கத்தின் யோசனைக்கு விட நான் விரும்புகிறேன்.

புதிய பஸ்கள் வரும்போது அவைகளை அனுப்புகிறோம். அங்கே அனுப்பினாலும், அங்கு பஸ்கள், 10 பஸ்கள் மாதக் கணக்கில் ரூட்டிலே ஓடாமல் நிற்கின்றன. காரணம், பர்மிட் கிடையாது என்ற நிலைமை. அண்டை ராஜ்யத்திலே ட்ரான்ஸ்போர்ட் டைரக்டர்தான் மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸேஷன் அட்மினிஸ்ட்ரேட்டராகவும் இருக்கிறார். அவர்தான் ரூட் பர்மிட் டிரான்ஸ்போர்ட் டைரக்டராகவும் இருக்கிறார். அவர்தான் ரூட் பர்மிட் கொடுப்பவராகவும் இருக்கிறார். எப்பொழுது பஸ் தயாராகிறதோ அந்த நிமிஷத்திலேயே பர்மிட் கொடுக்கிறார்கள். இதனால் சில நாட்களுக்கு பஸ் சும்மா நிற்காதிருக்கும் நிலை ஏற்படுகிறது. புதிய வண்டிகள் கிடைப்பதே கஷ்டம். அப்படி கிடைத்து, பாடி கட்டியான பிற்பாடு கூட, ஆர். டி. ஏ. பர்மிட் கொடுப்பதில்லையென்றால், அந்த நிலைமையை கவனிக்க வேண்டும். ப்ரொசீஜர் ரொம்பக் காம்ப்ளிகேடட் ஆக இருக்கிறது. பல மாதங்கள் காரேஜிலே கிடக்கும் நிலைமை ஏற்படுகிறது. இதனால் பொது மக்களுக்குப் போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பஸ்களின் எண்ணிக்கை குறைகிறது என்றாலும், ப்ரேக்-டவுன் ஏற்படு கின்றன என்றாலும், பிரயாணிகள் வழியிலே தங்க நேரிடுகிறது. அவர் களுக்கு பலவிதமான இன்னல்கள் ஏற்படுகின்றன. சென்னை நகர மக்களின் நிலைமை வேண்டுமானால் தடங்கல் இல்லாமல் இருக்கலாம். அம்மையார் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதுபோல், லட்சக் கணக்கான மக்கள் சென்னையிலுள்ள பஸ் ட்ரான்ஸ்போர்ட்டை நம்பி தினம் தினம் இருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் பஸ்ஸை நம்பித்தான் இருக்கவேண்டியிருக்கிறது. ஸிட்டியில் வேண்டுமானால் அதிகாரிகள் ·· அவ

வப்போது பார்த்து, சீக்கிரமாக பிரச்னைகளைத் தீர்த்துவிட முடிந்திருக்கலாம் என்றால் சந்தோஷம். ஆனால், எங்களுடைய கன்யாகுமரி ஜில்லாவைப் பொறுத்தவரையில், பிரேக்டவுன்களும், குறைந்த எண்ணிக்கையுள்ள பஸ்கள் இருப்பதும் அங்குள்ள பிராயாணிகளுக்கு மிகுந்த பிரச்னைகளை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

லாங் டிஸ்டன்ஸ் ரூட்டைப் பொறுத்தவரையில், பங்களூருக்குப் போய் வரும் லாங் டிஸ்டன்ஸ் ரூட் பஸ் லாபகரமாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இதை ஒரு "மாடல்" ஆக வைத்து, திருச்சிக்கும், திருநெல்வேலிக்கும், மதுரைக்கும், நாகர்கோயிலிலுக்கும் லாங் டிஸ்டன்ஸ் ரூட் எடுக்கப் போகிறார்கள். அண்டை ராஜ்யத்திலே லாங் டிஸ்டன்ஸ் ரூட் பஸ்கள் எப்போதுமே நல்ல லாபகரமாக இருப்பதும், சௌகரியமாக இருப்பதும் தெரிந்த விஷயம். லாங் டிஸ்டன்ஸ் பஸ் விடுவதோடுகூட நான் இன்னொரு வேண்டுகோளையும் அரசாங்கத்திற்கு விடுக்க விரும்புகிறேன். பர்மிட் எடுக்கும்போது, பஸ்ஸுக்கு ரூட் பர்மிட் எடுப்பதைவிட, ஏரியா பர்மிட்டாக எடுத்தால், நம்முடைய தொழிலாளர்களுடைய ஷெட்யூலை மாற்றியமைப்பதற்கு மிகவும் சௌகரியமாக இருக்கும்; இரண்டு பஸ்கள் ஒரு டிரைவருக்கு என்ற முறையை இன்ட்ரட்யூஸ் பண்ணிவிடலாம். அவர்கள் இந்த ரூட்டை எவ்வளவு தூரம் மாற்றினாலும் சரி, அந்த பஸ்ஸினுடைய பொறுப்பு இரண்டு டிரைவர்களுக்கும் என்று இருந்தால், அவர்களுக்கு அதை அக்கறையாகப் பார்க்க வேண்டும் என்ற பொறுப் புணர்ச்சி வந்துவிடுகிறது. அது இல்லையென்றால், ஒரு நாளைக்கு ஒரு பஸ்ஸை யார் எடுத்தார் என்பதை யாரும் கண்டுபிடிக்க முடியாமல் போகிறது. அவ்வாறு ரூட் பர்மிட்டுக்குப் பதிலாக ஏரியா பர்மிட்டாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இதனால், எந்த ரூட்டிலும் பஸ்களை அனுப்பக்கூடிய நிலை ஏற்படும். பிரயாணிகளுக்கும் சௌகரியம் உண்டாகும். ஒரு ரூட்டிலே ப்ரேக்டவுன் ஆய்விட்டால், இன்னொரு பஸ்ஸை விடுவதற்கு ஏரியா பர்மிட் இருந்தால்தான் சௌகரியமாக இருக்கும். பிரயாணிகளுக்கும் நன்மை, கண்காணிக்கும் பொறுப்பையும் டிரைவர்களுக்குக் கொடுக்கிறோம். இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இவைகளெல்லாம் வெற்றிகரமாக வரவேண்டுமென்றால், போக்குவரத்து இலாகாவிலுள்ள முக்கியமாக தொழிலாளர்கள் திருப்தியாக வைக்கப்படவேண்டும். அந்த வகையிலும் அவர்களுக்கு அதிக சௌகரியங்கள் செய்கிறோம். பாட்டா அதிகரித்திருக்கிறோம். ட்ரஸ் கொடுத்திருக்கிறோம். பூட்ஸ் கொடுத்திருக்கிறோம். இவைகளுக்கெல்லாம் மேலாக எங்கெங்கே குறைகள் இருக்கின்றனவோ அங்கு அதிகாரிகள் உடனடியாகப் பரிந்து வந்து கவனிக்கிறார்கள், சில சமயங்களிலே டெலிபோன் மூலமாகச் சொன்னாலுங்கூட உடனடியாக கவனிக்கிறார்கள் என்பதை மிகவும் நன்றியறிதலுடன் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிர்வாகத்திலுள்ள அதிகாரிகள் அத்தனை பேரும், சில்லரை அதிகாரிகள் உட்பட, தொழிலாளர்களுடைய கஷ்டங்களை உணரவேண்டும். தொழிலாளர்களோடு அவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நாகர்கோயிலிலுள்ள தொழிலாளர்களுடைய குறைகள் தெரிகிறதென்றால் அதற்குக் காரணம், அங்கு ஒரே யூனியன் இருப்பதுதான். இரண்டாவது யூனியனிலே இரண்டு, மூன்று பேர் இருக்கலாம். அதைப்பற்றி அக்கறை இல்லை. இரண்டு பேர் உள்ள யூனியன் என்ன செய்ய முடியும்? ஆனால், இங்கு அப்படி அல்ல. தொழிலாளர்கள் மூன்று நான்கு யூனியன்கள் வைத்து, ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது. ஒரே யூனியன் இருப்பது நல்லது.

**THE HON. SRI R. VENKATARAMAN**: நாங்களும் அதை வரவேற்கிறோம்.

**SRI T. S. RAMASWAMI**: நிர்வாகத்தில் என்ன செய்யவேண்டுமோ அந்த அளவு செய்திருக்கிறார்கள். இருந்தாலும், அங்கே ஒரே யூனியனாக இருப்பதால், அவர்களுடைய கோரிக்கைகளை ஒரே குரலாக எழுப்ப முடிகிறது. இன்ன இன்ன குறை இருக்கிறது என்று சொல்கிறோம். நாங்கள் சொல்வதை அதிகமாக சொல்ல வேண்டுமோ, கடுமையாகச் சொல்ல வேண்டுமோ என்று இருந்தாலும்கூட, அந்தக் குறைகளைக் கவனிப்பதற்கும் நாங்கள் பொறுமையாக இருந்து பார்க்க சௌகரியமாக இருக்கிறது. ஐந்தாறு யூனியன்கள் இருந்தால், கோரிக்கைகளை ஒரே குரலில் சொல்ல முடியாது. அந்த இலாகாவுக்கு நன்மை இல்லை; அதனால் பொது மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். தொழிலாளர்களுடைய பல யூனியன்கள் ஒன்றாகச் சேருவதாக இருந்தால், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அவர்களுடைய குறைகளை நல்ல எண்ணத்தோடு, "ஸ்பிரிட் ஆப் அண்டர்ஸ்டாண்டிங்" என்ற முறையில் குறைகள் என்னவென்று பார்ப்பதாய் இருந்தால், நிச்சயமாக இப்போதுள்ள அமைச்சர் அந்த இலாகாவுக்குத் தலைமையாக இருப்பதால் அதன் எதிர்காலம் நல்ல எதிர்காலமாக இருக்க முடியும் என்பதில் எனக்கு என்றைக்கும் சந்தேகம் கிடையாது.



இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். நாமும் பல ராஜ்யங்களைப் போல "மெர்ஸிடைஸ்டு பென்ஸ்" போன்று நூற்றுக்கணக்கான வண்டிகளை வாங்குகிறோம். அந்தக் கம்பெனிகளே நம்முடைய பயிற்சிக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கிறார்கள். ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற வெளி நாடுகளுக்கு இங்கு இருந்து ஆட்களை அனுப்பி அவர்களே பயிற்சி அளிக்கிறார்கள். அம்மாதிரி பயிற்சி நம்முடைய, இலாகாவிலுள்ளவர்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது? இங்கே "ஆடமைபல் என்ஜினியரிங்" தெரிந்தவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள், வாலிபர்கள் இருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தின் செலவிலே இல்லாவிட்டாலும், அந்தக் கம்பெனிகள் செலவிலே ஏன் நாம் இம்மாதிரி பயிற்சிக்கு அனுப்பக்கூடாது? அப்படிச் செய்தால் ரொம்பப் பிரயோசனகரமாக இருக்கும். சென்ற ஆண்டிலே கூட குறிப்பிட்டேன். அண்டை ராஜ்யங்களிலிருந்து வருஷம் ஒன்றுக்கு 2, 3 பேர்கள் இம்மாதிரி பயிற்சிக்கு போகும்பொழுது, நம்முடைய ராஜ்யத்திலிருந்து இத்தகைய பயிற்சிக்கு யாரும் போகவில்லையே என்பது குறித்து உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. நாம் எதையும் சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று திட்டம் போடுகிறோம். ஆனால் திட்டப்படி நடைமுறையில் செய்வது கொஞ்சம் தாமதப்படுகிறது எல்லா இலாகாக்களிலும் சரி. அது போல இல்லாமல், "லாங் டிஸ்டன்ஸ் ரூட்" எடுப்பதற்கு திட்டம் போட்டிருக்கிறோம். அதை வெகு விரைவிலே எடுத்துக்கொண்டு நம்முடைய வருமானத்தை அதிகரிக்க வேண்டும், பொது மக்களுக்கும் சௌகரியத்தை அதிகரிக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI M. KALYANASUNDARAM**: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நம்முடைய ராஜ்ய சர்க்கார் நடத்தக்கூடிய தொழில்களில் இது ஒரு முக்கியமான வருவாய் அளிக்கக்கூடிய இலாகா. எலக்ட்ரிஸிட்டி போன்ற அதிக மூலதனத்தை ஈடுபடுத்திசெய்யவேண்டிய தொழில்களை எடுத்து நடத்தினாலும், லாப நோக்கத்தோடு அந்த தொழில்களைநடத்த முடியாது. அதில் ஏதாவது மிச்சம் ஏற்பட்டாலும், மீண்டும் அதை அந்தத் தொழிலிலேயே ஈடுபடுத்தி அபிவிருத்தி செய்யக்கூடிய, தேசத்திற்கு அவசியமான ஒரு தேவையை பூர்த்தி செய்யக்கூடிய தொழில் என்ற முறையில்தான் அதை நடத்த முடியும். பஸ் போக்குவரத்து அப்பேற்பட்ட அவசியத்தை முன்னிட்டு நடத்தக்கூடிய தொழில் மட்டும் அல்ல. வருவாயை எதிர்பார்த்து நடத்தக்கூடிய ஒரு முக்கியமான தொழில் ஆகும் என்பதையும் மனதில் வைத்துத்தான் அதில் இருக்கக்கூடிய குறைபாடுகளை சுட்டிக்காட்ட வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சர்க்காரால் நடத்தப்படக்கூடிய, குறிப்பாக சென்னை நகர பஸ் போக்குவரத்து சம்பந்தமாக இரண்டு முனைகளிலிருந்து தாக்குதல் வருகிறது. ஒரு பக்கத்தில் இந்த பஸ் போக்குவரத்தை பயன்படுத்தக்கூடிய சென்னை நகர மக்களுக்கு, சென்னை நகரத்திற்கு வரக்கூடியவர்களுக்கு இந்த பஸ் போக்குவரத்து அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்யவில்லையே என்ற நியாயமான குறையின் காரணமாக தாக்குதல் ஏற்படலாம். அந்தத் தாக்குதல்களை அனுசரணையோடு கவனிக்க வேண்டும். இன்னொரு முனையிலிருந்து தாக்குதல் தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்தோ, அல்லது அவர்களால் தூண்டப்பட்டவர்களிடமிருந்தோ வருகின்றன. இந்தச் சபையில்கூட அந்தக்குரல் கேட்பதைப்பற்றி நான் மிகவும் வருந்துகிறேன். அதுவும் அமைச்சர் அவர்கள் கட்சியைச் சேர்ந்த அங்கத்

தினர்கள் சிலர் தனியார் நடத்தினால் திறமையாக நடத்தக்கூடும் என்று சொன்னார்கள். அந்தத் தத்துவம் 100 வருஷங்களுக்கு முன்னால் இருந்த தத்துவம். அந்தக் காலத்தில் வேண்டுமானால் அப்பேற்பட்ட தத்துவம் பேசலாம். சர்க்கார் நடத்தினால் திறமையாக இருக்காது, தனியார் நடத்தினால் திறமையாக நடக்கும் என்று சொல்லுவது ஊளுத்துப்போன பத்தாம்பசலி தத்துவம் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சமீப காலத்தில் பார்ப்போமானால் பத்திரிகைகளில்கூட அம்மாதிரி அறிக்கைகள் விடாமல் வந்துகொண்டிருக்கின்றன. இந்தக் குறை எல்லாம் திடீர் என்று ஏற்பட்டது மாதிரி அதனுடைய நோக்கம். அந்தக் குறைகளை போக்க வேண்டியது என்பது அல்ல அதனுடைய நோக்கம். பத்திரிகைகள்கூட இப்பேற்பட்ட அக்கிரமமான குற்றச்சாட்டுகளுக்கு இடம் அளிப்பது வருந்தத்தக்கது. சர்க்காருக்கு வருவாய் பெருக வேண்டும், சர்க்கார் பல நல்ல காரியங்களைச் செய்யவேண்டும் என்பது உண்மையான நோக்கமாக இருந்தால் இதை நான் வரவேற்பேன். சர்க்கார் வருவாய் கிடைக்கக்கூடிய ஒரு தொழிலை எடுத்து நடத்துவதை தாக்குவது நியாயமா, நேர்மையா என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும். ஜனங்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களை தீர்க்கவேண்டும், என்ற எண்ணத்தோடு பத்திரிகைகள் இம்மாதிரி அறிக்கைகளுக்கு இடம் கொடுத்தால் அதை நான் வரவேற்கிறேன். சர்க்கார் "மனுபலியாக" இந்தத் தொழிலை எடுத்து நடத்துவதினால்தான் இப்பேற்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன, என் தனியார்களுக்கு சில ரூட்களை விடக்கூடாது என்று பரிந்து பேசக்கூடிய அளவுக்கு பத்திரிகைகள் இடம் அளிப்பதால் தான் எனக்கு கோபம் வருகிறது. சர்க்கார் போக்குவரத்தை தாக்கக் கூடிய நோக்கம் சென்னை நகரத்தில் தனியார்களுக்கு இடம் அளிக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான். அதற்காக வேண்டி பத்திரிகைகளில் பலமான தாக்குதல் ஆரம்பமாகி, தொடர்ந்து நடந்து வருகிறது. சர்க்கார் இதற்குப் பயந்துவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அமைச்சர் இதற்குப் பயப்படமாட்டார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். பத்திரிகைகளுக்கு அவர் பயப்படாமல் இருக்கலாம். ஆனால், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் நிர்ப்பந்தம் கொண்டு வருவதற்கு அவர்கள் பயந்து விடுவார்களோ என்று கூட நான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய கட்சியில் போக்குவரத்தில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய பெரிய பஸ் முதலாளிகள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். பஸ் முதலாளிகள் அரசியலில் இருக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. பெரிய முதலாளிகள் அரசியலில் இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அவர்கள் தங்கள் சொந்த நலத்தை விட தேசத்தின் நலத்தை பெரிதாகக் கருதவேண்டும், அரசாங்கத்தின் நலத்தைப் பெரிதாகக் கருதவேண்டும். அதற்கும் மேலாக தன் சொந்த நலனுக்கு கட்சியை பயன்படுத்திக் கொள்ளக்கூடாது, தங்களுக்கு இருக்கக்கூடிய வசதிகளை அந்தக் கட்சிக்கு பயன் படுத்திக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தப் பிரச்னையை கவனிக்க வேண்டும். இந்த பஸ் தொழில் நிரந்தரமாக வருமானம் கொடுக்கக் கூடிய ஒரு தொழில். அதை சர்க்காரே பெரிய அளவுக்கு மேற்கொண்டு நடத்தவேண்டியது அவசியம். பொது விவாதத்திற்கு நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது என்ன கூறினார்கள் என்றால், தனியார் துறைக்கும் விடவேண்டும். சர்க்கார் துறைக்கும் விடவேண்டும் என்று சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது விஷயமாக அவர்களுடைய கருத்தை தெளிவாக எடுத்துச் சொல்லவில்லை. எதிர்க் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் யாரும், நான் ஆகட்டும், திரு. அண்ணாதுரை ஆகட்டும் தனியார்களையெல்லாம் ஜெயிலில் பிடித்துப் போட வேண்டுமென்று சொல்லவில்லை. யாரும் தனியாருக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. தொழில்களை எடுத்து நடத்தும்பொழுது, குறிப்பாக பெரிய தொழில்களை எடுத்து நடத்தும்பொழுது, சர்க்காருக்கு முதல் இடம், இரண்டாவதாக தனியாருக்கு, தனியார் துறையில் தொழிற்சாலை வருவதாக இருந்தால் கூட என்று கூறியிருக்கிறோம். இரண்டும் சேர்ந்து தொழில்கள் வளரவேண்டுமென்பது தான் முக்கிய நோக்கம். ஆனால் சர்க்கார் முதலைக் கொடுத்து தனியார் எடுத்து நடத்துவதில்



இருக்கக்கூடிய சில குறைபாடுகளை எங்களுக்கு தெரிந்த விவரத்தை வைத்துக்கொண்டு சுட்டிக்காட்டினோம். தனியார் யாரும் தொழில் நடத்தக் கூடாது, தனியார் நடத்தக்கூடிய தொழிலுக்கு சர்க்கார் உதவி செய்யக் கூடாது என்ற நோக்கத்தோடு இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. சர்க்காரும் நடத்தவேண்டும். தனியாரும் நடத்த வேண்டும். நவீன சோஷலிஸ கருத்து என்று சொல்லி, சர்க்கார் துறை அதிகமாக இருக்கிறது, தனியார் துறை குறைந்து விட்டது, அதனால் தனிப்பட்ட முதலாளிகள் சுதந்திராக் கட்சியை ஆதரித்துவிடுவார்களோ என்று நினைத்து, "நாங்களும் தனியார் துறையில் தொழில்கள் ஏற்படுத்துகிறோம். வாருங்கள்" என்று சொல்லுவது கூடாது. அதே சமயத்தில் தொழிலாளர்களும், விவசாயிகளும் வேறு பக்கத்திற்குப் போய்விடுவார்கள் என்று கருதி, "நாங்கள் சொல்லுவது சோஷலிஸம். எங்கள் பக்கம் வாருங்கள்" என்று சொல்லுகிறார்கள். "நீங்கள் சொல்லுவது சரியான சோஷலிஸம்" என்று கம்யூனிஸ்டு தாக்கி விடுவார்களோ என்பதற்காக, இவைகளெல்லாம் பத்தாம் பசலி சோஷலிஸம், நாங்கள் சொல்லுவது புதிய சோஷலிஸம்" என்று புதிய சோஷலிஸ கருத்துக்களை விளக்கும்பொழுது, அந்த உற்சாகத்தில் அமைச்சர் அவர்கள் ஜி. டி. ஹெச். கோல் போன்ற அப்பேர்ப்பட்ட மேதை சொன்னதைக்கூட மறுக்கக்கூடிய அளவுக்கு வெகு உற்சாகத்தோடு பேசினார்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும்.

இப்பொழுது தனிப்பட்டவர்களிடம் இருக்கக்கூடிய ரூட்களை கண் மூடித்தனமாக எடுத்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அதிலிருந்து சர்க்காருக்கும் வருமானம் வரவேண்டியிருக்கிறது என்று அமைச்சர்கள் சொல்லலாம், நம்முடைய தொழில் அமைச்சர் சொல்லாவிட்டாலும், மின்சார அமைச்சர் அவர்கள் சொல்லலாம், "என் தனிப்பட்டவர்களுக்கு வரி போடவில்லையா ? அதிலிருந்து சர்க்கார் நிதிக்குப் பணம் வரவில்லையா?" என்று. ஒரு விஷயத்தை சவால் விட்டு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். பஸ் முதலாளிகளையும் கேட்கிறேன். எந்த பஸ் முதலாளியாவது நியாயமான, சரியான கணக்குகளை கொடுக்கிறார்களா? இரண்டு கணக்கு வைத்துக்கொள்ளாமல் இருக்கிறார்களா ? ஸர்சார்ஜ் விதிக்கிறோம் என்று சொல்லலாம். சர்க்காருக்கு அதனால் வருமானம் வருகிறது என்று சொல்லலாம். ஆனால், அந்த வருமானத்தைக் குறைப்பதற்கு அவர்கள் என்ன செய்கிறார்கள் சில பஸ் முதலாளிகள், சிறந்த தேச பக்தர்கள் என்று சொல்லக்கூடியவர்கள், ஆளும் கட்சிக்கு பலவிதத்தில் உதவியாக இருக்கக்கூடியவர்கள்? ஸீட்களைக் குறைத்து, "ஸ்டாண்டிங் பாசஞ்சர்ஸ் அதிகப்படுத்தி சர்சார்ஜை குறைப்பதற்கு வழி செய்கிறார்கள். உட்கார்ந்து போனால் ஒரு ரேட், நின்றுகொண்டு போனால் ஒரு ரேட் என்பதில்லை. உட்கார்ந்து போனாலும், நின்றுகொண்டு போனாலும் ஒரே டிக்கட் கட்டணம் தான் வசூலிக்கப்படுகிறது. ஆனால், உட்கார்ந்து இருக்கக் கூடிய ஸீட்களுக்கு கட்டணம் அதிகம், நிற்கக்கூடிய ஸீட்களுக்கு கட்டணம் குறைவு. ஆகையினால்தான் சொல்லுகிறேன். தனியார் நடத்துவதிலே சர்க்காருக்கு வரி மூலம் கிடைக்கக்கூடிய பணத்தில் படிக்கு பாதி கூட கிடைக்கவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவேதான் நான் ஒன்றை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். கூடிய வரையில் சர்க்கார் எவ்வளவு தூரம் பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்தமுடியுமோ அவ்வளவு தூரம் எடுத்து நடத்த முன் வரவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்குச் சாதகமான சூழ்நிலையை உண்டாக்க வேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்துவதாக இருந்தால் திட்ட வட்டமாக அதற்குத் திட்டம் வகுக்க வேண்டும். அதற்கு பொது ஜன ஆதரவு இல்லை என்று நினைக்கக்கூடாது. எந்த வித எதிர்ப்பு இருந்தாலும் சரி சர்க்கார் பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. எந்த வித எதிர்ப்பு இருந்தாலும் சர்க்கார் உறுதியாக எடுத்த நடத்த முற்படவேண்டும். ரொம்ப முயற்சி எடுத்துக்கொண்டு சென்னையிலிருந்து பெங்களூருக்கு இப்பொழுது பஸ் விடுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதில் எவ்வளவோ குறைபாடுகள் இருந்தாலும்

[Sri M. Kalyanasundaram] [22nd March 1960

அது லாபகரமாகவேதான் இருக்கிறது. இப்பொழுது இரண்டு பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு பஸ்களிலே இவ்வளவு லாபம் வந்தால் ஏன் எல்லா இடங்களிலும் பஸ் விடுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது? ஆகவே இதில் லாபம் வருவதால் நான் சொன்ன யோசனைகள் எல்லாம் நியாயமாகவேதான் இருக்கும் என்று நினைத்துக் கொள்ளலாம். இந்த இரண்டு பஸ்களுமே இவ்வளவு லாபம் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது என்றால் இன்னும் அதிகப்படியாக விட்டால் அதிகப்படியாக லாபம் கிடைக்கும் என்று கருதலாம் அல்லவா? இந்த நெடுந்தூர ரூட்டை தனி முதலாளிகளுக்கு கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டும் வரியை கணக்குப் பார்த்தால் அது குறைவாகத்தான் இருக்கும். ஆகவே சர்க்காரே பஸ்களை எடுத்து நடத்துவதில் எவ்வளவோ லாபம் இருக்கிறது என்று கண்டுகொள்ளலாம். ஆகவே சென்னை ராஜ்யம் பூராவுமே பஸ் போக்குவரத்தை சர்க்காரே எடுத்து நடத்த முன் வரலாம் என்று தோன்றுகிறது. அதற்கு வேண்டிய அவசியமும் வாய்ப்பும் இருக்கிறது. இதில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். நெடுந் தூரம், குறிப்பாக 50 மைல்கள் அல்லது 75 மைல்கள் போகக்கூடிய மார்க்கங்களில் சர்க்கார் எக்ஸ்பிரஸ் பஸ்களை விடலாம். ஆகவே இப்படி எல்லா இடங்களையும் எடுத்துக் கொண்டு எல்லா மார்க்கங்களிலும் சர்க்கார் போக்குவரத்தை எடுத்து அபிவிருத்தி செய்யலாம். இது என்னுடைய அபிப்பிராயம். இதை வலியுறுத்தி நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதில் இரண்டு வித அனுகூலங்கள் இருக்கின்றன. அனாவசியமான போட்டிகளை தடுக்கலாம். தனி நபர்களுக்கு விட்டு விட்டால் ஜனங்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

நான் முன்பே தெரிவித்திருக்கிறேன். மதுரை நகர பஸ் போக்குவரத்தைப் பற்றி. அதைப் பற்றி ட்ரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியில் எடுத்துக்காட்டினேன். அதன் பேரில் விசாரணை நடத்தி, அதில் வாக்குறுதி கொடுத்தபடி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. அதைப் பற்றிய விவரங்கள் இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. ஜனத்தொகை அடிப்படையில் அங்கே பஸ்களை விடுவது என்றாலும் சென்னை நகர ஜனத்தொகை அடிப்படையில் பஸ் விடுவதைக் காட்டிலும் அங்கே குறைவாகத்தான் விடப்படுகிறது. கோயம்புத்தூரை விட குறைவாகத்தான் விடப்படுகிறது. திருச்சி நகரத்தில் விடப்படுவதைக் காட்டிலும் குறைவாகத்தான் விடப்படுகிறது. ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால் குறைவாக விடவேண்டிய காரணம் என்ன. அங்கே ஒரே ஒருகம்பெனிக்கு ஏன் ஏக போக பாக்கியமாக கொடுக்க வேண்டும். ஒரு சிட்டி பூராவுக்குமே ஒருவருக்கு மட்டும் ஏன் கொடுக்க வேண்டும். சிறு முதலாளிகளுக்கும் ஏன் அங்கே கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். சென்னை நகரத்தில் சர்க்காருக்கு ஏகபோகமாக கொடுக்கப்பட்டிருக்கும்போது அங்கு மட்டும் ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்கலாம். அப்படிக் கேட்டால் ஏன் மற்ற நகரங்களிலும் ஏகபோகமாகக் கொடுக்கக்கூடாது என்று நான் கேட்கிறேன். மதுரை நகரத்தில் மட்டும் ஏன் அப்படிக் கொடுக்க வேண்டும். அங்கு பத்து பஸ்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்காவது கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறேன். அதிக பஸ்களை வைத்தால் சர்க்காருக்கு அதிக வரி கொடுக்கவேண்டுமென்று பஸ்களை குறைந்த அளவில் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைக் கண்டுபிடிக்க வேண்டும். அதுதான் காரணம் என்று தெரிய வருகிறது. இப்படி தங்களுக்குச் சாதகம் செய்து கொள்ளும் அளவில் பிரயாணிகளுக்கு வசதி செய்து கொடுக்காமல் குறைந்த பஸ்களை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை விசாரணை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. பொது ஜன அபிப்பிராயத்தை கனம் அமைச்சர் அவர்கள் கேட்க வேண்டும். தைரியமாக பஸ்களை எடுத்து நடத்த முன் வரவேண்டும். இப்படி தனிப்பட்ட முதலாளிகள் செய்யக்கூடிய தவறுகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



22nd March 1960] [Sri M. Kalyanasundaram]

பிறகு நீண்ட தூர மார்க்கங்களை எடுத்துக்கொள்வதன் மூலம் ரயில்வேக்களின் வருமானம் பாதிக்கக்கூடாது. அந்த அளவில் அதை எ த்துக்கொள்ள வேண்டும். ரயில்வேயுடன் இணைந்த தொடர்பு இருக்க ஏற்பாடு செய்யவேண்டும். ரயில் போக்குவரத்துக்கு பஸ் போக்குவரத்தினால் இடைஞ்சல் இல்லாத அளவில் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படி ரயில் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதற்கு நல்ல வசதி இருக்கிறது. ஏனென்றால் சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட மட்டில் ராணுவத்திற்கு என்று போட்டதற்குப் பிறகு எந்த விதமான அபிவிருத்தியும் அடையவில்லை. பழைய காலத்தில் இருந்தபடியேதான் இருந்து வருகிறது. சுதந்திரம் அடைந்த பிறகு வட இந்தியாவில் எந்த அளவில் அபிவிருத்தி அடைந்திருக்கிறதோ அந்த அளவில் இங்கே சென்னை ராஜ்யத்தில் அபிவிருத்தி அடையவில்லை. சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட மட்டில் ரயில் போக்குவரத்து இன்னும் எவ்வளவோ அபிவிருத்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அத்துடன் இன்னும் துரிதமாக போவதற்கு ஏற்பாடு செய்யவேண்டியதாக இருக்கிறது. பிரயாணிகள் வண்டிகளும், கூட்ஸ் வண்டிகளும் இன்னும் துரிதமாக போக நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது. காரணம் இங்குள்ள பாதைகள் அவ்வளவு மோசமாக இருக்கிறது. அவைகளை அபிவிருத்தி செய்யவேண்டியதாக இருக்கிறது. இவைகளைப் பற்றியெல்லாம் ரயில்வே அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டிலிருந்து புள்ளி விவரங்களுடன் எடுத்துக்காட்ட முடியும். ஆகவே போக்குவரத்தை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். அத்துடன் பஸ் போக்குவரத்தையும் அத்துடன் இணைத்து அபிவிருத்தி செய்யவேண்டும். அதன்மூலம் சர்க்காருடைய வருமானத்தையும் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

தேசிய அபிவிருத்திக் கவுன்சிலிலும் நமது அமைச்சர்கள் போய்வந்திருக்கிறார்கள். போதிய வாக்குறுதியும் கொடுத்து வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அடுத்து வரும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 500 கோடி ரூபாய் செலவு செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். அதை மக்களிடத்தில் வரிப் பணமாக வசூலிக்காமல் வருவாயை அதிகப்படுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு மக்களும் தயாராகத்தான் இருக்கிறார்கள். ஆகவே அதற்கு ஏற்றவாறு நாங்கள் கொடுக்கும் யோசனைகளையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டு நடக்க வேண்டும். அதன் மூலம் வருவாயைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ரயில் போக்குவரத்தும் பஸ் போக்குவரத்தும் நமக்கு காமதேனுவாக இருக்கிறது. ஆகவே அதை தனிப்பட்டவர்கள் கையில் கொடுக்காமல் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் சர்க்காருடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். என்பது என்னுடைய யோசனை.

மூன்றாவது திட்ட காலத்தில் எவ்வளவு துரிதமாகவும் எவ்வளவு சிக்கனமாகவும் வேலை செய்யவேண்டுமோ அவ்வளவு துரிதமாகவும் சிக்கனமாகவும் வேலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கான சில யோசனைகளையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

ரோடு போக்குவரத்தை சர்க்கார் எடுத்து நடத்தி வருமானத்தை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். தனிப்பட்டவர்களுடைய கையில் அதை விடக்கூடாது. அவர்களிடம் விட்டால் அதனால் எவ்வளவோ குறைபாடுகள் ஏற்படுகிறது. ஸிட்டியில் எடுத்துக்கொண்டது போல் எல்லா இடங்களிலும் எடுத்துக்கொள்ள வேண்டும். எதிர் கட்சியில் உள்ளவர்கள் அவைகளைப் பற்றி குறைகளைச் சொல்லுகிறார்கள் என்றால் அவைகளை குறைகள் என்று எடுத்துக்கொள்ளாமல் அவைகளை வைத்து சீர்திருத்தம் செய்து நல்ல முறையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். குறைகளை எதிர் கட்சிகள் சொல்லிக்கொண்டு தான் இருப்பார்கள். அப்படி குறைகளைச் சொல்லும் போது அதன் உள் நோக்கத்தைத் தெரிந்து கொண்டு நடக்க வேண்டும். சென்னையில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் தொழிலாளர்களுக்கு நல்ல வகையில் பயன்படும் அளவில் இருக்க வேண்டும். தொழிலாளர்களை அடிமையாக பாவிக்கக்கூடாது. அவர்

[Sri M. Kalyanasundaram] [22nd March 1960

களுடைய உழைப்பு இருந்தால்தான் தேசத்திற்கு வருமானம் அதிகமாக இருக்கும். தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் எந்தத் தொழிலும் நன்றாக நடைபெறாது. எந்ததொழில் நிர்வாகமும் அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் நடக்க முடியாது. யந்திரங்கள் செய்யக்கூடிய வேலைகளை விட தொழிலாளர்களிடமிருந்து அதிகப்படியாக வேலையை நாம் எதிர் பார்க்கலாம். அவர்களுக்கு உத்சாகம் கொடுக்கும் அளவில் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அதன் மூலம் உற்பத்தியைப் பேருக்கிக்கொள்ள வேண்டும். இன்றைதினம் தொழிலளர்களும்
11-30 a.m. முதலாளிகளும் பிரிந்து நிற்க முடியாது. அவர்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் திறமையாகவும் சிக்கனமாகவும் தொழில நடத்தலாம். மக்களிடம் அதனால் அதிருப்தி எற்படாது. தொழிலும் பாதிக்காது. இப்போது இருக்கிற சிக்கல் எந்த இடத்தில் இருக்கிறது என்று பார்த்து அதை நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். கடந்த ஏழு எட்டு வருஷ காலமாக அதிகாரிகளிடத்திலும், ஒருசில தொழிலாளர்களிடத்திலும் அக்கிரமமான முறையில் இருந்து வந்த தொடர்பை இப்போது ஒழித்தாகிவிட்டது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அது போதுமானது இல்லை. அது நெகடிவ். பாஸிடிவ்-வாக இனி அதிகாரிகளிடத்திலும், தொழிலாளர்களிடத்திலும் நேர்மையான முறையில் ஒரு தொடர்பு, ஒரு ஒத்துழைப்பு உண்டாக வழி செய்தாகவேண்டும். அதுவும் தொழிற்சங்கத்தில் இருந்து நல்ல பணியாற்றி, அனுபவம் பெற்றிருக்கிற அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் இவ்விலாகா பொறுப்பை வகித்து வருகிற காலத்திற்குள்ளாக ஏற்படவேண்டும். வெளி தொழிற்சங்கத்தில் உள்ளவர்களுக்கு இருக்கிற உரிமைகள் இங்குள்ள தொழிலாளர்களுக்கும் இருக்கவேண்டும். அவர்கள் நம் தேசத்திற்கு சேவை செய்கிற வீரர்கள் என்று பெருமைப்படக்கூடிய முறையில் அதிகாரிகள் மனம் குமுறாமல், ஆத்திரப்படாமல் இந்தத் தொழிலாளர்களை அரவணைத்துக்கொண்டு போக வழி செய்ய வேண்டும். சம்பளம், பஞ்சப்படி முதலியவற்றில் எல்லாம் தொழிலாளர்களுக்கு அதிகக் கவலை இருக்கலாம். நாளுக்கு நாள் விலைவாசிகள் ஏறிக்கொண்டேபோகின்றன. இருந்தாலும் பணத்தால் உதவி செய்ய முடியாவிட்டாலும் அதிகாரிகள் உற்சாகமான, ஆதரவான வார்த்தைகளைச் சொல்லி தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியூட்டி நல்ல முறையில் அவர்கள் வேலை செய்யும்படியாகச் செய்யலாம்.

இதில் "லேபர் பார்ட்டிஸிபேஷன் இன் மானேஜ்மெண்டு" முறையைப் பரிட்சார்த்தமாகக் கொண்டு வந்தார்கள். திரு. வெங்கட்டராமன் தலைமையில் நடக்கக்கூடிய ஒரு தொழிலிலேயே அதை வெற்றிகரமாக நடத்த முடியவில்லை என்றால் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. "என்னிடத்தில் வேறு பல இலாக்காக்கள் இருக்கின்றன. நேரம் இல்லை, இதில் மட்டும் எப்படி அதிக கவனம் செலுத்துவது" என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். கனம் அமைச்சருக்கு தொழிற்சங்க அனுபவம் உண்டு. தொழிலாளர்களோடு தொடர்பு உண்டு. இருந்தும் அத்திட்டம் வெற்றிகரமாக நடத்தப்படவில்லை என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம் அதிகாரிகளுடைய பழைய மனோபாவத்தை மாற்றி, தொழிலாளர்களை பயமுறுத்தி, தண்டனை என்கிற ஒரே ஒரு ஆயுதத்தைக்கொண்டு வேலை வாங்கவேண்டும் என்கிற நினைப்பை மாற்றி அவர்களுக்குள் பரஸ்பர ஒற்றுமையை, சௌஜன்யத்தை உண்டுபண்ண முடியாதது தான். ஒருசில தொழிலாளிகள் தவறாக நடந்து இருக்கலாம். விஷயம் தெரியாத காரணத்தினால், வேறு சிலர் அவர்களுக்கு அதிக ஆசை ஊட்டிவிட்டதனால் தவறு ஏற்படுவது தான் உண்டு. இருந்தாலும் அதற்காக அத்தனை தொழிலாளர்களும் அதிருப்தி அடையக்கூடிய காரியத்தைச் செய்தால் அது பாதகமாகும். இதுதான் க்ரோம்பேட்டைத் தொழிற்சாலையில் ஏற்பட்டிருக்கக்கூடிய பலவீனம் என்பது என் அபிப்பிராயம்.

இன்று அங்கே ஒரு ஷிப்ட் தான் வேலை நடக்கிறது. இவ்வளவு மூலதனம் போட்டு, இயந்திரங்களை எல்லாம் வாங்கி வைத்து—எந்த தனிப்பட்ட முதலாளியாவது ஒரு ஷிப்ட் மட்டும் நடத்துவானா என்று பார்க்கவேண்டும். இன்னும் அங்கே 800 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கலாம்.



22nd March 1960] [Sri M. Kalyanasundaram]

இரண்டு ஷிப்டாக வேலை செய்தால்—இன்றையதினம் எழுபது, எண்பது பஸ்கள் டி.வி.எஸ்., சிம்சன் போன்ற எனக்கு எந்தக் கம்பெனி என்று கவலை இல்லை—தனிப்பட்ட கம்பெனிகளிடத்தில் கட்டும்படியாக விடுவதற்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. நாம் கட்டுகிற பஸ்களுக்கு ஆயிரம் செலவு கூட ஆனாலும் கூடப் பரவாயில்லை. செலவைக் குறைக்க முடியுமா என்று யோசனை பண்ணுங்கள் என்றுதான் சொல்வோம். ஆனாலும் அப்படி இரண்டு ஷிப்டுகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யாது இருப்பது தவறு என்று சொல்கிறேன். மாதம் ஒன்பது பஸ்கள் கட்டுவதற்குப் பதிலாக 18 பஸ்கள் கட்டலாம், இரண்டு ஷிப்ட் ஏற்படுத்தினால். இதற்குத் தொழிலாளர்கள் சாதகமாக இருக்கவில்லையா ?

இதை வற்புறுத்த வருகிறபோது தான் சில அங்கத்தினர்கள் என் கட்சியைச் சேர்ந்தவர்களும் குறிப்பிட்டார், இங்கே க்வாலிபைட் என்ஜினியர்கள் கிடையாது என்று. ஆனால் ஒன்று, படிப்பு இல்லாதவர்களாக இருந்தாலும் மோட்டார் தொழில் சம்பந்தப்பட்டவரை நம் நாட்டில் மிகவும் நுட்பமாக வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் அநேகம்பேர் இருக்கிறார்கள். இயந்திரங்களைப் பண்ணும் தொழிற்சாலைகள் இங்கே கிடையாது. இருந்தாலும் சொல்லுவதைக் கேட்டு, அநுபவத்தை வைத்துக் கொண்டு நம் மாகாணத்தில் என்ஜின்களை எல்லாம் ரிப்பேர் செய்யக்கூடிய ஆயிரம் ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே திறமைக் குறைவு அல்ல அதற்குக் காரணம். நம்மிடத்தில் திறமையான ஆட்கள் இருக்கிறார்கள். ஆகவே க்ரோம்பேட்டை தொழிற்சாலையில் இரண்டு ஷிப்டுகள் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும். இதனால் இன்னும் 800 பேர்களுக்கு மேல் வேலை செய்ய முடியும் என்பது என் வேண்டுகோள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அங்கே வேலை செய்கிற கண்டக்டர்கள், டிரைவர்கள் இன்னும் வொர்க்ஷாப்பில் வேலை செய்கிற தொழிலாளர்கள் அத்தனை பேர்களும் விலைவாசி உயர்வைப்பற்றி கவலை அதிகம் கொண்டிருக்கிறார்கள். பஞ்சப்படி, சம்பளம், போனஸ் பற்றி அவர்களுக்குக் குறைகள் இருக்கின்றன. குறைகளை சர்க்காருக்கும் எழுதி அனுப்பி வைக்கிறார்கள். நிறைய மெமொராண்டங்கள் வந்திருக்கின்றன. சர்க்கார் இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, அந்தத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசலாம். ஒரு மகாநாடு கூட்டலாம். அவர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்கள், இவர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்கள், இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் அவர்களுக்கு எந்த அளவில் உதவி செய்யக்கூடும் என்பதை எல்லாம் பரிசீலனை செய்து சீக்கிரம் ஒரு முடிவுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். நகரத்தில் வில்லிவாக்கம் போன்ற பகுதிகளில் போதுமான பஸ்கள் விடப்படவில்லை என்கிற அதிருப்தி வளர்ந்து வருகிறது. பி. டி. கம்பெனியார் இருந்தபோது பத்து நிமிஷத்திற்கு ஒரு பஸ் கிடைத்தது, இப்போது ஒரு பஸ்-க்கு ஒரு மணி காத்திருக்கவேண்டும் என்கிறார்கள். அமைச்சர் சொல்லலாம் தனிப்பட்ட கம்பெனியார் 7 ஷிப்ட் போவது என்றால் அடிக்கடி சென்று பத்துப் பன்னிரண்டு ஷிப்டுகள் கூட அடிக்கிறார்கள். நாம் அப்படிச் செய்வதற்கில்லை என்று. ஜனங்களுக்கு இது தெரியாது. என்னவோ அவர்கள் ஒரு பஸ்-க்கு ஒரு மணி காத்திருந்து கஷ்டப்படவேண்டியிருக்கிறது. அவர்களுடைய அதிருப்தி நியாயமானது. இதைத்தான் கனம் பழனிசாமி அவர்கள் கூடச் சொல்ல வந்தார்கள். ஒரு பஸ் ஐடில் டைம் என்று நிற்கவே கூடாது. ஒவ்வொரு பஸ்-க்கும் டிரிப்புகளை அதிகப்படுத்த வேண்டும். இப்போது பிரேக்டவுன் ஏற்பட்டால் உடனடியாக அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அன்றே மீண்டும் அந்த பஸ் ஓடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகிறது. வெயர்லஸ் மெஸேஜ் அளிக்கும் வான்கள் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பது எல்லாம் உண்மை. இன்னும் துரிதமாக அதைத் தவிர்க்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இதில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நான் இன்னும் அதிகமாக சொல்லிக் கொண்டு போகலாம். ஐ. எல். ஓ. எக்ஸ்பர்டுகளை வரவழைத்து யோசனைகள் கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த யோசனைகளை முடிவு எடுத்த பிறகு சொல்கிறேன் என்றார்கள். கூடிய சீக்கிரம் அந்த அறிக்கை என்ன ? சர்க்கார் எடுத்த முடிவுகள் என்ன ? நிராகரிக்கப்பட்ட சிபார்சுகள் என்ன, எந்த எந்த காரணத்திற்காக நிராகரித்தார்கள் என்பதை எல்லாம் இந்த மேஜையின் மீது வைத்து ஒரு நாள் தனியாக அதை இந்தச் சபையில் விவாதிக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம். இது சர்க்கார் நடத்தக்கூடிய ஒரு தொழில் சம்பந்தமான அடிப்படை விஷயமாதலால் அவசியம் அப்படிப்பட்ட ஒரு விவாதத்திற்கு இந்தச் சபையில் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

இதற்குமேலாக சென்னை நகரப் போக்குவரத்தில் அதிருப்தி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் பஸ் பற்றாக்குறை. புதிய பஸ்களும் வந்து சேர்ந்தால் நம்மிடம் 500 பஸ்கள் தான் இருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த 500 பஸ்களில் 20 பஸ்கள் தான் ரொம்ப காலாவதியானதாக இருக்கும், மற்றவைகள் எல்லாம் ஏறத்தாழ ஓடக்கூடிய நிலையில் இருக்கும் வண்டிகளே என்று அமைச்சர் அவர்களுடைய அறிக்கை கூறுகிறது. 500 பஸ்கள் ஓடக்கூடிய இடத்தில் 20 பஸ்கள் காலாவதியானதாக இருக்கும் என்பது பெரிய குறை என்று நினைக்கக் கூடியது அல்ல.

தனிப்பட்ட முதலாளிகள் குறைந்தது நாள் ஒன்றுக்கு 150 மைல்களுக்கு குறையாமல் அர்பன் சர்வீஸில் ஓட்டுகிறார்கள். நகரப்புறங்களில் நாள் ஒன்றுக்கு 150 மைல்களுக்கு குறையாமல் ஒவ்வொரு பஸ்ஸும் ஓடுவது சாத்தியமாகவேண்டுமென்றால் அது சாலைகளையும் பொறுத்திருக்கிறது. ஐந்து லட்சம் ஜனத்தொகையுள்ள இடத்தில் அப்பொழுது போட்ட சாலைகளை வைத்துக் கொண்டு, அப்பொழுது ட்ராமும், 150 வண்டிகளும் ஓடிக் கொண்டிருந்தன. இப்பொழுது 500 பஸ்களும் அதோடு மற்ற போக்குவரத்து சாதனங்களும் அதிகரித்து, வெளியே போகவேண்டிய பஸ்களும் இந்த ரூட் வழியே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே ரஸ்தாக்களில் உள்ள இடையூறுகள் என்னென்ன, என்று பார்த்து அவைகளை தீர்ப்பதற்கு தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் சென்னை நகரத்திலுள்ள போக்குவரத்து சிக்கல்களைத் தீர்க்க முடியும். பஸ்களை அதிகப்படுத்த வேண்டுமென்றும் காப்பிட்டல் எக்ஸ்பென்டிச்சர் அதிகமாகும், அதற்குத்தகுந்த ரிட்டேர்ன் வராது என்று சொல்லலாம். பஸ்களை அதிகப்படுத்துவதோடு கூட அதிக ட்ரிப்ஸ் ஓட்டுவதற்கும், அதிக மைலேஜ் கொடுப்பதற்கும் சென்னை நகரில் உள்ள ரோடுகளை எப்படி அபிவிருத்தி செய்வது என்பதைப் பார்க்க வேண்டும். கட்டிடங்களை இடித்து விட்டு பாதைகளை அகலப்படுத்த வேண்டுமென்று நான் சொல்லவில்லை. பஸ் போக்குவரத்தை துரிதப்படுத்த ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட் ரிசர்ச் செக்ஷனை இதில் கவனம் செலுத்தும்படி சொல்ல வேண்டும். நவீன முறையில் நடத்துவதற்கு, உலகிலுள்ள பல நாடுகளில் செய்திருக்கும் சாதனைகளைப் போல் நாம் செய்ய முடியாது என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். நமது மக்களிடம் நல்ல ஆற்றல் இருக்கிறது. பணம் அல்ல முக்கியமான பிரச்னை. பூமியைக் குடைந்து ரயில் போக்குவரத்து நடத்துகிறார்கள். இது, சோஷியலிஸ நாடுகளில் மட்டும் அல்ல, முதலாளித்துவ நாடுகளிலும் கூட நடத்துகிறார்கள். மவுண்ட் ரோடு பக்கத்தில் ஜனங்கள் ஆயிரக்கணக்கில் தேங்கி விடுகிறார்கள். ஜனங்களை நிறுத்தி விட்டால் அந்தப் பக்கத்திலும் இந்தப் பக்கத்திலும் நூற்றுக்கணக்கான வண்டிகள் நின்று விடுகின்றன. ஜனங்களும் போக வேண்டும், வண்டிகளும் வேகமாக போக வேண்டும். ஆகவே பூமியைக் குடைந்து ஒரு பாதை போட்டால் அதில் ஜனங்களும் தங்குதடையின்றி போகலாம், வண்டிகளும் வேகமாக போய்க் கொண்டிருக்கலாம். இந்த யோசனையைக் கைக் கொண்டால்தான் பஸ்கள் வேகமாக போக முடியும். ஜனங்களை நிறுத்தி அவர்கள் போவதற்கு வழி செய்யும் போது பஸ்கள் நின்று விட வேண்டியிருக்கிறது, அதனால் எட்டு ட்ரிப்ஸ் போக வேண்டியது ஆறு ட்ரிப்ஸ்தான் போக முடிகிறது, இரண்டு கான்ஸலாகிறது. " ப்ளை ஓவர் ரோட்ஸ் " (fly over roads) ...





சென்னை நகருக்கே அது ஒரு அழகையும் தரும். சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு முன்னாலும், மௌண்ட் ரோட்டிலும் ஓடிக் கொண்டிருக்கக் கூடிய வண்டிகள் வேகமாக போகவும், ஜனங்களும் தங்குதடையின்றி போகவும் மேம்பாலம் அமைத்து கீழேயுள்ள ரோட்டையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். பஸ்களை மட்டும் அதிகப்படுத்தினால் அதனால் செலவு அதிகம் ஏற்படும், போதுமான லாபம் இல்லை என்ற குற்றச்சாட்டு பின்னால் ஏற்படும். ஆகவே, எங்கெங்கு மேம்பாலங்கள் கட்ட வேண்டுமோ அவைகளை கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டும். இரண்டு விஷயங்களில் சர்க்கார் தவறியிருக்கிறது. பீச் ஸ்டேஷனுக்கும் போர்ட் ஸ்டேஷனுக்கும் மத்தியில், ஹைக்கோர்ட்டுக்கு பின்னால் ஒரு ஓவர் பிரிட்ஜ் கட்டுவதற்கு சாங்க்ஷனாகிவிட்டது, அது நடக்கப் போகிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் அது கட்டப்படவில்லை. வாஷர்மேன்பேட் பக்கத்திலும ஒரு பிரிட்ஜ் கட்ட வேலையே ஆரம்பிக்கவில்லை. இப்படிப்பட்ட குறைகளை வைத்துக் கொண்டு பஸ் போக்கு வரத்தை மட்டும் குறை சொன்னால், அது சர்க்கார் நடத்தினாலும் சரி அல்லது தனிப்பட்டவர்கள் நடத்தினாலும் சரி இந்தக் கஷ்டங்கள் இருந்தே தீரும். சென்னை நகரம் ஜனத்தொகையில் எவ்வளவு வேகமாக வளர்ந்து வருகிறதோ அதேபோல் ரஸ்தாக்களை அபிவிருத்தி செய்யும் ஒரு திட்டமும் சர்க்காருக்கு வேண்டும். ஆகவே போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டம் குறித்து ஆலோசித்து அதற்குவேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கடைசியாக, தொழிற் சங்கங்களைப் பொறுத்தமட்டில் ஒரு வார்த்தை. தொழிற் சங்கங்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று, இரண்டு மூன்று தொழிற் சங்கங்கள் இருந்து வந்தன, இவைகளை ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்தார்கள். அதற்காக ஒரு பாலட் வைத்தார்கள். பாலட் வைத்ததில் சிறிய வோட் வித்தியாசத்தினால் நானும் சேர்ந்திருக்கும் சங்கம் அதிக வோட்கள் பெற்றன. அதற்கு என்னை உப தலைவராக எடுத்திருக்கிறார்கள். அதற்கு அங்கீகாரம் வேண்டுமென்று கேட்டோம். எந்த சங்கம் பாலட்டில் ஜெயித்ததோ அதைத் தவிர மற்ற சங்கங்களை கலைத்து விடவேண்டுமென்று ஒப்பந்தம். ஏழுமலை ஒரு சங்கத்தில் இருக்கிறார். ஏழுமலை இருப்பதால் என்னவோ (ஸ்ரீ வ. கோவிந்தசுவாமி: நானும் இருக்கிறேன்) சந்தோஷம். ஏழுமலையும், கோவிந்தசுவாமியும் சேர்ந்து ஒரு சங்கம், நான் இருக்கக் கூடிய ஒரு சங்கம். என் சங்கம் ஜெயித்தது. இவர்களது சங்கங்களை கலைத்து விட வேண்டுமென்று சொல்லவில்லை. தொழிற்சங்கங்களுக்குள் போட்டியிருந்து அது அந்தத் தொழிலை கெடுத்துவிடக்கூடாது. தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அதற்கு கோவிந்தசுவாமியோ அல்லது ஏழுமலையோ முயற்சி எடுத்தார்களானால் சரி, என்னைப் பொறுத்தவரையில் எங்கள் ஒத்துழைப்பு பூர்ணமாகயிருக்கும். இந்த சங்கத்திற்கு கொடுத்த வாக்குறுதிப்படி அங்கீகாரம் கொடுக்கப்படவேண்டும். பின்னர் இரண்டு சங்கங்களும் உட்கார்ந்து பேசட்டும். ஒரு வருடமாகியும் கூட அங்கீகாரம் கொடுக்கப் படாமல் காலதாமதமாகிறது, அதில் சில சிக்கல்கள் இருப்பதை எடுத்துக் காண்பித்தார்கள். அவைகளை நீக்கி அந்த சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும். எல்லாத் தொழிற்சங்கங்களையும் சமமாக நடத்தவேண்டும். தொழிலாளர்களிடையே பிளவு இல்லாமல், தொழிலாளர்களின் நலனை பேணிப் பாதுகாக்கும் முறையில் தொழிற்சங்கங்கள் இருக்க வேண்டும். அப்படி தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்தி, சென்னை நகர மக்களின் அதிருப்தியைப் போக்கி தொழிலாளர்களிடம், மக்கள்தான் எஜமானர்கள் என்ற எண்ணத்தை உண்டாக்கி, சர்க்கார் மீது அல்லது அதிகாரிகள் மீதுள்ள கோபத்தால் ஜனங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைப் புறக்கணிக்காதபடியுள்ள உணர்ச்சியை உண்டாக்க வேண்டும். அதற்கு எங்கள் சங்கம் தயாராயிருக்கிறது, அதற்கு வேண்டியதையும் செய்கிறது. சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி குற்றங்கள் சுட்டிக் காட்டப்படும் போது அவைகளுக்கு தாராளமாக பதில் எழுத வேண்டும். " கோட் ஆப் டிஸிப்ளின் " படி, முக்கூட்டு மாநாட்டில் செய்து கொண்ட ஒப்பந்தப்படி நிர்ந்தவிதமான நிபந்தனையுமின்றி தொழிலாளர்களை சமத்துவமாக நடத்த ...

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் பேரிலுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்று சென்னை மாநகரில் நடந்துவரும் போக்குவரத்தில் சுமார் 450 பஸ்கள் போய்க்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கணக்கிட்டுப் பார்த்தால், ஐம்பது சத விகிதம் ரோடில் போகவில்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். அநேக பஸ்கள் பழையனவாகவும், அடிக்கடி கெட்டுப்போய் ரோடுகளில் நிற்பதையும் பார்க்கிறோம். அதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே கூடிய சீக்கிரத்தில் பழைய வண்டிகளை எவ்வளவுக்கெவ்வளவு. நிவர்த்தி செய்ய முடியுமோ, அப்படி நிவர்த்தி செய்து மேற்கொண்டு நல்ல வண்டிகளை போடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் முக்கியமாக "பீக் அவர்ஸ்" நேர பிரச்னை பற்றி நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. இப்போது ஓரளவுக்கு சமாளித்துக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னபோதிலும், "பீக் அவர்ஸ்" பிரச்னை சரியானபடியாகத் தீர்ந்ததாகச் சொல்வதற்கு இல்லை. இந்த இரண்டு மணி நேரமும் மக்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டி இருக்கிறது. இதன் காரணமாகப் பெரிய நஷ்டங்களுக்கும் பொது மக்கள் ஆளாக வேண்டியிருக்கிறது. இதைப் பற்றி நான் அமைச்சர் அவர்களுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.

அதற்கடுத்தாற்போல், வொர்க்ஷாப் (Work-shop) சௌகரியத்தைப் பொறுத்த வரையில் அனேக இடங்களில் வொர்க்ஷாப் சௌகரியங்கள் இல்லை. அனேக இடங்களில் தகுந்த இன்ஜினீயர்களும், மெக்கானிக்குகளும் இல்லாமல் வொர்க்ஷாப்பில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இவைகளை எல்லாம் தவிர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து, வொர்க்ஷாப்புகளை எல்லாம் நல்ல முறையில் நடத்த இன்னும் மேற்கொண்டு நிபுணர்களை எல்லாம் நியமித்து இன்னும் கூடுதலாக அபிவிருத்தி செய்யவதற்கு வேண்டிய வழி வகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும் விஷயத்தில் பாஸன்ஜர்ஸ் அமெனிட்டிஸ் (Passengers amenities) பற்றி பலர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். முக்கியமான எல்லா பஸ் ஸ்டாப்புகளிலும் நிழல் கொடுக்க வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

ஸீஸன் டிக்கட் கொடுக்கும் விஷயத்தில் இப்பொழுது சில ரூட்டுகளில் மட்டும் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவ்விதமில்லாமல் எல்லா ரூட்டுகளிலும் ஸீஸன் டிக்கட் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் கட்டும் (பாடி பில்டிங்) விஷயத்தில் இரண்டொரு கம்பெனிகளுக்குக் கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கு தொழிலாளர்கள் சரியாக வேலை செய்யவில்லையா அல்லது வேறு அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் திட்ட வட்டமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிரவும், ஸ்பேர் பார்ட்ஸ் (Spare parts) விஷயத்தில் எவ்வளவோ பழைய சாமான்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. இவைகளை எல்லாம் சீக்கிரத்தில் விற்பனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிடில் சர்க்காருக்குத்தான் நஷ்டம் ஏற்படும் என்பதைப் பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை.

தவிரவும், "பீக் அவர்" (Peak hour) நேரத்தில் ஓவர் லோட் போடுகிற விஷயம் மிகவும் முக்கியமாக சொல்ல வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பிரைவேட் ஆப்பரேட்டராக இருந்தாலும் சரி, பப்ளிக்செக்டாரில் நடக்கக் கூடிய சர்வீசாக இருந்தாலும் சரி, ஓவர் லோடு போடுவதை தடுப்பதற்கு





வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைத் தவிர்ப்பதற்காக மேற்கொண்டு வண்டிகளைப் போட வேண்டும். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எக்ஸ்பிரஸ் பஸ் விடும் விஷயத்தில் திருச்சிராப்பள்ளிக்கும் சென்னைக்கும் இடையே விடப்போவதாகத் தெரிவித்தார்கள். அதே போன்று திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்கும், முடியுமானால், மதுரையிலிருந்து கன்னியாகுமரி முதலிய இடங்களுக்கும் எக்ஸ்பிரஸ் பஸ் விடுவதற்கு ஆலோசனை செய்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சர்க்கார் டிரான்ஸ்போர்ட் டைரக்டர் நியமிக்கும் விஷயத்தில் அடிக்கடி மாற்றம் செய்யாமல் குறைந்தது ஐந்து வருடத்திற்கு ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீஸரை டைரக்டராக நியமித்தால் நன்றாக இருக்கும். அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டும். அதல்லாமல் அடிக்கடி இவர்களை மாற்றிக்கொண்டிருந்தால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, நிரந்தரமான ஒரு உத்தியோகஸ்தரை இதில் நியமித்து நல்ல முறையில் இதை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டு அரிய யோசனைகள் கூறிய கனம் அங்கத்தினர்கள் அனைவருக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக ராஜ்ய போக்குவரத்துத் துறையைப் பற்றி அதை நடத்துவதைப் பற்றி பல நல்ல யோசனைகளைச் சொல்லி, அதில் இருக்கின்ற பல குறைபாடுகளைப் பற்றியும் குறிப்பிட்டது நமக்கு இனிமேல் வருங்காலத்தில் இதை எவ்விதமெல்லாம் சீர்திருத்திக்கொள்ள முடியும் என்பதற்கும், சிறந்த முறையில் இதை எப்படி நடத்துவது என்பதற்கும் உதவியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு சொல்லப்பட்ட ஒன்றிரண்டு விஷயங்களுக்கு நான் பதில் சொல்லுகிறேன். நான் இதற்கு பதில் சொல்லுவது எல்லாம் இப்போது இருக்கின்ற நிலைமையை கவனத்தில் வைத்துக்கொண்டு தான் பதில் சொல்லுகிறேனே தவிர, இந்த விஷயத்தில் நாங்கள் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து முடித்தாய்விட்டது, இனிமேல் முன்னேற்றத்திற்கு இடமே இல்லை என்ற எண்ணத்துடனோ, அல்லது இதற்கு மேல் யாராலும் நடத்த முடியாது என்ற எண்ணத்துடனோ நான் இதற்கு பதில் கூறவில்லை. எனக்கு நன்றாகத் தெரியும், இதை விட பஸ் போக்குவரத்தை இன்னும் நன்றாக நடத்த முடியும், அவ்விதம் நடத்த வேண்டும் என்றுதான் இதிலும் பல முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே நான் இப்போது ஒரு சில விஷயங்களை விளக்கிச் சொல்வதின் மூலமாக நாமே இதை நல்ல முறையில் நடத்துவதற்கு வேண்டிய சந்தர்ப்பம் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை அறிந்து கொள்வதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

முதலாவதாக, கனம் அங்கத்தினர்களில் சிலர், 1959-ம் ஆண்டு பட்ஜெட்டின் விவாதத்தில் சொல்லப்பட்டதை திருப்பிச் சொன்னார்கள் என்றே நினைக்கிறேன். பஸ்கள் குறைவாக ஓடுகிறது என்று சொன்ன குற்றச்சாட்டை 1957-58-ல் இருந்த நிலைமையில் நான் ஒத்துக்கொண்டேன். அன்றைக்கு இருந்த நிலைமையில், அப்போது கொடுத்த அறிக்கையின்படி 160, 170 பழைய பஸ்கள் இருந்தன, அதிலும் காலம் கடந்த ஓவர் ஏஜ்ட் (Over-aged) பஸ்கள் இருந்தன, அதன் காரணமாக ஷெட்யூல் பிரகாரம் வண்டிகளை ஓட்ட முடியவில்லை என்று அப்போதுள்ள நிலைமையை அனுசரித்துச் சொன்னேன். ஆனால் இப்போது நம்மிடம் மொத்தம் 453 பஸ்கள் இருக்கின்றன. சட்டப்படி எவ்வளவு பஸ்கள் ரூட்டுகளில் போட முடியுமோ, அவ்வளவு பஸ்கள் போட்டிருக்கிறோம். எதிர் கட்சித் தலைவர் அவர்கள் இப்போது பாதிக்கும் குறைவாகத்தான் ரூட்டில் போய்க்கொண்டிருக்கிறது என்று சொன்னது, சரியல்ல, நான் இதற்கு சில விவரங்களை கொடுக்கிறேன். அதாவது ஒரு நாள் ஒன்றுக்கு 39 பஸ்கள்

(வருடாந்திர பழுதுபார்ப்புக்காக) ஆன்வல் ஓவர்ஹாலுக்காக எடுக்கப்பட்டிருக்கின்றன. பிரேக் சர்டிபிகேட்டுக்காக—வண்டியில் பிரேக் சரியாக இருந்தாலும் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பிரேக் சர்டிபிகேட் வாங்க வேண்டும்—இதற்காக 36 பஸ்கள் எடுக்கப்படுகின்றன. மாதாந்திர பழுது பார்ப்பில் (**monthly repairs**) 15 பஸ்கள் எடுக்கப்படுகின்றன, வேறு சில காரணங்களுக்காக 20 பஸ்கள் குறைந்துவிடுகின்றன. இவ்விதம் எல்லாம் போக ஷெட்யூலில் (நம்பர் ஆப் ஷெட்யூலில்) இருப்பது 330 பஸ்கள். ஆகவே கனம் எதிர்க்கட்சித் தலைவர்கள் சொன்னது போல் பாதி பஸ்கள் தான் போகின்றன என்று சொல்வது இன்றைக்குப் பொருத்தமல்ல, அந்த விதமான நிலைமை இன்றைக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் . . .

**Sri M. KALYANASUNDARAM** : ஆன்வல் ஓவர்ஹாலுக்காக (வருடாந்திர பழுதுபார்ப்புக்காக) வொர்க்ஷாப்பில் ஒரு பஸ் எவ்வளவு நாள் நிறுத்தப்படுகின்றது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

* **The Hon. Sri R. VENKATARAMAN** : அதையும் சேர்த்துத்தா கணக்கெடுத்துத்தான் 39 பஸ்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சு.. வண்டிகளுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்காமல் ஒரு மாதம் வரை நிற்க வேண்டியிருக்கிறது, சில சமயங்களில் ஓவர்ஹால் செய்யப்பட்டு ஒரே நாளில் வெளியே போய்விடுவதும் உண்டு. இவ்விதம் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் 39 பஸ்கள் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றபோது இன்னும் மேலும் அபிவிருத்தி அடையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனென்றால் ராஜ்ய பஸ் போக்கு வரத்துத் தொழிலை எடுத்துக்கொண்டபோது வருஷா வருஷம் ஒரு பேஸ்ட் ப்ரோகிராம் ஆப் ரிப்ளேஸ்மெண்ட் (**phased programme of replacement**) என்ற முறையில் வேலை செய்தாலும் கூட அதற்கு மூன்று வருடங்கள் ஆகும். நான் இந்த இலாகாவை ஏற்றுக்கொண்டிருந்தாலும் இனி மேல் இந்த இலாகாவில் உள்ளவர்கள் இதன் அளவிலேயே நடத்திக் கொண்டிருந்தால், அதாவது **one seventh of the fleet** என்ற அளவில் ரினியூ பண்ணிக்கொண்டிருந்தால் நிச்சயமாக எல்லாவிதமான குறைகளையும் இதில் நிவர்த்திக்கலாம் என்று சொன்னேன். அந்த நிலை நிச்சயமாக ஏற்படும் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன். பழைய பஸ்களைப் பொறுத்த வரையில் அதாவது (ஓவர் ஏஜ்) காலங் கடந்த பஸ்களைப் பொறுத்த அளவில் அவைகளை மாற்றிப் புதிய பஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. இன்றுள்ள நிலைமையில் நம்மிடம் 450 பஸ்கள் இருந்தாலும், ரூட்டுகளில் எவ்வளவு போட முடியுமோ—சட்ட திட்டங்களுக்குட்பட்டு—அவ்வளவு நாம் போட்டிருக்கிறோம். இப்போதுள்ள கணக்குப்படி 450-ல் 330 வண்டிகள் போட்டிருக்கிறோம். சீக்கிரமாகவே இதை 350 என்ற அளவில் அதிகரிக்க முடியும் என்று நம்புகின்றேன். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இந்த 450 பஸ்களும்
12-00 noon. போதாது என்பதை நான் உணருகின்றேன். சென்னை நகரத்தில் புதிய புதிய தொழிற்சாலைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக பிரயாணம் செய்யும் நபர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதைப் பற்றி விசாரித்த ஐ.எல்.ஒ. நிபுணர் அவர்கள், வருடம் ஒன்றுக்கு சற்றேறக் குறைய 10 சதமானம் பிரயாணிகள் அதிகரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கணக்குப் போட்டிருக்கின்றார்கள். இதற்குத் தகுந்த அளவில் பழைய பஸ்களை மாற்றிப் புதிய பஸ்களைப் போட வேண்டும். அவ்வாறு பார்க்கிறபோது கூட 7 வருஷங்களில் ஒரு பஸ் பழுது ஆவதில்லை. இதில் 7-ல் ஒரு பங்கு ரிபிளேஸ் செய்கிறோம் என்று சொன்னாலும், இந்த பஸ்களெல்லாம் 8 அல்லது 9 வருஷங்கள் ஓடும். ஏனென்றால் இதெல்லாம் "லேலெண்ட்", "காமெட்" பஸ்கள், 8 அல்லது 9 ஆண்டுகள் ஓடக்கூடியவை. ஏழு வருஷம் ஆகிவிட்டது என்று "கண்டெம்" செய்யாமல், ஓடுகின்ற அளவுக்கு இவைகளை வைத்துக்கொண்டு ஓட்டுவதின் மூலமாக நமது ஷெட்யூலை அதிகரிக்க முடியும். அடுத்த வருஷம் கணக்குப் பார்க்கிறபோது எந்த அளவுக்கு ஷெட்யூல்கள் அதிகரித்திருக்கின்றன என்பது தெரியவரும்.





ஸ்பேர் பார்ட்ஸ் சம்பந்தமாகக் குறைபாடுகள் சொல்லப்பட்டன. 1957-ம் வருஷம் இந்த பஸ் டிரான்ஸ்போர்ட்டை நான் பொறுப்பு ஏற்றுக் கொண்டபோது சற்றேறக்குறைய 7 அல்லது 8 மேக்குகள்—மாடல்கள் நமது டிரான்ஸ்போர்ட்டிலே இருந்து வந்தன. பழைய பஸ்களில், போர்ட், செவர்லேட், காமர், கய் இந்த மாதிரி பலவித வண்டிகள் இருந்தன. இவ்வாறு பல மாதிரியான வண்டிகள் இருந்ததின் காரணமாக பலவித ஸ்பேர் பார்ட்ஸ்கள் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அது மட்டுமல்லாமல் தொழிலாளர்களுக்கும் ஒரே மாடல் பஸ்ஸை ரிப்பேர் செய்து கொண்டிருந்தால் அவர்களுடைய திறமை அதிகரிக்கும் அதைவிட்டு 8 மாடல் பஸ்கள் வைத்துக்கொண்டு ரிப்பேர் செய்ய வேண்டுமென்று சொன்னால் அவர்களுடைய திறமை குறைந்துவிடுகிறது. அதற்காகத்தான் ராஜ்ய சர்க்கார் ஒரு நிர்ணயமான கொள்கையை வகுத்திருக்கிறது. இனி இரண்டே மாடல்கள்தான் வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வேறு எந்த மாடல்களும் இனி வாங்கப்போவதில்லை. ஒன்று மெர்ஸிடஸ்-பென்ஸ்—டாடாஸ் வெளியில் ஓட்டுவதற்கும், சென்னையில் நெருக்கடி இருக்கிற காரணத்தினால் அசோக் லேலண்ட் பஸ்களையும் வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி முடிவு செய்து இந்த 3 வருஷங்களில் வேறு எந்தவிதமான பஸ்களையும் வாங்கவில்லை. அதே மாடல் பஸ்தான் வாங்கப்பட்டு வருகிறது. இப்போது இருக்கக் கூடிய மற்ற பஸ்களும் குறைந்துவிடும்.

**Sri A. GOVINDASAMY** : "கய்" பஸ்ஸுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். பம்பாயில் அவர்கள் கிடைக்கிறது என்று சொல்கிறார்களே, நமக்கு மட்டும் ஏன் கிடைக்கவில்லை ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : என்னைக் கேட்டால் எல்லா கய் பஸ்களையுமே நீக்கிவிடலாம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இரண்டே இரண்டு மாடல்களை வைத்துக்கொள்வதன் மூலமாக ரிப்பேர் செய்வதிலும், மற்றப்படி ஸ்பேர் பார்ட்ஸ் விஷயத்திலும் . . . . (குறுக்கீடு) எப்போது வாங்குவதானாலும் இரண்டு மாடல்கள்தான் வாங்குவது என்று முடிவு எடுத்துவிட்டோம். இதிலே வேறு யாரும் தலையிட முடியாது. அந்த அளவுக்குச் செய்துவிட்டோம். இரண்டு மாடல்கள் மட்டும் இருந்தால் ஸ்பேர் பார்ட்ஸ் இந்த இரண்டு மாடல்களுக்குண்டானவதை மட்டும் வாங்கி வைத்தால் போதும். பஸ்களை ரிப்பேர் செய்வதிலும் தொழிலாளிகளின் திறமை அதிகரிக்கும். மற்ற மாடல்களை எல்லாம் எடுத்துவிட முயற்சித்து வருகிறோம். இன்னும் ஒரு வருஷத்திற்குள் மற்ற மாடல்கள் எல்லாவற்றையும் நீக்கிவிட முடியும். ஸ்பேர் பார்ட்ஸ் சம்பந்தமாக இனி குறைபாடுகள் ஒன்றும் இருக்காது. ஏழு அல்லது 8 மாடல்கள் வைத்திருந்தால் ஒவ்வொரு மாடலுக்கும் குறைந்த பட்ச ஸ்பேர் பார்ட்ஸ் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏழு அல்லது 8 மாடல்கள் இருக்கும்போது ஒரு மாடலில் ஒரு பஸ் ரிப்பேர் ஆகும்போது ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்காவிட்டால் ரிப்பேர் செய்வது தடைபட்டு அந்த பஸ் நிற்க வேண்டியிருக்கும். அதற்காகத்தான் எல்லா மாடலுக்கும் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எட்டு வித பஸ்களுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் என்றால் அதிகப்படியான ஸ்டோர்ஸ், ஸ்பேர் பார்ட்ஸ் இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அந்த நிலைமை இனி மாறிவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பாடி பில்டிங் பற்றிச் சொல்லப்பட்டது. ஏன் வெளியில் கொடுக்கப்பட்டது என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூடக் கேட்டார்கள். நம்முடைய க்ரோம்பேட்டை வொர்க்ஷாப்பில் சாதாரணமாக 80 பாடிகள் தான் கட்ட முடியும். சற்று ஊக்கமாக உழைத்தால் 90 பாடிகள் கட்டலாம். எண்பது கட்டினாலும் அல்லது 90 கட்டினாலும் அது நமக்குப் போதாது. இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் நாம் 130-க்கு மேல் இந்த வருஷத்திற்கு புது "சேஸிஸ்" வாங்கியிருக்கிறோம். நூற்றிப்பதினாறு பஸ்களை இந்த வருஷமே போட்டிருக்கிறோம். அடுத்த வருஷத்திற்கு சற்றேறக் குறைய 140 பஸ்கள் வாங்கப் போகிறோம்,

எல்லாவற்றையும் நம் தொழிற்சாலையிலேயே கட்ட முடியாது. அவசரமாக ஏன் கொடுத்தோம் என்று சொன்னால், 3 மாதங்களாக க்ரோம்பேட் தொழிற்சாலையில் சரியாக வேலை நடக்காத காரணத்தினால் பொது மக்களிடம் அதிருப்தி ஏற்படக் கூடிய நிலை ஏற்படுமென்று உணர்ந்து, நமது பஸ் டிரான்ஸ்போர்ட்டே பிரேக் டவுன் ஆகக் கூடிய நிலைமை உண்டாகிவிடக் கூடாதே என்பதற்காக அவசரமாக முடிவு எடுத்துச் சில வண்டிகளைக் கொடுத்தோம். எப்படியும் வெளியில் கொடுத்துத்தான் ஆகவேண்டும், ஏனென்றால், எல்லா வண்டிகளையும் நாமே கட்ட முடியாது. இதிலே இரண்டாவது ஷிப்ட் வைக்கலாமா என்று ஆலோசனை செய்துகொண்டிருந்தோம். ஓரளவுக்கு வேகமாக முடிவுக்கு வந்திருப்போம். தேசியமயமான தொழிலில் எப்படி இன்றைக்கு நாம் தொழிலாளர்கள் வேறு, நிர்வாகம் வேறு என்று நினைக்கக் கூடாது என்று வற்புறுத்துகிறோமோ அந்த அளவுக்குத் தொழிலாளர்களிடமும் பொறுப்புணர்ச்சி இருக்க வேண்டும். அவர்களும் நிர்வாகம் வேறு, தொழிலாளர்கள் வேறு என்று நினைக்கக் கூடாது. தனிப்பட்ட முதலாளிகளிடம் தொழிலாளர்கள் காட்டக் கூடிய மனப்பான்மையை சர்க்கார் தொழிலில் காட்டக் கூடாது. ஓரளவுக்கு அவர்கள் நல்ல முறையில் ஒத்துழைத்தால் சிறந்த முறையில் இன்னும் அதிகமாக விஸ்தரித்துக்கொண்டு போக முடியும். நான் இதை ஒரு காரணமாகக் காட்டி விஸ்தரிக்க வேண்டாமென்று சொல்லுவதாக யாரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. இன்றைக்கு வேகமாகச் செல்ல முடியாமல் தடையாக இருப்பது அவர்களிடமிருந்து கிடைக்கக் கூடிய ஒத்துழைப்புக் குறைவுதான் என்று அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். எப்படி ராஜ்ய சர்க்கார் தங்களுடைய தொழிலாளர்கள் வேறு, நிர்வாகம் வேறு என்று நினைப்பதில்லையோ அந்த மாதிரி தொழிலாளர்களும் அவர்கள் வேறு, நிர்வாகம் வேறு என்று நினைக்கக்கூடாது. அவர்கள் அதை நன்கு உணரவேண்டும். ஏதோ தவறுதலாக அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் குறைவான வண்டிகளைக் கட்டினாலும், ஜனவரி மாதம் 8 வண்டிகளைக் கட்டியிருக்கிறார்கள். பிப்ரவரியில் 9 வண்டிகளைக் கட்டியிருக்கிறார்கள், இன்னும் மார்ச் மாதத்தில் 10 வண்டிகள் கூட கட்டுவார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அதிகமாகக் கட்டுவதால் அவர்களுக்குப் போனஸ் அதிகமாகக் கிடைக்கும். இப்போது 5 வண்டிகளைக் கட்டினாலும் போனஸ் உண்டு, என்று வைத்திருக்கிறோம். இதனால் 5 வண்டிதான் கட்ட முடியும் என்பதல்ல. சாதாரணமாக 7 வண்டிகள் கட்ட முடியும். ஏழு வண்டிகள் சாதாரணமாகக் கட்ட முடியும் என்று தெரிந்தாலும் 5 வண்டிகள் கட்டினாலும் போனஸ் பெற வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்கள் போனஸ் பெற்று தங்களுடைய ஊதியத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஐந்து வண்டிகள்தான் கட்ட முடியும் என்று அர்த்தமல்ல. அந்த அளவுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும் என்று நினைக்கிறேன். அப்படி ஒத்துழைப்புக் கொடுத்தால் மேற்கொண்டு தொழிற்சாலையை விஸ்தரிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக செலவைப் பற்றி செலவு அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த அளவில் சென்னை ராஜ்ய பஸ் சர்வீஸ் மிகமிக சிக்கனமாகவே செய்துகொண்டிருக்கிறது என்பதற்குச் சில புள்ளி விவரங்கள் கொடுக்க விரும்புகிறேன். உதாரணமாக, 1958–59-ம் வருஷத்திய கணக்குகளைப் பார்ப்போம். மொத்தத்தில் 171 லட்சத்துச் சில்லரை ரூபாய் செலவாகியிருக்கிறது. அதில் எண்ணைக்கு 22 லட்ச ரூபாய், சம்பள வீதத்தில் $28\frac{1}{2}$ லட்சம் ரூபாய், டெக்னிகல் ஸ்டாபிற்கு $6\frac{1}{2}$ லட்ச ரூபாய், ட்யூப், டயர்களுக்கு $8\frac{1}{2}$ லட்ச ரூபாய், ஸ்பேர் பார்ட்ஸ்ற்கு 13 லட்சம் ரூபாய், க்ரோம்பேட் சர்வீஸுக்கு 15 லட்சம் ரூபாய், அட்மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பென்ஸஸ் 11 லட்சம் ரூபாய். 1,71,44,000 ரூபாயில் அட்மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ்பென்ஸஸ் என்று சொல்லக் கூடியது 11 லட்சம் ரூபாய். இது சற்றேறக் குறைய 6 சத விகிதம் தான் வருகிறது. ஆறு சத விகிதம் கூட ஆகாமல் நடத்த முடியுமா என்று கேட்டால் யாராலும் முடியாது. மற்ற முதலாளிகள் தொழிலை



நடத்தினால் இண்ட்ரெஸ்டும் கொடுத்து டிவிடெண்டும் கொடுப்பது இல்லை. இண்டரெஸ்ட் கொடுத்தால் டிவிடெண்டு கிடையாது. சென்னை பஸ் தொழிலைப் பொறுத்த வரையில் 10 லட்சம் ரூபாய் இண்ட்ரஸ்டும் கொடுத்து 29 லட்சம் ரூபாய் லாபம் வருகிறது. இதைப் போல சிக்கனமாக வேறு யாரும் நடத்த முடியாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வருஷத்திலே கூட 10 லட்சம் ரூபாய் இண்ட்ரஸ்ட் கொடுத்து 29 லட்சம் ரூபாய் லாபம் வந்திருக்கிறது. இன்னும் இதிலே உங்களுக்குத் தெரியாமல் புதைந்து கிடக்கக் கூடிய சில லாபங்கள் இருக்கின்றன. இப்போது 60 அல்லது 70 லட்சம் ரூபாய் டெப்ரிஸியேஷன் பண்டில் இருக்கிறது. இதற்கு சர்க்காரிடம் வட்டி கூட வாங்குவதில்லை. அதற்கு வட்டி வாங்கினால், 4, 5 லட்சம் ரூபாய் வரும். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்குக் கொடுப்பதுதானே....) டெப்ரிஸியேஷன் பண்டிற்கு நாம் ஒதுக்கியிருக்கிறது போல வேறு யாரும் செய்யவில்லை. பம்பாயிலும் இல்லை அல்லது டில்லியிலும் இல்லை. நாம் அனுஷ்டிப்பது "ஸ்ட்ரெயிட் லைன் டெப்ரிஸியேஷன்" ஆகும். ஒரு வருஷத்திற்கு 16 சத விகிதம் ஒதுக்கி வைக்கிறோம். (ஸ்ரீ எம். கலியாணசுந்தரம்: காஸ்ட் ஆப் லேபர்....) காஸ்ட் ஆப் லேபர் 28 லட்சம் என்று சொன்னேன். சற்றேறக் குறைய 30 லட்சம் என்று சொன்னால் 5-ல் ஒரு பங்கு ஆகும். (ஸ்ரீ எம். கலியாணசுந்தரம்: மற்ற ராஜ்யங்களில்....) மற்ற ராஜ்யங்களைப் பொறுத்த வரையில், என்னிடம் இப்போது புள்ளி விவரங்கள் இல்லை. இருந்தாலும் காஸ்ட் ஆப் லேபர் எல்லாவற்றையும் கணக்கிட்டு மொத்தமாகப் பார்த்தால், சென்னை ராஜ்யத்தில் மற்றத் தொழில்களில் கொடுப்பதை விட அதிகமாகவே இத் தொழிலில் கொடுக்கப்படுகிறது என்பதை சென்ற வருஷமே சொன்னேன்.

**SRI T. L. SASIVARNA THEVAR**: மக்களுக்கு போதிய வசதி ஏற்பட்டிருக்கிறதா ?

* **THE HON. SRI R. VENKATARAMAN**: தொழிலாளர்களைப்பற்றி இப்போது பேசுகிறேன். மக்களுக்கு வசதிகள் இருக்கின்றனவா இல்லையா என்பதைப் பற்றி பிறகு சொல்கிறேன். டெப்ரஸியேஷன் பண்டுக்காக $28\frac{1}{2}$ லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். வேறு யாரும் டெப்ரிஸியேஷன் பண்டுக்கு இவ்வளவு பணம் ஒதுக்கவில்லை. அயல் நாட்டு எக்ஸ்பெர்ட்டுகள் கூட, சென்னை ராஜ்யத்தில் அதிகமான வரியைக் கொடுத்துவிட்டு அதிகமான டெப்ரிஸியேஷன் பண்டும் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். வரி 27 லட்சம் ரூபாய். டெப்ரிஸியேஷன் பண்ட் $28\frac{1}{2}$ லட்சம் ரூபாய். இத்தனையும் கொடுத்த பிறகு லாபம் வந்திருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். சிக்கனத்திற்கு இதை விட வேறு வழிகள் இல்லை. உத்தியோகஸ்தர்களுக்காக எவ்வளவு செலவழிக்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். "ஸாலரிஸ் ஆப் ஆபீஸர்ஸு"க்கு 38,000 ரூபாய் ஆகிறது. மூன்று கோடி ரூபாய் நிர்வாகம் நடத்தும் இந்த பஸ் தொழிலில் ஆபீசர்ஸுக்காக 38,000 ரூபாய் தான் கொடுக்கிறோம். இந்த ஆபீஸர்களில் டைரக்டர், மெகானிக் என்ஜினீயர் எல்லோரும் அடங்கியிருக்கிறார்கள். இதே அளவில் இந்தத் தொழிலை தனியார் நடத்தினால், மூன்று டைரக்டர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு டைரக்டருக்கும் 2,000 ரூபாய் சம்பளம் இருக்கும். அந்த அடிப்படையில், தனியார் மற்ற வகைகளில் இன்னும் எவ்வளவு செலவு செய்வார்கள் என்று கனம் அங்கத்தினர்கள் பார்த்துக்கொள்ளலாம். எனவே நிர்வாகத்தில் செலவு அதிகமாக இருக்கிறது என்று குற்றச்சாட்டை நான் வன்மையாக எதிர்க்கிறேன். அந்தக் குற்றச்சாட்டு தவறானது, புள்ளி விவரங்கள் தெரியாததால்தான் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது

அடுத்தபடியாக ட்ரிப்ஸ் சரியாக ஓடுவதில்லை என்று ஸ்ரீமதி. அனந்தநாயகி கூறினார். ட்ரிப்ஸ் லாஸ்ட்—சுமார் 10 சத விகிதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இது இன்னும் குறைந்துவிடும். ஏனென்றால், இப்போது புதிய பஸ்கள் வருகின்றன என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பிப்ரவரி மாதம் இறுதி வாரக்கில் வாரம் ஒன்றுக்கு 3,[illegible]

ட்ரிப்ஸாக இருந்தது. 5-3-60-ல் 3,038 ஆகக் குறைந்துவிட்டது. எனவே, சாதாரணமாக ஒரு வாரத்திற்குள் 300 ட்ரிப்ஸ் குறைகின்றன. புதிய பஸ்கள் போடப்போட, ட்ரிப்ஸ் அதிகரிக்கும். ஆனால், தவிர்க்க முடியாத சில காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். பஸ்கள் செல்லும் ரூட்டுகளிலே குறுக்கே ரெயில்வே கேட்டுகள் இருந்தால் ட்ரிப்ஸ் குறைகின்றன. அதை சமாளிக்க வேறு முயற்சிகள் செய்ய வேண்டும். அந்த முயற்சிகளைச் செய்கிறோம்.

பஸ்களை சரியாகக் கண்காணிப்பது பற்றிக் குறை சொல்லப்பட்டது. முதலில், நாம் எடுத்துக்கொண்டிருக்கும் இடம் எந்த வசதியும் இல்லாத இடம். பாடிகார்டு ரோடிலுள்ள அந்த இடத்தை, நான் அன்று நிர்வாகத்தில் இருந்திருந்தால், எடுத்துக்கொண்டிருக்க மாட்டேன். எல்லா வகையிலும் வசதியற்ற இடம் பாடிகார்டுரோடு. பஸ்ஸுக்கு வசதியான இடம் ஒன்றும் அங்கே இல்லை. தண்ணீர் வேண்டும். அங்கே தண்ணீர் வசதி இல்லை. அதற்காக அங்கே ஒரு போர் வெல் தோண்டியிருக்கிறார்கள். இரு நூறு முன்னூறு அடி தோண்டியிருக்கிறார்கள். மேலும் அங்கே இப்போது ஸ்டீம் ஜென்னி வைத்திருக்கிறார்கள். பஸ்களை அலம்புவது, துடைப்பது முதலிய காரியங்களுக்கு ஸ்டீம் ஜென்னி மிகவும் பயன்படுகிறது. பஸ்கள் நன்றாகக்கழுவப்பட்டும், துடைக்கப்பட்டும் வருவதை கனம் அங்கத்தினர்கள் இந்த இரண்டு, மூன்று மாதங்களில் பார்த்திருப்பார்கள். அதற்குக் காரணம் ஸ்டீம் ஜென்னிதான். மேலும், நிர்வாகமும் பஸ் பராமரிப்பும்,இதர பல ஏற்பாடுகளும் நன்றாக இருக்க வேண்டுமானால், மூன்று டெப்போக்கள் இருக்க வேண்டும். வட சென்னையில் தண்டையார்பேட்டையில் ஒரு டெப்போவும், பாடிகார்டு ரோடில் ஒரு டெப்போவும், தென் சென்னையில் ஒரு டெப்போவுமாக மொத்தம் மூன்று டெப்போக்கள் இருக்க வேண்டும். தண்டையார்பேட்டையில் டெப்போ ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் முடிவடைந்துவிட்டன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உத்தியோகஸ்தர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அது வரவேற்கத்தக்கதுதான். திறமையுள்ள இளம் என்ஜினீயர்களை நாமே டிபார்ட்மெண்டிலேயே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சியளித்து இதே இலாகாவிலேயே இருக்கும்படி நாம் ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வாறு செய்தால்தான் அவர்களுக்கு இத்தொழிலில் ஸ்பெஷலைசேஷன், நிபுணத்வம் ஏற்படக் கூடும்.

பஸ் போக்குவரத்தில் மக்களுக்குள்ள குறைகளை நீக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ கலியாணசுந்தரம் சொன்னார். அவைகளை நிச்சயம் நீக்க வேண்டியதுதான். அதில் எந்த விதமான கருத்து வேற்றுமையும் நம்மிடையே இருக்க முடியாது. சர்க்கார் இந்தத் தொழிலை எடுத்து நடத்துகிறது என்றால், லாபம் சம்பதிப்பதற்காக இவ்வாறு செய்யவில்லை. நல்ல சர்வீஸ் கொடுப்பதற்காகத்தான் அவ்வாறு செய்கிறது. உண்மையாகவே, எத்தனை குறைகள் சொல்லப்படுகின்றன. எத்தனை குறைகள் பிறரால் தூண்டப்பட்டுச் சொல்லப்படுகின்றன என்று எனக்குத் தெரியவில்லை. குறை கூறி எழுதுபவர்களின் கடிதங்களை நான் பார்க்கிறேன். எப்போது ரூட்டுகளை சர்க்கார் எடுத்துக் கொள்கிறதோ அப்போது பத்திரிகைகளிலும் கடிதங்களிலும் சர்க்காரைப் பற்றி வைவதும் சர்க்காரின் மேல் வசை பொழிவதும் கணக்கு வழக்கு இல்லை. மற்ற நாட்களில் இந்தக் குற்றச்சாட்டுகள் வருவதில்லை. ஐந்து ஆறு ரூட்டுகளை சர்க்கார் எடுத்துக்கொண்டவுடன், உடனே குறை கூறும் கடிதங்கள் ஒரேயடியாக ஏராளமாக வருகின்றன. எனவேதான், உண்மையாகவே, குறை கூறப்படுகிறதா அல்லது தூண்டுதலின் காரணமாகக் குறை கூறப்படுகிறதா என்று எனக்குத் தெரியவில்லை. அது எப்படி இருந்தாலும், சென்னை நகரத்தில் ஷெட்யூல்ஸை அதிகரிக்கப்போகிறோம். அவ்வாறு அதிகரிப்பதன் மூலம் போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்று நம்புகிறேன். நிற்கும் பிரயாணிகளைப் பொறுத்த வரையில் கன்னியாகுமரியில் இந்த முறையை அபாலிஷ் பண்ணிவிட்



டோம். வெளியூர்களில் ஸ்டாண்டிங் பாஸன்ஜர்ஸ் கிடையாது. வெளிநாடுகளில் கூட ஸ்டாண்டிங் பாஸன்ஜர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். நான் லண்டன், நியூயார்க் போன்ற பெரிய நகரங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். அங்கெல்லாம் 44 பேர் உட்காரவும், 22 பேர் நிற்கவும் இடம் உண்டு. பம்பாயிலும் ஸ்டாண்டிங் பாஸன்ஜர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**Sri M. KALYANASUNDARAM** : இந்த ராஜ்யத்தில் ஸ்டாண்டிங் பாஸன்ஜர்ஸ் முறை கூடாது என்று இந்த சபையில் யாராவது சொன்னார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : சொன்னார்கள், அதனால் தான் நான் அதைப் பற்றிப் பேசினேன்.

**Sri A. GOVINDASAMY** : நாங்கள் குறிப்பிட்டதெல்லாம் எத்தனை ஸ்டாண்டிங் பாஸன்ஜர்ஸ் ஏறலாம் என்று எழுதப்பட்டிருக்கிறதோ அதை விட அதிகமான பேர்களை வண்டியில் ஏற்றிக்கொள்ளக்கூடாது என்பதுதான். அதனால் ஓவர்லோடை நாங்கள் கண்டித்தோம். ஓவர்லோட் செய்தால், கண்டக்டர் டிக்கட் கொடுக்க தாமதம் ஏற்படுகிறது, ட்ரிப்பையும் சீக்கிரம் முடிக்க முடியவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : அவர்கள் சொன்ன குற்றச்சாட்டை வாபஸ் பெற்றுக்கொண்டதற்கு என் நன்றி.

**Sri A. GOVINDASAMY** : நாங்கள் சொல்லாததைச் சொன்னதாகக் கூறியதற்கு வருந்துகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : ஆகவே ஸ்டாண்டிங் பாஸஞ்ஜர்ஸ் இருக்கலாம் என்பதை நாம் நன்றாக உணர்ந்துகொள்கிறோம். மற்ற பெரிய நகரங்களில் இல்லாத நிலைமை சென்னை நகரில் இருப்பதை நாம் உணர வேண்டும். பம்பாயில் மின்சார ரெயில்கள் இரண்டு பாதைகளில் போகின்றன, ட்ராம்கள் போகின்றன, பஸ்களும் போகின்றன. எனவே பம்பாயில் நான்கு வகைகளில் போக்குவரத்து வசதிகள் இருக்கின்றன. அங்கே அந்த அளவுக்கு ஆல்டெர்னேடிவ் டிரான்ஸ்போர்ட்ஸ் இருக்கின்றன. சென்னையில் ஆல்டர்னேடிவ் டிரான்ஸ்போர்ட்ஸ் அவ்வளவு இல்லை. மேலும், சென்னை நகரில் உள்ள ரோடுகள் வளைவுகள் அதிகமாக உள்ளவை. பாம்புக்குக் கூட வளைவுகள் குறைவாக இருக்கும். சென்னை நகர ரோடுகளுக்கு வளைவுகள் மிக அதிகம். அதன் காரணமாக, அவைகளில் பஸ்கள் வேகமாகப் போக முடியாது. 35 நிமிஷங்களுக்கு ஒரு ட்ரிப் என்று நிர்ணயித்திருக்கிறோம். மார்க்கத்தில் ஒரு சிறு தடங்கள் வந்தாலும், அந்த நேரத்திற்குள் ட்ரிப்பை முடிக்க முடியாது. காரணம், வளைவுகள் ரோடுகளில் அதிகம். நமக்கு இருக்கும் கஷ்டங்களை நாம் சமாளித்துத்தான் ஆகவேண்டும். மற்ற இடங்களில் இவ்வளவு வசதியற்ற நிலைமை இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்க முடியாது. இக் கஷ்டங்களைச் சமாளிப்பதற்கான இரண்டு மூன்று யோசனைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று, அண்டர்க்ரௌண்ட் பாஸேஜ். உதாரணமாக, ஸெண்ட்ரல் ஸ்டேஷன் இருக்கும் இடத்திற்கருகில் ஒரு அண்டர்க்ரௌண்ட் பாஸேஜ் போட்டால், அங்கு செல்லும் வண்டிகளின் ட்ரிப் நேரம் 5 நிமிஷம் குறையும். அதே மாதிரி மவுண்ட் ரோடில் ஒரு அண்டர்க்ரௌண்ட் பாஸேஜ் போட்டால், அங்கும் ட்ரிப் நேரம் ஓரளவு குறையும். இரண்டாவது, லெவல் க்ராஸிங்ஸ் இருக்கும் இடங்களில் ஓவர்ப்ரிட்ஜ்கள் போட வேண்டும். எனவே இக்குறைகளுக்கு, அதாவது இக்கஷ்டங்களுக்கு பஸ்கள் காரணமல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் பொதுவான ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசினார். இத்தொழிலை தனியார் நடத்த வேண்டுமா, அல்லது சர்க்கார் நடத்த வேண்டுமா என்பதுபற்றி அவர் பேசினார். [illegible]

MR. SPEAKER : I am now going to put the cut-motion of Sri N. K. Palanisami to the vote of the House. Is the hon. Member pressing his cut-motion?

MR. N. K. PALANISAMI : Not pressing, Sir.

The cut motion of Sri N. K. Palanisami was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,10,00,700 under Demand XXXIV—Road Transport Schemes—Working Expenses."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is :—

"That the allotment of Rs. 2,14,60,500 under Demand XLII —Capital Outlay on Road Transport Schemes—be reduced by Rs. 100 ".

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,14,60,500 under Demand XLII—Capital Outlay on Road Transport Schemes '.

The Demand was put and carried and the grant was made.

12-30 p.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. *Statutory Rules and Orders.*

* 81. *Notification issued with G.O. Ms. No.* 165, *Home, dated 29th January* 1960 *regarding certain consequential changes in the rules of Chapter IV of the Motor Vehicles (Amendment) Act,* 1956 *(Central Act* 100 *of* 1956). [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act,* 1939 *(Central Act IV of* 1939).]

* 82. *Notification issued with G.O. Ms. No.* 166, *Home, dated 20th January* 1960 *regarding certain consequential changes in the rules of Chapter IV of the Motor Vehicles (Amendment) Act,* 1956), *(Central Act* 100 *of* 1956). [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act, (Central Act IV of* 1939).]



* 83. *Notification issued with G.O. Ms. No.* 220, *Home, dated 23rd January* 1960 *regarding certain consequential changes in the rules of the Chapter IV of the Motor Vehicles (Amendment) Act,* 1956 *(Central Act* 100 *of* 1956). [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act,* 1939 *(Central Act IV of* 1939).]

* 84. *Notification under section* 22 *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 *relating to the Ryotwari settlement of the estates situated in Chingleput district issued with Memorandum No.* 107561-J-3/59-2, *Revenue, dated 27th January* 1960. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 *(Madras Act XXVI of* 1948).]

B.—*Reports, Notification and other papers.*—Nil.

## APPENDIX I.

[Vide answer to starred question No. 501 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 22nd March 1960, page 198 supra.]

*A.*—(*a*) & (*b*) Buildings and road works costing not more than Rs. 2,500 which do not require technical skill could be entrusted by the Public Works Department to Labour Co-operative Societies on the recommendation of the Deputy Registrar of Co-operative Societies without calling for tenders. Individual cases of societies which are capable of taking more costly works can be considered on merits for entrusting works up to a limit of Rs. 5,000 without calling for tenders, if such works do not require any technical skill.

In the Irrigation Department full contribution works which the contributors undertake to execute themselves will be given to them at the estimate rates without calling for tenders. Minor irrigation works in charge of Public Works Department in the Community Projects, Community Development and National Extension Service Scheme areas are entrusted to village committees at estimated cost up to a limit of Rs. 7,500 without calling for tenders. In other areas, such entrustment is made in respect of small minor irrigation works, in the villagers form a co-operative society or committee or nominate one member among themselves to be responsible for carrying out the work to the satisfaction of the Executive Engineer concerned.

Road works costing up to Rs. 5,000 in both Community Projects, Community Development and National Extension Service Scheme areas and other areas are entrusted to village committees at estimated rates without calling for tenders.

In regard to the members of the public, the limit up to which building, roads and irrigation works may be entrusted to them without tender calls, up to the limits detailed below :—

*Building works.*

| Name of the officer competent to sanction. (1) | Powers of sanction. (2) |
|---|---|
| | RS. |
| Executive Engineer .. .. .. .. | 5,000 |
| Superintending Engineer .. .. .. | 20,000 |
| Chief Engineer .. .. .. .. | 50,000 |

*Road works.*

| | |
|---|---|
| Divisional Engineer .. .. .. .. | 5,000 |
| Superintending Engineer .. .. .. | 20,000 |
| Chief Engineer .. .. .. .. | 25,000 |



*Irrigation works.*

| Name of the officer competent to sanction. (1) | Powers of sanction. (2) |
|---|---|
| | RS. |
| Executive Engineers .. .. .. .. | Nil. |
| Superintending Engineers .. .. .. | Nil. |
| Chief Engineer .. .. .. .. | 50,000 |

## APPENDIX II.

[Vide answer to starred question No. 502 asked by Sri N. K. Palanisami at the meeting of the Legislative Assembly held on 22nd March 1960, page 198 supra.]

***Details of assistance received from the Centre under the Programme of Permanent Improvement to Scarcity Areas.***

Under the "Programme of Permanent Improvement to Scarcity Areas" the following three Irrigation Projects have been taken up :—

(i) Amaravathi Reservoir Project (Coimbatore and Tiruchirappalli).

(ii) Vaigai Reservoir Project (Madurai and Ramanathapuram).

(iii) Mettur Canals Scheme (Coimbatore and Salem).

*Item* (i) —*Amaravathi Reservoir Project* is a scheme to construct a dam of 3,600 million cubic feet capacity across Amaravathi river in Udumalpet taluk of Coimbatore district. All the masonry works in main canal have been completed in all respects and water was let into the canal at full supply depth since the 9th August 1958. The canal is supplying a total ayacut of 11,000 acres cultivation and 3,000 acres preparation. The total expenditure incurred from the second six months of 1953-54 to the end of 1958-59 is Rs. 332·75 lakhs.

*Item* (ii).—*Vaigai Reservoir Project* is a scheme to store the waters drawn off from Periyar lake through the existing Periyar tunnel and to store the surplus water of the Vaigai river for developing new irrigation to an extent of about 20,000 acres apart from stabilising the supply to existing irrigation. The total expenditure incurred from the second half of 1953-54 to the end of 1958-59 is Rs. 184·29 lakhs.

*Item* (iii) —*Mettur Canals Scheme* is a scheme to excavate a canal from the Mettur Reservoir using the high and low level sluices in the Mettur Dam so that the supply can be tapped from either set of sluices. The scheme is almost completed except for certain minor works in the distribution of the East Bank Canal. The total irrigation under this is 45,000 acres. The total expenditure incurred from the starting of the scheme is Rs. 181·19 lakhs.

[22nd March 1960

Assistance for these schemes is wholly given by the Government of India subject to the ceiling indicated for each State. The assistance is in the form of loan repayable in 25 annual equated instalments commencing from the sixth year. The schemes have been practically completed in all respects. The total expenditure incurred till the end of 1958-59 is Rs. 698·23 lakhs. The Government of India have so far sanctioned loan assistance of Rs. 590 lakhs including Rs. 25 lakhs for 1958-59 as detailed below :—

| | RUPEES IN LAKHS. |
|---|---|
| 1953-54 .. .. .. | 23 |
| 1954-55 .. .. .. | 120 |
| 1955-56 .. .. .. | 150 |
| 1956-57 .. .. .. | 193 |
| 1957-58 .. .. .. | 79 |
| 1958-59 .. .. .. | 25 |
| Total .. | 590 |

The loan assistance referred to above is sanctioned for the Group-head as a whole under "Permanent Improvement to Scarcity Areas". As such the break-up figure for each Project is not available.

APPENDIX III.

[Vide answer to starred question No. 503 asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 22nd March 1960, page 199 supra.]

## PROGRESS REPORT OF THE MADRAS STATE TAMIL DEVELOPMENT AND RESEARCH COUNCIL.

Early in 1958, the Government were confronted with the following problems :—

(i) The reconciliation of varying views of the Secondary Education Committees constituted in 1953 and 1955.

(ii) Reconciliation of the views expressed in the Report of the Elementary Education Reform Committee of Dr. Alagappa Chettiar constituted in 1955 with those of the Secondary Education Committees.

(iii) Reorganization of Local Administration based on Panchayats and Panchayat Unions, which was bound to affect the managements of elementary schools and secondary schools in the State; and

(iv) The revision of the system of grant-in-aid to elementary schools and secondary schools based on the changes contemplated under the reorganization of Local Administration.



22nd March 1960]

2. In the course of the discussion of the above problems in the Legislature, the suggestion emerged that a Committee inclusive of representatives of all parties in the Legislature should be set up in order to advise the Government on educational matters generally. Accordingly, the Madras State Education Advisory Committee was constituted in April 1958—(vide G.O. No. 758, Education, dated 22nd April 1958).

3. It was later on considered that neither the above Committees nor the Committee appointed for the implementation of the Madras Official Language Act could develop the regional language to the fullest extent possible. A suitable agency which would attend to the following functions had to be decided, if the regional language is to develop fully :—

(1) To keep under review the progress of work directed by the Official Language Act Implementation Committee;

(2) To arrange for the systematic copying and printing of all the inscriptions in the various temples in the State, etc.

(3) To arrange for the systematic study of the antiquities of pre-historic and historic periods, etc.

(4) To co-ordinate and develop the activities of institutions and libraries where unpublished manuscripts are available.

(5) To co-ordinate and develop the activities of all the agencies engaged on the production and publication of popular reading materials.

(6) To arrange for the production of Children's books;

(7) To promote the study of Folk-lore;

(8) To arrange for the preparation of a complete descriptive catalogue of manuscripts in the custody of all institutions; and

(9) Compilation of a Historical Tamil Dictionary.

To attend to all the above items of work, it was considered that a separate Committee was essential. A proposal was accordingly placed before the Madras State Education Advisory Committee, which finally recommended the constitution of the Madras State Tamil Development and Research Council.

4. The Tamil Development and Research Council was constituted with Sri C. Subramaniam, Minister for Education and Finance, as the Chairman. It was inaugurated under the presidentship of Sri K. Kamaraj, Chief Minister of Madras on 26th January 1959 (Republic Day) in the Rajaji Hall by the Governor of Madras Sri Bhishnu Ram Medhi.

5. The Tamil Development and Research Council thus constituted had its first meeting on 1st March 1959 and resolved to constitute a separate committee to advise the Government on the implementation of the policy and to plan the various preparatory measures to be undertaken in order to introduce Tamil medium in

[22nd March 1960

the Colleges, and to authorize the Chairman of the Tamil Development and Research Council, (viz., the Minister for Finance) to constitute the said committee himself and proceed further.

The Tamil Development and Research Council made the above recommendations after taking note of the fact that no progress has been made after the conference of the Principals of all Arts Colleges, etc., held on 18th June 1955 in the Syndicate Room of the University Buildings, Madras, and that the Committee constituted with reference to the orders in G.O. No. 1256, Education, dated 18th July 1955 in respect of preparation of scientific and technical terms in Tamil has also not submitted any report so far.

The Government examined in detail the question of introduction of Tamil medium in Colleges and decided after going through the memorandum prepared by the then Secretary, Health, Education and Local Administration Department (Sri R. A. Gopalaswamy, I.C.S.) and decided that the Tamil medium will be introduced in the Government Arts College, Coimbatore, in 1960-61 in respect of the subjects relating to the humanities and in all other Colleges from 1963-64. To advise the Government on the implementation of this policy, a Committee called "College Tamil Committee" was constituted—vide G.O. No. 748, Education, dated 14th April 1959.

The terms of reference to the Committee were as follows :—

"The Committee will consider the following points and advice Government on them :—

(i) The mode of selection of pupils for the B.A. Degree courses in the Pilot College—It is necessary that pupils should be chosen from every district and should be the best among those who being eligible for admission to the B.A. Degree course, decide to take that course.

(ii) The selection of staff to conduct the new courses—The staff of Professors and Lecturers for the various subjects of the B.A. courses in the Pilot College should be specially got together so as to comprise an organized team which will be competent to impart instruction in the Tamil medium. Even though the Pilot College will be a Government College, the selection of staff for these courses need not be confined to people in Government service and the choice should be from as wide a circle as possible as long as the persons chosen possess the qualifications prescribed by the University. The Committee might prepare a list of suitable persons to take up the various subjects of the B.A. course from which Government could choose the members of the staff to run the new courses.

(iii) Preparation of text-books and lecture notes for the new courses.

(iv) Technical terms to be used in the new courses—As far as possible, well-known international terminology should be used subject to such adaptations as may be necessary. Well-known Tamil terms may be used but it would be desirable in such cases to have the international terms also indicated in brackets.



22nd March 1960]

(v) Any other matter relevant to the conduct of the Tamil medium B.A. courses."

6. The College Tamil Committee examined the whole question and submitted its first report to Government on 6th July 1959, after holding three meetings. The Committee in its report dealt with the following points :—

(1) The scope of the three-year degree course;

(2) Preparation of technical terms for various subjects;

(3) Preparation of text-books;

(4) Selection of staff;

(5) Selection of students;

(6) Accommodation; and

(7) Other matters relevant to the introduction of Tamil medium in colleges and the extra attention to be paid for teaching English thereby raising the standard of English.

7. After considering the various issues raised in the First Report of the College Tamil Committee, Government passed orders in their G.O. No. 1801, Education, dated 1st September 1959.

8. The College Tamil Committee recommended the introduction of Tamil medium in respect of the following main subjects :—

(1) History, (2) Politics, (3) Psychology, (4) Economics, and (5) Geography.

The Committee also recommended that the following courses under minor subjects be conducted in Tamil :—

(1) Biology, (2) Astronomy, (3) Statistics, (4) Physics, (5) Chemistry, and (6) European Philosophy.

The Committee in making the recommendations for the introduction of Tamil medium in the various subjects had the whole-hearted support of about 75 per cent of the teaching staff in the Colleges both Government and private, who expressed their willingness to teach their subjects in Tamil, when the College Tamil Committee addressed the educational institutions for their opinion.

9. The College Tamil Committee considered that the main difficulty in the way of introduction of Tamil medium in colleges was want of text-books in Tamil for the various subjects. As a preliminary measure the Committee decided to prepare lists of technical terms for all the subjects proposed to be introduced in colleges. The provisional lists of technical terms were accordingly got prepared for fourteen subjects through subject-experts guided by the Members of the College Tamil Committee concerned and copies were distributed on the following dates to the Vice-Chancellor of the University of Madras, Vice-Chancellor of the Annamalai University, the Registrars of the Madras University, the Annamalai

University, Malaya University and the University of Ceylon, all members of the Madras State Education Advisory Committee, Members of the Madras State Tamil Development and Research Council, Members of the College Tamil Committee, Members of the Official Language Act Implementation Committee, Members of the Law Terms Committee, Members of the Committee for Research and Production of Literature for Children and Adults, Members of the Committee for Epigraphical and Archæological Study and Co-ordinated Tamil Development, Members of the Committee for the Study and Promotion of Folklore, Folk dances and Riddles, Members of Academy of Tamil Culture, all the Principals of all Arts Colleges, Training Colleges, Oriental Colleges, Engineering Colleges and other distinguished educationalists totalling to an approximate number of 175 persons for comments and suggestions :—

| | | |
|---|---|---|
| (1) | Politics .. .. .. .. | 12th August 1959 |
| (2) | Economics. .. . .. | 3rd September 1959 |
| (3) | Physics .. .. .. .. | 18th September 1959 |
| (4) | Chemistry .. .. .. .. | 18th September 1959 |
| (5) | Statistics .. .. .. .. | 18th September 1959 |
| (6) | Biology .. .. .. .. | 18th September 1959 |
| (7) | Astronomy .. .. — | 18th September 1959 |
| (8) | European Philosophy .. .. | 26th September 1959 |
| (9) | Psychology .. .. .. | 5th October 1959 |
| (10) | Commerce .. .. .. | 19th October 1959 |
| (11) | History: European History . .. | 13th November 1959 |
| (12) | History : Indian History.. .. .. | 12th November 1959 |
| (13) | History : History of England .. .. | 14th November 1959 |
| (14) | Geography .. .. .. | 23rd November 1959 |

The lists with comments and suggestions were received from the various persons to whom the copies of provisional lists were distributed. All suggestions received up to 24th December 1959 were considered in detail after tabulation of all suggestions and suitable terms were finalized between 25th December 1959 and 31st December 1959 after once again consulting some subject experts and experts in the Tamil language. For this purpose, the College Tamil Committee had continuous sittings for seven days and was assisted by a large number of Tamil Professors and subject professors. The lists of technical terms thus finalized were printed and distributed between 18th January 1960 and 25th February 1960 to all institutions and persons specified above, to the Heads of Departments and other officials in the State. The foreword for the lists of technical terms is extracted below for information :—

**முன்னுரை.**

*தமிழிலேயே கல்லூரிகளில் கற்பிப்பது ஒரு புது முயற்சி. வகுப்பில் எழும் சூழ்நிலைகளை எல்லாம் எதிர்பார்ப்பது அருமை. இங்கே நோக்கம் அடிப்படை முட்டுப்பாடுள்ள கலைச்சொற்களை எல்லோரும் ஒப்புக்கொள்ளும் வகையில் அமைப்பதேயாம்.*



*முடிவாக ஒரு கொள்கை உருவாகலாம். குழந்தை முதலடி எடுத்து வைக்கும்போது தட்டுத் தடுமாறி நின்று, பின் நன்றாக நடக்கக் கற்றுக்கொள்கிறது. அதுதான் இயற்கையோடியைந்த விஞ்ஞானப் போக்கு. இங்கே குறித்துள்ள கலைச்சொற்களின் மூலங்கள் ஆங்கிலப் பாடப் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டன. தமிழ்ச் சொற்கள் இப்போதைக்கு உதவக்கூடும் என்ற நோக்கிலேயே உருவானவை. இவை குற்றமற்றன என்று யாரும் கருதவில்லை. இவற்றைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கையிலேயே எல்லோரையும் இவற்றைப்பற்றி எண்ணுமாறும், திருத்தங்களைத் தருமாறும் கேட்டுக்கொள்ளுகிறோம். பல கல்லூரி ஆசிரியர்களும் பிறரும் இந்த முயற்சியில் ஒத்துழைத்துள்ளார்கள். எல்லாவற்றையும் கலைச் சொல்லாக்காது இன்றியமையாதவற்றை மட்டும் குறித்துள்ளோம். மாணவர்கள் ஆங்கில நூல்களைப் புரட்டிப் பார்த்து அறிவையும் பெறவேண்டிய சூழ்நிலைக்கு உதவ வேண்டும் என்பதனையும் நம் மனத்தில் கொள்ளவேண்டும். இன்று கற்பிக்கும் ஆசிரியர்கள் தமிழில் கற்பிக்கும் முயற்சியில் எளிதாகப் பங்கு பெறவேண்டும் என்ற நோக்கமும் உண்டு. இக் கலைச் சொற்கள் கல்லூரிப் பாட நூல்களுக்கே அன்றி பொதுமக்கள் நூல்களுக்காக அல்ல என்பதனையும் வற்புறுத்துகிறோம். சொல்லிக் கொடுக்கும்போதும் நூல்களை எழுதும்போதும் திருத்தங்கள் எழும் என்பதில் ஐயம் இல்லை. நூல் எழுதுவோர்க்கு இது காரணமாக உரிமை உண்டு. போராட்டம் இன்றி அன்பு வழியே சென்றால் இடர்ப்பாடு நீங்கும், வெற்றியே காண்போம்.*

10. The next major item for the consideration of the College Tamil Committee was the preparation of Text-books in Tamil. The Committee after careful consideration of all the issues involved, decided that it would be better to translate from English to Tamil some of the standard text-books approved by the University of Madras for the various subjects. Most of the standard text-books approved by the University of Madras do not strictly conform to the syllabus prescribed for these various subjects, though they are authoritative books in the field on the subjects. The College Tamil Committee considered that in spite of the said defect of not strictly conforming to the syllabus, it would be better to translate these books because of the literary and topical value and also of their value in shaping the world opinion on the subject. Having decided to translate the standard text-books, the Committee thereafter constituted six text-book selection sub-committees with the Chairman of the Boards of Studies of the University of Madras as one of the members and selected a list of 51 books to be translated. The Committee considered the various methods of publication and the connected problems. The various issues connected with the publication are enumerated below :—

(1) Getting the permission of the original authors and publishers (who happened to be mostly foreigners) to translate their books.

(2) Payment of remuneration for authors, who translated into Tamil the standard text-books—payment being made either by the

[22nd March 1960

(3) The selection of private publishers to print the translated Tamil books or the Government themselves printing them.

(4) The question of Government themselves publishing the translated text-books.

(5) Payment of royalty to the translating authors by the private publisher or by the Government.

(6) The outright purchase of copy-right for the Tamil editions from the translators either by the private publishers or by the Government.

(7) The pricing of the various books by the private publishers or by the Government.

(8) The profit margin for the publishers of Tamil editoins.

11. After considering all the above issues, the College Tamil Committee suggested that it would be appropriate that Government should come forward to publish books at their own cost. In regard to this suggestion of the College Tamil Committee, the Government issued orders, stating that the Government considered that it would be advisable to entrust the work of publishing the Tamil books to private publishers—vide G.O. Ms. No. 1801, Education, dated 1st September 1959.

12. The College Tamil Committee started negotiations with some of the major firms of private publishers in the Madras City on 23rd July 1959. Copies of lists of books for which the private publishers were themselves publishers or were agents were distributed to the four major publishers, viz., Messrs. Orient Longmans Company, Limited, Macmillan and Company, Limited, Oxford University Press, and Higginbothams (Private), Limited. Oxford University Press was concerned with eight books out of the total number of 51 books selected by the College Tamil Committee for translation. Macmillan and Company, Limited, was concerned with eight other books and the Orient Longmans and Company, Limited, and Higginbothams (Private), Limited, were concerned with five and three books, respectively. The first three firms who are regular publishers of books tentatively agreed to publish the translations of their books after discussing the various issues enumerated in paragraph 10 above. The negotiations with the above four firms and other private publishers were dragging on until the end of January 1960. The main difficulty in settling the issues was that most of the authors and most of the publishers of English Standard books were foreigners having their headquarters either in England or in U.S.A. Another difficulty in the way was that the number of copies to be sold (being restricted to the Madras State alone) would be comparatively small. Consent for four books alone were received from the foreign authors and publishers. The inordinate delay in securing the permission from the authors and publishers to translate their books raised further problems as the target date of July 1960 is fast approaching.



22nd March 1960]

SRI A. A. RASHEED : When will it be introduced, Sir? Is the Hon. Minister aware that several persons died of bug-poison?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This drug must be included under the Poisons Act for the purpose of regulation. Steps are being taken in this regard.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இந்த மூட்டைப் பூச்சி மருந்தினுல் மூட்டைப் பூச்சிகளைக் கொல்வதற்குப் பதில் பல இடங்களில் மனிதர்கள் இதைச் சாப்பிட்டு பல பேர்கள் இறந்து போயிருக்



23rd March 1960]

கிருர்கள். குறிப்பாக, சேலம் ஜில்லாவில், அம்மாபேட்டையில் 200, 300 பேர்கள் இறந்திருக்கிருர்கள். இந்த மருந்தைச் சாப்பிட்டாலும் மனித னுடைய உயிரைப் போக்காத அளவுக்கு தயாரிக்கவேண்டுமென்று உத்தரவு போட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூட்டைப் பூச்சிகளைக் கொல்லக்கூடிய மருந்தை மனிதர்கள் ஏன் சாப்பிட்டார்கள் என்று தெரியவில்லை. எத்தனையோ விஷங்கள் இருக்கின்றன. எதையும் சாப் பிட்டால் உயிர் போகத்தான் போகும். இருந்தாலும், பாய்ஸன்கள் என்ற லிஸ்டில் இதையும் சேர்த்து, லைஸென்ஸ் வாங்கித் தான் விற்க வேண்டும் என்று ஒரு நிபந்தனையை ஏற்படுத்தலாம் என்று அரசாங்கம் யோசித்து வருகிறது.

## *Bringing of agricultural labourers under co-operative fold*

* 526 *Q.*—SRI M. P. SARATHI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் விவசாயத்தில் ஈடுபட்டு உள்ளவர்கள் எல்லோ ரையும் கூட்டுறவு சங்கங்களில் சேர்க்க ஆலோசனையுண்டா ?

(ஆ) அதுபற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது ? என்ன நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன ?

The Hon. Sri R. VENKATARAMAN :

(*a*) Yes, Sir.

(*b*) A statement[a] is placed on the table of the house.

SRI T. S. RAMASWAMY : இந்த அக்ரிகல்சுரல் பாங்கைப் பொருத்த அளவில் ஏன் இந்தக் கொள்கையை நீடிக்கவில்லை ? அடுத்த வருஷம் தொடர்ந்து திறக்கப்படமாட்டாது என்று சொல்லுகிருர்களே, ஏன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இன்றைக்கு கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி நிபுணர்களெல்லாம் ஆராய்ச்சி செய்ததில் கிராமத் திற்கு ஒரு கூட்டுறவு சங்கம் வேண்டுமென்பதுதான் உன்னத லட்சியம். அக்ரிகல்சுரல் பாங்குகளை 3 அல்லது 4 கிராமங்களுக்குச் சேர்த்து வைத்துக் கொண்டு இனி அக்ரிகல்சுரல் பாங்க் அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டது. ஆனுல் சென்னை ராஜ்யத்தைப் பொருத்த அளவில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 300 பாங்கு களையும் இந்த முடிவு எடுக்கப்படும் முன்பே அமைத்துவிட்டோம்.

SRI K. B. S. MANI: ஸார், இந்த விவசாய கூட்டுறவு சங்கங்கள் விவசாயி களுடைய முன்னேற்றத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சங்கத்தில் விவசாயம் செய்தவர்கள் இதைப் பயன்படுத்திக்கொண்டு, வரக் கூடிய லாபத்தைத் தாங்கள் மூட்டையடிக்க ஏற்பாடு செய்கிருர்களே, இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? இதைப்பற்றி கூட்டுறவு சங்க விதிகளில் ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அந்த விதமாக ஏதாவது புகார் எந்த சங்கத்தின் மீதாவது இருந்தால் அதை எழுதி அனுப்பினுல் கவனிக்கப்படும்.

SRI A.A. RASHEED : Sir the hon. Member said "மூட்டையடிப்பது". Is it parliamentary.

MR. SPEAKER : There is nothing serious in it.

SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : 500 பேர்கள் கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கூட்டுறவு சொஸைட்டி அமைப்பது என்பது கன்வென்டரேஷனில் இருந்தது. அதைப்பற்றித் தீர்மானம் எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு அந்தமாதிரி

a Printed as Appendix II on page 371 infra.

[23rd March 1960

சிறு சிறு கூட்டுறவு சங்கங்களை அமைத்தால் அத்தனை நன்மை கிடைக்குமா என்று சந்தேகம் இருக்கிறது. இதைப் பற்றி ராஜ்யத்திற்கு ராஜ்யம் அபிப்பிராயபேதம் இருக்கிறது. நம் ராஜ்யத்தில் விவசாய கூட்டுறவு பாங்குகள் நல்ல முறையில் வேலை செய்து வருகிறது என்று நினைக்கிறோம். இதனால் 1,000, 2,000 கிராம மக்கள் இருந்தால் ஒரு பாங்க் அமைக்க புனராலோசனை செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப் பற்றி இரண்டுவித அபிப்பிராயம் இருப்பது உண்மை. கிராமத்திற்கு ஒரு சங்கம் வேண்டுமென்று நினைக்கும்போது சிறு கிராமமாக இருக்குமானால் அதற்கு வேண்டிய நிதி வசதி இருக்காது. அதற்கு ஆகக்கூடிய செலவுகளை சிறு கிராம சொஸைட்டிகளில் ஏற்றுக்கொள்ள முடியாது. பெரிய பாங்குகளாக உத்திரப் பிரதேசத்தில் இருப்பது போல தாலூகாவிற்கு ஒன்று வைத்தால் அது கூட்டுறவு அடிப்படையில் இருக்காது. இப்போது கிரெடிட் யூனியன் என்று ஏற்பாடு செய்வதாக முடிவு செய்திருக்கிறது. சொஸைடிகளை கிராமவாரியாக வைத்து, 5, 6 சிறு சொஸைடிகளைச் சேர்த்து கிரெடிட் யூனியனை வைத்து மக்களுக்கு வசதி கொடுக்க ஏற்பாடு செய்து அக்ரிகல்சுரல் பாங்க் எந்த உதவி செய்கிறதோ அதைச் செய்ய முயற்சி செய்கிறோம். அந்த மாதிரி கிரெடிட் யூனியன்கள் 100 வைக்கவேண்டுமென்று திட்டம்போட்டோம். முடிவு எடுக்க காலதாமதம் ஆனதால் அவ்வளவும் நிறை வேறவில்லை.

SRI R. KRISHNASAMI NAIDU : ஐந்து கிராமங்களில் ஐந்து சிறிய பலநோக்க சங்கங்களை ஏற்படுத்தி, அவைகளையெல்லாம் ஒன்றாக இணைத்து ஒரு கிரெடிட் யூனியன் அமைப்பது என்பது இப்போதுள்ள விதியாக இருக்கிறது. பரந்த விஸ்தீரணமுள்ள பல பகுதிகளில் அதைவிடக் குறைந்த சங்கங்கள் இருக்கின்றன. எனவே அதைவிடக் குறைந்த சங்கங்கள் இருக்கும் பரந்த விஸ்தீரணமுள்ள பகுதிகளில் ஐந்துக்கும் குறைந்த சங்கங்களைக் கொண்ட க்ரெடிட் யூனியன் ஏற்படுத்துவதை அரசாங்கம் விரும்புமா ? அதற்கு அனுமதி கேட்டால் அரசாங்கத்தார் அனுமதி கொடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மக்கள் அக்ரிகல்சரல் பாங்குக்கு எவ்வளவு ஆர்வம் காட்டினார்களோ அவ்வளவு ஆர்வத்தை இந்த கிரெடிட் யூனியனில் காட்டவில்லை. எனவே க்ரெடிட் யூனியன்களை அமைப்பது சிரமமாக இருக்கிறது. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் யார் யார் என்ன நல்ல யோசனைகள் சொன்னாலும் சர்க்கார் அவற்றை பரிசீலித்து புதுத்துறையில் ஏதாவது முயற்சி எடுக்க வேண்டியிருந்தால்கூட அதை எடுக்கத் தயாராயிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

SRI A. GOVINDASAMY : நில அடமான பாங்குகளின் மூலம் விவசாயிகள் கடன் வாங்க முயற்சித்தால், கடன் கொடுப்பதில் அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் ஏதாவது துரிதமான நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒருவருக்குக் கடன் கொடுப்பதற்கு முன், அவருக்கு சொத்துரிமை இருக்கிறதா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. சொத்துரிமை இருக்கிறதா என்று பார்க்கும்போது வில்லங்க செர்டிபிகேட் வாங்க வேண்டியிருக்கிறது. அதில் காலதாமதம் ஏற்படுவதை எவ்வாறு தவிர்ப்பது என்று தெரியவில்லை. சொத்துரிமை இருக்கிறதா என்று பார்க்காமல் ஒருவருக்குக் கடன் கொடுக்க முடியாது. இந்த விஷயம் சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது ; பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

SRIMATHI A. S. PONNAMMAL : இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் குத்தகைக்கு நிலத்தில் உழும் விவசாயிகள் சேர்க்கப்படுவதில்லை என்பது உண்மையா. அப்படியானால் அவர்களையும் இவைகளில் சேர்த்து, ஓராண்டு போன்ற காலங்களில் திருப்பிக் கொடுக்கக்கூடிய கடன்களை அவர்களுக்குக் கொடுத்துதவ அரசாங்கம் முன் வருமா ?



23rd March 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : புல் பைனான்ஸ் ஸ்கீம் உள்ள இடங்களில் அதைச் செய்வதாகத்தான் யோசனை. அதாவது நிலமில்லாத விவசாயிகளுக்குக் கூட, அவர்கள் செய்யக்கூடிய உற்பத்தியை மதிப்பிட்டு அதற்கேற்ப அவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். இப்போது 17 இடங்களில் புல் பைனான்ஸ் ஸ்கீம் அமலுக்கு வருகிறது. இந்த இடங்களில் இத் திட்டம் மேற்கொள்ளப்படும். மேற்கொண்டு எந்த இடங்களுக்கு புல் பைனான்ஸ் ஸ்கீம் விஸ்தரிக்கப் படுகிறதோ அந்த இடங்களில் அந்த முறையில் கடன் கொடுக்கப்படும்.

*Rural credit*

* 527 *Q*.—SRI T. S. RAMASWAMI (on behalf of Sri K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken for the development of integrated rural credit under the Second Five-Year Plan?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement is laid on the table of the House.

SRI K. RAMACHANDRAN : It is stated here that 50 per cent of the rural population will be served in the year 1959–60. May I know whether this will cover at least the rural population in all the villages of the Block area?

THE HON. SRI R. VENKATARAMAN : It would not be possible to say whether all the villages in the Block area would be covered. But, I may state that 50 per cent of the total population of the State would be covered. Because, there are large areas in which the Block is not extended, but where a substantial number of villagers are members of co-operative societies.

SRI J. MATHA GOWDER : இந்த அறிக்கையில் 17 லாண்ட் மார்ட்கேஜ் பாங்குகள் திறக்கப்பட்டிருப்பதாகக் கண்டிருக்கிறது. ஒரே இலாகாவின் கீழ் இருக்கும் கிராம ஸொஸைடிகளில்கூட கூட்டுப் பட்டாக்களுக்குட்பட்ட நிலங்களைப் பொறுத்துக் கிராம மக்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த ஸொஸைடிகளால் கிராம மக்கள் பயனடைவதில்லை என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படியானால், இனிமேல் கூட்டுப் பட்டாக்களுள்ள நிலங்கள் பேரிலும் கடன் கொடுக்கச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது ஒரு சட்டப் பிரச்னை. கூட்டுப் பட்டாவில் யாருக்கு அதிகாரம், உரிமை இருக்கிறது என்பது தெரிவதில்லை. அந்த உரிமை உள்ளவர்களுக்குத்தான் கிராம பாங்குகளில் கடன் கொடுக்க முடியும்.

SRI. V. SUBBIAH : ஜமீன் பிராந்தியங்களிலும் இனாம் பிராந்தியங்களிலும் உள்ள நிலங்கள் பல ஸர்வே செய்யப்பட வேண்டிய நிலையிலேயே இன்னும் இருப்பதால், அவைகளின் பேரில் கடன் பெற முடியாத நிலைமை இருக்கிறது. அந்த கிராமங்களில் ரிஸெட்டில்மெண்ட் ஆவதற்குள்ளேயே கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு லாண்ட் மார்ட்கேஜ் பாங்கு வைக்க வேண்டும் என்ற கொள்கையை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், சில தாலூகாக்களில் அவைகளை வைக்கமுடியவில்லை என்றால் அதற்குக் காரணம் அங்குள்ள முந்திய ஜமீன் நிலங்களுக்கு ரயத்துவாரிப் பட்டா கொடுக்க வேண்டிய காரியம் செய்து முடிக்கப்படாமல் இருப்பதுதான். அந்த இடங்களில் ஸர்வேயும் ஸெட்டில்மெண்டும் முடிந்தவுடன் லாண்ட் மார்ட்கேஜ் பாங்குகள் வைக்கப்படும்.

---

* Printed as Appendix III on pages 371–372 infra.

[23rd March 1960

SRI S. M. ANNAMALAI : சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் உள்ள கூட்டுறவு ஸொஸைடிகளில் மெம்பர்களாக இருப்பவர்கள் சமுதாய நலத் திட்டத்தில் கடன் பெற முடியாது என்று இப்போது சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் காரணமாக, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் சங்கங்களிலிருந்து விலகி சமுதாய நலத் திட்டங்களில் கடன் பெறுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இதைப் போக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : புல் ஃபைனான்ஸ் ஸ்கீம் இருக்கும் இடங்களில் எல்லாம் கடன்களையும் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தே பெற வேண்டும். தனித் தனியாகக் கடன்கள் கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்வதுதான் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கும் நல்லது, கூட்டுறவு இயக்கம் அபிவிருத்தியடைவதற்கும் சாதகமாக இருக்கும். இதனால் எந்தவிதமான கஷ்டமும் ஏற்படுவதாகவும் தெரியவில்லை. அவ்வாறு நிர்பந்தங்கள், கஷ்டங்கள் இருக்குமானால் அவற்றைப்பற்றி எழுதியனுப்பினால் கவனிக்கிறோம்.

*Veterinary College*

* 528 *Q.*—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to start another Veterinary College in Madras State; and

(*b*) if so, where, when and at what cost?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Such a proposal is under the consideration of the Government.

SRI A VEDARATHNAM : இதற்கு வெளிநாட்டு உதவி ஏதேனும் கிடைக்கிறதா ? அப்படியானால் என்ன உதவி கிடைக்கிறது ? இந்தக் கல்லூரியை எந்த இடத்தில் ஆரம்பிப்பதாக சர்க்கார் யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் கனம் அமைச்சர் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் நாம் எடுத்துக்கொள்ளும் திட்டங்களுக்கு வேண்டிய நிபுணர்கள் எத்தனை பேர் என்று கணக்கிட்டுப் பார்த்ததில், இப்போதுள்ள வெடரினரி காலேஜில் படித்துத் தேறி வரக்கூடியவர்களைவிட அதிகமான பேர்கள் வேண்டியிருக்கும் என்று தெரியவந்தது. ஆகவே மற்றுமொரு வெடரினரி காலேஜ் வேண்டும் என்று இப்போது புலப்படுகிறது. இதை நாம் எங்கே அமைப்பது போன்ற விஷயங்களையெல்லாம் பிற்பாடு தான் பரிசீலனை செய்து, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : விலங்கு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தும்போது, அந்த மாணவர்கள் விலங்குகளைப் பரிசோதிப்பதற்கு வகைசெய்யும் முறையிலும், பிற்பட்ட பகுதிகள் முன்னேற்றமடைவதற்கு துணை செய்யும் முறையிலும், விலங்குகள் அதிகமாக இருக்கும் கிராமப் பகுதிளில் அதை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், நகரப் பகுதியில் அதை ஏற்படுத்தாமல் கிராமப் பகுதியில் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலங்கு மருத்துவம் என்ற புதிய வார்த்தையின் காரணமாக, காட்டிலுள்ள விலங்குகளும் இதில் சேருமாதலால் இக்கல்லூரியைக் காட்டிலேயே அமைக்க வேண்டுமென்று சொல்லக்கூடும். இந்தக் கல்லூரி கால்நடை வைத்தியக் கல்லூரிதான். நகரங்களிலும் கால்நடைகள் கிடைக்கின்றன. எனவே இக்கல்லூரி கிராமத்தில் தான் இருக்க வேண்டுமென்பதில்லை. எங்கே கால்நடைகள் இருக்கின்றனவோ அங்கே இதை அமைக்கலாம்.



3rd March 1960]

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran] உணவுப் பொருள்களில் பால் மிகவும் முக்கியமானது. அது ஜனங்களுக்கு நிறையக் கிடைக்கும்படி செய்யவேண்டும். பால் பண்ணை நடத்துவதற்கான பயிற்சி கொடுப்பதற்கு நமது ராஜ்யத்தில் போதிய அளவுக்கு வகை செய்யப்படவில்லை. மாணவர்களுக்கு இப்பயிற்சியைக் கொடுத்து இதில் டிப்ளோமாக்கள் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI BHAKTAVATSALAM : இப்போது சென்னை நகரில் உள்ள வெடரினரி காலேஜில் டெய்ரி ஸெக்ஷன் இருக்கிறது. அங்கே இப்பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

*Sounding of siren in the month of Margali*

* 529 *Q.*—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any instructions have been issued to all Municipalities and Panchayat Boards to sound siren at 4 a.m. in the month of Margali; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRIMATHI LOURDHAM[illegible]AL SIMON : (*a*) & [illegible] The Government have not issued any su[illegible]h instructions.

MR. SPEAKER : கனம் அங்கத்தின[illegible] [illegible] என். கே. பழனிசா[illegible] இடத்தில் இல்லாதால் கேள்வி 530 ச[illegible]ன் நடவடிக்கைகளில் [illegible] சுரிக்கப்படும்.

*Spare parts for the use of St[illegible]e Transport*

* 530 *Q.*—SRI N. K. PALANISAMI : [illegible] the H[illegible]. the Minister for Industries be pleased to state the reasons for placing orders for spare parts for the State Transport in Madras only with some specific companies?

THE HON. SRI R. VENKATARAMAN : The Madras State Transport Department is placing orders for the purchase of spare parts of a proprietory nature with the manufacturers' representatives or their authorized dealers because they alone supply the genuine spare parts at a maximum discount.

*Publication of ancient Tamil works*

* 531 *Q.*—SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government give aid to private individuals and institutions who come forward to publish ancient Tamil works; and

(*b*) the rules governing this aid?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) There is no scheme as such for the grant of financial assistance for the publication of old Tamil works. The question of sanctioning financial assistance is considered on merits in each case, when specific applications are received.

[23rd March 1960

SRI P. U. SHANMUGAM : இதுவரை யாருக்காவது இதற்கென மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில நூல் நிலையங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூரில் இருக்கும் நூல் நிலையம், அடையாற்றில் இருக்கும் டாக்டர் சாமிநாத ஐயர் நூல் நிலையம் இவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : மிகப் பழங்காலத்திய இலக்கியகள் சிலவற்றை, எளிய விலையில் மக்களுக்குக் கிடைக்கும்படி அரசாங்கமே வெளியிட முன்வருமா ? திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவைகளை அரசாங்கமே வெளியிடுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சிலப்பதிகாரத்தை சர்க்கார் தான் பிரசுரிக்க வேண்டுமென்பதில்லை. சில நூல்கள் இன்னும் பிரசுரிக்கப்படாமல் ஏடுகளிலேயே இருக்கின்றன. அவைகளை அச்சிட்டுப் பிரசுரிக்க முயற்சி நடந்து வருகிறது. அவைகளை வருடத்திற்கு மூன்று, நான்கு புத்தகங்கள் வீதம் அச்சிட்டு வெளியிட்டு வருகிறோம்.

*Printing of Telegraph and M.O. forms in Tamil*

* 532 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether this Government was asked by the Centre to print the Telegraph and M.O. forms in Tamil in our Government Press; and

(b) if so, whether this request was complied with?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI K. ANBAZHAGAN : மத்திய சர்க்கார் அமைச்சர் அவர்கள் அந்தந்த மாநில சர்க்கார் விரும்பினால் அவ்வாறு வெளியிட்டுக் கொள்ளலாம் என்று சொன்னதாகப் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கிறது. அந்த விருப்பத்திற்கு, உரிமைக்கு இடம் இருக்கிறது என்று இந்த சர்க்கார் கருதுகிறதா ? செய்ய முற்படுமா ?

THE HON. SRI. M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வி மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தைத் தந்தி, மணியார்டர் பாரங்களை அச்சடிக்கும்படி கேட்டிருக்கிறதா என்பதாகும். அந்த மாதிரித் தகவல் இல்லை.

SRI A. GOVINDASAMY : மணியாடர் பாரத்தில் பணம் அனுப்புகிறவர் பெயரைப் பெறுபவர் இடத்திலும், பெறுபவர் பெயரை அனுப்பபுவர் இடத்திலும் எழுதக்கூடிய அசம்பாவிதங்கள் ஏற்படுவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதைத் தவிர்க்க, தமிழ் பேசக்கூடிய பகுதிகளில் தமிழில் அச்சடித்த மணியார்டர் பாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா ?

THE HON SRI. M. BHAKTAVATSALAM : இம்மாதிரி அசம்பாவிதங்கள் ஏற்படுவது உண்டு. ஆனால் இப்போது இந்த இலாகாவை மத்திய அரசாங்கத்திலே கவனிக்கும் அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். நமக்குச் தெரிந்தது அவர்களுக்கும் தெரியும். அவர் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்.



23rd March 1960]

*District Munsifs' Courts in North Arcot*

* 533 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஜில்லா முன்சீப் நீதி மன்றங்களில் ஓராண்டிற்குமேல் தீர்க்கப்படாமல் உள்ள வழக்குகள் எத்தனை ?

(ஆ) வழக்குகளை சீக்கிரம் பரிசீலிப்பதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The particulars are as follows :—

| *Courts* | | *Number of cases for over year* |
|---|---|---|
| District Munsifs Court | Arni | 22 |
| Do. | Ranipet | 24 |
| Do. | Sholinghur | 11 |
| Do. | Tirupattur | 108 |
| Do. | Tiruvannamalai | 83 |
| Do. | Vellore | 187 |

(b )The pendency in the courts is being watched by the District Judge, North Arcot and periodical instructions are being issued by him for the speedy disposal of old suits.

Additional courts are functioning at Tirupattur and Vellore where the pendency is heavy.

*Surgical Instruments Plant*

* 534 Q.—SRI A. VEDARATHNAM (on behalf of SRI N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to set up a Surgical Instruments Plant near Madras City; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a, & (b) Government of India have decided provisionally to set up a factory for the manufacture of Surgical Instruments near Madras and the details are being worked out.

* 536-A. Q.—SRI A. VEDARATHNAM : Will the Hon the Minister for Industries be pleased to state—

(a) whether the Russian Experts have selected any site near Madras for the establishment of a Surgical Instruments Factory;

(b) the arrangements made in this regard;

(c) the extent of Russian aid available; and

(d) the share of the State Government in this project?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) to (d) Details are being worked out.

[23rd March 1960

SRI A. VEDARATHNAM : இந்த உற்பத்திச் சாலையை சென்னைக்கு அருகாமையில் எந்த இடத்தில் ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : ரஷ்யா நாட்டுநிபுணர்கள் இங்கு வந்து கிண்டிக்கு அருகாமையில் இருக்கும் இடத்தைத் தேர்ந்தெடுத் தார்கள். அதை நாம் நில ஆர்ஜிதச் சட்டப்படி வாங்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

SRI A. VEDARATHNAM : ரஷ்யர்கள் இதற்காக என்ன உதவி நமக்கு அளிக்கிறார்கள் ? நிதி உதவி எவ்வளவு ? மற்றப்படி நிபுணர்கள் உதவி ஏதேனும் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்திய நாட்டிற்குக் கொடுக் கப்பட்டிருக்கும் மொத்த உதவியில் இது ஒரு பகுதி. இதற்கென்று தனியாக நிதி உதவி கிடையாது. மத்திய சர்க்காரில் இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்மிடம் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : இதில் நம்முடைய அரசாங்கத்திற்குப் பங்கு உண்டா ? அப்படியானால் பங்குத் தொகை எவ்வளவு ?

THE HON SRI R. VENKATARAMAN : இது மத்திய சர்க்கார் அமைக் கின்ற தொழிற்சாலை.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இந்தத் தொழிற்சாலை சென்னைக்கு அருகிலேயே இருக்க வேண்டிய காரணங்கள் பிரத்தியேகமாக ஏதேனும் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதை சோவியத் யூனியன் நிபுணர்களிடந்தான் கேட்கவேண்டும்.

SRI M. K. SOMASUNDARAM : இந்தத் தொழிற்சாலைக்கு மொத்தம் எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : அதுதான் இப்போது சொன்னேன். தனியாக இதற்கென்று ஒதுக்குவதில்லை. சோவியத் யூனியனில் இருந்து மொத்தமாக எவ்வளவு உதவி கொடுக்கிறார்கள் என்று கணக்குப் போட்டு அதைப் பல துறைகளில் பல தொழிற்சாலைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*Playing of film records during school functions*

* 535 Q.—SRI A. A. SAHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have banned the playing of records of film songs in the school functions?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

*English medium schools*

* 536—Q. SRI M. P. SARATHI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் ஆங்கிலம் போதனா மொழியாக (**English medium schools**) உள்ள பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அரசாங்கம் நடத்தும் பள்ளிகள் எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 10

(*b*) None, Sir.

A similar question was answered yesterday.



23rd March 1960]

SRI A. GOVINDASAMY : இந்த ஆங்கில " மீடியம் " வைத்து நடத்தப்படுகிற பள்ளிக்கூடங்களுக்குச் சர்க்கார் ஏதாவது விசேஷ சலுகை கொடுக்கிறதா ? குறிப்பாக "கன்னியஸ்திரி"-கள் நடத்துகிற பள்ளிக்கூடங் களுக்குச் சலுகை கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் ஆங்கிலம் மூலமாகப் போதிக்கப்படும் பள்ளிக்கூடங்கள் இரண்டு வகைப் பள்ளிக்கூடங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, நம் பாடத்தை அனுசரித்து சொல்லிக் கொடுப்பது. இன்னொன்று " ஆங்லோ இந்தியன் ஸ்கூல் " என்று சொல்லப்படுவது. அவர்கள் மெட்ரிகுலேஷனுக்குப் பயிற்சி கொடுக் கிறார்கள். நான் சொன்னது சாதாரணமாக நம்முடைய பாட முறையை அனுசரிக்கக் கூடியது. அவர்களுக்கு மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சலுகைதான் கொடுக்கப்படுகிறது.

MR. SPEAKER : Questions are over.

SRI A. VEDARATHNAM : " ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர் ஸார் " இந்தக் கேள்விகளில் சிலவற்றுக்கு மேஜையின்மேல் பதில்கள் அச்சடிக்கப் பட்டு வைக்கப்படுகின்றன. அதில் பல பக்கங்கள் இருக்கும் காரணத்தால் இங்கு எட்டரை மணிக்கு வந்த பிறகு அதைப் படித்து உப கேள்விகள் கேட்கக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே கேள்விகளை அங்கத்தினர்களுக்கு அனுப்பும்போதே, இந்த மாதிரி அச்சடிக்கப்பட்ட பதில்களையும் அனுப்பி வைத்தால் அங்கத்தினர்கள் படித்துப் பார்த்து உப கேள்விகள் கேட்க வசதியாக இருக்கும். இதைத் தலைவர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : இந்தச் சபையில் கேள்வியைக் கேட்ட பிறகுதான் மந்திரி அதற்குப் பதில் அளிக்க முடியும். கேள்வி கேட்பதற்கு முன்பே அந்தப் பதிலை வீட்டுக்கு அனுப்பி வைப்பது விதிகளுக்கு விரோதம் என்று தான் சொல்ல முடியும்.

NOTE—Anashrisk (*) at the Commencement of a speach indicates revision by the Member.

## II.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE OF ESTIMATES

SRI R. KRISHNASAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, 1959-60-ம் வருஷத்திய மதிப்பீட்டுக் குழுவின் கிராமாந்திர குடி தண்ணீர்த் திட்டங்கள் பற்றி முதல் அறிக்கையை நான் இந்த சபை முன் சமர்ப்பிக்கிறேன்.

## III.—PRIVILEGE MOTION: RESOLUTION OF THE MADRAS CITY CORPORATION Council *RE*. CERTAIN REMARKS MADE IN THE ASSEMBLY.

MR. SPEAKER : Hon. Members would remember that I promised to give my ruling on the privilege motion raised by the hon. Member Mr. Basheed to-day. I did not want to base my ruling on what appeared in the papers and, therefore, wrote to the Worshipful Mayor of Madras, asking him if it would be possible to send me a copy of the proceedings of the City Council so that I could base my remarks on the official version of the proceedings. I have not yet received it. I wrote on Saturday and probably my letter reached the Mayor a little late. I propose to wait for two or three days to get the official version of the proceedings of the City Council relating to this matter. Of course, if I do not get it, I will give my ruling on the basis of what is reported in the Press. Therefore, I am not giving my ruling to-day.

## IV.—DEMAND FOR GRANTS FOR FURTHER EXPENDITURE FOR THE YEAR 1959-60.

MR. SPEAKER : We have two hours for Demands for Grants for further expenditure for the year 1959-60. Shall we have general discussion for one hour and one hour for voting?

THE HON. SRI C. SUBRAMANIAM : Let there be general discussion for one hour and forty-five minutes and then voting.

MR. SPEAKER : I made only a suggestion to the House.

SRI P. S. CHINNADURAI : Let us have more time for general discussion. One hour is not sufficient.

MR. SPEAKER : We have allotted two hours for this and two hours for the Forest Demand. The two hours set apart for the discussion of the supplementary statement of expenditure can be divided according to the wishes of hon. Members. I suggested one hour for general discussion and one hour for voting on demands and the Hon. Leader of the House said ' one hour and forty-five minutes for general discussion '. What is the opinion of the hon. Leader of the Opposition?

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : I have no objection to any course, Sir.

MR. SPEAKER : So, one hour and forty-five minutes for general discussion and fifteen minutes for voting.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அதிகப்படியான திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டி அடிப்படையில், அதிகப்படியாக ஆகக்கூடிய செலவினங்களுக்கு நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு வழக்கத்திற்கு அதிகமான கோரிக்கைகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். 39 கோடி ரூபாய்க்குமேல் . . . .

MR. SPEAKER : How long will the Hon. Minister take to
9-30 a.m. reply to the general discussion? Will half an hour do?

THE HON. SRI C. SUBRAMANIAM : Fifteen minutes will do, Sir.

MR. SPEAKER : Then we have one and a half hours for the general discussion. I think the Hon. the Leader of the Opposition wants to speak in the end. He wants fifteen minutes. I would ask hon. Member to limit their speeches to 10 minutes. (Interruption.)

SRI M. KALYANASUNDARAM : இவ்வளவு அதிகமாகி யிருப்பதற்கு ஆரம்ப உரையிலேயே அமைச்சர் அவர்கள் சில சமாதானங்கள் சொல்லியிருக்கிறார்கள். திட்ட வேலைகள் அதிகரித்திருக்கும் காரணத்தினால், வருஷ ஆரம்பத்திலே போட்ட மதிப்பீடுகள் சரியில்லை



என்பதுதான் இந்த சமாதானத்தினுடைய அர்த்தம். திட்டச் செலவுகள் சம்பந்தப்பட்டமட்டில், அம்மாதிரி ஆரம்பத்திலேயே மதிப்பீடுகளைச் சரியாகக் கணிக்க முடியவில்லையென்றால், அந்தச் சமாதானம் பொருத்தமாக இருக்கும். ஆனால், மூலதனச் செலவுகள் மட்டுமல்ல, இவ்வளவு அதிகமாக ஆயிருப்பது. ரெவினியூ கணக்கில் பார்த்தாலும், கல்வி, சிறைச்சாலை போன்று மாமூலாக இருக்கும் ரெவினியூ இனங்களில்கூட, கோடிக் கணக்கில் அதிகமாகச் செலவிடவேண்டிய காரணம் என்ன ? ஜில்லா போர்டுகளுக்கு கொடுக்கவேண்டிய மான்யத் தொகைகளைக் கணக்கிடுவதிலே கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் காலதாமதத்திற்குக் காரணம் என்ன ? முன்கூட்டியே எதிர்பார்க்க முடியாத செலவினங்களா இவைகள் எல்லாம் என்று பார்க்கும்போது, அந்தச் சமாதானம் அவ்வளவு பொருத்தமானதாக இல்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். திட்டம் அபிவிருத்தி அடைய அடைய, குற்றங்கள் பெருகும் என்று சொன்னார்களே போலீஸ் அமைச்சர் அவர்கள் அது போன்றே, திட்டம் அபிவிருத்தி அடைய அடைய மதிப்பீடு போடுவதில்கூட, கோளாறு அதிகரிக்குமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது, இந்த உபரி மான்யத்திற்கு வந்திருக்கும் யோசனைகள் நான் பார்க்கும்போது. இந்த அளவுக்குத் தாரதம்மியம் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நிதி இலாகாவுக்கும் சம்பந்தபட்ட இலாகாக்களுக்கும் நாம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அதோடு, சில முக்கியமான பிரச்னைகளையும் இந்தச் சபையில் நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணமாக, நாம் போட்ட பாசனத் திட்டங்களில் பரம்பிக்குளம்--ஆளியாறு திட்டம் முக்கியமானது. எல்லோரும் ஆவலாக எதிர்பார்க்கக் கூடியது. அதற்காக இந்தக் கோரிக்கையில் காட்டப்பட்டிருக்கும் தொகை கிட்டத்தட்ட 37 லட்சம் ரூபாய். இந்தச் செலவு என்னவென்று பார்த்தால், சாமான்கள் (ஸ்டோர்ஸ்), வாங்குவதற்காகத்தான் பயன்படுகிறதே தவிர, வேறு திட்ட வேலைகளுக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்தத் திட்டம் ?

SRI M. KALYANASUNDARAM : பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம். பத்திரிகையில் வரும் செய்தியைப் பார்த்தால், நமக்கு இதைப்பற்றி கொஞ்சம் கவலை ஏற்பட நேரிடுகின்றது. கேரள அரசாங்கத்திற்கும் சென்னை அரசாங்கத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை வளர்க்க வேண்டும் என்பதல்ல என்னுடைய அபிப்பிராயம். இந்தப் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதுதான். அந்த ராஜ்யத்திலே யார் ஆட்சியில் இருந்தாலும் சரி, இந்த ராஜ்யத்தில் யார் ஆட்சியில் இருந்தாலும் சரி, இந்தத் தகராறு சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். 25-ந் தேதி குந்தாத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கு நம்முடைய மதிப்பிற்குரிய பிரதம மந்திரி வரக்கூடிய சமயத்திலேயே பரம்பிக்குளம் ஆளியாற்றுத் திட்டத்தையும் ஆரம்பித்து வைப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்ததாக நான் அறிகிறேன். அப்படியிருந்தும், அது ஒத்திவைக்க நேர்ந்துள்ளது. அது ஒத்திவைக்க வேண்டிய காரணம் என்ன ? சில விவரங்கள் சம்பந்தமாக இரு அரசாங்கங்களின் இடையே இன்னும் பேச்சு வார்த்தைகள் நடக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். விவரங்கள் சம்பந்தப்பட்டமட்டில்தான் அபிப்பிராய பேதம் இருக்கிறது, ஒற்றுமை ஏற்படவில்லை என்று சொன்னால், திட்டத்தை ஆரம்பித்து வைக்கக்கூடியதிலே என்ன கஷ்டம் இருக்கிறது ? அதைக்கூட ஒத்திவைக்கவேண்டியதன் காரணமென்ன ? அந்த அபிப்பிராய பேதம் அடிப்படையானதா என்றே நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது என்று தான் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதற்கு கேரள அரசாங்கம்

ஆட்சேபித்து இருக்கவேண்டியதில்லை. ஒரு அஸ்திவாரக்கல் போடுவதென்றால், திட்ட வேலை ஆரம்பித்துவிடுவது என்பது அல்ல. அபிப்பிராய வித்தியாசங்களை பிறகு நாம் தீர்த்துக்கொள்ள முடியும். அஸ்திவாரக்கல் போடுவதையே ஒத்திபோடக்கூடிய அளவு அடிப்படையான வித்தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவே, நிதி அமைச்சர் அவர்கள் இதற்குப் போதுமான விளக்கம் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இன்னும் கட்டளை, புது வாய்க்கால், புள்ளம்பாடி வாய்க்கால் சம்மந்தப்பட்டமட்டில், சில தாரதம்மியங்கள் இருக்கின்றன. ஆரம்பத்திலேயே, இருக்கும் சில கிராமங்களுக்கெல்லாம்கூட பாசன வசதி செய்து கொடுக்காமல் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. அப்பேர்பட்ட கிராமங்களின் விவரங்களை நான் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். இந்தக் கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பது, நமக்கும் மைசூர் அரசாங்கத்திற்கும் இடையே இருக்கக்கூடிய ஒப்பந்தத்தை மீறினதாக ஆகாது. மிச்சமாக இருக்கும் தண்ணீரைத்தான் இந்த வாய்க்காலில் எடுக்கிறோம் என்று திரும்பத் திரும்ப அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், வாய்க்கால் வெட்டிய பிறகும், சில கிராமங்களைப் புறக்கணிப்பது சரியல்ல. அவற்றையும் சேர்த்துக்கொள்வதற்குள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று யோசனை கூறுகின்றேன்.

அத்துடன்கூட, மைசூர் அரசாங்கத்திற்கும் நமக்கும் ஏன் இந்தத் தப்பு அபிப்பிராயம் நீடித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. 1924-ம் வருஷத்திலே ஏற்பட்ட ஒப்பந்தத்தை நாம் மீறிவிடுவதாக அவர்கள் குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீறுவதாக இப்பொழுது முதன்முதலாக சமீபத்தில்தான் நம்முடைய மராமத்து அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மைசூர் அரசாங்கம்தான் அந்த ஒப்பந்தத்தை மீறி மேலே அணைகள் போட்டு காவிரித் தண்ணீர் வருவதைக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக முதன் முதலாக இந்தச் சபை முன்பாக ஏழு வருகாலத்திற்குப்பின் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏழு வருஷ காலமாக சென்னை அரசாங்கம் ஒப்பந்தத்தை மீறுவதாக மைசூர் அரசாங்கத்தில் பொறுப்புள்ளவர்கள் குற்றம் சாட்டிச் சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில், மைசூர் அரசாங்கம் அதை மீறக்கூடிய செயலை இந்தச் சபைமுன் இதுவரை சொல்லாமல், வெளியேயும் தெரியப்படுத்தாமல், முதன் முதலில் இப்பொழுது தெரிவிக்கவேண்டுமானால், அதற்குக் காரணமென்ன ? அதற்காக என்ன தக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது ? இரண்டு அரசாங்கப் பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசி, ஓரளவு தப்பபிப்பிராயங்களை நீக்கி, காவிரியில் வரும் நீர் வீணாகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். திருச்சி ஜில்லா, தஞ்சை ஜில்லா போன்ற இடங்களுக்கும், சேலம் ஜில்லாவில்கூட புதிய கால்வாய்கள் வெட்டவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. திருச்செங்கோடுக்கு எப்படி எப்படித் தண்ணீர் போகும் என்றுகூட ஒரு கனம் அங்கத்தினர் தமாஷாகப் பேசினார்கள். திருச்செங்கோட்டுக்குக்கூட தண்ணீர் போவதற்கு வசதி உண்டு. புதுக்கோட்டைக்குப் போகவேண்டிய வசதி உண்டு என்று நம்முடைய இலாகா இன்ஜினீர்கள் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். செலவு வேண்டுமானால் கூட ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். புதுக்கோட்டைக்குத் தண்ணீர் கொண்டு போவதற்கு 6 கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டம் கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவு வறண்ட பகுதிக்குத் தண்ணீர் கொண்டுபோக 6 கோடி ரூபாய் செலவு செய்வதென்றால் அது ஒரு பெரிய செலவாகாது அதைப் பொருட்படுத்தாமல், தண்ணீர் அங்கே எடுத்துச் செல்லவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால், இதற்கெல்லாம் மைசூர் அரசாங்கத்திற்கும் சென்னை அரசாங்கத்திற்கும் இடையே இருக்கும் தப்பபிப்பிராயங்கள்தான் காரணம் என்றால் அது வேறு விஷயம். அந்தத் தப்பபிப்பிராயங்களைப் போக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தத் தப்பு அபிப்பிராயங்களைப் போக்க நடவடிக்கை எடுத்து திருச்சி



ஜில்லாவிலும் சேலம் ஜில்லாவிலும் மிகவும் பின்தங்கியிருக்கும் இந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொண்டுபோவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, மின்சார இலாகாவைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குந்தாத் திட்டத்திற்காக நமக்கு கனடியன் அரசாங்கத்தின் உதவி. இயந்திரங்கள் எல்லாம் கிடைக்கப்பட்டு வெகு துரிதமாக வேலை நடந்து, திட்டமிட்ட காலத்திற்குள்ளாகவே, அந்தத் திட்டம் முடிவுறுவதைக் கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். அதே சமயத்தில், திட்டம் வேகமாக நடைபெறவேண்டுமென்றாலும்கூட, தொழிலாளர்களை அளவோடு காக்க வேண்டும். இந்தத் திட்டங்களெல்லாம் வெற்றி பெறவேண்டுமானால், அதற்கு முக்கியமான காரணமாக இருப்பவர்கள் தொழிலாளிகள். அதிகாரிகள் அவர்கள் திட்டம் போடுவதிலேயே, அவர்கள் கனடாவுக்கும் ஜெர்மனிக்கும் ஓடிப்போய் வருவதிலேயே திட்டங்களெல்லாம் துரிதமாக நடந்துவிடுகின்றன என்று சில அதிகாரிகள் நினைத்துக்கொண்டு விடுகிறார்கள். தொழிலாளிகள், நாங்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறோமே, தங்களுக்குப் போதுமான சம்பள வசதி இதெல்லாம் கிடைக்கவில்லையே என்று நினைக்கிறார்கள். இந்த மனப்பான்மையைத் தீர்க்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். துரதிருஷ்டவசமாக, இப்பொழுது சீப் இன்ஜினியராக இருப்பவர்கள் பேசக்கூடிய பேச்சு, அவர் எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் தொழிலாளர்களுக்கு மிகவும், ஆத்திரத்தை உண்டாக்குகின்றன. அதன் காரணமாகத்தான் மின்சார இலாகாவிலே வேலை செய்யக்கூடிய கிட்டத்தட்ட 50,000 தொழிலாளர்களுக்கும் மனக் குமுறல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. தொழிலாளர்களிடம் நம்முடைய சர்க்காரின் கொள்கை என்ன, தொழிலாளர்களிடம் நம்முடைய சர்க்கார் என்ன கொள்கையை அனுஷ்டிக்க விரும்புகிறது, அமைச்சர்கள் சட்ட சபையிலும் சரி, வெளியிலும் சரி தொழிலாளர்களைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதைக்கூட புரிந்துகொள்ளக்கூடிய மனோபாவம் இல்லாதவர் "சீப்" இன்ஜினியராக இருக்கிறார். அவர் சீப் என்ஜினியர் என்ற முறையில் எவ்வளவு திறமைசாலி என்பதைப்பற்றி நான் அபிப்பிராயம் கூற தகுதியில்லை. அமைச்சர் அவர்கள் கூறவேண்டும். ஆனால் அவர் தொழிலாளிகளை நடத்தக்கூடிய மனோபாவம் மிகவும் மோசமாக இருக்கிறது. முதலாளிகளுக்குக்கூட அப்பேற்பட்ட மனோபாவம் இருக்காது. கீழ்த்தரமான முறையில் தொழிலாளர்கள் நடத்தப்படுகிறார்கள். அரசியல் துவேஷத்தை வைத்து மோசமாக நடத்தப்படுகிறார்கள். "தொழிற் சங்கத்தின் நிர்வாகியா, இவனை ஏன் இங்கு வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்" என்று தொழிலாளியும் வைத்துக்கொண்டு சூபரெண்டெண்டிங் என்ஜினியரையும் வைத்துக்கொண்டு "இவனை வெறும் டிரான்ஸ்பார்மர் இருக்கக்கூடிய இடத்திற்கு மாற்றுங்கள். அங்கே அவன் தொழிற் சங்க வேலை செய்யட்டும்" என்று ஆத்திரமூட்டக்கூடிய நிலையில் பேசுகிறார். அரசியல் பிரச்னையை கொண்டுவந்து புகுத்துகிறார். தொழிலாளர்களைப் பார்த்து "நீ என்னைத்து போகிறாயா" என்று கிண்டலாக சீப் என்ஜினியர் பேசுகிறார். இத்தனை ரூபாய் செலவு செய்யக்கூடிய இலாகாவிலே தொழிலாளர்களைப் பார்த்து ஏன் இப்படி சீப் என்ஜினியர் ஆத்திரமூட்டக்கூடிய நிலையில் பேச வேண்டும்? இதனால் தொழிலாளர்கள் ஆத்திரம் அடைந்து அதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்களுக்கு இடம் கொடுப்பது அவசியம்தானா? சீப் என்ஜினியர் அவர்களுக்கு இது விஷயத்தில் புத்தி சொல்ல மின்சார அமைச்சர் அவர்களுக்கும், தொழில் அமைச்சர் அவர்களுக்கும் அவகாசம் இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன். குந்தா திட்டம் பூர்த்தி அடையக்கூடிய சமயத்தில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது விளக்கினார். போதுமான தண்ணீர் இல்லை. இரண்டு லட்சம் ரூபாய் அதிகமாக செலவு செய்து 25-ம் தேதி எப்படியாவது திறப்பு விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு நீர் ஓடையிலிருந்து நீர் தேக்கத்திற்கு தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. அந்தத் தண்ணீர் 10 மணி நேரத்திற்குத்தான் போதுமானதாக இருக்கும். பிரதம மந்திரி ஆரம்பித்து வைத்த பிறகு 10 மணி நேரத்திற்குத்தான் மிஷின் ஓடிக்கொண்டிருக்கும். பிறகு அதை நிறுத்திவைக்கவேண்டி

யிருக்கும். இந்த வருஷமும் கோடை காலத்தில் மின்சார "கட்" ஏற்படலாம் என்ற அபாயத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். இது சம்பந்தமாக சுற்றறிக்கைகளும் ஏற்கனவே விடப்பட்டிருக்கின்றன. வீடு கட்டி கிரஹப் பிரவேசம் செய்வதற்கு முதலிலேயே வெள்ளை அடித்து, பெயிண்டு அடித்து எல்லா வேலைகளையும் செய்து கொண்டுதான் போகவேண்டுமென்பதில்லை. வீட்டிற்குள் போய் குடியிருந்துகொண்டு பிறகு மற்ற வேலைகளையும் செய்துகொள்ளலாம். நான் அதைக்கூட குறையாக சொல்லவில்லை. அதிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை அனுதாபத்தோடு கவனித்து நிறைவேற்றவேண்டும். சம்பளம், மற்ற விஷயங்களைப்பற்றிய கோரிக்கைகளை தெரிவித்திருக்கிறார்கள். பேச்சு வார்த்தை நடந்தது. லேபர் கமிஷனர் முன்பு சில கோரிக்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. லேபர் மினிஸ்டர்கூட சில கோரிக்கைகள் சரியானவை என்று என்னிடம் பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். அது மின்சார இலாகா அமைச்சருக்கு அனுப்பப்பட்டதா என்பது தெரியவில்லை. மின்சார அமைச்சர் அவர்கள் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதும் தெரியவில்லை. முதல் அமைச்சர் அவர்களிடத்திலும் தெரியப்படுத்தியிருக்கிறேன். "பிரதம மந்திரி அவர்கள் திறப்பு விழா நடத்த இருப்பதன் காரணமாக நீங்கள் இதையெல்லாம் வைத்துக்கொண்டு இப்பொழுது பயமுறுத்துகிறீர்களா" என்று சொன்னார்கள். அவர்களை பயமுறுத்துவதற்கு நாங்கள் யார்? அவர்களிடத்தில்தான் போலீஸ், துப்பாக்கி எல்லாம் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களை நான் பயமுறுத்த முடியுமா? அம்மாதிரி பயமுறுத்தும் எண்ணமும் எனக்கு இல்லை. (குறுக்கீடு) சிறைச்சாலைதான் இருக்கிறது. யாராவது கிளர்ச்சி செய்தால் உடனே ஜெயிலில் பிடித்து போட்டுவிடுவீர்கள். கல், மண் போட்டால் உடனே பிடித்து ஜெயிலில் போடுவீர்கள். உங்கள் துப்பாக்கிக்கு எதிராக நாங்கள் எப்படி வெறும் கல், மண்ணை வைத்து சண்டை போட முடியும்? அந்த மாதிரி சண்டை போடும் எண்ணமும் எங்களுக்கு இல்லை. விவசாயிகள் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தொழிலாளிகள் ரத்தத்தை சிந்தியிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படவேண்டும். நானாகட்டும், என்னைச் சார்ந்திருக்கிற தொழிற் சங்கத் தலைவர்களாகட்டும் "பிரதம மந்திரி அவர்கள் நடத்தப் போகும் ஆரம்ப விழா வெற்றிகரமாக நடக்கட்டும். அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாம். 30-ம் தேதி வரை கோரிக்கைகளை ஒத்திப் போடுங்கள்" என்றுதான் சொல்லி அனுப்பியிருக்கிறோம். அமைதியாக இருக்கவேண்டுமென்றுதான் தொழிற்சங்கங்கள் யோசனை கூறியிருக்கின்றன. முதல் மந்திரி மாதிரி நானும் பேச ஆரம்பிக்கவில்லை. அவர்கள் மாதிரி நான் பேச ஆரம்பித்தால், தொழிற்சங்கத் தலைவர்கள் பேச ஆரம்பித்தால், ஆரம்ப விழா வெற்றிகரமாக நடைபெறுமா? அந்த அளவுக்கு தொந்தரவு கொடுக்கக்கூடிய சக்தி தொழிலாளர்களுக்கு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். தொழிலாளர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் இடையே சில தகராறு இருக்கிறது, அமைச்சர் தவறு செய்த காரணத்தினால் இந்தத் திட்டத்திற்கு குந்தகம் ஏற்படக் கூடாது, ஆரம்ப விழாவுக்கு குந்தகம் ஏற்படக்கூடாது என்ற பெருந் தன்மையோடுதான் தொழிலாளர்கள் நடந்துகொள்ளுவார்கள். திறப்பு விழா நடக்கும் சந்தர்ப்பத்தில் நிர்ப்பந்தப்படுத்தி தொழிலாளர்கள் கேட்பதாவது, நாம் கொடுப்பதாவது என்ற பேச்சி கூறுவம் கூடாது. திறப்பு விழா முடிந்த பிறகாவது தொழிலாளிகளின் கோரிக்கைகளை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும். திறப்பு விழா முடிந்ததும் 1,000 தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் போகக்கூடாது. எவ்வளவோ புதிய திட்டங்கள் ஆரம்பிக்கிறோம். அந்தப் புதிய திட்டங்களில் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்பதற்கு உறுதிமொழிதான் அவர்கள் கேட்கிறார்கள். அம்மாதிரி உறுதி மொழி கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் விரும்பவில்லை, அதிகாரிகள் விரும்பவில்லை, லேபர் கமிஷனர் விரும்பவில்லை. சர்க்கார் முதலாளிகளையும்விட பிற்போக்கான கொள்கையையும்; மனோபாவத்தையும் அனுஷ்டிக்கக்கூடாது. முதலாளிகளை கட்டுப்படுத்தும் சர்க்காரே இப்படி செய்தால், முதலாளிகள் சர்க்காரைப் பார்த்து காப்பி அடித்து, இதைவிட மோசமான மனோபாவத்தைக் காட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



இந்த உபமான்யக் கோரிக்கைகளில் சொல்லப்பட்டிருக்கிற திட்டங்களைப் பற்றி குறை சொல்லுவதாக அர்த்தம் இல்லை. திட்டங்கள் இன்னும் அதிகமாக வேண்டும். ஆனால், மதிப்பீடு போடக்கூடிய காலத்தில் சரியாக மதிப்பீடு போட வேண்டுமென்பதை கூறிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

***Sri S. M. ANNAMALAI**: சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1959–60-ம் ஆண்டுக்கு உப மான்யக் கோரிக்கை இது மூன்றாவது முறையாக சமர்ப்பிக்கப்படுகிறது. மூன்றாவது முறையாக ஏறத்தாழ 40 கோடி ரூபாய்க்கு உபமான்யம் கோரப்படுகிறது. ஒரே ஆண்டிலே அதிகமாக செலவிடப்பட்ட தொகைக்காக வேண்டி இந்த மூன்று தடவை சமர்ப்பிக்கப் பட்ட உபமான்யக் கோரிக்கையின் தொகையைப் பார்த்தால் அதிகமாக இருக்கிறது. போலீஸ் மான்யத்திற்கு வேண்டி ரூபாய் 2,66,800 சென்னை நகரத்திற்காகவும், ஜில்லாக்களுக்காக ரூபாய் 5,02,300 முனிசிபல் தேர்தல் சம்பந்தமாக போலீஸ்காரர்களுக்காக டி. ஏ. பில்லுக்காக கோரப் பட்டிருக்கிறது. முனிசிபல் தேர்தல்கள் நடந்து ஏறத்தாழ ஒரு ஆண்டு காலம் ஆகிறது. ஒரு ஆண்டு காலம் வரையில் போலீஸ்காரர்களுக்கு டி.ஏ. கொடுக்காமல், இப்பொழுது இந்த உபமான்யக் கோரிக்கையில் மான்யம் கோருவதற்கு பதிலாக, செப்டம்பர் மாதம் வைக்கப்பட்ட உபமான்யக் கோரிக்கையில் இதைச் சேர்த்திருந்தால் அவர்களுக்கு முன்கூட்டியே டி. ஏ. கொடுத்திருக்கலாம்.

அதற்கு அடுத்தபடியாக "பையர் ஸர்வீஸ்" டிபார்ட்மெண்டுக்காக வேண்டி "டர்ன் டேபிள் லாடருக்காக" 2,25,000 கண்டின்ஜென்ஸி பண்டிலிருந்து அட்வான்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது அவ்வளவு அவசரமானதா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். அதைக் கொஞ்சம் தள்ளிப் போடக்கூடாதா? அதை என் இப்பொழுது கொண்டுவந்துள்ள 1960–61-ம் ஆண்டு பட்ஜெட்டில் சேர்த்திருக்கக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக வேண்டி கண்டின்ஜென்ஸி பண்டிலிருந்து ரூபாய் 31,700 அட்வான்ஸ் செய்யப்பட்டிருக்கிறது. அது அவ்வளவு அவசரமான தேவையா? ஏறத்தாழ 20,000 பேர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் அறுவை செய்யப் போகிறோம் என்று சொல்லி இந்த மான்யம் கோரப்பட்டிருக்கிறது. இதை என் இவ்வளவு அவசரமாக புகுத்த வேண்டும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். வேண்டுமானால் 1960–61-ம் ஆண்டு பட்ஜெட்டில் இதைச் சேர்த்திருக்கலாம். "ஸ்லோ அண்டு ஸ்டடி வின்ஸ் தி ரேஸ்" என்று சொல்லுவது போல சிறிது சிறிதாக புகுத்தியிருக்கலாம். அதை விடுத்து கண்டின்ஜென்ஸி பண்டிலிருந்து ஏறத்தாழ ரூபாய் 31,700 நாம் செலவிடுவது அவ்வளவு உசிதம் அல்ல. அதோடுகூட கிராமப்புறங்களில் இந்தக் குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை புகுத்துவதற்காக, 207 சமுதாய நலத் திட்ட பிளாக்குகளில், ஒவ்வொன்றிலும் 10 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து, போர்டு உறுப்பினர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அதை டார்ஜெட்டாக வைத்து, 10 பேர்கள் உறுப்பினர்கள் இருந்தால் அந்த கிராமத்தில் 10 பேர்கள் அறுவை செய்துகொள்ளவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். கிராமப்புறத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை புகுத்துவதற்காக "டோகன் கிராண்டாக" ரூபாய் 100 கேட்டிருக்கிறார்கள்.

**(Sri M. Jagannathan in the Chair)**

இம்மாதிரி அறுவைசெய்து கொள்ளும் நபர் ஒன்றுக்கு ரூபாய் 30 அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டு, அந்தப் பொறுப்பை ஊராட்சி மன்றங்களே முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஊராட்சி மன்றங்களுக்கு மற்ற செலவுகளுக்கே பணம் இல்லாதபொழுது அவர்கள் இதற்காக முதலில் செலவழித்துவிட்டு பிறகு சர்க்காரிடம் கேட்டு வாங்கிக்கொள்ளலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள் அப்படியில்லாமல் பஞ்சாயத்து போர்டுகளிடம் அதற்கு வேண்டிய

23rd March 1960] [Sri P. S. Chinnadurai]

செலவினங்களைச் செய்திருப்பதற்கு அறிகுறியாகாது. உண்மையிலேயே சரியாகத் திட்டமிடவில்லை, செலவுகள் சரியானபடி கண்காணிக்கப்படவில்லை, அந்தந்தச் செலவினங்கள், அந்தந்தக் காலகட்டத்திலே ஏற்படும் காரியங்களைப் பொருத்து நடந்து வந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது, எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்த உபமான்யக் கோரிக்கையில் பல செலவினங்கள் ஒவ்வொரு இலாகாவிலும் பொதுவாக அதிகப்படியான நபர்கள் ஊழியர்கள், நியமிக்கப்பட்டது பற்றியதே. ஏற்கெனவே இதைப்பற்றி பட்ஜட் பொது விவாதத்தின் போது நான் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறேன். அரசாங்கம் சிக்கனம் செய்வதாகச் சொல்லி, கடந்த இரண்டு ஆண்டுகளாக உபமான்யக் கோரிக்கைகள் மூலமும், பட்ஜட்டில் அதிகமாக ஒதுக்கியும், வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கும் போதும் இருந்து வந்திருக்கின்றன. இதற்கொரு விளக்கமும் காணோம். இந்த உபமான்யக் கோரிக்கையை எடுத்துக்கொண்டாலும், எந்த இலாகாவிலும், அடிஷனல் ஸ்டாப் மூலமான அதிகச் செலவினங்களே. ஒவ்வொரு இலாகாவிலும், அதிகப்படியான ஊழியர்களை புதிய புதிய பதவிகளை ஏற்படுத்துவதால், இந்த அரசாங்கம் நிர்வாகத் துறையில் சிக்கனம் செய்ய முடியவில்லை. அப்படியானால், எந்த வகையில் சிக்கனம் செய்யப் போகிறார்கள் என்று கனம் நிதியமைச்சரவர்கள் பதிலில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பரம்பிக்குளத்திட்ட சம்பந்தமாக, பத்திரிகைச் செய்திகள் பிரகாரம், நம் அரசாங்கம் அஸ்திவாரக் கல் நாட்டுவதாக இருந்தார்கள், ஏதோ காரணம் பற்றி அது தாமதப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. பத்திரிகைச் செய்திகளையும், கேரள ராச்சிய சட்டசபையில் கேள்விகளுக்குப் பதில் அளித்திருப்பதையும் வைத்துப் பார்த்தால், இரண்டு ராச்சிய எஞ்ஜினியர்களும் உடனடியாகப் பரிசீலனை செய்யாமல், பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருப்பதைப் பார்த்தால் தாமதமாவது தெரிகிறது. இரு ராச்சிய அரசாங்கங்களும் உடன்பாட்டை அடைந்து அவர்கள் அங்கீகாரத்தைப் பெற வேண்டியது அவசியம். நம் ராச்சியம் அஸ்திவாரக் கல் நாட்ட ஏற்பாடுகள் செய்த காலத்தில் கேரள ராச்சியத்தையும் கலந்து கொண்டார்களா என்பதைச் சொன்னால், உண்மையற்ற பிரசாரங்களுக்கு இடமில்லாமல் போகும். அம்மாதிரி உண்மையற்ற பிரசாரங்களைத் தவிர்க்க நம் அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. பரம்பிக்குளம் திட்டம் சம்பந்தப்பட்டவரையில் கேரள ராச்சியம் என்ன நிலையில் இருக்கிறது ? அஸ்திவாரக் கல் நாட்டு விழா சம்பந்தமாக அவர்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் நம் ராச்சிய சபையிலே ஒரு அறிக்கை மூலம் தெரிவித்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனென்றால், கேரள கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு அரசாங்கமும் தங்கள் எஞ்ஜினியர்களைக் கொண்டு மேற்கொண்டு பரிசீலனை செய்து, கேரள சர்க்கார் உடன்படக்கூடிய ஒத்துக் கொள்ள கூடிய உடன்பாட்டைக் காணவேண்டும். இன்றேல், பெரும் கிளர்ச்சி செய்வோம் என்று கம்யூனிஸ்ட் கட்சி கவுன்சில் தீர்மானம் போட்டு அந்த சர்க்காருக்கு நோட்டீஸ் கொடுத்து இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்திலும் கம்யூனிஸ்ட் கட்சி தான் தடை செய்கிறது என்ற அபிப்பிராயம் பரவலாக இருக்கிறது. இரண்டு சர்க்கார் எஞ்ஜினியர்களும் ஏற்கெனவே டில்லியில் ஒத்துக் கொண்டு ஏற்றுக்கொண்டு இப்பொழுது பின்னுக்குப் போகக்கூடிய நிலையிருக்கிறதா ? கம்யூனிஸ்ட் கட்சி யானாலும் சரி, வேறு எந்தக் கட்சி 10 a
யானாலும் சரி, அத்தகைய கிளர்ச்சியைத் தொடங்குவதாக இருந்தால், எஞ்ஜினியர்கள் ஏற்றுக் கொண்டதை கேரள சர்க்கார் ஏற்றுக் கொள்ளச் சொல்லி வற்புறுத்த வேண்டியது நம் கடமை ; அதை நம் சர்க்கார் செய்திருக்கிறார்களா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி பலவகையான சந்தேகங்கள் எல்லாம் எழுகின்றன. கேரள அரசாங்கமும்

படுகிறது. இந்த உபமான்ய கோரிக்கையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால் அமராவதி திட்டத்தில் 17, 18-வது மதகு கள் அமைத்து இன்னும் சரியானபடி கிளை வாய்க்கால்களை வெட்டிவிட்டால் தாராபுரம் தாலூக்காவில் பாசன வசதி அற்று இருக்கின்ற 2,500 ஏக்கர் நிலமும் பயன்பெறும். இந்தப் பாசன வசதிகள் செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நேரத்தில் அதைக் குறிப்பிடு வது மிகவும் பொருத்தமாகும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் கடந்த பல மாதங்களாக இந்த திட்டம் தாமதப்பட்டிருக்கிறது. எதனால் தாமதப்பட்டு வருகிறது என்று தெரியவில்லை.

கிராமாந்திர குடித் தண்ணீர் திட்டத்திற்கு உபமான்ய கோரிக்கையில் சில தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமாந்திர குடிதண்ணீர் சம்பந்தமாக பல முக்கியமான பிரச்னைகள் விடப்பட்டிருக்கின்றன. அவைகள் கவனிக்கப் படவில்லை. இந்த உபமான்யக் கோரிக்கையிலாவது இது இடம் பெறுமா என்று பார்த்தேன். இது இடம் பெறவில்லை. பல்லடம், காங்கேயம் போன்ற பல முக்கியமான இடங்களில்கூட போதுமான குடிதண்ணீர் வசதி செய்யப்படவில்லை. சின்னச் சின்ன கிராமங்களிலே வசதி செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சருக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லையோ நமக்குத் தெரியாது. அங்கெல்லாம் குடிதண்ணீர் வசதி செய்யப்பட வில்லை. அதை ஏன் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**The Hon. Sri P. KAKKAN** : கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதிக்கு நானே போயிருக்கிறேன். அந்த வட்டாரத்தில் உள்ள குறைகளை கவனித்து இருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**Sri P. S. CHINNADURAI** : இன்னும் கொஞ்சம் அதிகமாக கவனிக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பல்லடம் முக்கியமான தாலூக்கா தலைநகரம், காங்கேயம் முக்கியமான நகரம். அப்படிப்பட்ட நகரங்களில் நல்ல குடி தண்ணீர் சப்ளை ஏற்படச் செய்ய வேண்டுமென்று பல காலமாக வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு வேண்டிய தொகையை உபமான்யக் கோரிக்கையில் சேர்த்திருந் தால் இதை ஆதரிக்கக்கூடிய நிலைமை எனக்கு இருக்குமே. அதற்காக வாவது செய்து கொடுத்தார்களா? வருகின்ற இந்த பட்ஜெட்டிலேயாவது ஒதுக்கி இருக்கிறார்களா என்று பார்த்தால், ஒதுக்கப்படவில்லை. பல்லடம், காங்கேயம் போன்ற முக்கியமான பகுதிகளுக்கு சரியான முறையில் குடி தண்ணீர் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசாங் கத்தை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

உபமான்யக் கோரிக்கையில் விசித்திரமான செலவைப் பார்க்கிறேன். உதகையில் இருக்கும் ராஜ்பவனில் எலெக்ட்ரிக் லிப்ட் வைப்பதற்கு சில ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அங்கே வைக்கப்படும் இந்த லிப்ட் 12 மாதங்களுக்கு உபயோகப்படப்போகிறதா? இல்லையே. வருஷத்தில் ஒரு மாதம், இரண்டு மாதங்கள் கூட கவர்னர் பெருமான் அங்கு தங்குவது இல்லையே. அப்படியிருக்கும்போது எலெக்ட்ரிக் லிப்ட் இல்லாவிட்டால் என்ன? இதற்கெல்லாம் பணம் செலவிடவேண்டுமா? பல்லடத்திற்கும் காங்கேயத்திற்கும் தண்ணீர் வேண்டுமென்றால் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் உதகையிலுள்ள ராஜ்பவனில் லிப்ட் வைப்ப தற்கு 53 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று எண்ணுகிறார்கள். வருஷத் திற்கு இரண்டு மாதங்கள் பொதுவாக வைத்துக்கொண்டாலும் கூட, அதற்குள் எத்தனை தடவை கவர்னர் பெருமான் அவர்கள் லிப்ட் மூலமாக போய் வருவார்கள்? இதை நன்றாக நினைத்துப் பார்க்க வேண்டும். ஐம்பது, அறுபது தடவை போகலாம். இதற்காக ஏன் இவ்வளவு செலவு செய்யவேண்டும்? இவ்வளவு அவசரமாக உபமான்யக் கோரிக்கை கொண்டுவந்து செலவழிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? கவர்னர் பெருமான் அவர்களே அதை விரும்பி இருக்க மாட்டார்களே. நம் முடைய அமைச்சர்கள் கவர்னருக்கு ரொம்ப சௌகர்யம் பண்ணுவதாக



நினைத்துக்கொண்டு அதைச் செய்கிறார்கள் என்று நான் சந்தேகப்படு கிறேன். வெளிநாட்டிலே இருந்து வருகிறவர்கள் நம்முடைய ஆடம்பரத் தைக் காட்டுவதற்காகவும் அப்படி செய்கின்றார்களோ? அப்படியெல்லாம் நம்முடைய அமைச்சர்கள் ஆடம்பரத்தை விரும்புகிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. அப்படியிருக்க ஏன் இந்த செலவு? நாம் பிறரைப் பார்த்துப் பழகிக்கொண்டிருக்கவேண்டாம். வேறு நல்ல பழக்கங்களை நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

இம்மாதிரி ஆடம்பர செலவுகளை செய்வதற்கு பதிலாக நல்ல குடி தண்ணீர் வசதியையும் ஆஸ்பத்திரி வசதிகளையும் பல்லடத்தில் ஏற்படுத்த லாம். பல்லடத்திலுள்ள ஆஸ்பத்திரியை அரசாங்கம் எடுத்துக்கொண்டு பூர்த்திசெய்யவேண்டும் என்று பலமுறை கேட்டிருக்கிறேன். ஒன்றும் செய்யப் படவில்லை. அந்த ஆஸ்பத்திரியைச் சுற்றிலும் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. அங்கே பல்லாயிரக் கணக்கான மக்கள் வசிக்கிறார்கள். போதுமான ஆஸ்பத்திரி வசதியில்லை. தண்ணீர் வசதியும் இல்லை. கேட் டால் பணம் இல்லை என்கிறார்கள். இந்த நிலையில் உதகையில் இருக்கும் ராஜ்பவனில் எலெக்ட்ரிக் லிப்ட் வைக்கிறார்கள் என்றால் என் மனம் என்ன பாடுபடும்? என்ன பாடுபடும் என்பதை நான் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. கனம் அமைச்சருக்கு கற்பனைத் திறன் இருக்கிறது. என்னுடைய மனம் எந்த நிலைமையில் இருக்கும் என்பதை அவர்களுடைய உணரும் திறமையைக்கொண்டு தெரிந்துகொள்வார்கள் என்று நம்பு கிறேன். திட்ட செலவு சம்பந்தப்பட்டவைகளை, மூலதனச் செலவு சம்பந்தப் பட்டவைகளை அவைகளை நான் வரவேற்கிறேன். இன்னும் சற்று அதிகமாக இருந்தாலும்கூட நிச்சயமாக வரவேற்க வேண்டிய பகுதிகள் என்று கூறி, அப்படிப்பட்ட பகுதிகளை வரவேற்று, செய்யத் தவறிய விஷயங்களுக்கு நான் வருத்தத்தை தெரிவிக்கிறேன். அதிகப்படியாக ஊழியர்களை ஏற்படுத்தி யிருக்கும் புதிய பதவிகளைப் பற்றிய செலவை நான் ஏற்றுக்கொள்வதற் கில்லை, அந்தப் பகுதியை எதிர்க்கிறேன், என்று சொல்லி என் வார்த் தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Mr. Chairman, Sir, with regard to the Supplementary Demands placed before the House for further expenditure during the year 1959–60, I would like to make a few observations.

Before doing so, I wish to state, I am very sorry to note that the Hon. the Finance Minister is not in his seat. Even though another Hon. Minister may be here to take note of the points, still it is not the same thing as the Hon. Finance Minister himself sitting here and hearing what the Opposition Members have got to say on these various Demands. Another important thing is. . .

**The Hon. Sri P. KAKKAN** : The Hon. the Finance Minister is attending the other House to answer questions.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Why have simultaneous sittings? Then this becomes a farce.

Another important point is that none of the officials of the Finance Department is here. Now only the Under Secretary, Finance Department, has come. Are we to take it that all these discussions and debates are taken as mere mockery? Are we simply to come and speak and take our allowances and salaries and go on crying? Are we to understand that our crying is only something like crying in the wilderness? This is a very serious matter which has to be taken into consideration by the Hon. Leader

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [23rd March 1960

of the House. When the Hon. the Finance Minister comes and and replies to the discussions. I hope he will reply to this point also.

In regard to the Supplementary Demands I would like to say that the Governments of the pre-Independence days used to come only once before the House in a year asking for supplementary grants and that too was very rare. Now we find that the Finance Minister is coming up at every sitting of the Assembly asking for some additional grant or other. That shows that the Finance Department is not exercising proper scrutiny or check over the accounts and expenditure of the other departments. This is a very sorry state of affairs and should be considered in all seriousness. This also indicates that the Finance Department is indiscriminately sanctioning all new service scheme and also schemes which can afford to wait. I do not know what the urgency of the scheme is. I wish proper budgeting is done at least from the next year onwards. On page 21 of the Budget memorandum I find provision made for creating extra staff in the Revenue Department at the taluk level for the purpose of sanctioning loans. Now after the different Development Blocks have come into existence, I would like to know whether the Tahsildars of the Taluks have adequate work with regard to sanctioning of loans. Could they not find sufficient time to scrutinise the loan applications and disburse the amounts then and there? Is there need for creating special staff for sanctioning loans? I find some posts have already been created for the scrutiny and sanction of loans but still there is inordinate delay in sanctioning loans. And the ryots are not satisfied. As was pointed out by me the other day during the general discussion on the Budget for 1960-61 some of the loan applications have been sanctiond long after the parties have left the world. That is the position even after the creation of these Block Developments. Therefore I would like to know whether there is any need to appoint more staff for sanctioning loans. I hope Government will consider this point in all seriousness.

One of the very eminent retired I.C.S. Officer, an ex-Member of the Board of Revenue, Sri M. V. Subramaniam, was asked to go into the re-organisation of the districts and suggest ways and means to improve the administration in the best manner possible. Sir, committees and conferences are held now and then but their recommendations are put in cold storage. I do not know what has become of the recommendations of some of the important Committees.

Then, Sir, with regard to Police, allowance to the time of nearly Rs. 8 lakhs are being sanctioned. That is one important item. In this connection, reference has been made to the holding of municipal elections. When the municipal elections are going to be held, could have been foreseen. They could have foreseen all these things and included all these items in the regular budget. I do not know why the Hon. Minister should come forward now for fresh sanction, as if this is an unexpected item of expenditure.



23rd March 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

Then, Sir, as regards Education, I do not know why they are spending a lot of money on education. It is, of course, a primary thing. But I want to know whether they are having a phased programme in districts, and whether they are going to have any control over these district boards which are manned by Collectors. Do they specificaly ask the Collectors to spend so much money? In certain cases there is over-spending and in certain other cases there is under-spending. So, there seems to be no phased programme so far as districts are concerned. I wish that the Government should evolve a clear? out policy so far as education is concerned and see that the amount is spent properly and justify in areas where it is absolutely needed.

With regard to Co-operation, we find that the Government have now come forward for sanction of some additional staff. Is there any need for any additional staff especially after audit of this department has been separated from the regular department? What is the work of the Deputy Registrar now? Do they have adequate work even after the separation of the audit? That is a point for serious consideration. Further, they have now sanctioned some jeeps. Where is the necessity for jeeps in the Co-operative Departments? What is the urgency and should the Government spend so much of money over this department for the provision of jeeps? My submission is that there is absolutely no need for jeeps in this department. Even granting that there is need for jeeps, the departmental people must be asked to meet the running cost of jeeps and the Government should give them only jeeps. If they do it, there will be some control over expenditure on jeeps. That is also a point for consideration.

So far as Agriculture Department is concerned, there have been too many technical posts. There should be some decentralisation and technical officers should not be centred round in one place but should be spread over in different places. Even though they are technical persons, they should be given some more additional work by givng them additional charge of other departments. By doing so, we will be able to minimise our expenditure to some extent.

Then coming to the Industries Department, there are too many items and for want of time I do not propose to dilate upon them but I would like to mention about the Khadi Department. We hear a lot about irregular expenditure and misappropriation and so on. The Government have now appointed one of the senior-most officers to go into the accounts of this department. My submission is that there should be a monthly and periodical check-up and the expenditure should be very strictly controlled by the departmental officer or the accounts officers who will go into the whole question. By doing so, a lot of wastage could be minimised and there would not be over-spending and irregularities in the Khadi Deparment also can be avoided.

With regard to the Harijan Welfare Department, every time the cost of establishment is going up and even now the Govern-

ment are now coming forward for sanction of large sums of extra expenditude. We find that the Harijan Welfare Department has not been functioning very well. There has been a lot of irregular expenditure. My submission is that the department should be decentralised. The Director of Harijan Welfare should be empowered only to sanction the amount but the Collector should be asked to distribute the money. For instance, in the matter of scholarships, we find that there is a lot of expenditure during February or March even though applications are taken up for scrutiny early in July or August, with the result the amount is not spent in time and so many candidates got disappointed. Therefore, my submission is that the Director of Harijan Welfare should be empowered only to scrutinise applications and the Collectors should be requested to go into the whole question and distribute the amount districtwar. Also, I submit that there is no need for additional staff.

Regarding Road Transport, there was much discussion yesterday. I want to emphasis only one thing. We find that profit is getting reduced every year even though collections are going up, without any corresponding increase in the amenities to passengers. As I stated yesterday, I wish to repeat now also that the peak-hour problem should be looked into. Otherwise, the public may get disappointed and they may think that the Government are not competent to maintain the Transport Department well. So, when the profit is getting reduced and side by side when the expenditure is going up, it is a very serious matter which the Government should look into in all earnestness.

(Mr Speaker in the chair)

Regarding survey and settlements, progress is very slow even with some special staff. So many officers have been appointed but still the work is going on in a snail-like pace. Unless these things are pushed through as expeditiously as possible., there would not be conterment especialy among the people in the ex-zamind areas. The ryots in Ex-zamin areas have applied for loans a number of years ago but they have not been given any loans with the result that they are getting disappointed.

Sir, I now come to the metric system. An officer of the rank of Collector has been appointed and he is touring the whole State. Is there any need for an officer of the rank of Collectors to go round the whole State? Of course, only four districts have taken up the introduction of this system, but I wish to know whether this has been effectively enforced and whether the regular Revenue Department with the Collector as the District head, cannot enforce this system and whether there is any need for a Special Officer to enforce all these things?

Then, Sir, I come to establishment relating to the Labour Department. Here also, we find that the establishment is going up as in the other departments. For enforcing the Catering Establishments Act and other things, they have come forward for sanction of additional staff. I want to know whether these things



cannot wait and whether the regular staff cannot do this work just as they have been doing all these days. So, I do not see any justification for any additional staff.

So also with regard to drinking water-supply facilities. So far as water-supply to urban and rural areas are concerned, the Governmnet should concentrate more attention on this aspect of the matter because this is a very important national problem and it should be given top priority. When we have got to spend on so many other important and urgent things like this it is not right that we should go on spending as we please. I am sure the Hon. Minister for Finance with all his experience will try to exercise some control over these things and see that proper budgeting is done.

MR. SPEAKER : I want to clarify a small point raised by the hon. the Leader of the Opposition. The Hon. the Finance Minister took my permission to go to the Upper House to answer questions at 10 o'clock. We had put in three hon. Members in the list of speakers who would participate in the general discussion. But unfortunately when the hon. Member Sri Chinnadurai finished his speech all the three hon. Members whose names were given to me were not in their seats. So the Chairman was forced to call the hon. the Leader of the Opposition to speak. If the three hon. Members who had expressed a desire to participate in the debate were in the house, they would have been called and the discussion would have continued for another half an hour, the Hon. the Finance Minister would have come back and then hon. the Leader of the Opposition would have had no compliant whatever.

My only request to the hon. Member is, hereafter when Members give their names, they should be in their seats to participate in the debate. In this case it is because they absented themselves from the House at that time, the duration of the debate was shorter than expected and the Hon. the Finance Minister who had gone to the Upper House with my permission to answer questions could not be here and the hon. the Leader of the Opposition not finding him here got a little bit upset. I don't want to blame anybody in this connection. There is still plenty of time. If the House so desires I will ask the three hon. Members who had given their names to speak only with the rider that hereafter at least hon. Members who give their names must be present in the House when their names are called. Otherwise they will not get a chance to speak. I will call other hon. Members.

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, I do not know what happened between the Hon. the Speaker and the Hon. the Leader of the House. The general complaint, the talk in the lobby is this. My only submission is that if the Hon. Minister in charge is not present when the debate is going on, the Members get discouraged and they do not take interest. It might be said that some colleagues of the Hon. Minister in charge are taking note of the points made during the debate. Still that is

not sufficient encouragement to hon. Members to take effective part in the discussions. That is all the submission which I wish to make.

Sir, I have been telling the Hon. the Leader of the House that it would be better that the meetings of the Council are held in the evenings so that some Members of the Assembly may have the opportunity to go and watch the proceedings there. If the meetings of the Assembly and the Council are held simultaneously, Members of either House do not get the opportunity of watching the proceedings of the other House. That is also another submission which I wish to make.

Mr. SPEAKER : As I said I am explaining the circumstances that existed today, and which led to the incidents today. I am not aware of any other incident about which the hon. the Leader of the Opposition spoke. If there had been complaints in the lobby, if the hon. the Leader of the Opposition had brought them to my notice then and there, I would have looked into them or passed them on to the Hon. the Leader of the House. Regarding the other suggestion made by the hon. the Leader of the Opposition, I will pass it on to the Hon. the Chairman of the Council for his consideration because obviously I have no control over the calling of the mettings of the Council. I will convey the desire of the hon. the Leader of the Opposition to the Hon. Chairman.

I will now call Sri Shanmugham to speak.

Sri K. VINAYAKAM : On a point of order, Sir. The Chair was pleased to explain the absence of the Hon. the Finance Minister when the hon. the Leader of the Opposition was speaking. The Chair, I believe, observed that two or three hon. Members who were on the list were not in their seats and if they had been in the House the debate would have continued properly and by that time the Leader of the House would have returned and he would been there to answer or listen to the speech of the hon. the Leader of the Opposition. Sir, does it mean that the other hon. Members who are listed to speak, are less in importance compared to the hon. the Leader of the Opposition and that when the hon. the Leader of the Opposition speaks, the presence of the Hon. the Leader of the House is necessary and his presence is not necessary when the other hon. Members are on their legs? Is that the convention that we are establishing in the House?

Mr. SPEAKER : The hon. Member is saying words which the Speaker never said. The Speaker made no distinction between the hon. the Leader of the Opposition and the other hon. Members of the House. The Hon. Minister must be here when any hon. Member speaks.

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir.

Mr. SPEAKER : I was only saying that hon. Members who gave their names must be in their seats when called. That applies to the hon. Member Sri Vinayakam also.



*Sri P. U. SHANMUGHAM : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மேற்கொண்டு ஆகியிருக்கிற செலவிற்காக இம்மாமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற துணை மான்யக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதிலே நான் பொதுவாக இப்போது பேச விரும்புவது பஞ்ச நிவாரண வேலைக்காக ஒதுக்கப்பட்ட பணத்தைப் பற்றிய செய்தி. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள, களம்பூர் தொகுதியைச் சேர்ந்த அண்ணாமலை அவர்கள் இந்த மன்றத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் பல பகுதிகளில் பஞ்சம் இருப்பதாகத் தெரிவித்து, நிவாரண வேலைகளுக்காகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று இங்கு வேண்டுகோள் விடுத்தார். அப்போது விவசாயத்துறைப் பகுதியிலிருந்து மன்றத்தில் நிதி அமைச்சராக இருக்கிற வட ஆற்காடு மாவட்ட அமைச்சர் அவர்கள், "வட ஆற்காடு மாவட்டத்தில் பஞ்சம் எங்கும் கிடையாது, வேண்டுமென்றால் நிவாரண வேலைக்குப் பணம் ஒதுக்குகிறேன்" என்று குறிப்பிட்டார். களம்பூர் தொகுதியைச் சேர்ந்த அண்ணாமலை அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது பதிலுரை ஆற்றும்போது நிவாரண வேலைக்குப் பணம் ஒதுக்குவதாகச் சொல்லி, வட ஆற்காடு மாவட்டத்திற்கு பஞ்ச நிவாரண வேலைகளுக்காக ரூ. 1,50,000 முதன் முறை ஒதுக்கினார்கள். ஒதுக்கிய தொகையைப் பற்றி மீண்டும் இந்த மன்றத்திலே நண்பர் அண்ணாமலை புகார் கிளப்பிப் பேசினார்கள். அவர்கள் குறிப்பிட்டார்கள், ஒதுக்கப்பட்ட 1,50,000 ரூபாயை மந்திரியவர் தொகுதியிலேயே செலவழிக்கிறார்களே தவிர, வேறு இடங்களில் ஒன்றும் செய்யவில்லை என்று ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்கள். அப்போது பதிலுரையாற்றும் முறையில் அமைச்சர் அவர்கள் பேசும் போது எங்கே பஞ்சம் இருக்கிறதோ எங்கு வேலைகளுக்கு அவசியம் ஏற்படுகிறதோ அங்கு தான் செலவழிக்கப்படுகிறதே தவிர, தொகுதியைப் பொறுத்து அல்ல என்று குறிப்பிட்டார்கள். ஆனால் உண்மை நிலை என்ன என்று கேட்டால் மற்ற தொகுதிகளில் பஞ்சம் இருந்தும்கூட, தேவை இருந்தும் கூட, வசதியில்லாத நிலையில் கிராம மக்கள் இருந்தும் கூட, பொதுவாக வட ஆற்காடு மாவட்டத்திற்கென்று பணம் ஒதுக்கியிருந்தும் கூட, வேறு தொகுதிகளில் ஒன்றும் செய்யப்படவில்லை என்று நான் தெரிவிப்படுகிறேன். அங்குள்ள வட்டார உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய உத்தியோக உயர்வைக் கருதி இப்படிச் செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது. பிற தொகுதிகளில் ஒரு சல்லிக் காசும் செலவழிக்கப்படாததன் காரணம் என்ன என்பது புரியவில்லை. அது மட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலேயே செலவு செய்தாலும் கூட, இதிலே மற்றொரு சங்கடம் இருக்கிறது என்று சர்க்காருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இதன் பேரில் விடப்பட்டிருக்கிற காண்டிராக்டுகள் அத்தனையும் எந்த பி.டபிள்யூ.டி. காண்டிராக்டர்களுக்கும் விடப்படவில்லை அல்லது லைசென்ஸ் இல்லாதவர்களின் கீழ் வேலை செய்யக்கூடிய காண்டிராக்டர்களுக்கும் விடப்படவில்லை, தனிப்பட்ட ஆட்களுக்கு பிரியப்படி விட்டிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டை இந்த நேரத்தில் சாட்டாமல் இருக்க முடியாது. அப்படிக் கொடுக்கப்பட்ட தனிப்பட்ட ஆள் யார் என்று கேட்டால், என்னால் பகிரங்கமாகச் சொல்ல முடியும், மந்திரியாருடைய உறவினர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். கிராமப்புறப் பாதைகள் 60 அடி அகலம் இருக்க வேண்டுமென்று அரசாங்க உத்திரவு இருக்கிறது. சிறு பாதைகள் 60 அடி அகலம் இருக்க வேண்டுமென்ற அவசியம் இருக்க முடியாது. அறுபது அடி தேவையில்லை. அந்த உத்தரவை ரத்து செய்து 40 அடி இருந்தால் போதும் என்று மறு உத்திரவு போட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். நான் இப்போது காண்டிராக்ட் பற்றிச் சொல்லிய புகாரை சர்க்கார் விசாரித்தால் என்னால் முடிந்த வரையில் சர்க்காருக்குப் புலன்கொடுக்க முடியும் என்று நம்புகிறேன். ஒரு காரியத்திற்காக பணம் ஒதுக்கும்போது ஒரு தனிப்பட்ட தொகுதியில் செலவு செய்வது முறையாகாது. அப்படி இருந்தாலும், பிற தொகுதிகளில் செலவு செய்வதில்லை என்று முடிவு எடுத்திருக்கக் கூடாது. அந்த உத்தியோகஸ்தர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள். அதற்கு சர்க்கார் பொறுப்பாளி அல்ல என்று அமைச்சர் சொன்னாலும் இதற்கு சர்க்கார்தான் பொறுப்பாளி. பஞ்ச நிவாரணத்திற்கென்று ஒரு

மாவட்டத்திற்காக அதிக நிதி ஒதுக்கி தூரப்பிரதேசத்தில் மட்டும் செலவு செய்திருப்பது முறையல்ல என்று கூறி எனது ஆழ்ந்த கண்டனத்தை இந்த சர்க்காருக்குத் தெரிவித்து எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI K. R. NALLASIVAM :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, பவானி, அமராவதி, புள்ளம்பாடி, மேட்டூர் வாய்க்கால் போன்ற அணைகளையோ அல்லது வாய்க்கால்களையோ எந்தப் பகுதியிலே கட்டினாலும் அல்லது வெட்டினாலும் அந்தப் பகுதியிலே உடனடியாக மின்சாரம் கொடுக்காமல் தடை செய்யப்பட்டு வருகிறது. அதன் மூலமாக அங்கு ஏற்பட வேண்டிய அபிவிருத்தி பூர்ணமாக ஏற்படுவதும் கிடையாது. ஒரு நீர்ப்பாசன திட்டத்தின் பலனை பூர்ணமாக அடையவேண்டுமானால், எப்போது ஒரு திட்டம் ஆரம்பிக்கப்படுகிறதோ உடனே அங்கெல்லாம் மின்சாரம் கிடைக்கக்கூடிய ஏற்பாட்டை சர்க்கார் எந்தவிதமான தயக்கமுமில்லாமல் செய்யவேண்டும். அந்தப் பகுதியில் மின்சாரம் கொடுத்தால், பிரதான கால்வாயின் தண்ணீர் போக்கு வரத்து பாதிக்கும் என்று கொடுப்பதில்லை. கீழ் பவானித் திட்டத்தில் இதுவரையில் தடை இருந்தது. இப்போதுதான் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அமராவதி, புள்ளம்பாடி போன்ற திட்டங்களின் கீழ் வரக்கூடிய பிரதேசங்களிலும் மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு இனி வரப்போகும் திட்டங்களின் கீழுள்ள பிரதேசங்களிலும் மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது வெட்டக்கூடிய கால்வாய்களிலும், அணைக்கட்டுத் திட்டங்களிலும் 6 மாதங்களுக்குத் தான் தண்ணீர் வருகிறது. மீதி 6 மாத காலமும் கிணற்றை நம்பித்தான் விவசாயம் செய்யவேண்டும். அவர்கள் மின்சார பம்புசெட்டுகளைப் பயன்படுத்தமுடியுமானால், நிச்சயமாக, வாய்க்காலில் தண்ணீர் வந்தால் எவ்வளவு விவசாயம் செய்ய முடியுமோ அவ்வளவு விவசாயம் செய்து உணவு தானியப் பற்றாக்குறையைப் போக்க அவர்கள் உதவுவார்கள். எனவே சர்க்கார் இதை மிக முக்கியமாகக் கருதி, அங்கே மின்சாரம் கொடுக்கும் விஷயத்தில் மிகத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். பாசனப் பிரதேசங்களில் இன்னும் மின்சாரம் வரவில்லை. எனவே விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும் அது பின்தங்கிய பிரதேசமாக இருக்கிறது. அங்கே பாசனத்திற்குத் தண்ணீர் விடப்பட்ட பிறகு ஒருபோதும் மின்சாரம் வருவதற்குத் தடை இருக்கக் கூடாது. அந்த முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

10-30 a.m.

அடுத்தபடியாக காவேரியில் ஒரு சிக்கலான பிரச்னை இருக்கிறது. அந்தப் பிரதேசத்தில், குறிப்பாக சேலம் ஜில்லாவில் மக்கள் நூற்றுக் கணக்கான பெர்மிட்டுகள் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்குரிய பெர்மிட்டுகள் கொடுக்கப்படாததால் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பெர்மிட் கிடைக்காததால் மின்சாரம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இதை இந்த சபையில் பல கனம் அங்கத்தினர்கள் பல ஆண்டு காலமாகச் சொல்லிவருகிறார்கள். இதையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கீழ் பவானிப் பிரதேசத்தில் தண்ணீர் வந்ததுடன் சில அசௌகரியங்களும் வந்திருக்கின்றன. ஒரு நன்மை வரும்போது ஒரு தீமையும் வருவது சகஜம். அதேபோல, அங்கே தண்ணீர் வந்த பிறகு, ரோடுகள் நடமாடுவதற்கும் லாயக்கில்லாமல் போய்விட்டன. கனம் நிதி அமைச்சர் கூட வந்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அங்கே வந்து பாலங்கள் முதலியவைகளை அவர் பார்த்துச் சென்றார் என்று நினைக்கிறேன். அங்கே ரோடுகளில் அதிகமாகத் தண்ணீர் வருகிறது. அந்த ரோடுகளைக் கடக்க முடியவில்லை. அந்த ரோடுகள் வண்டி போவதற்குக் கூட லாயக்கற்றவையாக இருக்கின்றன. இதுபற்றி என்ஜினியர்களிடம் விசாரித்தால், "டெண்டர்கள் கோரினால் டெண்டர்கள் கூட வருவதில்லை. காரணம் இங்கே கூலி அதிகம் கேட்கிறார்கள். எனவே இங்கே காண்ட்ராக்டர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது" என்று அவர்கள் சொல்லுகிறார்கள். எனவே அங்கே அதிகமாக கூலி கொடுக்க வேண்டியிருந்தால்



அதற்கேற்ப அதிகமான பணத்தை அப்பகுதிக்கு ஒதுக்கி அங்கே ரோடுகளை நன்றாக அமைத்துத் தர வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். அங்கே என்ஜினியர்கள் செய்துள்ள தவறின் காரணமாகவும் ரோடுகள் மோசமான நிலைமை அடைகின்றன. அதாவது, அவர்கள் பாலங்களில் சிறு குழாய்களைப் போட்டிருக்கிறார்கள். மழை வரும்போது, மழை அவைகளை அடித்துக்கொண்டு போய்விடுகிறது. அந்தக் குழாய்களை எடுத்துவிட்டு வேறு நல்ல குழாய்களைப் போடவேண்டும். அந்தக் குழாய்களைக் கம்பெனிகளுக்கே திருப்பி அனுப்ப முடியுமானால் திருப்பி அனுப்பிவிடலாம். எப்படியாவது வேறு குழாய்களைப் போட்டு அங்கே மராமத்து செய்யவேண்டும். அங்கே தண்ணீர் அதிகமாக வரும்போது மனிதர்கள் போவது மிகவும் சங்கடமாக இருக்கிறது. அங்கே நல்ல மதகுகளை வைத்தும், பாலங்களைப் புதுப்பித்தும் மராமத்து செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI D. S. AUTHIMOOLAM :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த உப மானிய கோரிக்கையில் கோரப்பட்டிருக்கும் தொகை ரொம்பவும் பெரிய தொகையாக இருக்கிறது. இதை ஒரு "பாட் ப்ரிஸிடெண்ட்" **(Bad precedent)** என்று கூடச் சொல்கிறார்கள். நான் அதிகமாக எதையும் கவனிக்க முடியவில்லை. இரவில் இரண்டு மணி வரையில் விழித்திருந்தேன். என்னை அதிகம் பாதிக்காவிட்டாலும் சுருக்கமாக ஒரு "கிளான்ஸ்" **(glance)** பார்த்ததில் சில விஷயங்கள் எனக்குத் தெரிகின்றன. முக்கியமாக, சமுதாய நலத் திட்டத்திற்கென ஏராளமான தொகை உபமானியமாகக் கோரப்பட்டிருக்கிறது. அது கிட்டத்தட்ட 84 லட்ச ரூபாய். சமுதாய நலத் திட்டத்தில் சிக்கனமான முறைகளைக் கையாள அரசாங்கம் முன்வர வேண்டும். அந்திட்டத்தில் எத்தனையோ வீணான வீண்செலவுகள் இருக்கின்றன. **(S.E.O.)** எஸ்.ஈ.ஓ. என்று ஒரு போஸ்ட் இருக்கிறது. ஸோஷியல் வெல்பேர் ஓர்க்கர் என்று ஒரு உத்தியோகம் இருக்கிறது. இவைகளுக்குச் செய்யும் செலவுகள் எல்லாம் வீண் செலவுகள். ஒரு ஸோஷியல் வெல்பேர் வொர்க்கரின் வேலைகள் என்ன என்பது திட்டவட்டமாக இல்லை. சிலரை, பழைய காங்கிரஸ் தியாகிகள் என்ற காரணத்தால் நியமித்து அவர்களுக்கு உதவவேண்டியிருக்கிறது. ஆனால் அதற்காக வேலை தெரியாதவர்களையெல்லாம் ஸோஷியல் வெல்பேர் ஓர்க்கர்ஸாக நியமித்தால், அவர்களிடமிருந்து கண்டிப்பாக வேலை வாங்கக்கூடியவர்களாக டெவலப்மெண்ட் அதிகாரிகளும் இல்லை. இவர்கள் மாதம் 90, 100 ரூபாய் வாங்கிக்கொண்டு ஊரைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரியும்; ஒரு சமுதாய நலத் திட்ட ஆபீஸில் ஸ்டோன் **(Stone deaf)** டெஃப்பாக இருக்கும் ஒருவர் ஸோஷியல் வெல்பேர் ஓர்க்கராக இருக்கிறார். அவரிடம் ஆபீசர் எப்படிப் பேசுவார், அவர் எப்படி வேலை செய்வார் என்று எனக்குத் தெரியவில்லை. சில சமயங்களில் கட்சிப் பாதுகாப்பில் பணம் விரயமாகிறது. மேலும், காதி எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்று ஒரு போஸ்ட் இருக்கிறது. அவர்களுடைய சம்பளம் பி.டி.ஓ.க்களின் சம்பளத்தைவிடக் கூட 10, 20 ரூபாய் அதிகமாக இருக்குமோ என்று நினைக்கிறேன். ஸ்பின்னிங் ஆர்கனைஸர்கள் தான் உருப்படியாக வேலை செய்கிறார்கள். அவர்களுக்குமேல் காதி எக்ஸ்டென்ஷன் ஆபீசர் என்ற அதிகாரி ஏன் இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. ஸ்பின்னிங் ஆர்கனைசர்ஸ் முதலியவர்களை பி.டி.ஓ.க்களே மேற்பார்வை செய்யலாம் என்பது என் அபிப்பிராயம்.

மற்றபடி, ரெவின்யூ துறையில் ஏராளமான படிச் செலவை **(T. A.)** நாம் பார்க்கிறோம். படிச் செலவு கிட்டத்தட்ட 3,93,100 ரூபாயாக இருக்கிறது. அதற்கு மேலே இரண்டு, மூன்று ஐடெம்களுக்கு மொத்தமாக 1,80,400 ரூபாய் என்று கண்டிருக்கிறது. இந்தமாதிரி இவ்வளவு அதிகமான படிச் செலவுகள் ஏன் ஏற்படுகின்றன? பச்சையான தமிழில் சொல்லப்போனால், ஆபீசர்கள் அடிக்கடி காக்காய் பிடித்து தங்களை சௌகரியமான இடங்களுக்கு மாற்றிக்கொள்வதற்காகப் பெற்ற ஆர்டர்களின் விளைவாக ஏற்பட்ட படிச் செலவுகள் இவை என்று நான் நினைக்கிறேன். ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். திருநெல்வேலி

ஜில்லாவில் சேரன்மாதேவி ஸப்-டிவிஷன் சப்-கலெக்டர் உண்டு. முன்பு பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்திலெல்லாம், அங்கே குறைந்த பட்சம் மூன்று வருஷங்களுக்கு ஒரு முறைதான் புது ஆபீசர் வருவார். எப்போதுமே ஒரு ஐ.ஸி.எஸ். ஆபீசர் இருந்து நிர்வாகம் நடத்தும் ஸப்-டிவிஷன் அது. இப்போது சுமார் மூன்று வருட காலத்திற்குள் அங்கே ஸப்-கலெக்டர்கள் வந்து விட்டனர். இப்போது அங்கே 7-வது ஸப்-கலெக்டர் இருக்கிறார். மூன்று மாதத்திற்கு ஒரு புது ஸப்-கலெக்டர் வருகிறார். அங்கே டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டின் கீழ் (Tenants Protection Act) தொடரப்பட்டுள்ள பல கேஸ்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆபீசரும் பெரிய பண்டிலாக ஆயிரம் கேஸ்கள் வைத்திருக்கிறார்கள். கிராமத்திலுள்ள விவசாயிகளின் கேஸ்களோ காலாகாலத்தில் பைசலாகாததால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். பலதுளி பெருவெள்ளம் என்பது போல பலவிதங்களில் செய்யப்படும் செலவுகள் காரணமாக சர்க்காருக்கு ஏராளமான செலவுகள் ஏற்பட்டிருக்கின்றன. திறமையாகக் காரியங்கள் செய்வதற்கு, அகில இந்தியாவிலும், மற்ற ராஜ்யங்களைவிட இந்த சென்னை ராஜ்யத்தில்தான் வாய்ப்புகள் அதிகம். காரணம், நல்ல திறமையான அரசாங்க அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். மந்திரிகள் அந்த அதிகாரிகளுடைய உதவியுடன் கொஞ்சம் கவனத்துடனும், சிரத்தையுடனும் காரியங்களைச்செய்ய முற்பட்டால், ஆஸ்டெரிடி ட்ரைவில் (Austerity Drive) இங்கே 10 கோடி ரூபாய்க்கு சிக்கனத்தை ஏற்படுத்தலாம். மேலும், மந்திரிகளின் சுற்றுப்பிரயாணங்களிலும் படிச் செலவுகள் ஜாஸ்தி ஆகியிருப்பதைக்காண்கிறேன். மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது ஆபீசர்களும் கூடப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுவதால் கூடுதல் செலவாகிறது. அதோடு மந்திரிகளும் சுற்றுப்பிரயாணத்தை ஓரளவு குறைத்துக்கொள்ளவேண்டும். மந்திரிகளுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்ய எலக்‌ஷன் நேரம் ஒரு வாய்ப்பாக இருக்கிறது. அந்த நேரங்களில் அந்தந்த ஜில்லாக்களிலுள்ள நிலைமைகளையும் ஓரளவு புரிந்துகொண்டு வந்து விடலாம். அதற்கெல்லாம் எப்போது சட்டசபை கலைகிறது என்று பார்த்து, உடனே சுற்றுப்பிரயாணம் போகலாம் என்ற முறையில் சில பேர் மனோபாவம் இருந்துகொண்டிருக்கிறது. ஜனங்கள் கொதித்துக்கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில் இந்தமாதிரி வீண் செலவு செய்யக்கூடாது. ஆகவே, பொதுத் துறையில் நல்ல கவனத்தைச் செலுத்த வேண்டும். ரெவின்யூ போர்டு ஆபீசர் எம். வி. சுப்பிரமணியம் அவர்கள் சில இலாகாகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று ஒரு ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறார்கள். எது வந்தாலும் "இம்ப்ளிமென்டேஷன்" (implementation) செய்வது இல்லையென்று இருந்தால் அதில் அர்த்தமில்லை. நல்ல அரசாங்கமாக இருந்தால் நிர்வாக இயந்திரத்தில் நல்ல முறையில் பணத்தைச் செலவு செய்து திறமையான நிர்வாகத்தை, சிக்கனமாகச் செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**Sri. V. SANKARAN :** On a point of order, Sir; முன்னாலே பேசிய அங்கத்தினர் அவர்கள் 2 மணி வரை விழித்திருந்ததாகச் சொன்னார்கள். சீட்டு ஆடுவதற்காக விழித்திருப்பதால் அதிகப் பணந்தான் விரயம்......

**Mr. SPEAKER :** இதைப்பற்றி அவரைத் தனியாகக் கேட்டுக்கொள்ளுங்கள். It is not a point of order.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போதும், சின்னதுரை பேசிய ஒரு சிறு பகுதிக்குப் பிறகும் நான் இங்கு இல்லாமல் போனதற்காக வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குக் காரணம் இன்னொரு சபையும் 10 மணிக்குக் கூட வேண்டுமென்ற ஏற்பாடு இருந்ததுதான். இதிலே கூடியவரை இரண்டு சபைகளும் ஒரேகாலத்தில் கூடாமல் இருக்கவேண்டுமென்ற முறையில்தான் ஏற்பாடு செய்திருந்தோம். நாம் எப்படி நம் சபையைத் தவிர்க்க முடியாமல் மத்தியானத்திலும் வைத்துக் கொள்ளுகிறோமோ, அதேபோல் அவர்கள் இன்றும் அதிகமான பேர்





பேசவேண்டியிருக்கும் காரணத்தினால் காலையிலேயே தங்கள் சபையையும் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது தவிர்க்க முடியாமல் ஏற்பட்டது. இதில், எதிர்க்கட்சித் தலைவருடைய பேச்சைக் கேட்க வேண்டாமென்ற காரணத்தினாலோ, வேறு அங்கத்தினர்கள் பேசுவதிலே அக்கறை இல்லையென்ற காரணத்தினாலோ நான் இங்கு இல்லாமல் போகவில்லை என்பதைத் நான் மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாக, இந்த உப மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசியவர்கள், மூன்றாவது தடவையாக இந்த உப மானியக் கோரிக்கை இந்த வருஷம் வருகிறது என்று கூறினார்கள். தொகை அதிகமாக இருக்கிறது என்பதை வைத்துக் கொண்டு ஒரு சமயம் நிர்வாகச் செலவு அதிகமாக, ஊதாரித்தனமாகப் போய்விட்டதோ என்று நினைக்கிறார்கள். இன்னொரு பக்கம், பட்ஜட் போடத் தெரியாத காரணத்தினால்தான் இந்த உப மானியக் கோரிக்கை வருகிறதோ என்று இன்னும் சிலர் நினைக்கிறார்கள். இது இரண்டும் சரியான கருத்தல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நாம் திட்டங்களை எடுத்துக் கொண்டு நிறைவேற்றுவதில் ஒரு மாறுதலைச் செய்திருக்கிறோம் என்பதை இந்த ஆண்டிலே மட்டுமல்ல ; சென்ற இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே நான் இந்தச் சபையில் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். இப்போது, பட்ஜட் போடக்கூடிய காலத்தில் தயாராக இருக்கும் பணிகளை மட்டுந்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் பல பணிகள் ஒரு வருஷத்திற்கு ஒத்திப் போட வேண்டிய நிலைமைக்கு வந்து விடுகின்றன. பட்ஜட் தயார் செய்கின்ற காலத்தில் என்னென்ன திட்டங்கள் தயாராக இருக்கின்றனவோ, அவைகளை மட்டுந்தான் பட்ஜட்டிலே சேர்க்கிறோம். வருஷத்திற்கு மத்தியிலே புதிய திட்டங்கள் தயாராகி விடுமானால் அதை அடுத்த வருஷத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சுலபமாக ஒத்திப் போட்டு விடலாம். அதற்குப் பதிலாக இப்போது ஏற்றுக் கொண்டிருக்கும் முறை, எந்த திட்டம் தயாரானாலும் அந்தப் பணி அத்தியாவசியமான பணியாக இருக்குமானால் அதற்கு உத்திரவு பெற்று அந்தப் பணியை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று வகுத்திருக்கிறோம். அதன் காரணமாகத்தான் இன்றைக்கு நம் ராஜ்யத்திலே திட்டமிட்ட அளவுக்கு மட்டுமல்ல ; திட்டமிட்ட அளவுக்கு மேலும் காரியங்களை நிறைவேற்றி இருக்கிறோம். இந்த மாதிரிப் புதிய முறைகளை வகுத்துக் கொண்டதால்தான் இவ்வாறு காரியங்களைச் செய்வது சாத்தியமாகி இருக்கிறது. இதற்கு ஏதோ ஒரு விதி விலக்காக இருக்க வேண்டுமென்ற முறையிலே எடுத்துக் கொண்டால் விரிவாகப் பல காரியங்களைச் செய்ய முடியாமல் போகிறது. ஆகவே, இன்றைக்குப் பல புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக உபமானியக் கோரிக்கை கோராமல் பட்ஜட் காலத்திலேயே அவைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் ; இல்லாவிட்டால் வேண்டாம் என்று சொன்னால், பல புதிய திட்டங்கள் நிறைவேறுவதற்குத் தாமதம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சில கோரிக்கைகள் வந்திருப்பது புதிய திட்டங்களுக்காக அல்ல. கணக்கு வைப்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதற்குச் சில விதிகள் இருக்கின்றன. அதை அனுசரித்துத் தான் கணக்கு வைக்க வேண்டியிருக்கிறது. வியாபாரிகளுக்கு இதைப் பற்றி நன்றாகத் தெரியும்—அனுமத்து கணக்கு, அதிலிருந்து எந்தெந்த இனங்களுக்கு மாற்றுவது என்றிருக்கிறது. இதெல்லாம் வியாபாரிகளுக்குத் தெரியும். சில கணக்குகளை மாற்றும்போது ஒரு பக்கத்தில் இருந்து இன்னொரு பக்கத்திற்குப் போவதுதான் என்று சும்மா இருந்து விட முடியாது. ஒரு செலவு இனம் எந்தத் தலைப்பின் கீழ் ஏற்படுவதாக இருந்தாலும் அந்த இனத்திற்குத் தக்கபடி இன்னொரு இடத்தில் வரவு இருந்தாலும் கூட அந்தச் செலவினத்திற்கு மட்டும் இந்தச் சபை முன்னாலே வந்து அனுமதி பெற வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகையால் கணக்கைப் பார்க்கும் போது கோடிக் கணக்கில் அதிகமாகப் பணம் செலவழிக்கப்

படுவது போல் தென்படுகிறது. அதை வைத்துக் கொண்டு அதிகமான அளவுக்குச் செலவு ஏற்படுகிறது என்று நினைக்க வேண்டிய அவசியம் இல்லை. உதாரணமாக, ரெவின்யூ அக்கவுண்டில் கேட்டிருப்பது 9 கோடி 84 லட்சம். அதிலே வரவு இனங்கள் 5 கோடி 4 லட்சத்திற்கு இருக்கிறது. அதைக் கழித்து விட்டால் 4 கோடி 80 லட்சத்திற்குத்தான் மானியக் கோரிக்கை கேட்க வேண்டும். ஆனால் வரவினத்தைக் கழித்து விட்டு செலவினத்திற்கு மட்டும் அநுமதி கோருவது சட்டத்திற்கு முரணாக இருப்பதால் முழுத் தொகைக்கும் மானியம் கோர வேண்டியிருக்கிறது. அதே மாதிரி காபிடல் அக்கவுண்டை எடுத்துக் கொண்டால் 17 கோடி 74 லட்சம் கோரி இந்தச் சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே வரவு இனங்கள் 15 கோடி 17 லட்சத்திற்கு இருக்கிறது. ஆகையால் நிகரச்செலவுத் தொகை 2 கோடி 57 லட்சந்தான். இருந்தாலும் கூட இந்த முறைப் பிரகாரம் 17 கோடி 74 லட்சத்திற்கும் மானியம் கோரி இந்தச் சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது. லோன்ஸ் அண்டு அட்வான்ஸ்—கடன் கொடுத்து திருப்பி வாங்குவது, அந்த வருஷத்திற்குள்ளாகவே திருப்பி வாங்குவது, கஜானாவில் இருந்து தொகையை எடுப்பது என்று சொன்னாலும் சட்டப் பிரகாரம் ஒதுக்கியிருக்கும் தொகை அந்த அளவுக்கு இருந்தால் தான் எடுத்துக் கொள்ள முடியும். கடன் கொடுக்கும் இனங்களுக்கு 12 கோடி 25 லட்சம் தொகை. அதிலே வரவு இனம் 9 கோடி 94 லட்சம். பாக்கி இருப்பது 2 கோடி 31 லட்சந்தான். ஆகவே, இந்தக் கணக்கு வைக்கக் கூடிய முறைகளின் காரணமாக தொகை அதிகப் பட்டிருக்கிறது என்பதைப்பற்றி இந்த உப மானியக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்ற காலத்திலெல்லாம் குறிப்பிட்டிருக்கிறேன். நாம் இப்போது ஒரு பக்கத்தில் வரவு வைக்கிறோம்; இன்னொரு பக்கத்தில் செலவு எழுதுகிறோம். நேரடியாகச் செலவு எழுதுவது என்றில்லை. இருந்த போதிலும்கூட இரண்டு தடவை மானியம் கோர வேண்டியிருக்கிறது. ஆகையால், இது கொஞ்சம் தொல்லையாகத் தோற்றமளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல கனம் அங்கத்தினர்கள், நிர்வாகச் சிக்கனம் ஏற்படவில்லை என்பதைக் குறித்து உப மான்யக் கோரிக்கையிலே பேசும்போது குறிப்பிட்டார்கள். உப மான்ய கோரிக்கையில் மட்டும் அல்ல; பொதுவாக் நிர்வாகமுறையிலே இந்தச் சிக்கனம் இருக்கவேண்டும் என்பதைப் பற்றி ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால், உடனடியாக எந்த அளவுக்குச் சிக்கனம் செய்ய முடியும் என்பதைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது, அதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைப் பார்க்கின்றோம்.

இன்றைக்கு முக்கியமாக, சிக்கனம் ஏற்படவேண்டுமென்று சொன்னால், ஒரே காரியத்தில் பல இடங்களில் பரிசீலனை செய்து உத்தரவு போடவேண்டியதாக இருக்கிறது. ஆகையால், இன்றைக்கு அது மாதிரி உத்தரவு போடக்கூடிய இடங்களை கீழே நிர்ணயித்து விடுவோமானால், அது செக்ரடேரியட்டுக்கு வந்தோ, மந்திரிகள் அளவுக்கு வந்தோ, ஹெட் ஆப் டிபார்ட்மென்ட் அளவுக்கு வந்தோ மறு முறையும் பரிசீலனை செய்வதற்கு அவசியம் இருக்காது. நமது வேலை செய்யும் அளவு குறைகிறது. செக்ரடேரியட்டுக்கு வரும் file சர்க்காரிலே உத்தரவு போடவேண்டுமென்றும், இது விஷயத்திலே மந்திரிகள் உத்தரவு போடவேண்டுமென்றும், அந்த அளவிலே தான் செக்ரடேரியட்டுக்கு வருகின்றது. இது அவசியம் இல்லை என்று சொல்லும்போது file களின் எண்ணிக்கை குறைகிறது. அப்பொழுது இங்கு நாம் எந்த அளவு உத்தியோகஸ்தர்களை நீக்கவேண்டுமென்பதையும் கவனித்துக் குறைக்கலாம்.

இதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். முன்பெல்லாம் ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்களை மாற்றுவதென்றாலுங்கூட, சர்க்காருக்கு வந்து, மந்திரிகளுடைய உத்தரவு பெற்றுத்தான் மாற்றவேண்டுமென்ற முறை இருந்தது. ஆகையால், முதலில் ரெவினியூ போர்டில் அதைப் பரிசீலனை செய்து, யார் யாரை மாற்றுவது என்று முடிவு செய்கிறார்கள். அந்த file இங்கே செக்ரடேரியட்டுக்கு வருகிறது. இங்கே இருக்கின்றவர்கள் முதலிலே பரிசீலனை செய்து பார்த்து, மாற்றல் செய்திருப்பது சரிய



வேறுவிதமாக மாற்றலாமா என்று பரிசீலனை செய்து கடைசியில் மந்திரியைக் கேட்டு உத்தரவு போடுவதுண்டு. போர்டிலே செய்த வேலையைத் திரும்பவும் இங்கு செய்யவேண்டியதாக இருக்கிறது. இது அவசியமா என்று பார்த்தால், மாற்றங்கள் செய்வதற்குச் சர்க்காரிலே வந்து புதிதாகக் கண்டுபிடிக்க ஒன்றும் இல்லை. ரெவினியூ போர்டு அளவிலே அந்த வேலையை நிறுத்திவிடலாம் என்னும்போது, செக்ரடேரியட்டிலே இதற்காகச் செய்துவந்த வேலை குறைய ஆரம்பிக்கிறது. இது போன்ற பல காரியங்கள் செக்ரடேரியட் அளவிலே வந்து, சர்க்கார் அளவிலே, மந்திரிகள் அளவிலே வந்து உத்தரவு போடவேண்டும் என்பதைக் குறைத்துக்கொண்டு, அந்தந்த ஹெட்ஸ் ஆப் டிபார்ட்மெண்ட் அல்லது கலெக்டர் அளவிலே இதுமாதிரி பல இடங்களிலே முடிவு செய்து விடலாம் என்று ஏற்படும்போது வேலைக் குறைவு ஏற்படுகிறது. இந்த முறையிலே சிக்கனத்தை வளர்க்கவேண்டும் என்பதற்காகப் போட்ட அதிகாரிகள் ஒவ்வொரு இலாகாவையும் பற்றி பரிசீலனை செய்து, இம்மாதிரி அவசியம் இல்லாமல், பல இடங்களில் போய்க்கொண்டிருக்கும் வேலைகளை நிறுத்தி விடலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே இன்றைக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

இதிலே உடனடியாக சிக்கனம் ஏற்படுவது நமக்குத் தெரிய முடியாது. காலப் போக்கிலே, ஒரு வருஷம், இரண்டு வருஷம் நாம் நடைமுறைக்குக் கொண்டுவந்ததற்குப் பிற்பாடு தான், வேலை கணிசமாகக் குறையும்போது தான், மூன்று குமாஸ்தாக்கள் தேவையில்லை, இரண்டு குமாஸ்தாக்கள் இருந்தால் போதும், நான்கு செக்ஷன்கள் தேவையில்லை, மூன்று செக்ஷன்கள் போதும் என்று வகையில் முடிவு செய்து கணிசமாகக் குறைக்க முடியும். ஆகையால்தான், இன்றைக்கு நாம் நடவடிக்கை எடுத்திருப்பதெல்லாம் வேலைக் குறைவு ஏற்படுவதற்காகத்தான். வேலைக் குறைவு கணிசமாக ஏற்படும்போது, எந்த அளவுக்கு அதற்காக இருக்கும் அதிகாரிகளைக் குறைக்க முடியும் என்று ஒரு வருஷத்திற்குப் பிற்பாடு, இரண்டு வருஷங்களுக்குப் பிற்பாடு அல்லது அவ்வப்போது குறைவு கணிசமாகக் காணும்போது, நிர்வாக அதிகாரிகளைக் குறைப்பதற்கு அவ்வப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை, உடனடியாக வெட்டியெடுத்துவிடும் முறை அல்ல; சிறிது சிறிதாகக் குறைக்கக்கூடிய முறையில்தான் இந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியதாக இருக்கிறது. அது சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அந்த அறிக்கையின் திசையிலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன்மேல் இந்த வருஷம் கூட சில சிக்கனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், பெரிய அளவிலே சிக்கனம் போகப் போகத்தான் ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பல புதிய அதிகாரிகளை நியமிப்பதற்கும் இதிலே அனுமதி கோரப்பட்டிருக்கிறது. புதிய பணிகள், புதிய திட்டங்கள் எடுத்துக்கொள்ளும் போது, அதற்கான அளவு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கவில்லையென்றால், அந்தப் பணம் விரயமாகப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. இன்றைக்கு இரண்டு விஷயங்களை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டியதாக இருக்கிறது. அதிகமாக, அவசியம் இல்லாத உத்தியோகஸ்தர்களை நியமிக்காமல் இருப்பதும் அவசியம். அதே முறையில் அவசியம் இருக்கின்ற அளவு உத்தியோகஸ்தர்களை நியமிப்பதும் அவசியமாக இருக்கிறது. அதைக் குறைத்துக்கொண்டால், ஏதோ கொஞ்ச அளவுக்குச் சிக்கனம் செய்யப் போய், செலவு செய்கின்ற முறையிலே பல குறைகள் ஏற்பட்டு, பின்னால் பல கஷ்டங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இன்றைக்கு அது ஒரு பெரிய பிரச்னையாகவே போய்விட்டது. உதாரணம் சொல்லவேண்டுமானால், கடன் வழங்கும் முறையைச் சொல்லலாம். குடியானவர்களுக்குப் பரவலாக ஜில்லாக்களிலிருக்கும் பல கிராமங்களிலே கடன் வழங்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தோம். கோடிக் கணக்கிலே கடன் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தோம். அப்பொழுது என்ன முறை ஏற்பட்டதென்றால், கடன் வழங்குவதற்கென்றே தனியாக உத்தியோகஸ்தர்கள் நியமித்து, கடன் வழங்கினவுடனே அவர்களை எடுத்துவிட

வேண்டும், அந்த உத்தியோகத்தைக் கலைத்துவிடவேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தோம்—செல்வைக் குறைப்பதற்கு. ஆனால், என்ன நடந்தது ? கடன் வழங்கினதற்குக் கணக்கு சரியாக வைத்திருக்கவேண்டும், பின்னால் கடனைத் திருப்பி வசூல் செய்வதற்குப் பொறுப்பு என்ற நிலைமையில்லாத காரணத்தால், கணக்கெல்லாம் சரியான முறையில் இல்லை என்பது இரண்டு வருஷங்களுக்குப் பிற்பாடு நம்முடைய கவனத்திற்கு வந்தது. இரண்டு வருஷம், மூன்று வருஷம் கெட்டுப் போன முறையைச் சரி செய்யவேண்டுமென்றால், முன்பு செலவழித்ததைவிட அதிகமாகச் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. கணக்கைச் சரி செய்வதென்றால் பிரும்மப் பிரயத்தனமாக இருக்கிறது. இப்பொழுது அதற்காக நடவடிக்கை எடுத்து, பழைய கணக்கைச் சரி செய்யவேண்டும். இனிமேல் கடன் வழங்கும்போது, யார் கடன் வழங்கினார்களோ, அவர்களே கணக்கையும் பூர்த்தி செய்யவேண்டும். அவசரம் அவசரமாக அந்த செக்ஷனைக் கலைத்துவிட்டு, செலவைக் குறைக்கவேண்டுமென்னும்போது, பின்னால், அதன் மூலமாகச் சிக்கல் ஏற்படுவதைப் பார்க்கிறோம்.

அதுமாதிரி, இன்றைக்குப் பல இனங்களில் செலவாகும்போது, அவ்வப்போது தணிக்கை இருக்குமானால், அதில் ஏற்படும் குற்றங்குறைகள் குறைவதைப் பார்க்கிறோம். "கன்கரன்ட் ஆடிட்" வேண்டுமென்று சில இடங்களில் முடிவு செய்கிறோம். முதலிலேயே புதிய உத்தியோகஸ்தர்களை நியமிக்கும்போது நிர்வாகச் செலவு அதிகம் ஆகிறது என்றாலும்கூட, சில இடங்களில் கன்கரண்ட் ஆடிட் இருந்தால்தான் தவறுகள் ஏற்படாமல் இருக்கும் என்ற காரணத்தால் ஒரேயடியாகக் குறைத்துவிடவேண்டுமென்று சொல்வதும் தவறு. அல்லது, அதிகமாக அதிகாரிகள் வேண்டுமென்று நியமிப்பதும் தவறு ; ஒவ்வொரு திட்டத்தையும் அவ்வப்போது பரிசீலனை செய்து, அந்தந்த நிலைமைக்கு ஏற்ற பிரகாரம் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது என்று தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையிலே சர்க்கார் ஒவ்வொரு திட்டத்தையும் ஒவ்வொரு இலாகாவையும் பரிசீலனை செய்து, எந்த அளவுக்கு குறைக்கவேண்டுமோ அந்த அளவுக்குக் குறைக்கவேண்டிய இடங்களில் குறைப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். சில இடங்களில் இப்பொழுது இருப்பதைவிட இன்னும் அதிகமாக அதிகாரிகளைப் போடவேண்டிய நிலைமையும் இருக்கிறது. அதற்கான ஒரு ஏற்பாட்டையும் செய்து வருகின்றோம். பொதுவாகப் பார்க்கும்போது, போகப் போக, இதன் மூலமாகச் சிக்கனங்கள் ஏற்பட்டு, நிர்வாகச் செலவில் குறைவு ஏற்படும் என்பதைத் தெரிவித்கொள்ளுகின்றேன்.

பத்து கோடி, 12 கோடி ரூபாய் சம்பளத்திற்காகச் செலவு செய்யப்படுகிறது என்று பொதுவாகப் பார்த்துவிட்டு, "அதிகம்" என்று மொத்தக் கணக்காகச் சொல்கிறோம். மற்ற இடங்களிலே எப்படிச் செலவாகிறது, மற்ற ராஜ்யங்களிலே எந்த அளவு நிர்வாகச் செலவு இருக்கிறது, மொத்தச் செலவிலே எந்த அளவு சம்பளத்திற்காகக் கொடுக்கப்படுகிறது என்று ஒப்பிடும்போது நாம் அதிமாகச் செலவழிக்கிறோமா, குறைவாகச் செலவழிக்கிறோமா என்று பார்க்கலாம். அல்லது, நம்முடைய நாட்டை மட்டும் வைத்துக்கொள்ளலாமா, மற்ற நாடுகளிலும் இந்தச் செலவு எவ்வாறு இருக்கிறது என்பதை வைத்துக்கொள்ளலாமா என்று நாம் ஓரளவு பரிசீலனை செய்து பார்க்கலாம். அப்படிப் பரிசீலனை செய்யும் முறையில், இப்பொழுது "**Economic Classification**" என்ற புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே இம்மாதிரி நிர்வாகத்திற்கு எந்த அளவு செலவிடப்படுகிறது என்பதைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் மட்டுமல்லாமல், மற்ற ராஜ்யங்களுக்கும் கொடுப்பார்களானால், நாம் அதிகமாகச் செலவழிக்கிறோமா, குறைவாக செலவழிக்கிறோமா என்பது தெரியவரும். இப்போது மத்திய சர்க்காரில் மட்டுந்தான் அந்த வெளியீடு இருக்கிறது. இருந்தாலுங் கூட உலகத்திலே இருக்கும் மற்ற நாடுகளில் நிர்வாகத்திற்குச் சம்பளமாக எவ்வளவு செலவழிக்கிறார்கள், நமது அரசாங்கத்திலே எவ்வளவு செலவழிக்கிறார்கள் என்பதைப் பொதுவாக வைத்துக்கொண்டு பார்க்கும்போது, நம்முடைய ராஜ்யத்திலே நிர்வாகச் சம்பளச் செலவு அதிகம் என்று சொல்வதற்



கில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. இதன் காரணத்தால் சிக்கனங்கள் ஏற்படாமல் நின்றுவிடும் என்று யாரும் சந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லை. எங்கெங்கே சிக்கனம் செய்ய முடியுமோ அங்கெல்லாம் சிக்கனம் செய்வதற்கு முயற்சிகள் செய்துகொண்டு வருகிறோம் என்பதைத் தான் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இங்கு நடக்கும் வேலைகளிலே, சர்வே அண்டு ஸெட்டில்மெண்ட் பற்றி பல மெம்பர்கள் குறிப்பிட்டார்கள். "ஆமை வேகத்தில், நத்தை வேகத்தில் போகிறது" என்று சொன்னார்கள். செட்டில்மெண்ட் என்று சொன்னாலே அதற்கு ஒரு விதி இருக்கிறது. முறை இருக்கிறது. அதை அனுசரித்துத்தான் ஆகவேண்டும். செட்டில்மெண்ட் என்றால் வருஷக்கணக்காகப் போய்கொண்டிருக்கிறதே என்று நான் கூட சில சமயங்களில் ஆத்திரப்பட்டு என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்கும் முயற்சி செய்தேன். அப்படிப் பார்க்கும்போது, செட்டில்மெண்ட் வேண்டாம், வேறு முறையை நாம் அனுசாரிக்கலாம் என்றால், அது வேறு சமாசாரம். இப்பொழுதிருக்கும் முறையை அனுசரிக்கவேண்டுமானால், இந்த வேகத்திற்கு மேல் போக முடியாது என்பது என்னுடைய கருத்து. இந்த முறையிலேயே சில பேர்கள் வேலை செய்யாமல் இருந்து தடங்கல் ஏற்பட்டிருந்தால், அதை நீக்குவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, முக்கியமாக குந்தாவைப்பற்றி நம்முடைய கம்யூனிஸ்டு 11 a.m.
கட்சித் தலைவர் ஸ்ரீ எம். கலியாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுவும் முக்கியமாக சீப் என்ஜினியர் நடந்துகொள்ளக்கூடிய விதத்தைப் பற்றி குறை கூறும் முறையிலே இங்கு பேசினார்கள்- அவர்கள் தொழிலாளிகளை நடத்துவது மிகவும் மோசமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனக்கு அதைப்பற்றிய விவரங்கள் தெரியாது. என்னைப் பொறுத்த வரையில், எனக்கு சீப் என்ஜினியரைத் தெரிந்த வரையில் நம் எல்லோருடைய பாராட்டுதலுக்கும் உரியவர் அவர். நாம் பெருமைபடக்கூடிய சீப் என்ஜினியர் ஒருவர் இன்று மின்சார இலாகாவில் இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தொழிலாளிகளிடம் அவருக்கு எப்படி நடந்து கொள்ளுவது என்று தெரியவில்லை என்று சொல்லுவதற்காக ஒரு சீப் என்ஜினியரை வெளியே அனுப்பிவிட முடியாது.

**SRI M. KALYANASUNDARAM :** நான் அப்படிச்சொல்லவில்லை.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** ஐம்பத்தைந்து வயதிற்கு மேல் முறையை மாற்றிக் கொள்ளுவது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். இதை வேறு எந்த விதத்தில் செய்வது என்பது பற்றி நாம் யோசிக்கவேண்டும். அவர் அரசியல் நோக்கத்தோடு கவனிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். அதேமாதிரி தொழிலாளிகளும் அங்கு அரசியல் நோக்கத்தோடு இல்லாமல் நடந்துகொள்ள வேண்டியது அவசியம். அப்படியிருந்தால் அரசியல் நோக்கத்தோடு பார்க்கவேண்டிய அவசியமே இல்லை. ஆனால், கம்யூனிஸ்டு கட்சி நடத்தும் தொழிற் சங்கங்கள், இதிலே தாமதம் செய்யவேண்டும், தடை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் நடந்து கொண்டால், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களை ஒதுக்கி வைத்தால் தான் முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அவ்வாறு குற்றம் சாட்டுவதற்கு இல்லாத முறையில் தொழிற்சங்கங்களை கம்யூனிஸ்டு கட்சி ஏற்பாடு செய்யுமா என்பது சந்தேகம். ஏனென்றால், உண்மையிலேயே அந்தக் கட்சியினுடைய நோக்கம் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்பது அல்ல. தொழிலாளர்கள் இயக்கத்தை தங்கள் கட்சிக்கு எப்படி பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அதே நோக்கத்தோடு வேலை செய்கின்ற காரணத்தினால், இன்றைக்கு கம்யூனிஸ்டு கட்சியில் இருக்கக்கூடியவர்களை, கம்யூனிஸ்டு நடத்தக்கூடிய தொழிற் சங்கங்களைப் பற்றி கொஞ்சம் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும்போது சில அதிகாரிகள் கம்யூனிஸ்டு கட்சிக்காக வேலை செய்பவர்களை, கம்யூனிஸ்டு கட்சியில் அதிகமாகப் பங்கு எடுத்துக்கொள்ளுபவர்களை ஒதுக்கி வைக்கவேண்டும் என்று

அவர்கள் நினைப்பார்களேயானால் அதிலே தவறு ஒன்றும் இல்லை என்பது
என்னுடைய தாழ்மையான கருத்து. திரு. கலியாணசுந்தரம் அவர்கள்
வேண்டுமானால் வேறு விதமாக நினைக்கலாம்.

இன்றைக்கு நாம் கவனிக்கவேண்டியிருப்பது, குந்தா ஒரு பெரிய
திட்டம். இப்பொழுது கட்டி முடிந்திருக்கிறது. அதிலிருந்து மின்சாரம்
கிடைப்பதன் மூலம் நம் ராஜ்யத்திற்கே பெரிய வளம் ஏற்படவேண்டியிருக்
கிறது. ஆகையினாலே எந்த அளவுக்கு சீக்கிரமாக கட்டி முடித்து, அதி
லிருந்து மின்சாரம் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு நாட்டிலே வளம்
உடனடியாக ஏற்படும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். ஏதோ
சில குறைகளைச் சொல்லிக்கொண்டு அங்கு நடக்கக்கூடிய வேலைகளைத் தடை
செய்யக்கூடிய முறையில், தாமதம் செய்யக்கூடிய முறையில், யாராகிலும்
சரி, தொழிலாளர்களானாலும் சரி, வேறு எந்தக் கட்சியானாலும் சரி,
நடந்துகொண்டால், அதற்கு இந்தச் சர்க்கார் இடம் கொடுப்பதற்குத் தயாராக
இல்லை. எங்களால் கம்யூனிஸ்ட்டு கட்சியை அடக்க முடியும், முடிந்த
வரையில் அடக்குவதற்கு முயற்சி செய்தே தீருவோம், இதுமாதிரி அவர்
கள் தவறு செய்யும்போது, தடைகள் செய்யும்போது—என்பதை திட்ட
வட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல இடங்களில் தொழிற்
சங்கங்களில் அரசியல் வாதிகள் புகுந்து கொண்டு, அதை அரசியல்
காரியங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமை இல்லாமல் இருந்
தால், இம்மாதிரி பல காரியங்கள், பல வேலை நிறுத்தங்கள், இன்னும்
பல சங்கடங்கள் தொழிலில் இன்றைக்கு ஏற்படாது என்பதில் சந்தேகமே
கிடையாது. தொழிற் சங்கங்களில் அரசியல் வாதிகள் புகுந்துகொண்டு,
ஒரு கட்சி அரசாங்கம் இருக்கிறது, அந்த அரசாங்கத்திற்கு எந்தவிதமான
தடங்கல்களைச் செய்யலாம், எந்த விதமான முறையில் அவர்கள் செய்யக்
கூடிய காரியங்களுக்கு தடை செய்யலாம் என்று அவர்கள் நினைக்க
விட்டாலுங்கூட, நினைக்காமலே இதை ஆரம்பிக்கும்பொழுது பல சங்கடங்
கள் வந்துவிடுகின்றன. குறை சொல்லுவதிலே பிரயோசனம் இல்லை.
குந்தாவிலே பல நிகழ்ச்சிகள் நடப்பது எனக்குத் தெரியும். அவை
களெல்லாம் உண்மையிலேயே தொழிலாளர்கள் நன்மைக்காக அல்ல.
அங்கே கட்சி மனப்பான்மையுடன், அரசியல் நோக்குடன் பல காரியங்
கள் செய்யப்படுகின்றன என்பது என்னுடைய கருத்து. அது தவறாக
இருக்கலாம். அதை திருத்திக்கொள்ளுவதற்கான விவரங்களை திரு. கலி
யாணசுந்தரம் அவர்கள் கொடுப்பார்களேயானால் நான் திருத்திக்கொள்ளத்
தயாராக இருக்கிறேன். ஆனால் இன்றைக்கு இதை அடிப்படையாகக்
கொண்டு குந்தாவில் பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பதை நாம்
சொல்லாமல் இருக்க முடியவில்லை. இம்மாதிரி விஷயங்களைப்பற்றி நாம்
குறிப்பிடும்பொழுது, தொழிலாளர்களின் கொள்கை, தொழிற்சங்கங்களின்
கொள்கை இதைப்பற்றி நாம் குறிப்பிடும்பொழுது நாமும் எந்த முறையில்
தொழில் இயக்கத்தை நடத்துகிறோம் என்பதை மனதில் வைத்துக்கொள்ளு
வார்களேயானால், இவையெல்லாம் தவிர்க்க முடியாத விஷயங்களாகப்
போகின்றன. அந்த முறையிலே பல நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய
நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது என்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்
புகிறேன். அதற்காகத் தொழிலாளர்களுடைய நன்மையை பாதிக்கக்கூடிய
அளவில் எந்தக் காரியத்தையும் சர்க்கார் செய்யவேண்டுமென்று அர்த்த
மல்ல. தொழிலாளர்களுக்குள்ள பூரண உரிமைகளை அளித்து, அவர்
களுக்கு வேண்டிய எல்லாவிதமான சௌகரியங்களையும் செய்துகொடுக்க
வேண்டுமென்ற முறையில் தான் சர்க்காருடைய கொள்கை அமைந்
திருக்கிறது. ஆனால், தொழிலாளர்கள் வேறு வழியிலே திருப்பப்பட்டு,
தவறான வழியில் திருப்பப்பட்டு, அவர்கள் தங்களுடைய நன்மை என்ன
என்பது தெரியாமல் நடந்துகொள்ளும்பொழுது சில நடவடிக்கைகள்
எடுக்கவேண்டியது அவசியமாகிறது என்பதைத்தான் வலியுறுத்திச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்கள் தான் இந்தக் குந்தா
திட்டத்தைக் கட்டி முடித்தார்கள் என்று சொன்னார்கள். ஆம், உண்மை
யிலேயே அங்கு பணியாற்றக்கூடிய பல தொழிலாளர்கள் தங்களுடைய
உயிரைக்கூட திரணமாக நினைத்து பணியாற்றியதன் காரணமாகத்
தான் இன்றைக்கு இந்தத் திட்டம் உருவாகியிருக்கிறது. பிரதம மந்திரி



கூட "நான் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கப்போவதில்லை.
ஆரம்பித்து வைப்பதைப் பார்க்க வருகிறேன். ஒரு தொழிலாளிதான்
அதை ஆரம்பிக்கவேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார். அந்த அடிப்
படையில் ஒரு ஆண், ஒரு பெண் இரு தொழிலாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு
அவர்கள் தான் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கபோகிறார்கள்
பிரதம மந்திரி அவர்கள் முன்னிலையில். (கரகோஷம்) இதை நாங்கள்
உணராமல் இல்லை. தொழிலாளர்கள் ஆற்றக் கூடிய பணியின் காரண
மாகத் தான் பல திட்டங்கள் நிறைவேறுகின்றன என்பதைப் பற்றி
எங்களுக்கு எந்த விதத்திலும் சந்தேகம் இல்லை. மற்றவர்களுக்கு
வேண்டுமானால் சந்தேகம் இருக்கலாம். அப்படியிருக்கும் பொழுது அவர்
கள் நல்ல முறையில் பணியாற்றவேண்டும். மேலும் மேலும் திறமை
யாகப் பணியாற்றவேண்டும். உற்சாகத்தோடு பணியாற்ற வேண்டும்.
அதற்குத் தடையாக நமது நாட்டில் பல தீய சக்திகள் தோன்றியிருக்
கின்றன. அந்தத் தீய சக்திகளை ஒழிக்க வேண்டியது, நசுக்க வேண்டியது
நாட்டு நன்மைக்கு அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பரம்பிக் குளத் திட்டத்தைப் பற்றி திரு. கலியாணசுந்தரம் அவர்கள்
குறிப்பிட்டார்கள். திரு சின்னதுரை அவர்களும் குறிப்பிட்டார்கள். இதில்
சங்கடமான நிலைமை இருக்கிறது. இதிலே கம்யூனிஸ்டு கட்சிக்குப் பொது
வாக இருக்கக் கூடிய நோக்கம் என்னவென்று சொன்னால், "நாங்கள்
இருக்கக்கூடிய காலத்தில் இது சுமுகமாக நடைபெற்றது. நாம் இல்லாத
காலத்தில் இது நடைபெறவில்லை" என்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட
வேண்டுமென்பது அவர்களுடைய பொது நோக்கமாக இருந்து கொண்டி
ருக்கிறது என்பதை நான் காண்கிறேன். அது மிகவும் தவறு என்பதை திரு.
கலியாணசுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தத்
திட்டங்களெல்லாம் வந்துவிட்டால் காங்கிரஸுக்கு இன்னும் கொஞ்ச ஆதிக்
கம் வந்துவிடுமே, இது நாட்டுக்கு நன்மையாக இருந்தாலும், நாட்டு
மக்களுக்கு நன்மையாக இருந்தாலும், நம் கட்சிக்கு நல்லது இல்லையே
என்ற கருத்தை மனதில் வைத்துக் கொண்டு இன்னும் சில பேர்கள்
பேசுகிறார்கள். இந்த இரண்டும் தவறான மனப்பான்மை என்பதை நான்
இன்றைக்கு வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதிலே
எந்த விதமான சிக்கல் ஒன்றும் கிடையாது. ஏதோ கம்யூனிஸ்டு
சர்க்கார் எங்கேயோ போகிற தண்ணீரை எடுத்துக் கொடுத்துவிட முடியாது.
பரம்பிக்குளத் திட்டம் சம்பந்தப்பட்ட ஆறுகளைப் பொறுத்த மட்டில்,
அவைகள் இரண்டு ராஜ்யங்களுக்கும் சேர்ந்த நதிகள் என்பதை மனதில்
வைக்க வேண்டும். அந்தத் தண்ணீரில் நமக்கும் பங்கு இருக்கிறது.
கேரளாவுக்கும் பங்கு இருக்கிறது. எப்படி அதைப் பங்கு போட்டுக்கொள்
வது என்பதைப் பற்றித் தான் ஒரு முடிவு செய்யவேண்டியிருக்கிறது.
பங்கு போட்டதற்குப் பிற்பாடு, அந்தத் தண்ணீரை திருப்பி விடுவது
எப்படி என்பதும் முடிவுசெய்தாகவேண்டும். நாம் மேலே இருக்கக்கூடிய
காரணத்தினால், நாம் ஒரு அணை கட்டினால் கீழே இருக்கக்கூடியவர்
களுக்கு பங்கு குறைந்து விடாமல் தண்ணீர் போகக்கூடிய அளவுக்கு
ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இதைப் பொருத்த மட்டில் முன்பே
எந்த அளவுக்குத் தண்ணீரைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பதைப்
பற்றி இருக்கக் கூடிய என்ஜினியர்கள் பரிசீலனை செய்து, முடிவு எடுத்து
அப்பொழுது இருக்கக்கூடிய சர்க்காரும் இந்தத் தண்ணீர் பங்கு கொள்
வதைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதை நல்ல முறை
யிலே பரிசீலனை செய்து ஒரு உடன்பாட்டிற்கு வந்ததற்கு அன்றைக்கு
இருந்த சர்க்காருக்கு நாம் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்
கிறோம். அவர்களுக்கு நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு
கிறோம். அந்த முறையிலே எல்லாக் காரியங்களையும் நோக்கி முடிவு
செய்ய வேண்டுமென்பதுதான் நம்முடைய கருத்து. இந்தத் தண்ணீர்
பங்கு கொள்ளுதல் எங்கே அணைகள் கட்ட வேண்டும் எங்கே கால்வாய்கள்
வெட்ட வேண்டும், அந்த அணைகளிலே ஸ்லூயிஸ்கள் எங்கே கட்ட வேண்டும்
என்பதைப் பற்றி முடிவு செய்வதற்கு நாம் அதற்கான விரிவான திட்டங்
களை வகுத்துக் கேரள சர்க்காருக்கு அனுப்பியிருந்தோம். அதை அவர்கள்
பரிசீலனை செய்து, நம்முடைய முன் திட்டப் பிரகாரம் இல்லை—சில

மாறுதல்கள் செய்ய வேண்டும் என்ற மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார்கள். இது அங்கு கட்சிக் சர்க்கார் இல்லாத காலத்திலேயே ஏற்பட்டது. அங்கு ஜனாதிபதி ஆட்சி இருந்த காலத்தில் தான் ஏற்பட்டது. இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆகையினால் எந்த முறையில் இந்தத் திட்டத்தை அமைக்க வேண்டும் என்பதைப்பற்றி ஒரு முடிவு செய்ய வேண்டும் என்பதற்காக, இரண்டு பேருகளுக்குமிடையே சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. ஒரு மத்தியஸ்தராக மத்திய சர்க்கார் என்ஜினியர்களை வைத்துக்கொண்டு ஒரு முடிவு செய்யவேண்டும் என்கின்ற முறையில் அங்கு இருக்கக் கூடிய என்ஜினியர்கள் பேசி, எந்த முறையில் தண்ணீரைப் பங்குபோட்டுக் கொள்ளுவது, எந்தெந்தத் திட்டங்களை அமைக்க வேண்டும் என்பதிலே என்ஜினியர்கள் அளவிலே முடிவு ஏற்பட்டது. அம் மாதிரி முடிவு ஏற்பட்டுவிட்டதன் காரணமாக நாமும் இந்தத் திட்டத்திற்கு அஸ்திவாரக்கல் போடலாம் என்பதைப் பற்றி ஆலோசனை செய்யும் பொழுது, நாம் முதலில் நினைத்ததுகூட நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் பரம்பிகுளத் திட்டத்திற்கு அஸ்திவாரக்கல் போடுவதற்கு இந்த மாதத்தில் வரவேண்டுமென்று நினைக்கவில்லை. பிரதம மந்திரி அவர்களும் எப்ரல் மே மாதத்தில் வருவது சௌகரியமாக இருக்குமென்று எழுதியிருந்தோம்.

எப்ரல்–மே மாதத்திற்குள்ளாக சம்பந்தப்பட்ட ராஜ்யங்களோடு பேசி ஏற்பாடு செய்து விடலாம் என்று எப்ரல்—மே மாதத்தைக் குறித்து அவர்களைக் கேட்டிருந்தோம். அவர்களும் முதலில் ஒப்புக்கொண்டிருந்தார்கள். ஆனால், பிறகு அது முடியாமல் போய்விட்டது. ஏனென்றால், எப்ரல் மாதத்தில் சைனாவிலிருந்து, சீனப் பிரதமர் சூ-என்-லாய் வருவதாலும், மே மாதத்தில் பிரதம மந்திரி காமன்வெல்த் பிரதம மந்திரிகள் கான்பரன்சுக்குப் போகவேண்டியிருப்பதாலும், எப்ரல்—மே கஷ்டபடும்—ஜூன் மாதத்தில் தான் வர முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், ஜூன் முதல் அங்கு மான்சூன் மாதமாகிவிடுவதால், அப்பொழுதிருந்து 6, 7 மாதங்களுக்கு ஒன்றும் செய்வதற்கில்லை. ஆகவே, மார்ச்சு மாதத்திலேயே ஏற்பாடு செய்யலாம் என்று இருந்தோம். இதையெல்லாம் நாங்கள் வெளியிடுவதாக இல்லை. ஆனால், எப்படியோ சில பத்திரிகைகள் எங்கிருந்தோ இதைத் தெரிந்துகொண்டு, வெளியிட்டு இருந்ததால் இது பரவி விட்டது. ஏனென்றால், அஸ்திவாரக்கல் போடவேண்டியது கேரள சர்க்கார் அனுமதி பெற்றுத் தான் செய்ய வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். பரம்பிக்குளம் திட்டத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்ட வேண்டுமென்றால், அது கேரள ராஜ்யப் பகுதியில் தான் போட வேண்டும், அதற்கு அவர்கள் அனுமதியில்லாமல் போட முடியாது. ஆகவே, அவர்களுக்கு உடனடியாக எழுதினோம், அப்படி அவர்கள் மார்ச்சிலேயே செய்ய ஒத்துக்கொள்ள முடியுமா என்று. அவர்கள் வேறொன்றும் சொல்லவில்லை. "நாங்கள் இப்பொழுதுதான் மந்திரி சபை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ; பட்ஜெட் தயாரிக்க வேண்டும். அவகாசம் இல்லை, ஆகவே உடனடியாக அந்தப் பயிலைப் பார்க்கவும் அவகாசம் இல்லை. உடனடியாகப் பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறது. இதை ஒத்தி வைத்தால் நல்லது" என்று பதில் கொடுத்திருந்தார்கள். அவர்களுடைய சங்கடத்தை உணர்ந்து, அஸ்திவாரக்கல் போடுவதை ஒத்திவைத்து விடலாம் என்று கருதினோம். கம்யூனிஸ்ட் சர்க்கார் செய்த நியாயமான விஷயத்தை, இந்தச் சர்க்கார் புறக்கணித்துவிட்டார்கள். இவர்கள் ஏதோ தடை போடுகிறார்கள் என்று நினைப்பது தவறு. அப்படி விஷயங்களை அங்கத்தினர்கள் பேசிய போது, எனது இயற்கையான கோபம் வந்தது, என் நடக்கும் காரியத்தில் கல்லைப்போடுகிறார்கள் என்ற காரணத்தினால், கோபித்துக் கொண்டு விட்டேன். அது என் இயற்கைப் குறை என்று முன்னாலேயே சொன்னேன். சமீபத்தில் டெல்லியில் கேரள முதல் மந்திரியோடு பேசினேன். அவர்கள் "தாமதம் செய்ய வேண்டும் என்பது என் கருத்தல்ல" என்று சொல்லி முன்பு போன மந்திரி சபைக்கு முந்திய மந்திரி சபையைக் குறித்து பெரியார் பற்றிய விஷயம் ஐந்தே நிமிஷத்தில் தீர்த்து விடவில்லையா என்றும் குறிப்பிட்டார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இல்லாததைக் கொண்டு



வந்து கற்பனை செய்து சில நடைகளைச் செய்ய வேண்டாம் என்பதுதான்.
யாரும் இந்தப் பரம்பிக்குளத் திட்டத்தை நிறுத்த முடியாது. அது
நிறைவேறியே தீரும். அங்கத்தினர்களுக்கு ஒரு ராஜ்யத்திற்கும்
இன்னொரு ராஜ்யத்திற்கும் இடையே நடக்கும் நடவடிக்கைகளைச் சொல்ல
வேண்டியது அவசியமாகிறது. அப்படிச் சொல்லும்போது அங்கத்தினர்
களுக்குத் தெரிவிக்கும்போது அதெல்லாம் பத்திரிகைகளில் வருகிறது.
அப்படிப் பிரசுரிக்கும்போது அதைப் பார்த்தும் எதிராகக் கிளர்ச்சி
செய்யும் முறையில் .அதை நோக்கும் மனப்பான்மை சட்டசபையில்
அங்கத்திலர்கள் காட்டுவது சரியில்லை. அதை வேறுவிதமாக வேற்றுமை
தோற்றும் அளவுக்கு உபயோகிக்க முடிகிறது. அப்படியில்லாமல் அங்கத்
தினர்கள் இரண்டு ராஜ்யங்களுக்கிடையேயும் ஒரு ஒப்பந்தம் ஒற்றுமை
ஏற்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். உடனடியாக விஷய
த்தைச் சொல்லுவதால் சிக்கல்கள் வரும். விஷயங்களை மறைமுகமாகவே
வைத்திருக்கலாம் என்று நினைத்தால், அது அங்கத்தினர்கள் தெரிந்து
கொள்ளக்கூடாது என்றல்ல. இம்மாதிரி, இரண்டு ராஜ்யங்களுக்கிடையே
நடக்கும் நடவடிக்கைகள், கூடியவரையில், முடிந்த பிறகே
சொல்லுவதுதான் நல்லது என்ற கருத்தால்தான், உடனடியாகச்
சொல்லவில்லை. அப்படியில்லாவிட்டால், சில இடங்களில் சங்கடங்கள்
ஏற்படுகின்றன. ஆகவே, இந்தப் பரம்பிக்குளத் திட்டத்தைப் பொருத்த
வரையில் யாருக்கும் கவலை வேண்டியதில்லை. மாறுபட்ட எண்ணம்
இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சர்க்காருக்கு யாரும் முட்டுக்கட்டை
போட முடியாது. கம்யூனிஸ்ட் கட்சி ஏதோ முன்பு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்
தது, இப்பொழுது புதிய சர்க்கார் வந்ததும், அதில் ஏதோ தடைப்படுகிறது
என்று சொல்லுகிறார்கள் என்றால், இதிலெல்லாம், எந்த அரசியல்
கட்சியிலும் இருக்கும் சகஜமான முறைதான். இதனாலெல்லாம் பரம்பிக்
குளத் திட்டத்திற்கு நடை ஏற்படும் என்று யாரும் நினைக்கவேண்டியதில்லை.
இதைத் தவிர பல விஷயங்கள் பற்றிப் பேசப்பட்டன. அவற்றில் பல
உப மான்யக் கோரிக்கையில் சேராததும், அதற்கு புறம்பானதாகவும்
இருந்தாலும், அவைகளுக்கும் பதில் சொல்லவேண்டும் என்று சில
அங்கத்தினர்கள் கேட்டார்கள். அவைகளுக்கெல்லாம் பதில் சொல்ல
ஆரம்பித்தால், அவை இந்த விவாதத்திற்கு கொஞ்சம் புறம்பாக இருக்கும்.
ஆனாலும், அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்களை அவசியம் இருக்கும்
சமயங்களில் கவனத்தில் கொண்டு காரியங்கள் செய்யப்படும் என்று
சொல்லிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

## V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE FOR THE YEAR 1959–60.

MR. SPEAKER : Now the Hon. Minister can move Demands for Grants.

SRI M. KALYANASUNDARAM : Sir, I sugest that we shall take up Demand No. IX.

MR. SPEAKER : I have to say that the Hon. Minister will move the Demands one by one. If any hon. Member wants to move his cut motion in respect of a particuar Demand, he can do so. But I must remind the House that as per rules, at 11-30 a.m. I will apply the guillotine.

### DEMAND I—LAND REVENUE DEPARTMENT.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 12,29,600 under Demand I—Land Revenue Department.'

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 12,29,600 under Demand I—Land Revenue Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND III—STAMPS ADMINISTRATION.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 21,300 under Demand III—Stamps Administration.'

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 21,300 under Demand III—Stamps Administration.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND IV—FOREST DEPARTMENT.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 12,38,200 under Demand IV—Forest Department.'

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 12,38,200 under Demand IV—Forest Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND VII—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES—ADMINISTRATION.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 17,74,300 under Demand VII—General Sales Tax and other Taxes and Duties—Administration.'

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 17,74,300 under Demand VII—General Sales Tax and other Taxes and Duties—Administration.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND VIII—IRRIGATION.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 51,29,100 under Demand VIII—Irrigation.'



MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 51,29,100 under Demand VIII—Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 9,22,300 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff.'

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

'That the allotment of Rs. 9,22,300 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Re. 1.'

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM : அமைச்சரவர்கள் பதில் அளிக்கும் பொழுது, கொஞ்சம் கோபமாகப் பேசி விட்டேன் என்று கூறியது, அதற்கு அவர்களது அரசியல் பெருந்தன்மையைப் பாராட்டு கிறேன். அவர்கள் சொல்லுகிறார்கள், தொழிற்சங்கங்களில் அரசியல் கூடாது, மாணவர்களிடம் அரசியல் கூடாது என்று. நானும் அதை வரவேற்கிறேன். ஆனால், அதை எதிர்க்கட்சியினர் மட்டும் கையாள வேண்டும், தாங்கள் மட்டும் அரசியல் கருத்தோடு இயங்குவதென்பது தன்னுடைய பலவீனத்தைத்தான் காட்டுகிறது. அப்படிச் சொல்லும் போது அவர்கள் கோபமாகப் பேசினார்கள் ; கோபம் வருவதே பலவீனத் திற்கு ஓர் அறிகுறி. குந்தாவிலே, அரசியல் கட்சி அவர்களுக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளுவதாகச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சி, சட்ட பூர்வமான கட்சி ; அது தொழிற்சங்கங்களிலும் விவசாயச் சங்கங்களிலும் ஈடுபட்டு வேலை செய்கிறது. அதற்காக அவர்கள் பேரில் குறைகளைக் காண்பது சரியல்ல. அவர்கள் பேசிய போது, கம்யூனிஸ்ட் கட்சி எந்த விஷயத்தில் தவருக நடந்திருக்கிறது என்று எடுத்துக் காட்டியிருந்தால், அதற்கு எந்தப் பரிகாரத்திற்கும் உட்படுகிறோம் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சொல்ல விரும்புகிறேன். எந்த ஒரு திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, குந்தாவில் நடத்தக்கூடிய போராட்டங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது வேறு எந்த இடத்தில் நடக்கக்கூடிய தொழிற்சங்க போராட்டங்களாக இருந்தாலும் சரி, ஸ்ட்ரைக்காக இருந்தாலும் சரி, அவைகள் எல்லாம் கம்யூனிஸ்டுகள் பொறுப்பேற்றுக் கஷ்டப்பட்டு நடத்துகிறார்கள் என்ற காரணத்திற்காக, இவைகள் எல்லாம் அரசியல் காரணங்களுக்காகத்தான் நடத்தப்படுகின்றன, தொழிலாளர்களுடைய நலன்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டுதான் நடத்தப்பட்டுகின்றன என்று சொன்னால் அது அமைச்சர் அவர்கள் எதிர்கட்சிகளின் மீது என்ன நோக்கம் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் தெரிவிக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஏதோ இம்மாதிரி யெல்லாம் நடந்துக் கொண்டிருந்தால் அவைகளை எல்லாம் அல்லது அதில் ஈடுபட்டிருப் பவர்களை எல்லாம் அடக்குவோம், ஒடுக்குவோம், நசுக்குவோம் என்றெல்லாம் பேசுவதைப் பார்த்தால், நாங்கள் என்ன மூட்டைப்பூச்சிகளா நசுக்கு வதற்கு என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது, நன்றாக நசுக் குங்கள் சுவாமி என்றுதான் இவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER:** தயவு செய்து கனம் அங்கத்தினரை தங்கள் வெட்டுப் பிரேரணையின் மீது பேசவேண்டும். வெட்டுப் பிரேரணையில் இதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.... இவையெல்லாம் இந்த தலைப்பின் கீழ் எவ்வாறு பொருந்தும் ?

**SRI M. KALYANASUNDARAM:** இந்தத் தலைப்பில், ஹெட்ஸ் ஆப் ஸ்டேட்ஸ், மினிஸ்டர்ஸ், ஹெட்க்வார்டர்ஸ் ஸ்டாப் என்று இருக்கிறது. மினிஸ்டர்ஸ் என்ற தலைப்பின் கீழ்தான் இதைப்பேசுகிறேன். ......

**MR. SPEAKER:** இதற்காக நீங்கள் இரண்டாவது ஒரு பிரசங்கம் செய்வது சரியல்ல....

**SRI M. KALYANASUNDARAM:** இதைப்பற்றி மட்டும் பேசுகிறேன்..

**MR. SPEAKER:** அப்படி பேசியிருந்தால் நான் வாயை மூடிக்கொண்டு இருந்திருப்பேனே . . .

**SRI M. KALYANASUNDARAM:** அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமானால் அவர்களுடைய வாதங்களை எல்லாம் பாதுகாத்துக் கொள்வதற்கு வழி இருக்கிறது, அதற்கான திறமையும் இருக்கிறது.... (குறுக்கீடு)

MR. SPEAKER: Let the hon. Member please proceed. The hon. Member has a right to discuss and criticise the Government. The Hon. Minister has a right to reply and defend himself, according to the rules. The hon. Member should confine his remarks to the object of the cut motion. What the hon. Member said about Kundah and other things are not relevant.

**SRI M. KALYANASUNDARAM:** மேலும் சட்டசபை அங்கத்தினர்கள் எழுதும் கடிதங்களுக்குப் பதில் சரியாக எழுதுவதில்லை. அவைகள் எல்லாம் புறக்கணிக்கப்படுகின்றன என்று இங்கு முன்பும் சொல்லப்பட்டது. இதிலும் அரசியல் இருக்கிறது. எதிர்க்கட்சியில் இருக்கின்ற அங்கத்தினர் ஒருவர் தான் எவ்வளவு கடிதம் அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, அமைச்சர்களுக்கும் எழுதியிருக்கிறார்கள் என்பதற்குள்ள லிஸ்டையே அச்சடித்து இதோ வெளியிட்டிருக்கிறார்கள். (வெளியிடப்பட்டுள்ள சிறு புத்தகத்தை அவையின் பார்வைக்குக் காண்பித்தார்). இதே போன்றுதான் என்னுடைய காரியாலயத்திலிருந்தும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் அமைச்சர்களுடைய தனிப்பட்ட பெயரிலேயே அவர்கள் தனியாக கவனிக்கவேண்டும் என்று அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு ஒன்றும் பதில் அனுப்புவது கிடையாது. சில சமயங்களில் மட்டும் ஏதோ பெரிய கருணை வைத்து உங்கள் கடிதம் கிடைத்தது என்று I am direeted to acknowledge என்று அமைச்சர்களுடைய செக்ரெட்டரியிடமிருந்து ஒரு பதில் வரும். இப்போது அதுவும்கூட புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், இதில் எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு மட்டுமல்ல, ஆளும் கட்சியில் இருக்கின்ற அங்கத்தினர்களுக்கும் இந்தக் குறை இருந்து கொண்டிருக்கிறது, இதிலும் அரசியல் நோக்கு இருக்கிறது என்று கருதுகிறேன். எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் கொடுக்கும் மனுக்களின் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தாலும்கூட, அதைப் பற்றி அவர்களுக்குத் தெரிவித்தால் அதை எங்கே பொது மக்களிடம் அவர்களுடைய தொகுதி மக்களிடம் காண்பித்துத் தங்களுக்கு நல்ல பெயர் வாங்கிவிடப்போகிறார்களோ—எங்கே தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளப்போகிறார்களோ—என்ற எண்ணத்துடன் தான் அமைச்சர்களுக்கு எழுதும் கடிதங்களுக்கு பதில் எழுதுவதை குறைத்துக் கொள்ளலாம் என்கிற அரசியல் நோக்கத்தோடு இவ்வாறு செய்யப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் எது சொன்னாலும் அது அரசியல் காரணங்கள். தொழிலாளர்களைப் பற்றிக் கேட்டால் அது அரசியல் காரணம், அவர்களுடைய வேலை நிறுத்தங்களைப் பற்றியோ அல்லது அவர்களுடைய போராட்டங்களைப் பற்றியோ கேட்டால் அது அரசியல் காரணம், பாம்பிக்குளம், ஆரணியாறு திட்டத்தைப் பற்றிக் கேட்டால் அதுவும் அரசியல் காரணம் என்று எல்லாவற்றிற்கும் அரசியல் காரணம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவதிலிருந்து அவர்களுடைய பார்வையில்தான் ஏதோ கோளாறு இருக்கிறது, அதைத்தான் திருத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய கடிதத்திற்குப் பதில் எழுதாமல் இருப்பதினாலோ, அல்லது நாங்கள் பேசுவதை திருத்திக் கூறுவதினாலோ எதிர்க்கட்சிகளை நீங்கள் அடக்கிவிட முடியாது, அமைச்சர் அவர்கள் வேண்டுமானால், சபையின் முன்னால் அடக்குவேன், ஒடுக்குவேன், நசுக்குவேன் என்று சொல்வதையெல்லாம் நான் வரவேற்கிறேன். ஆனால் ஆளும் கட்சி எனக்காகவோ அல்லது எங்கள் கட்சிக்காகவோ பரிவு காட்டவேண்டும் என்று நான் விரும்பவில்லை. என்னுடைய சேவைக்காக இல்லாவிட்டாலும் எங்கள் இயக்கத்தின் சேவைக்காக என் தொகுதியிலுள்ள மக்கள் எனக்கு வோட்டு அளித்தால் போதும். அதல்லாமல் இப்போதைய அமைச்சர்களின் கருணையால் அங்கு வோட்டுக் கிடைக்கிறது என்றால் அது வேண்டியதே இல்லை என்று தான் சொல்வேன். என்னுடைய சேவையை, எங்கள் கட்சியின் சேவையை ஆதரிப்பதற்கு மக்கள் இருக்கிறார்கள், அவர்கள் இதைப் பார்த்துக்கொள்வார்கள், அமைச்சர்களுக்கு வேண்டுமானால், அல்லது ஆளும் கட்சிக்கு வேண்டுமானால், எவ்வளவோ துப்பாக்கிகள் இருக்கலாம். வேறு பலவகையான வசதிகள் இருக்கலாம், திறமையிருக்கலாம். ஆனால் இதற்காக எதிர்க்கட்சியிலுள்ளவர்களைப் பார்த்து அடக்கிவிடுவேன், ஒடுக்கிவிடுவேன், நசுக்கிவிடுவேன் என்று சொல்லுவது நல்லதல்ல, அப்பேர்ப்பட்ட அசம்பாவமான எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு. முடித்துக் கொள்கிறேன்.



**THE HON. SRI C. SUBRAMANIAM:** நான் சொன்னது, யாராவது அக்கிரமமான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால், அநியாயமான செய்கையில் ஈடுபடுவார்களானால் கண்டிப்பாய் அவர்களை அடக்குவோம் என்று சொன்னேன். அதல்லாமல் என்ன வேண்டுமானாலும் அநியாயங்கள் அல்லது அக்கிரமங்கள் செய்வோம் அதையெல்லாம் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்வது சரியல்ல. சர்க்காரைப் பொறுத்த அளவில் யார் அநியாயம் செய்தாலும் சரி, யார் அக்கிரமம் செய்தாலும் சரி, யார் கலவரங்களைத் தூண்டுவதாக இருந்தாலும் சரி அவர்களை அடக்க சர்க்கார் தயாராக இருக்கும் என்பதையும் தெரிவித்தேன். (குறுக்கீடு) சர்க்கார் அவ்விதம் நடந்தால் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். அதற்குச் சந்தர்ப்பம் கொடுப்பதற்காகத்தான் ஐந்து வருடத்திற்கு ஒருதடவை கம்யூனிஸ்டு கட்சியில் இருப்பதுபோன்ற எந்த விதமான உரிமையுமில்லாமல் இருப்பது, வோட்டுரிமை இல்லாமல் இருப்பது, ஏதேச்சாதிகாரமாக இருக்கின்ற முறை இவைகள் இல்லாமல் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை பொதுத் தேர்தல் நடத்தவேண்டும் என்று நாம் அரசியல் சட்டத்தை தயாரித்து இருக்கிறோம். அதில் ஜனங்கள் யாரை ஆதரிக்கிறார்கள் என்பதைப் பார்த்துக்கொள்ளலாம். இப்போது நடந்து வருகின்ற ஒவ்வொரு எலெக்ஷனிலும், யார் அநியாயமாக நடந்து கொள்ளுகிறார்கள், யார் சரியாக நடந்துகொள்ளுகிறார்கள் என்பதை மக்களே கணக்குப் போட்டுக்கொள்கிறார்கள். அதையே நாம் பார்த்துக் கொள்ளலாம். இதையெல்லாம் இப்போது சொல்லவேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். அடக்குவேன், ஒடுக்குவேன் என்று சொல்வது எல்லாம் நாட்டில் யார் அநியாயம் செய்கிறார்களோ, யார் அக்கிரமம் செய்கின்றார்களோ, யார் கலவரம் செய்கின்றார்களோ அவர்களை எல்லாம் அடக்கத்தான் வேண்டும், ஒடுக்கத்தான் வேண்டும், அதுதான் சர்க்காருடைய தர்மம் என்ற முறையில் தான் சொன்னேனே தவிர தனிப்பட்ட முறையில் கல்யாணசுந்தரத்தையோ அல்லது கம்யூனிஸ்ட் கட்சியையோ குறிப்பிடவில்லை. அரசியல் கட்சிகள் யாருடையதாக இருந்தாலும் அக்கிரமங்கள் செய்தால், அநியாயங்கள் செய்தால், கலவரங்கள் செய்தால் அவற்றையெல்லாம் எதிர்த்து நசுக்கத்தான் செய்வோம், அடக்கத்தான் செய்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Now I put the cut motion of Sri M. Kalyanasundaram to the vote of the House. The question is :

'That the allotment of Rs. 9,22,300, under Demand No. IX, Head of State, Ministers and Headquarters Staff be reduced by Re. 1.'

The cut motion was put and lost.

MR. SPEAKER : I now put the Demand to the vote of the Houses. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 9,22,300, under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff.'

The Demand was put and carried and the Grant was made.

11-30 a.m. It being half past eleven of the clock Mr. Speaker proceeded pursuant to the rules successively to put forth with the questions on the other Demand for Grants for further expenditure in 1959-60 notice of which had been given by Government.

DEMAND X—STATE LEGISLATURE.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,500 under Demand X—State Legislature.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XI—ELECTIONS.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,68,400 under Demand XI—Elections.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XII—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 31,15,100 under Demand XII—District Administration and Miscellaneous.'

The Demand was put and caried and the Grant was made.

DEMAND XIII—ADMINISTRATION OF JUSTICE.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 6,32,000 under Demand XIII—Administration of Justice.'

The Demand was put and carried and the Grant was made.



DEMAND XIV—JAILS.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 28,06,200 under Demand XIV—Jails.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XV—POLICE.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 12,93,200 under Demand XV—Police.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVI—EDUCATION.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,14,17,700 under Demand XVI—Education.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVII—MEDICAL.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 58,18,400 under Demand XVII—Medical.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XVIII—PUBLIC HEALTH.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,04,53,700 under Demand XVIII—Public Health.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XIX—AGRICULTURE AND FISHERIES.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 700 under Demand XIX—Agriculture and Fisheries.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XX—ANIMAL HUSBANDRY.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,74,000 under Demand XX—Animal Husbandry.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXI—CO-OPERATION.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 23,19,900 under Demand XXI—Co-operation.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXII—INDUSTRIES AND CINCHONA.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 28,51,800 under Demand XXII—Industries and Cinchona.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIII—HARIJAN UPLIFT.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 43,85,500 under Demand XXIII—Harijan Uplift.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIV—LABOUR INCLUDING FACTORIES.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 200 under Demand XXIV—Labour including Factories.'

The Demand was put and carried and the Grant was made.

11-30 a. m.

DEMAND XXV—CIVIL WORKS—WORKS.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,91,80,100 under Demand XXV—Civil Works—Works.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXVI—CIVIL WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 14,90,700 under Demand XXVI—Civil Works—Establishment and Tools and Plant.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXVII—CIVIL WORKS—GRANTS-IN-AID.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 200 under Demand XXVII—Civil Works—Grants-in-Aid.'

The Demand was put and carried and the Grant was made.



DEMAND XXVIII—FAMINE.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 18,26,900 under Demand XXVIII—Famine.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIX—PENSIONS.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,47,200 under Demand XXIX—Pensions.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXX—STATIONERY AND PRINTING.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,72,400 under Demand XXX—Stationery and Printing.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXII—COMMUNITY DEVELOPJENT PROJECTS, ETC.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 84,08,900 under Demand XXXII—Community Development Projects, etc.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXIII—ROAD TRANSPORT SCHEMES.

MR. SPEAKER: The question is—

'That the Government be grnted a sum not exceeding Rs. 5,82,400 under Demand XXXIII—Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXIV—COMPENSATION TO ZAMINDARS.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 9,10,000 under Demand XXXIV—Compensation to Zamindars.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXV—CAPITAL OUTLAY ON FORESTS.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,71,400 under Demand XXXV—Capital Outlay on Forests.'

The Demand was put and carried and the Grant was made.

[23rd March 1960

DEMAND XXXVI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,48,30,800 under Demand XXXVI—Capital Outlay on Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXVII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,18,46,800 under Demand XXXVII—Capital Outlay on Public Health.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXIX—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 39,63,100 under Demand XXXIX—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XL—CAPITAL OUTLAY ON CIVIL WORKS.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 40,72,200 under Demand XL—Capital Outlay on Civil Works.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLI—CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 37,29,900 under Demand XLI—Capital Outlay on Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLIII—CAPITAL OUTLAY ON SCHEMES OF GOVERNMENT TRADING.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 11,74,71,900 under Demand XLIII—Capital Outlay on Schemes of Government Trading.'

The Demand was put and carried and the Grant was made.



23rd March 1960]

DEMAND XLIV—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 12,27,45,800 under Demand XLIV—Loans and Advances by the State Government.'

The Demand was put and carried and the Grant was made.

VI—ANNOUNCEMENT *re*: THE MADRAS APPROPRIATION BILL, 1960.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Assembly of the Madras Appropriation Bill, 1960.

VII—GOVERNMENT BILL.

THE MADRAS APPROPRIATION BILL, 1960.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Appropriation Bill, 1960.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Appropriation Bill, 1960.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VIII—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61.

DEMAND IV—FOREST DEPARTMENT.

DEMAND XXXVI—CAPITAL OUTLAY ON FORESTS.

MR. SPEAKER : Now we shall take up Demands for Grants, No. IV—Forest Department and No. XXXVI—Capital Outlay on Forests. The time allotted is two hours.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 66,86,200 under Demand IV—Forest Department.'

MR. SPEAKER : I understand that the cut motion standing in the name of Sri K. R. Nallasivam under Demand IV—Forest Department will be moved.

SRI K. R. NALLASIVAM : Sir, I move—

'That the allotment of Rs. 66,86,200 under Demand IV—Forest Department be reduced by Rs. 100.'

[23rd March 1960

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 31,79,400 under Demand XXXVI—Capital Outlay on Forests.'

MR. SPEAKER : I understand that the cut motion standing in the name of Sri K. Sattanatha Karayaar under Demand XXXVI—Capital Outlay of Forests will be moved.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

'That the allotment of Rs. 31,79,400 under Demand XXXVI—Capital Outlay on Forests—be reduced by Rs. 100.'

MR. SPEAKER : Now the Demands and the cut motions are before the House for discussion.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, மொத்த நிலப்பரப்பில் 1/3 பங்கு நிலம் காடுகளாக இருக்க வேண்டும் என்பது தேசிய மதிப்பீடு. நமது ராஜ்யத்தில் தேசிய மதிப்பீட்டில் பாதிகூட காட்டுச் செல்வம் இல்லை என்பதை நாம் உணர வேண்டும். காட்டுச் செல்வத்தை அதிகரிப்பதற்காக அரசாங்கம் பல திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கென உருவாக்கப்பட்ட திட்டங்கள், அப்படியே பரிபூரணமாக ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாய அபிவிருத்திக்கும் நமக்கு காட்டுச் செல்வம் வேண்டியிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கும் காட்டுச் செல்வம் வேண்டும். தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களுக்கு காடுகளை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. நாம் மூலப்பொருள்களை வேறு நாடுகளிலிருந்து வரவழைத்துக்கொண்டிருந்தால், தொழில்களைச் சீராக நடத்த முடியாது. மக்களின் பல தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காடுகளை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

காடு அபிவிருத்தித் திட்டங்களின் சில முக்கியமான அம்சங்களைப் பற்றி இப்போது சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். கிராமக் காடுகள் அபிவிருத்தித் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்றிருக்கிறது. நமது ராஜ்யத்தில் கிராமங்களில் 1,96,000 எக்கரில் 1 கோடியே 67 லட்ச ரூபாய் செலவில் காடுகளை வளர்க்க வேண்டும் என்பது ஒரு திட்டம். ஒன்றுக்கும் பயன்படாத வெறும் நிலங்கள் கிராமங்களில் இருக்கின்றன. காடுகளும் நமக்கு வேண்டியிருக்கிறது. எக்கர் ஒன்றுக்கு 85 ரூபாய் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஒவ்வொரு வட்டார வளர்ச்சிப் பிரதேசத்திலும் 110 எக்கருக்காவது மரங்கள் வைத்துக் காடுகளை உண்டாக்க வேண்டும் என்பது இந்தத் திட்டம். நமது ராஜ்யத்தில் 358 வட்டார வளர்ச்சி பிர்க்காக்கள் இருக்கின்றன. வட்டார வளர்ச்சிக் குழுவினரும், பஞ்சாயத்துக் குழுவினரும் இந்தத் திட்டத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இவைகளை மேற்கொண்டு பாதுகாக்கவேண்டும் என்பது திட்டத்தின் அடிப்படை. இந்தத் திட்டத்திற்காக, இந்த ஆண்டிலேயே, காட்டுப் பிராந்தியங்களுக்கு வெளியேயுள்ள நிலம் ஸர்வே செய்யப்பட்டது. இத்திட்டத்தை மூன்று ஜில்லாக்களில் பைலட் ப்ராஜெக்டாக நிறைவேற்ற வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த பட்ஜெட் ஆண்டிலேயே இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் இதற்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் முன்பு கூறியபடி ஸர்வே செய்யப்பட்டதில் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூரில் 2,565 எக்கரும், திருக்கழுக்குன்றத்தில் 2,195 எக்கரும், தென்னூற்காட்டில் செஞ்ஜியில் 199 எக்கரும் மேலமலையூர் வட்டத்தில் 308 எக்கரும், வட ஆற்காடு மாவட்டத்தில் வெம்பாக்கம் பிராந்தியத்தில் 659 எக்கரும், பெரணமல்லூர் பிராந்தியத்தில் 459 எக்கரும் வருகிற வருஷத்தில் பைலட் ப்ராஜெக்டுக்கு எடுத்துக்



23rd March 1960] [Sri M. Bhaktavatsalam]

கொண்டு 6,571 எக்கர் தரிசு நிலத்தில் கிராமங்களுக்குப் பயன்படக்கூடிய மரங்களை வைக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்காக 5 லட்ச ரூபாய் ஒதுக்கிவைக்க வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. முதலில், காட்டிலாகா நிபுணர்கள் மரங்களை வைத்துவிடுவார்கள். அதற்குப் பிறகு புதிதாக வரக்கூடிய பஞ்சாயத்துக்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அவைகளைப் பராமரிக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினால் கிராமப் பொருளாதாரத்தில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்திற்கு வேண்டிய ஒத்துழைப்பு கிராம மக்களிடமிருந்து வர வேண்டும். அது கிடைக்கும் என்பதில் இந்த அரசாங்கத்திற்குச் சந்தேகம் இல்லை.

. பசுந்தாள் உரத்திற்கான பசுந்தாள் விதைகள் இல்லாத குறையினால் பசுந்தாள் உரத்தைப் பெருக்குவது கஷ்டமாக இருக்கிறது. மேலும் பசுந்தாள் உரம் இப்போது நமது ராஜ்யத்திலிருந்து மற்ற ராஜ்யங்களுக்கும் தேவைப்படுகிறது. எனவே பசுந்தாள் உரத்திற்கான பசுந்தாள் விதைகளை காட்டிலாகாவிலேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. 2,000, 3,000 எக்கரில் பசுந்தாள் விதைகளை உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ரேஞ்சிலும் 10 எக்கர்கள் வீதம் 100 எக்கர்கள் எடுத்துக்கொள்ளப்படும். இதற்காக 6,39,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக ரப்பர் பயிரிட வேண்டும் என்று வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்த ஸ்ரீ. சட்டநாத கரையாளர் குறிப்பிட்டார். கன்னியாகுமரிப் பிராந்தியத்தில் நல்ல தரமுள்ள ரப்பர் பயிரிடமுடியும் என்று புலப்படுகிறது. அங்கே பயிரிடப்படும் ரப்பர் நல்ல ரப்பராக இருக்கும் என்று புலப்படுகிறது. எனவே அரசாங்கமே அங்கு 3,000 எக்கர் வரையில் ரப்பர் பயிரிட முடிவு செய்திருக்கிறது. ஆனால் 3,000 எக்கரிலும் பயிரிட 8 ஆண்டுகள் ஆகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் 2,000 எக்கர் வரை பயிரிட முடியும். இந்த வருஷத்திலேயே "நர்ஸெரி"-க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வரும் வருஷத்தில் 148 எக்கர் பயிரிட முடியும் ; அதற்கென 2 கோடியே 62 லட்ச ரூபாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. ரப்பர் பயிரிடுவதில் நமக்கு அதிக அனுபவம் இல்லை. எனவே இந்த இலாகாவிலிருந்து இரண்டு அதிகாரிகளை மலேயா வுக்கு அனுப்பி பயிற்சி பெற்று வரச் செய்ய உத்தேசித்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை நல்ல முறையில் நிறைவேற்ற முற்பட்டால் வருஷம் ஒன்றுக்கு 400 எக்கர் வரையில் ரப்பர் பயிரிடலாம் என்று எண்ணுகிறோம். நாம் இத்திட்டத்தின் படி ரப்பர் பயிரிடுவது 9-வது ஆண்டில் தான் பலனளிக்கும்.

நமது காட்டுச் செல்வத்தில் மற்றொரு முக்கியமான அம்சம், சந்தன மரங்கள். சந்தன மரங்கள் நமக்கு நல்ல வருமானமும் அளிக்கின்றன, அவைகளின் விலையும் ஏலங்களில் அதிகரித்து வருகிறது. கடைசியாக நடைபெற்ற ஏலத்தில் 28,00,000 ரூபாய்க்கு 480 டன் சந்தன மரங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. சந்தன மரங்களுக்கு ஸ்பைக் டிஸீஸ் என்ற நோய் வருகிறது. அதுசம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. ஆராய்ச்சி இன்னும் பூர்த்தியாகவில்லை. நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து அந்த நோயைத் தவிர்க்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணம். சந்தன மரங்களை இன்னும் எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பதிலும் அரசாங்கம் கவனம்செலுத்தி வருகிறது. சந்தன மரம் ஒரு துளியாக இருந்தாலும் அதிக விலையுள்ளதாக இருக்கிறது. எனவே அதைத் திருடுகிறார்கள், (smuggle) செய்கிறார்கள். இதைத் தடுப்பதற்கான முறையில் சம்பந்தப்பட்ட சட்டத்தை மாற்றியமைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

மற்றொரு முக்கியமான செல்வம் மூங்கில். மூங்கில் வளம் நம்முடைய காடுகளில் இருக்கிறது. இப்போது சர்வே செய்து பார்த்ததில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்குத்தான் மூங்கில் இருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் கிடைக்காது. அதிகமான அளவுக்கு மூங்கில்கள் வெட்டப்பட்டுவிட்டதால் இப்போது ஒரு காகிதத் தொழிற்சாலை

வைக்கக் கூடிய அளவுக்குத்தான் இருக்கிறது. மேலும், இப்போது காகிதத் தொழிலுக்குப் பயன்படக் கூடிய " வாட்டில் " என்ற மரம் இப்போது நீலகிரியிலும், கொடைக்கானலிலும் வளர்க்கப்பட்டு வருகிறது. இப்போது இருக்கும் " வாட்டில் " இருந்து நியூஸ் பிரிண்ட் தொழிற்சாலை அமைக்க முடியும். இன்னொரு பேப்பர் வகையை " பகாஸை " பயன்படுத்தித் தயாரிக்க முடியும். இந்த மூங்கிலை அதிகமான அளவில் வளர்ப்பதைப் பற்றியும் காட்டிலாகாவில் கவனம் செலுத்தி வருகிறோம். ஒரு நிபுணரை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி மூங்கில் பயிரை எப்படி விஸ்தரிப்பது என்று தெரிந்து கொண்டு மேலும் மூங்கிலை விஸ்தரிப்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தும். யூகலிப்டஸ் மலையில்தான் விளைந்து கொண்டிருந்தது. இப்போது " ப்ளெயின் " களிலும் பயிரிடுவதற்காக ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. " ப்ளெயின் " களில் பயிரிடப்பட்டால் சவுக்கை விட அதிகப் பலன் தரக்கூடியதாக இருக்கும். வரும் ஆண்டுகளில் அதிகமான அளவில் " ப்ளெயின் " களில் பயிரிட முடியும். வரண்ட பிரதேசங்களில் பயிரிடுவது பற்றி " எப். ஏ. ஓ. எக்ஸ்பர்ட் "-களின் ஆலோசனையின் பேரில் கொடைக்கானலில் " ட்ராபிகல் பைன்ஸ் " என்ற ரகம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மரங்களை வைத்தால் நம்முடைய பல தேவைகள் பூர்த்தியாகும். விறகு பற்றுக்குறை நீங்கிவிடும்.

சில முக்கியமான அம்சங்களைப் பற்றிச் சொன்னேன். காட்டு இலாகா நிர்வாகத்தைப் பற்றிய வரை வருவாய் வகையில் பார்த்தால், 1959–60-ம் ஆண்டில் வரவு 1,48,76,700 ரூபாய், செலவு 1,11,81,200 ரூபாய், மிச்சம் 36,95,500 ரூபாய். இவ்வளவுதான் மிச்சம் என்று சொல்வதற்கில்லை. இப்போது காட்டப்பட்டிருக்கக் கூடிய செலவுத் தொகை புதிதாக " வாட்டில் " மரங்கள் வைக்கப்பட இருப்பதையும் சேர்ந்த தொகையாகும் ; காட்டுச் செல்வத்தை வளர்ப்பதில் ஏற்படக் கூடிய செலவாகும். ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால்கூட வருவாய் அதிகமாக இருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் அங்கத்தினர்களுக்கு மிகுந்த அக்கறை உண்டு. அவர்கள் சொல்லக் கூடிய யோசனைகளை வரவேற்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri V. SUBBIAH** : இந்தக் காட்டிலாகா மானியத்தின் பேரில் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கிராமங்களில், 65,000 ஏக்கர் வரை நாங்கள் தோப்புக்களையும், மரங்களையும் உண்டாக்கப் போகிறோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே வரவேற்கக்கூடிய திட்டந்தான். இன்றையதினம் கிராமங்களில் மரங்களையே பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. மரங்களே இல்லாமல் பல கிராமங்கள் வறட்சியான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தின் திட்டத்தை வரவேற்றாலும் கூட, இந்தத் திட்டத்தை அரசாங்கம் எப்படி நிறைவேற்றப் போகிறது என்பதில் சந்தேகமே இருக்கிறது. வன மகோத்சவம் பல ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பல லட்சக் கணக்கான செடிகள் ஆங்காங்கு நடப்பட்டிருக்கின்றன. அதனுடைய முடிவு என்ன ஆயிற்று ? 10, 12 ஆண்டுகள் கழிந்துவிட்ட சுதந்திர நாட்டில் நடப்பட்ட செடிகள் எல்லாம் மரங்களாக வளர்ந்து விட்டனவா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போது 6,500 ஏக்கர் அளவுக்கு மரங்களை வளர்க்கப் போகிறோம் என்று சொல்லும்போது அவைகளை எப்படிக் காப்பாற்றப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. குறிப்பாக, கிராமங்களில் செடிகளுக்கும், பயிர்களுக்கும் எமனாக இருப்பது வெள்ளாடு என்ற இனந்தான். அந்த இனம் என்றைக்குக் கிராமப் பகுதிகளில் இருந்து நீக்கப்படுமோ அன்றுதான் மரங்கள் எல்லாம் வளர முடியும். அப்போதுதான் விவசாயிகளின் விளைபொருள் உற்பத்தி சுபீட்சமாக இருக்க முடியும். இந்த வெள்ளாடுகளை மலைப் பிராந்தியங்களில் வைத்திருப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை.

இன்றைக்குப் " ப்ளாண்டேஷனை " பொறுத்த வரையில் மலைப் பகுதிகளில் ஏலத் தோட்டங்கள், டீ, காப்பி, ரப்பர் தோட்டங்கள்



ஆகியவைகளைப் பார்க்கிறோம். மிகச் செழிப்பாக அவைகள் இருக்கின்றன. ரப்பர் தோட்டங்களை எடுத்துக் கொண்டால், நாம் வெளி நாட்டிலிருந்து, நம்முடைய மலேயோ போன்ற பகுதிகளில் இருந்து எதிர்பார்க்கிறோம். நம்முடைய நாட்டில் 5,000, 6,000 அடி உயரத்தில் இருக்கும் பகுதிகளில் ரப்பர் உற்பத்தி செய்ய வசதி செய்து கொடுக்க வேண்டும். கோளாவில் மேலப் பெரியார், வண்டிப் பெரியார், கோட்டை வரை போனால் பல இடங்களில் ரப்பர் தோட்டங்களைப் பார்க்க முடியும். நான் பல வருஷங்களுக்கு முன்னால் பார்த்திருக்கிறேன். அந்த முறையில் நம் பக்கத்தில் செய்தால் ரப்பர் வளர்ச்சி நம்முடைய நாட்டில் பெருகும் என்றும், அதனால் அரசாங்கத்திற்கு லாபம் கிடைக்குமென்று கூறிக் கொள்கிறேன்.

தேக்கு மரங்கள் கன அடி 2 ரூபாய்க்கு விற்றது இன்றைக்கு 25 ரூபாய்க்குக் கிடைப்பதில்லை. " ரோஸ் உட் " போன்ற மரங்களையெல்லாம் விலை உயர்ந்த ரத்தினங்களைப் போல் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இப்போது அவைகள் எல்லாம் சரியானபடி பாதுகாக்கப்படவில்லை. சந்தனக் காடுகளில் நோய் ஏற்பட்டுவிடுகிறது. சரியானபடி அவைகள் காக்கப்படவில்லை. நாம் " சீப் கன்சர்வேடர் " இருந்து " பாரஸ்ட் ஆபீசர் " வரை நியமித்திருக்கிறோம். அவர்களுக்கு என்ன வேலை ? இதை மேற்பார்ப்பதை விட்டு விட்டு எங்கோ உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த ஜாதி மரங்களைக் காப்பாற்றவிட்டால், இந்த நாட்டில் நல்ல மரங்கள் கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். இப்போது வீடுகளை கட்ட மரங்கள் இல்லாமல், இரும்பு, சிமெண்டை வைத்துக் கட்டி விடுகிறார்கள். ஆகவே, மரங்களைக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரிசர்வ் பாரஸ்டுகளில் இருக்கக் கூடிய கால்நடை மேய்ச்சல் துறைகளைத் தாராளமாக அனுபவிக்க விவசாயிகளுக்கு வழி செய்து கொடுக்க வேண்டும். அதற்காக எந்த விதமான கட்டணமும் வாங்கக் கூடாது. அது மட்டுமல்லாது, விவசாயிகளுக்குப் பயன்படக் கூடிய கருவிகளான மேழி, கலப்பை மற்றும் வண்டிகள் ஆகியவைகளுக்கான மரங்களையும் எந்த விதக் கட்டணமும் இல்லாமல் வெட்டிக் கொள்ள அனுமதி கொடுக்க வேண்டும். விவசாய உற்பத்தி பெருக வேண்டுமென்று சொல்கிற அரசாங்கம் இந்தச் சலுகையை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டிலே விவசாயம் பெருக முடியும், உணவு உற்பத்தி அதிகரிக்க முடியும்.

மாஜி ராணுவத்தினரை பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டில் வேலை செய்ய நியமிக்க வேண்டும். அவர்கள்தான் அந்த வேலைக்குப் பொருத்தம் உள்ளவர்களாக இருக்க முடியும். காட்டிலே இருக்கக் கூடிய மிருகங்களையெல்லாம் வேட்டையாட அனுமதி கொடுக்கக் கூடாது. ஏதாவது மிருகங்கள் ஊருக்குள் புகுந்து பயிர்களையெல்லாம் நாசம் செய்தால் அவைகளை வேட்டையாடலாமே தவிர, காட்டிலுள்ள மிருகங்களை வேட்டையாட அரசாங்கம் லைசன்ஸ் கொடுக்க கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். பல வருஷங்கள் ஆன பிற்பாடு எந்த மரங்களை வெட்டினால் லாபகரமாக இருக்கும் என்று தெரிந்த பிற்பாடுதான் செய்ய வேண்டும். பத்து லட்சம் ரூபாய், இருபது லட்ச ரூபாய் என்ற அளவுக்கு கண்டிராக்டுகள் விட்டுவிடாமல், சில்லரை கண்டிராக்டுகளாகப் பிரித்து ஏலம் விட்டால் அரசாங்கத்திற்கு வருமானம் அதிகமாகக் கிடைக்கும். ஆயிரம், இரண்டாயிரம் மரங்கள் என்ற ஒரு குறுகிய எல்லையை வைத்து கண்டிராக்ட் விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். 12 noon.

* **Sri W. P. A. R. CHANDRASEKHARAN** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பாரஸ்ட் டிபார்ட்மெண்ட்டுக்கான மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

(இத்தருணத்தில் டெபுடி ஸ்பீக்கர் தலைமை.)

நமது ராஜ்யத்தில் திருநெல்வேலி ஜில்லா, கோயமுத்தூர் ஜில்லா, சேலம் ஜில்லா, மதுரை ஜில்லா போன்ற இடங்களில் இருக்கும் மலைப்பகுதிகளில் காயாத கானகம் என்று கவிஞர்கள் வருணித்திருக்கும்

கானகங்கள் இருக்கின்றன. அம்மாதிரி கானகங்களில், காற்றடிப்பதன் மூலமாகவும், இன்னும் இதர இயற்கைக் கோளாறுகள் காரணமாகவும், மரம் விழுந்தால், 800 அடியில் கானக தென்னை வருகிறது. அதற்குச் சற்று உயரமாகப் போனால், களால் பாக்கு வருகிறது. மரம் விழுந்த பொட்டலில், அதற்கு மேல் போனால் காட்டு வாழை வருகிறது. அதற்கு மேல் போனால் கானல் ஏலம் வருகிறது. இம்மாதிரி ஏலம் வந்து, பரந்த அளவில் கைப்பற்றிக்கொண்ட இடத்தை ஏலமலை என்று கூறுகிறார்கள். இம்மாதிரியான வனம்தான் "பாரஸ்ட்" என்று சொல்லப்படும்போது நம் கருத்துக்கு முன் வருகிறது. ஆனால், பொதுவாக, ஜமீந்தாரி முறை அதிக அளவில் ஏற்பட்டிருந்தும் நமது ராஜ்யத்தில் முன்னாலேயே நம் வனங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. ஜமீந்தாரி ஏரியாவில் இருப்பதெல்லாம் " டென்யூடெட் பாரஸ்ட் " தான். பஞ்சாயத்து பாரஸ்ட் என்ற முறைப்படி இருந்த பாரஸ்ட்டும் இப்பொழுது நல்ல நிலைமையில் இல்லை. ஆகவே, வனம் என்னும்போது இருப்பதைப் பாதுகாப்பதும், புதிதாக மரம் வளர்ப்பதும் நமது இலாகாவின் முக்கிய நோக்கமாக இருப்பதால், நமது அந்த இலாகாவின் பெயரை **"Department of Forest and Tree Planting"** என்று மாற்றியமைப்பது உசிதமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

ரப்பர் விவசாயத்தைப்பற்றி எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் குறிப்பிடும்போது 5,000 அடி உயரத்தில் இருக்கும் இடங்களை ரப்பருக்கு விட்டு விடுங்கள் என்று சொன்னார்கள். அம்மாதிரி அல்ல. ரப்பர் என்பது உயரம், சீதோஷ்ண நிலை, மழை இந்த மூன்று காரணங்களையும் வைத்து பயிராவது. 1,000, 1,200 அடிக்குமேல் போகாமல், கிட்டத்தட்ட 150 அங்குலம் 200 அங்குலம் மழை இருக்கும் இடங்களில்தான் ரப்பரை அனுமதிக்க முடியும். மற்ற விவசாயங்கள் வருவதற்கு இன்னும் சற்று உயரமாகப் போக வேண்டும். தேயிலைப் பயிர் இன்னும் சற்று உயரத்தில் வருகின்றது. இந்த நிலைமையில் எந்த எந்த உயரத்தில் எந்த எந்த சீதோஷ்ணநிலையில், எந்த அளவு மழை பெய்யும் இடங்களிலே எந்த எந்தப் பயிரை வைக்கலாம் என்று கண்காணித்து, ரப்பர், தீப்பெட்டிக்கு உபயோகப்படும் **soft wood,** காகித உற்பத்திக்கும் தோல் பதனிடுவதற்கும் உபயோகப்படும் **wattle** மரங்கள் போன்றவைகளை ஆங்காங்கே வளர்ப்பதற்கு நமது சர்க்காரின் வன இலாகா கவனம் செலுத்திக்கொண்டு வருகின்றது. ரப்பர் இன்னும் இம்மாதிரியான மரங்கள் பலன் தரும் அளவில் இவைகளை பப்ளிக் கம்பெனிகள் ஏற்படுத்தி, அவைகளின் கண்காணிப்பில் விடவேண்டுமென்று நான் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும் இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்கள் காகிதத் தொழிற்சாலை வைப்பதற்கு மூங்கில் மரம் இருப்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பாபநாசம் மலையில் ஏராளமான ஈத்தை (**reeds**) என்று சொல்லப்படும் நாணல் வகை இருப்பதால், அதை உபயோகிக்க ஒரு காகித உற்பத்தி தொழிற்சாலை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். நான் கேள்விப்படுகிறேன் கிட்டத்தட்ட 40,000 ஏக்கர்களில் **reeds** இருக்கும் என்று கூறுகிறார்கள். அந்த **reeds**-ஐப் பயன்படுத்தி அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்குச் சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இது தவிர, வன இலாகாவின் கீழ் **Creation of river canal and laket fringe forests** என்ற தலைப்பின் கீழ், **road mr gin avenue trees** என்பதையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று நான் அபிப்பிராயம் கூற விரும்புகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் **road margin avenue trees** மூலமாக வரும் மகசூலின் பயன் மூலமாக கணிசமாக வருவாய் ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்கு கிடைக்கிறது. அந்த வருவாய் அப்படியே ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்கு போகிறபடியும் பராமரிப்பு மரம் நடுதல், இவைகளைப் பாதுகாப்பது, பாரஸ்ட் டிபார்ட்மெண்டில் கீழ் இருக்கும்படியாகவும் ஏற்படுத்தினால், அது ரோட் மார்ஜின் இடங்களை நல்ல முறையில் பக்குவப்படுத்தி வைக்கப்பட ஏதுவாக இருக்கும். மரம் ஒன்று மட்டும் பொருளல்ல. அதோடு தாவர வர்க்கம் கோர்வையாக சேர்ந்திருந்தால் ரோடு ரொம்ப நாளைக்கு நீடித்திருக்கும் என்பதற்கு சாதாரணமாக **ghat** செக்ஷன் ரோடில்



பார்த்தால் தெரியும் **table land**-க்கு வந்தவுடன் அந்த ரோடு மிகவும் நல்ல முறையில் இருப்பதும் **ghat** செக்ஷன் இடத்தில் வந்தால் மரங்கள் வெட்டப்பட்டிருப்பதும் ரோடுகள் ரொம்பப் பாதிக்கப்பட்டிருப்பதும் தெரியவரும். இந்த சந்தர்ப்பத்தில் தாண்டிக்குடி **ghat** ரோடு விஷயமாக **lower hill area** என்று கூறப்படும் இடத்தில் கன்னிவாடி ஜமீந்தார் கையிலிருக்கும் பாரஸ்டில் இருக்கிறது. பெயரளவில்தான் பாரஸ்டாக இருக்கிறதே தவிர பாரஸ்ட் மொட்டை மலையாகக் காட்சியளிக்கிறது. அங்கே புல் வளருவதை பங்குனியில் தீ வைத்துவிடுகிறார்கள். சித்திரையில் மழை வரும்போது, இளம் புல்லாக வளருவதை மாட்டுக்குப் பயன்படுத்துவதற்காக மாட்டுக்காரர்கள் தீ வைக்கிறார்கள். அதைத் தடுக்க ஆவன செய்து, வளம் வளருவதற்கு உபயோகமான வேலைகள், அத்தனையும் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மரம் மற்றவைகள் பாரஸ்ட் டிபார்ட்மெண்டில் கீழ் வருவதால் பாரஸ்ட் டிபார்ட்மெண்டார் இப்பொழுது பாரஸ்டுக்காக போட்டுவரும் ரோடு வேலைகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்கு மாற்றப்படவேண்டும். "காபிடல் ஔட்லே" என்று குறிப்பிடுவதில் ரூ. 2,02,000, மற்றபடி பொதுவாக மானியத்தில் ரூ. 2,50,000, **Maintenance of roads** என்று தலைப்பின் கீழ் ரோடு வேலைக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 4,50,000-ஐயும் இவர்கள் ஹைவேஸ் பராமரிப்புக்காக பாரஸ்ட் டிபார்ட்மெண்டே வைத்துக்கொண்டாலும் சரி, அல்லது ரோடு பராமரிப்புக்கு இந்த ரோடுகள் மாறுதல் ஆவதற்கு ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்கு மாற்றிக் கொடுத்துக் கொண்டு, இந்தப் பராமரிப்புக்கு ஹைவேஸில் இருக்கும் மரப் பராமரிப்புக்காக அதிகமான மானியம் கோரச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஆங்காங்கு பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுவதற்கும், பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதற்கும் இருக்கும் சட்ட திட்டங்களை அவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்கள் நல்ல பலன் அடைவதற்கு உபயோககரமாக இருக்கவேண்டுமென்பதற்காக கலெக்டர்களுடைய அன்றாட நடவடிக்கை பொறுப்புகளை ஜில்லா அளவில் ரெவின்யூ ஆபீஸர்களை நியமித்து அவர்களுக்கு மாற்றியிருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER: **May I know how it is relevant to the** Demand. It has nothing to do with the Forest.

**Sri W. P. A. R. CHANDRASEKHARAN: I am coming to that.** அம்மாதிரி ரெவின்யூ ஆபீசர்களை நியமித்த பிறகு, பஞ்சாயத்து யூனியன் அளவிலே எந்தெந்த டிபார்ட்டுமெண்டோடு தொடர்பு ஏற்படவேண்டும், கண்காணிப்பு வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதில் "பாரெஸ்டு டிபார்ட்மெண்டு" விடப்பட்டிருக்கிறது. மற்ற டிபார்ட்டுமெண்டுகள் அனைத்தும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் கருதுகிறேன், பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட பிறகு, வனம் பூராவும் பஞ்சாயத்து யூனியன்களின் நேரடியான கண்காணிப்புக்கு வந்துவிடும் என்று கருதி பாரெஸ்டு டிபார்ட்மெண்டு என்பது அதில் குறிப்பிடாமல் இருக்கிறது. அந்த மாதிரி இருந்தால், பக்கத்தில் இருப்பவர் தீர்மான உத்தரவுகள் பிறப்பிக்கக் கூடியவராக இருப்பதன் மூலம் அவைகள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும். ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களின்கீழ் வன இலாகா அல்லது வன இலாகா சம்பந்தப்பட்ட பகுதிகளை கொடுக்காமல் வன இலாகா மூலமாகவே அவைகளை கண்காணிக்க வேண்டுமென்பதற்காக இதை குறிப்பிடுகிறேன்.

பாரெஸ்டு டிபார்ட்மெண்டு மூலமாக தாண்டிக்குடி மலைப் பகுதியில் காபி போர்டு மூலம் நிறுவப்படும் "எக்ஸ்பெரிமெண்டல் ஸ்டேஷனுக்காக" 25 ஏக்கர்கள் கொடுத்திருக்கிறார்கள். இதற்காக சர்க்காருக்கு சம்பந்தப்பட்ட விவசாயிகளின் சார்பாக நன்றி செலுத்துகிறேன். அதே நேரத்தில் கொடைக்கானலில் பாரெஸ்டு டிபார்ட்மெண்டு நடத்தும் ஒரு ரிசர்ச் ஸ்டேஷன் இருக்கிறது. அங்கே வாடில் மரங்கள் நன்றாக பயிராவதற்கு இடைஞ்சலாக இருக்கும் புல், களை, முதலியவைகளை எப்படி தடங்கல் செய்வது என்பது பற்றி ஆராய்ச்சி நடைபெறுகிறது. அதற்காக உபயோகப்படுத்தவேண்டிய மருந்தை கண்டுபிடிப்பது பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு அந்த ரிசர்ச்

ஸ்டேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த இரண்டு ரிஸர்ச் ஸ்டேஷன்களும் ஒன்றுகச் சேர்ந்து இணைந்து வேலே செய்து பொதுவாக இருக்கும் பிரச்னைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து, பயன்பெற்ற முடிவுகளை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு தெரிவிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து, எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri K. SATTANATHA KARAYALAR :** உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்த மான்யக் கோரிக்கையின் மீது கொடுத்திருக்கக் கூடிய வெட்டுப் பிரேரணையின் அடிப்படையில் சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகின்றேன். நமது மாகாணத்தில் காட்டுப் பகுதி மிகவும் குறைவு என்று மந்திரி அவர்கள் கூறியதை நான் பரிபூரணமாக ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனல், அதை வளர்ப்பதற்கு எந்த அளவு நாம் ஊக்கம் காட்டுகிறேம் என்பதைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டியிருக்கிறது. காட்டு இலாகா என்று சொல்லும்பொழுது, அதற்கு பரம்பரையாக ஒரு கன்சர்வேடிவ் மனப்பான்மை உண்டு. ஒருவேளை பாதுகாக்கக்கூடிய, கன்சர்வ் செய்யக்கூடிய மனப்பான்மையில் அது வந்ததோ என்னவோ. ஆனல், காட்டை வளர்ப்பதிலே இது பிரதிபலிப்பதனுல்தான் என்போன்றவர்களுக்கு வருத்தம் தோன்றுகிறது. ஒரு குறிப்பிட்ட "வொர்க்கிங் பிளானை" வைத்துக்கொண்டு, அதுவும் பல ஆண்டுகளுக்குமுன் தயாரிக்கப்பட்ட "வொர்கிங் பிளானை" வைத்துக்கொண்டு அந்த அடிப்படையிலே மேலும் வேலே செய்துகொண்டிருக்கிருர்கள். காலத்திற்கு ஒப்ப, ராஜ்ய புனரமைப்புக்குப் பிறகு நாட்டில் இருக்கக் கூடிய காடுகள் குறைந்திருப்பதை ஒட்டி, இது எவ்வளவு துரிதமாகவும், வேகமாகவும் நடக்கவேண்டுமோ அம்மாதிரி நடப்பது இல்லை. உதாரணமாக, டீக் பிளான்டை பொருத்தமட்டில், 60 ஆண்டுகளுக்கு ஒரு ஸைகிள் என்று வைத்துக்கொண்டு, அதுவே எப்பொழுதும் நியதியாக இருக்கவேண்டும் என்று நினைக்கிருர்கள். அதை மாற்றவேண்டுமென்று முன்பே இந்தச் சபையில் வலியுறுத்தியிருக்கிறேன். 30 ஆண்டுகள் அல்லது 40 ஆண்டுகள் அடிப்படையில் "ரிஜனரேஷன்" இன்னும் அதிகப்படுத்தவேண்டும். மரங்களை வெட்டுவது, "பெல்லிங்" வேண்டுமானல் பிறகு செய்துகொள்ளலாம். மரங்கள் வளர்ப்பதிலே இன்னும் அதிக துரிதம் காட்டவேண்டும் என்பதை நான் இப்பொழுது ஊர்ஜிதம் செய்ய விரும்புகிறேன். "பெல்லிங்" "ரிஜெனரேஷன்" இந்த இரண்டிற்கும் தொடர்பு இருக்கவேண்டுமென்ற தத்துவத்தை நான் ஒத்துக்கொள்ளுவதற்கு இல்லை.

ரப்பர் பிளான்டேஷன் 5 ஆண்டுகளில் 3,000 ஏகரிலே போடயிருக்கிறேம். ரப்பர் வளர்ப்பதிலே இன்னும் அதிக அக்கரை காட்டவேண்டும். செங்கோட்டை, கன்யாகுமரி ஆகிய வட்டாரங்களில் உள்ளவர்களுக்கு இந்த துறை நன்றுகத் தெரியும். சர்க்கார் தரப்பிலே எடுத்துள்ள திட்டம் மிகவும் குறைவு என்பதில் சந்தேகம் இல்லை. தனியார் துறையிலே ஒரே சந்தர்ப்பத்தில் ஆயிரக்கணக்கான ஏகர்களில் ரப்பர் பயிரிடுகிருர்கள். அப்படியிருக்கும்பொழுது, நாம் அவர்களைப்பார்க்கிலும் இன்னும் பன்மடங்கு அதிகமாகச் செய்ய முடியும். மிக விரிவான முறையில், அங்கு நமக்கு இருக்கக்கூடிய நிலங்கள் பூராவிலும், ரப்பர் வைக்க முடியும் என்ற பகுதி பூராவிலும் ஒரு குறிப்பிட்ட காலவரையிலே, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களுக்குள்ளாவது எல்லாயிடங்களிலும் ரப்பர் வைக்கக் கூடிய ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டும், அதற்காக ஒரு டார்ஜெட் அமைய வேண்டுமென்று வற்புறுத்தி கூறிக்கொள்ளுகிறேன். ஏற்கனவே சில தனியார் காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகள் சரியான முறையில் பராமரிக்கப்படாமல், மழைக் காலத்தில் அதற்குப் போதிய பாதுகாப்பும், மண் அரிப்புக்குப் போதிய பாதுகாப்பும் இல்லாத முறையில் மண்வளம் கெட்டு, காடுகள் வளம் குறைந்துகொண்டு வருகிறது. அம்மாதிரி உள்ள காடுகளையும் பாதுகாக்கக்கூடிய முறையில் உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். தனியார் காடுகள் அனைத்தையும் சர்க்காரே எடுத்துக்கொள்ளுவது மிகவும் நன்றுக இருக்கும். பராமரிப்பு இல்லாத காரணத்தினுல் அந்தக் காடுகள் அழிந்துபோகக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. அம்மாதிரி பராமரிப்பு இல்லாமல் இருந்தால், அந்தப் பகுதி முழுவதும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லாத நிலைமைக்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



சந்தன மரத்தைப் பொறுத்தமட்டில், ஸ்பைக் நோய் வருவதை தடுப்பதற்காக ஒரு தனி ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். அந்த ஆராய்ச்சி எப்பொழுது முடிவடையும் என்று தெரிந்துகொள்ள அவாவுறுகிறேன். இந்த ஆராய்ச்சி சம்பந்தமாக பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றன. சில இடங்களில் சந்தன மரத்திற்கு ஸ்பைக் நோய் வருகிறது ஒரே பகுதியிலே. ஹோஸ்டு பிளாண்டு என்று சொல்லக்கூடிய இதர புல் போன்றவைகளிலிருந்து தாதுப் பொருளை எடுத்து ஜீவனம் செய்யக்கூடியது சந்தன மரம். சந்தன மரத்தைப் பொறுத்தமட்டில், ஹோஸ்டு பிளாண்டு எதுவாக இருந்தாலும் சில வட்டாரங்களில் இந்த சிக்கு வருவதில்லை என்று அந்த வட்டார மக்கள் கருதுகிருர்கள். இன்னெரு பகுதியில் அந்த சிக்கு வருகிறது. இதையெல்லாம் மனதில் வைத்து ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கும் என்று நினைக்கிறேன். மைசூரைப் பொருத்தமட்டில் ஏற்கனவே மிகப் பெரிய நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. நமக்கும் லட்சக்கணக்கான ரூபாய் வருவாய் துறையிலே நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதிலே சந்தேகம் இல்லை. ஆகவே, உடனடியாக ஸ்பைக் நோயை கட்டுப்படுத்துவதற்கு உள்ள நடவடிக்கைகளை எவ்வளவு துரிதமாக எடுக்க முடியுமோ அவ்வளவு துரிதமாக ஆராய்ச்சி துறையிலே ஒரு முடிவு எடுத்து அதை எவ்வளவு சீக்கிரமாக அமுலுக்குக் கொண்டுவரமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தனமரத்தைப் பொறுத்தமட்டில், அது இயற்கையாகத்தான் வளரும் என்ற நியதி ஒன்றும் இல்லை. சமீபத்தில் டெல்லியில் நடந்த விவசாய பொருட்காட்சியில்கூட விதைகளை வைத்து "ரிஜெனரேஷன்" ஆர்டிபிஷலாக செய்யமுடியும் என்பதைக் காண்பித்தார்கள். அந்த முறையை ஒட்டி, பரவலாக எங்கெல்லாம் நாம் சந்தன மரத்தைப் பயிரிடமுடியுமோ அந்த இடங்களிலெல்லாம் பயிர்செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். நமது காடுகளிலே பலவிதமான மூலிகைச் செடிகள் இருக்கின்றன. அவைகளை அபிவிருத்தி செய்யவேண்டியது மிகமிக அவசியம். எங்கள் வட்டாரத்தில், "குறுந்தட்டி" என்பது ஆயர்வேத வைத்தியத்தில் மிக முக்கியமானது. அதேபோல் மருத்துவா மலையிலும், பொதிகை மலையிலும், பல முக்கியமான மருந்துச் செடிகள் இருக்கின்றன. அவைகள் எந்தெந்த வட்டாரத்திலே என்னென்ன செடிகள் இருக்கின்றன என்பதையெல்லாம் சாங்கோபாங்கமாக பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டியது அவசியம். இது சம்பந்தமாக ஒரு உயர்தர அதிகாரி ரிப்போர்ட் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அந்த ரிப்போர்ட்டை வெளிப்படுத்தினல், நன்றுக இருக்கும்.

சில வட்டாரங்களில், பீடி இலைகள் அபிவிருத்தி செய்யத்தக்க வாய்ப்புகள் இருக்கின்றன. அது சம்பந்தமாக ஏதாவது ஆராய்ச்சி செய்து அறிவிக்க வேண்டும். ஜமீன் காடுகள் என்பவற்றில் பல காடுகள் என்று சொல்வதற்கும் இல்லாமல், கட்டாந்தரை என்று சொல்வதற்கும் இல்லாமல் காடுகளாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்த இடங்களை ஒதுக்கி தனிப்பட்ட விவசாயிகளுக்கு, கொடுத்தால், அங்கே விவசாயம் செய்யலாம், அங்கே வளரக்கூடிய சோளம் போன்ற புஞ்சைத் தானியங்களையாவது பயிரிடுவார்கள். தற்சமயம் அங்கே இருக்கிறேமா என்பதைப் பற்றியும், ... அவை காட்டிலாகா குத்துச் செடிகள்கூட வளருவதில்லை; இருந்தாலும், அம்மாதிரி நிலங்களை, விவசாயத்திற்குக் கொடுக்க வாய்ப்பு இருந்தால் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், (**Kelle**) கேலி என்ற மங்க்ரூவ் பாரஸ்ட் (**Mangrove forest**) பிரதேசம் இருக்கிறது. அங்கே தண்ணீர் பெரும் பகுதியில் தேங்கி இருக்கிறது. இங்கு சர்க்கார் தரப்பில் எந்தவிதமான விவசாயமும் செய்யப்படவில்லை. அங்கே கோகனட் ப்ளான்டேஷன் செய்யலாமா என்று பரிசீலனை செய்யவேண்டியதவசியம். அம்மாதிரி தண்ணீர் தேங்கிய இடங்களிலே, கேரளப் பகுதியில் தென்னை வைத்து வளர்க்கிருர்கள். இங்கேயும் அம்மாதிரி சாத்தியக் கூறுகள் உண்டா என்று காட்டிலாகா பரிசீலனை செய்து முடியுமானல் அந்தப் பிரதேசத்தை செழிப்பான தென்னை வளரும் பிரதேசமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக முதுமலையைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அடிக்கடி இந்த முதுமலைக்கு, நம் ராஜ்யத்திலிருந்தும், மைசூர் பக்கத்திலிருந்தும் யாத்திரீகர்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே எந்தவிதமான வாய்ப்பும், வசதியும் கிடையாது, மிகமிகக் குறைவு என்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அபயாரணியம் என்ற இடத்தில் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அது கார் வைத்திருப்பவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். மற்றவர்களுக்கு இல்லை. பஸ்ஸிலே போகிறவர்கள், ரிசர்வேஷன் ஒன்றும் இல்லாததால், குறிப்பிட்ட சமயம் திரும்பி வரமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, முதுமலை பஸ் ஸ்டாப்பில இரண்டு சீட்டாவது ரிசர்வு செய்து, மைசூர், ஊட்டி போகிறவர்களுக்கு வசதி செய்ய வேண்டும். அங்கு யாரும் ஏறுவிட்டால்தான் பின் ஆட்களை ஏற்ற வேண்டும் என்ற முறையைச் செய்ய வேண்டும். மைசூர் சர்க்காருக்கும் அவ்விதம் எழுதிச் செய்யச் சொல்ல வேண்டும். அந்தக் காட்டிலே வன விலங்குகளைப் பார்க்கவே மக்கள் போகிறார்கள். காட்டிலே எப்பொழுது எந்தப் பகுதியிலே விலங்குகள் இருக்கின்றன என்பது தெரிவதில்லை. போகிறவர்கள் ஓரிரண்டு நாட்கள் பார்த்துவிட்டு, ஏமாந்து திரும்பி விடுகிறார்கள். குறிப்பிட்ட வனவிலங்குகள் எந்தப் பகுதியில் இருக்கின்றன என்று டெலிபோன் மூலம், இன்னின்ன கட்டங்கள், இன்னின்ன இடங்களில் இருக்கின்றன என்று முதலிலே தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம். அங்கு பல வாட்சு டவர் கட்டி, காட்டு உள்ளுக்கும், வெளிக்கும் தொடர்பு ஏற்படுத்திவிட வேண்டும். அப்பொழுது போகிறவர்களுக்கு அதிக வாய்ப்பு இருக்கும். முதுமலையின் மைசூர் பகுதி பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. அதே போல், கேரளப் பகுதியையும் அவர்கள் செய்துவிட்டால், இந்த மூன்று (Range) ரேஞ்சு வரியையும் சேர்த்து தொடர்பு ஏற்படுத்தி, டெலிபோன் மூலம் ஒன்றோடொன்று தொடர்புள்ளதாகச் செய்து, அமைக்க வேண்டியது அவசியம். மேலும் இன்னும் அங்கே பல புதிய மிருகங்களை வளர்க்கமுடியுமா என்றும் பார்க்கவேண்டும். ஹிப்போ முதலிய விலங்குகளை வைக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். இவைகளையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*Sri K. R. VISWANATHAN : உதவி அவைத் தலைவர் அவர்களே, இந்தக் காட்டு இலாகா மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தக் காட்டு இலாகாவைப் பொருத்த வரையில், எனது உடையார்பாளையம் தாலூகாவில், ஜமீன் காடுகள் என்றும், சர்க்கார் காடுகள் என்றும் இருக்கின்றன. ஜமீன் பராமரிப்பிலிருந்து சர்க்கார் எடுத்துக்கொள்ளத் தொடங்கியவுடன் காடுகள் அழிய ஆரம்பித்து விட்டன. அரசாங்கத்தின் கையில் இருந்தாலும், காடுகள் அழிந்துகொண்டே இருக்கின்றன. நல்ல காடுகள் இருந்த காலத்தில், உடையார்பாளையம் தாலூக்காவில் தொடர்ந்து நல்ல பருவ மழை பெய்து கொண்டிருந்தது. விவசாயமும் குன்றாமல் நடந்து வந்தது. ஆனால் இன்றைக்கு ஜமீன் நிர்வாகத்திலிருந்து சர்க்காரிடம் வந்த பிறகு, சரியான படி பாதுகாப்பு செய்ய, பாரஸ்டர்களும் அவர்களுக்குக் கீழே இருக்கும் அதிகாரிகளும் சரியான எண்ணிக்கையில்லாததால், அவைகளைப் பராமரிக்க முடியவில்லை. இந்தக் குறையைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

காடுகளை அழித்து புதுக் காடுகளை நிறுவுவது என்ற திட்டமானது சர்க்காரிடம் இருக்கிறது. அந்த வகையிலே திட்டத்தை நிறைவேற்றும் போது, தொடர்ந்து அங்குள்ள மரங்களையெல்லாம் அழிக்கிறார்கள். அதன் பிறகு புதிதாகக் காடுகளை உற்பத்தி செய்கிறார்கள். சில நல்ல மரங்களை, வேப்பமரம், ஆலமரம், வம்மாறை போன்றவைகளைத்தான் காடுகளை அழித்த பிறகு ரீஜெனரேஷன் என்ற தலைப்பின்கீழ் வைத்து வளர்க்கிறார்கள். நல்ல பசும் தோற்றம் அளிக்கும் மரங்களும் புதர்மரங்களும் ப்ரமாண்டமான மரங்களும் அழிந்துவிட்டபின் உற்பத்தி செய்ய முடியாது. ஆகவே, அழித்து வேலை செய்யப் புகுமுன், ஒரு பாகத்தில் உள்ள





மரங்களின் இனம் அற்றுப்போகாமல், அங்கே இயற்கையிலே வளரும் மரங்களின் விதைகளையும் வைத்து மரங்களை உற்பத்தி செய்யக்கூடிய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தக் காட்டை அழித்து, இம்மாதிரிப் புதுக் காடுகள் உண்டாக்க வேண்டும் என்ற முயற்சியில், குமரி விவசாயம் செய்ய வேண்டுமென்று, எங்கள் பகுதியில் முந்திரி பயிர் செய்யப்படுகிறது. முந்திரி விவசாயம் நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது என்று அறிகிறேன். மக்கள் லாபம் அடைவதோடு, இதனால் அன்னிய செலாவணியும் கிடைக்க வசதி ஏற்படுகிறது. 5, 6 ஆண்டுகளில் இந்த முறை மிகுந்த பலன் தருகிறது. ஆகவே, இந்த முந்திரி விவசாயத்தை மேலும் மேலும் அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே சமயத்தில், முன்பு எல்லாம் வரண்ட காடுகள், புல் பிரதேசங்களில் எல்லாம் மாடுகளை மேய்ப்பதற்கு வழி இருந்து கொண்டிருந்தது. இன்றைக்கு 12-30 p.m. குமரி விவசாயம் செய்ய வேண்டும் என்றுள்ள திட்டம் கொண்டு வந்ததின் பின்னால் மாடுகள் மேய்ப்பதற்கு இடமே இல்லாமல் போய்விடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மாடுகளை மேய்ப்பதற்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது நீர்வளம் பொருந்திய பல பிரதேசங்களிலும் புல் வளர்ப்பதற்கு வேண்டிய திட்டங்களை போட்டிருக்கிறார்கள். கால்நடைகளைப் பாதுகாப்பதிலும் அவைகளுக்குத் தீவனம் செய்ய பல வசதிகளும் செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் வரண்ட பிரதேசங்களில் கால் நடைகளுக்கு தீவனம் கிடைக்காத பிரச்னை பெரிய குறையாக இருந்து கொண்டிருக்கிறது. முன்னால் எல்லாம் 'லைசென்ஸ்' பெற்றுக்கொண்டு மாடுகளை மேய்த்துக்கொள்ளலாம் என்ற வழக்கம் இருந்து வந்தது. இப்போது குமரி விவசாயம் கொண்டு வரப்பட்டிருப்பதின் காரணமாக மாடுகள் மேய்ப்பதற்கு இடமில்லாமல இருந்து கொண்டிருக்கிறது. இத்தகைய பிரதேசங்களில் எல்லாம் இப்போது இருக்கின்ற காடுகளில் ஒரு பகுதியை ஒதுக்கியாவது மாடுகளை மேய்ப்பதற்கு இடம் கொடுக்க வேண்டும். அதோடு மாடுகளுக்கு வேண்டிய புல்லை விளைவிப்பதற்கு காடுகளில் ஒரு பகுதியை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் புல் விளைவிப்பதற்கு பருவ மழை வசதியாக பெய்யாவிட்டாலும், அந்த இடங்களில் எல்லாம் குழாய்க் கிணறுகள் மூலமாகவாவது நீர் கொண்டு வந்து புல் விளைவித்து கால்நடைகளுக்குத் தீவனம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாடுகளுக்கு தீவனம் என்கிற பிரச்னை வரண்ட பிரதேசங்களில் ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சென்ற ஆண்டு பருவ மழை இல்லாத காரணத்தினால் அநேக கால் நடைகள் இறக்க நேரிட்டது என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, கால்நடைகளைப் பாதுகாப்பதில் காட்டு இலாகாவுக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இம்மாதிரியான வரண்ட பிரதேசங்களில் புல் வளத்தைப் பெருக்கச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

Sri K. R. NALLASIVAM : மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, காட்டு வளத்தைப் பொறுத்தவரையில் காடுகள் நமக்குக் குறைவாக இருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் இதை எந்த அளவுக்கு பெருக்குவது என்பதுதான் கேள்வி. இன்றைக்கு கோயம்புத்தூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய பிரதேசங்களில் உள்ள காடுகளின் இடையில் கேரள ராஜ்யத்தை சேர்ந்த காட்டின் ஒரு பகுதியும் சந்திக்கிறது. இவ்விதமாக இருக்கக்கூடிய இந்த கேரள ராஜ்யத்திலுள்ள காட்டுப் பகுதியை நாம் எந்த விதத்திலாவது கேரள ராஜ்யத்தோடு பேசி அந்தப் பகுதியை நம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கான சந்தர்ப்பமும் இருக்கிறது. அதாவது கேரள ராஜ்யத்தைச் சேர்ந்த சில ஊர்களுக்குப் போகவேண்டுமென்றால் நம் பகுதியினுள் சென்றுதான் போக வேண்டும். அதைப் பயன் படுத்திக் கொண்டு அந்தப் பகுதியை நம் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காடுகள் வளராத பகுதிகளை எல்லாம் விவசாயத்திற்கு
கொடுக்க வேண்டுமென்று இங்கு பலர் குறிப்பிட்டார்கள். இது உண்மையில்
செய்யப்பட வேண்டிய காரியம்தான். ஒன்று காடுகளை நல்ல முறையில்
வளர்க்கவேண்டும். அல்லது விவசாயத்திற்குக் கொடுக்கப்படவேண்டும்.
இப்போதும் சர்க்கார் பல இடங்களை விவசாயத்திற்குக் கொடுத்து வரு
கிறார்கள். அதோடு இன்னும் நன்றாக பரிசீலனை செய்துபார்த்து காடுகள்
வளராத இடங்களை எல்லாம் விவசாயத்திற்கு கொடுப்பதற்கு வேண்டிய
நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காடுகள் என்ற அளவில் நமக்கு இப்போது குறைந்த
அளவில்தான் இருந்து கொண்டிருக்கிறது. தேவையான மரங்களை எல்
லாம் காட்டு இலாகாவினர் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றும்
காவேரி கரையோரமாக தேக்கு, சவுக்கு முதலிய மரங்கள் எல்லாம்
வளர்ப்பதற்காக இப்போது ஓரளவு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.
அதை இன்னும் நல்ல முறையில் வளர்ப்பதாக இருந்தால் நல்ல
பலன் கிடைக்கும் என்று நம்புகிறேன். நேரடியாக நான் பல இடங்களில்
பார்த்திருக்கிறேன், காளிங்கராயன் வாய்க்கால் கரையோரமாக 25 மைல்
நீளத்திற்கு தேக்கு மரங்களைப் பயிரிட்டு இருக்கிறார்கள். மந்திரி அவர்கள்
ஈரோடு பகுதி பக்கம் வந்தால் இதைப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். நல்ல முறையில் அந்த மரங்கள் எல்லாம் வளர்ந்திருக்
கின்றன. எங்கு எங்கு சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அந்த இடங்களில் எல்
லாம் தேக்கு மரங்கள், சந்தன மரம், மற்றும் சவுக்கு போன்றவைகளைப்
பயிரிடலாம். அதோடு காவேரிக்கரையோரமாக பள்ளமான பகுதிகளில்
தேக்கு மரங்களின் கன்றுகளைப் பயிரிடுகிறார்கள். ஆனால் இந்தப் பகுதிகளில்
தண்ணீர் அதிகமாக வரும்போது இந்த கன்றுகள் எல்லாம் அடியோடு
நாசமாய் போவதைப் பார்க்கிறோம். ஆகவே இதை மேடான பகுதி
களில் பயிரிட்டால் நாம் செய்கிற முயற்சி வீணாகிப் போகாது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வாய்க்கால் கரையோரங்களில் எல்லாம் தென்னை
மரங்களையும் பயிரிடலாம். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் காட்டு
இலாகாவினர் ஒழுங்காக வேலை செய்து வருகிறார்கள். காவேரிக் கரை
பகுதிகளிலும் காளிங்கராயன் வாய்க்கால் பகுதியிலும் ஒழுங்காக தேக்கு
மரங்கள் வளர்ந்து இருப்பதை பார்த்தேன். அதே முறையில் எல்லா
நதிப் படுகைகளிலும் தேக்கு மரங்களை வளர்க்கலாம் என்று நம்புகிறேன்.
நீர்ப்பாசன வசதிகள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் தேக்கு மரங்களை
வைப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது. மேலும், சந்தன மரத்தைப்
பொறுத்த வரையில் தனியார்கள் பயிரிடக்கூடாது என்ற தடை இருக்கின்
கிறதோ என்னவோ தெரியவில்லை. நம் நாட்டில் பல இடங்களிலும்
சந்தன மரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிகிறது. மைசூரில்
மட்டும்தான் சந்தன மரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று நான்
கூட எண்ணிக் கொண்டிருந்தேன். சில நாட்களுக்கு முன் ஒரு இடத்தில்
ஒரு பெரிய சந்தன மரம் வளர்ந்திருப்பதைப் பார்த்தேன். அது மட்டு
மல்ல, இதற்காக சந்தன மரத்திற்கான கன்றுகளை உற்பத்தி செய்
வதற்காக விதைகளைக் கொண்டு வந்து காவேரிக்கரையில் சாகுபடி செய்
வதையும் பார்த்தேன். ஆனால் தண்ணீர் வரும்போது இவைகள் எல்
லாம் அழுகி வீணாகப் போய்விடுகிறது. ஆகவே, இதைப்பற்றி நன்றாக
பரிசீலனை செய்து பார்த்து ஊர்ப் பகுதிகளில் இதை நல்ல முறையில்
பயிரிடுவதற்கு வழி செய்து கொடுத்தால் நல்ல முறையில் சந்தன மரங்களை
உற்பத்தி செய்ய முடியும் என்று நம்புகிறேன். அதோடு நான் சொன்னது
போன்று தனியார்கள் இதைப் பயிரிடக் கூடாது என்று ஏதாவது தடைகள்
இருந்தால் அதையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
ஒரு சந்தன மரத்தில் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும் என்றும்
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இந்த மரங்களை வளர்ப்பதற்கு
வேண்டிய வசதிகள் சர்க்கார் செய்து கொடுத்தால் விவசாயிகளுக்கு நல்ல
உற்சாகம் இருக்கும். நான் கடைசியாகக் கேட்டுக் கொள்வது, காட்டு இலாகா
வில் பல பகுதிகளிலும் புதிதாக பலரை தற்காலிகமாக வேலைக்கு நியமிக்
கின்றனர். அவர்களை எல்லாம் நிரந்தரமாக்கவேண்டும். ஆ அதோடு





ஓராண்டு காலத்துக்குப் பின்னால் வேலை செய்கின்றவர்களை எல்லாம்
ஒழுங்கான முறையில் சம்பளம் கிடைக்கின்ற அளவில் அவர்களை நிரந்தர
மாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அதோடு அவர்
களுடைய சம்பளங்களையும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டும்.
முக்கியமாக தாற்காலிகமாக இருக்கக்கூடிய ஊழியர்களை எல்லாம் நிரந்தர
மாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : I reduce the time - limit from ten minutes to five minutes as there are half-a-dozen Members yet to speak.

*SRI S. RAMASWAMY NAIDU : கனம் உதவி சபா நாயகர் அவர்
களே, வனவளத்துறையைப்பற்றி, மான்யம் கொண்டுவரப்பட்டிருக்கும்
இந்த நேரத்தில் வனங்களும் இல்லாமல், மலைகளும் இல்லாமல் இருக்கும்
உள் நாட்டுக் கிராம விவசாயி என்ற நிலையில் சில வார்த்தைகள்
சொல்ல விரும்புகிறேன். மலைகள் இருந்தால் வனங்கள் பெருகும்.
வனம் இருந்தால் மழை பெருகும். மழை இருந்தால் நாடு வளம்
பெறும் என்று சொல்லுவார்கள். ஆனால் இன்று மலைகள் இருந்தும்,
வனங்களை எல்லாம் பாதுகாப்பாக வைத்திருந்தும் நாட்டில் மழையில்
லாமல் இருக்கிறது. அதுவும் ராமநாதபுரம் ஜில்லா, திருநெல்வேலி
ஜில்லா போன்ற ஜில்லாக்களில் எல்லாம் மேல் காற்று மலை இருந்து
கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். மலை அமைப்புகள் இருந்தால்
சரியாக மழை பெய்யும் என்று சொல்வதுண்டு. ஆனால் மலைகள் நன்றாக
இருந்தும் மரங்கள் போதிய அளவு இல்லாத காரணத்தினால்தான்
மழை இல்லையோ என்ற சந்தேகம் அடிக்கடி விவசாயிகளுக்கு தோன்றி
யிருக்கிறது. மரங்கள் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று
எல்லா இடங்களிலும் பறைசாற்றப்படுகிறது. இருந்தாலும்கூட மரங்கள்
போதிய அளவு பயிரிடப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்
கிறது. மரங்களை அதிகமாகப் பயிரிட வேண்டும். அதோடு முக்கியமாக
காட்டு இலாகவுக்கு காட்டிலுள்ள மரங்களை வெட்டுவதினால் ஆதாயம்
வருகிறது என்பதற்காக மரங்களை எல்லாம் அழித்து விடக் கூடாது என்று
கேட்டுக்கொள்கிறேன். ஆனைமலை, பழனிமலை, நாகமலை என்று கிளைகள்
மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இருக்கின்றன. இவைகள் மூலமாக
வரும் மேகத்தைத் தடுப்பதற்கு குறுக்கே போதிய அளவு உயர்ந்து
நீண்டு இருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதியில் ஏராளமான மழை
பெய்கிறது. இப்போது முக்கியமாக ஏலத் தோட்டத்திற்கும் தேயிலைத்
தோட்டத்திற்கும் என்று சொல்லி மரங்களை எல்லாம் அழித்துவிடுவார்கள்.
அதனால்தான் மழை பெய்யவில்லையோ என்று சந்தேகம் ஏற்படு
கிறது. சர்க்கார் பல புதிய கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.
தேக்கு மரங்களை வெட்டும்போது நல்ல மரங்களைப் பார்த்து எடுத்து,
ஒரு விலை போட்டு எடுத்துக் கொண்டால் பின்னால் அதிகமான விலை
கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படாது. இப்போது நாம் குறைந்த
விலைக்கு வியாபாரிகளுக்கு கொடுத்து விட்டு பின்னால் அவர்களிடம்
போய் அதிகமான விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் கட்டி
டம் கட்டுவதில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதை கவனிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

வனத்தில் பாதுகாக்கப்பட்டது, பாதுகாக்கப்படாதது என்று இரண்டு
பிரிவுகள் இருக்கின்றன. பாதுகாக்கப்படாத வனங்களென்று சொல்லப்
படுபவைகள் வனங்களாக இல்லை. அதோடு நான் கேட்டுக் கொள்வதில்
வனங்களை பாதிக்கக் கூடிய வெள்ளாடுகள் என்று சொல்லக்கூடிய
சாது ஜந்துகளைக் காடுகளுக்கு அருகாமையில் உள்ள இடங்களில், உள்
நாட்டிலேயே வளர்க்கக் கூடாது என்று சர்க்கார் உத்திரவிடவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இப்போது அபிவிருத்தித் துறையினர் குளப் புறம்போக்கு
நிலங்களிலும், குளக்கரையிலும், ஊர்ப் புறம்போக்கு நிலங்களிலும்
மரங்களை வைக்கும் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்

திலே வனத் துறையினரும் சேர்ந்து நல்ல முறையில் வேலை செய்தால் செழிப்பான வனம் உண்டாகி மழை பெய்ய ஏதுவாகும் என்று நம்புகிறேன்.

சின்னச்சின்ன மலைகளில் இருக்கக் கூடிய மரங்களைப் பொறுத்த வரையில் அங்கே கரி உபத்திரவம் இருக்கிறது. மலைகளில் கரி உண்டாக்குவதற்காக அங்குள்ள மரங்களைக் கொளுத்த வேண்டி அப்படியே காடு முழுவதையுமே கொளுத்தி விடுவதால் அந்த இடத்தில் முளைக்கக் கூடிய மரங்களெல்லாம் வெந்து போய் விடுகின்றன—கரிக்கு பிரயோசனமில்லாத மரங்கள்கூட வெந்து போய்விடுகின்றன. நான் ஒரு யோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன். கரி உண்டாக்குகின்றவர்கள் காட்டிலுள்ள மரங்களை வெட்டி—கரிக்கு உபயோகக்கூடிய மரங்களை மட்டும் வெட்டி—மலைக்கு கீழே சாதாரண பூமிக்கு கொண்டு வந்துதான் கொளுத்த வேண்டும் என்று ஒரு உத்தரவு போட்டால்தான் இந்த மலைகளிலுள்ள வனவளம் குறையாமல் இருக்கும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அம்மாதிரி செய்தால் மக்களுக்கும் பிரயோசனமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ரஸ்தாக்களில் சாதாரணமாக மரங்கள் வைப்பதைப்பற்றி நண்பர்கள் பேசினார்கள். இம்மாதிரி சர்க்காருக்குச் சொந்தமான மரங்களை—பொது மரங்களை— எந்த மரத்தை வெட்டினாலும் தண்டனை பலமாக இருக்கவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். இப்பொழுது தலைசுமைக்கு 4 அணா என்ற ரேட்டுக்கு கம்பௌண்ட் செய்து வாங்கக் கூடிய நிலை இருப்பதால் இம்மாதிரியான மரங்களைக் கூசாமல் வெட்டுகிறார்கள். பொது மரங்களைத் தொட்டால் ஆபத்து என்று பயம் உண்டாகக் கூடிய முறையில் சட்டத்தைத் திருத்தியாவது தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கக் கூடிய முறையில் ஒரு உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri J. MATHA GOWDER :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, வளத்துறை மான்யக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வனத்தைப் பொறுத்த வரையில் நீலகிரி ஜில்லாவினுடைய சில குறைபாடுகளை எடுத்துச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. நீலகிரி ஜில்லாவிலே இருக்கக்கூடிய நிலப்பரப்பிலே வனங்களை உற்பத்தி செய்வதற்காக வனத் துறையாளர்கள் மரங்களை நடுகிறார்கள். அதே நேரத்தில் இன்றைக்கு குந்தா மின்சாரத் திட்டத்திற்காக அங்கு அணைக்கட்டுகளைக்கட்ட பல ஏக்கர் பூமிகள் அதிலே போய் விடுகிறது. அப்படி இரண்டு பக்கத்திலும், ஒரு பக்கத்திலே வன விலங்குகளைக் காப்பாற்றவும், ஒரு பக்கத்திலே காட்டுச் செல்வத்தை வளர்க்கவும் அங்கு நிலத்தை அதிமாகப் பயன்படுத்திக் கொண்டு, அங்கு மாத்திரம் திட்டங்களைப் போடும்போது அங்கு இருக்கக்கூடிய மக்கள் என்ன செய்வது என்பதைப்பற்றிச் சில காலத்திற்குள் பிரச்சனை வந்து விடுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. காரணம் என்ன என்று சொன்னால் காடுகள் வளர்ப்பதில் ஜில்லாவிற்கு இத்தனை ஏக்கர் என்று டார்ஜெட் போடுகிறோம். குறிப்பாக நீலகிரி ஜில்லாவிற்கு டார்ஜெட் போடும்போது எங்கெங்கே சாத்தியமான இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் காடுகளை வளர்க்க ஆரம்பித்து விடுகிறார்கள். வீடுகளுக்குப் பக்கத்தில் காடுகளை வளர்க்கக் கூடாது என்று எத்தனையோ முறை சொல்லியும் அங்கெல்லாம் வளர்க்க ஆரம்பித்து விடுகிறார்கள். ப்ளூகம், வாட்டில் போன்ற மரங்களை உற்பத்திச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோம். அவைகளுக்குத் தகுந்த இடம் இருக்கும்போது ஊருக்குப் பக்கத்தில் மரங்களை நட ஆரம்பித்து விடுகிறார்கள். இதைப் பற்றி பல விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அமைச்சருக்கும் கூட உதகையில் இருக்கும் போது சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்திரவிட வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.





குறிப்பாக வேறு மரங்களை விட ப்ளூகம், வாட்டில் மரங்களை மாத்திரம் அதிகமாக நடலாம். அதை நடுவதற்கு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பூமி உதகைக்கும் கூடலூருக்குமிடையே இருந்தாலும் அதை விட்டு விட்டு ஊர்ப் பக்கத்தில் நடுகிறார்கள். அதைச் சற்று கவனிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வனத்திலே ரோடுகள் போகின்றன. பப்ளிக் ரோடுகள் —ரைட்ஆப் வே— போகின்றன. குறிப்பாக தெங்கு மராட்டாவைப் பற்றி அமைச்சருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அங்கு ஒரு கூட்டுறவுப் பண்ணை இருக்கிறது. அந்தப் பண்ணைக்குப் போகக் கூடிய வாகனங்கள் அங்கு போவதற்கு உத்தரவு வாங்க வேண்டுமென்று இப்போது உத்தரவு போட்டிருக்கிறார்கள். எட்டு அல்லது ஒன்பது வருஷங்களாக பல வாகனங்கள் போய்க்கொண்டிருக்கும் போது, இப்போது எந்த வாகனங்கள் போனாலும் பர்மிட் வாங்க வேண்டுமென்று சொன்னால், அங்கே அமைச்சர் கூடப் போக தடை இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். இப்போது எந்த வண்டியானாலும் பர்மிட் வாங்க வேண்டுமென்று தகராறு செய்து கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி அங்கு இருப்பவர்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்திருக்கிறார்கள். பல ஆண்டுகளாக வழக்கமாக உபயோகித்துக் கொண்டிருந்தும் இப்போது உத்தரவு வாங்க வேண்டுமென்று சொல்வது முறையாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிற்குச் சொல்லி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் மிகவும் தடங்கல் ஏற்படுகிறது. இதை அவசியம் கவனிக்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, குள்ளம்பாளையக் கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்துவதை பற்றி அமைச்சருக்கு விண்ணப்பம் கொடுத்தது ஞாபகம் இருக்குமென்று நினைக்கிறேன். சென்ற ஆண்டு அமைச்சருக்கு பவானிசாகரில் காட்டில் வாழக்கூடிய இருளர்களும், குறும்பர்களும் விண்ணப்பம் கொடுத்தும் அந்த வேலை இன்னும் முடிந்தபாடில்லை. 1954-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட திட்டம் இன்னும் காலம் கடந்து போவதன் காரணம் என்ன என்று டிபார்ட்மெண்டில் விசாரித்தபோது பாரஸ்ட் டிபார்ட்மெண்டில் அடிக்கடி மிகவும் கால தாமதம் செய்கிறார்கள் என்று தெரிகிறது. இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு அமைச்சரிடத்தில் காட்டில் இருக்கக்கூடிய இருளர்கள் காட்டை வெட்டிவிட்டார்கள். தவறு ஏற்பட்டுவிட்டது என்று சொல்லியும் கூட, இருளர்களை ஜில்லா காட்டு அதிகாரிக் கோர்ட்டில் ஏற்றி ஒவ்வொரு வாரமும் 30 குடும்பங்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. 30 குடும்பங்களாக ஒவ்வொருவாரமும் ஜெயிலில் இருந்திருக்கிறார்கள் என்று அமைச்சருக்கு குறிப்பிட விரும்புகிறேன். சற்று அவர்களுக்கு கண்டிப்பான முறையில் சொல்லவேண்டும். காட்டில் வசிக்கக் கூடிய இவர்களுக்கு சட்ட திட்டம் தெரியாது. சட்ட திட்டம் தெரியாத காரணத்தினால் சிறு தவறுகள் செய்து விட்டார்கள். இந்தக் காரணத்திற்காக இவ்வளவு தண்டனை கொடுக்கக் கூடாது என்று சொல்லி இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

**Sri C. NATARAJAN :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மான்யத்தின் பேரில் அங்கத்தினர்கள் பிரேரேபித்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

கள்ளக்குறிச்சி என்பது கள்ளர் குறிச்சி— அதாவது கள்ளர்கள் வாழக் கூடிய இடமாக இருந்து— மருவி இப்போது கள்ளக்குறிச்சியாகியிருக்கிறது என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள. அந்த மலைப்பகுதியில் சில காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகளில் இருப்பவைகள் சர்காருக்குத்தான் கிடைக்க வேண்டும். அங்கு இருக்கக் கூடிய அரிய நாடு, குறும்ப நாடு, சடைய நாடு எல்லாம் ஜாகீர்தார் கையில் இருக்கின்றன. அவர்கள் அதற்கு நம்முடைய அரசாங்கத்திற்கு குத்தகையாகச் செலுத்த வேண்டிய

தொகை ரூபாய் 850. இந்த 850 ரூபாயைச் செலுத்தி விட்டு 50,000 மக்களை வைத்து ஆட்சி செலுத்துகிறார்கள். சுருக்கமாகக் கூறினால் அங்குள்ள 50,000 மக்களில் 4 பேர்கள் தான் சென்ற தேர்தலில் ஓட்டளித்திருக்கிறார்கள். அவர்கள் இருக்கிற இந்த இடத்திலே அவர்களுடைய காட்டிலே என்ன இருக்கிறது என்று கேட்டால், தேக்கு, மூங்கில், சந்தனம் இன்னும் பயிரிடக் கூடிய தானியங்கள் எல்லாம் இருக்கின்றன. இவர்கள் எதையும் பயன்படுத்தக் கூடாது. அப்படி எதையாவது பயன்படுத்துவதானால் ஜாகிர்தாருக்கு வரி செலுத்த வேண்டும். இப்போதுதான் 50,000 பேர்கள் இருக்கக் கூடிய இடத்தில், நான் சட்டமன்றத்திற்கு வந்த பிறகுதான், 20 பள்ளிகளைத் திறந்திருக்கிறார்கள். அங்கே ரோடே கிடையாது. ஆஸ்பத்திரியே இல்லை. இந்த நிலையில் அங்கே 50,000 பேர்கள் இருக்கிறார்கள் என்றால், இது எவ்வாறு ஜனநாயகத்திற்குப் பொருந்தும்? இது சம்பந்தமாக தென்னாற்காடு மாவட்டத்தில் போடப்பட்ட ஒரு கேஸை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஜாகிர்தார்கள் விஷயத்தில் நாம் தலையிட கூடாது என்று ஆங்கிலேயர்கள் இட்ட ஆணை அப்படியே இருக்கிறது. அவர்கள் விஷயத்தில் தலையிடக் கூடாது என்று இப்போது கூட நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அங்கே ஜாகிர்தார்கள் மக்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். சந்தனமும், மூங்கிலும், தேக்கும், கடுக்காயும் விளையும் இந்த இடத்தில் ஜாகிர்தார்களின் அதிகாரம்தான் இருக்கிறது. அங்குள்ள மக்கள் ஜாகிர்தார்களுக்கு வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. அங்குள்ள கொடுமைக்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். அங்கு ஒரு குமரி ஒரு குமரனை திருமணம் செய்து கொள்ள விரும்பினால் ஜாகிர்தார்கள் அனுமதி பெற்றுத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஜாகிர்தார்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால், அந்தக் குமரி அந்தக் குமரனை திருமணம் செய்து கொள்ள முடியாது. திருமணம் ஆன பிறகு அக்குடும்பத்தில் இருவரும் ஆணும் பெண்ணும் ஜாகிர்தாருக்கு வரி செலுத்த வேண்டும். அவர்களுக்கு குழந்தை பிறந்தால் குழந்தை வரி செலுத்த வேண்டும். உழவுக்கருவிகள் வரைக்கும் அவர்கள் வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஜாகிர்தாரின் திருமணத்திற்கும், ஜாகீர்தாரின் மகனுடைய திருமணத்திற்கும் அம்மக்கள் வரி கொடுக்க வேண்டும். அம்மக்கள் இவ்வளவு கொடுமைக்கு உட்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் போட்ட சட்டம் இன்றும் அப்படியே இருக்கிறது. ஜாகீரை எடுக்க சர்க்கார் முன் வரவேண்டும். நான் கூறுவதை கனம் அமைச்சர் சினிமாக் கதைப் போல கருதாமல் அங்குள்ள விவரங்களைத் தெரிந்து கொண்டு ஆவன செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, சின்ன சேலம், ஆத்தூர், வாரநத்தம் பகுதிகளில் மலைகளில் ஏறிச் செல்ல வேண்டியிருக்கிறது. உணவு தானியங்களோ விவசாயக் கருவிகளோ வாங்க நகரப்பகுதிகளுக்கு வர வேண்டுமானால் அங்குள்ளவர்கள் மலைமீது ஏறித்தான் வர வேண்டியிருக்கிறது. அப்போது நடந்து தான் வர வேண்டியிருக்கிறது. காரணம் அங்கே எந்தவிதமான ரோடு வசதியும் இல்லை. பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தின் கீழாவது அங்கே இந்த ரோடு வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் அங்கே மலைப் பகுதிகளில், தகரை, நாய், குப்பம் என்ற வாயால் சொல்லக்கூடாத பெயர்கள் கொண்ட ஊர்கள் இருக்கின்றன. அங்கே பள்ளிக்கூட வசதிகளும் மற்ற வசதிகளும் இல்லை. அங்கே பள்ளிக்கூடங்களை நன்றாக நடத்துவதற்கு ஆசிரியர்களுக்குப் போதுமான அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up. He will resume his seat.

**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். காடு வளம் நாட்டு வளத்திற்கு வேண்டிய மிக மிக முக்கியமான செல்வமாகும். இப்போது நாம் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கிறது. விவசாயப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்கிறோம். அதற்கு அத்தியாவசியமாக இருப்பது உரம்.





சாதாரணமாகத் தேவைப்படும் பசுந்தாள் உரம் காட்டில்தான் கிடைக்கிறது. கால்நடைக்கான தீவனம் காட்டில்தான் கிடைக்கிறது. அயல் நாட்டு செலாவணி நெருக்கடியை சமாளிக்க, டானரிக்கு வேண்டிய பட்டைகளைக் கொடுக்கக்கூடிய வாட்டில் மரங்கள் காடுகளில்தான் இருக்கின்றன. மேலும் காடுகளில் நாம் விலையுயர்ந்த மரங்களை உற்பத்தி செய்ய முடியும் என்பதையும் பார்க்கிறோம். இன்று காட்டு செல்வம் இந்த ராஜ்யத்தில் இதர ராஜ்யங்களிலுள்ளதை விடக் குறைவாக இருக்கிறது என்று தெரிகிறது. இந்த ராஜ்யத்தில் காடுகளைப் பாதுகாக்க போதுமான முயற்சி செய்யப்படவில்லை என்பது என் அபிப்பிராயம். இன்று, வாழ வழியில்லாத ஏழை ஹரிஜனங்கள் காடுகளிலுள்ள உலர்ந்த சுள்ளிகளை தலைச்சுமையாக எடுத்துவந்தால் அவர்களைத்தான் பிடித்து அவர்கள் பேரில் கேஸ் போடுகிறார்கள். பெரிய கண்டராக்டர்கள் பச்சை மரங்களை வெட்டிக்கொண்டுபோய் எவ்வளவோ கொள்ளையடிக்கிறார்கள். இது பற்றி பல ஜில்லாக்களிலிருந்து கம்ப்ளெய்ண்டுகள் வந்திருக்கின்றன. அவைகளை உடனடியாகக் கவனித்து அந்த கொள்ளையடிக்கும் சக்திகளை அடக்கி ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நான் இதைச் சொல்கிறேன் என்பதால் என்னை அடக்கவோ ஒடுக்கவோ கனம் அமைச்சர் முன்வரக் கூடாது. சர்க்காரின் வருமானத்திற்கு இடையூறாக இருக்கும் தீய சக்திகளை அடக்கவும் ஒடுக்கவும் வேண்டும் என்று தான் நான் சொல்கிறேன். காடுகளைப் பாதுகாத்தால் சர்க்காரின் வருமானம் அதிகரிக்கும். சர்க்காரின் வருமானம் அதிகரித்தால் ஏழை மக்களின் மீது மேலும் மேலும் வரி போட வேண்டிய அவசியம் ஏற்படாது. ஏழை மக்கள் உலர்ந்த சுள்ளிகளை இலவசமாக எடுத்துச் செல்வதற்கு வகை செய்யும் முறையில் விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

விலையுயர்ந்த மரங்கள் என்ற தலைப்பின் கீழ் சந்தன மரம் குறிப்பிடப்படவில்லை. சந்தன மரங்களை அபிவிருத்தி செய்வதில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டும். மண்வளத்தைப் பொறுத்தவரையில், மலையடிவாரங்களில், காற்றாலும் மழையாலும் மண் அடித்துச் செல்லப்படுகிறது. அங்கே தண்ணீர் நிற்பதில்லை. மலையடிவாரங்களில், மண்ணை மழைத் தண்ணீர் அடித்துக் கொண்டு போவதால், சிறு சிறு செக் டாம்களைக் கட்ட வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

மேலும், நமது ராஜ்யத்தில், பீடித் தொழில் ஒரு பிரதான தொழிலாக இருக்கிறது. பீடிகளுக்கு வேண்டிய இலைகள் இப்போது பக்கத்து ராஜ்யங்களிலிருந்துதான் கொண்டுவரப்பட வேண்டியிருக்கின்றன. பீடி இலைகளை நிறைய இங்கே உற்பத்தி செய்வதில் பிரதான கவனம் செலுத்த வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன். ஐந்து நிமிடங்களில் எவ்வாறு நான் எதைச்சொல்ல முடியும்.

DEPUTY SPEAKER : Sri T. S. Ramaswami will now speak.

**Sri V. K. KOTHANDARAMAN** : Two minutes more, Sir.

DEPUTY SPEAKER : No. The hon. Members time is up. He will resume his seat.

**Sri T. S. RAMASWAMY** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் போது, இதற்கு முன்பு நான் குறிப்பிட்டிருக்கும் ஒரு விஷயத்தையே விவரமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த மானிய கோரிக்கையில் ரப்பர் ப்ளான்டேஷனுக்காக 2 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட் மெமொராண்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, இலாகாவினரின் திட்டம், 8-ஆண்டு கால—நீண்ட கால—ஸ்கீமில் பேஸ்ட் ப்ரோக்ராமில் ஒரு ஆண்டுக்கு 300 ஏக்கர் வீதம் 8 ஆண்டுகளில் 3,000 ஏக்கரில் ரப்பர் பயிரிட வேண்டுமென்பது ஆகும். 3000-க்கும் மேற்பட்ட பல ஏக்கர்கள் ரப்பர் பயிரிடுவதற்கு சௌகரியமான இடங்கள் இந்த ராஜ்யத்தில் இருக்கின்றன. சாதாரணமான பிரதேசங்களில் கூட இதை பயிரிட்டால் நன்றாக வளரும். ஏனென்றால் கேரளத்தில் கடையம் ஜில்லா

[Sri C. Natarajan] [23rd March 1960

தொகை ரூபாய் 850. இந்த 850 ரூபாயைச் செலுத்தி விட்டு 50,000 மக்களை வைத்து ஆட்சி செலுத்துகிறார்கள். சுருக்கமாகக் கூறினால் அங்குள்ள 50,000 மக்களில் 4 பேர்கள் தான் சென்ற தேர்தலில் ஓட்டளித்திருக்கிறார்கள். அவர்கள் இருக்கிற இந்த இடத்திலே அவர்களுடைய காட்டிலே என்ன இருக்கிறது என்று கேட்டால், தேக்கு, மூங்கில், சந்தனம் இன்னும் பயிரிடக் கூடிய தானியங்கள் எல்லாம் இருக்கின்றன. இவர்கள் எதையும் பயன்படுத்தக் கூடாது. அப்படி எதையாவது பயன்படுத்துவதானால் ஜாகிர்தாருக்கு வரி செலுத்த வேண்டும். இப்போதுதான் 50,000 பேர்கள் இருக்கக் கூடிய இடத்தில், நான் சட்டமன்றத்திற்கு வந்த பிறகுதான், 20 பள்ளிகளைத் திறந்திருக்கிறார்கள். அங்கே ரோடே கிடையாது. ஆஸ்பத்திரியே இல்லை. இந்த நிலையில் அங்கே 50,000 பேர்கள் இருக்கிறார்கள் என்றால், இது எவ்வாறு ஜனநாயகத்திற்குப் பொருந்தும்? இது சம்பந்தமாக தென்னாற்காடு மாவட்டத்தில் போடப்பட்ட ஒரு கேஸை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஜாகிர்தார்கள் விஷயத்தில் நாம் தலையிடகூடாது என்று ஆங்கிலேயர்கள் இட்ட ஆணை அப்படியே இருக்கிறது. அவர்கள் விஷயத்தில் தலையிடக் கூடாது என்று இப்போது கூட நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அங்கே ஜாகிர்தார்கள் மக்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். சந்தனமும், மூங்கிலும், தேக்கும், கடுக்காயும் விளையும் இந்த இடத்தில் ஜாகிர்தார்களின் அதிகாரம்தான் இருக்கிறது. அங்குள்ள மக்கள் ஜாகிர்தார்களுக்கு வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. அங்குள்ள கொடுமைக்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். அங்கு ஒரு குமரி ஒரு குமரனை திருமணம் செய்து கொள்ள விரும்பினால் ஜாகிர்தார்கள் அனுமதி பெற்றுத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஜாகிர்தார்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால், அந்தக் குமரி அந்தக் குமரனை திருமணம் செய்து கொள்ள முடியாது. திருமணம் ஆன பிறகு அக்குடும்பத்தில் இருவரும் ஆணும் பெண்ணும் ஜாகிர்தாருக்கு வரி செலுத்த வேண்டும். அவர்களுக்கு குழந்தை பிறந்தால் குழந்தை வரி செலுத்த வேண்டும். உழவுக்கருவிகள் வரைக்கும் அவர்கள் வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஜாகிர்தாரின் திருமணத்திற்கும், ஜாகீர்தாரின் மகனுடைய திருமணத்திற்கும் அம்மக்கள் வரி கொடுக்க வேண்டும். அம்மக்கள் இவ்வளவு கொடுமைக்கு உட்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் போட்ட சட்டம் இன்றும் அப்படியே இருக்கிறது. ஜாகீரை எடுக்க சர்க்கார் முன் வரவேண்டும். நான் கூறுவதை கனம் அமைச்சர் சினிமாக் கதைப் போல கருதாமல் அங்குள்ள விவரங்களைத் தெரிந்து கொண்டு ஆவன செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, சின்ன சேலம், ஆத்தூர், வாரநத்தம் பகுதிகளில் மலைகளில் ஏறிச் செல்ல வேண்டியிருக்கிறது. உணவு தானியங்களோ விவசாயக் கருவிகளோ வாங்க நகரப்பகுதிகளுக்கு வர வேண்டுமானால் அங்குள்ளவர்கள் மலைமீது ஏறித்தான் வர வேண்டியிருக்கிறது. அப்போது நடந்து தான் வர வேண்டியிருக்கிறது. காரணம் அங்கே எந்தவிதமான ரோடு வசதியும் இல்லை. பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தின் கீழாவது அங்கே இந்த ரோடு வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் அங்கே மலைப் பகுதிகளில், தகரை, நாய், குப்பம் என்ற வாயால் சொல்லக்கூடாத பெயர்கள் கொண்ட ஊர்கள் இருக்கின்றன. அங்கே பள்ளிக்கூட வசதிகளும் மற்ற வசதிகளும் இல்லை. அங்கே பள்ளிக்கூடங்களை நன்றாக நடத்துவதற்கு ஆசிரியர்களுக்குப் போதுமான அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up. He will resume his seat.

Sri V. K. KOTHANDARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். காட்டு வளம் நாட்டு வளத்திற்கு வேண்டிய மிக மிக முக்கியமான செல்வமாகும். இப்போது நாம் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கிறது. விவசாயப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்கிறோம். அதற்கு அத்தியாவசியமாக இருப்பது உரம்.



23rd March 1960] [Sri V. K. Kothandaraman]

சாதாரணமாகத் தேவைப்படும் பசுந்தாள் உரம் காட்டில்தான் கிடைக்கிறது. கால்நடைக்கான தீவனம் காட்டில்தான் கிடைக்கிறது. அயல் நாட்டு செலாவணி நெருக்கடியை சமாளிக்க, டானரிக்கு வேண்டிய பட்டைகளைக் கொடுக்கக்கூடிய வாட்டில் மரங்கள் காடுகளில்தான் இருக்கின்றன. மேலும் காடுகளில் நாம் விலையுயர்ந்த மரங்களை உற்பத்தி செய்ய முடியும் என்பதையும் பார்க்கிறோம். இன்று காட்டு செல்வம் இந்த ராஜ்யத்தில் இதர ராஜ்யங்களிலுள்ளதை விடக் குறைவாக இருக்கிறது என்று தெரிகிறது. இந்த ராஜ்யத்தில் காடுகளைப் பாதுகாக்க போதுமான முயற்சி செய்யப்படவில்லை என்பது என் அபிப்பிராயம். இன்று, வாழ வழியில்லாத ஏழை ஹரிஜனங்கள் காடுகளிலுள்ள உலர்ந்த சுள்ளிகளை தலைச்சுமையாக எடுத்துவந்தால் அவர்களைத்தான் பிடித்து அவர்கள் பேரில் கேஸ் போடுகிறார்கள். பெரிய கண்டராக்டர்கள் பச்சை மரங்களை வெட்டிக்கொண்டுபோய் எவ்வளவோ கொள்ளையடிக்கிறார்கள். இது பற்றி பல ஜில்லாக்களிலிருந்து கம்ப்ளெய்ண்டுகள் வந்திருக்கின்றன. அவைகளை உடனடியாகக் கவனித்து அந்த கொள்ளையடிக்கும் சக்திகளை அடக்கி ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நான் இதைச் சொல்கிறேன் என்பதால் என்னை அடக்கவோ ஒடுக்கவோ கனம் அமைச்சர் முன்வரக் கூடாது. சர்க்காரின் வருமானத்திற்கு இடையூறாக இருக்கும் தீய சக்திகளை அடக்கவும் ஒடுக்கவும் வேண்டும் என்று தான் நான் சொல்கிறேன். காடுகளைப் பாதுகாத்தால் சர்க்காரின் வருமானம் அதிகரிக்கும். சர்க்காரின் வருமானம் அதிகரித்தால் ஏழை மக்களின் மீது மேலும் மேலும் வரி போட வேண்டிய அவசியம் ஏற்படாது. ஏழை மக்கள் உலர்ந்த சுள்ளிகளை இலவசமாக எடுத்துச் செல்வதற்கு வகை செய்யும் முறையில் விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்றும் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

விலையுயர்ந்த மரங்கள் என்ற தலைப்பின் கீழ் சந்தன மரம் குறிப்பிடப்படவில்லை. சந்தன மரங்களை அபிவிருத்தி செய்வதில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டும். மண்வளத்தைப் பொறுத்தவரையில், மலையடிவாரங்களில், காற்றாலும் மழையாலும் மண் அடித்துச் செல்லப்படுகிறது. அங்கே தண்ணீர் நிற்பதில்லை. மலையடிவாரங்களில், மண்ணை மழைத் தண்ணீர் அடித்துக் கொண்டு போவதால், சிறு சிறு செக் டாம்களைக் கட்ட வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

மேலும், நமது ராஜ்யத்தில், பீடித் தொழில் ஒரு பிரதான தொழிலாக இருக்கிறது. பீடிகளுக்கு வேண்டிய இலைகள் இப்போது பக்கத்து ராஜ்யங்களிலிருந்துதான் கொண்டுவரப்பட வேண்டியிருக்கின்றன. பீடி இலைகளை நிறைய இங்கே உற்பத்தி செய்வதில் பிரதான கவனம் செலுத்த வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன். ஐந்து நிமிடங்களில் எவ்வாறு நான் எதைச்சொல்ல முடியும்.

DEPUTY SPEAKER : Sri T. S. Ramaswami will now speak.

Sri V. K. KOTHANDARAMAN : Two minutes more, Sir.

DEPUTY SPEAKER : No. The hon. Members time is up. He will resume his seat.

Sri T. S. RAMASWAMY : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் போது, இதற்கு முன்பு நான் குறிப்பிட்டிருக்கும் ஒரு விஷயத்தையே விவரமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த மானிய கோரிக்கையில் ரப்பர் ப்ளான்டேஷனுக்காக 2 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட் மெமொராண்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, இலாகாவினரின் திட்டம், 8–ஆண்டு கால—நீண்ட கால—ஸ்கீமில் பேஸ்ட் ப்ரோக்ராமில் ஒரு ஆண்டுக்கு 300 ஏக்கர் வீதம் 8 ஆண்டுகளில் 3,000 ஏக்கரில் ரப்பர் பயிரிட வேண்டுமென்பது ஆகும். 3000–க்கும் மேற்பட்ட பல ஏக்கர்கள் ரப்பர் பயிரிடுவதற்கு சௌகரியமான இடங்கள் இந்த ராஜ்யத்தில் இருக்கின்றன. சாதாரணமான பிரதேசங்களில் கூட இதை பயிரிட்டால் நன்றாக வளரும். ஏனென்றால் கேரளத்தில் கடையம் ஜில்லா

வில் சாதாரண இடங்களில் பயிரிட்டு நல்ல பலன் கண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏராளமான இடங்கள் நம் ராஜ்யத்தில் இருக்கின்றன, ரிஸொர்வ் பாரெஸ்ட்ஸ் என்று சொல்லும்போது, முன்பு கன்ஸொர்வேஷன் ஆப் பாரெஸ்ட்ஸ் என்று சொல்லுவதுண்டு. அதாவது காடுகள் பாதுகாப்பது ஆகும். இப்போது நாம் காடுகளையும் செயற்கையாக உண்டாக்குகிறோம். செயற்கைக்காடுகளை உண்டாக்கவும் ரப்பர் ப்ளான்டேஷன் உதவும். எனவே நாம் எங்கு வேண்டுமானாலும் ரப்பர் ப்ளாண்டேஷனைச் செய்யலாம். அப்படிப் பார்த்தால் 30,000 எக்கருக்கு மேல் ரப்பர் ப்ளாண்டேஷன் செய்ய முடியும் என்று கூறுவேன். வருஷத்திற்கு 300 எக்கர் வீதம் இன்னும் எட்டு வருஷங்களில் மூவாயிரம் எக்கரில் ரப்ப பயிரிடப்படும் என்று பட்ஜெட் மெமொராண்டத்தில் கண்டிருக்கிறது. ஒரே வருஷத்தில் 1,000 எக்கர் ரப்பர் பயிரிடுவது சாத்தியமாக இருக்கும்போது வருஷத்திற்கு 300 எக்கரே பயிரிடுவதற்கான பேஸ்ட் ப்ரோக்ராம் ஏன் தயாரிக்க வேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

1 p.m. **THE HON SRI M. BHAKTAVATSALAM:** எந்தெந்தப் பிராந்தியங்களில் ஒரே வருஷத்தில் ஆயிரக்கணக்கான ரப்பர் மரங்கள் வைக்கப்பட்டன என்ற விவரங்களைக் கொடுத்தால் நானும் போய்ப்பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

**SRI T. S. RAMASWAMI :** கன்னியாகுமாரி ஜில்லாவில் 600 எக்கரில் ஒரே வருஷத்தில் பலன் கிடைத்திருக்கின்றது. பயனீர் குமாரசாமி எஸ்டேட் இருக்கிறது. தனி மனிதர்கள் நடத்தக் கூடிய இடத்திலேயே முடியுமென்றால் அரசாங்கம் எடுத்து நடத்தினால் முடியாது என்று சொல்ல முடியுமா ? ஏராளமாக எஸ்டேட்கள் இருக்கின்றன. அப்படி எடுத்துக் கொள்ளும்போது 300 எக்கர் என்று இல்லாமல் 3,000 எக்கர் எடுத்துக் கொள்ளலாம். இதனுடைய செலவு பற்றிய புள்ளி விவரத்தைப் பார்க்கப்போனால் 3,000 எக்கருக்கு சுமார் 32 லட்சம் ரூபாய் செலவாகிறது. ஏறக்குறைய 1,200 ரூபாய் ஒரு எக்கருக்குக் கொடுக்கிறார்கள். மத்திய அரசாங்கம் சப்சிடி கொடுக்கிறார்கள். முன்னால் " ரீ ப்ளாண்டேஷன் "-க்கு கொடுத்தார்கள். இப்போது சாதாரணமாக " ப்ளாண்டேஷனுக்கு "க்கொடுக்கிறார்கள். எக்கர் ஒன்றுக்கு ரூ 600,700 கொடுக்கிறார்கள். அரசாங்க ரீதியில் நடந்தாலும் அந்த சப்சிடி கொடுபார்கள். அது கொடுக்கப்படவில்லையென்றால் அதை ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும் ? அரசாங்கமே நேரடியாக நடத்தாவிட்டாலும், கார்ப்பரேஷனாவது ஏற்படுத்தி நடத்தக் கூடிய நிலைமை ஏற்பட்டால் நிச்சயமாக மத்திய அரசாங்கத்தின் சப்சிடி கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படும். புள்ளி விவரத்திலிருந்து எக்கர் ஒன்றுக்கு 1,300 ரூபாய் வருமானம் வருகிறது என்று தெரிகிறது. தங்கச்சுரங்கமாக இருக்கும் இந்தப்பெரிய திட்டத்தை 300 எக்கர் என்று கொஞ்சங் கொஞ்சமாக எடுக்காமல் பெரிய திட்டமாக வைத்து, எடுத்துச்செய்வதானால், கன்னியாகுமரியில் பல ஆயிரக் கணக்கான பேர்களுக்கு வேலை கொடுக்க முடியும் ; அரசாங்கத்துக்கும் வருவாய் தரக்கூடிய பெரிய திட்டமாக இருக்குமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு " எலிவேஷனிலும் " ஒவ்வொரு ப்ளாண்டேஷன் போடலாமென்று நிலைமை இருக்கிறதென்று நண்பர் சந்திரசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். 4,000, 5,000 அடிக்கு மேல் வெறும் புல் தரையாக இக்கிறது. ஊட்டியைப்போல் இருக்கிறது. டீ ப்ளாண்டேஷனுக்கு நல்ல இடம். ஏறக்குறைய 10,000 எக்கருக்கு மேல் இருக்கிறது. அதில் டீ ப்ளாண்டேஷன் வைத்தால் டாலர் கிடைக்கும் ; வேலை வாய்ப்பு கொடுக்க முடியும் ; அரசாங்கத்தின் கஜானாவும் பெருக முடியும். கன்னியாகுமரியில் பெரிய இண்டஸ்ட்ரீஸ் கிடையாது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். ஆகவே, இந்த இரண்டு திட்டத்திலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கமே நேரடியாக நடத்தமுடியாவிட்டாலும், கார்ப்பரேஷனைச் செய்தாவது (தாமோதர் கார்ப்பரேஷன் மாதிரி) இந்தத் திட்டத்தை நடத்தினால் கன்னியாகுமரி ஜில்லாவுக்கு ஒரு பெரிய சேவை செய்தவர்களாவீர்கள் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.





இன்னொரு விஷயம். " வாட்டில் " என்பது இதுவரை வெளியில் இருந்து இறக்குமதி செய்து வந்தோம். தற்போது பாரஸ்ட் இலாகாவைப் பொறுத்த வரை " வாட்டில் கல்டிவேஷனை " நல்ல முறையில் தொடங்கி வருஷத்திற்கு வருஷம் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது குறைந்து வருகிறது. இன்னும் கொஞ்ச நாட்களில் அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு வளர்ச்சி அடைய முடியும் என்று நினைக்கிறேன். வேடந்தாங்கலில் உள்ள " பர்டு சாங்சுவரி " என்பது நம்முடைய தேசதிலேயே முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் அது அவ்வளவு தூரம் கண்ணும் கருத்துமாகக்கவனிக்கப்படவில்லை. ஏரியில் சரியானபடி தண்ணீர் இல்லாதபடியால் பட்சிகள்வரவில்லை. அதற்கு ஆவன செய்யவேண்டும் அங்கு ஒரு " ட்ராவலர்ஸ் பங்களா "வும் ஏற்படுத்தப்படவேண்டும். அது கட்டப்பட்டால் எல்லோரும் போய்ப்பார்க்க வசதியாக இருக்கும். (ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் : எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் சிபாரிசின் பேரில் அங்கு ஒரு கட்டிடம் கட்டப் போகிறார்கள்.) ரொம்ப சந்தோஷம். அதை நல்ல முறையில் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் பேரில் கொண்டு வரப்பட்டவெட்டுப் பிரேரணையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். காட்டிலாகா நம்முடைய சர்க்காரிலே உள்ள ஒரு முக்கியமான இலாகா. நாட்டுச் செலவத்தைப் பெருக்க வேண்டு மென்றால் காட்டுச்செல்வம் நல்லபடி விருத்தி அடைய வேண்டும். அதன் காரணமாக அந்நியச் செலாவணி குறையும். நம் மாகாணத்திலேயே நமக்கு வேண்டியவைகளையெல்லாம் உற்பத்திசெய்து கொள்ளக் கூடிய சாதனங்கள் எல்லாம் இருக்கின்றன. அமைச்சர் அவர்களுடைய ஆரம்ப உரையில் சில ஏற்பாடுகளைச் செய்திருப்பதாகச் சொன்னார்கள். " ஸாப்ட் உட் " (Soft wood) உற்பத்தி செய்ய காகிதத் தொழிற்சாலை அமைக்க சில திட்டங்கள் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன்.

புறம்போக்கு இருக்கும் ஒவ்வொரு பிராந்தியங்களிலும் துரிதமாகச் செடிகள், மரங்கள் வைக்க உடனே ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலும் முக்கியமாக ஜமீன் எடுக்கப்பட்ட பிராந்தியங்களில் அநேக லட்சக்கணக்கான எக்கர் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் ஜமீன்கள் காலத்தில் எப்படி இருந்தனவோ அதே மாதிரி தான் இப்போதும் இருக்கின்றன. அவைகளை உடனடியாக எடுத்து காட்டிலாக்கா விடமோ, ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிடமோ ஒப்படைத்து அங்கெல்லாம் செடிகளை நட்டு வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பசுந்தாள் உரம் ரொம்பவும் முக்கியமானது. இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்தால்கூட பற்றாக்குறை இருப்பது தெரியும். இதை இன்னும் இரண்டு பங்கு அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். விவசாயத்துக்கு முக்கியமாக வேண்டியது பசுந்தாள் தழை. தழை கிடைப்பதில் அநேக கஷ்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பிராந்தியத்திலும் சிறு சிறு காடுகள் இருந்த போதிலும் [illegible] எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய திட்டங்கள் எல்லாம் வகுத்திருந்தபோதிலும், விவசாயி அந்தத் தழைகளை எடுத்துக் கொள்வதற்குப் பர்மிட் வாங்குவதற்காக 30, 40 மைல் தூரம் சென்று வாங்கி வர வேண்டியிருக்கிறது. அதன் மூலமாக லஞ்ச ஊழல்களுக்கும் இடமிருக்கிறது. விவசாயிகளுக்கு இதைச்சுலபமாகப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சந்தன மர உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். பூச்சி அரிப்பதைத் தடுக்க ஆராய்ச்சி செய்து வருவதாகச் சொன்னார்கள். சென்றவருஷத்தில் நான் இதைப் பற்றிப் பேசியிருப்பதாக ஞாபகம். சந்தன மரம்

மூலமாக அநேக தைலங்கள், மருந்துகள் எல்லாம் செய்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் ஒரு பாக்டரி அமைக்க ஒரு யோசனை இருந்தது, அது என்ன ஆயிற்று ? மைசூர் கவர்ன்மெண்ட் அவைகளைச் செய்து வருகிறார்கள். அதன் காரணமாக அவர்களுக்கு ஏராளமான அளவில் லாபம் கிடைப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த பாக்டரியில் நம் சந்தன மரங்களை ஒப்படைத்து தைலம் இறக்கப்போவதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா ? அவர்களிடம் நம்மரத்தைக் கொடுக்காமல் நம் ராஜ்யத்திலேயே ஒரு சந்தன தைலம் இறக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தி நாமே தைலம் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கத்தில் யோசனை இருக்கிறதா ? "சந்தன மரம்" "இல்லிசிட் கட்டிங்" தெரியாமல் வெட்டுவது—பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாதிரி "பாக்டரி" வைத்தால் "இல்லிசிட் கட்டிங்" குறையும் என்று நினைக்கிறேன்.

"டிம்பர் ட்ரான்சிட்" (**Timber Transit Visa**) பற்றி அநேக தடவை பேசியிருக்கிறேன். ரெவின்யூ டிப்பார்ட்மெண்டு மூலம் சில உத்தரவுகள் எல்லாம் பிறப்பித்திருக்கிறார்கள். நான் பேசியதன் காரணமாகவும், அனேகவித மனுக்கள் எதிழுயதின் காரணமாகவும், இம்மாதிரி உத்தரவு போட்டும் அமுலுக்கு வரவில்லை. அதிலே அனேகவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. முக்கியமாக ஒரு பிராந்தியத்திலிருந்து இன்னொரு பிராந்தியத்திற்கு, ஒரு எல்லையைவிட்டு வேறொரு எல்லைக்கு விறகு எடுத்துப் போகவேண்டுமென்றால், அனேகவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. அதையும் நிவர்த்தி செய்ய, ( **Transit visa** ) டிரான்சிட் விசா, கஷ்டமில்லாமல் கொடுத்து வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மைனர் பாரஸ்ட் ப்ராட்யூஸ் (**Minor Forest Produce**) பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஆவாரம்பட்டை காட்டிலிருந்து கிடைக்கிறது. டானரிகளில் தோல் பதனிடுவதற்கு அதை உபயோகப்படுத்துகிறார்கள். நமக்கு அன்னியச் செலாவணிக் குறைவு இருந்தும், அனேக லட்சக்கணக்கான ரூபாய்கள் கொடுத்து, அன்னியர் நாட்டிலிருந்து தோல் பதனிடவேண் ுய சாமான்கள் வரவழைக்கிறோம். நான் லெதர் டெக்னலாஜிகல் இன்ஸ்டிட்யூட்டிற்குச் சென்றிருந்தபோது, அங்குள்ள டைரக்டர் அவர்கள் "ஆவராம்பட்டையை" உபயோகப்படுத்தாமலேயே, வேறு எந்தவிதமான பட்டைகளையும் உபயோகப்படுத்தி, தோல் பதனிடக்கூடிய ஹேஷ்யம் இருக்கிறது, அதைப்பற்றி ஆராய்ச்சி செய்கிறோம்" என்று சொன்னார்கள் அதைப் பற்றியும் யோசனை செய்து, தோல் பதனிடுவதற்கு வேறு எந்த முறையைக் கையாளலாம் என்பதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து, **Gracing area** (மேய்காலைப்) பற்றி சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கால்நடைகளை நம்முடைய நாட்டில் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றால் மேய்ச்சல் ஆதாரம் அவசியம் தேவை. அதற்கும் விதிகளை சுலபமாகச்செய்து, எவ்வளவு தூரம் விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமோ அவ்வளவு ூரம் செய்யவேண்டும். ப்ளான்டேஷன் ஏரியா, மரம்வைக்கும் பிராந்தியங்களையெல்லாம் கிராமங்களுக்கு அருகாமையில் வைப்பதால், கால்நடைகள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நெருக்கடி இருக்கிறது. கிராமாந்திரங்களில் ஒரு மைலுக்கு இரண்டு மைலுக்கு அப்பால் எவ்வளவு தூரம் எட்டி வைக்கலாமோ அவ்வளவு தூரம் எட்டி மரங்களை காட்டிலாகா வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமத்தின் அருகாமையில் வைப்பதன் காரணமாக "ரிஜிடிடி" கடுபிடி ஏற்படுகிறது. அதனால் விவசாயிகள் துன்பப்படுகிறார்கள். அதையும் கவனித்து, முக்கியமாக கால்நடைகளுக்கு வேண்டிய மேக காலுக்கென்று ஒவ்வொரு பிராந்தியத்திலும் இவ்வளவு நிலம் இருக்க வேண்டுமென்று ரிசர்வ் செய்ய வேண்டும். சிறு பிராந்தியங்களை அதற்காகத் திட்டமாக ஒதுக்கி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



காட்டு மிருகங்களைப்பற்றியும் அனேக கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள் மிருகங்களை வளர்ப்பதற்காக வேண்டிய பாதுகாப்பு கொடுத்திருக்கிறது. இருந்தாலும் கண்டிப்பாக அந்தப் பிராந்தியங்களில் வேட்டையாடுவதையோ, துப்பாக்கி வைத்துக்கொண்டு மிருகங்களை இம்சை செய்வதையோ கண்டிக்கக்கூடிய வகையில் சட்ட திட்டங்கள் வைத்து, விதியை கடினமாக அமுல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். மிருகஙகளைப் பாதுகாக்கவேண்டியது நம்முடைய கடமை. அதற்கும் தக்க ஏற்பாடு செய்து ஆவன செய்யவேண்டும்.

நான் சொல்லிய யோசனைகளையெல்லாம் சர்க்கார் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகின்றேன்.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொண்ட கனம் அங்கத்தினர்கள் யாவரும் வன வளத்தைப்பெருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியே குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் முதலில் கூறியபடி, வன வளம் நமக்கு ரொம்ப குறைவாக இருப்பதால், பல விதங்களில் கவனம் செலுத்தி, அதைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, திட்டங்கள் வகுத்து நிறைவேற்றிக்கொண்டு வருகின்றோம். கனம் அங்கத்தினர்கள் சொன்னதுபோல், வெறும் "கன்ஸெர்வ்" பண்ணுவது மாத்திரமல்ல— ஏனென்றால் வன வளம் நமக்குக் குறைவாக இருப்பதால், இருப்பதை ரொம்ப ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியந்தான். அதைக் கொஞ்சங்கூட விட முடியாது—இருப்பதைப் பாதுகாப்பதோடுகூட, மேலும் வளர்க்க வேண்டியதும் அவசியமாக இருக்கிறது. இரட்டிப்பாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த வகையிலே இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், சில கனம் அங்கத்தினர்கள் குறைபாடு தெரிவித்ததில் ஒன்றுக்கொன்று முறண்பாடாக இருக்கிறது. தேக்கு, வாட்டில், தொழிலுக்குப் பயன்படக்கூடிய, விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய, மக்களுக்கு மற்ற தேவைகளுக்குப் பயன்படக்கூடிய மரங்கள் வளர்க்கப்படவேண்டுமென்று ஒரு புறம் சொல்லிக்கொண்டே, வசதி குறைந்து போகிறது என்று இன்னொரு புறம் பேசப்படுகிறது. "ஏன் இப்படி மரங்களை வைத்துக் கொண்டே போகிறீர்கள் ? எங்களுடைய கால்நடைகளின் மேய்ச்சலுக்கே போதாமலிருக்கிறதே. ஏன் புதிதாக மரத்தை வைக்கிறீர்கள்" என்று சிலர் கேட்கிறார்கள். புதிதாக மரங்கள் வைத்துப் பெருக்கினால் எல்லோருக்கும்தான் நன்மை.

வாட்டில் பார்க் கிடைக்கிறதென்றால், அது முக்கியம். நியூஸ்பிரிண்ட் காகிதம் உற்பத்தி செய்வதற்கு வாட்டில் மரம் உகந்தது என்று ரோம் நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டித்தான் இப்பொழுது காகிதத் தொழிற்சாலைக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் திட்டம் போட்டு, 19,000 ஏக்கர் நிலங்களில் வாட்டில் வைப்பது என்று திட்டப்படி வைத்துக்கொண்டு வருகிறோம். மொத்தத்தில் 19,000 ஏக்கர். ஆனால், எங்கு வைக்கலாமோ அங்கு வைக்கலாம். எங்கு வைத்தால் மரங்கள் வளர்ந்து வருவதற்கு சௌகரியம் இருக்கிறதோ அங்குதான் வைக்கவேண்டும். "எங்காவது வைத்துவிடு" என்று சொன்னால் பிரயோஜனம் இல்லை. திட்டங்கள் போட்டு புதிதாக மரங்கள் வைக்கும்போது யாருக்கும் தொந்தரவு கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. யாருக்கும் தொந்தரவு வந்துவிடக்கூடாது என்ற கவலை, அரசாங்கத்திற்கு இருக்கிறது. நீண்டகாலமாகக் குடியிருக்கும் மக்கள் முக்கியமாக மலை வகுப்பினராக வாழ்கின்ற பிற்போக்கு நிலையில் இருப்பவர்கள், அவர்கள் மாடு, கன்றுகள் வைத்து விவசாயம் செய்கின்றார்கள். அவர்களுக்கு எந்த விதத்திலும் தொந்தரவு செய்யக்கூடாது, அவர்களுடைய குறைகளை அகற்ற வேண்டும், காடுகள் மூலமாகவே அவர்களும் நன்றாக வளர்ந்து வாழவேண்டும் என்ற அக்கறை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இதை மனதில் வைத்துக்கொண்டு, பார்த்துத்தான் செய்கிறோம். "கொஞ்ச தூரத்திற்கு அப்பால் கூட நாங்கள் மாட்டைக்கொண்

[Sri M. Bhaktavatsalam] [23rd March 1960

போகமுடியாது, பக்கத்தில்தான் மாட்டை மேய விடுவோம்" என்றால் அது சரியல்ல. எத்தனையோ மைல்கள் தூரம் கால்நடைகளைக்கொண்டு போய் மேய்கிறார்கள் பல இடங்களில். எவ்வளவோ அக்கறையுடன் மாடுகளைக் கவனித்துக்கொள்கிறவர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும் அனேக இடங்களில், "100 அடி கூட போக முடியாது, இங்கே வைக்கக் கூடாது, இதுவரையில் வைத்தாலும் இனி வைக்காதீர்கள், வைத்திருந்தாலும் எடுத்துவிடுங்கள்" என்று சொல்லப்படுகிறது. அது சரியல்ல.

கால்நடைகளுக்கு மேய்கால் வசதி இருப்பது அவசியம். காடுகளில் மேய்கால் வசதி செய்து, அதை எவ்வளவு தூரம் பெருக்க வேண்டுமோ அவ்வாறு பெருக்கத்தான் நான் கவனம் செலுத்துகிறேன். விவசாயம் பெருகுவதற்கு கால்நடைச் செல்வமும் வளரவேண்டும். அதற்கு மேய்கால் வசதி முக்கியம். மேய்கால் வசதிக்கு காடுகளில் எவ்வளவு தூரம் உதவி அளிக்க முடியுமோ அந்த அளவுதான் திட்டம் போடுகின்றோம் இப்பொழுது வைக்கும் மரங்களோடு மேய்ச்சல் வசதிக்கும் பயன்பட வேண்டும் என்ற முறையில், புல் வளரக்கூடியதாக இருக்கவேண்டும் என்றும் கவனம் செலுத்துகிறோம். மேய்ச்சல் வசதி கொடுக்கின்றோம். ஆனால், அவரவர்கள் இஷ்டம்போல், கேட்பார் இல்லாமல், மாடுகளை மேய்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டால், செடிகள் வளர முடியாது. முதல் ஒரு வருஷத்திற்காவது செடிகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். அப்படிப்பட்ட சமயத்தில் மாடுகள் மேய்வதற்குத்தக்க வேறு இடத்தைக் காட்டுகிறோம். காட்டினாலும் அங்கு போக விரும்புவதில்லை. குறிப்பிட்ட இடத்தில்தான் மேய விடவேண்டுமென்று சொன்னால், அது ஒத்துழைப்பாகாது. நம்முடைய ரிசர்வ் காடுகளில் மாத்திரம் மேய்கால் திட்டுகளில் மேயக்கூடிய கால்நடைகளின் எண்ணிக்கை 1,692,522 ஆகும். இன்னும் சில இடங்களில் புல் நன்றாக வளர்ந்திருக்கிறது, வசீகரமாக இருக்கிறது. அங்கிருந்து புல்லை வெட்டிக்கொண்டு போங்கள் என்கிறோம். புல்லை வெட்டிக்கொண்டு போகாமல், மாட்டைக்கொண்டு மேயத்தான் விடுவோம் என்கிறார்கள். மாடு மேய்ந்தால் பக்கத்தில் வைத்திருக்கும் செடிகள் அழிகின்றன. காடு அழிந்தாலும் பரவாயில்லை, மாடுகளுக்குப் புல் வெட்டிக்கொண்டு போகமாட்டோம், மேயத்தான் விடுவோம் என்று சொல்வார்களானால், மாடுகள் மீது அக்கறைக் குறைவு என்றுதான் ஏற்படுகிறது. சிற்சில பிராந்தியங்களில் மாடுகளை நன்றாக வளர்க்கிறார்கள். ஆனால், பல இடங்களில் மாடுகளாக மேய்ந்துகொண்டால் சரி என்ற நிலையில் மாடு வைத்துக்கொள்வதில் அக்கறைக் குறைவு காணப்படுகிறது. புல் வெட்டிக்கொண்டு போங்கள், நல்ல புல் இருக்கிறது, அனுமதி கொடுக்கிறோம், வெட்டிக்கொண்டு போய் மாடுகளுக்குப் போடுங்கள், புல்லைக் கொண்டு போய் விற்றாலும் விற்றுக்கொள்ளட்டும் என்றால்கூட, யாரும் அதற்குத் தயாராயில்லை. பல இடங்களில் விசாரிக்கிறேன். யாரும் வர மாட்டேன் என்கிறார்கள். ஏதோ மாட்டைவிட்டுவிட்டுப் போகலாம், மாடு மேய்ந்துவிட்டுப் போகட்டும் என்றால், அதற்கும் தக்க இடங்களில் வசதி செய்கிறோம். மாடு மேயக்கூடிய இடங்களில் மேய இடம் கொடுக்கிறோம். மறுப்பதில்லை.

நீலகிரியிலிருந்து வந்த கனம் அங்கத்தினர் சொன்னது மாதிரி, நீலகிரியில் ரொம்ப நாள் இருக்கிறார்கள் என்பதற்காக, சட்ட திட்டம் கூடாது, இஷ்டம் போல் வைக்கவேண்டுமென்றால், அது சரியல்ல. நீலகிரியில் விளைவது வேறு ஜில்லாவில் விளையாது. அது நீலகிரிக்கே பயன்பட வேண்டும். குந்தாத் திட்டம் வைத்துவிட்டார்கள், இனிமேல் ஒன்றும் கூடாது, சும்மா விட்டுவிடுங்கள் என்று சொன்னால், அது நியாயம் இல்லை. குந்தா மின்சாரத் திட்டம் ஏற்பட்டு, காடு வளர்ச்சியும் ஏற்படுவதோடு, அதையொட்டிய தொழில்களும் ஏற்பட்டால், முதன்மையாக பலன் அடையக்கூடிய்வர்கள் நீலகிரி மக்கள்தான். நீலகிரி எவ்வளவுக்கெவ்வளவு வளம் பெருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அங்குள்ள மக்களுக்குத்தான் முதலில் நன்மை ஏற்படுகிறது. நீலகிரி மக்கள் தங்களுக்குத் தொல்லையாகக்கூட காட்டை நினைக்கிறார்கள், நாம் அவைகளைப் பயன்படுத்தப் போகும்போது. முன்பு தென்கன்னடவாசிகளும் அப்படித்தான் காடுகளைப்பற்றி நினைத்தார்கள். காடுகளை அவர்கள் தங்களுக்கு எதிரியாக



23rd March 1960] [Sri M. Bhaktavatsalam]

நினைப்பதுண்டு. சமத்தரையில் இருப்பவர்கள் காட்டுச் செல்வம் இல்லையே என்று நினைக்கிறார்கள். ஆனால், வனச் செல்வம் அதிகமாக இருக்கும் இடத்தில் வசிப்பவர்களுக்கு அதன் மீதே வெறுப்பு வந்துவிடுகிறது. காடு வளத்தை நாம் அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. மீண்டும் உறுதி கூறுகிறேன்—இதையெல்லாம் செய்யும்போது, அங்கே வசிக்கும் மக்களுக்கு எந்த விதத்திலும் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். நான் போகும்போது டல இடங்களில் கேட்கிறார்கள், "இங்கு மரம் வைக்கப் போகிறார்களே, செடி வைக்கப் போகிறார்களே, எங்கள் கால்நடைகளின் மேய்ச்சலுக்கு வேண்டிய இடமாயிற்றே" என்று. நேரில் போய்ப் பார்த்தால், இன்னொரு இடம் பக்கத்திலேயே இருக்கிறது, மேய்ச்சலுக்கு வசதியாக. கால்நடைகள் ஒரு மைல், அரை மைல் தூரம் நடந்து போகாதா? இருந்தாலும் குறிப்பிட்ட இடத்தில்தான் மேய்ச்சல் வசதி வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, நான் கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், விஷயம் தெரியாதவர்களுக்கு, மக்கள் பிரதிநிதிகள் எடுத்துச் சொல்லி, காட்டுச் செல்வத்தின் அருமை எல்லோருக்கும் தெரியும்படிச் செய்து, காட்டுச் செல்வத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையிலே மக்கள் ஒத்துழைப்பு அளிக்க முற்பட ஊக்குவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்பொழுது ரப்பரைபற்றி சொன்னார்கள். இன்னும் அதிகமாக பயிரிடலாம் என்று சொன்னார்கள். இதை நிபுணர்கள் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். வொர்கிங் பிளானைப்பற்றி பழைய பிளான் என்று சொன்னார்கள். பிளானைப் பொருத்தமட்டில் "அப்-டு-டேட்" ஆராய்ச்சியை வைத்துக்கொண்டுதான் வொர்க்கிங் பிளான் போடப்படுகிறது. நிபுணர்களைக் கொண்டுதான் பிளான் தயார் செய்கிறோம். வெளிநாட்டு நிபுணர்கள்கூட அதற்கு வேண்டிய உதவியை அளிக்கிறார்கள், யோசனைகளை தெரிவிக்கிறார்கள். அவைகளையெல்லாம் வைத்துக்கொண்டுதான் "வொர்க்கிங் பிளான்" போடுகிறோம். ரப்பர் எவ்வளவு ரொடேஷனில் போடுவது, டீக் எவ்வளவு ரொடேஷனில் போடுவது, எப்படிப் பயிரிடுவது என்பதையெல்லாம் நிபுணர்களைக் கேட்டுத்தான் செய்கிறோம். உலகத்திலுள்ள நிபுணர்களைக் கலந்துதான் செய்கிறோம். அதைவிட வேறு ஏதாவது அனுபவம் இருக்கிறது என்று சொன்னால், அதையும் வன இலாகா நிபுணர்களைக்கொண்டு பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்கிறேன். "அப்-டு-டேட்" ஆராய்ச்சியை வைத்துக்கொண்டுதான் ரப்பர், டீக் இவைகளெல்லாம் பயிரிடப்படுகிறது.

கள்ளக்குறிச்சி அங்கத்தினர் ஜாகீர் காடுகளைப்பற்றி சொன்னார்கள். பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது, மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். ஜமீன்களை எடுத்துக்கொண்டபொழுது ஜமீன் பிராந்தியங்களிலே பெயருக்குத் தான் காடுகள் என்று இருந்தன. அதற்குப் பிறகு அவைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு பல பிராந்தியங்களில் செடிகளை வைத்து, அதை வனமாக்க இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஜாகீர் காட்டைப் பொருத்தமட்டில், அதலே சில சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அந்த சிக்கல்கள் தீர்ந்த பிறகுதான் அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். எப்படியும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாடு மேய்ப்பதற்கு இடம் கொடுக்கிறோம், அதேமாதிரி தழை கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். எங்கெங்கே தழை கொண்டுபோகக்கூடுமோ, அதற்கும் அனுமதி கொடுக்கிறோம். தழையை கொண்டுபோய் ஆங்காங்கு தங்களுடைய வயல்களுக்கு போடுவதற்கு பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். டிம்பர் டிரான்ஸிட் விதிகளை தளர்த்தவேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது இருக்கும் விதிகள் போதிய வசதி அளிக்கக்கூடியதாக இல்லையென்றால் மேற்கொண்டு இந்த விதிகளை தளர்த்தலாம். இப்பொழுது தளர்த்தப்பட்டிருப்பது எவ்வளவு தூரம் அமுல் நடத்தப்படுகிறது என்பதைப் பார்த்து அதற்குப் பின்னால் மற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம்.

[Sri M. Bhaktavatsalam] [23rd March 1960

சந்தன எண்ணெய் தயாரிப்பதற்கு ஒரு ஆலை வைக்கலாம் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது அந்த மாதிரி ஒன்றும் யோசனை இல்லை. சந்தன மரத்தை விற்பதைவிட அதிலிருந்து எண்ணெய் உற்பத்தி செய்து கொடுத்துவிடலாம் என்று சொன்னார்கள். ஆனால், நாங்கள் பரிசீலனை செய்து பார்த்ததில் இப்பொழுது மரமாக விற்றுக்கொண்டிருப்பதே லாபகரமாக இருக்கும் என்று தோன்றுகிறது. அதற்காக ஒரு பாக்டரி ஏற்படுத்தியோ அல்லது ஒரு பாக்டரியோடு தொடர்பு வைத்துக்கொண்டோ சந்தன எண்ணெய் உற்பத்தி செய்தால் இப்பொழுது கிடைப்பதைவிட அதிக லாபம் வரும் என்பது நிச்சயம் இல்லை. சந்தன மரங்களுக்கு நல்ல டிமாண்டு இருக்கிறது. இப்பொழுது நாம் அதை ஏலத்தில் விற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த முறையிலே தொடர்ந்து நடத்துவது என்பது தான் இப்பொழுது எண்ணம்.

முதுமலையிலுள்ள வசதிகளைப்பற்றி சொன்னார்கள். அங்கு இப்பொழுது வந்து போகக்கூடிய பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொண்டுதான் இருக்கிறோம். அங்கு பிரயாணிகள் அதிகமாக வந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் அதற்கேற்றவாறு அதிக வசதிகள் செய்வதில் மேலும் கவனம் செலுத்தப்படும்.

வேடந்தாங்கல் பறவை நிலையத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். அது ஒரு சிறந்த பறவை நிலையம். இப்பொழுது அங்கே தங்குவதற்கு வசதிகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. விடுதி கட்டப்பட்டு வருகிறது. இந்த வருஷம் துரதிர்ஷ்டவசமாக தண்ணீர் இல்லை. போன வருஷம் ஒரு திட்டம் நிறைவேற்றினோம். அப்பொழுது தண்ணீர் இருந்தது. தண்ணீர் எந்த விதத்திலோ குறைந்து போய்விட்டது. மழை குறைவினாலோ அல்லது கிராமத்தில் இருப்பவர்கள் ஒரு வேளை தங்களுடைய விவசாயதிற்கு தவறுதலாக இந்தத் தண்ணீரை எடுத்துக் கொண்டுவிட்டார்களோ என்பதைப் பற்றி இதில் அக்கரை கொண்ட அந்த கிராமத்திலுள்ள சட்டசபை அங்கத்தினர்தான் சொல்லவேண்டும். அந்த கிராமத்திலுள்ள எல்லோருக்கும், சட்டசபை அங்கத்தினர்களுக்கும் இதில் அக்கரை உண்டு. வாருங்கள் வேடந்தாங்கலுக்கு என்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது. பறவை நிலையத்திற்கு வேண்டிய தண்ணீர் அங்கே இருக்க வேண்டும். அந்தத் தண்ணீரை வேறு வகையில் உபயோகப்படுத்தாமல் பாதுகாக்கவேண்டும். எத்தனையோ பறவைகள் எத்தனை மைல் தூரத்திலிருந்து வருகின்றன என்று அந்தப் பறவைகள் மீது கொஞ்சம் இரக்கம் வைத்தாவது அந்தத் தண்ணீரை பாதுகாக்கவேண்டுமென்று இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர் மூலமாக அந்த கிராம மக்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த விவாதத்தை தொடங்கிய கனம் அங்கத்தினர் திரு. சுப்பையா நாயகர் அவர்கள் கிராமக் காடுகளைப்பற்றி சொன்னார்கள். "அதெல்லாம் சரி, எப்படி அதை பாதுகாக்கப்போகிறீர்கள்" என்று கேட்டார்கள். பாதுகாப்பது கஷ்டம்தான். மற்றொரு கனம் அங்கத்தினர் திரு. சந்திரசேகரன் அவர்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றிற்று. ஜில்லா கலெக்டர்களின் கீழ் ரெவின்யூ ஆபீஸர்கள் நியமிக்கப்பட்ட அமைப்பிலே அந்த லிஸ்டில் காடுகள் என்று போடப்படவில்லையே, அதை எப்படி கண்காணிக்கப்போகிறீர்கள் என்று ஒரு சந்தேகம் ஏற்பட்டது. காடு மட்டுமா இல்லாமல் இருக்கிறது ? விவசாயம் இருக்கிறதா ? எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றுகிறோம். கவனம் செலுத்துகிறோம். லிஸ்டில் இல்லை என்று சொன்னால் யாரும் கண்காணிப்பது இல்லை என்று அர்த்தம் இல்லை. இப்பொழுது பஞ்சாயத்துகள் ஒரு புதிய நோக்கத்தோடு, புதிய முறையில் ஏற்பட இருக்கின்றன. கிராமத்திற்கு வேண்டிய எல்லா பொறுப்புகளையும் பஞ்சாயத்துகளே சுமந்துகொண்டு அவைகளில் கவனம் செலுத்திவரவேண்டும் என்ற கருத்து இப்பொழுது வற்புறுத்தப்படுகிறது, ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த கிராமக் காடுகளை பொருத்தமட்டில் வன இலாகா இவைகளை வளர்த்துக்கொடுத்து பின்னால் பராமரிப்புக்கு பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கவேண்டுமென்பது தான் திட்டம். இந்த கிராமக் காடுகள் வளர்ச்சியைப் பொருத்தமட்டில்



23rd March 1960] [Sri M. Bhaktavatsalam]

வன இலாகாவைச் சேர்ந்த நிபுணர்கள் மரங்களை வைத்து காடுகளாக்கி, அதற்குப்பிறகு பராமரிப்புக்கு பஞ்சாயத்துகளிடம் அவைகளை ஒப்படைத்துவிடவேண்டுமென்பதுதான் எண்ணம். ரிசர்வ் பாரெஸ்டு சாதாரண காடுகளைப் பொருத்தமட்டில், இப்பொழுது எப்படி நடைபெறுகிறதோ அதில் ஒன்றும் மாறுதல் இருக்காது. இருந்தாலும், எவ்வளவு தான் இலாகாவினர் செய்தாலும், மக்கள் இதை பொது சொத்து என்பதை உணர்ந்து, அதற்கு வேண்டிய ஆதரவையும், ஒத்துழைப்பையும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாலைகளிலே மரங்கள் வைப்பதுபற்றி சொன்னார்கள். சாலைகளிலே வைக்கக்கூடிய மரங்களை வன இலாகாவே பாதுகாக்க வேண்டுமென்று சொன்னார்கள். சாலைகளிலே இருக்கிற மரங்களையெல்லாம் நன்றாக பாதுகாத்து, வளர்த்து அதற்குப்பிறகு அவைகளை ஆங்காங்கு உள்ள பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் யோசனை. திருட்டு நடந்துகொண்டிருக்கிறது. கிராம மக்களுக்கு அக்கரை இல்லை. மரங்களை பாதுகாப்பது இல்லை. அவைகள் வீணாக அழிந்து போகின்றன. இப்பொழுது அவைகளை ஆங்காங்கு உள்ள பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கலாம் என்பதுதான் யோசனை.

கிராமச் சாலைகளில் மரங்கள் வளர்ப்பது ஒருபுறம் இருக்க, இன்னொரு புதிய யோசனையும் இப்பொழுது இருக்கிறது. ரயில்வே சாலைகளிலும் மரங்களை வைக்கவேண்டுமென்ற யோசனை தான் அது. ரயில்வே போர்டாரும், மத்திய அரசாங்கத்தினரும் இதை வன இலாகாவிடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரயில்வே சாலைகளிலெல்லாம் மரங்களை வைத்து, அதற்குப் பிறகு அவைகளை ரயில்வேக்களிடம் ஒப்படைத்துவிடுவது, பின்னால் அந்த மரங்களுடைய பலன்களை ரயில்வேயும், வன இலாகாவும் பகிர்ந்து கொள்ளுவது என்ற புதிய திட்டம் இருக்கிறது.

**Sri S. M. ANNAMALAI** : அதற்கு செலவு எப்படி ? மத்திய சர்க்கார் ஏதாவது கொடுக்கிறார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : செலவு போகத் 1-30
தான். நாம் கையை விட்டு ஒன்றும் செலவு செய்யமாட்டோம். p.m.

மேலும் மருந்து வகைச் செடிகளை வைப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட்டு, அவர்கள் இதையெல்லாம் பரிசீலனை செய்து, வனங்களிலே மருந்து மூலிகைகள் பல ஆண்டுகளாக வளர்ந்து வந்து கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று ஆராய்ச்சி செய்து—இதில் மத்திய சர்க்காருக்கும் அக்கரை உண்டு—இந்த மூலிகைகளை அபிவிருத்திசெய்ய வேண்டும் என்றயோசனை அரசாங்கத்திற்கும் இருக்கிறது. அவர்கள் ஒரு அறிக்கை தயாரித்து இருக்கிறார்கள். அது இப்பொழுது வைத்திய இலாகாவின் ஆலோசனையில் இருக்கிறது. இனி அந்தச் செடிகள் கண்காணிக்கப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பீடி இலைகளைப் பற்றிச் சொன்னார்கள். பீடி இலை கன்யாகுமரியில் சில பிராந்தியங்களில் இருக்கிறது. அதை திருப்திகரமாக அதிக அளவில் உற்பத்தி செய்ய முடியுமா என்பது ஆராய்ச்சியில் இருக்கிறது. ஆராய்ச்சிக்குப் பிறகு, செய்யமுடியுமானால், அதுவும் செய்யப்படும்.

சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டபடி, ஆற்று ஓரங்களில் நிறைய தேக்கு வளர்க்க முடியும். மக்கள் நினைத்திருந்தார்கள், மழை அதிகம் பெய்யும் பிரதேசங்களில் தான் அதை வளர்க்க முடியும் என்று. ஆனால், அது ஆற்றோரங்களிலும் வளர்க்கப்படக்கூடியது. வரண்ட பிரதேசங்களிலே, முந்திரியை வளர்க்கலாம். அது வரண்ட பிரதேசங்களில் நன்றாக வருகிறது. ஆகவே, வன இலாகாவினர் கன்சர்வேடிவ்கள் என்பதில்லை. எங்கு என்னென்ன செடிகள் வளர்க்க முடியுமோ, அவற்றைச் செய்ய முன்வருவார்கள். யூகாலிப்ட்ஸ் மரத்தை ப்ளெயின்களில் வளர்ப்பது ஒரு புதிய ரகம். காடுகளை அழிக்கும் விஷயத்தில், அவர்கள் நல்ல மரங்களின் விதைகளை அழிக்க மாட்டார்கள். விழுந்து விடக்கூடிய

[Sri M. Bhaktavatsalam] [23rd March 1960

மரங்களைத்தான் அழிப்பார்கள். கொடைக்கானலில் பைன் மரங்களை வெட்டுகிறார்கள் என்றால், அவைகள் விழும் தருவாயில் இருப்பவை. அப்படி அழிக்கிறார்கள் என்பது ஒரு பிரமைதான். வேறொன்றுமில்லை.

கிராமங்களில் வைக்கும் காடுகளை யார் பாதுகாப்பார்கள் என்று கனம் சுப்பையா நாயக்கர் கேட்டார்கள். பாதுகாப்பது கஷ்டந்தான். செடிகள் வைத்து வளர்ந்த பிறகு, பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்துவிடலாம் என்ற யோசனை இருக்கிறது. அவற்றையெல்லாம், கிராம மக்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். கிராமத்தின் நன்மைக்குத்தான் அவை அங்கே வைக்கப்படுகின்றன. இந்த சமயத்தில் வெள்ளாட்டைப் பற்றிச் சொன்னார்கள். வெள்ளாட்டுத் தோலும் தான் வேண்டியிருக்கிறது. வெள்ளாட்டை அடியோடு அழித்துவிட முடியாது. அவைகளை அடியோடு அழித்து விடலாம் என்று பாகிஸ்தானில் சட்டம் செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். வெள்ளாட்டுத் தோல்கூட அன்னிய செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கிறது. ரிசர்வ் பாரஸ்டுகள் பொருத்த வரையில் வெள்ளாடுகளுக்கு அனுமதி கிடையாது.

முன்பெல்லாம் ஜமீன் பிரதேசங்களில் இருந்த காடுகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளை எடுத்து நல்ல வனமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. காடுகளைப் பொருத்த வரையில் நல்ல வளமுள்ள மண் இருக்கிறது. இது வரை அங்கே பயிரிடாததினால், பயிர்கள் நன்றாக வரும். ஆகவே, அதை நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுத்தால் என்ன என்று கேட்கிறார்கள். எங்கெங்கே விவசாயத்திற்குக் கொண்டுவர முடியுமோ அங்கெல்லாம் நிலம் அம்மாதிரி கொடுக்கப்படுகிறது. காடுகளையும் பெருக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே தராதரம் பார்த்து எவ்வளவு தூரம் காடுகளில் ஒதுக்க முடியுமோ அவ்வளவுக்கு ஒதுக்கியிருக்கிறோம். இதிலெல்லாம் ஒரு பாலன்ஸ் இருக்க வேண்டும். காட்டுச் செல்வத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும். அதில் எல்லோரும் உதவி செய்ய வேண்டும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு வேலை செய்தால் குறைகளைக் களையமுடியும். பொதுவாகச் சொல்லி விடலாம், அது சரியில்லை, இது சரியில்லை யென்று. வனச் செல்வம் மிக முக்கியமானது ; அதை எந்த அளவுக்கு அதிகமாக வளர்க்க முடியுமோ, அந்த அளவுக்கு நாம் எல்லோரும்—நமக்கெல்லாம் அதில் அக்கரை உண்டு, உணர்ந்து திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவி செய்தால், வன இலாகாவினர், சுற்றுப்புற மக்களின் குறைகளுக்கு இடமில்லாமல், வனவளர்ச்சியில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கும் போதிய ஒத்துழைப்பும், உற்சாகமும் இருக்கும். அப்படி எல்லா அங்கத்தினர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த மானியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri K. R. Nallasivam, pressing his cut motion? . . . I shall put it to the vote of the House.

The question is—

'That the allotment of Rs. 66,86,200 under Demand IV—Forest Department—be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 66,86,200 under Demand IV—Forest Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member Sri K. Sattanatha Karayalar, pressing his cut motion?

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I am pressing it.



23rd March 1960]

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 31,79,400 under Demand XXXVI—Capital Outlay on Forests—be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 31,79,400 under Demand XXXVI—Capital Outlay on Forests.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. STATUTORY RULES AND ORDERS.

* 85. *Notification issued with G.O. Ms. No. 158, Revenue, dated 6th January 1960 declaring Raghunayakipuram village in Pattukkottai taluk (Thanjavur) as an inam estate by the Estates Abolition Tribunal, Thanjavur, under section 1 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 Madras Act XXVI of 1948).]*

* 86. *Notification issued with G.O. Ms. No. 159, Revenue, dated 6th January 1960 declaring Tharaikudi village in Mudukulathur taluk (Ramanathapuram) as an inam estate under section 1 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

* 87. *Notification issued with G.O. Ms. No. 3878, Revenue, dated 24th December 1959 declaring Kottaippakkanendal village in Arantangi taluk (Thanjavur) as an inam estate by the Estates Abolition Tribunal, Thanjavur, under section 1 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948.)]*

### B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

† 42. *A Review of Nationalised Transport during 1959–60.*

---

* Placed on the table on 22nd Maarch 1960.

† Sent by messenger on 21st March 1960.

APPENDIX I.

[Vide answer to starred question No. 522 asked by Sri S. Lazar at the meeting of the Legislative Assembly held on 23rd March 1960, page 292 supra.]

(a) It is presumed that the Hon. Member desires information regarding the distribution of chemical fertilisers under the Government Trading Scheme.

The distribution of chemical fertilisers is done as a Government Trading Scheme under the supervision and control of the Board of Revenue (Food Production) and the Collectors of the districts. The chemical fertilisers distributed under the scheme are Ammonium Sulphate, Urea, Nitrate, Calcium Ammonium Nitrate Ammonium Nitrate and certain phosphatic fertilisers, viz., Mono-Ammonium Phosphate, Diammonium Phosphate, Triple superphosphate, Complex, (Mixed) fertilisers and Ammoniated Triple superphosphate, which are allotted to this State from the Central Pool.

Under the existing set up, the District Co-operative Supply and Marketing Society in each district except Thanjavur and the Tanjore Co-operative Marketing Federation, Ltd., in Thanjavur district are functioning as Government stockholders. The retail distribution is done by authorised distributors appointed by the Collectors. The distributors obtain stocks from the Government stockholders godown on authorisation issued by the Collector or other authorised officer after prepayment of cost. There are four such distributors for each taluk, of which one is a Co-operative Society and the remaining three are private merchants. Each distributor is required to open as many depots as possible, subject to a minimum of five depots in a deltaic taluk and three depots in a non-deltaic taluk.

One half of the total quantity of fertilisers allotted for the taluk is ear-marked for distribution through the Co-operative societies and the balance is equitably distributed to the other three private merchants.

In the Development Blocks only Co-operative Societies function as distributors. Fresh appointment of new distributors in other areas is confined only to co-operative institutions, if they are available.

Twenty-five per cent of the fertilisers annually allotted to the State under the Central Fertilisers Pool, for distribution under the Government Trading Scheme, is ear-marked for distribution to the manure mixing firms for preparation of mixtures.

The retail prices of the fertilisers are fixed throughout the State at uniform rates.

(b) The present system of distribution of chemical fertilisers is working satisfactorily. However with a view to improve upon it. the question of distribution of fertilisers entirely through co-operatives is under consideration of the Government.



APPENDIX II

[Vide answer to clause (b) of Starred Question No. 526 asked by Sri M. P. Sarathi at the meeting of the Legislative Assembly held on 23rd March 1960, page 297 supra.]

A phased programme has been drawn up to bring the entire rural population within the co operative fold before the end of the Third Plan period. Provision has been made in the Second Five-Year Plan for the enrolment of 50 per cent of the rural population as members of the co-operative societies. So far about 42 per cent have been covered by co-operatives. During the Third Plan, steps will be taken to bring the remaining 50 per cent of the rural population within the co-operative fold. The following are the steps taken or proposed to be taken to achieve the objective indicated above :—

During the Second Plan period, the programme was to organize 300 agricultural banks, 1,000 new rural credit societies, 24 land mortgage banks and 200 credit unions with 1,000 multi-purpose societies affiliated to them and to revitalize about 2,000 existing rural credit societies. As against these targets, 330 agricultural banks, 889 rural credit societies, 17 land mortgage banks and 16 credit unions were newly organized and 1,426 existing credit societies selected for revitalization up to 31st December 1959. The gap between the Second Plan targets and the achievements is expected to be made good before the close of the Second Plan period. Government have been extending financial assistance by way of subsidies on a graded scale, to enable these institutions to employ paid managerial staff. The activities will be continued during the Third Plan by fixing suitable targets.

APPENDIX III.

[Vide answer to Starred Question No. 527 asked by Sri T. S. Ramaswami (on behalf of Sri K. Sattanatha Karayalar) at the meeting of the Legislative Assembly held on 23rd March 1960, page 299 supra.]

The scheme of Integrated Rural Credit which is being implemented in this State under the Second Five-Year Plan contemplates covering, by the end of the year 1960-61, 100 per cent of the villages and serving 50 per cent of the rural population and providing credit to the extent of Rs. 22·50 crores by way of short, medium and long-term loans through co-operative societies. These objectives are sought to be achieved by the organization of 300

[23rd March 1960

agricultural banks, 1,000 new village credit societies, besides the revitalisation of 2,000 existing credit societies, the formation of 24 land m rtgage banks and the organization of 200 credit unions with 1,000 multi-purpose societies affiliated to them. The programme also envisages State participation in the share capital structure of co-operative institutions at State, Central and agricultural bank/credit union levels as also in co-operative marketing societies, linking of credit and marketing grant of loans and subsidies to certain types of co-operative societies for the construction of office buildings and godowns and the grant of subsidies to certain types of co-operative societies for the employment of paid managerial staff and additional supervisory staff to ensure their more effective functioning and supervision. By 31st December 1959, 91 per cent of the villages and about 42 per cent of the rural population in the State were covered by co-operative societies and credit to the extent of Rs. 15·84 crores was provided. Three hundred and thirty agricultural banks, 889 village societies, 16 credit unions and 17 land mortgage banks were newly formed and 1,426 existing credit societies were selected for revitalisation and development.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Thursday, the 24th March 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*'College House', Madurai.*

*455 Q.—SRI K. ANBAZHAGAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the site of the premises now known as College House, Town Hall Road, Madurai was acquired by the Government for educational purposes under the Land Acquisition Act;

(b) whether the said building was built in 1925 with Government grant to serve the purpose of hostel of the Madura College on an express condition that it should be used only for the said purpose for a period of 40 years from that date; and

(c) whether it is a fact that the said College House was leased out to a private individual for a rent of about Rs. 2,000 per mensem in 1947 and whether the rent was subsequently reduced from 1956?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) No, Sir.

(b) Yes, Sir.

(c) Yes, Sir. A new hostel was built in 1947 and it was brought under the mortgage containing the condition referred to at (b) in the place of the old hostel. The rent of the old hostel building was reduced to Rs. 1,200 per mensem from 1948. The rent from 1st May 1958 is Rs. 1,500 per mensem.

SRI K. ANBAZHAGAN: அமைச்சர் அவர்கள் புதிய ஹாஸ்டல் 1947-ல் கட்டப்பட்டது பழைய ஹாஸ்டலை மாற்றி என்று தெரிவித் தார்கள். இப்பொழுது அதை ஒரு ஹோட்டலாக பயன்படுத்துமாறு ஒரு ஹோட்டலுக்கு வாடகைக்கு விடப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஹாஸ்டல் கட்டுவதற்கு கிராண்டு கொடுத்து விட்டு, அது 40 வருஷ காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு, ஹாஸ்டலாகத்தான் பயன்படுத்தப்படவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டும், 10, 12 ஆண்டுகளுக்குள் அதை இன்னொரு காரியத்திற்காக வாடகைக்கு விடுவ தற்கு அனுமதி கொடுப்பது நியாயம் என்று அமைச்சர் அவர்கள் கருது கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதிலே சில விவரங்கள் தெரிந்து கொள்வது அவசியம் என்று நினைக்கிறேன். அங்கத்தினர் சொன்ன பிரகாரம் 40 ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஹாஸ்டல் கட்டப்பட்டது. அதற்கு ரூ. 38,000 சர்க்காரிலிருந்து மானியமாக

கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பிற்பாடு, இந்த ஹாஸ்டல் நகரத்திற்கு மத்தியிலே இருக்கிறது. ரொம்பவும் நெருக்கடியான இடத்திலே இருக் கிறது, ஆகையினாலே வேறு ஒரு இடத்திலே புதிய ஹாஸ்டல் கட்டவேண்டு மென்று, இப்பொழுது காலேஜ் இருக்கக்கூடிய இடத்திலேயே புதிய ஹாஸ்டல் ரூ. 95,000 செலவிடப்பட்டு கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு எந்த விதமான சர்க்கார் உதவியும் கொடுக்கப்படவில்லை. ஆகையினாலே அவர்கள் கோரினார்கள். அந்த பழைய ஹாஸ்டலுக்குப் பதிலாக, புதிய ஹாஸ்டலை வைத்துக்கொண்டு, பழைய ஹாஸ்டலை எந்த நிபந்தனைகளின் பேரில் சர்க்கார் கட்டுவதற்கு அனுமதித்ததோ அதே நிபந்தனைகளின் பேரில் புதிய ஹாஸ்டலை ஈடு கொடுத்து, அதைத் தொடர்ந்து ஹாஸ்டலாக உபயோகப்படுத்தவேண்டும் என்ற நிபந்தனையின்பேரில், பழைய ஹாஸ்டலை விடுதலை செய்யவேண்டுமென்று கோரினார்கள். அப்பொழுது இருந்த சர்க்கார் அதை ஒப்புக்கொண்டு பழைய ஹாஸ்டலை விடுதலை செய்திருக் கிறார்கள். அதற்குப் பிறகு இதை ஹாஸ்டலாக நடத்தவேண்டிய அவசிய மில்லை. புதிய ஹாஸ்டலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பழைய ஹாஸ்டலிலிருந்து வரக்கூடிய வருமானமும் காலேஜுக்காகத் தான் உபயோகப்படுத்தப்படுகிறது என்று நினைக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : நில ஆர்ஜித சட்டப்படி, நகர மத்தியில் ஒரு நிலத்தை அரசாங்கம் வாங்கிக் கொடுத்து ஒரு குறிப் பிடப்பட்ட காரியத்திற்காகத்தான் அதை பயன்படுத்தவேண்டுமென்று நிபந்தனை விதித்திருந்தால், அந்தக் காரியத்திற்கு அதைப் பயன் படுத்தாவிட்டால், அந்த நிலத்தையும் அதில் கட்டப்படும் கட்டிடத்தையும் அரசாங்கத்தினிடம் திருப்பி ஒப்படைத்துவிடவேண்டுமென்ற விதி ஏதேனும் இருக்கிறதா ? அப்படிப்பட்ட நிபந்தனையின் பேரில் அந்த உதவி செய்யப் பட்டிருக்கிறது என்பது அரசாங்கக் குறிப்பிலே இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அரசாங்கக் குறிப்பிலே இருப்பது இதுதான். அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். பழைய ஹாஸ்டலுக்குப் பதிலாக புதிய ஹாஸ்டலை அடமானம் வைத்து விட்டு, பழைய ஹாஸ்டலை ஹாஸ்டலுக்கு இல்லாமல் வேறு விதமாக உபயோகப்படுத்துவதற்கு வாடகைக்கு விடுவதற்கும், அதிலிருந்து வரக் கூடிய வருமானத்தை காலேஜுக்கு உபயோகப்படுத்துவதாகவும் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதி அப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN : மதுரை காலேஜுக்காக சர்க்காரில் கொடுத்த அந்தக் காலி இடத்தை 4 லட்ச ரூபாய்க்கு சமீபத்தில் அங்கே ஹோட்டல் நடத்தக்கூடிய ஒருவருக்கு விற்கப்பட்டுவிட்டதாக கூறப் படுகிறது. அது உண்மையா ? அப்படி விற்கப்பட்டதாக கூறப்பட்டபொழுது இதைத் தடுக்கவேண்டுமென்று நான் கலெக்டருக்கு எழுதியபொழுது, சர்க்கார் இது விஷயமாக உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதில் ஒன்றும் தலையிடுவதற்கு இல்லை என்று கூறுகிறார். சர்க்கார் இதை கவனிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : விற்றுவிட்டது எனக்குத் தெரியாது. இது மாதிரி "ரிலீஸ்" 1947-ல் ஏற்பட்டது. ஆகையால், இது சமீபத்தில் பிறப்பிக்கப்பட்ட ஒரு உத்தரவு அல்ல.

SRI M. KALYANASUNDARAM : அந்தப் பழைய ஹாஸ்டலில் இருக்கக்கூடிய சொத்துக்கள் கூட அந்தப் பள்ளி ஸ்தாபனத்தையே சேர்ந்தது. அதை விற்பதற்கு எப்படி சர்க்கார் அனுமதி கொடுக்கலாம் ? அதில் இருக்கக்கூடிய வருமானம் பூராவும் அந்த பள்ளிக்கே செலவழிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை போடாமலேயே முன்னால் விடுதலை செய்யப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த விவரம் என்னிடம் இல்லை. இதில் கொடுத்திருக்கிற விவரப்படி வரக்கூடிய வரு மானத்தை, வாடகையை இந்தக் காலேஜ்தான் உபயோகப்படுத்தி வருகிறது. வருமானம் பூராவும் அந்த காலேஜுக்கே உபயோகப்படுத்துவதற்கு





கணக்கு இருக்கிறது, தணிக்கை இருக்கிறது. அதில் ஏதாவது தவறு நடந்தால் கட்டாயம் நடவடிக்கை எடுப்பார்கள். விற்றதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the Government will use the building for Government purposes for accommodating Government offices instead of selling it away?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know what the hon. Member is referring to. There is no question of selling the building to anybody else. This is a question of management of a college putting up a hostel at their own cost for which they received a Government grant. Later on they put up another new hostel in a new site and wanted that all the conditions attached to the old hostel should be transferred to this new hostel and the old hostel released from those conditions. Early in 1947, the Government accepted the position and released the building.

SRI N. R. THIAGARAJAN : மதுரையில் பிரயாணிகள் தங்கு வதற்கு பிரயாணிகள் விடுதி (ஸர்கூட் ஹவுஸ்) கட்டவேண்டுமென்று சர்க்காரில் யோசனை இருக்கிறதா ? அந்த இடம் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருப்பதால் பிரயாணிகள் விடுதிக்குப் பொறுத்தமான இடம். ஆகவே, அதை சர்க்கார் எடுத்துக்கொள்ள முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஊரிலுள்ள கட்டிடங்களை யெல்லாம் நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்பது தவறான கருத்து. அதுவும் ஒரு ஹாஸ்டலாக இருந்தது, இப்பொழுது அங்கு தனிப்பட்டவர்கள் போய்த் தங்குவதற்குத் பயன்பட்டுத்தான் வருகிறது. அந்த முறையில் அதை பார்க்கக்கூடாது. நாம் கொடுத்த மான்ய விதிகளுக்குப் புறம்பாக ஏதாவது நடந்ததா என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டும். 1947-ல் இதைப் பரிசீலனை செய்து, அந்தக் கட்டிடத்தை அது மாதிரி விடுதலை செய்வதிலே ஆட்சேபனை இல்லை என்று அப்பொழுது உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

SRI K. ANBAZHAGAN : அரசாங்க உதவி பெற்று பொது நலத்திற்கு என்று கட்டப்பட்ட ஒரு கட்டிடம் அதற்குப் பின்னர் வாடகைக்கு விடப்படுவதை அரசாங்கம் அனுமதிக்கலாமா ? இப்பொழுது 3 லட்சம் வாங்கிக்கொண்டு ஒரு லட்சம் ரூபாய் பாக்கி கணக்குத் தீர்த்து விட்டால், அந்தக் கட்டிடம் விற்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி விற்பதாக இருந்தால் அந்த விற்பனையைத் தடை செய்து, அந்தக் கட்டிடம் அரசாங்க அலுவலகங்களுக்காக மேற்கொள்ளப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்டவர்களுடைய சொத்து உரிமை இதிலே இருக்கிறது. 1947–ல் சர்க்கார் அதன் பேரில் இருக்கக்கூடிய பிடிப்பை விடுதலை செய்திருப்பதினால், இப்பொழுது மறுபடியும் 1947-ல் போட்ட உத்தரவை ரத்து செய்து, அதில் உரிமை இருக்கிறது என்று சொல்ல சட்டப் பிரகாரம் இடம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இந்தக் கட்டிடத்தை அவர்களுக்கு விடுதலை செய்து கொடுத்த பிற்பாடு, அது அவர்களுடைய தனிப்பட்ட சொத்து, காலேஜ் டிரஸ்டு சொத்து. டிரஸ்டு விதிகளின் பிரகாரம் விற்கப்படுகிறதா என்பதை பற்றி வேண்டுமானால் பரிசீலனை செய்யலாமே ஒழிய, அந்தக் காலத்தில் உதவி செய்ததின் காரணமாக அதன்பேரில் இப்பொழுது பிடிப்பு இருக் கிறது என்று சொல்லவேண்டுமென்று எப்படி கூற முடியும் ?

[24th March 1960

**SRI K. ANBAZHAGAN**: அந்த நிலம் ஆர்ஜிதம் செய்ததிலிருந்து அதற்குப் பின்னர் இந்தக் கட்டிடம் கட்டிய நேரத்திலும் அதற்குப் பின்னர் அரசாங்கத்தை அனுமதி கேட்ட நேரத்திலும், டிரஸ்டுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்களை அரசாங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்க அனுமதிக்குமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: நான் உடனே இதற்குப் பதில் சொல்ல முடியாது. அந்தக் கடிதப் போக்குவரத்து இப்பொழுது என்னிடம் இல்லை. அவைகளைப் பார்த்து, அவைகளை அங்கத்தினர்கள் பார்வைக்கு வைப்பது அவசியமானால், தனியாக ஒரு கேள்வி போட்டால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

*Holiday Homes for school children*

* 457 *Q.*—**SRI S. LAZAR**: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is a proposal by the Government to start Holiday Homes for school children at Ootacamund, Kodaikanal, Courtallam, Ercaud, etc.?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: (*a*) No, Sir.

**SRI S. LAZAR**: மூன்றாவது திட்டத்திலாவது இதற்கு இடம் கொடுக்கப்படுமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: மூன்றாவது திட்டத்தைப் பற்றி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அந்தக் குழுவில் அங்கத்தினரும் அங்கம் வகிக்கிறார்கள். அந்தக் குழுவினிடம் அந்த ஆலோசனையை சொன்னால், அந்தக் குழு அதைப் பரிசீலனை செய்யும் என்று நினைக்கிறேன்.

*Legislative Assembly meeting at Ootacamund*

* 467 Q—**SRI K. ANBAZHAGAN** (on behalf of Dr. SRIMATHI SATHIYAVANIMUTHU): கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு சட்ட சபையை உதகையில் கூட்ட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) இல்லையாயின் காரணமென்ன?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: (அ) சட்ட சபையை இந்த ஆண்டு உதகையில் கூட்ட அரசாங்கத்தாருக்கு உத்தேசம் இல்லை.

(ஆ) அங்கத்தினர்கள் சட்ட சபையை உதகையில் இந்த ஆண்டில் கூட்டவேண்டுமென்ற விருப்பம் தெரிவிக்காதது தான் காரணம்.

**SRI A. A. RASHEED**: Sir, has the attention of the Government been drawn to the propaganda carried on by political parties that their agitation was responsible for the Government dropping their idea of going to Ooty?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: There are some people trying to show that they are responsible for the rising of the sun every day. He cannot be going on contradicting each and everything.



24th March 1960]

*Uniform for students*

**MR. SPEAKER**: 483, 484 இந்த இரண்டு கேள்விகளும் ஒரே விஷயத்தைப்பற்றி இருப்பதால், இரண்டையும சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

* 483 *Q.*—**SRI A. A. RASHEED**: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to bring in a legislation for the compulsory wearing of uniforms for the boys and girls studying in the elementary schools; and

(*b*) if so, when?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 484 *Q.*—**SRI S. LAZAR**: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is a proposal by the Government to have 'School Uniform' (in dress) in all the schools?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: The Government of India suggested that uniforms could be prescribed in all schools. The State Government hae commened this suggestion to the managements of all schools for adoption, if possible.

**SRI A. A. RASHEED**: May I know whether Government have provided certain funds for supplying uniforms to poor children?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: There is no scheme now to give aid to schools for providing uniforms to the poor children. But this is also being organised as a voluntary movement and I am glad to inform hon. Members that in many places people have come forward to provide children with uniforms.

**SRI K. B. S. MANI**: சார், இந்த ஒரே மாதிரி உடை அணிய, இந்திய சமுதாய நல பண்டிலிருந்தோ, காந்திஜி நிதி, கஸ்தூர்பா நிதி, படேல் நிதிகளிலிருந்து தொகை கொடுத்து உடைகளைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: இன்னொருவர் நிதியை எடுத்து நாம் எப்படி பயன்படுத்தவேண்டுமென்று சொல்ல முடியும். அந்தந்த நிதிகளைச் செலவு செய்ய அவர்கள் முறையையும் விதியையும் வகுத்திருக்கிறார்கள். அந்த முறையில் அவர்கள் அதைப் பயன்படுத்தலாம்.

**SRI N. MARUDACHALAM**: ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகள் ஒரே விதமான அடைகளை அணியவேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தால், அம்மாதிரி உடையை வாங்கத் தகுதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்கு சர்க்கார் செலவிலே வாங்கித்தர ஏற்பாடு செய்வார்களா?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: சட்டம் வரும்போது பார்க்கலாம்.

**SRI A. A. RASHEED**: May I know whether the uniforms will be red shirt or black shirt? (Laughter.)

**THE HON. SRI C. SUBRAMANIAM**: I do not know the preference of the hon. Member. (Laughter.)

[24th March 1960

**Sri A. VEDARATHNAM** : இப்பொழுது மத்திய உணவு திட்டத்தைப் போல மாணவர்களுக்கு உடை அணிவதிலும் சர்க்கார் ஏதாவது உடை சம்பந்தப்பட்டவரை யூனிபாரம் ப்ரிஸ்க்ரைப் பண்ணுமா? அப்படி வரையறுத்தால், எல்லாப் பள்ளிகளிலும் அம்மாதிரி உடைகள் கிடைக்க வசதி செய்து தருவார்களா?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : எல்லாப் பள்ளிகளிலும் ஒரே விதமான உடைகள் அணியவேண்டும் என்றால் அதில் எனக்கு சந்தேகம் இருக்கிறது. ஒரு பள்ளியில் இருக்கக்கூடிய எல்லாப் பிள்ளைகளும் ஒரே விதமான உடையை அணியவேண்டும் என்றால் அது சாத்தியமாக இருக்கலாம். ஆனால், மாகாணத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் உள்ள எல்லாப் பிள்ளைகளும் ஒரே விதமான உடையை அணியவேண்டும் என்றால் அதில் பல சிக்கல்கள் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

**Sri T. T. DANIEL** : May I know the object of this proposal and whether it is to instil into the minds of the children a spirit of equality amongst themselves?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : As a matter of fact when a uniform dress is put that gives a sense of discipline and also perhaps a sense of equality also. Therefore we should work more and more particularly at the level of children and school boys so that all of them could have equal dress, equal status and equal facilities.

**Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN** : இப்பொழுது ஹரிஜன பிள்ளைகளுக்கு, ஹைஸ்கூல்களிலும், உடைகளுக்காகவும், புத்தகங்களுக்காகவும் பணம் கொடுக்கப்படுகிறது. யூனிபாரம் முறையில் உடைகள் அணிய வேண்டிவந்தால் அந்த ஹரிஜனக் குழந்தைகளுக்கு நல்ல உடைகள் தைத்த துணியாகக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : என்னுடைய சகா ஹரிஜன இலாகா மந்திரியவர்கள் இதைக் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**Sri T. S. RAMASWAMI** : பல பள்ளிக்கூடங்களில் யூனிபாரம் உடை அமுலுக்கு வர அரசாங்கம் ஊக்கம் அளிக்க என்ன செய்கிறார்கள்?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : என்னுடைய பாராட்டுதலைக் கொடுக்கிறேன்.

### *Village karnams*

* 537 Q.—**Sri G. ANNAMALAI MUTHURAJA** : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்களைப் போல, கிராமக் கர்ணங்களையும் ஊர் விட்டு ஊர் மாற்றும் திட்டம் அரசாங்கத்திடம் உண்டா?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : No, Sir.

**Sri G. ANNAMALAI MUTHURAJA** : தற்சமயம் இல்லாவிட்டாலும், பின்னிட்டாவது மாற்றி அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இருக்கிற முறையைத் திருத்தி அமைக்கும் விஷயம் வேறே. பாரம்பரைப் பாத்தியம் உள்ளவர்களை மாற்ற முடியாது. அப்படிப் பாத்தியம் இல்லாதவர்கள், ஒருவரோடொருவர் மியூசுவல் ட்ரான்ஸ்பர் முறையில் வேண்டுமென்றால், அம்மாதிரி செய்யலாம்.



24th March 1960]

**Sri G. G. GURUMURTHI** : பரம்பரை பாத்திய முறை எப்பொழுது மாற்றி அமைக்கப்படும்?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : முன்பு கேட்ட கேள்விக்கே பதில் சொன்னேன். அந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது. முடிவு எடுக்கவில்லை. பிற்பாடுதான் செய்யவேண்டும்.

### *Repairs to certain tanks*

* 538 *Q.*—**Sri T. T. DANIEL** : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the total number of tanks between Dindigul and Kodaikanal and between Tiruchirappalli and Villupuram in respect of which the breaches have recently occurred due to rains;

(*b*) the steps taken by the Government to make the necessary repairs in the tanks;

(*c*) what is the cost of damage caused to the Government and to the public due to the breaches;

(*d*) what are the causes for these breaches;

(*e*) whether the Government have made the normal repairs in these tanks;

(*f*) what is the estimated cost to finish the repairs in these tanks; and

(*g*) the steps taken by the Government to prevent such breaches in future?

**The Hon. Sri P. KAKKAN** : (*a*) About 104 Minor Irrigation tanks in all, of which 99 tanks lie between Villupuram and Tiruchirappalli and five railway affecting tanks lie between Dindigul and Kodaikanal. Besides 26 Public Works Department tanks also breached.

(*b*) Immediate steps were taken to ring bund the breached tanks and close the breaches in the supply channels.

(*c*) The cost of damages caused to Government and private property due to the breaches in the South Arcot District is approximately Rs. 65,840 and Rs. 4,82,330 respectively. In the Tiruchirappalli District the cost of the damages is estimated at Rs. 7,283 in the case of Government property and Rs. 18,748 in the case of private property. The cost of damages caused to Government property in Madurai is Rs. 7,600.

(*d*) The breeches occurred mainly due to heavy and unprecedented rains and the heavy inflow of water into the tanks; particularly, in South Arcot district the breaches were due to heavy and concentrated rainfall in the catchment areas of the Gomuki, the Manimukthanadhi and the Vellar rivers.

(*e*) Yes, Sir.

(*f*) The estimated cost of repairs to Minor Irrigation tanks and Public Works tanks in South Arcot district is reported to be Rs. 65,840 and Rs. 4·6 lakhs respectively. Repairs to the breached tanks is estimated at Rs. 7,283 in Tiruchirappalli district and Rs. 7,600 in Madurai district.

[24th March 1960

(g) It is not economically possible to prevent such breaches due to abnormal and unprecedented action of nature. Each case of damage will be considered on its own merits and suitable action will be taken.

SRI T. T. DANIEL : In view of the fact that many of these tanks lie adjacent to the railway lines, will the Government construct some outlet for the flow of water, so that the water may not flow across the rails and wash the railway lines?

THE HON. SRI P. KAKKAN : If it is necessary, Government will take action.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : முருகன் பட்டிக்குளம் என்று காந்திக் கிராமத்திற்குப் பக்கத்தில் இருக்கிறது. அதில் வருஷா வருஷம் பல தடவைகள், பல மணி நேரங்கள் டிராபிக் தடைபட்டு நிற்கிறது. அந்தக் குளத்தில் ஏற்படும் உடைப்புகளால், இதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று எவ்வளவு கேட்டும் ஒரு பலனும் இல்லை. நானும் 12 வருஷமாகப் பார்க்கிறேன். இம்மாதிரி ஹைவேஸ் டிராபிக் தடைப்படாமல் இருக்க நிரந்தரமான நடவடிக்கை முடியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : உண்மையிலேயே ரிப்பேர் செய்ய வேண்டுமானுல் அது கவனிக்கப்படும்.

SRI V. SANKARAN : ரயில்வே பாதையோரங்களில் மரங்கள் வைத்து வளர்க்கப்போவதாக பாரஸ்ட் டிமாண்டின் போது சொல்லப்பட்டது. அப்படி ஏற்படும் போது ஓரளவு இந்த அரிப்பைத் தடுக்க அனுகூலமாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சொல்வதற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும்.

SRI M. KANDASAMY PADAYACHI : வெள்ளத்தால் உடைப்பு எடுத்தால் முதலில் அடைக்கப்படுகிறது. முன் கூட்டியே, உடனடியாக, இந்த வருஷமே அந்த வேலையைச் செய்து விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : எவ்வளவு துரிதமாக இதை ரிப்பேர் செய்து விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்யப்படும்.

SRI T. T. DANIEL : May I know whether top priority will be given every year to make necessary repairs to these tanks and whether it is a fact that for many years annual repairs are not taken into account?

THE HON. SRI P. KAKKAN : I cannot say that the tanks are not repaired. If the hon. Member wants the main reasons he can put a separate question and I will answer.

*Death of a Government Jeep driver in Salem Hospital*

* 539 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that one M. Ganapathi, a Jeep driver of the Public Health Department, died at the Government Hospital, Salem, on 31st October 1959;

(b) when he was admitted in the hospital and for what complaints; and



24th March 1960]

(c) whether a post-mortem examination of the body was conducted, and if so, with what results?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) He was alleged to have been knocked down by a car while he was coming in a cart in the opposite direction at 9-30 p.m. on 28th October 1959. He was reported to have complained of pain over the left side of his chest when he was admitted into the hospital at 9-55 p.m. on that date.

(c) The post-mortem examination of the patient's body revealed that the cause of death was cardiac failure due to the diseased condition of the heart.

SRI M. KALYANASUNDARAM : அவர்கள் மோட்டார் விபத்தின் காரணமாக அடிபட்டு இருக்கிருர்கள் என்று வைத்திய அதிகாரிக்கு தெரிவித்தது உண்மையா ? வைத்திய அதிகாரியின் ரிபோர்ட் சரி அல்ல என்று தெரிவிக்கப்பட்டதா ? அப்படி இருந்தால் அரசாங்கம் வேறு வைத்திய விசாரணை செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த வைத்திய பரிசோதனை விசாரணையில் அவர் அடிப்பட்டுத் தான் இறந்ததாக சொல்லவில்லை. மேல் காயம் இல்லை உள் காயம் இல்லை. ஆசாமி இருதயக் கோளாரினுல் இறந்ததாகத் தெரிகிறது.

*Recommendations of the Rathnasabaapthi Mudaliar Committee*

* 540.—SRI N. MARUDACHALAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநில நகரசபைகளுக்கு அதிகப்படியான அதிகாரம் வேண்டும் என்று ரத்தினசபாபதி முதலியார் கமிட்டியால், சென்னை அரசாங்கத்திற்கு எந்த வருஷத்தில் சிபார்சு செய்யப்பட்டது ?

(ஆ) மேற்படி சிபார்சை இது வரையில் சட்டபூர்வமாக்கப்படாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) The Ratnasabapathi Mudaliar Committee submitted its report in August 1950.

(b) The main recommendation of the Committee on the subject, namely, to abolish the post of Commissioner and to make the Chairman the executive head of the administration and other recommendations of the Committee which hinge upon the suggestion for abolition of the Commissioner's post were not accepted by the Government in 1954. Such of the other recommendations of the Committee as were acceptable for examination have been embodied as provisional conclusions in the Revised " White Paper on the Reform of Local Administration in Madras State including the Madras City Corporation " placed before the Legislature in 1957. No final decision has yet been taken in the matter as the Legislature Committee on Local Administration has not yet considered it.

[24th March 1960

*Raw films*

* 541 *Q.*—Sri J. MATHA GOWDER, Sri M. P. SARATHI and Sri A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி கச்சா பிலிம் தயாரிக்க தகுந்த இடம் என்பதை அந்நிய நாட்டு நிபுணர்கள் சர்க்காருக்கு தெரிவித்திருக்கிறார்களா ?

(ஆ) அப்படியானால் கச்சா பிலிம் பாக்டரி எப்பொழுது ஆரம்பிக்கப் படும் ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The National Industrial Development Corporation has applied to the Government of India for the grant of a licence under Industries (Development and Regulation) Act, 1951 for the establishment of the Factory in January, 1960 and the matter is under consideration of the Government of India.

Sri J. MATHA GOWDER : இந்தத் தொழில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும். ஆரம்பித்தபிறகு எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று அறிய விரும்புகிறேன் ?

The Hon. Sri R. VENKATARAMAN : It is too early to say anything.

Sri A. VEDARATHNAM : இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வெளிநாட்டிலிருந்து ஏதாவது உதவி கிடைத்திருக்கிறதா ? அப்படியிருந்தால் என்ன உதவி அளித்திருக்கிறார்கள் ? மாகாண சர்க்காருக்கு மத்திய சர்க்காரிடமிருந்து பங்கு உண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கேள்வியின் முதல் பகுதிக்கு பதில் பிரெஞ்சு தேசத்தின் ஒத்துழைப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. மத்திய சர்க்கார் பிரஞ்சு கம்பெனியுடன் சேர்ந்து ஆரம்பிப்பது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. மாநில சர்க்காருக்கு இதில் பங்கு உண்டு என்று சொல்லுவதற்கில்லை.

Sri A. GOVINDASAMY : இந்தத் தொழிற்சாலை மத்திய அரசாங்கம் எடுத்து நடத்திறைல் ராஜ்ய சர்க்காருக்குப் பங்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்?

The Hon. Sri R. VENKATARAMAN : இல்லை.

*Census*

* 542 *Q.*—Sri S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the work connected with the taking of the census of population to be completed and kept ready by 1960 has been finished; and

(*b*) whether the seats in the Assembly would be allotted on the basis of the census of 1960 in the next General Elections?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The next census of population will be taken during the year 1961. The Government of India are making arrangements in this connection.

(*b*) It is for the Government of India to take action.



24th March 1960]

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்த சென்சஸ் எடுக்கும்போது அங்கங்கே இருக்கும் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் மூலமாக எடுக்கப்படுமா ? அல்லது அரசாங்க மேற்பார்வையில் எடுக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்காக சென்சஸ் கமிஷனர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இதன் முழு விவரம் என்னிடம் இல்லை.

Sri K. VINAYAKAM : Sir, regarding the second part of the question will our Government place before the Census Commissioner or the authority whatever they may be regardnig the reallocation of seats in Madras?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir. If the occasion arises, certainly whatever representation is necessary, will be made.

Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN : இந்த இரட்டை மெம்பர் தொகுதிகளை எல்லாம் ஒற்றை மெம்பர் தொகுதியாக்கும் சர்ச்சை இருக்கிறதா? 1962-ம் வருஷ எலெக்ஷனுக் குள் இது பற்றி தீர்மானம் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது இருக்கும் சட்டப் பிரகாரம் இரட்டை மெம்பர் தொகுதிதான் இருக்கிறது. சட்டத்தை மாற்றினால்தான் இது மாறும்.

Sri S. M. ANNAMALAI : சட்ட சபை ஸ்தானங்கள் அதிகமாக இருப்பது பற்றி மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஏதாவது அபிப் பிராயம் தெரிவித்ததா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலே அஸெம்பிளி அங்கத்தினர்கள் எண்ணிக்கை உயர்த்தவேண்டும் என்பதே இந்தக் கேள்விக்கு பதில்.

Sri J. MATHA GOWDER : ஜனத்தொகை விகிதம் சட்ட சபை அங்கத்தினர்களை ஒதுக்கும்போது மலைப் பிரதேசத்திற்கும் கீழ் பிரதேசத்திற்கும் சரியாக இல்லை. மலைப் பிரதேசத்தில் குறைந்த எண்ணிக்கை வைப்பதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து நமது சர்க்காருக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ரெப்ரசென்டேஷன் ஆப் பீபிள்ஸ் ஆக்ட் பிரகாரம் இதைக் தொகுத்திருக்கிறார்கள். இதில் மாறுதல் செய்ய வேண்டுமென்றால் பார்லிமெண்டில் தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Sri A. GOVINDASAMY : ஜனாதிபதி அவர்களின் உரையில் இதைப்பற்றி. . . . .

Mr. SPEAKER : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

Sri A. GOVINDASAMY : நான் கேள்வியை வேறு விதமாக மாற்றிக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : அப்படியென்றால் கேளுங்கள்.

Sri A. GOVINDASAMY : இப்பொழுது இரட்டைத் தொகுதியாக இருப்பதை ஒற்றைப் தொகுதியாக மாற்றுவதற்கு ஜனத் தொகை அடிப்படையிலே மாற்றுவார்களா ? அல்லது ஆதித் திராவிட சமூகத்தினர் எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கே மாற்றுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இரட்டைத் தொகுதியில் இருந்து ஒற்றைத் தொதியாக மாற்றுவது பற்றித் தகவல் இல்லை. அப்படி மாற்றுவதென்றால் பார்லிமெண்டில்தான் பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டும்.

[24th March 1960

SRI S. NAGARAJA MONIGAR : Is not the occasion arising on account of the ensuing census which takes place during 1961 and the General Election which takes place in 1962, and if so, can the Hon. Minister say definitely whether there will be any reallocation of seats?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have already stated that it is for the Government of India to take decisions in the matter. I do not think I can say anything either way.

### " *Yaws* "

* 543 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the survey team has completed the investigation of the disease ' Yaws ' among the Harijans in Erode taluk;

(*b*) if not, how long it will take to complete the survey; and

(*c*) whether arrangements have been made for the treatment of the same?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) to (*c*) A survey has been made in the Perundurai Range.

Appointment of special staff for taking up the survey of the whole taluk and undertaking treatment of several cases is being considered.

SRI K. R. NALLASIVAM : இந்த வியாதியால் எந்தெந்த பாகங்களில் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ரொம்ப அதிகமாக பாதிக்கப்படவில்லை. இதைக் கண்ட்ரோல் செய்வதற்கு அங்கங்கே அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஈரோட், அவினாசி, பெருந்துறை, தாலுக்காக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பரவாமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDARAN : அவினாசி தாலுக்காவில் அந்த வியாதி முன்பே பரவி இருந்தது. Director of Venereal Diseases-க்கு ரிப்போர்ட் செய்து அந்த வருஷம் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பலன் இப்போது தெரியுமா ? இந்த வியாதியைக் கண்ட்ரோல் செய்யும் ஸ்கீம் 1956-ல் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்படி எடுத்ததில் நிறைய பலன் இருக்கிறது. வியாதி கொஞ்சம் கண்ட்ரோல் ஆகியிருக்கிறது. இப்போது மத்திய அரசாங்கத் திட்டப் பிரகாரம் இந்த வியாதி எங்கெங்கு இருக்கிறதோ அதைத் திட்டம் போட்டு தடுக்க பிரயத்தினம் எடுக்கப்பட்டிருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த வியாதியைக் கண்ட்ரோல் செய்யும் ஸ்கீம் 1956-ல் எடுத்துக்கொள்ளப்பட்டது: அப்படி எடுத்ததில் நிறைய பலன் இருக்கிறது, வியாதி கொஞ்சம் கண்ட்ரோல் ஆகியிருக்கிறது. இப்போது மத்தியஅரசாங்கத் திட்டப் பிரகாரம் இந்த வியாதி எங்கெங்கு இருக்கிறதோ அதைத் திட்டம் போட்டு தடுக்க பிரயத்தினம் எடுக்கப்பட்டிருக்கிறது,

SRI M. K, SOMASUNDARAM : இந்த வியாதி எதனால் ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(பதில் இல்லை).



24th March 1960]

SRI P. G. MANICKAM : எத்தனைக் கிராமங்கள் இந்த வியாதியால் பாதிக்கப்பட்டுடிருக்கின்றன ? பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டனவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கெல்லாம் என்னிடம் புள்ளி விவரம் இல்லை. பொதுவாக கோயம்பத்தூர் ஜில்லாவில் அவினாசியும், பெருத்துறை தாலூக்காவும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

SRI S. LAZAR : On a point of order, Sir. We have been discussing this question without understanding what it is. 9-00 a.m.

MR. SPEAKER : It is not my fault.

SRI S. LAZAR : At least after the question is over, I would like to have the information from the Hon. Speaker.

MR. SPEAKER : I cannot give it. Let the hon. Member please contact the Hon. Minister and the latter will give him the information.

### *Government Transport Workers' Co-operative Society*

* 544 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any complaint of misappropriation of funds from the Co-operative Society of the Government Transport workers in Madras was made during this financial year;

(*b*) if so, the details thereof; and

(*c*) the steps taken by the Government to rectify matters and to realise the amount?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) On 30th April 1959, the Manager of the Madras State Transport Department Employees' Co-operative Thrift and Credit Society reported to the Director that the Hon. Secretary of the Society had not accounted properly for a sum of Rupees Thirty-three thousand five hundred and ninety-eight and naya Paisa one (Rs. 33,598-01 nP.). In November 1959, it was reported that vouchers were not available for a sum of Rs. 3,500 (Rupees three-thousand and five hundred) shown in the cash book was disbursed as ordinary loan on the 6th August 1959 and that a sum of Rs. 1,000 (Rupees one thousand) as on 11th September 1959 had not been accounted for.

(*c*) The matter is under investigation by the officers of the Co-operative Department. The management of the Society has been superseded and the Society has been placed in charge of a Special Officer under section 43 (1) of the Madras Co-operative Societies Act, 1932. Necessary steps will be taken to realise the amount if any due after the investigation is completed.

SRI T. S. RAMASWAMI : May I know who is responsible for this thing? Is he a departmental man or an outsider?

[24th March 1960

THE HON. SRI R. VENKATARAMAN : The matter is under investigation. I will give a detailed report after the investigation is completed. I do not want to prejudice the investigation at this stage.

SRI A. GOVINDASAMY : பஸ் தொழிலாளர்களின் பணத்திற்கு என்ன உத்தரவாதம் என அறிய விரும்புறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கூட்டுறவு சங்கங்களுக்கு நஷ்டம் வந்தால் என்னென்ன உத்தரவாதம் உண்டோ அது உண்டு.

SRI M. KALYANASUNDARAM : May I know whether the investigation is being done by the Co-operative Department or by the Special Branch of the Police Department?

THE HON. SRI R. VEKATARAMAN : The usual procedure is that initial investigation is done by the department and if the department finds that there is further investigation to be conducted, then it will be handed over to the Police. We have done so in another instance concerning the department.

*Removal of thatched roofing in the Madras City*

* 545 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to remove all thatched roofing to prevent frequent fire in the City of Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that fire accidents in the City are caused by thatched buildings and if so, what action the Government propose to prevent fire accidents?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, these fire accidents happen. What the Government are now doing under the Slum Improvement scheme is to convert some of these thatched huts into brick and mortar houses. Then the employees of the industrial units concerned are also building houses. Now the Policy of the Government is that when the huts are rebuilt they try to see that they are separated and not put together very closely so that chances of the fire spreading will be minimised. That is all I can say now.

SRI V. SANKARAN : இது போன்ற ஓலே வேய்ந்த கூரைகளை அகற்றுவதற்கு சர்க்கார் சம்மதித்தால், அதற்குப் பதிலாக ஓடுகள் வைத்துக் கொடுப்பதற்கு கனம் ரஷீத் போன்ற கனவான்கள் முன் வந்தால் அதை ஏற்றுக் கொள்வதற்கு சர்க்கார் தயாராக இருக்கிறார்களா ?

MR. SPEAKER : The Hon. Member is asking a hypothetical question. The Hon. Minister has answered ' No ' to the question of the hon. Member Sri A. A. Rasheed.

SRI A. GOVINDASAMY : கூரை வீடுகள் தீக்கிரையாகிறபோது மொபசல் பார்ட்சில் 50 ரூபாய் சகாயநிதி அளிக்கிறார்கள் சென்னை நகரத்திற்கும் அதே சகாயநிதிதானா அல்லது அது உயர்த்தித் தரப்படுகிறதா ?



24th March 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : இங்கேயும் அதே தான். 30 ரூபாய் கூரை போடுவதற்கும், பத்து ரூபாய் கைத்தறித் துணி வாங்குவதற்கும் கொடுக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware that even in the matter of rehabilitating these slum-dwellers by the Corporation authorities as well as the C.I.T. authorities, they are putting up only thatched sheds, of course, in an organised manner so that there may be organised fire in the event of a fire instead of a disorganised fire?

MR. SPEAKER : How does this arise out of the main question. I have no objection if the Hon. Minister is prepared to answer.

THE HON. SRI M. A. MANICKAVELU : Rehabilitation takes place in two or three ways, firstly by putting up *pucca* buildings and secondly, no doubt b yputting up thatched huts only. As we cannot replace all the thatched huts by built-up houses, in putting up thatched huts, we are trying to spread them as far as possible.

SRIMATHI A. S. PONNAMMAL : சென்னை நகரம் மட்டுமல்லாமல் மாகாணம் முழுவதும் விபத்து ஏற்படுகிறது. ஆக இப்பொழுது கொடுக்கக் கூடிய 30 ரூபாய் போதவில்லை. ஆகவே இந்த 30 ரூபாய் என்பதை 50 ரூபாய் என்றாவது உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த விபத்துகளுக்கெல்லாம் அதிகமாக தாய்மார்கள் தான் ஜவாப்தாரி. அடுப்பை பற்ற வைத்து விட்டு சரியாக அணைக்காது விட்டு விடுகிறார்கள்.

*Collection of Revenue kists for Inam lands*

* 546 *Q.*—SRI T. SAMPATH : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether revenue kists for four faslis, i.e., commencing from 1366 fasli are demanded in a lumpsum now in respect of minor Inam lands situated in Tarappu ryotwari village on the ground of their having been converted into ryotwari lands under the enactment of 40 of 1956;

(*b*) whether any representations have been made against this to the Government by the land owners concerned; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) There is no information.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

SRI T. SAMPATH : May I know whether the Hon. Minister is aware of the hardship that are caused by collecting revenue kists in one month?

THE HON. SRI M. A. MANICKAVELU : If kist is demanded for three years, a large sum has to be paid. What I have stated in my answer is that there has been no definite report or petition regarding it.

[24th March 1960

SRI A. VEDARATHNAM : இனாம் நிலங்களுக்கு ரயத்துவாரி விகிதப்படி வரிவசூல் செய்ய வேண்டுமென்று சட்டம் பிறப்பித்திருப்பதால் அப்பொழுதே இதை இனாம் தாரர்களுக்கு தெரிவித்திருக்க வேண்டியதில்லையா ? பல வருடங்களுக்குப் பின்னால் தெரிவித்ததோடு பல ஆண்டுகளுக்குள்ள கிஸ்தியை ஒரே ஆண்டில் கட்ட வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவது சரியா ? மேலும் கோவில்களிலுள்ள விக்கிரகங்களைத் தவிர பாக்கியுள்ள எல்லாவற்றையும் ஜப்தி செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் உத்தரவு போட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அந்த உத்திரவை நிறுத்தி வைக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூன்று வருட வரி கொடுக்க வேண்டுமென்று டிமாண்ட் நோட்டீஸ் இருக்கிறது. வசூல் செய்யும் போது மூன்று வருடத்திற்கு எல்லாரும் கொடுப்பதில்லை. கேட்பது, மூன்று வருடங்களுக்குள்ளதைப் கேட்பது என்று கேட்கப்பட்டிருக்கிறது. கொடுக்க வேண்டியதை ஏறக் குறைய கொடுத்தால் பரவாயில்லை.

SRI T. SAMPATH : May I know whether the Government would consider the feasibility of collecting these kists on instalment basis?

THE HON. SRI M. A. MANICKAVELU : Each case will have to be judged on its own merits.

SRI V. SUBBIAH : சிறிய தேவஸ்தான நிலங்களுக்கு மூன்று பசலிகளுக்கு வசூல் செய்திருக்கிறார்கள். தேவஸ்தான அதிகாரிகள் அதற்கு ரசீதும் வைத்திருக்கிறார்கள். அப்படி யிருக்க அரசாங்கம் திரும்பவும் டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து வசூலித்து வருகிறார்கள். அதை திரும்ப கொடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது பற்றி எழுதி அனுப்பினால் விசாரிக்கிறேன்.

*Portrait of Tiruvalluvar in postage stamps*

* 547 Q.—SRI K. SATTANATHA KARAYALAR AND SRI M. P. SARATHI : Will the Hon. the Minister for Home be pleased to state whether this Government was consulted in drawing the portrait of Tiruvalluvar for the postage stamp by the Posts and Telegraphs department?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI M. P. SARATHI : அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதிலளித்தார்கள். தமிழ் தலைவராகிய திருவள்ளுவரின் உருவப் படத்தை வெளியிடும்போது நமது அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் ஏன் கலந்து ஆலோசிக்கக் கூடாது ? திருவள்ளுவர் இறந்த நாள் என்று. "டெத் ஆன்வர்சரி" என்று அப்பொழுது வெளியிடப்பட்ட கவரில் குறிப்பிட்டிருக்கிறது. அது சரியா ? அதை நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திருவள்ளுவர் படம் தபால் ஸ்டாம்ப்களில் இருப்பது விரும்பப்படுவது என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது. அதற்கு இணங்க அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அந்த உருவப் படத்தை எப்படி எழுதுவது என்பது பற்றி இந்த அரசாங்கம் தெரிவிக்க வேண்டிய நிமித்தமில்லை. திரு உருவப் படத்தைப் பற்றி ஏகோபித்தக் கருத்து கூற முடியாது. திருவள்ளுவரை நேரில் பார்த்தவர்கள் நம்மிடையெ இல்லை. திருவள்ளுவர் இருந்த காலத்தில் படம் வரையப்பட்டதுமில்லை. ஆகவே, இதில் விவா[illegible]



24th March 1960]

SRI V. K. KRISHNAMURTHY : திருவள்ளுவரின் உருவப் படம் புதைப் பொருளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதா ? அல்லது வள்ளுவர் தந்த குறளிலிருந்து வரையப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறளிலிருந்துதான் இது வரையப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

SRI M. KARUNANITHI : தபால் தலைகளுக்கு என்று வரையப்பட்ட திருவள்ளுவர் ஓவியத்தை சட்டமன்றத்தில் வைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் அம்மாதிரி ஒரு படத்தை இங்கு சமர்ப்பிக்க முன் வந்தால் கனம் சபாநாயகர் அவர்கள் அதைப் பற்றி யோசிப்பார்கள்.

SRI M. P. SARATHI : நான் கேட்பது திருவள்ளுவருடைய உருவத்தைப் பற்றி அல்ல. அன்று வெளியிடப்பட்ட அஞ்சல் உறையில் திருவள்ளுவர் டெத் ஆனிவர்ஸரி (திருவள்ளுவர் இறந்த நாள்) என்று குறிப்பிட்டிருந்தது. இதைப் பற்றி அரசாங்கத்திற்கு தெரியுமா ? அவ்விதம் குறிப்பிட்டிருப்பது சரி என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது வெளியிடப்பட்ட அன்று நானும் பார்த்தேன். எனக்கும் அது பிடிக்கவில்லை. எனினும் இது மத்திய அரசாங்க அமைச்சர் முடிவு செய்ய வேண்டிய விஷயம். அவரும் ஒரு தமிழர். இதில் நாம் ஒன்றும் செய்வதிற்கில்லை.

SRI K. VINAYAKAM : திருவள்ளுவர் அவர் இயற்றிய குறளில் "மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்" என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியானால் இப்போது வெளியிடப்பட்டிருக்கும் திருவள்ளுவர் படத்தில் தாடியும் மீசையும் முடியும் காட்டப்பட்டிருக்கிறது. குறளில் எழுதப்பட்டதின்படி இந்த உருவம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் இது வித்தியாசமாயல்லவா இருக்கிறது ? இதைப் பற்றி அரசாங்கத்தின் கருத்து என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி ஒரு அரங்கு ஏற்படுத்துவதாக இருந்தால் அதில் பல கருத்துக்களை தெரிவிக்கலாம்.

*Prosecution of Office-bearers of Co-operative Societies in the Kanyakumari district*

* 548 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of cases referred to the Police in 1959 for prosecution by the District Registrar of Co-operative Societies, Kanyakumari District against the Presidents and Office-bearers of Co-operative Societies;

(b) whether charge-sheets have been framed against the delinquents in all cases; and

(c) if not, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Six cases.

(b) & (c) These cases are still in the investigation stage. Charge sheets can be filed only on the completion of the investigations.

[24th March 1960

SRI T. S. RAMASWAMI: May I know how long are these cases under investigation and whether any stay was given in between, if so by whom and for what reasons?

THE HON. SRI R. VENKATARAMAN: This was under investigation since 1959. I think in one case one of the Presidents of the Society made representations that there were some facts and circumstances which the Government should take into account. Naturally when representations are made, a stay is given and the representation is examined. After that, I may tell the hon. Member that the stay has been cancelled.

*Artificial Rain-making*

* 549 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state the number of attempts made in Artificial Rain-making and the number of times they were successful during 1959?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: During the year 1959, trials on Artificial Rain-making in Coimbatore Region were made on 143 days. On review of the trial up to 30th September 1959, they were found to be successful on 18 days.

SRI K. SATTANATHA KARAYALAR: சாதாரணமாக இதற்கு எவ்வளவு செலவாகிறது? ஒரு அட்டம்ப்ட் செய்வது என்றால் அதற்கு என்ன செலவாகிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மொத்தமாக இது 5,000 ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டது. சொற்ப செலவில்தான் இந்த பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றது.

SRI A. GOVINDASAMY: இந்த பரிசோதனை கோயம்புத்தூர் ஜில்லாவில் மட்டும் தான் நடந்து வருவதாக தெரிகிறது? ஏன் மற்ற ஜில்லாக்களிலும் இந்தப் பரிசோதனை நடத்த வில்லை. மற்ற ஜில்லாக்களில் எல்லாம் நடத்தினால் வெற்றி பெறாது என்பது சர்க்காருடைய கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மற்ற மாவட்டங்களிலும் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

SRI V. SANKARAN: செயற்கையாக கண்களில் நீர்த்துளிகள் நொடிப்பொழுதில் வரவழைப்பதில் ஆண்களை விட பெண்களுக்கு திறமை இருக்கிறது என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறதா? அப்படியானால் பெண்களையே இந்த பரிசோதனையில் ஈடுபடுத்த சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது விஞ்ஞான விஷயம். இதில் ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசம் பார்ப்பதற்கில்லை.

SRI A. VEDARATHNAM: செயற்கையான மழை பெய்விப்பதற்கு நடத்தப்படும் பரிசோதனை திருப்திகரமாக இருக்குமானால், ஏன் அதை மீண்டும் மழையில்லாத பிரதேசங்களில் பரிசோதனை செய்து பார்க்கக்கூடாது? அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: செயற்கையின் மழையின் ஆராய்ச்சி இன்னும் முடிவு பெறவில்லை. இங்கு மட்டுமல்ல.



24th March 1960]

உலகத்தில் எந்த நாட்டிலும்கூட இந்த ஆராய்ச்சி முடிவு பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஆராய்ச்சியை நம் அரசாங்கம் கைவிட்டு விடவில்லை. மேலும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

SRI P. G. KARUTHIRUMAN: சபா நாயகர் அவர்களே, வெறும் கண்ணீர்த் துளிகளினால் மட்டும் மழை வந்து விடாது என்பது அரசாங்கத்துக்கு தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சிறு துளிபெரு வெள்ளம் ஆகலாம் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே.

*Grievances of hospital employees*

* 550 *Q.*—SRI P. S. SANTHANAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

வேலூரில் நடைபெறும் சி. எம். சி. ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் தொழிலாளர்கள், வாராந்திர விடுமுறைக் கோரியும், 8-மணி நேரம் வேலைக் கோரியும் கைத்தொழில் அமைச்சர் அவர்களிடம் மகஜர் அளித்துள்ளதின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN: The employees of the Christian Medical College Hospital, Vellore, excepting those working in the automobile workshop attached to the hospital, are not covered by the Factories Act or the Madras Shops and Establishments Act. No direction can, therefore, be issued for restricting the working hours of the workers to 8 hours per day for the grant of a weekly holiday.

SRI M. P. SARATHI: ஸார், இதற்காக சி. எம். சி. ஆஸ்பத்திரி தொழிலாளர்கள் ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டு அதை அங்கீகரிக்க வேண்டும் என்று கேட்டபோது அதை அங்கீகரிக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டதாக தெரிகிறது. அதோடு அவர்கள் கேட்கும் கோரிக்கைகளை ஆஸ்பத்திரி அதிகாரிகளும் கொடுக்காமல் இருந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இப்போது இருக்கின்ற சட்டப்படி தொழிலாளர்கள் சங்கங்களைக் கட்டாயமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. அவர்கள் அங்கீகரிக்கவில்லை என்றால் சர்க்கார் அதில் ஒன்றும் செய்வதற்கு இல்லை.

SRI S. PAKKIRISAMI PILLAI: தொழிலாளர் சட்ட விதிகளிலிருந்து இந்த ஆஸ்பத்திரிக்கு தனியாக ஏதாவது விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் என்ன காரணம்?

THE HON. SRI R. VENKATARAMAN: சாதாரணமாக ஆஸ்பத்திரிகளிலுள்ள தொழிலாளர்கள் பாக்டரி சட்டத்தின் கீழோ அல்லது ஷாப் சட்டத்தின் கீழோ வருவதில்லை.

SRI A. GOVINDASAMY: மற்ற சலுகைகள் ஒன்றும் காண்பிக்க முடியவில்லை யென்றாலும், எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யும் இவர்களை பாதுகாக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இதில் அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை. சர்க்கார் இலாகாவாக இருந்தால் ஏதாவது வசதி செய்து கொடுக்க முடியும். அதுவுமில்லை. பாக்டரி சட்டத்தின் கீழும் வரவில்லை. ஆகவே, அரசாங்கம் இதில் ஒன்றும் செய்வதற்கில்லை.

[24th March 1960

SRI S. NAGARAJA MONIGAR : இந்த குறிப்பிட்ட ஆஸ்பத்திரிக்கு சர்க்காருடைய எந்த விதமான ஆதரவு அல்லது சகாயமோ கிடையாதா ? அவ்விதம் சர்க்கார் ஏதாவது கொடுத்துக் கொண்டிருந்தால், அந்த செல்வாக்கை உபயோகித்து எதாவது இதற்கு பரிகாரம் காண முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் உதவி கொடுக்கிறதா இல்லையா என்பதை என்னுடைய நண்பர் அமைச்சர் மாணிக்கவேலு அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாம். எனக்குத் தெரியாது.

*Case against the Munsif of Sugamanickkampatti*

* 551 *Q.*— SRI V. S. MANICKASUNDARAM (on behalf of Sri P. S. K. LAKSHMIPATHI RAJ) : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பழனித் தாலுகா, கஸ்பா பிர்காவிலுள்ள சுகமநாய்க்கன்பட்டி கிராம முன்சீப் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்த வரிப்பணத்தை மோசடி செய்ததற்காக அவர் மீது தொடரப்பட்ட வழக்கு என்னவாயிற்று ?

(ஆ) டிபார்ட்மெண்டில் அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The attention of hon. Member is invited to the answer given on 24th March 1959 with reference to question No. 970, dated 24th March 1959.

(*b*) Departmental action was taken against the Village Headman for having given advance receipts in a few cases and he was kept under suspension from 17th February 1956 to 22nd February 1957.

MR. SPEAKER : கேள்விகள் பதில்கள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

II.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS APPROPRIATION BILL, 1960 (L.A. BILL NO. 4 OF 1960).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That the Madras Appropriation Bill, 1960 (L.A. Bill No. 4 of 1960) be taken into consideration ".

MR. SPEAKER : Motion moved.

" That the Madras Appropriation Bill, 1960 (L.A. Bill No. 4 of 1960) be taken into consideration ".

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உதவி மான்யக் கோரிக்கையில் கேட்டிருக்கக்கூடிய ஒதுக்குவதற்காகக் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவைப் பற்றி நான் பேசும் காலத்தில் நான் இதை எதிர்க்கிறேன் என்று அர்த்தமல்ல. நேற்று அமைச்சர் அவர்கள் கூறின சில கருத்துக்களைப்பற்றி விளக்கங்களை தெரிந்து கொள்வதற்காகத்தான் இதன் மீது நான் பேசுகிறேன். இவ்வளவு பெரும் தொகை கோரு வதில் எந்த விதமான தவறும் இல்லை என்று சொன்னார்கள். ரெவினியூ அக்கௌண்டில் சுமார் பத்து கோடிக்கு கேட்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகை வரும் என்று முதலில் எதிர் பார்க்கவில்லை. ஆரம் பத்தில் எதிர்பார்க்க முடியாத சில வேலைகள் வருகிறது. அவை எல்லாம் பணம் ஒதுக்கவில்லை என்று நிறுத்திவிடலாமா என்று கேட்டார்கள். நான் அப்படி வேலைகளை நிறுத்தவேண்டும் என்று சொல்ல வில்லை. ஆனால் செய்கின்ற காரியங்களுக்கு எவ்வளவு பணம் [illegible]



24th March 1960] [Sri M. Kalyanasundaram]

செய்தாலும், அதன் மூலம் ஏற்பட்டிருக்கின்ற பலனைப் பார்க்கும் போது அது நல்ல பலனாக இருக்குமானால் அதை யாரும் எதிர்க்கமாட்டார்கள். எப்போதுமே நாம் விதிகளுக்கு அடிமைப்பட்டு இருக்கவேண்டும் என்று நான் நினைப்பதில்லை. சர்க்காரும் விதிகளுக்கு அடிமைப்பட்டு விடக் கூடாது என்பதுதான் என் விருப்பம். இருந்தாலும் சர்க்கார் விதிகளுக்கு அடிமைப்பட்டுவிடக் கூடாது என்று சொல்லப்பட்டாலும் ரெவினியூ அக்கௌண்ட்-டில் பார்க்கிற பொழுது, ஒரு இனத்திலும் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக டிஸ்டிரிக் அட்மினுஸ்டிரேஷன் என்கிற தலைப்பில் சொல்லப்பட்டிருப்பதை எடுத்துக் கொண்டால், " Additional appropriation required is based on actual requirements as reported by Collectors " என்று இருக்கிறது. இம்மாதிரி பல சமாதானங்கள் இருக்கின்றன. " ஆக்சுவல் ரிக்வொயர் மெண்ட்ஸ் ஆஸ் ரிப்போர்ட்டெட் பை தி கலெக்டர் " என்று, கலெக்டர்கள் எது தேவை என்று சரியானபடி கணக்கிட்டு கொடுத்திருக்கிறார்களோ அதன் அடிப்படையில் கேட்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பேர்பட்ட முறையில் பெரும்பாகமான தொகை கேட்கப்படுகிறது. இதிலிருந்து ஒன்றும் நாங்கள் ஆராய்ந்து பார்க்க முடியவில்லை. " இவ்வளவு அதிகப்படியான தொகை கேட்பதற்கும் காரணம் என்ன ? அப்படி எதிர்பாராத முறையில் செலவினங்கள் ஏற்படவேண்டிய காரணங்கள் என்ன ? என்று புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தால்தான். அப்படிப்பட்ட செலவினங்கள் எதிர்பார்க்கக் கூடியதா, இல்லையா, திடீரென்று ஏற்பட்டது தானா என்று ஆராய்ந்து பேச முடியும். அதனால்தான் இதை சுட்டிக் காட்டினேனே தவிர, நிதிஅமைச்சர் கண்ணை மூடிக் கொண்டு ஊதாரித்தனமாக அனுமதித்து விட்டார் என்று சொல்லவில்லை. நிதி அமைச்சரிடம் நம்பிக்கை பூர்ணமாக இருக்கிறவர்களானாலும், எதிர் கட்சியானாலும் சரி, விவரங்களைத் தெரிந்து கொள்ளாமல் ஓட்டளிப்பது சரியல்ல என்று அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறவேண்டும், அதுவும் குறித்த காலத்தில் நிறைவேறவேண்டும் என்பதிலே அமைச்சர் அவர்கள் நேற்று அதிகமான உற்சாகம் காட்டினார்கள். எதிர் கட்சிகளின் ஒத்துழைப்பை ஒரு புறத்தில் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதே சமயத்தில் எதிர் கட்சிகளைத் தாக்கக்கூடிய முறையைப் பார்க்கும்போது இது தான் எதிர் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற எடுக்கும் முயற்சியா என்று தோன்றுகிறது. இதைப் பார்த்தால் துப்பாக்கியைக் காண்பித்து எதிர் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கேட்பது மாதிரி படுகிறது. பட்ஜெட் பொது விவாத காலத்திலும் சரி, விவாதத்திற்கு பதில் சொல்லக் கூடிய காலத்திலும் கொஞ்சம் ஆவேசமாகப் பேசினார்கள். நேற்று உப மான்யக் கோரிக்கைகள் மீது நான் சில விவரங்களை எடுத்துச் சொன்னேன். குந்தாத் திட்டத்தில் இருக்கக்கூடிய தொழிலாளிகளுடைய கஷ்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னேன். காவேரி சம்பந்தமாக இருக்கக்கூடிய தகராறைப்பற்றி எடுத்துச் சொன்னேன். பரம்பிக்குளம் சம்பந்தமாக பொது மக்களிடம் ஏற்பட்டிருக்கக் கூடிய அபிப்பிராயத்தைப் பற்றி எடுத்துச் சொன்னேன். கேள்விப்படுகிற அபிப்பிராயங்களைப் பற்றி—மக்களிடையே இருக்கக் கூடிய கருத்துக்களைப் பற்றி—நாம் கேள்விப்படுவதை அங்கத்தினர் என்ற முறையில் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையில்லையா ? இதிலெல்லாம் அரசியலைப் பற்றி ஆராய்ந்தால் இந்தச் சபையில் எதையும் பேச முடியாது. பரம்பிக்குளத் திட்டத்தில் இருக்கக் கூடிய கருத்து வித்தியாசங்கள் என்ன, அடிப்படை என்ன, தள்ளிப் போடவேண்டிய காரணங்கள் என்ன என்று கேட்டால், இதிலே கம்யூனிஸ்ட் கட்சிக்கு நோக்கம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் ஆராய்ந்தால், இப்படி கட்சி நோக்கோடு பார்த்தால், எதிர் கட்சிகளின் ஒத்துழைப்பை எப்படி கொடுப்பது. ஒன்றுமே பேசாமல் உட்கார்ந்துகொண்டு, நிதி அமைச்சர் ரொம்ப திறமைசாலி, நிதி அமைச்சர் ரொம்ப கெட்டிக்காரர், நிதி அமைச்சர் ரொம்ப நாணயமானவர் என்று எங்களைச் சொல்லச் சொல்லுகிறாரா ? அப்படித் தான் அவர்கள் விரும்புகிறாரா ? இருக்கக் கூடிய அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் எடுத்துச் சொல்லும்போது,

உண்மையான நிலையை எடுத்துச் சொல்வதற்கும், விளக்கம் கொடுப்பதற்கும் அமைச்சருக்கு சந்தர்ப்பம் கொடுக்கும்போது எதிர் கட்சிகளை இப்படித் தான் தூக்கி எறிந்து பேசுவதா ? கோபத்தில் பேசிவிட்டேன் என்று சொல்லுகிறார். வேலை மிகுதியாக இருக்கலாம். போர்ட்போலியோக்கள் அதிகம், அடிக்கடி டில்லிக்குப் போகவேண்டியிருக்கிறது, இங்கே வரவேண்டியிருக்கிறது, ஏதாவது சிக்கல் இருக்கலாம். நண்பர் அண்ணாதுரையைப் பற்றிச் சொல்லும்போது மேலதிகாரிகள் ஏதாவது சண்டை போட்டால் வீட்டில் போய் காண்பிப்பது போல என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஏதாவது நேர்ந்து எங்களிடம் திருப்புகிறீர்களா ? அல்லது வீட்டிலே ஏதாவது சண்டையா—அல்லது டில்லியிலே சண்டையா ? உங்களுடைய கோபத்தை ஓரளவு சகித்துக் கொள்ள எங்களிடம் திறமை இருக்கிறது. கோபம் இருக்கிற இடத்தில் தான் குணம் இருக்கும் என்று சொல்வார்கள். குணம் இருந்தால் நான் குணத்தைத் தான் எடுத்துக் கொள்வேன். ஆனால் கோபத்தில் எது வேண்டுமானாலும் பேசிவிட வேண்டாம், கோபத்தில் உண்மையை மறந்துவிடவேண்டாம் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

குந்தாத் திட்டத்தைப்பற்றி எடுத்துச் சொன்ன காலத்தில், தொழிலாளி அதிகாரி உறவு எவ்வளவு கெட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டியபோது, அமைச்சர் அவர்கள் ஒரேயடியாக அடக்கிவிடுவேன், நசுக்கிவிடுவேன் ஒடுக்கிவிடுவேன் என்று பேசினார். நான் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன், அப்பேற்பட்ட எண்ணத்தைக் கொள்ளவேண்டாம். அது பலஹீனத்தின் அறிகுறி. தைரியம் இருக்கக்கூடியவர்கள் பேசக்கூடியதல்ல. கொள்கை சரியாக இருக்கிறது என்றால் இப்பேற்பட்ட வார்த்தைகளைப் பேசவேண்டியதில்லை. எதிர் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறவேண்டுமென்று சொன்னால், எதிர் கட்சிகளுக்கும் ஒரு அந்தஸ்து உண்டு, அருகதை உண்டு என்ற உண்மையை ஒப்புக்கொண்டால் தான் பெற முடியும். அவமதிக்கக் கூடிய முறையில் பேசிவிட்டு, எதிர் கட்சிகளின் ஒத்துழைப்பு வேண்டுமென்று சொன்னால் அது சரியாக இருக்க முடியாது. ஏதாவது சங்கடம் ஏற்பட்டு இருக்கலாம், அதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. இதிலே 1962-ம் வருஷம் வரக் கூடிய தேர்தலுக்கு இப்போதே பிரசாரத்திற்கு ஆரம்பித்து விட்டார் என்று தோன்றுகிறது. சுதந்திரக் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இப்படி 4 பேர்கள் பேரிலும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்திருக்கிறார். தனிப்பட்டவர்கள் எங்கே சுதந்திரக் கட்சியில் சேர்ந்துவிடப் போகிறார்களோ என்று, " தனிப்பட்டவர்கள் பயப்படாதீர்கள், என்னிடம் உங்களுக்கு இடம் உண்டு, எவ்வளவு தூரம் என்னால் முடியுமோ அதைச் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று ஆறுதல் கொடுத்திருக்கிறார். அதற்கு அவர்களுடைய சோஷலிஸத்தில் இடம் இருக்கலாம். அப்படிப் போகும்போது, அவருடைய உற்சாகத்தில் வி.டி.எச். கோலைப் பற்றி ஒரு அங்கத்தினர் பேசும்போது வி.டி.எச். கோலாவது, கோலாவது—அதாவது நிலக்கரியாவது என்று . . கூறினார். கோல் சோஷலிஸக் கருத்துக்கு ஒரு அத்தாரிட்டி. உலகத்திலே பொருளாதார நிபுணர்களில் கோலும் ஒருவர் . . .

**THE HON. SRI C. SUBRAMANIAM**: சப்ளிமெண்டரி எஸ்டிமேட்ஸுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ? சப்ளிமெண்டரி எஸ்டிமேட்ஸில் இதெல்லாம் எப்படி வரும் ?

**MR. SPEAKER**: சப்ளிமெண்டரி எஸ்டிமேட் விவாதத்தில் எது வேண்டுமானாலும் பேச முடியாது. இதிலே குறிப்பிட்டிருக்கக் கூடிய விஷயங்களைப் பற்றித்தான் பேசலாம். நானே இதைப் பற்றிச் சொல்லத்தான் இருந்தேன். குந்தாத் திட்டத்தைப் பற்றி கனம் அங்கத்தினர் முதலில் பேசினார்கள், கடைசியில் பேசினார்கள். அதற்கு மந்திரி பதிலளித்தார். இப்போது அப்ரோப்பிரியேஷன் பில்லில் பேசினால், அதற்கு மந்திரி பதிலளிப்பார். இன்னும் மூன்றாவது வாசிப்பில் நீங்கள் பேசினால் கூட அதற்கும் மந்திரி பதிலளிக்கப் போகிறார். எப்படியும் கடைசியில் பதில் கொடுக்கப்போவது மந்திரிதான். இப்படியே போய்க்





கொண்டிருந்தால் முடிவு என்ன ? குந்தாத் திட்டத்தை இதோடு நிறுத்தினால் தேவலை. ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு பேசினால் பிரயோசனமில்லை. எப்படியும் முடிவு மந்திரியாரிடம்தான் இருக்கிறது. தயவு செய்து இதோடு நிறுத்திக் கொள்ளும்படி கனம் அங்கத்தினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN**: தயவு செய்து திட்டத்தை நிறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன் (சிரிப்பு).

**SRI M. KALYANASUNDARAM**: அமைச்சர் நிறுத்துவது என்றால் கூட நாங்கள் விடப்போவதில்லை. திட்டம் அவசியம் நிறைவேறவேண்டும். அதுவும் குறித்த காலத்திற்குள்ளாகவே நிறைவேற வேண்டும். திட்டங்களெல்லாம் நிறைவேறவேண்டும், அதற்கு எதிர் கட்சிகளின் ஒத்துழைப்பு வேண்டுமென்று கேட்கும்போது அமைச்சர்கள் எதிர் கட்சிகளுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்து அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற முயற்சி செய்யவேண்டுமே தவிர, அரசியல் கட்சி கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாது. இதோடு இதை நிறுத்ததிக் கொண்டு வேறொரு சந்தர்ப்பத்தில் இவற்றைப் பற்றிப் பேசிக்கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: " வெளியே வரட்டும் பார்க்கிறேன் " என்று சொல்வது போலல்லவா இருக்கிறது.

**SRI M. KALYANASUNDARAM**: அப்படி ஒன்றுமில்லை. அடுத்தபடியாக " ஹெட் ஆப் ஸ்டேட், மினிஸ்டரியல் அண்டு ஹெட் க்வார்ட்டர்ஸ் ஸ்டாபி " டிமாண்ட் வருமல்லவா அப்போது பேசிக்கொள்கிறேன்.

தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெருவதற்குப் பூர்ணமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அப்போது தான் 39 கோடி ரூபாய் அதிகமாகக் கோரியிருப்பதைச் சரியான முறையில் செலவழிக்க முடியும். குந்தா திட்டம் போல இருக்கக் கூடிய திட்டங்களில் நடக்கக் கூடிய கிளர்ச்சியைப் பற்றி அமைச்சர் இப்படிச் சொல்லி விட்டார். இன்னும் மற்ற இடங்களில் தொழிலாளர்களிடம் அதிருப்தி ஏற்பட்டு வருகிறது. கிண்டியிலிருக்கக் கூடிய " ராஜ் பவன் " தொழிலாளர்கள் மத்தியில் கூட இது பரவியிருப்பதாகத் தெரிகிறது. ராஜ் பவனத்தில் இந்த மாதிரி ஏற்படுவதை எதிர் கட்சிகள்கூட விரும்புவதில்லை. இதிலே அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் ஏன் இப்பேற்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள், அங்குள்ள தொழிலாளர்கள் கூறக் கூடிய கஷ்டங்கள் என்ன, இதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுத்து ராஜ பவனத்தில் அமைதியை நிலைநாட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கார் ஊழியர் சம்பந்தப்பட்ட மட்டில் எவ்வளவு தூரம் அமைதியை நிலைநாட்டப்போகிறார்கள் என்பதை இந்த மாதக் கடைசிக்குள் சம்பளக் கமிஷன் சிபாரிசுகள் வெளிவரும், அதன் மீது சர்க்காருடைய முடிவுகள் வரும் என்று அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ராஜபவனத்தில் இருக்கிறவர்கள் சர்க்கார் ஊழியர்கள் அல்ல என்று ஒரு புறத்தில் சொல்லப்படுகிறது. அவர்கள் " டொமெஸ்டிக் ஸர்வெண்ட்ஸ் " என்று கருதப்படுவதாகச் சொல்லப்படுகிறது. கூட்டம் போடுவது, பேசுவது போன்ற விவகாரங்கள் ராஜ் பவனம் சம்பந்தப்பட்ட வரையில் விரும்பத் தகாதது என்பது எனது அபிப்பிராயம். அங்கே அமைதியின்மை நிலவுவதற்கு அந்தத் தொழிலாளர்கள் பொறுப்பாளிகளா, அல்லது அங்குள்ள நிர்வாகத்தினர் பொறுப்பாளிகளா ? அவர்களுடைய சம்பளமெல்லாம் கண்ஸாலிடேட் பண்டிலிருந்து தான் கொடுக்கப்படுகிறது. அதை இங்கே வோட் செய்வதற்கு நமக்கு உரிமை இல்லை என்றால், அந்தத் தொழிலாளர்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்து 9-30
கொள்ளலாம் என்று அர்த்தம் இல்லை. ராஜ்பவனத்தில் அமைதியை பாது a.m.
காப்பது அங்குள்ள நிர்வாகத்தினர் பொறுப்பு இல்லையா ? அங்குள்ள தொழிலாளர்கள் செய்யும் காரியங்களைப் பற்றிய செய்தியை கனம்

[Sri M. Kalyanasundaram] [24th March 1960

அமைச்சர் தம் காதில் வாங்கிக்கொள்ளவில்லையா ? அதுபற்றி அரசாங்கத்தார் விசாரணை செய்தார்களா ? விசாரணை செய்து என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? ராஜ்பவனம் எப்படியும் போகட்டும், அங்கு ஏற்படும் இத்தகைய நிலைமைக்கு எதிர்க் கட்சிகளின் மீது பழியைப் போடலாம் என்ற எண்ணத்தில் கனம் அமைச்சர் அசிரத்தையாயிருக்கிறாரா ? எங்கே கிளர்ச்சி நடந்தாலும் கனம் அமைச்சர்கள் அது எதிர்க் கட்சிகளின் முயற்சியால் ஏற்பட்டிருக்கிறது என்ற குரோத மனோபாவத்துடன் அதை நோக்காமல், தொழிலாளர்கள் கிளர்ச்சி நடத்தினால் உடனே தக்க விசாரணை நடத்தி அவர்களுடைய பிரச்னைக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று கனம் அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I have not got much to say except that I would request the Hon. Minister to see that expenditure is controlled strictly and that he acts up to the advice given by several hon. Members. He should see that there is no overspending, and that everything is foreseen much earlier. He should as far as possible bring it in the original budget estimate itself without allowing the departments to go on spending as they please. That is all my submission, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர்களே, கோரிக்கையின்பேரில் விவாதம் நடந்த பிறகு இந்த மசோதா சபையில்வரும் போது அனேகமாக விவாதம் இல்லாமலே இதை ஏற்றுக் கொள்வது தான் இந்த சபையில் இதுவரையில் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் இன்று ஸ்ரீ கல்யாணசுந்தரம் சில விஷயங்கள் சொன்னார். அவர் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. அவர் பழைய விஷயங்களையே குறிப்பிட்டு அவைபற்றி என்னிடமிருந்து பதில் கோரினார். கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் சில விவரங்கள் இல்லை என்று அவர் கூறினார். கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் போதுமானவையாக இல்லை என்று கூறி மேற்கொண்டு விவரங்களை எப்போது கேட்டிருந்தாலும் நான் கொடுத்திருப்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன். எல்லா விவரங்களையும் இப்புத்தகத்தில் அச்சடித்தால், இதை யாருமே தூக்கக்கூட முடியாது. சில செலவுகள் என்ன காரணத்தினால் ஏற்பட்டன என்பதுபற்றிய சில குறிப்புகளைத்தான் கொடுக்க முடியும். அந்தக் குறிப்புகளைப் பார்த்துவிட்டு மேற்கொண்டு விவரங்கள் கேட்டபோது கொடுக்க முடியாது என்று நான் இதுவரை சொல்லியதாக எனக்கு ஞாபகம் இல்லை. புத்தகத்தில் உள்ள விவரங்களைவிட அதிகமான விவரங்களைக் கோரினால் மற்ற விவரங்களைக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராயிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தை கனம் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார். அதாவது, கணக்கு சரியாகப் போட வேண்டும் என்று அவர் சொன்னார். அவர் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியின் தலைவராகவும் இருக்கிறார். அதில் அவரும் மற்ற பல அங்கத்தினர்களும் பல ஆலோசனைகளைச் சொல்கிறார்கள். இங்கு சொல்லப்படும் யோசனைகளையும் பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியில் சொல்லப்படும் ஆலோசனைகளையும் நாங்கள் மனதில் வைத்துக் கொண்டு குறைகளை எந்த அளவுக்கு நீக்க முடியுமோ அந்த அளவுக்கு நீக்க முயற்சி செய்து வருகிறோம். என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் புதிய புதிய முறையில் பல திட்டங்களை எடுத்துக் கொள்ளும் போது கணக்குகள் வைப்பதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப்போது பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியில் 4, 5 வருடக் கணக்குகளைப் பரிசீலிப்பது இல்லை. சென்ற ஆண்டுக் கணக்குகளைப் பரிசீலிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அவைகளைப் பார்க்கும் போது அவ்வப்பொழுது கூறப்படும் யோசனைகளைக் கேட்டுக்கொண்டு முன்னேற்றத்திற்கான மாறுதல்களைச் செய்யவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கவும் நாங்கள் எப்போதும் தயாராயிருக்கிறோம் என்று உறுதி கூறுகிறேன்.



24th March 1960] [Sri C. Subramaniam]

கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் ஒரு
அதற்கடுத்தபடியாக, எதிர்க்கட்சி
அடிப்படையான விஷயத்தைப் பற்றிப் பேசினார். சர்க்கார்
களின் ஒத்துழைப்பைக் கோருகிறார்கள், ஆனால் அதே சமயத்தில் பய
முறுத்துகிறார்கள் என்று அவர் சொன்னார். ஒன்று சொல்ல விரும்பு
கிறேன். எதிர்க் கட்சிகளின் முழு ஒத்துழைப்பு தங்களுக்கு வேண்டும்
என்பது தான் சர்க்காரின் கொள்கை. எந்த முக்கியமான விஷயத்தி
லும், அவர்கள் ஒத்துழைத்தால், பல காரியங்களைச் சுலபமாக நிறைவேற்ற
முடியும் என்பதுதான் சர்க்காரின் கருத்து ; அதுதான் சர்க்காரின்
கொள்கையும் ஆகும். ஆனால் எதிர்க்கட்சிகளின் ஆதரவு தங்களுக்கு
வேண்டுமென்பதற்காக, எதிர்க் கட்சிகள் என்ன கலவரம் செய்தாலும்
அல்லது எந்தக் கலவரத்திற்குக் காரணமாயிருந்தாலும் அதை, சர்க்கார்
எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் சகித்துக்கொள்ளவேண்டும்
என்று கருதுவது சரியல்ல. கலவரங்களை சர்க்கார் அவ்வாறு விட்டு
விட்டால் உண்மையில் நம்மிடையே ஒத்துழைப்பு ஏற்படுவதற்கு பதிலாக
நாம் ஒருவருக்கொருவர் வீணாகத் தப்பர்த்தம் செய்து கொள்ளக்கூடிய
நிலைமையும், குழப்பமான நிலைமையும்தான் ஏற்படும். எனவே,
எல்லா எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பையும் எல்லா அங்கத்தினர்களின்
ஒத்துழைப்பையும் கோரும் நாங்கள், அதற்காக, அவர்கள் என்ன செய்
தாலும் அது சரியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அது குழப்பமாக
இருந்தாலும், கலவரமாக இருந்தாலும்—அதை சகித்துக்கொள்ளவேண்
டும் என்று சொன்னால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது
என்று திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகிறேன். யாராவது சட்ட
விரோதமாகக் கலவரம் செய்தால், அநியாயமாக நடந்தால், அதன்பேரில்
நடவடிக்கை எடுக்க சர்க்கார் என்றும் தயங்காது என்று நான் சொன்
னேன். அவ்வாறு நான் சொன்னதற்கு, "நீங்கள் கிளர்ச்சி செய்பவர்கள்
மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றே திட்டமிட்டிருக்கிறீர்களா"
என்று கேட்பது சரியல்ல. அப்படிக் கேட்பவர்களை, "நடவடிக்கை எடுக்க
வேண்டிய அளவுக்கு நடந்து கொள்ளப் போகிறீர்களா" என்று கேட்க
விரும்புகிறேன். பிறருடைய ஒத்துழைப்பைக் கோரும் நாங்கள், கலவரத்
தையோ குழப்பத்தையோ ஏற்படுத்தும் முறையில் யார் நடவடிக்கை
எடுத்தாலும்—அவர்கள் எங்கள் கட்சியினராக இருந்தாலும்—அந்த நட
வடிக்கையை நசுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அது சர்க்காரின் கடமை
என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகிறேன். அப்படி இல்லா
விட்டால், நாங்கள் ஆட்சி நடத்த வேண்டிய அவசியமே இல்லை. எனவே
ஒத்துழைப்பு, கலவரம் செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பது இந்த
இரண்டையும் பொருத்த வேண்டியதில்லை, பிணைக்க வேண்டியதில்லை
என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களுக்குச் சொல்ல
விரும்புகிறேன். அவர்கள் சொல்லும் யோசனைகளைக் கேட்க நாங்கள்
என்றும் தயாராயிருக்கிறோம். கனம் அங்கத்தினருடைய கட்சி தவறான
காரியங்களைச் செய்யவில்லை என்றால், நான் கூறியது அவர்களுக்குப்
பொருந்தாது என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்
கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is :

That the Madras Appropriation Bill, 1960 (L.A. Bill No. 4 of 1960), be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

That the Madras Appropriation Bill, 1960 (L.A. Bill No. 4 of 1960), be passed.

The motion was put and carried and the Bill was passed.

## (2) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1960 (L.A. BILL NO. 2 OF 1960).

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 2 of 1960), be taken into consideration.

Sir, in the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Act, 1958, a special provision was made for collecting tax for the assessment year 1958–59 applying the composition formula to all persons liable to tax irrespective of the extent of their holdings. This provision was extended for the assessment year 1959–60 to enable assessees who would not have maintained proper accounts for the accounting year 1958–59 to apply for composition. As it is considered that the assessees would not have maintained proper accounts for the accounting year 1959–60 also, it is felt that section 34 of the Act should be amended suitably so as to extend the benefit of that section in respect of the assessment year 1960–61 also. The Bill accordingly provides for the application of the composition formula for the assessment year 1960–61.

MR. SPEAKER : The motion is—

That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 2 of 1960), be taken into consideration.

SRI T. SAMPATH : Sir, I support the Bill which seeks to extend the benefit of composition to persons who desire to pay tax on the basis of composition for the year 1960-61. I am sure such a facility will be welcomed by all the assessees and they will benefit by this concession.

In this connection, I wish to refer to a small difficulty which is experienced by the assessees. The difficulty is this. If a person transfers or sells a particular land during the assessment period and if he applies for composition, the tax is collected by the authorities both from the seller as well as from the buyer. Likewise, tax is collected from the transfer or of a land as well as from the transferee, irrespective of the date of the sale and also without even considering whether that particular person derived any income from that land during that period. I am sure that this is a double assessment and I would even say that it is illegal. On a reading of section 34 of the Act, it can be seen that there is no warrant for this double assessment. To make this position clear, I have suggested an amendment to the effect that an explanation be added to section 34 as follows : ' Where a land held by a person is sold or transferred by him to any other person during the assessment period, the tax is to be paid by the transferee or by the person who buys the land '. I hope, Sir, the Hon. Minister would accept my amendment.

* SRI R. SRINIVASA IYER : Sir, section 34 deals with composition of taxes for the years 1957–58 and 1958–59 and that is sought to be amended so as to include 1959–60 so that the assessment year 1960–61 may also come into it. The hardship stated



by my hon. Friend, Sri Sampath, exists not only in composition cases but in accounting cases also. In this connection, I wish to refer to section 10 (1) of the Act which states :

" Nothing contained in this Act shall apply to a person who holds land not exceeding twelve and a half standard acres :

Provided that no person who held or holds land during any part of a financial year in excess of the exempted extent shall be entitled to the exemption under this sub-section even though the extent of land held by him during the rest of that financial year may not be in excess of the exempted extent."

This is what happens in practice. A person has to pay for 1958–59 and is assessed in 1959–60; for example, suppose he has thirty acres. And he sells away 10 acres of this. In the next year, 1959–60, for which assessment will be made in 1960–61, he is assessed on the entire thirty acres and the man who has purchased has also to pay for the same extent. It occurs not only in cases of composition but also in cases of accounting. I mentioned thirty acres. Of course, above 50 acres, composition does not arise. Even then, in all cases where a man sells property, the other man is also held liable to agricultural income-tax for the same year. The section reads, ' . . . . during any part of the financial year '. The amendment may not be appropriate here under section 34 because the Bill seeks only to extend the compounding facility for one more year. Strictly speaking, it cannot be done with reference to the present Bill. I would, therefore, request the Government to see, wherever they undertake such amendments, whether there are any other lacunae pointed out by Members which require to be attended to. As the law stands now, double assessment is all right. The law has to be amended so that for the same extent, two people may not be liable to pay for the same year, either account year or assessment year. Sri Sampath's amendment will be appropriate not now. I appeal to the Government to bring forward an amendment to section 10 (1) so that either in the assessment year or in the account year, two persons may not be liable to pay tax for the same extent during the year.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கெனவே
இந்த மசோதா விவாதத்தில் இருந்தபோது சொல்லிய கருத்தினை
மீண்டும் வலியுறுத்த முன் வந்துள்ளேன். கனம் அமைச்சர் அவர்கள்
இந்த ஆண்டில் அந்த விதமான கம்பவுண்டிங்முறை இருக்க வேண்டு
மென்ற முறையில் மாற்றி அமைத்திருப்பது உள்ளபடியே வரவேற்க
தக்க அம்சம் என்று நினைக்கிறேன். இந்த ஆண்டுக்கும் சேர்த்து இதைத்
திருத்த முன் வந்திருப்பதைப் பார்த்தால் அடுத்த ஆண்டு நில உச்ச
வரம்பைச் சட்டம் வரும்போது இதை விலக்கி விடுவார்கள் என்று நினைக்
கிறேன். உச்ச வரம்பு மசோதா வருமானால் இந்த விதமான வரம்பு
தேவையிருக்காது என்று கருதுகிறேன். அது மட்டுமல்ல,. இப்போது
இரண்டு திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கனம் ராமசாமி முத
லியார் அவர்களும், சம்பத் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். என
க்கு முன்னால் பேசிய அங்கத்தினர் சொல்லியதைப்போல் சட்டத்தை

[Sri S. Lazar] [24th March 1960

இப்போது இருக்கும் முறையிலேயே பரிசீலனை செய்து பார்த்தால் இரண்டு ஆசாமிகளைக் குறிப்பிட்டு நிலங்களுக்கு வரி கொடுக்கும்படி செய்ய முடியும். மற்றொரு காரியத்தையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இந்தச் சிக்கல் ஏற்படாது என்று கருதுகிறேன். அதிகப்படியான ஏறக்குறைய 50 எக்கர் நிலம் வைத்திருக்கக்கூடிய ஒருவர் அதை குத்தகைக்கு விடுவார் என்று சொன்னால் நிலத்தை வைத்திருக்கும் சொந்தக்காரரும் வரி கொடுக்க வேண்டும். அதே போல் குத்தகைக்கு உழக்கூடியவனும் வரி கொடுக்க வேண்டும். அந்த இடத்தில் வருமானம் வருகிறது என்ற அடிப்படையில் இரண்டு பேருக்கு வரி விதிக்கிறோம். வருமானம் ஒரு வரைச் சேர்ந்ததாக இருக்குமானால், நிலத்தை மற்றவர்களுக்கு விற்பது என்று சொல்லும்போது, நிச்சயமாக அதனுடைய வருமானம் ஒரு வருக்குத்தான் சென்றிருக்க முடியும், ஏற்கனவே, நிலம் வைத்திருந்த வருக்கு வருமானம் வந்திருக்க முடியும், அல்லது யாருக்கு விற்கப்பட்டதோ அவருக்கு வருமானம் வந்திருக்க முடியும். இப்போதிருக்கும் முறையில் சட்டத்தைப் பரிசீலித்துப் பார்க்கும்போது இரண்டு பேரிடமும் அந்த வரியை வசூலிக்க முடியும் என்று நிலைமை இருக்கிறது. எங்கள் ஜில்லாவில் அந்த நிலைமை இல்லை. சம்பத் அவர்களுடைய ஜில்லாவில் ஒரு சில இடங்களில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சட்டத்தின் பிரகாரம் நடக்கக்கூடிய அதிகாரிகளைக் குறை கூற முடியாது. நிச்சயமாக குறிப்பிட்ட செக்ஷனைத் திருத்தியமைக்கவேண்டும். செக்ஷன் 34–ல் திருத்தம் செய்வதா, அல்லது 10-வது செக்ஷனிலா என்பதைச் சற்றுப் பரிசீலனை செய்து பார்த்து அதை அவசியமாகச் செய்ய வேண்டும் கனம் சம்பத்தும், ராமசாமி முதலியார் அவர்களும் கொடுத்திருக்கக் கூடிய திருத்தம் கூட சரியான பரிகாரத்தைக் கொடுக்காது என்று வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு அதற்கான சரியான திருத்தத்தை அரசாங்கமே கொண்டு வந்தால் நல்லது என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: I am glad that both Mr. Srinivasa Iyer and Mr. Lazar have put me wise. Before I welcome further discussion as to whether the amendments are relevant to the section, I would request hon. Members not to refer to them. I shall give my ruling as to their relevancy. If I rule that they are in order, hon. Members may proceed to discuss them. Mr. Srinivasa Iyer has made me consider whether the amendments of both Mr. Sampath and Mr. V. K. Ramaswamy Mudaliar are relevant today. I am going to ask Mr. Sampath to argue his point when the clause is taken up. Therefore, I would suggest that the point need not be discussed now. Mr. Vedarathnam Pillai wanted to speak on this and may I suggest that we discuss the question of relevancy when we take up the particular clause? Now I shall put a stop to the general discussion and put the motion to vote. After the motion is adopted, I shall take up clause 2 when we can discuss the relevancy of the amendments. I must thank Mr. Lazar and Mr. Srinivasa Iyer for having put me wise.

The question is:

"That the Madras Agricultural Income-tax Amendment) Bill, 1960 (L.A. Bill No. 2 of 1960), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.



24th March 1960]

*Clause 2.*

MR. SPEAKER: The motion is:

"That clause 2 do stand part of the Bill".

SRI T. S. RAMASWAMI: Sir, I move the amendment standing in my name, viz.—

"(i) In sub-clause (i), after the words and figures 'the years 1957–58, 1958–59 and 1959-60', *add* the figures '1960–61, 1961–62 and 1962–63'.

(ii) In sub-clause (ii) for the words, figures and letters 'or on the 31st day of March 1960', *substitute* the words, figures and letters 'or on the 31st day of March 1962'.

The amendment was duly seconded.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, I move the following amendment:

'*Add* the following explanation after the proviso to section 34 of the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Act, 1958':

"When the land held by a person is sold or transferred or otherwise disposed of by him to any other person during the period of 12 months ending on 31st March 1958 or 31st March 1959 or 31st March 1960, the tax shall be paid by the transferee or by the person who bought the same or by the person who enjoyed the benefit from the land for that year".

Sir, the hon. Member Sri T. Sampath has also given an elaborate amendment, to the same effect. They are in order.

The amendment was duly seconded.

MR. SPEAKER: Let the hon. Member Sampath also move his amendment. Then we will go into merits of the question.

SRI T. SAMPATH: I move the following amendment, Sir:

'*Add* the following explanation after the proviso to section 34 of the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Act, 1958.

"When the land held by a person is sold or transferred by him to any other person during the period of twelve months ending on 31st day of March 1958 or on 31st day of March 1959 or on the 31st day of March 1960, the tax is to be paid by the transferee or by the person who bought the same".

The amendment was duly seconded.

MR. SPEAKER: Now I would like you to clear my doubts. The statement of objects and reasons of the Bill has made it clear that 'It is felt that section 34 of the above Act should be amended suitably so as to extend the benefits of that section in respect of the assessment year 1960–61 also'. That is all the scope of the Bill.

The amendments moved by hon. Members Sri Ramaswamy Mudaliyar and Sri T. Sampath seek to affect the merits of some other section of the Act. How is that relevant? If hon. Members can give an answer I would like to hear them. If their answer is not satisfactory, I will have to rule their amendments out of order.

SRI T. SAMPATH: Sir, Rule 76 of the Assembly Rules says that the amendment must be relevant to and within the scope of the subject-matter of the Bill or the motion it relates to. Section 34 of the Act deals with composition of tax. The Government are seeking by this Bill to amend Section 34 which relates to composition of the tax for the purpose of extending it by a year. The amendment moved by me and the hon. the Leader of the Opposition would make the section clearer and more explicit. It should also make the section easily workable. Only an explanation is sought to be added by the amendments.

MR. SPEAKER: Any other hon. Member who desires to add to the clarification? After hon. Members have spoken, I will call the Hon. Minister and then give my ruling. The hon. Member Sri Lazar can give his view as to the relevancy of the amendments.

SRI S. LAZAR: Mr. Speaker, Sir, so far as the question of relevancy is concerned, I fully agree with the hon. Member Sri Sampath because we are now trying to amend only section 34, which deals with the composition of tax. I also wish to point out that these amendments alone would not be sufficient. Section 10 of the main Act also will have to be amended because that section applies to all assessments whereas section 34 applies to a particular kind of assessment namely, compounding. Though the amendment is relevant, if section 10 also is amended, there will be uniformity in the different sections of the Act. The amendment moved is in order.

SRI R. SRINIVASA IYER: Mr. Speaker, Sir, let me not be understood as opposing the nature or the relevancy or importance of the amendment moved. I have to point out that this amendment is beyond the scope of the present Bill for this reason. Section 10 deals with the liability of a person to pay assessments whether it is based upon accounting or upon compounding. Section 34 deals only with composition. Are my hon Friends willing to say that only in the case of composition this sort of double taxation should be avoided? It must apply both for accounting and composition. Again section 34 of the Act gives only a right of composition for certain years and only for certain class of people who hold certain extent of land. If the scope of the amendment has got to be general it must be under section 10 because it is that section that makes people liable to pay even if they hold any land for part of the year. If section 34 alone is amended section 10 will be inconsistent with amended section 34



and amended section 34 will be inconsistent with section 10. They can solve the difficulty by adding an explanation to section 10. It is not at all difficult to do it. The amendment can be made even during the session by bringing in an urgent Bill.

SRI T. SAMPATH: I have no objection to the Government amending section 10 of the Act also.

MR. SPEAKER: This is not the appropriate time to amend section 19.

* THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, though the scope of the Bill is limited to extend the period of composition for one year, I cannot say straightaway that the amendment will not be in order because it has a bearing on the question of composition. Therefore I would submit that when the amendment is actually moved and if you rule that it is in order, than we can talk on the merits of the amendment.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, sofor as section 34 is concerned it gives right to get tax compounded. What is the basis of the tax and in what way it should be done is not contained in section 34. It is dealt with in quite another section of the Act. What we now say by the Bill is, instead of confining ourselves to the years 1957-58, 1958-59, it may be extended to 1959-60 also. If any other amendment as to be made with reference to assessment it should be made to section 10 and subsequent sections. So I am afraid the amendment is not in order. While discussing a Bill intended for extending the period of composition for one more year, we cannot, I am afraid go into the principles of assessment.

MR. SPEAKER: I agree with the hon. the Leader of the House. That is why I said we can discuss the amendment moved by the hon. Member Sri Ramaswami Pillai by which he wants to extend the period by two more years. The amendments moved by the hon. Members Sri Ramaswami Mudaliyar and Sri T. Sampath are clearly out of order as they go beyond the scope of the amending Bill. I therefore rule them out of order.

SRI T. SAMPATH: I would like to make an appeal.

MR. SPEAKER: There is no question of appeal. The Government are seeking to amend section 34 only. I have ruled the amendments out of order. However I would request the Hon. Minister to bear in mind the suggestions given by hon. Members so that when they bring in a comprehensive measure they may include them also. At this stage I am fairly convinced that the amendments are out of order. The clause and the amendment moved by the hon. Member Sri T. S. Ramaswami are before the House for discussion.

SRI T. S. RAMASWAMI: கனம் சபாநாயகர் அவர்களே இந்தத் திருத்த மசோதாவானது, 1957-58-க்கும், 1958-59-க்கும் காம்போசிஷன் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட சலுகையை 1959-60-ம் ஆண்டுக்கும் கொடுக்கவேண்டுமென்று கோருகிறது. என்னுடைய திருத்தத்தின் நோக்கம், 1959-60-க்கு மட்டுமல்ல, 1960-61-க்கும், 1961-62-க்கும் இந்தச் சலுகையைக்

[Sri T. S. Ramaswami] [24th March 1960

கொடுக்கவேண்டும் என்பது. நான் திருத்தத்தைக் கொடுத்திருப்பதற்கான காரணம் என்னவென்றால், இதற்கு முன்னால், சென்ற வருஷத்திலேகூட, முதன் முதலில் உள்ள சட்டத்துல இந்த ஷரத்து சம்பந்தமாக ஒரு வருஷத்திற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. அந்தச் சலுகை அதன் பின்னால், அடுத்த அஸெஸ்மெண்டுக்கும் போன வருஷம் நீடிக்கப்பட்டது. இப்போழுது மீண்டும் ஒரு முறை இன்னொரு வருஷத்திற்கு நீடிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதே தோரணையில் யார் கணக்கு வைக்கவில்லையோ அவர்களுக்குச் சௌகரியம் செய்வதற்காக, நாம் என் இப்படித் திருத்தம் செய்துகொண்டே போகவேண்டும். முதல் வருஷத்திலே சலுகைசெய்தார்கள். அதற்கு அடுத்த வருஷமும் செய்தார்கள். இந்தச் சட்டம் எல்லோருக்கும் தெரிந்திருந்தும், அடுத்த வருஷம் சலுகை நீடிக்கப்பட்டது. ஒவ்வொரு வருஷமும் நீடித்துக்கொண்டு போவது, சட்டம் இயற்றுவதிலே சரியான முறையா என்பதுதான் கேள்வி. "இக்னரன்ஸ் ஆப் லா ஈஸ் நோ எக்ஸ்க்யூஸ்" என்று சொல்வார்கள், சட்டத்தின் ஷரத்துப்படி அவர்கள் கணக்கு வைக்கவில்லையென்றால், அஸெஸ்மெண்ட் என்ன செய்கிறோமோ அதைக் கொடுத்தாகவேண்டும். ஏதோ முதல் முதலாக வந்தது, என்று முதல் வருஷம் வேண்டுமென்றால் சலுகை கொடுத்தது சரியாக இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு வருஷமும் மாற்றிக்கொண்டு போவதிலே என்ன பிரயோஜனம்? சட்டத்தைப் போடுகிறோம். அதன் படி நடக்க இயலாதவர்களுக்கு சலுகை செய்ய முற்படுகிறோம் ஒவ்வொரு வருஷமும், முதல் வருஷம் கொடுத்த சலுகை நமக்கெல்லாம் புரிகிறது. சபைக்கு புரிகிறது. ஆனால், ஒவ்வொரு வருஷமும் நீடிப்பதைவிட தொடர்ந்து 1962–1963-ம் ஆண்டு வரையிலும் வைத்துக்கொள்ளுங்கள் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் நீடித்துக்
10-00 a.m கொண்டே போகிறார்கள். என்னுடைய நோக்கம் அப்படி நீடிக்கக்கூடாது என்பதுதான். அதற்காகத்தான் நான் இந்தச் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இதை இப்படி வருஷா வருஷம் நீடிப்பது சட்டம் இயற்றுவதிலே சரியான கொள்கையாகாது. அப்படியானால் இதை பர்மனெண்டாகச் செய்துவிடலாம். அதாவது கணக்குக் கொடுக்காமல் இருந்தால் அவர்களுக்கு இந்த காம்போஸிஷன் வைத்து வரி விதிக்கப்படும் என்று, பர்மனெண்டாகவே செய்துவிடலாம். அது ஒரு நிரந்தரமான ஏற்பாடாக இருக்கும் அது இல்லையென்றால் இம்மாதிரி நீடிப்பதற்கு நியாயம் இல்லை என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, we had no intention of extending this concession for one more year. But in view of the fact that the land reform Bill will be brought in, when certainly some modifications will have to be made for this Act, we have extended this concession now, in order to give us time to ascertain what-shape the land legislation will take finally, and how it will affect the provisions of this Act. We are now seeking power to extend the concession for only one year. Then suitable modifications and other amendments would be made when the land legislation is brought before the House. If the other Bill was not coming there would have been no necessity for extending this concession. We would have strictly enforced the original provisions of the Act. After the land legislation is brought before the House the whole situation will be reviewed and suitable action will be taken. Therefore we have limited the period only to one year.

SRI T. S. RAMASWAMI : ஒரு சந்தேகம், லாண்டு ரிபாரம் பில்லுக்கும், 1959–60-ம் ஆண்டு அஸெஸ்மெண்டுக்கும் என்ன சம்பந்தம்? அது எவ்வாறு அதை பாதிக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன் லாண்டு ரிபாரம் பில் அதற்கு மேலே வரப்போகிறது.



24th March 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : லாண்டு ரிபாரம் பில்லில் முக்கியமான அம்சம் உச்ச வரம்பு. உச்ச வரம்பு வந்துவிட்டால் அப்பொழுது இந்த அஸெஸ்மெண்டுக்கு ஸ்கோப்பே இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : The difficulty is this. Till last year we based our assessments on the basis of the composition provision. Now if we want to insist on accounts, they must have an establishment to go into the thing for the purpose of only one year. What we are going to do next year we do not know. Instead of creating difficulties for one year we thought we can review the whole position after the introduction of the land legislation in which case there won't be any necessity to have accounting procedure at all. Then we may find out whether the income-tax provision should apply to holdings within the ceiling. That is why instead of creating a new organisation to assess the tax on the basis of accounts for which various rules will have to be framed and necessary training will have to be given to the personnel, we thought it would be enough if we extend this provision by one more year. Then we can review the whole thing. That is why we took the decision to extend this by only one year.

The amendment was by leave withdrawn.

The clause was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Speaker, Sir, I move :

'That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 2 of 1960) be passed.'

MR. SPEAKER : The motion is—

'That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 2 of 1960) be passed.'

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, the amendments given notice of by me and the hon. Member Sri Sampath have been ruled out of order. The object with which we brought forward the amendments has been brought out clearly in the amendments themselves. However, we submit to your ruling. But, the position requires clarification. There has been so much of harassment by the officials with regard to the collection both from the buyer and the seller. This is a very important point. It was not the intention of the Government or the Legislature when they passed this Act to resort to double taxation. In the face of the arguments put forward by the hon. Member Sri Sampath, and the amendments proposed by us, I hope the Government would look into the matter and see at least executive instructions are issued as early as possible, and thereby avoid the harassment that has arisen out of this. This is all my submission, Sir.

MR. SPEAKER : I have myself no opinion to give on the merits of the case. But my doubt was whether under the Bill

before us which confined itself only to the question of extending the period by one year we were entitled to bring other amendments which would affect the other sections of the Act. However, I am in agreement with the points put forward by the Hon. Member Sri Sampath and the hon. the Leader of the Opposition. But my doubt was there and it has been supported by the Leader of the House who said we were not entitled to discuss other things under this Bill. I can only appeal to the Hon. the Minister in charge to look into the points made by hon. Members and when he brings forward a comprehensive Bill these things could be taken into consideration.

THE HON. SRI C. SUBRAMANIAM: Even in the meanwhile.

MR. SPEAKER: Yes, even in the meanwhile Government may consider the question of issuing executive instructions or orders to see that the hardship is removed.

THE HON. SRI M. A. MANICKAVELU: What I said privately, he wants me to make it public. I already said I would consider it, have it examined and do what is necessary.

MR. SPEAKER: The question is:

'That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 2 of 1960) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

## III.—GOVERNMENT MOTION.

### AMENDMENT TO RULES ISSUED UNDER THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACT, 1948 (MADRAS ACT XXVI OF 1948).

* THE HON. SRI M. A. MANICKAVELU: Mr. Speaker, Sir, I move:

'That the following draft amendment to the rules published with Revenue Department Notification dated the 21st December, 1949, at pages 397—398 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 27th December 1949 as subsequently amended, which it is proposed to make in exercise of the powers conferred by section 40 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948), as subsequently amended, be approved.

DRAFT AMENDMENT.

'In rule 3 of the said rules, the third proviso shall be omitted. The amendment hereby made shall be deemed to have come into force on the 27th June, 1959.'

Sir, Rule 3 requires that compensation should be paid within a particular time. But the Andhra Government amended the rule because certain estates under the Pataskar award, certain



territories now in the Madras State will go over to the Andhra State and certain others in the Andhra State will come to Madras State, and said pending the transfer, the rule requiring the payment of compensation by a particular date need not be enforced. For that they amended the rule and added a proviso saying that the rule need not be strictly enforced namely "that the amount should be paid within a particular time." Because the Andhra Government amended the Rule we also in our turn amended the rule and said the deposit amount need not be deposited. Now the Andhra Government have changed the rule. In turn we also now want to omit the proviso so that deposits could be made and the amount disbursed. The change over of territories will take place from 1st April. This is a simple motion and it may be accepted.

MR. SPEAKER: The question is:

'That the following draft amendment to the rules published with Revenue Department Notification, dated the 21st December 1949, at pages 397–398 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 27th December 1949, as subsequently amended, which it is proposed to make in exercise of the powers conferred by section 40 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948), as subsequently amended, be approved.

DRAFT AMENDMENT.

'In rule 3 of the said rules, the third proviso shall be omitted. The amendment hereby made shall be deemed to have come into force on the 27th June 1959'.

The motion was put and carried.

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61.

### DEMAND XXIV—HARIJAN UPLIFT.

MR. SPEAKER: Now we shall take up Demand XXIV—Harijan Uplift.

THE HON. SRI P. KAKKAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,95,30,900 under Demand XXIV—Harijan Uplift.

MR. SPEAKER: I understand that the cut motion standing in the name of the hon. Member, Sri A. Govindasamy will be moved. He may move the cut motion.

SRI A. GOVINDASAMY: Sir, I move—

'That the allotment of Rs. 2,95,30,900 under Demand XXIV—Harijan Uplift—be reduced by Rs. 100.'

MR. SPEAKER: Now the Demand and the cut motion are before the House for discussion.

[Mr. Speaker] [24th March 1960

This Demand will be discussed both to-day and tomorrow and the Hon. Minister will reply tomorrow. Now the Hon. Minister will make his speech and after that I will call upon hon. Members to speak and to-day I do not propose to fix a time-limit and hon. Members who would like to take advantage of this opportuuity **could do so.**

*THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, கடந்த
வருடம், இந்த மானியத்திற்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்ட மாதிரி, இந்த
வருடமும் கொடுத்து, முக்கியமான இந்த மானியத்திற்கு, விவாதிக்க,
அதிக நேரம் ஒதுக்கி மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை
சொல்லவேண்டும் என்று ஏற்பாடு செய்ததற்கு நான் என்னுடைய
பாராட்டைத் தெரிவிக்கிறேன். இந்த அரசாங்கமானது, இந்த வருடமும்
இந்த வரவு—செலவுத் திட்டத்தில் அதிகப்படியான தொகையை ஒதுக்கி
பின் தங்கிய, ஹரிஜன, ஆதிவாசி மக்களுக்குப் பணிபுரிய முன் வந்திருக்
கிறது. கடந்த வருட வரவு செலவு திட்டத்தை விட இப்பொழுது அதிக
மாக ஒதுக்கியிருக்கிறார்கள். கடந்த வருடம் ஒதுக்கிய தொகை ரூபாய்
233 லட்சம்; இந்த வருடம் ரூபாய் 295 லட்சத்திற்கு மேலே, மொத்தத்தில்
62 லட்ச ரூபாய் அதிகமாக இந்த அரசாங்கம் ஒதுக்கி இருக்கிறது; அதிலும்,
நிதி அமைச்சரவர்கள் மனமுவந்து தாராளமாக நிதி ஒதுக்கி, நல்ல
முறையிலே பணிச் செலவை செய்ய ஏற்பாடு செய்திருப்பதை இந்த
மன்றம் பாராட்டும் என்று நம்புகிறேன்.

இந்த டிமாண்டை சபைமுன் வைப்பதில், இந்த வருடம் அதிகப்படி
யாக மகிழ்ச்சியடைய பணம் அதிகமாக ஒதுக்கியிருப்பது மட்டுமல்ல,
சில மாதங்களுக்கு முன்பு, மத்திய சர்க்காரிலே, அரசியல் நிர்ணய சட்
டத்தைத் திருத்தி, அதிகப்படியாக 10 வருடங்களுக்கு சலுகைகளை கொடுத்
திருக்கிறார்கள். இந்த மன்றமும், அந்த தீர்மானத்தை நிறைவேற்றி
வைத்து, இன்னும் 10 வருட காலத்திற்கு ஹரிஜன மக்களுக்கு இந்த
சட்ட சபையிலேயும், பாராளுமன்றத்திலேயும், பிரதிநிதித்துவம் கொடுக்க
வேண்டும் என்று செய்திருப்பதற்கு, அதைப் பார்த்து ஆனந்தத்தையும்,
மகிழ்ச்சியையும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த ஜனவரி
மாதம் 26-ம் தேதியிலிருந்து இன்னும் பத்து வருடங்களுக்கு அந்த
சலுகைகளைக் கொடுத்திருப்பது, ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கு
பெரும் உதவியாக இருக்கும் என்று மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள்
உணருவார்கள் என்று எண்ணுகிறேன். இந்த வருடத்திலே அதிகப்படி
யாக நிதி ஒதுக்குகிறோம் என்றால், வருங்காலத்தில் எத்தனை தொகை
செலவு ஏற்படும் என்பதை கனம் அங்கத்தினர்கள் சிந்திப்பார்கள் என்று
நம்புகிறேன். மேலும், மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் ஹரிஜன
மக்களுடைய குறைகளைச் சொல்லுவதற்கு சட்ட சபையிலும், பாராளு
மன்றத்திலும், அவர்களுக்கு பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் கொடுத்
திருப்பதோடல்லாமல், பொருளாதார, கல்வி, சமூகத் துறைகளிலேயும்,
அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தோடு ஏற்பாடுகள்
எல்லாம் செய்திருப்பதை அங்கத்தினர்கள் வரவேற்பார்கள் என்று நம்பு
கிறேன்.

இந்த டிமாண்டிலே முக்கியமாக, விசேஷமாக அங்கத்தினர்கள் தெரிந்
துக்கொள்ள வேண்டியது, பின் தங்கிய, ஹரிஜன மாணவர்களிலே
எம். ஏ. படித்தவர்கள் மிகச் சொற்பம். ஆகவே, இந்த வகுப்புகளில் அவர்
கள் அதிகப்படியாகப் படிக்க வேண்டும். எம், ஏ. உயர்தர வகுப்பில்
அவர்கள் படிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஸ்காலர்ஷிப்புகள்
கொடுத்து வந்தோம். எட்டு மாணவர்களுக்கு அப்படிக் கொடுக்கப்பட்டு
வந்தது. இப்பொழுது பின்தங்கிய மாணவர்களுக்கும் அந்த எட்டு
என்பதை, 40 என்று மேலும் உயர்த்தியிருக்கிறோம். அவர்களுக்கு மேல்
படிப்புக்குப் போக வாய்ப்பு அளிப்பதற்காக. அதேபோல் ஹரிஜன மாண
வர்கள் விஷயத்திலும் 3 என்பதை 20 ஆக செய்திருக்கிறது இந்த அரசாங்கம்.
இவை மிகவும் மகிழ்ச்சியோடு பாராட்டப்பட வேண்டிய நிகழ்ச்சிகளில் ஒன்று.



24th March 1960] [Sri P. Kakkan]

ஹரிஜனங்களுக்கும், பின்தங்கியவர்களுக்கும் ஹாஸ்டல்களை சர்க்காரே
எடுத்து நடத்துகிறது. ஆகவே அந்த இனத்தில் செலவு அதிகம் ஆகிறது.
தனிப்பட்டவர்கள் நடத்தும் ஹாஸ்டல்களில் மாணவ மாணவிகளுக்கும்
மானியத் தொகை ரூபாய் 15 ஆனால் அரசாங்கமே எடுத்து நடத்தினால்,
அதிகமாகத்தான் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்பதை மதிப்பிற்குரிய
அங்கத்தினர்கள் உணருவார்கள். அதனாலேயே ஏழை ஹரிஜன மக்கள்
உயர்ந்த நிலைக்கு வர ஏதுவாக இருக்கிறது.

ஹரிஜன நல ஹாஸ்டல்களுக்கு அளிப்பதுபோல் மானியம் பின்
தங்கிய மாணவர்கள் ஹாஸ்டல்களுக்கும் இருக்கின்றன. இப்பொழுது
தென் ஆற்காடு மாவட்டத்தில் சில அன்பர்களும், திருநெல்வேலி, ராம
நாதபுரம் போன்ற ஜில்லாக்களில் நடத்துகிறார்கள். அப்படி நடக்கும்
ஹாஸ்டல்களை அரசாங்கமே எடுத்துக்கொள்ளும்போது, அவர்கள் சொல
கிறார்கள் " நீங்கள் எடுத்துக்கொண்டால், ஹரிஜன மாணவர்கள் 75 சத
விகிதமும், பின்தங்கிய மாணவர்கள் 15 சதவிகிதமும், முன்னேற்றம்
அடைந்த சமூக மாணவர்கள் 10 சதவிகிதமும் எடுக்கிறீர்கள், ஆகவே
எங்கள் மாணவர்களை அதிகமாக எடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள்.
அதைப் பரிசீலனை செய்த பிறகு, இப்பொழுது அப்படிப்பட்ட ஹாஸ்டல்
களிலே, அவை அரசாங்கத்தாரால் எடுத்துக்கொள்ளப்படும்போது, ஹரிஜன
மாணவர்கள் 45 சதவிகிதம், பின்தங்கியவர்கள் 45 சதவிகிதம், கல்வித்
துறையில் முன்னேற்றம் அடைந்த சமூகத்து மாணவர்கள் 10
சதவிகிதம் என்ற ஏற்பாட்டை அரசாங்கம் செய்திருக்கிறது. அப்படிப் பின்
தங்கிய மாணவர்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று
வரும்போது அதிகச் செலவு ஆகிறது. ஹரிஜன மாணவர்களுக்கும்,
பின் தங்கிய மாணவர்களுக்கும் மட்டும் உதவி செய்தால் பத்தாது.
கல்வித்துறையில் முன்னேற்றம் அடைந்த சமூகத்தை
சேர்ந்த மாணவர்களிலும் ஏழைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கும்
ஒத்தாசை, உதவி செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆகவே
அவர்களிலேயும் 10 சதவிகிதம் மாணவர்களுக்கு சலுகைகள் கொடுக்க
வேண்டும் என்று வரும்போது, செலவு அதிகரிக்கிறது. முன்பு ஆகும்
செலவில் மூன்றில் ஒரு பங்கு அவர்கள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்
தனை இருந்தது. ஆனால், முன்னேற்றம் அடைந்த சமூகத்தைச் சேர்ந்த
மாணவர்களிலும் ஏழைகள் இருக்கிறார்கள். ஆதலால், அவர்களால்
அந்தத் தொகையையும் கட்ட முடியவில்லை. ஆகவே, அதையும் அரசாங்கம்
பரிசீலனை செய்து, மற்ற ஏழை மாணவர்களுக்கு என்ன சலுகைகள் கொடுக்
கிறோமோ, இவர்களும் ஏழைகளாக இருப்பதால், இவர்களுக்கும் கொடுத்து
உதவவேண்டும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்து, அந்த உதவியை
அவர்களுக்கும் கொடுக்க முன் வந்திருக்கிறது. என்பதை உங்கள் மத்தி
யில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பின் தங்கிய சமுகத்தில் சலவைத் தொழிலாளர்களும், க்ஷவரத்
தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களும் ரொம்பவும் பின்
தங்கியவர்களாக இருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு எல்லாவித சலுகை
களும் செய்து கொடுப்பது போன்று இவர்களுக்கும் செய்ய வேண்டும்
என்று அவர்கள் பல மாநாடுகள் கூட்டி தீர்மானம் போட்டு அனுப்பி
இருக்கிறார்கள். அவைகளைப்பற்றி அரசாங்கம் நன்றாக பரிசீலனை செய்து
அவர்களுக்கும் ஏதாவது சலுகைகள் காட்ட வேண்டும் என்ற எண்ணத்
துடன் பரீட்சார்த்தமாக ஒரு ஜில்லாவை எடுத்துக்கொண்டு அங்கு இப்படிப்
பட்ட சலுகைகளை அவர்களுக்குக் கொடுத்துப் பார்த்து அதன் பின் அது
சரியாக நடைபெறும் என்று கருதினால் மற்ற ஜில்லாக்களுக்கும் அதை
விஸ்தரிக்கலாம் என்ற உத்தேசத்துடன் குறிப்பிட்ட ஜில்லாவில் அமுலுக்குக்
கொண்டுவருவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அவர்களுக்கு
கருவிகள் கொடுக்க வேண்டும் என்று சொல்வதால் அப்படி அந்த
குறிப்பிட்ட ஜில்லாவில் கொடுத்து உதவுவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.
அந்த குறிப்பிட்ட ஜில்லாவில் கருவிகளைக் கொடுத்து உதவி செய்வதன்
மூலம் அந்தந்த தொழிலைக் கற்றுக்கொண்டு சலவை, க்ஷவர தொழிலாளர்
கள் தங்களுடைய தொழிலில் முன்னேற்றமடைவதாகக் கண்டால்

[Sri P. Kakkan] [24th March 1960

அதையே மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிப்பதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுடைய தொழில் பயிற்சியை பயனடைய செய்துகொள்வதற்கு இது வசதியாக இருக்கும் என்று கருதி, இதன் மூலம் அவர்கள் தங்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ளலாம் என்று பரிசீலனை செய்து அந்த முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

வீடுகள் கட்டுவது சம்பந்தமாக பத்து வீடுகள் கட்டினால் அதில் ஒரு வீடு ஜாதி ஹிந்துக்களுக்கு இருக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்தால்தான் ஜாதி ஹிந்துக்களும் ஹரிஜனங்களுடன் ஒன்றாக வாழ்ந்து ஓரளவு தீண்டாமையை ஒழிக்கலாம் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. ரொம்பவும் பின்தங்கிய ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து உதவ வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த முறையிலும் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. இது எல்லாருக்கும் தெரியும். அதன் பிறகு இருபது அல்லது முப்பது வீடுகள் என்று கட்டப்பட்டு வந்தது. இப்பொழுது எங்கு பார்த்தாலும் 100 அல்லது 75 அல்லது 50 வீடுகள் என்று கட்டப்பட்டிருக்கிறது. இவர்களுடன் எந்த ஜாதி ஹிந்துவாவது வீடு கட்டிக்கொள்ள வேண்டும் என்று கருதினால் அவருக்கும் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது. கிராமங்களில் இப்பொழுது அதிகப்படியான வீடுகள் கட்டியிருப்பதால் மற்ற வகைகளிலும் ஹரிஜனங்களுக்கு சலுகைகள் காட்ட வேண்டும் என்று அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் காட்டப்பட்டு வருகிறது. இப்பொழுது ஹரிஜனங்களுக்கு எவ்வளவு வீடுகள் கட்டினாலும் அவர்களுக்கு மனம் திருப்தி அடையவில்லை. மற்றும் அநேகம் சலுகைகள் வேண்டும் என்று கேட்கிறார்கள். அவைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து அவர்கள் கேட்கக்கூடிய பொதுவான சலுகைகளையும் கொடுப்பதாக முடிவுசெய்திருக்கிறது. பொதுவாக ஹரிஜனங்கள் வாழ்கிற காலனிகளில் அவர்கள் பொதுவாக என்னென்ன காரியங்களையெல்லாம் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்களோ அவற்றை ஓரளவு செய்வதற்கு அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு பதிலாக இடம் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. அப்படி இடம் வாங்கிக் கொடுத்து அவர்கள் இஷ்டம் போல் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு உதவியாக மரம், ஓடுகள் போன்ற சாமான்கள் வாங்கிக்கொள்ள ரூ. 100-ம் மற்ற வசதிகளை செய்துகொள்வதற்கு அவர்களுக்கு 25 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அதை வைத்துக்கொண்டு அவர்கள் இஷ்டம்போல் தங்களுக்கு சௌகரியபட்டபடி வீடுகளைக் கட்டிக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் அவர்களுக்கு பணம் கொடுத்து இரு ஜில்லாக்களில் பரீட்சார்த்தமாகக் பார்க்க முடிவு செய்துள்ளது. ஆகவே இப்படிப்பட்ட சலுகைகளைக்காட்டி வருவதால் கனம் அங்கத்தினர்கள் திருப்தி அடைவார்கள் என்றே நினைக்கிறேன். இதன் பிறகு கனம் அங்கத்தினர்களுடைய எண்ணத்தையும் தெரிவிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கு பார்த்தாலும் அவர்களுக்கு மனைக்கட்டுகளை வாங்கிக்கொடுக்க அதிக அக்கரை காட்டி வருகிறார்கள். இதற்கு முன் புஞ்சை நிலங்களிலும், சர்க்கார் தரிசு நிலங்களிலும் அவர்களுக்கு மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டுவந்தன. அது போதாது என்று கருதி அதிகப்படியாக பணம் கொடுத்து நஞ்சை நிலங்களிலும் இடங்களை வாங்கி அவர்களுக்கு மனைக்கட்டுகளுக்கு இடம் கொடுக்கப்பட்டு வருகிறது. எப்படியாவது இந்த மனைக்கட்டுப் பிரச்னையை தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அதிகப்படியான பணத்தைக் கொடுத்து வாங்கியாவது நஞ்சை நிலங்களில்கூட இடம் வாங்கிக்கொடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் சில காலனிகளில் அவர்களுக்கு பாதைகள் அமைத்துக்கொடுக்கப்பட்டு வருகிறது. குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுவதோடு ஓவர் ஹெட் டாங்குகளும் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகிறது. மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. தெருக்களும், பாதைகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற பல நல்ல நன்மை தரக்கூடிய



24th March 1960] [Sri P. Kakkan]

காரியங்களையும் செய்துகொடுத்துக்கொண்டு வருகிறார்கள் அரசாங்கம். உதவிபெற்று படிக்கும் மாணவர்களுக்கு சென்னையில் ஒரு கட்டிடம் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் இப்பொழுது மாணவர்கள் தங்கி படித்து வருகிறார்கள். காலேஜில் படிக்கும் மாணவர்களுக்கு தங்க வசதி செய்துகொடுத்திருப்பதோடு அரசாங்கம் திட்டமிட்டபடி அவர்களுக்கு என்று தனியாக கட்டிடம் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சென்னையில் எம். சி. ராஜா விடுதி கட்டிடத்தை இதுவரையிலும் வாடகைக்கு எடுத்துக்கொண்டிருந்தார்கள். அதற்கு அதிகமாக செலவு ஆகிறது என்று கருதி தனியாக கட்டிடம் கட்ட திட்டமிட்டிருக்கிறார்கள். கட்டிடம் கட்டுவதென்றால் அது உடனடியாக கட்டிமுடிக்க முடியாது. அவற்றையெல்லாம் திட்டமிட்டு இஞ்சினியர்கள் போய்ப் பார்த்து அதற்கு வேண்டிய முன் ஏற்பாடுகள் எல்லாம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் அடுத்து வரும் ஏப்ரலில் இங்கு வரும்போது அந்த கட்டிடத்தின் துவக்கம் ஆரம்பித்திருப்பதை பார்க்கலாம். காலேஜ் மாணவர்களுக்கு என்று கட்டப்படும் கட்டிடத்திற்கு "ஹரிஜன ஹாஸ்டல்" என்ற பெயரை வைக்கக்கூடாது என்று முடிவு செய்து அதற்கு "கவர்ண்மெண்ட் ஹாஸ்டல்" என்று பெயர் வைப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஹைஸ்கூல் ஹாஸ்டல்களுக்கு ஹரிஜன ஹாஸ்டல் என்ற பெயர் இருந்தால் பாதகம் இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த முறையில் தீண்டாமையை பூரணமாக அகற்ற உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜன மாணவர்கள் எவ்வளவு பேர்கள் வந்தாலும் அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எந்தவிதத்திலும் அவர்களுக்கு முதல் சலுகைக் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் இருந்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னும் பல கருத்துக்கள் நான் சமர்ப்பித்துள்ள அறிக்கையாகிய ஹரிஜன நலத்துறை வெளியீட்டின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. சில புள்ளி விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழிபெயர்ப்பின் காரணமாக சில அச்சுப் பிழைகள் ஏற்பட்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர்கள் அவைகளை திருத்திக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவைகளாவன:—

| பக்கம் எண். | வரி எண். | பிரசுரிக்கப் பட்டிருப்பது. | திருத்திக்கொள்ள வேண்டியது. |
|---|---|---|---|
| 4 | 3 | 1961–61 .. .. | 1960–61. |
| 4 | 39 | ஒரு சம் .. .. | ஒரு லட்சம். |
| 4 | 41 | 1960–62 .. .. | 1960–61. |
| 5 | 8 | தண்டிக்குடி .. | தாண்டிக்குடி. |
| 8 | 29 | பிரதம இன்ஸ்பெக்டர். | பிரதம இஞ்சினியர். |
| 8 | 35 | 958–59-ல் .. .. | 1958–59-ல். |
| 9 | 1 | 39 .. .. .. | 31. |
| 11 | 2 | தொழிற்சாலைகளில் ஆறு. | தொழிற்சாலைகள் ஒவ்வொன்றிலும் ஆறு |
| 14 | 22 | செக்கநூரணியில் .. | செக்கானூரணியில். |
| 16 | 5 | 500 .. .. .. | 590. |
| 17 | 13 | கெஜட் பதிவுபெற்ற என்பது நீக்கப்பட வேண்டும். | |
| 18 | 17 | 5,28,300 .. .. | 5,28,000. |

முதலில் நாளைக்கு இந்த டிமாண்டை எடுத்துக்கொள்வதாக இருந்தது. இன்றைக்கு எடுத்துக்கொள்வதால் மேற்கண்ட திருத்தங்களை திருத்திக் கொள்ள நேரம் இல்லாமல் போய்விட்டபடியால் மேற்கண்ட பிழைகளை கனம் அங்கத்தினர்கள் பொருட்படுத்தாமல் இருக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் சிந்தனை செய்து தங்களுடைய கருத்துக்களையும் ஆலோசனையையும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

[24th March 1960

* SRI M. ANANDAN : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, 10-30 a.m. மதிப்பிற்குரிய ஹரிஜன இலாக்கா அமைச்சர் கொண்டுவந்திருக்கும் மான்ய கோரிக்கைமீது என் கருத்துக்களை கூற விரும்புகிறேன். ஹரிஜனங்களுக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கும் இரண்டு கோடி 33 லட்சம் ரூபாய் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார். 1960–61-ல் இரண்டு கோடி 95 லட்சம் ஒதுக்கப்பட்டது. 62 லட்சம் அதிகம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக பார்ப்போமானால் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கிடையாது, குடிமனை கிடையாது, குடிதண்ணீர் வசதி கிடையாது, ரோடுகள் வசதி கிடையாது, சுடுகாட்டுக்குப் போக பாதையும் கிடையாது. இந்த சட்டமன்றத்தில் இதைப்பற்றி பலதடவை சொல்லியும்கூட அரசாங்கம் இதை கவனிக்கவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக இவைகளை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக சொல்லப்போனால் எங்கள் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கள்ளக்குறிச்சித் தொகுதியில் 400 ஹரிஜன கிராமங்கள் இருக்கின்றன. அங்கே நல்ல ரோடுகள் கிடையாது. பட்டா நிலங்களின் பக்கம் இருக்கும் ஹரிஜன மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எங்கள் கள்ளக்குறிச்சி தாலூக்காவில் ஹரிஜனங்கள் 150 கிராமங்களில் வீடுகள் கட்ட பட்டா நிலங்களை சர்க்காரால் சர்வே செய்யப்பட்டன. இன்னும் பட்டாதார்களுக்கு சர்க்கார் பணம் கொடுக்கவில்லை. பட்டாதார் நிலங்களுக்கு சர்க்காரே பணம் கொடுத்து பட்டா நிலங்களை வாங்கி ஹரிஜனங்களுக்குக் கொடுத்து குடியிருப்பு வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஓட்டுவில்லை வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். சர்க்காரால் வடக்காலந்தூர், மோகூர், துருகம், அம்மகளத்தூர் முதலிய இடங்களில் ஓட்டுவில்லை வீடுகள் கட்டித்தந்திருக்கிறார்கள். அந்த இடத்தை கனம் அமைச்சர் அவர்களும் சுற்றுப்பிரயாணம் வரும்போது பார்த்திருக்கிறார்கள். அந்த வீடுகள் கட்டின ஒரு மாதத்திற்குள் மழை வந்து வீடுகள் இடிந்துவிழுந்துவிட்டன. சர்க்கார் இவைகளைக் கட்டுவதற்கு 550 ரூபாய் மான்யம் கொடுக்கிறார்கள். ஹரிஜனங்கள் 200 ரூபாய் டெபாசிட் போடுகிறார்கள். ஆகமொத்தம் 750 ரூபாய் அளவிலே இந்த வீடுகளை கட்டவேண்டியதாக இருக்கிறது. கன்ட்ராக்டர்கள் இவைகளைக் கட்டும்போது வைரம் பாயாத வெள்ளை பனமரத்தையும், மூங்கிலையும் போட்டு கட்டுவதால், கட்டின மூன்றாவது நாளே விழுந்துவிடுகிறது. அவர்கள் நல்ல வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கும் சர்க்கார் மானிய லோன் பணத்தை 1,500 ரூபாயாக உயர்த்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் நல்ல வீடுகள் கட்டிக்கொண்டு நன்றாக வாழ்வதற்கு உடனடியாக 1,500 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(Sri A. Govindasamy in the Chair)

சர்க்கார் வேலை செய்யும் ஹரிஜனத் தோட்டிகளுக்கு சம்பளம் ரெவின்யூ டிபார்ட்மெண்ட் கொடுப்பதில்லை. ஹரிஜன சர்க்கார் ஊழியர் வேலை செய்யும் சமயத்தில் அவருடைய அண்ணனோ, அப்பாவோ இறந்துவிட்டால்கூட 10-30 a.m. கிராம முனிசிப்பும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், தாசில்தாரும் வேலை செய்யச் சொல்லுகிறார்கள். 6, 8 மாதங்கள் வேலை செய்த பிறகு சம்பளம் கேட்டால் "இன்னும் உத்திரவு வரவில்லை" ஆர். டி. ஓ-விடமிருந்து என்று சொல்லுகிறார்கள். என் தொகுதியில் 9 தோட்டிகளுக்கு இம்மாதிரியாக மாதத்திலிருந்து 10 மாதங்கள் வரைக்கும் சம்பளம் வரவில்லை. இதை எல்லாம் அரசாங்கம் கவனித்து ஹரிஜன தோட்டிகளுக்கு சம்பளம் கொடுக்க ஆர்டர் கொடுக்கும்படியாகவும் ஆர். டி. ஓ-க்கு உத்திரவு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரிஜன தோட்டிகளுக்கு சம்பளம் கொடுப்பதற்கு சட்டம் போட வேண்டும். அவர்கள் ஆர்டர் வாங்கிக்கொண்டு வேலை பார்த்தால் மாதாமாதம் சம்பளம் கிடைப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். இதையெல்லாம் சர்க்கார் தலையிட்டு நியாயம் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராம பஞ்சாயத்து போர்டுகளின் ஹரிஜன தோட்டிகள் ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் இன்னும் 2 ஐந்தாண்டு வரைக்கும் பர்மனென்ட் செய்யப்படவில்லை.



24th March 1960] [Sri M. Anandan]

அவர்களை தலைவர் நினைத்தபோது வைத்துக்கொள்ளலாம்; மனதிற்கு இசைந்தவாறு வேண்டாமென்று சொல்லிவிடலாம் என்ற நிலையை மாற்ற அதற்காக கனம் அமைச்சர் அவர்கள் அவர்களை உடனடியாக பர்மனண்ட் செய்ய கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குடி தண்ணீர் கிணறு ஹரிஜனங்களுக்கு வெட்டுவதற்காக பணம் கொடுக்கும் பொறுப்பை பி. டி. ஓவிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஹரிஜன காண்ட்ராக்டரிடம் 10 ரூபா வீதம் பிடித்துக்கொள்கிறார்கள். கடன் வேண்டுமென்று விண்ணப்பம் போட்டால் ஒரு வருஷம் ஆனாலும் தக்க பதில் சொல்லுவதுகூட கிடையாது. ஹரிஜனங்களுக்கு "நாளைக்கு வா, பின்னால் வா" என்று சொல்லிவிடுகிறார்கள். இதை ஹரிஜன அமைச்சர் நன்றாக உணர்ந்து விண்ணப்பம் விவசாயிகள் செய்த ஒரு மாதத்திற்குள்ளேயே கடன்கள், பிண்ணாக்கு உரம் முதலியவை கொடுக்க உத்திரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பழய குடி தண்ணீர் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போனால் அவைகளை ஆழப்படுத்துவதற்கு சர்க்கார் கன்ட்ரிபூஷன் தொகை கேட்கிறார்கள். ஷை கன்டிரிபூஷன் தொகையை ஜில்லா ஹரிஜன வெல்பார் டிபார்ட்மெண்டுக்கு ஒதுக்கி ஹரிஜனங்களுக்குக் கொடுக்க வேண்டும். ஹரிஜனங்கள் காண நாட்டு எடுத்து கிணறு வெட்டுவதற்கு சாங்ஷன் வாங்கினால், பிளாக் டவலப்மென்டில் 10 ரூபா வீதம் பிடிதம் பிடித்துக்கொள்ளுகிறார்கள். 500 ரூபாய் என்றால் 50 ரூபாய் பிடித்துக்கொள்ளுகிறார்கள். இப்படி பல இடங்களில் நஷ்டம் அடைகிறார்கள். ஏழை ஹரிஜனங்கள் ஹரிஜன் முன்னேற்றத்தைப்பற்றி சொல்லும் நேரத்தில் ஹரிஜனங்களுக்கு இது விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என் கள்ளக்குறிச்சி வட்டாரத்தில் சர்க்கார் லேபர் ஸ்கூல் இருக்கிறது. இதில் மதிய உணவு மேனேஜ்மெண்டில் இருப்பவர்கள் மாணவர்களுக்கு சரியானபடி சோறு போடுவதில்லை. குறிப்பாக கள்ளக்குறிச்சியில் சிவஷண்முகம் ஹாஸ்டல் இருக்கிறது. இதைப்பற்றி கனம் அமைச்சரிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன். அங்குள்ள மாணவர்கள் சோறு இல்லாது ரோடுகளில் திண்டாடுகிறார்கள். பட்டினியால் கண்ணீரும் வடித்து கலங்கி கதறுகிறார்கள். இந்த ஆண்டில் அப்படிப்பட்ட ஹாஸ்டலை மேனேஜ்மெண்டாருக்குக் கொடுக்காமல், அரசாங்கமே எடுத்து நடத்தினால் இன்னும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்து நல்லமுறையில் நடக்கும் என்று சொல்ல விரும்புகிறேன் நான் ஏதோ கட்சிக்காக பேசவில்லை. அவர்கள் நேராக வந்து பிள்ளைகளை சந்தித்துக் கேட்டால் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதைப்பற்றி கனம் அமைச்சரிடம் எத்தனையோ தடவைகள் சொல்லியிருக்கிறேன். ஆகவே இங்கே உள்ள ஹாஸ்டலை சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கே 35 பிள்ளைகள் இருக்கிறார்கள். அதை இன்னும் 75 அல்லது 100 பிள்ளைகளாக உயர்த்த வேண்டும். மேலும் பிற்போக்கான தகுதியுள்ள ஹரிஜன மாணவர்களுக்கு சலுகை கொடுத்து இந்த ஹாஸ்டலை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் 400 கிராமங்கள் இருக்கின்றன. 250 ஜோடி காளை மாடுகள்தான் சர்க்கார் கொடுத்திருக்கிறார்கள். இது போதாது. இன்னும் ஏறக்குறைய 300, 400 ஜோடி காளை மாடுகளை வழங்க வேண்டும். அதோடுகூட கட்டை மாட்டு வண்டிகளும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். எல்லா கிராமங்களுக்குமுள்ள ஒவ்வொரு ஹரிஜனங்களுக்கும் மாட்டு வண்டிகள்கொடுத்துதவவேண்டும். அப்படிக் கொடுத்தால் ஹரிஜனங்கள் நல்ல முன்னேற்றத்திற்கு வருவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் கரவை பசு மாடுகள் பெரிய நகரங்களில் 300, 400 மாடுகள் கொடுக்கிறார்கள். நாட்டுப்புறத்தில் அவ்வளவாகக் கொடுப்பதில்லை. சேரி 1-க்கு 4, 5 கரவை மாடுகள் ஹரிஜனங்களுக்குக் கொடுத்தால் அந்தப் பாலையாவது விற்று அவர்கள் நல்ல வகையில் ஜீவனம் செய்ய உதவியாக இருக்கும். இதை 3-வது திட்டத்தில் சேர்த்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri M. Anandan] [24th March 1960

என் தொகுதியிலே 2,500 ஏக்கர் 3,000 ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. சர்வே நடந்துக்கொண்டிருக்கிறது. உடனடியாக அங்குள்ள ஹரிஜனங்களுக்கு நமது அமைச்சர் பட்டா வழங்க உத்திரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏழை ஹரிஜனங்கள் அடமான விண்ணப்பம் செய்தால் கவனிக்கப்படாமல் இருக்கிறார்கள். இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து தாசில்தாருக்கு உத்திரவு போட்டு நிலம் இல்லாத ஹரிஜனங்களாக இருந்தாலும் சரி நிலம் இல்லாத தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் சரி அவர்கள் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்கர் நிலம்வீதம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என் தொகுதியிலே கனம் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். ரோடு வசதி எப்படி இருக்கிறது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மேலும் ஹரிஜனங்களுக்குச் சொந்தமான 100 ஏக்கர், 200 ஏக்கர் புஞ்சை பல கிராமங்களில் ஏரிக்கு அருகாமையில் இருக்கும் நிலங்களுக்கு தண்ணீர் வசதிசெய்து ஏரியில் மதகு, வாய்க்கால் கட்டிக் கொடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்குள்ள ஏரிக்கு மதகு வைத்து தண்ணீர் வசதி செய்துகொடுத்தால் உணவு உற்பத்தி பெருகும், ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைவார்கள். ஆகவே இதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியில் (கள்ளக்குறிச்சி) 12 ஹரிஜன் லேபர் ஸ்கூல்கள் தான் இருக்கின்றன. எங்கள் தொகுதியிலுள்ள ஹரிஜனப் பகுதிக்கு இன்னும் 12 லேபர் ஸ்கூல்களை அமைத்துக் கொடுக்க வேண்டும். அப்படி 24 லேபர் ஸ்கூல் கொடுத்தால்தான் ஹரிஜனப் பிள்ளைகள் நல்ல முறையில் கல்வி பயில முடியும். இப்போது ஹரிஜனப் பிள்ளைகள் மதிய உணவு இல்லாமல் பள்ளிக்கூடத்தில் பசியால் கஷ்டப்படுகிறார்கள். 1958–59-ம் ஆண்டு வரையில் பஞ்சம் பட்டினியால் கஷ்டப்பட்டதால் மாணவர்கள் கல்விச்சாலைக்குப் போக மறுக்கிறார்கள். ஆகவே லேபர் ஸ்கூல்கள் இன்னும் 12 ஏற்படுத்தவேண்டும், அதாவது 24-ஆகவோ அல்லது 30-ஆகவோ உயர்த்திக் கொடுத்தால்தான் ஹரிஜனப் பிள்ளைகள் முன்னேறுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஹரிஜனங்களுக்கு வேண்டிய சலுகைகளை—ஏதோ சொல்லுவார்கள், சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காது என்ற பழைய கதையாக—அரசாங்கம் உத்திரவு கொடுத்தாலும், கீழே இருக்கக்கூடிய அதிகாரிகள் கொடுக்க மறுக்கிறார்கள். இதையெல்லாம் கண்ணும் கருத்துமாகப் பார்த்து, ஹரிஜனங்களுக்கு வேண்டிய புது, புது சலுகைகளைக் கொடுத்து, அவர்களுடைய முன்னேற்றத்திற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : தலைவர் அவர்களே, இன்றைக்கு ஹரிஜன நல இலாகாவிற்காக ஒதுக்கப்படும் மான்யத் தொகையைச் சற்று உயர்த்தியிருப்பதை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். அதே சமயத்திலே அதைக் குறித்து வெட்டுப் பிரேரணைகள் இருப்பதால், அவற்றையும் எதிர்த்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜன நலத் துறை இலாகா மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின் தங்கிய வகுப்பினருக்கும் நம் அரசாங்கம் பல நல்ல வசதிகளைச் செய்ய வழி வகுத்துள்ளது. தாழ்த்தப்பட்ட இனம் சற்றேறக்குறைய 6-ல் ஒரு பங்கு என்று சொல்லும்போது, இப்போது ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய பணம் கட்டாயமாகப் போதாது என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கென்று 10 கோடியாவது ஒதுக்கினால் மொத்தத்தில் 6-ல் ஒரு பங்காவது ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்ல முடியும். அதற்குமேல் பின் தங்கிய வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்து இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வி மான்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை இங்கே ஒதுக்கினால்தான் ஓரளவுக்காவது வேலை செய்யமுடியும். அது மாத்திரமல்லாமல் 10 ஆண்டுகளுக்குள் இவர்களை முன்னுக்குக்



24th March 1960] [Srimathi T. N. Anandanayaki]

கொண்டுவர வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபை செய்திருக்கக்கூடிய சட்டத்திலே தீட்டியிருப்பதை அந்தக் காலத்திற்குள்ளோ, அல்லது அதற்கு மேலே ஒரு சில ஆண்டுகளுக்குள்ளோ கொண்டுவர வேண்டுமென்றால், அதற்கு இந்த மான்யத் தொகையைப் பன்மடங்கு அதிகரிக்கவேண்டுமென்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது. நாம் செலவு செய்யக் கூடிய 80 கோடி ரூபாயில் உண்மையாக எந்தத் தொகை நேரடியாக மக்களிடம் சேருகிறது என்றால் ஹரிஜன நலத் துறை மூலமாகத்தான் சேருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எவ்வளவோ அணைக்கட்டுகள் கட்டினாலும், மற்றவைகளைச் செய்தாலும் அவர்களிடையே அன்றாடம் மலர்ச்சியைக் குறுகிய காலத்தில் கொடுக்குமா என்றால் கொடுக்காது. அரசாங்கம் பிள்ளைகளுக்குக் கொடுக்கிற ஸ்காலர்ஷிப், அவர்கள் இருந்து படிக்க விடுதிகள், மேற்படிப்பு படிப்பதற்கு ஊக்கம் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை இவைகளையெல்லாம் செய்கிறதே, அதுதான் நேரடியாக மக்களுக்குப் போய்ச் சேருகிறது. இதையெல்லாம் குறுகிய காலத்தில் செய்ய வேண்டுமென்றால் நிதி அமைச்சர் இதை நன்குணர்ந்து இதைப் போன்று பன்மடங்கு உயர்த்தினால்தான் எல்லா மக்களும் நல்ல முறையில் வாழ வசதி ஏற்படும். அரசியல் சட்டத்தின்கீழ் பின்தங்கியவர்கள், ஹரிஜனங்கள், இவர்களுடைய முன்னேற்றத்திற்காக 10 ஆண்டுகள் வரையில் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று செய்திருப்பது ஜாதி வேற்றுமை என்ற குறுகிய மனப்பான்மை என்ற காரணத்தினாலல்ல. எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக அவர்களை முன்னுக்குக் கொண்டுவருகிறோமோ அப்போதுதான் சமுதாயத்தில் பின் தங்கிய இனம் என்று இருந்துகொண்டு முட்டுக்கட்டை போடாமல், சமுதாயத்தில் இருக்கக்கூடிய பொருளாதார வேற்றுமை, ஜாதி வேற்றுமை இவைகளை ஒழிக்க வழி ஏற்படும் என்ற காரணத்தினால்தான் 10 ஆண்டுகளுக்குச் சலுகை கொடுத்திருக்கிறதே தவிர, அதற்காகத்தான் பின்தங்கிய வகுப்பினர், ஹரிஜனங்கள் என்று வைத்திருக்கிறதே தவிர, ஜாதி வேற்றுமையை வளர்க்க வேண்டும் என்ற குறுகிய மனப்பான்மை கிடையாது. அதைத்தான் இப்போது அமுல் நடத்தி வருகிறோம். அப்படி நடத்தும்போது ஆங்காங்கு ஜாதியை ஒழிக்க வேண்டுமானால் ஜாதி அடிப்படையில் சலுகைகள் கொடுக்கக் கூடாது என்றும், அப்படிக் கொடுப்பதால் ஜாதி வேற்றுமைதான் வளர்கிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். இம்மாதிரி புரியாமல் பேசுகிறார்களோ அல்லது புரிந்துகொண்டுதான் பேசுகிறார்களோ எந்த எண்ணத்தில் பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. புரியாமல் இருந்தாலும்கூட எதன் காரணமாக இப்படி வருகிறது என்று தெரியவில்லை. இதன் மூலமாகப் போக்கிவிட முடியும் என்று நினைப்பது தவறு. எந்த அளவுக்கு ஹரிஜன மக்களுக்கு பொருளாதார வசதிகள் கொடுத்து அவர்களும் மற்றவர்களைப்போல வாழ வழி செய்கிறோமோ, அன்றைக்குத்தான் ஜாதி போகுமே தவிர, வெறும் பேச்சினாலே மாற்றிவிடலாம் என்று நினைப்பது தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக எடுத்துக்கொண்டால் இன்றைக்கு ஹரிஜனப் பிள்ளைகளுக்குப் படிக்க வசதி, மனைக்கட்டுகள் வாங்கித் தருவதற்கு, மாடுகள் வாங்கித் தருவதற்கு, குடியிருப்பு வசதிகள் செய்து தருவதற்கு, இம்மாதிரியான வசதிகளையெல்லாம் செய்வதற்காக தொகையை ஒதுக்கி வைத்திருக்கிறோம். பின் தங்கிய வகுப்பினரை எடுத்துக்கொண்டால், குறிப்பாக அவர்களுக்கு படிப்பு வசதிக்குத்தான் ஒதுக்கியிருக்கிறோம். எக்ஸ்-கிரிமினல் டிரைப் என்றால் அவர்களுக்கு வீடு கட்டித் தரவும் மற்றும் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய சில சலுகைகளையும் கொடுப்பது என்று வைத்திருக்கிறோம். பின்தங்கிய வகுப்பினருக்காக ஸ்காலர்ஷிப்பிற்காக ஒதுக்கி வைத்திருக்கக் கூடிய பணம் கடலிலே கரைத்த பெருங்காயத்தைப் போலத்தான் இருக்கிறது. சட்டக் கல்லூரியில் படிக்க 300 மாணவர்கள் ஸ்காலர்ஷிப் வேண்டுமென்று மனுச் செய்து கொண்டார்கள். அவர்களில் 10 பேருக்குக் கொடுத்துவிட்டு, 290 பேர்களுக்கு இல்லையென்று கைவிரித்திருக்கிறது அரசாங்கம். அத்தனை மாணவர்கள்—300 பேர்கள்—போட்டதில் அவர்கள் யாரும் பணக்காரர்கள் போட்டுவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. இந்த விஷயத்தில் இன்றைக்கு துருவித் துருவிப் பார்க்கிறோம். ஏழைகளின் பெயரை வைத்துக்கொண்டு சலுகைகளை பணக்காரர்கள்

அடைந்துவிடக் கூடாத வகையில் ஹரிஜன நல அதிகாரி திட்டவட்டமான உத்திரவு போட்டு, கிராம முன்சீப்பிடம் சென்று, வரக்கூடிய வருமானம் என்ன என்று ஆராய்ந்து பார்த்துத்தான் இலாகாவானது சலுகை கொடுக்கிறது. அப்படி இருக்கும்போது 300 பேர்கள ஸ்காலர்ஷிப் கேட்டால், அதில் 10 பேருக்குத்தான கொடுக்க முடியும், பாக்கி 290 போகளுக்கு பணம் இல்லை எனறு சொன்னால் எந்தக் காலத்தில் இவர்களை நாம் முன்னுக்குக் கொண்டுவரப்போகிறோம், எதற்காக ஒப்புக்கு ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கேட்காமல் இருக்க முடியவில்லை. இவர்கள் எவ்வளவு சீக்கிரம் முன்னேறுகிறார்களோ அவ்வளவு சீக்கிரம் நம்முடைய பிரச்னை தீரும். குறுகிய காலத்தில் அதிக அளவு ஒதுக்கினால், அவர்கள் சீக்கிரத்திலேயே முன்னேறி விடுவார்கள். அதனால் அரசாங்கத்திற்கும் தொல்லை குறையும். ஏதோ நானும் செய்தேன் என்று சொல்லி ஒரு சிலருக்கு மட்டும் கொடுத்தால், இப்படி இந்தப் பிரச்னை நீண்ட நாளைக்கு இழுத்துக்கொண்டு போனால் அது சரியாகாது. இனியாகிலும், இந்தத் துறை அமைச்சர் அவர்கள் நிதி அமைச்சரோடு காரசாரமாகச் சண்டை போட்டு அதிகமாகப் பணம் வாங்கினால்தான் இந்தத் துறைக்கு திருப்திகரமாக ஒதுக்க முடியும். இந்த ஆண்டு ஒரு சில லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கி வைத்தாலும் போதாது. குறைந்த பட்சம் 10 கோடி ரூபாயாவது ஒதுக்கி வைத்தால்தான் ஹரிஜன மக்களில் 60 சதவிகிதத்தினருக்காவது நல்ல சலுகைகள் கொடுத்து அவர்களை முன்னேற்ற முடியும். அதை விட்டு 10 லட்சம் ரூபாய் அதிகம் ஒதுக்கி விட்டு எத்தனை பேர்களுக்கு உதவி தர முடியும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மாத்திரமல்லாமல் மற்றொரு பயம் வந்துகொண்டிருக்கிறது. அதாவது ஜாதி அடிப்படையில் பின்தங்கிய வகுப்பினர் என்றில்லாமல், பொருளாதார அடிப்படையில் பின் தங்கியிருப்பவர்கள் என்று பிரித்து—அதாவது இக்கனாமிக் பாக்வேர்ட்னெஸ்—அதன் மூலமாக ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம், இல்லையானால் ஜாதி வித்தியாசத்தை வளர்த்ததற்கு நாம் ஆளாவோம் என்று பெரிய அரசியல் வாதிகள் கூடப் பேசி வருகிறார்கள். இதை நன்றாக ஆழ்ந்து கவனித்தால் அந்த வாதத்தில் பொருள் இருக்கிறதா இல்லையா என்று புரிந்துகொள்ளலாம். இன்றைக்கு பின்தங்கியவர்கள் என்றால், ஜாதி அடிப்படையிலும் பின்தங்கியவர்கள், பொருளாதாரத் துறையிலும் பின்தங்கியவர்கள்—அதாவது இக்கனாமிக் பாக்வேர்ட்னெஸ் அண்டு ஸோஷல் பாக்வேர்ட்னெஸ்—இப்படி இரண்டு விதத்திலும் பின் தங்கியவர்களுக்குத்தான் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோமே தவிர, பின்தங்கிய ஜாதியினராக இருந்தாலும், வரக்கூடிய வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 1,200 ரூபாய்க்கு மேல் இருந்தால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பது கிடையாது. ஜாதி அடிப்படை, அதோடு பொருளாதார அடிப்படை என்ற இரண்டையும் சேர்த்துப் பார்த்துதான் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கும்போதே இப்போது ஒதுக்கக்கூடிய பணம் போதவில்லை. பரந்த மனப்பான்மையோடு பேசும்போது ஜாதி அடிப்படை கிடையாது, பொருளாதார அடிப்படையில் வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னால், இப்போது, ஒருவருக்கே கொடுக்க முடியாது இருக்கும்போது, இன்னும் 10 பேர்களையும் இழுத்து வைத்துக்கொண்டு, அவர்களுக்கும் பட்டை நாமம் போட்டுவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டு, அதனால் தொல்லை இருக்குமேயொழிய முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதே சமயத்தில் முன்னேறிய வகுப்பினரில் ஏழைகள் இருந்தால் அவர்களுக்குப் படிக்க வசதியில்லையென்றால், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கக் கூடாது என்று யாரும் கூற மாட்டார்கள். அப்படி ஆசை இருந்தால், ஆந்திர மாகாணம் போன்று அதற்காக தனியாக சில லட்சம் ரூபாயை ஒதுக்கி வைத்தால், நல்ல முறையில் படிப்பதற்குரிய அறிவு பெற்றிருக்கிற ஏழை பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம். இக்கனாமிக் பாக்வேர்ட்னெஸ் இருந்தால் அவர்களுக்குக் கொடுப்பதற்கென்று சில லட்சம் ரூபாய்கள் தனியாக ஒதுக்கி வைக்கலாம். இப்போது ஹரிஜன நலத் துறைக்காக ஒதுக்கப்படும் பணம் ஹரிஜனங்களுக்கும், பின்தங்கிய வகுப்பினருக்குமே பற்றாமல் இருக்கிறது.





ஜாதி அடிப்படை, பொருளாதார அடிப்படை இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போதே நமக்கு இன்னும் சில கோடி ரூபாய்களும், லட்சம் ரூபாய்களும் தேவை. இந்த நிலைமையில் இத்துடன் இன்னும் அதிகமான ஜாதிகளைச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கும் கொடுக்கமுடியாமல் இவர்களுக்கும் கொடுக்கமுடியாமல் எல்லோருக்கும் அதிருப்தியை வளர்ப்பது சரியா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதற்கு மேல் பணம் கொடுக்க மத்திய அரசாங்கத்தார் தயாராயிருந்தால் அவர்கள் தாராளமாகக் கொடுக்கட்டும், நாம் வாங்கிக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். இரு பிரிவுகளாகப் பிரிப்பது நல்லது. அவ்வாறு செய்தால் இரு பிரிவினருக்கும் பயன் ஏற்படும். நல்ல அறிவுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பதற்காக மெரிட் ஸ்காலர்ஷிப் கொடுக்க நாம் விரும்பினால் அதற்கு தனியாகப் பணம் தரப்பட வேண்டும். இருக்கும் பணத்திலேயே அப்பிரிவினருக்கும் எடுத்துக் கொடுப்பது அதிருப்தியைத்தான் வளர்க்கும். இது சம்பந்தமாகத் தீர்மானம் போட்டு அனுப்பினோம். அதன்பேரில என்ன நடவடிக்கை எடுத்தார்களோ தெரியவில்லை. இங்குள்ள சிக்கல்கள் மத்திய அரசாங்கத்திற்குத் தெரியவில்லை. மத்திய அரசாங்க அமைச்சருக்கு மாநில அரசாங்க அமைச்சர் இங்குள்ள நிலைமையை விளக்கிச் சொல்லவேண்டும். இந்த நிலைமையில் இருந்தால், இன்னும் பத்து ஆண்டுகள் அல்ல, நூறு ஆண்டுகள் கொடுத்தாலும், பின் தங்கிய வகுப்பினர் முன்னேற முடியாது ; எத்தனை ஆண்டுகள் கொடுத்தாலும் அவர்கள் சமுதாயத்தில் பின் தங்கியவர்களாகவே இருப்பார்கள், சமுதாய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவே இருப்பார்கள். அறிவைப் பயன்படுத்தி இதற்கு ஒரு பரிகாரம் காணவேண்டும். கனம் அமைச்சர் யோசிக்க வேண்டும். அவர் டெல்லிக்கு நேரடியாகச் சென்றாவது மத்திய அரசாங்க அமைச்சர்களிடம் நேரடியாகப் பேசி, நீங்களே இதற்கு ஒரு வழி சொல்லுங்கள் என்று கூறி எப்படியாவது பரிகாரம் காண வேண்டும். சமீபத்தில்கூட கனம் நிதி அமைச்சர் டெல்லியிலிருந்து முடிவு வந்துகொண்டிருக்கிறது என்று மதுரையில் சொன்னார். தக்க மாறுதலை காலா காலத்திலேயே செய்ய வேண்டும். முடிவு வந்த பிறகு எவ்வளவு முயற்சித்தாலும் மாறுதல் செய்ய முடியாது. முடிவு வருவதற்கு முன்பே மாறுதல் செய்யவேண்டும். வெள்ளம் வருவதற்கு முன்பே அணை போடவேண்டியது போல கனம் நிதி அமைச்சர் ஏற்கெனவே உரிய நடவடிக்கை எடுத்திருப்பார் என்று நினைக்கிறேன்.

பின் தங்கிய வகுப்பினர்களுக்கு கல்லூரிகளில் தான் சலுகை போதவில்லை என்று நினைத்துக்கொண்டிருந்தால், அவர்களுக்கு ஹைஸ்கூல்களிலும் சலுகைகள் போதாமலிருப்பது தெரிகிறது. இப்போது ஹைஸ்கூல்களில் இவர்களுக்கான ஸ்காலர்ஷிப்புகள் ரொம்பக் குறைவாக இருக்கின்றன. அவை ரொம்பக் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஹைஸ்கூல்களில் அதிகமான பேர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்தால்தான் இவர்களில் அதிகமான பேர்கள் கல்லூரிகளுக்குப் போகமுடியும். எனவே ஹைஸ்கூல் மாணவர்களுக்கும் அதிகமான வசதிகளும் சலுகைகளும் கொடுக்கவேண்டும். இந்த மக்களுக்கு சர்க்கார் அளிக்கும் உதவிகளில் பெரும்பான்மையானவை ஸ்காலர்ஷிப் சலுகைகள். அவை மாணவர்களுக்குக் கிடைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்போது மார்ச் மாதம். இன்னும் ஸ்தாலர்ஷிப்புகளுக்கு லிஸ்ட் போடவில்லை. இந்த நிலைமையில் பையன் என்ன பண்ணுவான் ?

**THE HON. SRI. P. KAKKAN :** ஸ்காலர்ஷிப்புகளுக்கு இன்னும் லிஸ்ட் போடவில்லை என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. ஏற்கெனவே லிஸ்ட் போட்டிருக்கிறார்கள். இப்போது பைனல் லிஸ்ட் போடவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**SRIMATHI T. N. ANANDANAYAKI :** எனவே இன்னும் பைனல் லிஸ்ட் போடவில்லை. அதையும் சீக்கிரம் போடுவார்களானாலும், இரண்டும் இந்த மாதத்தில்தான் போடப்படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதை இதற்கு முன்பே பண்ணியிருக்க வேண்டும். ஒரு லா காலேஜ் மாணவன் என்னைப் பார்த்து இன்னும் ஸ்காலர்ஷிப் பணம் வரவில்லை என்று சொன்னான். இவ்வாறு மாணவன் பரீட்சை

[Sri K. Ramachandran] [24th March 1960

வேண்டும், என்பதைச் சர்க்கார் மனதிலே கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்தான், அவர்களுடைய பொருளாதார நிலைமை உண்மையிலேயே உயரும் என்ற கருத்தை வைத்துத்தான் சொல்கிறேன். இதைச் சற்று தீவிரமாக ஆராய்ந்து, எப்படி கல்விக்காக அதிகமாகத்தொகை ஒதுக்கியிருக்கிறார்களோ அதேபோல ஒதுக்குவதோடு, மட்டுமல்லாமல், மத்திய சர்க்காரைக்கூட இந்த வகையில் அதிகமாகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று இந்தச் சர்க்கார் கேட்டுப் பெறவேண்டுமென்ற கருத்தையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜனங்களையோ அல்லது பிற்பட்ட வகுப்பினர்களையோ எடுத்துக் கொண்டால் அவர்கள் பெரும்பாலும் விவசாயிகளாகத்தான் இருக்கிறார்கள். விவசாயம்தான் அவர்களுடைய முக்கியமான தொழிலாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் நிலைமையில், அவர்களுடைய விவசாய முன்னேற்றம் என்ற குறிப்பிலே பார்த்தால், அதுவும் அப்படித்தான் இருக்கிறது. மாடு வாங்கிக்கொடுப்பது, ஏர், கலப்பை முதலியவை தருவது என்பதெல்லாம் சரிதான். இருந்தாலும், அடிப்படையிலே அவர்களுக்கு எந்த வகையிலே உதவி செய்வது என்பதைப்பற்றி குறிப்பு இல்லை. இவர்களுக்கு எல்லாம் நிலம் அதிகமாக "அஸைன்" செய்யப்படவேண்டும். முந்திய தினம் நான் பேசும்போதுகூட குறிப்பிட்டேன், இராமநாதபுரம் ஜில்லாவில் அனேக இடங்களில் விவசாயத்திற்கு லாயக்கான தரிசு நிலங்கள் இருக்கின்றன என்று. இதையெல்லாம் கணக்கெடுத்து, தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் கொடுத்தாலும் சரி, அல்லது "லாண்டு காலனைசேஷன்" என்ற முறையில் அமைத்தாலும் சரி, அதைச் செய்துகொடுக்கவேண்டும். லாண்டு காலனைசேஷன் திட்டங்களை மூன்று ஜில்லாக்களுக்கு மட்டும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மற்ற ஜில்லாக்களில் இப்படி அமைக்க இடம் இல்லை என்று கூறுகிறார்கள். மற்ற ஜில்லாக்களில் ஏன் ஏற்படவில்லை என்று எனக்குக் கொஞ்சங்கூடப் புரியவில்லை. லாண்டு காலனைசேஷன் ஸ்கீம் ராஜ்யம் பூராவுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும். எல்லா ஜில்லாக்களிலும் அமுல் செய்யப்படவேண்டும். இதனால் நல்ல பலன் ஏற்படும். உண்மையிலேயே பிற்பட்ட மக்களுக்கெல்லாம் நல்ல முன்னேற்றம் ஏற்பட முடியும். இதெல்லாம் நல்ல முக்கியமான யோசனைகள். இதையும் அரசாங்கம் நல்லவிதமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இம்மாதிரி செய்யாமல், மாடு வாங்கிக்கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. மாடு வாங்கிக்கொடுத்துவிட்டால் மட்டும் அவர்கள் முன்னேறிவிடுவார்கள் என்று சொன்னால், குறிப்பாக, உன்னிப்பாகக் கவனித்து, அது எந்த அளவு பயன்படுகிறது என்று என்னைக் கேட்டால், அது பயன்படவே இல்லை என்று நான் சொல்வேன். ஆகையால், இந்த யோசனையை முக்கியமாக கருத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

கல்விக்காக நிறையப் பணம் செலவழிக்கப்படுகிறது. அதிலும், சென்ற வருஷத்தைவிட இந்த வருஷத்திலே ரொம்ப அதிகமான தொகை வந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. கல்வியிலே 72 லட்ச ரூபாய் என்று மதிப்பிட்டு 1959-60-க்குப் போட்டு, திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் 68 லட்சத்து 64 ஆயிரம் செலவழித்து, இப்பொழுது மறுபடியும் 68 லட்சம் என்று போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு வளர்ந்து வரும் முறையிலே இந்தத் தொகை குறைச்சல் என்றுதான் சொல்லவேண்டும். மத்திய சர்க்காரிடமிருந்து உதவிச் சம்பளத் தொகை இவர்களுடைய கையிலே வந்து, இவர்கள் கொடுப்பது என்ற முறையிலேகூட, 23 லட்சம் 1959–60-க்கு ஒதுக்கப்பட்டது. 1960–61-லும், அதே 23 லட்சம்தான் போடப்பட்டிருக்கிறது. இதிலும் சற்று அதிகமாக தொகை செலவழிக்கப்படவேண்டும். அதிகமான தொகை மத்திய சர்க்காரிடமிருந்து கேட்டுப் பெறவேண்டும். கணிசமான தொகை வாங்காமல், அவர்கள் கொடுக்கிற தொகையை வாங்கிக்கொண்டு பேசாமல் இருந்துவிடக்கூடாது என்ற யோசனையையும் தெரிவிக்கின்றேன்.

காலனிகள் பொறுத்தவரையில், புதிய இடங்களில் வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால், அவர்கள் பழைய இடத்தை விட்டு வெளியேற வேண்டுமென்று வற்புறுத்தப்படவேண்டும். பழைய வாழ்க்கை நிலை



24th March 1960] [Sri K. Ramachandran]

லேயே, பழைய குடிசைகளிலேயே அவர்கள் தங்கிக்கொண்டிருந்தால், அவர்கள் முன்னேற முடியாது. இப்பொழுதிருக்கும் நிலைமையில், காலனிகள் அவர்களுக்கு ஏற்படுத்தி, வீடுகள் கட்டிக் கொடுத்தாலுங்கூட பழைய இடங்களை விட்டுப் போவதாக இல்லை. பெரும்பாலும் எங்கள் பகுதியில், கட்டிக்கொடுத்த வீடுகளை வாடகைக்கு விட்டுவிட்டு, பழைய இடத்தில் குடியிருக்கும் நிலைமை இருக்கிறது. இது கூடாது. புதிய இடத்தை வாடகைக்கு விட்டால் ஏதோ அவர்களுக்கு வரும்படி வருகிறது. ஆட்சேபணையில்லை. இருந்தாலும், அவர்களை நல்ல சூழ்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற கொள்கைக்கு முரணாக இருக்கிறது, அவர்கள் பழைய குடியிருப்புகளிலேயே வசித்துவந்தால். ஆகவே, கண்டிப்பாக அவர்கள் பழைய இடங்களைவிட்டு வெளியேறும் வகையில், அந்த இடங்களை ஆர்ஜிதம் செய்யும் பொறுப்பை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது இருக்கும் வீட்டின் "டிஸைன்" சரியாக இல்லை. கட்டிக் கொடுத்திருக்கும் வீடுகள் பல இடங்களில் சரியாக இல்லை. சரியாக இருப்பதாக ரிபோர்ட் வருவதை வைத்துக்கொண்டு, நாம் ரொம்பப் பிரமாதமாகச் செய்து விட்டதாகப் பாராட்டக் கூடாது. "டிஸைன்" மாற்றப்படவேண்டும். குறைந்தது ஆயிரம் ரூபாயாவது ஒரு வீட்டுக்குச் செலவழிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் சரியான வீடுகளாகக் கட்ட முடியும். குறைச்சலான இடவசதியுள்ள வீடு கட்டினாலுங்கூட, அது நிலைக்கும் மாதிரியாக இருக்கவேண்டும். ஆயிரம் ரூபாய் வரையிலும் மதிப்பீடு இருக்கவேண்டும்.

வீடு மனைக்கு நில ஆர்ஜிதம் செய்வதிலேகூட, ஒரு நிரந்தரமான கொள்கையை அனுசரிக்கவேண்டும். பொதுவாக, வீடு கட்ட நிலம் வேண்டுமென்றால், புறம்போக்காக இருந்தால், அதனை முதலில் ஆர்ஜிதம் செய்ய முற்படவேண்டும். புறம்போக்கு நிலம் கிடைக்காவிட்டால் புஞ்சை நிலம் இருந்தால் அதை எடுத்துக் கொள்ளவேண்டும். புறம்போக்கு நிலமோ புஞ்சை நிலமோ கிடைக்காவிட்டால்தான், நஞ்சை நிலத்தின் பக்கத்தில் போகவேண்டும். இப்பொழுதிருக்கும் நிலைமையில் அம்மாதிரி சரியான கொள்கை கடைப்பிடிக்கப்படவில்லை. நல்ல முதற்கரையாகவுள்ள நஞ்சை நிலங்களை மற்றவர்களிடமிருந்து எடுத்துக்கொள்வதினால், புறம்போக்கு நிலமும், புஞ்சை நிலமும் இருந்தாலுங்கூட, நஞ்சை நிலத்தை எடுத்துக் கொள்வது என்ற கொள்கை அரசாங்கத்திற்கு இருந்தால், உண்மையிலேயே சுமுகமான உறவு அந்தக் கிராமத்திலோ அந்த இடத்திலோ உண்டாக முடியாது; வீண் பூசல் உண்டாகும்; நம் கொள்கையும் வியர்த்தமாகிவிடும். இதற்குத் தகுந்த உதாரணங்கள் சொல்லமுடியும். இதைப்பொறுத்தமட்டில், இனிமேலாவது சரியான கொள்கை அனுசரிக்கப்படவேண்டும். தஞ்சை ஜில்லாவிலே புறம்போக்கு நிலம் இல்லை; புஞ்சை நிலமும் இல்லை; அப்படிப்பட்ட இடங்களில் வேண்டுமானால் நஞ்சை நிலத்தை எடுத்துக் கொள்வதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால், மற்ற இடங்களில் புறம்போக்கு இருக்கும் இடங்களில், புஞ்சை நிலம் இருக்கும் இடங்களில், முதற்கரையாக உள்ள நஞ்சை நிலங்களை எடுக்கக்கூடாது என்ற கொள்கையை செயல்படுத்தி, கண்டிப்பான உத்தரவு போட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். சட்டங்கள் போட்டு விட்டால் மட்டும் தீண்டாமை போய்விடும் என்று நாம் நினைத்தோமானால் அது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சட்டங்கள் வேண்டுமானால் ஓரளவுக்கு உதவியாக இருக்கலாம். இருந்தாலும், பிற்பட்ட மக்களுக்கு, கீழ்த்தர மக்களுக்கு, மற்றவர்களுக்கும் மற்ற ஜாதியினர்களுக்கும் சுமுகமான உறவைக் காட்டிக்கொண்டும் செல்லக் கூடிய அளவிலே நாம் போடுகின்ற திட்டம் இருக்கவேண்டும். செலவழிக்கின்ற பணம் செலவு செய்யப்பட வேண்டும். ஒதுக்கக் கூடிய பணம் எதுவாக இருந்தாலும் சரி, போடக் கூடிய சட்டம் எதுவாக இருந்தாலும் சரி அம்மாதிரி நிலைமை ஏற்படுவதற்கு வழி காட்டினால்தான், அது "சோஷல் ஈகுவாலிடியை" உண்டாக்கக் கூடிய நிலைமை ஏற்படும் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்வித் துறையாக

இருந்தாலும் சரி, மற்ற துறையாக இருந்தாலும் சரி, ஹரிஜன மக்களைவிட பின்தங்கிய மக்கள் அதே நிலைமையிலே உள்ள மக்கள் பல பகுதிகளில் இருக்கிறார்கள். அவர்கள் விஷயத்தில் சற்று அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். பின்தங்கிய மக்கள் ஹாஸ்டலில் இப்பொழுது 40 சத விகிதம் ஹரிஜனமக்களுக்கு இடம் கொடுக்கிறார்கள் என்பதை வரவேற்கிறேன். ஜாதி துவேஷம் அடிப்படையிலேயே களைந்தெரியப்படவேண்டிய ஒரு விஷயம். ஹரிஜன ஹாஸ்டலை மாற்றி அமைக்கலாம். மற்ற மக்களைப் போல் பின்தங்கிய மக்களும் நிறைய இருக்கிறார்கள். அவர்களும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள். அவர்கள் அந்த ஹாஸ்டலில் அதிகமாக இடம் பெறக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். எல்லா மாணவர்களுக்கும் இடம் கொடுக்கவேண்டுமென்று நினைத்தாலும்கூட, மான்யம் அதிகமாக இருக்கவேண்டும். இம்மாதிரியான கொள்கையை பரிபூரணமாகக் கடைபிடிப்பதன் மூலம்தான் பின்தங்கிய மக்கள் உடனே முன்னேறமுடியும், ஜாதி, துவேஷம் ஒழிய முடியும். இம்மாதிரி யோசனைகளை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். பொருளாதாரத் துறையிலே பின்தங்கியவர்கள் எல்லோரையும் நாம் எடுத்துச் செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்தை இப்பொழுது பரிசீலிப்பதற்கு இடம் இல்லை என்ற கருத்தைச் சொல்லி, ஹரிஜனங்களுக்கு எவ்வளவு தூரம் சலுகைகள் கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு அவர்களைப் போன்ற நிலையில் உள்ள பின்தங்கிய மக்களுக்கும் சலுகைகள் கொடுக்கவேண்டும். சோஷல் ஜஸ்டிஸ் என்ற முறையிலே பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அந்த சலுகைகளை விரிவுபடுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri S. LAZAR** : கனம் சபைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 40 லட்சம் ரூபாய் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் அதிகப்படியான மான்யத்தை ஒதுக்கி, இங்கே கோரிக்கை கொண்டு வந்த அமைச்சர் அவர்களை பாராட்டி, எனது கருத்துக்கள் சிலவற்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மான்யத்தைப் பற்றி மூன்று முக்கியமான கருத்துக்களை வலியுறுத்த விரும்புகிறேன். முதலாவதாக எவ்வளவுதான் நாம் பணம் மூலம் உதவி செய்ய முயற்சி செய்தாலும்கூட, உண்மையிலேயே முன்னேற்றம் காணவேண்டுமானால், பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் ஏற்பட்டால்தான் சரியான முன்னேற்றம் இருக்க முடியும் என்ற அடிப்படையிலே மேலும் நாம் அதிகப்படியான அளவுக்கு அவர்களுக்கு பொருளாதாரத் துறையிலே உச்சம் ஏற்படுவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அடுத்தபடியாக, இந்த மக்களுக்கு கொடுக்கக் கூடிய உதவியைப் பொருத்த வரையிலும், கூடியவரைக்கும் பணமாகக் கொடுக்காமல், அதற்கு பதிலாக பொருள்களாகவோ அல்லது சலுகைகளாகவோ கொடுத்தால், அதனால் இன்னும் அதிகமாக பலன் இருக்கும் என்ற ஒரு கருத்தினையும் வலியுறுத்த விரும்புகிறேன். அதோடுகூட, நாம் இவர்களுக்கு செய்யக் கூடிய காரியங்களை உள்ளபடியே அவர்கள் நன்றாக உணர்ந்து அதனால் பயன் பெறவேண்டுமென்று சொன்னால், இந்தத் திட்டங்கள் என்னென்ன என்பதைப்பற்றியும் நன்றாக அவர்களுக்கு விளக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது ஏறக்குறைய இந்த சலுகைகள் ஏதோ நகரத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு அதிகப்படியான அளவுக்கு கிடைக்கிறதே தவிர, கிராமங்களிலுள்ள ஹரிஜன தோழர்களுக்கு எந்தெந்த சலுகைகள் எந்தெந்த அளவுக்கு நாம் எதிர்பார்க்கிறோமோ அந்த அளவுக்கு அவர்களுக்கு எட்டவில்லை என்ற ஒரு கருத்தையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதற்கு அடுத்த படியாக, அடிக்கடி நான் இங்கே வலியுறுத்திக் கொண்டிருக்கக் கூடிய ஒரு பிரச்னையைப் பற்றி நானே பேசவேண்டியிருப்பது பற்றி உள்ளபடியே வருத்தப்படுகிறேன். ஆனால் அதை வலியுறுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்தப் பிரச்னை மாகாணத்தில் இருக்கக்கூடிய ஏறக்குறைய 2½ சத விகித மக்களுடைய பிரச்னையாக இருக்கிறது. அதுமட்டும் அல்ல. அந்த 2½ சத விகித மக்களுடைய பிரதிநிதி





நிதி துரதிர்ஷ்டவசமாக ஒருவர்கூட இந்தச் சபையிலே இல்லை என்று சொன்னால், நிச்சயமாக அவர்களுடைய நிலைமையை நாம் பரிசீலிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. பிற்பட்ட சமூகத்தினராக, அதைவிட குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பினராக (ஷெட்யூல்டு காஸ்டு) இருந்து வரக்கூடிய கிறிஸ்தவர்களுக்கு சரியானபடி சலுகைகள் அளிக்கப்படவில்லை, கல்வித் துறையில் மட்டுமல்ல மற்ற எல்லா துறைகளிலும். இன்றைக்கு ஹரிஜனத் தோழர்களுக்கு ஏறக்குறைய 16 சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அந்தச் சலுகைகளை 20 ஆக, 25 ஆகக்கூட அதிகரிக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தக்கூடியவர்களில் நானும் ஒருவன். சென்ற ஆண்டில் நான் எடுத்துச் சொல்லியதுபோல, என்னுடைய கருத்து ஏற்கனவே இவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற மான்யத்தை குறைக்கவேண்டுமென்பது அல்ல. ஆனால், இங்கே ஏறக்குறைய 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இன்னும் ஓரளவு தனியாக ஒரு தொகை கிறிஸ்துவர்களுக்காக ஒதுக்கப்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக்கொண்டு வருகிறேன். முக்கியமாக இதைப்பற்றி பேசுகிற பொழுது எழக் கூடிய ஆட்சேபனை ஒன்று உண்டு. மதம் மாறிய காரணத்தினாலே இவர்களுடைய பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த முன்னேற்றம் உள்ளபடியே எந்த விதத்திலும் குறையவில்லையே என்று ஒரு தவறான கருத்து இருந்துகொண்டு வருகிறது. அமைச்சர்கூட அடிக்கடி இதைப்பற்றி பேசுகிறார்கள். அதுபற்றி நான் ஆதாரபூர்வமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**Social ostracism follows conversion of a Hindu Harijan or a Hindu Backward into Christianity or Islam and makes converts socially and economically more backward than over."**

என்பது பாக்வேர்டு கிளாஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் இருக்கக் கூடிய ஒரு பகுதி. அதோடுகூட, வெஸ்டு பெங்கால் அரசாங்கம் அதைப்பற்றி தன்னுடைய கருத்தை தெரிவித்தபொழுது

"These converts carry on the hereditary occupation even **after conversion."**

என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒருவர் மதம் மாறிவிட்டால் உடனே அவர்களுக்கு இருக்கக்கூடிய சமூக பழக்கங்களும், பொருளாதாரத் துறையிலே உள்ள நிலையும் மாறிவிடுகிறது என்பது இல்லை. மதம் மாறுவது என்று சொல்லுவது—It is a **mental factor**—ஒருவர் எப்படி ஒரு கட்சியை விட்டு இன்னொரு கட்சிக்கு மாறலாமோ அதுபோல மதம் மாறக் கூடியது என்பது ஒரு தனிப்பட்ட விஷயம். அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும் மாறுபட்ட பழக்கம் ஏற்பட்டுவிடும் என்ற கருத்துகொண்டு பேசுவது உண்மையிலேயே வருந்தக்கூடிய அம்சமாகும். மதம் மாறிவிட்டால் உடனே உள்ளபடியே பொருளாதார முன்னேற்றமும் ஏற்பட்டுவிட முடியுமா என்பதை நாம் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது.

**The Hon. Sri P. KAKKAN** : மதம் மாறுவது கட்சி விட்டு கட்சி மாறுவது போல் உள்ளது என்று கனம் அங்கத்தினர் சொல்லுவதை கிருஸ்துவப் பெரியார்களே ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Sri S. LAZAR** : உள்ளபடியே ஆச்சரியப்படுகிறேன். அந்தவிதமான கருத்து தவறான கருத்து என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைய தினம் இருக்கப்பட்ட அமைப்பிலே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்துவன் மதம் மாறி ஹிந்து ஆகிவிட்டதாக கெஜட் நோடிபிகேஷன் கொடுத்துவிட்டால் நிச்சயம் அவனுக்கு அந்தச் சலுகைகளை நீங்கள் கொடுத்தாகவேண்டும். அதுதான் சட்ட ரீதியாக இருக்கக்கூடிய நிலைமை.

"மற்ற வகுப்பார்களுக்கும்" என்று சொன்னேன், ஏனென்றால், ஹரிஜனங்களுக்கு ஒதுக்கி, அவர்கள் பெயரை வைத்து ஒதுக்கி, அதில் மற்றவர்களையும் புகுத்தி விடுவது முறையல்ல. இருந்தாலும், கனம் கே. பி. எஸ். மணி அவர்கள் சொன்னப் பிரகாரம், போட்ட ஐந்தாண்டுத் திட்ட பிரகாரம் வேலைகளைச் செய்ய முன்வந்தால்தான், பல வழிகளிலும் இந்த ஹரிஜனமக்கள் முன்னேற முடியும். இப்பொழுது ஹரிஜனங்களுக்கு நமது அரசாங்கம் பல சலுகைகளைக் கொடுக்கிறது. அதை வரவேற்கிறோம். இருந்தாலும்கூட அரசாங்கமே, அவர்களை ஒதுக்கிக் கொண்டு வருகிறது என்று சொல்லாமல் இருக்க முடியவில்லை. முன்னேற்றத் துறைகள் எல்லாவற்றிலும் அவர்களை ஹரிஜனங்கள், ஹரிஜனங்கள் என்றே ஒதுக்கிச் செய்கிறார்கள். அவர்களுக்கென்று காலனி கட்ட முற்பட்டால், ஊருக்கு அப்பால்தான் கட்டுகிறார்கள். இதிலிருந்து பார்த்தால், ஹரிஜனங்களை அரசாங்கமே ஒதுக்கத்தான் பார்க்கிறார்கள் என்பது தெரியும்.

**The Hon. Sri P. KAKKAN**: கனம் அங்கத்தினர் போன்றவர்கள் அப்படிச் சொல்வதால்தான், அவர்களுக்கு இடத்தைக் கொடுத்து, பணத்தையும் கொடுத்து, நல்ல முறையிலே அவர்களே கட்டிக் கொள்ளட்டும் என்று அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

**Sri V. CHINNIAH**: என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன், இந்த ஏற்பாடு செய்ததற்காக. ஆனாலும், காலனிகளை கட்டுவதில், காண்டிராக்ட்களுக்குக் கொடுப்பதால், அவர்கள் வீடுகளைச் சரியாகக் கட்டுவதில்லை. கட்டடம் சில நாட்களிலேயே பழுதாகிவிடுகிறது. ஹரிஜன மக்கள் பெரும்பாலாக விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். அவர்களுக்கு சொந்த நிலம் கிடையாது. நிலம் ஒரு சில பேர்கள் வைத்திருந்தாலும் கிணறு வசதி கிடையாது. அரசாங்கத்தார் கிணறுக்காக ரூ. 1,500 மானியமாகக் கொடுப்பதாகத் திட்டமிட்டு இருக்கிறார்கள். இது ஏதோ தாலூக்காவுக்கு ஒருவர் அல்லது இரண்டு பேர்களுக்குத்தான் என்று கொடுக்கப்போகிறார்கள் என்றால் அது போதாது. தாலூகாவுக்குப் பலர், அல்லது பிர்க்காவுக்கு பத்துப் பேர்கள் என்று போடவேண்டும். அதோடு கூட, புறம்போக்கு நிலங்கள் நிறைய இருக்கிறது. அங்குள்ள கணக்கப் பிள்ளைகள் அவர்களுக்கு அது பற்றிய எந்தத் தகவல்களும் தருவதில்லை. பெரிய நிலச்சுவாந்தாரர்களுக்கே அவற்றைக் கொடுக்க உதவி செய்கிறார்கள். அவர்கள் கால்நடை மேய்க்கால் நிலமாகவோ, மற்றதற்காகவோ தெரியாது. ஆனால், ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி, ஹரிஜன மக்களுக்கு கிடைக்காமல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம், தாசில்தார்களுக்கு எழுதி, இன்னின்ன புறம்போக்கு இங்கிங்கே இருக்கிறது என்ற விவரங்களோடு கூடிய ரிப்போர்ட் ஒன்று அனுப்பச் செய்ய வேண்டும். அதன் பேரில், அங்கங்கே இருக்கும் ஹரிஜன விவசாயிகளுக்கு, அவற்றை பட்டா அல்லது அடமானம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் அரசாங்கம் இப்பொழுது ஹரிஜனங்களுக்கு பல சலுகைகளை காட்டி வந்தாலும் சில இடங்களில் அவர்கள் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். கல்விச் சலுகையை எடுத்துக் கொண்டால், அதற்கு ஸ்காலர்ஷிப்கள் வழங்குவதைப் பார்த்தால் சில ஜில்லாக்களுக்கு அதிகமாகவும் சில ஜில்லாக்களுக்குக் குறைவாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு ஜில்லாவுக்குக் கொடுக்கப்படுவது போன்று மற்ற ஜில்லாக்களுக்குக் கொடுக்கபட வேண்டும். கல்விச் சலுகையில் இந்த பாரபட்சம் எதற்கு என்று கேட்க விரும்புகிறேன். சாதாரணமாக ஸ்டேட் கமிட்டியில் இருக்கக் கூடியவர்கள் சொன்னால் டைரக்டர் ஸ்காலர்ஷிப்புகள் தாராளமாகக் கொடுக்கிறார்கள். ஆனால் என்னைப்போலுள்ளவர்கள் அதாவது ஸ்டேட் கமிட்டியில் இல்லாதவர்கள் சொன்னால் அவர்கள் கேட்பதாகவே இல்லை. போய் கேட்டால் காலதாமதம் ஆகிவிட்டது இனிமேல் கொடுக்க முடியாது என்று தட்டிக்கழித்து விடுகிறார்கள். அதன் மேல் என்னைப்போன்றவர்கள் கனம் அமைச்சர் அவர்களிடம் போய் சொன்னால் அவர்களும் டைரக்டரைப் போய்க் கேளுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் மெம்பர்கள்





போய் கேட்டால் போனை எடுத்து அடிஷனலாய்ச் சேர்த்துக் கொள்ளும்படி சொல்லுகிறார்கள். இப்படி மெம்பருக்கு மெம்பர் பாரபட்சம் காட்டப் படுகிறது. இப்படிப்பட்ட பாரபட்சம் இருக்கவே கூடாது.

ஹரிஜனங்களுக்கு கிணறுகள் வெட்டிக்கொடுக்கும் விஷயமாகவும் அவர்கள் பம்பு செட்டுகள் வைத்துக்கொள்ளும் விஷயமாகவும் பம்பு செட்டுகள் வாங்குவதற்கு கடன் வசதி செய்துகொடுக்கும் விஷயமாகவும் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி எல்லா வழிகளிலும் அவர்களுக்கு உதவி செய்து கொடுத்து அவர்களை நல்லமுறையில் முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri K. R. NALLASIVAM**: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பேசுவதற்குமுன் சில விஷயங்களை இந்தச் சபையின் முன் வைக்க நான் விரும்புகிறேன். நம்முடைய சர்க்கார் கடந்த 12 வருட காலமாக ஹரிஜன முன்னேற்றத்திற்கு அடிப்படையான எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமோ அதற்கு அதிகப்படியான கவனம் செலுத்தாமல் வேறு காரியங்களில் அதிகப்படியான கவனத்தைச் செலுத்திக்கொண்டுதான் வருகிறார்கள். என்னுடைய கையில் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பைப் பார்த்தால் ஹரிஜனங்களைப் பொறுத்த வரைக்கும் ஆலயப் பிரவேசச் சட்டம் கொண்டு வந்தும், தீண்டாமை ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்தும், பல கல்விச் சலுகைகளைக் கொடுத்தும், மற்ற சிலவற்றைச் செய்தும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே கல்விச் சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுதான் வருகிறது. இது இருந்த போதிலும் இந்தக் கல்விச் சலுகை ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் நிச்சயமாக ஹரிஜனங்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்தால்தான் உண்மையிலேயே அவர்கள் கல்வித் துறையில் கொடுக்கப்படும் சலுகைகளை உண்மையிலேயே பயன்படும்படி செய்து கொள்ளலாம். பொருளாதாரத்தில் சலுகைகள் கொடுக்காமல் கல்வியில் மட்டும் சலுகைகள் கொடுத்து வந்தால் எந்த விதத்திலும் அது அவர்களுக்கு பயனை உண்டாக்காது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

உதாரணமாக அருந்ததியர்கள் என்று சொல்லக்கூடியவர்களை எடுத்துக் கொள்ளுவோம். அருந்ததியர்கள் என்று சொல்வதற்கே எனக்கு மனம் வரவில்லை. அதாவது சக்கிலியர்கள் என்று சொல்லக்கூடியவர்கள். இவர்கள் ஹரிஜனங்களைவிட தாழ்த்தப்பட்டவர்களாகத் தான் இருக்கிறார்கள். அவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியவர்களாகத்தான் இருக்கிறார்கள். எங்கு சென்றாலும் அவர்களுடைய எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. ஆயிரத்திற்கு ஒருவர்கூட இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் எவ்வளவோ தாழ்த்தப்பட்டிருந்தாலும் அவர்களை கொஞ்சம் கூட கவனிப்பதாகவே இல்லை. அவர்களுக்கு என்று கொடுக்கக் கூடிய நிலங்கள் எவ்வளவோ இருக்கின்றன. சர்க்காருடைய புறம்போக்கு நிலங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளில் கொஞ்சமாவது அவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கொடுத்ததாகவே தெரியவில்லை. எந்த இடத்திலாவது கொடுத்திருக்கிறார்களோ என்று கேட்கிறேன். கேட்டால் அதைக் கொடுக்க அதிகாரிகள் முன் வருவதாகவே இல்லை. ஏன்? அது அவர்களுடைய அப்பன் வீட்டு நிலம் என்று கருதுகிறார்களோ என்னவோ? அப்படிப்பட்ட அரசாங்கத்தினுடைய நிலங்களை எடுத்து ஏன் அவர்களுக்குச் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். உண்மையிலேயே கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இப்படி எங்கேயாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பதில் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி அவர்களுக்கு நிலம் கொடுத்து அவர்களை பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையச் செய்தால்தான் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய கல்விச் சலுகைகளை அவர்களால் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆகவே அரசாங்கம் கல்விச் சலுகையில் கவனம் செலுத்தும்போது அவர்களுடைய பொருளாதாரத் துறையிலும் கொஞ்சம் கவனம் செலுத்தும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். சமீபத்தில் நிலச்

[Sri K. R. Nallasivam] [24th March 1960

சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப் போகிறார்கள். அதன்படி நிலங்களை பிரித்துக்கொடுத்த பிறகு மிச்சப்படும் நிலங்களை இப்படிப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி சில சமயங்களில் அவர்களுக்கு சலுகைகளைக் கொடுக்கும்போது, அது அரசியல் சட்டத்திற்கு புறம்பானதாக இருக்கிறது என்று ஆட்சேபிக்கப்படுகிறது. மற்றவைகளுக்கு நாம் அரசியல் சட்டத்தைத் திருத்திக்கொள்வது போன்று இதற்கும் அரசியல் சட்டத்தை திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு சுமார் 25 வருஷங்களுக்கு முன்னதாக "பிராமணர்கள் ஒழிக" என்ற ஒரு இயக்கம் நடத்தப்பட்டு வந்தது. பொதுவாக அது நமது ராஜ்யத்தைப் பொறுத்து நடந்து வந்தது. அது இன்றைக்கு ஓரளவு பலன் அடைந்துள்ளதாக இருக்கிறது. அதன் அடிப்படையில் உயர்ந்த ஜாதி ஒழிய வேண்டும் என்ற இயக்கத்தினால் பிராமணர்களுடைய உயர்வு குறைந்துபோய் ஜாதி ஹிந்துக்களில் உள்ள உயர்ந்த வகுப்புகள் தான் முன்னேற்றமடைந்திருப்பதைக் காணலாம். அந்த இயக்கத்தினால் எந்த விதத்திலும் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றமடைந்ததாகவே தெரியவில்லை. ஜாதி ஹிந்துக்கள் தான் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். அந்த இயக்கம் எந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதோ அது பயனடையவில்லை என்று தான் சொல்ல வேண்டும். பிராமணர்கள் தான் பின் தங்கி விட்டார்களேயொழிய ஜாதி ஹிந்துக்கள் தான் முன்னேற்றமடைந்திருக்கிறார்களேயொழிய தாழ்த்தப்பட்ட, ஹரிஜனங்கள் முன்னேற்றமடையவில்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆகவே அவர்களுடைய கோஷம் பயனடையவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இதற்குப் பல உதாரணங்கள் சொல்லலாம். சாதாரணமாக இன்றைக்கு நமது மந்திரி சபையில் எட்டு மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர் மந்திரியாக இருக்கிறார். ஹரிஜனங்களுடைய விகிதாச்சார அடிப்படையில் சட்ட மன்றத்திற்கு ஏதோ ஹரிஜனங்கள் வந்திருக்கிறார்கள் என்று சொல்லலாமேயொழிய அந்த அடிப்படையில் அதிகப்படியாக மந்திரி வரவில்லை. எட்டை ஒன்பதாக்கி இன்னொரு மந்திரியை நியமிக்கலாம் அல்லது எட்டைக் குறைத்து அதிகப்படியாக மற்றொரு ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவனை மந்திரியாக நியமிக்கலாம். அப்படிச் செய்தால் தான் உண்மையிலேயே பாராட்டக்கூடியதாக ஆகும்.

மற்றொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதைக் குறிப்பிட்டால் நிச்சயமாக ஜாதி ஹிந்துக்களிடையே சலசலப்பு ஏற்படத் தான் செய்யும். நிச்சயமாக நமது சர்க்காரிடத்தில் எதிர்ப்புதான் ஏற்படும். அதாவது பிராமணர் அல்லாதாருக்கு கோபம் வருவதற்கு இடம் ஏற்படும். நிச்சயமாக பின்தங்கிய வகுப்பாகிய தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வழி காண்பிக்க வேண்டும். அந்த வகையில் பட்ஜெட்டில் அவர்களுக்கு என்று மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று கோடி ரூபாயில் ஹரிஜன பின் தங்கிய ஜாதி முன்னேற்றத்திற்கு என்று ஒரு கோடி 77 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் அவர்களுடைய சமூக முன்னேற்றத்திற்கு என்றும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதாவது அது சம்பந்தமாக பல வேலைகளைச் செய்வதற்கு என்று. அந்தத் தொகை மிகவும் குறைவு என்று நான் கருதுகிறேன். இன்னும் அதிகப்படியான தொகை அந்த இனத்திற்கு ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பின் தங்கிய ஹரிஜனங்களில் 100 க்கு 90 பேர்கள் ஏழை விவசாயிகள். அவர்கள் எல்லோரும் விவசாயத்தையே நம்பி வாழக் கூடியவர்கள். இப்பொழுது நிலச் சீர்திருத்தம் வரப் போகிறது. அப்பொழுது அவர்களுக்கு முன் பாத்தியதைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக இந்த பன்னிரண்டு வருஷ காலமாக அவர்கள் எந்த விதத்திலும் முன்னேற்றமடைந்ததாகவே தெரியவில்லை. வேண்டுமானால் சட்ட



24th March 1960] [Sri K. R. Nallasivam]

சபையில் குறிப்பிட்ட அளவுக்கு அவர்களுக்கு ஸ்தானங்கள் கிடைத்து அங்கத்தினர்களாக வந்திருக்கிறார்கள். சட்ட சபைக்கு வருவதற்கு எந்த அளவுக்கு முன்னேற்றமடைந்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுடைய சமூகம் முன்னேற்றமடைந்ததாக இல்லை. ஆகவே அவர்களுடைய சமூகம் முன்னேற்றமடைவதற்கு அரசாங்கம் இரண்டு காரியங்களில் கவனம் செலுத்தவேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்று ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு உத்தியோகங்களில் அறுபது சதவிகிதம் என்று ஒதுக்கப்படவேண்டும். இதனால் ஜாதி ஹிந்துக்களுக்கு கசப்பு ஏற்பட்டாலும் பாதகமில்லை. பொருளாதாரத் துறையில் அவர்களுக்கு முன்னேற்ற சலுகைகள் கொடுத்தால் அவர்கள் படித்துவிட்டு உத்தியோகங்களுக்கு வருவதற்கு வசதியாக இருக்கும். அந்த முறையிலும் அவர்களுக்கு உத்தியோகங்களில் அறுபது சத விகிதம் கொடுத்து உதவ முன்வரவேண்டும். இப்பொழுது இருக்கிற நிலையைப் பார்த்தால் இன்னும் அவர்கள் ஐம்பது வருஷங்களிலாவது முன்னேற்றமடைவார்களோ என்று தோன்றவில்லை. என்னுடைய காலத்திற்குள் அவர்கள் முன்னேற்றமடைவார்களோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. எவ்வளவோ கிராமங்களில் இன்னும் அவர்கள் பின் தங்கியவர்களாகத் தான் இருக்கிறார்கள். சாதாரணமாக சட்டசபை அங்கத்தினர்களாக இருந்தால் அவர்கள் சுலபமாக ஜாதி ஹிந்துக்களுடன் பழகலாம். அப்படியே தான் ஒவ்வொரு விஷயத்திலும். ஹரிஜனங்கள் உத்யோகஸ்தர்களாக இருந்தால் அவர்களை எல்லா ஜாதி ஹிந்துக்களும் அணுகி பழகுகிறார்கள். ஆனால், சாதாரணமாக ஹரிஜனனாக இருந்தால் கிட்ட நெருங்க விடுவதில்லை. அதைப் போலவே தான் உத்தியோகங்களிலும். ஆகவே அவர்களுக்கு உத்தியோகங்களைக் கொடுத்தால் ஜாதி ஹிந்துக்கள் அவர்களுடன் சகஜமாகப் பழகுவதற்கு வசதியாக இருக்கும். வித்தியாசம் பாராட்டமாட்டார்கள். இன்றைக்கு ஓரளவு ஹரிஜனங்களுக்கு சலுகைகள் கொடுக்கிறோம். அவர்களும் சலுகைகள் பெற்றிருக்கிறார்கள். அதைப் போலவே சக்கிலியர்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு இன்றைக்கு கிணறு வெட்டிக் கொடுப்பது போன்ற காரியங்களில் கிராமங்களில் சிக்கல் இருக்கிறது. ஒன்றாக வெட்டிக் கொடுப்பது என்றால் யாரும் ஒப்புக்கொள்வதில்லை. அவர்களுக்குள்ளே ஆதித் திராவிடர்களில் ஹரிஜனங்கள், பள்ளர்கள்—எனக்கு இந்தப் பெயர்களெல்லாம் தெரியவில்லை—அவர்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் தொட்டுக்கொள்வதில்லை. ஒரு கிணறு வெட்டினால் அவர்களே ஒத்துக்கொள்வதில்லை. ஜாதி ஹிந்துக்களுக்கு மத்தியில் பிரசாரம் செய்யும் போது அவர்களுக்குள்ளேயே வித்தியாசம் இருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

அடுத்தபடியாக நான் கேட்டுக்கொள்வது பின் தங்கிய ஜாதியினருக்கு நிலச் சீர்திருத்த மசோதாவினால் உபரியாகக் கிடைக்கக்கூடிய நிலம் ரொம்ப ரொம்பக் குறைவாகத் தான் இருக்கும், அதுவும் 6-ம் தேதிக்குள் எல்லா நிலச்சுவர்ந்தார்களும் சக்தியுள்ள வரையில் இருக்கக்கூடிய நிலங்களை விற்று முடித்து விடுவார்கள், அப்படி இருந்தாலும் கிடைக்கக்கூடிய நிலம் சம்பந்தப்பட்ட வரையில் அவர்களுக்கு முன் பாத்தியதை கொடுக்க வேண்டும். புறம்போக்கு பட்டா கொடுப்பதில் அதிகாரிகள் கவனம் செலுத்துவது கிடையாது. என்னுடைய தொகுதியில் வடுகப்பட்டி என்ற கிராமத்தில் 400 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. சுமார் 100 குடும்பத்தினர் சிவாஜிமாவின் கீழ் உழுது வருகிறார்கள். இன்று வரையில் அவர்களுக்கு பட்டா கொடுப்பதில் நடவடிக்கை எடுக்கவில்லை. எல்லா இடங்களிலும் அதே மாதிரித் தான் இருக்கும் என்று நினைக்கிறேன். ஒன்று, புறம்போக்கு நிலங்கள் விஷயத்தில் அவர்களுக்கு முன் பாத்தியதை கொடுக்க வேண்டும். இரண்டு, நிலச் சீர்திருத்தத்தினால் அதிகப்படியாக இருக்கக்கூடிய நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதில் அவர்களுக்கு ஓரளவுக்குச் சலுகை கொடுக்க வேண்டும், மூன்று உத்தியோகத்தில் 60 சத விகிதம் அவர்களுக்கு கிடைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

[24th March 1960

* **SRI P. G. MANICKAM** : மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, இம்மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சர்க்காரானது இந்த வருஷம் ஹரிஜனங்கள் பேரில் மிகவும் பரிந்துகொண்டு அநேக நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். முக்கியமாக இன்றைய தினம் 60 லட்சம் ரூபாய் அதிகமாக ஹரிஜன முன்னேற்றத்திற்கு ஒதுக்கியிருப்பதைப் பார்க்கிறோம். அதற்கு சர்க்காரை நாம் பாராட்டவேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக, நிதி ஒதுக்குவதில் அக்கரை எடுத்து ஒதுக்கிய நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டுவது முக்கிய கடமையாகும். சர்க்கார் வருஷா வருஷம் ஹரிஜன முன்னேற்றத்திற்காக எவ்வளவோ நல்ல காரியங்களை நமது மாகாணத்தில் செய்துகொண்டிருக்கிறார்கள். மற்ற மாகாணங்களை விட நமது சென்னையில் தான் ஹரிஜன முன்னேற்றம் அதி வேகமாக நடக்கிறது என்று நான் சொன்னால் அது மிகையாகாது. இருந்தாலும் இன்னும் சில காரியங்களை முக்கியமாக நடத்தவேண்டியது அத்தியாவசியமாக இருக்கிறது. அதிலே மிக முக்கியமாகச் சொல்வது, மனிதனுக்கு நல்ல உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஆகிய மூன்றும் முக்கியமானது. இந்த மூன்றில் மிகவும் முக்கியமானது இருக்க இடம். இதை ஹரிஜனங்கள் அடைவதில் சக்கார் அதிக அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக இந்த பட்ஜெட்டில் $4\frac{1}{2}$ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் தீவிர சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஸ்பெஷல் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சர்வேயர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் காரியங்கள் தாமதமாகத் தான் நடக்கிறது. இதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். என்னுடைய கோயம்புத்தூர் ஜில்லாவிலே 321 காலனிகளில் வீட்டு மனைக்கட்டுகளுக்கு ஆர்ஜிதம் செய்ய விண்ணப்பங்கள் சர்க்காருக்கு அனுப்பப்பட்டன. 1959-ல் 31 கேஸ்கள் எடுக்கப்பட்டன. ஆனால் அவார்ட் பாஸ் செய்தது 3 தான். மற்றவைகள் இன்னும் நடவடிக்கையில் தான் இருக்கின்றன. இந்த நிலையில் காரியங்கள் போய்க்கொண்டிருக்கின்றன என்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 321 கேஸ்களில் என்னுடைய தொகுதியைப் பற்றியது 71 கேஸ்கள். இந்த 71-ல் இது வரையில் இரண்டொரு இடங்களில் கூட ஆர்ஜிதம் ஆகாமல் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால், அங்கு இருக்கும் கலெக்டர் அவர்கள் மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். சிரத்தை எடுத்து 19-10-1959-ல் ஜில்லா ஹரிஜன் வெல்பேர் கமிட்டி மீட்டிங்கில் ஜாபிதா தயாரித்து சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார். அதில் 26 கேஸ்களுக்கு 83 எக்கர் 23 செண்ட் நிலம் ஆர்ஜிதம் செய்து 1024 குடும்பங்களுக்கு வீட்டு நிலம் வாங்க 1,42,465 ரூபாய்க்கு ஒரு லிஸ்ட் அனுப்பப் பட்டிருக்கிறது. ஜில்லா ரீதியில் அதற்கு எல்லாவித சடங்குகளும் முடிந்து விட்டது. பாக்கியுள்ள சடங்கை இங்கேயிருக்கிற சர்க்கார் தான் நிறைவேற்ற வேண்டும். அதற்கு பணம் சாங்ஷன் செய்ய வேண்டும். ஆகையால் இதை உடனடியாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக நிலம் வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமானால் என்னுடைய தொகுதியிலும் சில காலனிகளுக்கு நிலம் கிடைக்கும், அப்போது ஹரிஜனங்கள் சந்தோஷமாக இருப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதிலே சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் 36 இடங்கள் ஜாதி ஹிந்துக்களின் பட்டா நிலங்கள் இருக்கின்றன. இதைப்பற்றி இந்தக் கூட்டத்திலல்லாமல் கடந்த இரண்டு வருஷ காலமாக இதைப் பற்றித் தெரியப்படுத்தியிருக்கிறேன். ஆனால் ஒரு காரியமும் நடந்ததாகத் தெரியவில்லை. ஹரிஜன் வெல்பேர் டிபார்டுமெண்டில் தீர்மானம்போட்டு சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மாகாண வெல்பேர் கமிட்டி மீட்டிங்கில்

**That this Committee request the Government to issue necessary instructions not to cut such of those Harijans who are already occupying private patta lands without prior sanction of the Government."**



24th March 1960] [Sri P. G. Manickam]

என்று தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பியபோது என்ன தெரிவித்திருக்கிறார்கள் என்றால்

"Special legislation will have to be undertaken for this purpose"

என்று. ஆனால் சர்க்கார் இங்கு கொடுத்திருக்கிற ஹரிஜன நலத் துறை பற்றிய குறிப்பிலே என்ன தெரிவித்திருக்கிறார்கள் என்றால் "வேறொரு இடத்தில் மனைக்கட்டு வழங்கப்படும் வரையில் அவர்களை வெளியேற்றுவது நிறுத்தப்படுகிறது" என்பது. இதனுடைய அர்த்தமே புரியவில்லை. சர்க்கார் நிறுத்தப்படுகிறது என்று சொல்லுகிறார். என்னுடைய தொகுதியில் கேஸ் நடந்தது, கோயம்புத்தூர் ஜில்லாவிலே 8 கேஸ்கள் போய் கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டா நிலங்களில் 10, 20, 30 வருஷங்களாக இருந்து அனுபவித்து வரும்போது இந்த இடங்கள் அவர்களுக்கே கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். அல்லது ஹரிஜன காலனிகளை வேறொரு இடத்தில் அமைப்பதானால், வேறொரு இடம் கொடுக்கப்படுகிற வரையில், ஆர்ஜிதம் செய்யும் வரையில் வெளியேற்றக்கூடாது என்று ஒரு சட்டம் இயற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த நில ஆர்ஜிதத்திற்கு ஒரு சட்டம் ஏற்படுத்தப் போவதாகக் கேள்விப்படுகிறேன். இதைப் பற்றி 2 அல்லது 3 நாட்களுக்கு முன்பு சட்ட சபைக் கூட்டத்தில் கேட்டோம். அப்போது அமைச்சர் பதிலளிக்கும்போது டிபார்ட்மெண்டில் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு சட்ட சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று சொன்னார்கள். நில ஆர்ஜித சட்டத்தைத் திருத்துவது பற்றி தனியாக இந்திய அரசாங்கம் கவனித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி திருத்தும்போது முக்கியமாக கவனிக்கவேண்டியது எந்த நிலத்தை சர்க்கார் ஹரிஜனங்களுக்கு ஆர்ஜிதம் செய்யத் தேர்ந்தெடுக்கிறார்களோ அந்த நிலத்தை அவர்களுக்கு கண்டிப்பாகக் கிடைக்க வசதி செய்ய வேண்டும். இப்போது ஒரு நிலத்தை தேர்ந்தெடுத்தால் நிலச் சொந்தக்காரர் என்ன செய்கிறார் என்றால் அங்கே ஒரு கிணறை வெட்டிப் போடுகிறார், சிறு பாதைகளைப் போட்டு விடுகிறார். இம்மாதிரி ஏதாவது செய்து ஹரிஜனங்களுக்குக் கிடைக்காமல் செய்து விடுகிறார்கள். ஆகையால் சர்க்காரினால் வீடு கட்டிக்கொடுப்பதற்கென்று ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களுக்கு கண்டிப்பாகக் கிடைக்கக்கூடிய வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும். இதில் கூட 4(1) நோட்டிபிகேஷன், 6 (1) நோட்டிபிகேஷன் எல்லாம் சென்னையில் வந்து சர்க்காரால் நடக்கவேண்டியிருக்கிறது. அதாவது இந்த நோட்டிபிகேஷன் எல்லாம் போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் வெளியாக வேண்டும என்று இருக்கிறது. ஜில்லா கெஜெட்டில் பதிவு செய்து ஜில்லா கலெக்டரே நடவடிக்கை எடுக்க வசதி செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

12 noon.

அடுத்தபடியாக பொது சுகாதாரம். இதிலே நமது சர்க்கார் மிகவும் அக்கரை கொண்டு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். பொது சுகாதாரத் துறையிலே தற்போது முக்கியமாக ஜில்லாக்களில் நடைபெற்று வருவது கிணறுகள் வெட்டுவது தான். இதற்காக ஜில்லாக்கள் தோறும் ரூரல் காம்ப்ரெஹென்ஸிவ் ஸ்கீம் இருக்கிறது. போதுமான வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் நான் சர்க்காரை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையிலிருந்து ஹரிஜனங்களுக்கு வேறு நல்ல காரியங்களையும் செய்யலாம். என் தொகுதியில் ஏறக்குறைய 24 இடங்களில் ஹரிஜனங்களுக்கு சுடுகாடுகள் இல்லை. இது சம்பந்தமாக ஹரிஜன நல இலாகாவுக்கு எழுதியிருக்கிறேன். என் பிராந்தியத்தில் வேறு சில பகுதிகளில் 35 இடங்களில் அவர்களுக்கு சுடுகாடு இல்லை. எனவே இந்தப் பணத்தொகையை சுடுகாடுகள் கட்டிக் கொடுத்தல் போன்ற பல காரியங்களுக்கு செலவிடலாம். காம்ப்ரெஹென்ஸிவ் ரூரல் வாட்டர் ஸப்ளை ஸ்கீம் கிணறுகளை வெட்டும் வேலைகளை கலெக்டர் நிறைவேற்றலாம். இந்தப் பணத்தொகையில் ஹரிஜனங்களுக்கு நடைபாதைகள், சுடுகாடுகள் முதலியவைகளை அமைத்துக்கொடுக்கலாம்.

[Sri T. T. Daniel] [24th March 1960

I find that so far as Madras State is concerned, the house sites are registered in the name of the Harijans. This seems to be the policy in all other districts except Kanyakumari District, where house-sites are registered not in the names of the Harijans but are only given on a perpetual lease basis. I wish that the Government should extend this policy which is prevalent in the case of other districts to the transferred territory also.

Then coming to the disposal of educational concession applications, it is well known that there is considerable delay. They are unable to get the concession in time and so they are put to lot of anxiety. Of course, it is a fact that enormous applications are received by the District Welfare Officers in this regard.

So far as these applications are concerned, for the college students, these can be disposed of by the Collector, for the high school students by the District Educational Officer and for the primary and middle schools by the Inspector of Schools and also the Welfare Officer. If such a kind of change is introduced, I think they will be able to get their concessions in time. In the awarding of scholarships also, I find that nearly Rs. 23 lakhs of rupees are allotted under this head in the Budget. But on a perusal I find that a sum of about Rs. 14 lakhs is allotted for backward communities and only about Rs. 9 lakhs is allotted for Scheduled Castes and Hill Tribes. I think that our Government should make a recommendation to the Central Government that the allotment for the Scheduled Castes and Hill Tribes should be larger than the allotment that is made for backward communities.

Then, Sir, in awarding scholarships, at present scholarships are given only if the Harijans are staying in hostels. If they stay in their own houses and sutdy, scholarships are not given. I would suggest that scholarships should be given to all Harijan students whether they are staying in the hostels or in their own houses.

Also, scholarship should be given on the basis of merit. That must be the criterion which the Government should have in their mind when they award scholarships for Harijan students. At present I hear that Harijan students who have secured above 360 marks are not given scholarships whereas Harijan students who have secured 35 per cent marks are awarded scholarships. I think it must be the policy of the Government to give scholarships on the basis of merit. Then only Harijan students who have got special aptitude and talent would be really benefited.

Then, Sir, I would like to submit that so far as the Slater Hostel in the Madras City is concerned, I understand that proper representation in the matter of admissions, is not given to Ramanathapuram, Tirunelveli and Kanyakumari districts. I request the Government to see that proper representation for these three districts in the matter of admissions to this hostel is given every year.



24th March 1960] [Sri T. T. Daniel]

I would also like to say that there is a community called 'Chemman' community which was included in the list of Scheduled Castes before the Transferred Territory was added on to the Madras State. But unfortunately this community has not been included in that list after its merger. We have sent a Memorandum to the Government requesting them to include this community in the list of Scheduled Castes and pass an order as early as possible. For the last three years, they did not get any benefit which the Scheduled Castes are entitled to.

Sir, at present Harijan students have to pay their examination and college fees and therefore many of them are unable to pay their examination and college fees at the time when they have to sit for their examinations. At present a Harijan student has to pay the fees first and then get refund. That also must be changed and the Government should exempt Harijan students from paying the examination fee for the S.S.L.C. Examination and college examination fees.

So far as Christian Harijans are concerned, I would say a word. In the provisions of the Constitution, it is clearly laid down that there shall not be any discrimination on grounds of religion. Simply because Harijans become converts to other religions, they should not lose the concessions which their Hindu brethren are entitled to. As already pointed out by the hon. Member, Sri Lazar, that even after conversion, socially, economically and politically, these Christian Harijans are also as backward as their Hindu brethren. So, when this matter comes up before the Central Government for discussion, I think the Hon. Minister will point out that such a kind of discrimination should not exist in a secular State and that all the Harijans irrespective of the religion to which they belong, should be entitled to all the concessions.

(Sri A. Govindasamy in the Chair.)

So far as Budget provisions are concerned, a large amount has been allotted for housing schemes. Rs. 31·1 lakhs have been allotted for the housing scheme. For construction of houses, under the present scheme, Rs. 500 is given as subsidy by the Government and the Harijans will have to pay Rs. 250. Many poor Harijans are unable to get the benefit of this scheme because they are not in a position to pay their contribution of Rs. 250. Therefore, I would request the Government to represent these difficulties of Harijans to the Central Government so that they may make some modification in the scheme and especially the poor Harijans may also get the benefit under the housing scheme.

It is also found that in certain years, the Central Government aid for the purchase of bulls has not been utilised completely. I think that at least in the future the Government would see that all the Central aid which will be made available to the State Government for the benefit of Harijans is availed of completely.

[24th March 1960

**SRI M. P. SUBRAMANIAM :** தலைவர் அவர்களே, ஹரிஜன இலாகா மானியத்தின் மேல் கொண்டு வரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஆதித்திராவிட சமூகத்தார்கள் இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறி விட்டார்கள் என்றால் அவர்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டு ஆதி திராவிடர் மக்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைக் கொடுப்பதில்லை. அவர்கள் எந்த விதத்திலும் இந்து மதத்திலே உள்ள ஆதித் திராவிடர்களை விட உயர்ந்து விடவில்லையென்பதை இந்தச் சட்டசபையிலே பல தடவை உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருந்து வந்த உறுப்பினர் அவர்களும், ஆரம்பத்திலே பேசிய லால்குடி உறுப்பினர் அவர்களும் தக்க ஆதாரத்தோடு, ஒப்புக்கொள்ளும் வகையில் எடுத்துச் சொன்னார்கள். இந்த விஷயம் பற்றி பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏதோ மதம் மாறிவிட்டார்கள் என்பதற்காக இந்தச் சலுகைகளைக் கொடுப்பதில்லை என்பது உண்மையிலேயே மிகவும் கொடுமையானது. இந்திய அரசியல் சட்டத்தில் ஜாதி மத அடிப்படையில் பாகுபாடு கூடாது என்று சொல்லும்போது மதம் மாறிய காரணத்தினால் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படவில்லையென்றால், கிறிஸ்தவ மதத்திற்குப் போனவர்களை இந்து மதத்திற்கு வா என்று கட்டாயப்படுத்துவதற்கு ஒப்பாகும் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாகவே நம்முடைய நோக்கம், சில பழங்குடி மக்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் இருப்பவர்கள், உயர்த்தப்படவேண்டும் என்பது தான். கிருஸ்துவ மதத்திற்கு மாறிவிட்ட காரணத்தால் அவர்களுடைய அந்தஸ்து உயர்ந்துவிட்டது என்று சொல்ல முடியாது. உடையார்கள் உடையார்களாகத்தான் இருக்கிறார்கள். ஆதித் திராவிடர்கள் ஆதித் திராவிடர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, மதம் மாறிய காரணத்தால் அவர்களுடைய அந்தஸ்து சமுதாயத்தில் உயர்ந்து விட்டது என்ற காரணம் காட்டி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கும் சலுகை இல்லை என்பது பொருத்தமாகாது. ஆகவே, இந்த முறையைத் தீவிரமாக ஆலோசித்து, மத்திய அரசாங்கத்தின் குறுக்கீடு இருந்தால், அவர்களுக்கும் எடுத்துச் சொல்லி, மதம் மாறிய அவர்களுக்கும் விதி விலக்குக் கொடுத்து அவர்களுக்கும் சலுகைகள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், குடியிருப்பு வசதிகளைப் பொறுத்த வரையில்கூட, ஹரிஜன நல அதிகாரியை அவர்களுக்கும் மனைக்கட்டு வாங்கிக்கொடுக்கும்படி கேட்டால், "அவர்களுக்கு அந்தத் தகுதி கிடையாது; காரணம் அவர்கள் ஜாதி இந்து ஹரிஜனனல்ல" என்று மறுக்கப்படுகிறதென்று சொன்னால், அது உண்மையிலேயே வருந்தத்தக்கது.

**THE HON. SRI P. KAKKAN :** மதம் மாறிய ஆதித்திராவிட ஹரிஜன மக்களுக்கெல்லாம் குடியிருப்பு மனைக்கட்டுகள் வாங்கிக்கொடுக்கும் விஷயத்திலே அரசாங்கம் சலுகை கொடுக்கிறது.

**SRI M. P. SUBRAMANIAM :** வீடு கட்டுவதற்கு மான்யம் தருவதில்லை. ரூ. 550 அரசாங்கம் கொடுத்து ரூ. 200 குடியிருக்கப் போகிறவர்கள் போட்டுக் கட்டிக் கொள்ளட்டும் என்று சொல்லுகிற அந்தச் சலுகைகள் இவர்களுக்குத் தரப்படுவது இல்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, மிக முக்கியமாக தீண்டாமை ஒழிப்பைப் பற்றி பல ஆண்டுகாலமாகப் பேசி வருகிறோம். அதைப் பற்றி அமைச்சர் அவர்களும் தங்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே கிராமப்புறங்களில் தீண்டாமை எள்ளளவும் குறையவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏதோ 1958–59-ம் ஆண்டில் 70 வழக்குகள் தொடரப்பட்டு, அதிலே 26 வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பல வழக்குகள் தொடரப்பட



24th March 1960] [Sri M. P. Subramaniam]

முடியாமல் இருக்கின்றன. எங்கள் வட்டாரத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள், தீண்டாமைக் கொடுமையினால் பாதிக்கப்பட்ட மக்கள், சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குகள் தொடர்வார்களானால், அவர்கள் மேலும் எந்த அளவு கொடுமைக்கு உள்ளாக நேரிடுமோ என்ற பயத்தினால் வழக்குத் தொடரத் தயக்கப்படுகிறார்கள் என்பதை எங்கள் வட்டாரத்தில் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறோம். ஹரிஜனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இது விஷயத்தில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தீண்டாமையை ஒழிப்பதற்கு துணை சேவக்குகள் (டெபுடி சேவக்குகள்), பாடுவதற்கும் பஜனை செய்வதற்கும் பாடகர்கள் நியமித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் எங்கள் பகுதியில் வேலை செய்கிறார்களா என்று பார்த்தால், இவர்கள் எங்கே வேலை செய்கிறார்கள், எப்படி வேலை செய்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவே முடியவில்லை. இருக்கும் டெபுடி சேவக்குகளும், பாட்டு பாடக் கூடியவர்களும், பஜனை செய்கிறவர்களும் எப்படி இருக்கிறார்கள் என்றால், காங்கிரஸ் கட்சிக்குப் பிரசாரம் செய்வதற்கும், ஆட்சியில் உள்ளவர்கள் தயவினால் கிடைத்த சம்பளம் என்று நினைத்து, கட்சிப் பிரசாரத்திற்குத் தான் இயங்குகிறார்களே தவிர, உறுதியாகவும், உண்மையிலேயும், தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்பதிலே அக்கறை செலுத்துகிறார்கள் என்று நான் நினைப்பதற்கு வழி வகை இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்க்கட்சியில் இருக்கிறேன் என்பதற்காக நான் இதைக் குற்றச்சாட்டாகக் கூறவில்லை. ஆனால், நான் என் தொகுதியில் ஏழு ஆண்டுகளாகச் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தும், அங்கே இருக்கும் டெபுடி சேவக்குகள் இதுவரை என்ன வேலை செய்கிறார்கள், எப்படி வேலை செய்கிறார்கள் என்று தெரியவில்லை. எங்களோடு தொடர்பு கொள்ளுவதற்குக்கூட அவர்களால் முடியவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் அவர்கள் செய்யும் வேலை என்னவென்றால், மாடு பிடித்துக்கொடுக்க விண்ணப்பம் வாங்குவது போன்றது. விண்ணப்பங்கள் கொடுங்கள் என்று கேட்டு, இரண்டு ரூபாய் வாங்கிக்கொள்ளவேண்டுமென்கிற சுயநலம் இருக்கிற காரணத்தால்தான் செய்கிறார்களே தவிர தீண்டாமையை ஒழிப்பதில் அக்கறை செலுத்துகிறார்கள் என்றோ, எல்லோருடைய ஒத்துழைப்பையும் நாடுகிறார்கள் என்றோ சொல்ல முடியாது.

மாதத்திற்கு ஒரு முறை, 30-ம் தேதி, ஹரிஜன் டே செலிப்ரேஷன் என்று போட்டுக்கொண்டு வருகிறார்கள். எனக்குத் தெரிந்தவரை, இரண்டு ஆண்டுகளாக ஹரிஜன் டே செலிப்ரேஷன் என்று கொண்டாடுவதில் அங்குள்ள அதிகாரிகள் அக்கறை செலுத்துகிறார்களா என்று பார்த்தால், சட்ட மன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு மாதந்தோறும் எந்த எந்த இடங்களில் ஹரிஜன தினம் கொண்டாடப்படுகிறது என்பதற்கு அறிக்கை வரும், அந்த அறிக்கை கூட இப்பொழுது வரவில்லையென்றால், தீண்டாமை ஒழிந்து விட்டது, இனி ஹரிஜன தினம் கொண்டாட அவசியம் இல்லை என்ற நிலை வந்துவிட்டதென்று நினைப்பார்களானால் உண்மையிலேயே இந்தச் சட்டம் நல்ல முறையிலே அமுலாக்கப்படவில்லை என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக பல சந்தர்ப்பங்களில் நான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன் மாவட்ட வெல்பேர் கமிட்டிகள் பற்றி. அதாவது, ஹரிஜன நல இலாகா சம்பந்தப்பட்ட கமிட்டியில், அதிலே உள்ள உறுப்பினர்களைப் பார்த்தால் அதில் எதிர்ப்பாளர்கள் யாரையும் போடுவதில்லை. காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாளர்களாக இருந்தால்தான் உறுப்பினர்களாக இடம் பெறுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாத ஜாதி இந்துக்கள் ஒத்துழைத்து வேலை செய்வதற்கு வசதியும் வாய்ப்பும் இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN :** இப்பொழுது இங்கே தலைவராக இருக்கும் கனம் திரு. கோவிந்தசாமி அவர்கள்கூட தென்னாற்காடு மாவட்ட கமிட்டியில் உறுப்பினராக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

[24th March 1960

**Sri M. P. SUBRAMANIAM** : இப்பொழுது சட்ட மன்றத்தில் தலைவராக விளங்கும் கனம் திரு. கோவிந்தசாமி அவர்கள் உறுப்பினராக இருக்கலாம். ஆனால், மாவட்ட அமைப்புகளில பார்த்தால் பல இடங்களில் இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். அங்கேயுள்ள அமைப்புகளில் இருக்கிறவர்கள் மக்களோடு தொடர்பு கொள்ள வழிவகை இல்லாமல் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ஒரு மாதத்திற்கு முன்பு இங்கு சென்னையிலிருந்து டெவலப்மெண்ட் கமிஷனர் ஆத்தூருக்கு வந்திருந்தார். ஹரிஜன நல இலாகா மூலமாக பழங்குடி மக்களுக்குச் சில திட்டங்கள் நிறைவேற்ற அரசாங்கத்திற்குத் திட்டம் இருக்கிறது என்பதைப்பற்றி சட்ட மன்ற உறுப்பினருக்குக்கூடத் தெரிவது இல்லை. ஆனால், ஆளும் கட்சியிலுள்ள ஒருவர் அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் காரணத்தால் வெளிவராத விஷயங்களைக்கூட தெரிந்துக் கொள்வதற்கு அவருக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவானேன் என்று எண்ணக்கூடிய அளவுக்கு அதிகாரிகள் தூண்டப்படுகிறார்கள். அதிகாரிகளை நான் குறை கூறவில்லை. என்ன எண்ணம் அதிகாரிகளுக்கு வளருகிறது என்றால் ஹரிஜன நலக் குழு அளவில் உள்ளவர்களெல்லாம், ஆளும் கட்சிக்குச் சாதகமாக வேலை செய்வதுதான் தங்கள் கடமை, எந்த விதத்திலும் எதிர்க்கட்சியினரோடு தொடர்பு கொள்ளக்கூடாது என்ற எண்ணம் இருக்கிறது. எதிர்க்கட்சியினரோடு தொடர்பு கொண்டால்கூட உத்தியோக உயர்வுக்கு ஆபத்து வந்துவிடுமோ, அமைச்சராலோ மற்றவர்களாலோ என்று எண்ணக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் அதிகாரிகளைச் சந்தித்து, நான் சொல்கிற காரியங்களைக் கவனித்தால்தான் சரி, இல்லாவிட்டால் அமைச்சரிடம் கூறி உன்னை ஒழித்துவிடுகிறேன் பார் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருப்பதால், அதிகாரிகள் கட்சி வேறுபாடு இல்லாமல் பணியாற்ற முடியவில்லை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் நான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். இவ்வாண்டும் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது ஒவ்வொரு வட்டாரத்திலும் வீடில்லாத ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு வழங்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் வேண்டுமானால் புஞ்சை நிலம் இல்லாமல் இருக்கலாம், நஞ்சை நிலத்தையே கொடுக்கவேண்டியிருக்கலாம், நிலம் கிடைப்பதிலேயும் கஷ்டங்கள் இருக்கலாம். ஆனால், சேலம் போன்ற வறண்ட பகுதியிலே கூட மனைக்கட்டுகள் அவர்களுக்கு ஒதுக்குவதில்லை. சேலம் மாவட்டத்தில் மனைக்கட்டுகள் கொடுப்பதிலே எந்தவிதமான கஷ்டமும் இருக்க முடியாது. ஆத்தூர் தாலூகாவிலே ஐந்தாறு ஆண்டுகளாக மனைக்கட்டுகளுக்காக வேண்டி மனுக்கள் எழுதிக்கொடுத்திருந்தாலும், போதிய கவனம் அங்கே உள்ளவர்களால் செலுத்தப்படவில்லை. அதற்கு நேரம் இல்லை, போதிய சிப்பந்திகள் இல்லை என்ற காரணமாக இருக்கலாம். ஆனால், கவனிக்கப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவைகள் கவனிக்கப்பட வேண்டும்.

சேலத்திலுள்ள மாவட்ட நல அதிகாரிக்குக் கீழே தாசில்தார் நிலையில் நில ஆர்ஜிதம் செய்வதற்காக ஒருவரைப் போடப்போவதாக கேள்விப்பட்டேன். ஆனால், இன்னும் போடவில்லை. ஒவ்வொரு வட்டாரத்திலேயும் 30, 40 கிராமங்கள் இருக்கும். ஹரிஜனங்களுக்குக் குடியிருப்பு சம்பந்தமாக, மாவட்டம் முழுவதும் எவ்வளவோ வேலை இருக்கலாம். அதற்குத் தகுந்த ஆட்கள் நியமிக்கப்படவேண்டும். பல மாவட்டங்களில் அப்படி நியமிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், சேலம் மாவட்டத்தில் நியமிக்கப்படவில்லை, அங்கு நில ஆர்ஜிதம் செய்வதற்காக உறுதியாக ஒரு அதிகாரி நியமிக்கப்படவேண்டும்.

வெல்பேர் அதிகாரி ஒருவர் மாதம் 20 நாள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். ஏதாவது ஒரு தகவல் வேண்டி அலுவலகத்திற்குச் சென்றால், பொறுப்பான முறையில் தகவல் சொல்ல யாரும் அங்கே இல்லை. குமாஸ்தாவைக் கேட்டால், "வெல்பேர் ஆபீசர் சந்தைக்கு மாடு வாங்கப் போயிருக்கிறார். சுற்றுப்பிரயாணம் போய்விட்டார்" என்று இதுபோன்று சொல்லப்



24th March 1960] [Sri M. P. Subramaniam]

படுகிறது. இதனால் தகவல் தெரிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே, பொறுப்பான முறையில் பொதுமக்களின் சார்பாக அங்கு செல்பவர்களுக்கு விஷயங்களை எடுத்துச்சொல்வதற்குத் தகுந்த அதிகாரி தாசில்தார் அந்தஸ்திலாவது உறுதியாக ஏற்படுத்தவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN** : ஒவ்வொரு ஜில்லா ஹரிஜன நல அதிகாரியின் கீழ் தாசில்தார் கிரேடிலே ஒருவர் வேலை செய்யவேண்டியது அவசியம். ஹரிஜன நல அதிகாரி சுற்றுப்பிரயாணம் செய்யும்போது பொறுப்பாக அலுவலகத்தில் ஒருவர் இருக்கவேண்டுமென்று கருதி, அவ்வாறு நியமிக்கப்படுகிறது.

**Sri M. P. SUBRAMANIAM** : இனிமேல் செய்வார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடியதுதான். அதிலே அக்கறை செலுத்தவேண்டுமென்பதை நான் கூறிக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன மாணவர்களுக்கு விடுதிகள் வேண்டுமென்று பல இடங்களிலிருந்து மனுக்கள் வந்திருக்கின்றன. சில மாவட்டங்களில் ஏராளமாக விடுதிகள் திறந்திருக்கிறார்கள். சில மாவட்டங்களில் குறைவாக இருக்கின்றன. சேலம் மாவட்டம் போன்ற பின்தங்கிய பகுதிகளில் விடுதிகள் திறக்கவேண்டுமென்றால், அரசாங்கத்தின்கொள்கை மெதுவாகத்தான் இருக்கிறது. ஏற்கனவே தனிப்பட்டவர்கள் நடத்தும் விடுதிகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டுவரும் காரணத்தால், புதிய விடுதிகளை அதிகப்படியாகத் திறக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஹைஸ்கூல் இருக்கும் ஒவ்வொரு இடத்திலும் இதைப்போன்று வீடுகள் மிகவும் அவசியம். அங்கே படிக்கின்ற மாணவர்கள், 7, 8 மைல் தூரத்திலிருந்து தினந்தோறும் வரவேண்டுமென்றால் அது முடியாத காரியம். ஆகவே விடுதிகளில் தங்கிப் படிக்க வேண்டியது அவசியம். பெரும்பாலான மாணவர்களுக்கு விடுதிகளில் இடம் கிடைப்பதில்லை. மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் படிக்க வருகிறார்கள். ஆனால், போதுமான இட வசதி விடுதிகளில் இல்லை. குறிப்பாக எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களிடம் வந்து, எங்களுடைய சிபார்சுகளைப் பெற்றாலாவது விடுதிகளில் இடம் கிடைக்குமா என்று முயற்சி செய்கிறார்கள். அந்த அளவு மாணவர்கள் படிக்க முன் வரும்போது, எவ்வளவு கூடுதலான இடம் வேண்டுமோ அந்த அளவுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அதற்காக ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய் அதிகம் செலவானாலும் சரி, அதைப் பொது மக்கள் வரி மூலமாகக் கொடுக்கத் தயாராயிருப்பார்கள். விடுதிகளில் தங்கிப்படிக்க விரும்பும் மாணவர்களுக்கு இடமில்லை என்ற நிலை ஏற்படாதிருக்கும்படி செய்யக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பின்தங்கிய சமூகத்தினருக்கு ஸ்காலர்ஷிப் — உபகாரச் சம்பளம்— கொடுக்கும் சலுகை முக்கியமானது. இது போதிய அளவு கிடைக்கவில்லை என்று பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதுவும் உரிய காலத்தில் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு மார்ச் மாதம்தான் கொடுக்கப்பட்டது. பத்து மாதங்களுக்கு அங்கே கஷ்டமாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தருகிறார்கள். மிக விரைவில் அளிக்க ஏற்பாடு செய்வதில் என்ன தடை இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நிர்வாக முறையில் தடை இருந்தால், அதை நீக்க வேண்டும். போதிய அதிகாரிகள் தேவையென்றால், போதிய அதிகாரிகளை வழங்க வேண்டும். அதிலே அக்கரை செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக ஆதிவாசிகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற 12-30 p.m.
விரும்புகிறேன். ஆதிவாசிகள் பெரும்பாலும் கவனிக்கப்படவில்லை என்ற நிலை இருக்கிறது. எனது ஆத்தூர் தொகுதியில் ஏறக்குறைய 30,000, 40,000 மலைஜாதி மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் செய்துகொடுக்கப்படாத நிலைமை இருக்கிறது. அவர்களைச் சந்திப்பதற்குக்கூட போக்குவரத்து வசதி கிடையாது. அவர்களைச் சந்தித்து

பல காரியங்கள் செய்யவேண்டுமென்றால், போவதற்கு பாதைகள் கிடையாது. பாதைகள் போடவேண்டுமென்று பல முறை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். இது வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் உரையிலே 1960–61-ம் ஆண்டில் ஆதிவாசிகள் இருக்கக்கூடிய பகுதிகளுக்கு ரோடுகள் போடுவதற்கு ரூ. 20,000 ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த ரூ. 20,000 வைத்துக் கொண்டு எத்தனை மைல் பாதை போட்டுவிட முடியும்? தமிழ் நாட்டிலுள்ள ஆதிவாசிகள் இருக்கும் இடங்களுக்கெல்லாம் பாதைகள் போட்டுக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், உண்மையிலேயே இது கடுகு அளவுக்குக்கூட பயன்படாது. என்னுடைய தொகுதியில் ஒரு 20, 30 மைல்களுக்காவது பாதைகள் போட்டால்தான் மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்குச் சென்று நாம் ஏதாவது செய்ய முடியும். 7, 8 ஜில்லா போர்டு பள்ளிகள் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அந்த பள்ளிகள் வேலை செய்கின்றனவா, இல்லையா என்று பார்ப்பதற்கு ஆள் இல்லை. பல ஆசிரியர்கள் கீழே இருந்துகொண்டு சம்பளத்தை வாங்கிக்கொண்டு பள்ளிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையாகவே பள்ளிகள் நடக்கின்றனவா, இல்லையா என்று பார்ப்பதற்கு வழிவகை இல்லை. அவர்களுக்கு முதல் சலுகையாக போக்குவரத்திற்கு பாதைகள் போட்டுக்கொடுத்துவிட்டு, பின்னால் மற்ற வசதிகளைச் செய்யவேண்டும். அவர்களுக்கு மலைப் பகுதியில் ஒரு உணவு விடுதி வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். ஆனால், சேலத்தில் ஏர்க்காட்டிலும், கொள்ளிமலையிலும் ஏற்கனவே இரண்டு விடுதிகள் இருக்கின்றன. ஆதலால் மூன்றாவதாக ஒரு விடுதி ஏற்படுத்தமுடியாது என்று அதிகாரிகள் அந்தக் கோரிக்கையை புறக்கணித்துவிட்டார்கள். ஆதிவாசிகளுக்கு நாம் செய்கின்ற காரியங்கள் மிகவும் குறைவு. அந்த பகுதியிலுள்ள மக்களுக்கு ஒரு விடுதி வேண்டுமென்று சொன்னால், மாவட்டம் பூராவுக்கும் இரண்டு விடுதிகள் இருக்கின்றன. ஆகையினால் மூன்றாவது விடுதி ஏற்படுத்துவதற்கில்லை என்று சொல்லுவது சரியல்ல. கல்வராயன் பகுதியில் ஆதிவாசிகள் குழந்தைகளுக்கு ஒரு உணவு விடுதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நான் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் எவ்வளவுதான் வசதிகள் செய்துகொடுக்க முற்பட்டாலும், அவர்களுடைய பொருளாதார நிலைமை உயர்ந்தால்தான் தீண்டாமை ஒழியும். கல்விச் சலுகை அல்லது உத்தியோகம் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. உண்மையிலேயே அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். ஜாதி இந்துக்களின் தாட்சண்யத்திற்கு உட்பட்டிருக்கும் வரையிலே அவர்கள் எந்த விதத்திலும் முன்னேற முடியாது. அவர்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட ஆரம்பித்தால் ஊரிலே அவர்களைச் சேர்ப்பது கிடையாது, பண்ணையிலே வேலை ஆட்களை வைப்பதில்லை, வீதியிலே நுழைய விடுவதில்லை. அப்படிக்கு இல்லாமல் அவர்களுடைய உரிமைகள் நிலை நாட்டப்பட்டால்தான், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம் ஏற்படும். 10 பேர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதனாலோ அல்லது சில பேர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதினாலோ இந்தப் பிரச்னையை தீர்த்துவிடமுடியாது என்பதை கூறிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri V. SANKARAN** : தலைவர் அவர்களே, முதல் முதலாக எனக்கு முன் பேசிய நண்பர்கள் கூறிய கருத்துக்கு மாறான கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஹரிஜனங்கள் கிருஸ்தவர்களாக மாறியபின்கூட, ஹரிஜனங்களுக்குக் கொடுத்து வரும் சலுகைகளை அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஒரு சிலர் சொன்னார்கள். பொதுவாக பொருளாதாரத் துறையில் எளியவர்களாக இருந்தால், எந்த வகுப்பினராயினும் சரி, எந்த மதத்தினராயினும் சரி, எந்த ஜாதியைச் சேர்ந்தவரானாலும் சரி, அவர்களுக்கெல்லாம் இது போன்ற சலுகைகள் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லியிருந்தால் நான் ஏற்றுக்கொண்டிருப்பேன். ஆனால் இம்மாதிரி குறுகிய மனப்பான்மையோடு ஹரிஜன கிறிஸ்தவர்களுக்கு மட்டும் அம்மாதிரி சலுகைகளை வழங்கவேண்டுமென்று





கேட்பது பொருந்தாது. ஹிந்துவைப் பொறுத்தவரையில் ஜாதி ஹிந்து என்றும், ஹிந்து ஹரிஜனங்கள் என்றும் இரண்டு பிரிவுகள் துர்ப்பாக்கிய வசமாக இருக்கின்றன. இதை மத்திய அரசாங்கமும் ரெகக்னைஸ் செய்திருக்கிறது. அது மாதிரி ஜாதி ஹிந்துக்கள் என்றும் ஹரிஜன கிறிஸ்தவர்கள் என்றும் பிரிவுகள் கிடையாது. அப்படி ஒப்புக்கொண்டால் இதிலே பல சிக்கல்கள் ஏற்படும். ஒரு ஹரிஜன் முஸ்லீமாக மாறியிருக்கலாம். ஒரு ஹரிஜன் புத்திஸ்ட் ஆக மாறியிருக்கலாம். பின்பு முஸ்லிம் ஹரிஜன், புத்திஸ்ட் ஹரிஜன் இது போன்ற பல பாகுபாடுகள், வேறுபாடுகள் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். அந்த அடிப்படையில் பார்த்தால் கிறிஸ்துவ ஹரிஜன் என்ற பாகுபாடு ஏற்படுவதற்கு இடம் கிடையாது. கிறிஸ்தவ ஹரிஜன் கிறிஸ்தவன் என்பது மட்டுமல்லாமல், முஸ்லிம் ஹரிஜன் என்றும், புத்திஸ்ட் ஹரிஜன் என்றும் கேட்கக்கூடிய நிலைமை ஏற்படும். இன்றைக்கு இருக்கும் நிலைமையில் சர்க்கார் யார் பொருளாதாரத் துறையில் பாக்வேர்டாக இருக்கிறார்கள் என்று கருதுகிறார்களோ அவர்களுக்குத்தான் சலுகைகள் அளிக்கப்படவேண்டும். பின் தங்கியவர்களாகக் கருதி சலுகைகள் அளிக்கப்பட்டால் போதும். மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இம்மாதிரி ஹரிஜனங்களுக்குள்ள சலுகைகள் அளிக்கப்படவேண்டுமென்று சொன்னால் இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. புத்திஸ்டாக மாறிய ஹரிஜனங்களைக்கூட ஹரிஜனங்களாக மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. Constitution scheduled castes லிஸ்டில் கிறிஸ்தவ ஹரிஜன் என்று சேர்க்க முற்பட்டால், அதே போன்று முஸ்லிம் ஹரிஜன் என்றும் புத்த ஹரிஜன் என்றும் சேர்க்கவேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படலாம். ஆகவே, இது போன்ற பிரச்னைக்கு இடமே இல்லை. ஹிந்து மதத்தில் வேறுபாடு இருக்கிறது. கிறிஸ்தவ மதத்தில் அம்மாதிரி ஒன்றும் வேறுபாடு கிடையாது. ஹரிஜனங்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் வேறுபாடு, உயர்வு தாழ்வு என்றிருப்பதுபோல் கிறிஸ்தவ மதத்தில் ஒன்றும் கிடையாது என்று மாறினார்கள். இப்போது மாறுபாடில்லை. வேறுபாடு இருக்கிறது என்று சலுகைகளுக்காகச் சொன்னால் எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்?

கிறிஸ்தவர்களுக்கு இம்மாதிரி சலுகைகள் கொடுக்காவிட்டால், பழைய படி அவர்களை ஹிந்து ஹரிஜனங்களாக மாறுவதற்குக் கூப்பிடுவதாக இருக்குமென்று எம். பி. சிப்பிரமணியம் அவர்கள் கூறினார்கள். ஆனால் நான் இதை எடுத்துக்கூற விரும்புகிறேன். கிறிஸ்தவர்களாக மாறிய பிறகு மிஷனரியிடமிருந்து பல வசதிகள் கிடைக்கின்றன. அவர்களுக்குப் படிப்பு வுசதிகள், இன்னும் பலவித அனுகூலங்கள் கிடைக்கின்றன. அவர்களுக்கு ஹிந்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் பெனிபிட்களையும் கொடுத்தால் "டபிள் அட்வான்டேஜ்" ஆகிவிடும். ஆதலால், ஹிந்து ஹரிஜனங்களெல்லாம் கிறிஸ்தவர்களானால் இரட்டிப்பு சலுகைகள் கிடைக்குமென்று அவர்கள் மதம் மாறுவதற்கு ஆசை காட்டுவது போல் ஆகும். அம்மாதிரி செய்தால் ஹிந்து மதத்திற்கு "சோஷல் இன்ஜஸ்டிஸ்; ஏற்படுத்துவதாகும். அம்மாதிரி இரண்டுவித அட்வான்டேஜ்கள் கிடைப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது. அங்கேயும் சலுகை வாங்கிக்கொண்டு, இங்கேயும் சலுகை வேண்டுமென்று கேட்பது சரி அல்ல. கிறிஸ்தவர்களாக மாறிய பிறகு, பிராமின் கிரிஸ்டியன், உடையார் கிரிஸ்டியன், மறவர் கிறிஸ்டியன் என்ற பிரிவினையே கிடையாது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்கு ஒன்றும் "டிஸ்எபிலிடி" கிடையாது. பிராமினாக இருந்தவர்களும் கிறிஸ்தவர்களாக மாறியிருக்கிறார்கள். அவர்களும் மாறிய பிறகு கிறிஸ்தவர்களுக்குள்ள சலுகைகளைப் பெறுகிறார்கள். பிராமினுக்குள்ள "டிஸ்எபிலிடியை" கிறிஸ்தவர்களாக மாறிய பிறகு நான் பிராமின் என்று சொல்லிக்கொண்டு ஏற்றுக்கொள்ளுவதில்லை. கடிவாளம் என்றால் வாயை மூடுவது, காணம் என்றால் வாயைத் திறப்பது என்பது கூடாது. ஏதாவது ஒரு நிலையில் இருக்கவேண்டும். இப்படிப் பார்த்தால் கிறிஸ்தவன், அப்படிப் பார்த்தால் ஹரிஜன என்று சொல்லிக்கொள்ள முடியாது. சட்டசபையில் போதிய ஸ்தானம் . . .

Sri S. LAZAR : I would request my hon. friend, Sri V. Sankaran to meet this point viz., the point raised by Mr. Subramaniam very rightly that religion alone is standing in the way. If in a moment a Christian Harijan declares by a gazette notification that he becomes a Hindu then he is entitled to all the privileges. I want my hon. friend to explain this. Does it follow automatically the moment he declares as a Hindu, he becomes automatically, economically forward, socially forward, educationally forward? If that is not so, is it not a fact that the argument of hon. Subramaniam is perfectly right that religion stands in the way. So I request my hon. friend to explain this.

Sri V. SANKARAN : தலைவர் அவர்களே, கட்சி விட்டுக் கட்சி மாறுவதைப் போல்தான் மதம் விட்டு மதம் மாறுவது என்று சொல்வதில் அர்த்தமில்லை. இம்மாதிரி மதம் மாறும்போது சில நோக்கங்களோடு தான் மாறுகிறார்கள். அங்கே மிஷனரியிடமிருந்து சில சலுகைகள் கிடைக்கின்றன. சில வசதிகள் கிடைக்கின்றன என்ற காரணத்திற்காகத்தான் மாறுகிறார்கள். அங்கேயும் பல வசதிகளும் இருக்கின்றன. சர்க்காரிலிருந்து வசதிகளையும் பெறவேண்டுமென்றால், இரண்டு வசதிகள் ஏற்பட்டு விடுகின்றன. அம்மாதிரி செய்வது ஹிந்து மதத்திற்கு அநீதி அல்லவா? ஆகவே, அதற்கு சர்க்கார் இடம் கொடுக்கக்கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அவர்களுக்கும் பேக்வர்ட், பின் தங்கியவர்கள் என்ற முறையிலே சலுகை கொடுத்தாலே போதும். சட்ட சபையில் மருத்துவக் கல்லூரிகளில், பள்ளிகளில் அவர்களுக்குத் தனி ஸ்தானங்கள் வேண்டுமென்றெல்லாம் கேட்கப்பட்டது. அப்படியெல்லாம் செய்யப் புகுந்தால், பழமையான நிலைக்கே நம்மைக் கொண்டு போய்விடும் என்பதில் சந்தேகம் இல்லை. சுய ராஜ்யம் அடைந்த பிறகும், முன்னிருந்த அந்தப் பழைய நிலைக்கு, அம்பேத்கார் முறைப்படி வேண்டுமென்றால், முன்னேற்றம் ஒரு நாளும் அடைய முடியாது. அது ஒரு குறுகிய மனப்பான்மை என்று தான் சொல்லுவேன்.

ஸ்காலர்ஷிப் சம்பந்தமாக, அதிகமாக டிலே இருக்கிறது. வருஷக் கடைசி வரைக்கும் கொடுக்காமல் இருந்தால் பெருத்த கஷ்டமாகப் போய் விடுகிறது. காலேஜ்களிலும், பிரின்சிபால்கள் முன்போல் முன் கொடுத்துப் பின் வாங்கிக்கொள்ளும் நிலைமை இல்லை. வருமோ வராதோ என்ற சந்தேகம் வந்து விடுகிறது. இப்படித் தாமதமாவதால் இதனால் கிடைக்கும் அனுகூலம் இல்லாமல் போய்விடுகிறது. School scholarship purpose—frustrate ஆகி விடுகிறது. ஆகவே, வருஷ ஆரம்பத்திலேயே, இரண்டொரு மாதத்திற்குள் இந்த ஸ்காலர்ஷிப்புகளைக் கொடுக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேரி ஒழிப்புக்காக நடப்பு வருஷத்திலே மதுரை போன்ற நகரங்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு விதமான காரியங்களும் செய்யப்படவில்லை. போன வருஷம் ஒதுக்கப்பட்டதை, வாபஸ் ஆகி விடாமல், அதையும் இந்த வருஷத்தின் ஒதுக்கீட்டுடன் சேர்த்து துரிதமாகக் காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த அறிக்கையின் 9-வது பக்கத்தில் கிணறு வெட்ட என்று ரூ. 1,500, 2 ஏக்கர் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று கண்டிருக்கிறது. அது ஒரு பிராந்தியத்தில் ஒருவருக்கா, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை வரைக்குமா, அல்லது 2 ஏக்கர் உள்ள ஒவ்வொருவருக்குமா என்று விளக்கம் கூற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* Sri S. THANGAVELU : கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது சர்க்கார் பொறுப்பேற்றுக்கொண்ட நாள் முதற்





கொண்டு, தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய மக்களுக்கென்று, நல்லதொரு திட்டத்தை தீட்டி, வருடாவருடம் அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை கொடுத்துக்கொண்டு வருவதற்காக அவர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சரவர்கள் அறிக்கைப் பிரகாரம், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகைகளில் கல்விக்கு 177.26 லட்சம், குடிசைத் தொழிலுக்காக 3.74 விவசாயத்திற்காக 43.92, சுகாதாரத்திற்காக 34.84, வீட்டு வசதிக்காக 75.45, தீண்டாமை ஒழிப்பு பிரசாரத்திற்காக 10.41 லட்சம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி, செலவு செய்த தொகையும், செலவு செய்யப்போகும் தொகையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது, கல்விக்காக 110.81 லட்சம், குடிசைத் தொழிலுக்கு 3.63 லட்சம், விவசாயத்திற்கு 39.11 லட்சம், சுகாதாரத்திற்காக 27.73, வீட்டு வசதிக்காக 88.70 லட்சம், பிரசாரத்திற்காக 9.46 லட்சம் ஆக மொத்தம் 353.10 லட்சம். இதிலே மீதம் 73.64 லட்சம் என்று காண்கிறேன். ஆகையினால், ஹரிஜன இலாகா அமைச்சரவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இன்னும் பல்வேறு திட்டங்களை வகுத்துக் கொடுத்து, ஹரிஜனங்களுக்கும் பின்தங்கிய மக்களுக்கும்பயன் படலைக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற ராஜ்யங்களைவிட நம் ராஜ்யத்தில், நல்லதொரு திட்டத்தைத் தீட்டி, இந்த மக்களுக்கு உதவிகள் பல செய்வதற்காக இந்த சர்க்காரை நான் பாராட்டுகிறேன்.

இருக்கும் புறம்போக்கு நிலங்களை, 5, 20 வருஷங்களாக விவசாயம் செய்துக் கொண்டுவரும் ஆதி திராவிட, மற்ற மேல் ஜாதிக்காரர்களாக இருந்தாலும் சரி, ஏழைகளானால் அவர்களுக்கும் பட்டா செய்து கொடுக்க வேண்டும். பெரும்பணக்காரர்கள் அதிகப்பேர்கள் இல்லை. தென்னாற்காடு ஜில்லாவில் என் தொகுதியில், ஹரிஜனங்களைவிட, ஏழைகள் ஜாதி இந்துக்கள் இருக்கிறார்கள். ஜாதியில் உயர்ந்தவர்களாக இருக்கலாம், ஆனால், அவர்களும் ஏழைகளே. ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கும், எல்லா ஏழை எளியவர்களுக்கும், இந்தப் புறம்போக்கு நிலங்களை, 5, 6 வருடங்களாகப் பயிர் செய்து வந்திருப்பவர்களுக்கு, பட்டா செய்து கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையாக என் தொகுதியில், ரெட்டிப்பாளையம்(?) கிராமத்தில் சுமார் 100 ஏக்கராவுக்கு மேல் இருக்கிறது; அதை ஆதிதிராவிடர்களும் வன்னியப் பெருங்குடி மக்களும் பல வருடங்களாகப் பயிர் செய்துகொண்டு வருகிறார்கள். அதை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று, கடந்த பட்ஜட் விவாதத்தின்போதும் கேட்டுப் பேசியிருக்கிறேன். ரிவினியூ அதிகாரிகளிடம் போய்க் கேட்டேன். அவர்கள், "ஸரி, ஸரி, பார்ப்போம்" என்கிறார்கள். (சிரிப்பு) (டி. என். ராமசாமி; ஒன்ஸ்மோர், மறுபடியும் சொல்லுங்கள்) ஆகவே, இதையெல்லாம் சீக்கிரமாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஆலயப் பிரவேசம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதெல்லாம் பத்து வருஷத்திற்கு முன்பே நடந்தாகிவிட்டது. சுதந்தரம் வந்த பிறகு அம்மாதிரி மாறுபாடெல்லாம் கிடையாது என்றே கொள்ள வேண்டும். பாரதியார் சொல்லியபடி, "ஏழையென்றும், அடிமையென்றும் எவனும் இல்லை ஜாதியில், இழிவுகொண்ட மனிதர் என்பார் இந்தியாவில் இல்லையே" இதையேதான் அடிகள் மகாத்மா காந்திஜி, அரும்பாடு பட்டு அந்த மக்களை முன்னுக்குக் கொண்டுவரப்பாடு பட்டார்கள். அவர்கள் வழியிலேயே இந்த திட்டங்களைத் தீட்டி, இந்த அறிக்கையையும் அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலே சொல்லுகிறார்கள்: "தேசத்தில் ஜனத்தொகையில் ஆறில் ஒரு பங்குப்பேர் ஹரிஜனங்கள். தாழ்ந்த நிலையில் உள்ள இம்மக்களுக்கு நல்வாழ்வுக்கான வழி செய்வது, பன்னெடுங்காலமாக, இந்த நாட்டின் பெரியதொரு பிரச்னையாக இருந்து வருகின்றது. தேசப்பிதா மகாத்மா காந்தி, ஹரிஜன மக்களின் நலனை, நமது வாழ்நாளின் முக்கியப் பணியாக மேற்கொண்டார். இப்பிரச்னை எவ்வளவு முக்கியமான பெரிய பிரச்னை என்பதை உணர்த்தி நாடு முழுதிலும் இவ்விஷயமாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியவர் அவர்தான்.

[Sri S. Thangavelu] [24th March 1960

தீண்டாமை மாசு ஒழிந்தாலொழிய சுயராஜ்யம் என்பது அர்த்தமற்றது என்று காந்திஜி கூறினார்.” இங்கே தோன்றும் உணர்ச்சியால், ஹரிஜன நல இலாகா, தூண்டப்பட்டு அந்த வழியிலே வேலை செய்யும்போது, இந்த சரித்திரத்தை இங்கே அமைச்சரவர்கள் கொண்டு வந்திருப்பதைக் கண்டு நந்தனார் நான் ரொம்பவும் சந்தோஷமடைகிறேன் ; நந்தன் தில்லை நடராஜனைக் கண்டு சந்தோஷமடைந்தது போல், இந்தத் திட்ட அறிக்கை கண்டு சந்தோஷப்படுகிறேன். அமைச்சரவர்கள் சரித்திரத்தைக் கண்டு.

ஒரு சமயத்தில் நம் நண்பர்கள், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் இன்று நினைக்கலாம், இவன் இப்படி அப்படியென்று, ஆனால், ஆளைத் தெரிந்துக்கொள்ளட்டும். என் தாய் பாப்பாள் அம்மாள், என் தகப்பன் சுப்பராயன். ஆனால் இவர்கள் என்மீது அநியாயமாக கேஸ் போட்டார்கள். ஜட்ஜும் நான் கிறிஸ்தவன் என்று தள்ளிப் போட்டார்கள். லஞ்சம் வாங்கிக்கொண்டுதான் என்று நினைக்கிறேன்....... (குறுக்கீடு).

TEMPORARY CHAIRMAN (Sri A. Govindasamy) : அங்கத்தினர் “லஞ்சம் வாங்கி” என்று நீதிபதியைக் குறிப்பிட்டார்கள். தயவு செய்து அவர்கள் அதை வாபஸ் பெறவேண்டும்......

SRI S. THANGAVELU : கேஸ் போட்டவர்களைச் சொன்னேன், ஜட்ஜை அல்ல. அவர்கள் நினைக்கலாம், யாரோ, என்னவோ என்று......

SRI D. S. AUTHIMOOLAM : ஸார், சட்டசபையில் லஞ்சம் வாங்குகிறார்கள்” என்று சொல்வது பார்லிமெண்டரி முறையா, அது சட்டசபைக்கு உகந்ததா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

SRI S. THANGAVELU : கனம் அங்கத்தினரும் அப்படித்தான் பேசுகிறார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று பேசுகிறார்கள். கனம் அங்கத்தினர் பேசும்போது, நாம் மட்டும் என் பேசக்கூடாது ? ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் ஜாதி வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு ஜாதியை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு ஹரிஜன் என்ற முறையில் சொல்லுகிறேன்..............

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் அங்கத்தினர் பேசும்போது தெளிவுபடுத்தவில்லை. நீதிபதி லஞ்சம் வாங்கினார் என்ற அபிப்பிராயத்தை அவர் ஒப்புக்கொண்டுவிட்டாரா அல்லது ஒப்புக்கொள்ளாமல் தொடர்ந்து பேசுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

TEMPORARY CHAIRMAN (Sri A. Govindasamy) : கனம் அங்கத்தினர் நீதிபதியைப்பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னபடியால் இந்தப் பிரச்னை எழவில்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ தங்கவேலு தொடர்ந்து பேசலாம்.

SRI S. THANGAVELU : ஆகவே ஆதி திராவிடர்கள் என்பது ஆதியில் முதல் முதலில் தென்னாட்டில் குடி புகுந்தவர்கள். இப்பேர்ப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை சர்க்கார் தூக்கிவிட நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு வேண்டிய நன்மைகளை செய்ய முன்வரவேண்டும். இந்த மானியத்திற்கு இன்னும் அதிகப்படியான தொகையை ஒதுக்கி செலவு செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய திட்டங்களை வகுத்து அதிகப்படியான தொகையை ஒதுக்கி அப்படி ஒதுக்கிய பணம் பூராவையும் அவர்களுக்கே செலவழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மான்யத்தை ஆதரித்து என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.



24th March 1960]

SRI B. DURAISWAMY REDDIAR : கனம் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மானியத்தின்மீது ஒன்றிரண்டு கருத்துக்களைச் சுருக்கமாக கூறலாம் என்று விரும்புகிறேன். புள்ளி விவரங்களோடு பேசுவது பிரயோசனம் இல்லை. எனக்குப் புள்ளி விவரங்களுடன் பேசிப் பழக்கம் கிடையாது. எனக்கு முன்னால் பேசியகனம் தங்கவேலு அவர்கள் ஆதி திராவிடர்களைப் பற்றி சொல்லி சில யோசனைகளையும் சொல்லிவிட்டார். ஹரிஜனங்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் வித்தியாசம் சொல்லவில்லை. ஆதியில் ஆதி திராவிடர்கள்தான் தென்னாட்டில் இருந்தார்கள். அப்படி இருந்ததாக சில கருத்துக்களை சிலர் சொல்லியிருக்கிறார்கள். ஹரிஜனங்கள் என்றால் மகா விஷ்ணுவைச் சேர்ந்தவர்கள். மகாவிஷ்ணுக்கு நெய்வேத்தியம் செய்துவிட்டு நாமே அந்த பிரசாதத்தைச் சாப்பிடுவது போன்று ஹரிஜனங்களுக்கு என்று அரசாங்கம் பணத்தை ஒதுக்கிவைத்துவிட்டு ஹரிஜனங்களுக்குச் செலவு செய்யாமல் சாப்பிட்டு விடுகிறார்கள். எப்படி மகாவிஷ்ணு பிரசாதத்தை ஏற்றுக்கொள்வது இல்லையோ அதைப் போலவே ஹரிஜனங்களும் பணத்தை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இது எப்படி என்று நாமே யோசித்துப் பார்க்கலாம்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர். கனம் அங்கத்தினர் பேசியபோது ஏதோ மகாவிஷ்ணுவுக்கு நெய்வேத்தியம் செய்துவிட்டு நாமே சாப்பிட்டுவிடுவதுபோல் அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு என்று மானியத்தை ஒதுக்கி வைத்து விட்டு அரசாங்கமே அதைச் சாப்பிட்டு விடுகிறது என்ற அர்த்தத்தில் அவர் பேசுகிறார். அது சரியானதா என்று கேட்கிறேன்.

TEMPORARY CHAIRMAN (Sri A. Govindasamy) : அவர் சொன்னதில் ஒன்றும் தவறு இல்லை. அவர் சொன்னது சரியே என்று நான் கருதுகிறேன். கனம் அங்கத்தினர் துரைசாமி ரெட்டியார் தொடர்ந்து பேசலாம்.

SRI B. DURAISWAMY REDDIAR : அரசாங்கம் சாப்பிடுகிறது என்று நான் சொல்லவில்லை. ஹரிஜனம் அல்லாத மக்கள் சாப்பிடுகிறார்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன். நான் சொல்லும் கருத்தை அவர் புரிந்து கொள்ளாமல் பதில் சொல்லுகிறார் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதனால் பாதகம் இல்லை. இன்னும் சற்று விளக்கமாக சொல்ல வேண்டுமானால் சொல்லுகிறேன். மகாவிஷ்ணுக்கு நாம் நெய்வேத்தியம் செய்கிறோம். அதை அர்ச்சகர் முதலியவர்கள்தான் சாப்பிடுகிறார்களே தவிர மகாவிஷ்ணு சாப்பிடுவதில்லை. அதைப் போலவே அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு என்று பணம் ஒதுக்குகிறார்கள். அதை அரசாஙகமே சாப்பிடுவதில்லை. மற்றவர்கள்தான் சாப்பிடுகிறார்கள். அதைத்தான் நான் குறிப்பிட்டேன். ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுகிறார்கள். அவைகளை கான்ட்ராக்டுக்கு விடுகிறார்கள். அந்த கான்ட்ராக்டர்கள் பணத்தைச் சாப்பிடுகிறார்கள். ஹரிஜனங்களுக்கு பூராவும் வருவதில்லை. அதைப் போல்தான்.

SRI S. NAGARAJA MONIGAR : On a point of order, Sir. The hon. Member has just now stated that if the deity is going to swallow whatever we offer, we will not offer. Similarly, he has stated that if the Government know that the Harijans are going to utilise the money, the Government will not allow it. He should not say that the Government are doing wilfully without any sincere motive and therefore, that is out of order.

TEMPORARY CHAIRMAN (Sri A. Govindasamy) : அவர் சொன்னது அரசாங்கம் ஒதுக்குகிற பணத்தை கான்ட்ராக்டர்கள் போன்றவர்கள் சாப்பிடுவதைக் குறிப்பிட்டரே ஒழிய அரசாங்கமே சாப்பிடுகிறார்கள் என்று குறிப்பிடவில்லை. அதனால் அதில் ஒழுங்கு பிரச்னைக்கு இடமே இல்லை. கனம் துரைசாமி ரெட்டியார் தொடர்ந்து பேசலாம்.

**SRI B. DURAISWAMY REDDIAR :** நண்பர் பேசும்போது ஆங்கிலத்தில் பேசினார் அவர் எப்பொழுதுமே ஆங்கிலத்தில் பேசுவதில்லை. தமிழில் தான் பேசுவார். எனக்கு ஆங்கிலம் தெரியாது. அவர் என்ன பேசினார் என்பது தெரியவில்லை. தமிழில் பேசியிருந்தால் அதைப்பற்றி தெரிந்து கொண்டு உதாரணம் கொடுத்து பதில் சொல்லியிருப்பேன். இருந்தாலும் பேசட்டும்.

**SRI S. NAGARAJA MONIGAR :** On a joint of order, Sir.

**TEMPORARY CHAIRMAN** (Sri A. Govindasamy) : No, point of order can be raised now.

**SRI B. DURAISWAMY REDDIAR:** அவருடைய கிராமத்திலிருந்து ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து எவ்வளவு பணம் ஹரிஜனங்களுக்கு செலவு செய்திருக்கிறார்கள் என்று அவரை நான் கேட்க ஆசைப்படுகிறேன். எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன். அந்த விவரம் எல்லாம் அவருக்குத் தெரியாது. அவர் வோட்டு வாங்கும் போதுதான் அவருடைய கிராமத்திற்குப் போயிருப்பார், அதன் பிறகு அங்கே அவர் போயிருக்கவே மாட்டார்.

இப்பொழுது வீடுகள் கட்டும் திட்டத்திற்கு என்று மானியம் ஒதுக்குகிறார்கள். அது போதாவிட்டால் இன்னும் அதிகமாக சப்ளிமெண்டரி கிராண்டில் கொண்டு வந்து சாங்ஷன் வாங்கிக் கொள்ளுகிறார்கள். அதைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் வருஷா வருஷம் அவர்களுக் கென்று ஒதுக்கப்படும் பணம் பூராவும் அவர்களுக்கே செலவு செய்யப்படுகிறதா என்பதைத்தான் பார்க்கவேண்டும். மாடுகள் வாங்கிக்கொள்ள பணம் கொடுக்கிறார்கள், மாடுகளும் வாங்கிக் கொடுக்கிறார்கள். அந்த மாடுகளுக்கு நான்கு கால்கள் இருக்கும். இரண்டு கொம்புகள் இருக்கும். விஷயம் தெரிந்தவர்களைக் கொண்டு அந்த மாடுகளை வாங்க வேண்டும். இரண்டு கொம்பு நான்கு கால்கள் இருக்கக்கூடிய மாடுகளுக்கு 250 ரூபாய் கொடுத்து வாங்கவேண்டுமோ ? அந்த மாடுகளுக்கு அந்தப் பணம் பொருந்துமா என்பதைப் பார்ப்பதில்லை. லஞ்சம் என்று நான் சொல்லவில்லை. ப்ளாக் மார்க்கெட்டில் இது நடைபெறுகிறது. இதில் ப்ளாக் மார்க்கெட் வேறு நடக்கிறது.

**THE HON. SRI P. KAKKAN :** கனம் அங்கத்தினர் அப்படி வாங்கிக் கொடுக்கப்பட்ட மாடுகளைப் பார்த்திருக்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. அந்த மாடுகளுக்கு இரண்டு கொம்புகளும் நான்கு கால்களும் மட்டும்தான் இருக்கிறது என்று சொல்வது அவ்வளவு நல்லது அல்ல. வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிற மாடுகள் எவ்வளவோ நல்ல மாடுகள்தான். அதை வைத்துக்கொண்டு எவ்வளவோ பேர்கள் விவசாயம் செய்கிறார்கள். உண்மைக்குப் புறம்பாக பேசுவது அவ்வளவு நல்லதல்ல. உண்மைக்குப் புறம்பாகப் பேசினால் மக்கள் அவ்வளவு தூரம் அதை நம்பமாட்டார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**SRI B. DURAISWAMY REDDIAR :** எனக்கு நன்றாகத் தெரியும். எப்படிப்பட்ட மாடுகள் ஹரிஜனங்களுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். என் மூலமாக வாங்கிக் கொடுக்கப்பட்ட மாடுகள்தான் நல்ல மாடுகளாக வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கலெக்டர் என்னை வைத்துக்கொண்டு வாங்கிக் கொடுத்தது நல்ல மாடுகள். சில மாடுகளுக்கு கொம்பும் கால்களும்தான் இருக்கும். தோல் தான் இருக்கும். அவைகள் விவசாயத்திற்கு லாயக்குள்ளவைகளாகவே இல்லை. ஆகவே கொஞ்சம் நல்ல முறையில் வாங்கிக் கொடுத்தால் தான் அதை வைத்துக் கொண்டு வெள்ளாண்மை செய்யலாம்.

சில வீடுகள் கட்டியிருக்கிறார்கள். அப்படி சுமார் இருபது வீடுகள் கட்டியிருக்கிறார்கள். அதை சில அதிகாரிகளும் வந்து பார்த்தார்கள், நானும் அதைப்பற்றி அரசாங்கத்திற்கு எழுதி இருக்கிறேன். கடையில்





உபயோகமற்ற சாமான்களாக இருக்கக் கூடியவைகளை வாங்கி வந்து வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். கடையில் வியாபாரம் ஆகாத சாமான்கள் எல்லாம் ஹரிஜன காலனியில் வீடுகள் கட்டுவதற்கு வந்து விடும். சாதாரணமாக மலிவாக விற்கக்கூடிய சாமான்களைத்தான் வாங்கி வந்து வீடுகளைக் கட்டுகிறார்கள். செங்கல் சூளையில் எந்த செங்கல்கள் சுடப்படாமல் இருக்கின்றனவோ அவைகள் எல்லாம் ஹரிஜன காலனியில் வீடுகள் கட்டுவதற்கு வந்துவிடும். இந்த முறையில் தான் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன. இதைப் பற்றி கலெக்டரிடம் சொல்லி இருக்கிறேன். எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. சில இடங்களில் மோசமான வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். அதைப்பற்றி போய்க் கேட்டால் கோபம் வருகிறது. இஞ்சினியர் நிபுணரானபடியால் அவர் சரியாகக் கட்டவில்லைதான் என்று ஒப்புக் கொள்ளுகிறார். ஆனால் கலெக்டரைக் கேட்டால் "ஏதோ நடந்து போய்விட்டது, விடுங்கள்" என்று சொல்லுகிறார். அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் சாங்ஷன் ஆகிவிட்டது. கட்டியாகி விட்டது, இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார். ஏனென்றால் தன்னைப் பிடிக்கப் போகிறதோ என்று அவர் அப்படிச் சொல்வதோடு "ரெட்டியாரே விடுங்கள்" என்றும் சொல்லுகிறார்.

**THE HON. SRI P. KAKKAN :** அது எந்த கலெக்டர். இப்பொழுது உள்ளவரா அல்லது இதற்கு முன் இருந்தவரா ? –

**SRI B. DURAISWAMY REDDIAR :** ஏற்கனவே இருந்த கலெக்டர் தான். ஏற்கனவே இருந்த கலெக்டர். எதுவும் தப்பாகச் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. அதனால் யாருக்கும் லாபமில்லை.

ஆக, இம்மாதிரி ஹரிஜனங்களுக்கு கொடுப்பதில, ஸ்காலர்ஷிப் கொடுப் 1-00
பதுதான் அவர்களுக்கு நல்ல முறையில் போய்ச் சேருகிறது என்பது p.m.
எனது கருத்து. மீதியெல்லாம் நான் முதலில் சொன்ன மாதிரி ஹரிஜனங்கள் என்று இருப்பதால், ஹரி என்றால் மகாவிஷ்ணு என்று, மகாவிஷ்ணுவுக்கு அமுது படைத்து நாமே சாப்பிடுகிறோமே அதே மாதிரி முறையில் போய் விடுகிறது. எனக்கு முன்னாலே பேசியவர்களெல்லாம் வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்றெல்லாம் புள்ளி விவரத்தோடு பேசினார்கள். எனக்கு புள்ளி விவரமெல்லாம் தெரியாது. ஆனால் நான் ஒன்று சொல்லுகிறேன். ஹரிஜன மக்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஏக்கர் நஞ்சை, ஒரு ஏக்கர் புஞ்சை என்று கொடுத்தால் அவர்களுடைய வரும்படி உயர்ந்து, படிக்கவும் மற்றப்படி வேறு வசதிகளை அடையவும் வழியேற்பட்டு, சாப்பாட்டுக்குக் குறைவில்லாமல் இருந்து அவர்கள் முன்னேறுவார்கள் என்பது எனது கருத்து.

அதோடு இப்போது வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை நிறுத்தி விட்டால் அவர்கள் கோபம் கொள்வார்கள் என்று எண்ணலாம். கூரை வீட்டில் 20 வருஷமானாலும் கஷ்டமில்லாமல் இருந்தார்கள். இப்போது ஓட்டு வீடு கொடுக்கிறோம் என்று சொன்னால் ஒரு ஓடு விழுந்தாலும் உள்ளே இருக்ககூடிய ஒரு மாதக் குழந்தையின் மேல் விழுந்து குழந்தை போய்விடும். ஆகவே இந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தையெல்லாம் நிறுத்தி விட்டு ஒவ்வொரு ஹரிஜன குடும்பத்திற்கும் ஒரு ஏக்கர் நஞ்சை நிலமும், ஒரு ஏக்கர் புஞ்சை நிலமும் கொடுக்க வேண்டுமென்று கூறி எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI S. NAGARAJA MONIGAR :** கனம் தாற்காலிகத் தலைவர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திலே இந்த அரசாங்கம் அன்னியரிடமிருந்து ராஜ்யபாரத்தை ஏற்ற நாள் முதல் கண்ணும் கருத்துமாக தங்கள் முழுக்கருத்தையும் செலுத்தி, தீண்டப்படாத ஒரு இனம் நம்மிடை இருப்பது மிக மிக இழுக்கு என்று முழு முயற்சி எடுத்து, பெருமளவு செலவுசெய்து, அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருவதை நாம் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்:

இந்த விஷயத்தில் நான் மாத்திரமல்ல. ஆளும் கட்சி மாத்திரமல்ல. ஹரிஜனங்கள் முன்னேற வேண்டுமென்பதில் எல்லாக் கட்சிகளும் அக்கறை கொண்டு இருக்கிறது என்பதில் யாருக்கும் எந்த வித சந்தேகமும் கிடையாது.

இந்த வருஷம் ஒதுக்கப்படும் தொகையானது மேலும் அதிகமாக ஒதுக்க ஏற்பாடு செய்திருப்பதற்கு அமைச்சரவையையும் அந்த இலாகா அமைச்சரையும் பெரிதும் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். எவ்வளவு தூரம், எவ்வளவு சீக்கிரம் கனம் அமைச்சர் அவர்கள் அவருடைய சக அமைச்சர்களுடைய உதவியைக்கொண்டு சற்றுமுற்போக்காக காரியங்களை நடத்துகிறரோ அந்த அளவுக்கு அங்கு முன்னேற்றங்கள் இருக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் நான் ஒன்று சொல்ல ஆசைப் படுகிறேன். யாரேனும் ஹரிஜனங்களுக்காக அதிகம் செலவு செய்கிறோம் என்று கருதுவாரானல் அது தவருகும். அம்மாதிரி கருத்து இருக்குமானல் அது கொஞ்சம் கூட சரியல்ல. நான் இவ்வளவுகாலம் ஒதுக்கி வைத்து தலைமுறை தலைமுறையாகச் செய்த பாபத்திற்கு ஒரு பரிகாரமேயல்லாமல் வேறல்ல என்று நாம் கொள்ள வேண்டும். மத்திய அரசாங்கம் கூட 10 ஆண்டுகளாக பொருளாதாரத் துறையில் இவர்களுக்குப் பக்கபலமாக இருந்து இது வரையில் செய்தது போல மேலும் செய்ய வேண்டுமென்று செய்த திருத்தத்திலே அங்கு பாராளு மன்றத்தில் விவாதத்தில் கலந்து கொண்டு நமது மாநில அங்கத்தினர்கள் உட்பட எல்லோரும் செய்த காரியத்தைப் பாராட்டி வரவேற்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆனல் ஒன்று நான் சர்க்காருக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் இதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கே தெரிந்த விஷயம். தீண்டப்படாத ஒரு இனம் என்று நமது நாட்டில் வைத்திருக்கிறோம் என்ற அவச் சொல்லுக்கு ஆளாவது தவருனது. கேவலமான முறையில் மனித இனத்தில் இருக்கக்கூடாது என்று மகாத்மா காந்தி அவர்கள், இந்த இழுக்குப் போகவேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார். அவர் இன்று நம்மிடை இல்லை. அவர் தீண்டாமையை ஒழிப்பது முக்கியமானது என்று சொல்லும் போது சமூக வேலைகள் மூலமாகச் செய்ய வேண்டுமென்று கருதினர். இன்றைக்கு அந்தமாதிரி முறையில்லாமல் பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டு அமுல் நடத்தி அவர்களைக் முன்னேற்ற வேண்டுமென்று கூறுவது எந்த அளவுக்குச் சரியென்று அங்கத்தினர்கள் கருதுகிறர்களோ தெரியாது. அதோடு சமூக வேலை கூடவே இருக்க வேண்டும். காந்திஜி ஏற்படுத்திய சமூக சங்கங்களையும் மற்ற சங்கங்களையும் கொண்டு தீண்டாமையை ஒழிக்க சமூகப் பிரசாரங்களை நடத்துவதோடு சேர்த்துச் செய்தால் காந்திஜி எண்ணியபடி நடந்து காட்டியவர்களாவோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வகையில் இன்னும் தனித் தனியாக சேரிகளைக் கட்டி வருவதையும், காலனிகளைக் கட்டி வருவதும் சரிதான என்று இதைப் பற்றி அமைச்சரிடம் கூட நான் கேட்டிருக்கிறேன். அரசாங்க ரீதியில் நான் என்ன செய்வது, ஜாதி ஹிந்துக்கள் யாராவது வந்தால் வேண்டாமென்று சொல்லவில்லை என்று கூறினர். தனித்தனி காலனியாக ஆகிறதே தவிர. பழைய சேரிகள் திருத்தப்படுகிறதே தவிர, தனியாக கிணறுகள் வெட்டிக்கொண்டு போவதை விட, 10, 12 ஆண்டுகளுக்கு முன் தீண்டாமைக்காகச் சட்டம் கொண்டு வந்த அரசாங்கம், 12 ஆண்டுகளுக்குப் பிறகு முற்போக்கில் இருக்க வேண்டுமென்று எண்ணம் ஏற்பட்டிருக்கும் போது, அமைச்சர் அவர்கள் அந்த வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், நல்ல முறையில் மேற்கொண்டு சட்டரீதியில் கொண்டு வரவேண்டுமே தவிர, அப்படியில்லாவிட்டால் நல்ல முறையில் முன்னேற்றம் இருக்காது. ஆகவே, வேண்டிய சட்டத்தை சீக்கிரம் கொண்டு வந்து அமைச்சர் அவர்கள் அதிகமான ஒரு முன்னேற்றத்தைச் செய்வார் என்று நம்புகிறேன். நாடு அதற்குத் தயாராக இருக்கிறது என்று அர்த்தமே தவிர 12 ஆண்டுகளுக்கு முன்னல் தீவிரச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட நாட்டில் பெரிய புரட்சி எதுவும் வந்து விடாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





கனம் லாஸர் அவர்களும் இன்னும் மற்ற அங்கத்தினர்களும ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசினர்கள். கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்குச் சலுகை ஏன் இல்லை என்று கேட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள் யாராக இருந்தாலும் கொடுக்கவேண்டுமென்றே கொடுக்கிறர்கள். எதற்காக ஒதுக்கி வைக்கிறோமோ அதற்குத் தான் செலவழிக்கவேண்டும். ஹரிஜன முன்னேற்றத்திற்கு என்று வைத்திருப்பதை கிறிஸ்தவர்கள் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துவதை நான் விரும்பவில்லை. தீண்டாமை என்ற அவச்சொல் மதம் மாருத ஹரிஜனங்களுக்குத்தான் உண்டே தவிர, கிறிஸ்தவர்கள் என்று சொன்னல் தீண்டப்படாத தன்மை அவர்களுக்குக் கிடையாது. ஹரிஜன வகுப்பிலிருந்து மாறினலும், முன்பு ஹரிஜன வகுப்பாக இருந்தது அங்குள்ள சிலருக்குத் தான் தெரியும், ஆனல் மற்றவர்களுக்கு அவர் கிறிஸ்தவர்தான். அவர்களை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே தீண்டப்படாத தன்மை கிறிஸ்தவர்களாக மதம் மாறியவுடன் போய்விடுகிறது. அதற்காகத் திரும்பவும் ஹிந்துவாக ஆகவேண்டுமா என்று கேட்கிறர்கள். ஹிந்துவாக இருந்தால் இருக்கட்டும், அல்லது முஸ்லிமாக இருந்து மாறியிருந்தால் முஸ்லிமாக இருக்கட்டும். மதம் மாற வேண்டுமென்று சொல்லவில்லை. தீண்டப்படாதவர்கள் என்று சொல்லக் கூடியவர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட வேண்டுமென்று நிறுத்திக் கொள்கிறேன்.

இப்போது ஜில்லாவிற்கு ஒரு ஆபீசர் போட்டிருக்கிறர்கள். நிர்வாகச் செலவு அதிகம் என்றல், வெகு தூரம் முன்னேற வேண்டியிருப்பதால் நிர்வாகச் செலவைப் பற்றிக் கொஞ்சம்கூட கவனிக்கக் கூடாது என்பது எனது அபிப்பிராயம். செலவுகள் ஏற்படுகிறது என்றல் நிச்சயம் ஏற்படும். அதற்காகப் பயப்பட வேண்டியதில்லை. இப்போது ஒரு ஜில்லாவிற்கு இரண்டு ஜில்லா அதிகாரிகள் போடுவது போல், ஹரிஜன நல அதிகாரிகளும் இரண்டு பேர்கள் போட்டு ஜீப் இல்லாத இடங்களுக்கு ஜீப்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது சமூக ரீதியில் வேலை செய்ய வேண்டியிருப்பதால் இதை ப்ளாக் டெவலப்மெண்டுடன் இணைக்கவேண்டும். ஜில்லாவிற்கு ஒரு ஹரிஜன நல அதிகாரி என்று சர்க்கார் எப்படித் திட்டமிட்டார்களோ, தெரியவில்லை. ஒரு வேளை அவர்கள் சரியாகவே திட்டமிட்டிருக்கலாம். ஒவ்வொரு மாதமும் நடக்கும் கூட்டத்தில் ஹரிஜன நல அதிகாரிகள் இருக்கவேண்டும். ஜில்லாவுக்கு ஒரு ஆபீசர் இருக்கும் போது, எங்கே என்ன நடக்கிறது என்பதே அவர்களுக்குத் தெரிவதில்லை. 60,000 ஜனத்தொகைக்கு ஒரு **Extension Officer for Harijan Welfare** வீதம் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு மாதமும் 30-வது நாள் ஹரிஜன நாள் கொண்டாடுவது முக்கியமானது. யார் போனலும் போகாவிட்டாலும் எங்குள்ள ஆரம்பப் பள்ளி உபாத்தியாயர்கள் முதற்கொண்டு எல்லா அதிகாரிகளும் அங்கு கட்டாயம் வர வேண்டும், இல்லாவிட்டால் எக்ஸ்ப்ளனேஷன் கொடுக்க வேண்டுமென்ற கட்டாயத்தை, நிபந்தனையை விதிக்க வேண்டும். அவ்வாறு செய்யாததால் இன்று வரையில் இது ஏதோ சடங்கு மாதிரி தான் நடக்கிறது. சமுதாய ஒற்றுமை ஏற்படுவதற்கு ஏதுவான வகையில் இது இல்லை. கட்டாயம் இருந்தால் தான், எல்லோரும் வருவார்கள், ஊர்ப் பிரமுகர்களும் வருவார்கள் : ஜாதி ஹிந்துக்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்குமிடையே ஒற்றுமை ஏற்படும்.

(Mr. Speaker in the Chair.)

ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கும் விஷயத்தில், கனம் அமைச்சர் சமாதானம் சொல்வார். நான் ஒன்று சொல்வேன். அவர் கோபித்துக் கொள்ளக்கூடாது. ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதில் தாமதம் இருக்கிறது. இதற்குக் காரணம், மத்திய சர்க்கார் தாமதமாகச் செயல்படுவதுதான, அல்லது மார்க்குகள் போடுவதில் ஏற்படும் காலதாமதமா ? எது எப்படி இருந்தாலும், 1960-1961-ம் வருஷ ஸ்காலர்ஷிப்புகள் 1960-ம் ஆண்டு டிசம்பரில் கூடக் கொடுக்கப்படவில்லை என்றல், அது மக்களுக்கும் கஷ்டம். அரசாங்கத்திற்குரிய நடை முறைக்கும் உகந்தது அல்ல. அடுத்த கல்வி வருஷமேவரப் போகிறது. நிர்வாகச் செலவைக் கவனிக்காமல் அவசியமான டெம்பரரி ஸ்டா,·,பைப் போட்டுக் கொண்டு, பல மாதங்களுக்கு

முன்பே ஸ்காலர்ஷிப்புகளைக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், இருக்கக் கூடிய கஷ்டங்களையும் நிலைமையையும் சுற்றறிக்கையின் மூலம் எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தில் சில ஹரிஜனங்களுக்குத் தான் வீடுகள் கட்டிக் கொடுக்க முடிகிறது. நமது திட்டத்தில் அவ்வளவுதான் சாத்தியம். மற்றும், அரசாங்கம் சிலருக்கு ஏர் மாடுகள், தையல் மெஷின் முதலியவை கொடுப்பதைப் போன்ற உதவிகளை இவர்களுக்கு அளிக்க அரசாங்கம் முற்பட்டால் அதிகமான பேர்களுக்கு உதவி செய்யலாம். வீட்டு மனைகளுக்கான பணத்தை ஹரிஜனங்களுக்குக் கொடுத்து அவர்களையே வீடு கட்டிக் கொள்ளச் செய்கிறோம் என்று கனம் அமைச்சர் சொன்னார். ஜாதி ஹிந்துக்கள் இருக்கும் இடங்களிலேயே வீடுகள் கட்டிக் கொள்வதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டும். நஞ்சை நிலங்களாக இருந்தாலும் பக்கத்தில் மலைகள் இருக்குமானால் அந்நிலங்களை அணைத்தாற் போல் வீடுகள் கட்டிக் கொள்ள அவர்களை அனுமதிக்க வேண்டும்.

கம்பெனிகள் அமைப்பதாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தக் காரியங்கள் செய்தாலும் அவைகளிலெல்லாம் தீண்டாதாருக்குச் சலுகை கொடுக்க சர்க்கார் முற்பட வேண்டும். அவ்வாறு செய்தால்தான் அந்த சமூகம் முன்னேற முடியும்.

ஸ்ரீ ரெட்டியார் அவர்கள், நான் ஆங்கிலத்தில் சில வார்த்தைகள் பேசியதற்காக வருத்தப்பட்டார். அவர் அதற்காக வருந்த வேண்டியதில்லை. நான் ஆங்கிலத்தில் பேசியபோது அவரைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. என் தொகுதியில் நான் செய்து வருவது அவர் காது வரை எட்டவில்லை என்றால், அது என்னுடைய குறை தான்.

(கனம் சபா நாயகர் அடுத்த கனம் அங்கத்தினரை பேச அழைத்தார்).

* **SRI P. JAYARAJ** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ஹரிஜன இலாகா அமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஹரிஜன நலத்துறைக்கான மானியக் கோரிக்கையை வரவேற்று என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது சர்க்கார் கடந்த 12 ஆண்டுகளில் ஹரிஜன மக்களுக்காக பல் வேறு துறைகளில் எத்தனையோ முன்னேற்றகரமான வேலைகள் செய்திருக்கிறார்கள். ஹரிஜன மக்களின் முன்னேற்றத்திற்குப் பல வழிகளிலும் சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறது. கல்வி வசதிகள், சுகாதார வசதிகள், வீட்டு மனை வசதிகள், சுடுகாட்டுக்குச் செல்கிற வழி வசதிகள் முதலிய பல வசதிகளை அவர்களுக்கு சர்க்கார் செய்து தந்திருக்கிறார்கள். ஹரிஜன மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தில், சர்க்கார் ஹரிஜனங்களுக்கு 550 ரூபாய் கொடுக்கிறார்கள். ஹரிஜனங்கள் தாங்களாக 200 ரூபாய் கொடுத்தால் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. ஹரிஜனங்களுக்குப் பண வசதி இல்லாததால் அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் இந்த 200 ரூபாயைக் கொடுக்க முடிவதில்லை. அதன் காரணமாக சர்க்காருடைய இந்தத் திட்டம் விரைவாக நிறைவேற முடியவில்லை. சர்க்காரே முழுப் பணத்தையும் கொடுத்தால் அவர்களுக்கு சீக்கிரம் வீடுகள் கிடைக்கும். மேலும், பல இடங்களில் ஹரிஜனங்கள் மிராசுதார்களுடைய மனைகளில் இருக்கிறார்கள். அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்காக எல்லா வழிகளையும் மிராசுதார்கள் கையாளுகிறார்கள். ஹரிஜன மக்களை அவர்களுடைய குடியிருப்பு மனைகளிலிருந்து அப்புறப்படுத்தக் கூடாதென்ற சட்டம் இல்லாததால் அவர்கள் இவ்வாறு அப்புறப்படுத்தப்படுகிறார்கள். டெனண்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் பிரகாரம் நிலத்தில் உழுபவனுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் மிராசுதார்களின் மனைகளில் குடியிருக்கும் ஹரிஜனங்களுக்கு அத்தகைய பாதுகாப்பு அளிக்கக்கூடிய சட்டம் இல்லை. அதன் காரணமாக அவர்கள் குடியிருப்பு மனைகளிலிருந்து அப்புறப்படுத்தப் படுகின்றனர். அவர்களுக்கு வீடுகள் அமைத்து கொடுக்க சர்க்கார் முன் வர வேண்டும். ஹரிஜனங்கள் மனைகட்டு கோரி மனு அனுப்பினால், தகுந்த இடம் இல்லாததால் அவர்களுக்கு சர்க்கார் மனைக்கட்டு வழங்கக் காலதாமதமாகிறது. அவ்வாறு வேறுதகுந்த இடம் இல்லாவிட்டாலும்



அவர்கள் ஏற்கனவே இருக்கும் இடத்தையே அதாவது மிராசுதார்களுடைய மனையையே சர்க்கார் ஆர்ஜிதம் செய்யலாம். அத்துடன் ஹரிஜன மக்களுக்கு மனை வழங்கும் முறை இன்றல்ல, நேற்றல்ல. பாரம்பரியமாக அவர் முதாதையர் காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. அவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் பெரும்பாலும் நத்தம் ஜாரி என்ற இடங்களில் குடியிருக்கிறார்கள். அந்த நத்தம் ஜாரிக்கு தடங்கல் கிடையாது. அந்த இடங்கள் சர்க்கார் மனை என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறது. எனவே அந்த இடங்களை, இப்போது உடைமை கொண்டாடும் சொந்தக்காரர்களிடமிருந்து விலை கொடுத்து வாங்காமலே ஹரிஜனங்களுக்குப் பட்டா செய்து கொடுக்கலாம்.

ஹரிஜனங்களுக்கு கிணறுகள் வெட்டிக் கொடுப்பதில் காலதாமதம் இருக்கிறது. இந்த விஷயத்தில் ப்ளாக் ஏரியா, நான்-ப்ளாக் ஏரியா என்ற பாகுபாடு இருக்கிறது. நான்-ப்ளாக் ஏரியாவில் எம்.ஐ.ஓ. என்ற அதிகாரி இருக்கிறார். அதாவது, அவர் மைனர் இறிகேஷன் ஆபீசர். ஓவர்சியர் என் பிராந்தியத்தில் மைனர் இறிகேஷன் ஆபீசரை நான் பார்க்க முடியவில்லை. இத்தனை கிணறுகளை இவ்வளவு காலத்திற்குள் வெட்ட வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும். கிணறு வெட்டுவதற்கான ஆபீசர், "ஜில்லா பூராவிற்கும் நான் ஒரு ஆபீசர் தான். நான் ஜில்லா பூராவிலும் கிணறு வெட்டும் வேலைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. 20,30 மனுக்களை கொடுத்ததால் நான் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்று அவர் சொன்னார். எனவே கிணறு வெட்டுவதற்கான அதிகாரிக்கு ஒரு உதவி அதிகாரியை நியமித்தால் சர்க்காரின் திட்டம் விரைவில் நிறைவேறும். கனம் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் வரும் போது அவர்களிடம் கொடுக்கப்படும் மனுக்கள் உடனடியாகக் கவனிக்கப்பட்டு காரியங்கள் செய்யப்படுகின்றன. பிற சமயங்களில் அதிகாரிகளிடம் கொடுக்கப்படும் மனுக்களின் பேரில் அவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. எதிர்கட்சிக்காரர்களோ, கனம் அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்வதாக அதை ஒரு குறை போலச் சொல்கிறார்கள். அவர்கள் சுற்றுப் பிரயாணங்களால் நான் குறிப்பிட்டது போன்ற நல்ல பலன்கள் ஏற்படுகின்றன. அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்தால் அதிகாரிகள் காரியங்களை உடனடியாகச் செய்கிறார்கள். எனவே அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அதிகாரிகள் மக்களின் மனுக்களை உடனடியாக கவனிப்பதில்லை. சர்க்கார் ஹரிஜனங்களுக்காக ஆண்டுக்கு ஆண்டு அதிகப் பணம் ஒதுக்குகிறார்கள். இந்த ஆண்டும் ஹரிஜனங்களுக்காக அதிகப் பணம் ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறோம்.

ஹரிஜன மக்களுக்குக் கடந்த 10 ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகளை மேலும் 10 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து கொடுத்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஹரிஜன மக்கள்—இன்று நேற்றல்ல—ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்பட்டு வந்திருக்கின்றனர். மனிதனுக்கு மனிதன் தொட்டுத் தீண்டக் கூடாது என்று சட்டத்தின் வாயிலாகவே இருப்பதாக இந்தக் காலத்தில் நம்பினார்கள். மாற்றுக் கட்சிக்காரர்கள் சமுதாய சீர்திருத்தம் செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டு மேடையிலே முழக்கம் செய்த காரணத்தால் இன்று ஹரிஜனங்களுடைய நிலைமையிலே முன்னேற்றம் ஏற்பட்டு விடவில்லை. சட்டத்தின் வாயிலாகத் தான் இன்றைய தினம் ஹரிஜன மக்கள் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. யார் யார் மேடையிலே பேசுகின்றார்களோ அவர்கள் கிட்டே நெருங்கிப்பார்த்தால் அவர்கள் பெரிய மிதவாதிகளாக இருப்பது தெரியும். சட்டத்தின் வாயிலாக இந்தக் காங்கிரஸ் சர்க்கார் கடந்த 12 ஆண்டுகளில் பல நன்மைகளை ஹரிஜனங்களுக்கு செய்து கொடுத்திருக்கிறது. தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம் ஆகியவற்றையெல்லாம் செய்து கொடுத்த காங்கிரஸ் சர்க்காரை வரவேற்கவும், நன்றி செலுத்தவும் கடமைப்பட்டுள்ளோம். கோயில்களின் நிர்வாகிகளாக ஹரிஜனங்களை நியமிப்பதற்குச் சட்டப் பிரகாரம் இடமில்லை. ஹரிஜன மக்களுக்காக, தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம் முதலியவைகளெல்லாம் கொண்டு வரப்பட்டாலும் கூட கோயில்களிலும் ஹரிஜன

[Sri P. Jayaraj] [24th March 1960

மக்களை நியமித்தால் ஓரளவு பக்தி அதிகமாக வளரவும் வாய்ப்பு ஏற்படும். இதைச் சர்க்கார் செய்வார்களானால் போற்றத் தக்க முறையில் இருக்குமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜன மக்கள் வசிக்கும் இடங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவேண்டும். சென்ற ஆண்டு இதற்காக 2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில் ஒன்றரை லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது. ஒரு வருஷ காலத்திற்கு முன்னதாக நான் அமைச்சர் அவர்களிடத்தில் மனு ஒன்று கொடுத்திருந்தேன். பஞ்சாயத்து போர்டார், ஹரிஜனங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்காகப் பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மெண்டிலிருந்தும் இதற்காக நிதி உதவினால் உடனடியாக அவர்கள் வாழும் பகுதிகளிலும் மின்சாரத்தை விஸ்தரிக்க முடியும். அதனால் "ஆட்டோமாட்டிக் பம்ப் செட்டுகள்" வைத்துக்கொள்வதற்கும் சௌகரியமாக இருக்கும். இவ்வாறு நான் மனுக் கொடுத்திருந்தேன். இது வரை இந்தக் காரியம் எடுத்துக்கொள்ளப்பட வில்லை. இனிமேலாவது செய்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹரிஜன மக்களுடைய கல்விக்காக மிகுந்த வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். மாயவரம் தொகுதியில், மணல்மேடு பிர்க்காவில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. அங்கு 150 ஹரிஜன மாணவர்கள் படிக்கிறார்கள். இன்றைய தினம் ஒவ்வொரு ஜில்லாவிலும் இவ்வளவு தான் செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிர்ணயத்தை கொஞ்சம் தளர்த்த வேண்டும். எங்கு அதிகமான ஹரிஜன மாணவர்கள் படிக்கிறார்களோ அங்கு அதிகப்படியான தொகை ஒதுக்க வேண்டும். மாயவரம் தொகுதியில் இரண்டு ஹாஸ்டல்கள் இருக்கின்றன. அதிகப்படியாக ஏற்படுத்துவது முடியாதென்றாலும், ஹரிஜன மாணவர்கள் முன்னேற்றத்தை உத்தேசித்து தேவைக்கேற்ப அதிகப்படியான ஹாஸ்டல்களையும் ஹைஸ்கூல்களையும் ஏற்படுத்த முன் வர வேண்டும். மேலும் ஹரிஜன மக்களுக்காக நடத்தப்படும் ஹாஸ்டல்கள் சர்க்காருடைய பார்வையில் இருந்து வந்தால் நல்ல முறையில் இருக்குமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தனியார் துறையைவிட சர்க்கார் துறையில் தான் சீரும் சிறப்புமாக இருக்கிறதென்று என்னுடைய அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன்.

இந்த சர்க்காரிலே ஹரிஜன மக்களுக்காக மிகுந்த அளவில் சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதை விட வீடு கட்டும் மனைகள் வழங்க சர்க்கார் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

Mr. SPEAKER: Hon. Members Sri N. Marudachalam and Sri S. R. Muniswamy who have given their names are not in their seats. The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.



24th March 1960]

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—Statutory Rules and Orders.

* 88. *Amendment to the Madras Beedi Industrial Premises (Regulations of Conditions of Work) Rules, 1959, prescribing certain qualifications for Inspector issued in G.O. Ms. No. 30, I.L.C. (Labour), dated 2nd January 1960. [Laid on the table of the House under section 41 (3) of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 (Madras Act XXXII of 1958).*

### B.—Reports Notifications and other Papers.

* 43. *Amendment to the Madras Electricity (Supply) Finance Rules, 1958, issued under the Electricity (Supply) Act, 1948 (Central Act LIV of 1948) in G.O. Ms. No. 88, Public Works, dated 11th January 1960.*

* 44. *Report of the Committee on Estimate (1959-60), on Rural Water-Supply Comprehensive Schemes.*

---

* Placed on the table on 23rd March 1960.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 25th March 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.)

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: The questions relating to the Hon. the Minister for Industries and the Hon. the Minister for Local Administration will be taken up a little later.

*Vettavalam Panchayat Board*

* 553 *Q*.—SRI A. GOVINDASAMY (on behalf of SRI K. ANBAZHAGAN) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government received any complaint as to the misappropriation of the public funds by the former President of the Vettavalam Panchayat Board, North Arcot district;

(*b*) if so, the action taken thereon; and

(*c*) whether the Block Development Officer sanctioned any amount of money to build a reading room at Vettavalam, if so, how much and whether it was used to that end?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) A complaint was received by the Inspector of Municipal Councils and Local Board, Madras. The question of taking action is being examined by the Collector.

(*c*) A report has been called for from the Collector and it is awaited.

SRI A. GOVINDASAMY : இந்த பஞ்சாயத்து போர்டு தலைவர் பல துறைகளில் பணத்தைக் கையாண்டிருக்கிற காரணத்தால் என்ன நடவடிக்கையை அவர் மீது எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: கலெக்டரிடம் அறிக்கை கேட்டிருக்கிறோம். அது வந்த பிறகு தான் இதுபற்றி முடிவு செய்ய இயலும்.

*Bus stand for Valliyur.*

* 554 Q.—SRI K. VINAYAKAM (on behalf of Sri V. K. KOTHANDARAMAN) : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

திருநெல்வேலி ஜில்லா, வடக்கு வள்ளியூர் பஞ்சாயத்துக்கு பஸ் ஸ்டாண்டு கட்ட வேண்டுமென்று சர்க்காரிடம் சர்க்காருக்கு சொந்தமான எஸ். நெ. 1256/1, 1261/5 நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கும்படி மேற்படி பஞ்சாயத்தார்கள் கேட்டு வருவது உண்மையா ? அது சம்பந்தமாய் எப்பொழுது உத்திரவு போடப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is reported that the Panchayat has applied to the Collector of Tirunelveli for placing these lands at its disposal for locating a bus stand. No proposal has yet reached Government.

[25th March 1960

### *Village chavadis*

* 555 *Q.*—SRI P. G. MANICKAM (on behalf of SRI S. LAZAR) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the arrangements made to repair or maintain in good condition 'the village chavadi' and the 'village pound' existing in almost every Revenue village;

(*b*) whether any budget allotment is made every year towards repairs and maintenance of the said two varieties of buildings; and

(*c*) whether there is a proposal by the Government to entrust the village chavadis to the Local Panchayat Boards?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The upkeep of village chavadis and cattle pounds in this State, except in the Kanyakumari district is being looked after by the taluk revenue officers. The touring officers of the Revenue Department inspect the pounds and chavadis in the villages under their jurisdiction. When repairs or improvements to these buidings are found necessary, the taluk officers prepare the necessary estimates. The estimates are sanctioned for execution according to urgency and availability of funds.

(*b*) Yes, Sir.

(*c*) Yes, Sir.

SRI K. VINAYAKAM : Is there a watchman to keep a watch over the village chavadis, which are being more or less used as shelter for stray cattle that could not find places to rest during the nights?

THE HON. SRI M. A. MANICKAVELU : Stray cattle find their place in the 'pounds'. But in the chavadis there is no regular watchman but the village officers and the talayaris look after it.

SRI S. M. ANNAMALAI : நமது மாநிலத்தில் எத்தனை கிராமச் சாவடிகள் இருக்கின்றன, எத்தனை பவுண்டுகள் இருக்கின்றன என்று கனம் அமைச்சர் சொல்ல முடியுமா ? கிராமச் சாவடிகளும், பவுண்டுகளும் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக சரிவரப் பராமரிக்கப்படாததால் துர்நாற்ற மடித்துக் கொண்டிருக்கின்றன. அவைகளை உடனடியாக ரிப்பேர் செய்ய சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அனேகமாக, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சாவடி இருக்கிறது. இவைபற்றி உத்தியோகஸ்தர்கள் எழுதி அனுப்புவதைப் பார்த்தால், இவை 20 வருஷங்களாக ரிப்பேர் செய்யப்படவேயில்லை என்று சொல்வது சரியல்ல என்று தெரிகிறது. ஏதாவது ஓரிரண்டு இடங்களில் அவ்வாறு இவை ரிப்பேர்செய்யப்படாமல் இருக்கக்கூடுமே தவிர, அனேகமாக எல்லா இடங்களிலும் இவை அப்போ தைக்கப்போது ரிப்பேர் செய்யப்பட்டுத் தான் வருகின்றன.



25th March 1960]

SRI S. RAMALINGA PADAYACHI : கிராமப் பவுண்டுகள் எங்கு பார்த்தாலும் ரொம்பவும் பழுதடைந்து காலியாகி விட்டன. கிராமப் பவுண்டுகளைப் புதுப்பித்து, விவசாயத்திற்கு அழிவு ஏற்படாதபடி செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி எனக்கு சரியாகப் புரியவில்லை. பவுண்டுகளால் எப்படி விவசாயத்திற்கு அழிவு ஏற்படும் ? கனம் அங்கத்தினர் கேள்வியை விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. RAMALINGA PADAYACHI : மாடுகள் விவசாயப் பயிர்களை அழித்து விடுகின்றன. அவைகளை பவுண்டுகளில் அடைக்கலாம் என்றால், பவுண்டுகள் பழுதடைந்து காலியாகி விட்டன. எனவே பவுண்டுகளைப் புதுப்பிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பவுண்டுகள் செம்மையாகத்தான் இருக்கின்றன. சாவடிகள் தான் சரியாக ரிப்பேர் செய்யப் படாமல் இருக்கின்றன. ஆனால், சில சமயங்களில், பவுண்டுகளில் அடைக் கப்பட்ட மாடுகளை, அவைகளின் சொந்தக்காரர்களே வந்து பவுண்டு களிலிருந்து விடுவித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இந்த விஷயத்தில் நல்ல பந்தோபஸ்து இருந்தால் எல்லாம் சரியாக இருக்கும்.

SRI K. PERIANNAN : கிராமப் பவுண்டுகளையும், கிராமச் சாவடிகளையும் அந்த அந்தப் பஞ்சாயத்துகளே மெய்ன்டெய்ன் பண்ண வேண்டும் என்று அரசாங்கம் உத்திரவிடுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதெல்லாம், புதிய ஸ்தல ஸ்தாபன சட்டப் பிரகாரம், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கள் இவைகளுடைய பராமரிப்பில் வரும்.

SRI S. M. ANNAMALAI : சில பர்ஸ்ட் க்ளாஸ் பஞ்சாயத்துக்களில் கூட கிராமச் சாவடிகள் இருக்கின்றன. அந்த கிராமச் சாவடிகளை மாற்றி யமைத்து ட்ராவலெர்ஸ் பங்களாவாக ஆக்க சர்க்கார் முற்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : என்னதான் செய் தாலும், சாவடியை ட்ராவலெர்ஸ் பங்களாவாக மாற்ற முடியாது. சாவடியையே ரிப்பேர் செய்து அதை இன்னும் கொஞ்சம் நல்லபடியாக வைக்கலாம்.

SRI T. K. SUBBIAH : ஜமீன்தார்களால் ஒப்படைக்கப்பட்ட கிராமச் சாவடிகள் பழுதுபார்க்கப்படாமலேயே இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அவைகளை உடனடியாகப் பழுதுபார்க்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவைகளை பழுது பார்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இருந்த சாவடிகளெல்லாம் நல்ல நிலைமையில் இருக்கின்றன.

SRI K. B. S. MANI : கிராமப் பவுண்டுகளிலிருந்து மாடுகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு போகிறவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பணம் சம்பந்தமாக சரியான கணக்கை, பவுண்டு நிர்வாகிகள் வைத்திருப்பதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இந்த மாதிரியான புகார்கள் சர்க்காருக்கு வந்து, அதன் பேரில் சர்க்கார் விசாரணை செய்தார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பண வசூல் சமாசாரம் வேறு விஷயம். அது இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை. அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை.

[25th March 1960

SRI S. NAGARAJA MONIGAR : In view of the fact that there are a large number of chavadis in the State, will the Government consider the desirability of setting apart a good sum of money during the next year for wholesale repair of all these chavadis so that they could be used as community centres, etc.

THE HON. SRI M. A. MANICKAVELU : It cannot be a wholesale affair. It can only be a phased programme and Government every year allot about three-quarters or a lakh of rupees for repairs.

SRI P. G. MANICKAM : ஸார், கிராமச் சாவடிகளையெல்லாம் பஞ்சாயத்து சபையிடம் ஒப்படைப்பது பற்றி அரசாங்கத்துக்கு உத்தேசமிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அநேக பஞ்சாயத்து போர்டுகள் அது பற்றிச் சர்க்காருக்கு எழுதியும் அவைகள் ஒப்படைக்கப்படவில்லை. அந்தந்த பஞ்சாயத்து போர்டு கிராம சாவடி தேவையென்று எழுதினால் அவர்களிடம் ஒப்படைக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தப் புதுச் சட்டம் பூராவும் அமுலாகும்போது எல்லாம் சரியாக நடைபெறும்.

SRI A. A. RASHEED : Is there any proposal to electrify these chavadis and also provide furniture ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, it may be, as a delayed programme, that some of the chavadis may get electrified.

### *Colonies for Gypsies*

556 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நரிக்குறவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு காலனியிலும் எத்தனை ஏகரா நிலங்கள் இருக்கின்றன ?

(ஆ) இவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க அரசாங்கத்தாரால் திட்டமிடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A statement* is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : சென்னை ராஜ்யத்திலே மொத்தம் எத்தனை நரிக் குறவர்கள் இருக்கிறார்கள் ? எவ்வளவு பேருக்கு இது வரை உதவி செய்யப்பட்டிருக்கிறது ? இன்னும் எவ்வளவு பேருக்கு உதவி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : ஸார், வட ஆற்காடு மாவட்டத்தில், தென்பள்ளிப்பட்டியில் நரிக் குறவர்கள் இருக்கிறார்கள். மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் பதிலைப் பார்த்தால் அவர்களுக்கு " புல்ஸ் " வாங்கிக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவர்களுக்குப் பசு மாடுகள்தான் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் நன்றாக இல்லையென்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

* Printed as Appendix I on pages 622–623 infra.



25th March 1960]

THE HON. SRI P. KAKKAN : தென்பள்ளிப்பட்டியில் 34·80 ஏக்கர் நிலம் வீடு கட்ட வாங்கப்பட்டிருக்கிறது. 'It is proposed to construct houses'.

(*b*) the details of the reply sent to the Planning Commission; and



25th March 1960]

(*c*) whether a copy of the report will be placed on the table of the House ?

*A.*—(*a*) Yes, Sir.

(*b*) & (*c*) It is not desirable to disclose the details at this stage.

*Minimum wages for workers*

274 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state whether any machinery has been set up to implement the minimum wages already fixed for the workers in the State ?

*A.*—Under section 19 of the Minimum Wages Act, 1948, the following officers of the Labour Department have been appointed as "Inspectors" to enforce the minimum wages fixed:—

(i) Commissioner of Labour;

(ii) Chief Inspector of Factories;

(iii) Assistant Commissioner of Labour;

(iv) Inspectors of Factories;

(v) Labour Officers;

(vi) Assistant Inspectors of Labour;

(vii) Personal Assistant to the Commissioner of Labour; and

(viii) Inspectors of Plantations.

*Tamarind*

275 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have made any arrangements with the North Indian States like former Saurashtra State for a regular supply of tamarind to this State ?

*A.*—No Sir.

*Minor ports*

276 *Q.*—Sri M. P. SARATHI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்திலுள்ள சிறிய துறைமுகங்கள் (Minor ports) எவை ?

(ஆ) இதுவரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளவை எவை ?

(இ) 1960-ல் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளவை எவை ?

*A.*—(*a*) The minor ports in this State are Cuddalore, Porto Novo, Nagapattinam, Adiramapattinam, Tondi, Pamban, Rameswaram, Vedalai, Dhanushkodi, Kilakarai, Tuticorin, Vaippar, Vembar, Kulasekarapattinam, Colachel, Manakudy and Kovalam.

(*b*) The ports so far developed are Tuticorin, Cuddalore, Nagapattinam, Kilakarai, Pamban and Kulasekarapattinam.

(*c*) Tuticorin, Cuddalore and Nagapattinam mainly are proposed to be further developed in 1960 and onwards.

[25th March 1960

*Horse races*

277 *Q.*—Sri M. P. SARATHI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் " குதிரைப் பந்தயங்களை " ஒழிப்பது பற்றிய சட்டம் எப்போது அமுல் நடத்தப்படும் ?

(ஆ) அந்தச் சட்டத்தை ரத்து செய்ய அரசாங்கத்திடம் கோரிக்கை வந்துளதா ?

*A.*—(*a*) The Government have deferred the implementation of sections 2 and 4 of the Madras City Police and Gaming (Amendment) Act, 1949, prohibiting betting on horse races, for a further period of five years from 1st April 1958.

(*b*) No, Sir.

*Artificial Insemination Centres*

278 *Q.*—Sri M. P. SARATHI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் செயற்கை கருத்தரிப்பு நிலையங்கள் (Artificial Insemination Centres) நகரப் புறங்களில், கிராமப் புறங்களில் முறையே எத்தனை இருக்கின்றன ?

(ஆ) 1960-ல் புதிதாகத் துவக்கப்படவிருப்பவை எவை ?

(இ) வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை ?

*A.*—(*a*) 19 and 45 respectively.

(*b*) Nine.

(*c*) Nil.

279 *Q.*—Sri M. P. SARATHI: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்ய செயற்கை கருத்தரிப்பு நிலையங்களுக்குத் தேவையான (semen diluent) விந்து இங்கேயே தயாரிக்கப்படுகின்றதா ?

(ஆ) இங்கு தயாரிப்பதற்கும், மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன ?

(இ) அதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

*A.*—(*a*) Yes.

(*b*) A central laboratory for preparation and distribution of semen diluent to all Artificial Insemination Centres in this State has been established at Madras and it will start functioning soon.

(*c*) Rs. 1,734·81 up to 31st December 1959.

*Soil Conservation Board*

280 *Q.*—Sri M. P. SARATHI: Will the Hon. the Minister for Home be pleased to answer the following questions—

(*a*) who are the members of the Soil Conservation Board;



25th March 1960]

(*b*) What is the targeted acreage under this Programme; and

(*c*) What is the achievement so far made and in which districts ?

*A.*—(*a*) The members of the State Soil Conservation Board are—

| | |
|---|---|
| The Minister in charge of Agriculture .. .. | Chairman. |
| The Development Commissioner .. .. .. | Member. |
| The Commissioner for Land Revenue .. .. | Do. |
| The Secretary to Government, Food and Agriculture Department. | Do. |
| The Director of Agriculture, Madras .. .. | Do. |
| The Chief Engineer (Irrigation), Madras .. .. | Do. |
| The Chief Engineer (Highways), Madras .. .. | Do. |
| The Chief Conservator of Forests, Madras .. .. | Do. |
| The Director of Animal Husbandry, Madras .. | Do. |
| The State Silviculturist, Madras .. .. .. | Do. |
| The Officer incharge of Government of India Soil Conservation Research Centre, Ootacamund | Do. |
| Sri D. C. Kothari, Chairman, UPASI .. .. | Do. |
| Sri N. M. Lingam, M.P. .. .. .. .. | Do. |
| The Joint Director of Agriculture (Engineering), Madras. | Secretary. |

(*b*) The targeted acreage for the Second Plan period is 100,900 acres.

(*c*) The Soil Conservation Programme is now in operation in the Nilgiris, Coimbatore, North Arcot, South Arcot, Chingleput, Salem, Tiruchirappalli and Madurai districts. An area of 55,000 acres has been covered so far.

*Shifting of the Madras Central Jail.*

281 *Q.*—Sri M. P. SARATHI, and Sri A. A. RASHEED : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மத்திய சிறைச்சாலையை நகருக்கு வெளியே கொண்டு போகும் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

(ஆ) இந்த மாற்றத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு?

*A.*—(*a*) The site is being selected.

(*b*) It is proposed to construct the Central Jail at a total cost of about Rs. 15 lakhs which includes the cost of shifting the machineries, etc., from the Central Jail, Madras, to the Central Jail proposed to be constructed.

*Dog Squad*

282 *Q.*—Sri M. P. SARATHI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த இராஜ்ய போலீசு இலாகாவினுல் இராணுவத்திற்காக, ரயில்வேக்காக, சுங்க இலாகாவுக்காக, இதர ராஜ்யங்களுக்காக இதுவரை எத்தனை நாய்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளன ?

[25th March 1960

(ஆ) இந்த ராஜ்யத்தில் எத்தனை பயிற்சி பெற்ற நாய்கள் உள்ளன ?

(இ) சென்ற ஆண்டில் இந்த இராஜ்ய Dog Squad-லிருந்து வெளி ராஜ்யங்களுக்கு இனமாகவோ விலைக்காகவோ நாய்கள் கொடுக்கப்பட்டனவா?

*A.*—

(*a*) 1. For the Army .. .. .. .. 3 dogs.

2. For the Railway Protection Force .. 1 dog.

3. For the Customs .. .. .. .. 2 dogs.

4. For other States—

(i) For Bihar Police Department .. 2 dogs.

(ii) West Bengal Police Department. 2 dogs.

(iii) For Madhya Pradesh Police Department. 2 dogs are now under training and the training will be completed by 1st March 1960.

(*b*) Six dogs. In addition, three pups are under training.

(*c*) No, Sir.

### *Labour Contract Co-operatives*

283 *Q.*—SRI M. P. SARATHI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த இராஜ்யத்தில் (Labour Contract Co-operatives) எத்தனை இயங்கிக் கொண்டிருக்கின்றன ? எங்கெங்கு ?

(ஆ) அவைகள் எத்தகைய பணியாற்றுகின்றன ?

(இ) அவைகளுக்கு அரசாங்கம் செய்யும் உதவியும், அதற்கான செலவும் எவ்வளவு ?

*A.*—(*a*) Twenty-seven labour contract co-operative societies are working in the State, as detailed below—

| *Serial number and name of the Society.* | | *Name of the district.* |
|---|---|---|
| 1 Dock Mineral .. .. .. | Co-operative Labour Contract Society. | Madras. |
| 2 Kallacheri .. .. .. | Do. | Chingleput. |
| 3 Sankarapuram .. .. | Do. | Do. |
| 4 Tirukalikundram .. .. | Do. | Do. |
| 5 Nanmangalam .. .. | Do. | Do. |
| 6 Tiruvannamalai .. .. | Do. | North Arcot. |
| 7 Palanjanallur .. .. | Do. | South Arcot. |
| 8 Ramamoorthinagar (Mettur). | Do. | Salem. |
| 9 Kangeyam .. .. .. | Do. | Coimbatore. |
| 10 Avanashi .. .. .. | Do. | Do. |
| 11 Thuvakudi .. .. .. | Do. | Tiruchirappalli. |
| 12 Dalmiapuram .. .. | Do. | Do. |
| 13 Tanjore .. .. .. | Do. | Tanjore. |
| 14 Madurai district Kallar Reclamation (Checkanoorani). | Do. | Madurai. |
| 15 Madurai .. .. .. | Do. | Do. |
| 16 Uthamapalayam .. .. | Do. | Do. |
| 17 Palani .. .. .. | Do. | Do. |
| 18 Kottagiri .. .. .. | Co-operative Labour Contract Society. | Nilgiris. |
| 19 Rajapalayam .. .. .. | Do. | Ramanathapuram. |
| 20 Dhanushkodi .. .. .. | Do. | Do. |
| 21 Ottapidaram .. .. .. | Do. | Tirunelveli. |
| 22 Perungulam .. .. .. | Do. | Do. |
| 23 Sennamareddipatti .. .. | Do. | Do. |
| 24 Vanaramutti .. .. | Do. | Do. |
| 25 Thukalay .. .. .. | Do. | Kanyakumari. |
| 26 Puthalam .. .. .. | Do. | Do. |
| 27 Colachel .. .. .. | Do. | Do. |



(*b*) The primary objective of the labour contract co-operative societies is to eliminate the exploitation of labourers by middlemen, i.e., the contractors. The Societies undertake on contract the execution of minor irrigation works, metalling of roads, construction of houses, quarrying, supply of labour, etc., employ their members in the execution of the works and pay them wages and bonus.

(*c*) The following concessions are granted to these societies :—

(1) Contracts of the Public Works and Highways Departments up to Rs. 2,500 normally and up to Rs. 5,000 in specially deserving cases at the estimated rates without calling for tenders.

(2) The societies have been exempted from the payment of tender deposits and fees for registration in the approved list of contractors in the P.W.D., etc., departments.

(3) The societies are permitted to submit their bills at short intervals of one week in the case of minor works, and 14 days in the case of major works, for payment.

Some of the labour contract co-operative societies have also been granted by Government interest-free loans towards working capital and the loan of services of departmental officers free of cost as indicated in the statement below :—

| | *Name of the society.* | *Circle.* | *Extent of working capital granted as interest-free loan.* |
|---|---|---|---|
| | | | RS. |
| 1 | Tiruvannamalai Co-operative Labour Union. | Vellore (South). | 5,000 |
| 2 | Vanaramutti Labour Contract Co-operative Society. | Tuticorin | 5,000 |
| 3 | Ottapidaram Labour Contract Co-operative Society. | Do. .. | 5,000 |
| 4 | Perungulam Labour Contract Co-operative Society. | Do. .. | 5,000 |
| 5 | Kottagiri Labour Contract Co-operative Society. | Nilgiris .. | 15,000 * |
| 6 | Avanashi Labour Contract Co-operative Society | Coimbatore .. | 5,000 |
| 7 | Kangayam Labour Contract Co-operative Society. | Erode .. | 6,000 |
| 8 | Tanjore Labour Contract Co-operative Society. | Tanjore .. | 5,000 |
| 9 | Kollacheri Labour Contract Co-opertaive Society. | Chingleput .. | 10,000 * |
| 10 | Jarugu Colony (proposed to be started) .. | Dharmapuri .. | 10,000 |
| 11 | Palani (proposed to be started) .. .. | Dindigul .. | 8,000 |
| 12 | Dock Mineral Labour Contract Society .. | Madras .. | † |
| 13 | Rajapalayam Labour Contract Society .. | Ramanathapuram | † |

NOTE.—The average cost to Government on account of the four Senior Inspectors works out to Rs. 7,360 for one year.

* Free services of one Senior Inspector.
† Free services of one Senior Inspector as Manager.

[25th March 1960

*Bee Nurseries.*

284 *Q.*—SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த இராஜ்யத்திலுள்ள அரசாங்கத்தாரால் நடத்தப்படும் தேனீ வளர்ப்பு பண்ணைகள் (Bee Nurseries) எத்தனை ?

(ஆ) புதிதாக துவக்கப்பட விருப்பவை எத்தனை ? எங்கெங்கு ?

(இ) அவைகளிலிருந்து பொதுமக்களில் ஆர்வமுள்ளவர்களுக்கு தேன் கூடுகள் (Bee hives) வழங்கப்படுகின்றனவா ?

(ஈ) அவ்வாறு வழங்குவதற்கு என்னென்ன முறைகள் கையாளப் படுகின்றன ?

*A.*—(*a*) Three bee nurseries run by the Industries Department in this State, at Pattaraikadu in North Arcot District, Nogaraikkal in Salem District and Masinagudi in the Nilgiris District.

(*b*) Three additional bee nurseries are being established in Madurai, Coimbatore, and Tirunelveli districts at Kodaikanal, Attaikatti and Kodumudi respectively. Preliminary arrangements are being taken in this regard.

(*c*) The bee hives will be distributed to interested persons as early as possible, as the nurseries have been established only recently and as they are in the middle stage of progress.

(*d*) With the assistance of the Khadi and Village Industries Commission the Government sanctioned the scheme for the supply of 9,000 bee hives at subsidised rates to bee-keepers, in blocks under the scheme. Seven thousand four hundred and forty hives have been distributed to the various Block Development Officers. The Block Development Officers distribute the hives to individual bee-keepers within the Blocks at subsidised rates.

*Enactments for the Protection of Trade Union Labourers*

285 *Q.*—SRI M. P. SARATHI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தொழிற்சங்கத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவென்று தனியாகச் சட்டம் இயற்ற உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானால் அந்தச் சட்டம் எப்போது கொண்டு வரப்படும்?

*A.*—(*a*) No, Sir.

(*b*) Does not arise.

*Luxury Coach Service*

286 *Q.*—SRI M. P. SARATHI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த இராஜ்ய டிரான்ஸ்போர்ட் இலாகாவினால் (Luxury coach) Service நடத்தப்படுகிறதா ?

(ஆ) எத்தனை வண்டிகள் ?



25th March 1960]

(இ) அவைகள் கட்டுவதற்காக செலவு எவ்வளவு? அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன ?

*A.*—(*a*) Yes, Sir.

(*b*) 1 (one).

(*c*) Rs, 77,114·00 (Rupees seveny-seven thousand one hundred and fourteen). The Luxury Coach is used for special trips from Madras to Mahabalipuram on all Sundays and for excursion trips for tourists and students who wish to charter it. It is also used as a spare bus on Madras-Bangalore route.

*X-ray plants in District Head quarters Hospitals*

287 *Q.*—SRI M. P. SARATHI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த இராஜ்யத்திலுள்ள மாவட்ட தலைமை மருத்துவ நிலையங்களில் எல்லாம் (District Headquarters Hospitals) எக்ஸ்-ரே எடுக்கும் கருவிகள் வைக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) இல்லையென்றால் எந்தெந்த நிலையங்களில் இன்னும் வைக்கப்படவில்லை ?

(இ) அந்த இடங்களில் எப்பொழுது வைக்கப்படும் ?

*A.*—(*a*), (*b*) and (*c*) X-Ray plants are now functioning in all the District Headquarters Hospitals except in the hospital at Nagercoil. The X-Ray plant in the Government Headquarters Hospital, Nagercoil will also start working shortly.

*Starting of New Medical Colleges.*

288 *Q.*—SRI M. P. SARATHI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வைத்தியக் கல்லூரிகள் அமைக்க கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

(ஆ) அவைகளின் மீது என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது ?

*A.*—(*a*) Yes, Sir.

(*b*) In July 1958, an additional Medical College has been opened at Thanjavur with provision for annual admission of 75 students.

*Congress Exhibition.*

289 *Q.*—SRI P. U. SHANMUGAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் பொருட்காட்சியில் சென்னை அரசாங்கம் எவ்வளவு ரூபாய் செலவு செய்து பங்கு கொண்டது ?

*A.*—The Government have sanctioned an expenditure of Rs, 2,42,750 for participation by Government Departments in this exhibition. The actual expenditure will be known only after the exhibition is over.

***Murders in Virnchipuram***

290 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state —

(*a*) the number of murders committed in Virnchipuram in North Arcot district in the last two years;

(*b*) whether persons responsible for the murders have been charge sheeted; and

(*c*) if not, the reasons for the delay?

*A*.—(*a*) One in 1960.

(*b*) Yes, Sir.

(*c*) Does not arise.

[*Note*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member].

II.—ANNOUNCEMENTS.

(1) NOMINATION OF MEMBERS TO THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

MR. SPEAKER: I have to announce to the House that under Rule 201 (1) of the Madras Legislative Assembly Rules, I have nominated the following Members to serve on the Committee on Subordinate Legislation for the year 1960–61:—

1. SRI T. SAMPATH
2. SRI S. LAZAR
3. SRI P. RAMACHANDRAN
4. SRI V. S. MANICKASUNDARAM
5. SRIMATHI A. SUARES
6. SRI K. VINAYAKAM
7. SRI M. P. SUBRAMANIAM
8. SRI Sowdi S. SUNDARA BHARATHI
9. SRI V. SANKARAN
10. SRI R. SRINIVASA IYER.

Under Rule 202 of the Assembly Rules, I nominate Sri T. Sampath to be the Chairman of the Committee.

(2) ELECTION OF MEMBERS TO THE COMMITTEE OF PRIVILEGES

MR. SPEAKER: I have to announce to the House that the following fifteen Members were duly nominated for the election of fifteen members of the Madras Legislative Assembly to the Committee of Privileges for 1960–61:—

1. SRI A. V. P. ASAITHAMBI
2. SRI P. G. KARUTHIRUMAN
3. SRI V. K. KOTHANDARAMAN
4. SRI S. LAZAR
5. SRI K. R. NALLASIVAM



6. SRI C. R. RAMASWAMY
7. SRI T. S. RAMASWAMY
8. SRI V. SANKARAN
9. SRI M. P. SARATHI
10. SRI M. S. SELVARAJAN
11. SRI Sowdi S. SUNDARA BHARATHI
12. HON. SRI C. SUBRAMANIAM
13. SRI R. SUBRAMANIAM
14. SRI P. VEERAPPA GOUNDER
15. SRI K. VINAYAKAM.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., FIFTEEN, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges for the year 1960-61. The Deputy Speaker is a Member ex-officio of the Committee.

Under sub-rule (4) of Rule 183 of the Madras Assembly Rules, I nominate Sri S. Lazar to be Chairman of the Committee of Privileges.

(3) ELECTION OF MEMBERS TO THE HOUSE COMMITTEE.

MR. SPEAKER: I have to announce to the House that the following eleven members were duly nominated for the election of eleven members of the Madras Legislative Assembly to the House Committee for 1960–61:—

1. SRI M. A. B. ARUMUGASWAMY
2. SRI P. S. CHINNADURAI
3. SRI K. GOPALA GOUNDER
4. SRI S. LAKSHMANA GOUNDER
5. SRI A. MARIAPPAN
6. SRI A. V. P. PERIAVALAGURUVA REDDIAR
7. SRIMATHI A. S. PONNAMMAL
8. SRI T. R. RAMAMIRTHA THONDAMAN
9. SRI P. S. SANTHANAM
10. SRI M. K. SOMASUNDARAM
11. SRI R. SWAMINATHA MERKONDAR.

As the number of candidates who were duly nominated is equal to the number of vacancies to be filled, viz., ELEVEN, I hereby declare that the above eleven members have been duly elected to the House Committee.

Under Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate (1) Sri C. Muthiah, (2) Sri N. Marudachalam, (3) Sri T. S. Ramaswamy and (4) Dr. Srimathi Sathiavanimuthu to be members of the House Committee.

The Deputy Spaker is the ex-officio Chairman of the House Committee.

[25th March 1960

(4) NOMINATION OF MEMBERS TO THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

MR. SPEAKER : I have to announce to the House that under Rule 214 (1) of the Madras Assembly Rules, I have nominated the following Members to serve on the Committee on Government Assurances for the year 1960-61—

1. SRI K. SATTANATHA KARAYALAR
2. SRI A. VEDARATHNAM PILLAI
3. SRI S. M. ANNAMALAI
4. SRI M. JAGANNATHAN
5. SRI C. MUTHIAH
6. SRI G. G. GURUMURTHI
7. SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM.

Under Rule 215 (1) of the Assembly Rules, I nominate Sri K. Sattanatha Karayalar to be the Chairman of the Committee.

(5) VOTING ON DEMANDS FOR GRANTS.

MR. SPEAKER : I have to announce to the House under Rule 155 of the Madras Legislative Assembly Rules, I have in consultation with the Leader of the House and the Business Advisory Committee fixed the following order in which the Demands for Grants are to be taken up and also allotted the time for the discussion of each Demand in April 1960.

| | | |
|---|---|---|
| Wednesday, the 6th April 1960. | I. Land Revenue Department<br>III. Stamps Administration ..<br>XII. District Administration and Miscellaneous.<br>XXXV. Compensation to Zamindars .. | 4 hours. |
| Thursday, the 7th April 1960. | XVII. Medical ..<br>XVIII. Public Health .. | 4 hours. |
| Friday, the 8th April 1960. | XXII. Industries and Cinchona .. | 4 hours. |
| Saturday, the 9th April 1960. | XXVIII. Civil Works—Grants-in-aid .. | 4 hours. |
| Monday, the 11th April 1960. | VII. General Sales Tax and other Taxes and Duties Administration. | 4 hours. |
| Tuesday, the 12th April 1960. | VIII. Irrigation.<br>XVII. Capital Outlay on Irrigation .. | 4 hours. |
| Thursday, the 21st April 1960. | XXV. Labour including Factories .. | 4 hours. |
| Friday, the 22nd April 1960. | XXVI. Civil Works—Works ..<br>XXVII. Civil Works—Establishment and Tools and Plant. | 4 hours. |
| Monday, the 25th April 1960. | XXI. Co-operation .. | 4 hours. |
| Tuesday, the 26th April 1960. | XVI. Education .. | 4 hours. |



25th March 1960]

| | | |
|---|---|---|
| Wednesday, the 27th April 1960. | IX. Head of State Ministers and Head-quarters Staff.<br>X. State Legislature.. ..<br>XI. Elections .. | 4 hours. |
| Thursday, the 28th April 1960. | XXXIII. Community Development Projects, National Extension Service and Local Development Works. | 4 hours. |
| Friday, the 29th April 1960. | V. Registration Department .. | 2 hours. |
| | XXX. Pensions .. | 2 hours. |

I shall have this circulated to the Members later on.

III.—LEAVE OF ABSENCE TO A MEMBER.

SRI P. G. KARUTHIRUMAN : Mr. Speaker, Sir, I move—

"That, under Rule 11 of the Madras Legislative Assembly Rules, leave of absence be granted by this House to Sri A. Rathnavel Gounder till the end of April 1960, from the date of his absence."

MR. SPEAKER : The question is :

"That, under Rule 11 of the Madras Legislative Assembly Rules, leave of absence be granted by this House to Sri A. Rathnavel Gounder till the end of April 1960, from the date of his absence."

The motion was put and carried.

IV.—CALLING ATTENTION TO THE SEASONAL CONDITIONS IN SANKARANKOIL AND TENKASI TALUKS.

* MR. SPEAKER : I have received notice under Rule 41 from Sri A. R. Subbiah Mudaliar that he wants to call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, viz., adverse seasonal conditions in Sankarankoil and Tenkasi taluks and the necessity to start famine relief measures in those areas.

SRI A. R. SUBBIAH MUDALIAR : கனம் தலைவர் அவர்களே, பருவ மழை தவறிவிட்டதன் காரணமாக சங்கரன்கோவில் தாலுக்கா பூராவிலும் தென்காசி தாலுக்காவில் ஆலம்குளம், கடையநல்லூர் பிர்க்காவின் சில பகுதிகளிலும் கொடிய பஞ்சம் தாண்டவமாடுகிறது. சங்கரன் கோவில் தாலுக்காவை எடுத்துக்கொண்டால் ஆவரேஜ் ரெயின்பால் 33 இன்சு. சென்ற வருஷத்தில் 22 இன்சுதான். சென்ற நான்கு வருஷங்களாக 17 இன்சில் இருந்து 22 இன்சுக்குள்ளாகவே பெய்து கொண்டிருக்கிறது. சென்ற வருஷமும் பருவ மழை தவறிவிட்டதனால் பஞ்சம் அதிகமாகிவிட்டது. ஆகையால் Postponement of Loans ஸ்பெஷல் ரெமிஷன், Low Scale Famine Relief Works' எல்லாம் அந்தப் பிரதேசத்தில் செய்யவேண்டும். அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கும்படியாகவும் கனம் மந்திரி அவர்களை இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the rainfall in the year 1959 in Tirunelveli district was above the average during South-West Monsoon period and below the average during the North-East Monsoon period. The preliminary work of reviewing seasonal conditions in the villages and collecting statistics of rainfall, extent of cultivation, wastes and witherings, etc., by the

[Sri M. A. Manickavelu] [25th March 1960

Revenue Department Officers is in progress. It is seen from the preliminary reports received that in Sankarankoil taluk some of the rainfed tanks received only scanty supply of water, that crops in some portions of the ayacuts were kept up by wells and that there was failure of crops in a good number of ayacuts. About 75 villages are affected and about 10,359 acres of wet lands are likely to be granted seasonal remissions under B.S.O. 13 for crops either withered or which fetched an outturn of 2 annas and below due to inadequate water-supply in the tanks. The dry crops, however were generally successful and the major dry crops of the taluk fetched or are expected to fetch a fair outturn. The rains which the taluk had recently for about 3 weeks are likely to improve the condition of the standing dry crops and it is hoped that there will not be any necessity for any special remissions apart from the seasonal remissions. Relief measures will be undertaken, if considered necessary.

In Tenkasi taluk also seasonal remissions will be given for wet crops either withered or which fetched a low outturn due to inadequate supply in the irrigation sources and there may not be necessity for the grant of special remission for dry lands.

It may, therefore, be seen from the above facts that the Government are watchful of the situation. The Collector of Tirunelveli is touring the affected areas. The question of affording further relief will be considered after his final report is received.

## V.—PRESENTATION OF REPORTS.

### (1) COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI T. SAMPATH: I, the Chairman of the Committee on Subordinate Legislation, present the Eighth Report of the Committee.

### (2) COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI K. SATTANATHA KARAYALAR: I, the Chairman of the Committee on Government Assurances, present the Seventh Report of the Committee.

கனம் சபாநாயகர் அவர்களே, உறுதிமொழிக் கமிட்டியின் 7-வது அறிக்கையை இந்தச் சபை முன்பு சமர்ப்பிக்கும்போது சில சில விஷயங்களை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்தச் சபையிலே அங்கத்தினர்கள் கோரிப் பெறுவது மந்திரிகளிடம் இருந்து பெற முடியாத வாக்குறுதிகள். அது விலைமதிக்க முடியாத ஒன்று. ஆனால் இந்த வாக்குறுதிகள் எந்த முறையில் நிறைவேற்றப்படுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். 1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 22-ந்தேதி ஸ்ரீ கட்டிமுத்து அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதி இதுகாறும் நிறைவேற்றப்படவில்லை. ஒரு டாம் கட்டுவது, ஒரு சானல் கட்டுவது பற்றிய விஷயம் அது. இன்னும் சீப் இன்ஜினியரிடமிருந்து பதில் வரவில்லை என்று சொல்லப்படுகிறது.

1956-ம் வருஷம் ஸ்ரீ கே. ஆர். விஸ்வநாதனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. பரிசீலனை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறதே தவிர எப்போது வேலை செய்ய எஸ்டி



25th March 1960] [Sri K. Sattanatha Karayalar]

மேட்டை ஒப்புக்கொள்ளப் போகிறார்கள், எப்போது வேலை துவங்கப்படும் என்பது ஒன்றும் தெரியவில்லை, இதுவரையிலும். அதற்கப்பால் ரெவின்யூ டிபார்ட்மெண்டைப்பார்த்தால் 2-ந் தேதி ஆகஸ்டு 1956-ம் வருஷம் ஹரிஜனங்களுக்கு 11 அசெயின்மெண்டு கொடுக்கப்படுவது பற்றி கொடுக்கப்பட்ட வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இலாக்காக்களில் அந்த பைல்கள் அப்படியே உறங்கிவிடுகிறதோ என்று தோன்றுகிறது. ஒரு சில பிரச்னைகளில் கால தாமதம் ஆவதைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை. அதுவும் இண்டர் ஸ்டேட் விஷயமாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் நமது மாகாணத்தில் நேரிடையாக நமது இலாக்காக்கள் செய்யவேண்டிய வேலைகளைக்கூட, சபையில் மந்திரி அவர்களால் வாக்குறுதி கொடுத்துவிட்ட பிற்பாடு கூட அதைச் செய்வதில்லை, அதை மதித்து உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்வது இல்லை என்றால் அதை வன்மையாகக் கண்டித்து, இம்மாதிரி வாக்குறுதிகளை மதிக்கவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். எதை அமுலாக்க முடியும், எதை அமுலாக்க முடியாது, அமுலாக்குவதில் உள்ள சிக்கல்கள் என்ன என்பதையாவது தெள்ளத்தெளிய—அடுத்த நிதி ஆண்டுக்குள்ளாவது தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். ஒரு குறிப்பிட்ட வாக்குறுதியைப்பற்றி கமிட்டியார் எழுதும்போது, அதற்கு " இந்த வாக்குறுதியை நிறைவேற்றியதாக நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள் " என்று இலாக்காக்களில் எழுதுகிறார்கள். இதுபற்றி முடிவு எடுக்கவேண்டியது கமிட்டி. இலாக்காக்கள் அல்ல. இலாக்காக்களில் இருந்துவரும் பதில்கள் " இந்த அளவு நாங்கள் செய்து திருப்தியாகிவிட்டது, ஆகையால் நீங்கள் திருப்திப்பட்டுக் கொள்ளுங்கள் " என்ற முறையில் இருப்பதைக் கைவிடவேண்டுமென்று வேண்டுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர்கள் சஜஷ்னை கொடுத்திருப்பார்கள்.

SRI K. SATTANATHA KARAYALAR: இது ஒரு சஜஷ்னை சொல்வதானால் சரி. அல்லாத முறையில் " This may be treated as implemented". என்ற வழக்கத்தைக் கைவிடவேண்டுமென்று வேண்டுகிறேன்.

கடைசியாக இந்தக் கமிட்டியிலே என்னைத் தலைவராக நியமித்து கழிந்த ஆண்டு சேவை செய்ய சந்தர்ப்பம் கொடுத்ததற்கும், மறுபடியும் இந்த ஆண்டும் இந்தக் கமிட்டியின் தலைவராக இருக்கும்படி நியமித்ததற்கும் கனம் சபாநாயகருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

## VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61—*cont.*

### DEMAND XXIV—HARIJAN UPLIFT—*cont.*

MR. SPEAKER: இப்பொழுது ஹரிஜன மான்யத்தின்மீது விவாதம் நடக்கப்போகிறது. கனம் மந்திரி அவர்கள் பதில் அளிப்பதற்கு ஒரு மணி நேரம் போதும் என்று நினைக்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: இன்னும் பல கனம் அங்கத்தினர்கள் பேசவேண்டும் என்பதால் எனக்கு $\frac{3}{4}$ மணி நேரம் போதும்.

MR. SPEAKER: கடைசியாகப் பேசப்போகிறவர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள். வாஸ்தவத்திலே அவர்களுக்கு 15 நிமிஷம் ஒதுக்க வேண்டும். கடைசியாக ஒரு மணி நேரம் கனம் அமைச்சருக்கும் தலைவருக்கும் ஒதுக்கியிருக்கிறோம். என்னிடத்தில் இப்போது காங்கிரஸ் அங்கத்தினர்கள் 18 பேர்களும் திராவிட முன்னேற்ற கழக அங்கத்தினர்கள் 4 பேர்களும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ் கட்சியில் இன்னும் பெயர் கொடுக்கவில்லை. மூன்று, நான்கு பேர்கள் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். சுயேச்சை அங்கத்தினர்கள் இரண்டு மூன்று பேர் பேச இருக்கிறார்கள். இருக்கும் மூன்று மணி நேரத்தில் 25 அங்கத்தினர்கள் எப்படி பேச முடியும் என்று தான் எனக்கும் கவலையாக இருக்கிறது. ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் 5 நிமிஷம் பேசவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறேன். அப்போதுதான் எல்லோரும் பேச

[Mr. Speaker] [25th March 1960

முடியும். இல்லாவிட்டால் இந்த மூன்று மணி நேரத்தில் 30 அங்கத்தினர்கள் பேசமுடியாது. இதெல்லாம் கணக்குப்போட்டுத்தான் சொல்லுகிறேன். நூற்று இருபது நிமிஷத்தை 30 பேருக்குப் பிரித்தால் ஒரு அங்கத்தினருக்கு 4 நிமிஷம்தான் கிடைக்கும். என்னுடைய பொறுப்பு நேரத்தை பிரித்துக் கொடுப்பதுதான். கட்சித்தலைவரோ, கொரடாவோ அங்கத்தினர்கள் எண்ணிக்கையைக் குறைத்துக்கொடுத்தால் ஜாஸ்தி நேரம் கொடுக்கலாம். பிசினஸ் அட்வைசரி கமிட்டி இந்த மான்யத்திற்கு 6 மணி நேரம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 10 நிமிஷம் கொடுக்கவேண்டுமென்றால் அதற்குச் சரியான எண்ணிக்கை என்னிடத்தில் கொடுக்கவேண்டும். கொரடா தன்னுடைய கஷ்டத்தை நீக்கிக்கொள்வதற்கு அவர்களிடம் கொடுத்த பெயர்களை எல்லாம் என்னிடம் கொடுத்துவிடுகிறார்கள். அப்படிக் கொடுத்தால் எனக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதற்கு விமோசனம் ஒருவர் 5 நிமிஷம் பேசலாம்.

**Sri A. GOVINDASAMY** : கட் மோஷன் மூவ் பண்ணுகிறவர்களுக்கு சற்று அதிக நேரம். . . . .

**Mr. SPEAKER** : கட் மோஷன் மூவ் பண்ணுகிறவர்களுக்குகூட சந்தர்ப்பம் கிடைக்காமல் போகிறது சில சந்தர்ப்பங்களிலே. இப்பொழுது ஸ்ரீ ஆர். சுப்ரமண்யம் அவர்கள் பேசுவார்கள்.

* **Sri R. SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருக்கும். ஹரிஜன மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஐந்து நிமிடங்களில் என்ன சொல்லுவது என்று எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் ஒன்றிரண்டு பாயின்ட்ஸ்களை சொல்ல விரும்புகிறேன். மதம் மாறிய ஹரிஜனங்கள் பற்றியும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சலுகைகள் பற்றியும் நேற்று அதிகமாகப் பேசப்பட்டது. மதம் மாறின காரணத்தினால் ஹரிஜனங்களுக்கு கொடுக்கும் சலுகைகள் அதிகமாக கொடுக்கப்படவில்லை என்று ஸ்ரீ லாசர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சாதாரணமாக ஹரிஜனங்களுக்கும், மதம் மாறிய ஹரிஜனங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் நன்றாக கவனிக்க வேண்டும். ஹரிஜனங்கள் கல்வி, சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளிலும், தீண்டாமையினாலும் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஹரிஜன கிருஸ்தவர்கள் அதே நிலையில் இருக்கிறார்களா என்று பார்த்தால் உண்மையிலேயே அவர்கள் ஓரளவு முன்னுக்கு வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஹரிஜனங்களாக இருந்தவர்கள் மதம் மாறினார்கள் என்றால் அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். மதம் மாறுவது என்றால் தங்களுடைய சொந்த பொறுப்பில் தங்களுடைய ஆன்மீகத் துறையில் முன்னேறுவதற்கு மதம் மாற வேண்டும் என்பதுதான் கருத்து. ஆனால் ஹரிஜனங்களைப் பொறுத்த வரையில் மதம் மாறியவர்களைப் பார்த்தால், அவர்கள் அந்தக் காலத்தில் அன்னிய ஆட்சியிலிருந்து ஒரு காலத்தில் பிரிட்டிஷார் அவர்களுக்கு சலுகைகள் செய்து கொடுத்ததன் காரணமாகவும், பாதிரிமார்கள் அவர்களுக்கு சில சலுகைகள் கொடுத்ததின் காரணமாகவும் மதம் மாறியிருக்க வேண்டும். இதனால்தான் அந்தக் காலத்தில் ஹரிஜனக் கிருஸ்தவர்கள் ஓரளவு கல்வியில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. இந்த நாளில் பாதிரியார்களுடைய உதவி பெற்று சின்னம் சிறிய வேலைகளிலும், உபாத்தியாயர் வேலைகளிலும் இருப்பவர்கள் ஹரிஜன கிருஸ்தவர்கள். உதாரணமாக சொல்ல வேண்டுமானால் என்னுடைய தகப்பனார் சொல்லியிருக்கிறார்கள் "நான் படித்தது ஹரிஜன கிருஸ்தவ வாத்தியாரிடம்" என்று. நான் பாடம் படித்ததுகூட ஒரு ஹரிஜன கிருஸ்தவ வாத்தியாரிடம் தான். என்னுடைய பிள்ளையும் ஒரு ஹரிஜன வாத்தியாரிடம்தான் படித்துக்கொண்டிருக்கிறான். இம்மாதிரி அந்த நாளில் இருந்து ஹரிஜன கிருஸ்தவர்களுக்கு தரப்பட்ட பல்வேறு சலுகைகள் காரணமாகத்தான் ஓரளவு முன்னுக்கு வந்திருக்கிறார்கள். கல்வி காரணமாக அவர்களுடைய பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. சமூகத்துறையை எடுத்துக்கொண்டால் ஹரிஜனங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை அவர்கள்



25th March 1960] [Sri R. Subramaniam]

அனுபவிக்கவில்லை என்று நான் நன்றாகச் சொல்லுவேன். சாதாரணமாக ஹரிஜனங்களுக்கு சர்க்கார் சலுகைகள் கொடுத்தபிறகுதான் நாங்கள் ஹரிஜன கிருஸ்தவர்கள் எங்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களே தவிர அதற்கு முன்னதாகப் பார்த்தால் அவர்கள் தங்களைப் பொறுத்த வரையில் கிருஸ்துவர்கள் என்றே சொல்லிக் கொண்டுவந்தார்கள். அப்போது எந்தவிதமான சலுகைகளும் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அப்போது எல்லாம் ஹரிஜன கிருஸ்தவர்கள், மற்ற ஜாதி ஹிந்து கிருஸ்தவர்கள் என்று கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும். அவர்கள் வேறு இடத்தில் போனால் நீங்கள் எந்த ஜாதி என்று கேட்டால் நாங்கள் கிருஸ்தவர்கள் என்று சொல்லுவார்கள். நாங்கள் இந்திய கிருஸ்தவர்கள் என்று சொல்லி வந்தார்கள். எங்களுக்குள் பாகுபாடு இல்லை என்று சொல்லிவிடுவார்கள். ஸ்ரீ எம். பி. சுப்ரமணியம் அவர்கள் பேசும்போது சொன்னதைப் பார்த்தால் மதம் மாறின ஹரிஜனங்களுக்கு சலுகைக் கொடுக்காமல் இருப்பது மதம் மாறுவதைத் தடுப்பது போலாகும் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்று தாழ்மையுடன் சொல்ல விரும்புகிறேன், ஒரு மாணவன் ஹிந்து மதத்திலிருந்து கிருஸ்தவ மதத்திற்கு மாறினவனானாலும்சரி அவனுக்கு ஹரிஜன மாணவனுக்கு என்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அவைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. நம்முடைய ராஜ்யத்தில் உள்ள ஹரிஜன கிருஸ்தவர்கள் பொறுத்த வரையில் எந்தவிதமான வித்தியாசமும் பார்ப்பது கிடையாது. எல்லா சலுகைகளும் கொடுத்துவருகிறார்கள். ஸ்காலர்ஷிப் வீட்டு வசதி இன்னும் பலவிதமாக சலுகைகள் எல்லாம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் பொறுத்த வரையில் அவர்கள் கொடுக்கின்ற மான்யத் தொகையிலிருந்து ஹரிஜன கிருஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படுவது கிடையாது. இதைப்பற்றி ஏதாவது வாதாடுவதாக இருந்தால், பார்லிமெண்டில் அங்கத்தினர்களிடம் சொல்லி அங்கு வாதாடச் சொல்லலாமே தவிர நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எந்த விதமான வித்தியாசமும் பாராட்டுவது கிடையாது. இப்போது 1959-60-க்கு பணம் அவர்கள் ஒதுக்கி இருப்பதைவிட இந்த வருஷம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். இது வரவேற்கக்கூடிய அம்சமாகும். ஆனால் ஒதுக்கக்கூடிய பணத்தை ஹரிஜனங்களுக்கு நல்ல முறையில் செலவிட வேண்டும். நல்லமுறையில் செலவிடுவது என்றால் இரண்டு காரணங்கள்தான் இருக்க வேண்டும். ஒன்று போதுமான ஊழியர்கள் இருக்க வேண்டும். அத்துடன்கூட வேலை செய்யக்கூடிய மனோபாவம், ஹரிஜனங்களுக்கு வேலை செய்ய வேண்டும் என்று ஆர்வம் இருக்க வேண்டும். இந்த இரண்டும் இல்லை என்றால் பிரயோஜனம் இல்லை. இப்போது பார்த்தால் இரண்டிலும் குறை இருக்கிறது. போதுமான ஊழியர்கள் இல்லை. அத்துடன்கூட இங்கே வேலை செய்யக்கூடியவர்கள் எல்லாம் ஏதோ டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.) ஆகவே நாமும் வேலையில் இருக்கிறோம் அதனால் ஏதோ செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வேண்டா வெறுப்போடு செய்து வருகிறார்கள். இதனால்தான் நாம் எந்த அளவு ஹரிஜனங்களுக்கு வேண்டுமென்று பணம் ஒதுக்கியிருக்கிறோமோ அந்த அளவிற்கு இப்பொழுது செலவழிக்கப்படாமல் திரும்பி வருகிறது. ஹரிஜனங்களுக்கு முக்கியமாக வீட்டு மனை, குடித்தண்ணீர் வசதி முதலிய பல காரியங்கள் இருக்கின்றன . . . .

**Mr. SPEAKER** : அங்கத்தினர் அவர்கள் தயவு செய்து நான் சொன்னதை கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இருபத்தைந்து அங்கத்தினர்கள் பேசயிருக்கிறார்கள். அப்படியிருக்க நான் மணியடித்தும்கூட அங்கத்தினர் அதைக் கேட்காவிட்டால் எப்படி நடத்த முடியும். அடுத்தபடியாக, ராமகிருஷ்ண தேவர்.

**Sri S. RAMAKRISHNA THEVAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பீடிகையிலேயே கொடுத்திருக்கிற ஐந்து நிமிடத்தில் பாதி போய் விடுகிறது. பாரதியார், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம்,

என்று சொல்லி வைத்துவிட்டார்கள். இப்பொழுது பார்த்தால், நமக்குள்ளேயே பல பாகுபாடுகள் இருப்பதைக் காண்கிறோம். வேளாளர்களில் வீரக்குடி வேளாளர், தொழுவ வேளாளர் என்று இருக்கிற இரு வகுப்பினர்களுக்கு சலுகைகள் உண்டு. ஆனால் மற்ற வேளாளர்களுக்கு சலுகைகள் இல்லை. இப்படியாக ஒவ்வொரு வகுப்பிலும் பல உட்பிரிவுகள் வைத்து பாகுபாடு வைத்திருக்கிறார்கள். தாழ்ந்த ஜாதி என்று கருதப்படுகிறவர்களிடையேயும் பல பெரும் பணக்காரர்கள் இருக்கிறார்கள். ஒரு இனத்தில் சிலர் பெரிய பணக்காரர்களாக இருந்தால் அந்த இனத்தில் பட்ட அனைவரையும் பணக்காரர்கள் என்று சொல்லிவிட முடியுமா? அப்படி பணக்காரர்கள் ஒரு இனத்தில் இருப்பதால் இந்த இனத்திலுள்ளவர்களுக்கு, அதாவது மற்றவர்களுக்கு அதனால் என்ன பிரயோஜனம்? ஒருவர் குபேரனாக இருக்கலாம், அதனால் அந்த இனத்தில் பட்ட அனைவரும் குபேரர்கள் என்று சொல்லிவிட முடியுமா? ஆக, வேண்டியபடி பரிசீலனை செய்துதான் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க, இதில் ஜாதி வித்தியாசம் ஏன் இருக்க வேண்டுமென்று எனக்கு புலப்படவில்லை. எந்த வகுப்பினராக யிருந்தாலும் சரி, அவர்கள் தாழ்ந்த நிலையில் இருப்பார்களேயானால் அவர்களுக்கு ஏன் இந்தச் சலுகைகள் கொடுக்கக் கூடாது என்று அரசாங்கத்தை நான் கேட்கிறேன். உயர்ந்த ஜாதியில் பிறந்தவன் என்ற குற்றத்திற்காக, அப்படி யாரோ ஒருவர் சொல்லிவைத்த குற்றத்திற்காக அந்த இனத்தில் உள்ள அத்தனை பேர்களுக்கும் கஷ்டப்பட வேண்டுமா? எந்த வகுப்பைச் சார்ந்தவனையும் இழிவான மனிதன் என்று சொல்வதற்கில்லை. எல்லா வகுப்பிலும் நல்லவர்களும், உயர்ந்த குணம் படைத்தவர்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். குபேர சம்பத்து படைத்தவர்களும் இருக்கிறார்கள். அதேபோல் வறுமையில் வாடுகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். நல்ல நிலையில் சிலர் இருக்கிறார்கள் என்பதற்காக அந்த வகுப்பிலுள்ள மற்றவர்களுக்கு சலுகை கிடைப்பதில்லை என்றால் அது ஒரு குறையே. எனது தொகுதியில் ஹரிஜனங்கள் அதிகமாக யிருக்கிறார்கள், மீனவர்களும் அதிகமாக இருக்கிறார்கள், கிருஸ்தவர்களும் இருக்கிறார்கள், ஹிந்துக்களும் இருக்கிறார்கள். இவர்களுக்குள் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. இவர்கள், ஒரே நிலையில்தான் இருக்கிறார்கள். ஒரு சிலரைத் தவிர, ஹரிஜன மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்களோ அதேபோல்தான் மற்ற வகுப்புக்களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். இதில் எத்தனை பாகுபாடு, எததனை வித்தியாசங்கள்? எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம் என்று பாரதியார் சொல்லி விட்டுப் போய் விட்டார். கிராம மக்கள் எப்படி என்ன செய்தால் முன்னேற்றம் அடைவார்கள் என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எளிய மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று அதற்குள்ள சலுகைகளை ஒரு தாலூகாவுக்கு அல்லது ஒரு பகுதிக்கு மட்டும் கொடுத்து விட்டால் மற்ற பகுதியில் உள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அப்பொழுது அந்தத் தொகுதியைச் சார்ந்த மெம்பர்கள் அந்த தொகுதி மக்களுக்கு துரோகம் செய்யும் நிலைக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. எனது தொகுதியைப் பொறுத்தமட்டில் அங்குள்ள ஹரிஜனங்களுக்கு வேண்டிய சலுகைகள் கிடைக்கவில்லை. ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது என்று ராமநாதபுரம் ஜில்லாவிற்கு ஒரு அலாட்மெண்ட் ஒதுக்கினார்கள். அது என் தாலூகா பக்கம் வர சங்கடப்படுகிறது. ஆமை வேகத்தில் வந்து சேருகிறது என்று கூட கருத முடியவில்லை. இரண்டு வருடங்களாக முயற்சி எடுத்துப் பார்த்திருக்கிறேன். அது இன்னும் கை கூடவில்லை. அதேபோல்தான் மற்ற சலுகைகளும். ஹரிஜன குழந்தைகளுக்கும் மற்ற குழந்தைகளுக்கும் வசதி செய்து கொடுக்க நல்ல திட்டங்கள் வகுக்கப்படுகிறது. திட்டங்களில் எந்த விதமான குறையுமில்லை. அதை வகுத்துக் கொடுப்பவர்களின் பேரிலும் நான் எத்தகைய குறையும் சொல்லவில்லை. ஆனால் அதைப் பங்கிட்டுக் கொடுத்தவர்களுக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டுமென்ற முறையில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். (மணியடிக்கப்பட்டது.) உயரே எத்தி விட்டு விட்டு காலை வாருகிற மாதிரி, என்னை பேச சொல்லி விட்டு இப்பொழுது சபாநாயகர் மணியடித்து





விட்டார்கள். எங்கள் தாலூகாவில் மீனவர்கள் படும் கஷ்டத்தைப்பற்றி சொல்வதற்கில்லை. இரண்டு ஊர்களில் கடல் தண்ணீர் வீடுகளை அடித்து கொண்டு போகிறது. அதுபற்றி பலமுறை எழுதிவிட்டேன். அதை கவனிப்பதாக யில்லை. அதையும் நல்லமுறையில் கவனித்து, ஹரிஜன மக்களுக்கு இந்துக்கள், கிருஸ்தவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் ஒரே நிலையில் இவர்களை வைத்து இவர்களது நிலையை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER:** கனம் அங்கத்தினர் சொன்ன பழமொழி எனக்கு பொருத்தமாக யிருக்காது. சபாநாயகர் மணியடித்த பிற்பாடு பழமொழி சொல்வது அவ்வளவு நன்றாகயில்லை.

**Sri P. VEDAMANICKAM:** மேன்மைமிக்க சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஹரிஜன மான்யத்தை ஆதரித்து நான் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஹரிஜனங்களின் பொருளாதார நிலையை, குடிசைத் தொழில்கள் மூலம் உயர்த்தலாமென்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. நமது மாகாணத்தில் பெரிய தொழில்களாக இருக்கும் பஸ் போக்குவரத்து, லாரி போக்குவரத்து, இவைகளுக்கு பஸ் ரூட்டுகளுக்கு பெர்மிட் கொடுத்தல், லாரிகள் ஓட்டுவதற்கு பெர்மிட் கொடுத்தல் இவைகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இதுவரையில் கொடுக்கப்படவில்லை. பல மாவட்டங்களிலும் வசதியுள்ள ஹரிஜன பிரமுகர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எத்தனையோ தடவைகளாக பஸ் பெர்மிட்ஸ்க்கும், லாரி பெர்மிட்ஸ்க்கும் பலதடவை விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் அவர்களுக்கு இன்னும் அவை கிடைக்கவில்லை. அவர்களில், யாருக்கும் ஒரு ரூட்டும் கிடைக்கவில்லை. உண்மையிலே இந்த நாட்டு மக்களின், தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்களின் பொருளாதார நிலை உயர வேண்டுமென்றால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சில ஹரிஜனங்களுக்காவது பஸ், லாரி ரூட்கள் இவைகள் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அவைகள் அவர்களுக்கு லேசாக கிடைக்குமாறு சட்டத்தை மாற்றியமைத்து அப்படி கிடைக்கும்போது மற்ற கம்பனிக்காரர்கள் அப்பீல்களுக்கு போகாமல் இருக்கவும் வழிவகை செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**(Sri V. K. Krishnamurthy in the Chair.)**

தாழ்த்தப்பட்ட மக்களின் முக்கியமான பிரச்னை, குடியிருப்பு மனை. இவர்களின் நிலையை உயர்த்துவதற்காக பல வகைகளிலும் இரண்டு கோடி 99 லட்சம் ரூபாய் அள்ளி இறைத்தபோதிலும்கூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்குவதற்கும் வேண்டியது செய்ய வேண்டும். குடியிருப்பு மனைக்கட்டு வழங்குவதில் எவ்வளவோ மனுக்கள் கொடுத்திருந்தபோதிலும் இன்னும் அவற்றை கொடுப்பதற்கு மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த குடியிருப்பு மனை வழங்குவதில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் விதைப் பண்ணைகள், ரயில்வேக்காக நிலம் போன்றவைகளுக்காக அரசாங்கம் எவ்வளவு சீக்கிரம் இடங்களை அக்வயர் செய்கிறதோ அதேபோல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு மனை வழங்கும் விஷயத்திலும் எவ்வளவு சீக்கிரம் அதற்கு வேண்டிய இடங்களை அக்வயர் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அக்வயர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்து ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கும் முறையில் அவர்களுக்கு அது கிடைத்து வருவதுபற்றி நான் அரசாங்கத்திற்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன். எங்கள் தொகுதியில் இருக்கக்கூடிய பிற்பட்ட வகுப்பு மாணவர்களும் எங்களுக்கு வேண்டியவர்கள்தான். எனது தொகுதியில் அப்படிப்பட்ட மாணவர்கள் பலருக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்காமல் அண்ணாமலை யூனிவர்ஸிட்டியிலிருந்து தங்கள் படிப்பை நிறுத்திவிட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இன்னும் கொஞ்சம் தொகையை

[Sri P. Vedamanickam] [25th March 1960

கூடுதலாக ஒதுக்கி பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் கூடியவரை ஸ்காலர்ஷிப் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதோடு கல்லூரியில் படித்த மாணவர்கள் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். என் தொகுதியில்கூட 20 பேர்கள் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். இம்மாதிரிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. C. MUTHUKUMARASWAMY** : கனம் தற்காலிகத்
10 a.m. தலைவர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற முன் வந்துள்ளேன். முதலில் என்னுடைய குறை என்னவென்றால், இதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் மிக மிக குறைவு என்பதுதான். சாதாரணமாக இறந்த வீட்டில் போகிறவர்களில் சொந்தக்காரர்கள் அருகேயிருந்து எங்கேயும் போகாமல் அழுதுகொண்டே இருப்பார்கள். அதல்லாமல் வேறு ஆட்கள் அங்கு வருபவர்கள் எல்லாம் அவர்களுடைய சொந்தக்காரர்கள் இறந்துபோனதை நினைத்துக்கொண்டோ அல்லது வேறு எதையாவது நினைத்துக்கொண்டோ அழுதுகொண்டே இருப்பார்கள். அதைப்போல இந்த இனத்திலுள்ளவர்கள் தங்கள் குறைகளை எல்லாம் இங்கு எடுத்துச் சொல்லுவதற்கு போதிய நேரம் ஒதுக்கப்படவில்லை என்று மிகவும் வருத்தப்படுகிறேன். இனிமேலாவது, அடுத்த ஆண்டில் இதற்காக அதிகமான அளவில் நேரத்தை ஒதுக்கி ஆதி திராவிட மக்கள் எல்லாம் தங்கள் குறைகளை தெரிவிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை சென்ற ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அரசாங்கத்திற்கு நன்றி செலுத்துகிறேன். இருந்தாலும் இந்தத் தொகை போதாது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. சென்ற ஆண்டிலும் இதைப்பற்றி வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். ஹரிஜனங்களுடைய குறைகளை எல்லாம் தீர்ப்பதற்கு இப்போது நடக்கின்ற அளவில் வேலை செய்துகொண்டு போனால் அவர்களுடைய குறைகள் எல்லாம் தீர வேண்டுமானால் குறைந்தது 100 ஆண்டு காலமாகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆதிதிராவிட மக்களுடைய குறைகளை எல்லாம் தீர்க்க வேண்டுமென்றால் அவர்களுக்கு ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு, இப்போது ஒரு ஐந்தரண்டு திட்டம் போட்டு முடித்திருக்கிறோம், இரண்டாவது ஐந்தாண்டு போட்டு அதுவும் முடியும் தருவாயில் இருக்கிறது. இவ்வித மெல்லாம் திட்டம் போட்டிருந்தும் ஹரிஜனங்களுடைய குறைகள் எல்லாம் நீங்கிவிட்டதாகச் சொல்ல முடியாது, ஆகவே அவர்களுக்கு ஐந்தாண்டுத். திட்டம் என்ற முறையில் திட்டங்களை வகுத்து, அதன்படி வேலைகள் செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**The Hon. Sri P. KAKKAN** : இப்போதும் நாம் ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டுத்தான் வேலை செய்து கொண்டிருக்கிறோம்.

**Sri M. C. MUTHUKUMARASWAMY** : அமைச்சர் அவர்கள் சொல்லுவதை என்னால் சரியாக கேட்க முடியவில்லை.

**The Hon. Sri P. KAKKAN** : கனம் அங்கத்தினர் அவர்கள் திட்டம் போட்டு வேலை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இப்போதும் அரசாங்கத்தில் ஐந்தாண்டுத் திட்டங்களை போட்டுத்தான் வேலைகள் நடந்து வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**Sri M. C. MUTHUKUMARASWAMY** : எல்லா மக்களுக்கும் சேர்ந்துதான் இப்போது திட்டம் போடப்பட்டிருக்கிறது. நான் சொல்லுவது அடித்தளத்தில் இருந்து கொண்டிருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு என்று, அவர்களுடைய குறைகளை எல்லாம் தீர்ப்பதற்காக தனியாக ஒரு திட்டம் போடவேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக தஞ்சை ஜில்லாவில் ஹரிஜனங்களுக்காக வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அனேக மனைகள்வாங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அங்குள்ள சேரிகள் இருக்கின்ற இடங்கள் எல்லாம் சம்பிர



25th March 1960] [Sri M. C. Muthukumaraswamy]

தாயமாக இருந்த ஜாரி, நத்தம், புறம்போக்கு என்று இருந்து வருகிறது. அதோடு 12 வருடத்திற்கும் மேலாக இருப்பவர்களுக்கு அந்த இடத்திலுள்ள பாத்தியதையை கொடுத்து விடுவது என்று பல இடங்களிலும் தரப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பரம்பரையாக இருக்கும் சில இடங்களில் இருக்கும் இடங்களை அரசாங்கம் அதை எடுத்து மான்யங்கள் கொடுப்பதற்குப் பதிலாக அவர்கள் இப்போது இருந்து கொண்டிருக்கும் இடங்களையே கொடுத்துவிடுவது மிகவும் உசிதமாய் இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக இங்கு பலர் தனிப்பட்டவர்கள் நடத்தும் ஹரிஜன ஹாஸ்டல்களை எல்லாம் அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். தனிப்பட்டவர்கள் நடத்தும் ஹாஸ்டல்களுக்கும் அரசாங்கம் நடத்தும் ஹாஸ்டல்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதாவது அரசாங்கம் நடத்துகின்ற ஹாஸ்டல்களில், 30 பிள்ளைகளுக்கு வசதி இருக்குமானால் அதற்கு அடுத்த ஆண்டு, நான்கு அல்லது ஐந்து பிள்ளைகளுக்கு கூடுதலாக வசதி ஏற்படுகிறது. ஆனால் தனிப்பட்டவர்கள் நடத்தும் ஹாஸ்டல்களில் ஐந்து அல்லது பத்து பிள்ளைகளுக்கு வசதி ஏற்படுகிறது. இதற்கான புள்ளி விவரங்கள் எல்லாம் அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறது. ஆகவே தனிப்பட்டவர்கள் நடத்தும் ஹாஸ்டல்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வெள்ளையர்கள் காலத்தில் "பஞ்சம தரிசு" என்ற இடங்கள் அடங்கிய ஒரு லிஸ்ட் இருந்து வந்தது. அதை அப்போது சில ஹரிஜனங்களுக்கு கொடுத்து வந்தார்கள். பின்னால் அது கொடுக்கப்படவில்லை. ஆகவே இப்போது அந்த இடங்களை எல்லாம் ஹரிஜனங்களுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, தீண்டாமையை போக்குவதற்காக அரசாங்கம் எவ்வளவோ வேலைகளை செய்து கொண்டிருக்கிறது. ஆனால் இப்போதும் வோட்டர் லிஸ்டில் சாம்பார், குடும்பர், இன்னும் இதுபோன்ற எத்தனையோ வகுப்புக்களை குறித்திருக்கிறார்கள். அதைப்பார்த்து நான் வருந்துகிறேன். அரசாங்கம் ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, அரசாங்க ஏடுகளில் எல்லாம் இவ்விதம் பலவிதமான வகுப்புக்களை சொல்லியிருப்பது சரியல்ல, வேண்டுமானால் ஆதிதிராவிடர் மட்டும் என்று இருந்தால் போதுமானது என்று நினைக்கிறேன். . .

**The Hon. Sri P. KAKKAN** : ஆதிதிராவிடர் என்று போட்டால், அந்த இனத்தவரை மட்டும்தான் குறிக்கும். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் ஹரிஜனங்கள் (ஷெட்யூல்ட் காஸ்ட்) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**Sri M. C. MUTHUKUMARASWAMY** : அடுத்தபடியாக உத்யோகம் கொடுக்கும் விஷயத்தில் 6-2/3 பாகம்தான் இப்போது கொடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. இதை அதிக அளவில் உயர்த்தி, முக்கியமாக பி.டப்ளியூ.டி.-யில் அதிகமான அளவில் உத்யோகம் கொடுக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இதோடு சர்வீஸ் கமிஷனிலும் ஆதிதிராவிடரைச் சேர்ந்த ஒருவரை அங்கத்தினராக போட முடியுமா என்று கேள்வி போட்ட நேரத்தில் நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு என்று தனியாக போடவேண்டிய அவசியமில்லை, எல்லா மக்களையும் சேர்த்து இதிலேயே கவனித்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதற்காக சந்தோஷப்படுகிறேன். ஆனால் மத்திய சர்க்காரில் எல்லாம் சிவசண்முகம் பிள்ளை அவர்களை அங்கத்தினராக போட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் போட்டிருப்பதைப் பார்த்தால் அவர்கள் தவறு செய்திருப்பார்கள் என்று தோன்றவில்லை. ஆகவே அதே போன்று இங்கும் சர்வீஸ் கமிஷனில் ஆதிதிராவிடரை போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, இந்த மாதிரி போய்க் கொண்டிருந்தால், ஹரிஜனங்கள் எப்போது முன்னுக்கு வருவார்கள் என்பது எனக்கு சந்தேகமாகவே இருக்கிறது.

**Sri A. VEDARATHNAM :** அறிவிற் சிறந்த அவைத் தலைவர் அவர்களே, ஹரிஜன நிதிக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் மான்யத்தில் வரும் ஆண்டில் 62 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்து அமைச்சர் அவர்களை பாராட்டுவதோடு, இவ்விஷயத்தில் சில வார்த்தைகளை நான் எனக்குரிய நேரத்திற்குள் கூறி முடிக்க விரும்பு கிறேன். "ரிமூவல் ஆப் ஸோஷியல் டிஸெபிலிட்டீஸ் ஆக்ட்" என்ற சட்டத்தின் பிரகாரம், இந்து தர்மத்தில் இருந்து வந்த தீண்டாமையை போக்குவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக தீண்டாமை வேகமாக போய்க்கொண்டிருக்கிறது. இப்போது டீ கடைகளிலும், நாவிதர்கள் சேவை செய்யும் சலூன்களிலும் சேவை செய்வதற்கு மறுப்பார்களானால் அவர்களை இந்தச் சட்டப்படி அவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று மணச் சடங்குகளில் அல்லது மரணச் சடங்குகளில் புரோகிதர்கள் வர மறுத்தால் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு இந்தச் சட்டத்தில் இடமிருக்கிறதா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்களைப் போன்ற பெரிய வர்களுடைய வீட்டுக்கு வேண்டுமென்றால் புரோகிதர்கள் சந்தோஷமாக வரலாம். ஆனால் சாதாரண ஹரிஜனங்களுடைய வீட்டில் நடைபெறும் மணச் சடங்குகளுக்கோ அல்லது மரணச் சடங்குகளுக்கோ அவர்கள் வரவில்லை என்றால், அவர்களை தண்டிக்க இந்தச் சட்டத்தில் இடமிருக்கிறதா என்பதை கவனித்துப் பார்த்து, இதில் அதற்கு இடமில்லையென்றால் இதற்கு ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி பராஸ்சுர ஸ்மிருதி சுக்கிரநீதி . . . போன்ற நீதி நூல்களில் எல்லாம் தீண்டாமைக்கு இடமே இல்லை. அதன் பின்னால் வந்த மனுதர்ம சாஸ்திரத்தில்தான் தீண்டாமைக்கு இடமிருக்கிறது. அதை போக்குவதற்கு தான் இப்போது நாம் முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறோம். ஆனால் இம்மாதிரிப்பட்ட தீண்டாமையைப்பற்றி பைபிள் போன்ற நீதி நூல்களில் சொல்லப்படவில்லை. கனம் லாசர் அவர்களைப் போன்று நானும் ஓரளவு பைபிளை படித்து இருக்கிறேன். இப்போதும் படித்துக் கொண்டிருக்கிறேன். எந்த இடத்திலாவது இந்து தர்மத்தில் சொல்லப் பட்டிருப்பதுபோல் தீண்டாமையைப்பற்றி சொல்லப்பட்டிருந்தால், அதை அவர்கள் எடுத்துக் காட்டி நிரூபிப்பார்களானால், அவர்கள் கேட்கின்றபடி கிறிஸ்தவர்களுக்கும் இந்த சலுகை எல்லாம் கொடுக்க வேண்டும் என்று கேட்பதில் எந்த விதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. கிறிஸ்தவர்கள் அவர்களுடைய மதத்தை பரப்புவதற்காக செய்யப்படும் முயற்சிகளைப் பற்றி நாம் யாரும் குறைகூறவில்லை. ஆனால் மற்றவர்களுடைய அறியா மையைப் பயன்படுத்திக்கொண்டு அதன் மூலம் மதமாற்றம் செய்யக் கூடாது என்கிற ஒரு விஷயத்தைத்தான் பலராலும் இன்றைக்கு வற்புறுத் தப்படுகிறதே தவிர தர்ம போதனை செய்வதில் யாருக்கும் ஆட்சேபணை இடையாது. ஏற்கனவே மதமாற்றம் செய்யப்படுகிறது, அதோடு இம்மாதிரிப் பட்ட சலுகைகள் மேலும் கிடைக்குமானால் அதன் மூலம் மதமாற்றத்தை இன்னும் அதிகமாக நடத்துவதற்கு பயன்படும் என்கிற காரணத்தால் தான் இது கூடாது என்று சொல்லப்படுகிறது.

கல்வித் துறையில் எடுத்துக்கொண்டாலும் சரி, உத்தியோகத் துறையில் எடுத்துக்கொண்டாலும் சரி, பல இடங்களிலும் ஒதுக்கப்படுகின்ற இடங் களுக்குக்கூட படித்த மாணவர்கள் முன்வருவதில்லை. அது மட்டுமில்லை, இடமில்லை என்கிற கஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தெரியவில்லை. எஸ்.எஸ். எல்.ஸி. பாஸ் செய்யாதவர்கள் வேண்டுமானால் அதிகமான பேர்கள் ஹரிஜனங்களில் இருக்கலாம். இவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு வசதி செய்து கொடுப்பதற்கு ஏதாவது வழிவகை செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அதல்லாமல் பெருமளவில் படித்தவர்கள், ஹரிஜனங்களில் வேலையில்லாமல் இருக்கின்றார்கள் என்கிற நிலை எனக்கு தெரிந்த வரையில் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆக நாம் காட்டவேண்டிய அக்கறை எதில் என்றால் அதிகமாக மாணவர் களும், மாணவிகளும் படிக்க வசதி செய்து தரவேண்டும். மாணவர் களைக் காட்டிலும் மாணவிகள் படிக்க வசதி செய்துகொடுக்கவேண்டும். இந்த



வகுப்பினரிலிருந்து எத்தனை பேர்கள் படிப்பதற்கு முன்வந்தாலும் அவர் களுக்கு யாருக்கும் இல்லை என்று சொல்லாமல் அத்தனை பேருக்கும் இடம் கிடைக்க வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதுதான் எனது கோரிக்கை.

அதிலும் குறிப்பாக அன்றைய தினம் கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மாண்டெஸ்ஸாரி, கிண்டர்கார்டன், பூர்வாதார பள்ளிகளில் படித்துவிட்டு—அதாவது மூன்று வயது முதல் ஐந்து வயது வரையில் மாணவர்கள் இந்தப் பள்ளிகளில் படித்துவிட்டு—மேல் வகுப்புக்கு வரும் காலத்தில் அவர்களிடம் சுத்தம், ஒழுக்கம், சுகாதாரம் முதலியவைகள் நல்ல முறையில் சீர்பட்டு வருகிறது என்று வற்புறுத்திச் சொன்னார்கள். அத்தகைய வகுப்புகள் அங்கீகரிக்கப்பட்ட சில பள்ளிகளில்தான் இருக் கின்றன. மாண்டெஸ்ஸாரி பள்ளிகளில் 10 பள்ளிகள்தான் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். பூர்வாதாரப் பள்ளிகளில் 10 பள்ளிகளுக்கு அதிகமாக இல்லை. அதிலே படிக்க வருகிற மாணவ மாணவிகளுக்கு கொஞ்சம் ஏஜ் லிமிட் வைத்திருக்கிற காரணத்தினால், ஆறு வயதுக்குக் குறைந்தவர் களுக்குச் சலுகை கொடுக்கக்கூடாது என்று வைத்திருக்கிற காரணத் தினால் இளம்பிராயத்தில் நல்ல பழக்க வழக்கங்கள் அடைவதற்குள்ள போதிய வாய்ப்பு தடைபட்டுவிடுகிறது. மற்ற மாணவர்களுக்கு இல்லாது போனாலும், ஹரிஜன, பின்தங்கிய மாணவ மாணவிகள் வகுப்பில் சேர ஒரு சில குறிப்பிட்ட பள்ளிகள்தான் இருக்கின்றன. இதனால் அதிகத் தொகை வராது, பொருட்படுத்தத் தேவையில்லை. அவர்களுக்கு வயது வரம்பு இல்லாமல் அந்தப் பள்ளிகளில் சேர்ந்து படிக்க வாய்ப்பு அளிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

வீட்டு வசதிபற்றி வெகுவாகக் குறிப்பிடப்பட்டது. மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுத்தபோதிலும், அவர்களுக்கு தங்களுடைய ஜன்ம பூமியில் இருக்கிற விசுவாசம் காரணமாக அவர்களை வேறு எந்த இடத்திற்கு போகச் சொன்னாலும் போகமாட்டார்கள். அவர்கள் இருக்கிற இடத்தையே ஆர்ஜிதம் செய்து பட்டா செய்து கொடுத்தால்தான் அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள். வேறு எந்த இடத்தை வாங்கிக்கொடுத்து மாற்றிக்கொண்டு போ என்று சொன்னாலும் அவர்கள் இருக்கிற இடத்தை விட்டு போகமாட்டார்கள் என்று நினைவூட்டி இருக்கிற இடத்தையே ஆர்ஜிதம் செய்து கொடுத்து, அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள உதவி கொடுத்து கட்டிக்கொள்ளச் சொல்லவேண்டுமே தவிர, காண்டிராக்டர் மூலமாக கட்டிக்கொடுக்கும் வீடுகள் நிலைப்பதில்லை என்று சொல்லி, எனக்கு அவகாசம் கொடுத்த தலைவருக்கு நன்றி செலுத்தி முடித்துக்கொள்கிறேன்.

***Sri P. S. ELLAPPAN :** கனம் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் பேரில் இங்கு நடக்கிற வைபவத்தைப் பார்த்தால் எல்லாம் "இல்லை, இல்லை" என்றுதான் தோன்றுகிறது. இதிலே நான் என்ன சொல்வது என்றால், இப்போது எல்லோரும் சொல்லிவிட்டார்கள். அதையே சொல்லிக்கொண்டு, சொல்லிக்கொண்டு வந்தால் ஒரே பாராயணமாகப் போகிறது. இந்த மான்யக் கோரிக்கை எப்படி இருக்கிறது என்றால்—

கையாறை ஏற்றி அங்கணம் தின்று கரித்துணி ஆடையை
தையாதுடுத்தி மெய்யார நின்று உள்ளம் வெதவெதறப
ஐயாவென்று ஓலமிடும் நாள் என்னாள் இறைவா—கச்சி ஏகம்பனே,

என்று பட்டிணத்தார் சொன்னார். ஒரு உண்மையான சந்நியாசி இருக் கிறான், ஒரு போலி சந்நியாசி இருக்கிறான். உண்மையான சந்நியாசிக்கும் போலி சந்நியாசிக்கும் வித்தியாசம் இருக்கிறது. உண்மையான சந்நியாசி —எல்லாம் துறந்தவன்—என்ன செய்வான் என்றால், ஒரு வீட்டண்டை போய் "அம்மா" என்று கையேந்துவான். உடனே கையில் சாதத்தைப் போட்டால், அங்கேயே உண்பான். அப்படியே போகும்போது ஒரு தொட்டி யில் ஏதாவது கிழிந்த துணி இருந்தால்—"தையாதுடுத்தி" என்று சொல்கிறார்—அதை அப்படியே எடுத்து உடுத்திக் கொள்வான். போலி சந்நியாசியாக இருந்தால் அதை தைத்து உடுத்திக்கொள்வான். உண்மை யான சந்நியாசி "இன்றைக்கு பகவான் கொடுத்து விட்டான், நாளைக்கு

பகவான் கொடுப்பான்" என்ற முறையில் அப்போதைக்கப்போது கிடைப்பதை அப்படியப்படியே சாப்பிட்டு விடுவான். தொட்டியில் இருக்கிற துணியை அப்படியே எடுத்துக்கொண்டு, தெருக்கோடியில் இருக்கிற கோவிலுக்கு போவான். கோவிலில் நின்றுகொண்டு "ஆண்டவனே, எனக்கு என்று விமோசனம், இன்னும் இந்த மாதிரி எத்தனை நாள்தான் இருக்க வேண்டும், வெகு சீக்கிரத்தில் உன்னுடைய சந்நிதியில் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று "கையாறை எற்றி", சரீரத்தில் உணர்ச்சி இல்லாமல் ஆண்டவனை நம்பி அப்படியே விழுந்துவிடுவான். அதே மாதிரி இப்போது 260 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். வருஷா வருஷம் ஒதுக்கிக் கொண்டே போகிறார்கள். நிலைமை என்ன ஆகிறது என்றால் அன்றைக்கு சாப்பிட்ட சாப்பாட்டோடு இருக்கிறோம். ஆகவே இப்படி அப்போதைக்கப்போது பணம் ஒதுக்குவதைவிட, இப்போது கடன் வாங்குவதில் கஷ்டம் இல்லை (சிரிப்பு). அமெரிக்கா, ஆஸ்திரேலியா என்று என்னவெல்லாமோ சொல்லுகிறார்கள். அங்கே 10 கோடி, இங்கே 20 கோடி இதுவும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு செலவு செய்யப்படும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எங்களுக்காக 30 கோடி ரூபாய் வாங்கி ஒரே வகையில் எல்லாவற்றையும் பைசல் செய்வது போக 10, 15 வருஷம் தள்ளிக்கொண்டு போவானேன்? இதனால் எவ்வளவு சங்கடமாக இருக்கிறது.

இப்போது இருக்கிற நிலைமையில் எப்படி இருக்கிறது என்றால், உதாரணமாக சில குடி மனைகள் இருக்கின்றன. குடி மனைகள் 1948-லிருந்து இருக்கின்றன. எங்கள் தாலுகாவில் 10 குடி மனைகளை சர்வே செய்திருக்கிறார்கள். என்ன விமோசனம்? மனு போட்டால் மேலே போயிருக்கிறது என்று சொல்கிறார்கள். சப்-கலெக்டரிடம் வந்தால் அதற்கு மேலே போயிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். கலெக்டரிடம் போனால் அதற்கு மேலே போயிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இங்கே வந்து சர்க்காரைக் கேட்டால் இங்கே வரவில்லை என்று சொல்லுகிறார்கள். அது எங்குதான் இருக்குமோ தெரியவில்லை. தனியாக எங்களுக்கென்று ஒரு டிபார்ட்மெண்ட் வைத்து சரியாக இதிலெல்லாம் நடவடிக்கை எடுக்காமல் இழுத்துப் பறித்துக்கொண்டு போனால் என்ன பயன்? அஸெம்ப்ளியில் வந்தால் இதே பேச்சு, வெளியிலேயோ ஒன்றுமில்லை. அஸெம்ப்ளி காலத்தில் இங்கே இருக்கிற எம்.எல்.ஏ.-க்கள் அத்தனை பேரும் டைரக்டர் ஆபீஸிற்கு வந்து விடுகிறார்கள், அங்கே டைரக்டருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. இன்னும் ஏதாவது அதிகமாகச் சொன்னால், "இவன் எதிர் கட்சி, இப்படித்தான் பேசுவான்" என்று சொல்லுகிறார்கள். வெல்பேர் டிபார்ட்மெண்ட் ஒன்று செங்கல்பட்டில் இருக்கிறது. அங்கே கொடுக்கிற மனுவுக்கு என்ன விமோசனம் என்று தெரியவில்லை. இனி மேலாவது இந்த மாதிரி இல்லாமல் சரிவர நடத்தி ஹரிஜன முன்னேற்றத்தை உண்மையாக நடத்த வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

**SRIMATHI HEMALATHA DEVI:** கனம் தாற்காலிக அவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள ஹரிஜன நல மான்யக் கோரிக்கையிலே 10 லட்சம் ரூபாய் அதிகரித்திருப்பதை வரவேற்பதுடன், அன்னாருடைய ஹரிஜன நல முன்னேற்ற மான்யக் கோரிக்கையை நான் ஆதரித்தும், எதிர் கட்சியிலே கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை எதிர்த்தும் ஒரு சில விஷயங்களை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

ஹரிஜன நல முன்னேற்றம் என்று சொல்லும்போது மகாத்மாஜி அவர்களை நாம் நினைக்காமல் இருக்க முடியாது. நாம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுடைய லட்சியம் நாட்டிலே பிறந்த—மானிடராய் பிறந்த—அத்தனை பேரும் ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் சமம் என்ற முறையில் வாழவேண்டுமென்பது. நமது காங்கிரஸ் ஆட்சியில் அந்த லட்சியத்தைக் கடைபிடித்து, குறிப்பாக நமது மாகாணத்தில் 3-ல் இரண்டு பங்கு ஜனத்தொகை கொண்ட, 158 பிரிவுகள் கொண்ட ஹரிஜன மக்கள், பிற்பட்டவர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டு காரியங்களைச் செய்து வருகிறார்கள்.



மூன்றில் இரண்டு பங்கு ஜனத்தொகையை உடைய பிற்பட்ட வகுப்பினரும், பொருளாதாரத் துறையில் முற்பட்டவர்களும் சமமாக இருக்கக்கூடிய முறையில் சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முற்பட்டிருக்கிறது காங்கிரஸ் கட்சி என்பதை யாவரும் அறிவார்கள். இந்த சர்க்கார் இப்பேர்ப்பட்ட நல்ல காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிகிறோம். இவர்களுடைய முன்னேற்றத்திற்கென வருடா வருடம் பணம் 10-20 a.m. ஒதுக்கிக் கொண்டிருப்பதைவிட, எத்தனையோ ஆண்டுகள் பணம் ஒதுக்கிக் கொண்டிருப்பதைவிட அதிகமான பணத்தை சில ஆண்டுகளிலே ஒதுக்கியே அவர்களை சில ஆண்டுகளிலேயே முன்னுக்குக் கொண்டுவந்துவிடலாம். அவ்வாறு செய்தால் நாம் ஸோஷலிஸ சமுதாயத்தை அதிவிரைவில் அமைக்க விரும்புவதற்கேற்றவாறு, அவர்களை அதிவிரைவில் முன்னுக்குக் கொண்டு வரலாம்; ஸோஷலிஸ சமுதாயத்தை விரைவில் காணலாம். எனவே சர்க்கார் இந்த மானியத்திற்கு பணம் ஒதுக்கும்போது அதிகப்படியான பணத்தை ஒதுக்க வேண்டும். எதிர்க் கட்சி அங்கத்தினர் ஒருவர், வெளிநாடுகளிலிருந்து இதற்காக ஏராளமான கடனை வாங்கலாம் என்று சொன்னார். அவர் அவ்வாறு கூறியதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அது முடியாத காரியம். இந்த மானியத்திற்கு பணம் ஒதுக்கும்போது அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜன மக்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் வழங்குவதிலுள்ள காலதாமதம் பற்றி நேற்றுகூட என் சகோதரி அங்கத்தினர் ஒருவர் பேசினார். ஸ்காலர்ஷிப்புகள் வருஷக் கடைசியிலேயே கொடுக்கப்படுவதால், மாணவர்களும், மாணவிகளும் ஸ்காலர்ஷிப்பு நமக்கு வருமா என்ற கவலையிலேயே கவனம் செலுத்துவதால், அவர்கள் தங்கள் பாடத்தில் கண்ணும் கருத்துமாயிருக்க முடியவில்லை என்று அவர் கூறினார். அது முற்றிலும் உண்மை. ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்கிறதோ, கிடைக்கவில்லையோ; அது ஒரு புறம் இருக்கட்டும். "முதலை செத்ததுமன்றி குழி தோண்டப் பத்துப் பணம்" என்பது போல, அவர்கள் ஸ்காலர்ஷிப் வரும் வரையில் சம்பளம் கொடுப்பதற்காக வாங்கும் கடனுக்கு வட்டி வேறு கொடுக்க வேண்டியிருக்கிறது. ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப்படும் வரையில் அவர்கள் கடன் வாங்கித்தான் சம்பளம் கட்டுகிறார்கள். ஸ்காலர்ஷிப் பணம் தாமதமாக வருவதால் அவர்கள் கடனுக்கு வட்டியும் கொடுக்க வேண்டியிருக்கிறது. கூடியவரையில் உத்தியோகஸ்தர்களையாவது அதிகப்படுத்தி மாணவ மாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப் பணம் சீக்கிரம் கிடைக்கச் செய்தால் மிகவும் நலமாயிருக்கும்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கென காலனிகள் கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்படுகிறது. அந்த அந்த ஊரிலேயே காலனிகள் கட்ட வேண்டுமென்ற பிரச்னை இருக்கிறது. சர்க்கார் எந்த இடங்களில் இவர்களுக்கு காலனிகள் கட்டிக்கொடுக்க விரும்புகிறார்களோ அந்த இடங்களில் சர்க்கார் புறம்போக்கு நிலம் இல்லை. அதன் காரணமாக அங்குள்ள ஹரிஜனங்கள் பட்டாதாரின் நிலத்தை ஆக்கிரமிக்கவேண்டியிருக்கிறது. அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் பட்டாதாரின் நிலத்தை வெகு சீக்கிரத்திலேயே ஆர்ஜிதம் செய்து அவர்களுக்குக் காலனி கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையை எடுத்துக் கொண்டால், ஜாதிகளை சிருஷ்டிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஸ்காலர்ஷிப்புகளை அளிக்கும்போது பின்னடைந்த வகுப்பினர்களின் பெயர்களையும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் பெயர்களையும், சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. அதிகமான பணத்தை இவர்களுடைய முன்னேற்றத்திற்கென ஒதுக்கி இவர்களை சில ஆண்டுகளுக்குள்ளேயே முன்னுக்குக் கொண்டு வந்தால் சீக்கிரத்தில் ஜாதிகள் மறைந்துவிடும்.

எதிர் கட்சியைச் சேர்ந்த சிலர் "எங்கள் கட்சித் தலைவர்தான் தீண்டாமை ஒழிப்புக்குப் பாடுபட்டார். எங்கள் கட்சித் தலைவர்தான் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை நடத்தினார்" என்று சொல்கிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனாலும்கூட, அந்தக் கட்சித் தலைவர் காங்கிரஸில் இருந்த

போதுதான் அவைகள் நடந்தனவே தவிர, அவர் எதிர்கட்சித் தலைவராக இருக்கும்போது அவருக்கு அந்த எண்ணம் ஏற்படவில்லை என்று கூறிக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI P. S. SANTHANAM:** மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, ஹரிஜன முன்னேற்றத்திற்கான மானியக் கோரிக்கையின் பேரில் சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது தமிழ் நாட்டு ஜன சங்கியையில் 1/6 பகுதியினர் ஆதித்திராவிட மக்கள். அதைப் பார்க்கும் போது, இன்று அவர்களுக்காக சர்க்கார் ஒதுக்கியிருக்கும் தொகை மிகக் குறைவு என்று நான் கூறுவேன். ஆனால் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு தோராயமாக 38 லட்ச ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் மொத்த ஜனத்தொகையில் 1/6 பகுதியினர் ஆதித் திராவிட மக்களாக இருப்பதால், அவர்களுடைய அவல நிலையைப் போக்க வேண்டுமானால் அதற்கு இன்னும் அதிகமான பணம் ஒதுக்க வேண்டும். இந்த ஆதித் திராவிட மக்கள் பொருளாதாரத் துறையில் அவல நிலையில் இருந்தாலும் தற்சமயம் கல்வித் துறையில் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் இந்தப் பதிமூன்று ஆண்டு காலத்தில் நாங்கள் கல்வித் துறையில் போதிய அளவு முன்னேறிவிட்டதாக நினைக்கக் கூடாது. வெள்ளையர் ஆட்சி காலத்திலேயே, கிருஸ்தவர்களாக மாறிய ஆதித் திராவிடர்கள்தான் கல்வித் துறையில் முன்னேறினார்கள். மொத்தமாகப் பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்களில், கல்வித் துறையில் முன்னேற்றமடைந்தவர்களில் பெரும்பாலோர் கிருஸ்தவர்களாக மாறியவர்கள்தான். வெள்ளையர் அவ்வாறு நிர்வாகம் நடத்தி வந்தார்கள். இங்கே கிருஸ்தவர்கள் இருந்த காலத்தில் அவர்கள் ஹரிஜன மக்களுக்கு கல்வித் துறையில் வழி காட்டி வந்தார்கள். இப்போது இங்கு ஹரிஜனங்களின் நிலை வேறு. கந்தசாமி வீட்டில் ராபெர்ட் பிறந்தானே தவிர, ராபெர்ட் விட்டில் கந்தசாமி பிறக்கவில்லை. இன்று ராபெர்ட்டாக இருப்பவன் அன்று வேறு பெயர் வைத்துக் கொண்டிருக்கலாம். அண்ணாமலையின் மகன் தன் பெயரை ஜான் என்று வைத்துக்கொண்டிருக்கலாம். தங்கள் படிப்பு நிமித்தமாக அவர்கள் கிருஸ்தவ மதத்தில் சேர்ந்தார்கள். சர்க்கார், ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கும் போது, பையனின் பெயர் என்ன, அவனுடைய தகப்பனாரின் பெயர் என்ன என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அவர்கள் மதம் மாறியது படிப்பு நிமித்தமாகவே தவிர, வேறு காரணத்திற்காக அல்ல. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு சர்க்கார் கல்வித் துறையில் கட்டாயம் சலுகை காட்டவேண்டும், அவர்கள் கல்விக்காகவும் தொழிலுக்காவும்தான் கிருஸ்தவ மதத்தில் சேர்ந்தார்கள். இன்று தமிழ் நாட்டில் கிருஸ்தவர்களாக மாறியவர்களாக இருப்பவர்களுள் 92 சதவிகிதத்தினர் முன்பு தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்திருப்பார்கள். மீதி 8 சத விகிதத்தினர் முன்பு நாடார், உடையார் முதலிய சமூகத்தினராக இருந்திருப்பார்கள். கிறிஸ்தவனாகக் கன்வெர்ட் ஆன ஹரிஜன் இன்று ஆரிய சமாஜத்தின் மூலம் மறுபடியும் ஹிந்துவாக ஆகிறான். அதாவது கிரிஸ்தவனாக கன்வெர்ட் ஆன ஹரிஜனாகிய ராபெர்ட்டுக்கு ராமசாமி என்ற பெயரை ஆரிய சமாஜம் கொடுக்கிறது. ஆரிய சமாஜம் அவனை ஹிந்து மதத்திற்கு மாற்றுகிறது. கடந்த பிப்ரவரி மாதத்தில் பல கிருஸ்தவர்கள் இவ்வாறு மதம் மாறியிருக்கிறார்கள். அவர்கள் மறுபடியும் பொருளாதாரக் காரணங்களுக்காக மதம் மாறி ஹிந்து மதத்திற்கு திரும்பி வருகிறார்கள். அப்படி ஹிந்து மதத்திற்குத் திரும்பி வருபவர்களுக்கு சர்க்கார் சலுகைகளை உடனடியாகக் கொடுக்க வேண்டும். அண்ணாமலை அப்ரகாமாக தன் பெயரை மாற்றிக் கொண்டபோது உடனே கெஜெட் நோட்டிபிகேஷனில் அதை குறிப்பிட்டது போல அப்ரகாம் அண்ணாமலையாக தன் பெயரை மாற்றிக் கொள்ளும் போதும் உடனே கெஜெட் நோடிபிகேஷன் போட்டு அதைத் தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு கெஜட் நோடிபிகேஷன் போட்டு அவன் ஆதித்திராவிட மகன் என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காக அரசாங்கம் இப்போது ஏராளமாகப் பணம் செலவிடுகிறது என்று கேள்விப்படுகிறேன். இது வெறும் பிரசாரமாக இருக்கிறதே தவிர இப்பிரசாரத்தால் மக்களுக்கு ஒரு பயனும் ஏற்படவில்லை. சர்க்கார் செய்யும் காரியங்களை எதிர் கட்சிக்காரர்கள்



பணத்தை நல்ல விதத்தில் வேறு வகையில் செலவழிக்கலாம். கிராமங்களில் சுகாதாரத்தையும் சுத்தத்தையும் பாதுகாப்பதற்கென கிராமங்களிலுள்ள சில படித்த வாலிபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை கிராமங்களில் அக்காரியத்தைச் செய்யச்சொல்லி, அதற்கு அப்பணத்தைச் செலவழித்தால், மக்களும் பயனடைய முடியும், கிராமங்களும் சுத்தமாக இருக்கும். இன்று தீண்டாமை ஒழிப்பைப் பற்றி நினைக்கும்போது தமிழ் நாட்டு ஜனத்தொகையில் 1/6 பகுதியினராக இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரியார் ராமசாமியைத்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. பெரியார் ராமசாமி அவர்கள் திருவாங்கூரில், வைக்கம் என்ற பகுதியில் ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று முற்பட்டு அடி, உதைபட்டார்கள். ஜாதி ஒழிய 10-30 a.m. வேண்டுமென்பதற்காக மும்முரமாகப் பாடுபட்டவர் பெரியார் ராமசாமி. தமிழகத்தில் ஜனத்தொகையில் ஆறில் ஒரு பங்காக இருக்கிற ஹரிஜன மக்கள் பெரியார் ராமசாமி அவர்களின் தொண்டுக்காக அவரை வணங்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

* **SRI V. VEDAYYAN:** தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன். ஹரிஜனங்களுக்காக ஒரு மானியமும், இலாகாவும் ஏற்படுத்தப்பட்டிருப்பதே அவர்களுக்கு இந்து சமூகத்தில் உள்ள இழிநிலையைக் காட்டுகிறது. அந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்றுதான் சர்க்கார் காந்திஜியின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இப்படிப்பட்ட திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி வருகிறது. இந்தத் திட்டங்களுக்காகப் பெருந்தொகை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்க அம்சம். தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்பது தான் என்னுடைய கோரிக்கை. இன்னும் நம்முடைய நாட்டிலே பார்த்தால்—நகரங்களிலே வேண்டுமானால் ஓரளவு தீண்டாமை போயிருக்கிறது என்று சொல்லலாம்—கிராமங்களிலே தீண்டாமை தலை விரித்தாடுகிறது என்பது நன்கு தெரியும். அப்படிப்பட்ட நிலைமையைப் போக்க இந்த வேலையை போலீஸ் டிப்பார்ட்மெண்டிடம் ஒப்படைக்க வேண்டும். எப்படி மது விலக்குச் சட்டத்தை அமுல் படுத்தும் வேலை போலீஸ் இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறதோ அதேபோல் இந்தத் தீண்டாமை ஒழிப்பு வேலையையும் போலீஸ் இலாகாவின் பொறுப்பாக ஒப்படைத்து விட வேண்டும். அப்படிச் செய்தால் தான் இந்தத் தீண்டாமை துரிதமாக போய்விடும் என்று கருதுகிறேன். இது சம்பந்தமாக இன்னும் அதிகமான தொகை வேண்டுமானாலும் ஒதுக்கிக் கொள்ளலாம். ஹரிஜன நலப் பள்ளிகள் என்று தனியாக வேண்டியதில்லை. சர்க்காரே நடத்த வாய்ப்பு இருக்கும் காரணத்தினால், ஜில்லா போர்டு நடத்த தகுதி இருப்பதால் இந்த தனிப் பள்ளிகளுக்காகச் செலவழிக்கப்படும் தொகையைத் தீண்டாமை ஒழிப்புக்குப் பயன்படுத்தலாம் என்று கருதுகிறேன்.

ஹரிஜனங்களுக்கென்று காலனிகள் தனியாகக் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு கட்டுவதை விட எங்கெங்கு மனைக்கட்டுகள் தேவையோ அங்கெல்லாம் மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுக்க வேண்டும். அவர்கள் விரும்பினால் அவர்கள் குடியிருக்கும் நிலத்தையே ஜாரி செய்து கொடுக்கலாம். ஜாதி இந்துக்கள் வசிக்கும் இடங்களாகப் பார்த்து குறைந்தது 10, 20 மனைகள் இருக்கவேண்டுமென்று எண்ணிக்கையைப் பற்றிக் கவலைப்படாமல், ஒரு மனை தேவையாக இருந்தாலும் கூட மனை வழங்கவேண்டும்.

உத்தியோகம் சம்பந்தமாக இப்போது ஹைக்கோர்ட்டில் தீர்ப்பு ஒன்றைப் பார்த்தோம். வெறும் ரிசர்வேஷன் என்று மாத்திரம் இருந்தால் போதாது. "ரிசர்வேஷன் அட் எவ்வரி ஸ்டேஜ்" என்று அரசியல் சட்டத்திலே திருத்தங்கள் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ஒரு ஹரிஜன் டெபுடி கலெக்டர் என்ற பதவியில் ஆரம்பித்தால் கூட, அவனுக்கிருக்கும் பல குறைகள் காரணமாக, அவனுக்குக் கீழே இருக்கக் கூடிய குமாஸ்தாக்கள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் கூட அவனைத் தாண்டிச் சென்று விடுவார்கள். ஆகவே, ஒவ்வொரு ஸ்டேஜிலும் ரிசர்வேஷன் இருக்கவேண்டும்.

[Sri V. Vedayyan] [25th March 19

பொருளாதார நிலையின் காரணமாக தொகுதிகளை இரண்டாகப் பிரிக் போவதாகத் தெரிகிறது. அப்படிப் பிரித்தால் மிகவும் பிற்போக்கா ஆளை ஜாதி இந்துக்கள் விரும்பினுல் தேர்ந்தெடுக்கக் கூடிய நிலை இருப்பதாலும், நல்ல திறமையுள்ள, சேவை செய்யக் கூடியவர்களு வாய்ப்பு இல்லாமல் போய்விடுமாதலாலும், " டைபர்கேஷன் ஆப் கான்ஸ் வஸிஸ் "-ஐ நான் ஆட்சேபிக்கிறேன். இது சம்பந்தமாக நம்மு சர்க்கார் நல்ல முடிவு எடுத்து மத்திய சர்க்காருக்கு அனுப்ப வே மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஹரிஜன ஹாஸ்டல்களில் உயர்ந்த ஜாதி மாணவர்களையு எந்த வித கட்டணமும் இன்றி 10 பர்சண்ட் சேர்த்துக் கொள்ள வேண் அது கட்டாயமாக இருக்க வேண்டும். எனக்குக் கொடுத்த சந்தர்ப்பத்து நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **Sri M. K. MARIAPPAN** : தலைவர் அவர்களே, அமை அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரி கிறேன். இந்த நாட்டிலே பெரும்பான்மையான சமுதாயமாக உள் தாழ்த்தப்பட்ட மக்களுடைய குறைகளைச் சட்ட மன்றத்தில் சொல் கூட நேரம் போதவில்லை என்பது மிக மிக வருந்த வேண்டிய நிலை யாகும். இருப்பினும் சில முக்கியமான கருத்துக்களைச் சொல்ல ஆசை படுகிறேன்.

சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் கல்விக்காகவும், தொழிலு காகவும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் பொரு ளாதார முன்னேற்றம் ஏற்பட்டால்தான் தீண்டாமை ஒழியும் என் காரணத்தினுல் நம்முடைய சர்க்கார் கல்விக்காகவும், தொழிலுக்காகவு இன்னும் அதிகப்படியான தொகையை ஒதுக்கவேண்டுமென்பது என்னுடை வேண்டுகோள். மாணவர்களுடைய விடுதிகள் பல இடங்களில் புதிதாக திறக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய சேலம் ஜில்லாவிலும் கடந்த ஆண்டு காலமாக பல விடுதிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனு என்னுடைய தொகுதியான ஆரூர் தாலுக்காவில் மிகவும் பிற்போக்கா பகுதியாக இருப்பதால் இரண்டு ஹரிஜன மாணவர்கள் விடுதியைத் திற வேண்டுமென்று பல முறை இந்த மூன்று ஆண்டுகளாகக் கோரியு இன்னும் ஒரு விடுதி கூட திறக்க முன் வரவில்லை. அங்கு மானே மெண்ட்டால் திறக்கப்பட்ட ஒரு விடுதியை சர்க்கார் எடுத்துக் கொள்கிறோ என்று எழுதி வாங்கிக் கொண்டு, அந்த விடுதியைச் சர்க்காரும் நடத்தாமல் மானேஜ்மெண்டாருக்கும் " கிராண்ட் " கொடுக்காமல் அப்படியே விட பட்டிருக்கிறது. இதனுல் அந்த வட்டார மக்களுக்குச் சர்க்காரிடம் அதிருப் ஏற்பட்டிருக்கிறது. வரும் 1960–61-ம் ஆண்டிலாவது எங்கள் தாலுகாவி இரண்டு ஹாஸ்டல்களை எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

ஹரிஜனங்களுக்காக நில ஆர்ஜிதம் செய்து கொடுப்பதைப்பற்றி எல்லா மெம்பர்களும் வலியுறுத்திச் சொன்னுர்கள். அந்த வகையில் மி கஷ்டங்கள் இருக்கின்றன. என்னுடைய தாலுகாவைப் பொறுத்த வ கடந்த மூன்று ஆண்டுகளாக 200, 300 மனைகளுக்காக, சம்பந்தப்பட் அதிகாரிகளுக்கு நான் சிபாரிசு செய்து அனுப்பியும் கூட, இன்னும் இ ரண்டு கிராமங்களுக்குக் கூட நிலம் வாங்கிக் கொடுத்ததாக என்னு பெருமையாகச் சொல்ல முடியவில்லை. அதற்காகச் சட்டத்தில் ஏதாவ திருத்தம் செய்ய வேண்டுவது அவசியமாக இருந்தால் ஹரிஜனங்களுக் நன்மை செய்யும் நோக்கத்தில் உடனடியாக அதைச் செய்ய வேண் மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுடைய காலனிகள் மின்சார விளக்குகள் போடுவது அத்தியாவசியமானது. தற்போது பஞ்சாயத்து வசம் அதிகார களைக் கொடுத்திருக்கும் நேரத்தில் சில பஞ்சாயத்துக்களில் உள்ள காலனி களுக்குத்தான் விளக்குகள் போடப்பட்டிருக்கிறதே தவிர பல பஞ்சாயத்து களில் உள்ள காலனிகளில் அவ்வசதி செய்து கொடுக்கப்படவில்லை. அந் வட்டாரப் பஞ்சாயத்து தலைவர்களுக்கு சர்க்காருடைய நோக்கத்தையும் சட்டத்தையும் எடுத்துக் கூறி, ஹரிஜனங்களுக்காக என்னென்ன துறையி



25th March 1960] [Sri M. K. Mariappan]

பஞ்சாயத்து நிர்வாகத்தில் என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்பதையும் விளக்கி அவர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்பது தான் என்னுடைய அபிப்பிராயம். தோட்டிகள் கைவண்டி இழுப்பதற் காக சர்க்கார் அவர்களுக்கு 50 சதவிகிதம் மான்யமாகக் கொடுத்திருப் பதைப் பற்றி சந்தோஷம். அது போன்று மாத சம்பளத்தில் நான்கிலொரு பங்கு, ஐந்திலொரு பங்கு தொகையை சன்மானமாகக் கொடுத்தால் மிக மிக மேலானது. ஏனென்றுல் இந்த நாட்டிலே எல்லாத் தொழில் களையும் விட, மிகக் கேவலமான தொழில் செய்யக்கூடியவர்களாக இருப் பதால், அரசாங்கம் அவர்கள் விஷயத்தில் அதிக அக்கறையும் கவனமும் செலுத்த வேண்டு மென்பது என்னுடைய வேண்டுகோள்.

**Sri N. MARUDACHALAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜன மான்யக் கோரிக்கையின் மீது என் அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மான்யத்திற்காக இவ்வருஷம் 2 கோடி 95 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1956–57-ல் மத்திய சர்க்கார் கொடுத்த மான்யத்தில் மீதித் தொகை 25 லட்ச ரூபாய் என்று தெரிகிறது. அதை இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே செலவழிப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். அதைச் சேர்த்தால் 3 கோடியே 20 லட்ச ரூபாய் இன்றைக்கு ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தை எந்த முறையில் சர்க்கார் செலவிடுகிறது என்று பார்த்தால், ஹரிஜன மான்யம் என்று குறிப்பிடப்படுகிறது. இதைப் பல வகுப்பினர் களுக்குப் பங்கு போட்டுவிடுகிறது. ஆறு வகுப்பினர்களுக்குப் பங்கு போடப் படுகிறது. நிர்வாகச் செலவு போக மீதமுள்ள சிறிய தொகை தான் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. கல்வி வசதி, வீட்டு வசதி, வேளாண்மை வசதி, குடியிருப்பு இவைகளுக்கெல்லாம் இந்தப் பணத்தை ஒதுக்க முடியுமா என்றுல், அது போதாது என்று தான் நான் கருதுகிறேன். வருஷா வருஷம் இந்த ஹரிஜன மான்யத் திற்காக ஒதுக்கப்படும் தொகை போதவில்லை. அதிமாகத் தொகை ஒதுக்கப் பட வேண்டுமென்று கூறிக் கொண்டிருக்கிருர்களே தவிர, ஹரிஜன மக்கள் எந்த விதத்திலும் முன்னேற்றம் அடைந்ததாகத் தெரியவில்லை. காரணம், இன்றிருக்கும் ஹரிஜன மக்கள் பல கிராமங்களில், நாட்டுப் புறமானுலும் சரி, எல்லோரும் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதி பட்டுக் கொண்டிருக்கும் போது எந்த விதத்திலும் அவர்கள் பொரு ளாதாரத் துறையில் முன்னேருத வரையில் ஹரிஜன மக்கள் முன்னேற்றம் அடைவது கஷ்டம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்குச் சர்க்கார் என்ன செய்ய வேண்டுமென்றுல், ஹரிஜன மக்கள் அதிகமாக இருக்கும் இடங்களில், தொழில் அபிவிருத்தி செய்வதற்காக வேண்டி மில்களை ஏற்படுத்தி, அந்த மில்கள் மூலமாக அவர்களுக்கு வேலை கொடுத்தால், அதன் மூலமாக ஊதியத்தைப் பெருக்கிக் கொண்டு, வாழ்க்கை நிலையைச் சரிக் கட்டிக் கொள்ள வசதியாக இருக்கும். அதுமாதிரிதான் மில் கட்டுவ தற்கு அரசாங்கத்திலிருந்து அனுமதிப் பெறப்படுகிறது. அப்பொழுது அரசாங்கம் ஒரு நிபந்தனையை போட்டு அனுமதிக்க வேண்டும். 25 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்ட மக்களை இனி வேலையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் நிபந்தனை விதித்து, அவர்களுக்கு அனுமதி கொடுத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும், பொருளா தாரத்தைச் சரிக்கட்டிக் கொள்ள வசதியாக இருக்கும்.

படித்தவர்களுக்கு வேலை கொடுப்பது என்ற முறையில் அரசாங்கம் 12½ சதவிகிதம் கொடுப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும் 5 சதவிகிதத்தினர்கூட ஹரிஜன மக்களில் படித்தவர்கள் இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒருவர், இருவர் படித்தவர்களாக இருந்தாலும் கூட, அவர்களுக்கும் வேலை கிடைக்காமல் பலகிராமங்களிலே இருப்பதை நாம் நேரில் பார்க்கிறோம். ஆகவே,'வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனத்திலே, முன்னுல் யார் விண்ணப்பம் போடுகிருர்களோ அவர்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதில்லை. இரண்டாவது விண்ணப்பம் போட்டவர்களுக்கு " ஸம்திங் " வாங்கிக் கொண்டு வேலை தேடிக் கொடுக்கப்படுகிறது.

இம்மாதிரி பல இடங்களில் வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனங்களி நடைபெறுகிறது. மேலும் எந்த ஜாதியினர் மில் வைக்கிறரோ அ ஜாதியினரைத்தான் அந்த மில்லிலே வேலைக்கு எடுக்கிறார்கள். பா ஜாதியினரை எடுப்பதில்லை. ஆகையால், வேலை தேடிக் கொடுப்பதி எல்லோருக்கும் தொழில் வேண்டும். தொழில் இருந்தால் தான் இ நாட்டில் வாழமுடியும். மேலும் ஸ்காலர்ஷிப் பணம் கொடுப்பதி என்று பலர் கூறியிருக்கிறார்கள். 'ஊதுகிற சங்கை ஊது, விடி போது விடியட்டும்' என்ற முறையில் வருஷா வருஷம் அங்கத்தினர் சொல்லவேண்டியது. ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்காமல் இருக்க வேண் யதுதான் இருக்கிறது ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப்படவில்லை என் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலிருந்தும் விண்ணப்பங்கள் வந்திருக்கின்ற ஸ்காலர்ஷிப் பணத்திற்கு விண்ணப்பம் செய்துகொள்வதற்கு வேண்டி பாரங்கள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் கிடைப்பதில்லை. ஒரு பள் கூடத்தில் 100 பேர்கள் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமென்ற 25 பாரங்கள்தான் கிடைக்கின்றன. அந்த 25 பாரங்களை வைத் கொண்டு, எப்படி 100 பேர்கள் விண்ணப்பம் செய்துகொள்வது ? ஆகை யால், அரசாங்கம் உதவி செய்வதோடு, கல்வி அபிவிருத்திக்கும் ஆவ செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**SRI P. ARASAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜ நல இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திட்டத்தை நான் வ வேற்கிறேன். கல்விச் சலுகை, ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கு திட்டங்கள், உழவர்களுக்கு மாடு வாங்கிக் கொடுக்கும் திட்டங்கள், படி துறை, கிணறு, பாதைகள் மற்றுமுள்ள எல்லாத் திட்டங்களையும் கொண் வந்திருப்பதை நான் மிகவும் வரவேற்கிறேன். சில கிராமங்களில் லேப ஸ்கூல்கள் இருக்கின்றன. லேபர் ஸ்கூல்கள் இல்லாத இடங்களில் ஜில்ல போர்டு ஸ்கூல்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்கள் ஜாதி இந்து கள் வசிக்கும் தெருவில் இருக்கின்றன. ஹரிஜனங்களுக்காகத் தனியா பள்ளிக்கூடம் இருக்கத் தேவையில்லை, அந்தப் பள்ளிக்கூடங்களிலே படிக்கலாம் என்று பல திட்டங்கள் தீட்டியிருப்பதை வரவேற்கிறேன் இருந்தாலும், அந்தப் பள்ளிக்கூடங்களில் ஹரிஜன மாணவர்கள் போனு அவர்களை ஜாதி இந்துக்களின் குழந்தைகளோடு சேர்த்து உட்கா வைத்துப் பாடம் சொல்லிக்கொடுப்பதில்லை. அப்படிச் செய்ய ஜாதி இ துக்கள் சமூகத்திலிருந்து வந்திருக்கும் ஆசிரியர்கள் சங்கோஜப்படுகிறார்கள் ஆகையால், தயவு செய்து, அந்தத் தெருக்களில் இருக்கும் ஜில்லா போர் பள்ளிக்கூடங்களில் ஹரிஜன ஆசிரியர்களைப் போட்டு ஹரிஜன மாணவ களும், ஜாதி இந்து மாணவர்களும் சமமாக பக்கத்தில் உட்கார்ந் படிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கிராமங்களில் டீக்கடைகள் இருக்கின்றன. அவை பொது இடங்களி உள்ளன. அந்த இடங்களில் தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக அதி துவேஷங்கள் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். வெளியிலேயே ஹரிஜன களை வைத்து, அங்கே மரக்குவளைகளை அவர்களிடம் கொடுத்து, அங்கே சாப்பிடவேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருப்பது மிகவும் வருந் தக்கது.

**THE HON. SRI P. KAKKAN** : அம்மாதிரி எந்த ஊரிலாவ இருக்கிறதென்று கனம் அங்கத்தினருக்குத் தெரிந்தால், அந்தக் கிராம களின் பெயர்களை என்னிடம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**SRI P. ARASAN** : பொதுவாக, சாத்தாங்குடி, பார்லிக்குப் இந்த இடங்களில் அம்மாதிரி நடக்கிறது. இன்னும் சில ஊர்களி பேர் எனக்கு இப்பொழுது ஞாபகம் இல்லை. அந்த இடங்களில் ஹரி ஜனங்கள் வெளியிலே நின்று டீ குடிப்பது மிகவும் வருந்தத்தக்கதா இருக்கிறது. அதற்காகவேண்டி, கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களையு குடிக்கிறவர்களையும் போலீசார் பிடிப்பதுபோல், இப்படிப்பட்டவர்களையு கண்டுபிடித்து, அவர்கள் மேல் குற்றம் சாட்டி, அபராதமோ, தண்டனையோ





கொடுத்தால்தான் தீண்டாமை துவேஷம் ஒழியும். ஆகவே, போலீசாரைக் கொண்டு, மதுவிலக்குக் குற்றம்போல் தீண்டாமைக்குற்றத்தையும் கருதி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஏழை விவசாயிகளுக்கு சர்க்கார் பலவிதமான திட்டங் களைக் கொண்டு வருகிறார்கள். 100-க்கு 75 பேர்கள் விவசாயிகள், நிலத் தில் இறங்கி சாகுபடி செய்ய தகுதியுடையவர்கள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அப்படியிருக்கும்பொழுது விவசாயிகளுக்கு நிலம் கொடுக்காமல் இருப்பதற்கு பலவிதமான சூழ்ச்சிகள் செய்துகொண்டிருக் கிறார்கள். ஹரிஜனங்களுக்கு கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று இருந்தும், சில சமயங்களில் ஹரிஜனங்கள் விலக்கப்படுகிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அரசாங்கத்தை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக சேரி விஸ்தரிப்பு சம்பந்தமாக, சுமார் 7, 8 ஆண்டுகள் ஆகியும் அந்த விஷயம் எதுவும் இதுவரையிலே நடைபெறவில்லை.

**THE HON. SRI P. KAKKAN** : ஹரிஜன காலனி என்று சொல்ல வேண்டும்.

**SRI P. ARASAN** : ஹரிஜன காலனி விஸ்தரிப்பு இன்று வரை யிலே ஒன்றும் நடைபெறவில்லை. ஒவ்வொரு தாலுகாவிலும் அதிகப் படியான குறைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் இதை உடனடியாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் தாலூகாவில் 4 கிராமங்களில் காலனி கட்டிக்கொடுக்கவேண்டும். குணம் என்ற கிராமத்தில் காலனி மக்கள் குடிபுகுவதற்கு முன்னாலே வீடுகள் இடிந்து விழக்கூடிய நிலைமையில் இருக்கிறது. மண் சுவரை வைத்து கட்டியதைவிட ரொம்பவும் மோசமாக இருக்கிறது. சர்க்கார் கண்டிராக்டர்கள் சர்க்காரை மட்டும் மோசம் பண்ணுவதோடு அல்லாமல், ஏழை ஹரிஜன மக்களையும் மோசம் செய்கிறார்கள் என்று தோன்றுகிறது. மறுபடியும் திட்டம் கொண்டுவரும் நேரத்தில் இன்னும் கொஞ்சம் அதிகமாக பணம் கொடுத்து காலனியில் உள்ள வீடுகளை உறுதியாகக் கட்டிக்கொடுத்து ஏழை ஹரிஜன மக்கள் அங்கே நெடு நாட்கள் குடியிருந்து வாழும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***SRI R. KANDASAMY** : கனம் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கனம் அமைச்சர் தலைமையிலே ஹரிஜன இலாகா மிக நன்றாக நடை பெறுகிறது என்பதைப்பற்றி யாரும் மறுப்பு சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். டைரக்டர் அவர்களும், அவர்களுடைய ஸ்பெஷல் பி.ஏ. அவர்களும் மிக நன்றாக திறமையுடன் பணியாற்றுகின்றனர். ஸ்காலர் ஷிப் முதலியவைகளை காலத்தில் கொடுத்து மக்களுக்கு அளித்து உதவி செய்வதை நான் பாராட்டுகிறேன்.

மேற்கொண்டு, என்னுடைய தொகுதி தேவர் கிராமத்தில் காவேரி யில் வெள்ளம் வருவதினால் ஹரிஜனங்களின் வீடுகள் அதிகமாக பாதிக்கப் பட்டிருக்கின்றன. இதுவரையிலும் அங்கே சர்க்கார் தலையிடாமல் இருக் கிறார்கள். எனவே அந்தப் பகுதிகளில் உள்ள வீடுகளை சரியாகக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். தத்திகுளம் வேடுகுரிச்சி, சீராப்பள்ளி முதலிய கிராமங்களில் தீண்டாமை தாண்டவ மாடுகிறது. டீ, காபி கடைகளில் ஹரிஜனங்கள் எல்லோருக்கும் சமமாக இருந்து டீ முதலியவை அருந்த முடிவதில்லை. அங்குள்ள தீண்டாமை ஒழிக்கப்படவேண்டும். ஸ்ரீ வேதமாணிக்கம், வேதய்யன் அவர்கள் சொன் னதுபோல ஹரிஜனங்களின் பொருளாதாரம் உயரவேண்டும் என்றால் அவர்களுக்கு பஸ் ரூட் தரவேண்டும். தொகுதி பிரிக்கும் விஷயமாக வேதய்யா அவர்கள் சொல்லியதுபோல் டெல்லிக்கு சிபார்சு செய்து நிலைமை இப்பொழுது இருக்கிற மாதிரியே நிலைமை இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வீடுகள் இல்லாமல் அநேக மக்கள் தத்தளிக்

கிறார்கள். அங்கெல்லாம் வீட்டு நிலம் தரவேண்டும். இன்னும் வீடுகள் கட்டும்படியான திட்டத்தில் அவர்களே அஸ்திவாரம் போட்டு கட்டும்படியான முறையை ஏற்படுத்தவேண்டும். நெசவு, தையல் வேலை, தச்ச போன்ற கைத்தொழில்களில் ஹரிஜன மக்களை பரவலாக ஈடுபடுத்த வேண்டும். என்னுடைய தொகுதியாகிய திருச்செங்கோடு டவுனில் 25,000 மக்கள் இருக்கிறார்கள். குடி தண்ணீர் இல்லாமல் அவஸ்தைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலாவது கொக்குராயன் பேட்டையிலிருந்து காவேரித் தண்ணீரை வாய்க்கால்கள் மூலம் டவுனுக்கு கொண்டுவந்து குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்கவேண்டும். அங்கே வாய்க்கால்கள் வெட்டினால் 56 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பயன்படும்படியான வகை ஏற்படும். அந்த வரண்ட பிரதேசத்தில் ஏராளமன ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கஷ்டத்தை நீக்குவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இதை அவசியம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேதய்யா அவர்கள் சொன்னதுபோல மழை விட்டாலும் தூவானம் விடவில்லை. இன்னும் பல இடங்களில் தீண்டாமை தாண்டவமாடிக் கொண்டு தான் இருக்கிறது. மதுவிலக்கு சம்பந்தமாக மாதா மாதம் அதிகாரிகள் ரிபோர்ட்டுகள் அனுப்புவதுபோல், தீண்டாமை ஒழிப்பைப் பற்றியும் சிப்பந்திகள் கட்டாயம் மாதா மாதம் ரிபோர்ட்டுகள் அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri S. R. MUNUSWAMI** : கனம் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மான்யக் கோரிக்கையின் மீது இந்திய குடியரசு கட்சி சார்பாக எனது கருத்தை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஹரிஜன மான்யம் ஆரம்பிக்கும்பொழுது குறைந்த நேரம், நிர்வாகத்திலும் குறைவு, பேசக்கூடிய நேரத்திலும் குறைவு, மான்யமும் குறைவு, அடுத்தாற்போல் இங்கே பேசக்கூடிய நேரத்தில் சபையில் அமர்ந்திருப்பவர்கள் ஹரிஜனங்களைவிட மற்றவர்களும் குறைவு. அப்படித்தான் குறைவாகவே இருந்துகொண்டிருக்கிறது. இது குறைவான சமூகம்; குறைந்த வருவாயிலே வாழக் கூடியவர்கள், அவர்களுக்காக ஒதுக்கப்படக்கூடிய மான்யம் இது. இது "சலுகை". இதற்கு பெயர் சலுகை. இந்த ராஜ்யத்தில் வாழக்கூடிய 3 கோடி மக்களில் ஆறில் ஒரு பங்காக உள்ள மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த சலுகை ஒரு வஞ்சகமாகத்தான் இருக்கிறது. பிரதிநிதித்துவம் வஞ்சமாகத்தான் இருக்கிறது. இதுதான் எழக்கூடிய எங்களுடைய கட்சியின் பிரச்னை. அப்படிப் பார்த்தால் நம் மத்தியசர்க்காரிலே "ரிசர்வேஷன்" பிரச்னையை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்பொழுது சொல்லுகிறார்கள் உள்விவகார அமைச்சர் பந்த் அவர்கள். இது வந்து ஒரு கூட்டு ஒப்பந்த ஆட்சி என்று சொல்லுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களும், மற்றவர்களும் சேர்ந்து அனுபவிக்கக்கூடிய ஆட்சி முறை என்று தான் அவர் சமாதானப்படுத்தி பேசியிருக்கிறார்கள். இந்தக் கூட்டு ஒப்பந்த ஆட்சியில் இன்றைக்கு செலவாகக்கூடிய செலவினங்களுடைய கணக்கைப் பார்த்தால் ஹரிஜனங்களுக்கு சலுகையாகத்தான் கொடுக்கப்படுகிறது. சலுகை என்றால் என்ன? தர்ம கைங்கரியம். தர்ம கைங்கர்யம் பெறுவதற்காக பிரதிநிதித்துவம் பெற்று இங்கு வந்து அமர்ந்திருக்கிறோம். இந்த பிரதிநிதித்துவத்தை யார் கேட்டது, எதற்காக இது ஏற்பட்டது என்று பார்ப்போமானால், இதை கேட்டதற்காக இன்று எதிர்ப்பு சொல்லக்கூடிய டாக்டர் அம்பேத்கார் கட்சி சலுகை பெற, பிரதிநிதித்துவம் பெற, பிரதிநிதித்துவம் தேவை. நாங்கள் முற்போக்கு அடையவேண்டும் என்று கேட்ட டாக்டர் அம்பேத்கார் இன்றைக்கு துரோகி. யார் அன்றைக்கு பிரதிநிதித்துவம் அவசியம் என்று கேட்டார்களோ, அவர் இன்றைக்கு துரோகி,. இன்றைக்கு பிரதிநிதித்துவ அடிப்படையில் நாம் எடுத்துக்கொள்ளுவோமானால் கோபாலன் கசரத்துக்கு கோவிந்தனுக்கு பலன் என்பது போல் ஆகிவிட்டது. காங்கிரஸ்காரர்களுக்குத்தான் பிறவி குணம், சகஜம். எங்களுடைய பிரிதிநிதித்துவத்தைக்கூட அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், மற்ற கட்சியினர்



களும் அதே பாலிஸியை அனுஷ்டித்து விட்டார்கள். இதுதான் வருந்தக் கூடியது. யார் எதைக் கேட்டாரோ அதை அவன் கையில் கொடுத்து பார்க்கவேண்டும். அதை அவன் அனுபவித்தால் தான் திருப்தி ஏற்படும். அதுமாதிரி பார்க்கும்பொழுது கொடுத்திருக்கிற மான்யத் தொகை ரொம்பவும் குறைவு. கூட்டு ஒப்பந்த ஆட்சி நிர்வாகத்தில் செலவிழக்கக் கூடிய ரூ. 2,95,00,000 இதற்காக யார் வாதாடி பெற்றார்களோ அவர்களுக்காகத் தான் செலவழிக்கப்படுகிறதா? அப்படியிருந்தால் இதற்கு ஹரிஜன வெல்பேர் மான்யம் என்பது பெயருக்குத்தான். இது சோஷல் வெல்பேர் மான்யம். பிற்பட்ட மக்கள், தேவர், மறவர் போன்ற மற்றவர்கள் பெயரால், முத்தன் மூலமாக வரக்கூடிய மான்யத்தை முருக கவுண்டர் மறைமுகமாக எடுத்துக்கொண்டு போகிறார். ஆகவே மற்றவர்களையும் இதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். முத்தன் பெயரில் வைத்து மறைமுகமாக மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட இருக்கக் கூடிய நிலையை அவன் உணர்ந்தால் தான் அவனுக்கு உணர்ச்சி வரும், அப்படி உணர்ச்சி வருவதற்கு அவனுக்கு எழுச்சி உண்டாக்க வெண்டும் என்பது தான் எங்கள் கட்சி சொல்லுவது. ஆகையினால், இந்த மானியத்தைக் கோரி இருக்கும் அமைச்சரவர்கள், நிர்வாகத்தில் சரியான முறையில் செலவழிக்கச் செய்ய வேண்டும். ஒதுக்கியதில் பாதிப் பணம் நிர்வாக இயக்கத்திற்கே செலவழிந்து போய்விடுகிறது. டைரக்டர் ஆபீசுக்கு வாடகைக்கே மாதம் ரூ. 1,000 என்றால், மானியம் பெயரளவில்தான் இருக்கிறதே ஒழிய வேறொன்றும் இல்லை. நரி கொக்குக்கு விருந்து வைத்த கதையாகத்தான் இருக்கிறது. இந்த மானியம் பூராவாக அந்த ஏழை மக்களுக்குப் பயன் படவில்லையே என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

**Srimathi RAJATHI KUNCHITHAPATHAM** : தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மானிய கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலே ஆறில் ஒரு பங்கு ஹரிஜன மக்களாக இருக்கிறார்கள். அந்த மக்கள் இதுகாறும் அடக்கப்பட்டும், ஒடுக்கப் பட்டும், 60-ல் ஒரு பங்கான மக்களால், அவதிக்கு உள்ளாக்கப் பட்டும் வந்ததை எதிர்த்து, இந்த ஜாதியினருக்கு நியாயம், தருமம் வழங்கவேண்டும் என்று முதலில் சங்கநாதம் செய்தவர், அண்ணல் காந்தியடிகள் ; காந்தி மகானின் அடிச்சுவடுகளில் செல்லும் இந்த சர்க்கார் மக்களிடம் ஜாதிவித்தியாசம் பாராட்டுவது சட்ட விரோதம் என்று செய்து, அதற்கென்று சட்டங்களும் கொண்டு வந்தது வரவேற்கத்தக்கது

எனக்கு முன் பேசிய அங்கத்தினர் சொன்னார்கள், மரணம் ஏற்பட்டவுடன், உற்றாரும், உறவினரும் தான் உண்மையான அனுதாபத்தைக் காட்டுவார்கள். மற்றவர்கள் வந்தால், ஏனோ, தானோ என்றுதான் இருக்கும். ஆகவே, ஹரிஜன மானியத்தின் மீது, ஹரிஜன மக்களே பேசவேண்டும் என்று, நான் தாழ்மையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மரண சம்பவங்களிலே, மற்றவர்களோடும் சேருவதில் தான், அவர்களுடைய அனுதாபத்தையும், அபிமானத்தையும் பெறுவார்கள். அந்த விதத்தில் பார்த்தால், ஆறில் ஒரு பங்கானவர்கள் அடக்கப் பட்டும், ஒடுக்கப் பட்டும் இருந்தாலும், இந்த 60-ல் ஒரு பங்கானவர்களும் சேர்ந்துதான் சட்டங்கள் கொண்டு வர முன்னின்றார்கள்; மகாத்மா காந்தி, மேல் ஜாதி வகுப்பைச் சேர்ந்தவரானாலும், அவர்களால் தான் இது தீர்க்கப் படமுடிந்தது; மற்றவர்களுடைய ஒத்துழைப்பும் அவர் என் களுக்கு வேண்டும், அதுதான் அவர்களுக்கும் நன்மை பயக்கும், என்று போன்றவர்கள் பேசுவது அவசியம் இல்லை என்று கருதக்கூடாது

**Sri S. R. MUNUSWAMI** : ஸார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பிரதிநிதிகள் மேசைமுன் இருந்து, முன்னாள் அமைச்சர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியும், டாக்டர் அம்பேத்காரும் தான், 1932-லே, பூனாவிலே, செப்டம்பர் மாதத்திலே, கையொப்பம் இட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

Temporary Chairman (Sri V. K. KRISHNAMURTHI) How is that a point of order?

[25th March 1960

**Srimathi RAJATHI KUNCHITHAPATHAM** : கையொப்பம் இட்டு இருக்கலாம், ஆனுல் அதைக் காரியாம்சத்தில் கொண்டு வந்தது மற்றவர்கள்.

**Sri M. C. MUTHUKUMARASWAMI** : பாயிண்ட் ஆப் க்ளாரிபிகேஷன், ஸார். நான் சொன்னது, அங்கத்தினர்கள் குறைகளைச் சொல்லுவதற்கு நேரம்போதாது, நேரத்தை அதிகமாக்க வேண்டும் என்பதே. மற்றவர்கள் கலந்துக் கொள்ளக்கூடாது என்று வலியுறுத்திச் சொல்ல வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Srimathi RAJATHI KUNCHITHAPATHAM** : இவர்கள் என்னுடைய நேரத்தை எடுத்துக்கொண்டு விடுகிருர்கள். என்னுடைய நேரத்தை கூட்டுவீர்கள் என்று நினைக்கிறேன்.

பல வருஷங்களாக இவர்கள் அல்லல் பட்டுவந்திருக்கிருர்கள். இன்று மானியங்கள் கேட்கிறோம், உதவிகள் செய்கிறோம். இந்த நேரத்திலே, அவர்கள் எவ்வளவு தாழ்மையான நிலையில் இருந்தார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். அன்று அவர்கள், மாட்டுக்குத் தண்ணீர் இல்லை, ஹோட்டல்களிலே சாப்பிடமுடியாது, உயர்ந்த வகுப்பார் தெருக்களிலே, அவர்கள் செருப்பைப் போட்டுக்கொண்டு நடந்து போகக்கூட முடியாது என்ற நிலைமை இருந்தது. ஆனுல், இன்று பார்க்கிறோம், அவர்களுடைய ஊர்வலமும், பிரேதமும், எந்த உயர்ந்த ஜாதியினராலும் சரி, அவர்கள் செல்லும் பாதையில் போகும் உரிமை இருக்கிறது. அவ்வளவு தூரம் மனமாற்றத்தை ஏற்படுத்தியவர் மகாத்மா காந்தியவர்களும், அவர்கள் காலடியில் இருந்து காந்தீயத்தை நடைமுறையில் செய்துவரும் சர்க்காரும் ; ஆகவே அந்தப்பெருமை இந்த அரசாங்கத்தைச் சேரும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று அவர்களில், பேராசிரியர்களும், மருத்துவர்களும், சட்ட நிபுணர்களும், சட்ட சபை அங்கத்தினர்களும், அரசாங்க செக்ரடிரி, அமைச்சர்களும், ஆக இருப்பதற்கு வாய்ப்பு அவர்களுக்கு வந்ததற்கு, சட்டங்கள் மூலமாக பல நன்மைகளை அவர்களுக்குச் செய்ததற்காக அரசாங்கத்தைப் பாராட்ட, அவர்கள் செய்கைகளை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இன்று பார்ப்பனரும், பள்ளரும் ஒன்ருகச் சேர்ந்து இருந்து அந்த வகையில் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும் என்று சொல்லும் நேரத்தில் என் ஒரு அபிப்பிராயத்தையும் தாழ்மையுடன் சொல்ல விரும்புகிறேன். இன்று ஹரிஜன மாணவர்களுக்கு கல்விச் சலுகைகள் உபகாரச் சம்பளங்கள் இவையெல்லாம் கொடுக்கிறோம். நான் ஏதோ துவேஷத்தால் சொல்வதாக நினைக்கக் கூடாது ; என் அனுபவத்தை வைத்துக் கொண்டு சொல்லுகிறேன். இன்று அவர்களுக்குள்ளேயே ஆயிரத்தெட்டு ஜாதிகள் இருக்கின்றன என்பதைத் தெரியாதவர்கள் இல்லை. பார்ப்பனரும் பள்ளரும் சேர்ந்திருக்க வேண்டும் என்னும் சமயத்தில், இந்த டெபுடி சேவக்குகள், சீர்திருத்த அதிகாரிகள், அங்குள்ள ஜாதி ஒழிப்பைப் பார்க்கிருர்களா, அக்கரையுடன் செய்கிருர்களா என்று அமைச்சரவர்கள் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்குள்ளேயே 1008 வித்தியாசங்கள், வேற்றுமைகள் இருக்கிறபோது, மற்றவர்களை சீர் திருத்த அவர்களால் என்ன செய்ய முடியும்.

**The Hon. Sri P. KAKKAN** : அவர்களுக்குள்ளே பாகுபாடுகள் இருந்தாலும், அதைப்போக்க, அதற்கும் சட்டத்திலே இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Srimathi RAJATHI KUNCHITHAPATHAM** : அடுத்தபடியாக, இந்த கல்வி, உபகாரச் சம்பளத்தில் அவர்களுக்கு நிறைய உதவிகள் அளிக்கிறோம். கொடுக்கும் உதவி காலா காலத்தில் தந்தால் தான் நல்லதாக இருக்கும். கடுகத்தனை, தினையத்தனை அளவு கொடுத்தாலும், காலத்தில் செய்தால், கொடுப்பது உயர்ந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். எந்த அளவில் சம்பளம் உதவி வரத்தாமதம் ஆகிறதோ, அந்த அளவுக்கு ஏழை மாணவர்கள் அவதிப்படுகிருர்கள். சாப்பாட்டு மேசையில் இருந்து வெளியே நடத்தப் படுகிருர்கள். இதற்கு



25th March 1960] [Srimathi Rajathi **Kunchithapatham**]

அமைச்சரவர்கள் பரிகாரம் தேடியாக வேண்டும். டைரக்டர் அவர்களுக்கு இதற்காக, இந்த உபகாரச் சம்பளத்தை காலத்தில் கொடுத்து உதவ, அவர்களுக்கு உதவியாக ஆபீசர்களோ, வேறு உதவியாளர்களோ கொடுத்து மானியத்தை வேண்டுமானுலும் அதிகப்படுத்தி, " காலத்திஞல் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப்பெரிது " என்று சொல்லியிருப்பது போல், அடுத்த வருஷத்திலாவது இடையூறுகளையும், இடுக்கண்களையும் களைந்து, உடனடியாக காலத்தில் தருவதற்கு ஏற்றவாறு, ஏற்பாடுகள் செய்தாக வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஹரிஜனங்கள் பொருளாதாரத்தில் முன்னேறிவிட்டார்களென்ருல், சமத்துவம் தானுகவே வந்து விடும். இப்பொழுது பார்க்கிறோம், மலேயா, கொழும்பு சென்று சம்பாதித்துத் திரும்பியவர்கள், அப்படிப்பட்ட ஹரிஜனங்களும் பங்களாக்களிலே இருக்கிருர்கள். கார் வைத்து இருக்கிருர்கள். பொருளாதாரத்தில் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஜாதி வித்தியாசம் தானுகவே மறைந்திருக்கிறதைக் காண்கிறோம். விவசாயத்திலும், வேளாண்மையிலும் மட்டும், மாடு, வீடு கொடுத்து விட்டால் போதாது. அதே சமயத்தில், வியாபாரத்திலும் அவர்களுக்கு உதவிகள் செய்யவேண்டும். உதாரணமாக, அவர்கள் ஏதாவது பஸ் ரூட் கேட்டால், அவர்களுக்கு எவ்வளவு சலுகைகள் காட்ட முடியுமோ, சட்டங்களை எவ்வளவு தளர்த்த முடியுமோ அவ்வாறு செய்து கொடுத்தால் பொருளாதாரத்தில் அவர்களும் முன்னேற முடியும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கல்வி முன்னேற்றத்தோடு, பொருளாதார முன்னேற்றம் கூட ஏற்பட, அமைச்சரவர்கள் தக்க பக்க பலத்தோடு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹரிஜன மக்களின் முன்னேற்றத்திற்கு, மற்ற ஜாதி மக்களிடம் மன மாற்றம் ஏற்பட்டாகவேண்டும். உண்மையாக ஜாதி வித்தியாசம் கிடையாது. எல்லோருக்கும், ஓடும் உதிரம் சிவப்புத் தான், உதிரும் கண்ணீரும் உவர்ப்புத்தான். ஜாதி வித்தியாசங்கள் கிடையாது என்று அறிவாளிகள், அறிஞர்கள், பெரியார்கள் பாடியதும், எழுதியதும், ஏட்டளவில் நின்றுவிடாமல், மக்களிடம் பரவவேண்டும், பரவ வேண்டும். கனம் அமைச்சரவர்கள், ஹரிஜன மக்களின் வாழ்க்கையை பாங்காகச் செய்ய, மற்ற துறைகளுக்கும் மானியம் அளித்திருப்பதை வரவேற்கிறேன். அதில், ஆடல், பாடல், கேளிக்கை, படங்கள் காட்டுவது போன்ற பல திட்டங்களை மக்களிடையே பரப்பச் செய்திருக்கும் திட்டம் மிகவும் வரவேற்கத்தக்க அம்சம் என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இம்மாதிரி சட்டதிட்டங்களை போட்டதோடு, அவைகள் மீறப்பட்டால், சட்டத்தை மீறுகிறவர்கள் மீது, குற்றம் புரிகிறவர்கள்மீது, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுகிருர்கள் என்பது இந்த அறிக்கையின் விவரங்களிலிருந்து தெரியவருகிறது. 71 பேர்கள் மீது, நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ; 26 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க அம்சம் என்ருலும், மக்கள் மனமும் மாறவேண்டும். அப்படி மாறுவதற்கு, எல்லோரும், மக்கள் மத்தியிலே சென்று, அதிகாரிகளுக்கும் ஒத்துழைப்பும், ஆதரவும் கொடுத்தால், அந்த ஹரிஜன மக்கள், வெகு குறுகிய காலத்திலேயே முன்னேற்றம் அடைய முடியும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**Sri G. GOMATHI SANKARA DIKSHITAR** : அன்பு மிக்க தலைவர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்துப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பல மானியங்களைப் போல் அல்லாது இந்த ஹரிஜன மானியம் மிகவும் போற்றக்கூடியதாகும். இது மகாத்மா காந்திஜி அளித்த ஆசி. இந்நாட்டில் ஆயிரக்கணக்கான வருஷ காலமாக ஒடுக்கப்பட்டு தாழ்த்தப் பட்டுக் கிடந்த மக்களை தலை நிமிர்ந்து மனித சமுதாயத்தில் நிற்கும்படியாக மகாத்மா காந்திஜி, நமக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுப்பதற்கு முன் இதை அளித்தார். அதன் மூலம் இந்த தீண்டாமையை ஒழிப்பதற்கு காந்

[Sri G. Gomathi Sankara Dikshitar] [25th March 19

ஏற்கெனவே வித்திட்டார் என்பது மிகையாகாது. ஆகவே இந்த மானியத் நான் நல்ல முறையில் ஆதரிக்கிறேன். இதில் போட்டிருக்கக்கூடி நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு காந்திஜியின் ஆசியைப் பெ நமது அன்பு மிக்க அமைச்சர் கக்கன் அவர்களுடைய தலைமையில் இத என்று இருக்கக்கூடிய அதிகாரிகள் மூலம் டைரக்டர் ஆப் ஹரிஜன் வெ பேர் முதலிய அதிகாரிகள் இந்த திட்டத்தில் கண்ட முறைகளை வெற் யுடன் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அத மூலம் ஹரிஜன மக்கள் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். இத மூலம் அவர்களுடைய சில குறைகளும் நீக்கப்பட வேண்டும். அ களுடைய நிலைமை இப்பொழுது மிகவும் மோசமாக இருக்கிறது. சட்டபூர் மாக இந்தத் தீண்டாமையை ஒழிப்பதற்கு சட்டம் இயற்றப்பட்டிருக்கிற ஆனால் சட்டபூர்வமாக இந்த தீண்டாமையை ஒழிப்பது என்பது முடியா காரியம். நான் இந்த இயக்கத்தில் சிறிது பங்கு கொண்டு உழைத்து வந் ருப்பதால் அதன் அனுபவத்தைக் கண்டு இதைச் சொல்லுகிறேன். சட் மூலமாக அதிலுள்ள குறைபாடுகளை ஒழிக்கவே முடியாது. மனித சமூகத் லுள்ள தீண்டாமை என்ற ஒரு மனப்பான்மையை அகற்ற முற்பட வேண்டு இந்த தீண்டாமையை ஒழிக்க நாட்டில் ஜாதி வித்தியாசம் இல்லாம இருக்க வேண்டும். இந்த ஜாதி வித்தியாசத்தை ஒழித்தால் அன்றி இந் தீண்டாமையை ஒழிக்கவே முடியாது. அத்துடன் மகாத்மா காந்திஜி நமக்கு அளித்துள்ள அகிம்சா முறைப்படி தான் இதை ஒழிக்க முடியுமே தவிர வேறு எந்த வழியிலும் அதை ஒழிக்கவே முடியாது. ஆகவே அவர்கள் முன்னேற்றமடைவதற்கு அவர்களுக்கு எல்லாவித பாதைகளிலும் வசதி செய்து கொடுக்க வேண்டும். எல்லாவிதமான முறைகளிலும் நம்முடைய ஒத்துழைப்பு அவர்களுக்கு இருக்க வேண்டும். அப்படிப்பட் ஒத்துழைப்பு அளிப்பதன் மூலம் தீண்டாமையை இந்நாட்டை விட் அகற்றுவதற்கு முற்பட வேண்டும். அதற்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டும். அதற்கு வேண்டிய நாம் போடும் திட்டங்கள் அவ்வளவும் நல்ல முறையில் நிறைவேற்றப்படவேண்டும். கிராமங்களிலுள்ளவர்கள் அனைவருக்கும் வீடு மனைக்கட்டுகள் வழங்கப்படவேண்டும். வீடுகள் கட்டிக் கொள்வதற்கு வேண்டிய வசதிகள் எல்லாவற்றையும் அவர்களுக்கு அ சாங்கம் செய்து கொடுக்க வேண்டும். அது மாத்திரம் அல்ல, கல்வி மானியம், கல்விச் சலுகைகள் முதலியவைகள் அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும். இப்பொழுது கல்வி மானியம் நல்ல முறையில் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கல்வியில் மேம் பாடுகள ஹரிஜன மாணவ மாணவிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக் கிறது. அவர்களுக்கு வசதியாக அதிகப்படியான கைத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தி அதன் மூலம் அவர்கள் தொழிலிலேயே ஈடுபடும்படியாகச் செய்து தர வேண்டும். அவற்றில் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு சந்தர்ப்பமும் வசதியும் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட எல்லாவிதமான வசதிகளையும் அவர்களுக்கு அதிகமாக அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றொன்று அவர்களை பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்ற மடையச் செய்ய வேண்டும். நியாயமான முறையில் அவர்களால் இல வற்றைச் அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். இப்பொழுது நாம் நியாய வார மசோதாவை இயற்றி இருக்கிறோம். அதன் பலனை ஹரி ஜனங்கள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். விவசாயக் கூலி களாகத் தான் இன்றைக்கும் அவர்கள் இருக்கிறார்கள். பிற்போக்கா அவர்கள் இருக்கிறார்கள் என்பதை பயன்படுத்திக்கொண்டு பலர் அவர்களை துன்புறுத்துகிறார்கள். அவர்கள் அரசியல் கட்சியாக இருக்கட்டும் அல்லது வேறு எந்த சமூகத்தைச் சேர்ந்தவராகவ இருக்கட்டும். அவர்களால் ஹரிஜனங்கள் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள். அவர்களுடை ஏழ்மை சாதகமாக வைத்துக்கொண்டு அவர்களுக்கு நியாயம் வழங்குவதாக இல்லை: நியாய வார மசோதாவினுடைய பயனை அவர்கள் அடைய முடியா படி துன்புறுத்தப்படுகிறார்கள். இதற்கு சர்க்கார் புறம்போக்கு நிலங்க அவர்களுக்குக் கொடுத்து உதவ முன்வரவேண்டும். அவர்களுக்கு அந் நிலங்களை ஒதுக்கி அவர்களுக்கு என்றே அதை ஜாரி செய்யவேண்டும்



25th March 1960] [Sri G. Gomathi Sankara Dikshitar]

அப்படி ஜாரி செய்வதாக இருந்தால் நமது ரெவினியூ இலாகா அந்த வேலையில் மிகவும் மந்தமாக இருக்கிறார்கள். ஏழை ஹரிஜனங்களுக்கு நிலங்கள் கிடைப்பது மிகவும் அறிதாக இருக்கிறது. ஆனால் பணமுள்ளவர் களுக்கு சுலபமாகக் கிடைத்து விடுகிறது. ஆகவே ஏழை ஹரிஜனங்களுக்கு நிலத்தை ஜாரி செய்வதற்கு இந்த இலாகா முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அத்துடன் அவர்களுக்கு கடன் வசதியும் செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**Sri SOWDI S. SUNDARA BHARATHI** : கனம் சட்ட மன்ற உதவி தலைவர் அவர்களே, சமுதாயத்தில் மிகவும் அடி தளத் தில் இருக்கக்கூடிய ஹரிஜனங்கள், அதற்கு அடுத்ததாக இருக்கக்கூடிய பிற்பட்ட வகுப்பினர் இவர்களுடைய நலன்களை கவனிப்பதற்கு இருக்கக் கூடிய பகுதியில், நிர்வாகத்தில் இருக்கக்கூடிய மிகவும் பொறுப்பு வாய்ந்த டைரக்டர் அவர்களையும், அவர்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய ஆபீஸர் களையும் நாம் பாராட்டி அவர்களுக்கு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக் கிறோம். ஏனென்றால் அவர்கள் தாங்கக்கூடிய பொறுப்பு, பளு அத்தகை யது. அத்தகைய பொறுப்பு, பளுவை அவர்கள் நல்ல முறையில் நிறை வேற்றி இருப்பதைப் பார்த்தால் அது எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக இருக்கும். பொதுவாக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் இருக்கக்கூடிய ஆபீஸ் இப்பொழுது நல்ல கட்டிடத்தில் இல்லை. அதை வேறு ஒரு நல்ல கட்டிட த்திற்கு மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏனென் றால் அந்தக் கட்டிடத்தைப் போய்ப் பார்த்தால் நம்முடைய மனதில் ஹரிஜன சமூகம் எப்படி பின் தங்கி இருக்கிறதோ அதைப்போலவே அவர் களுடைய ஆபீஸ் கட்டிடம் பின் தங்கியதாக இருப்பதாக மனதிற்குத் தோன்றும். ஆகவே வேறு நல்ல கட்டிடத்திற்கு அந்த ஆபீஸை மாற்றி அமைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. அதனால் அவர்களுக்கு மிகுந்த வசதியுள்ள கட்டிடம் இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி நல்ல கட்டிடத்தைக் கொடுக்க இந்த அரசாங்கம் முன் வரவேண்டும். அந்த இலாகாவைப் போய்ப் பார்த்தால் அந்த இலாகாவைப் பார்த்தவுடனேயே மனிதர்களுக்கு மறு மலர்ச்சி ஏற்படக்கூடியதாக இருக்க வேண்டும். அந்த அளவில் பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. வேறு சில ஆபீஸ் கட்டிடங்களைப் பார்த்தால் அவைகள் எவ்வளவோ அந்த அந்த இலாகாவின் அவசியத்தைப் பொறுத்து நன்றாக இருக்கின்றன. நான் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் காமர்ஸ் டிபார்ட் மெண்டைப் போய்ப் பார்த்தேன்

(கனம் சபாநாயகர் தலைமை வகித்தார்)

அந்த இலாகா ஆபீஸ் எவ்வளவோ நல்ல கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருக் கிறது. அப்படிப்பட்ட கட்டிடத்தை இந்த ஹரிஜன இலாகாவுக்கும் கொடுத் தால் மிகவும் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். தீண்டாமையை ஒழிக்கக்கூடிய இலாகாவானது பின் தங்கி இருக்கவே கூடாது. அந்த முறையில் அந்த இலாகாவின் கட்டிடம் இருக்கவேண்டி யது அவசியமாக இருக்கிறது. அதற்குத் தக்கபடி பல வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. இது எவ்வளவோ அவசியம் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக ஸ்காலர்ஷிப்புகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஹரிஜனங்களுக்கு இந்த அரசாங்கமானது எவ்வளவோ உதவிகளையும் சலுகைகளையும் செய்து வருகிறார்கள். செய்து வரக்கூடிய சலுகைகளைக் கண்டு அதிகப்படியான மாணவ மாணவிகள் படிப்பதற்கு அதிகமாக முன் வருகிறார்கள். ஆகவே மாணவ மாணவிகள் வருவதற்குத் தக்கபடி உதவி மான்யத்தை அதிகப் படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படியே இப்பொழுது செய்து தான் வருகிறார்கள். இன்னும் அதிகமாக அவர்கள் வர. வர இன்னும் அதிகப் படியான மானியத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டியது மிகமிக அவசியம்.

[Sri Sowdi S. Sundara Bharathi] [25th March 1960

நமது மாணவர்கள் யாவரும் மிக அதிகமாகப் படிக்க வேண்டுமென்று அக்கறை கொண்டிருக்கும்போது அதற்கு அனுசரணையாக பின் தங்கிய வகுப்பார்களும் அதிகமாகப் படிப்பதற்கு அதிகமாகப் பணம் ஒதுக்கித் தர வேண்டுமென்று மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பதை வருடா வருடம் அதிகரித்துக்கொண்டே போக வேண்டும். அதற்காக அதிகமான பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். அதற்கடுத்து தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் சம்பந்தமாக ஒரு யோசனை சொல்லிக்கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் தாழ்த்தப்பட்ட மக்களுடைய மனதிலே நான் கீழ்ப்பட்டவன், மற்றவர்களுடன் சேர்ந்து சமமாகப் பழகத் தகுதியற்றவன், என்பதாக இருக்கின்ற மனோபாவத்தை ஒழிப்பதற்கு இந்த அரசாங்கம் தீண்டாமைப் பிரசாரம் செய்வதோடு மட்டுமல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள் இவர்கள் எல்லோரும் தங்கள் உரிமை என்ன, தங்களுக்குப் பாதுகாப்பாக உள்ள சட்டங்கள் என்ன என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதற்கு வகை செய்யவேண்டுமேன்று கேட்டுக்கொண்டு இவ்வளவு நேரம் பேச அனுமதி அளித்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**SRI K. PERIANNAN** : தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் பலரும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். நானும் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, நாட்டின் முதுகெலும்பு போலுள்ள ஹரிஜன சமுதாயம் இன்றையதினம் நாட்டின் முக்கிய ஜீவாதார தொழிலாகிய விவசாயத்தில் கூலிகளாகவே இருந்து வருகிறார்கள். அவர்கள் முன்னேறுவதற்காக நில ஆர்ஜிதம் செய்து தருகிறோம். இது மிகவும் காலதாமதம் ஆகிறது. இவர்களுக்கு நிலம் வழங்குவதில் உயர்ந்த ஜாதி இந்துக்கள் அநேக சங்கடங்கள் தருகிறார்கள். இதை சர்க்கார் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பல அங்கத்தினர்கள் ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குவதைப் பார்த்து நாங்கள் அந்த சமூகத்தில் பிறக்கவில்லையே என்று சொல்லிக்கொண்டார்கள். நான் சொல்லுகிறேன் அந்த சமுதாயத்தில் என் பிறந்து பல அல்லல்களுக்கு ஆளாகிறேன் என்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். காரணம் என்னவென்றால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த ஒரு காரணத்தினாலேயே இன்றையதினம் ஒரு டெபுடி கலெக்டரோ, தாசில்தாரோ அல்லது மற்ற சிப்பந்திகளோ எவ்வளவு பேர் முன்னேறுவதற்கு முடியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இரண்டாவதாக, தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த சில உத்தியோகஸ்தர்களுடைய குழந்தைகளுக்கு அவர்கள் 1,200 ரூபாய்க்கு மேல் வருஷ சம்பளம் பெற்று வந்தால் சம்பளம் கட்டவேண்டுமென்றிருக்கிறது. அது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது இன்று விலை வாசிகள் உயர்வின் காரணமாக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்குச் சம்பளம் கட்ட முடியாமல் திண்டாடுகிறார்கள். ஆகவே, அதை 2,500 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக வீடு கட்டுவது, சில இடங்களில் 750-க்கு கட்டியிருக்கிறார்கள். ஆனால் கட்டி முடிந்த சில நாட்களுக்குள்ளாகவே மழையினாலே காற்றினாலோ விழுந்து விட்டிருக்கின்றன. அதை ஒழுங்காகக் கட்ட முடியவில்லை. காரணம் அந்த அந்த வீடுகளுக்கு 750 தான் கொடுக்கிறார்கள். இதை 1,000 ஆகவோ, 1,500 ஆகவோ உயர்த்திக் கொடுத்தால் ஹரிஜனங்களுக்காக கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளை நல்ல முறையிலே கட்டிக்கொடுக்க முடியும்.

அடுத்தபடியாக ஹாஸ்டல்களைச் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டுமென்றிருப்பது சங்கடமான நிலைமைதான். ஏனென்று கேட்டால் தனிப்பட்ட முறையில் ஹாஸ்டல்கள் இருப்பதால் ஊழல்கள் ஏற்படுவதாக அரசாங்கம் கருதுகிறது. ஆனால் எல்லா ஹாஸ்டல்களும் அப்படியல்ல.



25th March 1960] [Sri K. Periannan]

ஒன்றிரண்டில் ஊழல் ஏற்பட்டால் கண்காணித்துத் தடுக்கலாம். பொதுவாக தனியார் துறையில்தான் நன்றாக இருக்கின்றது என் தொகுதியைப் பற்றி அமைச்சருக்கு தெரியும். 10 பிள்ளைகளோடு ஆரம்பித்த அந்த ஹாஸ்டலானது பல ஆண்டு காலமாக தனியார் துறையில் இருந்த காரணத்தினால் இன்று அங்கு 150 பேர் படிக்கிறார்கள். அதே போல் பெண்கள் விடுதியும் 10 பேரோடு ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு 80 பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான கட்டிடம் கட்ட மாணவர் விடுதிக்கு சர்க்கார் உதவி செய்தது போல் பெண்கள் விடுதிக்கும் கட்டிடம் கட்ட இரண்டு மூன்று வருஷமாக உதவி கோரி வந்திருக்கிறோம். அதை செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சுகாதார அடிப்படையில் சேரிகள் கைப்பது, கிணறுகள் வெட்டுவது என்று சொல்லுகிறார்கள். ஆனால் பெரும்பாலும் சேரிகள் மிகவும் பள்ளமாக நீர்ப்பிடிப்புள்ள இடங்களாகத் தான் இருக்கின்றன. பொதுச் சுகாதாரத்தை உத்தேசித்து அந்தச் சேரிகளுக்கு கழிவு வாய்க்கால்கள் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டெபுடி சேவக்குகள் போகிறார்கள். அவர்கள் கிராமங்களிலே நல்லபடி வேலை செய்யவில்லை. அவர்கள் பெரும்பாலும் ஜில்லா ஹரிஜன நல இலாகாவில் இருந்து அவர்கள் பார்வையில் வேலை செய்ய வேண்டுமென்றிருப்பதை மாற்றி தாசில்தார், பி.டி.ஓ. இவர்களுடைய பார்வையிலிருந்து வேலை செய்யும்படியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இவர்கள் ஒழுங்காக வேலை செய்வார்கள். இத்துடன் இந்த மானியத்தை ஆதரித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**SRI K. P. PALANISWAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நமது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மானியத்தைப் பற்றி பேசும்போது, பல ஆண்டு காலமாக ஹரிஜனங்கள் படிப்பில்லாமலும் அறிவில்லாமலும் சமுதாயத்தில் விழிப்பில்லாமல் இருந்த காரணத்தினாலும் ....(கனம் ஸ்ரீ பி. கக்கன் :— அவர்கள் ஒன்றும் அறிவில்லாமல் இருக்கவில்லை. ஹரிஜன சமுதாயம் நல்ல அறிவுள்ள மக்களைப் பெற்றிருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்) படிப்பு இல்லாததால் அறிவில்லை என்று சொல்லிவிட்டேன். மன்னிக்கவும். அவர்கள் ரொம்பக் காலமாக படிப்பறிவு இல்லாமலிருந்தார்கள். ஜாதி இந்துக்களால் ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள். வெள்ளைக்கார ஆட்சியில் அவர்களுக்கிருந்த அவல நிலையை மகாத்மா காந்தி அவர்கள் உணர்ந்து, இந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு ஹரிஜனங்கள் முன்னேறவேண்டும். பொருளாதாரத் துறையில் முன்னேறவேண்டுமென்ற முறையில் சேவை செய்ய ஆரம்பித்தார். அநேக அன்பர்கள் அதைச் செய்தார்கள். இன்றைய தினம் மகாத்மா காந்தி அவர்களுடைய லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக நமது சர்க்காரும் பல உதவிகளைச் செய்துகொண்டு வருகிறது. கல்வியில் ஹரிஜனங்கள் முன்னேற காரணத்தினால் அவர்களுக்குக் கட்டாயக் கல்வி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். நாம் மதுவிலக்கு சட்டம் கொண்டுவந்து இருக்கிறோம். அதன் காரணமாக குடித்து ஆபாசமான செயல்களில் ஈடுபட்டவர்கள் எல்லாம் இப்போது குறைந்திருக்கிறார்கள். அதே மாதிரியாக ஹரிஜனங்களுக்கு கட்டாயக் கல்வியை கொண்டு வந்தால் அவர்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அரசாங்கம் கட்டாயக் கல்வி கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக படித்த ஹரிஜன மாணவர்களுக்கு மத்திய சர்க்கார் அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்து வருகிறார்கள். ஆனால் ஜில்லா போர்ட், பஞ்சாயத்து போர்ட், முனிசிபாலிட்டி ஆகியவைகளில் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. ஜனத் தொகை விகிதாசாரப்படி அவர்களுக்கு வேலை கொடுப்பது கிடையாது. ஏதோ முனிசிபாலிடிகளில் ஸ்காவஞ்சர் வேலை கொடுக்கிறார்கள். அதனால் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களும்,

[Sri K. P. Palaniswami] [25th March 1960

பி.ஏ. படித்தவர்களும் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கென்று அரசாங்கம் நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். இப்போது அவர்கள் குடியிருப்பது மற்றவர்கள் பட்டா நிலங்களில்தான். அதனால் அவர்கள் சுதந்திரமாக வாழ்க்கை நடத்த முடியவில்லை. இப்பொழுது கார்பொரேஷனிலும், முனிசிபாலிடிகளிலும் பொதுஜன இட வசதி செய்துகொள்வதற்காக 2,000 ரூபாய், 3,000 ரூபாய் கொடுப்பது போல ஹரிஜனங்களுக்கு இடவசதி செய்துகொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம் தமிழ் நாட்டிலே கிராமங்களில் மின்சாரம் வந்திருப்பது ரொம்பவும் சந்தோஷப்படக்கூடிய விஷயம். ஆனால் ஹரிஜனங்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர்களுக்கு வேலையில்லாது மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு அம்பர் சர்க்கா கொடுத்துதவினால், அவர்கள் அதில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கும், அவர்கள் அந்தஸ்தும் உயரும்.

இந்தப் பகுதியில் வசிக்கும் மலைஜாதி வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பணவசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எலிமெண்டரி பள்ளியிலும், ஹைஸ்கூலிலும் படிக்கும் அந்த மாணவர்களுக்கு ஸ்பெஷல் பீஸ் கட்ட முடியாமல் அந்த மாணவர்கள் பள்ளிக் கூடத்தை விட்டு நின்று விட்டார்கள். நான் இதைப்பற்றி கலெக்டருக்கும் அரசாங்கத்திற்கும் பெட்டிஷன் கொடுத்திருக்கிறேன். 60 பேருக்கு மேல் படித்துக்கொண்டிருந்த மலைஜாதி வகுப்பு மாணவர்கள் இப்பொழுது 10, 12 பேர் தான் படிக்கிறார்கள். ஆகையால் அவர்கள் விஷயத்தில் சர்க்கார் உடனடியான நடவடிக்கை எடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஹரிஜனங்களுக்கு நிலங்களை ஜாரி செய்யும் விஷயத்திலும் காலதாமதம் ஏற்படுகிறது. எங்கள் ஜில்லாவில் 10, 12 இடங்களில் இன்னும் பட்டா செய்து கொடுக்கவில்லை. ஆகையால் நல்ல முறையில் அவர்களுக்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRIMATHI A. S. PONNAMMAL : மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் ஹரிஜன மான்ய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜனங்களுக்காக சென்ற ஆண்டு ஒதுக்கியதைவிட இந்த ஆண்டு அதிக பணம் ஒதுக்கியிருந்தபோதிலும் என்னைப் பொறுத்த வரையில் இந்தப் பணம் போதாது என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். காரணம் எத்தனையோ துறையில் இன்னும் ஹரிஜனங்கள் பின்தங்கியிருக்கிறார்கள். அவர்கள் சீக்கிரம் முன்னேறவேண்டுமானால் இன்னும் அதிகப் பணம் ஒதுக்க வேண்டும். அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறினால்தான் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடியிருப்பு வசதிக்காக மனைக் கட்டுவதற்கு இப்போது ரூ. 750 கொடுக்கிறார்கள். இந்தத் தொகை மிகவும் குறைந்தது. இந்தத் தொகையை 1,500 ரூபாயாக உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதுபற்றி கனம் அமைச்சர் அவர்கள் முதலில் பேசியபோது, சர்க்காரே மனைக்கட்டுகளைக் கொடுத்து இந்த மனைக்கட்டுகளுக்கு பேஸ்மெண்டு வரைக்கும் கட்டிக் கொடுத்துவிட்டு 150 ரூபாய் ஒவ்வொருவருக்கும் கொடுப்பதற்கு யோசனை இருப்பதாக யோசனை கூறினார்கள். நான் இந்த யோசனையை வரவேற்கிறேன். ஆனால் இந்த 150 ரூபாய் போதாது என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். குறைந்தது 300 ரூபாய் ஆகிலும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வீட்டு மனைக்காக 4½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு ஜில்லாவிற்கே இந்த 4½ லட்சம் ரூபாய் போதாது என்று கூற



25th March 1960] [Srimathi A. S. Ponnammal]

விரும்புகிறேன். காரணம் ஹரிஜனங்கள் குடியிருப்பு வசதிகள் இல்லாமல் குடிசைகளில் மிகவும் பரிதாபப்படும்படியான நிலைமையில் மற்றவர்கள் பார்த்தால் கண்ணீர் விடக்கூடிய நிலைமையில் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே ஹரிஜன குடும்பங்கள் வசதியாக வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்வதற்கு 4½ லட்சம் போதாது இன்னும் அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்வாறு அதிகமாக்கவேண்டுமானால் உபரி மான்யத்தில் ஒதுக்குவதற்கு இந்த சர்க்கார் தயங்கக்கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தவிர ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகளை அவர்களுக்கே ஆர்ஜிதம் செய்துவிட்டால் அவர்கள் நல்ல நிலைமையில் குடிசைகள் போட்டுக்கொண்டு வாழ்வதற்கு சௌகரியமாக இருக்கும்.

அடுத்தபடியாக விவசாயத்தை எடுத்துக்கொண்டால் கிணறு வெட்டுவதற்கு 1,500 ரூபாய் கொடுப்பதற்காக அரசாங்கத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனால் இதற்குக் கொடுக்கப்படுகின்ற பணம் ரெவின்யூ டிபார்ட்மெண்ட் மூலமாக கொடுப்பதனால் அதிக சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே அந்தப் பணத்தை அந்தந்த பிளாக்குகளில் உள்ள பி.டி.ஓ. மூலமாக கொடுக்கும்படி ஏற்பாடு செய்தால் நல்ல முறையில் கிணறு வெட்டுவதற்கு வசதியாக இருக்கும்.

அடுத்தபடியாக மின்சாரம் எடுத்துக்கொண்டால் பஞ்சாயத்து ஏரியாக்களில் ஹரிஜனங்களுக்கு மின்சார லைட் வருவதற்கு கால தாமதம் ஏற்படுகிறது. பஞ்சாயத்தைக் கேட்டால் பணம் இல்லை என்று பஞ்சப் பாட்டு பாடுகிறார்கள். ஆகையால் ஹரிஜன வெல்பேர் ஆபீசர் ஹரிஜனங்களுக்கு லைட் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஒரு சர்க்குலர் அனுப்பி பஞ்சாயத்துக்களில் உள்ள ஹரிஜன தெருக்களுக்கு லைட் வசதியில் முதலிடம் கொடுக்கத்தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக தீண்டாமையை ஒழிப்பதற்கு பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் பிரசாரத்திற்காக செலவிடப்படுகிறது. பிரசாரத்தினால் மட்டும் தீண்டாமையை ஒழித்துவிட முடியாது. அவர்கள் முதலில் பொருளாதாரத் துறையிலும் இன்னும் பல்வேறு துறைகளிலும் முன்னேறினால் தான், மற்ற மக்களுக்குச் சமமாக வந்தால்தான் இந்தத் தீண்டாமை ஒழியும். ஆதலால் அவர்களுக்கு இன்னும் அதிகமான நிலங்களை ஒதுக்க வேண்டும். புறம்போக்கு நிலங்களை ஒதுக்கினால்மட்டும் போதாது. இப்போது கோவில் நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. இதில் எக்ஸிகூடிவ் ஆபீசர்கள், கமிஷனர் முதலியவர்களிடம் கோவில் நிலங்களைப்பற்றிய கணக்கு இருக்கும். அவர்களிடமிருந்து பணக்காரர்கள் கோவில் நிலங்களை லீஸிற்கு எடுத்துக்கொண்டு அதிக லாபம் அடைந்து வருகிறார்கள். ஆகயால் இந்தமாதிரி கோவில் நிலங்களை 75 சதம் ஹரிஜனங்களுக்கும் 25 சதம் பிற்பட்ட மக்களுக்கும் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு நபருக்கும் இரண்டு ஏக்கர் வீதம் குத்தகைக்கு விட்டால் போதுமானது. இம்மாதிரி கொடுத்தால் அவர்கள் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்து ஓரளவிற்கு பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு வழி ஏற்படும். அது மட்டுமல்லாமல், ஏற்றுமதி, இறக்குமதி லைசென்ஸுகளை தனிப்பட்டவர்களுக்கு கொடுக்காமல் கூட்டாக சேர்ந்து வருகின்ற ஹரிஜன மக்களுக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

இதுமாதிரி பஸ் ரூட்டுகள், டூரிங் சினிமா லைசென்ஸ்கள், எக்ஸ்போர்ட் அண்டு இம்போர்ட் லைசென்ஸ்கள் முதலியவைகள் கொடுப்பதிலே ஹரிஜனங்களுக்கு ஒரு கூட்டுறவு சொஸைடி ஏற்படுத்தி அதன் மூலம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். இம்மாதிரியாக அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தால் ஹரிஜன மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு வழி ஏற்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

மேலும் வண்டி இழுக்கும் கக்கூஸ் சமுதாயம்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது அவர்களுக்கு 30 ரூபாய் சம்பளம் கொடுப்பது போதாது.

[25th March 1960

**THE HON. SRI P. KAKKAN** : கனம் அங்கத்தினர் கக்கூஸ் சமுதாயம் என்று குறிப்பிட்டார்கள். அப்படியல்லாமல் கக்கூஸ் எடுக்கும் நபர்கள் என்று சொன்னால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**SRIMATHI A. S. PONNAMMAL** : கனம் மந்திரி அவர்கள் சொன்னதற்கு நன்றி. நான் சொல்வது என்னவென்றால் அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக பணம் கொடுக்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

**MR. SPEAKER** : கனம் அங்கத்தினர் அவர்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது.

**SRIMATHI A. S. PONNAMMAL** : இன்னும் ஒரு நிமிஷ நேரம் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக டிபுடி சேவக்குகளை ஒவ்வொரு தாலுகாவிலும் நியமித்திருக்கிறோம். கிராமப்புறங்களில் கிணறு பள்ளிகளுக்கு வேண்டிய காண்ட்ராக்டுகளெல்லாம் வெளியில் இருக்கும் காண்ட்ராக்டர்களுக்கு கொடுத்து விடுகிறார்கள். அப்படி இல்லாமல் அந்தந்த ஊரிலே லேபர் காண்ட்ராக்ட் சொசைடி ஒன்று ஏற்படுத்தினால் அவர்கள் அந்த காண்ட்ராக்ட் வேலையை எடுத்து செய்ய வசதியாக இருக்கும். ஆகவே லேபர் காண்ட்ராக்ட் சொசைடி ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரிஜன ஊர்களைப் பொறுத்தமட்டிலாவதும் லேபர் காண்ட்ராக்ட் சொசைடிகளை ஏற்படுத்த வேண்டுமென்று டிபுடி சேவக்குகளுக்கு உத்தரவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன். அதுமட்டுமல்லாமல் ஹரிஜன குழந்தைகளுக்கு பகல் உணவு கொடுக்கின்றோம். அவர்களுக்கு பாட புஸ்தகங்கள் வாங்கிக் கொடுக்கிறோம். இவைகள் கொடுத்தால்மட்டும் போதாது. இந்த ஹரிஜனக் குழந்தைகளுக்கு துணிகள் கொடுத்துதவினால் ஏழை குழந்தைகள் பள்ளிக்கூடம் போவதற்கு வசதியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

***DR. SRIMATHI SATHYAVANIMUTHU** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, மனித உரிமைக்காக தினம் - தினம் போராடிக்கொண்டிருக்கிற ஒரு தனி இனத்தின் குறைகளைப்பற்றி இந்த சட்டமன்றத்தில் பேசும்போதுகூட நேரத்திற்காக போராடும் துர்பாக்கியகரமான நிலையைக் கண்டு நான் வருந்துகிறேன். இந்த ஹரிஜன மான்யத் துறை மீது நான் எனது கருத்துக்களை சொல்ல விரும்பும்போது, பொதுவாக இதற்கு ஒதுக்கப்படுகிற தொகை வருடா வருடம் அதிகம் என்பதுபற்றி பாராட்டலாம். ஆனால் ஒதுக்கப்படுகிற தொகை எந்த இனத்தாருக்கு என்று பெயர் வைத்து ஒதுக்குகிறோமோ, அந்த இனத்திற்காக ஒதுக்கப்படவில்லை என்று நான் பலமுறை இந்த மன்றத்திலேயே கூறியிருக்கிறேன். இதை நான் சொல்வது, மாற்று சமுதாயத்தினருக்கு ஒதுக்கக்கூடாது என்ற தவறான எண்ணத்தோடல்ல. பெயர் ஹரிஜன முன்னேற்ற இலாகா என்றும், ஹரிஜன இலாகா அமைச்சர் என்றும், ஹரிஜன இலாகா அதிகாரிகள் என்றும் பெயர் வைத்து அதன் அடிப்படையில் வருகிற பணம் யார் யாருக்கு செலவு செய்யப்படுகிறது என்று பார்க்கும்போது அதற்குரிய சரியான கணக்குகள் எங்களுக்கு தரப்படவில்லை. கடந்த வாரம் ஆளும் கட்சியைச் சார்ந்த ஒருவர் கேட்ட கேள்விக்கு தனித்தனியாக எந்தெந்த இனங்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டபோது அமைச்சர் அவர்களால் சரியான புள்ளிவிவரம் சொல்ல முடியவில்லை. பதில் சொன்னார், அந்த புள்ளி விவரங்கள்பற்றி கணக்கு எடுக்கவில்லையென்று. நான் இந்த குற்றச்சாட்டை சொல்வதற்கு முன் அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலம் நான் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். டெல்லியிலிருந்து "கமிஷனர் ஆப் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் ஆண்ட் ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ்" ஆன ஸ்ரீகாந்த் அவர்கள் சென்னைக்கு வந்தபோது, பத்திரிகைகளில் கண்ட செய்தியை நான் சொல்கிறேன், அவர் நமது அமைச்சர் கக்கன் அவர்களை வரவழைத்து நாம் யாருக்கு என்று இவ்வளவு பணம் ஒதுக்குகிறோமோ அப்பணம் அவர்களுக்கு



25th March 1960] [Dr. Srimathi Sathyavanimuthu]

சரியாகப் போய் சேருவதில்லை என்றும் அதற்குள்ள கணக்குகள் சரியாகயில்லை என்றும் சொன்னதாக தெரிகிறது. அதற்கு நமது மாநில அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்று தெரியவில்லை. எத்தனை இனங்களுக்கு எத்தனை எத்தனை மான்யங்கள் கொடுக்கவேண்டுமென்றாலும், கோடிக் கணக்கில் அல்லது பத்து ரூபாய், ஐந்து ரூபாய், அல்லது நயாபைசா என்று வைத்தாலும் கணக்குகள் வைத்து தனித்தனி இனங்களுக்கு தனித்தனி மான்யங்கள் ஒதுக்கி செலவழித்தால் அப்பொழுது இதில் யாருக்கும் பொறாமை உணர்ச்சியோ அல்லது தவறான எண்ணமோ ஏற்படுவதற்கு இடமிருக்காது என்று கூறிக்கொள்கிறேன். ஆண்டாண்டு காலம் முதல் அடித்தளத்தில் வீழ்ந்து கிடைக்கும் இந்த ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு எவ்வளவு செய்தாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நினைத்தால் அது தவறாகாது இந்த அறிக்கையில், இந்திய அரசாங்கம் 23·57 லட்சம் ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பழங்குடி மக்களுக்காக 8·71 லட்சமும், ஒதுக்கப்பட்ட பழங்குடி மக்களுக்காக 0·12 லட்சமும், இதர பின்னடைந்த வகுப்பினருக்காக 14·74 லட்சமும் ஆக 23.57 ஒதுக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதர பின்னடைந்த வகுப்பினருக்கு என்று 23·57 லட்சத்தில் 14·74 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லும்போது ஏன் ஹரிஜனத்துறை என்று இதற்கு பெயர் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன் ? ஏன் இதை, சர்க்கார் சலுகை தரும் சமுதாயங்கள் என்று சொல்லக்கூடாது ? அப்படிச் சொல்லியிருந்தால் மாற்று சமுதாயத்தினர் பொறாமைப்படவோ, உங்களுக்கு என்று தனித் தொகை ஒதுக்கப்படுகிறது, உங்களுக்கு என்று ஒரு தனி அமைச்சர், உங்களுக்கு என்று ஒரு தனி டிப்பார்ட்மென்ட் இருக்கிறதே என்றெல்லாம் மக்கள் கூற வாய்ப்பிருக்காது ? காந்தியார் காலத்திலிருந்து தீண்டாமையை ஒழிக்க நடவடிக்கைகள் எடுத்துவருகிறோம் என்று சொல்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. காந்தியார் காலத்திலிருந்து மதிப்பிற்குரிய கக்கனார் காலம் வரை தீண்டாமை ஒழிப்பதற்காக காங்கிரஸ் சர்க்கார் செய்துள்ளவை வெற்றிபெற்றனவா ? இல்லை. ஏன் ? நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன், திருவள்ளூரின் பக்கத்தில் மேலநல்லத்தூர் என்றயிடத்தில் உள்ள ஒரு ஆலயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் சலுகைகள் தரப்படாமல் இன்னும் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்களிடமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் அங்குள்ள மக்கள் புகார் செய்திருக்கிறார்கள். அந்த ஆலயத்திலுள்ள அம்மனை திருவிழாக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கும் பகுதிகளுக்கு கொண்டுவருவது கிடையாது. அதற்காக அவர்கள் வருடக்கணக்காக போராடிக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக மண்ணடி என்ற பக்கத்தில் அம்மனை நிறுத்தி வைப்போம், அப்பொழுது அங்கு வந்து, விழாவிற்காக பணம் கொடுத்திருப்பவர்கள், அங்கு வந்து அம்மனை தரிசித்துவிட்டுச் செல்லலாமே தவிர அம்மனை அந்தச் சேரி பக்கத்தில் கொண்டுவரமாட்டோம் என்று அங்கு கொண்டு போக மறுக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாங்கள் இதில் ஈடுபட்டோம் என்று சொல்ல வேண்டாம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருவள்ளூர் காங்கிரஸ் கமிட்டித் தலைவர், தாலுகா டெப்டி சேவக், திருவள்ளூர் தாழ்த்தப்பட்ட லீக் தலைவர் இப்படியாகயுள்ள காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் இதற்காக போராடியிருக்கிறார்கள். சமீபத்தில் ஹரிஜன நல அதிகாரி தாமஸ், பீ.ஏ., தலைமையில் ஒரு சமாதானக்கூட்டம் நடத்தி அனைவருக்கும் ஆண்டவனைத் தொழுவதற்கு உரிமையுண்டு என்று முடிவு செய்த பின்னும், ஒரு மாதமாகியும்கூட இன்னும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதிகாரியிடம் கேட்டால் அவர் சொல்கிறார், நாங்கள் என்ன செய்யமுடியும், உங்கள் சட்டமன்ற உறுப்பினர் இரண்டு பேர்கள் இருக்கிறார்களே அவர்களைக் கேளுங்கள் என்று சொல்கிறார். சட்டமன்ற உறுப்பினர், பொதுத் தொகுதி உறுப்பினரிடம் சென்று கேட்டால் அவர் சொல்கிறார், உங்களுக்கு என்றுள்ள தனிப்பட்ட அங்கத்தினர் அதாவது ரிஸர்வ்ட் ஸீட்டிலிருந்து வந்தவர், சட்டமன்றத்தில் இருக்கிறாரே அவரைப் போய் கேளுங்கள் என்கிறார். அவர்கள் கூறுவது வேடிக்கையாகயிருக்கிறது. அங்குள்ள பொது இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி

[Dr. Srimathi Sathyavanimuthu] [25th March 1960

யிருக்கிறது, அதை எடுத்து நீக்கிவிட்டால் அம்மனை உங்கள் பகுதிக்கு கொண்டு வருகிறோமென்கிறார்கள். காங்கிரஸ் கமிட்டி தலைவர் ராதா கிருஷ்ணன் என்பவரிடம் சென்று நீங்களும்கூட இருந்து இந்த முடிவைச் செய்தீர்களே, இன்னும் அம்மனை கொண்டுவரவில்லையே, ஆலயத்தைப் பூட்டிவிட்டு சாவியைக் கொண்டு சென்று விட்டார்களே, சாவியை வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னால், அதற்கு அவர் உடனே ஐந்து கட்டு உறுப்பினர் சீட்டுப் புத்தகங்களை அவர்களிடம் கொடுத்து எல்லோரையும் காங்கிரஸ் உறுப்பினர்களாக சேர்த்துக்கொடுத்தால் இதைப்பற்றி கவனிக்கிறோம், உங்களது இந்தக் குறையை நீக்குகிறோம் என்று ராதா கிருஷ்ணன் கூறியிருக்கிறார். ஆலயப் பிரவேசத்தின்மூலம் கட்சியை அல்லவா வளர்க்கப் பயன்படுகிறது. வேண்டுமென்றே நான் குறை கூறுவதாக நினைக்க வேண்டாம். அதேபோல் எனது தொகுதியில் சின்ன சம்பரபாக்கம் என்றயிடத்தில், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்த பாடுபடுகிறோம், அவர்களது பொருளாதார நிலையை உயர்த்தப் பாடுபடுகிறோம், தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுகிறோம் என்று சொல்கிறவர்கள், அங்கு ஏற்கனவே ஆதிதிராவிடர்களுக்கு சொந்தமாக இருந்த வீடுகளை சர்க்கார் எடுத்துக்கொண்டு யாரார் சொந்தக்காரர்களாக யிருந்தார்களோ அவர்களே அங்கு வாடகைக்கு குடியிருக்கும் நிலை ஏற்படயிருக்கிறது. ஸ்லம் இம்ப்ருவ்மெண்ட் அல்லது ஸ்லம் க்ளியரன்ஸ் என்று சொல்லிக்கொண்டு . . .

**Mr. SPEAKER**: அங்கத்தினர்கள், சபையில் இல்லாதவர்களைப்பற்றி கூறுவது சரியல்ல, என்று நினைக்கிறேன். அதிகாரிகளைப்பற்றி சொல்லலாம், அவர்களுக்காக மந்திரிகள் பதில் அளிப்பார்கள். ஆனால் சாதாரண மனிதர்களைப்பற்றி, இந்த சபையில் இல்லாதவர்களைப்பற்றி சொல்வது அவ்வளவு நல்லதல்ல. அம்மையார் இப்பொழுது சொல்லியாகிவிட்டது. இன்னொரு தடவை அப்படி சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொண்டு மாரப்ப கௌண்டரை பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**Sri K. MARAPPA GOWNDER**: சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் இந்த ஹரிஜன மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்காக அமைச்சர் அவர்கள் 1960–61-க்கு கிட்டத்தட்ட மூன்று கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஐந்து வருடத்திற்கு இது என்று எடுத்துக்கொள்ளும்போது வருடம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபாயாகிறது. பத்து லட்சம், இருபது லட்சம், முப்பது லட்சம் என்று படிப்படியாக உயர்ந்து வருடம் ஒன்றுக்கு 60 லட்சம் ரூபாய் வரை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். குறிப்பாக இன்று நாட்டிலுள்ள ஜனத்தொகையில் ஆறில் ஒரு பங்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் ஆங்கிலேய ஆட்சி காலத்திலிருந்தே ஒதுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டு தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், அவர்களுடைய சுதந்திரங்கள் எல்லாம் உயரவேண்டும் என்றால் நிச்சயமாக அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்தாக வேண்டும். அந்த முறையில் நமது அரசாங்கம் நல்ல முறையில் சுதந்திரம் அடைந்த பின்னால் பல உதவிகளை செய்துகொண்டு வருகிறார்கள். குறிப்பாக அவர்களுக்கு வீட்டு மனை வசதி வேண்டும். எந்த ஒரு குடும்பத்திற்கும் வீட்டு மனை மிகவும் அவசியம். அதே போன்று உடை வேண்டும், உணவு வேண்டும். இந்த விஷயங்களிலேயே அவர்கள் மிகவும் மோசமாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இன்று இவர்கள் குடியிருப்பது அனேகமாக கிராமப் பகுதிகளில்தான். கிராமப் பகுதிகளில் விவசாயத் தொழிலாளர்களாகவும், விவசாயத்திற்கு உதவி செய்கிறவர்களாகவும் இருந்துகொண்டு வருகிறார்கள். குறிப்பாக நமது அரசாங்கத்தின் நோக்கம் கிராமத்திலுள்ள மக்கள் எல்லாம் முன்னேற வேண்டும் என்பதுதான். ஆகவே கிராமத்திலிருக்கும் ஹரிஜனங்களுக்கு முதலில்



25th March 1960] [Sri K. Marappa Gownder]

வீட்டு வசதி வேண்டும். இன்று வீட்டு வசதி அவர்களுக்கு எப்படியிருக்கிறது என்பதை எடுத்துக்கொண்டால் குறிப்பாக அவனாசி தாலூகாவைப் பொறுத்த அளவில், என் தொகுதியைப் பொறுத்த அளவில் 100-க்கு 90 பேர்களுக்கும் இப்போது இருக்கக் கூடிய வீடு சொந்தமானது இல்லை. அதோடு வீட்டு மனைகளும் சொந்தமாக இருக்காது. அவைகள் எல்லாம் ஒன்றில் பட்டா பூமியாக இருக்கும். ஆனால் இவைகள் எல்லாம் பரம்பரையாக அவர்கள் இருந்து கொண்டிருக்கக்கூடிய மனைகளாகும். இதிலும் சௌகரியமில்லாத பள்ளத்தாக்குகளில், மழை பெய்தால், தண்ணீர் பாயக்கூடிய இடங்கள், தண்ணீர் எல்லாம் தேங்கி நிற்கக்கூடிய இடங்கள், இம்மாதிரிப்பட்ட சுகாதாரக்குறைவான இடங்களில்தான் இவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதோடு பல கிராமங்களிலிருந்தும் வீட்டு மனை வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று, அவர்கள் இப்போது இருந்துக்கொண்டிருக்கின்ற மனைகள் ஜாரி செய்து கொடுக்கவேண்டுமென்றும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருந்தும் அவற்றிற்கு ஒன்றுக்கும் பதில் இல்லை. ஆகவே இதையெல்லாம் அரசாங்கம் ஆலோசித்துப்பார்த்து, வீட்டு மனை இல்லாதவர்களுக்கு எல்லாம் வீட்டு மனை சொந்தமாக கிடைக்கும்படியான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக தீண்டாமை ஒழிப்பு விஷயத்தை எடுத்துக்கொண்டால், ஹரிஜன மக்களுடைய பொருளாதார வசதி உயர்ந்துவிட்டால் தானாகவே தீண்டாமை போய்விடும் என்று நான் நினைக்கிறேன். கிராமங்களைப் பொறுத்தவரையில் அரிஜனங்கள் எல்லாம் முக்கியமாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். பொதுவாக இன்றைக்கு கிராமங்கள் எல்லாம் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கிராமத்திலுள்ள மக்கள் எல்லாம் முன்னேற வேண்டுமானால் அவர்களுக்கு வேண்டிய பல உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அதோடு அவர்களுக்கு இருக்கக்கூடிய எல்லாக் குறைகளையும் நீக்க வேண்டும். குறிப்பாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற கிராமப்புற மக்களுக்கு விவசாய காலத்தைத் தவிர மற்ற காலங்களில் எந்தவிதமான வேலையும் கிடைப்பதில்லை. குறிப்பாக ஹரிஜனப் பெண்களுக்கு விவசாய காலத்தில் கிடைக்கிற வேலையைத் தவிர அதற்குப் பின்னால் ஆறு, ஏழு மாதங்களுக்கு வேலையே கிடைப்பதில்லை. ஆகவே இந்தப் பெண்களுக்கு ஏதாவது வேலை கிடைக்கிற முறையில் சிறு கைத் தொழில்கள், அம்பர் ராட்டை, கூடை பின்னுதல், இது போன்ற பல தொழில்களை ஏற்படுத்தி இந்த தொழில்களில் எல்லாம் கிராமத்திலுள்ள பெண்களை ஈடுபட செய்ய வேண்டும். இம்மாதிரிப்பட்ட தொழில்களில் அவர்கள் ஈடுபட வேண்டுமானால் அவர்களுக்கு வேண்டிய பொருளாதார வசதி வேண்டும். இதற்கேற்ற முறையில் கிராமங்களில் உள்ள ஸொஸைட்டிகளில் பொருளாதார வசதி செய்து கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். இம்மாதிரியான வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து, அதன் மூலம் அவர்களுடைய பொருளாதார நிலைமை உயருமானால் நிச்சயமாக தீண்டாமை தானாகவே நீங்கி விடும் என்று நான் நம்புகிறேன்.

கல்வி வசதியை எடுத்துக்கொண்டால், இன்று 833 பள்ளிக்கூடங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலிருந்து தெரிகிறது. அதில் 74 ஆயிரம் குழந்தைகள் படிக்கின்றனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஆண்கள் 52 ஆயிரம் பேர்கள், பெண்கள் 22 ஆயிரம் பேர்கள் என்றும் தெரிகிறது.

அது மட்டுமல்ல, சட்டம், மருத்துவம், இன்ஜினியரிங், விவசாயம் போன்ற பல பட்டப் படிப்புகளிலும் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. இதற்கு அவர்களுடைய பொருளாதார வசதி குறைவாக இருக்கிறது. ஆகவே இந்த இலாகாவில் உள்ளவர்கள், மாணவர்கள் படிப்பதற்கு வேண்டிய பொருள் உதவியை தக்க காலத்தில் கொடுத்து அவ்வப்போது உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[25th March 1960

SRI M. P. PERIYASWAMI : கனம் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜனமான்யத்தை ஆதரித்து சில குறைகளை சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது ஹரிஜனங்களுக்கு என்று பல இடங்களில் காலனிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த இடங்களில் எல்லாம் தங்களுக்கும் இடம் ஒதுக்க வேண்டுமென்று ஜாதி இந்துக்களும் மனுக்கள் போட்டுவருவதாக தெரிகிறது. இவ்விதம் மனுப் போடுகிறவர்களுக்கும் முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்விதம் ஜாதி இந்துக்களையும் ஒதுக்கப்பட்ட மக்களுக்காக கட்டப்படும் காலனிகளில் குடியிருக்க செய்தால் ஜாதி வித்தியாசம் குறைவதற்கு சுலபமான வழியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக காலனிகள் அமைப்பதற்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் விஷயத்தில் தாமதம் ஏற்படுகிறது. இதற்கு காரணம் போதிய அளவு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், ஓவர்ஸீயர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. இப்போது தாலூகாவுக்கு ஒருவர் அல்லது இரண்டு பேர்கள் என்று இருக்கிறார்கள். இதன் காரணமாக அவர்கள் உடனடியாக எல்லா வேலைகளையும் செய்து முடிக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக ஒவ்வொரு தாலூகாக்களிலும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அதே போன்றுதான் கிணறுகள் வெட்டுகிற விஷயத்திலும் நிலங்களை ஆர்ஜிதம செய்வதற்காக அந்த இடங்களை எல்லாம் அதிகாரிகளைக் கூட்டிக்கொண்டு போய் காண்பித்தும்கூட, அந்த இடங்களில் கிணறுகள் வெட்டுவதற்கு சாத்தியமில்லாமல் இருக்கிறது. இதற்கு காரணம் அங்கு ஓவர்சீயர் குறைவு, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் குறைவு. ஆகவே இந்த அதிகாரிகளை எல்லாம் அதிகமாக போட வேண்டும். இதைப்பற்றி அடிக்கடி இங்கு கூறுவது பழக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக இரண்டு மூன்று ஊர்களில் கழிந்த 15 வருடங்களாக என்ன வெல்லாமோ முயற்சி செய்தும் இன்னும் அந்த ஊர்களில் அதற்காக நிலங்களை எடுத்து காலனி கட்டி கொடுக்கவில்லை. அந்த ஊர்கள் எவையெல்லாம் என்றால், நாமக்கல் தாலூகாவில் தாத்தையன்கார்பட்டி (அருந்ததியர் வாழுமிடம்), நாமக்கல் தாலூகாவில் இடையப்பட்டி (பள்ளத் தெரு), சங்கேரி தாலூகாவில் வெள்ளநாயக்கன்பாளையம் (பள்ளத் தெரு), இந்த மூன்று ஊர்கள்தான். இதற்காக முன்னால் மந்திரியாய் இருந்த பரமேஸ்வரன் அவர்கள் காலத்திலேயே கேட்டுக்கொள்ளப்பட்டது. அது இன்னும் நடைபெறவில்லை, ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் வேண்டிய கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12 noon. அடுத்தப்படியாக தீண்டாமையைப்பொறுத்த வரையில் 1937-ல் நம்முடைய காங்கிரஸ் அரசாங்கம் வருவதற்கு முன்னால் தீண்டாமை மிகக் கொடுமையாக இருந்தது. முன்னால் பட்டம் பெற்றவர்கள் இந்த இனத்தில் ஒன்றிரண்டு பேர்கள்தான் இருப்பார்கள். அதிலும் டவுன் பக்கத்தில் இருப்பவர்கள்தான் படிக்க முடியும். ஆனால் இப்போது அரிஜனங்களில் எம்.எ., பி.எ., பி.எ. ஆனர்ஸ், போன்ற பட்டப்படிப்பு படித்தவர்கள் 60, 70 பேர்கள் இருக்கிறார்கள். இப்போது காங்கிரஸ் அரசாங்கம் தீண்டாமையைப் போக்குவதற்காக பல நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக பல முன்னேற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றது. இவ்வளவு இருந்தாலும்கூட, இன்னும் சில இடங்களில் தெருவில் செருப்பு போடக்கூடாது, குடை பிடிக்கக்கூடாது என்கிற நிலைமை, ஹோட்டல்களில் அரிஜனங்கள் சாப்பிடுவதற்கு என்று தனியான இடங்கள் இவைகள் எல்லாம் இப்போதும் இருந்துவருவதைப் பார்க்கிறோம். கொஞ்சமுமே முன்னேற்றமடையவில்லை என்று சொல்ல முடியாது. முன்னால் இருந்ததில் இப்போது கால் பாகம் முன்னேறியிருக்கிறோம் என்பதை சொல்லிக் கொள்கிறேன். அதிலே முன்னேற்றமே இல்லை என்று சொல்வது தகாத காரியம். ஏனென்றால் நான் எம். எல். ஏ.யாக வந்த காலத்திலேகூட சில ஹோட்டலுக்குள்ளே போக முடியாது. இப்போது எந்த இடமானாலும் பொதுவான இடங்களுக்கு தாராளமாகப் போய்க்கொண்டு வருகிறோம். இருந்தபோதிலும் சில கிராமங்களில் முன்பு இருந்ததைப்போலவே இன்னும் தீண்டாமை அதிகமாக இருக்கிறது.



235th March 1960] [Sri M. P. Periaswami]

அந்த இடங்களை அரசாங்கம் கண்காணிக்கவேண்டும். அதற்குத் தகுந்த மாதிரி போலீஸாரிடம் புகார் செய்தாலும் போலீஸார் நடவடிக்கை எடுப்பதில்லை. அதைப்பற்றி கவனித்து போலீஸாரும் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேண்டும். ஹரிஜன வெல்பேர் ஆபீஸ் இருக்கிறது, அதிலே ஹரிஜனங்களிடம் அனுதாபமான ஆபீஸர்கள் ஒருவராவது இருக்க வேண்டும். இப்போது இருக்கக் கூடியவர்களில் சிலரே நன்றாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மனதிலே ஹரிஜன மக்களை எப்படியாவது முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று இருக்கவேண்டும். அதற்காகத்தான் நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம். இது ஒரு தர்மம். இது ஒரு நியாயம். பின்னடைந்து இருக்கக்கூடிய மக்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதை அவர்கள் மனதில் கொள்ள வேண்டும். அத்தகைய ஆபீஸர்களாக இந்த ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக தொகுதிப் பிரிவினை ஒன்று வருகிறது. சென்ட்ரல் கவர்ன்மெண்டில் கொண்டுவரப்போவதாகத் தெரிகிறது. இப்போது ஜாயின்ட் எலெக்ஷனாக இருப்பதால், ஜாதி ஹிந்துக்களும், ஹரிஜனங்களும் சேர்ந்து போய் ஜாதி ஹிந்துக்களிடம் வோட்டுகேட்க வசதியாக இருக்கிறது. பிரிவினை வந்து விட்டால் மேல் ஜாதி ஹிந்துக்களெல்லாம் கலந்துகொள்ளாமல் ஹரிஜன மக்களுக்கு வோட்டுப்போடுவது குறைவாகப் போய் விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களாக இருந்து கிறிஸ்வதர்களாக மாறியிருக்கக்கூடியவர்களுக்குச் சலுகை கொடுக்கவேண்டுமென்று சில அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். இப்போது ஹரிஜன மக்களும் பின் தங்கிய மக்களும் 6-ல் ஒரு பங்கு இருக்கிறார்கள். இப்போது இந்த கிறிஸ்தவர்களையும் சேர்த்துக் கொண்டால் 4-ல் ஒரு பங்காக ஆகிவிடும். அப்போது சலுகைகள் அதிகமாக இருந்துவரும்.

அடுத்தப்படியாக ஹரிஜன மக்களில் பலர் உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு காங்கிரஸ் அரசாங்கம் உத்தியோகங்களைக் கொடுத்திருக்கிறது. அவர்கள் உத்தியோகத்தில் இருந்தாலும் அவர்களுக்கு மேலேயுள்ள அதிகாரிகள் "கான்பிடென்ஷீயல் ரிபோர்ட்" என்று வைத்து அவர்களை பல வழிகளில் நசுக்கிவிடுறார்கள். எந்த வழியிலும் முன்னேற முடியாமல் செய்து விடுகிறார்கள். அப்படி இருந்தும் திரு. மலையப்பன், திரு. முத்திருளாண்டி போன்றவர்கள் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கிறார்கள். சிலர் நல்ல ரிப்போர்ட் கொடுத்து மேலே வந்து விடுகிறார்கள். மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள் "கான்பிடென்ஷீயல் ரிப்போர்ட்"-டை நியாயமான முறையில் கொடுக்கிறார்களா என்று அரசாங்கமே கவனித்து, அவர்களை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரவெண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஆதித்திராவிட முன்னேற்றத்திற்காக மான்யம் கோரி வந்திருக்கிற இந்த நல்ல நேரத்தில், ஆதித்திராவிடர்களுக்கு மனைக்கட்டு வழங்குதலும், சுடுகாட்டுக்கு இடம் ஒதுக்குதிவலும், பாதை ஒதுக்குவதிலும், நில ஆர்ஜதம் செய்கிற காலத்தில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. கால தாமதம் ஆகின்றது என்பதைக் குறிப்பிட்டுத்தான் நான் வெட்டுப்பிரேரணை கொடுத்திருக்கிறேன். இந்த விவாதத்திலே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள்கூட வெட்டுப் பிரேரணையை, ஒரு அங்கத்தினர் தவிர மற்றவர்கள் யாவரும், ஆதரித்துத்தான் பேசினார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். காரணம் வெட்டுப்பிரேரணையின் கருத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒத்துக்கொள்ளுகிறார்கள் என்று இந்த நல்ல நேரத்தில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நில ஆர்ஜிதம் செய்வதிலே 1953–ல் ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்தாலும்கூட 1959–60-ம் ஆண்டில் சில இடங்களில் ஆர்ஜிதம் செய்யப்பட்டும், பல இடங்களில் ஆர்ஜிதம் செய்யப்படாத நிலை இருக்கிறது. சுடுகாட்டுக்குப் பாதை ஒதுக்குகிற நேரத்தில் ஒற்றையடிப் பாதையாக இருக்கிற காரணத்தினால், முன்னால் ஒருவரும்

[Sri A. Govindasamy] [25th March 1960

பின்னால் ஒருவருமாக தூக்கிக்கொண்டு, 4 பேர்கள்கூட பிணத்தைக் தூக்கிக்கொண்டு போக முடியாத பல இடங்கள் எனக்குத் தெரியும். உதாரணமாக எங்கள் பகுதியில் பனையபுரம் என்ற கிராமத்திலும், செங்காடு என்ற கிராமத்தில் இம்மாதிரியான நிலை இருக்கிறது. இந்தமாதிரி முறையில் பிணத்தைத் தூக்கிகொண்டு போகும்போது பிணம் கீழே விழுந்துவிட்டால் அதனால் குழப்பம் ஏற்பட்டு, போலீஸ் வந்து போலீஸ் பாதுகாப்போடு பிணத்தைக் கொண்டு செல்ல வேண்டிய நிலை இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்போது அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் அட்டையின்மேல் அழகாகப் படங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இந்தப் புத்தகத்தில் காட்டியிருக்கின்ற மாதிரி நிலைமை வந்துவிடுமானால் ஆதித்திராவிட மக்கள் அனைவரும் நிச்சயமாக முன்னேறிவிட்டார்கள் என்று சொல்ல முடியும். அங்கங்கே பரவலாகச் செய்து விட்டு, அத்தனையும் ஹரிஜன நலத்துறை செய்து விட்டது என்று சொன்னால் என்னைப் போன்றவர்கள் ஒத்துக்கொள்ள முடியாது. இந்த நிலைமை வருவதற்கு எத்தனை ஐந்தாண்டுத் திட்டம் போட்டு அரசாங்கம் நிறைவேற்றப்போகின்றதோ தெரியவில்லை.

ஆதித்திராவிடர்களுக்கு மாடுகள் வாங்கிக்கொடுக்கும் திட்டத்தில் ஒரு கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டியில் நானும் ஒரு அங்கத்தினராக இருந்தேன். ஆதித்திராவிடராக இருந்து மதம் மாறிய கிறிஸ்தவர் ஒரு மனுப் போட்டிருந்தார். அவருடைய மனுவைத் தள்ளுபடி செய்த நேரத்தில், அவருக்கு மாடு கிடைக்காத நேரத்தில் கேட்டார்கள், எல்லோரும் ஓர் குலம் என்று மேடையிலும், சட்ட சபையிலும் பேசுகிறீர்களே, ஆதித்திராவிடராக இருந்தும் கிருஸ்தவராக இருந்த ஒரே குற்றத்திற்காகத் தானே தள்ளுபடி செய்துவிட்டீர்கள், வெளியில் வாருங்கள், உங்கள் இரண்டு பேரையும் பார்த்துக்கொள்கிறேன் என்று என்னையும் ஹரிஜன் வெல்பேர் ஆபீஸரையும் பார்த்துச் சொன்னார்கள். சட்டம் குறுக்கே இருக்க நேர்ந்தது ஆதித்திராவிடத் தோழருக்குத் தெரியாத காரணத்தினால், வெளியே வாருங்கள், பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. பிறகு அவசரப்பட்டு சொன்னதை உணர்ந்து அவர் ஆத்திரத்தில் பேசிவிட்டேன் அப்படி என்று எனக்குக் கடிதம் எழுதினார்கள். பொருளாதாரத்துறையில் தாழ்ந்திருக்கக் கூடியவர்களாக இருந்தால் புத்த மதமாக இருந்தாலும், கிருஸ்தவ மதமாக இருந்தாலும் கொடுக்கக்கூடிய சலுகையைத் தடுத்து நிறுத்தக்கூடாது என்பது எனது வேண்டுகோள் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த சர்க்கார் மதம் இல்லாத சர்க்கார்—செக்குலா ஸ்டேட்—அதுவும் குறைந்த பட்ச எண்ணிக்கை உள்ளவர்களுக்கு தனியான பாதுகாப்பு கொடுக்கும் என்று சொல்லி மதம் மாறிய காரணத்தினால் சலுகைகளைத் தடுத்து நிறுத்தக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதித்திராவிடர்கள் இருக்கக் கூடிய சேரிகளில் விளக்குகள் போடுவதாக இந்தப் படத்தில் இருந்தாலும், ஒருசில கிராமங்களில் உள்ள சேரிகளில் தான் மின்சார வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்படாமல் இருக்கிறது. மேஜர் பஞ்சாயத்தாக இருந்தாலும், மைனர் பஞ்சாயத்தாக இருந்தாலும் ஆதித்திராவிட சேரிகளுக்கு விளக்குப் போடுவதிலே சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர பஞ்சாயத்து போர்டுகளிடம் விட்டால் இதிலே நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. அப்படிச் செய்தால் விளக்குப்போட முடியாது. படத்தில் போட்டுக் காட்டமுடியுமே தவிர உண்மையில்போடமுடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல பேர்கள் பேசும்போது பின் தங்கிய மக்களுக்கும், மிகவும் பின் தங்கிய மக்களுக்கும் அளிக்கக் கூடிய சலுகைகளும், இந்த மக்களின் நலனும் ஹரிஜன நலத்துறையில் இருப்பதால், இரண்டையும் ஒரே இலாகாவே கவனிப்பதால், ஹரிஜனங்களுக்குக்காக ஒதுக்கப்படக் கூடிய பணத்தையும் சேர்த்து அவர்களுக்காகச் செலவழித்து விடுகிறார்கள் என்று



25th March 1960] [Sri A. Govindasamy]

ஒரு அபிப்பிராயம் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த மாதிரியான தப்பு அபிப்பிராயம் ஏற்படாத வகையில் பின் தங்கிய மக்கள் நலனைத் தனியாகப் பிரித்து தனி இலாகாவை ஏற்படுத்தி விடுங்கள். மக்களுக்கு இருக்கக்கூடிய சந்தேகம் நீங்கும் . . .

**THE HON. SRI P. KAKKAN :** இதில் யாருக்கும் சந்தேகம் இல்லை கனம் அங்கத்தினருடைய கட்சியைச் சேர்ந்த கனம் ஸ்ரீமதி. சத்தியவாணி முத்து அவர்கள் தான் இப்படிச் சொன்னார்கள். வேறு ஒருவருக்கும் சந்தேகம் இல்லை. சந்தேகத்தைக் கிளப்ப வேண்டாம்.

**SRI A. GOVINDASAMY :** பரவலாகப் பேசப்படுவதைத்தான் கனம் அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த மன்றத்திலேயே வெளிப்படையாகப் பேசப்பட்டது. வேண்டுமானால் சட்ட சபை ப்ரொஸிடிங்ஸைப் படித்துப் பார்க்கவேண்டும் மென்று அமைச்சா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. பின்தங்கிய மக்கள், மிகவும் பின் தங்கிய மக்கள் சம்பந்தப்பட்டவரையில் தனியாகப் பிரித்து விடுங்கள். ஹரிஜனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் தனியாக வைத்துக்கொள்ளுங்கள். ஆதித்திராவிடர்களுக்கு அவர்களுடைய நலனுக்காக ஸ்காலர்ஷீப் பணம் கொடுக்கப்படுகிறது. அதற்காக குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே மாணவர்கள் இல்லாத நிலை இருக்கிறது. பின் தங்கியவர்கள் விஷயத்தில் பணம் இல்லாத காரணத்தினால் கொடுக்க முடியவில்லை. ஆதித்திராவிடர்கள் யாராவது இருந்தால் கொடுங்கள் ஸ்காலர்ஷீப் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த ஆண்டு 295 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆண்டுக்கு ஆண்டு உயர்த்துவது வரவேற்கத் தகுந்த காரியம். இது கடலிலே கரைத்த பெருங்காயம் போல இருக்கிறது என்றுதான் நான் சொல்லுகிறேன். சர்க்கார் ஹரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கிறார்கள் என்ற ஒரே காரணத்தினால்தான் பல ஹரிஜன மாணவர்கள் கல்லூரிகளில் சேருகிறார்கள். ஆனால் மார்ச் மாசத்தில் தங்களுக்கு ஸ்காலர்ஷிப் இல்லை என்ற செய்தி வரும்போது பல மாணவர்கள் தங்கள் படிப்பை விட்டுவிட்டுப்போக வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநில பாக்வர்ட் க்ளாஸெஸ் லிஸ்டில், வெளி ராஜ்யங்களிலிருந்து வந்து இங்கே குடியேறியுள்ளவர்களின் பெயர்கள்கூட இருக்கின்றன. ஆனால் நமது ராஜ்யத்திலேயே இருக்கும் சில பிற்பட்ட இனத்தவர்களின் பெயர்கள் அதில் சேர்க்கப்படவில்லை. கடலூரில் நடந்த மகாநாட்டில்கூட நமது ராஜ்யத்தில் உள்ள சேர்க்கப்படாமல் இருக்கும் எழூர் வகுப்பினரின் பெயர்கள் அதில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்று கேட்டேன். அவர்களையெல்லாம் அந்த லிஸ்டில் சேர்க்கவேண்டுமென்றும் இந்த மாநிலத்திலுள்ள எல்லா பிற்பட்ட இனத்தவர்களுக்கும், எல்லா மிகவும் பிற்பட்ட இனத்தவர்களுக்கும் சலுகைகள் காட்ட வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு, குடிதண்ணீர், சுடுகாட்டுப் பாதை இந்த மூன்று வசதிகளையாவது செய்துதர வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**SRI M. K. SOMASUNDARAM :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் கொண்டுவந்திருக்கும் மானிய கோரிக்கையை ஆதரிக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் சர்க்கார் பல திட்டங்களைப் பற்றிய கணக்குகளைக் காட்டியிருக்கிறார்கள். அத்ததிட்டங்களின் மூலம் ஹரிஜனங்கள் நன்றாகப் பயனடைவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தாலும்கூட, அவர்கள் நல்ல முறையில் பயனடைய முடியாத நிலையில் இருக்கின்றனர். பொதுவாக, எல்லோரும் கல்வியைப் பற்றி அழகாகப் பேசுகிறார்கள். நானும் கல்வியைப் பற்றி சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர், அதிகமான பணத்தை ஒதுக்கி ஹரிஜன மக்களின் நலனுக்காகப்

[Sri M. K. Somasundaram] [25th March 1960

பணம் செலவு செய்யும் இந்த இலாகாவை நல்ல முறையில் நடத்த வேண்டும். மக்கள் அதன் பலனைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் அதிகமான பணத்தை ஒதுக்கியிருந்தாலும், ஜில்லாக்களில் தவறுகள் ஏற்படுவதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. கோயம்பத்தூரில் உள்ள சில மாணவர்களுக்கு இதுவரையிலும் ஸ்காலர்ஷிப்புப் பணம் கிடைக்காததால், அவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 4½ ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கின்றது என்ற தகவல் எனக்கு நேற்றுக் கிடைத்தது. இந்தச் செய்தியை கனம் அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாணவர்ககா இப்போது. எந்நிலையில் இருக்கிறார்கள் என்பது இன்னும் சரியாகத் தெரியவில்லை அவர்கள் பரிட்ஷை எழுத முடியுமோ, முடியாதோ தெரியவில்லை. இதை உடனடியா கவனித்து டைரக்டர் அவர்கள் அவசியமான உத்தரவை அங்குள்ள ப்ரின்சிபால் அவர்களுக்கு அனுப்பும்படி செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கார் நடத்தும் ஹாஸ்டல்களில் பலவிதமான இடைஞ்சல்களும் இடையூறுகளும் ஏற்பட்டிருக்கின்றன. கனம் அமைச்சர் ஆங்காங்கே வரும்போது அவரிடம் இதுபற்றி எடுத்துக்கூறியும் அவர் இதை சரிவர கவனித்திருப்பதாகத் தெரியவில்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். ஹாஸ்டல்களில் சரியான ஆட்களைப் போட்டு மாணவர்களை நன்றாக கவனித்துவர வேண்டும். இல்லாவிட்டால் மாணவர்கள் கெட்டுப் போய்விடுவார்கள் என்று, கனம் அமைச்சரிடம் அவர் சுற்றுப்பிரயாணம் செய்தபோது கூறியிருக்கிறோம். ஹாஸ்டல்களில் இன்னும் அதற்கு சரியான ஏற்பாட்டைச் செய்தால் மாணவர்களின் படிப்பு வீணாகிவிட்டது. என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஹரிஜன மக்கள் பல துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமென்பதற்காக சர்க்கார் பல திட்டங்களைத் தீட்டியிருந்தாலும், அவர்கள் இன்னும் தொழிற் துறையில் முன்னேற்றமடையவில்லை. எனவே தொழில் துறையில் அவர்கள் முன்னேற்ற மடைவதற்கு வகைசெய்யும் முறையில் இன்னும் அதிகமான பணத்தை ஒதுக்கி அவர்களுக்கு உதவிபுரியவேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹரிஜன மக்கள் போடும் மனுக்களைப் பரிசீலித்து பதில் அனுப்புவதற்கு போதுமான அதிகாரிகள் போடப்படவில்லை என்று தெரிகிறது. ஏனென்றால் ஒரு கிராமத்திலுள்ள ஹரிஜன ஒருவர் ஒரு ரைஸ் மில் விஷயமாக மனுப்போட்டு இரண்டு வருஷங்கள் ஆகியும் இன்னும் ஒரு பதிலும் வந்து சேரவில்லை. அந்த விஷயமாக அவர் இதுவரை செலவழித்துள்ள பணத்தை வேறு வகையில் செலவழித்திருந்தால் அவர் நல்ல பலனை அடைந்திருக்க முடியும். நல்ல நிலைமைக்கு வந்திருக்க முடியும். எனவே ஹரிஜன மக்களின் மனுக்கள் உடனடியாகக் கவனிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன மக்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டுமானால், அவர்களுக்கு எக்ஸ்போர்ட், இம்போர்ட் லைசென்ஸ்களும் வழங்கவேண்டும். ஹரிஜனங்களுக்கு எக்ஸ்போர்ட், இம்போர்ட் லைசென்ஸ் கூட, சில அதிகாரிகள் கொடுப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு இந்த லைசென்ஸ்கள் கிடைக்கச் செய்வதற்கு விதிகளைத் தளர்த்த வேண்டியிருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சில ஜில்லாக்களில் சில ரூட்டுகளில் பஸ் விட அனுமதி கோரி ஹரிஜனங்கள் மனுச்செய்துகொண்டிருக்கிறார்கள். பரவலாகப் பரிசீலிக்கும்போது இவர்களுடைய மனுக்கள் இரண்டொரு மார்க்குகள் குறைவினால் தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கான காரணத்தை விசாரித்தால், மற்ற பஸ் முதலாளிகள் வொர்க்ஷாப்புகளை எந்த நிலைமையில் வைத்திருக்கிறார்களோ அதே நிலைமையில் இவர்களும் வைத்திருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த நிலைமையில் வைத்திருந்தால்தான் பெர்மிட் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். அவ்வளவு பணம் செலவழித்து அவர்களுடன் போட்டி போட நம்மால் முடியாது. ஹரிஜனங்களிடம் அவ்வளவு பணம் இல்லை. எந்த எந்த இடத்தில் பஸ் ரூட் கேட்கப்படுகிறதோ அந்த அந்த இடத்தில் வொர்க்ஷாப் வைத்திருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் வொர்க்ஷாப்புகளை அந்த அந்த இடங்களில் உடனுக்குடன் அமைக்க முடியாது. அவர்கள் உடனுக்குடன் வொர்க்ஷாப்புகளை இடம் விட்டு இடம் மாற்ற முடியாது. எனவே அவர்கள் அந்த அந்த இடத்தில் வொர்க்ஷாப்பை வைப்பதற்கு மூன்று மாதத் தவணை கொடுக்கவேண்டும். அந்த மாதிரி ரூல்ஸைத் தளர்த்தி அவர்களுக்கு பெர்மிட்டுகள் வழங்க வேண்டும். கனம் ஹரிஜன இலாகா அமைச்சர் மற்ற சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து ஹரிஜனங்களுக்கு இந்தப் பெர்மிட்டுகள் கொடுக்க வகை செய்யவேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.



25th March 1960] [Sri M. K. Somasundaram]

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானிய கோரிக்கையின் பேரில் பேசுமுன்பு இதைப் பிரேரேபித்திருக்கும் கனம் அமைச்சருக்கு என் நன்றியைத் தெரிவித்து, கடந்த பட்ஜெட்டில் ஒதுக்கியதைவிட அதிகமான தொகையை இந்த ஆண்டு ஹரிஜன முன்னேற்றத்துக்காக ஒதுக்கியிருப்பதற்காக அவரைப் பாராட்டுகிறேன். ஹரிஜன மானிய கோரிக்கையின் பேரில் பேச போதிய அவகாசம் கிடைக்கவில்லையே என்று ஒரு சிலர் மனக்குறைப்பட்டார்கள். எல்லா மானிய கோரிக்கையைப்பற்றிய விவாதத்திலும் ஒரு சிலர் தான் கலந்துகொள்வார்கள். ஆனால் ஹரிஜன மானிய கோரிக்கையின் பேரில் பேசவேண்டுமென்ற ஆர்வமும் துடிப்பும் எல்லோருக்கும் இருப்பதால், எல்லோருக்கும் ஹரிஜன மக்கள் நலனில் அக்கறை இருப்பதாகக் கொள்ள வேண்டுமே தவிர, இதை ஒரு குறையாகக் கருத முடியாது. புத்தர், ராமானுஜர், சங்கரர் முதலியவர்கள் காலத்தில் செய்யமுடியாத சீர்திருத்தத்தை இந்தக் காலத்தில் செய்தார் காந்தியடிகள். நம் கண்முன்னே தீண்டாமையை ஒழித்துக் காட்டிய காந்தியடிகளில் அடிச்சுவட்டைப்பின்பற்றிச் செல்லும் நமது காங்கிரஸ் அரசாங்கத்தார் ஹரிஜனங்களுக்கு பல நல்ல காரியங்களைச் செய்துவருகின்றனர். ஹரிஜன நலனைப் பொறுத்தவரையில் இந்த சர்க்காரைக் குறைகூறுபவர்கள், தாயாரிடம் குழந்தை கோபமாகப் பேசுவதுபோல பேசுகிறார்களே தவிர, ஹரிஜன இலாகா செயல்பட்டுவரும் விதத்தைப்பற்றி யாரும் குறைகூற முடியாது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஹரிஜனங்கள் எந்த நிலைமையில் இருந்தார்கள் என்பதையும் இன்று அவர்கள் எந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் காப்பி ஹோட்டல்கள் முதலிய இடங்களில் அவர்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பதையும் இப்போது அவர்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இன்று அவர்களுடைய நிலைமையை ஸ்வர்க்கலோகம் என்றே கூற வேண்டும். இன்றைய நிலைமை குறித்து அவர்கள் சந்தோஷப்படவேண்டும். ஆனால் எதிர்க் கட்சி மெம்பர்கள் பேசும்போதெல்லாம் சர்க்காரை இந்த விஷயத்தில் இடித்து இடித்துப் பேசுவதைப் பார்க்கும்போது, அவர்களுடைய பேச்சில், சர்க்காரைத் திட்டவேண்டுமென்றே அவர்களுடைய நோக்கம் தான் பிரதிபலிப்பதாகத் தெரிகிறதே தவிர அவர்களுக்கு ஹரிஜனங்களின் நலனில் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. நான் ஒன்று கூற விரும்புகிறேன். சினிமாக்களில் தான் இப்போது அதிகமாகத் தீண்டாமை வந்துள்ளது. கட்டபொம்மன் சினிமாப்படம் எகிப்தில் கூட ஓடியிருக்கிறது. எகிப்து நாட்டினர் அப்படத்தைத் தயாரித்தவர்களைப் புகழுகிறார்கள். அதைத் தயாரித்தவர்களுக்குப் பேரும் புகழும் வந்திருக்கிறது. அந்தக் கட்டபொம்மன் படத்தில், உண்மையான வரலாற்றில் கட்டபொம்மனுக்குப் பக்கத்தில் நின்று போராடிய ஹரிஜனத் தலைவர்கள் காட்டப்படவில்லை. சரித்திரத்திலுள்ள மற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் அந்தப் படத்தில் காட்சிகளாக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஹரிஜனங்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி அதில் காட்டப்படவில்லை என்பது என் போன்ற ஹரிஜன ஊழியர்களுக்கு மனச்சங்கடத்தைக் கொடுக்கிறது. அப்படத்தைத் தயாரித்தவர்கள் கட்டபொம்மன் சரித்திரத்தை நன்றாகப் படித்துவிட்டு அதைத் தயாரித்திருக்க வேண்டும். இன்று சினிமாவில் திரைக் கதை, வசனங்களும் இந்த மாதிரித்தான் இருக்கின்றன. அத்தொழிலில் சம்பந்தப்

[Sri P. S. K. Lakshmipathy Raj] [25th March 1960

பட்டுள்ளவர்கள் இன்று ஹரிஜன நலன் விஷயமாக காங்கிரஸ் அரசாங்கத்தைக் குறைகூறுவார்களானுல், ' நீங்கள் ஹரிஜனங்களுக்கு எவ்வளவு பிரதானம் கொடுத்திருக்கிறீர்கள் ? எத்தனை ஹரிஜனங்களுக்கு நீங்கள் சினிமாத் தொழிலில் வருவாய் கொடுத்திருக்கிறீர்கள் ? எத்தனை ஹரிஜனங்களுக்கு நீங்கள் சினிமாவில் கதாநாயகன் பாகம் கொடுத்திருக்கிறீர்கள் ' என்று நான் அவர்களைக் கேட்பேன். ஆனுல் எங்கள் காங்கிரஸை எடுத்துக்கொண்டாலோ, எங்கள் தலைவர் காந்திஜி உள்ளும் புறமும் வேறுபட்டு இல்லாத முறையில் தொண்டாற்றியிருக்கிறுர்கள். காந்திஜீ லக்ஷ்மி என்ற ஒரு ஹரிஜனப் பெண்ணை தம் அருமை மகளாக வளர்த்துவந்ததை இதற்கு உதாரணமாக நான் சொல்ல முடியும்.

இன்று, எங்கள் மதுரை ஜில்லாவின் தலைவர் வைத்தியநாத அய்யரைப்பற்றி குறிப்பிடும்போது, அவர் தன் காரை ஓட்டுவதற்கு ஒரு ஹரிஜனை வைத்திருந்தார். மற்ருெரு ஹரிஜனைத் தன் வீட்டில் வேலை பார்க்கின்ற ஊழியராக வைத்திருந்தார். அவர் பிராமணர். இன்று வாயிலே பேசுகின்றவர்கள் பேசலாமே தவிர உள்ளும் புறமும் ஒன்ருக சேவை செய்தவர்களை மறக்க முடியாது.

நேற்று முன் தினம் ஒரு சிலர் பேசும்போது அரசாங்கத்தை மகா விஷ்ணுவாகக் கருதி நெய்வேத்தியம் பண்ணுவது போல் சொன்ஞர்கள். அவர்கள் பேசியதைப் பார்க்கும்போது மிக்க வேதனையாக இருந்தது. இன்று நாட்டிலே மக்கள் மத்தியில் ஹரிஜனங்களின் நிலை முன்னேற்றம் அடைந்திருப்பதன் காரணமாக ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. இன்று சில இடங்களில் ஹரிஜன முன்னேற்றத்தில் ஊழியர்கள் அதிகமான பங்கு பெறுகின்ற காரணத்திஞல் அங்கெல்லாம் அவர்களுடைய முன்னேற்றம் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. சில எம். எல். ஏ. க்கள் ஒத்துழைக்காத காரணத்திஞல் அந்தப் பகுதிகளில் அவர்களுடைய முன்னேற்றம் தடைப்படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

ஹரிஜனங்களுக்காக மயான பூமிகள் இருக்கின்றன. அந்த மயான பூமி இருக்கும் நிலங்களையெல்லாம் மிராசுதார்கள் எடுத்து உழுதுகொண்டிருக்கிறுர்கள். நேற்று முன் தினம் பழனிக்குப் பக்கத்திலுள்ள ஒரு இடத்தில் ஒரு ஹரிஜன் இறந்துவிட்டான். அவனைக் கொண்டு போய்ப் புதைக்கப்போனபோது தடுத்து விட்டார்கள். நான், " என்ன ஆனுலும் சரி ; நீங்கள் எதிர்த்துப் போராடுங்கள் " என்று சொல்லி அனுப்பி வைத்தேன். அதன் பிறகு அவர்கள் புதைத்து விட்டு வந்தார்கள். ஹரிஜன மக்கள் உயிரோடு இருக்கும் காலத்திலும் கஷ்டப்படுகிறுர்கள் ; இறந்தும் கூட அவர்களுக்குக் கஷ்டம் இருப்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே மிகவும் வேதனையாக இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் சட்டத்தைத் தீவிரப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கனம் அமைச்சர் அவர்களைப் பாராட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri T. IRUSAPPAN :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த 1960–61-ம் ஆண்டு ஹரிஜன மான்யக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன் வந்திருக்கிறேன். பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டுச் சொன்ஞர்கள்—ஹரிஜன முன்னேற்றத்திற்கான காரியங்களை நிர்வகிக்கக்கூடிய அலுவலகங்கள் ரொம்பச் சிறிதாக இருக்கின்றன. எப்படிச் சேரிகள் ஒதுக்குப் புறமாக, நெருக்கமாக இருக்கின்றனவோ அதேபோல் இந்த அலுவலகங்களும் இருக்கின்றன. எங்கள் மாவட்டமான சேலத்திலும் இடம் நெருக்கடியாக இருக்கிறது. ஒரு டெபுடி கலெக்டர் அலுவலகம் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு இந்த அலுவலகமும் இருந்தால்தான் அந்த நிர்வாகத்தை வைத்து ஒரு மாவட்ட அதிகாரி பராமரிக்க முடியும். அவர்களுக்குத் தகுந்த பணியாட்களை அமர்த்தவேண்டும்.



25th March 1960] [Sri T. Irusappan]

தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரத்தில் முன்னேறி வரவேண்டுமென்ற எண்ணத்தை இங்கே பலர் குறிப்பிட்டார்கள். அதன்படி அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற, தனிப்பட்டவர்களுக்குப் பஸ் ரூட்டு கொடுக்க இடையூறுகள் இருந்தபோதிலும் கூட்டுறவு சொஸைடிகள் மூலமாக சர்க்காரை அணுகிஞல் அந்த சொஸைடிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பஸ் ரூட் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்து அந்த மக்கள் பொருளாதாரத் துறையில் வளருவதற்கு வழிவகை செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்று விகிதாசாரப் பிரகாரம் ஹரிஜனங்களுக்கு அரசாங்கத்தில் உத்தியோகம் கொடுக்கிறேம். அதேபோல் தனியார் துறையில் வைத்திருக்கும் பஸ் முதலாளிகளும், மில் சொந்தக்காரர்களும், விகிதாசார அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின் தங்கியவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டத்தைச் சர்க்கார் வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்து கொடுப்பதில் மிக மிகத் தாமதம் ஏற்படுகிறது. அது மிகவும் வருந்தத்தக்கது. எல்லா அங்கத்தினர்களும் இதைப்பற்றித் தெரிவித்தார்கள். அந்த நெருக்கடியைப் போக்க ஏட்டில் எழுதிவிட்டால் மட்டும் போதாது ; நாட்டு மக்கள் நலம் பெறுவதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சபையிலே நிலச் சொந்தக்காரர்களைப்பற்றிக் குறிப்பிடக் கூடாது என்று தலைவர் கட்டளையிட்டிருக்கிறுர். நிலச் சொந்தக்காரர்களால் ஹரிஜன மக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறுர்கள். என்னுடைய தொகுதியிலுள்ள ஒரு சேரியைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டார்கள். நஷ்ட ஈடுகூட சர்க்கார் கொடுக்க முடியாத நிலையில் கிராம அதிகாரி நடவடிக்கை எடுக்காது விட்டுவிட்டார். அந்தஊர் மணியக்காரர்மீது இதுபற்றி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சாதாரணமாகக் கொடுக்கக்கூடிய 30 ரூபாய் தொகை கூட சேரவில்லை. ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறுர்களே என்று எண்ணுமல் நியாயமான கோரிக்கைகளைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நிலமில்லாத ஏழை ஹரிஜனங்களுக்கு 5 ஏக்கர் நிலம் கொடுப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறுர்களே தவிர, ஒரு ஊரில் இரண்டு அல்லது மூன்று பேருக்கு அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் நிலந்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. கணக்குப் பிள்ளைகள் தங்கள் சொந்த நிலத்தை விற்பது போல் அந்த நிலங்களை விற்று விடுகிறுர்கள். நிலம் கொடுத்தும் ஹரிஜனங்களுக்குப் போய்ச் சேர முடியாத நிலையில், பணம் கொடுத்தும் அவர்கள் கையில் போய்ச் சேர முடியாத நிலையில் இன்று ஹரிஜனங்கள் இருந்துகொண்டிருக்கிறுர்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மெம்பராக வருவதற்குத் தடை இருக்கிறது. அதற்குச் சட்டத்தில் இடமில்லாத நிலை இருக்கிறது. எப்படி சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிலும் பிரதிநிதித்துவம் கொடுக்க சர்க்கார் விதிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகள் மிகவும் பாராட்டத்தக்கது என்று சொன்ஞர்கள். நான், இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகள் மிகவும் குறைவு, போதாது என்று கூற விரும்புகிறேன். இங்கு கூறப்பட்ட குற்றச்சாட்டுகளையெல்லாம் நல்ல முறையில் பரிசீலித்து ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கான வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri K. R. VISWANATHAN :** தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன மானியக் கோரிக்கையின் மீது நான் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். இந்த ஹரிஜன மானியத்திற்காக 1960–61-ம் ஆண்டிற்காக 295

லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 257 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆகவே, 38 லட்சம் ரூபாய் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மற்ற பிற்பட்ட வகுப்புகள் என்ற தரப்பில் பார்த்தால், 1959–60-ம் ஆண்டில் 17·30 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த ஆண்டு அதற்குக் கூடுதலாக அனுமதிக்கப்பட்ட தொகை 10 லட்சம் ரூபாய். இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 17·43 லட்சமாகும். நான் கேட்கிறேன்—சென்ற ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை போதாது என்ற காரணத்தினால் 10 லட்சம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டது. அப்படி இருக்கும்போது இந்த ஆண்டிலே ஒரிஜினல் அலாட்மென்டிலே 17·43 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேவைக்குத் தக்கபடி பணம் ஒதுக்கவேண்டுமென்றால் 27·43 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்க வேண்டும். இந்த பிற்பட்ட சமூகத்திற்காக இவ்வளவு குறைந்த அளவில் பணம் ஒதுக்கியிருப்பதைக் காண வருத்தமாக இருக்கிறதென்று கூற விரும்புகிறேன்.

இப்போது தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், பிற்பட்ட மாணவர்களுக்கும் படிப்புக்காக உதவி வழங்கப்பட்டிருக்கிறது. இதில் ஹரிஜன மாணவர்களைப்பற்றிக் கேள்வியே இல்லை. ஹரிஜன மாணவர்களில் யார் யார் படிக்க முன் வருகிறார்களோ அவர்களுக்கெல்லாம் நம்முடைய அரசாங்கத்திலிருந்தும், மத்திய சர்க்காரிலிருந்தும் பண உதவி செய்யப்படுகிறது. பிற்பட்ட மாணவர்களைப் பொறுத்த வரையில் எத்தனை மாணவர்கள் உதவி கோரி விண்ணப்பித்துக் கொண்டார்கள், எத்தனை மாணவர்கள் உதவி பெற்றனர், எத்தனை மாணவர்கள் தள்ளுபடி செய்யப்பட்டனர் என்ற விவரத்தை இந்த அறிக்கையில் கொடுக்காதது ஒரு பெரும்
12-30 குறை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அத்தகைய நிலையை
p.m. விளக்கினால்தான், உண்மையிலேயே நாம் எத்தகைய முறையில் பிற்பட்ட மக்களுக்கு உதவி செய்கின்றோம் என்பது தெரியவரும்.

அடுத்தாற்போல், இந்த ஆண்டிலே இந்த இலாகாவிலே இருக்கும் பெருங்குறையை நான் எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். ஒவ்வொருமாவட்டத்திலும் பல பெயர்களோடு பிற்பட்ட இன மக்கள் இருக்கிறார்கள். சில இடங்களில் சில மக்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் வன்னிய குல க்ஷத்திரியர்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் முக்குலத்தோர் என்னும் பிரிவினர் பெருவாரியாக இருக்கிறார்கள். அவரவர்களுடைய ஜனத்தொகைக்கு ஏற்றவாறு இந்த உதவிகள் வழங்கப்படவேண்டும். ஆனால், இந்த ஆண்டிலே உதவித் தொகை அளிக்கப்பட்ட முறையைப் பார்த்தால், ஜனத்தொகை விகிதாசாரத்தில் உதவிகள் வழங்கப்படவில்லை என்பது வெட்ட வெளிச்சமாக வெளிப்படையாகத் தெரிகிறது. அத்தகைய நிலைமை இனிமேலும் நீடிக்கக்கூடாது. அடுத்த ஆண்டிலாவது அம்மாதிரியான முறை இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காக நாட்டிலே ஒவ்வொரு வட்டத்திற்கும் துணை சேவக்குகள் என்று தொண்டர்களை நியமித்திருக்கிறார்கள். அத்தகைய தொண்டர்களினுடைய கடமை, நாட்டில் இருக்கும் தீண்டாமையை ஒழிப்பதற்காக ஹரிஜன காலனியிலேயும் மற்ற குடியானவர்கள் வாழும் இடங்களிலேயும் சென்று பிரசாரம் மூலமாகவும், சேவையின் மூலமாகவும் வேறுபாடுகளை நீக்குவதாகும். ஆனால், சில இடங்களில் பார்க்கின்றோம்—பின் தங்கிய வகுப்பார்களுக்கும் ஹரிஜனக்காலனியில் வாழ்கின்ற மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அன்னியோன்யமான, நெருங்கிய தொடர்பு ஏற்படுவதற்குப் பதிலாக, அவர்களிடையே வேறுபாடுகள் மிகவும் அதிகமாகிக்கொண்டிருக்கின்றன. இதைக் கவனிப்பது அவசியம். ஹரிஜன மக்களை முற்போக்கு நிலைமையில் கொண்டுவருவதோடு, பிற்பட்ட நிலையில் இருக்கும் மக்களுடைய நிலையையும் உயர்த்தினால்தான் இரு சாராருக்கும் இடையே அன்னியோன்னிய தொடர்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கும். அம்மாதிரி இல்லாமல் ஒரு பகுதியிலே மாத்திரம் முன்னேற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு போவதால் பிற்பட்ட மக்க



ளுக்கும் ஹரிஜனமக்களுக்கும் மன வேறுபாடு, பிளவு அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அத்தகைய பிளவை நீக்குவதற்கு நாம் பிற்பட்ட மக்களுக்கு வேண்டிய வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறதென்பதை உணர்ந்து நாம் அதற்காக 'டெபுடி சேவக்கு' என்ற ஊழியர்களை பிற்பட்ட வகுப்புக்களிலிருந்து பொறுக்கி எடுக்கவேண்டும். அவர்கள் இவ்விரு சாராரிடையும் சுமுகமான உறவு ஏற்படும் வண்ணம் பாடுபடவேண்டும். இத்தகைய முறையில் அரசாங்கம் தகுந்த உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**Mr. SPEAKER :** இப்பொழுது கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை பேசுவார்கள். கனம் அமைச்சர் அவர்கள் 12–45-க்குப் பேச ஆரம்பிப்பார். அதுவரை அவர்கள் பேசலாம்.

**Sri P. S. CHINNADURAI :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, பொருளாதாரத் துறையிலும் சமூகத் துறையிலும் மிகவும் தாழ்த்தப்பட்டு நசுக்கப்பட்டிருக்கும் சமூகத்தின் இரு பிரிவையும் சேர்ந்த மக்களுக்குச் சரியானபடி நல் வாழ்வை உத்தரவாதம் செய்வதற்கு என்று தான் ஹரிஜன நல இலாகா அமைக்கப்பட்டு, அதற்காக ஒவ்வொரு ஆண்டிலும் தனியாக வரவு-செலவுத் திட்டத்திலே மான்யங்கள் கோரப்படுகின்றன. இந்த மான்யம் கோரப்படுவதன் அடிப்படையான நோக்கம், ஹரிஜனங்களை ஹரிஜனங்களாகவே வைத்திருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இருக்குமானால், நான் நினைக்கிறேன், அது சரியானதல்ல என்று. சில பேர் அப்படித்தான் நினைக்கிறார்கள். ஹரிஜனங்களை ஹரிஜனங்களாகவே என்றைக்கும் வைத்துக்கொண்டிருக்கலாம், ஏதோ கொஞ்சம் இப்படியும் அப்படியும் சலுகை காட்டிக்கொண்டு, ஒதுக்கப்பட்ட மக்களாக கொஞ்சம் கைதூக்கிவிடப்பட்ட மக்களாக இருக்கட்டும் என்ற முறையிலே சில பேர் நினைக்கிறார்கள். அது சரியானதல்ல. நம்முடைய அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளும், அனுசரித்துவரும் கொள்கையும் அப்படி இருக்கக் கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். பொருளாதாரத் துறையிலே கைதூக்கிவிட்டால் மாத்திரம் போதாது ; சமூகத் துறையிலும் அவர்கள் மற்ற மக்களோடு சரியாக வாழக்கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டுமென்று தான் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதைக் குறித்து கனம் அங்கத்தினர்களில் பல பேர்கள் தங்களுடைய கருத்துக்களைப் பல்வேறு கோணங்களிலிருந்து எடுத்துக் கூறினார்கள். பொருளாதாரத் துறையில் உயர்வாக இருந்தால் மட்டுமே ஹரிஜனங்கள் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படுவார்கள் என்ற குறிப்பு முற்றிலும் உண்மையானதல்ல.

கனம் அமைச்சர் அவர்கள் ஒரு இடத்திற்குப் போயிருந்தார். அப்படிப்பட்ட இடத்திலே போயிருந்த காலத்திலே அவர் எப்படி நடத்தப்பட்டார் என்று அவருக்குத் தெரியும். முக்கியமான பிரமுகர், ஊருக்கு யார் வந்தாலும் வீட்டிலே அழைத்து விருந்து போடுகிற நபர், கனம் மராமத்து அமைச்சர் அவர்கள் போகும் நேரத்தில், "அவர்கள் ட்ராவலர்ஸ் பங்களாவில் இருந்தால் போதும் ; அங்கே சாப்பாடு அனுப்பி வைத்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டார். தன் வீட்டிலே விருந்து சாப்பிட்டதாக இருக்க வேண்டும், ஆனால் அந்தச் சாப்பாட்டை அமைச்சர் அவர்களுக்கு ட்ராவலர்ஸ் பங்களாவுக்குத் தான் கொடுத்து அனுப்புவேன் என்ற முறையில் நடந்துகொண்டது எனக்கு நன்றாகத் தெரியும்.

**The Hon. Sri P. KAKKAN** rose.

**Sri P. S. CHINNADURAI :** நான் சொல்ல வந்ததை முடித்து விடுகிறேன். ஏன் இதை குறிப்பிடுகிறேன் என்றால், சமுதாயத்திலே ஊறிப்போயிருக்கும் உணர்வு அப்படியிருக்க, அதைப் போக்கத்தக்க நிலைமையிலே நம்முடைய காரியங்கள் நடைபெறவேண்டும் என்பதற்காகத் தான். அதற்கு எங்களுடைய பரிபூரணமான ஒத்துழைப்பு நிச்சயம் அரசாங்கத்திற்கு உண்டு, அதில் தைரியமாகச் செயலாற்றுங்கள் என்று தான்

[Sri P. S. Chinnadurai] [25th March 1960

கனம் அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்ளுகிறேனே தவிர, அரசாங்கத்தையோ அமைச்சரையோ குறைத்துக் கூறவேண்டுமென்பதற்காக அல்ல.

THE HON. SRI P. KAKKAN: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் சின்னதுரை அவர்கள் இதே மன்றத்தில் முன்பு ஒரு முறை சொல்லியிருக்கிறார், மந்திரிமார்கள் தனிப்பட்டவர்கள் வீட்டுக்குப் போவது நல்லதல்ல, பொது இடத்திற்குப் போகவேண்டுமென்று. பொது இடத்திற்குப் போனதற்காகவும் இப்பொழுது குற்றம் சொல்கிறார்கள்.

SRI P. S. CHINNADURAI: கனம் அமைச்சர் அவர்கள் பொது இடத்தில் இருந்ததற்கு ரொம்ப நன்றி. உண்மையிலேயே இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், கனம் அமைச்சர் அவர்கள் அந்த வீட்டுக்குப் போயிருந்தால் நிலைமை நன்றாக இருந்திருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால், வேண்டுமென்றே அவர் அந்த வீட்டுக்கு அழைக்கப்படவில்லை. (கனம் ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு: அந்தத் தனிப்பட்டவர் யார்?) அமைச்சர் அவர்கள் ஒரு தடவை வரும்போது நானே அந்த விருந்தினரை அவருக்குக் காண்பிக்கின்றேன்.

சமூகத்தில் இருக்கும் அப்பேர்ப்பட்ட உணர்வுகளை மாற்றியே தீரவேண்டும். அதற்குப் பல முயற்சிகளை நெடுங்காலம் எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த இலாகா மான்யம் சம்பந்தப்பட்ட மட்டில், இரண்டு விஷயங்கள் பின்னிக்கொண்டிருக்கின்றன. ஒன்று, ஹரிஜனங்கள் என்று சமூகத்தின் ஒரு பிரிவினரைக் கருதுகின்றோமே, அவர்களுடைய முன்னேற்றத்திற்காக என்று கேட்கப்படுகிற தொகை. மற்றொன்று கல்வித் துறையிலே இதுகாறும் போதிய அளவு முன்னேறாது பின்னடைந்திருக்கிறார்களே, அவர்களுடைய முன்னேற்றத்திற்காக கேட்கப்படுகிற ஒரு தொகை. இவ்விரண்டையும் தனித்தனியே பிரித்து வைப்பதுதான் நல்லது என்று பல அங்கத்தினர்கள் கருத்து வெளியிட்டதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். பின்னடைந்தவர்களுடைய கல்விச் சலுகைக்கு ஒதுக்கப்படும் மான்யத்தொகை இருக்கிறதே, அதைப் பொறுத்தவரையில் அதைக் கல்வி மான்யத்தோடு இணைத்துவிட்டால் நன்றாக இருக்கும். தனி மான்யமாகக் கேட்டாலும் நன்றாக இருக்கும். கல்வித் துறையில் இதுகாறும் போதிய வசதி இல்லாது பின்னடைந்தவர்களின் பட்டியல் வளர்ந்துகொண்டே போகத்தான் செய்கிறது. அதற்காக வருந்துகிறேன். இருந்தாலும் என்ன செய்வது? நம்முடைய நாட்டின் பொருளாதார நிலைமை அப்படிப்பட்டது. இதுகாறும் அப்படிப்பட்ட வசதி பெறாதவர்கள் இப்பொழுது பெறவேண்டுமென்று விரும்புவது இயற்கையே. அவர்கள் எப்பொழுதுமே சலுகை பெறவேண்டுமென்றால் அதில் நியாயம் இருக்கமுடியாது. பின்னடைந்தவர்கள் பட்டியல் என்று வைத்துக்கொண்டிருக்கும் வரையில் செய்துகொண்டுதான் இருக்கவேண்டும். அப்படி ஒரு பட்டியலே இல்லாமல், கல்விச் சலுகை ஒரே மாதிரியாக வழங்கவேண்டும் என்ற கொள்கை அடிப்படையை அரசாங்கம் அமைத்திருந்தால் அது வேறு விஷயம். அப்படிப்பட்ட நிலைமையிலே ஒரு கொள்கை முடிவு எடுத்துக்கொள்ளாத வரையில், பின்னடைந்தவர்கள் பட்டியல் இருக்கத்தான் செய்யும். அப்படிப்பட்ட பட்டியலில் சேர்த்துக்கொள்ளவேண்டியவர்களுடைய கோரிக்கையைக் குறித்து அரசாங்கம சற்று கருணையோடு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த வகையில், கோவை ஜில்லா, சேலம் ஜில்லா, திருச்சி ஜில்லாவில் சில பகுதிகளிலும் மிக முக்கியமாக இருக்கும் ஒரு பிரிவினர், கொங்கு வேளாளர் என்னும் பிரிவினர், கல்வித் துறையைப் பொறுத்தவரையில் மிகவும் பின்னடைந்தவர்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்தால், அந்த சமூகம் முன்னேறிவிட்டது என்று நாம் ஏதாவது நினைத்தால் அது சரியான கருத்து அல்ல என்று கூறுகின்றேன். கொங்கு வேளாள சமூகம் விவசாயத் துறையில் முன்னாலே இருக்கும் சமூகம், கடுமையான உழைப்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்வை நடத்தும் ஒரு சமூகம் அது. ஆனால், கல்வித் துறையில் மேன்மை அடைவதற்கு, அதிகப்படியாக முன்னேறி வருவதற்கு சந்தர்ப்பங்கள் இதுகாறும் கிடைக்கவில்லை. அந்த சமூகத்தினர் போதிய வருவாய் இல்லாமலிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய வ ருவ இருந்திருக்குமானால், அரசாங்கம் எத்தகைய கல்விச் சலுகையு அவர்களுக்குக் கொடுக்காமலிருக்கலாம். ஆனால், இதுவரை போதிய வருவாய் பெறும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்தச் சமூகத்தினரை சர்க்கார் கவனிக்காமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். எப்பொழுது இந்தப் பிரச்னை வாதிக்கப்பட்டாலும், அப்போதெல்லாம் இதைத் தட்டிக் கழிக்கும் நிலைமையில் அரசாங்கம் நடந்து வந்திருக்கிறது. இதைக் குறித்து அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சரியான முடிவை உடனடியாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.



25th March 1960] [Sri P. S. Chinnadurai]

ஹரிஜனங்களுக்காக வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் சம்பந்தப்பட்ட வரையிலே ஏதோ புதியதாக மாறுதல் கொண்டுவரப்போவதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது என்ன பிரயோசனம்? இதுவரைக்கும் வீடுகள் கட்டிக்கொடுத்துக் கொண்டிருந்தோம். அந்த வீடுகளை எல்லோருக்கும் கட்டிக்கொடுக்க முடியவில்லை. ஒவ்வொரு ஊரிலும் 10 வீடுகள் கட்டுவோம். அவைகள் எப்படிப்பட்ட வீடுகள் பழைய காலத்தில் கம்பர் பாடியதுபோல் "நெற்கொண்டு போகும் அளவுக்கு நில்லாய் நெடுஞ் சுவரே" என்ற மாதிரி, கண்டிராக்டர் வீடு கட்டிக் கொடுத்துவிட்டு கையில் பணம் வாங்கும் வரையில்கூட சுவர் நிற்குமா என்பது சந்தேகம். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிறகு போய் கேட்டால் கலெக்டர் அளவில் 30 ரூபாய் கொடுக்கிறார்கள். அதெல்லாம் இருக்கிறது. ஆனால் இம்மாதிரி வீடுகள் இனி கட்டிக்கொடுக்க வேண்டாம். அது மோசம். இனி அம்மாதிரி வேண்டாம் என்று அரசாங்கம் ஒரு முடிவுக்கு வந்ததுபற்றி நான் பாராட்டுகிறேன். ஏனென்றால், சர்க்கார் அனுமதித்த 600, 700 ரூபாய்க்கு ஒரு வீடு கட்டிவிட முடியாது என்பதை அரசாங்கம் உணர்ந்து கொண்டதற்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது போட்டிருக்கும் திட்டம் எப்படிப்பட்டது என்றால், "காலி மனைக்கட்டு கொடுக்கிறோம், அஸ்திவாரத்தையும் போட்டுக் கொடுக்கிறோம், மேலே ரூ. 150 பெறுமான தட்டுமுட்டுச் சாமான்கள் கொடுக்கிறோம். ரூ. 25 கையிலே கொடுக்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரி செய்துவிட்டால் ஒரு வீடு கட்டுவது சாத்தியமா என்று அரசாங்கத்தை கேட்க விரும்புகிறேன். அஸ்திவாரம், போட்டுக்கொடுத்து 150 ரூபாய் பெறுமான சாமான்கள் கொடுத்து கையில் ரூ. 25 கொடுத்துவிட்டால் வீடு கட்டிக்கொண்டு விடமுடியும் என்று அமைச்சர் அவர்கள் நினைக்கிறார்களா? எல்லோருக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும், இதைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. இது எப்படி இருக்கிறது என்றால் இலைகளையும், தழைகளையும் கட்டிக்கொண்டு திரிகின்ற ஒருவனுக்கு நல்ல கோமணமாக கொடுத்துவிட்டு, கொஞ்சம் பஞ்சும், நூற்பதற்கான ராட்டையும் கொடுத்து விடுகிறோம் என்று சொல்லுவதுபோல்தான் இருக்கிறது. அவன் அப்படி நூற்கும் நூல் ஒரு வேஷ்டிக்கோ அல்லது சட்டைக்கோ கூட போதுமானதாக இருக்காது. அவன் என்ன செய்வான்? அம்மாதிரி கொள்கை நியாயமானது அல்ல. செய்வதை சரியாகச் செய்ய வேண்டும். 150 ரூபாய் போதாது, அதை 300 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார்கள். அது கூட எப்படி போதும்? அவர்கள் பெரிய மாளிகை வேண்டும் என்று கேட்கமாட்டார்கள். நான் இங்கே சொல்ல விரும்புவது எல்லாம் "அவர்கள் வாழ்வதற்கு தகுந்த வீடுகளாகக்கட்டிக் கொடுங்கள், இடிந்து விழக்கூடிய வீடுகள் வேண்டாம். சில ஆண்டுகளுக்காவது வாழ்வதற்கு தகுந்த வீடுகளாகக் கட்டிக்கொடுங்கள்" என்பதுதான். அப்படிப்பட்ட வீடுகள் கட்டுவதற்கு நீங்கள் திட்டம் போடுங்கள். கனம் அமைச்சர் அவர்களுடைய கார் ஷெட்டுக்கு எத்தனை செலவாகுமோ அவ்வளவு செலவில் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தால் போதுமானது. அதற்கு மேலே பணம் வேண்டாம். கார் ஷெட் அளவுக்கு வீடு கட்டிக்கொடுங்கள், போதும். நான்

[Sri P. S. Chinnadurai] [25th March 1960

நினைக்கிறேன், 2,500 அல்லது 3,000 ரூபாய் ஆகலாம் ஒரு வீட்டிற்கு என்று அதற்கு மேலும் ஆகலாம். அந்த அளவுக்காவது வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். வருஷம் ஒன்றுக்கு 10 கோடி ரூபாய் வீதம் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக 20 ஆண்டுகளுக்கு ஒதுக்கினால் எல்லா ஹரிஜனங்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க முடியும். அம்மாதிரி செய்தால் தான் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும். வருஷம் ஒன்றுக்கு 10 கோடி ரூபாய்க்கு திட்டம் போடுங்கள். (குறுக்கீடு.) பணத்திற்கு என்ன செய்வது ? திட்டம் போட்டு வருவாய்க்கு வழி சொல்லுங்கள் என்று கேளுங்கள். அப்பொழுது பேசுவோம்.

அடுத்து ஒன்றிரண்டு பிரச்னைகளைப்பற்றி சுருக்கமாக பேசி முடித்துக் கொள்ளுகிறேன். வேளாண்மை தொழிலுக்காக மாடு வாங்குவதற்கும் மற்ற சாதனங்கள் வாங்குவதற்கும் 285 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதில் மற்ற சாதனங்களுக்காக ரூ. 35-ம் மாட்டுக்காக ரூ. 250-ம் கொடுக்கப் படுகிறது. மற்ற இடங்களில் எப்படியிருக்குமோ தெரியாது. ஆனால். கோவை ஜில்லாவைப் பொருத்த மட்டில் ரூ. 250 போட்டு மாடு வாங்கினால் வீட்டிற்கு அதை ஓட்டிப்போவதற்குள்ளாகவே ஒரு ஜோடி மாடும் போய்விடும், அல்லது கொஞ்ச நாட்களுக்கு இருந்து பிறகு போய்விடும்.

**The Hon. Sri P. KAKKAN** : உண்மைக்கு விரோதமாக அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதினால்தான் நான் குறுக்கிடவேண்டியிருக்கிறது. நானே கோவை ஜில்லாவிலே என் கையினாலே மாடுகள் வாங்கிக்கொடுத்திருக்கிறேன். ஹரிஜனங்கள் தங்கள் கையிலிருந்துகூட கூடப்போட்டு நல்ல மாடுகளை வாங்கி நல்ல முறையில் விவசாயம் செய்கிறார்கள். அங்கத்தினர் அவர்கள் சொல்லுவதுபோல் வீட்டிற்குப்போவதற்குள் சாகக்கூடிய நிலைமையில் மாடுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இம்மாதிரி தப்பாகச் சொல்லக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**Sri P. S. CHINNADURAI** : நான் தப்பாக எதையும் சொல்லுவதற்கு விரும்பவில்லை. அரசாங்கம் இதில் இன்னும் சற்று அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். மாடு வாங்குவதற்கு 250 ரூபாய் அரசாங்கம் கொடுத்தாலும் மேலே அவர்கள் கொஞ்சம் பணம் கொண்டுவந்து போட்டால்தான் மாடு வாங்கலாம் என்ற தர்மசங்கடமான நிலைமை இருக்கிறது. கடந்த ஆண்டுகளிலே பல லட்சக்கணக்கான ரூபாய் மத்திய சர்க்கார் மான்யத்தை நாம் திருப்பிக் கொடுத்திருக்கிறோம். கிடைத்த மான்யத்தை உபயோகப்படுத்திக்கொள்ளாமல் திருப்பிக்கொடுத்திருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உண்மையிலேயே சொல்லுகிறேன். மாடுகள் வாங்குவதற்காகத் தரப்பட்ட மான்யத்தில் சுமார் 2¾ லட்ச ரூபாய் கடந்த ஆண்டுகளிலே ஒரு ஆண்டில் திருப்பிக் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு.) அந்த ஆண்டில் மத்திய அரசாங்கத்திற்கு நாம் உபயோகப்படுத்திக் கொள்ளாமலே திருப்பிக் கொடுத்திருக்கிறோம். இதிலே விவகாரம் இருப்பதினால்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ரூ. 250 போதாது. அதை 400 அல்லது 500 ரூபாய் என்று அதிகமாகச் செய்து அதற்காக வேண்டிய பணத்தை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எத்தனை பேர்களுக்கு வேளாண்மைக்காக உதவி செய்யவேண்டுமோ அத்தனை பேர்களுக்கு உதவி இல்லை. 100-க்கு 10 பேர்களை பொருக்கி எடுக்கிறார்கள். அவர்களுக்குத்தான் உதவி கிடைக்கிறது. பாக்கி 90 பேர்களுக்கு ஒன்றும் இல்லை. இந்த நிலைமை சரியானது அல்ல. எல்லோருக்கும் கொடுப்பதுதான் நியாயம். ஹிந்து மதத்தில் இருக்கிற ஹரிஜனங்களுக்கும் கிறிஸ்துவ மதத்தில் இருக்கிற ஹரிஜனங்களுக்கும் மத்தியிலே பாகுபாடு காட்டப்படுகின்ற மனப்பான்மை நமக்கு வேண்டாம். ராமன் என்ற பெயரை ராபர்ட் என்று மாற்றிக்கொண்டுவிட்டால் திடீரென்று அவருடைய நிலைமை உயர்ந்துவிடப்போவதில்லை. (கனம் சபா



25th March 1960] [Sri P. S. Chinnadurai]

நாயகர் அவர்கள் மணி அடித்தார்.) கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நிமிஷங்களை அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER** : அவர் எடுத்துக்கொண்ட ஒரு நிமிஷத்தை கொடுக்கிறேன்.

**Sri P. S. CHINNADURAI** : ஹரிஜனங்கள் சமூகத் துறையிலே உயரவேண்டும் என்று பாடுபடும்பொழுது அவர்கள் மதம் மாறினால் நாம் அவர்களுக்கு அளிக்கின்ற உதவிகளை சலுகைகளையெல்லாம் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்ற கொள்கை சரியானதல்ல. ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் பலர் இது சம்பந்தமாக சரியான கருத்துக்களைப் பிரதிபலித்திருக்கின்றனர். அதையெல்லாம் அலட்சியப்படுத்தாமல் உரிய கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாதிரிப் பாகுபாட்டை நீக்குவதற்கு சரியான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

கடைசியாக ஒரு பிரச்னையைப்பற்றி பேசி முடித்துக்கொள்ளுகிறேன். ஹரிஜன நலத்துறை டைரக்டர் அவர்கள் சம்பந்தப்பட்டவரை அவர் என்ன செய்வார் பாவம். ஆனால் அவர்கள் அனுப்புகின்ற கடிதங்களை மாவட்டக் கலெக்டர்கள் சரியானபடி மதித்து பதில் அனுப்புவதில்லை. ஹரிஜன நலத் துறை டைரக்டர் அவர்களின் நிலை உயரவேண்டும். கலெக்டர்கள் ஹரிஜன நலத்துறை டைரக்டரை தங்களுக்குக் கீழ்ப்பட்டவர் என்று நினைத்துக்கொண்டு அவர் அனுப்பும் கடிதங்களை சரியானபடி கவனிக்காமல் இருந்தால் இங்கே அவர் எப்படி காரியங்களைச் செய்ய முடியும் ? இம்மாதிரி பாகுபாடான உணர்ச்சியை—என்ன உணர்ச்சி என்று வேண்டுமானாலும் பெயர் வைத்துக்கொள்ளுங்கள்—அந்த உணர்ச்சியைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தால்தான் ஹரிஜன நலத்துறை டைரக்டர் அவர்கள் காரியங்களை இங்கிருந்துகொண்டு சரிவரச் செய்ய முடியும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **The Hon. Sri P. KAKKAN** : மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, அங்கத்தினர்கள் பலர் நல்ல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கூறியதற்காக அவர்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஹரிஜன சமுதாயம் பொருளாதாரத் துறையிலே, கல்வித் துறையிலே, மிகவும் பின்தங்கிய சமுதாயமாக பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இந்த நிலைமையைப் போக்குவதாயிருந்தால் இந்த நாடு சுதந்திரம் அடைந்தால்தான் முடியும் என்று மகாத்மா காந்தி அடிகள் எண்ணினார். அவர் எண்ணிய எண்ணம் ஈடேறியது. சுதந்திரம் பெற்ற பிற்பாடு பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும், சமூகத் துறையிலும் எவ்வளவு தூரம் ஹரிஜன மக்களை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவர முடியுமோ அதற்கு இந்த அரசாங்கம் பெரிதும் பாடுபட்டு வருகிறது. அதிலும் ஏழைத் தொண்டன் காமராஜர் தலைமை தாங்குகின்ற சென்னை சர்க்கார் ஹரிஜன மக்களுக்கு அள்ளிஅள்ளிக் கொடுத்து ஆவன செய்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

பல கனம் அங்கத்தினர்கள், இன்னும் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் நடைமுறையிலே சரியாக நடைபெறவில்லை, நல்ல முறையிலே நடவடிக்கை எடுக்க போலீஸ் அதிகாரிகளுக்கும் எடுத்துச் சொல்லி, அவர்களை நடவடிக்கை எடுக்க தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். தீண்டாமையைப் போக்க, சமுதாயத்தில் யாரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடுகள் இல்லாமல் செய்ய, இழிவு கொண்ட மனிதர் என்பார் இந்தியாவில் இல்லையே என்ற நிலையைக் கொண்டுவர அரசாங்கம் எவ்வளவோ பாடுபடுகிறது. அதற்குரிய சட்டங்களை இயற்றி, அவற்றை அமுலாக்கவும் பாடுபட்டு வருகிறது. இந்தியாவிலேயே ஹரிஜன மக்களுக்கு அதிக அன்பும், ஆதரவும் காட்டி, அவர்களுக்கு அநேக [illegible] சேவை செய்வது இந்த மாநிலத்தில்தான். அந்தப் பெருமை

[Sri P. Kakkan] [25th March 1960

இந்த மாநிலத்திற்குத்தான். அந்தப் பெருமையை இந்திய மக்கள் அனைவரும் அறிந்திருக்கிறார்கள் [illegible] தீண்டாமையை யாரும் வேண்டுமென்றே சட்டத்தை மீறி அனுஷ்டிப்பதில்லை. தெரியாத்தனமாக கையாண்டால் அல்லது அப்படி வேண்டுமென்றே கையாண்டால், சட்டத்தின் கீழ் தண்டனை கொடுக்க இந்த அரசாங்கம் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறது. நடைமுறையிலே சட்டத்தை அமுலாக்க பொதுமக்களின் அன்பையும் ஆதரவையும் பெற அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்திருக்கிறது. மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் அந்த சட்டங்களை அமுலாக்க அதிகாரிகளுடன் ஒத்துழைக்க கோருகிறேன். அல்லது வெறுமனே ஒரு சிலர் ஜாதி மனப்பான்மையோடு இருந்தாலும், அவர்களிடமும் சொல்லி, நீங்களும் உங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலிலே தீண்டாமை ஒழிப்புச் சட்டம் செய்தோம்; பிறகு ஆலய பிரவேசச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மத்திய சர்க்காரில், அன் டசபிலிடி அபென்ஸஸ் ஆக்ட் நிறைவேற்றப்பட்டது. அவைகளெல்லாம் இப்பொழுது அமுலில் இருக்கின்றன. அவைகளை அமுலாக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மற்ற சட்டங்களின் கீழ், குற்றம் செய்தவர்களுக்கு சம்மன்ஸ் அனுப்பித்தான் ஆக்ஷன் எடுக்க வேண்டும்; ஆனால், இந்த சட்டத்தின்கீழ், சம்மன்ஸ் இல்லாமலே நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த சட்டங்களெல்லாம் இருந்தாலும், ஒரு சில இடங்களிலே, தெரியாத்தனமாக பல காலமாகக் கையாண்ட பழக்கத்தினாலே, ஒரு சிலர் தடைசெய்யலாம். அவர்களையும் சீர்திருத்த வேண்டும். நாம் பொதுப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களும், அதிகாரிகள் மூலமாகவும், அவர்களுக்கு நல்ல போதனை செய்ய வேண்டும், அவர்களிடம் சொல்லி அவ்வாறு செய்யவேண்டாம் என்று திருத்த வேண்டும். அதற்கு எவ்வளவு தூரம் இந்த மன்றத்திலே உள்ள அங்கத்தினர்கள் உதவ முடியுமோ அவ்வளவு தூரம் செய்ய வேண்டும் என்று அன்பர்களை கேட்டுக் கொள்ளுகிறேன். நாம் எடுத்திருப்பது ஒரு பெரிய வேலை. பல ஆண்டுகளாகக் கோவில்களில் நுழையக்கூடாது என்று இருந்ததை மாற்ற வேண்டியிருக்கிறது. சட்டங்களைச் செய்தாலும், சட்டங்களைச் சிலர் மதிக்காவிட்டால், அவர்களை உணரச்செய்ய வேண்டும். தேசப் பிதா மகாத்மா காந்தி வாழ்ந்த நாளில் ஒரு கோவிலில் ஹரிஜனங்கள் போகக்கூடாது என்று சொன்னால், அந்தக் கோவிலில் பாம்பும், பிசாசும்தான் இருக்கின்றன என்று அவர்கள் சொன்னார்கள். அதன் உண்மையை மக்கள் உணர்ந்தார்கள். மாகாணத்தில் உள்ள எல்லாக் கோவில்களும் திறந்து விடப்பட்டன. புகார்களை அரசாங்கம் எப்பொழுதும் கவனிக்கும்.

(Deputy Speaker in the Chair.)

ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் பகுதியிலே, செங்கல்பட்டு மாவட்டத்திலே, ஒரு கிராமத்திலே, கோவிலில் விடவில்லை என்று குறித்துச் சொன்னார்கள். அம்மாதிரி ஓரளவு தெரியாத்தனமாக இருந்திருந்தால் அதை கவனிக்க வேண்டியதுதான். ஆனாலும், உண்மையை அரசாங்கம் அறியவேண்டும். யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, இந்தக் கட்சி அந்தக் கட்சி என்று கிடையாது அரசாங்கம் பொருட்படுத்தாது. இந்த அரசாங்கம் நீதியையும், உண்மையையும் மனத்தில் கொண்டு பணியாற்றும். ஆனால், அவர்கள் குறிப்பிட்ட கிராமத்தில் என்ன காரணத்திற்காக நுழைய விடவில்லை? அதை அறிய விரும்புகிறேன்.

**Dr. Srimathi SATYAVANI MUTHU:** அமைச்சர் அவர்களுக்குச் சொல்லுகிறேன். அந்த மேலநல்லத்தூர் மக்கள் தங்கள் குறைகளை 10–12–59-ல் . . .

**DEPUTY SPEAKER:** The honourable lady Member need not repeat it.



25th March 1960]

**Dr. Srimathi SATYAVANIMUTHU:** அரசாங்கத்துக்குக் கொடுத்திருக்கிறார்களே, அதற்குப் பதில் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN:** விண்ணப்பங்கள் பல அனுப்பி இருக்கலாம். அப்படி அனுப்பி இருந்தால், அது சம்பந்தப்பட்ட டிபார்ட்மெண்டுக்கு, ஹோம் டிபார்ட்மெண்டுக்கு, உடனடியாக அனுப்பி இருக்கலாம். ஆனால், நான் அறிந்துகொள்ள விரும்புவது அவர்கள் என்ன காரணத்திற்காக நுழைய விடவில்லை; வேறு ஏதாவது காரணங்கள் இருக்குமோ என்னவோ, சிலர், "ஸ்ரீரங்கம் ரங்கனுதனையும், தில்லை நடராஜனையும், பீரங்கி வைத்துப் பிளப்பது எப்போதோ" என்று சொல்பவர்களாக இருக்கிறார்களே: (சிரிப்பு) அவர்களோ என்ற பயத்தால் மறுத்துவிட்டார்களோ என்னவோ என்று நினைக்கிறேன். அங்குள்ள ஜாதி ஹிந்துக்களை, மனம் மாறச் செய்து, அவர்களே கூட இருந்து திறந்துவிட ஏற்பாடு செய்ய முடியும். (குறுக்கீடு.) டெபுடி சேவக்குகள் வேலையே, இந்தத் துறையில் தக்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு ரிபோர்ட் செய்யவேண்டியதுதான் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆகவே, சட்டங்கள் மூலமோ நம் அரசாங்கம் சமுதாயத்தில் இருக்கக் கூடிய குறைகளை நீக்கி, நியாயத்தையும், நீதியையும் நிறுவ வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்து வருகிறது. தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக, ஒவ்வொரு ஜில்லாவிலும் கலெக்டர்களும், ஐ.ஜி.யும் குற்றங்கள் தெரிந்தால், தாங்களே நேரிடையாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறது. நல்ல முறையிலே, அவர்கள் விளம்பரங்கள், வால் போஸ்டர்கள், சுற்றறிக்கை இவைகள் மூலமாக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். தீண்டாமைக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல் டெபுடி சேவக்குகளைப் போட்டு, கிராமங்களிலும், குக்கிராமங்களிலும், பிரசாரம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தெரியாத்தனமாகவோ, அல்லது ஒரு சிலர் கொஞ்சம் இன்னும் மனம் திமிராக—அந்த வார்த்தையை சொல்வதில் வருத்தப்பட மாட்டார்கள் என்று நினைக்கிறேன்—இருந்தாலும், அவர்களையும் நிச்சயமாகத் திருத்த முடியும் என்றே டெபுடி சேவக்குகளை கிராமங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

கனம் மெம்பர் ஆத்தூர் சுப்பிரமணியம், இந்த டெபுடி சேவக்குகள் காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்திற்காகத்தான் நியமித்திருக்கிறார்கள் என்று குறை கூறினார்கள். அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி இந்த டெபுடி சேவக்குகள் பிரசாரம் செய்ய வேண்டிய நிலையில் இல்லை, அந்த அவசியம் இந்தக் கட்சிக்குக் கிடையாது இன்று. பொது விவாதத்தின் போதும் சொல்லப்பட்டது, சமுதாய நலத் திட்டம், தேசிய நலத் திட்டம் இவைகளின் வேலைகளை, அதிகாரிகள் காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்படுகிறார்கள் என்று. காங்கிரஸ் கட்சிப் பிரசாரம் செய்யவில்லை அவர்கள்; காங்கிரஸ் சர்க்கார் வேலைகளைப் பிரசாரம் செய்கிறார்கள். அரசாங்கம் செய்யும் வேலைகளை மக்களிடம் சொல்லுகிறார்கள்; அதைச் சொல்லாமல் வாயைப் பொத்திக்கொண்டு இருக்கவேண்டுமானால், இவர்களுக்கு அங்கு என்ன வேலை? தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள் செய்திருக்கிறோம். அவைகளைப் பற்றிக் கிராமங்களில் சொல்லி மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும்; சுகாதாரம் சம்பந்தமாகத் திட்டங்கள் செய்யப்படுகின்றன. அவைகளை மக்களிடையே விவரிக்க வேண்டும். இதை எல்லாம் செய்யக் கூடாது என்றால், அவர்களுக்கு அரசாங்கத்தில் வேலையே இல்லையே. அரசாங்கம் செய்யும் வேலைகளைப் பற்றிச் சொல்லக்கூடாது என்றால், யார் வேலைகளைப் பற்றிச் சொல்ல அவர்களை வைத்திருக்கிறது? ஆகவே, காங்கிரஸ் கட்சி அல்ல, காங்கிரஸ் சர்க்கார் செய்யும் வேலைகளை மக்களிடம் சொல்ல டெபுடி சேவக்குகளும், மற்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே உள்ள கனம் அங்கத்தினர்கள் உணர வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[Sri P. Kakkan] [25th March 1960

1 p.m. மேலும் தீண்டாமையை ஒழிப்பதற்கு என்று ஹாஸ்டல்களில் எல்லா வகுப்பு மாணவர்களும் சேர்ந்து படிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி பள்ளிகளிலேயே ஹரிஜன மாணவர்களும் ஜாதி ஹிந்து மாணவர்களும் சேர்ந்து படித்தால் வருங்காலத்தில் அவர்களிடத்தில் பாகுபாடு ஏற்படாது என்ற கருத்தில் இப்பொழுது அவர்கள் சேர்ந்து படிக்கவேண்டும் என்று திட்டமிட்டு அதன்படி சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சாதாரணமாக 100 மாணவர்கள் இருந்தால் அவற்றில் 75 மாணவர்கள் ஹரிஜன மாணவர்கள் என்றும் 15 ஜாதி ஹிந்துக்களுடைய மாணவர்கள் என்றும், பாக்கிப் பத்துப் பேர்கள் சமுதாயத்தில் கல்வியில் முன்னேற்றமடைந்த மாணவர்கள் என்றும், பாகுபாடு செய்து அந்த முறையில் மாணவர்களை ஹாஸ்டல்களில், பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. இந்த முறையில் அதிகப்படியான மாணவர்கள் இப்பொழுது படிக்க முன்வருகிறார்கள். மற்றும் ஏழை மாணவர்களாக இருந்தாலும் அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. சாதாரணமாக பணக்கார மாணவர்கள் இந்த ஹாஸ்டல்களில் வந்து தங்கி படிக்க முன்வர மாட்டார்கள். ஏழை மாணவர்கள்தான் வருவார்கள். அதனால் இப்பொழுது எந்தவிதமான நிர்ப்பந்தமும் வேண்டாம் என்று கருதி எல்லா மாணவர்களையும் இலவசமாக சென்னை அரசாங்க விடுதிகளில் படிக்கவைக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்றில் ஒரு பங்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு இட்டிருக்கிறது. ஆகவே தீண்டாமையை ஒழிப்பதற்காகவும், ஒதுக்கல் நிலைமைக்கு முடிவு கட்டுவதற்காகவும் முன்னடைந்த வகுப்பு மாணவர்களையும் பின்னடைந்த வகுப்பு மாணவர்களையும் அரசாங்க ஹரிஜன ஹாஸ்டல்களில் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அரசாங்கம் நடத்துகிற ஹாஸ்டல்களிலும், பாடசாலைகளிலும் தீண்டாமைக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகக் குழந்தைப் பருவத்திலேயே அவர்கள் சேர்ந்து இருக்கவேண்டும் என்றும், அதனால் அவர்கள் வருங்காலத்தில் பாகுபாடு இல்லாத நிலையில் இருக்கக் கூடிய மனப்பான்மை ஏற்படும் என்ற அளவில் இந்த ஏற்பாட்டை அரசாங்கம் செய்திருக்கிறது. இந்த முறையிலும் தீண்டாமையை ஒழித்துவிடலாம் என்று அரசாங்கம் இதைக் கடைப்பிடித்து வருகிறது.

தனிப்பட்ட முறையில் ஹாஸ்டல்கள் நடத்தினாலும் அரசாங்கம் தனியாக ஹாஸ்டல்களை நடத்தினாலும்—ஹரிஜனங்களுக்குத்தான் தனியாக ஹாஸ்டல்கள் நடத்தப்படுகிறதே. அவற்றில் 16 சத விகிதம் ஹரிஜனங்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற உத்தரவு இருப்பதுதான் கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். அதன் மூலமும் தீண்டாமையை ஒழித்துவிடலாம் என்ற அடிப்படையில் அப்படி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஹரிஜனங்களுக்கு என்று தனியாக கல்லூரி மாணவர்களுக்கு ஹாஸ்டல்கள் இருக்கக்கூடாது என்று அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறது. தனியாக பாடசாலைகளை அமைத்தால் ஹரிஜனங்களிடையே தங்களை தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதுகிறார்கள். ஜாதி ஹிந்துக்களை உயர்ந்தவர்களாகக் கருதுகிறார்கள் என்ற மனப்பான்மை ஏற்படும் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு என்று தனியாக பாடசாலை இருக்கக்கூடாது என்றும் இருக்கக் கூடிய பாடசாலைகளில் எல்லோரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறார்கள். இப்படி எவ்வளவோ சலுகைகள் ஹரிஜனங்களுக்குக் காட்டப்பட்டு வருகிறது. எந்தெந்த வழிகளில் அவர்களுக்கு சலுகைகள் காட்டவேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்களோ அந்த வழிகளில் எல்லாம் அரசாங்கம் அவர்களுக்கு சலுகைகள் காட்டிக்கொண்டுதான் வருகிறது. தீண்டாமையைப் போக்குவதற்கு எந்தெந்த வழிகளில் வேலைகளைச் செய்ய வேண்டுமோ அந்த வழிகளிலெல்லாம் அரசாங்கம் காரியங்களைச் செய்துகொண்டுதான் வருகிறது.

வீடுகள் கட்டும் திட்டத்தில்கூட எங்கேயெல்லாம் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்றனவோ அங்கேயெல்லாம் பத்து சத விகிதம் ஜாதி ஹிந்துக்களுக்கும் கட்டப்பட்டு வருகிறது. அந்த முறையிலும் அவர்கள்



25th March 1960] [Sri P. Kakkan]

ஒன்றாகச் சேர்ந்து வாழ வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. மயானம் அமைப்பதில்கூட ஹரிஜனங்களுக்கு என்று தனியாக அமைக்காமல் எல்லோருக்கும் ஒரே மயானமாக அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மயானம் அமைப்பதில் கூட பாகுபாடு இருக்கக்கூடாது என்பதற்காக இப்படி திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதாவது சுடுகாடு வரைக்கும் தீண்டாமை இருக்கக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தீண்டாமையை ஒழிப்பதற்கு அந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதில் அரசாங்கம் எவ்வளவு அக்கரை காட்ட வேண்டுமோ அவ்வளவு அக்கறை காட்டப்பட்டுதான் வருகிறது. சில இடங்களில் சில புகார் இருப்பதாக சொல்லப்படுகிறது. அங்கேயெல்லாம் போலீசைக் கொண்டு இந்த சட்டத்தை அமுல் நடத்துவதற்கு போலீசாரிடம் சொல்லப்பட்டிருக்கிறது. போலீஸ் அதிகாரிகளிடத்தில் தீண்டாமையைப் போக்க வேண்டும் என்ற மனப்பான்மை இல்லாமல் இருந்தால் அப்படி இருக்கக்கூடாது என்று அவர்களுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. சட்டத்தையும் ஒழுங்கையும் நல்ல முறையில் அவர்கள் பாதுகாக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. காவலர்களுக்கு தங்களுடைய உத்தியோகங்களைப் பார்க்கும்போது அவர்களுக்கு ஜாதி வித்தியாச மனப்பான்மை இருக்கக்கூடாது என்று கண்டிப்பாக உத்திரவிடப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் அரசாங்கம் செய்திருக்கிறது. போலீஸ்காரர்களைப் பற்றி கனம் வேதய்யன் அவர்கள் புகார் கூறினார். அவர்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்று சொல்லி வருகிறோம். அவர்கள் அப்படியேதான் செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கேயாவது ஒன்றிரண்டு இடங்களில் அவர் சொல்வது போல் இருக்கலாம். அவர்களையும் நல்ல முறையில் நடந்து கொள்ளும்படியாக சொல்லப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் மேலும் செய்யப்படும்.

அநேகம் அங்கத்தினர்கள் ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று புகார் சொன்னார்கள். அதற்கு தக்க நடவடிக்கைகளும் எடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதிலும் இந்த அரசாங்கம் தக்க அக்கறை காட்டிக் கொண்டுதான் வருகிறது. ஒரு பழமொழி சொல்வார்கள் "பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்" என்று. அரசாங்கம் ஒவ்வொன்றுக்கும் திட்டம் வகுத்து அதன்படிதான் நிதி ஒதுக்குகிறார்கள். பொருளாதார முன்னேற்றத்திற்கும், மின்சாரத்திற்கும், ஹரிஜனங்களுக்கும் என்று இப்படி ஒவ்வொன்றுக்கும் நிதி ஒதுக்குகிறார்கள். அதை வைத்துக்கொண்டுதான் செலவு செய்யவேண்டியதாக இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு ஹரிஜனமக்களுக்கு எவ்வளவு செலவு செய்யமுடியுமோ, அப்படித்தான் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஆகவே குறைகள் இந்த மன்றத்தில் சொல்லுவதிலும் தப்பு இல்லை. நாங்கள் செய்வதிலும் தப்பு இல்லை. நாங்களும் எந்த விதத்திலும் தப்பிதம் செய்யவில்லை. இன்னும் ஜாஸ்தி வருவாய் வந்தால் இன்னும் அதிகப்படியாக செலவு செய்யலாம், நல்ல முறையில் கொடுக்க முடியும்.

**Sri T. S. RAMASWAMY**: பல ராஜ்யங்களில் அதிகப்படியான பணம் ஒதுக்கி ஹரிஜன மாணவர்களுக்கும் எல்லோருக்கும் இலவசமாக படிக்க வசதி செய்து கொடுத்திருக்கிறார்களே, கல்லூரி படிப்புக்கும் நிதி கொடுக்கிறார்களே எல்லோருக்கும், அவ்வாறு இங்கே ஏன் கொடுக்கப்படவில்லை. என் இடைஞ்சல் ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri P. KAKKAN**: இங்கும் எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**DEPUTY SPEAKER**: ஹரிஜனங்களுக்கா ?

**The Hon. Sri P. KAKKAN**: காலேஜில் படிக்கும் எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்பட்டுதான் வருகிறது.

**SRI T. S. RAMASWAMY :** கல்லூரிகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஹாஸ்டலை விட்டு வெளியே இருந்து கொண்டு படிக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுவது இல்லை. ஹாஸ்டலில் இருந்து கொண்டு படித்தால் கொடுக்கிறார்கள். ஆனால் மற்ற ராஜ்யங்களில் எங்கேயிருந்து கொண்டு படித்தாலும் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கிறார்கள். அந்த நிலைமை என் இங்கு மட்டும் இல்லை.

**THE HON. SRI P. KAKKAN :** இங்கு ஒரு தனிப்பட்ட முறையை வைத்திருக்கிறார்கள். அந்த முறைப்படிதான் கொடுக்கிறார்கள். ஹாஸ்டல்களில் இல்லாமல் வெளியே இருந்துகொண்டு படிக்கிறவர்களுக்கு ஸ்காலர்ஷிப்பு கொடுத்தால் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு மாணவர்கள் சினிமா பார்க்க முற்படுவார்கள் என்பதற்காக இங்கு இப்படிப்பட்ட முறையை வைத்திருக்கிறார்கள். ஆனால் எல்லோருக்கும் ரெசிடென்ஷியல் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். அதாவது பழங்குடி மக்களுக்கு 8.71 லட்சமும், ஒதுக்கப்பட்ட பழங்குடி மக்களுக்கு 0.12 லட்சமும், இதர பின்னடைந்த வகுப்பினர்களுக்கு 14.74 லட்சமும் கொடுக்கப்படுகிறது. ஆனால் மொத்த தொகையே 23.57 லட்சம்தானே, அதில் பின்னடைந்தவர்களுக்கு 14·74 செலவழித்துவிட்டு ஹரிஜனங்களுக்கு மட்டும் குறைவாகத்தானே செலவு செய்யப்படுகிறது, அதனால் ஹரிஜனங்களுக்குத் தனியாக செலவு செய்கிறோம் என்று சொல்லி என் பாகுபாடு இருக்க வேண்டும் என்று கேட்டார். இந்த பின்னடைந்தவர்களுக்கு ஜாஸ்தி கல்விக்காகக் கொடுக்கிறோம். ஹரிஜனங்களுக்கு இந்தக் கல்விக்காக மட்டும் அல்ல இதர துறைகளிலும் அதிகமாக செலவு செய்கிறோம். அடுத்தபடியாக திரு. கோவிந்தசாமி ஒரு குற்றச்சாட்டை சாட்டினார். ஹரிஜனங்களுக்கு பணத்தை ஒதுக்கி வைத்துவிட்டு அதை மாணவர்களுக்கு செலவழிக்காமல் இருக்கிறார்கள் என்றும் குற்றம் சாட்டினார். ஆனால் அவர் கட்சியைச் சார்ந்த அம்மையார் குறிப்பிடும்போது குறைவாக இருக்கிறது என்று சொன்னார். இப்படி அவர்களுக்குள்ளே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன.

**SRI A. GOVINDASAMY :** கனம் அமைச்சர் அவர்களுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும் என்று சொல்ல வரவில்லை, விளக்கம் சொல்ல வேண்டுமென்ற காரணத்தினால் சொல்ல வருகிறேன். ஆதி திராவிடர்களுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் பாக்வேர்ட் கம்யூனிடிக்கு ஒதுக்கி செலவு செய்யப்படவில்லை என்று சொன்னேனே தவிர வேறு ஒன்றும் குற்றம் சாட்டி சொல்லவில்லை.

DEPUTY SPEAKER : The hon Member should not interrept in the middle. He can explain afterwards and not in the middle.

**THE HON. SRI P. KAKKAN :** அம்மையார் அவர்கள் குறைவாக இருக்கிறதே என்று சொன்னார், ஆனால் கோவிந்தசாமி அவர்கள் அதிகமாக இருக்கிறதே என்று சொன்னார். இரண்டிற்கும் வித்யாசம் இருக்கிறதே என்றுதான் நான் சொன்னேன்.

DEPUTY SPEAKER : I think the House has no objection to sit till the Hon. Minister finished his reply.

Hon. Members : No objection.

**THE HON. SRI P. KAKKAN :** பாக்வேர்ட் கம்யூனிடிக்கு மட்டும்தான் அங்கே இருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன்.

**SRI A. GOVINDASAMY :** நான் அப்படிச் சொல்லவில்லை. நான் தப்பு சொல்லவில்லை.





**THE HON. SRI P. KAKKAN :** நீங்கள் ஜாஸ்தி கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லுகிறீர். ஆனால் அம்மையார் அவர்கள் குறைவாக கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார். அதைத்தான் சொல்லுகிறேன்.

DEPUTY SPEAKER : May I know how long the Hon. Minister will take to finish his reply.

**THE HON. SRI P. KAKKAN :** I will finish in about five or seven minutes.

Hon. Members : The Hon. Minister may take even ten minutes.

**THE HON. SRI P. KAKKAN :** நான் எப்பொழுதும் பொய்யே சொல்லமாட்டேன். உள்ளதைத்தான் சொல்லுவேன். அவர் சொன்னதைத்தான் சொன்னேன். அம்மையார் சொன்னதைத்தான் நான் சொன்னேன். வேறு ஒன்றையும் நான் சொல்லவில்லை. அரசாங்கம் ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் அதிக அக்கறை காட்டி வருகிறது என்பதையும், மிகவும் துரிதமாக ஏற்பாடு செய்து வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சில நண்பர்கள் பேசும்போது ஸ்காலர்ஷிப் கடைசி நேரத்தில்தான் கொடுத்திருக்கிறார்கள். முதலில் கொடுப்பது இல்லையென்று சொன்னார்கள். டைரக்டர் அவர்கள் ஜூலை மாதத்திலேயே ஏழு லட்சத்து இருபத்து ஏழாயிரம் சொச்சமும் 1959 டிசம்பருக்குள் ஏழு லட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரமும் 1960 ஜனவரி முதல் நாளது வரையில் பத்தொன்பது லட்சத்து அறுபத்து ஆறாயிரம் சொச்சமும் சேங்க்ஷன் செய்துள்ளார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கால தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் இந்த மாணவர்களே ஆரம்பத்தில் சரியான குறிப்புக்களை கொடுப்பது இல்லை. சில இடங்களில் பிரின்ஸ்பால்களும் அவர்களது விண்ணப்பங்களை வாங்கி அனுப்புவதில் கால தாமதம் செய்துவிடுகிறார்கள். இந்த மாதிரியான காலதாமதங்களைப் போக்குவதற்கு உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1960–61- லிருந்து டைரக்டர் தனது பேரில் ரிசர்வ் பேங்கில் ஒரு பெர்சனல் டிபாசிட் அகவுண்ட் வைத்துக்கொண்டு செக்குகளின் மூலமாக பணம் பெறுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இப்படிச் செய்வதினால் பணம் காலாகாலத்தில் கொடுப்பதற்கு முடியும். செக்ரட்டரி, டைரெக்டர், இவர்கள் எல்லாம் இதை பரிசீலனை செய்து ஆவன செய்து வருகிறார்கள்.

ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பணம் ஜாஸ்தி வேண்டும் என்பதில் ஆக்ஷேபனை கிடையாது. திட்டத்தின் கீழ் இன்னும் ஏராளமான பணம் ஒதுக்கி கொடுப்பது என்றாலும் அப்பொழுதும் கடைசியில் இரண்டுபேர் எனக்குக்கிடைக்கவில்லையே என்பார்கள். ஆகையால் நமக்கிருக்கிற பணத்தை வைத்துக் கொண்டுதான் எவ்வளவு தூரம் ஒத்தாசை செய்ய முடியுமோ அதைச் செய்து கொண்டு வருகிறோம்.

ஸ்ரீமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பணம் இன்னும் அதிகம் ஒதுக்கவேண்டும், பொருளாதார அடிப்படையில் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்களே அது கூடாது என்றார். இப்போது இருக்கும் முறையே நீடிக்கவேண்டும் என்று சொன்னார். அரசாங்கம் இதை பரிசீலனைதான் செய்து வருகிறது. எந்த விதமான முடிவும் எடுக்கவில்லை. பின்தங்கிய மாணவர்களுக்கு இந்த வருஷம் மேலும் பத்து லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. சமீபத்தில் டைரக்டர் அவர்களும் டெபுடி டைரக்டர் அவர்களும் டெல்லிக்குச் சென்று இன்னும் கொஞ்சம் அதிகமாக பணம் வேண்டுமென்று கேட்டு வந்திருக்கிறார்கள். இதைப் பற்றி மேலும் விபரம் தெரிந்தால் நான் உங்கள் மத்தியில் தெரிவிக்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மன்றத்திலே நிலங்கள், வீட்டு மனைக்கட்டு முதலியவை ஜாரி செய்து கொடுப்பதிலே காலதாமதம் ஆகிறது என்று கனம் கோவிந்தசாமி அவர்கள் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய சென்னை மாகாணத்திலே மனைக்கட்டுகள் ஆர்ஜிதம் செய்வதில்

[Sri P. Kakkan] [25th March 1960

அல்லது காலனிகளுக்கு புதிய ரோடு போட்டுக் கொடுப்பதில், மயானத்திற்கு ரோடு போட்டுக் கொடுப்பதற்கு எவ்வளவு தூரம் துரிதமாக வேலை செய்ய வேண்டுமோ அவ்வளவு தூரம் துரிதமாக வேலை செய்யப்பட்டு வருகிறது. ஜில்லாவிலே இருக்கிற ஒரு சில அதிகாரிகள் காலதாமதம் செய்தாலும் கலெக்டரிடத்தில் சொல்லி துரிதமாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதிகாரிகள் காலதாமதம் செய்தால் கலெக்டர் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்.

